THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
64, R. H. ROAD, MADRAS 4
3வவ0வ

கம்பராமாயணம்

நான்காவது

கிஷ்கிந்தாகாண்டம்

திருவல்லிக்கேணி

வை. மு. சடகோபராமாநுஜாசாரியரும்,

கே. கிருஷ்ணமாசாரியரும்,

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும்

இயற்றிய

விரிவுரையுடன்

சென்னை:

நோபில் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா. ச – அ – ம.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை
19, தென்னண்டை மாடவீதி,
திருவல்லிக்கேணி.

படலங்கள்.

		பக்கம்.	செய்யுள்.
	கடவுள் வணக்கம்	௧0	௧
௧.	பம்பைப்படலம்	௧உ	ச உ
உ.	மாமாரப்படலம்	சசு	௧சநி
ங.	துந்துபிப்படலம்	௧நிசு	௧நி
ச.	கலன்காண்படலம்	௧சுசு	ச உ
ஞ.	வாலிவதைப்படலம்	௧சுநி	௧நிங
சு.	அரசியற்படலம்	ங0௧	ஞச
எ.	கார்காலப்படலம்	ங சங	௧உ௧
அ.	கிட்கிந்தைப்படலம	சஎஉ	௧ங௧சு
கூ.	தாணிகாண்படலம்	நிசுச	ச0
௧0.	காடவிட்டபடலம்	நிஅஅ	எச
௧௧.	பிலநீங்குபடலம்	சுநிங	எச
௧உ.	ஆறுசெல்படலம்	எ0ச	நிநி
௧ங.	சம்பாதிப்படலம்	எங௧சு	சுசு
௧ச.	மகேந்திரப்படலம்	எஎ௧சு	உ௧சு

ஆக, செய்யுள்—௧0நி0

ஸ்ரீ

கம்பர் வரலாறு.

கம்பர், சோழநாட்டிலே தீருவழுந்தூரில் நான்காம் வருணத்திற் பிறந்தவர்.

இவர், இளமையில் தந்தை இறந்ததனால் போஷகரில்லாமல் தாயுடன் தீருவெண்ணெய்நல்லூரிற் கடையப்பவள்ளலிடம்போய்ச்சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்று, அவர் வீட்டுப்பிள்ளைகட்குப் பாடசாலைக்குப் புத்தகமெடுத் தக்கொண்டு போகின்றவராய் அவர்களுடன் படித்துவந்தனர்.

இவர்க்குச் சரசுவதிகடாக்ஷமும், சம்பரென்னும் பெயரும் உண்டான தைப்பற்றி ஒரு கதை உண்டு:—இவர் அவ்வனம் பள்ளியிற் படித்துவரு காளில், உபாத்தியாயர், தமக்கு வைபுரமென்னுங் கிராமத்தி லுள்ள கந்தன் கொல்லை தினைக்கொல்லைகளைக் காப்பதற்காகத் தம்மிடத்திற்படிக்கும் பிள்ளை களைத் தினம் ஒவ்வொருவராக அனுப்பும் முறைப்படி ஒருநாள் இப்பிள் ளையை அனுப்ப, இவரும் அன்றைக்காலைதொடங்கிக் கொல்லையிற் சாத்து வத்து, கல்ல வெயிலில் நித்திரைவந்ததனால், அக்கொல்லையிலருகிலிருந்த காளிகோயிலிற் போய்ப் படுத்துத் தூங்கினர். தூங்குகையிற் கொல்லையில் ஒரு குதிரை வந்து மேய்வதாகக் கனக்கண்டு எழுந்துபார்க்க, கனவிற்கண்ட படியே பயிரை அவ்வூரான்வோலிய காளிங்கராயனது குதிரை மேயக் கண்டு, அதனைத் தரத்திரும் அது போகாமையால் அஞ்சி நடுங்கிக் காளி கோயிலுக்கெதிரே போய் நின்ற புலம்பினர். அதுகண்டு காளி கருணை கூர்ந்து பிரசன்னையாகி, 'பின்னாய்! அழாதே: உன் காவை மீட்டு' என்றருள். இவர் அவ்வனமே மீட்ட, தேவி அதில் ஒரு மந்திரத்தை யெழுதி அனுக்கி ரித்தனள். பின்பு, இவர் மீண்டும் கொல்லையிற் போய்ப்பார்க்க, குதிரை அக்கேயே மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது, காளிகாதேவியின் அநுக்கிரகத்தாற் சரசுவதிகடாக்ஷம்பெற்ற இவரது வாக்கினின்று, அது கண்டகோபத்தால், தற்செயலாக, "வாய்த்த வயிரபுர மாகாளியம்மே கேள், காய்த்தநினைப் புனத்துக் காவைவைத்துச்—சாய்த்துக், குதிரை மானத் தின்ற காளிங்க ராயன், குதிரை மாளக் கொண்டுபோ" என்ற ஒரு கவி உண்டா யிற்று. அவ்வனமே இவர் பாடியவுடன் அக்குதிரை மேல்விழுந்து இறந்தது. அதனைக்கேட்டறிந்த உபாத்தியாயர் ஓடிவந்துபார்த்து, அதிகாரியின் கோபத் திற்கு ஆளாவோமேயென்று கலக்கமுற, இவர், முன்பாடிய வெண்பாவின் நான்காம் அடியை "குதிரை மீளக் கொண்டுவா" என்ற மாற்றிப்பாட, மாண்டகுதிரை மீண்டெழுந்தது. காளிங்கராயன் இதனைக் கேள்வியுற்று, அக்காலத்தில் அரசுசெலுத்திவந்த குலோத்துங்கனென்னுஞ் சோழனுக்கு அறிவித்து, அவன் அச்சிறுவனைத் தான் பார்க்கவேண்டுமென்ற வருவித்

* இவ் ரலாற்றைப் பலர் பலவாறு கூறுவராயினும், பிற்காலத்துப் பிரசித்தமாக் ங்குறிபடி மிக்க சருக்கமாக இங்குக் குறிக்கப்படுகின்றது.

தனன. அங்ஙனமே இவர் கோலுங் கையுமாய்ப் போய்நிற்க, அவன், † 'இக் கம்பனு அங்ஙனஞ்செய்தவன்?' என்றனன். இதனாலும், கம்பன்கொல்லை யைக் காத்ததனாலும், இவர்க்குக் கம்பர் என்ற பெயராயிற்று: இதற்கு வேறு சில காரணமும் கூறுவர்.

இவர் பின்பு சோழராஜனது ஸம்ஸ்தான வித்வான்களுக்குத் தலைவராகி இராஜசபைக்கு வான்தோறுஞ் சென்று சமயோசிதமாகப் பலகவிகள்பாடிப் பிரசங்கித்தத் தலைப்பட்டு 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பேர்பெற்றுப் புலமை செலுத்திவந்தனர்.

இவர்க்கு அம்பிகாபதியென்ற ஒரு மகன் பிறந்து, அவனும் சிறந்த வித் வானாகி இவரோடு ராஜசபைக்கு வாடோறும் போய்ப் பெருமைபெற்றுவந் தனன்.

கம்பர் இராமாயணம்பாடியது, சடையப்பவள்ளலின் பெருமுயற்சியால்; எங்ஙனமெனின்,—அவர் மகாகவியாகிய கம்பரது புலமை விளங்குமாறு இவரை ஒரு பிரபந்தம்பாடச் செய்யவேண்டுமென்று சோழராசனுக்கு அறி வித்த, அவன் தனியே ஒருவரைப் பாடச்செய்தலினும் இருவரை ஒருசேரப் பாடும்படி செய்தாற் புலமைத்திறம் நன்றாக விளங்குமென்று நினைத்து, கம்பர் ஒட்டக்கூத்தர் இருவரையும் கோக்கி 'ஸ்ரீராமசரித்திரத்தைத் தமிழ்ப்பாவி னாற் பாடித்தரவேண்டும்' என வேண்டினன். கம்பர் பலகான் பாடாமலிருந்து, ஒட்டக்கூத்தர் சுந்தரகாண்டம்வரை பாடி முடித்து யுத்தகாண்டம் பாடுகிற போது மறுபடி அரசனுல் தண்டப்பட்டு, இராமாயணம் பாடினர். பாடுகை யிற் பிரதிதினம் இராப்பொழுதில் வடமொழிப்புலவர்களை வைத்துக்கொண்டு வால்மீகம் அத்யாத்மம் போதாயனம் முதலிய ராமாயணங்களையும் பலபுராணங் களையும் ஆராய்ச்சிசெய்து, பகற்பொழுதில் காளொன்றுக்கு எழுநூறுபாட லாக யுத்தகாண்டம்வரை ஆறுகாண்டமும் பதினுயிரத்துச் சொச்சம் பாடல் களாற் பதினேந்து காளிற் பாடி முடித்தனர். அங்ஙனமிருக்கையில் ஒருகான், கம்பர், ஒட்டக்கூத்தர் வீட்டுவாயிலின் வழியே போகும்போது, அவர் தமது இராமாயணம் கம்பராமாயணத்திற்குமுன் தலையெடாதென அறிந்து அத னைச் சிழித்தெறிந்து கொண்டிருக்கக்கண்டு, அவரிடஞ்சென்று, அதற்குள் யுத்தகாண்டம்வரை சிழிபட்டுப்போகவே, மிச்சமான உத்தரகாண்டத்தைக் கிழியாது வைத்திருக்க வேண்டிக்கொண்டார்; அதுவே, கம்பராமாயணத் திற்கு எழாவது காண்டமாக வழங்கலாயிற்று.

கம்பர் இராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றக்கருதி அங்குச் சென்று ஸ்ரீவைஷ்ணவசமயாசாரியரான ஸ்ரீமத் காதமுனிகளின் அநுமதிப் படி ஒருமண்டப கைங்கரியஞ் செய்து முடித்துச் சுபதினத்திலே அரங்கேற் றத் தொடங்குகையில், நம்பெருமானாகிய ஸ்ரீரங்கநாதன் அர்த்தகுடமாக ஆவிர்ப்பவித்து 'நம் சடகோபனைப் பாடினையோ? பாடினுல்தான், நாம் உனது ராமாயணத்தைத் திருவுள்ளம் பற்றுவோம். இல்லாவிடின் அது

† கம்பன் = கம்புடையவன்; கம்பு = கொம்பு: உலகவழக்கு.

மைக்கு அக்கோரமாகாது' என்று அருளிச்செய்ய, அவ்வளவே கம்பர் நூறு கட்டளைக் கலித்துறையிற் சடகோபரந்தாதியைப் பாடினர். பின்பு, இராமாயணம், நாதமுனிகளுடைய திருவோலக்கத்திலே மோட்டழகிய சிங்கர் சிரக் கம்பஞ் செய்யுமாறு அரங்கேற்றப்பட்டது. அக்காலம் மூதலியவற்றிற்,

"எண்ணிய *சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கலியாண் கேற்றினானே" எனக் காண்க.

இவ்விராமாயணத்தின் காண்டம் முதலியவற்றின் தொகையை அடியில், வருஞ் செய்யுளால் அறியலாம்:—

"கரைசெறி காண்ட மேழு கதைக ளாயிரத்தெண் ணூறு
பரவுற சமரம் பத்துப் படல நூற்றிருபத்தெட்டே
யுரைசெயும் விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத்தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுத் தொண்ணூற்றாறே."

இவர் செய்த நூல்கள்-இராமாயணம், சடகோபரந்தாதி, ஏழேழபது, சிலையேழபது, திருக்கைவழக்கம், சரசுவதியந்தாதி முதலியன.

இவர்காலத்து வித்வான்கள் - புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவை, போசிசியர், நேமிநாதர் முதலியோர்.

இவரது சமயம் - வைஷ்ணவம்.

இவர் சரித்திரவிவரத்தைத் தொண்டைமண்டலசதகம், தமிழ்நாவலர் சரிதை, பாண்டிமண்டலசதகம், சோழமண்டலசதகம், விநோதரசமஞ்சரி; பலவர் புராணம் முதலிய நூல்களிற் காணலாம்.

"வெண்பாவிற்புகழேந்தி பரணிக்கோர்சயங்கொண்டான் விருத்தமேன்று
மொண்பாவிலுயர்கம்பன் கோவையுலாவந்தாதிக்கொட்டக்கூத்தன்
கண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்கள் வசைபாடக்காளமேகம்
பண்பாகப் பகர்சக்தம் படிக்காசலா லொருவர் பகரொணுதே"

ன்பதனால், விருத்தம் பாடுதலில் மிகச்சிறந்தவரிவ ரென வினங்கும்.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிசொல்லும்', 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற பழமொழிகள், இவரது கல்வித்திறத்தை மெச்சி வழங்கியன.

---

* சகாத்தம் - சாலிவாகன சகாப்தம்; இப்பொழுது நடப்பது, கிரு. வே, கம்பர்காலம் இப்பொழுதைக்கு ஆயிரம் வருஷங்கட்குமுன்பு என்க.

ஸ்ரீ

கடவுள் துணை.

கம்பராமாயணம்.

கம்பரது ராமாயணம் என விரியும்; ஆரும்வேற்றுமைத்தொகை, செய்புட்பிழமைப்பொருளது: "கபிலராகவல்" என்பதிற் போல; கம்பர்செய்த ராமாயணம் என்பது கருத்து. கம்பராற் செய்யப்பட்ட ராமாயணம் என மூன்றனுருபும் பொருளும் உடன் தொக்கதொகையாகக் கொள்ளினும் இழுக்காது. "ஸ்ரீ விகாரமா முயர்ந்தோன்" என்றதனால், மிலேமொழிஈற்றுமெய் கெட்டது. 'ராமாயணம்' என்பது, முதலில் வால்மீகிமுனிவர் செய்த நூலுக்குப் பெயராகி, அதன் வழிநூ லாதலால் "முந்நூல் கருத்தன் அளவு மிருதி, பொருள் செய்வித்தோன் தன்மை மூதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்னுஞ் சூத்திரவிதிப்படி இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று. ராமாயணம் என்பது - ராம அயண என்ற இரண்டுமொழி சேர்ந்து தீர்க்கசந்திபெற்றது; இது ஒன்றன்பெய ராதலால், வடநூல் விதிப்படி 'ராமாயணம்' என மிலேமொழியின் ரகாரத்தைத் தோக்கி வருமொழியின் நகாரம் ணகாரமாயிற்று. 'தன்னது நற்குண நற்செய்கைகளினலும் திருமேனி யழகினலும் எல்லாரையும் மகிழ்விப்பவன்' என்பது, 'ராம' என்னுஞ் சொல்லுக்குப் பொருள்; எல்லா நற்குணங்களும பொருந்தியவனென்பது கருத்து; 'அயனம்' - அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது. ஆகவே, இராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் என்பதாம். இராமனுடைய குணநிலைபவல்லனைத் தெரிவிக்கும் நூல் என்பது, நிரண்டபொருள். 'அயனம்' - ஸ்தானம்: அதாவது - விஷயம் எனப் பொருள்கொண்டு, இராமனை விஷயமாகவுடைய நூலெனக் கூறுதலும் ஒன்று. 'ஸீதாயாஸ்சரிதம்மஹத்" என்ற சிறையிருந்தவ னேற்றஞ் சொல்லும் பிரபந்தமாகையாலே, ராமாயண மென்பதற்கு - ராமா அயனம் என்ற பிரித்து, சீதையை அறிவிக்கும் பிரபந்தம் என்றும் பொருள் கூறவர்: (ராமா - சீதை.)

இப்பொருட்டொடர் மிலேச்செய்யுளைக் கம்பர் செய்கின்ற காலத்திற்கு நூல் தொல்காப்பிய மாதலாலும், பிறர் கூறிய நூல்கள் திரம்பிய இலக்கணத்தன அன்மையாலும், அத்தூலிற் கூறிய இலக்கணமே இதற்கு இலக்கணமென்ற உணர்க. அத்தூலிற் செய்யுளியலில், ஆசிரியர், பா நான்கென்றும் அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறி, பின்பு, அம்மை முதலிய எட்டும் தொடர்மிலேச்செய்புட்கு இலக்கணமென்று கூறுகின்ற இடத்து, "இழுமென் மொழியான் விழுமிய நவலினும், பாந்தமொழியா னடிநிமிர்த்தொழுகினும், தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" என்னுஞ் சூத்திரத்தால், 'அறம் பொருள் இன்பம் வீடு என்னும் விழுமிய பொருள் பயப்பப் பழையதோர் தைமேற் கூறின், அது தோல்' என்று கூறியதனால், இப்பெருங்காப்பியம் அங்ஙனம் கூறிய தோலரமென்ற உணர்க.

இப் பெருங்காப்பியத்தில், பிரதானமான, ஸ்ரீ ராமசரித்திரத்தினுலும், அதனேத்தொடர்ந்த வாலிசுக்கிரீவரியரது சரித்திரங்களாலும் - ஆசாரமும்,

சத்தியமும், தருமமும், கருணையும், வீரமும், கற்புநிலையும், உடன்பிறந்தோ சொற்றுமையும், பழியச்சமும், அதருமத்தின் வினைவும், இழிசினரியற்கையும் முதலான ஸாமான்ய தருமங்களும்; ஸ்ரீராமபிரான் சகல கல்யாணகுணகண பரிபூர்ணமான பரதத்வ மென்பதும், அவனைச் சரணமடைவதே எல்லாப் பயன்களையும் பெறும் உபாயமென்பதும், அடியார்கள் ஆசரிக்கவேண்டிய கைங்கரியம் முதலியவற்றின் முறைகளும் முதலான விசேஷதர்மங்களும் செம்பொருளாகவும் கருத்துப் பொருளாகவும் கரட்டப்பட்டிருக்கின்றன.

[இவற்றுள், ஸ்ரீ ராமபிரான் பரதத்வமென்பது, "நீதியாய் முனிந்தி டேல் நீயிங்கியாவர்க்கும், ஆதியா னறிந்தனை னலங்கல்நேமியாய், வேதியா விறுவதேயன்றி வெண்மதிப், பாதியான் பிடித்த வில் பற்றப்போதுமோ," "பொன்னுடை வனைகழற் பொலங்கொள் தாளினுய், மின்னுடை கேமியா ஞதல் மெய்ம்மையால், என்னுள தலகினுக்கிடக்கண் யான்தந்த, உன்னுடை வில்லுமுன்னுரத்துக்கீடன்றுல்," "எண்ணிய பொருளெலா மினிது முற்றுக, மண்ணிய மணிகிற வண்ண வண்டுழாய்க், கண்ணிய யாவர்க்குங்களேகளுகிய, புண்ணிய விடை" என ஸ்ரீபரசுராமனும், இராவணவதத்திற்கு அப்பால் பெருமான் பிராட்டியைத் தீக்குளிக்கத் திருவுளம் பற்றியகாலத்து 'மன்னர் தொல்குலத்தவ ரினத்தினே யொருமனிதனென்னவுன்னலி யுன்னே மீ யிராமகேளினதனைச், சொன்ன நான்மறைத் தணிவினிற் றுணிந்த மெய்த் தணிவு, நின்னலாதில்லே நின்னின்வேறளதில்லே நெடியோய்" என்றுதொ டங்கி "ஓங்காரப் பொருள் தேருவோர்தா முன்னே யுணர்வோர், ஓங்காரப் பொரு ளென்றுணர்ந் திருவினே யுரப்போர், ஓங்காரப்பொருளாமன்றென் றாழிசென்றுலும், ஓங்காரப் பொருளே பொரு ளென்கலா வரவோர்" எனப் பிரமதேவனுலும், "உன்னே நீயொன்று முணர்கிலே போலுமா லுரவோய், முன்னே யாதியா மூர்த்திநீமூவகை யுலகி, னன்னே சேதையா மாது கின்மார் பின் வந்தமைந்தாள" என்று உருத்திரமூர்த்தியாலும் வெளியிடப்பட்டது. இனி, சித்திரகூடகிரியிலிருக்கையிலே சீதாபிராட்டியாரின் திருமார்பைத் தீண்டிய காகாசுரனே முனித்த பெருமான் அயல் கல்லெழுபுல்லால் வேக வெம்படைவிட, அஞ்சி நடுங்கி அயன்பதி முதலிய அண்டிவக்கு மிடம் பெருதே, எறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மரப்பறவை யாய், "ஐய கின்சரணஞ்சரண்" என்று அவன் அஞ்சி வையம் வந்துவணங் கிட, பெருமான், திருவுள்ளமுவந்து, பிராட்டிநிறத்திலே பெரிய அபராதத் தைப் பண்ணின அந்தக்காகாசுரனைக் கடாக்ஷித்து "மூன்று கின்குறையும் பொறைதந்தனம்" என்றலாலும்; கடற்கரையில் ஸ்ரீ விபீஷணழ்வான் "கொற்றவசரண்" எனக்கூவிச் சரணுகதி பண்ண, "வெற்றியே பெறுக தோற்க வீக வீயாதவாழ்க, பற்றுதலன்றியுண்டோ புகலெனைப் பகர்கின் றுனே" என்று அவற்கு அபயப்பிரதானஞ் செய்தலாலும்; வேதோபப்ரும் ஹனுமான் ஸ்ரீராமாயணம் சரணுகதிவேத மென்பதும், ஸ்ரீராமபிரானே சரணுகதரக்ஷகனென்பதும் பெறப்படுமாறு அறிக.]

பெருங்காப்பிய லிலக்ஷணத்தை, "பெருங்காப்பியகிலே பேசுங்காலே, வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினெனே, றேற்புடைத்தாகி முன்வரு

வியன்றா, காற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித், தன்னிகரில்லாத் தலை வனை யுடைத்தாயும், மலை கடல் நாடு வளநகர் பருவம், இருசுடர்த்தோற்ற மென்றினையன "புணர்த்து, கன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல், பூம் பொழில் அகர்தல் புனல்விளையாடல், தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறு தல், புலவியிற் புலத்தல் கலவியிற்களித்த லென், றின்னன புனைந்த நன் னடைத்தாகி, மந்திரந் தூது செலவிகல்வென்றி, சந்தியில்தொடர்ந்து சருக்க மிலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மையின் விளங்கி, நெருங்கிய சுவை யும் பாவமும் விரும்பக், கற்றோர் புனையும் பெற்றிய தென்ப" என்னுந் தண் டியலங்கார ருத்தியாத்தால் அறிக. இவ்விலக்கணங்கள் பலவும் இவ்விராமா யணத்தில் வருவதை ஆங்காங்குக் காணலாம்.

இதிகாசம் புராணம் என்ற பகுப்பு இரண்டனுள், இராமாயணம் இதி காசத்தினுள்பாற்படும் ; மகாபாரதமும் அப்படியே. உபதேசபரம்பரையில் வந்த ஒருவருடைய பழையசரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பல இலக்கதைகளோடு புணர்த்து விரித்துக்கூறும் நூல் இதிகாசமென்றும், உல கத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள் சரித்தி ரங்கள், மந்வந்தரம் என்னும் ஐந்துவிஷயங்களை விரிக்கூறும் நூல் - புராண மென்றும் வேறுபாடு உணரத்தக்கது. [இதிகாசம்- பழைய ஒரு வரலாற்றை விரித்துக்கூறும் நூல் - புராணம்-மேற்குறித்த ஐந்து இலக்கணங்களும் அமை யப் பழைய பல வரலாறுகளை யுணர்த்தும் நூல்] புராணம் - பிராம்மம் முத லாகப் பதினெட்டு வகைப்படும். இந்த இதிகாசபுராணங்கள், வேதத்தின் கருத்தை இன்னதென்று கியாயப்பிரமாணங்களால் தேற்றி விளக்குதல்பற்றி, வேதத்துக்கு உபப்ருஹ்மணங்களென்று சொல்லப்படும்; உபப்ருஹ்மண மென்றால், வளர்ப்ப தென்ற பொருளாம். இவற்றுள் புராணங்களினும் இதி காசம் பிரபலமான பிரமாணமென்றும், அதுபற்றியே "இதிகாசபுராணம்" என இதனை முன்னர்வைத்துக் கூறுவதென்றும் கொள்வர்.

இராமாயணத்தை முதலில் வடமொழியிற் செய்தவர், வால்மீகிமகா முனிவர். இவர், ஸ்ரீராமபிரான் பூலோகத்தில் எழுந்தருளியிருக்கையி லேயே இராமாயணம் முழுவதையுஞ் செய்தருளி, அவர் அசுவமேதயாகஞ் செய்யத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் அவர்சந்நிதியில் அரங்கேற்றினர். (ஆனால், பாலகாண்டம்முதல் யுத்தகாண்டமீறாக ஆறுகாண்டங்களும், உத் தரகாண்டத்தில் அசுவமேத மளவுத்தான இராமபிரான் சபையிற்கேட்டனர்.) உத்தரகாண்டத்தில் ஏதிர்காலவரலாற்றை முனிவர் ஞானக்கண்ணினுல் முன்னி யறிந்து கூறியதான மற்றைப்பகுதியை அப்பெருமான் பிரமதேவன் சொற் படி ஏகாந்தத்திற் கேட்டனர். இந்நூல் நாரதமுனிவரது உபதேசத்தாலும், பிரமனது அநுக்கிரகத்தாலுஞ் செய்யப்பட்டதாகையால், நெறந்தபிரமாண மாக வைதிகமதத்தவ ரெல்லாராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. இது, ஸம்ஸ்கிருதபாஷையில் ஆதிகாவியம். பின்பு பிற முனிவரும் கவிஞரும் இந் நூலைப் பலவகைக் காவியங்களாகவும், நாடகங்களாகவும் வடமொழியில் இயற்றி னர். இவ்வாறே வேறுபாஷைகளிலும் அந்தந்த வித்துவான்கள் செய்யலா யினர். தமிழிற் சங்கத்து இராமாயணமென்று ஒன்று இருந்ததாகச் சொல்

வதேயன்றி, வழங்கிவருவது கம்பராமாயணந்தான். இராமாயணத்தின் முதல் ஆறுகாண்டங்கள் கம்பராலும், ஏழாவது காண்டம் ஒட்டக்கூத்தராலும் வடமொழி வால்மீகிராமாயணத்தைப் பெரும்பாலும் தழுவித் தமிழில் பாடப்பட்டவை. சற்று ஏறக்குறையக் கம்பர்பாடல் - ௧0, ௫00; ஒட்டக்கூத்தர் - பாடல் - ௪, ௫00; ஆக - ௧௨,000. வடமொழி வால்மீகிராமாயணம், ௬ (,000 சுலோகங்களை யுடையது.

முதனூலாகிய வடமொழி வால்மீகிராமாயணத்தோடு அதன் வழிநூலாகிய இத்தமிழிராமாயணம் சிற்சிலவிடத்துச் சிறிதுசிறிது வேறுபடுதலும் உண்டு. அது "முன்னோர் நூலின் முடிபெருங் கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி, அழியா மரபினது வழிநூலாகும்" என்ற வழிநூலிலக்கணவிதி பற்றி இவ்வாசிரியராற் பிறநூல் மேற்கோள்கொண்டும் தமது கற்பனைசக்தி கொண்டும் அமைக்கப்பட்டதெனக் கொள்ளவேண்டும். 'இப்படி மாறுபடுகின்ற இடத்து ஸ்ரீராமாயணத்தில் இல்லையேயாகிலும், இதிகாசாந்தர புராணாதிகளிலே யாதல், கல்பாந்தரத்திலே யாதல் உண்டென்று கொள்ளவேணும்' என ஆன்றோர் அருளிச்செய்து அமைத்திருத்தல் உணரத்தக்கது. இதிகாசாந்தரமாகிய மகாபாரதத்திலும், பாத்ம வைஷ்ணவம் கூர்மம் முதலிய புராணங்களிலும், அத்யாத்மராமாயணம் முதலிய நூல்களிலும் இராமசரித்திரம் சிற்சிலவிடத்து வேறுபடக் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

இராமாயணம், அந்தந்தப்பாகத்துச் சரித்திரத்தின் முக்கியமான விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் - பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தராகாண்டம் எனப் பெயர்பெற்ற ஏழு காண்டங்கள் அடங்கியது. அவற்றுள்,

நான்காவது

கிட்கிந்தாகாண்டம்.

கிஷ்கிந்தாகாண்டமென்ற வடமொழித்தொடர்மொழி, ஆரும்வேற்றுமைத் தொகை; கிஷ்கிந்தையினது சம்பந்தமான காண்டம் என விரியும்; கிஷ்கிந்தையைப் பற்றிய காண்டமென விரித்து, இரண்டு ஞருபும் பொருளுந் தொக்கதொகை யெனினுமாம். கிஷ்கிந்தம் என்பது, ஒருமலை; அம்மலையைச்சார்ந்த நாடும் அப்பெயர்பெற்றது: அதன் பிரதானபட்டணத்துக்கும் கிஷ்கிந்தையென்று பெயர். இது, வானராராஜர்களான வாலிசுக்கிரீவர்கட்கு இராஜதானி; குகைபோல மலையிடையே யுள்ளது. காண்டம் - கூட்டம்; இப்பொதுப்பெயர் - இங்கு, சரித்திரத்தின் ஒருபாகத்தை யுணர்த்துஞ் செய்யுட்களின் கூட்டமென்று சிறப்பாகக் கொள்ளப்பட்டு, ஒரு பெரும் பிரிவுக்குப் பெயராக வழங்கியது. ஆகவே, கிஷ்கிந்தையில் நடந்த வரலாற்றைக் கூறும் பாகமென்றதாயிற்று.

இக்காண்டம் - பம்பைப்படலம் முதல் மகேந்திரப்படலம் ஈறாக சில படலங்கள் அடங்கிய ௭0இ - செய்யுளுள்ளது.

கதைத் தொடர்ச்சி.

[இராமாயணக்கதை மிகப்பிரசித்தமான தாதலால், இக்காண்டத்துக்கு முன்கதைத் தொடர்ச்சி மிக்கசுருக்கமாக எழுதப்படுகின்றது.]

முன் ஒருகாலத்தில் தேவர்களெல்லாரும் இராவணன் முதலிய இராக்கதர்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவைச் சரணமடைந்து, அவ்டகிச்சிர வெஷ்டபரிபாலனஞ் செய்தருளுமாறு வேண்டினார்கள். அத்திருமால் அவ்வேண்டுகோளுக்கு இரங்கி லோகசம்ரக்ஷணத்தின் பொருட்டுத் தனது அம்சத்தைக்கொண்டு தான்கு ரூபமாகத் தசரதமகாராஜனிடத்தில் அவதரித்துத் தீயோரையழித்து நல்லோரைப் பாதுகாப்பதாக அருளிச்செய்தான். இது கிற்க: இப்பரதகண்டத்துக் கோசலதேசத்திலே சாயூநதிக்கரையில் அயோத்தியாகரத்திலே திரேதாயுகத்திற் சூரியகுலத்தில் உதித்த நிலவுலகமுழுவதும் தனிச் செங்கோல் செலுத்திய தசரதசக்கரவர்த்தி தனக்கு அநேக ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் பலமனைவியர்களிருந்தும் புத்திரபாக்கியமில்லாமையினாலே மிகவும் மனம்வருந்திக் குலகுருவாகிய வசிஷ்ட மகாமுனிவனிடம் தனது குறையைக் கூறி அம்முனிவனது கட்டளைப்படி ருசியசிருங்கமுனிவனை அழைத்துவந்து அத்தக் கலைக்கோட்டு மாமுனிவனைக் கொண்டு அசுவமேதயாகமும் புத்திரகாமேஷ்டியும் செய்தான். அந்த யாகத்தின் பயனைச் சக்கரவர்த்தியின் பிரதான தருமபத்தினியார் மூவருள் கௌசல்யாதேவியினிடம் ஸ்ரீராமனும், கைகேயியினிடம் பரதனும், ஸுமித்திரையினிடம் இரட்டையராய் லக்ஷ்மண சத்துருக்னரும் திருவவதாரஞ் செய்தார்கள். (இவர்களில் இராமபிரான், ஸ்ரீமந்நாராயணனது ஏழாவது திருவவதாரம். இளையபெருமான், அத்திருமாலுக்குப் பலவகைக் கைங்கரியங்களைச் செய்கிற ஆதிசேஷனது அவதாரம். பரதாழ்வானும், சத்துருக்னழ்வானும் - சுதர்சந பாஞ்சஜந்ய மென்னும் திருமாலின் சக்கர சங்கங்களின் அவதாரம். ஆனலும், லக்ஷ்மணன் முதலியோரிடமும் விஷ்ணுவின் அம்சம் இருந்தது. அதுபற்றியே, 'திருமால் நான்குருபமாக அவதரித்தனன்' என்பது.)

இராமபிரான், இளமையிலே விசுவாமித்திர மகாமுனிவனுடைய வேள்வியைப் பாதுகாத்தற்பொருட்டு அம்முனிவனது விருப்பத்தின்படி அவன் பின்னே இலக்குமணனுடன் செல்லுகையில், வழியிலெதிர்ப்பட்ட தாடகையென்னுங் கொடிய அரக்கியையும், அத்த யாகத்தில் நிகழுவிக்கும்படி வந்த தாடகாகுமாரனை சுபாகு முதலிய பல அரக்கர்களையும் கொன்று, தாடகையின் மற்றொருகுமாரனை மாரீசனை வாயவ்யாஸ்திரத்தாற் கடலிலே தள்ளிவிட்டு, யாகத்தை நிறைவேற்றியபின், அம்முனிவனுடன் விதேகதேசத்து மிதிலாநகரத்துக்கு எழுந்தருளி, அங்குஜநகமகாராஜன்வளர்த்த மனோன்மணிதைக்குக் கன்யாசுல்கமாக வைக்கப்பட்ட வெதறதை எடுத்தவரைத்து முறித்து, இலக்குமியினது அவதாரமான அந்தஜாதகியைத் திருக்கலியாணஞ்செய்து கொண்டான். அப்பொழுது அங்குச் சமன் தான்பெற்ற மகளான ஊர்மிளையை லக்ஷ்மணனுக்கும், தன் தம்பிபுத்திரிகளான மாண்டவி சுருதகீர்த்தி என்பவர்களைப் பரதசத்ருக்னர்களுக்கும் கொடுக்க, அவர்கட்கும் விவாகம் நிகழ்ந்

தது. பின்பு மிதிலையினின்று மீண்டுவருகையில், வலியவந்து எதிரிட்ட பரசுராமனை ஸ்ரீராமன் வென்று செருக்கையடக்கி அனுப்பிவிட்டு, அயோத்தி சேர்ந்தனன்.

பின்பு இராமபிரான் தனது பெரியதாயான கைகேயிக்குத் தனதுதந்தை கொடுத்திருந்த இரண்டுவரங்களையும் நிறைவேற்றுதலினிமித்தம் அக்கைகேயியின்சொல்லால் அவள்மகனுபரதனுக்குரியதாம்படி இராச்சியத்தைத் தான் கைவிட்டுப் பதினான்குவருடம் வனவாசஞ்செய்யஉடன்பட்டு, மனைவியாகிய சீதையோடும், தம்னைவிட்டுப்பிரியாத தம்பியான இலக்குமணனோடும் புறப்பட்டுக்குகனோடு தோழமைகொண்டு அவனுதவியாற்கங்கைகடந்துசித்திரகூடத்தில் வசிக்கையில், தந்தையிறந்தசெய்தியைவந்துசொல்லிஅயோத்திக்கு எழுந்தருளி அரசாளவேண்டுமென்ற வேண்டிய பரதனுக்குஇன்சொற்கூறிப் பாதுகை கொடுத்து அனுப்பியபின், தண்டகாரணியஞ்சென்று அத்திரிமுனிவராச்சிரமஞ்சேர்ந்து, அவர்பத்தினி அருளை ஜாநகிக்கு அணியும் ஆடையும் அளிக்கப்பெற்று, அப்பாற்செல்லுகையிற் சீதையைத்தூக்கிக்கொண்ட விராதனைவதைத்து, சரபங்கமுனிவர்க்குப் பரமபதமளித்து, வாலில்லியர் முதலியோர்க்கு அபயம் கொடுத்து, சுதீக்ஷ்ணமுனிவர் வழிகாட்ட அகத்தியமுனிவரையடைந்து, வில்முதலியன அவர்தரப் பெற்றுக்கொண்டு, சடாயுவைத் தரிசித்துக் கோதாவரிநதி தீரத்திற் பஞ்சவடியாச்சிரமத்திலே வசிக்கும் போது, அரக்கர்தலைவனுய் இலங்கையில்வாழ்கின்ற இராவணனுடைய தங்கையான சூர்ப்பணகைவந்து இராமபிரானது திவ்விய சௌந்தரியத்தைக் கண்டு மிக்க ஆசைகொண்டு தன்னை மணஞ்செய்துகொள்ளும்படி பலவாறு வேண்ட, அதற்கு அப்பெருமான் உடன்படாமல் உபேக்ஷித்தமைபற்றி, அவ்வரக்கி 'அருகிலிருக்கிற இத்தப்பெண்ணை அகற்றிவிட்டால், இராமன் என்னை மனைவியாகக் கொள்வன்' என்றுஎண்ணிச் சீதையைத் தனித்திருக்கிறசமயம்பார்த்துத் தூக்கிச்செல்லத் தொடங்க, அது கண்ட இலக்குமணன் அவளுடைய மூக்குமுதலிய சில உறுப்புக்களே அறுத்தது மன்றி, இங்ஙனம் மானபங்கப்பட்ட அவளுக்காகப் பரிந்துவந்த கரன் தூஷணன் முதலிய கொடிய இராக்கதர் பலரையும் இராமன் கொன்றொழித்தான். பின்பு இராவணன் சூர்ப்பணகையினால் தூண்டப்பட்டுச் சீதையினிடம் பெருங்காதல் கொண்டு சங்யாசிவேஷம் பூண்டுவந்து,மாயையாற்பொன்மானுருவங்கொண்ட மாரீசனது சூழ்ச்சியினால் இராமலக்ஷ்மணரை அப்புறப்படுத்தி, சீதையைத் தனித்திருக்கிறசமயத்தில் வஞ்சனையாக எடுத்துப் போகுமனவில், முன்வந்து எதிர்த்த ஜடாயுவை வலியழித்துச்சென்று, இலங்கையில் அசோகவனத்தில் அரக்கியர்சூழச் சீதையைச் சிறைவைத்திட்டான்.

பிறகு சீதையைத்தேடிக்கொண்டு இலக்குமணனுடனே சென்ற ஸ்ரீராமன், சீதையின் நிலைமையைச் சிறிதுசூறியிறந்த சடாயுவுக்குச் சரமகிரியை செய்து, கபந்தனைக்கொன்று, சபரிக்கு முத்தியளித்துச் செல்லும் வழியில், பம்பைப்பொய்கையைக் கண்டனன் என்பதாம்.

[கடவுள்வணக்கம்: ராமஸ்தோத்ரம்]

மூன்றுரு வெனக்குண மும்மை யாமுதற்
றோன்றுரு வெலையுமம் முதலிற் சொல்லுதற்
கேன்றுரு வமமன்தவ மிடையி னின்றவுந்
சான்றுரு வுணர்வினுக் குவந்த தாயினன்.

இது, சுப்புச்செய்யுள். இதனுல், கவி தாம் பாடத்தொடங்கிய காண்டம் இடையூறில்லாமல் இனிதுமுடிதற்பொருட்டு, உயர்ந்தோர் வழக்கத்தின் படியே செய்யப்படுங் கடவுள்வணக்கத்தை, மாஸமாகவன்றி வரிசை மாகவுங் கூறுகின்றார். தான்முகத்திற் கடவுள்வணக்கங்கூறியது அமையாதோ? காண்டந்தோறும் கூறவேண்டுமோ? எனின்,—ஆசிரியர் பதஞ்சலியார் 'மங்களத்தை முதலிலும் இடையிலும் கடையிலு முடைய நூல்கள் மிக்கசிறப்புடன்தோன்றும்' என மாபாடியத்திற் கூறிஞ சாதலின், இடையிலும் மங்களமாகக் கடவுள்வாழ்த்துக் கூறுதல் நல மாதலாலும், கல்விக்குப்பயன் கடவுளைவணங்குதலே யாதலாலும், நூல் ஒன்றேயாயினும் காண்டங்கள் பொருளால்வேறுபடுதலாலும், இவ்வாறு கூறினுரென்க: (அஃதேல், ஒருநூற்கு ஏடுத்தக்கோடற்கண்ணே வணக்கஞ் சொல்லுத லன்றி அதிகாரந்தோறுஞ் சொல்லிய தென்னையோவெனின்;—நூல்ஒன்றேயெனினும் அதிகாரங்கள் பொருளான் வேறுபடுதலானும், "ஆதியுமத்தமு மடுவ மங்கலம், ஓதிய முறைமையினுரைப்பாடியின், எதமி லிருநிலக்கிழத்தி யின்புற, நீதியம்பலவுல்கள் நிலவு மென்பவே" என்ப வாதலானும், 'கற்றதனுற் பயன் குற்றமற்ற மூற்றுமுணர்ந்த ஒற்றைமற்றவன் பொற்ருளிணை மலர் போற்றல்' என்பதனுலும், சொன்னு ரெனக் கொள்க' என்னும் நன்னூற்பழையவுரை இங்கு நோக்கத்தக்கது.

கடவுள்வணக்கம் இரண்டுவகைப்படும்; வழிபடுகடவுள்வணக்க மென்றும், எற்புடைக்கடவுள்வணக்க மென்றும். வழிபடுகடவுள் வணக்கமாவது - தாம் தாம் குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கிற கடவுளைவணங்குதல்; இதற்கு உதாரணம் - வைஷ்ணவர் விஷ்ணுவையும், சைவர் சிவனையும், ஜைநர் ஜினனையும், பௌத்தர் புத்தனையும் வணங்குதல் போல்வன. எற்புடைக்கடவுள் வணக்கமாவது - தாம் தாம் செய்யத்தொடங்கிய காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளைவணங்குதல்: இதற்கு உதாரணம் - பாகவதங்கூறபவர் கிருஷ்ணனையும், கந்தபுராணஞ்சொல்பவர் சுப்பிரமணிய மூர்த்தியையும் வணங்குதல் போல்வன- ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தவரான இந்நூலாசிரியராற் கூறப்பட்ட இவ்வாழ்த்து, தமக்கு வழிபடுகடவுளும் தாம் செய்யத் தொடங்கிய இதிகாசத்துக்கு எற்புடைக்கடவுளுமாகிய திருமாலின் திருவவதாரமான இராமபிரானைப் பற்றிய தென அறிக.

அலைகடலுடுவ ணுேனத்தன்மீமிசை மலையென விழிதயில்வளரு மாமுலைப்பப் பரமபுருஷனிய மன்னலர்தனினுனே, சக்ரதரமாகக்கடன் கொள்காவலன் தசரதனது மதலையாய், இம்மாண்கைக்கோரிறையாய் ஸ்ரீராமனெத்திருவவதரித்தனனே, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், ஈடு மெடுப்பு மில்லாத இவ்வத்தமாயகன் விஷயமாகச் செய்யப்புக்க இப்பெருங் காப்பியத்திற்கு அவையேவாழ்த்தல் வேண்டுதலின், காண்டந்தோறும் அவர்

லீலையமாகவே கடவுள் வாழ்த்துக் கூறத்தணிந்து, பாலகாண்டத்தில் ஸகரு போபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே மூன்றுகவிகளாற் கூறி, அயோத்தியாகாண்டத்தில் இக்காப்பியத்தலைவராகிய ஸ்ரீராம பிரான் ஸர்வேச்வரனென்று கூறி, ஆரணியகாண்டத்தில் அப்பெருமான் வேத முதலிய நூல்களாலும் பிரமன்முதலிய பெரியோர்களாலும் உணர்தற்கரிய பரவஸ்து வென்று கூறி இக்காண்டத்தில் இக்கவியால், வஸ்துநிர்த்தேசரூப மங்கள முகத்தாலே, அப்பெருமான் சகல பிரபஞ்சத்தையுந் தனக்குச் சரீரமாகக்கொண்டவ னென்கிறார்.

(இதன்பொருள்.) உணர்வினுக்கு - (காண்பவர் கேட்பவர்களின்) கல்லறிவுக்கு, உவத்தல் ஆயினன் - உவப்பைத்தரும் பொருளா யிருக்கின்ற ஸ்ரீராமபிரான்,—மூன்று உரு என - மூன்றுநிறங்களென்று சொல்லும்படி, குணம் மும்மை ஆம் - மூன்று குணங்களையுமுடைய, முதல் - மூலப்பிரகிருதியும், தோன்று உரு எவையும் - (அத்தமூலப்பிரகிருதியினின்று) உண்டாகிய எல்லாத்தத்துவங்களும், அ முதலே சொல்லுதற்கு என்று உரு அமைத்தவும் - அந்த மூலப்பிரகிருதியை (ப் பெயரும் உருவமுங்கொடுத்துச்) சொல்லும்படி பொருத்தி வடிவமைத்த பிரபஞ்சங்களும், இடையில் நின்றவும் - அப்பிரபஞ்சத்தினிடையே புகுந்துநின்ற ஜீவன்களும், சான்ற உரு - (தனக்குச்) நிறைந்த சரீரமாகக் கொண்ட பரப்பிரஹ்மமாம்; (என்றவாறு.)

சேதநாசேதனங்களின் வடிவமான எல்லாப் பிரபஞ்சமும் பரமாத்மாவுக்குத் திருமேனி யென்னுமிடத்தை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்ரீபாகவதம் முதலியவற்றிலே மிகத்தெளிவாய்ப் பார்க்கக்காண்க. 'ராமன்' என்னுஞ்சொல்லுக்கு - 'தன்பக்கல் யாவரும் மனங்களிக்கப்பெற்றவன்' என்பது பொருளாதலால், அக்கருத்துப்பற்றி, இங்கு 'உணர்வினுக்கு உவத்தாயினன்' என்றார். 'மூன்றரு' என்னுமிடத்தில், 'உரு' - நிறம்; ''உருவே அட்டையும் வடிவும் நிறமும்'' என்பது காண்க. நிறம்மூன்றுவன - வெண்மை, செம்மை, கருமை என்பன, குணம்மூன்றுவன - ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்பன; மூலப்பிரகிருதிக்கு இந்த நிறங்களும் குணங்களும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. 'மும்மை' என்பது மூன்றின் தன்மை யென்ற பொருளை புணர்த்தாமல் மூன்றென்ற பொருளையே குறித்ததனால், இதில் 'ஆம்' - பகுதிப்பொருள்விகுதி யென்க. 'முதல்' என்னும் பண்புப் பெயர்-ஆகுபெயராய், முதனமையான மூலப்பிரகிருதியை புணர்த்திற்று. 'முதல்' என்பதன் ஈற்றில் எண்ணும்மை செய்யுள்விகாரத்தால் தொக்கது. மூலப்பிரகிருதியினின்று உண்டாகிய தத்துவங்கள்:—மாந் (த), அகங்காரம் (த), மனம் (த), ஞானேந்திரியம் (இ), கர்மேந்திரியம் (இ), தன்மாத்திரை (இ), பூதம் (இ) என இவை. சான்றஎன்ற பெயரெச்சத்தின் இறுதி, தொகுதல். அமைத்த, நின்ற - பெயர்.

'என்றருவமைத்தவரிடையினின்றவர், சான்றருவணர்வினுக்குணர்வினின்' என்றும், 'இம்முதல்' என்றும், 'இடையினின்றவன்' என்றும், 'ன்றவரு மணர்வினுக்கு' என்றும், 'ஊன்றருவணர்வினுக்கு' என்றும், 'ன்றருவுவினுக்குளகத்தாயினன்' என்றும், 'உணர்வினுக்குணர்வதாயி ' என்றும் பாட பேதங்கள் காணப்படுகின்றன.

அறை - கடவுள்வாழ்த்து; தொல்காப்பியத்தில் "வாழ்த்தியல் வகையே காப்பாற்கு முரித்தே" என்றதன் கண், 'வகை' என்றதனாற் கொண்ட அறு முறைவாழ்த்தின்றித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி "யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது" என்றதனால், முன்னிலையன்றியுங் கடவுள் வாழ்த்துதலின், இக்கலி கடவுள்வாழ்த்தெனப் பெயர்பெற்றது; [அறுமுறை வாழ்த்தினுள் வாழ்த்தப்படும் பொருள்களாவன:—முனிவரும், பசுவும், பார்ப் பாரும், அரசரும் மழையும் நாடுமாம்.]

முதலாவது

பம்பைப்படலம்.

பம்பை என்பது-ஒரு பெரிய பொய்கை; பொய்கை - குளம், (பொய்கை மானிடராக்காத நீரினிலே.)அது, கிஷ்கிந்தாநகரத்துக்கு அருகிலுள்ளது. படலம் என்னும் வட சொல்லுக்கும் கூட்டமென்ற பொருள்; ஆயினும், அது - சங் கேதத்தால், ஒரு பெரியவகுப்பினுட்பட்ட சிறியபாகத்தைக் குறிக்கும். ஆகவே, ஸ்ரீராமலக்ஷ்மணர் பம்பைப்பொய்கையைக் கண்டது, ராமபிரான் பிராட்டியைப் பிரிந்தபிரிவால் அப்பொய்கையிலுள்ள சக்கரவாகம் முதலிய பறவைகளையுந்தாமரை முதலிய கொடிகளையுங்கண்டு இரங்கியது, அதில் நீரா டிச்சந்தியாவந்தனஞ் செய்தது முதலிய செய்தியைச் சொல்லுஞ் சிறு பிரிவு என்றதாயிற்று.

[இதுமுதல் இருபத்தோருகவிகள் பம்பைப்பொய்கையின் வருணனை.]

க. தேன்படி மலரது செங்கண் வெங்கைம்மா
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வீங்குநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது.

(இ - ன்.) (அப்பொய்கை),—தேன் படி மலரது - மதுப்பொருந்திய (தாமரைமுதலிய நீர்ப்) பூக்களையுடையது; செம் கண் வெம் கை மா - சிவந்த கண்களையும் வெப்பம்பெருந்திய அதிக்கையையு முடைய மதயானைகள், படி கின்றது - (தன்னிடம் வந்து) குளிக்கப்பெற்றது; தெளிவுசான்றது-தெளிவு மிக்குளது; (ஆதலால்),—வீங்கு நீர் - மிக்க நீரையுடைய கடலானது, மீன படி மேகமும் படிந்து - மின்னல் பொருந்திய மேகங்களும் (தன்னிடத்து வந்து) படியப்பெற்று, வான் படிந்து-ஆகாயமும் படியப்பெற்று,உலகு இடை-நிலவுலகத்தின் நடுவிலே, கிடந்த-பொருந்தியிருந்த, மாண்பது தன்மையை யுடையது; (எ - று.)—தான் - அசை.

மேற் ஆரணியகாண்டத்தின் ஈற்றுக்கவியில் "பம்பையாம் பொய்கை கண் டார்" என்று கூறியுள்ளதனால், இதுமுதற் பதினேந்து கவிகளுக்கு 'அப் பொய்கை' எனத் தோன்ற ஏழுவாய் வருவித்து முடிக்க.

மலர்கள் நிறைந்த யானைகள் வந்து படியப்பெற்றுத் தெளிவுபொருந்திய அப்பம்பைப் பொய்கையானது, மின்னல்கள் விளங்கிய மேகங்கள் தவழ்கின்ற

ஆகாயம் தங்கப்பெற்றதொரு கடலே யொத்திருந்தது என்பதாம்; நற்குறிப் பேற்றவணி.

மின்னல்கள் - மலர்களுக்கும், மேகங்கள் - யானைகளுக்கும், ஆகாயம் படிதல் - தெளிவுமிக்கிருத்தற்கும், கடல் - பொய்கைக்கும் உவமையெனக் காண்க. யானைகள் கூட்டங்கூட்டமாக வந்து இறங்கி முழுகிக் கலக்கும் போது அவற்றின் இடையிடையே தோன்றிமறைகின்ற மலர்களே, மேகத்தினிடையே தோன்றி மறைகின்ற மின்னல்களாகக் குறித்தார். யானைக்கு மேகவுவமை, கருநிறத்திற்கும், மதமழைபொழிதற்கும். ஆகாயம் சுத்தமாய் நிர்மலமான நிலைமையையுடையதாதலால், தெளிவுக்கு உவமைகூறப்படும். யானை மதம்பிடித்திருக்கும்போது அதன் கண்கள் சிவந்தும், துதிக்கை வெப்பமாயும் இருக்குமாதலால், 'செங்கண் வெங்கைம்மா' என்றார். கைம்மா-துதிக்கையையுடைய விலங்கு: எனவே, யானையாயிற்று. கைம்மா - சாதியொருமை யாதலால், 'தானபடிகின்றது' எனப்பட்டது. தாமரை முதலிய நீர்ப்பூக்களின் மலர்ச்சி கூறப்பட்டதனால், ராமலக்ஷ்மணர் பம்பா புஷ்கரிணியை யடைந்த காலம் வசந்தகாலமென்று முதனூலிற் கூறியதைக் குறிப்பித்தவாறுமாயிற்று. நறிஞ்நிலைக் கருப்பொருளாதல்பற்றி, கைம்மாவைக் கூறினர். 'யானைகள் படிந்து கலக்கினலுந் தெளிவுசானறது' என்றதனால், நீரின்மிகுதி கூறியவாறு.

'வேங்கைமா' என்ற பாடங்கொண்டு, புலியாகியவிலங்கெனப் பொருள் கூறி, 'மீன்படி' என்பதை மேகம் வீங்குநீர் வான் எனற மூன்றனோடும் இயைத்து - அப்பொய்கை மின்னல் பொருந்திய மேகங்கள் பூமியிற் படிந்து கிடந்த மாண்பது, மீனகள்பொருந்திய கடல் (இவவிடத்திற்) கிடந்த மாண்பது, நக்ஷத்திரங்கள் பொருந்தியவானம் உலகிடைப்படிந்து கிடந்த மாண்பது என்று தனித்தனி முடிபுகொண்டு, அப்பொய்கைக்கே மேகம் கடல் வானம் என்ற மூனறையும் உவமைகூறியதாக உரைகூறுவாரு முனர்.

படி மலர் - வினைத்தொகை. மலரது, மாண்பது - ஒன்றன்பாற்குறிப்பு வினைமுற்றுக்கள். சான்றது - மிகுதிப்பண்புணர்த்துகிற 'சால்' என்னும் உரிச்சொல்லடியாப் பிறந்த இறந்தகாலவினைமுற்று. மீன - மின் என்பதன் போட்டல் விகாரம்; அன்றி, மின்னுவது மீன் எனக் காரணப்பெயராகவுமாம். மேகமும், உம் - எதிரது தழுவிய எச்சம். இனி, படி என்பதை "வரிப்புனை பந்து" என்றதில் 'வரி' என்பதுபோல, 'படிந்து' என்பது விகுதி முதலியன தொக்கதாகக்கொண்டு, நக்ஷத்திரம் படிந்து எனறுமாம். வீங்குநீர் - வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

'வேலைநீர்' என்பது - பாடாந்தரம்.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள்; கீழ்ப்போந்த காப்புக்கவியும் இவ்வாறே. (8)

2. அந்தணர்பனிங்கெனத்தெளிந்தவீர்ப்புனல்
பேர்ந்தொளிர்வயமணிபடர்ந்தபித்திகை

சேர்ந்தழிச்சேர்ந்தழிநிறத்தைச்சேர்தலா
லோர்ந்துணர்வில்லவருள்ளமொப்பது.

(இ - ன்.) ஈர்ந்த நண் பனிங்கு என - அறுத்து வேலைசெய்யப்பட்ட நேர்மையான [மிகமெல்லிய] ஸ்படிகக்கல்போல, தெளிந்த - மிகத் தெளிவாக வுள்ள, ஈர் புனல் - (அப்பொய்கையின்) குளிர்ந்த நீரானது, பேர்ந்த ஒளிர் நவமணி படர்ந்த பித்திகை - இடையிட்டு விளங்குகின்ற ஒன்பதுவகை யிரத்தினங்களும் நிரம்பப் பதித்துள்ள படித்தறைச்சுவர்களில், சேர்ந்தழி சேர்ந்தழி - அலை மோதி யடையும்பொழுதெல்லாம், நிறத்தை - (அத்தத் ரத்தங்களின்) வருணத்தை, சேர்தலால்-அடைதலாலே,—(அப்பொய்கை-,) ஓர்ந்த-(பலதாலும்) ஆராய்ந்தும், உணர்வு இல்லவர்-(அவற்றின் மெய்ப்பொருளை) அறிதலில்லாதவரது, உள்ளம் - மனத்தை. ஒப்பது-ஒத்திருப்பது; (எ - று.)

மெய்யறிவில்லார்மனம் தன்னில் ஒரு தேர்ச்சியின்றி ஆங்காங்குக் காணும் பொருள்களேயெல்லாம் மெய்ப்பொருளென்று பற்றுவதுபோல, பொய்கையின்நீர் தனக்கென ஒருநிறமு மில்லாமல் ஒவ்வொருவகை யிரத்தினங்களையும் அடுக்கும்பொழுது அவ்வவற்றின் நிறத்தைக்கொண்டு தோன்றுவது எனத்தொழில்பற்றிவந்த உவமையணி. அப்பொய்கையின்நீர் மிகத் தெளிவுள்ளதென்பதனை விளக்குதற்கு, ஈர்ந்தநண்பளிங்கை உவமைகூறினார், தெளிவுமிகுதியால் தன்னை யடுத்த பொருளின் உருவத்தைத் தான் கொண்டு காட்டுதலில், ஈர்ந்தநண்பளிங்கும் புனலும் ஒக்கும்; "அடுத்தது காட்டும் பளிங்கு" என்றார் திருவள்ளுவரும்.

நவமணிகளாவன - கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. உணர்வு இன்னதென்பதனை "எப்பொரு ளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னுந் திருக்குறளாலும் அறிக. ஈர்ம்புனல்-பண்புத்தொகை. சுப்பிரத்தியயம் பெற்றவந்த 'பித்திகா' என்னும் வடமொழி, ஆவீறு ஐயாயிற்று. சேர்த்தழி - சேர்ந்த உழி: பெயரெச்சவீற தொகுத்தல்; அடுக்கு - தொறுப்பொருளது. 'பலதாலும்' என்பது, இசையெச்சம். 'ஓர்ந்தும்' என்னும் உயர்வுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. (உ)

கூ. குவான்மணித்தடந்தொறும்பவளக்கோலிவர்
கவானரசன்னமும்பெடையுங்காண்டலிற்
றவாதெடுவானகந்தயங்குமீனெடு
முவாமதியுலப்பிலவுநித்தநோப்பது.

(இ - ன்.) குவால் மணி - கூட்டமான முத்துக்களையுடைய, தடம் தொறும்-அப்பொய்கையினிடமெல்லாம்,- பவளம் கோல் இவர் கவான்-பவழத் தண்டைப்போன்ற [சிவந்த] கால்களையுடைய, அரச அன்னமும்-ராஜஹம்ஸம் அதேகமும், பெடையும்-(அவற்றின்) பேடைகள் அநேகங்களும், காண்டலின் - (சேர்ந்து) காணப்படுதலால்,—(அப்பொய்கை),—உலப்புஇல - அளவில்லாத [அநேகமான], உவா மதி - பௌர்ணமியில் தோன்றின்ற பூர்ண சந்திரர்கள், தயங்கும் மீனெடும் - விளங்குகின்ற (தம்மனைவியர்களான)

நக்ஷத்திரங்களுடனே, உதித்தது - (தன்னிடத்தே ஒருசேர) வீளங்கப் பெற்றதாகிய, தவாதெடு வான் அகம் - அழியாத பெரிய ஆகாயத்தினிடத்தை, ஒப்பது - ஒத்திருப்பது; (எ - று.)

முத்தக்கள்கிறைத்த பொய்கையினிடங்களில் அங்கங்கே பெண்களாற் சூழப்பட்டுத் தோன்றும் அரசவன்னம், பலதாரகைகள் நிறைந்துள்ள ஆகாயத்தினிடங்களில் அங்கங்கே மனைவியரான அசுவினிமுதலிய நக்ஷத்திரங்களாற் சூழப்பட்டுத் தோன்றும் பூர்ணசந்திரனே யொக்கும் என்றவாறு; நற் குறிப்பேற்றவணி. இல்லொருஉருவமையணி யென்பாரு முளர். அன்னத்துக்கு - வெண்மையும், அதன் பேடைகளுக்கு - அசுவினி முதலிய நக்ஷத்திரங்களும், முத்துக்களுக்கு - மற்றைத்தாரகைகளும், பொய்கைக்கு - வானமும் உவமை. இனி, முத்துக்களினிடையே அன்னம் தோன்றுவது, நக்ஷத்திரங்களினிடையே சந்திரன் விளங்குவது போலும் எனக் கருத்துக்கொண்டு உரைப்பினும் அமையும். முத்துக்கள் - இப்பி, சங்கு, சலஞ்சலம் முதலியவற்றில் உண்டாகின்றவை.

அரசன்னம் - அன்னப்பறவைகளிற் சிறந்தது; உடம்புமுழுவதும் வெளுத்து மூக்குங்காலுஞ்சிவந்திருப்பது அதனிலக்கணமாதலின், 'பவளக்கோலி வர்வானரசன்னம்' என்றார். காற்று, நெருப்பு, நீர், நிலம் என்னும் மற்றை நான்கு பூதங்களுக்குங் காரணமாகி முன்னே தோன்றி அவையெல்லாம் அழியுமளவும் தான் அழியாதிருத்தலால், 'தகர' என்னும் அடைமொழி, வானுக்குக் கொடுக்கப்பட்டது. அசுவினி முதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களும் சந்திரனுக்கு மனைவியரென்பது நூற்கொள்கை. தொறு - பொருளின் பன்மை குறிப்பதோ ரிடைச்சொல். 'மணற்றடம்' என்றும் பாடம். பவளம் - ப்ரவாளம் என்ற வடமொழியின் சிதைவு. இவர் - உவமவுருபு. கவான் - கவரீ என்னும் வடமொழியின் சிதைவு; அது, வேதத்தில் வழங்குவது: தொடை யென்னும் பொருளையுடைய இச்சொல், இங்கே இலக்ஷணையாய்க் காலை புணர்த்திற்று. அன்னம் - ஹம்ஸமென்னும் வடமொழியின் சிதைவு. தொல்காப்பியத்து மரபியலில் "புள்ளு முரிய அப்பெயர்க் கென்ப" என்றதன்பின், "பேடையும் பெடையும் நாடி ஞென்றும்" என்றதனுல் பெடை யெனப்பட்டது. காண்டல் - இங்குச் செய்ப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய்வினை. இன் - ஐந்தனுருபு, ஏதப்பொருள். தவா என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தில், தபு என்பதன் திரிபாகிய தவு - முதனிலை. 'காலிவர்' என்னும் பாடம், மோனைத் தொடைக்குச் சிறவாது.

இச்செய்யுளில் மருதநிலத்திற்குப் பயின்ற அன்னத்தைக் குறிஞ்சிநிலத்தில் மயங்கக் கூறியது, "எங்கில மருங்கிற் பூவும் புள்ளு, மங்கிலம் பொழுதுவரா வாயினும், வந்த நிலத்தின் பயத்தவாகும்" எனத் தொல்காப்பிய அகத்திணையியலுட் கூறிய கருப்பொருட் புறனடைச் சூத்திரத்தால் அமைந்தது; மேல் - புள்ளும் பூவும் முதலியன மயங்கக்கூறினவற்றிற்கும் அது ஒக்கும். (உ)

— ஓதநீருலகமுழுயிர்களியாவையும்
வேதபாரகரையும்விதிப்பவேட்டாட்

சீதம்வீங்குவரியைச்செருக்குமாறெரு
காதிகாதலன்றருகடலினன்னது.

(இ - ன்.) (அப்பொய்கை),—ஒரு - ஒப்பில்லாத, காதி காதலன் - காதி யென்னும் ராஜரிஷியினது குமாரராகிய விசுவாமித்திரர், ஒதம்மீர் உலகமும்- குளிர்ந்த கடல்நீராற் சூழப்பட்ட உலகத்தையும், உயிர்கள் யாவையும் - (அவ் வுலகத்திலடங்குகின்ற) உயிர்களெல்லாவற்றையும், வேதபாரகரையும்-வேதங் களாகிய கடலின் கரையைக் கண்ட பிராமணர்களையும், விதிப்ப - (வேறே) படைத்தற்பொருட்டு, வேட்ட - விரும்பிய, காள் - காலத்தில்,—சீதம் வீங்கு உவரியை - குளிர்ச்சிமிக்க உப்புக்கடலை, செருக்கும் ஆறு - மாறுகொள்ளும் படி, தரு - (பிராகாப்) பண்டத்த, கடலின் - நல்லநீர்க்கடலை, அன்னது - ஒத்திருப்பது; (எ - று.)

இப்பொய்கை, இனிய நீருடையதாதலால், பூமியைச் சூழ்ந்த லவண சமுத்திரத்துக்கு மாறுகப் பூமியினிடையே படைத்ததொரு நன்னீர்க் கட லைப் போன்றதென்றார்; (இவ்வருணனை, வடமொழியுள்ளுங் காதம்பரியில் அச்சோதமென்ற சாரின் வருணனையிற் கூறப்பட்டிருக்கின்றது:) **நதிகுறிப் பேற்றவணி.**

வேதபாரகர்-வேதம்முழுவதையும் தாம் ஐயந்திரிபற உணர்ந்து பிறர்க்கு ஓதுவிக்கவும் வல்லவர் என்றபடி. வேதம் - நன்மை தீமைகளை அறிவிப்பது என வடமொழிக்காரணக்குறி. பாரகர் - கரையை அடைந்தவர்; பாரம் - அக் கரை: அடைதல் - அறிதல். பாரமென்பதற்கு ஏற்ப, வேதங்களாகிய கட லெனப்பட்டது. இனி, பாரம்-முடிவு எனக்கொண்டு, வேதத்தின்முடிவாகிய வேதாந்த சாஸ்திரத்தை யறிந்தவரென்றுமாம். சிறப்புப்பற்றி, அந்தணரைத் தனியே எடுத்தோதினார். பிரமசிருஷ்டிக்குமாறாக எல்லாவுலகங்களையும்இந்தி ராதிதேவர்களையும் மற்றுமுள்ளபொருள்களையும் படைக்கத்தொடங்கிய சிறப் புப்பற்றி, 'ஒருகாதிகாதலன்' என்றார். இனி, ஒருகடல் என்றுங் கூட்டலாம். காதி - விசுவாமித்திரமுனிவனது தந்தை; பிரமனது புதல்வனை குசனென் னும் அரசனது புத்திரர் நால்வருட் குசநாபனது மகன். காதலன் - அன் புடையவன்; அன்புக்கு விஷயமானவன். உயிர்களியாவை - தன்னெழி மெய்ம்முன் யகரம்வர இகரம் தோன்றிற்று. உலகம் - லோகமென்ற வட மொழியின் விகாரம்; தனியே தமிழ்மொழி யென்பர் நச்சினார்க்கினியர், உவரி - உவர்ப்புச் சுவையுடையது.

விசுவாமித்திரர் பிரதிசிருஷ்டி செய்யத்தொடங்கியது, அயோத்தியரச ராகிய திரிசங்குமகாராசனுக்கு மனிதசரீரத்துடனே சுவர்க்கங்கொடுக்கமுயன் றபொழுதில்; அவ்வரலாறு வருமாறு:-சூரியகுலத்தோன்றிய (அரிச்சந்தி ரனது தந்தையாகிய) திரிசங்குமகாராசன் தனது குலகுருவாகிய வசிட்டரை நோக்கி 'இவ்வுடம்புடனே யான் சுவர்க்கலோகமடையும்படி அருள்செய்ய வேண்டும்' என்ற வேண்டியதற்கு, அவர் 'அது இயலாது: இதற்பின்னர் அடையலாம்' என்றசொல்லி மறுக்கவே, அரசன் 'ஆனால், வேறு குருவை நாடியடைகின்றேன்' என்ன, முனிவர் 'குருத்துரோகியாகி நீ சண்டாளனு

வாய், என்ற சபித்த, உடனே அவன் சண்டாளனுடைய கர்ப்பத்தில் வெளியில் அலைகையில், தென்திசையில் தவஞ்செய்துகொண்டிருந்த விசுவாமித்திரரை யடைந்து நிகழ்ந்ததைச் சொல்ல, முன்னமே வசிஷ்டரிடத்துப் பகைமை கொண்டவராகிய அவர் அவனுக்கு அவ்வாமளிக்க உடன்பட்டு வேள்வி யொன்று செய்து அதற்குவராததுபற்றித் தேவர்கள்மீது கோபங்கொண்டு திரிசங்குவைத் தமது தவவலிமையால் ஒருவிமானத்திலேற்றி மேலுலகத் திற்குச் செலுத்த, அங்கே தேவர்கள் புலபன்வாலாகாதென்று தள்ளிவிட, கூக்குரலிட்டுக்கொண்டு தலைகீழாக விழுகின்ற அத்திரிசங்குவை விசுவாமித் திரர் தமதுதவவலிமையால் அந்தரமே ஆகாயத்தில் நிலைநிறுத்தி, 'தேவர் கள்மீது சினந்து பிரதியுலகம்படைக்கத்தொடங்கிச் செயற்றைச்சிருஷ்டித்து, பின்பு தேவர் வேண்டுகோளினுல் அச்செயலொழித்தன ரென்பது. (ச)

மு. எற்பொருநர்கர்தமிருக்கையீதெனக்
கிற்பதோர்காட்சியதெனினுங்கீழுறக்
கற்பகமீனியவக்கவிஞர்ஈட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல்சான்றது,

(இ - ள்) (அப்பொய்கை),—'எல் பொரு நர்கர்தம் இருக்கை - (தம்மி டத்திலுள்ள மாணிக்கங்களின் ஒளியாற்) சூரியனோடு மாறுபடுகின்ற நாகர்கள் வசிக்கின்ற பாதாளலோகம், ஈது-இது தான்', எனநிற்பது-என்று அண்மையா கச் சுட்டிக்காட்டிச்செல்லத்தக்கதாகிய, ஓர் காட்சியது எனினும்-ஒரு தோற்ற த்தை யுடையதா யிருந்தாலும் [பாதாளம் வரையிலும் ஆழ்ந்துள்ளதாயி னும்],—கற்பகம் அனைய-கல்பகவிருகம்போன்ற, அ கவிஞர்-அந்த [சிறந்த] மகாகவிகள், நாட்டிய - (தாம் செய்த உலகத்தில்) நிலைநிறுத்திய, சொல் பொருள் ஆம் என - சொற்களின் பொருள்போல, கீழ் உற - கீழுலகம் வரையிலும், தோன்றல் சான்றது - விளங்குதலமைந்தது, [பிகவுக் தெளி வுடைய தென்றபடி]; (எ - று.)

நல்ல கவிகள் செய்த நூல் பார்க்கப்பார்க்க ஆழ்ந்தகருத்தை யுடைய தாயிருந்தாலும் பொருளைச் சந்தேகத்துக்கிடமாகாது விளங்கவைத்தல் போல, இப் பொய்கை ஆழ்ந்தும் தெளிந்து முள்ள தென்றவாறு; உவமையணி. கீழ் ஆரணியகாண்டத்துக் கோதாவரிநதியின் வருணனையில் "சான்றோர்கவி யெனக்கிடந்த கோதாவரி" என்று நதிக்குச் சான்றோர்கவியை உவமை கூறி யிருத்தல் காண்க.

கற்பகமனைய கவிஞ ரென்றது-அது கினைத்தவற்றை யெல்லாம் கொடுப் பதுபோல, இவரும் கினைத்தவற்றை யெல்லாம் அறிந்து கவிபாடிக் கொடுக்க வல்லவ ரென்றபடி. அகரச்சுட்டு, பிரசித்தியைக் காட்டுகின்றது. நகாவலர்-படமும் காலு மூடையராய் மநுஷ்யரூபமும் தெய்வப்பிறப்பு மானதொரு சர்ப்பஜாதியினர். தம் - சரியை. ஈது - சுட்டு நீண்டது; நீட்டல் விகாரம். கிற் பது - ஆற்றலுணர்த்துகின்ற 'கில்' என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர். கற்பகம் - தேவதரு; வடசொற்கிரிபு; வேண்டுவார் வேண்டுவன வற்றை வேண்டிய வாறே பெறும்படி கல்பிப்பது [உண்டாக்குவது] என்று

பொருள். ஆம் - ஆசை. 'எற்படச்' என்றும் 'கலிஞர்காட்டிய' என்றும் 'தோன்றுகின்றது' என்றும் பாடமுண்டு. (இ)

களனிலின்னமேமுதலகண்ணகன்
றளமலர்ப்புள்ளொலிதழங்கலின்னதோர்
ளெலியென்றறிவருங்ளெர்ச்சித்தாதலால்
வளாகர்க்கூலமேபோலுமாண்பது.

(இ - ன்.) கண் அல் - இடமகன்ற, களம் மலர்-இதழ்களையுடைய (தாமரை) மலர்களி லிருக்கின்ற, களன் கலில் - அவ்யக்தமதராக [எழுத்து இன்ன தென்றுணரமுடியாமல் இனிமையாகக்] கூவுகின்ற, அன்னம் முதல் - அன்னங்கள் முதலிய, புன் - பறவைகளின், ஒலி - சத்தம், தழங்கு - மிகுதியாக ஒலிப்பதனால்,—இன்னது ஓர் ளெலி என்று - இத்தன்மையதான ஒருவகைத் தொனி யென்று, அறிவு அரு - அறிதல்கூடாத, ளெர்ச்சித்து - எழுச்சியையுடையது: ஆதலால்—, (அப்பொய்கை),—வளம் நகர் கூலம் போலும் - பலவனப்பங்களும்கிறைந்த பெருநகரத்தினது கடைவீதியை யொக்கின்ற, மாண்பது-மாட்சிமையையுடையது; (ஈ - று)

பெரியநகரத்துக் கடைத்தெருக்களிற் பலதேசத்தமனிதரும் கூடிப் பல வகைப்பாஷைகளைப் பேசும்போது உண்டாகின்ற பேரொலியானது இன்ன தென்று அறியமுடியாதவாறு இருத்தல்போல, அப்பொய்கையிற் பலவகைப் பறவைகளும் சேர்ந்து பலவகையாகக்கூவுகின்ற ஒலியும் ஓசையென்று அறிவதன்றி இன்னவோசையென உணரமுடியாதபடியிருந்த தென்பதாம்; உவமையணி.

களனிலின்னம் - கலஹம்ஸம்; காரன்னம். இதுவும், மேற்கூறிய அரசவன்னமும் அன்னத்தின் ஜாதிபேதங்கள். எகாரம் இரண்டும் - இசைநிறை. "பூவிற்குத் தாமரையே," "பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை" என்றபடி மலரென்பது - இங்குச் சிறப்பாய்த் தாமரையைக் குறித்தது. 'புன்னொடு தழங்' என்பது - பிரதிபேதம். (உ)

எ. அரிமலர்ப்பங்கயத்தன்னமெங்களும்
புரிகுழல்புக்கிடம்புகல்லிலாமையாற்
திருமுகநோக்கலமிறந்துதீர்துமென்
றெரிபுருவனவெனத்தோன்றுமீட்டது.

(இ - ன்.) எங்களும் - எல்லாவிடத்திலும், அரி மலர் பங்கயத்து - செந்தாமரை மலர்களிலுள்ள, அன்னம் - அன்னப்பறவைகள், 'யாம் - நாம், புரி குழல் புக்க இடம் - அழகாகச் 'கட்டிமுடித்த கூந்தலையுடைய நாபிராட்டியார் சென்ற இடத்தை, புகல்லிலாமை - தெரிந்துசொல்லமாட்டாமையால், திருமுகம் நோக்கலம் - (ஸ்ரீராமபிரானது) அழகிய முகத்தைப் பாராமல், இறந்து தீர்தும் - இறந்தொழிவோம்', என்று - என்று எண்ணி, எரி புருவன என - நெருப்பிற் குளிப்பனபோல, தோன்றும் - காணப்படுகின்ற, ஈட்டது-ன்மைமையுடையது, (அப்பொய்கை); (எ - து.)

அப்பொய்கையிற் சேர்ந்தமரைமலர்மேலுள்ள அன்னங்கள் இலக்குமியாகிய சீதாபிராட்டிக்கும் அன்னங்களாகிய தமக்கும் உறைவிடம் தாமரையென்ற ஒன்றுகவேயிருத்தம், அவள் செய்கியை அறிந்த உரையாமையாகிய குற்றம் பற்றி, இப்போது ஸ்ரீராமபிரானது திருமுகத்தைப் பாராமல் இறக்கி விடுவோமென்ற கினைத்த தெருப்பிற் குதிப்பனபோலக் காணப்பட்டன வென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி.

தெருப்பை உவமை கூறியதனால், அரிமல ரெனப்பட்டது; அரி - செம்மை. தாமரைக்கு தெருப்பு உவமை கூறப்படுவதை, "புண்டரிகத் தீயெரிவபோல்விரிய" என்ற கனவெண்பாவினாலும் அறிக. இனி, அரிமல ரென்பதற்கு - வண்டுகள் மெய்த்தலையுடையமலரெனப் பொருள்கொண்டால், மலரில்மொய்க்கின்ற வண்டுகள் தெருப்பினின்று எழுகின்ற புகைக்கு உபமேயமாம். பங்கயத்துமலரென மாறுக. பங்கயம் - பங்கஜம்; சேற்றில் முளைப்பது. புரிகுழல் - 'அன்மொழித்தொகை. புக்கிடம் - பெயரெச்ச வீறு தொகுத்தல். புகல்கிலாமை - எதிர்மறைத்தொழிற் பெயர். 'புகல்கிலாமையால்' என்றும் பாடம். திரு - கண்டோரால் விரும்பப்படும் தன்மை தோக்கம்; அழகு. தோக்கலம் - எதிர்மறை முற்றெச்சம். தீர்தம் - தன்மைப் ன்மைமுற்று. 'புகல்கிலாத யாம்' என்பதும் பாடம். (எ)

அ. காசடைவிளக்கியகாட்சித்தாயினு
மாசடைபேதைமையிடைமயக்தலா
லாசடைகல்லுணர்வனேயதாமெனப்
பாசடைவயின்றெறும்பாந்தபண்பது.

(இ - ன்.) (அப்பொய்கை),—மாசு அடை பேதைமை - குற்றம்பொருந்திய அவிச்சையானது, இடை - நடுவில்கின்று, மயக்கலால் - மயக்கச்செய்தலாலே, ஆசு அடை - அற்பத்தன்மையை (இடையிலே) அடைத்த, கல் உணர்வு - கல்ல மெய்யறிவை, அனையது ஆம் என - போன்றது என்னும் படி,—காசு அடை - மூத்திக்கள் (தன்னுள்) பொருந்தியிருத்தலை, விளக்கிய - வெளியே கின்று காண்போர்க்கு விளங்கச்செய்த, காட்சித்து ஆயினும் - (மிகத்தெளிந்த) தோற்றத்தையுடையதா யிருந்தாலும், பசு அடை - பசிய இலைகள், வயின் தொறும் - இடையிடங்கள்தோறும், பரந்த - பரவப்பெற்ற, புண்பது - தன்மையையுடையது; (எ - று.)

கல்லறிவு தான் மாசற்றதாயிருந்தாலும் ராஜஸ தாமஸ குணங்கள் இடையிடையே தோன்றி மயக்குதலால் மாசடைந்த தன் கிலைமை தோன்றுதிருப்பதுபோல, பொய்கை கீழுள்ள பொருள்களையெல்லாம் நன்குவிளங்கச் செய்கின்ற மிகத்தெளிந்த நீருடையதாயினும் பச்சிலைகள் இடையிடையே பரவி மறைத்தலால் தன் கிலைமை தோன்றுதிருப்ப தென்பது கருத்து; உவமையணி. "வையத் தருவின்ர் மலரா வறிவினோ, புலகிரை மறைத்த புணர்ப்பது போலக், குளிர்கொண்டுறையுக் தெளிகீர் வாவியை, வள்ளை செங்கமலங் கள்ளவிழாம்பற், பாசடைமறைக்கும்" என்றார் பிறரும்.

மெய்யறிவாவது - பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களின்றி உண்மையால் அறிதல்; இதனை வடநூலார் தத்வஜ்ஞான மென்பர். அவிச்சையாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்க நூல்வழக்குகளை மெய்த்நூல்வழக்கெனத் துணித்தல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றினைப் பிறிதொன்றுகத் துணிதலும் அது. "மருளானும் மாணாப்பிறப்பு" என்றவாறு அவிச்சை பிறப்புக்கு முதற்காரண மாதலால், மாசடைபோதைமை யெனப்பட்டது. ஆசடைதல் - அறக்கப்பட்ட புலன்களின் மேலே பழையபயிற்சிவசத்தால் ஒரோவழி தினைவு சென்று கெடுதல். காசு - நவமணிகளுக்குப் பொதுப்பெயர்; இங்குச் சிறப்பாய், முத்தை யுணர்த்திற்று. அடை - முதனிலைத்தொழிற்பெயர். இனி, காசடை - முத்துச்சிப்பிக ளென்றும், பாசடை - பாசிக்கொத்துக்க ளென்றும் ஏதப்பெயராகப் பொருள்கொள்ளலுமாம். பாசடை - பண்புத் தொகை; பசுமை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டது. பச்சிலை-தாமரை முதலிய நீர்க்கொடிகளி னுடையவை. 'விளங்கிய' என்றும் பாடமுண்டு. (அ)

கூ. களிப்படாமனத்தவன்காணிற்கற்பெனுங்
கிளிப்படாமொழியவள்விழியின்கேளெனத்
தளிப்படாநயனங்கடெளிப்பச்சோருமென்
றெளிப்படாதாயிடையொளிக்குமீனது.

(இ - ன்.) (அப்பொய்கை),—'களி படா மனத்தவன் - (சோபிராட்டியைப் பிரிந்ததனற்) களிப்பில்லாத மனத்தையுடையவனான ஸ்ரீராமன், காணின் - (தம்மைக்) கண்டால், கற்பு எனும் கிளி படா மொழியவன் - கற்பு நிலைமையே இவ்வாறு ஒருருக்கொண்டுவந்ததெனத்தக்கவளும் கிளியினிடத்தும் உண்டாகாத (மிக இனிய) சொறகளையுடையவளுமான பிராட்டியினது, விழியின் - கண்களுக்கு, கேள - உறவானவை [இணையானவை], என - என்று எண்ணி, தளி படா நயனங்கள் - (முன ஒருகாலத்தும்) நீர்த்துளி உண்டாகப் பெறுத தனது நிருக்கண்கள், தளிப்ப - நீர்த்துளி சிந்தும்படி, சோரும் வாடுவான்', என்று - என்று எண்ணி, ஒளிப்படாது - வினங்கிமல் [வெளிப்படாமல்], அ இடை - அவ்விடத்தில், ஒளிக்கும் - மறைந்து ஒடுகின்ற, மீனது - மீன்களையுடையது; (எ - று.)

இயல்பாக நீரினுள்ளே மீன்கள் மறைதற்கு, 'தம்மைக் கண்டமாத்திரத்திலே சோபிராட்டியாரான தன்காதலியினது நிருக்கண்களினழகு நினைவுக்கு வர இராமபிரான வருத்தவனுதலால் அதற்கு நாம் காரணமாதல் தக்கதன்று என்று எண்ணி அம்மீனகள் மறைந்ததாகக் காரணத்தைக் கற்பித்தலால் இஃது ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம். களிப்பு அடா எனப்பிரித்து மகிழ்ச்சி பொருந்தாத எனவுமாம். கற்பெனுங் கிளிப்படாமொழியவன், "விற்பெருந் தடக்தோன்வீர வீங்குநீரிலங்கைவெற்பில், கற்பெருந் தவத்தாய நங்கையைக் கண்டேனல்லேன், இற்பிறப்பென்பதொன்றும் இரு

பெரறை யென்பதொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிடம் புரியக் ண்டேன்" என்பது, சுந்தரகாண்டத்துத் திருவடிதொழுதபடலம். காணின் சோரும் என இயையும்.

எனும் என்ற பெயரெச்சம், ஒருசொல் தன்மைப்பட்ட மொழியவ ளென்னும் பெயரைக் கொண்டது. கற்பு - பதிவிரதாதருமம்; ஆசிரவது - கணவனிலுஞ் சிறந்ததெய்வ மில்லையெனவும், அவனே இன்ன பாறே வழிபடுக வெனவுந் தாய் தந்தையரும், அந்தணரிடத்துஞ் சான்றோ ரிடத்தும் ஆசாரியரிடத்துங் கடவுளைச்சுட்டியும் ஒழுகும்ஒழுக்கம் இவ்வா றெனக் கணவனும் கற்பித்த வழியில் நிற்றலாம். மூன்றுமடியிலும், நான்கா மடியிலும் தோடைமுரண் காண்க. சோரும் - செய்யுமென்முற்று, ஆண் பாலிற் சென்றது. ஆயிடை - சுட்டு நீண்ட விடத்து யகரந் தோன்றிற்று.

கo. கழைபடுமுத்தமுங்கலுழிக்கார்மத
மழைபடுதரளமுமணியும்வாரிநே
ரிழைபடர்ந்தனையதீ ருவியெய்தலாற்
குழைபடுமுகத்தியர்கோலமொப்பது.

(இ - ள்.) கழை படு முத்தமும் - மூங்கிலிலிருந்து உண்டாகின்ற முத் துக்களையும், கலுழி மிகும் மழை கா படு தரளமும் - கலங்கலாகிய மதநீர்ப் பெருக்கைச் சொரிகின்ற மேகம்போன்ற யானைகளின் தந்தத்திலிருந்து உண் டாகின்ற முத்துக்களையும், மணியும் - மற்றைய இரத்தினங்களையும், வாரி - வாரிக்கொண்டு,—நேர் இழை படர்ந்த அனைய - தக்க ஆபரணங்கள் மேலே பரவினாற் போன்ற, நீர் அருவி - மலையருவிநீரானது, எய்தலால் - (தன் னிடம் வந்து) சேரப்பெறுதலாலே,—(அப்பொய்கை),—குழை படு முகத்தி யர் கோலம் - காதணிகள் பொருந்திய முகத்தையுடைய பெண்களின் அலங் காரத்தை, ஒப்பது - ஒத்திருப்பது; (எ - று.)

மூங்கில் தந்தம் இவற்றினின்று தோன்றும் முத்துக்களையும் மற்றும் பல வகையிரத்தினங்களையும் வாரிக்கொண்டு பெருகிவந்த அருவிநீர் தன்னிடத் துச் சேர்வதனால், அப்பொய்கையானது மகளிர் பற்பல இரத்தினபரணங் களையணிந்திருந்த தன்மையைப் போன்ற தென்பதாம்; தந்துறிப்பேற்ற வணி. வாரி அனைய என இயையும். இலம் குறிஞ்சியாதலால், அங்கிலக் குரிப்பொருளாற் பிறக்கும் முத்து முதலியன கூறினர். மூங்கில் முதலிய வற்றில் முத்துப்பிறக்குமென்பதை, "தந்தி வராகமருப் பிப்பி மூகந் தழை கதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளின மின்னர், கந்தாஞ் சாலி கழை கன்ன லாவின்பல் கட் செவிகா, நிந்து வடும்பு கா முத்தமீனு மிருப நமே" என்பதனு லறிக.

கருமை யென்ற பண்புப்பெயரின் விகாரமான 'கார்' என்பது - அக் கிற முடைய மேகத்துக்குப் பண்பாகுபெயராய், பின் அதுபோன்ற கருநிற முடைய யானைக்கு உவமையாகுபெயராயிற்று: இருமடியாகுபெயர். 'கலுழி மதமழைபடி' என்ற அடைமொழி, இதன் பொருளை விளக்கிற்று. படர்ந் தனைய - படர்ந்தனைய என்பதன் தொகுத்த லென்றுவது, படர்ந்தாலனைய

என எச்சத்திரிபாகவாவது கொள்ளத்தக்கது. எய்தலால், எய்து - முதனிலை; (பிரயோகித்தலென்னும் பொருளில், எய் - முதனிலை.) (கூ)

கக. பொங்குவெங்கடகரிபொதுவினுடலிற்
கங்குலினெதிர்பொருகலவிப்பூசலி
னங்கொருந்தலசியவிலேயினுய்வனே
மங்கையர்வடிவெனவருந்துமெய்யது.

(இ - ள்.) (அப்பொய்கை),—பொங்கு - மிகுதியான, வெம் - வெப்ப முள்ள், கடம் - மதத்தையுடைய, கரி - யானைகள், பொதுவின் - பொதுவாக, ஆடலின் - நீரில் இறங்கிக் கலக்குதலாலே,—கங்குலின் - இராத்திரிகாலத்தில், எதிர் பொரு - (ஆடவர்கள்) சந்தித்துச் செய்கின்ற, கலவி பூசலின் - புணர்ச்சிப் போரினால், அங்கம் நொந்த - உடம்புவருந்தி, அலசிய - சோர்ந்த, ஆய் வளை வேலையின் மங்கையர் - ஆராய்ந்தெடுத்தணிந்த வளையல்களையுடைய வேலை மாதர்களது, வடிவு என - உருவம்போல, வருந்தும் - கலங்கிக் காணப்படு கின்ற, மெய்யது - தன்னுருவத்தையுடையது; (எ - று.)

மதயானைகள் அநேகம் தனித்தனியே வந்து நீழ்ந்து துளாய்ந்து ஆடுவ தனால் கலங்கிய அப்பொய்கை, பல விடபுருஷர்களும் வந்து கூடிக்கலந்து பல வகைச் சிருங்காரசேஷ்டைகளைச் செய்யப்பெற்ற வேசையரது சோர்ந்து மெலிந்த வடிவம்போன்ற காணப்பட்டதென்பதாம்: உவமையணி. பொருள் கொடுப்பவர்க்கெல்லாம் பொதுவாகிய வேலைமகளிரை உவமைகூறுவதற்கு ஏற்ப, 'பொதுவினுடலின்' எனப்பட்டது.

கரீ - கரமுடையது: கரம் - கை; இங்குத் துதிக்கை. கடகரி - வடமொழிப்புணர்ச்சியாதலின், இயல்பு. கலவி - தொழிற்பெயர்; வி - விகுதி. வேலையின் மங்கையர் - தமது இன்பத்தை வேலைகொடுப்பவர்க்கெல்லாம் விற்கின்ற மகளிர். மங்கையர் - மங்கைப்பருவ முடையவர்: அப்பருவத்துக்கு வய தெல்லை - பன்னிரண்டு முதற் பதின்மூன்றளவும்: இங்கு, இச்சொல் பருவப் பெயராகாமற் பொதுவாய் மகளிரை புணர்த்து மென்க. 'பொதுளி யாட லின்' என்றும் பாடம். எதிர்ந்த என்னும் வினையெச்சம், பகுதிமாத்திரமாய் நின்றது. 'வேலைமகட்கழகு மேனியினுக்குதல்' என்பது தோன்ற, 'ஆய்வளை' என்ற அடைமொழி கொடுத்தார். (கூ)

கஉ. விண்டொடர்கெடுவரைத்தேனும்வேழத்தின்
வண்டுளர்கறுமதமழையுமண்டலா
லுண்டவர்பெருங்களியுறலினேனிய
தொண்டையங்கனியிதழ்த்தோன்றல்சான்றது.

(இ - ள்.) விண் தொடர் கெடு வரை தேனும் - ஆகாயத்தை யளாவிய [மிகுவயர்ந்த] பெரிய மலைகளினின்று பெருகுகின்ற தேனெழுச்சியும், வேழத் தின் வண்டு உளர் கறு மதம் மழையும் - யானைகளினது வண்டுகள் மிண்டப் பெற்ற வாசனைவீசுகின்ற மதநீர்ப்பெருக்கும், மண்டலால் - (மிக்குவந்து) நிறைந்திருத்தலாலே, உண்டவர் - (அந்நீரைத்) குடித்தவர்கள், பெரும் களி

உறலின் - மிக்களிப்பை யடைதலால்,—(அப்பொய்கை),—ஓதியர் - கூத்த லழகுள்ள மகளிரது, தொண்டை அம் கனி இதழ் - அழகிய கொவ்வைப் பழம்போன்ற [சிவத்த] அதரம் போல, தோன்றல் சான்றது - தோன்றுத லமைத்தது; (எ - று.)

மங்கையரது அதரம் பானஞ் செய்தவர்க்கு இனிப்பைத்தருவதுபோல, இப்பொய்கையின் நீரும் இனிப்பைக் கொடுப்பதென்பதாம்; உவமையணி. வானத்துக்கும் மலைக்குஞ் சம்பந்தமில்லாமலிருக்கச் சம்பந்தத்தைக் கற்பித்த தலால், 'வீண்டொடர் நெடுவரை' என்ற தொடர் - தொடர்புயர்வுவமிதி யணி; இதனை, வடநூலார் ஸம்பந்தாதிஸயோக்தி யென்பர்: இதனால், மலையி னது மிக்க உயர்வு தொனிக்கின்றது. தேஞெழுக்கு - மூங்கில்முதலியவற் றிற் கட்டப்பட்ட கூடுகளினின்று பெருகுவது. 'வீண்டொடு' என்றும் பாடமுண்டு.

வரை யென்னுங் கணுவின் பெயர். மூங்கிலுக்குச் சினையாருபெயராய், அதனையுடைய மலைக்குத் தானியாருபெய ராதலால், இருமடியாருபெயர். உண்டலென்பது - உண்பன தின்பன பருகுவன கக்குவனவெனப் பிரித்துக் கூறுமிடத்துச் சிறப்புவினையும், வாயினால் நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப் படுமாதலின் பொதுவினையு மாதலால், உண்டலெனப்பட் டது. 'தோண்டையங்கனியிதழ்த் தோன்றல்சான்றது' என்றது, "அடுத்திய தோற்றம் விடுத்தல் பண்பே" என்னுஞ் சூத்திரத்திற் கூறிலக்கிய அடுத்த வாலுவமை யன்று; உவமவருபுதோன்றக் கூறுமையாலும், முன்னது உருவு வமையும் பின்னது பயனுவமையுமா யிருத்தலாலும். (௬௨)

கஉ. ஆரியமுதலியபதினெண்பாடையிற்
பூரியரொருவழிபுகுந்ததாமென
வோர்சிலகிளவிகளொன்றுடொப்பில
சோர்சிலகிளம்புபுட்டுவன்றுகின்றது.

(இ - ன்.) ஆரியம் முதலிய - ஸம்ஸ்கிருதம் முதலாகிய, பதினெண் பாடையில் - பதினெட்டுப் பாஷைகளில், பூரியர் - (இலக்கண இலக்கியத் தேர்ச்சியின்றி) அற்பஞானமுடையவர்கள், ஒருவழி - ஒரிடத்தில், புகுந்தது மும் என - கூடி ஆரவாரிப்பதுபோல, ஓர்வு இல - (இன்ன இன்ன பறவை யின் தொனி இது இது வென்று தனித்தனி) ஆராய்ந்து அறியப்படமாட் டாவைகளும், ஒன்றோடு ஒப்பு இல - ஒன்றோடொன்று ஒத்திராதவைகளு மாயுள்ள, கிளவிகள் - ஒலிகளை, சோர்வு இல - ஓய்தலில்லாதவைகளாய், நிலம்பு - ஒலிக்கின்ற, புள் - (பலவகைப்) பறவைகள், வன்றுகின்றது - நெருங்கியிருக்கப்பெற்றது, (அப்பொய்கை);(எ - று.)

இச்செய்யுளைத் தே கு - ஆஞ் செய்யுளோடு ஒப்புநோக்கி, அதற்கும் இதற்குமுள்ள ஒற்றுமைவேற்றுமைகள் ஊன்றி யுணரத்தக்கன. 'ஆரியம் முதலிய பதினெட்டுப்பாஷை' என்றது - ஆரியத்தையும், தமிழொழிந்த பாஷைகள் பதினேழையும். தமிழ்நிலமொழிந்த பதினேழு நிலத்தை யும் 'செந்தமிழ் சோனகஞ் சாவகஞ் சினம் துளுக் குடகம், கொங்கணம் கன்ன

டல் கொல்லர் தெலுங்கர் கலிங்கம் வங்கம், கங்கமகதம் கடாரம் கவுடம் கடுங் குசலம், தங்கும் புகழ்த்தமிழ்ருஷி பதினேழ்புவிதா யிலையே' என்பதனால் அதிக எனவே, பாஷைகள் பத்தொன்பதாமென்ப. தமிழ்ப்பாஷையினது ஒப்புயர்வற்ற சிறப்பைக் கருதி, அதனை இங்குக் கூறுவாயினர்; இது, கவியினது பரஷாபிமானத்தைக் காட்டும்: அது பிறவற்றோடு கலவாத தனிப் பாஷை யென்பது, கவிஷ்ருதயம்போலும். இனி, 'ஆரியம் முதலிய பதினென்பாடை' என்பதற்கு - வடமொழியை(த் தமக்கு) முதலாகவுடைய பதினெட்டித் தேசபாஷைக ளென்ற பொருள்கொண்டால், ஸம்ஸ்கிருதம் ஸகல பாஷைகளுக்குக் தாய்ப்பாஷை யென்பது போதரும். பாடை - பாஷா என்னும் வடசொல்லின் திரிபு. (கூ)

கச தானுயிருறத்தனிதழுவும்பேடையை
யூனுயிர்பிரிந்தெனப்பிரிந்தவோவிமம்
வானரமகளிர்தம்வயங்குநூபுரத்
தேனுருமழலையைச்செவியிலேற்பது.

(இ - ள்.) தான் உயிர் உற - தன்னைப் பிராணனுக்கு ஒப்பாக (எண்ணி), தனி - வேறு உவமைபெறாமல், தழுவும் - ஆலிங்கனஞ் செய்கின்ற, பேடையை - பெண்ணன்னத்தை, ஊன் உயிர் பிரிந்த என - உடம்பு உயிர் நீங்கப் பெற்றாற்போல, பிரிந்த - விட்டு நீங்கின, ஓவிமம் - ஆணன்னமானது,—வான் அரமகளிர்தம் - தேவலோகத்தினின்று நீராடவருகின்ற தெய்வப் பெண்களினது, வயங்கு நூபுரம் - விளங்குகின்ற காற்சிலம்பினிகளின், தேன் உரு மழலையை - தேன்போன்ற [இனிய] மெல்லோசையை, (தன் பேடையின் குரலென்று எண்ணி), செவியின் ஏற்பது - காதுகொடுத்துக் கேட்டற்கு இடமானது, (அப்பொய்கை); (எ - று)

தமது உயிரோடொத்த பெண்ணன்னத்தைப் பிரிந்த ஆணன்னங்கள், அப்பொய்கையில் நீராடவரும் தேவமாதரது காற்சிலம்பினெலியைத் தமது பேடையின் குரலென மயங்கிக் கேட்குமென்க; மயக்கவணி: இது, வடமொழியில் ப்ராந்திமதலங்கார மெனப்படும். இங்ஙனங்கூறியது, இராமபிரான் தனது பிராணநாயகியாகிய சீதாபிராட்டியாரைப் பிரிந்த அனைதகுரல் முதலியவற்றிற்கு உவமையாகிற பொலிப்பொருள்களைக் கண்டு மயங்குகின்றமையைத் தொனிப்பிக்கும். 'தான் உயிரும,' 'ஊன் உயிர்பிரிந்தென' என ஒன்றற்கொன்று உயிர்போல்வனவான அவற்றின் அன்பையும், 'தனி தழுவும்' என அவற்றின் இன்பலத்தையும் கூறினர். அன்னப்பறவை அன்பிற்சிறந்த தாதலை, "ஆசரம் பெருகுகின்ற அன்பினு லன்னமொத்தும்" என்றதனாலும் அறிக. தனி பிரிந்தவென்ற கூட்டியும் உரைக்கலாம். அன்னத்தினெலிக்கும் மகளிர்சிலம்பொலிக்கும் உவமை கூறுதலை, "அரம்பை ஞெகிழ் வார் சிலம்பி னன்ன கின், நிரம்பு வார்புனற் சாயு," "மின்னுர் சிலம்பிற் சிலம்புங் குரலன்னம்" என்பவற்றினுங் காண்க.

ஊன் என்னும் தசையின் பெயர் - உடம்புக்கு ஆருபெயர். அமரகளிர் - அமரமகளிர், அன்றி அரம்பைமகளிர், அல்லது அப்ஸரமகளிர் என்பதன் விகாரம். உற, உரு என்ற இரண்டும் - இங்கே உவமவுருபாய் நின்றன. (கூ)

கடு. ஈறிட லரியமால் வரைநின் றீர்த்திழி
யாறிடு விரையகி லார மாதிபர
ஊறிட வொண்ணக ருரைத்த வொண்டளக
சேறிடு பரணியிற் றிகழு நோ தை.

(இ - ன்.) (அப்பொய்கை),—ஈறு இடல் அரிய - முடிவிடுதற்கு அரிய தான, மால் வரைநின்று - பெரிய மலையிலிருந்து, ஈர்த்து - இழுத்துக் கொண்டு, இழி-பெருகி வருகின்ற, ஆறு - அருவிகளாலே, இடு-கொணர்ந்து தள்ளப்பட்ட, விரை - வாசனையையுடைய, அகில்-அகிற்கட்டையும், ஆரம் - சந்தனக்கட்டையும், ஆதி ஆ - முதலியனவாக, (வாசனை மரங்கள்), ஊறிட - (தன்னீடத்து நீரில்) ஊறித் தேய்ந்து வருவதனால்,—ஒண் நகர் - ஒளிபொருந்திய [செல்வம் மிக்க] பட்டணங்களில் வுள்ளவர்கள், உரைத்த - தேய்த்து அரைத்த, ஒண் தளம் சேறு - ஒள்ளிய [வாசனை மிக்க] மிருதுவான சந்தனக் குழம்பை, இடு - பிறரத்து வைக்கப்பெற்ற, பரணியின் - பாத்திரம் போல, நிகழும் - விளங்குகின்ற, நோ தை - தன்மையையுடையது; (ஈ - று)

அகிற்கட்டை முதலியவற்றை மலைகளிலிருந்து இழுத்துக் கொண்டு வரும்போது அவைகள் தேய்ந்து குழம்பிய மலைநீருவிகள் தன்னில் வீழப் பெற்ற அப்பம்பைப் பொய்கை - கலவைச்சந்தனம் வைத்த தொரு பெரும் பரணியை யொத்திருந்த தென்பதாம்: நன்மைதந்துறுப்பேற்றவணி; பொய்கைக்குப் பரணியும், அதிலுள்ள அகில் முதலியவற்றின் தேய்வையாற்குழம்பிய நீர்க்கு கலவைச்சாந்தம் உவமையெனக் காண்க. பரணி - பாத்திரம்.

'சேறிடுபரணியின்' எனப் பாடங்கொண்டால், கலவைச் சந்தனத்தைக் குழைத்த நீர்போல என்று பொருள். அகிலும் சந்தனமும் குறிஞ்சிநிலத்திற்குப்பொருளாதலாற் கூறினர். மால் - உரிச்சொல். ஆ - ஆகு வென்பதன் விகாரம். நகர் - அங்குள்ளார்க்கு இடவாகுபெயர். மூன்றுமடி-முந்துமோனை. வாகரிகத்துக்கு உரிய சிறந்த சந்தன மென்றற்கு, 'ஒண்ணகருரைத்த' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. (கடு)

வேறு.

கசு. கவ்வி நோக்கிய நிதழ்நிகர் குமுதத்தி னறுந்தேன்
வவ்வு மாந்தரிற் களிமயக் குறுவன மகர
மெவ்வ நீங்கிய பிறப்பிலெ டிறப்பிலை யென்னக்
கவ்வு மீனெடு முழுகுவ வெழுவன காண்டம்.

(இ - ன்.) (அப்பொய்கையில்),—மகரம் - முதலைகள்,—கவ்வி நோக்கியர் இதழ் நிகர் குமுதத்தின்-மானின் பார்வைபோன்ற பார்வையையுடைய களிதரு அதரத்துக்கு ஒப்பான செவ்வாம்பல்மலர்களிலுள்ள, நறுந் தேன் - ணமுள்ள மதுவை(க் குடித்து),—வவ்வும் மாந்தரின் - (ஆம்பல் மலர்போன்ற களிதரு அதரத்தின் அமுதத்தைப்) பானஞ் செய்கின்ற ஆடவர்போல, களி மயக்கு உறுவன - களிப்பினால் மயக்கம் மிகுவன; காண்டம் - நீர்க்காண்கை,—எவ்வம் நீங்கிய - குறைவில்லாத [தலமுத], பிறப்பிலெடு இறப்பு

இவை என்ன - ஜாகமும் மாணமும் இத்தன்மையன [மாறி மாறி வருகின்றன] என்ற சரட்டை,—கல்வம் மீனெடு - வாயிற் கொண்ட மீன்களுடனே, முழுகுவ எழுவன - அடிக்கடி முழுகியும் எழுந்தும் இருப்பன; (எ - று.)

அப்பொய்கையில் முதலைகள் அம்பல்மலர்களின் தேனைக் குடித்து மயங்கியும், நீர்க்காக்கைகள் மீன்களைக் கவ்வியபடியே முழுகியும் எழுந்தும் இடப்பனவென்பதாம். இதனிகர் குமுதம்-உலகத்துப் பெண்பால்கள் வாயின் நறுநாற்றத்திற்கு உபமானமாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற ஆம்பலை உபமேயமாக்கி வாயை உபமானமாகக் கூறியதனால், எதிர்நிலையணி இதனை, வடநூலார் ப்ரதிவஸ்துபமர் மென்பர்: முன்னிரண்டடிகள் - உவமையணி. 'பிறப்பினெடு இறப்பு' என்றதற்கு ஏற்ப, 'எழுவன முழுகுவ' என்றதனை - எதிர்நிரனிறைப்போநள்கோள், 'எவ்வநீங்கிய விறப்பொடு பிறப்பினை யென்ன' என்ற பாடத்திற்கு - முறைநிரனிறைப்போநள்கோளாம். 'முழுகினவெழுவன' என்பதும் பாடம். நீர்க்காகங்கள் தம்செய்கையினும் பிறப்பு இறப்பின் நிலைமையாகிய தத்துவப்பொருளைத் தெரிவித்ததாகக் கூறியது, நற்போதுட்காட்சியணி; இதனை, வடநூலார் கிதர்ஸகாலங்கார மென்பர். உபமேயத்தில் 'கவ்வமீனெடு' என்றதனால், உபமானமாகிய உயிர்கள் எப்போதும் தாம் அனுபவிக்கும் வினையைப் பற்றியே கிற்குமெனக் கொள்க.

மாந்தர் - எப்பொழுதும் ஒருமையில்லாத பன்மைக்கே வரும் பெயர்; இதனை, கித்யபகுவசக மென்பர் வடநூலார்; மக்கள் மாக்கள் என்பனவும் இவ்வாறே. மகரம், காண்டம் என்பன - பால்பகா அஃறிணைப் பெயராதலால், இக்குப் பன்மைவினை கொண்டன. ஒடு - எண்ணுப்பொருளது. காண்டம் - காராண்டவம் என்னும் வடமொழியின் விகாரம். மருத்துக்குப் பயின்ற ஆம்பலும், காண்டமும், செய்தற்குப்பயின்ற மகாமும் குறிஞ்சி நிலத்து மயங்கக் கூறியது - பொருளிலக்கணத்தில் கினைவழுவமைதி. பிறப்பினெடிறப்பு, முழுகுவ எழுவன - தொடைமாண்.

இதுமுதல் எழுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஈற்றுச்சீரும் மாச்சீர்களும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (கஉ)

கஎ. கவளயானையனுற்கந்தக்கடிநறுங்கமலத்
தவனையிகலமாவதுசெப்துமென்றருளித்
திவளவன்னங்கடிருடைகாட்டுவதென்கண்
குவளைகாட்டுவதுவரிதற்காட்டுவகுமுதம்.

(இ - ள்.) (அப்பொய்கையில்),—'கவளம் யானை அனுற்கு-(தான் வீரும் பிய) கவளம் பெற்று வளர்ந்த யானை போன்ற ஸ்ரீராமபிரானுக்கு, அந்த கடிநறுங் கமலத்தவளை ஈகலம்-வாசனை வீசுகின்ற நல்ல செந்தாமரைமலரிலுள்ள அந்த இலக்குமியை [சீதாபிராட்டியாரை]க் கொண்டு வந்து கொடுக்கும் நிறமை யில்லோம்; (ஆயினும்), ஆவது - (நம்மால்) இயன்ற உதவியை, செய்தும் - செய்வோம்,' என்று அருளி - என்று மனமிரங்கி, அன்னங்கள்

அன்னப்பறவைகள், நிலை - நிலைபெறும்படியாக, நிரை நீட்டை காட்டுவ - (அச் சாரலிலே) சிறந்த நடையின் அழகைக் காட்டுவன; குவளை நீலோற்பல மலர்கள், செங்கண் காட்டுவ - சிவந்த கண்களின் அழகைக் காட்டுவன; குமுதம் - செவ்வாம்பல்மலர்கள், அவர் இதழ் காட்டுவ - சிவந்த அதரத்தின் அழகைக் காட்டுவன; (எ - று.)

ஸ்ரீராமனுக்கு அத்தச் சீதையைக் கொணர்ந்து கொடுத்தற்குத்தான் தம் மால் முடியாதாயினும் ஆனதையாவது செய்வோமென்று அன்னம் முதலியவை சீதாபிராட்டியின் நடையழகு முதலியவற்றைக் காட்டின வென்பதாம்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. நடைகாட்டுவ முதலியன, நடைபோன்ற நடையைக் காட்டுவனவென்பது முதலியவாகப் பொருள்பட்டு உபமான உபமேயங்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லிய தாகுவது, காட்சியணியாம். கவளமாவது என்பதற்கு இவ்வாறு பொருளுரைத்தல், ''கவளக்களிறு'' என்னுமிடத்தில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்த உரையால் அறிக. கவளம்-வாயளவு கொண்ட உணவுத்திரளை; இது, களமென்னும் வடமொழியின் திரிபு. பெருமான் ஸ்ரீராமனுகத் திருவவதாரஞ் செய்தபோது பிராட்டி சீதையாகத் திருவவதரித்ததனால், 'கமலத்தவன்' எனப்பட்டனன். மருதத்துக்குப்பயின்ற குவளையும் குமுதமும், குறிஞ்சியில் மயங்கக்கூறப்பட்டன. யானையுவமை - கம்பீரமான தோற்றத்துக்கும், நடைக்கும், வலிமைக்கும், மறைத்தற்குரிய காலத்தே மறைத்து வெளிப்படுத்தற்குரியகாலத்தே வெளிப்படுத்துஞ் சீற்றத்திற்கும். ஏதலம் - தன்மைப்பண்மை யெதிர்மறைமுற்று. 'நிலை' என்ற செயவெனெச்சம் நடையென்னுந் தொழிற்பெயரின் 'நட' என்ற முதனிலையைக் கொள்ளும். (கஎ)

கஅ. பெய்கலன்களினிலக்கொளிமருங்குகொடுபிறழ
வைகலும்புனல்குடைபவர்வானரமகளிர்
செய்கையன்னங்களேந்தியசேடியரென்னப்
பொய்கையன்னங்களேந்தியபூங்கொம்பர்பொலிவ.

- ள்.) பெய் கலன்களின் - (தாம்) அணிந்துள்ள ஆபரணங்களினது, இலக்கு ஒளி - விளக்குகின்ற காந்தியானது, மருங்குகொடு பிறழ - எல்லாப் பக்கத்தும் ஒளிசெய்யாநிற்க, வைகலும் - நாள்தோறும், புனல் குடைபவர் - (அப்பொய்கையின்) நீரில் இறங்கித் தளர்த்து விளையாடுபவர்களாகிய, வான் நாரமகளிர் - சுவர்க்கலோகத்துத் தெய்வப்பெண்களினது, செய்கை அன்னங்கள் - (விளையாடுதற்காகச்) செய்யப்பட்ட அன்னப்பறவைகளை [அன்னப் பறமைகளை], ஏந்திய - (கைகளில்) ஏந்திக் கையில்கிற்கின்ற, சேடியர் என்ன - (அம் மகளிரது) தோழிமார்போல,—பொய்கை அன்னங்கள் - அப் பொய்கையில் வாழ்கின்ற அன்னப்பறவைகளை, ஏந்திய - தம்மேற்கொண்ட, நு கொம்பர் - (கரையிலுள்ள) புஷ்பக்கொம்புகள், பொலிவ - விளங்குவன; எ - று.)

தெய்வப்பெண்கள் நீரிலிழிந்து குடையும்போது அதினின்று அஞ்சி யெழுந்து அருகிலுள்ள பூங்கொம்புகளிற் போயிருந்த அன்னங்கள், அவர்கள்

தோழிலர் கையிலைவத்துள்ள அன்னங்களே யொத்திருந்தன வென்பதாம் ; உவமையணி. பெய்கையன்னத்துக்கு - செய்கையன்னமும், கையிலுள்ள பூங்கொம்புக்கு - கையிலுள்ள செடியரும் உவமை. இனி, செய் என்று வேற்று, செம்மையென்னும் பண்புப்பெயரின் திரிபாக்கொண்டு, செவ்வந்த கைகளில் அனனங்களே யேந்திய சேடிய ரென்றலுமாம். புனல்குடைதல் - ஜலக்கிரீடைசெய்தல். வான் அரமகளிர் - பெருமைபொருந்திய அரமகளிருமாம்.

பொய்கை - மானிடராக்காத நீர்நிலை. மருங்கொடு - ஒடுவருபு உடனிகழ்ச்சிப் பொருளாகாது இடப்பொருளாய் நிற்றலால், உருபுமயக்கம். இனி, இடையுடனே மின்னவென்று பொருள் கொள்ளலுமாம். வைகலும், உம்மை - தொறுப்பொருளது. சேடி - வடசொல். கொம்பர் - குற்றியலுகரத்திற்கு 'அர்' போலி. (கசு)

கஙு. ஏலுநீர்நிழலிடையிடையெறித்தலிற்படிகம்
போலும்வார்புனல்புகுந்துளவாமெனப்பொங்கி
மாலுமீன்கணமஞ்சினவலம்வரவஞ்சிக்
கூலமாமரத்திருஞ்சிறைபுலர்த்துவகுரண்டம்.

(இ - ள்.) ஏலும் நீர் - (அப்பொய்கையிற்) பொருந்திய நீரில், நிழல் - (மாங்களிலுள்ள கொக்குகளின்) சாயைகள் [பிரதிபிம்பங்கள்], இடை இடை - விடுவிடுவே, எறித்தலின் - வீளங்குதலாலே, படிகம்போலும் வார்புனல் புகுந்த உள ஆம என - ஸ்படிகம்போல மிகத்தெளிந்த மிக்க அந்நீரினுள் (அக்கொக்குகள் தம்மைத் தின்னுதற்பொருட்டுப்) பிரவேசித்துள்ளனவென்று எண்ணி,- பொங்கி ஆலும் மீன கணம் - சந்தோஷித்துத் துள்ளிவிளையாடுகின்ற மீன் கூட்டங்கள், அஞ்சின - பயந்தன; அஞ்சி அலம்வர - (அங்ஙனம்) பயந்து சுழன்று பதுங்குமபடி, குரண்டம் - கொக்குகள், கூலம் மா மரத்து - கரையிலுள்ள பெரியமாங்களில், இருஞ்சிறை புலர்த்துவ-(தமது) பெரிய சிறகுகளை உலர்த்திக்கொண்டிருப்பன ; (எ - று.)

கொக்குகள் அப்பொய்கையின் கரைமீதுள்ள மாங்களிலிருந்து தழுதி சிறகை புலர்த்துகையில் அவற்றின்சாயை மிகத்தெளிந்த நீரிலே கண்ணாடியில் தோன்றுவதுபோலத்தோன்ற, அப்பிரதிபிம்பத்தைக்கண்டு மீன்கள் தம்மைத் தின்னுதற்பொருட்டு அவை நீரிற்புகுந்தனவென மயங்கினவென்கிறாம் ; மயக்கவணி. இடையிடை - அடுக்கு, தொறுப்பொருளது. வஞ்சிக்கூலம் எனப் பிரித்து, கொடிகள் படர்ந்த கரை யென்று பொருள்கொள்வாருமுளர். 'நீணிழல்,' 'அஞ்சினவலமர' என்பன - பாடபேதம். (கஎ)

உ0. அங்கோர்பாகத்தினஞ்சனமணிநிழலடையப்
பங்குபெற்றெளிர்பதுமராகத்தொளிபாயக்
கங்குலும்பகலும்மெனப்பொலிவெய்துகரைய
மங்கைகூர்தடமுலையெனப்பொலினவளாம்.

(இ - ள்.) அங்கு - அப்பொய்கைக்கரையில், ஓர் பாகத்தின் - ஒருபக்கத்திலே [பதிக்கப்பட்டுள்ள], அஞ்சனம் மணி திழல் - மைபோன்ற நீல ரத்னங்களின் ஒளி, அடைய - அடங்கும்படி [தோன்றுதல் மறையும்படி]. பங்கு பெற்று ஒளிர் - வேறொருபக்கத்திற் பொருந்தி விளங்குகின்ற, பதுமராகத்து-பதுமராகக்கற்களின், ஒளி - காந்தி, பாய - சென்று வியாபித்தலால், கங்குலும் - இராத்திரிகாலத்தும், பகல் என - பகலென்று சொல்லும்படி, பொலிவு எய்த - விளக்கமடைகின்ற, கரைய - கரைகளிலேயுள்ளனவாகிய, வாளம் - சக்கரவாகமிதுனங்கள்,—(எப்பொழுதும் பகலாகவினைத்துப் பிரியாதிருப்பதனால்), மங்கைமார் தட முலை என - மங்கைப்பருவமுள்ள மகளிரது பருத்த தனங்கள்போல, பொலிவன - இணைபிரியாதி விளங்குவன ; (எ-று.)

அத்தப் பொய்கையிலொருபக்கத்தில் நீலமணிகளினொளியும் அடக்கும்படி பதுமராகக்கற்கள் செம்மிறவொளியை மிகுதியாகவீசி இரவையும் தெரியவொட்டாமற் செய்வதனால், அக்குள்ள சக்கரவாகப்பறவைகள் இரவிலுமூட்படத் தம்பேடையைப்பிரியாது கூடிமகிழ்வனவாயின வென்பதாம்.

சக்கரவாகங்கள் இரவிற்பிரிந்து பகலிற்கூடுமியல்பின வாதலால், இவ்வாறு கூறப்பட்டது. ஒன்றோடொன்று ஒத்த ஆணும்பெண்ணுமாகிய சக்கரவாகங்கள் மகளிரது இரட்டையாகிய தனங்களுக்கு உவமையா மென்க. இது, எதிரிலியணி ; பதுமராகத்தின் ஒளியால் சக்கரவாகப்பறவைகள் இரவைப் பகலென்று எண்ணியதாகக்கூறிய மயக்கவணி அதற்கு அங்கமாக வந்தது. இக்கவிக்குப் பிறவாறு உரைகூறுதல் பொருந்தாமை உய்த்துணர்க. பங்குபெறுதல் - பக்கத்தைத் தமக்கு இடமாகப்பெறுதல்; இனி, பிளக்கவேலைசெய்யப்பட்டு விளங்குகின்ற பதுமராக மென்றுமாம். பதுமராகம் செந்தாமரைமலர் போலச் சிவந்துள்ள ரத்தினம். கங்குலும், உம்மை - சிறப்பு. பகலும், உம்மை - இசைநிறை. இனி, முறையே இழிவுசிறப்பு உயர்வுசிறப்புகளாகவுமாம். பகலும்மென, மகரம் - விரித்தல்விகாரம், 'பகலே யென,' 'மங்கைமார்தணைமுலையென' என்று பாடங்கொள்ளல், கோ. அடைய' என்னுஞ் செயவெனெச்சம் - காரியப்பொருளதாய் எதிர்கால முணர்த்தி 'பாய' எனனும் வினைகொண்டுமுடிய அதிகாரணப் பொருளதாய் நின்றகால முணர்த்தி 'எய்த' என்னும் வினைகொண்டது. கரைய வாளம் என இயையும். கரைய - குறிப்புப்பெயரெச்சம். வாளம் - சக்ரவாகம் என்ற வடசொல்லின் முதற்குறை ; ஒருபெயரின் ஒருபகுப்பைக் கொண்டு முப்பெயரைக்குறித்தது: காமைகதேஸோகாமக்ரஹணம். பாகம், அஞ்ஜனி, பத்மராகம் - வடசொற்கள். (உ0)

உக. வலிகடத்தியவாளெனவாளைகள்பாய
நிலைகடத்திய நிரைதொறுமுகள்வனநீர்நாய்
கலிகடக்கழைக்கண்ணுளரெனகடங்கலினப்
பொலிவுடைத்தென்றேரைகள்புகழ்வனபோலும்.

(இ - ள்.) (அப்பொய்கையில்),—வாளைகள் - வாளைமீன்கள், வலி கடத்திய வால் எனை - வலிமையோடு மீறிய வாளாயுதங்கள்போல, பாய - பாய்ந்து

செல்லாநிற்க,—அலை படத்திய திரைதொறும் - நிலையாக [மேன்மேலுஞ்] செல்வனவாகிய அலைகளிலெல்லாம், உகள்வன - உருண்டு செல்வனவாகிய, நீர்நாய்—, கலி கடை கழை கண்ணுளர் என நடம் கவின - (கலிற்கட்டிய சதங்கைகளின்) ஒலியையுடைய கடையோடு கூடிய கழைக்கூத்தாடிகள் போல (அவ்வாளைமீன்களின்மேல்) நடனத்தை அழகியதாகச் செய்யாநிற்க, தேரைகள் - தவளைகள், (அதனைக் கண்டு), பொலிவு உடைத்து என புகழ்வன - '(நிற்கடனம்) கண்ணுயிருக்கின்றது' என்று புகழ்ந்து கூறுவனவற்றை, போலும் - ஒத்துக் கத்துகின்றன; (எ - று)

வாளைமீன்கள் வான்பேரற் பாயும்போது அவற்றின்மேல் நீர்நாய்கள் உருள்வனவற்றைப் பார்த்தால் - மூங்கில் நாட்டி அதன்மேலேறி ஆடுகின்ற கூத்தர்கள் கத்தியைக் குறுக்கே பிடிக்க அதன்மேற் காரணம்போடுகின்றது போலவும், அயலில் தவளைகள் இரைவது - அக்கூத்து அழகியதென்று புகழ்வனபோலவும் இருந்தனவென்பது கருத்து; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. கழை - மூங்கில். கண்ணுள் - கூத்து. (உ)

[இராமபிரான் அப்போய்கையிலுள்ள அன்னம் முதலியவற்றைக் கண்டு புலம்பத் தொடங்குதல்.]

உஉ. அன்ன தாகிய வகன்புனற் பொய்கையை யணுகிக்
கனனி யன்னமுங் கமலமு முதலிய கண்டான்
றன்னி னீங்கிய தளிரியற் குருகினன் றளர்வா
னுன்னு நல்லுணர் வொடுங்கிடப் புலம்பிட லுற்றான்.

(இ - ன்.) (ஸ்ரீராமபிரான்),—அன்னது ஆகிய - அப்படிப்பட்டதான, அகல் புனல் பொய்கையை - பரந்த நீரையுடைய தடாகத்தை, அணுகி-சேர்ந்து,—(அதிலுள்ள), கன்னி அன்னமும் - இளமையான அன்னப்பறவைகளும், கமலமும் - தாமரைமலர்களும், முதலிய - முதலியனவற்றை, கண்டான் - பார்த்து,—தன்னின் நீங்கிய - தன்னிடத்தினின்று பிரிந்துபோன, தளிர் இயற்கு - இளந்தளிர்போன்ற மென்மைத்தன்மையையுடைய சிதையின் பொருட்டு, உருகினன் - நெஞ்சுருகி, தளர்வான் - வருந்துபவனும்,—உன்னும் நல் உணர்வு ஒடுங்கிட-ஆராய்ந்தறிதற்குரிய நல்லறிவு அடங்காநிற்க, புலம்பிடல் உற்றான் - புலம்பத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் ஒன்பதுகவிகளாற் கூறுகின்றார்.

அன்னமும் தாமரைமலரும் முதலியவை - சீதாபிராட்டியாரின் கண்டை முகம் முதலியவற்றைப்போன்று தோன்றி வருத்தத்தை விளைத்தலால், இராமபிரான் அவற்றைக்கண்டு இரங்கிப் பிரிவாற்றுமையால் வாய்விட்டு அரற்றத் தொடங்கின னென்பதாம். இராமபிரான் தான் திருமாலின் திருவவதாரமாயிருந்தும் இவ்வாறு புலம்புவது, தான்கொண்ட மானுடவேடத்திற்கு ஏற்ப நடிக்குந் தன்மையினா லென்க.

அகல்+புனல்=அகன்புனல்; மொழிமீற்றுலகரம் வல்லினம் வர அல்வழியில் னகரமாத்திரித்தது; ["குறில்செறியாவிடத்து" என்றதனாற்றான் 'பிற']

என்ற மிகையால்.] கன்னி - அழகுமாம்: இது - இனமை அழகு என்னும் பொருள்களே புணர்த்தும்போது, உரிச்சொல்: (இளம்பெண்ணே புணர்த்தும் போது கன்யா என்னும் வடமொழியின் சிதைவாகிய பெயர்ச்சொல்.) தளிரியல் - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கண்டான், உருகினன், தளர்வான் - முற்றெச்சங்கள். முதலிய - பலவின்பாற் பெயர். ()

வேறு.

[இதுமுதல் ஒன்பது கவிகள் - இராமபிரான் புலம்பல்.]

உரு. வரியார் மணிக்கால் வாளமே மடவன் னங்கா ளெனீநீங்கத்
தரியா ணடந்தா ளில்லளேற் றளர்ந்த போதுந் தகைவேயோ
வெரியா நின்ற வாருயிருக் கிரங்கி ஞலீ நிசையன்றே
பிரியா திருந்தேற் கொருமாற்றம் பேசிற் பூசல் பெரிதாமோ.

(இ - ள்.) வரி ஆர் - ரேகைகள் பொருந்திய, மணி கால் - அழகிய கால் களையுடைய, வாளமே - சக்காவாகங்களே! மடம் அன்னங்காள் - இளமை யான அன்னங்களே!—எனை நீங்க தரியான் - என்னை விட்டுப்பிரியப் பொறுதவளாகிய சீதை, நடந்தாள் - பிரிந்து போனாள்; இல்லள் - (அவள் என்னிடத்து) இல்லாதவளாயினள்: எல் - என்றும், தளர்ந்த போதும் - (அதனால் தான்) வாடிகின்ற இச்சமயத்திலும், தகைவேயோ - (நீங்கள் முன்னே வருதற்குத்) தடை உண்டோ? எரியாகின்ற அரு உயிருக்கு - (பிரிவாற்றுமையால் வருந்தித்) தபிக்கின்ற (எனது) அரிய உயிருக்கு, இரங்கினால் - (நீங்கள்) இரக்கஞ் செய்தால், ஈது - இது, இசை அன்றே - (உங்களுக்குக்) கீர்த்திக்குக் காரணமன்றே? பிரியாது இருக்கேற்கு - (இதுவரையில் ஒருபொழுதஞ் சீதையைப்) பிரியாதிருந்த எனக்கு, (ஆதலில் உண்டாம் படி), ஒருமாற்றம் பேசின் - ஒரு வார்த்தை சொன்னால், பூசல் பெரிது ஆமோ - (அதனால் உங்களுக்குப்) பெரிய பொல்லாங்கு உண்டாகுமோ? (எ-று.)

சீதை போயிருக்கின்ற இடத்தைச் சொல்லி உதவி செய்யுங்கள் என்பது கருத்து. 'இல்லளேல் தளர்ந்தபோதுந் தகைவேயோ' என்றது - அவள் உளளாயின் நீங்கள் அவளது தனத்திற்கும் நடைக்குந் தோற்று முன்நிற்க மாட்டீர்; அவளில்லாது யான் வருந்துகின்ற இப்பொழுது வருதற்குத் தடை யென்ன? என்றபடி. "நானங்கொள் நளினப்பள்ளி நயனங்களேயநேமி, வானங்க ளுறைவ கண்டு மங்கைதன் கொங்கைகோக்கும்" என்றும். "ஒதிம மொதுங்கக்கண்ட வுத்தம னுழையளாகுஞ், சீதைதன் னடையைநோக்கிச் சிறியதோர்முறவல் பூத்தான்" என்றும் கீழ் ஆரணியகாண்டத்துச் சூர்ப்பணகைப்படலத்திலே சக்காவாகமும் அன்னப்பறவையும் முறையே சீதையின் தனத்திற்கும் நடைக்கும் தோற்று ஒளித்து ஒடுவதை இராமபிரான் குறிப்பித்ததாக வந்துள்ளது காண்க.

இனி, இல்லள் - இல்வாழ்க்கைக்குத் தகுதியாகிய மனைவி [சீதை] எனக் கொள்ளலுமாம். 'தகவேயோ' என்ற பாடத்துக்கு - நான் இவ்வாறு வருந்த

வும் நீங்கள் இன்றளம் இரங்காமலிருப்பது தகுதிதானே? எனப் பொருள் கொள்க. எணை - தொகுத்தல். தரியான் - பெயர். உம்மை - இழிவு சிறப்பு. இசைக்குக் காரணமானதை இசையென்றது, உபசார வழக்கு. அன்ற, ஓ - தேற்றப் பொருளன. ஈற்றேகாரம் - எதிர்மறையோடுகூடிய வினாப்பொருளது. செய்தற்கு உரிப்பொருளாகிய இரங்கல் குறிஞ்சியில் வருதல், "இணை மயக் குறுதலுங் கடிநிலை யிலவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் அமையும். 'பிரியாதிருந்தீரொருமாற்றம்' என்றும் பாடமுண்டு. பிரியாதிருந்தீர்-ஆணும்பெண்ணுமாகிய இரட்டையாய் இணைபிரியாதிருந்தீரென்றபடி.

இதுமுதல் ஒன்பது கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சிறும் ஆறுஞ் சிறும் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிகெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (உரு)

உ சை. வண்ணநறுந்தாமரைமலரும்வாசக்குவளைநாண்மலரும்
புண்ணிலெனரியுமொருநெஞ்சம்பொதியுமருந்திற்றரும்பொய்காய்
கண்ணுமுகமுங்காட்டுவாய்வடிவுமொருகாற்காட்டாயோ
வெண்ணுமென்னினஃததவாதுலோவிளைநருமுயர்ந்தாரோ.

(இ - ன்.) வண்ணம் நறும் தாமரை மலரும் - அழகிய தாமரைமலர்களையும், வாசம் நாள் குவளை மலரும் - வாசனையுள்ள அன்றுமலர்ந்த நீலோற்பல மலர்களையும், புண்ணின் எரியும் ஒரு நெஞ்சம் பொதியும் மருந்தின் - (சீதையைப்பிரிந்ததனால்) புண்போல எரிகின்ற தனிமையான [வேறுதுணையுங் கதியுமில்லாத] (எனது) மனத்திற்கு மேலே தடவுகின்ற மருந்துபோல, தரும் - காட்டுகின்ற, பொய்காய் - தடாகமே!—கண்ணும் முகமும் காட்டுவாய் - (சீதையின்) கண்களையும் முகத்தையும் (பலதரம்) காட்டுகின்றீ, வடிவும் - அவளுருவம் முழுவதையும், ஒரு கால் காட்டாயோ - (எனக்கு) ஒருதரமாயினுங் காட்டமாட்டாயா? எண்ணும் என்னின் - (தம்மாற்கூடுமானால்) அஃது உதவாது - அப்பொருளை உதவிசெய்யாமல், உலோவிளைநரும் - லோபஞ்செய்தவர்களும், உயர்ந்தாரோ - (உலகத்தில்) மேலானவராவாரோ? [ஆகார்என்றே? என்றபடி]; (எ - று)

பொய்கையில் மலர்ந்து தோன்றுகின்ற தாமரைமலரும் குவளைமலரும் பிராட்டியினது முகமும் கண்களும் போன்று இருத்தலால், சீதையைப்பிரிந்து வருந்துகின்ற தனது மனம் அவைகண்டு சிறிது வருத்தமாறுதல்பற்றி, இவ்வாறு கூறினன். "இசையாவொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற்கை" ஆதலால், ஒண்ணுமென்னி னஃததவாது உலோவிளைநருமுயர்ந்தாரோ' எனப்பட்டது. இனி, 'உண்ணும்' எனப்பாடங் கொண்டு, ஒருவன் உண்பானுலுல் அவனுக்குச் சிறிது கொடுத்து ஆசை காட்டி முற்றக்கொடாமல் லோபஞ்செய்தவர்கள் என்ற உரைப்பினும் அமையும். 'உய்ந்தாரோ' என்னும் பாடத்துக்கு - கடைத்தேறினார்களோ? என்று பொருள். மன்னும் தருமென இயையும்.

பெய்காய் - நறுநிரித்தவினி. முன்னே உபமானமாகிய தாமரையும் குவளையும் கூறியதற்கு ஏற்ப, பின்னே உபமேயமாகிய முகத்தையும் கண்களையும் முறையே கூறுமையின், எதிர்நிரனிறைப்பொருள்கோள். ஒண்ணும் - ஒன்றும் என்பதன் மரூஉ. உலோவினூர் - லோபமென்னும் வட மொழியின் திரிபாகிய உலோபம் என்னும் பெயரினடியாப்பிறந்த இறந்த காலவினையாலணையும்பெயர்; "உண்ணிறங்காட்டி நீரென் னுயிர்த்தரவுலோபினீரே", "உன்ன முவந்துள செய்வெனென்றும் லோபேன்," "எருதுகளோடு பொருதி யேது முலோபாய்காணம்மி" என்பன காண்க. உம்மை - இழிவு சிறப்பு. ஓ - எதிர்மறை. (உசு)

உரு. விரிந்தகுவளைசேதாம்பல்விரைமென்கமலங்கொடிவள்ளை
தரங்கங்கெண்டைவராலமையென்றித்தகையதமைநோக்கி
மருந்தினனையாளவயவங்களைசிற்கண்டேன்வல்லரக்க
னருந்தியகல்வான்சிந்தினவோவாயியுரைத்தியாமன்றே.

(இ - ன்.) விரிந்த குவளை-மலர்ந்த கருங்குவளைமலர்களும், சேதாம்பல் - செவ்வாம்பல்மலர்களும், .விரை மெல் கமலம் - வாசனையுடைய மெல்லிய தாமரைமலர்களும், கொடி வள்ளை - வள்ளைக்கொடியின் இலைகளும், தரங்கம் - அலைகளும், கெண்டைட் - கெண்டைமீன்களும், வரால் - !வால்மீன்களும், ஆமை - ஆமைகளும், என்ற இ தகையதமை - என்ற இத்தன்மையனவாகிய பொருள்களை, நோக்கி (ஸ்ரீராமன்) பார்த்து,—(அப்பொய்கையை நோக்கி),—'ஆவி - பொய்கையே! மருந்தின் அனையான் அவயவங்கள் - தேவாமிருதம்போன்ற சீதையினது (கண் வாய் முகம் காது வயிற்றுமடிப்பு கணைக்கால் புறங்கால் முதலிய) உறுப்புக்களை, நின் கண்டேன் - உன்னிடத்துப் பார்த்தேன்; அவை - அவ்வுறுப்புக்கள்,—வல் அரக்கன் - வலிய இராக்கதன் [இராவணன்], அகல்வான் - பரந்த ஆகாயத்தில், அருந்தி - தின்னும் போது, சிந்தினவோ - (பூமி) சிந்தினவைகளோ? உரைத்தி - (நீ) சொல் வாயாக,' (என்ற கூறினன்;) (எ - று.)—ஆம், அன்று, எ - அசைகள்.

குவளை மலரும் கெண்டையும் பிராட்டியின் கண்களையும், ஆம்பல் மலர் வாயையும், தாமரைமலர் - முகம் கை கால்களையும், தாமரையரும்பு - தனங்களையும், வள்ளியிலை - காதுகளையும், அலை - வயிற்று மடிப்பையும், வரால் - கணைக்கால்களையும், ஆமை - புறங்கால்களையும் போலுதலால் இது கூறினன். குவளை முதலியவற்றைச் சீதையின் அவயவங்களாக இராமபிரான் கருதினனென வந்தது, மயக்கவணி. குவளை முதலியவற்றை, அரக்கன் தின்னும்போது சிந்திய சீதையின் அவயவங்களாகக் கருதினன். கொடி, வள்ளை எனத் தனியே பிரித்து, கொடி - இடைக்கு உவமையாகவுங் கொள்ளலாம். கெடைத்தற்கு அரியளாய்க் கண்ணுக்கு இனியளாய்த் தன்னை நகர்த்தார் பிரிதல் நிகராமல் தடுக்குந் தன்மைபற்றி, 'மருந்தினனையான்' என்றான். அரக்கனுக்கு வன்மை - புஜபல வரபலங்களும், கல்நெஞ்சுடைமையும்.

சேதாம்பல் - பண்புத்தொகை: செம்மையின் நறுமேனி ஆதிசீண்டு முன்றின்ற மெய் நிரிந்தது; இதனைப்போன்ற பண்புத்திரிபுகளை 'பண்பு மாத்

நிரையாய்க் குறைந்த சொல்லாதலின், மருவின் பாற்றியதாய் நின்றது' என்பர் சச்சிதானந்தனியர். அரக்கன் - ரகஸ் என்ற வடமொழியின் திரிவு. அருந்தி - அரிந்த வென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. இனி, அருந்தியகல்வான் - நின்றகொண்டு போரும்போது என்றும் உரைக்கலாம்; அவ்வுரையில், அகல்வான் என்பதை அகலவென்னும் எச்சத்தின் திரிபாகக் கொள்க. ஆவி - வாபீ என்னும் வடமொழியின் திரிவு. வாவியெனப் பிரித்தல் மோனைத் தொடைக்குச் சிறவாதென அறிக. 'தோன்றி' என்ற வினையெச்சத்துக்கு ஏற்ற முடிக்குஞ்சொல் வருவித்து உரைக்கப்பட்டது. (உஅ)

உஆ. ஓடாநின்றகளிமயிலேசாயற்கொதுங்கியுள்ளழிந்து
கூடாதாரிற்றிரிகின்றநீயுமாகற்குளிர்ந்தாயோ
தேடாநின்றவென்னுயிரைத்தெரிபக்கண்டாய்கின்தையுவர்
நாடாநின்றுயாபிரான்கணுடையாய்க்கொளிக்குமாறுண்டோ.

(இ - ள்.) ஓடாநின்ற - (இப்போது எனது எதிரிலே) ஓடிவிளையாடுகின்ற, களி மயிலே - சந்தோஷத்தையுடைய மயிலே! சாயற்கு ஒதுக்கி உன அழித்து கூடாதாரின் திரிகின்ற நீயும் - (சீதையின்) சாயலுக்குத் தோற்று மறைத்து மன்மழிந்து (அச்சீதைக்குப்) பகைவர்போலச்சஞ்சரித்து வந்த நீயும், ஆகம் குளிர்ந்தாயோ - (இப்பொழுது சீதையில்லாமை பற்றிச் சந்தோஷத்தால்) மனம் குளிர்ந்தனையோ? தேடாநின்ற என் உயிரை - (அனைத்) தேடுகின்ற எனது உயிரினது (யாவருமிரங்கத்தக்க) நிலைமையை, தெரிய கண்டாய்-பிரதியக்ஷமாகப் பார்த்தாய்; (பார்த்தும் சிறுமயிர்காமல்), நின்தை உவக்கு ஆடா நின்றாய் - மனமகிழ்ந்து கடனஞ்செய்கின்றாய்; (சீதை போனவிடத்தைச் சொல்லலாகாதோ)? (நான் பார்த்தேனில்லையென்று சொல்வையாயின்),—ஆயிரம் கண் உடையாய்க்கு - ஆயிரம்கண்களையுடைய உனக்கு, ஒளிக்கும் ஆறு - (தெரியாதபடி அவன்) மறைத்து செல்லும் வழி, உண்டோ - உளதோ? [இல்லையே]; (எ - று.)

சாயலால் உன்னை அவமதித்தவென்ற சீதை என்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டதனால் நீ அகமகிழ்ந்து, அவளுள்ளவிடத்தை அறிந்திருந்தும் எனக்கு உரையாது களிகடம்புரிகின்றாயென இராமபிரான் மயிலை வெறுத்துக் கூறினனென்க. இயற்கையில் மயில் அகமகிழ்ந்து களிகடம்புரிதற்கு, சீதை பிரிந்து போனதைக்கண்டு இவ்வாறு புரிகின்றதென மயங்கியதாகக் காரணங் கற்பித்துக் கூறியது, மயக்கவணியை அங்கமாகக்கொண்டுகேத்த ஏதுத்தற்குறிப்பேற்றவணி. ஒளிக்குமாறு உண்டாகாத என்பதை, 'ஆயிரம் கண் உடையாய்' என்ற விசேஷ்யம் சாதித்து நிற்பது, கருத்துடையடை கோளியணியாம். அடர்த்தியாற் கார்காலம்போலிருண்ட சோலைகள் தேனருவியாகப் பொழிய அதனைக்கண்டு மழையென மருண்டு மயில்கள் இனவேனிற்காலத்திலும் களிகடம்புரிந்தனவென்க. 'தேடாநின்ற என்னுயிரைத் தெரிபக்கண்டாய்' என்பதற்கு - என்னுள் .தேடப்படுகின்ற என் உயிருக் கொப்பான சீதையை அவன் போம்போது நீ கண்ணாரப் பார்த்திருப்பாயென்றும் பொருள் கொள்ளலாம்.

களி மயில் - இரண்டனுருபும் பயனும் உடன்தொக்கதொகை; களிக்கின்ற மயில் என விரித்தோகையாகவுங் கொள்ளலாம். கூடாநட்பு - சேரா நட்பு எனப் பண்புவர்க்குக் காரணக்குறி. ஆகம் என்னும் உடம்பின் பெயர் - மனத்திற்கு ஆகுபெயர்; இனி, அகம் என்பதன் ரீட்டல்விகாரமாகவுங் கொள்ளலாம். என் உயிர் - உடையதும் உடைமையும் வேறுகாத ஒற்றுமைத் தொழுமையில் வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை. உயிர் என்பது - முன்னைய பொருளிற் பொருளாகு பெயரும், பின்னையபொருளில் உவமையாகுபெயருமாம். 'ஆயிரங் கண்' என்றது, பீலிக்கண்களை. இங்கே 'ஆயிரம்' என்றது - பலவென்னும் பொருள்பட நின்றது. இவ்விடத்தில், "காணினதொகுபீலி சோலின நடமாட, பூணிய கினசாயல் பொலிவது பலகண்ணிற், காணிய வெனவாகுங் கனிமயில் பலகாணும்" என்றதன் பொருளை நோக்குக. "உடையாய் - முன்னிலை யொருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர்; 'ஆயிரங்கணுடையார்க் கொளிக்குமாறண்டோ' என்றும் பாடம். (உக)

உஉ. அடையிசெனினுமொருமாற்றமறிந்தனையீரன்னத்தின்
பெடையீரொன்றும்பேசீரோபிழையாதாற்குப்பிழைத்தீரோ
நடைநீரழியச்செய்தாரோடுயிலாதார்நினைபவரோ
டுடையீர்பகைதானுண்மைநோக்கியுவக்கின்றேனுமுனிவீரோ.

(இ - ன்.) அன்னத்தின் பெடையீர் - அன்னப்பேடைகளே!—அடையீர் எனினும் - (நீங்கள் என்னிடத்து) வரமாட்டீர்களாயினும், அறிந்தது ஒரு மாற்றம் உரையீர் - (சிறையைப்பற்றி நீங்கள்) அறிந்ததொரு வார்த்தையையாயினுஞ் சொல்லுங்கள்; ஒன்றும் பேசீரோ - (என்னோடு) ஒரு வார்த்தையும் பேசமாட்டீர்களோ? பிழையாதாற்கு - (உங்கள் விஷயத்தில்) தவறு ஒன்றுஞ் செய்யாதவனுக்கு [எனக்கு], பிழைத்தீரோ - தவறுசெய்வீர்களோ? நடு இலராரே - இடையில்லாத சிறைபிராட்டியாரே, நீர் நடை அழிய செய்தார் - நீங்கள் நடையழகில் (தமக்குத்) தோற்றுப்போம்படி செய்தார்; அவரோடு தான் நனி பகை உடையீர் - அச்சிறையாரோடுதான் மிக்க பகைமையை யுடையராயிருக்கின்றீர்; (அங்ஙனமன்றி), உமை நோக்கி உவக்கின்றேனை - உங்களைப்பார்த்து (உங்கள் நடை அவன் நடையை ஒக்கும் என்ற எண்ணிச்) சந்தோஷிக்கின்ற என்னையும், முனிவீரோ - வெறுப்பீர்களோ?

உங்கள் நடையை யழியச்செய்த வெற்றிகொண்ட சிறையினிடத்துப் பங்கமைகொள்வது நியாயமே; உங்களுக்கு ஒருபிழையுஞ் செய்யாமல் உங்கள் நடையைநோக்கி மகிழ்கின்ற என்னிடத்தும் பகைமைகொண்டு அருகில் வாராதும் இவ்வாறு ஒன்றும் பேசாதும் போவது தருமியோ? என்பதாம்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இனி, இச்செய்யில், அடையீர் எனினும் என்றதில் அடைதற்குரியிடப்பரப்பாயினும் என்றும், நடைநீரழியச்செய்தாரே நடுவிலாதார் என்றதில் - நடுவுநிலைமையில்லாதவர்தாம் நீங்கள் கல்நடத்தை நடத்தச் செய்தவர் என்றும் வேறு ஒரு பொருள் தொனித்தல் காண்க. உரையீர் என்பதற்கு - சொல்லுங்கள்நீரில்லே யென்றும், பிழையாதாற்கு (சிறையைப் பிரித்து) உயிர்வாழமாட்டாதவனுக்கு என்றும் பொருள்கொள்ளலாம்,

அடையீர் - முன்னிலைப்பன்மை யெதிர்மறை வினையாலணையும்பெயர். உரையீர் - எதிர்மறைமுற்று. பேசீர் - முன்னிலைப்பன்மை எதிர்மறை முற்று. அலீயீர, பேசீர் என்பவற்றில், எதிர்மறை ஆகார விடைநிலை புணர்ந்து கெட்டது. பிழைத்தீர், முனிவீர் - முன்னிலைப் பன்மை முற்று. உடையீர - முன்னிலைப்பன்மைக் குறிப்புமுற்று. பெடையீர் - பெடையார் என்பதன் விளி; ஈற்றயல் நிரிந்தது - விளியுருபு: பெடையார் - இக்கு, ஆர் எனும பலர்பால் விகுதி, உயாவுப்பொருளது; இது - உயர்வினுல அஃறிணை உயாதிணையாகச் சொல்லப்பட்ட நிணைவழுவமைதி. பிழையாதாருகு-தனஈமீயிற படர்கைகைக்த இடவழுவமைதி. ஒகாரகள் - இரக்கப் பொருளன. (உ எ)

உஅ.பொன்பால்பொருவும்விரையல்லிபுல்லிப்பொலிகதபொலத்தாது
தன்பாற்றழுவுகுழலவண்டுதமிழ்ப்பாட்டிசைக்குதாமரையே
யென்பாலிலலியபபாலோவிருப்பாரல்லர்விருப்புடைய
வுனபாலிலலியென்றக்காலொளிபபாரோடுமுறவுண்டோ.

(இ - ன்.) பொன்பால் பொருவும விரை அல்லி புல்லி - பொன்னின இயலபை யொதிருக்கின்ற வாசனையையுடைய அலரிதழ்களைச் சார்ந்து, பொலிக்த - (அவறறினகதபோதபொருந்து) வினகருகின்ற, பொலம் தாதுதன பால - பொனனிறமான மகாநதப்பொடியினிடதத, தழுவும - (ஆணும் பெண்ணுமாகத) தழுவிநிறகினற, குழல வண்டு - இசைபாடுகினற வண்டுகள், தமிழ பாடடு இசைககும - (கேகடடறகு) இனிமையான இசைபாட்டுக்களைப பாடபபெறற, தாமரையே - தாமரைமலரே!—(சீதையார), எனபால இலலே - (கணவனுகிய) எனனிடத்தில இலலே, அப்பாலோ இருப்பார் அலலா - வேறறிடததில்லா இருககதகக்வலலா; விருபபு உடைய உனபால இல்லே எனறகால - விருபபதைதையுடைய (பிறந்த இடமாகிய) உன்னிடதது மம இலலே யெனறு நீயுரு சொனனால,—ஒளிப்பாரோடுமை - (வைதகக் கொணடு இல்லே யெனறு) மறைதது பேசுபவாகளோடுமை, உறவு - சிநேகக் கொளளுதல உணடோ - தகுதியுளளதாமோ? [ஆகாத]; (எ - று.)

இலகுமெய்யைசமான சீதாபிராட்டியார எனனிடததில இலலே யென்பது பிறரியகூமாகத தெரிந்தவிஷயம, வேறறிடததில இருககமாடடாரெனபது மம பிரசததமானதே; ஆகையால, உனனிடததே இருததலவேணடும் ஆகவே நீ உனனிடததிற காட்டாது ஒளிகினறு யெனத தாமரையை நோமபான வெறுதது உரைததனனெனக.

அலலி - அகவிதழ்; (புல்லி - புறவிதழ்.) அல்லி புல்லித் தாதுதழுவும் தாமரையெனறு கூடடியும உரைகலாம. பொன + தாது = பொலதாது; இபபுணரசசி, "பொனனெனனிலவி யீறுகெட முனைவிய, முனனர்த் தோனறும லகாரமகாரஞ், செயயுணமருங்கிற றொடரியலான" எனனுஞ் தொலகாபபியத தபபுளளியகுகிய சூததிரவிதிபறறி அமைதது: இனி, பிறகாலததா 'பொலம' எனற தனிய ஒருசொற கொளக. குழல - உசைப்புடடு; இனி, ஊதகுழலபோலப் பாடுகினற வண்டு எனனும,

கூந்தல்போற் கருநிறம் பொருந்திய வண்டு என்றுமாம். 'தமிழ்' என்ற சொல் இப்பொருளதாதலை, "தமிழ் தழிய சாயலவர்" என்னுமிடத்துங் காண்க. புல்லி - இறந்தகாலவினையெச்சம்.

கோத தாமரையைக் கேட்பதுபோலக்கூறியது, மரபுவழுவமைதி; "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத்தடக் கியும்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். இவ்விலக்கணம், வினையிடன் கட்கும் ஒக்கும். (உஅ)

உகூ. ஒருவாசகத்தைவாய் திறந்திட்டுதவாய்பொய்கையுள்ளொடுங்குந்
திருவாயினையசேதாம்பற்கயலேகிடந்தசெங்கிடையே
வெருவாவெதிர்நின்றமுதுயிர்க்கும்வீழிச்செவ்விக்கொழுங்கனிவாய்
தருவாயவ்வாயின்னமிழ்துந்தண்ணெண்மொழியுந்தாராயோ.

(இ - ள்.) ஒரு வாசகத்தை வாய் திறந்திட்டு உதவாய்-ஒருவார்த்தையையும் வாயைதிறந்து சொல்லாமல், பொய்கையுள் ஒடுங்கும் - தடாகத்திலே குவிந்திருக்கின்ற, திரு வாய் அனைய சேதாம்பற்கு - சிதையினது வாயைப் போன்ற சிவந்த ஆம்பல்மலர்க்கு, அயலே - அருகிலே, கிடந்த - பொருந்தியுள்ள, செம் கிடையே - சிவந்த சடையே!—(நீ),—வெருவா - அஞ்சாமல், எதிர் நின்று - (என்) முன்னே பொருந்தி,—அமுத உயிர்க்கும் - அமிருதத்தை வாய்விடுகின்ற [அமிழ்தம்போ லினிய பேச்சுக்களைப் பேசுகிற], செவலி கொழுவீழி கனி வாய் - அழகையுடைய செழுமையான வீழிப்பழம் போன்ற சிதையின் வாயை, தருவாய் - காட்டுவாய்; (அத்தகைய நீ), அவாய் இன் அமிழ்தம் - அந்த வாயிலுள்ள இனிய அமிருதம்போன்ற இரசத்தையும், தண்ணெனமொழியும - குளிர்ந்த பேச்சுக்களையும், தாராயோ - காட்டமாட்டாயோ? (எ - று.)

நீ வாயைப்போன்றிருக்கின்றனையே; அதிலுள்ள இனியரசத்தையும் மதுரமான பேச்சையுங் தாலாகாதா? என, இராமபிரான செங்கிடையை நோகி இரங்கினனெனக. இவருச் செஞ்சடை வாயை வடிவத்தால் ஒத்து கின்ற இனிய ரசத்தையும மதுரமான பேச்சையும் பெறுதி நிறபதாகிய குறைவைக் கொண்டனைதாக கூறியது, வேற்றுமையணி: இதனை, வட நூலார் 'வயதிரோலகாரமென்பர்.

உதவாய் - முற்றெச்சம். உதவாது கிடந்த செங்கிடை யெனவும், வெருவா எதிர்நின்ற தருவாய் எனவும் இயைக்க. அமுதுயிர்க்கும் வா யெனக் கூட்டுக. இப்பொழுது எனனிடத்துச் சிதையிலலாமையால் நீ அவனது வாயழகுக்குத் தோறறு அஞ்சி ஒடாது எதிர்நிற்கின்றாய்போலு மெனபார், 'வெருவா வெதிர் நின்ற தருவாய்' எனறார். 'வாய்மூழிழ்கையும்' என்னும் பாடத்தாகு - வாயில் அரும்புகின்ற புனகிரிப்பையும் எனற பொருள். பகர் பொழுதாதலால், ஒடுங்குமாம்ப லெனப்பட்டது. வீழி - ஓர்செடி. ஒடுங்கும், அனைய என்னும் பெயரெச்சங்களிரண்டும் - ஆம்பறகு அடைமொழிகள். வெருவா-ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். அமுது, அமிழ்து என்பன-உடமொழிதந்திரம். ஒரு வாசகத்தை எனனுமிடத்து, இழிவுசிறப்புமும்மை விகாரத்தால் தொக்கது. 'வீயிதிரதிங்குதவாய்' என்பதும் பாடம். (உகூ)

கூ0. அலக்கணுற்றேற்குற்றுதவற்கடைவொன்றுண்டேகொடி வள்ளாய், மலர்க்கொம்பனையமடச்சிதைகாதேமற்றென்றல்லையாற், பொலக்குண்டலமுங்கொடுங்குழையும்புனைதாழ்முத்தின் பொற்றோடும், விலக்கிவந்தாய்விளம்பாதே யின்னும்பூசல்விரும்புதியோ.

(இ - ன்.) கொடி வள்ளாய் - வள்ளைக்கொடியின் இலையே!—(நீ),—மலர் கொம்பு அனைய - பூங்கொம்பைப்போன்ற, மடம் சிதை - மடமைக் குணமுள்ள சிதையினது, காதே - காதாதானே யல்லாமல், மற்று ஒன்று அல்லே - வேறொன்றுமல்லாய்; ஆல் - ஆதலால், அலக்கண் உற்றேற்கு - துன்பமடைந்த எனக்கு, உற்று உதவற்கு - மனமிசைந்து உதவி செய்தற்கு, அடைவு ஒன்று உண்டே - ஒருமுறையும் உள்ளதே; (இங்ஙன மிருக்கவும்), பொலம் குண்டலமும்-பொன்னாற்செய்த குண்டலத்தையும், கொடுங் குழையும் - வளைந்த குழையையும், புனை தாழ் முத்தின் பொன் தோடும் - அணிதற்குரிய தொங்குகின்ற முத்தினாற் செய்த அழகிய தோட்டினையும், விலக்கி வந்தாய் - (அணியாமல்) நீக்கிவந்த நீ, விளம்பாதே - (அவன் சென்ற இடத்தைச்) சொல்லாமலே, இன்னும் - இன்னமும், பூசல் - பகைமையையே, விரும்புதியோ - விரும்புகின்றாயோ? (எ - று.)

நீ வடிவத்தாற் சிதையின் காதை யொத்திருப்பதனால் குண்டலம் முதலியவற்றையும் அணிந்துவந்து எல்லாப்படியாலும் அவளது காதுபோன்று தோன்றினையானால் நான உன்னைக்கண்டு ஆறியிருப்பேனே: நீ அவ்வாறு செய்கின்றிலையேயென வள்ளைக்கொடியை நோக்கி இராமபிரான் இரங்கியவாறு. 'வள்ளாய்காதே' என்றது - காட்சியணி: நீ சிதையின்காதே யென்ற வாக்கியம், 'உற்று உதவற்கு அடைவொன்றுண்டே' என்பதைச் சமர்த்திக்கிற்பதனால், தொடர்நிலைச்செய்யுட்குறியணியாம்; இது, வடமொழியில் கார்யலிங்க மெனப்படும். பின்னிரண்டடிகளில், வேற்றுமையணி தொனிக்கும்.

அலங்குகண் என்பது, அலக்கண் என மருவிற்று; 'அலக்கண் என்பது-மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம்படவரும் இரக்கம்: இலக்கண் என்பது அது. அலம் கண் என்று பிரித்து, சஞ்சலமான கண்களெனக் கொண்டு, துன்பத்துக்குக் காரணக்குறி யென்றலும் அமையும். 'அடைவுண்டன்றே' எனறும் பாடம். கொம்பு - மேனிக்கும், மலர் - அதிலுள்ள கண் கை கால் முகம் முதலிய அவயவங்களுக்கும் உவமை.

மடமாவது - எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாததுபோலிருக்கும் தன்மை; இது-நாணம், அச்சம், பயிர்ப்பு முதலிய பெண்குணங்கள் பிறவற்றிற்கும் உபலக்ஷணம். (உபலக்ஷணமாவது - ஒருமொழி ஒழிந்த தன் இனங்களையும் தெரிவிப்பது.) குண்டலம், குழை, தோடு இவை - காதணிகளின் பேதங்கள். ஜகமகாராஜன் ஒருகால் யாகஞ் செய்யச் சாலையமைப்பதற்காகப் பூமியை உழுதபொழுது பூமியினின்ற கலப்பையுழுபடைச்சாலின் அகப்பட்டதனால், சீதையெனப் பெயர்; சீதை - உழுபடைச்சால்; இதனால், அயோநிஜத்வம் கூறப்படுகின்றது.

உற்றேற்கு - தன்மையொருமை வினையாலணையும் பெயர், கான்னுருபு எற்றது. உண்டே, ஏகாரம் - தேற்றம் அல்லே - அன்மைவினை பண்பி னடியாப் பிறந்த மூன்னிலையொருமைக் குறிப்புவினைமுற்று. ஆல் - அசை. புனை தாழ் முத்த - வினைத்தொகை. 'மிலக்கி வந்தாய் காட்டாயே' என் றும், 'இன்னம்' என்றும் பாடமுண்டு. (கo)

கக. பஞ்ச பூத்த மிரற்பதுமம் பவளம் பூத்த வடியாளென் னெஞ்ச பூத்த தாமரையி னிலபம் பூத்தா னிறம்பூத்த மஞ்ச பூத்த மலர்பூத்த குழலாள் கண்போன் மணிக்குவளாய் நஞ்ச பூத்த தாலென்ன நகுவா யென்னே நலிவாயோ.

(இ - ள்.) பஞ்ச பூத்த விரல் - செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய விரல்களி னால், பதுமம் பவளம் பூத்த - செந்தாமரைமலரிற் பவழம் பொருந்தின தொத்த, அடியாள் - பாதங்களையுடையவளும், என் நெஞ்ச பூத்த தாமரை யின் நிலயம் பூத்தான் - எனது மனமென்னும் மலர்ந்த தாமரை மலராகிய வீட்டில் (எப்பொழுதும்) வசிப்பவளும், நிறம் பூத்த மஞ்ச பூத்த மலர் பூத்த குழலாள் - கருநிறமுள்ள மேகத்தைப்போன்றதும் மலர்களைச் சூடியதுமான கூந்தலையுடையவளுமாகிய சீதையினது, கண் - கண்களை, போல் - ஒத்திருக் கின்ற, மணி குவளாய் - அழகிய நீலோற்பலமே!—(நீ),—நஞ்ச பூத்தது என்ன - விஷம் படர்ந்ததுபோல, நகுவாய் - நகைத்து [மலர்ந்து], என்னே—, நலிவாயோ - வருத்துவையோ? (எ - று.)—ஆல் - அசை.

தான் எப்பொழுதும் ஜானகியை நினைத்திருப்பதனாலும், இலக்குமிக்கு இருப்பிடம் தாமரை யாதலாலும், 'என்நெஞ்ச பூத்த தாமரையின் நிலயம் பூத் தான்' என்றார். இப்போது எனது மனத்திலேயே தங்கியிருக்கிற சீதையின் கண்ணை யொத்திருக்கின்ற நீ, அவள் என்னிடத்து இருப்பதுபோலவே அன் போடிருக்க வேண்டியிருக்க, அவ்வாறிருத்தலைவிட்டு நகைத்து கலிதல் தக்க தன்று என்பதாம். நகுதல் என்பது - இங்கு, (பரிகாசமாகச்) சிரித்தல், மலர் தல் என்ற இருபொருளையும் தந்தது: வடமொழியிலும் 'ஹாஸ:' என்பது - இவ்விருபொருளையுமுடையதாதல் காண்க: ஆகவே, 'நகுவாய் என்னே கலி வாயோ' என்பது - நீலமேடை மூலமாக வந்த ஒற்றுமையுயர்வுநவிற்சியணி. 'பூத்த' என்ற ஒருசொல் வெவ்வேறு பொருளிற் பலமுறைவந்தது - சொற் பின் வருநிலையணி. பாதங்கள் செந்தாமரைமலரையும், அப்பாதங்களிலுள்ள விரல்கள் இரண்ட பவழத்துண்டையும் போலுமென்க. "பஞ்சியூட்டியபாட் டிசைக்கிண்கிணிப்பதமஞ், செஞ்செவிச் செழும்பவழத்தின் கொழுஞ்சுடர் தெறி" என்றது, இங்கு நோக்கத்தக்கது. நெஞ்சுபூத்த தாமரை - ஏற்ருதய சமயம். மணிக் குவளை - நீலமணிபோன்ற குவளை யென்றுமாம், நஞ்ச - வருத்துதலாலும், கருநிறத்தாலும், குவளைக்கு உவமை.

பவளம் - ப்ரவாளமென்னும் வடமொழியின் சைவ. 'வினைப்பகுதிகள் வேண்டிய பொருளை வினைக்கும்' என்னும் வடமொழி நியாயத்தால், இக்கவி யில் 'பூத்த' என்னுஞ் சொல்லுக்கு - சத்தர்ப்பத்திற்கு ஏற்பப் பலபொரு

ஞரைச்சப்பட்டன. பதுமம்=பத்மம். 'நஞ்சுபூத்தாமன்ன கையரென்னே கலிவாயோ' என்பதும் பாடம். (கூக)

வேறு.

[மீண்டும் இராமன் அப்பொய்கையை நோக்கி யிரங்குதல்.]

கூஉ. என்ற யாவுமிக் கின்றவ னேடவிழ்
கொன்றை யாவிப் புறத்திவை கூறியான்
பொன்ற யாதும் புகல்கிலை போலுமால்
வன்ற யாவினி யென்ன வருந்தினான்.

(இ - ன்.) அயா - (மனைவியைப் பிரிந்ததனு லுண்டான) மனவருத்தத் தால், உயிர்க்கின்றவன்-பெருமூச்சுவிடுகின்றவனுகிய ஸ்ரீராமபிரான்,—எடு அலிழ் கொன்றை - பூமிதழ்கள் விரிகின்ற கொன்றை மரங்களையுடைய, ஆவிபுறத்த - அப்பொய்கையின் கரையிலே இருந்து, என்று இவை கூறி - என்ற இத்தன்மையனவரகிய வர்த்தைகளைச் சொல்லி,—(பின்னும் பொய் கையை நோக்கி), 'வல் - வன்மைக்குணமுடைய, தயா இலி - இரக்கமில்லாத பொய்கையே! யான் - நான், பொன்ற - (இவ்வர்று) அழியவும், யாதும் புகல்கிலை போலும் - யாதொரு வார்த்தையையுமுரி பேசாமலிருப்பாய் போலும்', என்ன - என்று சொல்லி, வருந்தினான் - வருத்தமடைந்தான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

பொய்கைக் கரையிலும் பொய்கையிலு முள்ள பொருள்களை நோக்கிப் புலம்பிய இராமபிரான் இங்குப் பொய்கையைநோக்கிப் புலம்பின னென்க. மூல்லைநிலக் கருப்பொருளாகிய கொன்றையைக் குறிஞ்சியிற் கூறியது, வழ வமைதி. போலும் - ஒப்பில்போலி: உவமைப்பொருள்தாரத போலென்னுஞ் சொல். வல் என்பது - தயாவிலி என்பதன் ஏகதேசமாகிய தயையை விசேடி யாது, அம்முழுச்சொல்லையும் விசேடித்து நின்றது; தயா என்னும் வட மொழி-ஆகீறு ஐகீறுகத் திரியாது நின்றது. 'தயாவிலி' என்றது, அண்மை விளியாதலின், இயல்பாய் நின்றது.

இதுமுதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத் தங்கள். (கூ ஏ)

[களிறு பிடிக்கு நீநுட்பவேதைக்கண்டே இராமபிரான் வருந்துதல்.]

கூக. வாளரித்தழைமாப்பிடிவாயிடைக்
காளரிக்கலுழிக்கருங்கைம்மலை
நீளரிப்பதுநோக்கினனின்றனன்
பேளரிக்குப்பிறந்தவில்லாயினன்.

(இ - ன்.) பேர் அளிக்கு - மிக்க கருணைக்கு, பிறந்த இல் ஆயினன் - உத் பத்திஸ்தானமாகவுள்ள ஸ்ரீராமன்,—(அங்கே), கார் அளி - கறுத்த வண்டுகள் மொய்க்கப்பெற்ற, கலுழி - மதநீர்ப்பெருக்கையுடைய, கருங் கைம்மலை-கரிய

ஆண்யானைகள், வார் அளி தழை மா பிடி வாயிடை நீர் அளிப்பது, நீண்ட இனிப்பான தழைகளைத் தின்கின்ற பெரிய பெண்யானைகளின் வாயில் தண்ணீரை(த் தமது துதிக்கையால்) மொண்டு கொடுத்து ஊட்டுதலே, சோக்கினன் - பார்த்து, கின்றனன்,(தனக்கு இவ்வாறு விளையாடுதற்கு இல்லையே! என்கிற எண்ணத்தால்) நிகைத்து நின்றான்; (எ - று.)

பிடி - பெண்யானை; "பிடியென் பெண்பெயர் யானை மேற்றே" என்பது தொல்காப்பியம். துதிக்கையையுடைய மலையெனவே, யானையாயிற்று. பிடியென வந்ததனால், கைம்மலை - களிறுயிற்று. இரண்டாவது அடிக்கு - காளமேகம்போல மதமழையைப் பெருக்குகின்ற யானை யென்றும் பொருள் கொள்ளலாம். 'சென்றங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின், வாய்வண் டூனையதோர் நாவற்கனி கனி நல்கக் கண்டு, பேய்கண் டூனையதொன்றுகி நின்று னப்பெருந்தகையே" என்றார் திருக்கோவையாரிலும். அளியாவது - அன்புகாரணத்தால் தோன்றும் அருள். சோக்கினன் - முற்றெச்சம். (கூ)

[இலக்குமணன் இராமபிரானை மாலைக்கடன் செய்யத் தூண்டுதல்.]

கூச. ஆண்டவ்வள்ளலியன்பெனுமாரணி
பூண்டதம்பிபொழுதுகழிந்ததா
ஈண்டிரும்புனறேய்ந்துனிசையென
நீண்டவன்கழறூழ்நெடியோயென்றான்.

(இ - ன்.) ஆண்டு - அப்பொழுது,—அன்பு எனும் அரு அணி பூண்ட - அன்பென்கின்ற பெறுதற்கரிய ஆபரணத்தை அணிந்த, தம்பி - இளையபெருமான்,—அ வள்ளலை - அந்த ஸ்ரீராமனை நோக்கி, 'பொழுது கழிந்தது - பொழுது போய்விட்டது [சூரியாஸ்தமயகாலமாயிற்று]; ஆல் - ஆகையால், நெடியோய் - (திருக்கலியாண குணங்களாற்) பெரியவனே! (நீ), ஈண்டு இரும் புனல் தேய்ந்து - இப்பொய்கையின் பெருமை பொருந்திய தீர்த்தத்திலே நீராடி,—உன் இசை என நீண்டவன் - உன்னுடைய கீர்த்தி (எல்லா உலகத்தும் ஒக்கி வளர்வது) போல வளர்ந்தருளின நிரிவிக்கிரமஞ்செய ஸ்ரீமந்நாராயணனது, கழல் - திருவடிகளை, தாழ் வணங்குவாயாக,' என்றான் - என்று விண்ணப்பஞ் செய்தான்; (எ - று.)

வள்ளல் - வரையாது கொடுக்குந் தன்மையையுடையவன். அன்பு - ஸ்ரீ ராமபக்தி. அன்பென்னும் அணி யென்ற விதப்பு - உலகத்து ஆபரணங்களெல்லாம் அலங்கரிப்பது உடம்பு மாத்திரத்தையே, இவ்வணி உயிரை அலங்கரிப்பது என்னும் வேற்றுமை தோன்ற நின்றது. 'நீண்டவன் கழல்தாழ்' என்றது - சூரிய மண்டலத்தின் நடுவிலே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமந்நாராயணனைக் குறித்துச் சாயஞ்சந்தியாவந்தனம் செய்வாயாக வென்றபடி. தமையனே யென்றற்கு 'நெடியோய்' என்றருமரம். ஆரணி - பண்புத்தொகை; வீனேத்தொகையாய், நிறைந்த அணியுமாம். அணியென்பது - அணியப்படுதலாகிய காரணம்பற்றி வழங்கும் பெயராய், இவ்வன தொடுவன கட்டுவன கவிப்பனவாகிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையால், காரணப்பொதுப்பெயர். 'ஆண்ட வள்ளலே' யென்ற பாடமும் அமை

யும்; 'ஆண்டவன்' என்பது, அனைத்துயிரையும் ஆட்கொண்டவனை யும் பெருமானே புணர்த்தும். பொழுதகழிந்தது முட்படத் தெரியாதபடி இராம பிரான் விரகவேதனையற்றிருத்தல்பற்றி, இளைய பெருமான் இங்ஙனம் விண்ணீப்பஞ் செய்தனர், அன்றியும், பிரபுக்களுக்குத் தெரிந்த விஷயம் களையும் ஞாபித்தல், அடியவர்கடமை. (கூ.சி)

[இராமபிரான் நீராடுதல்.]

கூ.நி. அரசமவ்வழிநின்றரிதெய்தியத்
திரைசெய்தீர்த்தமுன்செய்தவமுண்மையால்
வரைசெய்மாமதவாரணகாணுற
விரைசெய்பூம்புனலாடலேமேயினன்.

(இ - ன்.) அரசம் - ஸ்ரீராமனும்,—அ வழி நின்ற அரிது எய்தி - அவ் விடத்திலிருந்து அருமையாக [வருத்தத்தோடு] சென்று,—அ திரை செய் தீர்த்தம் முன் செய் தவம் உண்மையால் - அலைகளை வீசுகின்ற அத்தத்தீர்த் தம் முன்னே செய்தன்ள தவப்பயன் இருத்தலினாலே [தவஞ்செய்திருந்த படியால்],—வரை செய் மா மதம் வாரணம் காண்உற - மலைபோன்ற பெரிய மதம்பிடித்த யானையும் ,வெள்ளும்படி, விரை செய் பூ புனல் - வாசனை வீசு கின்ற அழகிய தீர்த்தத்தில், ஆடலை மேயினன் - நீராடலைப் பொருந்தினன் [மூழ்கினன்]; (எ - று.)

திருமாலினது திருவடிப்பரிச மொன்றினாலேயே கங்காதேவியானது எல்லா உலகத்தாரும் கைகூப்பிவணங்கும்படியான மேன்மையை யடைந் திருத்தலால், அப்பெருமானது திருமேனி முழுவதும் படியப்பெற்ற இப் பொய்கையின் சிறப்பு மிகப்பெரிய தென்பார், 'அத்திரைசெய் தீர்த்தம் முன் செய்தவ முண்மையால் ஆடலைமேயினன்' என்று பாராட்டிக் கூறினர்.

அரச - அரசனுக்குப் பண்பாகுபெயர். அவ்வழிநின்ற, நின்ற - ஐந்த னுருபு. அரிது - வினையுரியாய் நின்றது. தவம் - தபஸ்: வடசொல். வரை செய், செய்-உவமவுருபு ; "வேல்விரைசெய் கண்ணியொடு மெல்லென விருந் தான்" என்னுஞ் சிந்தாமணியிற்போல. 'அரிதெய்தி' எனற பிரதிபேதம். ()

[இராமபிரான் நீராடியதனால் அப்பொய்கை வேதும்புதல்.]

கூ.கூ. நீத்த நீரி னெடியவன் மூழ்கலுக்
கீத்த காமத் தெறுகதிர்த் தீயினுற்
காய்த்தி ரும்பைக் கருமகக் கம்மியன்
றோய்த்த தண்புன லொத்ததத் தோயமே.

(இ - ன்.) நெடியவன் - ஸ்ரீராமபிரான், நீத்தம் நீரில் - வெள்ளத்தை புடைய அத்தீர்த்தத்தில், மூழ்கலும் - ஸ்நானஞ் செய்தவளவில்,—நீத்த - (அவனது திருமேனியை) வெதும்பச்செய்த, காமம் - காமமாகிய, தெறு - அழிக்கின்ற. கதிர் தீயினால் - சுவாலையையுடைய அக்கினியினால், அ தோயம் -

அப்பொய்கையின் நீர்த்தமானது,—கருமகன் கம்மியன் · இரும்பு வேலை செய்பவனுடைய கருமான், காய்த்த இரும்பை · தன்னுடைய காய்ச்சின இரும்பை, தோய்த்த · தனேத்த, தண் புனல் · குளிர்ந்த நீரை, ஒத்தது—; (எ · து.)

வீரவேதனையால் தபிக்கின்ற ஸ்ரீராமன் நீராடின மாத்திரத்தில் அவனது திருமேனியின் வெப்பத்தால் அத்தண்ணீர் கொல்லனுலையிற் காய்ச்சின இரும்பைத் தோய்த்த நீர்போலக் கொதித்த தென்பதாம்: உவமையணி. காமமும் வெருப்பும் தாம் சேர்ந்தவிடத்தைச் சுட்டெரிக்குந் தொழிலுடையனவாதலால், 'தீத்தகாமத்தெறுகதிர்த்தி' என்றார்; உருவகவணி. உலகத்து வெருப்பை அலிக்குந்தன்மையுடைய நீரிலும் அவியாமல் இக்காமத்தீ அந்நீரையும் வெதுப்பிற்றெனக் காமத்தின் கொடுமையை வேற்றுமையணி தோன்ற விளக்கியபடி; "நீருட் குளிப்பினும் காமஞ் சுடுமே" என்றார் காலடியாரிலும்.

நீத்தம் · நீந்தப்படுவதென வெள்ளத்துக்குக் காரணப்பெயர்; அம் · செயப்படுபொருள் விகுதி. காய்த்திரும்பு · விகாரம். இரும்பைக்காய்த்த என மாற்றி யுரைப்பினுமாம். கருமகக் கம்மியன் · இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கருமகனுடைய கம்மியன் என விரியும்: கருமானுடைய கம்மான னென்ற பொருள்; உயர்திணையிடத்து விகாரமாயிற்று: இவை · முறையே கர்மகன், கர்மீ என்னும் வடசொற்களின் விகாரம். (கூ)

வேறு.

[இராமபிரான் அங்கு ஒருசோலையில் தங்குதலும், சூரியன் அஸ்தமித்தலும்.]

கூஎ. ஆடினு னன்னமா யருமறைகள் பாடினு
னீடுநீர் முன்னோ னெறிமுறையி னேமிதாள்
சூடினுன் முனிவர்தந் தொகுதிசேர் சோலைவாய்
மாடுதான் வைகினு னெரிகதிரும் வைகினன்.

(இ · ன்.) அரு மறைகன் · அறிவதற்கருமையான வேதங்களை, அன்னம் ஆய் · ஹம்ஸபக்ஷிரூபங்கொண்டு, பாடினுன் · (பிரமனுக்கு) உபதேசித்தருளிய திருமாலின் திருவவதாரமாகிய ஸ்ரீராமன், ஆடினுன் · (அப்பொய்கையில்) நீராடி, முன்னோன் தான் நெறி முறையின் · அநாதியான வேதங்களிற் கூறிய விதியின் பிரமப்படி, நீடு நீர் · சிறந்த அர்க்கிய நீர்ததத்தை, நேமி தான் · சக்காயுதத்தையுடைய திருமாலினது திருவடிகளில், சூடினுன் · சமீர்ப்பித்த [சன்னியாவந்தனஞ் செய்து],—முனிவர்தம் தொகுதி சேர் சோலைவாய் · முனிவர்களது கூட்டம் பொருந்திய தொரு சோலையில், மாடு · ஒருபக்கத்தில், வைகினுன் · தங்கியிருந்தான்; எரி கதிரும் · சுடுகின்ற கிரணங்களையுடையனுன சூரியனும், வைகினன் · அஸ்தமித்தான்; (எ · து.)—தான் · அசை.

முன்னொருகாலத்திற் பிரமதேவனிடத்தினின்று வேதங்களை அபகரித்துக்கொண்டு கடலில் மூழ்கி மறைந்தபோன மதுகைடபர்களைத் திருமால் கடலினுட்புக்குத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்று வேதங்களைக் கொணர்ந்து ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளின வரலாற்றை உட்கொண்டு,

'அன்னமா யருமறைகள் பாடினனே' என்றார்; "அன்னமாயன்றங்கருமறை பயந்தான்" என்றார் பெரியாரும். நீடு நீர் என்பதை நூலுக்கு விசேஷண மாக்கி, மிக்க நீர்மை [நன்மை] யமைந்த வேதவிதிப்படி திருமாலைத் திருவடி தொழுது எனறும் பொருள கொள்ளலாம். இராமபிரான் பொய்கையில் அர்க்கியம் முதலியவற்றை முடித்ததை 'நேமிதான் சூடினனே' என்றார். அருகிலுள்ள சோலைவாய் வைகினன-காயத்ரீ ஜபஞ் செய்வதற்காக. 'அன்ன மாய் அருமறைகள் பாடினனே நேமிதான் சூடினனே' என்ற இதில, திருமால் தன திருவடிகளைத் தானே சூடினனென்ற மேல்நோக்கில் முடிவும் ஆழ்ந்த நோக்குமிடத்தைத் திருமால் தான் கொண்ட மானுடவேடத்திற்குத் தக்கபடி இவ்வாறு செய்தானென்ற பரிகாரமும் தோன்றுதலால், இது முரண்விளைந் தழிவணியாம்; இது, வடமொழியில் விரோதாபாஸாலங்கார மெனப்படும்; "தன் திருநாமத்தைத் தானுஞ் சாத்தியே" என்றது, இங்குக் காணத்தக்கது. 'அருமறைகள் பாடினன சோலைவாய் மாடு தான் வைகினன் எரிகதிரும் வைகினன்' என்ற சொற்போக்கில், சூரியன அத்தகிரியில் தங்கியதும் இராம பிரான் சோலையில் தங்கியதும் தம்மிலொக்குமென உவமையணி தொனித் தல் காண்க. இப்பூமியிலுதித்த ஜனங்களுக்கு நேரும் மனவிரூப யகற்று வதனால், இராமபிரான் சூரியனேயொப்பனெனக; 'ராமதிவாகரன' என்ப.

மறையென்பது - சிலசாதியார்க்கும் பெண்பாலார்க்கும் ஓதவும் ஓத விக்கவுமாகாதென்று மறுக்கப்படுவதாலும், அறிதற்கரிய மறைபொருளுடை மையாலும், வேதத்திற்குக் காரணக்குறி. நேமி - சக்கரம்: வடசொல், இலக் கணையாய் அதனையுடையவனை யுணர்த்திற்று. முனிவர் - கடவுளை மனனஞ் செய்பவர்; எல்லாப்பற்றுக்களையும் முனிந்தவர் [விட்டவர்] எனத் தமிழ்வழி யாற் காரணங்கூறலாகாது: வடசொல் திரிபாதலின். 'சூடினன்' என்ற சொல்லாற்றலால், தாளை மலராகக்கொள்க. சோலைவாய்—வாய் - ஏழனுருபு. எரிகதிர் - வினைத்தொகையனமொழி 'முனிவரைத்தொழுது பூஞ்சோலை வாய்' என்று சிலபிரதிகளிற் பாடங் காணப்படுகின்றது.

இதுவும், அடுத்தகலியும் - நான்குசீரும் பெரும்பாலும் விளச்சீர்களாகிய கலிவிருத்தங்கள். (கூஎ)

[சந்திர னுதித்தல்.]

கூஅ. அந்தியாள் வந்தணை யுகவங் கணுகுரூச்
சந்தவார் கொங்கையா டணிமைதனி நாயகன்
திந்தியா நொந்துதேய் பொழுதுதெறு சீதளீ
ரிந்துவா னுந்துவா னெரிகதி ரினனென.

(இ - ள்.) அந்தியான் வந்து அணுக - மாலைப்பொழுது வந்துபொருந்த வும், அங்கு அணுகுரூ - அவ்விடத்தில் வந்துசேராத, சந்தம் வார் கொங்கை யான் - அழகிய கச்சணிந்த தனங்களையுடைய சீதாபிராட்டியினது, தனிமை-பிரிந்த தனியேயிருக்குந் தன்மையை [விரகத்தை], தனி நாயகன் - ஒப்பற்ற தலைவனுகிய ஸ்ரீராமபிரான், திந்தியா - தினைத்து, நொந்து - மனம்வருந்தி,

தேய்பொழுது - வாடும்போது,—தெற தேம் நீர் - தங்கிய ஒளிர்ந்த நீரை புடைய கடலினின்று, இந்து - சந்திரன், எரி கதிரினன் என - சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியன் போல, வான் - ஆகாயத்தில், உந்துவான் - உதித்து உயர்ந்துவினங்குபவனனன் ; (எ - று.)—தான் - அசை.

அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழியின் சிதைவு: அது, வடமொழியில் ஸ்த்ரீலிங்கம் [பெண்பால்] ஆதலால், 'அந்தியான்' எனப் பெண்பாலாகக் கூறப்பட்டது. இதில், மாலையாகிய பெண் வரவும் சிதையாகிய பெண் வந்தாளிலென்பது தோன்றுதல் காண்க. 'சந்தமார்' என்னும் பாடத்துக்கு சந்தனமணிந்த கொங்கையென்க. விரகவேதனையுற்றார்க்குச் சந்திரகிரணம் முதலிய குளிர்ந்த பொருள்களுமம அக்கினிச்சுவாலைபோல வெப்பந்தருவனவா மாதலால், சீதகிரணனாகிய சந்திரனும் உஷ்ணகிரணனாகிய சூரியனபோல வெப்பமுண்டாகத் தோன்றினனென்றார். "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரு மிந் நோய்" எனறபடியே மாலைக்காலத்தில் ஆசை நோய் மிகுதல்பற்றி, இவவாறு கூறினர். தெறுசீதரோ என்பதற்கு - பிரிந்தாரைக் காமோத்தீபகப் பொருளாக நினறு வருத்துதற்குரிய கடலென்றும், (பிரளயகாலத்திற பொங்கி உலகத்தை) அழிக்குங் கடலென்றும் பொருள் கூறலாம் அந்தியான் வந்து,-சிந்தியாநொந்து, இந்துவானுந்துவான் பிராஸம். அணுகவங்கணுகுற - தொடைமாண். 'எரிகதிர்' என்றும் பாடம் 'எரிகதிரு மாயினன' எனற பாடமும அமையும். (கூஅ)

வேறு.

[இதுவும், அடுத்த கவியும் - இராப்பொழுதின் வருணனை.]

கூசு. பூவொடுங் கினவிரவு புள்ளொடுங் கினபொழில்கண்
மாவொடுங் கினமானு மிலையொடுங் கினகிளிக
ணைவொடுங் கினமயில்க ணடமொடுங் கினகுயில்கள்
கூவொடுங் கினபிளிறு குரலொடுங் கினகளிறு.

(இ - ள்.) (அப்பொழுது), விரவு - கலந்த [பலவேறுவகைப்பட்ட], பூ - (பகலிற் பூத்திருக்குந் தாமரை முதலிய) மலர்கள், ஒடுங்கின - குவிந்தன; புள் - பறவைகள், பொழில்கண் - சோலைகளில், ஒடுங்கின - (தம்தமது கூடுகளில்) அடங்கின ; மா - மிருகங்கள், ஒடுங்கின - (தம்தஞ்செய்கை) ஒழிந்தன; மானும் - மான்களும், இலை ஒடுங்கின - இலைகள் குவியப்பெற்றன ; கிளிகள்—, நா ஒடுங்கின - பேசுதல் அடங்கின; மயில்கள்—, கடம் ஒடுங்கின - ஆட்டம் ஒழிந்தன ; குயில்கள்—, கூ ஒடுங்கின - கூவுதல் அடங்கின; களிறு - யானைகள், பிளிறு குரல் ஒடுங்கின - கர்ச்சிக்கின்ற குரல் அடங்கின;

'ஒடுங்கின' என்ற சொல் ஒரேபொருளிற் பன்முறைவந்தது, சோர் பொருட்பின்வருநிலையணி. 'விரவு' என்னுங் காலக்காரக பெயரெச்சத்தைப் பிறபெயர்களோடுங் கூட்டுக. இனி, இரவு எனப் பிரித்து - அவ்விராத்திரியில் இவை இவை ஒடுங்கின என்றும் உரைக்கலாம். 'பொழிற்கண்'

எனத் தொடர்ந்து, சந்தவின்பம் நோக்கி. பொழில்கள் எனப்பிரித்து, சோலைகள் பறவைகள் அடங்கப்பெற்றன வென்றுமாம். 'மானும்' என்ற இழிவுசிறப்பும்மை, அதனுடைய ஓரறிவுடைமையைக் கருதிற்று. 'மானும்' இலையொடுங்கின' முதலிய வாக்கியங்களில், அஃறிணையெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைச்சினைப்பெயரும் தொழிற்பெயரும் அவ்வெழுவாயின் முடிபினையேகொண்டன. கூ - முதனிலைத் தொழிற்பெயர். பிளிறு குரல்-வினைத் தொகை. களிறு - இங்கு, யானைப்பொது.

இதுமுதற் பதினொரு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் மூன்றாஞ் சீரும் விளச்சீர்களும், மற்றையிரண்டும் விளங்காய்ச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (கூக)

சo. மண்டுயின்றனநிலையமலையின்றனமறுவில்
பண்டுயின்றனவிரவுபணியின்றனபகரும்
விண்டுயின்றனகழுதும்விழியின்றனபழுதில்
கண்டுயின்றிலகெடியகடலுயின்றனகளிறு.

(இ - ள்.) மண் - பூமியிலுள்ள பிராணிகளெல்லாம், துயின்றன - தூங்கின; நிலைய மலை - சலியாமல் நிலைபெறுதலையுடைய மலைகளிலுள்ள பிராணிகளெல்லாம், துயின்றன—; மறு இல் - மாசில்லாத' [தெளிக்த], பண் - நீர்நிலைகள், துயின்றன—; விரவு பணி - (காகலோகத்திற்) பொருக்திய பாம்புகள், துயின்றன—; பகரும் விண் - சொல்லப்படுகின்ற ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பிராணிகளெல்லாம், துயின்றன—; கழுதும் - பேய்களும், விழி துயின்றன - கண்ணுறங்கின; (இப்படி எல்லாம் உறங்கின காலத்திலும்), கெடிய கடல் துயின்றன களிறு - பெரிய திருப்பாற்கடலிற் பள்ளிகொள்வனவாகிய ஆண் யானைகள், பழுது இல் கண் துயின்றில - குற்றமற்ற நிருக்கண்கள் உறங்கவில்லை [ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் மாத்திரம் நித்திரை கொண்டாரில்லை;]

சோற்றோநுட் பின்வருநிலையணி. 'நடுராத்திரியில் ஒருமுகூர்த்த காலம் நீர்தூங்கும்' என்பவராதலால், 'மறுவில்பண் துயின்றன' என்றார். பண்-பண்ணை யென்பதன் விகாரம். பண் - இலக்கணையால், அதிலுள்ள பிராணிகளையும் உணர்த்தும். பண் - இராகமுமாம்; பண்துயிலுதலாவது - பண் அடங்கியிற்றல். பணி - படத்தையுடையது; வடசொல்; பணம் - படம். களிரவில் முகூர்த்தகாலம் பேய்களுந் தூங்குமென்பது வழக்கு; "பேயுந்துயின் றதாற் பேர்யாமம்" "தோன்றுங் கழுதுந் துயின்றதே" என்றார் புகழேந்தியாரும். கழுதும் என்ற உம்மை, அதனை இராத்திரியிலேயே சஞ்சரிக்குந் தன்மையைக் குறித்தது. ஸ்ரீராமபிரான் பிராட்டியைப் பிரிந்த வருத்தத்தாலும், இளையபெருமான் தமையனுர்க்குச் சகலவித கைங்கரியமுஞ் செய்யும் ஊற்றமிகுதியாலும், நிருக்கண் வளர்த்தில ரென்க. இருவரும் ஸ்ரீமகாவிஷ்ணுவினது அம்சமே யாதலால், 'கெடியகடல் துயின்றன களிறு' என்றார். திருமாலினது ஐவகைநிலையுள், பாற்கடலிற் பள்ளிகொள்வது, வ்யூஹநிலையெனப்படும். 'களிறுதுயின்றன - யானைகளும் தூங்கின; கடல்மாத்திரம் கண்துயின்றில [ஒசையடங்காது நின்ற இராமபிரானுக்கு வருத்தத்தை விளைத்தது]' என்று கூறுவதில், சிறப்பின்மை யுணர்க. நிலைய - 'நிலை' என்ற தொழிற்

பெயரினடியாய் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். களிறு-யானையின் ஆண்மைப் பெயர்; "வேழக்குரித்தே விதக்துகளிறென்றல்" என்பது, தொல்காப்பியம்: மதக்களிப்புடைய தென்பது, பொருள்: இச்சொல் பால்காலவிகுதிப் பெயராதலால், உவமையாகுபெயராய் இராமலக்ஷ்மண சிருவரையுமுணர்த் நிற்று. ஈற்றடியில், தொடைமுரண் காண்க. மண், மலை, விண் - இடவாகு பெயர்கள். (சஅ)

[பிறகு இரவுநீங்குமாறு சூரியனுதிக்கத் தாமரை மலர்தல்]

சக. பொங்கிமுற்றியவுணர்வுபுணர்தலும்புகையினெடு
பங்கமுற்றவினையவினைபரிவுறும்படிமுடிவில்
கங்குலிற்றதுகமலமுகமெடுத்தனகடலில்
வெங்கதிர்க்கடவுளெழுவிமலன்வெற்றுயரினெழ.

(இ - ன்.) விமலன் - குற்றமற்றவனுகிய ஸ்ரீராமன், வெம் கயரின் - கொடிய துன்பத்தினின்றும், எழ - நீங்கும்படி, வெம் கதிர் கடவுள் - உஷ்ண கிரணக்களையுடைய சூரியன், கடலில்—, எழ - உதித்தமாத்திரத்தில்,—பொங்கி முற்றிய உணர்வு - விளங்கி நிறைந்த மெய்யறிவு [தத்துவஞானம்], புணர்தலும் - (ஒருவனைச்) சேர்ந்த மாத்திரத்தில், புகையினெடு பங்கம் உற்ற அனைய வினை - புகையுஞ் சேறுஞ் சேர்ந்தாற்போன்ற தீவினைகள், பரிவு உறும் படி - நீங்குந்தன்மை போல, முடிவு இல் கங்குல் - முடிதலில்லாத இராத்திரி, இற்றது - கழிந்தது; கமலம் - தாமரைமலர்கள், முகம் எடுத்தன - முகம்விளங்கி மலர்ந்தன; (எ - று.)

கல்லுணர்வு தோன்றியவுடனே வினைகள் கழிதல்போல, சூரியன் தோன்றியவுடனே இருள் கழிந்த தென்பதாம்; உவமையணி. பாவத்தைக் கருதிறமுடையதாக வருணிப்பது கவிகளது மரபாதலால், புகையுஞ்சேறுங் கலந்தாற் போன்ற வினையென்றார். விரகமுள்ளவர்க்குக் கங்குல் ஆயிரமூழி களாய் நீட்டித்துத் தோன்றுமாதலால், 'முடிவில்கங்குல்' எனப்பட்டது. இராக்காலத்தில் மிக்கிருந்த விரகவேதனை பகற்காலத்திற் குறைவுபடுதலால், 'விமலன் வெற்றுயரினெழ' எனப்பட்டது. இனி, சீதையிருக்கு மிடத்தைத் தேடிக் கண்டு சென்ற இராவணனைச் சங்கரித்துப் பிராட்டியைச் சேர்தற்குக் காரணமாக, அநுமான் சுக்கிரீவன் இவர்களது விரோகம் அன்றைத்தினத்தில் கேரிடப்போவதுபற்றி, ஸ்ரீராமன் கொடிய துன்பக்கடலினின்று கரை யேறும்படி சூரியன் தான் கடலினின்று உதிக்க என்ருருமாம். (சக)

[இராமலக்குமணர் சீதையைத் தேடிக்கொண்டு அப்பாற் செல்லுதல்.]

சஉ. காலியேகடிதுவாவேகினர்கடல்கலினு
சோலியேய்மலிதழுவுகானமீணெறிதொலிய
வாலியேய்தழனியகடாரார்களியமிழ்து
போலவேயுலாரசெய்புண்மாவினாகாடுதல்புரிஞர்.

(இ - ன்.) ஆலை ஏய் அழனி அகல் காடர்-கரும்புயந்திரங்களிற் பொருந்திய ஒனியையுடைய பரந்த கோசலநாட்டையுடையவர்களான இராமலக்ஷ்மணர்கள்,—ஆர்கலி அமிழ்து போலவே உரைசெய் புனம் மானே நாடுதல் புரிஞர் - மிக்க ஓசையையுடைய திருப்பாற்கடலில் தோன்றியதான தேவாமிருதம்போல (மிகவும் இனிமையாகப்) பேசுகின்றவளான கொல்லைகளில் வாழும் மான்பேடை போன்ற பார்வையுடைய ஜானகிப்பிராட்டியைத் தேடுதல் செய்பவர்களாய்,—காலையே வர - உதயகாலம் வர,—(அப் பொழுதே), கடல் கவினுசோலை ஏய் - சமுத்திரம்போன்ற அழகிய சோலைகள் சூழ்ந்த, மலை - மலைகளும், தழுவு கானம் - அம்மலைகளைச் சேர்ந்த காடுகளும் ஆகிய இவற்றின், நீள் நெறி - பெரிய வழி, தொலைய - கழியும்படி, கடிது எகினுர் - விரைவாகச் சென்ருர்கள்; (எ - று.)

கரும்பாலைகளின் ஒலிமிகுதி கூறியவாற்ருல், காட்டின் நீர்நிலவளங்களை வெளியிட்டபடி. 'ஆலையேய் அழனியகளுடர்' என்ற தொடரில், ஆலையிலிட்ட கரும்புபோல இவர்கள் இராவணனுல் இப்போது மிக்க துன்பத்தையனுபவித்தாலும், அக்கரும்பு சர்க்கரையாகி உண்பதற்கு இதமாவதுபோல இவர்கள் தாமும் பிராட்டியைப்பெற்றுத் அவ்டர்களை யழித்தலாற் பெரியோர் பலர்க்கும் மகிழ்ச்சியினைப்ப ரென்னும் உள்ளுறையுவமம் தோன்றுமெனக் கூறுவாருமுளர். அமிழ்து - சீதைக்கே உவமையாகவுமாம். சோலைக்குக் கடல் - குளிர்ச்சி இருட்சி அகற்கையால் உவமை. கவினு, உ - சாரியை. கவின் - உவமவுருபாகவுமாம். கானம் - காநகம் என்னும் வடமொழியின் சிதைவு. ஆர் கலி - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை' 'காலையே கடிதுசெடிதேகினுர்' என்றும் பாடமுண்டு.

ஸ்ரீமப்பதியான ஸர்வேஸ்வரன், நித்தியஸூரிகளைப்பார்த்து 'இவர்களைப் போலவே நித்தியகைங்கர்ய நிரதராய் வாழ்கைக்குப் பிராப்தியுண்டாயிருக்கச்செய்தேயும் லீலாவிபூதியிலுள்ள ஜீவர்க்கம் அதனையிழந்துவருந்துகின்றதே!' என்று திருவுள்ளம் கொந்து வருந்துகிருனென, இப்படலத்துக்கு உள்ளுறைபொருள் கூறுவர்.

முதனூலாகிய வான்மீகத்திலே கிஷ்கிந்தா காண்டத்தின் ப்ரதமஸர்க்கத்திலும் இப்படலத்திற்கூறிய விஷயமே கூறியுள்ளது. (சஉ)

பம்பைப்படலம் முற்றிற்று.

இரண்டாவது

மராமரப் படலம்.

வாலியைக் கொல்லும் வல்லமை தனக்கு உள்ளதென்று தெரிவித்துச் சுக்கிரீவனது சங்கையைத் தீர்த்தற்பொருட்டு அவன் விருப்பத்தின்படி இராமபிரான் ஏழு மராமரங்களை ஓர் அம்பெய்து துளைத்த செய்தியைச் சொல்லும் பாகம். மராமரம் - ஸாலவிருக்ஷம்; ஒருவகை ஆச்சாமரம்.

(சுருதி - செய்யுள் கொண்டு) இப்படலத்தில், முதல் நூ- செய்யுள்கள் அனுமப்படலமென்றும், அடுத்த அசை - செய்யுள்கள் நட்புப்படல மென்றும், அப்பால் ஊ - செய்யுள்கள் மராமரப் படலமென்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றன. அப்பொழுது, 'அனுமப்படலம்' - அநுமானது படலம்; ஆரும் வேற்றுமைத் தொகை: அனுமான் ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக் கண்டு பேசிய கதையைச் சொல்லும் படலமென்பது, திரண்டபொருள். அனுமான் - (குழந்தைப்பருவத்தில் இளஞ்ஞாயிறினைக் கனிந்த பழமென்று பிடிக்கப் பாய்ந்த பொழுது அதனை அறிந்து சினந்த இந்திரனது வச்சிராயுதத்தினால் அடிக்கப் பட்டுச் சிதைந்த) கன்னமுடையவன்; அனு - ஹநு: கவுள், கன்னம்: மாச் - வடமொழிப்பெயர்விகுதி. நட்புப்படலம் - இராமபிரானும் சுக்கிரீவனும் சிநேகஞ் செய்து கொண்டதைப்பற்றிக் கூறும் பாகம்.

[இதுவும், அடுத்தகவியும் - இராமலக்ஷ்மணர் வருவதைக்கண்டு சுக்கிரீவன் அஞ்சிக் குகைக்குள் ஒடியதைக் கூறும்.]

க. எய்தினர்சவரிநெடிதேதயமால்வரையெளிதி
னெளிதினேறினரதனிலேண்மைசால்கவியரசு
செய்வதோர்கிலனிவர்கடெவ்வரானெனவெருவி
யுய்துகாமெனவிரைவினோடினன்மலைமுழையின்.

(இ - ள்.) எய்தினர் - அவ்வாறு சென்ற ராமலக்ஷ்மணர்கள்,—சவரி நெடிது எய - சபரியானவள் பலகாலம் வாசஞ்செய்திருந்த, மால் வரை - பெரிய ருசியமூகபர்வதத்தின் மேல், எளிதின் - சுலபமாகவும், கொய்தின் - விரைவாகவும், ஏறினர் - ஏறிச்சென்றார்கள்; (அப்பொழுது), அதனில் - அம்மலையில் இருந்த, நோன்மை சால் கவி அரசு - பெருத்தன்மை மிக்க குரங்குகட்கு அரசனுகிய சுக்கிரீவ மகாராஜன்,—இவர்கள் தெவ்வர் ஆம் என - 'இவ்விருவரும் (எனக்குப்) பகைவர்கள்' என்று எண்ணி, வெருவி - பயந்து, செய்வது ஓர் கிலன் - செய்ய வேண்டுவது இன்னதென்று அறியாதவனும், நாம் உய்தும் என - 'நாம் (இப்பொழுது) தப்பிப்பிழைப்போம்' என்று கருதி,—மலை முழையின் - அம்மலையின் குகையொன்றினுள், விரைவின் ஓடினன் - வேகமாய் ஓடினன்; (எ - று.)

இராமலக்ஷ்மணர்கள் ருசியமூகபர்வதத்தின்மேல் விரைந்தேறிவருவதனைக்கண்ட சுக்கிரீவமகாராஜன், வீராசந்தோன்றுகின்ற இவரது தோற்றத்தைக்கண்டு, தனக்குப் பகைவனுகிய வாலியின் பக்ஷத்தைச் சேர்ந்தவர்களிவர்களென நினைத்து அஞ்சியோடிப் புகுகொளித்தனனென்பதாம்.

சவரி - சபரீ ; சபரமென்னும் வேடர் சாதியிற் பிறந்தவன் ; இவர், சூத்திரியசாதி ஸ்திரீயினிடம் வைசியசாதி புருஷனுக்குப் பிறந்த பிரதிலோம சாதியர்; தேன்வீற்றல் முதலியன, இவரது தொழில். இங்குக்குறித்த சபரியென்பவள், மதங்கமுனிவரது ஆச்சிரமத்தி லிருந்துகொண்டு மதங்கமுனிவரது சிட்சைப் உபசரித்துவந்த அறவறம் பூண்ட ஒரு தவப்பெண்: இவள், இராமபிரான் வரப்போவதைத் தனது ஞானக்கண்ணு லுணர்ந்து அப்பிரானுக்கு நிவேதிப்பதற்காக அவ்வாச்சிரமத்திலிருந்த பழங்களைச் சுவைத்தறிந்து தனதுதவவலிமையாற் கெடாதபடி சேர்த்துவைத்து இராமலக்ஷ்மணர் எழுந்தருளியவுடன் அவர்கட்கு நிவேதித்து இராமபிரானருளால் தனது பிறப்பை யொழித்து முத்தியடைந்தவள். சவரி நெடிது வய என்பதற்கு - சபரியிஞல் விவரமாக வழிகளை யெல்லாம் எடுத்துச்சொல்லி எவப்பட்ட என்றுமாம்: ''தினைபரித்தேரோன் மைந்தன் இருந்த வத்துளக்கின்குன்றம், நினைவரி தாயற்கொத்த நெறியெலாம் நினைந்து சொன்னுன்'' என்றார் ஆரணிய காண்டத்தில். முத்தினபொருளில், 'வய'—வய்-பருதி, அ - விருதி, ய்-இறந்தகால இடைநிலை ; பருதியீற்றுத் தனிக்குறிலேச்சாராத யகரம் யகரம்வரக்கெட்டது - சந்தி. பிற்தினபொருளில், 'வய' - வலிய என்பதன் மரூஉ.

கவி - கபி என்னும் வடமொழியின் திரிபு. எய்,திஞர் - பெயர். ஆம் - அசை. உய்தும் நாம் - தனித்தன்மைப்பன்மை. ஒவ்வொருவரும் தம்மை நினைக்கும்போது பன்மையாக நினைத்தல் பெரும்பான்மை யியல்பதலை நினைத்துக் காண்க. அரசு என்னும் பண்புப் பெயர் - சொல்லால் அஃறிணையாயினும், ஆகுபெயராய்ப் பொருளால் உயர்திணையாதலால், 'ஒடினுன்' என்னும் உயர்திணை வினைகொண்டு முடிந்தது. 'நோன்மைகூர்,' 'செய்தியோர் இலனனையர் தெவ்வரானென' என்பவை, பாடபேதங்கள். (5)

உ. காலின்மாமதலேயிவர்காண்மிஞேகுறுவுடைய
வாலியேவலின்வரவினுர்கடாம்வரிசிலேயர்
நீலமால்வரையனேயர்நீதியாநினேமினென
மூலமோர்கிலன்மறுகியோடினுன்முழையதனின்.

(இ - ன்.) 'காலின் மா மதலே - வாயுவினது பெருமைபொருந்திய குமாரனே ! [அநுமானே!] வரி சிலேயர் - கட்டமைந்த வில்லேயுடையவரும், நீலம் மால் வரை அனேயர் - நீலநிறமமைந்த பெரிய மலேயைப் போன்றவருமாகிய, இவர் - இவ்விருவரும், கறு உடைய வாலி எவலின் - (நம்மிடத்து) வைரமுள்ள வாலியினது கட்டளேயிஞல், வரவினுர்கள் தாம் - (நம்மை வருத்துதற்கு) வருகின்றவர்களேயாவர் ; காண்மிஞே - பார்ப்பாயாக ; நீதி ஆநினைமின் - உண்மையாக ஆலோசிப்பாயாக,' என - என்று சொல்லிக் கொண்டு, மூலம் ஓர்கிலன் - (இவர்கள் வருகின்ற) காரணத்தை ஆலோசியாதவனுய், மறுகி - மனங்கலங்கி, முழையதனின் - குகையினுள்ளே, ஒடினுன் - ஒடியொளித்தான், (சுக்கிரீவன்); (எ - று.)

இச்செய்யுள் - 'ஒடினுன் மலேமுழையின்' என்று கீழ்ப்பொதுவாகக் கூறியதை அவன் ஒடும்பொழுது இன்னவாறு உரைத்துக்கொண்டு ஒடினுன் என உணர்த்துவதற்காக வந்த அநுவாதம். இவரைக் காணும்போது வாலி

யின் எவலிஞல் எம்மைவருத்துதற்கு வருபவராக எனக்குத் தோன்றுகின்றது; ஆதலால், இவர் யான் கினைத்தபடி வாலியின் பக்கத்தைச் சேர்ந்தவரா? என்பதையும், அவர் அவனது வாலியைச் சேர்ந்தவராயின இப்போது நாம் யாது செய்யத்தக்கது? என்பதையும்பற்றி ஆராய்ந்து சொல்வாயாக' என்று அநுமானைக்குறித்துக் கூறிக்கொண்டே சுக்கிரீவன் சென்றனனென்பதாம்.

அநுமான் கேஸரி யென்னும் வானரராஜனது மனைவியான அஞ்சனை தேவியினிடத்தில் வாயுவினுடைய வேகத்தால் தோன்றியவனுதலின், 'காலின மாமதலை' எனப்பட்டான். வாலி என்பதற்கு - வாலில் வலியுள்ளவனென்றும், வாலினின்று பிறந்தவனென்றும் பொருள். 'இங்கு வருபவராயாவரும் பெண்வடிவமடைக' என்று சொல்லப்பட்டிருந்ததொரு தலத்திற் சென்ற தனுற் பெண்வடிவமடைந்த ருக்ஷராஜஸ் என்னும் வானரராஜனது வாலினழகைக் கண்டு காமுற்ற இந்திரனது அநுக்கிரகத்தால் தோன்றியவன் வாலி யென்றும், கழுத்தினழகைக் கண்டு காதல்கொண்ட சூரியனது அநுக்கிரகத்தினுல் தோன்றியவன சுக்கிரீவனென்றும் அறிக.

நீலமால்வரையினைய ரென்றது - ஸ்ரீராமனது தலைமையை நோக்கி; அணி, பெருமானது திருமேனியின நீலவொளி இலையபெருமான்மீது பட்டு வருதலால் அவரது திருமேனியும் பொனவொளியடங்கி நீலவொளியுடையதாகக் காணப்பட்டதனுல் இவ்வாறு கூறினு னெனினும் அமையும்.

மதலை - அண்மைவிளி; ஆதலின், இயல்பு. மதலை காண்மின் - ஒருமையிற் பன்மை மயங்கி வந்த வழுவமைதி. ஒ - அச்சப்பொருள் குறித்தது. தாம் - தேற்றப்பொருள்பட நின்றது. கீழ்க்கவியிலுள்ள 'கவியரசு' எனபதை இக் கவியில் 'ஒடினுன்' என்னும் வினைக்கும் எழுவாயென அறிக. 'நீயாய் நினைதியென, மூலமோகிலர் மறுகியோடினு மலை முழையில்' என்பது பாடபேதம். (உ)

[ராமலக்ஷ்மணர்களும் அங்குக் கேல்லுமாறு கருதுதல்.]

ஊ. தாரனீலனீமருவுதாமமாருதியைமுதல்
வீரசோடிரவிசுதன்மேருமால்வரையைநிகர்
பாரமாமலியினெருபாகமோடுதல்புரிய
வாரமார்பருமதனினுகுமாறுதல்கருதி.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்: குளகமாவது - பலபாடல் ஒருவினை கொண்டு முடிவது; "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும." குளகமல்லாதது, முற்றகமெனப்படும்: "முத்தகச்செயயுள் தனிகின்றுமுடியும்,"

(இ - ன்.) தாரன் - தாரனையும், நீலனை - நீலனையும், மருவு தாமம் மாருதியை - பொருந்திய ஒளியையுடைய அனுமானையும், முதல் - முதலாகவுள்ள, வீரசோடி - வானரவீரர்களுடனே, இரவி சுதன - சூரியனது புத்திரனுகிய சுக்கிரீவன், மேரு மால் வரையை நிகர் பாரம் மா மலையின் ஒரு பாகம் ஓடுதல் புரிய - மகாமேரு பருவதத்தை யொத்த மிகவும் பெரிய அம்மலையினது ஒரு பக்கத்தில் ஓடிப்போய் ஒளிக்க,—ஆரம் மார்பரும் - இரத்தினமாலை

யணிந்த மார்பையுடையவர்களாகிய ராமலக்ஷ்மணர்களும், அதனின் - அம்மலையில், ஆகும் ஆறு உறல் - (சீதையைத்தேடிக் கண்டுபிடிப்பதற்கு) ஏற்ற நல்ல உபாயம் நேரும்தன்மையை, கருதி - எண்ணி, (எ - று.)—'கருதி' என்பது, அடுத்த கவியில் 'புரிஞர்' எனபதனோடு முடியும்.

சுக்கிரீவன் ராமலக்ஷ்மணர்களை வாலியைச் சேர்ந்தவரென மயங்கித் தனது பரிவாரத்துடன் மலையின் ஒரு பக்கத்திற் பதுங்கியிருக்க, அச்சுக்கிரீவனைக காணவேணுமென்றே செல்லுகின்ற இராமலக்ஷ்மணர்கள அங்குஞ் சென்றனரென்க.

தாமம் - ஞானவொளி. இனி, இந்திரன் வச்சிராயுதத்தினால் அனுமானை யடித்தபொழுது சினங்கொண்ட வாயுவை உகப்பிக்குமாறு பல தேவர்களும் பல வரங்களைக் கொடுத்த சமயத்தில் இந்திரன் பொற்றாமரை மலர்மாலையை இவனுக்கு அளித்தனனதலின், பொற்றாமரை மலர்மாலையை யணிந்த எனறுமாம். மாருதி என்பதற்கு - வாயுவின் குமாரனென்று பொருள் ; ததிதாந்த நாமம். மாருதன - வாயு. அநுமான் வாயுபுத்திர னெனபதையும், சுக்கிரீவன் சூரிய புத்திரனென்பதையும் பாலகாண்டத்தில் "வாயுமற் றெனதுகூறு மாருதி யெனலும்," "இரவிமற் றெனது கூறங் கவறினோயவனென் றோத" என்றவற்றாலும் அறிக. ஆரமார்பர் - சந்தனமணிந்த மார்பனென்றுமாம். 'ஆரமார்பா' எனறது, முன்னைய நிலையைக் கருதி. கீழ்க்கபந்தன் இராம பிரானைக் கொல்லப்பட்டுக் கந்தர்வரூபமடைந்து செல்லுமபொழுது "தாயினு முயிர்க்கு நல்குஞ் சவரியைத தலைப்பட் டனனு, னீயதோர் கெறியினெய்தி யிரலையின குனறமேறி," "கதிரவன சிறுவனுப கனகவாணிறத்தினானே, யெதிரெதிர் தழுவி நட்பி னினிதமர்ந் தவனி னீண்ட, வெதிரொருந் தோளினாலே நாடுதல் விழுமித்து" என்று சொன்னதனால், 'அதனி னகு மாறுறல் கருதி' என்றார். இனி, அம்மலையிலுள்ள வழியிலே செல்வதைக் கருதி எனறுமாம். 'தாரனோதகைய னளனீலன மாருதி' என்பதும் பாடம்.

[இராமலக்ஷ்மணர் வாலியைச் சேர்ந்தவரல்லரென்று சிலர் சுக்கிரீவனுக்கு அறிவிக்க, அனுமான் கூறத்தொடங்குதல்

சீ. மானைநாடுதல்புரிஞர்வாலியேவலின்வருத
லானவாறலர்மறுகியாவிதோசார்நிலையென
வேனைவானரர்சிலருமேகிமாமுழையினமுழு
ஞானநாதரையறிவினுடிமாருதிமொழியும்.

(இ - ள்.) மானை நாடுதல் புரிஞர் - மிருகத்தைத்தேடுதல் செய்பவர்களானார்கள் ; (அங்ஙனமாக), ஏனை வானரர சிலரும் - மற்றைச் சில வானரர்களும், மாமுழையில் - பெரிய அக்குகையினுள்ளே, ஏகி - சென்று, '(இவர்கள்), வாலி ஏவலின - வாலியின் கட்டளையால், வருதல் ஆன ஆறு அலர் - வருதல் பொருந்தியவர்களல்லர் ; (எனென்றால்), மறுகி - மனங்கலங்கி, ஆவி சோர் - உயிர் தளர்கின்ற, நிலையர் - நிலைமையையுடையவர்,' என - என்று (சுக்கிரீவன் முதலானோர்க்குச்) சொல்ல, (அவ்வளவில்),—மாருதி - அநுமான், முழு ஞானம் நாதரை - நிறைந்த தத்துவஞானத்துக்குத் தலைவர்களாகிய ராம

லக்ஷ்மணர்களோ, அறிவின் நாடி - (தனது) ஞானத்தால் ஆலோசித்து, மொழியும் - சொல்வான், (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

ராம லக்ஷ்மணர் சீதையைத் தேடிக்கொண்டே அங்குவருவதைக் கண்ட சில வாநரவீரர்கள் அவர்து வடிவுசெயல்களைக் கண்டு வாலியைச் சேர்ந்தவ ரல்லரென ஊகித்ததைத் தெரிவிக்க, அநுமான் அப்போது கூறுவானுயினன்.

இனி, இச்செய்யுளுக்கு, (ராமலக்ஷ்மணர்) மானேநாடுதல் புரிஞர்:(அணிவு கொண்டு வெளியிலிருந்த) எனேவானரர் சிலரும் (அப்போது அஞ்சி) மாமுழை யின், எகி - ஏக, மாருதி முழுஞானநாதரை அறிவின் நாடி, 'வாலியேவலின் வருதல் ஆனவாறு அலர்; (ஏனெனில்) மறுகி ஆவிசோர்கிலேயர்' என்று கூறி, (பினனும்) கூறுவானுயினு னெனப் பொருள் கூறலுமாம், இவ்வுரை-எல்லாருங் கலங்கி நின்ற சமயத்தில் அநுமான தனது அறிவினுற் சுக்கிரீ வனைத் தேற்றினுனெனக கூறும முதனூலுக்கு ஒக்கும். முழுஞானநாதர் - தத்துவ ஞானத்தால் அறியப்படுபவர் எனறு கருத்தி. முழுஞானம - பூர்ண ஞானம்.

மான் - மான் பேடைபோன்ற பார்வையையுடைய சீதைக்கு உவம வாகுபெயர். புரிஞர - 'பலாபாறகுறிப்புமுற்று. வாநர ரெனற வடசொல்-ஏறக்குறைய மனிதர் போன்றவரெனக காரணப்பொருள்படும. (ச)

[அநுமான், அஞ்சிய வாநரர்களைத் தேற்றுதல்.]

ரு. அவ்விடத்தவர்மறுகியஞ்சிநெஞ்சழியமைதி
வெவ்விடத்தினைமறுகுந்தவர்தானவர்வெருவ
றவ்விடத்தனியருளுதாழ்சடைக்கடவுளென
விவ்விடத்தினிதிருமினஞ்சலென்றிடையுதவி.

இதுவும, அடுத்த கவியும் - குளகம.

(இ - ள்.) அ இடத்தி - அச்சமயத்தில், அவர் - அவவாநரர்கள், மறுகி - (மனந்தெளியாமற) கலங்கி, அஞ்சி - பயந்தி, நெஞ்சு அழி அமைதி - மன வுறுதி [தைரியம] கெட்டு நின்ற சமயத்தில்,—(அநுமான்), வெம் விடத் தினை - (திருப்பாறகடல் கடைந்த காலத்து அதனினின்று எழுந்த) கொடிய ஹாலாஹலவிஷத்தைப் பார்த்தி, மறுகு - மனந்திகைத்த, தேவர் - தேவர் களும், தானவர் - அசுரர்களும், வெருவல - அஞ்சுதல், தவவிட - நீங்கும்படி, தனி அருளு - (தான்) தனியே (அவவிஷத்தை உண்டு) கிருபை செய்த, தாழ் சடை கடவுள் என - தாழ்ந்து தொங்குகின்ற சடையையுடைய உருத் திரமூர்த்திபோல,—(வாநரர்களை நோக்கி), 'இ இடத்தி இனித இருமின் - இவவிடத்திலே நீங்கள் சுகமாயிருங்கள: அஞ்சல் - பயப்படவேண்டா,' எனறு - என்று சொல்லி, இடை உதவி - அப்பொழுது தேறுதல் கூறி, (எ - று.)—'குறுகி' எனற அடுத்த கவியோடு தொடரும.

சுக்கிரீவன் முதலியோர தேவாம்சமாதலாலும், அநுமான் ருத்திராம்ச மாதலாலும், சுகரீவன முதலியோரை அநுமான் தேற்றியதற்கு - தேவர்க ளைப் பரமசிவன தேற்றியதை உவமைகூறினர். அநுமான ருத்திராம்சமென்

பதை, பாலகாண்டத்தில் ''புராரி மற்றியானே வாத, சேயெனப் புகன்ருன்'' என்றதனு லறிக. 'தானவர்தவவிட' என்றது, உவமையை நிறைத்தற்காக வன்று: அக்கலீதயின இயற்கை பற்றியாம். கடலிற்புக்கொளித்த தேவர் களின் செல்வத்தை மீளவும் பெறுதற்பொருட்டுத் திருப்பாற்கடலைத் தேவா சுரர்கள் கடைந்த சமயத்தில் அதனினின்று யாவரும் அஞ்சி நடுங்கி யிரியும் படி யெழுந்ததொரு ஹாலாஹலமென்ற கொடுவிஷத்தைப் பரமசிவன் உட் கொண்டு கண்டத்திலடக்கிக் காத்தனனென அறிக.

முதலடி - முற்றுமோனை. தேவர்-எப்போதும் மகிழ்ந்து நிற்பவரெனப் பொருள்படுங் காரணக்குறி. தாகவர் - (காசியபமுனிவராகு மனைவியருள்) தரு வென்பவளது சந்ததியாரெனப்பொருள்படும் வடமொழித்தத்திதாந்தநாமம். அஞ்சல் - 'அல்' ஈற்று எதிர்மறை வியங்கோள். ''அச்சக்கிளவிக் கைந்து மிரண்டும், எச்சமிலவே பொருள்வயினனை'' என்பவாதலால், 'விடத்தினை மறுகு' என்ருர்; 'பழியை யஞ்சி' எனருற்போல. 'விடத்தினின்' என்ற பாடத்திற்கு - விடத்தினுலென்று பொருள். 'அஞ்சி நெஞ்சழியமதி,' 'வெருவுதவவிடததளியருளு' என்று சில பிரதிகள். (இ)

[அநுமான் மாணவவடிவத்தோடு ராமலக்ஷ்மணரை யணுகி அவரைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்குதல்.]

கூ. அஞ்சனைக்கொருசிறுவனஞ்சனக்கிரியனைய
மஞ்சனைக்குறுகியொருமாணவப்படிவமோடு
வெஞ்சினததொழிலர்தவமெய்யர்கைச்சிலையரென
நெஞ்சயிர்ததயன்மறையநின்றுகற்பினினியும்.

(இ - ள்.) அஞ்சனைக்கு ஒரு சிறுவன் - அஞ்சனாதேவிக்கு ஒப்பற்ற குமாரனுகிய அநுமான,—ஒரு மாணவம் படிவமொடு - ஒரு பிரமசாரி ரூபத் தோடு, அஞ்சனம் கிரி அனைய மஞ்சனை குறுகி - நீலமலைபோன்ற (சக்கர வர்த்தித்) திருமகனைச் சமீபித்து, அயல் மறைய நின்று - அருகில் மறைவாக இருந்து,—(இவர்களைக் குறித்து), 'வெம சினம் தொழிலர் - (இவர்கள்) கொடிய கோபத்தோடு கூடிய தொழிலையுடையவர்களும், தவம் மெய்யர் - தவத்துக்கு உரிய வேடம்பூண்டவர்களுமு, கைச்சிலையர் - கையில் வில்லேந்தி யவர்களுமா யிருக்கின்றனர்கள்,' என - என்று, நெஞ்சு அயிர்த்து - மனத்திற் சந்தேகித்து, கற்பினில் - (தனது) கல்வித்திறத்தினுல், இனியும் - (அவர்க ளைப்பற்றி) ஆலோசிப்பானுயினுன்; (எ - று.)—அதனை, மேல் நான்கு கவிக ளாற் கூறுகின்றர்.

அநுமான் சுக்கிரீவனுக்கு ஒற்றனுய்த் தனது இயற்கை வடிவத்தை யொழித்து மாணவக்கோலத்துடன் நின்று அவ்விராமலக்ஷ்மணரது தன மையை ஆராய்வானுயின னென்பதாம். பிக்ஷுகவடிவத்துடன் சென்றதாக மூதனூலிற் கூறியுள்ளது. ஒற்றனுய்ப்போகின்றனன ஞாலின், வேற்று வடிவத்துடன சென்றன னெனக. முகக்குறிப்பினுல், நெஞ்சொழில ரென்று கருதினுன். சடைமுடியும் மரவுரியுமாகிய தவவேஷமும், வில்

லும் அம்பும் முதலிய ஆயுதங்களைத் தரித்தலாகிய ராஜலக்ஷணமும் ஒன்றுக் கொன்று ஒவ்வாததனால், செஞ்சு அயிர்த்தா னென்க.

'அஞ்சனக்கிரியனையமஞ்சனைக்குறுகி' என்றது, லக்ஷ்மணனைக்குறுகிய தற்கும் உபலக்ஷணம். மஞ்சன்-மைந்தன் என்பதன் போலி. மாணவன்-மாண வகனென்னும் வடசொல்லின் விகாரம் கற்பு தொழிற்பெயர்; பு -விகுதி.'மஞ் சனைக்குறுகலொரு' என்றும், 'நின்றகற்பனினியும்' என்றும் பாடமுள.

[இதுமுதல் நான்கு கவிகள் - அநுமானது ஆலோசனை.]

எ. தேவருக்கொருதலைவராமுதற்றேவரெனின்
மூவர்மற்றிவரிருவர்மூரிவிற்கரிவரை
யாவரொப்பவருலகின்பாலிவர்க்கரியபொருள்
கேவலத்திவர்நிலைமைதேர்வதெக்கிழமைகொடு.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'இவர்கள்,—தேவருக்கு எல்லாத் தேவர்கட்கும், ஒரு தலை வர் ஆம் - ஒப்பற்ற தலைவர்களாகிய, முதல் - முதன்மையான, தேவர் - பிரம விஷ்ணு ருத்திரமூர்த்திகள்,' எனின் - என்று ஆலோசித்தாலோ, மூவர் - (அம்மூர்த்திகள்) 'மூன்றுபேராவர்: இவர் இருவர் - இவர்களோவென்றால் இரண்டுபேராயிருக்கின்றார்கள்; (அன்றியும்), மூரி வில் கார்-வலிமைபொருந் திய வில்லைத்தாங்கிய கையையுடையவராயிருக்கின்றார்கள்: இவரை - இவர் களை, ஒப்பவர் - ஒக்குந்தன்மை யுள்ளவர்கள், உலகின் - எவ்வுலகத்தில்தான், யாவர் - யார் இருக்கின்றனர்? இவர்க்கு அரிய பொருள் - இவர்கட்குச் செய் வதற்கு அருமையான காரியந்தான், யாது - யாது உளது? இவர் நிலைமை - இவர்களின் தன்மையை, கேவலத்தி - எளிதாக, தேர்வது - ஆராயத்தொடங் குவது, எ கிழமைகொடு - எந்த விதத்தால்? (எ - று.)

இவரை ஒப்பார் எவரு மில்லை; இவருக்கரிய தொன்றுமில்லை யென்ற படி இச்செய்யுளில் முதல் மூர்த்திகட்கும் ராமலக்ஷ்மணர்கட்கும் வேற்றுமை கூறியது, வேற்றுமையணி. இவர் மூரிவிற்கர் என்றது - அத்திரிமூர்த்திகள் பிரகாசூலங்களையும், ஐம்படைகளையும், சொல்லையுந் தாங்கியவராதலால்; "சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கிய" என்றது காண்க. யாவர், யாது என்பவற்றில், யாவினு இன்மை குறித்தது. மற்று - வினைமாற்று. (எ)

அ. சிந்தையிற்சிறிதுதுயர்சேர்வுறத்தெருமரலி
னெந்தையர்த்தவரினையர்நோவுறச்சிறியரல
ரந்தரத்தமரரலர்மானிடப்படிவர்மயர்
சிந்தனைக்குரியபொருடேடுதற்கொருநிலையர்.

(இ - ள்.) (இவர்கள்), சிந்தையில் - மனத்தில், சிறிது துயர் சேர்வுற - சிறிது துனபம் வந்தடைய, தெருமரலின் - அத்துன்பத்தினால், நொந்த - மனம் வருந்தி, அயர்த்தவர் - சோர்ந்தவர்களை, அனையர் - ஒத்திருக்கின்றார் கள்; நோவு உற - (அவவாறு) எளிதில் வருத்தமடைதற்கு, சிறியர் அலர் - எளியவர்க ளல்லர்; அந்தரத்து அமரர் அலர் - மேலுலகத்திலுள்ள தேவர்

னோவென்னும்ல் அல்லர்; மானிடர் படிவர் - மனிதர்களின் உருவமுள்ளார்; மயர் சிந்தனைக்கு உரிய பொருள் - மயங்கத்தக்க மனத்துக்கு இசைந்ததொரு வஸ்துவை, தேடுதற்கு - தேடுதற்பொருட்டு, ஒரு நிலையர் - ஒருகருத்தையே உடையவர்களாயிருக்கின்றனர்; (எ - று.)

• அமரரல் மானிடப்படிவ ரென்று அறிந்தது - கண்ணிமைத்தல், கால் நிலந்தோய்தல், வியர்நீரரும்புதல் முதலிய குறிகளால். தெருமரல், தெருமா - பகுதி. மயர் சிந்தனை - வினைத்தொகை. அமரர் என்பதற்கு - பரணமில் லாதவரென்றும், மாநுஷர் என்பதற்கு - (காசியபமுனிவரது மனைவியரில்) மனுவின் வழித் தோன்றிய மக்க ளென்றும் பொருள். மானிடர்=மாநுஷர்: வடசொற் சிதைவு. மூதலடி - முற்றுமோனை. 'மானிடப்படிவமவர், நிந் தனைக்கரியபொருணேடுதற்குறுநிலையர்' என்ற பாடமும் பொருந்தும். (அ)

கூ. தருமமுந்தகவுமிவர்தனமெனுந்தகையரிவர்
கருமமும்பிறிதொர்பொருள்கருதியன்றதுகருதி
னருமருந்தினைய திடையழிவுவந்துளததனை
யிருமருங்கினுநெடிதுதுருவுகின்றனரிவர்கள்.

(இ - ள்.) இவர் - இவர்கள்,—தருமமும் தகவும்- தருமத்தையும் மற்றை நல்லொழுக்கத்தையுமே, தனம் எனும் தகையர் - (தமக்குச்) செல்வமென்று எண்ணுகின்ற தன்மையுடையவர்கள்; இவர் கருமமும் - இவர்கள் இங்குவந்த காரியமும், பிறிது ஒர்பொருள் கருதி அன்று வேறொரு காரியத்தைப்பற்றி யன்று; அது கருதின் - அக்காரியம் என்னவென்று ஆலோசித்துப் பார்க்கு மிடத்து,—இவர்கள்—, அரு மருந்து அனைய - இடைத்தற்கரிய தேவாமிரு தத்துக்கு ஒப்பானதும், இடை அழிவு வந்து உளது அதனை - நடுவில் நீங்கிப் போய்விட்டதுமாகிய தொரு பொருளை, இரு மருங்கினும் - இரண்டுபக்கங் களிலும், நெடிது-மிகுதியாக, தேடுகின்றனர் - தேடுகின்றார்கள்; (எ - று.)

அநுமான் சூரியனிடத்துச் சகலசாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்து நவ வியாகரணபண்டிதனும் அறிவினில் மிகச்சிறந்தவனுமிருத்தலின், அவ்விராம லக்ஷ்மணரது முகக்குறியைக்கண்டே அவர்கள் தன்மையினைத்தையும் உள்ள படி ஊகித்தறிந்தன னென்க.

'இவர்தனம்' என்பதை ஆறும்வேற்றுமைத்தொகையாக்கொண்டு, தங்க ளுக்குரியபொருளாகத் தருமத்தையும் நல்லொழுக்கத்தையும் கொண்டவ ரெனக் கூறுவாரு முளர். நரை திரை மூப்புச் சாக்காடு என்னும் இவற்றை நீங்குதற்கு அமிருதம் மருந்துபோலிருத்தலின், அது 'மருந்து' எனப்படும். முதலடி - முற்றுமோனை. இரு மருங்கு - வலமும், இடமும்; அன்றி. முன் னும் பின்னும். 'தருமமுந்தகவுமிவை' என்ற பாடமும் பொருந்தும். தகவு- தகுதி; அறிவும், அருளும், நீதியுமாம். (கூ)

கo. கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனைய
ரிதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர்.

(இ - ள்.) இவர்கள்—, சதம் எனும் பொருண்மை இலர் - சோபனென் னும் பொருளின் தன்மையு மில்லாதவர்கள்; கருணையின் கடல் அனையர் - அருளுக்குக் கடலே யொத்தவர்கள்; இதம் எனும் பொருள் அலது - நன்மை யென்னும் பொருளே யல்லாமல், ஓர் இயல்பு - வேறொருபொருளே [தீமையை], உணர்ந்திலர் - பேரு மறியாதவர்கள்; சதமன் - இந்திரனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, நிலையர் - கம்பீரமான தோற்றமுள்ளவர்கள்; தருமன் - தருமதேவனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, சரிதர் - நல்லொழுக்க முள்ளவர்கள்; மதனன் - மன்மதனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, வடிவர் - திருமேனியழகுள்ள வர்கள்; மறலி - யமனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, விறலர் - வல்லமை யுள்ள வர்கள்; (எ - று)

காம்பீரியத்தில் இந்திரனிலும், நல்லொழுக்கத்தில் தருமனிலும், வடிவழ கில் மன்மதனிலும், வல்லமையில் யமனிலும் இவ்விருவரும் மேம்பட்டவ ரென்றபடி. ("தருமன் தண்ணளியால் தனதீகையால், வருணன் கூற்று உயிர் மாற்றலின் வாமனே, அருமையா லழகிற் கணையைத்தடைத், திருமகன் திருமாலிலமன்னனே" எனச் சிந்தாமணியார் கூறியது, இங்கு ஒப்புநோக்கத் தக்கது.) 'கருணையின் கடலனையர்' என்றது - நீர்க்கெல்லாஞ்சேர்விடமாகுங் கடல்போல, கருணைக்கெல்லாம் இருப்பிடமானவ ரென்றபடி.

வைசேடிகர், பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்ப வற்றை அறுவகைப்பொரு ளென்றாற்போல, இங்குக் குணம் பொருளெனப் பட்டது; "இனத்தைப் பொருளென்று கொண்டவன்" என்றார் திருவள்ளுவ ரும். பொருண்மை, மை - தன்மைப்பொருள் விகுதி. 'பொதுமை' என் னும் பாடத்திற்கு - யாவரிடத்தும் பெரும்பான்மையாக வுள்ள குண மென்க. இதம் - ஹிதம். சதமன் - ஸதமகனென்னும் வடமொழியின் விகாரம்; நூறு (அசுவமேத) யாகங்கள் செய்தவ னென்று பொருள். தர்மன் - அறக்கடவுள். மதனன் என்பதற்கு - (ஆண்பெண்களுக்குக்) களிப்பை யுண்டாக்குபவ னென்று பொருள். மறலி - காலக்கடவுள்; மறல் - கொடுமை: அதனை யுடையவன், மறலி. (கஎ)

வே று.

[அநுமான் இராமலக்குமணரைக் கண்டு அன்புகொண்டு நிற்றல்.]

கக. என்பன பலவு மெண்ணி யிருவரை யெய்த நோக்கி
யன்பினு நெகுகு கின்ற வுள்ளத்த னுர்வத் தோரை
முன்பிரிந் தீண்டி யார்தம்மை முன்னினு னென்ன நின்றான்
றன்பெருங் குணத்தாற் றன்னிற் றுலை தொப்பி லாதான்.

(இ - ள்.) தன் பெருங் குணத்தால் - தனது சிறந்த குணங்களால், தன் னின் தான் அலது - தனக்குத் தானே ஒப்பாவதல்லாமல், ஒப்பு இலாதான் - வேறு உவமையில்லாதவனான அநுமான்,—என்பன பலவும் எண்ணி - என்று இவ்வாறு பலவிஷயங்களையும் நினைத்துக்கொண்டு, இருவரை எய்த நோக்கி - அவ்விரண்டுவீரரையும் நன்றாகப்பார்த்து,—அன்பினன் - அன்புடையவனும், உருகுகின்ற உள்ளத்தன் - (அந்த அன்புமிகுதியாற்) கரைகின்ற மனமுள்ள வனுமாகி,—ஆர்வத்தோரை - அன்பர்களை, முன் பிரிந்து-முன் ஒருகாலத்தில்

யிட்டு நீங்கி, அவ்வர்த்தம்மை - அவர்களோ, முன்னிஞன் என்ன - திரும்பவும் எதிர்ப்பட்டுக் கண்டவன்போல, நின்றான் - (போன்புகொண்டு) நின்றனர்;()

எய்த நோக்கி - அவர்களுருவம் தன்மனத்திற்பதியும்படி பார்த்து என்ற வாறு;நம்பெருமானேத் தரிசித்தமாத்திரத்தில் எல்லாகன்மைகளும் உண்டாகு மாதல்பற்றி 'எய்தநோக்கி' என்றாருமாம்.அதுமான் தான் அடிமைத்தொழில் செய்யவேண்டிய திருமாலைக் காணும்போது காரணமின்றி அன்புமிகு மைவாயுதேவன் அநுக்கிரகித்துள்ளபடியே இப்போது இவ்வநுமானுக்குப் பக்தி மேலிட்டதனால், இவனே 'அன்பினன்' என்றார். மிகஅழகிய வொருன்னே முதலிற் காணும்போது, முன்னமேகண்டு பரிசயஞ்செய்யப்பட்டதுபோலத் தோன்றுதல் இயற்கையாதலால், 'ஆர்வத்தோரை முன்பிரிந்தனேயர்தம்மை மூன்னிஞனென்ன நின்றான்' என்ற ரென்னலாம்; "பண்டிவரைக்கண் டறிவது எவ்வூரில் யாமென்றே பயில்கின்றனால்" என்ற பெரியார்பாசுரத் தையும், அதன் வியாக்கியானத்தையுங் காண்க. "தானே தனக்குவமன்," "தனக்குவமையில்லாதான்" என்றாற்போல, 'தன்பெருங்குணத்தால் தன் னின்தானலதொப்பிலாதான்' என்றார். 'அன்பினெடுருகுகின்ற', 'மூன் னினரென்ன,' 'தன்னேத்தானலதொப்பிலாதான்' என்ற பாடங்களும் காணப் படுகின்றன.

இதுமுதல் இருபத்தெட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான் காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (கக)

[இதுமுதல் நான்கு கவிகள் - அநுமான் பின்னும் பலவாறு எண்ணுதல்.]

கஉ. தன்கன்றுகண்டவன்னதன்மையதறுகட்பேழ்வாய்
மின்கன்றுமெயிற்றுக்கோண்மாவேங்கையென்றிவையவேயும்
பின்சென்றுகாதல்கூரப்பேய்கணித்திரங்குகின்ற
வென்கன்றுநின்றதெண்ணிற்பற்பலவிவரையம்மா.

(இ - ன்.) தறுகண் பேழ் வாய் - அஞ்சாமையையும் பெரிய வாயையு முடைய காட்டுயானைகள், தன் கன்று கண்ட அன்ன தன்மைய - (இவர்கள் பக்கல் தம்மைது) கன்றுகளைக் கண்டாற்போன்ற அன்பினையுடையனவாயி ருக்கின்றன; மின் கன்றும் எயிறு - மின்னலும் மெலிதற்குக் காரணமான பற்களையுடைய, கோண் மா - (யானை முதலிய பெருவிலங்குகளி னுயிரையும்) கொள்ளுந்தன்மையையுடைய சிங்கங்களும், வேங்கை - புலிகளும், என்ற இனைய ஏ உம் - என்ற இவைபோன்ற அஞ்சுமிருகங்களும், (தங்கள் கொடுமை குன்றிச் சாந்தமாய்), பின் சென்று (இவர்கள்) பின்னே தொடர்ந்து சென்று, காதல் கூர - ஆசைமிக,—பேய் - பேய்களும், கணித்து - (இவர்களை) நன்குமதித்து, இரங்குகின்ற - மனம் இளகுகின்றன; (என்றால்), இவரை - இவர்களைக்குறித்து, பற்பல - பலபலவகையாக, எண்ணில் - மனத்தில், என் கன்றுகின்றது - என்ன நினைத்து வருத்துவது? (எ - று.)

இயற்கையில் மிகக்கொடிய மிருகங்களும் பேய்களும் கண்டமாத்திரத்தில் தமது கொடுமை நீங்கி இரங்குந்தன்மையையுடைய இந்த இளங்குமாரர்களைக்

கண்டு பகைவர்களாகவும் பகைவனது படையாட்களாகவும் நினைத்து அஞ்சுவதற்குக் காரணமில்லையே என்பதாம்.

'மின்கன்றும் எயிறு' என்றது - மின்னலின் ஒளியினும் எயிற்றினொளி மிக்கு விளங்குதலால்; கன்றுதல் - உவமவருபாகவுமாம். கோண்மா - 'ஹரி' என்னும் வடசொல்லின் பொருள்கொண்டது. கண்ணின் எனப்பிரித்து, ஆலோசிக்குமிடத்து என்றுமாம்.

நுனிகன்று கடவன்ன நுண்மைய—ஒருமைப்பன்மை மயக்கம். 'கன்று' என்பதற்கும், மேல்வருகின்ற 'கோண்மா,' 'வேங்கை' என்பவற்றிற்கும் எற்ப, 'பேழ்வாய்' என்றதற்கு - காட்டுயிர்னையெனப் பொருள் கொள்ளப் பட்டது. பேழ்வாய் - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இனையவேயும், எகாரமும், உம்மையும் - இழிவு சிறப்பு; அவ் விலங்குகளின் கொடுமைனயக் கருதிற்று. நுண்மைய, இரங்குகின்ற முற்று. அம்மா - ஈற்றசை; வியப்புமாம். 'பேகணித்திரங்குகின்ற, வெங்கன்றுகின்ற தெண்ணிப்பற்பலவிசையவம்மா' என்றும், 'பேய்தணித்திரங்குகின்ற, தென்' என்றும் பிரதிபேத முண்டு.

இக்கவிமுதல் மூன்றுகவிகளால், திரியக்குகளும் ஸ்தாவரங்களும் அவர் கள் விஷயத்தில் கடந்துகொண்டமையைக் குறித்து அநுமான் தனக்குள்ளே நினைத்துச் சொன்னதும் கூறப்படுகின்றது. இவ்வாறு அவையெல்லாம் இரங்கித் தம் தமக்கு இயன்ற பணிவிடைகளைச் செய்வதற்குக் காரணம்; உணர்வினுக்குணர்வாகும் முதற்பெருந்தேவனை ஸ்ரீராமபிரான் பக்கல் இயல்பாயெழுந்த போன்மம். (கூ)

கூ. மயின்முதற்பறவையெல்லாமணிநிறத்திவர்கண்மேனி
வெயிலுறற்கிரங்கிமீதாவிருஞ்சிறைப்பந்தர்வீசி
யெயில்வகுத்தெய்துகின்றவிண்முகிற்கணங்களெங்கும்
பயில்வுறத்திவலிசிந்திப்பயப்பயத்தழுவும்பாங்கர்.

(இ - ள்.) மயில் முதல் பறவை எல்லாம் - மயில் முதலான பறவை களெல்லாம், மணி நிறத்து இவர்கள் மேனி வெயில் உறற்கு இரங்கி - அழகிய நிருநிறத்தையுடைய இவர்களது நிருமேனியில் வெயில் படுவதற்காக மன மிரங்கி, மீதா ஆ இருஞ் சிறை பந்தர் வீசி - (இவர்கட்கு) மேலாகப் பெரிய சிறகுகளாகிய பந்தலைப் பரப்பி, எயில் வகுத்து - மதில்போலச் சுற்றிலும் வளைத்துக்கொண்டு, எய்துகின்ற - கூடவருகின்றன; விண் முகில் கணங் கள் - ஆகாயத்திலுள்ள மேகங்களின் கூட்டங்கள், எங்கும் - எல்லாவிடத்தும்; பயில்வு உற - நெருக்கமாக, திவலை சிந்தி - நீர்த்துளிகளைச் சிந்திக்கொண்டு, பாங்கர் - (இவர்கள்) பக்கத்தில், பயப் பய - மெல்ல மெல்ல, தழுவும் - தொடர்ந்து வருகின்றன. (எ-று)

வழிநடத்தலால் இவர்கட்குத் தாபம் முதலிய வருத்தந் தோன்றாதிருக்கு மாறு ஒவ்வொன்றும் தம்மாலியன்றவற்றைச் செய்தன வென்பதாம். மூதல் வாக்கியம் - "மேலாப்பரத்த வெயில் கரப்பான் வினதை சிறுவன் சிறகென் னும், மேலாப்பின்னீழ் வருவான்" என்ற பெரியார் பாசுரத்தை அடியொற் றியதென்க; ஆரணியகாண்டத்துச் சடாயுகாண்படலத்தில் 'ஆலர் நின்

னை, விரியுநீழலிற்செல்ல விண்சென்றனன்'' என்றது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பெரியோர்கள் செல்லுமிடங்களில் மழைபெய்த லியல்பாதல் குறித்துப் பிரிதின வாக்கியங்கூறின ரென்னலாம்.

பீறவை - பறப்பன ; ஐ - வினைமுதற்பொருள்விகுதி. பந்தர், பாங்கர் பந்தல், பாங்கு; ஈற்றுப்போலிகள் பயப்பய . பையப்பைய என்னுங் குறிப்பு வினையெச்ச அடுக்கின் முதற்போலி. 'மணிகிறத்திவர்தம்மேனி,' 'விரிஞிறை,' 'இயல்வகுத்திருங்குகின்ற விண்முகிற்கணங்களெங்கும்' என்ற பாடங்களும் ஏற்கும். (கூ)

கச. காயெரிகனலுங்கற்கள்ளுடைமலர்களேபோற்
றூயசெங்கமலபாதந்தோய்தொறுங்குழைந்துதோன்றும்
போயினதிசைகடோறுமரனெடுபுல்லுமெல்லாஞ்
சாய்வுறுந்தாழ்வபோலிங்கிவர்களோதருமமாவார்.

(இ - ள்.) காய் எரி கனலும் கற்கள் - வெயிலிற்காய்கிற கெருப்புப்போல்ச் சுடுகின்ற பருகைகைக்கற்கள், தூய செம் கமலம் பாதம் தோய் தொறும் - பரிசுத்தமான செந்தாமரைமலர்போனற (இவர்களது)' திருவடிகள் படும் பொழுதெல்லாம், கள் உடை மலர்களேபோல் - தேனையுடைய மலர்கள் போலவே, குழைந்து தோன்றும் - நெகிழ்ந்து மென்மையாகத்தோன்றுகின்றன; போயினதிசைகள் தோறும் - (இவர்கள்) சென்ற இடங்களிலெல்லாம், மரனெடு புல்லும் எல்லாம்-மாங்களும் புற்களுமாகிய இவையெல்லாம், தாழ்வ போல் - (இவர்களை) வணங்குவனபோல, சாய்வுறும் - சாய்ந்து நிற்கின்றன; இங்கு - இக்காரணங்களால், தருமம் ஆவார் - தரும தேவதைகளாவார், இவர்களோ - இவர்கள்தாமோ? (எ - று.)

இவரது திருவடிகள் பட்டமாத்திரத்திற் சுடுகிறகற்களும் மலர்போலக் குளிர்ந்து மென்மையாகின்றன; இவர் திருமேனிகளைக் கண்டபோதே மரம் முதலிய ஒரறிவுடைய அஃறிணைப்பொருள்களும் வணங்குகின்றனவென்று இவரது கடவுட்டன்மையைக்குறித்து அநுமான வியந்தன ணென்க.

காய் கற்களென இயையும். 'கள்ளுடை மலர்கள்' என்றது, அன்று மலர்ந்த புதிய மலர்களென்பது தோன்ற நின்றது; மிகவும் மெல்லியன அவையே யாதலால். மரமும் புல்லும் சாய்வதைத் தாழ்வதாகக்கூறியது, தந் தாழ்ப்பேற்றவணி யென்க. மலர்களே, ஏகாரம் - உயர்வுசிறப்போடு தேற்றப் பொருள்பட நின்றது. கமலபாதம் - உவமத்தொகை, வடநூன்முடிபு. இவர்களோ, ஓகாரம் - ஐயப்பொருள் குறித்தது; வியப்புப்பொருள் படுத்தியும் உரைக்கலாம். 'மலரேபோல,' 'சாய்வுறுந்தொழுவ போன்றிங்கு' என்ற பாடங்கள் அமையும். (கச)

கரு. துன்பினைத்துடைத்துமாயத்தொல்வினைதன்னோக்கித்
தென்புலத்தன்றிமீளாதெறியுய்க்குந்தேவரோதா
மென்பெனக்குருகுகின்றதிவர்கின்றதளவில்காத
லன்பினுக்கவதியில்லையடைவென்கொலறிதறேற்றேன்.

(இ - ன்.) அன்பினை அடைத்து - பிறவித்துன்பங்களைப் போக்கி, மாயம் தொல் வினைதன்னை நீக்கி - (அத்துன்பங்கட்குக் காரணமான்) அவிச்சை யினை யுண்டாகின்ற அநாதியான கருமத்தை ஒழித்து, தென் புலத்து அன்றி மீளாதெறி உய்க்கும் - தெற்குத்திக்கிலுள்ள யமலோகத்திலே யல்லாமல் (சென்றவர்கள்) மீண்டு வருதலில்லாத மோக்ஷலோக மார்க்கத்திலே (தம்மை யடைந்தவர்களைச்) செலுத்துகின்ற, தேவரோ தாம் - தேவாதி தேவரான ஸ்ரீமஹாவிஷ்ணுதாமோ இவர்கள்? எனக்கு—, என்பு உருகுகின்றது - (இவர்கள் நிறத்தில்) எலும்புங் கரைகின்றது; அளவு இல் காதல் இவர்கின் றது - அளவில்லாத பக்தி மேன்மேல் மிகுகின்றது; அன்பினுக்கு - (இவர்கள் விஷயத்தில் உண்டாகின்ற) அன்புக்கு, அவதி இல்லை - எல்லை யில்லை; அடைவு என்கொல் - (இப்படி ஆவதற்குக்) காரணம் யாதோ? அறிதல் தேற்றேன் - அறியமாட்டாதவனு யிருக்கின்றேன் யான்; (எ - று.)

பூர்வத்தில் வாயுபகவான் அநுமானை நோக்கி 'நீ திருமாலுக்கு அடிமை செய்' என்றபொழுது, அம்மாருதி 'யான் திருமாலை எங்ஙனம் அறிவது?' என வினவ, வாயுதேவன் 'எவரைக் கண்டமாத்திரத்தில் காரணமில்லாமல் உனக்கு அளவில்லாத பேரானபு உண்டாகின்றதோ, அவரையே திருமா லென்று அறி' என்று செல்லியிருந்ததனால், இவ்வாறு கூறினார்; அதனை, இப்படலத்தின் ககக, கஉ0-ஆங் கவிகளால் நன்கு உணர்க. தனனைப் பற்றி வருந் தலைநோய் முதலியனவாகிய ஆத்யாத்மிகமும், புலி முதலிய பிறவுயிர் களால் நிகழும் ஆதிபௌதிகமும், தெய்வத்தால் நேரும் இடிமுதலியனவாகிய ஆதிதைவிகமும் என்ற மூன்றும், 'அனபு' என்றதில் அடங்கும். வினை - சாதியொருமை; சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்னும் மூவகைக் கரு மங்களையுங் குறித்தலால். சஞ்சிதமாவது - ஆன்மாவினைற் சம்பாதிக்கப்பட்டுக் குவிந்து கிடக்கின்ற வினை: பிராரப்தமாவது - ஈட்டப்பட்டவற்றில் இப் போது அனுபவிக்குமாறு உண்டபட்ட வினை: ஆகாமியமாவது - அவ்வாறு அனுபவிக்கு மிடத்திப் புதிதாக ஈட்டப்படும் வினை. அவித்யை-அறியாமை. 'அடைவெனகொல்' என்பதற்கு - அவர்கட்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் யாதோ? என்றும், அவர்கள் இவ்விடத்தி வந்தடைதற்குக் காரணம் என்ன வோ? என்றும் பொருள் கூறலாம். 'என்புநெக்குருகுகின்றது' என்றும் பாடம். கொல் - ஐயம். (கஇ)

[அநுமான் இராமலக்ஷ்மணரைச் சந்திக்க, இராமன் அவனை விசாரித்தல்.]

ககூ. இவ்வழியெண்ணியாண்டவ்விருவருமெய்தலோடுஞ்
செவ்வழியுள்ளத்தானுந்தெரிவுறவெதிர்சென்றெய்திக்
கவ்வையின்றுகதங்கள்வரவெனக்கருணையோனு
மெவ்வழிநீங்கியோய்யோரெனவியம்பலுற்றான்.

(இ - ன்.) இவ்வழி எண்ணி - இவ்விதமாக ஆலோசித்து, செம்வழி உள் ளத்தானும் - நலவழியிற் செல்லுகின்ற மனத்தை யுடையவனான அனுமா னும்,—ஆண்டு அ இருவரும் எய்தலோடும் - அவ்விடத்தில் அவ்விரண்டு பேரும் வந்தவளவிலே,—தெரிவுற - (அவர்கள் தன்னைக்) காணும்படியி, எதிர்

சென்று எய்தி - (அவ்வட்டு) எதிரிற் போய்ச்சேர்ந்து, 'நுங்கள் வரவு உங்கள்வருகைக், கவ்வை இன்று ஆக - அன்பமில்லாத [கல்ல] வரவாகக்கட வது,' என - என்று கேமம் விசாரிக்க,—கருணையோனும் - இருபாமூர்த்தி யாகிய ஸ்ரீராமனும், 'நீ—, எ வழி நீங்கியோய் - எவவிடத்திலிருந்து வந்த வன்? யார் - யாவன்?' என - என்று கேட்க, இயம்பல் உற்றான் - (அநு மான்) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் இரண்டுகவி களாற் கூறுகின்றார்.

அநுமான் தான் இருக்குமிடத்திற்கு நேராக இராமலக்குமணர் வரும் போது 'அவர்களெதிரிற் சென்று தான் அவர்களை கேமம் விஞவ, ஸ்ரீராமன் அநுமானை விஞவின னென்றவாறு. வந்தவர்களைத் தமக்கு உதவும்படி திரு மால் தானே வந்ததாகக் கருதினனாதலின், இதுவரையில் மறைந்திருந்த அநுமான் இப்பொழுது அவர்களெதிரில் வெளிப்படையாக வந்தனனென்க. 'ஆண்டு' என்றது, அநுமான் நின்ற விடத்தை. 'கவ்வையின்றாக நுங்கள் வரவு' என்றது - 'ஸ்வாகதம்' என்னும் வடமொழியின் பொருளை உட் கொண்டது; வந்தவர்களை இவ்வாறு உசாவுதல், மரபு. எண்ணி எதிர்சென்று என இயையும். நீங்கியோய் - முன்னிலையொருமை யிறந்தகால வினையா லணையும்பெயர். ஈற்றடி, 'வெவ்வகை நீங்கியோய்நீயரென விளம்பலுற் றான்' என்றும், முதலடியில் 'இவ்வகையெண்ண்' என்றும் பாடம் காணப் படுகின்றது. (கக)

[அநுமான் கூறிய விடை.]

கள. மஞ்சனைத்திரண்டகோலமேனியமகளிர்க்கெல்லா
நஞ்சனைத்தகைபவாகிநளிரிரும்பனிக்குத்தேம்பாக்
கஞ்சமொத்தலர்ந்தசெய்பகண்ணையான்காற்றின்வேந்தற்
கஞ்சனைவயிற்றின்வந்தோனுமமுனுமனென்றான்.

(இ - ள்.) 'மஞ்சு என திரண்ட - நீர்கொண்ட காளமேகம்போல அமைந்த, கோலம் மேனிய - அழகிய திருமேனி நிறத்தை யுடையவனே!—மகளிர்க்கு எல்லாம் - (காண்கின்ற) பெண்கள் யாவர்க்கும், நஞ்சு என தகைய ஆகி - விஷமென்று சொல்லுதற்கேற்ற தன்மையை யுடையனவாய், களிர் இரும் பனிக்கு தேம்பா கஞ்சம் ஒத்து - குளிர்ச்சி மிருந்த பனிக்கு வாடாத செந்தாமரை மலரைப் போன்று, அலர்ந்த - மலர்ந்து விளங்குகின்ற, செய்ய கண்ண - சிவந்த திருக்கண்களை யுடையவனே! யான் - அடியேன், காற் றின் வேந்தற்கு - வாயுபகவானுக்கு, அஞ்சனை வயிற்றின் - அஞ்சனாதேவி யின் உதரத்திலே, வந்தோன - பிறந்தவன்; காமமும் - (எனது) பெயரும், அனுமன் - அநுமான் (என்பர்),' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

நீலமேகம் - பெருமாளினது திருமேனிக்கு நிறத்தினாலும், குளிர்ச்சியினா லும், கண்டவர் கண்களைக் கவரும் கட்டழகினாலும், உவமை. திருக்கண்கள் தம்மைக் காமுற்றுக் காண்கின்ற மங்கையர்க்கெல்லாம் தாமும் 'எதிர்நோக்கி இன்பமளியாமல் ஆசைநோயை யுண்டாக்கி மரணாந்தமான வருத்தத்தை மூட்டுதலால், 'மகளிர்க்கெல்லாம் நஞ்சனைத் தகையவாகி' என்றார்; ''ஏழைய ராவியுண்ணும் இனைக்கூற்றங்கொலோ அறியேன், ஆழியங்கண்ணபிரான்

திருக்கண்கள் கொலோ அறியேன்" என்றார் பெரியாரும். எக்காலத்தும் எப் பொழுதும் குவியாத தாமரைமலர்களிருந்தால் அவையே ஒருபடியாக இக்கண் களுக்கு உவமையாகக்கூடுமேயன்றி, பகலிலே மலர்ந்து இரவிலே குவிந்து வெயிற் காலத்துமாத்திரமே விகசித்து மற்றைப் பனி மழைக்காலங்களில் வாடிப்போகுமியல்புள்ள சாதாரணமான தாமரைமலர்கள் அவற்றிற்கு உவ மையாகச் சொல்லுதற்கு ஏற்றவையல்லவென்பது தோன்ற, 'களிரிரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சமொத் தலர்ந்த' எனப்பட்டது; இல்பொருளுவமை; இதனை, வேற்றுமையணி யென்று கூறுவதும் உண்டு. கஞ்சம் - நீரிற்பிறப் பது; கம் - நீர், 'மேனியீர்,' 'கண்ணினீர்,' 'அனுமனென்பேன்' என்ற பாடங்களும் உண்டு. (கவ)

[இதுவும் அது.]

கஅ. இம்மலையிருந்துவாழுமெரிகதிர்ப்பரிதிச்செல்வன்
செம்மலுக்கேவல்செய்வேன்றேவதும்வரவுநோக்கி
விம்மலுற்றனையனேவலினியவக்தனென்ற
னெம்மலைக்குலமுந்தாழவிசைசுமந்தெழுந்ததோளான்.

(இ - ள்.) 'இ மலை - இந்த ருசியமூக பருவதத்தில், இருந்து வாழும் - வாழ்ந்துகொண்டிருக்கின்ற, எரி கதிர் செல்வன் பரிதி செம்மலுக்கு-வினங்கு கின்ற ஆயிரங் கிரணங்களைத் தனக்குச் செல்வமாக வுடையவனான சூரியபக வானது குமாரனாகிய சுக்கிரீவனுக்கு, ஏவல் செய்வேன் - தொண்டு பூண் டொழுகுபவனாகிய யான்,—தேவ - சுவாமி! அனையன் - அந்தச் சுக்கிரீவன், நும் வரவு நோக்கி விம்மல் உற்று - உங்கள் வருகையைப் பார்த்துக் கலக்க மடைந்து, எவ - (விசாரித்துவரும்படி) ஏவியதனால், வினவிய - விசாரித்தற் பொருட்டு, வந்தேன் - இங்கு வந்தேன்,' என்றான்—; (யாவனெனில்), எ மலை குலமும் - எல்லாக்குலபருவதங்களும், தாழ தாழ்வடையும்படி, இசை சுமந்து - கீர்த்தியைத்தாங்கி, எழுந்த - வளர்ந்திருக்கின்ற, தோளான் - தோள் களையுடையவனான அநுமான்; (எ - று.)

மலைக் குலம் - மலைகளின் கூட்ட மென்றுமாம். 'அவை தாழ' என்றது - தோள்கள் அவற்றினும் உயர்ந்தும் வலியனவாயுமிருத்தலால். மகிழ்ச்சி யடைந்து என்னும் பொருளும் தோன்ற, 'விம்மலுற்று' என்றார். சூரியபகவா னென்று வழங்குதற்கு ஏற்ப 'பரிதிச்செல்வன்' என்றருமாம்.

இலக்குமணனையுங்கூட்டி 'நும்' எனப்பன்மையாகக் கூறினர்; தேவதும். ஒருமைப்பன்மையமைக்க மென்பாரு முளர். செம்மல் - ஆண்பாற் சிறப்புப் பெயர். வினவிய - செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்.

[ஹாமபிரான் அநுமானை நீர்துணமுடையவனென்று தெளிந்து, இலக்குமணனிடத்துக் கூறத்தொடங்குதல்.]

கக. மாற்றமஃதுரைத்தலோடும்வரிசிலைக்குரிசின்மைந்தன்
றேற்றமுமற்றிவனினுங்குச்செவ்வியோரின்மைதேறி
யாற்றலுநிறைவுங்கல்வியமைதியுமறிவுமென்னும்
வேற்றுமையிவனேடில்லையாமெனவிளம்பலுற்றான்.

(இ - ன்.) மாற்றம் அஃது - அந்த வார்த்தையை, உரைத்தலோடும் - (திருவடி) சொன்னவளவில்,—வரி சிலை குரிசில் மைந்தன் - கட்டமைந்த கோதண்டத்தையுடைய தசரத சக்காவர்த்தியின் திருமகன்,—தேற்றம் உற்று - சற்றே ஆராய்ச்சிசெய்யத் தொடங்கி,—இவனின் ஊங்கு செவ்வியோர் - (இங்குவந்துள்ள) இவனைக்காட்டிலும் மேலாக நற்குணமுள்ளவர்கள், இன்மை - (எவ்வுலகத்திலும் வேறெவரும்) இல்லாமையை, தேறி - தெளிந்து,—'ஆற்றலும் - பராக்கிரமும், நிறைவும் - சற்குணபூர்த்தியும், கல்வி அமைதியும் - சாஸ்திரங்களின் பொருத்தமும், அறிவும் - ஞானமும், என்னும் - என்கிற, வேற்றுமை - வேறுபாடு, இவனோடு - இவனுடனே, இல்லே ஆம் - இல்லையாகும்,' என - என்று எண்ணி,—விளம்பல் உற்றான் - (தம்பியோடு) சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் மூன்று கவிகளாற் கூறுகின்றார்.

இவனிடும் நற்குணமுடையார் இல்லையென்றும், பராக்கிரமம் முதலிய மேன்மைகளெல்லாம் இவனிடத்தே ஒற்றுமைப்பட்டு நிரம்பிக்கிடக்கின்றன வேயன்றி இவனையல்லாமல் இவ்வுலகத்திற் பராக்கிரமம் முதலியன வேறு இல்லையென்றும் இராமபிரான் குறிப்பால் நிச்சயித்தனனென்க; "கலையின தகலமுங் காட்சிக் கின்பமுஞ், சிலையின தகலமும் வீணைச் செல்வமு, மலையினி னகலியமார்ப னல்லதில், வுலகினி லிலையென வொருவ ஞயினான்" என்ற சிந்தாமணிச் செய்யுள் நோக்கத்தக்கது. குரிசில் - ஆண்பாற்சிறப்புப் பெயர். (கூ)

[மூதுமுதல் மூன்று கவிகள் - இராமபிரான் அநுமானைக்குறித்து இலக்குமணனிடத்துக் கூறுவன.]

உ0. இல்லாதவுலகத்தெங்குமீங்கிவணிசைகள்கூரக்
கல்லாதகலையும்வேதக்கடலுமேயென்னுங்காட்சி
சொல்லாலேதோன்றிற்றன்றேயர்கொலிச்சொல்வின்செல்வன்
வில்லார்தோளரிளாயவீரவிரிஞ்சனேயிடைவலானே.

இம்மூதல் நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ன்.) வில் ஆர் தோள் - வில் பொருந்திய தோளையுடைய, இளைய - இளமையுடையவனே [தம்பி]; வீர - வீரனே!—ஈங்கு இவன் - இவ்விடத்தில் [இப்பொழுது] வந்திருக்கின்ற இவன், இசைகள் கூர - கீர்த்தி மிகும்படி, கல்லாத - படியாத, கலையும் - சாஸ்திரங்களும், வேதம் கடலும் - வேதங்களாகிய சமுத்திரமும், உலகத்து எங்கும் - எல்லா வுலகங்களிலும், இல்லாதவே - இல்லாதனவேயாம், என்னும் காட்சி - என்று சொல்லுதற்கேற்ற அறிவு (இவனுக்கு இருத்தல்), சொல்லாலே - இவன் பேசும் வார்த்தையினாலே, தோன்றிற்று அன்றே - வெளிப்பட்டதன்றோ? இ இன் சொல் செல்வன் - இனிய சொற்களையே செல்வமாக வுடையவனான இவன், விரிஞ்சனே - பிரமதேவனோ? (அன்றி), விடை வலானே - விருஷபத்தை வாகனமாகக்கொண்டு ஏறி நடத்தவல்ல உருத்திரமூர்த்தியோ? யார்கொல் - யாரோ? ()

இவன் கல்லாத கலையும் வேதமும் உலகத்து இல்லாதவே என்றதனால், சகலவேதாகமங்களையுங் கரைகண்டவன் இவன் என்றபடி. இனி, முதலிரண்

டடிகளுக்கு - தான் இல்லாத உலகத்திலும் எவ்விடத்தும் இவ்வாறே புகழ் மிகும்படி (பிறராற்) கற்கமுடியாத நூல்களும் வேதசாகரமுமாகிய இவற்றி னுருவமேயாவன் இவன் என்று சொல்லத்தக்க தோற்றம் என்ப் பொருள் கொள்ளுதலு மொன்று. இவன் சகலசாஸ்திரங்களையும், அருந்தமான வேதங் களையுங் கற்றுத்தேர்ந்து புகழ்பெற்ற மகாஞானி யென்னுந்தன்மை வார்த்தை யால் வெளிப்பட்டதென்றும், கற்றவர்க்குக் கல்லாதவர்க்குமுள்ள வேறுபாடு யாக்கையத்தாலன்றி வாக்குயத்தாலேயே விளங்கு மாதலால். வேதத்தைக் கடலென்றது-அளவு படாமையும், பல்வகைப்பொருளையு மூடைமையும் முத லிய காரணங்களினால். அன்றே - தேற்றம். திரிமூர்த்திகளுள் இராமபிரான் தான் ஸ்ரீமகாவிஷ்ணுவினது திருவவதாரமாதலின், தாணன்று என்று விளங் கியதனால்,மற்ற இருமூர்த்திகளுள் யாரோவென்று ஐயமுற்றனனென்னலாம் ஞானத்தாற் பிரமனேவென்றும், பராக்கிரமத்தால் உருத்திரனேவென்றுஞ் சங்கித்தான் இவ்வாறாக இராமபிரான் இலக்குமணனிடத்து அநுமனைப் புகழ்ந்து கூறுவது, இவனே அவமதியாது இவனிடத்து மிக்க கௌரவத்தோ டும் கருத்தோடும் எப்போதும் பேசவேண்டுமென்று குறிப்பித்தற்குப்போலும். 'கடலுமே' என்ற ஏகாரம்,பிரித்தெடுத்த, 'இல்லாத' என்றதனோடு கூட்டப் பட்டது. சொல்லின் செல்வன், இன் - சாரியையுமாம். (௩)

உக. மாணியாம்படிவமண்றுமற்றிவன்வடிவமைந்த
வாணியிவ்வுலகுக்கெல்லாமென்னலாமாற்றற்கேற்ற
சேணுயர்பெருமைதன்னைச்சிக்கறத்தெளிந்தேதன்பின்னர்க்
காணுதிமெய்ம்மையென்றுதம்பிக்குக்கழறிக்கண்ணன்.

(இ - ள்.) மைந்த - இளையவனே!—இவன் வடிவம் - இவனது ஸ்வரூ பம், மாணி ஆம் படிவம் அன்று - சாதாரணமான பிரமசாரிரூபமன்று; மற்று- பின்னை, 'இ உலகுக்கு எல்லாம் - இந்த லோகங்களுக்கெல்லாம், ஆணி - ஓர் அச்சாணி' என்னல் ஆம் - என்று சொல்லக்கூடிய, ஆற்றற்கு - பராக்கிரமத் திற்கு, ஏற்ற - தக்க, சேண் உயர் பெருமைதன்னை - மிகவும் அதிகமான மகிமையை, (இவனிடத்து உள்ளதாக), சிக்கு அற-சந்தேகமில்லாமல், தெளிந் தேன் - நிச்சயித்தேன்; மெய்ம்மை - அதன் உண்மையை, பின்னர் - பின்பு, காணுதி - (நீயும்) காண்பாய், என்று—, கண்ணன்-ஸ்ரீராமபிரான், தம்பிக்கு- லக்ஷ்மணனுக்கு, கழறி - சொல்லி, (எ - று.)—'கழறி' என்ற வினையெச்சம், மேல் உரை - ஆங் கவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்.

பெரியதேர்க்குச் சக்கரங்கோத்தமரத்தில் அச்சக்கரங்கழலாமற் கடையிற் செருகுகின்ற ஆணி வடிவாற் சிறியதாயிருந்தே பெரியபாரங்களையெல்லாங் கொண்டு செலுத்துகின்ற வலிமையுடையதா யிருத்தல்போல, இவனுருவம் வடிவாற் சிறியதாயிருந்தே பெரிய காரியங்களையெல்லாஞ் செய்து முடிக்கும் வலிமையுடைய்து; ஆதலால், இவனுருவத்தின் சிறுமையை நோக்கி இகழ்ச்சி செய்யலாகாது; இத்தன்மைத்தான மகிமை, காலம் வரும்போது வெளிப்படும்; அப்பொழுது காணலாம் என்றான். "உருவகண்டென்னாமை வேண்டுமுருண் பெருந்தேர்க், கச்சாணியன்னருடைத்து" என்றார் திருக்குறளிலும். ஆகவே,

தீ இவனது உருவத்தைக் கண்டு அவமதிக்கலாகாதென்றதாயிற்று. இவன் வடிவு அமைந்த ஆணி என்று பிரித்தும் உரைக்கலாம்.

சேண் உயர்-ஒரு பொருட்பன்மொழி. கரியோனென்னும் பொருளதாகிய கிருஷ்ணன் என்னும் வடமொழி, பிராகிருதமாய்க் கண்ணனெனச் சிதைத்தவந்தது; இது, விஷ்ணுவின் திருநாமங்களுள் ஒன்று: இது, இங்கே அவதாரப்பெயரன்றி வந்த காரணப்பெயர். அன்றி, கவி கிருஷ்ணவதாரத்திற்குப் பிற்பட்டவராதலால், 'இருவரும் ஒருவரே' என்ற கொள்கையால் இராமனையே கண்ணனெனக் கூறினு மென்றலு மொன்று. (உக)

உஉ. மற்றுமிவ்வுலகத்துள்ள முனிவர்வானவர்களாரிச்
சொற்றிறமுடையார்மற்றுச்சுருதியின்றொகுதியாவு
முற்றறிதருமிம்மாணிமொழிக்கெதிர்மூதல்வராய
பெற்றியர்மூவர்க்கேயும்பேராற்றலரிதுமன்னே.

(இ - ன்.) மற்றும் - பின்னும், இ உலகத்து உள்ள - இந்தப் பூலோகத்திலுள்ள, முனிவர்-இருடிகளுள்ளும், வானவர்கள்-(மேலுலகத்திலுள்ள) தேவர்களுள்ளும், இ சொல் திறம் உடையார்-இத்தன்மைத்தான சொல்லின்திறமையுடையவர், ஆர் - யார் இருக்கின்றனர்? [ஈவருமில்லையன்றே?] மற்று - மேலும், சுருதியின் தொகுதி யாவும் - வேதங்களின் கூட்டமெல்லாவற்றையும், முற்ற அறிதரும் - முழுவதும் [ஐயந்திரிபற] அறிந்த, இ மாணி-இந்தப் பிரமசாரியினது, மொழிக்கு எதிர் - சொல்லுக்கு எதிரில், மூதல்வர் ஆய பெற்றியர்-(யாவர்க்கும்) முதல்வரான தன்மையையுடையவர்களாகிய, மூவர்க்கேயும் - திரிமூர்த்திகட்கேயாயினும், பேர் ஆற்றல்—மிக்க வல்லமை, அரிது-அருமையுடையதாகும்; (எ - று.)

இவனது சொல்திறமைக்கு முன்னே மும்மூர்த்திகளின் சொல்திறமையும் இல்லாததாக எண்ணப்படு மென்பதாம். மன், ஓ - ஈற்றசைகள். ஸ்ருதி என்பதற்கு - எழுதாக்கிளவியாய் ஆசார்யசிஷ்ய பரம்பரைக் கிரமப்படி உபதேசமூலமாகக் கேட்கப்பட்டவெருவதென்று அவயவப்பொருள். மூவர் - தொகைக்குறிப்பு. எயும், உம்மும் - உயர்வுசிறப்பு.

இச்செய்யுள், சில எட்டுப் பிரதிகளில் இல்லை. (உஉ)

[சுக்கிரீவனைக் காட்டவேண்டுமென்று இராமபிரான்
அநுமானை நோக்கிக் கூறுதல்.]

உக. எவ்வழியிருந்தான்சொன்னகவிக்குலத்தரசன்யாங்க
ளவ்வழியவனைக்காணுமருத்தியாலணுகவந்தே
மிவ்வழிநின்னையுற்றவெமக்குநீயின்சொலன்ன
செவ்வழியுள்ளத்தோனைக்காட்டுதிதெரியவென்றான்.

(இ - ன்.) (என்றுத் தம்பிக்குச் சொல்லிப் பின்பு ஸ்ரீராமன் அநுமானை நோக்கி), 'சொன்ன - (உன்னுற்) சொல்லப்பட்ட, கவி குலத்து அரசன் - சூரிக்ரீவனின் கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்ரீவன், எ வழி இருந்தான் -

எவ்விடத்தில் இருக்கின்றானே, அவ்விடத்தில் '(சென்று), அவனை காணும்-அவனைப் பார்க்கவேண்டுமென்கிற, அருத்தியால்-விருப்பத்தால், யாங்கள் - நாங்கள், அணுகவந்தோம் - சமீபமாக வந்தோம்; இவ்விடத்தில், நின்னை உற்ற - உன்னை எதிர்பட்ட, எமக்கு - எங்களுக்கு,—இன்சொல் அன்ன-(உனது) இனிய வார்த்தையைப்போன்ற, செம்வழி உள்ளத்தோனை-சன்மார்க்கத்திற் செல்கின்ற நன்மனத்தையுடைய அவனை, நீ—, தெரிய காட்டுதி-தெரியுமாறு காண்பிப்பாயாக,' எனருண் - என்று சொன்னனை; (எ-று)

சுக்கிரீவனைக் காணவேணுமென்றே யாம் வந்துள்ளோமாதலால், அவனைக் காட்டவேண்டுமென்று அநுமானை இராமபிரான வேண்டினனென்க. மனமும் சொல்லும் ஒத்த தூயவனைபான், 'இன்சொலனன செவ்வழியுள்ளத்தோன்' என்றான். (உங்)

[அநுமான் கூறிய முகமன்.]

உச. மாநிரப்பொருப்போடோங்கிவரம்பிலாவுலகின்மற்றுப்
பூதரப்புயத்துவீர்தும்மொக்குமபுனிதர்யாரே
யாதரித்தவனைக்காண்டற்கணுகினிரென்னினன்னன்
றீதவித்தமையச்செய்தசெய்தவச்செல்வனன்றே.

இஃதுமுதல் நான்கு கவிகள் - அநுமான வார்த்தை.

(இ - ன்) பூதரம் புயத்து வீரர் - பூமியைத் தாங்குகின்ற மலைபோன்ற [உலகத்தைத்தாங்குகின்ற] தோளகளையுடைய வீரகளே!—மாநிரம் பொருப்போடு ஒங்கி - எட்டுத்திக்கிலும சுறறிலும் இருகின்ற சகரவாள பருவதத்தோடு உயர்ந்து, வரம்பு இலா-எல்லையில்லாமற பரந்துகிடக்கின்ற, உலகில் - இத்தப் பூலோகத்திலே, நும் ஒக்கும் - உங்களைப்போன்ற, புனிதர் - பரிசுத்த குணமுடையவர், மற்று யாரே - வேறு யாவர் உளர்? (இப்படி ஒபபவரில்லாதீர்கள்) அவனை ஆதரித்த காண்டற்கு அணுகினிர் எனனின் - அச்சுக்கிரீவனிடத்து அன்புபாராட்டி அவனைப் பாப்பதறகென்ற சமீபித்தவக்கீர்களென்றால்,—அனனன - அவன, தீது அவித்து - கொடிய ஐமபொறியை அடக்கி, அமைய - பொருத்தமாக, செய்த—, செய் தவம் செலவம் செவ்விய [கல்ல] தவமாகிய செல்வம், நன்றே - மிகுதியும் நன்மையுடையதே; (எ-று.)

என்றது, முற்பிறப்புக்களில் மிக்க தவஞ் செய்திருந்தாலனறி இப்படிப்பட்ட மகானகளது சேர்க்கை கோர தென்றவாறு. 'மாநிரப்பொருப்பு' என்றது, பூமியைச் சூழ்ந்துள்ள கடலுக்கு அப்பால் மதில்போலச் சூழ்ந்திருக்கின்ற சக்கரவாளகிரியை. மலை தோள்களுக்கு, வலிமையினாலும் உயர்ச்சியினாலும் மாத்திரமேயன்றி நிலவுலகத்தை நிலைபெறச்செய்தலாலும் உவமையாகுமென்பது தோன்ற, 'பூதரம்' என்னும் பெயராற் கூறினர். வீரர் - அண்மை விளி. தீது - சாதியொருமை. தீது அவித்து - பாவத்தை யொழித்து என்றுமாம். செய் தவம் என்பதில், செய் - செமமையென்னும் பண்புப்பெயரின் விகாரம். செய்தற்குரிய தவமென வினைதொகையுமாம. நற்றேகாரம்-தேற்றம். 'மற்றிப்பூதரப் புயத்து வீரர்' என்றும், 'அரிதிற்செய்த' என்றும், 'செல்வனன்றே' என்றும் பாடமோண்டு. (உச)

[இதுவும் அது]

உரு. இரவிதன்புதல்வன்றண்ணியிந்திரன்புதல்வனென்னும்
பரிவிலன்சீறப்போந்துபருவரற்கொருவனஞ்சி
யருவியங்குன்றினென்னெடிருந்தனனவன்பாற்செல்வம்
வருவதோரமையினின்வந்தீர்வரையினும்வளர்ந்ததோளீரா.

(இ - ள்.) வரையினும் வளர்ந்த தோளீர் - மலைகளினும் மிகுதியாகப் பருத்து வளர்ந்திருக்கின்ற தோள்களையுடையவர்களே!—இரவிதன் புதல்வன் - சூரியகுமாரனை அச்சுக்கிரீவன, தனனே—, இந்திரன் புதல்வன் என்னும் பரிவு இலன சீற-இந்திரனது குமாரனுகிய வாலியென்ற சிறிதும் இரக்கமில்லாத தமையன் கோபிதத்துரத்திவிட்டதனால், பருவரற்கு ஒருவன் அஞ்சி-அன்பத்தை யனுபவித்தற்குதான் ஒருவனே யாய், அருவி அமருன்றின் போந்து நீருருவிகளையுடைய அழகிய இம்மலையிற் புகுந்து, என்னோடு இருந்தனன் - என்னுடனே ஒளிதிருக்கின்றான் ; அவன்பால் - அவனிடத்தில், செல்வம் - நல்ல பாக்கியம், வருவது ஓர் அமைவின - வந்து சேர்வதொரு தன்மையினால், வந்தீர் - (நீங்கள் இங்கு) வந்தீர்கள் (எ - று.)

நீங்கள் இப்போது வந்ததனால், இனிச் சுக்கிரீவன் இழந்த செல்வத்தைப் பெறுவ னெனபதாம். அவனிடத்துப் பாக்கியம் வந்து சேர்வதொரு தன்மை போல நீவிர் வந்தீரென்றுமாம். இங்கு வாலியைத தமையனென்னுது 'இந்திரன் புதல்வன்' என அனனியன்போலக் கூறியது, சகோதரர்களாகிய வாலி சுக்கிரீவரிருவரும் மனம் வேறுபட்டதனால். 'பரிவிலன்' எனபதற்கு - அனபு மில்லாதவனெனப் பொருள்கூறி, சுக்கிரீவன் அன்பத்திற்கே இலக்காயிருத்தல்போல வாலி இனபதிறகே இலக்காயிருக்கின்றானென கயந்தோன்றக் கருத்திக் கூறுவர் ஒருசாரார் ; ஊரிலு மிருக்கவொட்டாமற் செய்தனனென்பார், 'போகத்' எனறார்.

'பருவரற்கு ஒருவனஞ்சி' எனறதற்கு - அன்பம் முழுவதையும் தான் ஒருவனே அனுபவிக்கின்றானென்றும், அத்துனபத்தைப் போக்குதற்கு வேறே யாரும் துணையிலலையென்றும் கருதது. 'ஒருவனஞ்சி' என்றது, அவன் மனைவியையும் வாலி அபகரித்துக்கொண்டமை தோன்ற கினறது. அருவியங்குனறின் - அருவியையுடைய மலைபோல என உரைத்து, கண்ணீர் பெருக்குகின்ற சுக்கிரீவனுக்கு உவமையாக்குவாரு முளர். வாலியும் அவன் மகனை அங்கதனும் தேவேந்திரனது அம்சமெனபதை, பாலகாண்டத்தில் "தருவடைக் கடவுள் வேந்தன சாறறுவா னெனறு கூறு, மருவலர்க் கசனியன்ன வாலியு மகனுமென்ன" என்றதனால் அறிக. 'இரவிதன் சிறுவன்' என்றும், 'எம்மோடிருந்தனன்' என்றும் பாடமுண்டு. (உடு)

[சாண்மடைந்தவரைக்காத்தல் எல்லாத்தருமங்களினுஞ் சிறந்ததென்றல்.]

உசு. ஒடுங்கலிலுலகம்யாவுமுவந்தனவுதவிவேள்வி
தொடங்கினமற்றுமுறறதொல்லறந்துணிவரன்றே
கொடுங்குலப்பகைஞனுக்கிக்கொல்லியவர்தகுற்றை
நடுங்கினாக்கபயலகுமதனினுநல்லதுண்டோ.

(இ - ன்.) ஒடுங்கல் இல்-சுருங்குதலில்லாத [மிகப்பரந்த], உலகம் யாவும்-உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், உவந்தன - விரும்பியவற்றை, உதவி - தானஞ்செய்து,—தொடங்கின தொடங்கியவைகளாகிய, வேள்வி-யாகங்களையும், மற்றும்-தவம் முதலியவற்றையும், முற்ற - நிறைவேற்றும்படி,—ஒதல் அறம் - பழமையான தருமங்களை, அணிவர் அன்றே - (பெரியோர்) கிச்சயிப் பார்களன்றோ? (அத்தருமங்களுள்), கொடுங் குலம் பகைஞன ஆகி-குலத்திற்குக் கொடிய பகைவனும், கொல்லிய வந்த-கொல்லுதற்குவந்த, கூற்றை-யமன் போனற பகைவனைக்குறித்து, நடுங்கினர்க்கு - அஞ்சித் தம்மைச் சரண மடைந்தவர்களுக்கு, அபயம் நலகும் அதனினும்-'பயப்படாதே' என்று அருள் செய்வதைப் பார்க்கிலும், நல்லது - மேம்பட்டதொரு தருமம், உண்டோ - உளதோ? (எ - று.)—ஓ - எதிரமறை.

பலவகைப்பட்ட தானங்கள், யாகங்கள், தவங்கள் முதலிய சகல தருமங்களினும் சரணுகதர்க்கு அபயப்ரதானஞ் செய்தலே மகாதரும மெனபதாம்: ஆகவே, நாங்கள நுமமைச் சரணமடைந்துள்ளோ மாதலால் எம்மைக் காக்க வேண்டுவது நுமது கட னெனபது, குறிப்பெச்சம். 'ஒடுங்கல் இல் உலகம் யாவும் உவந்தன உதவி' என்பதற்கு - விரும்பிக் கேட்கப்படுகின்றனவாகிய சுருதகுதலில்லாத பூமி முதலியவறறைக் கொடுத்து எனறுமாம்.

அறம் - (இன்னது செய்யத்தக்கது என நூல்களால்) வரையறுக்கப்பட்டது எனக் காரணக்குறி; இதன் ஏதிரமொழி-மறம்: (செய்யதகாததென்று சாஸ்திரங்களில்) மறுக்கப்பட்டது. வேள்வி-தொழிற்பெயர்; ஓமஞ்செய்தல். கொல்லிய - வினையெச்சம். கூற்று-உவமையாகு பெயர். "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும்" என்றதனால், 'கூறறை நடுங்கினர்க்கு' எனறார். 'உலகம் யாவுமுயர்ந்தவர்க்குதவி,' 'உலகம்யாவுமுவந்தனருதவி,' 'அணிவரன்றேல்' என்பன பாடாந்தரம். (உசு)

[உம்மைச் சரணமடைவதே எமக்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்குமென்றல்.]

உஎ. எம்மையேகாத்திரென்றலெளிதரோவிமைப்பிலாதோர்
தம்மையேமுதலிட்டான்றசராசரஞ்சமைத்தவாற்றன்
மும்மையேழுலகங்காக்குமுதல்வர்நீர்முருகற்செவ்வி
யும்மையேபுகல்புக்கேமுக்கினின்வருமுறுதியுண்டோ.

(இ - ன்.) எம்மையே - (எளிய) எங்களை மாதிரமே, காத்திர்-(நீங்கள்) காப்பீர்கள், என்றல் - என்பது, எளிது அரோ - எளிமையானதனறே? (எனென்றால்),—நீர் - நீங்கள்,—இமைப்பு இலாதோர்தம்மையே முதலிட்டு-கண்கள் இமைத்தலில்லாத தேவர்களையே முதற்கொண்டு, ஆன்ற - மிகுதியான, சர அசரம்-அசையும் பொருள்களும் அசையாப்பொருளகளும், சமைந்த - நிரம்பிய, ஆற்றல் - வலிமையையுடைய, மும்மை ஏழ் உலகும்-மூன்று வகைப்பட்ட ஏழுலகங்களையும், காக்கும் - காககவல்ல, முதல்வர் - தலைவர்; முருகன் செவ்வி - முருகக்கடவுளைப் போன்ற அழகையும் பராக்கிரமத்தையுமுடைய, உம்மையே - உங்களையே, புகல் புக்கேமுக்கு-சரணமாக அடைந்த

எங்களுக்கு, இனின் : இதைப்பாராகிலும், வரும் - மேலாகவருகின்ற, உறுதி-கண்மையைத்தருவது, உண்டோ - வேறுஉளதோ? [இல்லை]; (எ - று.)

அநுமான், தனதுபேரறிவினால் இராமலக்ஷ்மணரது ஸ்வரூபத்தையறிந்து, 'நீர் எல்லாவுலகங்களையுங் காக்கும் முழுமுதற்கடவுளினம்ச மாதலின், நீரே எமக்குப் புகல்; உம்மைச்சரணமடைவதே எமக்கு எல்லாநன்மைகளையும் விளைக்கும்; ஆகவே, யாம்நும்மைச்சரணமடைவோம்' என்றுகூறினனெனக.

எழுலகு-மேலேழுலகும் கீழேழுலகும் என இருவகைப்பட்டவை. உலகம் பதினானகாயிருக்க 'மும்மையேழுலகு' எனறது, மேல் கீழ் நடு என்கிற நோக்கத்தால்; அன்றி, கிருதகம் அகிருதகம் கிருதாகிருதகம் எனறு மூன்று வகைப்பட்ட உலகமுமாம்: கிருதகம் - (பிரமனது தினபரிமாணத்தில் அழிவதனால் மீண்டும் புதிதாகச்)செய்யப்பட்டது; பூமி, பாதாளம முதலியன. அகிருதகம் - (அவ்வாறு அழியாமலிருத்தலால் மீண்டும்) செய்யப்படாதது; தபோலோக சதயலோகங்கள். கிருதாகிருதகம் (பாதியழிந்தும் பாதியழியாமலுமிருத்தலால்)செய்யப்பட்டதும் செய்யப்படாததுமாயிருப்பது; சுவர்க்கம முதலியன. முருகன-முருகையுடையவன்; முருகு-இளமை, தெய்வத்தன்மை, அழகு. எமமையே, ஏகாரம்-இழிவு சிறப்போடு, பிரிநிலை. தம்மையே-உயர்வு சிறப்பு. உம்மையே - உயர்வுசிறப்போடு, பிரிநிலை. அரோ-இரங்குதற்றேற்றம். சராசரம்=சர+அசரம்: உடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி; இயங்குதிணைப் பொருளும், நிலைததிணைப்பொருளுமம: ஜங்கம ஸ்தாவரங்கள. புகல் - புகுதல், சரணமாக அடைதல்: தொழிறபெயர். புகலேமுகு'- இறந்தகாலத்தனமைப் பன்மை வினையாலணையுமபெயர்; நானகனுருபேறறது: உ-சாரியை. 'காததி ரென்றறளிதரோ' எனபதும், 'முருகச்செவ்வி' எனபதும் பாடம். (உ எ)

[அநுமான் 'நும்மை யாரெனத் தேரிவிப்பது?' என வினவ,
இலக்குமணன் கூறத்தொடங்குதல்.]

உஅ. யாரெனவிளம்புகேனெங்குலதலைவற்குமமை
வீரநீபணிததிரெனறனமெயமமையினவேலிபோல்வான்
வார்கழலிளையவீரனமரபுளிவாய்மையாதுஞ்
சோர்விலனிலைமையெல்லாநதெரிவுறச்சொலலுற்றான்.

(இ - ன்.) 'வீர-வீரனே!—எம் குலம் தலைவற்கு - எங்கள் கூட்டத்துக்குத் தலைவனுகிய சுக்கிரீவனுக்கு, உமமை யார் என நான விளம்புகேன்-உங்களை யாவரென்று யான் சொல்லுவேன்? நீர பணிததிர் - நீங்கள் சொல்லுங்கள்,' என்றான் - எனறுகேட்டான, மெய்ம்மையின் வேலி போல்வான்-சத்தியமாகிய பயிர் அழியாமைக்குப் போகட்ட வேலிபோல்பவனான அனுமான்; (உடனே), வார் கழல் இளைய வீரன-நீண்ட வீரக்கழலையுடைய லக்ஷ்மணன், —மரபு உளி - (சொல்லவேண்டிய) முறைமையை ஆலோசித்து, வாய்மையாதும் சோர்வு இலன உண்மை சிறிதுந் தவறாதவனாய், நிலைமை எல்லாம் - தங்கள் நிலைமைகளையெல்லாம், தெரிவுற - நனறாய் விளங்க, சொல்லல் உற்றான் - சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் நான்கு கவிகளாற் கூறுகின்றார்.

மெய்ம்மையின் வேலி போல்வான் - மெய்ம்மை தன்னை விட்டுக் கடவா திருக்கப்பெற்றவன்; எப்போதும் உண்மையையேபேசுபவ னென்றபடி. கழல் - வீரர்கள் தமது வீரத்தன்மைக்கு அறிகுறியாகக் காலிலணிந்துகொள் ளும் ஆபரணம். விளம்புகேன், கரவொற்றை - கிலே-எதிர்காலங் காட்டிற்று. வீர தீர பணித்திர் ஒருமைப்பன்மையக்கம்; வீரத்தன்மையுடைய நீரென்று மாம். 'வீரர்' என்ற பாடங்கொள்ளுதல் சேர். உளி-உள்ளி என்பதன் தொகுத் தல்: இறக்காலவினையெச்சம்; இனி, மரபுளி முறையிலுல் என்றுங்கொள்ள லாம்; முறைப்படி யென்றவாறு. 'உளி' என்பது - மூனறும்வேற்றுமைப் பொருள் படுவதோர் இடைச்சொல்; ஏழனுருபு மூன்றனுருபின் பொருளில் வந்ததெனினுமாம்.

முதலடியில் 'யாரெனவியம்புகேனெனன்குலத்திறைவற்கும்மை' என் றும், பின்னிரண்டடியில் 'வார்கழலினீயமைந்த மற்றுநம்மரபியாவுஞ், சோர் விலாதரையென் றையன் சொல்லலுஞ் சொல்லலுற்றான்' என்றும் பாட மோதுவாரு முளர். (உ அ)

[இதுமுதல் மூன்றுகவிகள் - இலக்குமணன் கூறிய விடை.]

உகூ. சூரியன்மரபிற்றோன்றிச்சுடர்நெடுநேமியாண்ட
வாரியனமர்க்காகவசுரையாவியுண்ட
வீரியன்வேள்விசெப்துவிண்ணுலகோடுமாண்ட
காரியன்கருணைபன்னகண்ணனக்கவிகைமன்னன்,

இதுவும், அடுத்த கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) அ கவிகை மன்னன்-அவ் வெண்கொற்றக் குடையையுடைய அரசன்,—சூரியன் மரபில் தோன்றி - சூரிய வம்சத்திற் பிறந்து, சுடர் நெடு நேமி ஆண்ட - விளங்குகின்ற பெரிய ஜ்ஞ்ஞாசக்கரத்தை (உலக முழுவதுஞ் செலுத்தி) அரசாட்சிசெய்த, ஆரியன் - மேம்பட்டவனை; அமரர்க்கு ஆக - தேவர்களின்பொருட்டு, அசுரரை - (சம்பரன் முதலிய) அசுரர்களை, ஆவி உண்ட-உயிர்குடித்த [கொனற], வீரியன-பராக்கிரமமுடையவன; வேள்வி செய்து - யாகங்களைச்செய்து, விண் உலகோடும் ஆண்ட - தேவலோகத்தை யும் அரசாண்ட, காரியன்-செயலுடையவன்; கருணை அனன-அருளே வடிவ மெடுத்தாற் போன்ற, கண்ணன் - கண்ணேட்ட முடையவன்; (எ - று.)

› விண்ணுலகோடும் ஆண்ட காரியனென்றது - இந்திரன் முதலிய தேவர் கட்குப் பகைவர்களாகிய சம்பரன் முதலிய அசுரர்களைத் தேவர் வேண்டுகோ ளினுற் போர்செய்து நாசப்படுத்தி அவராற் கைக்கொள்ளப்பட்ட தேவலோக ஸாம்ராஜ்யத்தை இந்திரனுக்குக்கொடுத்து அருள்செய்ததனால்; இதனை "இன் றளிர்க்கற்பகநறுந்தே னிடைதளிக்கு நிழலிருக்கை யிழந்துபோக்கு, நின்ற ளிக்குந் தனிக்குடைக்கீ ழதிஞெதுங்கிக் குறையிரந்த நிற்ப நோக்கிக், குன்ற ளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுக் தொலைத்து நீகொண், டன்றளித்த வரசன்றே புரந்தரனின் றுள்கின்ற தரச" என விசுவாமித்திரர் கூறியவாற்றலும் அறிக: அன்றியும், தசரதசக்கரவர்த்தி இந்திரனுடைப்ப

அவ்னது அர்த்தாசனத்தில் வீற்றிருந்தனனெனப் பிறவிடத்துக் கூறியவாற்றலுமாம். 'செய்யுளாதலின், முதலில் அக்ஷவிகைமன்னன்' எனச் சட்டிஞர். ஆஜ்ஞையைச் சக்கரமென்றும் குடையென்றுஞ் சொல்வது வழக்கம். ஆரியன் என்பதற்கு - பூஜிக்கத்தக்கவ னென்றும் அஸுரர் என்பதற்கு - பகைவருயிரைக் கவர்பவரென்றும் தேவர்க்கு மாறுனவரென்றும் பொருள். கவிகை - கவிந்திருப்பது; காரணப்பெயர்.

'மாபிற்றேன்றல்,' 'மரபிற்றேன்றும்,' 'அமரர்க்காதி,' 'காரியல்கருணேயண்ண' என்பன - பாடாந்தரம். 'சுடர்நேடுநேமியாண்ட' என்றவிடத்தி, 'தொல்லுலகாண்டமேலோன்' என்ற பாடமோதுவாரு முனர். (உக)

ரூ0. புபறருதத்திண்கோட்டுப்புகர்மலைக்கிறையையூர்த்து
மபறருமவுணர்யாருமடிதரவிரிற்கொண்ட
வியறரும்புலமைச்செங்கோன்மனுமுதல்யாருமோவ்வாத்
தயரதன்கனகமாடத்தடமதிலயோத்திவேந்தன்.

(இ - ள்) புயல் தரு மதம்-மேகம்போன்ற மதநீர்ப்பெருக்கையும், திண் கோடு - வலிய தந்தங்களையும், புகர் - (முகத்திற்) செம்புள்ளிகளையுமுடைய, மலைக்கு-மலைகள்போன்ற யானைகளுக்கு, இறைபை - தலைவனுகிய பட்டத்தி அரசயானையை, ஊர்ந்து-ஏறிநடத்தி, மயல் தரும் அவுணர் யாரும் மடிதரவரி வில் கொண்ட - மதமயக்கங் கொண்ட அசுரர்களெல்லாம் அழிந்துபோம்படி கட்டமைந்த வில்லையேந்திப் போர்செய்த, இயல் தரும் புலமை செங்கோல் - இயல்பாகப் பொருந்திய நல்லறிவையும் நீதிதவறுத அரசாட்சியையுமுடைய, மனு முதல்-வைவச்சுவதமனு முதலான, யாரும் எல்லா அரசர்களும், ஒவ்வா-ஒப்பாகமாட்டாத, தயரதன்-தசரதனென்னும் பேருள்ளவன்; கனகம் மாடம்-பொன்மயமான மாளிகைகளையும், தட மதில் பெரிய மதிலையுமுடைய, அயோத்தி - அயோத்தியாகரத்துக்கு, வேந்தன் - அரசன்; (எ - று.)

'புயல்தரு' என்பதை மலையோடு இயைத்து, மேகவுவமையைக் கருமை நிறத்திற்காகவுங் கொள்ளலாம். புயல்தரு, தரு உவமவுருபு. 'புகர்மலை' எனவே, யானையென விளங்கிற்று; புகர்மலைக்கிறை - தேவேந்திரனது ஐராவதமாகவுமாம். முதலென்றதனுற் குறிக்கப்பட்டவர் மாந்தாதா, சகுதஸ்தன், ஸகரன், பகீரதன் முதலியவர். தயரதன்-தசரதன்; இது தச ரத எனப்பிரிந்து, பத்திசைக்குக்களிலுஞ் செல்லவல்ல தேருடையவ னென்ற பொருள்படும்; எங்குந் தடையின்றிச் செல்லவல்லவனென்றதாயிற்று. இது, இந்திரனைச்சிறையிட்ட சம்பராசுரனை வதைத்தற்பொருட்டு அவன்சென்ற இடமெல்லாஞ் சென்றமையால் விளங்கியது. இச்சொல்லுக்கு, தச - பக்ஷி, ரதம் - வாகனம் என்று பொருள்கொள்ளின், கருடவாகனனான திருமாலுக்குப் பெயராகும்; தெய்வப் பெயரை மனிதர்க்கு இடுவது பரிசுத்திகர மென்கிற காரணத்தால், இவ்வரசனுக்கு இப்பெயர் இட்டு வழங்கிய தென்பர் ஒருசாரார். கொண்ட மனு, புலமைச் செங்கோல் மனு எனத் தனித்தனி இயையும். கனகத்தை மதிலோடுங் கூட்டுக. அயோத்தி-அயோத்யா என்னும் வடசொல்லின் விகாரம்: சண்டையிடுதற்குக் கூடாததென்பது பொருள்; அகழி மதில் ஆயுதம் சேனை முதலிய

வற்றால் மிக்க காவலுடையதென்பது கருத்து: இதனால், அக்கரத்தை ஆண்ட சக்கரவர்த்திகளது ஒப்புயர்வில்லாத வீரத்தன்மை தொனிக்கும். (கூ0)

கூக. அன்னவன்சிறுவனுமிவ்வாண்டகையன்னேபவத்
தன்னுடையுரிமைச்செல்வந்தம்பிக்குத்தகவினில்நி
ன்னெடுங்கானஞ்சேர்ந்தானுமுமிராமனென்பா
னிற்நெடுஞ்சிலைவலானுக்கேவல்செய்படியன்பானே.

(இ - ள்) அன்னவன் சிறுவன் ஆம் - அச்சக்கரவர்த்தியினது திருமகனே ய, இ ஆண்தகை - ஆண்மைக்குணமுள்ள இவன், அன்னே ஏவ - தனது (சிறிய) தாயாகிய கைகேயி கட்டளையிட்டதனால், தன்னுடைய உரிமைசெல் வம் - (மூத்தகுமாரனுதலால்) தனக்கே உரியதாகிய அரசாட்சிச் செல்வத்தை, தம்பிக்கு-தனது தம்பி(யும் அவள்பின்னேயும்) ஆகிய பரதனுக்கு, தகவில்நின்- தக்க அன்போடு கொடுத்து, நல் நெடுங் கானம் சேர்ந்தான் - நல்ல பெரிய வனத்தை அடைந்தான்; ராமமும் இராமன் என்பான் - திருராமமும் இராம னென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன்; இ நெடுஞ் சிலை வலானுக்கு - நீண்ட வில்லில்வல்ல இம்மகாவீரனுக்கு, ஏவல் செய் - குற்றேவல்தொழில் செய்கின்ற, அடியன் - தொண்டனுவேன், யான்—; (எ - று.)

இம் மூன்றுபாடல்களாலும் - மகாபல பராக்கிரமசாலியான தசரதசக்கர வர்த்தியினது மூத்தகுமாரனுய்த் திருவவதரித்து இராமனெனப் பெயர்பூண்ட இவன் மாத்ருவாக்யபரிபாலகத்தின் பொருட்டுத் தனது இராச்சியத்தைத் தம் பிக்குக் கொடுத்துவிட்டு இங்குவந்துள்ளான் எனத் தமையனையும், அவனது அடியவன் யானெனத் தன்னையும் இளையபெருமாள் உணர்த்தின ரூபிற்று. புருஷோத்தமனென்பான், 'ஆண்டகை' என்றான். சீதாகல்யாணத்தின் பிறகு தசரதசக்கரவர்த்தி இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய யத்தனிக்கை யில், மந்தரைசூழ்ச்சியால் மனங்கலக்கப்பட்ட கைகேயி, தன்கொழுநரான தச ரதரை நோக்கி, முன்பு அவர் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களுக்குப் பயனுகத் தன்மகனான பரதனுக்குப் பட்டங்கட்டவும் கௌசல்யைமகனான இராமனைப் பதினன்குவருடம் வனஞ்செலுத்தவும் வேண்டுமென்றுசொல்லி வற்புறுத்த, அதுகேட்டு வருந்தின தசரதர் சத்தியவாதியாதலால் முன்பு அவட்கு வரங்கொடுத்திருந்த சொல்லைத் தவறமாட்டாமலும், இராமன்பக்கல் தமக்கு உள்ள மிக்க அன்பினுல் அவ்வரத்தை நிறைவேற்றுமாறு அவனை வனத் துக்குச் செல்லச் சொல்லவும் மாட்டாமலும் கலங்கி வாய்திறவாதிருக்கிற சம யத்தில், கைகேயி இராமனை வரவழைத்து 'பிள்ளாய்! உங்கள்தந்தை பரத னுக்கு நாடு கொடுத்துப் பதினன்குவருடம் உன்னைக் காடேறப்போகச் சொல்லுகின்ரூர்' என்று சொல்ல, அச்சொல்லைத் தலைமேற்கொண்டு, அந்த மாற்ருந்தாயின் வார்த்தையையும் அவட்குத் தனது தந்தைகொடுத்திருந்த வரங்களையும் தவறுது நிறைவேற்றி மாத்ருபித்ருவாக்கிய பரிபாலனஞ் செய் தலினிமித்தம் இராமபிரான வனவாசஞ் சென்றனனுதலால், 'அன்னே யேவ' எனப்பட்டது. "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றே" என்று சொல்லிச் சிறிதும், வெறுப்பில்லாமற் களிப்போடு கொடுத்தமை

தோன்ற 'தகவினல்ல' என்றும், பெருமான் எழுந்தருளிய இடமே எல்லா நாடுகளிலும் மேம்பட்டதென்று தான் நினைத்தமை தோன்றக் காணத்துக்கு 'நல்நெடு' என்ற அடைமொழி கொடுத்துக் கூறினன். இனி, காணத்துக்கு நண்டி - அருத்தவஞ்செய்த பெரு முனிவர்களிருத்த லாகவுமாம். 'இலேவலா னுக்குத் தம்பி' என்னுமல் 'அடியன்' என்றது, "பின்னும் பகர்வாள் மகனே யிவன்பின்செல்தம்பி, யென்னும்படியன் றடியாரினிலேவல்செய்தி" என்று தனது தாய் கட்டளையிட்டபடியே தமையனுக்குச் சகலவித கைங்கரியங்களே யுஞ் செய்தலேயே தனக்குப் பரமபுருஷார்த்தமாகத் தலைக்கொண்டவ னுதலா லென்க. ஆண்டகை-ஆண்மையாகிய தகுதியையுடையவனெனப் பண்புத் தொகையன்மொழி: ஆண்களிலே தகுதியுடையவனென்னவுமாம். நான்கா மடிக்கு 'தன்னெடும் பிறந்திங்கேவல் தலைக்கொளு மடியன்யானும்' என்று பாடமோதுவாரு முளர். (ஈக)

இலக்குமணன் வார்த்தைகேட்ட அநுமான் இராமபிரானை வணங்குதல்.

ஈஉ. எனறவனம்ருறறமாதியிராவணன்மைழுததமாயப்
புன்றொழிலிறுதியாகப்புகுந்துளபொருள்களெல்லா
மொன்றுமாண்டொழிவுறுமலுணர்த்தினனுணர்த்தக்கேட்டு
நின்றவக்காலின்மைந்தனடிதுவந்தடியிற்றாழ்ந்தான்.

(இ - ன்.) என்று - இவ்வாறாக, அவன் தேற்றம் ஆதி - இராமபிரானது திருவவதாரம் முதல், இராவணன் இழைத்தமாயம் புல்தொழில் இறுதி ஆக - இராவணன் செய்த வஞ்சனையாகிய அற்பச்செய்கை [சீதையை அபகரித்துக் கொண்டு போனது] வரையிலும், புகுந்து உள பொருள்கள் எல்லாம் - நடந்துள்ள விருத்தாந்தங்களையெல்லாம், ஒன்றும் ஒழிவு உறுமல் ஆண்டு உணர்த்தினன் - சிறிதுக் தவறுமல் அப்பொழுது (இளையபெருமாள் அனுமானுக்குச்) சொன்னன்; உணர்த்த - (அவ்வாறு) சொல்ல, கேட்டு—, நின்ற - எதிரில் நின்ற, அ காலின் மைந்தன் - அவ் வாயுகுமாரன், நெடிது உவக்க - மிகவும் மகிழ்ச்சியடைந்து, அடியில் - (இராமபிரான்) திருவடிகளில், தாழ்ந்தான் - (ஸாஷ்டாங்கமாக) விழுந்து தண்டனிட்டான்; (எ - று.)

இலக்குமணன் கூறியதைக் கேட்கவே, இராமபிரானது சிறந்த குணம் விளங்கியதனால், அப்பிரானே மஹானென்றுகொண்டு அநுமான அவனது திரு வடியில் வணங்கினனென்க. அடியில்-ராமலக்ஷ்மணரது திருவடிகளிலென்ற மாம். இராமலக்ஷ்மணர்களைச் சார்ந்ததும், பிரஸித்தவடிவங் கொண்டு நின்ற அநு மான் வணங்கினனென முதனூலிற் கூறியுள்ளது. இராவணன் ராவணன்; (பிறரை வருத்துதலாலே உலகமுழுவதையும்) கூச்சலிடும்படி செய்பவன்: அன்றி, (தான் கைலாசாதிகளை எடுத்து நெருக்குண்டு) கூப்பிடுபவன்; இதனால், தனக்கும பிறர்க்கும் நன்மையறியாத துஷ்டஸ்வபாவமுடையவனென்ற படி: இனி, இச்சொல்லுக்கு - விச்ரவமுனிவரது குமாரனெனப் பொருள் கூறுதலு முண்டு. 'நெடியவனடியில்' எனறும் பாடம். தோற்றம்-'தோன்று'

என்ற பகுதியினடியாப் பிறந்த தொழிற்பெயர். நெடிது - நெடுமையென்ற பண்பினடியாப்பிறந்த குறிப்புமுற்றெச்சவினையுரி. (கூ)

இராமனுக்கும் அநுமானுக்கும் சம்பாஷணை.

கூகூ. தாழ்தலுந்தகாதசெய்தனெண்ணீதருமமன்றுற்
கேள்வி நூன்மறைவலாளாவென்றனனென்னக்கேட்ட
பாழியந்தடந்தோள்வீரமாருதிபதுமச்செங்க
ணிழியாயடியேன்றானுமரிக்குலத்தொருவனென்றான்.

(இ - ள்.) தாழ்தலும் - (அநுமான்) வணங்கினவளவில்—(இவனை அவனே நோக்கி)—'கேள்வி நூல் மறை வலாளா நூறகேள்விகளையுடைய வேதங்களை வல்ல பிராமணப் பிரமசாரியே! நீ—, தகாத - தகுதியலலாத காரியத்தை, செய்தனை—[எனை வணங்கினது], எனை - என்ன காரணத்தால்? தருமம் அன்று ஆல - (பிராமணனை க்ஷத்திரியனை நமஸ்கரிப்பது) தருமமல்லவே,' என்றனன - என்று அருளிச்செய்தான்; என்ன - என்று அருளிச்செய்ய, கேட்ட - (அதனைச்) செவியுற்ற, பாழி அம் தடந்தோள வீர மாருதி - வலிமையுள்ள அழகிய பெரிய தோள்களையுடைய வீரனாகிய அநுமான, 'பதும் செங்கண் ஆழியாய்-செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையும ஆழ்ஞாசக்கரத்தையு முடையவனே! அடியேன்தானும்-அடியேனும், அரி குலத்து ஒருவன - குரங்குச்சாதியில் தோன்றிய ஒருத்தன,' என்றான - என்று சொன்னான: (எ - று.)

'பிராமணப பிரமசாரியாகிய நீ க்ஷத்திரியனாகிய எனை வணங்குதல் தகாதே' என்று இராமபிரான் சொல்ல, அநுமான் அஃறிணைப்பொருளிற் சேர்ந்த யான உயர்திணையாகிய நும்மை வணங்குதல் குறைமனமுமென மறுமொழி கூறினனெனபதாம.

கேள்வியாவது கேட்டற்குரிய நூற்பொருளைக கற்றறிதார் கூறக்கேட்டல், கற்றவிடததே அதனாலாகிய அறிவைத திடப்படுதாதலாலும், கல்லாதவிடததும அவவறிவை யுண்டாகதலாலும், 'கேள்விநூனமறை வலாளா' எனக கேள்வியை முறகூறினான; ''கற்றிலனாயினுங் கேட்க'' என்றார் திருக்குறளிலும். மறை-சிலாகை மற்றைகளபடுவன; அன்றி, மறைந்தபொருளுடையன. மறைவலாளனென்றது-பிராமணனையே குறிககும்; வேதங்களை ஓதுதல் ஓதுவிதாதல் எனனும் இருதொழிறகும உரியவர் அவரேயாதலால். ஆழியாய் எனபதற்கு - சுதரிசனமென்னுஞ் சகரததை யுடையவனேயெனறும, பாறகடலிற பளளிகொள்பவனேயெனறும், பிரளயகாலத்திற பெருங்கடலில் ஆலிலையிற் பள்ளிகொள்பவனே யெனறும் பொருளுரைதது, அநுமான தத்வஜ்ஞானமுள்ளவனாதலால் இராமபிரானை விஷ்ணுவின அவதாரமெனறு அறிந்தனனென்றலுமொன்று. தாழ்தலும-உம்மீறறு இரந்தகாலவினையெச்சம்; வினைவு குறிதத்தது. தகாத - தகாததெனபதன விகாரம. 'கேள்வி' - இனவெதுகை. இனி, 'வாழியமறைவலாளர்', எனப் பாடங்கொளவாரு முண்டு. (கூகூ)

அநுமான் பெரிய வானரவுருக் கொள்ளுதல்.

கூச. மின்னுருக்கொண்டவில்லோர்வியப்புறவேதநன்னூல்
பின்னுருக்கொண்டதென்னும்பெருமையாமபொருளுந்தாழப்
பொன்னுருக்கொண்டமேருபுயத்திற்குமுவமைபோதாத
தன்னுருக்கொண்டுநின்றனன்றருமதத்தின்றனிமைதீர்ப்பான்.

(இ - ன்.) பின் - உடனே,—தருமத்தின் தனிமை தீர்ப்பான்-தருமத்தினது (கதியில்லாமல்) தனிதனிருக்குந் தன்மையைப் போக்குபவனுகிய அவனுமான,—மின் உரு கொண்ட வில்லோர் வியப்பு உற - மினனல்போன்ற வீளக்கத்தைகொண்ட விற்களையுடையவர்களான ராமலக்ஷ்மணாகள் அதிசயமடையும்படியாகவும், வேதமு நல் நூல் பெருமை ஆம் உரு கொண்டது எனவும பொருளும் தாழ - வேதங்களாலும நல்ல சாஸ்திரங்களாலும் பெரிய ரூபதைத கொண்டதென்று சொல்லப்படுகிற பெரும்பொருள்களும் (தனது உருவத்துக்குமுனனே) தாழ்ந்துபோம்படியாகவும்,—பொன உரு கொண்ட மேரு - பொனமயமான வடிவதைதக் கொண்ட மகாமேரு பருவதம், புயதிற்கும் - (தனது) தோளகளுக்கும, உவமை போதர - ஒப்பாக மாட்டாதபடி, தன உரு - தனனுடைய (பெரிய நிஜ) ரூபதைத, கொண்டு நினறன - எடுத்துக்கொண்டு நினறன ; (எ - று.)

அப்போது தான மூற்கூறியபடி வானரவடிவதைதக் கொண்டவனே யெனபதைக் காட்டுமாறும, தனனிடத்தில் அவாகட்கு மதிப்பு உண்டாகுமாறும், அநுமான பெரிய வானரவுருக்கொண்டு நினறன னெனபதாம். எல்லாப் பொருளகளிலும பெரிய ரூபதைதக் கொண்டா னெனபது, 'வேதநன்னூல் உருகொண்டதென்னும் பெருமையாம் பொருளுந் தாழ' எனபதன் கருத்தி: இராவணன முதலிய ராக்ஷசாகளால நாசஞ்செய்யப்பட்டு அழிந்து போம நிலையிலிருந்ததான தருமதைத அநுமான இராமனுகுத் துணையாக இருந்து அவாகளைச் சங்காரஞ்செய்து நிலைநிறுத்தினதனால், 'தருமதின் தனிமை தீர்ப்பான' எனறார்; இனி, தருமதினது ஒப்பிலலாத தன்மையைத் தான போக்குபவன : அதாவது - வேறு உவமைபெறாத தருமதிற்குத் தான் உவமையாகச் சொல்லப்படுஞ் சிறப்புடையவ னெனறுமாம. (கூச)

அநுமான் கொண்ட உருவத்தின் சிறப்பு.

கூடு. கண்டிலனுலகமூன்றுங்காலினுற்கடந்துகொண்ட
புண்டரிகக்கணழிப்புரவலன்பொலங்கொள்சோதி
குண்டலவதனமென்றுற்கூறலாந்தகைமைத்தொன்றே
பண்டைநூல்களிரோன்சொல்லப்படித்தனன்படிவமம்மா.

(இ - ன்.) 'உலகம் மூன்றும் - (சுவர்க்கம் மத்தியம் பாதாள்ம் என்னும்) மூன்று லோகங்களையும, காலினுல்-(தனது) திருவடிகளால், கடந்துகொண்ட. (திரிவிக்கிரமாவதாரத்தில்) அளந்து தனதாக்கிக்கொண்ட, புண்டரிகம் கண் ஆழி புரவலன் - செந்தாமரைமலர் போலும் கண்களையும் சக்காயுதத்தைபு

மூடைய காத்தல்தொழிலில் வல்லவனுகிய (விஷ்ணுவினை அம்சமான) ஸ்ரீராமபிரான், பொலம் கொள் சோதி குண்டலம் வதனம் பொன்னிலு லாகிய பிரகாசத்தையுடைய குண்டலங்களே யணிந்த (அந்தமானுடைய) முகத்தை, கண்டிலன்-காணமாட்டாமற் போயினன', என்றல்—, புண்டை தூல் கதிரோன் சொல்ல படித்தனன்-பழமையான சாஸ்திரங்களே [வியாகரணம் முதலியவற்றை]ச் சூரியபகவான் கற்பிக்க (அவன்பக்கற்) படித்தவனை ஹநுமானை, படிவம் - விசுவரூபம், கூறல் ஆம் தகைமைத்து ஒன்றே - (நம்மால்) எடுத்துச் சொல்லக்கூடியதொரு தனமை யுடையதோ? [அன்று எனறபடி]; (எ று.)—அம்மா - வியப்பிடைச்சொல்.

திரிவிக்கிரமாவதாரஞ்செய்த சுவாமியே அனுமானுடைய திருமுகத்தைக் காணமாட்டாதவ ரெனறல், அவனது விசுவரூபத்தின் மகிமையை எவ்வாறு எடுத்துச்சொல்லுவது? எனக் கவிக்கூறறு. 'காலினுற்கடந்துகொண்ட' என்ற அடைமொழி - மூவுலகங்களையும ஈரடியா லளந்துகொண்ட கடவுளும் என்ற கருத்தைத் தருதலால், கருத்துடையடைமொழியணி. இருவரும் திருமாலின் திருவவதாரமே யாதலால், இராமபிரானை 'காலினுற கடந்துகொண்ட புண்டரிகக்கண்புரவலன்' எனறார். புரவலன-காத்தல்தொழிலில் வல்லவன்; காக்குங கடவுள், 'பொலன்கொள்சோதி' எனறும், 'புலனகொள்சோதி' என்றும், 'சோதிக்குண்டலவதனம' என்றும், 'தகைமைத்தன்றால்' எனறும் பாடம்.

காலினுற்கடந்துகொண்ட கதை:—மகாபலிசக்கரவர்த்தி தன்வலிமையாற் சுவர்க்கமுட்பட மூவுலகங்களையும் தனனுடையனவாகிச் சூட்சிபுரிய, அசிழகத தேவர்களின வேணடுகோளினுல் திருமால் காசியபமுனிவர்க்கு அதிதியினிடததில் வாமனனுகிய புதல்வனுய்த் தோன்றி, மாவலி யாகஞ் செய்கையில் அவன பகல்செனறு 'மூவடிமண் தா' என்று வேண்டி, சுக்கிராசாரியன தடுக்கவும் கேளாமல் அங்ஙனமே அவன தரப் பெற்று, திரிவிக்கிரமனுய்வளர்ந்து, ஓரடியால் மண்ணையும மற்றோரடியால் விண்ணையும் அளந்து, மூனறுமடியை அவன தலைமேல்வைதது அவனைப் பாதலததிலழுத்தின னெனபதாம். (கூ)

இராமன் அநுமானைக்குறித்து இலக்குமணனிடத்து வியந்துகூறுதல்.

கூசு. தாட்படாக்கமலமன்னதடங்கணுன்றமபிக்கம்மா
கீட்படாதின்றநீக்கிக்கிளர்படாதாகியென்று
நாட்படாமறைகளாலுநவைபடாஞானத்தாலுங்
கோட்படாப்பதமேயையகுரக்குருக்கொண்டதென்றான்.

(இ - ன்.) தாள் படா கமலம் அன்ன தட கணுன் - நாளத்தைவிட்டு நீங்காத செந்தாமரைமலர்போன்ற பெரியகண்களையுடையவனுன இராமன்,--தம்பிக்கு - லக்ஷ்மணனுக்கு, 'ஐய-தம்பி! அம்மா - ஆச்சரியம்! கீட்படா கின்ற நீக்கி-கீழ்மைப்பட்டு கின்ற (ராஜச தாமச) குணங்களைப் போக்கி [சுத்தஸாத்விக குணமயமானதாய்], கிளர் படாது ஆகி - ஒளி அழியாததாய்,--என்றும் நான் படா மறைகளாலும் கலை படா ஞானததாலும்-எப்பொழுதும் நாட்செல்லாத வேதங்களாலும் குற்றம் [ஐயந்திரிபுகள்] இல்லாத தத்துவஞானத்தால்

லும், கோன் படா - அறியப்படாத, பதமே - மோக்ஷலோகமே, குரங்கு உரு கொண்டது - வீரரவடிவத்தை எடுத்து வந்ததாம்,' என்றான் - எனது (அது மான்கொண்ட கூடிவதத்தைப்பற்றி வியந்து) சொன்னான்; (எ - று.)

ஒளிமிகுதியாலும், பெருந்தோற்றத்தாலும், சத்துவகுணமே தலையெடுத் திருத்தலாலும், பரமபதமே குரங்குவடிவங்கொண்டதாமென்று உத்ப்ரேக்ஷித் தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. "சிறுகாலேயிலா நிலையோதிரியா, குறுகா நெடுகா குணம்வேறுபடா, வறுகால்கிளர்பூதமெலாமுகினும், மறுகாநெறி" என்று கீழ் ஆரணிபகரண்டத்தில் மோக்ஷலோகத்தின தன்மையைக் கூறி யது, இங்குக் கருதத்தக்கது 'காளத்தைவிட்டு நீங்காத கமலம்' என்றது வாடா மைக்கும், விக்கமெனமைகுமை, கண்ணுக்கினிய தோற்றத்துக்கும்; இனி, நாளதினின்று தோன்றுத கமலமென்ற உரைதது, இல்போருளுவமை யாகவுமாம் 'கீட்படாதினற நீக்கி' எனபதற்கு - தான எல்லாவுலகங்களிலும் மேறபட்டதாயெனறும் பொருள்கொளளலாம். 'என்றும் நாட்படா மறைகள்' எனறதற்கு - தோற்ற வழிவுகளில்லாமல் அநாதியாய் நிதியமான வேதங்க ளெனறு கருதது. அந்தமிலினபத்தழிவில்வீடு சிந்தையும மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலால், 'மறைகளாலும் ஞானதாலுங் கோட்படாப் பதம்' எனப்பட்டது. 'கீட்படாதினற நீத்தல கீழ்ப்படாதாகி' எனவும், 'கோட்படாப்பதமுமைய' எனவும் பாடபேதம். தினற - பெயர்.

அம்மா - வியப்பிடைச்சொல். கீழ் எனபதன் ஈற்று ழகரம், வருமொழி முதலில் வல்லினம் வந்துபுணர்ந்தபோது டகரமாத் திரிந்தது; "ஐம்மூனற தாமுடல் வனமை பின வந்திடி லாரெறுடைந்தாம்" எனனும வீரசோழிய விதியைக காண்க. இனி, ஈறறுழகரத்துக்கு எதிரைநோக்கி ளகரம போலி யாய், அது டகரமாத திரிந்த தெனினுமை அமையும். இராமபிரான தமபியை 'ஐய' எனறது - அனபுபறறிய மரபுவழுவமைதி. ஐய - அழகிய என்றுமாம். தம்பிக்கு எனறான என இயையும. குரங்கு + உரு = குரகுரு: வேறறுமை யில் மெனறொடர் வனறொடராயிற்ற. (கூசு)

இராமன் அநுமானைப்பெற்றமைக்கு உவந்து சுக்கிரீவனைப்பற்றிப் புனைந்துரைத்தல்.

கூஎ. நல்லன நிமிததமபெற்றேமநமபியைபபெற்றேநம்பா
லில்லேயதன்பமான தினபமுமெய்திற்றினனும்
வில்லினுயிவனைப்போலாங்கவிக்குலக்குரிசில்வீரன்
சொல்லினுலேவல்செய்வானவனிலேசொல்லப்பாற்றே.

(தி-ள்.) (பின்னும் இராமபிரான சொல்வானுயினன:—) நமபியை பெற் றேம் இம்மேம்பட்டவனை [அநுமானை]க் கிடைக்கப்பெற்றேம்; (ஆதலால்), நல்லன நிமிததம் - மிகவும நல்லனவாகிய உபாயத்தை, பெற்றேம - அடைந் தோம்; (இனி), நம்பால் - நம்மிடத்து, அனபமான அ - அன்பமென்பது, இல்லேயே - இல்லாததேயாம; இனபமும் - சுகமும், எய்திற்று-வந்ததேயாம்;

இன்னும் - மேலும், - வில்லினாய் - வில்லையுடையவனே! இவனைபோல் ஆம் வீரன் - இவனைப்போன்ற மகாவீரன், கவி குலம குரிசில் சொல்லினால் - குரங்குக்கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்கிரீவனது கட்டளையால், ஏவல் செய்வான் - குற்றேவல்தொழிலைச் செய்வான்: (என்றால்), அவன் நிலை - அச்சுக்கிரீவனது நிலைமை, சொல்லல் பாற்றோ - சொல்லத்தக்க தன்மையையுடையதோ? [அன்றென்றபடி]; (எ - று)

காணப்பட்ட அநுமானைகொண்டு, காணப்படாத மகாராஜனது நிறைமையை அநுமாநப்பிரமாணத்தால் உத்தேசித்தனன் இராமபிரான். 'தம்பியைப் பெற்றேம்' எனபது ஏதுவாய் நின்று 'கல்லணநிமித்தம்பெறேம்' என்பது முதலியவற்றைச் சமர்த்திப்பது - தொடர்நிலைச் செய்யுட்குறியணி. கல்லண நிமித்தம்பெற்றேம் - நாம் புறப்பட்டபொழுது கல்லசகுனத்தைப்பெறாதிருக்க வேண்டுமென்றுமாம். 'பெற்றேம்' முதலியனவாகப் பன்மையாற்கூறியது - இலக்குமணனையும் உளப்படுத்தியதனாலென்க இல்லேயே, ஏகாரம் - தேற்றம். 'எய்திற்ற' என இறந்தகாலமாகக் கூறியதும், அத்தேற்றம்பற்றியே. போல் - ஒப்பில்போலி 'கவிகுலக்குரிசில்' என்று பிரதிபேதம். (கூஎ)

அநுமான் சுக்கிரீவனை யழைத்துவருமாறு இராமனிடத்து விடைபெற்றுச் செல்லுதல்.

கூஅ. என்றக முவந்து கோல முகமலர்க தினிது னின்ற
குன்றுறழ் தோளி னுரை நோக்கிமக் குரக்குச் சீயஞ்
சென்றவன் றன்னை யின்னே கொணர்கின்றேன் சிறிது போது
வென்றியி னிருதி ரென்று விடைபெற்று விரைவிற் போனான்.

(இ - ள்.) என்று - எனறு சொல்லி, அகம் உவந்து - மனம்மகிழ்ந்து, (அதற்கு ஏறப), கோலம் முகம் மலர்ந்து - அழகிய முகமலர்ச்சி பெற்று, இனிது இன கின்ற-இனிதாக இருந்த, குனறு உறழ் தோளினுரை நோககி மலைகள் போன்ற திருத்தோளகளையுடையவரான ராமலக்ஷ்மணர்களைப் பாரத்து,— அ குரங்கு சீயம் - வானரசிரேஷ்டனை அவனுமான்,—'(யான), சென்று - போய், அவன்தனனை - அச்சுக்கிரீவனை, இனனே இப்பொழுதே, கொணர் கினறேன் - அழைதது்க்கொண்டு வருகிறேனை; சிறிது போது - சமறுப் பொழுது, வென்றியிர் - வெற்றியையுடையீர்கள்! இருதிர்-(இங்கே) இருங்கள்', என்று - என்றுசொல்லி, விடை பெற்று - (அவர்களது) அநுமதியைப் பெற்றுக்கொண்டு, விரைவின போனான - சீகரமாக சென்றனை; (எ - று.)

இராமலக்குமணரைச் சுக்கிரீவனுளளவிடதது்க்குத தோள்களில் எழுந் தருளப் பண்ணிக்கொண்டு சென்றனன் அநுமா னென முதனூலில் கூறியுள்ளது. குரக்குச்சீயம் - வானரவிடஹம். இங்கே, விலிஹம் என்றது - சிறப் புப்பொருள் குறித்தினின்றது. சீயம்-வடசொற்றிரிபு. வெனறியீர்-வெனறிய ரென்பதன்ஈற்றயல் திரிந்தவிளி. 'நோககியகுரக்குச்சீயம்' என்றுசிலபிரதிகள்.

கடவுளரினிடத்துத் தான் எப்போதும் அநுகூலனாயிருக்கவேண்டிய சேதனன் அவனாறு இல்லாமற் பராமுகனாயிருக்க, ஆசாரியன் அச்சேதனனைக்

கடவுளினிடத்திற் சேர்க்குமாறு உபாயஞ்செய்வதை, இப்பகுதிக்கு உள் ளுறை பொருளாகக் கூறுவர். (கஅ)

வே று.

அநுமான் சுக்கிரீவனைச் சேர்தல்.

கக. போனமந் தரமணிப் புயமெடும் புகழினு
ணைதன் பொருதினத் தரசன்மா டணுகினுண்
யானுமுன் குலமுமிவ் வுலகுமுய்ந் தனமெனு
மானவன் குணமெலா நினையுமா மதியினுன்.

(இ - ள்.) போன - (அவ்வாறு) சென்ற, மந்தரம் மணி புயம் மெடும் புகழி னுன் - மந்தரமலே போன்ற அழகிய தோள்களையும் நீண்ட கீர்த்தியையு முடைய வனுன அநுமான், — மானவன் குணம் எலாம் நினையும் - மநுசக்கரவர்த்தியின் வம்சத்தில் திருவவதரித்தவனுன ஸ்ரீராமனது திருக்கலியாணகுணங்களனைத் தையுமே நினைத்து நினைத்துப் பார்க்கின்ற, மா மதியினுன் - பேரறிவை யுடையவனுய், — 'யானும் —, உன் குலமும் உனது வம்சமும் [குரங்குக்கூட்ட மும்], இ உலகும் - இந்த லோகமும், உய்ந்தனம் : பிழைத்தோம்,' எனு - என்று சொல்லிக்கொண்டே, — தன் னுன - தனக்கு (எதமானனுகப்) பொருந் திய, பொரு சினத்து அரசன்மாடு - போர்செய்தற்குரிய கோபத்தையுடைய அச்சுக்கிரீவமகாராஜனிடத்து, அணுகினுன் - சமீபித்தான்; (எ - று.)

அநுமான் தான்சென்றகாரியஞ் செவ்வனேமுற்றியதெனக் குறிப்பிக்கு மாறு 'யானும் உன்குலமும் இவ்வுலகும் உய்ந்தனம்' எனக் கூறிக்கொண்டே சுக்கிரீவனைக் குறுகின னென்க. மந்தரம் பாற்கடலைக் கலக்கியவாறுபோலத் தோள்கள் சேனைக்கடலைக் கலக்கு மென்பார், மந்தரத்தை உவமை கூறினர். 'பொருசினத்தரசன்' என்றது - ராமலக்ஷ்மணர்களிடத்தே பகைவர்களென்று சங்கைகொண்டிருந்ததைக் குறிப்பித்தற்கு: அரசர்க்குச் சினம் இலக்கணமாத லின் இவ்வாறு கூறினுனென்றலு மொன்று; "நச்சுநாகத்தினுழம் சீற்றத் தன்" எனச் சிந்தாமணியிற் கூறியதுங் காண்க.

அரசன்மாடு, மாடு - எழனுருபு. தான முதலிற்சென்று அவர்களைச் சேர்ந்த பேற்றினுல், 'யானும்' எனத் தன்னைத் தனியே முதலிற் கூறினுன். மேல் வாலியைச் சங்காரஞ்செய்து சுக்கிரீவனுக்கு அரசளிக்கும் தன்மையைக் கருதியும், இவ்வாறே துஷ்டநிக்கிரகஞ்செய்து சிஷ்டபரிபாலனஞ் செய்யும் இயற்கையைக் கருதியும், 'உன்குலமு மிவ்வுலகு முய்ந்தனம்' என்றுன். 'என்குலம்' என்ற பாடத்துக்கு யானொருவன் இவர்களையடைந்தி வணங்கின மாத்திரத்தால், எனது தாதை மூதாதை முதலிய பூர்வவம்சபாம்பரையெல் லாம் நற்கதிபெற்ற தெனப் பொருள் கொள்க. அறிவு படைத்ததன் பயன் கடவுளின்குணங்களைச் சிந்தித்திருத்தலே யாதலாலும், வேதங்களாலும் முற்ற வும் அறியமுடியாத எம்பெருமானது குணங்களைச் சிந்தித்திருத்தல்பற்றியும், அநுமானுடைய அறிவை 'மாமதி' என்றார். உய்ந்தனம் - முன்னிலை படர்க்கை களை உளப்படுத்திய தன்மைப்பன்மைமுற்று; இறந்தகாலம், தெளிவுபற்றியது.

எனை - செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். மாகவன் - தத்திதாந்தராகம்: மறு - சூரியனது புதல்வன்; அதனால் - இவன் வைவஸ்வதமநுவென்றும் சொல்லப்படுவன்.

இதுமுதற் பதினாறு கவிகள் பெரும்பாலும் எல்லாச்சீர்களும் விளச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (சுக)

இராமபிரான் வந்துள்ளதை அநுமான் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தல்.

சஂ. மேலவன்றிருமகற்குரைசெய்தாண்விரைசெய்தார்
வாலியென்றளவிலாவலியினாலுயிர்தெறக்
காலன்வந்தனனிடர்க்கடல்கடந்தனமெனு
வாலமுண்டவனினின்றநாடம்புரிகுவான்.

(இ - ள்.) 'விரை செய் தார் - வாசனை வீசுகின்ற மலர்மாலையையுடைய, வாலி என்ற - வாலி யென்று சிறப்பித்துப் பெயர்சொல்லப்படுகின்ற, அளவு இலா வலியினன் - அளவில்லாத பலத்தையுடைய வாகவீரனது, உயிர்-பிராணனை, தெற-அழித்தற்கு [உடம்பினின்றும் போக்கிக்கொல்லுதற்கு], காலன்-யமன், வந்தனன் - வந்தான்; (இனி காம்), இடர் கடல் - துக்கசாகரத்தை, கடந்தனம் - தாண்டிக் கரையேறினேம்,' எனு-என்று, மேலவன் திருமகற்கு-ஆகாயத்திற் செல்லுகின்றவனன சூரியனது சிறந்த குமாரனுகிய சுக்கிரீவனுக்கு, உரைசெய்தான் - சொல்லினவனும்,—(அநுமான்),—ஆலம் உண்ட வனின் - ஹாலாஹல விஷத்தையுண்டவனன உருத்திரமூர்த்திபோல, நின்று அரு நடம் புரிகுவான் - அரிய நடனத்தைச்செய்து நிற்பானுயினன் [ஆனந்தக்கூத்தாடினன்]; (எ - று.)

அநுமான் 'நீ முன் சங்கித்தவாறு வாலியைச்சேர்ந்த நமது பகைவனல்லன், அவ்வாலியையே வெல்லுமாறு மிக்கபலம்பெற்ற மகாவீரனுவன் இவன்' எனக்கூறி அவனது மனக்கவலையைமாற்றி மகிழச்செய்து, தானும் ஆனந்தக் கூத்தாடின னென்பதாம். அடிக்கடி சுக்கிரீவன் முதலானுரோடு போர்செய்தற்குத் தம்பப்பூமாலையுடி வருதலால் அவனை 'விரைசெய்தார்வாலி' என்றும் தன்னோடு எதிர்ந்தார்வலியிலே பாதி தன்வலியோடு கூடுமாறு அவன் வரம்பெற்றிருப்பதனால் 'அளவிலாவலியினன' என்றும் கூறினன். வாலி பிறந்தபொழுது அவனுக்கு இந்திரன் தன்கழுத்திலிருந்த பொன்மாலையைக் கொடுத்து 'எத்தவீரன் உன்னை எதிர்த்தாலும் எதிர்த்தவனுடைய பலத்திற் பாதி உனக்கு வரும்; அதனால் நீ எவர்க்கும் வெல்லக்கூடாதவனும் விளங்கக் கடவாய்' என்று வாமனித்துச் சென்றனனென்று அறிக. "வாலியென்றுனான் வரம்பிலாற்றலான்" என மேல்வருவதனுல் காண்க. உரைசெய்தான் விரைசெய்தார் - பிராஸம். 'என்றளவிலா' என்றவிடத்துப் பெயரெச்சவீற்று அகரம், தொகுத்தல். (சஂ)

இதுமுதல் மூன்றுகவிகளால், அநுமான் ராமலக்ஷ்மணரது தன்மையை எடுத்துக் கூறுகின்றனர்.

சந. மண்ணுளார்விண்ணுளார்மாறுளார்வேறுளா
ரெண்ணுளாரிய லுளாரிசையுளார்திசையுளார்
கண்ணுளாராயினர்பகையுளார்கழிநெடும்
புண்ணுளாராருயிர்க்கமிழ்த மேபோலுளார்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்

(இ - ன்.) (அவ்வீரர்கள்),—மண் உளார்-இந்நிலவுலகத்திலுள்ளவர்களும், விண் உளார் - சுவர்க்கலோகத்திலுள்ளவர்களும், மாறு உளார் - (இவற்றிற்கு) மாறுகிய பாதாளலோகத்திலுள்ளவர்களும், வேறுஉளார் - மற்றைலோகங்களிலுள்ளவர்களும், திசை உளார் - எட்டுத்திக்கிலும் உள்ளவர்களும் ஆகிய இவர்களது, எண் உளார் - மனத்திலே உள்ளவர்களும், இயல் உளார் - செயலிலே உள்ளவர்களும், இசை உளார் - சொல்லிலே உள்ளவர்களும், கண் உளார் - கண்ணுக உள்ளவர்களும், ஆயினர் - ஆனவர்கள்; பகை உளார்-பகைவர்களையுடையவர்களும், கழி நெடும் புண் உளார்-(அப்பகைவர்களாற் செய்யப்பட்ட) மிகவும் அதிகமான வீரணங்களையுடையவர்களுமாய்த் தம்மை யடைந்தவர்களது, அரு உயிர்க்கு - அருமையான பிராணனுக்கு, அமிழ்தமேபோல் உளார்-(பகைவரையழித்து மரணத்தைப்போக்கி இன்பத்தைத்தருதலால்) தேவாமிருதத்தையே ஒத்திருப்பவர்கள்; (எ - று.)

எம்பெருமான் அந்தர்யாமியாய் எங்குமுள னாதலால், அக்கடவுளினவதாரமான இவர்களை 'மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார் திசையுளாரது எண்ணுளாரியலுளா ரிசையுளார் கண்ணுளார்' என்றார். மண்ணுளார் முதலோரது கண்ணுளார் - "கண்ணுவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றார் ஆழ்வாரும். பகையைப்போக்கி இனிமையைத்தரும் இவர்கட்கு, மரணத்தைப்போக்கி உடலுக்கு வலிமையைத்தரும் அமிழ்தை உவமை கூறினர்: "அச்சமூற்றடைந்தார்க் கமிர்தன்னவன்" என்றார் சித்தாமணியாரும் முதலடியில் பிராணமும், தொடைழாணுங் காண்க. கழி-மிகுதிப்பொருள் குறிப்பதோர் உரிச்சொல் 'அவ்வீரர்கள்' எனத் தோன்றுவெழுவாய் வருவிக்கப்பட்டது; மேலிரண்டு செய்யுட்கும் இங்ஙனமே காண்க. (க)

சஉ. சூழிமால்யானையார்தொழுகழற்றயரதன்
பாழியாலுலகெலாமொருவழிப்படாவா
ழாழியாண்மைந்தர்போரமிவினரழிஞை
ரூழியாலெளிதினிற்கபகதந்துதவுவார்.

(இ - ன்) உலகு எலாம் - எல்லாவுலகங்களும், பாழியால் ஒரு வழிபடர- (தனது) வலிமையால் ஒருகுடைக்கீழ் அமைந்துவாழும்படி, வாழ் - சிறப்புப் பெற்று வாழ்கின்ற, ஆழியான்-ஆஜ்ஞாசக்காமுடையவனும், சூழி மால் யானையார் தொழு கழல் - முகபடாத்தையணிந்த மதயானைச்சேனையையுடையவர்க

னான அரசர்களெல்லாரும் வணங்குகின்ற பாதங்களையுடைய வணுமரசிய, தயரதன் - தசரதச்சக்கரவர்த்தியினது, மைந்தர்-திருக்குமாரர்கள்,—பேர் அறிவினர்-மகாபுத்திமான்கள்; அழகினர் - கட்டழகுடையவர்கள்; நிற்கு-உனக்கு, ஊழியால் - முறைமையாக, எளிதில் - சுலபத்தில், அரசு - அரசாட்சியை, தந்து உதவுவார் - அளித்து உதவிசெய்வார்கள்; (எ - று.)

யானை - மற்றைத் தேர் குதிரை காலாட்சேனைகளுக்கும் உபலக்ஷணம். யானையை எடுத்துக்கூறியது, அது சதுரங்கசேனையுள்ளும் சிறந்த தாதலால்; அதனை, "படைதனக்கியானை வனப்பாகும்" "யானையுடையபடை காண்டல் மிகவினிதே" என்னுஞ் சங்கச்செய்யுள்களாலும உணர்க.இனி, யானைபோன்றவரென்றுமாம். தோள்வலிமையாற் சம்பராசுரன முதலியோரை வென்று தேவலோகத்தையும உட்பட அரசாண்டதனால், 'உலகெலாமொருவழிப்பட்ட' எனறார்; இத்தொடர்க்கு-உலகத்தவரெல்லாரும் ஒற்றுமைகொண்டு வாழ என உரைப்பாருமுளர். ஊழ்-ஊழியென நீறுநின்றது; "அரசனோடொன் மாய்ந்த நல்லூழிச்செல்வம்போல்" என்ற நெய்தற்கலியிற்போல. 'ஊழியால்' எனறது-தமது நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தைத் தமக்குநேர்ந்ததாகப்பாவித்து அதனை உடனே போக்குதல் தமக்குகடமை யெனக்கொளளும மகாகுணமுடையவ ரென்பது தோனறுதற்கு. 'ஊழியார்' எனற பாடத்துக்கு நறகுணமுடையவ ரெனறு பொருள. மூவுலகங்களையுங் காக்கவல்ல மகாவீரரான அவர்க்கு வாலியைகொனறு உனகு அரசளிப்பது அரியபெரிய காரியமனறு, நினைத்தமாத்திரத்தில் கிறைவேற்றக்கூடியதென்பது தோனற 'எளிதில் நிற்கு அரசுதந்து உதவுவார்' எனறார். 'சூழிமால்யானையான' என்றும, 'இனிதுகாக்கரசு' எனறும், 'ஊழிவாழினியுனக்காசுதந்து' என்றும் பாடமோதுவாரு முளர். (உ)

சக. நீதியார்கருணையினெனறியினர்நெறிவயிற்
பேதியாநிலைமையாரெவரினுமபெருமையார்
போதியாதளவிலாவுணர்வினர்புகழினர்
காதிசேய்தருகடற்கடவுள்வெமபடையினர்.

(இ - ள்.) நீதியார் - மனுநீதியுடையவர்கள; இன் கருணை நெறியினர். இனிய கிருபையின தனமையை யுடையவர்கள்; நெறிவயின-சன்மார்க்கத்தினின்றும், பேதியா-மாறுபடாத, நிலைமையார் - உறுதிநிலைமையையுடையவர்கள்; எவரினும் பெருமையார் - எல்லாரைக்காட்டிலும் அதிக மகிமையையுடையவர்கள; போதியாது-(எவராலுங) கறபிக்கப்படாமல் [இயல்பாகவே அமைந்த], அளவு இலா உணர்வினர-வரையறைப்படாத அறிவையுடையவர்கள்; புகழினர் - கீர்த்தியையுடையவரகள; காதி சேய் தரு - காதியென்னும் ராஜரிஷியினது குமாரராகிய விசுவாமித்திர மகாமுனிவரால் அநுக்கிரகிக்கப்பட்ட, கடல் - கடல்போலப் பரந்த, கடவுள் வெம படையினர் - தெய்வத்தன்மையையுடைய கொடிய அஸ்திர சஸ்திரங்களை யுடையவரகள்; (எ - று.)

முன்னிரண்டடிகள்-'கம்மிடத்திற்பழகியும் ஒருகால்வாலிவலியனென்று அவனைச் சேர்வரோ?' என்னுஞ் சங்கையை யொழிக்கவந்தன. பின்னிரண்

டிகன், சுக்கிரீவசத்துருவாகிய வாலியைச் சங்கரிக்கும்வல்லமையினர் அவர்க ளென்பதைக் காட்டும். இயற்கைப்போறிவுடைமை இறைவனது எண்குணங் களுளொன்றுதலால், இவரைக் கடவுளரென்று தெரிவிக்குமாறு, 'போதி யாதனி லிலாவுணர்விஞர்' என்றான். "மறையிலெ டொழிவுகூலையும், தவள் மதிபுனையரனிகர்முனிதரவே" என்றபடி வசிட்டமுனிவரிடதது ஒதியிருக் கவும் இவர்களை இவ்வாறுகூறியது, (கிருஷ்ணன் ஸாந்தீபினியினிடத்திற் பயினறதுபோல) அது ஒருவியாஜமே யாதலாலென்க.

'கருணையின்னெறியினர், னகரமெய்-விரித்தல், செம்மையென்னும் பண் புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்நின்ற மகரமெய் யகரமாகத்திரிந்து 'சேய்' என நின்றது; இப்பணபுப்பெயர் ஆகுபெயராய், செம்மை நிறத்தினையுடைய முருகக்கடவுளை முதலில் உணர்த்தி,பினபு குமாரனென்னும்வடமொழிபோல உவமவாகுபெயராய்ப் பலபராக்கிரமங்களில் அக்கடவுளைப் போனற மைத் தனை உணர்த்திற்று: செய்யவன் எனபது சேய் என விகாரப்பட்ட தென் பா ஒருசாரார். நெறியின, வயின - ஏழனுருபு; ஐந்தனுருபின நீக்கப்பொரு ளில வந்தது. 'காதிசேய்தரு நெடுங்கடவுள் வெம்படையினர்', 'காதியார்சேய் தருங்கடவுள்வெமபடையினர்' எனபன, ஈற்றடியின பாடபேதம்.

ஈற்றடியிறகுமித்த வரலாறு:—ராமலக்ஷ்மணர்கள் இளமைப்பருவமுடை யராயிருக்கும்பொழுது விசுவாமித்திரர் தாமசெய்யப்போகின்ற யாகதைக் கெடுக்கின்ற தாடகை சுபாகு முதலிய ராக்ஷஸர்களை யழித்து வேளலியைக்காத் தறபொருட்டுத் தசரதசகாவர்த்தியின் அநுமதிபெற்று,இவர்களை அழைத்துக் கொண்டுபோய்த் தாடகையைச் சங்காரம்செய்வித்தபொழுது, பற்பல அஸ் திரசஸ்திரங்களை அம்முனிவர் இவர்கட்குகொடுத்தருளினரென அறிக.(சு க)

இதுமுதல் ஏழகவிகளால், இராமபிரானது சிறப்பை அநுமான் எடுத்து விவரிக்கின்றன்.

சச. வேலிகற்கினவுதாடகையினிருதுளவிற்
கோலியக்கொடுமையாள்புதல்வனைக்கொன்றுதன்
காலியற்பொடியினுனெடியகற்படிவமா
மாலிகைக்கரியபேருருவளித்தருளினான்.

(இ - ன்.) (அவர்களுள் மூத்தவன்),—வேல் - சூலாயுதத்தைக் கையிலே ஏந்திய, இகல்-மாறுபாட்டையுடைய, னெவு-கோபித்துவருகின்ற, தாடகை-தாடகையானவள், விளிந்து உருள - இறந்து விழும்படி, வில் கோலி-(தனது) வில்லை வளைத்து, அ கொடுமையாள் புதல்வனை கொன்று-கொடுந்தன்மையை யுடையவளான அவளது புதல்வராகிய சுபாகுவைக்கொன்று, தன்கால் இயல் பொடியினால் - தனது திருவடிகளிற் பொருந்திய தூளியினால், நெடிய கல் படிவம் ஆம் ஆலிகைக்கு - பெரிய கல்லினவடிவமாய்க்கிடந்த அகலிகைக்கு, அரிய பேர் உரு - பெறுதறகரிய சிறந்த நிஜரூபத்தை, அளித்தருளினான் - கொடுத்து அருள்செய்தான; (எ - று.)

"நல்லுறுப்பமையு நம்பியரின் முன்பவன" என மேற்கவியில் வருவதையே இக்கவிக்கும் எழுவா யெனலாம்.

தாடகை - மலைகளிற் சஞ்சரிப்பவள்; இவள் - சுகேது வென்னும் யக்ஷனது மகள்: சுந்த னெனபவனது மனைவி: ஆயிரம்யானைவலிமை கொண்டவள்: கணவன் அகஸ்தியரது கோபத்திற்கு இலக்காய்ச் சாம்பராதை யறிந்த இவள் தனபுத்திராராகிய சுபாகுமாரீசர்களுடனே அம்முனிவரை எதிர்த்துச் சென்றபொழுது, அவர் இட்ட சாபத்தால் மூவரும் ராக்ஷஸராயினர். இராமன தாடகையைக் கொன்றது - விசுவாமித்திரருடனே அவராச்சிரமத்திற்குச் செல்லும வழியிடையில் சுபாகுவைக் கொன்றது அமமுனிவரது யாகத்தைக காக்குந் தருணத்தில்.

ஆலிகை - அஹல்யா வென்னும் வடசொல்லின விகாரம்; அச்சொல்லுக்கு-அழகில்லாமை யில்லாதவள என்று பொருள்; [ஹல்யம்-அழகினமை:] மிக்க அழகுடையவ ளென்று கருத்து: இவள கௌதமமுனிவரது மனைவி; சதாநந்தமுனிவரது தாய். கற்படிவமாம் அகலிகைக்கு அரியபேருநவளித்த வரலாறு:-கௌதமமுனிவரது பத்தினியாகிய அகலிகையினமீது பலகாலாயக் காதல்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள நவளிரவிலே பொழுதுபுலருங் காலதது கோழிகூவுவதுபோலக் கௌதமாசிரமதது அருகேவநதுகூவ, அதுகேட்ட முனிவா 'சநதியாகாலஞ் சமீபித்ததது' எனக கருதிக காலைக்கடன் கழித்தறபொருட்டு நீர்நிலைநோகிச்செல்ல, அப்பொழுது இநதிரன அம்முனிவருருக்கொண்டு அவளோடு கலகக, பினபு அதனை ஞானதிருஷ்டியினலுணர்ந்த அமமுனிவா இவளைக கருங்கல்வடிவமாம்படி சபித்து உடனே அஞ்சிநடுங்கிப் பலவாறு வேண்டிகொண்டதறகு இரங்கி 'இராமபிரானது திருவடிப்பொடிபடுங்காலதது இக்கல்வடிவம நீஙகிச் சுயவுருவம அடைவாய்' என்று அனுகிரகிக்க, அவவாறே கலலுருவாய்கிடந்த அவள இராமபிரான் விசுவாமித்திரரினலே மிதிலைக்குச்செல்லும்போது அவனுடைய திருவடித்துகள் பட்டமாதத்திரதத்திற சாபமநீங்கி இயற்கையுருவமடைந்தன ளெனபதாம்.

முனனிரண்டடிகளால் - இராமபிரானது மிகக வலிமையும், பின்னிரண்டடிகளால் - அவனது கடவுட்டனமையும் விளகுகும். (சசு)

சுரு. நல்லுறுப்பமையுநம்பியரின்முன்பவனயந
தெல்லுறப்பரியபேரழகுடர்க்கடவுடன்
பல்லிறுததவன்வலிக்கமைதியம்பகமெனும்

வலிமைக்கு, அமை : ஏற்ற, நியம்பகம் எனும் வில் - நிரியம்பகமேன்னும் வில்லை, நயந்து - விரும்பி, இறுத்தருளினான் - ஒடித்தருளினான் (எ - று.)

நல்லுறப்பு - சாமுத்திரிகசாஸ்திரத்திற சொல்லப்படுகின்ற சக்கரவர்த்தி குமாராக்களுக்கு ஏறற உத்தமலக்ஷணங்கள். 'சுடர்க்கடவுள்தன் பல்லிறுத்தவன்' எனறது - தன்னையவமதித்த தக்ஷமுனிவரது யாகத்தில் வீரபத்திரரூபியாய்ச்சென்று பூஷாவென்னுஞ சூரியனது பற்களை யுதிர்த்த பரமசிவனென்க. நியம்பகம் - த்ரையம்பகம் என்னும் வடசொல்லின் சிதைவு; நிரியம்பகன் என்பதரகு - மூனறுகண்களையுடையவனென்று பொருளாதலால், நிரியம்பகமெனபது சிவசம்பந்தமான தெனறு பொருள்படும. இச்சிவதனுசு, பரமசிவனுல் ஜநகமஹா ராஜாவுக்குக் கொடுக்கப்பட்டு, - அவனுல் 'இவவில்லையெடுத்து வளைத்தவாக்குச் சீதாபிராட்டியைக் கலியாணஞ்செய்து கொடுப்பனே' என்று கன்யாசுல்கமாக வைக்கபபட்டது. விசுவாமித்திரன் தனது வேள்வி தடையினறி முறறுமாறு தசரதசக்கரவர்த்தியினிடத்திலிருந்து வேண்டிப் பெற்ற இராமபிரானைகொண்டு தானதொடங்கிய வேள்வியை முடித்தபினபு அவனை மிதிலாபுரிக்கு அழைத்துச்சென்று சிவதநுசை வளைக்குமாறுசொல்ல, அவவாறே இராமபிரான செய்து சீதையை மணந்து கொண்டனனென்க. மிதிலை யென்பதறகு - மிதியெனபவனுல் ஏறபடுத்தப்பட்ட நகரமெனபது பொருள ; மிதி எனபது, ஜநகருலததிலவனுனை ஓர அசனுக்குப் பெயர: கடைந்ததனு லுண்டானமைபற்றியது. நமபி - நமக்கு இன்னுனெனனும் பொருளபட வருவதோர உயர்ச்சிச் சொல் ; ஆடவரிற் சிறந்தவன். நம்பியரின முனனவனமுனம' எனறும பாடமுண்டு; 'நல்லுறப்பமையுநங்கையரின மேலவளபொருட், டெல்லுறப்புடைய பேரெழு பரிக்கடவுடன' என்ற பாடமோதுவாரு முளர்.

இச்செய்யுளால் - முதலாவார் மூவரினும மிக்கவன் இராமபிரானெனக் குறிப்பித்தவாருயிறறு. (சுஇ)

சசு. உளைவயப்புரவியாணுதவவுற்றெருசொலா
லளவில்கறபுடையகிறறவைபணிதததருளலால்
வளையுடைப்புணரிசூழ்மகிதலத்திருவெலா
மிளையவற்குதவியிதலையெழுந்தருளினான்.

(இ - ன்.) உளை வயம் புரவியான - பிடரிமயிர்களைக்கொண்ட வெற்றியையுடைய குதிரைகளையுடையனுன தசரதன, உதவ - கொடுத்ததனுல், உற்றகிடைத்த, ஒரு சொலால் - ஒருவார்தததையை [வரத்தை]க் கொண்டு, அளவு இல் கற்பு உடைய சிறு அனவ பணிந்தருளலால் - அளவில்லாத கற்புநிலைமையையுடைய சிறியதாயான கைகேயி கட்டளைபிட்டருளியதனுல், வளை உடை புணரி சூழ் மகிதலம் திரு எலாம இளையவற்கு உதவி - சங்குகளையுடைய கடலாற சூழப்பட்ட பூமியை யாளுகின்ற அரசச்செல்வமுழுவதையும் தம்பியாகிய பரதாழ்வானுககே கொடுத்து, இ தலை எழுந்தருளினான் - இவவிடத்துக்கு வனவாசமாய் வந்தருளினனை; (எ - று.)

'உதவ' என்றது - தசரதர் சம்பரனோடு போர்செய்யும் பொழுது கை கேயிசாரத்தியஞ்செய்து உதவிபுரிய, அதற்குக் கைம்மாறாகக் கொடுத்த இரண்டுவரங்களே உட்கொண்டு. 'ஒருசொலாற் பணித்தருளலரில்' என்றது - அவ்விருவரங்களுள் ஒருவரத்தால் இராமனுக்குக் காடளிக்கவும் மற்றொரு வரத்தாற் பரதனுக்கு நாடளிக்கவுங் கேட்டுக்கொண்டனளாதலால்; ''நாயகனுரையான் வாயால் நானிதுபகர்வன்'' எனக் கூறிக்கொண்டு வந்தனளாதலால், 'சிற்றவை பணித்தருளலால்' என்றார்; ''சிற்றவைபணியால் முடிதுறந்தானே'' என்றார் பெரியாரும். சிற்றவை - சிற்றவ்வை - அவ்வை - ஔவைபென்பதன் போலி. வளை - வலம்புரி இடம்புரியாக வளைந்திருப்பது. புணரி - நதிகளாகிய மனைவிகள் வந்துசோரப்பெறுவது எனக் காரணக்குறி. உற்றொருசொ - தொகுத்தல். இனி, உளைவயப்புரவியான் உதவ - தசரதர் (முதலில் இராச்சியத்தைக்) கொடுக்க, உற்று - (அதனை) அங்கீகரித்து, (உடனே), சிற்றவை ஒருசொலாற் பணித்தருளலால் இளையவற்கு உதவி எழுந்தருளினனென்று பொருளுரைக்கவும் அமையும்.

இக்கவிக்கும்-'நம்பியரின்மூன்பவன்' என்பதே எழுவாய்; ஆகவே, சச - ஆக் கவிமுதல் மூன்றுகவிகள் ஒருதொடரா மெனக் காண்க.

ஆசையின்மையும், மாத்ருபித்ருவாக்யபரிபாலநமாகிய நல்லொழுக்கமு முடையவன் அவ னெனக் கூறியவாறுமாயிற்று. (சசு)

சச. தெவ்விராவ்வகைநெடுஞ்சிகைவிராமழுவினு
னவ்விராமனையுமாவலிதொலைத்தருளினு
னிவ்விராகவன்வெகுண்டெழுபிராவணையனும்
வெவ்விராதனையிராவகைதுடைத்தருளினன்.

(இ - ன்.) இ இராகவன் - இந்த ஸ்ரீராமன், தெவ் இரா வகை - (உலகத்திற்) பகைவர்கள் இராமற் போம்படி, நெடுஞ் சிகை விரா மழுவினன் - மிக்க சுவாலை பொருந்திய மழுவாயுதத்தை யுடையவனுகிய, அ இராமனையும்-அந்தப் பரசுராமனையும் மா வலி தொலைத்த-மிக்கவலிமையைப்போக்கி, அருளினன்-அருள்செய்தான்; (அன்றியும்), வெகுண்டு எழும்-கோபித்து எதிர்த்து வந்த, இரா அனையன் ஆம் - இருளைப்போன்றவனுகிய, வெம் விராதனை - கொடிய விராதனென்னும் அரக்கனை, இரா வகை - (இவ்வுலகத்தில்) வாழ்க்கிராதபடி, துடைத்தருளினன் - அழித்தருளினன்; (எ - று.)

தன்தந்தையாகிய ஜமதக்னிமுனிவரது ஓமதேனுவைக் கவர்ந்த கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமன் கொல்லவே, அக்கார்த்தவீரியார்ச்சுனனது மைந்தர் தன்தந்தையைப் பழிக்குப்பழிவாங்கினராக, பரசுராமன் அக்கார்த்தவீரியன் மக்களைக் கொன்று அந்தமுதல் க்ஷத்திரியர்கள்மீது கறக்கொண்டு இருபத்தொரு முறை பூலோகத்தைப் பிரதக்ஷிணஞ்செய்துவந்து ஆங்காங்குள்ள சகலக்ஷத்திரியர்களையும் ஸம்ஹாரஞ்செய்ததனால் 'தெவ்விராவகை' என்றும், மழுப்படையையே தனக்கு கிரீடமாகக்கொண்டு பரசுராமனெனப் பெயர்பெற்றதனால் 'மழுவினு னவ்விராமனை' என்றும், சீதாகலியாணம்

முடிந்தபின்பு தசரதச்சக்கரவர்த்தி மக்களோடும் மருகிகளோடும் அயோத்திக்கு மீண்டு செல்லுகையில் அப்பரசராமன் எதிரில்வந்து 'முன் ஹரிஹராயுத்தத்திலே இற்றுப்போனவில்லை முறித்த திறமை அறிந்தேன்; இந்த ஸ்ரீமகாவிஷ்ணுவினதுவில்லை வளை, பார்ப்போம்' என்று ஒருதனுசை இராமபிரானது கையிற்கொடுக்க, ஸ்ரீராமன் உடனே அதனைவளைத்துக் கணைதொடுத்து 'இந்த அம்புக்கு இலக்கு என்?' என்றுகேட்க, அதற்கு இலக்காகத் தன்தபோபலம் முழுவதையுங் கொடுத்துப் பார்க்கவராமன் மீண்டு சென்றதனால் 'இராமனையும் மாவலிதாலித்து' என்றும், பரசராமன கூத்திரியவம்சத்தைக் கருவறுத்தவனுயிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம்பூண்டவனு மாதலற்றி ஸ்ரீராமன் அவனுயிரைக் கொல்லாமல் தவதனைக் கவர்ந்தமாத்திரத்தோடு விடுததனால் 'அருளினன்' என்றுங் கூறினன்.

கூத்திரியர்கள் செருக்குக்கொண்டு பூமிபாரமாயிருந்ததனல்அப்பொறையையொழித்தற்காகத் திருமாலின் ஆறுமவதாரமெனக் கூறப்படுகின்ற பரசராமனிடத்து ஆவேசித்திருந்த திருமாலினது சக்தியை, தொழில்முற்றிய தனல் திருமாலின் எழாவதான அம்சாவதாரமாகிய தசரதராமன தன்னிடத்துக் கவர்ந்துகொண்டன னென்று அறிக.

இராவகை என்பது, மழுவினுல் என்பதில் தொக்குநின்ற உடையவ னெனனுங் குறிப்புவினையோடு முடியும். வீரா மழு என்பதை வினைத்தொகையாகவாயினும், வீராம் மழு எனப்பிரித்து ஈற்றுயிர்மெய்சென்றுநின்ற செய்யுமென்வாய்பாட்டுத தெரிநிலைப் பெயரெச்சத் தொடராகவாயினுங் கொள்க. இராமனையும், உம்மை - உயர்வுசிறப்பு: தேகபலம் முதலியவற்றைக் குறியாமல் தபோபலத்தையே குறித்தற்கு, 'மாவலி' எனப்பட்டது. ராகவன என்பதற்கு ரகுமகாராஜனது வம்சத்தில் அவதரித்தவ னென்று பொருள். அவவரசன், தசரதனுக்கு மூதாதை; எல்லாத்தேசத்தையும் வென்று 'விஸ்வஜித்' என்னும் வேள்வியைச் செய்து சகலசம்பத்தையுந் தானஞ்செய்துவிட்டு வறுங்கையனுயிருக்கையில், கௌத்ஸன் எனனும் பிராமணன தனது ஆசாரியராகிய வரதந்து மகாமுனிவர்களுக் குருதக்ஷிணை கொடுப்பதற்காக வந்து யாசிக்க, குபேரனிடத்திலிருந்து வேண்டும் பொருளை அழைப்பித்து அந்தகௌத்ஸனுக்குக் கொடுத்தான: இந்த ரகுமகாராஜன் இவ்வாறு மிக்க வீரமுங் கொடையு முளளவனுதலால், இராமபிரானை அவன் வம்சத்துப்பெயராற் குறித்தார்; இது - தத்திதாந்த நாமம்.

வீராதனென்னும் வடசொல்லுக்கு - மிகுதியாய் அபராதஞ்செய்பவ னென்பொருள்; இவன்முனனே தம்புருவென்னும் பெயருள்ளகந்தருவனுயிருந்து பின்புருபோன துசாபத்தால் ராக்ஷஸனுகிவனத்தில் திரிந்துவந்தவன். இவனைக் கீழ் ஆரணியகாண்டத்தில் ''தங்கு திண் கரிய காளிமை தழைந்து தவழ,'' ''கங்கு பூவிருகின்ற கலிகாலமெனவே'' வந்தானென்றதற்கு எற்ப, இங்கு 'இராமனையுமை வெவ்வீராதன' என்றார். ராமலக்ஷ்மணர்சீதையுடனே தண்டகாரணியத்திற் செல்லுகையில், இவரைகண்வந்து ஜாகையைத் தூக்கிக்கொண்டுசெல்லக் கண்டு ராமலக்ஷ்மணர்கள் எதிர்க்க, அவன் அவரைவிட்டு

இவர்களிருவரைத் தூக்கிக்கொண்டு செல்ல, ராகவவீரர்கள் அவனைத் தோள்களே வெட்டிக் கொன்றுவிட்டு, அவன் தனது பிறப்பையுணர்த்தி வேண்டிக் கொண்டபடி அவனைப் பள்ளம்வெட்டிப் புதைத்துச் சென்றதனால், 'இராவகைஇடைத்து' என்றும்; அவன் இவர்களைத் தோள்களில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனபொழுதும் ஸ்ரீராமன் காலால் உதைத்துப் பள்ளத்திலே தள்ளியபொழுதும் இவர்கள்கிருவடிகள் பட்டபாக்கியத்தால் அவன் தீவினையெல்லாந் தீர்ந்து பூர்வஜந்மத்து நிஜரூபத்தைப் பெற்றுத் தன்உலகஞ் சென்று இன்பமடைந்ததனால், 'அடைத்தருளினன்' என்றுங் கூறினர். இரா-ராத்திரி; இருளுக்கு ஆகுபெயர். 'இராவணையனும்விராதனை யிராவகை இடைத்தருளினன்' என்பதனை, "இராவண னிராவண னிராவண மறுத்தோர்" என்னும் அழகர்கலம்பகத்தோடு ஒப்பிடுக. இனி, விராதன் ஐயிராவகை எனப் பிரித்து, ஐயிரா என்பதனை அயிரா என்பதன் போலியாக்கொண்டு, விராதன் (ராக்ஷஸஜந்மத்தில் இருந்து) அன்பப்படாதபடி என்றலுமாம். இத்தொடர் - ப்ராஸ மென்னுஞ் சொல்லணியாம்.

இனி, இக்கவிமுதல் இராமபிரானது அவ்டங்கிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுங் குணத்தைக் கூறமுகத்தால், அநுமான், நமது பகைவனுகிய வாலியையொழித்து நமதுகருத்தை முற்றுவிப்பான் இவனென்பதைத் தெரிவிக்கின்றான். (எ)

சஅ. கரன்முதற்கருணையற்றவர்கடற்படையொடுஞ்
சிரமுகச்சிலைகுனித்ததவுவான்றிசையுளார்
பரமுகப்பகைதுமித்தருளுவான்பரமரா
மரன்முதற்றலைவருக்கதிசயத்திறலினன்.

(இ - ன்.) (இன்னும் இந்த இராமன்), கரன் முதல் கருணை அற்றவர் கடல் படையொடும் - கரன்முதலாகிய தயையில்லாத ராக்ஷஸர்களுடைய சமுத்திரம் போன்ற சேனைகளும், சிரம் - (அரக்கன்முதலியோரது) தலைகளும், உக-துணிபட்டு விழும்படி, சிலைகுனித்து - வில்லை வளைத்து(ப் போர் செய்து), உதவுவான் - (தேவர்கட்கு) உதவிசெய்தவன்; (அன்றியும்), திசை உளார் பரமுகம் பகை - எல்லாத்திக்குக்களிலும் உள்ளவர்களுடைய அலக்ஷ்யஞ்செய்கின்ற பகைவர்களை, துமித்து அருளுவான் - அழித்தருளுபவன்; பரமர் ஆம் அரன் முதல் தலைவருக்கு - (மற்றை யாவரினும்) மேம்பட்டவர்களாகிய உருத்திரன் முதலிய தலைவர்களான தேவர்களுக்கும், அதிசயம்-மேம்பட்டிருக்கின்ற, திறலினன் - வல்லமையுடையவன்; (எ - று.)

கரன் என்பதற்கு - கடுமையுள்ளவ னென்று பொருள். இவன், பூர்விக ராக்ஷஸரிரேஷ்டனான சுமாலியின் மகனும், ராவணன்தாயான கேகசியின் தங்கையும், ராவணனது தந்தையான விச்ரவமுனிவரையே கொழுகுகை அடைந்தவனுமான கும்பீநசியின் குமாரன்; இராவணனுக்குத் தம்பிமுறையில் நிற்பவன்; தண்டகாரணியத்திலே ஜநஸ்தானத்தில் தன்தங்கையாகிய சூர்ப்பணகைக்குப் பாதுகாவலாக இராவணனு லேற்படுத்தப்பட்ட பதினாயிரம்

ராக்ஷஸஸைனாதிபதிகளிற் தலைவர் மூவரிற் பிரதானமானவன். 'கரன் முதற் கருணையற்றவர்' என்றது - தூஷணன், திரிசிரஸ் என்ற இருவரையுங் குறிக்கும். சேனைக்குப் பரப்பிலும், ஆகாரத்திலும், அணிபணிபாக வருதலாலும், கடல் உவமை திசையுளார்-இப்பாலதென்றுமாம், பரமும்-பாங்முக மென்னும் வடமொழியின் விகாரம்; அசட்டை. அரன் - ஹரன்; ஸகலலோகங்களையும் ஸம்ஹரிப்பவன். தலைவருக்கு - நான்காம்உருபு. உறழ்-பொருவாகிய எல்லிப்பொருளில் வந்தது. இரண்டாமடியில் 'சிரமுகச்சிலை குனித்தடையன்மற்றமரர்தம்' என்று பாடமோதுவாரு முளர்.

இச்செய்யுளுக்கும் அடுத்த செய்யுளுக்கும் - கீழ்க்கவியிலுள்ள 'இவ் வீரகவன்' என்பதே எழுவாய்.

கரன்முதற் கருணையற்றவர் கடம்படையும் சீரழம் உதவித்த கதை :— இராமலக்ஷ்மணர்களின் அழகைக் கண்டு வியந்து காதல்கொண்டு மிக அழகிய மங்கைப்பருவம் பூண்டு வந்து தன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி பிரார்த்தித்த இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகையினது மூக்கையும் காதையும் இளையபெருமாள் அறுத்துவிட்டதைக் கேட்டுப் பெருங்கோபங் கொண்டு, கரன் தூஷணன் திரிசிரஸ் என்னும் இராக்கதத்தலைவர்களும் பதினாலாயிரம் ரதாதிபதிகளும் சேனைகளோடு வந்து எதிர்க்க, ஸ்ரீராமபிரான் இளையபெருமாளைப் பிராட்டிக்குக்காவலாக வைத்துவிட்டுத் தனியாய்நின்று வில்லைவளைத்துப் பலகணைகள் தொடுத்து அளவிடற்கரிய அரக்கர்சேனைகளையும் சேனாபதிகளையும் தலைவர்கள் மூவரையுங் கொன்றுவிட்டனனென்பதாம்.

சசு. ஆயமானகர்தாழாழியாணையலாற்
காயமானுயிரன்யாவதேனகாவலா
நீயமானோர்கியாரினிநதமாரீசனுர்
மாயமானுயிரனுமாயமானுயிரனுன்.

(இ - ள்.) *காவலா* - மகாராசனே!—(இந்த ஸ்ரீராமன்), *காயமான் ஆயிரனுன்* - (மநுஷ்ய) சரீரமுடையவனாய் வந்த, *ஆயம் மால் நாகர் தாழ் ஆழியாணை அலால்* - கூட்டமாகிய பெருமைபொருந்திய தேவர்களெல்லாரும் வணங்கப்பெற்ற திருப்பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளுகின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவே யல்லாமல், *யாவனே* - வேறு யாராவன்? நீ—, *அமான்* - அப்பெரியவனை, *கேர்ந்து* - வந்து சினேகிப்பாயாக; (அவன்), *ஆர் மாயம் மான் ஆயிரனுன்* - கிறைந்த வஞ்சனையையுடைய மானினது வடிவம் பூண்டு வந்தவனை, *நிருதன் மாரீசன்* - மாரீசனென்னும் ராக்ஷஸனுக்கு, *மா* - பெரியவனாகிய, *ஆயிரனுன்* - யமனைனவன்; (எ - று.)—*ஆல்* - அசை.

இனி, *ஆய* எனப் பிரித்து, பொருந்திய வென்றுமாம். *ஆயமான்* எனக் கொண்டு - அந்த ஸ்ரீராமனென்றும் பொருள்கொள்ளலாம்: இப்பொருளில், *ஆ அமான்* எனப் பிரிக்க: *ஆ* - அகரச்சுட்டு நீண்டது; நீண்டவீடத்து யகரந் தோன்றியது; *அமான்*-அம்மான் என்பதன் தொகுத்தல்,! *'ஆவனே'* என்கிற படத்திற்கு - ஸ்ரீராமன் ஸ்ரீமச்சார்ங்கிஷ்ணுஸ்வரூபியே; அல்லாவிட்டால், *காயம் மான் ஆயிரனுன் ஆவனே* - தனது வடிவத்தில் பார்வதிதேவியைப் பொருந்தப்

பெற்ற பரமசிவனே யாவன் என்று பொருள்; மான் - மான்பார்வையை யுடைய உமாதேவிக்கு உவமவாகுபெயர். மானஎன்பதை மானுஷ்யமென்னும் வடமொழியின் திரிபாகக்கொண்டு, சாதாரணமான மனுஷ்யசரீரம் உடையவனவனே? ஆகான என்றுங் கொள்ளலாம். 'ஒர்தி' எனனும் பாடத்துக்கு - காவலா எனபதனை, காவல ஆ(க) எனகொண்டு-நீ அவனை உனக்குக் காக்குங் கிணியாக அறிவாயெனறு உரைக்க. 'ஒர்தியால் நோில்' என்னும் பாடத்துக்கு - அவனைச் சென்று சேர்ந்தால யான சொல்லுங் குணங்களேயெல்லாம் நீயே தெரிந்துகொளவா யென்க. அப்பாடதிறகே - நோ இல் எனப் பிரித்து, ஒப்பில்லாத மாரீச னென்றுமாம். 'நேரும்' எனனும் பாடத்துக்கு - எதிர்ப்பட்ட மாரீசனெனக. ஈற்றிலுள்ள 'மாயமானுயிஞன' எனபதை-மாய மான் ஆயினன் எனப்பிரித்து, அவவடிககு - 'மாயையாலுவன, மாய-அழியும்படி (அவனைக்கொன்று), மான - (அப்பொழுது ராவணனால் அபகரிக்கப் பட்ட) மானபோன்ற சீதையை, ஆயினன் - தேடுவானுஞன எனறும் உரை கூறலாம்; அவவுரைக்கு, ஆயினன் எனபதை - ஆய் எனனும் பகுதியடியாப் பிறந்த இறந்தகால வினைமுறறாக கொளக; காசிக்கலம்பகததில் ''மகாமாயினன்'' எனபதற்கு-மகாதனதை [மீனை] மாயத்தல எனைப பொருளகொணடு, மாயினை எனபதை - மாய் எனபதன இறந்தகாலமுறறாகக் கொள்வதுபோல. ஈற்றடி - யமகம்.

ஆயம் - மகளிாகூட்டம்; இங்குக் கூட்டமெனனும் மாத்திரமாய் நினறது. மால் - பெருமையுணர்த்தும் உரிசசொல். நாகா எனனும் வடசொல்லுக்கு - தக்கமில்லாதவெனறு பொருள; ந + அகம: ந-எதிாமறைப்பொருளுணர்த்துவது, கம - சுகம: அஃதி அலலாதது, அகம அகம. ஆழி - ஆழ்ந்திருப்பது; இ - வினைமுதறபொருள்விகுதி. (பிரளயகாலத்தில) - உலகங்களே அழிப்பதெனறும, வட்டவடிவமான தெனறும பொருளகொளளலாம ஆழியான்-சக்காதானுமாம. எ - தேறறம. அலால - எதிாமறைக குறிப்பு வினையெச்சம். காயமான, மான - வடமொழியில உடைமைபொருளுணாதலும் பெயர் விகுதி; வடமொழியிற சில சொறகளுககு 'மாந்' எனபதும, சில சொறகளுககு மாந் எனபது 'வாந எனறு திரிந்தும பெயராவிகுதியாக வரும: அகாவீறறுச் சொல்லுக்குப் பலவாந் குணவாக எனபவறறிறபோல 'காயவான' என வாந் என்பதே வாற்பாலதாயினும, அது எதிகையினபம நோக்கி இங்கே மாந் எனறே நினறதெனக கொளக: யாவன - யாவினு, எவனுமாகாெனன எதிர்மறை குறித்தது. ஏ - அசை. காவலன - கா வலன: காதலில் வல்லவன: அனறி, காவல் அன: காதலில்தொழிலுடையவன. அமான - அம்மான எனபதன தொகுத்தல; மான - மஹாந எனனும வடமொழியின விகாரம். மான் நோ்தி - ஐயுருபு உயாதிணையிடதததை தொகைத. ஆல - அசை. கிருதன - கைருதன எனபதன விகாரம: கிருருதி எனனுந் திகபாலகனது வம்சததில் தோனறியவனெனறு பொருள ; கிருதமாரீசன - உயாதிணைப்பெயர் ஈறு கெட்டது. ஆர் மாயம் - வினைதொகை; பணபுதொகையாய், அருமையாய், அருமையாகிய மாயமெனறுமாம. மாயம் - மாயாரூபதபவம். யமான் - யம னெனனும் வடசொல்லின நீட்டல் விகாரம்.

ஈற்றடியிற்குறித்த வரலாறு:—தாடகையின் குமாரனான மாரீசன் முன்னமே விசுவாமித்திரமுனிவரது வேள்வியை யழிக்குமாறு சென்ற இராமபிரானால் வரியவயாஸ்திரஞ் செலுத்தலிக் கடலில் வீழ்த்தப்பட்டதனால் அப்பிரானது வலிமையையறிந்திருந்தும், சூர்ப்பணகை வார்த்தையாற் சீதைமேற் காதல்கொண்ட இராவணன் துணையாக வேண்டிடவே, பொன்மயமான மான் வேடம் பூண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர் ஜானகியுடனே வசித்திருக்கும் ஆச்சிரமத்தச்சென்று விளையாட, அதனைச் சீதை கண்டு பிடித்துத்தரவேண்டுமென்று இராமனைப் பிரார்த்திக்க, அவ்விராமபிரானும் பினதொடர்ந்து வெகுதூரஞ் சென்றும் அப்படாமையால் இது மாயையென்று அறிந்து ஓரம்பெய்து வதைத்தன னென்பதாம். (சுக)

ரூ. உக்கவுருதமுமுடற்பொறைதுறந்துயர்பதம்
புகவுருதமுமுமக்குரைசெயும்புரையவோ
திக்கவுருதாருெடுருதிரள்காஞ்சினவுதோ
ளக்கவுருதனுங்கினைந்தமர்தாழ்சவரிபோல்.

(இ - ள்.) திகசு - எல்லாதிக்குக்களிலுமுள்ள உயிர்களெல்லாம், அவம் தர - அழிவடையுமபடி, நெடு - நீண்ட, திரள - திரண்ட, கரம-கைகளையும், னெவு தோள்-கோபிதத்துப் பாய்னெற தோளகளையுமுடைய, அ கவந்தனும் - அந்தக் கபந்தனெனனும் ராக்ஷஸனும், உக்க - (இவாகள கையாக) இறந்து போன, அந்தமும்-முடிவும்,—(மேலும் அவன), அமரா நினைந்துதாழ்-தேவாக ளெல்லாம மதித்து வணங்குகின்ற, சவரிபோல் - சபரியெனபவளைப்போல, உடல் பொறை துறந்து - (பூமிகசுப்) பாரமான தனசரீரத்தை விட்டு, உயர் பதம் புக்க - சிறந்த [பரம] பதவியடைந்த, அந்தமும - அழகும்,—மேகசு - எமபோல்வாகசு, உரைசெயும் புரையவோ - சொல்லத்தக்க தன்மையை யுடையனவோ? [அல்ல என்றபடி]; (எ - று.)

தனனிடத்துப் பக்திகொண்ட சவரியோடு, தனனை விழுங்கவேணு மெனறு முயனற கபந்தனோடு வாசியற இருவாகசும உயாபதமளித்த மஹா னிவனென, இராமபிரானது தனமையைக கூறியவாறு.

தநுவெனனும் யக்ஷனது மகன, ஸ்தூலசிரஸ் எனனும் முனிவனது சாபத்தால் அரகனுய், பிரமனருளால் தீாக்காயுசுபெற்று, தேவேந்திரனோடு எதிாத்து அவனது வச்சிராயுதத்தாறபுடைபட்டு, தனது தலை வயிறறில் அழுந்தியதனால் கபந்தனென்று பெயாபெற்ருன். கபந்தமென்பதற்கு-தலையில்லாத உடம்பெனறு பொருள. இவன் தண்டகாரணியத்தில் ஓர் பகசத்தில் இருந்து தனது நீண்ட கைகளிாணடையும எட்டியமட்டிற பாப்பிரி அழாவி அகப்பட்ட ஜீவாசிகளேயெல்லாம் வாரி வாய்ப்பெய்து விழுங்கிகொண்டிருக்க, அங்குச் சென்று அவன தோளகளினிடையே அகப்படடுக்கொண்ட ராமலக்ஷ்மணர்கள அவன தோளகளை வாளகளாலவெட்டிவிட, அவர்களது திருக்கைகள் நீண்டிமாத்திரத்தில் அவன முனனையசாபமும் முற்பிறப்பின தீவினையுங் நீர்ந்து ராக்ஷஸ சரீரத்தை விட்டுத தேவசரீரமபெற்றுப் பெருமானைப் பலவாறு

பிரார்த்தித்து நற்கதி பெற்றனனென்பதும்; ஞானமூர்த்தியும் மிக்கவளர்ந்த சபரியென்பவள் இராமனுக்காக இனியபழங்களைச் சுவை பார்த்துப்பார்த்து வைத்திருந்து சமர்ப்பிக்க, இராமபிரானும் அவற்றை அமுதினும்மினிதாகக் கொண்டு அமுதுசெய்து பினபு அவளுக்கு மோக்ஷங்கொடுத்தருளினனென்பதும்—ஆரணியகாண்டத்துக் கதைகள்.

முதலெழுத்து ஒழிந்த இரண்டுமுதலிய சில எழுத்துக்கள் ஒன்றின்று பொருள் வேறுபட்டுவந்தது, தீரிபு எனனுஞ் சொல்லணியாம்.

"நேமிசேர்தடங்கையினனே நினைப்பிலாவலிகெஞ்சுடைப், பூமிபாரங்கள்" என்றபடி, பகவந்நாம ஸ்மரணமில்லாதவரது சரீரம் விசுவம்பரையான பூமியாற் பொறுக்கவொண்ணாத பாரமாகுதலால், 'உடற்பொறை' எனப்பட்டது; இதனை "ஈட்டமிவறி யிசைவேண்டாவாடவா, தோற்றம் நிலக்குப் பொறை," "கண்ணேட்டத்தளவு நிலகிய லஃதில, ருண்மை நிலக்குப் பொறை" என்றாற்போலக் கொள்க. அன்றியும், "பிறப்பறுகலுற்றோர்க்குடமபுமமினைக்" எனறபடி முதிர்பெறுபவர்க்கு அதற்குக் கருவியாயிருந்த உடம்பும் அநாவசியமாகத் தோனறுமாதலாலும், 'உடற்பொறை' என்றல் தகும். 'உடற்பகை துறந்து' எனறும் பாடமுண்டு. அந்தம் எனபது முடிவை யுணர்த்தும்போது, வடமொழி; அழகைக குறிக்கும்போது, தென்மொழி. உயர் பதம் - உயர்ந்த உயர்கிற உயருமபதம் என முக்காலமும்பற்றிவந்த வினைத்தொகை. (இ0)

[அநுமான் இராமலக்ஷ்மணரது மகிமையைக் கொண்டாடுதல்]

இக. முனிவருமபிறருமேமன்முடிவரும்பகலெலா
மினியர்வருதுறுவலென்றியறவபுரிகுவார்
வினையெனுஞ்சிறைதுறந்துயர்பதமவிரவினு
ளெனையரென்றுரைசெய்கேனிரவிதன்கிறுவனே.

(இ - ள்.) இரவிதன சிறுவனே சூரியனது குமாரனே!—முனிவரும் - முனிவர்களும, பிறரும-மற்றையவர்களும், மேல முடிவு அரும பகல் எலாம் - முறகாலந்தொடங்கி எல்லையில்லாத பலகாளாக, இனியர்வந்து உறுவர் என்று - இவரிராமலக்ஷ்மணர்கள் (தம்பக்கல்) வந்து சேரவேணடுமென று, இயல் தவம் புரிகுவர் - (தம்தமது) சகதிகருத் தகுதியான தவததைச்செய்து, (பின்பு இவர்களது தரிசனத்தைப்பெறறு), வினை எனும் சிறை துறந்து ஊழ்வினைப் பந்தமாகிய காவலை நீஙகி, உயர் பதம் - சிறநத மோக்ஷபதவியை, விரவினர் - சேர்ந்தார்கள; (அப்படிப்பட்ட ஸ்ரீராமலக்ஷ்மணர்களை), எனையர் எனறு-எப் படிப்பட்டலரெனறு, உரைசெயகேன - சொல்லிமுடிப்பேன? (எ - று.)—இப்படிப்பட்டவரென்று உரைக்க எனனால் இயலாதென்றபடி.

இருடியா முதலியோரா இவரதுவருகையைகுறித்தது தவஞ்செய்கின்ற தனால், இவர தவத்தினிகரக சிஷ்டபரிபாலனஞ் செயயத திருவவதரித்த முதற்கடவுளே போலுமென்று கூறினனெனக. மோக்ஷத்தையடைவதற்கு தலையினை நீயினையென்றும் இரண்டும் தடையாய்நிறறலால், 'வினையெனுஞ்

ஸ்ரீ' எனப்பொதுப்படக்கூறினர்; "இருளசே ரிருவினையுஞ் சேரா" என்ற திருவள்ளுவரும்.

மூனிவர்- முனிவர் என்பதன திரிபு; அவர் - சரபங்கர் முதலியோர்; மூன்னூயலரை முனிவரென்றது ஓர் சொல்லிழுக்காடு என்றலு முண்டு. பிறர் - சபரி முதலியோர். இயல் தவம்-இலக்கணமமைந்த தவமுமாம். சிறை-காவல் வீடு. செய்கேன, கரவிடைகிலே - எதிர்காலமுணர்த்திற்று. புரிகுவார்- கு - சாரியை. எனையரென்று உரைசெய்கேன் - (அவர்களால் நற்கதியடைந்த முனிவர்களே) எத்தனபேரென்று சொல்வே னெனறமாம். 'முடிவறும்' என்று பிரதிபேதம் (இக)

[அநுமான் இவர்கள் உன்னுடனேசிக்க விநம்புகின்றன ரென்றல்]

இஉ. மாயையான் மதியிலாநிருதர்கோன்மனைவியைத்
தீயகானெறியினுய்த்தனனவட்டேடுவார்
நீயையாதவமிழைததுடைமையாலெடுமனக
தூயவாவுடைமையாலுறவினைததுணிகுவார்.

(இ - ள்.) ஐயா - தலைவனே! மதி இலா நிருதர் கோன் - புத்தியில்லாத ராக்ஷஸராஜனுடைய ராவணன, மனைவியை - (இந்த ஸ்ரீராமனது) தருபதத்தினியாகிய சீதையை, மாயையால் - வஞ்சனையினலே, தீய கான் நெறியின் உய்த்தனன - கொடிய காட்டுவழியிலே எடுத்துகொண்டுபோனன; அவள் தேடுவார - அவளைத தேடுபவர்களாய் வந்த ராமலக்ஷ்மணர்கள், நீ தவம இழைத்துடைமையால் - நீ நல்வினை செய்திருதலாலும், நெடு மனம தூயை ஆடைமையால் - (நீ) பெரிய [சிறந்த] மனததிற் பரிசுதியுடையவனுயிருதலாலும், உறவினை - (உனனுடு) சினேகிதலை, துணிகுவார் - நிச்சயிப்பவரானுகள்; (எ - று.)

இதனால், ராமலக்ஷ்மணர்கள அங்குவருவதறகு அநுமான காரணங்கூறினனென்க. நல்வினையும் மனத்தூய்மையும் உடையவரிடத்தனறி இப்படிப்பட்ட மகானகள் சென்று சேர்ந்து கட்புகுகொள்ள நினையாராதலால், இங்ஙனங்கூறியது. இராமன அவலிமையை யோராமையாலும், பிறன்மனைவியைக் கள்ளத்தாற் கவர்ந்துசெனறதனுலும, இராவணனை 'மதியிலாநிருதர்கோன்' என்றன். காணுக்குத் தீமையாவது - கொடியராக்ஷஸர் முதலியோர முனிவராதியோரை வருத்துதறகு இடமாயிருதலை. தீயகான-நெருப்பையுடைய காடு என்றுமாம்.

அவன் + தேடுவார் = அவட்டேடுவார்; உயர்திணையிரண்டாம்வேற்றுமைத் தொகையாதலின, இயல்பாகவேண்டியவிடத்து விகாரப்பட்டது; "இயல்பின் விகாரம்" தூணை-பண்படியாப்பிறந்த முன்னிலையொருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர். துணிகுவார, கு சாரியை. 'மதியிலாணிருதர்கோன்,' 'தீய நன்னகரினுய்த்தன னவட்டேடுவான்,' 'தவமவினைததுடைமையால்,' 'தூய்மையாவுடைமையால்' எனபனபாடபேதம் 'நீயதாநெறியினுய்த்தனன்' எனறு பாடமோதி, களவினுற கொண்டுபோனனென்று உரைப்பாரு முனர். (இஉ)

[இராமலக்ஷ்மணரோடு சினேகஞ்செய்யவரும்படி அநுமான் சுக்கிரீவனை யழைத்தல்.]

நிகூ. தந்திருந்தனரருட்டகைநெடும்பகைஞரு
மிந்திரன்சிறுவனுக்கிறுதியின்றிசைதரும்
புந்தியின்பெருமையாய்போதரென்றுரைசெய்தான்
மந்திரங்கெழுமு நான்மரபுணர்ந்துதவுவான்.

(இ - ன்.) 'புந்தியின் பெருமையாய் - புத்தியிலுல் மகிமையை புடைய வனே!—(உவர்கள்), அருன் - கருணையை, தந்து இருந்தனர் - (நம்மி_த்தில்) வைத்திருக்கிறார்கள்; (ஆதலால்), தகை நெடும் பகைஞன் ஆம் இந்திரன் சிறு வனுக்கு - வலிமை மிக்க பகைவனுடைய இந்திரகுமாரனை வாலிக்கு, இறுதி - மரணம், இன்ற-இப்பொழுதே, இசைதரும்-நேரிடும்; 'ஆகையால்), போதர்- (அவர்களோடு நட்புக்கொள்ளுதற்குப்) புறப்பட்டு வருவாயாக,' என்று—, கெழுமு நூல் மரபு உணர்ந்து - விளங்குகின்ற (அரசர்க்குரிய) நீதிசாஸ்திரம் முதலியவற்றினது முறைமையை அறிந்து. மந்திரம் உதவுவான் - (சுக்கிரீவ னுக்குக் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற) ஆலோசனை சொல்பவனுடைய அநுமான், உரைசெய்தான் - சொன்னான்; (எ - று.)

புந்தி - புத்தி யென்பதன் மெலித்தல். போதர் என்பது வா என்னும் பொருளதாதலை "போதர்கண்டா யிங்கேபோதர்கண்டாய்", "போதரே யென்று சொல்லி" என்ற பெரியார்பாசுரங்களிலுங் காண்க போதரு என்று பிரிப்பாருமுனர். மந்த்ரம் - வடசொல். 'போதியென்.றுரைசெய்தான்' என்றும் பாடமுண்டு. (நிகூ)

[சுக்கிரீவன் இராமபிரானை யணுகுதல்.]

நிச. அண்ணவா முரையெலா மறிவினு லுணர்குவா
னுன்னினே யுடையவெற் கரியதெப் பொருளரோ
பொன்னினே பொருவுவாய் போதெனப் போதுவான்
றன்னினே யனையவன் சரணம்வந் தணுகினான்.

(இ - ன்.) அன்ன ஆம் உரை எலாம்-அத்தன்மையனவாகிய (அநுமான் சொன்ன) வார்த்தைகளையெல்லாம், அறிவினுல்-(தன அ) சூக்ஷமபுத்தியால், உணர்குவான்-அறிபவனுகி, (சுக்கிரீவன் அநுமானைநோக்கி), 'பொன்னினையே பொருவுவாய் - பொன்போன்றவனே! உன்னினையே உடைய - (மகாபுத்தி மானுன) உன்னையே ஆனையாகவுடைய, எற்கு-எனக்கு, எப்பொருள்-எந்தக் காரியம், அரியது - அருமையானது? [எல்லாம் எளியதே]; போது - வருவா யாக,' என - என்றுசொல்லி, போதுவான் - புறப்பட்டவனுய்,—தன்னினையே அனையவன் - (தனக்கு வேறு எவரும் ஒப்பில்லாமையால்) தன்னைத்தானே ஒப்பவனுகிய ஸ்ரீராமனது, சரணம் - திருவடிகளை, வந்து அணுகினான்-வந்து சேர்ந்தான்; (எ - று.)

அநுமான் கூறியதற்கு இசைந்து அவனையும் உடனழைத்துக்கொண்டு இராமபிரானுள்ள இடத்தைச் சுக்கிரீவ னணுகின னென்பதாம். பொரியோரை யணைந்தா னெனனும் பொருளில் அவர்திருவடியையணுகினு னென்றல், மரபு. பொன - அநுமானுடைய தேககாந்திக்கும், யாவரும் மதிக்குஞ் சிறப்புகமும, கிடைத்தற்கு அருமைக்கும் உவமை. இனி, 'பொன்னையே பொருவுவாய்' எனபதற்கு - (தேவேந்திரனுக்குக் குருவும் மந்திரியுமாகிய) பிருகஸபதிபகவானையே யொத்திருப்பவனே எனப் பொருள் கொள்ளுதலும் தகும். 'தன்னையே யனையவன்' என்றது. இயைபின்மையணி. "'தன்னெப்பாரில்லப்பன" என்றார் பெரியாரும்; "தனக்குவமையில்லாதான" என்றது, திருக்குறள. எற்கு-எனக்கு: அகரச்சாரியை தொக்கது. உணர்குவான, கு - சாரியை. அரோ - ஈற்றசை. தன்னையே அனையவன் என ஒப்பில்லாமை கூறியதனால், உயர்வில்லாமை அருத்தாபத்தியாற் பெறப்படும். சரணம - எழுந்தருளியிருக்கின்ற இடமாகவுமாம். மூன்றுமடி - முற்றுமோனை. 'போதுவாயென்றனன்' என்பதும் பாடம். (நிச)

வேறு.

[சுக்கிரீவன் இராமபிரானைக் காணுதல்.]

நிநி. கண்டன னெண்ப மன்னோ கதிரவன் சிறுவன் காமர்க்
குண்டலந் துறந்த கோல வதனமுங் குளிர்க்குங் கண்ணும்
புண்டரி கங்கள் பூத்துப் புயறழீஇப் பொலிந்த திங்கண்
மண்டல முதயஞ் செய்த மரகதக் கிரிய னனை.

(இ - ள்.) கதிரவன் சிறுவன் - சூரியகுமாரனை சுக்கிரீவன்,—புண்டரீகங்கள் பூத்து - தாமரைமலர்கள் மலரப்பெற்று, புயல் தழீஇ - காளமேகந் தழுவப்பெற்று, பொலிந்த - விளங்குகின்ற, திங்கள் மண்டலம் - சந்திரமண்டலம், உதயம் செய்த - உதிக்கப்பெற்ற, மரகதம் கிரி - மரகதமலையை, அனைனை-போன்றவனை ஸ்ரீராமபிரானது, காமர் குண்டலம் துறந்தகோலம் வதனமும் - அழகிய குண்டலங்களை யிழந்த காணுதற்கு இனிய திருமுகத்தையும், குளிர்க்கும் கண்ணும் - குளிர்ச்சியான திருக்கண்களையும், கண்டனன - பார்த்தான்; (எ று,)—என்ப, மன், ஓ - அசைகள்.

கதிரவன் - ஒளியையுடையவன். புண்டரிகங்கள் - திருக்கை திருவடி முதலிய அவயவங்களுக்கும், புயல்-கரிய திருக்குழலுக்கும், திங்கள்மண்டலம்-திருமுகமண்டலத்துக்கும், மரகதக்கிரி-நீலமேனிக்கும் உவமை. பின்னிரண்டடி-இல்பொருளுவமை. தழுவியெனனும் இறந்தகால வினையெச்சம், தழீஇ என விகாரப்பட்டு அளபெடுத்தது: சொல்லிசையளபெடை. குண்டலந்துறந்தவதன மென்றது, பித்ருவாக்கியபரிபாலனஞ் செய்தற்பொருட்டு வனவாசம் புறப்பட்டபொழுது சகலசம்பத்துகளோடு அரசர்கோலத்துக்குரிய திருவாபரணம் முதலியவற்றையும் துறந்து மரவுரியுடுத்துத் தவவேடம் பூண்டதனால் கிரியனனை வதனமும் கண்ணும் கண்டனன் - இரண்டு செயப்படு பொருள் வந்த வினை; இது வடமொழியில் த்விகர்ம கர்த்தரி ப்ரயோக மெனப்படும்: முதலே ஆரும்வேற்றுமையாகத் திரித்தல், தமிழ்மரபு. இனி,

இச்செய்யுளுக்கு - கண்ணையும் வதனத்தையும் தன்னிடத்திலுடைமையாற் புண்டரீகங்கள் பூத்துப்போலித்த திங்கள்மண்டலம், உதயஞ்செய்த மரகதக் கிரியனுனைக் கதிரவன் சிறுவன் கண்டனனெனக் கூட்டியுரைப்பினுமாம்: குண்டலம், வதனம், புண்டரிகம், மண்டலம், உதயம்; மரகதம், கிரி,- வட சொற்கள். அனுன் - அன்னன்: தொகுத்தல். குளிர்க்கும், கு - சாரியை; பிறவினைப்பெயரெச்ச மென்றலுமாம்.

இதுமுதற் பதினேந்துகவிகள்-இப்படலத்தின் பதினேராங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (இஎ)

[சுக்கிரீவன் இராமலக்ஷ்மணரைச் சிறப்பாகக் கருதுதல்.]

நிசு. நோக்கினுனெடிதுநின்றுனுடிவருங்கமலத்தண்ண
லாக்கியவுலகமெல்லாமன்றுதொட்டின்றுகாறும்
பாக்கியம்புரிந்தவெல்லாங்குவிக்திருபடிவமாகி
மேக்குயர்தடந்தோள்பெற்றுவீரராய்விளைந்தவென்பான்.

(இ - ன்.) நோக்கினுன் - (அவ்வாறு சுக்கிரீவன்) பார்த்துக்கொண்டு, நெடிது நின்றுன் - வெகுநேரம் அசிசயித்துநின்றவனுய், 'கொடிவு அருங்கம லத்து அண்ணல் - சொல்லுதற்கரிய (சிறப்பையுடைய) தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன், ஆக்கிய - படைத்த, உலகம் எல்லாம் - உலகத்தி லுள்ள ஸகல ஜீவராசிகளும், அன்றுதொட்டு - அத்தப் படைப்புக்காலம் தொடங்கி, இன்று காறும் - இன்றைவரையிலும், புரிந்த - செய்தவையான, பாக்கியம் எல்லாம் - நல்வினைகளெல்லாம், குவிந்து - திரண்டு, இருபடிவம் ஆகி - இரண்டு திருவுருவமாய், மேக்கு உயர் தட தோள் பெற்று - மேலாக உயர்ந்த பெரிய தோள்களையுடையவையாய், வீரர் ஆய் வினைந்த - இவ்வீரர்க ளாய்த் தோன்றின', என்பான் - என்று எண்ணுபவனுனன்; (எ - று.)

"உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே" என்பவாதலால், இங்கு 'உலகம்' என்பது-உயர்ந்தோரை யுணர்த்திற்று; இவ்விருவரும் இங்கே திருவவதரித் தது இவ்வுலகத்துப்பிறந்துள்ள பெரியோர்களின் புண்ணியப்பயனே யென் பான், 'உலகமெல்லாம்புரிந்த பாக்கியம் இருபடிவமாகி வீரராய்விளைந்த' என் றுன். சாதுஜனங்களை நலியுஞ் கொடியோர்களையெல்லாம் நிரஸித்தலால், இவர்கள் அச்சாதுஜனங்களின் புண்ணியப்பயனுவரென்க. கொடிவு-தொழிற் பெயர். கொடிவு அரு - அழிவில்லாத என்றுமாம். கமலம், பாக்யம் - வட சொற்கள். மேக்கு ; மேலென்னும் பொருளதாதலை, "வெக்கடுக்கால் பொரா மேக்குகோக்கிய" எனப் பாலகாண்டத்திலுங் காண்க. புரிந்த - பலவின்பாற் பெயர். விளைந்த - முற்று. 'புரிந்ததெல்லாம்,' 'பெற்ற,' 'விளைந்ததென் பான்' என்பன - பிரதிபேதம். (இசு)

[தீருமாலே இவ்வாறு திருவவதரித்துள்ளானெனச் சுக்கிரீவன் நிச்சயித்தல்.]

நிள. தேறினனமர்க்கெல்லாந்தேவராந்தேவன்றேறே
மாறியிப்பிறப்பில்வந்தார்மானுடராகிமன்னே
வாறுகொள்சடிலத்தானுமயனுமென்றிவர்களாதி
வேறுளகுழுவையெல்லாமானுடம்வென்றதென்றே.

(இ - ன்.) 'அம்மார்க்கு எல்லாம் - எல்லாத்தேவர்கட்கும், தேவர் ஆம்-கட வுளாகிய, தேவர் அன்றே - முதற்கடவுளே [ஸ்ரீமகாவிஷ்ணுதானே], மாறி - (தமது சொரூபம்) மாறி, இ பிறப்பில்-இந்த அவதாரத்தில், மானுடர் ஆகி - மனிதசரீரமுடையவராய், வந்தார்-திருவவதரித்தார்; (ஆதலால்),—ஆறுகொள் சடிலத்தானும் - கங்காநதியைக் கொண்ட சடையையுடையவனை உருத்திர னும், அயனும் - பிரமனும், என்ற இவர்கள் ஆதி - என்ற இவர்கள் முதலிய, வேறு உள குழுவை எல்லாம் - வெவ்வேறுகவுள்ள தெய்வப்பிறப்பு முதலிய வர்றை யெல்லாம், மானுடம் - இம்மனிதப்பிறப்பு, வென்றது - ஜயித்து மேம்பட்டது,' என்றே தேறினன் - என்று நிச்சயித்தான்; (எ - று.)

இராமலக்ஷ்மணர் நல்லிலக்கணங்களுன் ஒன்றனுல் குறைவின்றியிருந்த மையால், சுக்ரீவன், இவர்களைப் புருஷோத்தமனது அவதாரமென்றே கரு தினன். பின்னிரண்டடிகளே முன்னிரண்டடிகள் சமர்த்தித்து நிற்பது - தோடர்நீலச் சேம்புட்குறியணி. தேவர்கட்குள் முதல்வனான திருமாலே மானிடமாகத் திருவவதரித்தருளிட்டதனால், இம்மானிடப்பிறப்புத் தெய்வப் பிறப்பினுஞ் சிறந்த தெனக் கூறினனென்பதாம். 'அமரர்கெல்லாம் தேவ ராந்தேவர்'—"முதலாவார் மூவரே யம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்" என்றார் பெரியாரும். மூன்பு மீனம், கூர்மம், வராகம், நாரசிங்கம் முதலிய திருவவதாரங்கள் செய்திருத்தலால், 'இப்பிறப்பில் மானுடராகி வந்தார்" என்றான். கபிலமுனிவரது கோபத்தீக்கு இலக்காகிச் சாம்பராய் நற்கதியிழந்த தன்மூதாதையரான சகரபுத்திரர்களே 'உய்விக்கவேண்டித்தவஞ் செய்த பகிரதசக்காவர்த்தியின் வேண்டுகோளினுற் கங்காநதியைச் சடை முடியி லேற்றமையால், சிவபிரான், 'ஆறுகொள்சடிலத்தான்' எனப்பட் டான். மாநுஷர், ஜடிலம், அஜன் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. குழு - கூட்டம். அன்றே - தேற்றம், தேவர் வந்தார் - உயர்வுப்பன்மை; வட நூலார் - 'பூஜாயாம் பஹ்வசனம்' என்பர். மன்னே - ஈற்றசை, என்றிவர் - தொகுத்தல். இவர்கள், கள் - விகுதிமேல் விகுதி. ஆகி - வடசொல். (இஎ)

[சுக்கிரீவன் ஸ்ரீராமனை யணுக, அப்பிரான் இவனை உபசரித்தல்.]

நிஅ எனநினைந்தினையவெண்ணியிவர்கின்றகாதலோதக்
கனைகடற்கரைநின்றிறைக்கண்ணிணைகளிப்பநோக்கி
யனகனைக்குறுகினனவ்வண்ணலுமருந்திகிரப்
புனைமலர்த்தடக்கைகூப்பிப்போந்தினிதிருந்தியென்றான்.

(இ - ன்.) (சுக்கிரீவன்),—என நினைந்து - என்று நினைத்து, இனைய எண்ணி - இத்தன்மையவற்றை ஆலோசித்து,— இவர்கின்ற - மேன்மேற் பெருகுகின்ற, காதல் - ஆசையாகிய, ஓதம் கனை கடல்நின்று - வெள்ளத்தை யுடைய ஒலிக்கின்ற கடலினின்றும், கரைஏறு - கரையேறுமல் [ஆசைக்கு எல்லையில்லாதவனுய்], கண் இணை களிப்ப நோக்கி - (தனது) இரண்டு கண் களும் பெருமகிழ்ச்சியடையும்படி தரிசித்து,— அனகனை - குற்றமற்றவனான ஸ்ரீராமனை, குறுகினன் - வந்து சமீபித்தான்; அ அண்ணலும் - அப்பெரி

யோனும்,—(அவனை நோக்கி), அருத்தி கூர-அன்பு மிக; புனை மலர் தட கை நீட்டி - அழகிய செந்தாமரைமலர்போன்ற பெரிய (தனது) திருக்கையை நீட்டி 'போந்து - இங்குவந்து, இனிது - இனிமையாக, இருத்தி-இருப்பாய்,' என்றான் - என்று உபசரித்தான்; (எ - று.)

மிக்க அன்போடு சுக்கிரீவன் இராமபிரானையணுக, இராமபிரான் தானும் மிக்க கருணையுடன் அவனை வரவேற்று உபசரித்தனனென்பதாம். எறு-ஈறு கெட்ட எதிர்மறைவினையெச்சம். ந + அகன் = அநகன்: குறைவில்லாதவன்; வடசொல். கைநீட்டுதல் - உபசாரக்குறிப்பு. 'கனைகடற் கரைகினேறை' என்றும், 'கனைகடற்றிரையுளாழ்ந்து' எனறும் பாடமோதுவாரு முளர். (இஅ)

[இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் உண்டான சினேகத்தின் வருணனை.]

நிகூ. தவாவலியரக்கரென்னுந்தகாவிருட்பகையைத்தள்ளிக்
குவாலறநிறுத்தற்கேற்றகாலத்தின்கூட்டமொத்தா
ரவாமுதலறுத்தசிந்தையனகனுமரியின்வேந்து
மூவாவுறவந்துகூடுமுடுபதியிரவியொத்தார்.

(இ - ன்.) அவாமுதல் அறுத்த சிந்தை அனகனும்-ஆசையை (இயற்கையாகவே)வேரோடுபோக்கிய மனத்தையுடைய நிர்த்தோஷனை ஸ்ரீராமனும், அரியினை வேந்தும்-வாநரராஜனை சுக்கிரீவனும்,—(ஒருவரோடொருவர் கூடியவர்களாய்)—தவா வலி அரகர் எனனும் தகா இருள் பகையை தனனி அழியாதபலத்தையுடைய ராக்ஷசரென்கிற நெருங்கியறறபகைவர்களாகிய இருட்டையொழித்து, குவால் அறம் நிறுத்தற்கு - கூட்டமாகத்திரண்ட தருமத்தை நிலைநிறுத்துதற்கு, ஏறற-தக்கதாய்வந்த, காலத்தின - காலத்தினை அது, கூட்டம் - சேர்க்கையை, ஒத்தார - ஒத்திருந்தார்கள், (இனனும அவர்களை)' உவா உற - அமாவாசியை வர, வந்து கூடும் - (ஒருவரோடு ஒருவர்) வந்து சேர்கின்ற, உடுபதி இரவி - சந்திரசூரியர்களையும், ஒத்தார்—;(எ - று)

"மெய்த்திருப்பதம் மேவெனறபோதினும், இத் திருத்தூறக்தேகென்ற போதினும், சிதறிரத்தினலர்ந்த செந்தாமரை, யொதிருக்கு முகத்தன" என்றபடி ஒழிதறற்கரிய மண்ணுசை பொன்னுசைகளை வெறுத்ததனால், இராமபிரானை 'அவாமுதலறுத்தசிந்தை யனகன்' என்றார். இராமசுக்கிரீவர்களுடைய சிநேகம் - இராவணுதி ராக்ஷஸ ஸம்ஹாரத்துக்கு மூலகாரணமாய முடிதலால் 'தவாவலி.....காலத்தின கூட்டமொத்தார்' என்றும், இச்சினேகம் இராம சந்திரனுக்கும் சூரியபுத்திரனுக்கும் உண்டான தாதலால், 'உவாவுற வந்துகூடு முடுபதி யிரவியொத்தார்' என்றும் கூறினன. உவமையணி. முதலடியில் உருவகவணி அங்கமாய் நின்றது. அறங்கள் மிகப்பலவகைப்படுதலால், 'குவாலறம்' எனறார். அவா முதல் அறுத்த - காமம்முதலிய குறறங்களைப் போக்கின என்றுமாம்.

சூரியகிரணங்களின சமபந்தத்தால் நிறைவுற்று அமிருதமயமாயிருக்கின்ற சந்திரனைக் கிருஷ்ணபக்ஷத்திலே அக்கினிமுதலான தேவதைகள் நிலம் ஒவ

வேறு கலையாகப் 'பானஞ்செய்கின்றார்கள். இப்படி சதுர்த்தசிவரையில் தேவர்கள் பானஞ்செய்ததுபோக மிச்சப்பட்ட இரண்டுகலைகளுள் ஒன்றை அமாவாசையில் பிதிருக்கள் பானஞ்செய்கின்றார்கள்; இங்ஙனம் ஒருகலை மாத்திரமாய் மிச்சப்பட்ட சந்திரனைச் சூரியன் மீண்டும் பதினைந்து திதிகளில் தினம் ஒருகலையாகத் தன் கிரணத்தால் வளர்த்து கிறைக்கின்றன். தேவர்களாற் பானஞ்செய்யப்பெற்ற இரண்டு கலைகள் மிச்சப்பட்டு நின்றவனை சந்திரன் சூரியகிரணங்களில் மறைந்துவசிக்கின்ற நாளே, அமாவாசை. உடுபதி - நக்ஷத்திரங்களுக்குத்தலைவன். இதுவும், 'ரவி' என்பதும் வடசொற்கள்.

[இதுவும் அது.]

கூ0. கூட்டமொத்திருந்தவீரர்குறித்தபொருட்குமுன்னு
ளீட்டியதவமுபபின்னர்முயற்சியுமியைந்ததொத்தார்
மீட்டுமவாளரக்கரென்னுநீவினைவேரின்வாங்கக்
கேட்டுணர்கல்வியோடுஞானமுங்கிடைத்ததொத்தார்.

(இ - ன்.) கூட்டம் ஒத்து இருந்த-நட்பாய்க் கூடியிருந்த, வீரர்-வீரர்கள் [ராமசுக்ரீவர்களை தாம்],—குறித்தது ஓர் பொருட்கு-சீதைத்தைத்தேடும் காரியம் நிறைவேற்றுதற்கு, முன் நான் ஈட்டிய தவமும்-முறபிறப்பிற்செய்த நல்வினையும், பின்னர்-பின்பு [இப்பிறப்பிற்] செய்கின்ற, முயற்சியும்-பிரயத்தனமும், இயைந்தது-(ஒன்றோடொன்று) சேர்ந்து அமைந்ததை, ஒத்தார்—; மீட்டும்-மேலும்,—வாள் அரக்கர் என்னும் தீவினை - வாளையோலக் கொடிய ராக்ஷஸர்களாகிய பாவத்தை, வேரின வாங்க - வேரோடு அழிக்க, கேட்டு உணர்-(நல்லாசிரியர்பக்கல்) உபதேசம்பெற்று அறிந்த, கல்வியோடு - கல்வியறிவும், ஞானமும் - தத்துவஞானமும், கிடைத்தது-கூடியதையும், ஒத்தார்—; (எ - று.)

கல்வியும் ஞானமும் கூடிய வழியே தீவினையொழிதல்போலவும், ஊழ்வினையும முயற்சியுங்கூடியவழியே ஒருகார்யம் முற்றுதல்போலவும், இவ்விருவரும் நண்பராய்க் கூடியதனாலேயே ராக்ஷஸஸம்ஹாரம் நிறைவேறுமென்பதாம். உவமையணி. 'கூட்டமுற்றிருந்த,' 'முன்னரீட்டிய' என்று சிலபிரதிகள்.

[சுக்கிரீவன் ராமனை நோக்கிக்கூறிய முகமன்.]

கூக. ஆயதோரவதியின்கணருக்கன்சேயரசைநோக்கித்
தீவினைதியேகாற்றுரென்னின்யார்செல்வநின்னை
நாயகமுலகுக்கெல்லாமென்னலாகலமிக்கோயை
பேயினன்விதியேகல்கின்மேவலாகாதென்னென்றான்.

(இ - ன.) ஆயது ஓர் அவதியின்கண்-(இவ்வாறு) கூடியிருந்த அச்சமயத்தில்,—தருக்கன சேய் - சூரியகுமாரன் [சுக்கிரீவன்], —அரசை நோக்கி - ஸ்ரீராமனைப்பார்த்து, 'செல்வ-எல்லாச்செல்வமுமுடையவனே! உலகுக்குஎல்லாம் நாயகம் என்னல் ஆம் சகலலோகங்களுக்குந்தலைமையானபொருளென்று சொல்லுதற்கேற்ற, நலம் மிக்கோயை - நல்ல திருக்கலியாண குணங்கள் மிக்குள்ளவனுக்கிய, நின்னை - உன்னை, மேயினன் - (யான்வந்து) சேரப்பெற்றேன்;

(ஆதலால்), என்னின் - என்னைகாட்டிலும், தீவினை தீம் கோற்றூர்-கொடிய கருமம் ஒழியும்படி தவஞ்செய்தவர், யார் - யாவருளர் ? வித்தியே நல்கின் - ஊழ்வினையே கொண்டுவந்து கூட்டி முடித்தால், மேவல் ஆகாது என்-சித்தியாதது யாது !' என்றனன்—; (எ - று.)

இப்பிறபபில் நல்வினைசெய்யாதிருந்தாலும் ஊழ்வினையிருந்தால் எது தான் சித்தியா தென்றபடி. அருக்கன - அர்க்கன். இடையிரண்டடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை 'வித்தியேநல்கின மேவலாகாதென்' என்ற பொதுப் பொருள் சமாத்திதமிற்பது - வேற்றுப்பொருள்வைப்பணி; இதனை, வட மொழியில் அர்த்தாந்தரந்யாஸாலங்கார மெனபர். ஆயது - பொருந்தியது. அவனி - எல்லை. மிக்கோய் - வினையாலணையும் பெயரிடத்து யகரவீற்றயல் ஆ ஒ வாயிறறு. யேயினன் - அனவிருதி, தனமைகரு வந்தது; புதியன புகுதல். அவதி, அர்க்கன, வித்தி - வடசொற்கள். 'ஆயதோரமைதியினகண்; எனறும், 'நாயகனுலகுக்கு' எனறும பாடங் காணப்படுகின்றனன. (கக)

[இராமன் தாங்கள் அங்குவந்த வரலாற்றைக் கூறுதல்.]

கூஉ. மையறுதவததினவந்தசவரியிம்மலையினீவந்
தெய்திநியிருந்ததன்மையியற்பினள்யாங்களுற்ற
கையறுதுயரநின்னுறகடப்பதுகருதிவந்தீத
மையறிறமீருமென்னவரிக்குலததரசன்சொல்வான்.

(இ - ள.) (அதுகேட்டு ஸ்ரீராமன சுகரிவனை நோக்கி),—'ஐய-சிறந்த வனே!—மை அற தவததின வந்த சவரி-குறறமில்லாத தவமுடையவளாய் வந்த சபரியானவள், இ மலையில் - இந்த ருசியமூகபருவததில், நீ வந்து எய்தினை இருந்த தன்மை - நீ வந்து பொருந்தியிருந்த வரலாறறை, இயம்பினன் - சொனனனள்; யாஙகன் உற்ற கை அற துயரம் - நாகன் அடைந்த சிறுமையில்லாத [மிகப்பெரிய] தனபம, நினனுல் கடப்பது-உன்னுல் நீக்குவதை, கருதி - எண்ணி, வந்தோம் - இங்கு வந்தோம்; நின் தீரும் - (அததனபம்) உன்னுல் தீரக்கடவதாம்,' எனன - எனறுசொல்ல,—அரி குலத்து அரசன் - குரங்குக்கூட்டத்திக்குத் தலைவனுகிய சுகரிவன, சொல்வான் - சொல்பவனுனன்; (எ - று.)

கவந்தன்சொற்படி நின்னைச் சினேகிக்குமாறு யான் நாடிவரும்போது சபரியானவள் நீ உள்ள !இடத்தைத் தெரிவிக்க, எனது துயரதைதப்போக் கிக்கொள்ளுமாறு இப்போது உன்னிடத்து வந்தே னென்று இராமபிரான் கூறின னென்பதாம். தவத்திறகுக் குறறம் - காமம் வெகுளி மயக்கம். எய்தினை - முன்னிலைத் தெரிநிலைமுற்றெச்சம். கையறுதல் - தனையில்லாமையும், செயலில்லாமையுமாகவுமாம். வந்தேம் - படர்க்கையை உளப்படுத்திய தன்மைப்பன்மை; லக்ஷ்மணனையும் உட்படுத்தியதனுல். துயரம் சீதையைப் பிரிந்தது. 'தவத்தினனை' எனறு பிரதிபேத முண்டு. (கஉ)

[சுக்கீரீவன் இராமபிரானைச் சரணம்புகுதல்.]

சுக. முரணுடைத்தடக்கையோச்சிமுன்னவன்பின்வந்தேனை
யிருணிலைப்புறத்தின்காறுமுலகெங்குந்தொடர்விக்குன்
றரணுடைத்தாகியுய்ந்தேனருப்பிறுத்தகலாற்றேன்
சரணுனைப்புகுந்தேனென்னைத்தாங்குதறருமமென்றான்.

(இ - ன்.) 'முன்னவன - (எனக்கு) முன்பிறந்தவ[தமைய]னாகிய வாலி, பின் வந்தேனை - பின்பிறந்தவனான என்னை, முரண் உடை தட கை ஒச்சி- வலிமையையுடைய பெரிய (தனது) கையை (அடித்தற்காக) உயரத்தூக்கிக் கொண்டே, இருள் நிலை புறத்தின் காறும் - இருட்டுக்கு இருப்பிடமாகிய இவ்வுலகத்துக்கு அப்புறம் வரையிலும், உலகு எங்கும் - சகலலோகங்களிலும், தொடர - பின்தொடர்ந்து துரத்த, இ குன்று உடைத்தி அரண் ஆகி உய்ந்தேன் - இம்மலையையே உரியபாதுகாவலாகக்கொண்டு பிழைத்தவனும், ஆர் உயிர் அறக்கல் ஆற்றேன் - அரிய பிராணனை வீடமாட்டாமல் வைத்துக் கொண்டிருப்பவனுமாகிய நான, உனை சரண் புகுந்தேன - (இப்பொழுது) உன்னையே அடைக்கலமாக அடைந்தேன்; என்னை தாங்குதல் - என்னைக் காப்பாற்றுதல், தருமம் - தருமமாகும்,' என்றான-என்றுசொன்னான; (எ-று.)

மதங்கமுனிவர்சாபத்தால் ருசியமூகபருவதத்தில் வாலி வந்தால் தலை வெடித்து இறப்பானதலால், 'இகுகுனறு அரணுடைத்தாகி யுய்ந்தேன' என்றான்; அது, மேல் விவரமாகக் கூறப்படும். சரண் = ரக்ஷணம். 'இருணிலைப் புறம்' என்றது, சக்காவாள பருவதத்துக்கு அப்பால் அந்தகாரமொன்று சூழ்ந்திருப்பதனால், 'முரண்வலி' எனற பாடத்திகு-ஒருபொருட்பன்மொழியாம. அரண் உடைத்தி ஆகி - உடைதது அரண் ஆகி எனமாறுக உடைத்தி - உரியது என்றவாறு. இங்ஙனங்கொளளாது, 'அரணுடைத்தாகியுய்ந்தேன்' என்பதற்கு-அரணுடையதாகி யுய்ந்தேனெனறு உரைகுமிடத்தத் திணைவழுவாத வணக்க. இனி, ஆகி-ஆக என எச்சததிரிபாகவியும உரைகலாம். ()

[இராமபிரான் சுக்கீரீவனுக்கு அபயமளித்தல்]

சுச. என்றவக்குரக்குவேந்தையிராமனுமிரங்கிநோக்கி
யுன்றனக்குரியவின்பதுன்பங்களுள்ளமுண்ணுள்
சென்றனபோகமேல்வருதுறுவனதீர்ப்பலன்ன
நின்றனவெனக்குநிற்குநேரெனமொழியுநேரா.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர.

(இ - ன்.) எனற-எனறு சென்ன, அ குரங்குவேந்தை குரங்குகளுகு அரசனாகிய அச்சுக்கிரீவனை, இராமனும்-, இரங்கி நோக்கி-மனமிரங்கிக் கடாக்ஷித்து, 'உன்தனக்குரிய - உனகு உரிமையான, இன்ப துன்பங்கள் சுகதுக்கங்களுன், முன்னாள் சென்றன உளள போக-இதற்குமுன கழிந்துள்ளன தவிர, மேல் வந்தி உறுவன-இனி வந்தி நேருந்துன்பங்களே யெல்லாம், தீர்ப்பல் - நீக்குவேன்: அன்ன நின்றன - இனிவருவனவாகிய அச்சுகதுக்கங்கள்,

எனக்கும் நிற்கும் நேர் - எனக்கும் உனக்கும் சமானமாகும்', எனல் - என்று, மொழியும் நேரா-வாக்குதத்தமுஞ் செய்து. (எ று.)—இச்செய்யுளில் 'நேரா, என்னும் வினையெச்சம், மேற்கவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்.

உனக்கு வரும் இன்பத்தையும் துன்பத்தையும் எனக்கு வந்தனவாகவே பாவித்துத் தன்பம் வராமற் காப்பே னென்று அபயமளித்தன னென்க. 'தீர்த்தலின்றி' என்னும் பாடத்துக்கு - மேல்வருவனவுந் தீராமல் நின்றவை யுமாகிய இன்பதுன்பங்க ளென்க குரக்குவேந்து - வேற்றுமையில் மென் றொடர்மொழி தன்இன வன்றொட ராயிற்று. நேர்வன என்பது-விகுதி முதலியவை கெட்டு, நேர்என நின்றது; ''கொள்வாருங் கள்வரு நேர்'' என்னுமிடத்துப்போல மொழியும் நேரா, உம்மை மேல்வரும் கவியை நோக்குதலால், எதிரதழுவிய எச்சம். நேர்தல்-ஈதல். நேரா-உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். தீர்ப்பல், அல் - தன்மைபொருமைவினைமுற்றுவிகுதி. (சுச)

[இதுவும் அது.]

சுடு. மற்றினியுரைப்பதென்னேவானிடைமண்ணினுண்ணெச்
செற்றவரென்னேச்செற்றூர்தீபரேயெனினுமுன்னே
டுற்றவரெனக்குமுற்றருன்னிலேயெனதென்காதற்
சுற்றமுன்சுற்றநீயென்னின்னுயிர்த்துணைவனென்றான்.

(இ - ன்.) 'இனி உரைப்பது மற்று என்னே - இனிமேல் (யான் பல வாகச்) சொல்லவேண்டுவது வேறு யாது உளது? வானிடை-சுவர்க்கலோகத்திலும், மண்ணில் இப்பூலோகத்திலும், உன்னை செற்றவர் - உன்னை வருத்தியவர், என்னை செற்றூர்-என்னை வருத்தியவராவர்; தீயரே எனினும்-அவ்வடர்களேயாஞலும், உன்னேடு உற்றவர் - உன்னுடன் சேர்ந்தவர்கள், எனக்கும் உற்றூர் - எனக்கும் நண்பராவர், உன் னிலை-உனது பந்துஜனமெல்லாம், எனது-எனது பந்துஜனமாம்; என் காதல் சுற்றம் - எனது அன்புள்ள பந்துவர்க்கமெல்லாம், உன் சுற்றம்-உனது பந்துவர்க்கமாம்; நீ—, என் இன உயிர்த்துணைவன் - எனது இனிய பிராணஸ்நேகிதனுவாய்', என்றான்—; (எ-று.)

நிலை-மரத்தைக் நிலைபோலத் தழுவிநிற்கும் உறவினத்திற்கு உவமவாகுபெயர். எனது - அகரச்சாரியையும் துவ்விகுதியும் பெற்றுவந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. சுற்றம் - சுற்றிநிற்பது; அம் - வினைமுதற்பொருள் விகுதி. துணைவன் - சகோதரனுவா யென்றுமாம். 'நிலை,' 'சுற்றம்' என்பன - சாதியொருமை. உயிர்த் துணைவன்-உவமத் தொகை. தீயரே. ஏ-தேற்றம். எனினும், உம்-இழிவுசிறப்பு. 'மண்ணினின்னே' என்றும் பாடம். (சுடி)

[அதுகேட்டு வானாரும் வானவரும் மகிழ்தல்.]

சுசு. ஆர்த்ததுகுரக்குச்சேனையசஞ்னெறிவண்மேனி
போர்த்தனபொடித்தீரோமப்புளகங்கள்பூவின்மாரி
தூர்த்தனர்விண்ணேர்மேகஞ்சொரிந்தனவனகன்சொன்ன
வார்த்தையெக்குலத்துளோர்க்குமறையினுமெய்பென்றான்.

(இ - ன்.) 'அனீகன் - நிர்மலனாகிய ஸ்ரீராமபிரான், சொன்ன - அருளிச் செய்த, வார்த்தை - திருவாக்கானது எ குலத்து உளோர்க்கும் - எந்த [எல்லாக்] குலத்தில் தோன்றியவர்களுக்கும், மறையினும் - வேதவாக்கைக் காட்டிலும், மெய் உண்மையானதாம்,' என்று உன்ன - என்று எண்ணி, — குரங்கு சேனை - வானரக்கூட்டம், ஆர்த்ததது - ஆரவாரித்தது; அஞ்சனை சிறுவன் - அஞ்சநா தேவிகுமாரனான அநுமானது, மேனி - சரீரத்தை, பொடித்த ரோமம் புளகங் கள் - அரும்பிய மயிர்ச்சிலிர்ப்புக்கள், போர்த்தன - மறைத்தன; விண்ணோர் - தேவர்கள், பூவின் மாரி தூர்த்தனர் - புஷ்பவர்ஷத்தால் (பூமியை) நிறைத்தார் கள்; மேகம் - மேகங்கள், சொரிந்தன - நீர்த்துளி பொழிந்தன; (எ - று.)

'வேதவாக்கைப்பார்க்கிலும் விசேஷமான ஸ்ரீராமனது சத்தியவாக்குப் பிறந்தபடி பால் இனி நமக்கு என்ன குறையிருக்கின்றது? வாலிவதம் தவறாமல் விரைவிலே நடந்தேறிவிடும்' என்று வானரரும், 'ராமசுக்கிரீவாதுல்சேர்க்கை ராவணனி ராக்ஷஸ ஸம்ஹாரத்துக்கு மூலமாம்' என்று எண்ணி வானவரும் ஒரு சேரக் களிப்படைந்தன ரென்க. தான் இராமபிரானிடத்துத் தூதுபோய் வந்தது பலித்துவிட்டதனால், அநுமான் மேனிபொடித்தன னென்க. நற்காலத் துக்குச்சகுனமாக மேகங்கள் மழைபொழிந்தன. 'மேகஞ்சொரிந்தன கனகமண் ணல்' என்கிற பாடத்துக்கு . அண்ணல் (ஸ்ரீராமனது) வார்த்தையை மெய் யென்ற எண்ணி, மேகங்கள் பொன்மழை மொழிந்தன வென்க. அஞ்சநா, ரோமம், புளகம், மேகம், வார்த்தை, குலம் - வடசொற்கள். (சுக)

[சுக்கிரீவனது இருப்பிடத்துக்கு எழுந்தருளவேண்டுமென்று அநுமான் விண்ணப்பிக்க, இராமன் உடன்படுதல்.]

சுஎ. ஆண்டெழுந்தடியிற்றாழ்ந்தவஞ்சனைசிங்கம்வாழி
தூண்டிரடடந்தோண்மைந்தனேதாழுநீயும்வாழி
யீண்டுநுங்கோயிலெய்தியினிதினிருக்கைகாண
வேண்டுநும்மருளென்னென்றான்வீரனும்விழுமிதென்றான்.

(இ - ன்.) ஆண்டு - அப்பொழுது, எழுந்து - எழுந்திருந்து, அடியில் - (ஸ்ரீராமனது) திருவடிகளில், தாழ்ந்த - விழுந்து தண்டனமஸ்கரித்த, அஞ் சனை சிங்கம் - அஞ்சநாதேவியினது வயிற்றில் தோன்றிய சிங்கம்போன்ற மகா வீரனாகிய அநுமான், 'தூண் திரள் - தூண்போலத் திரண்டிருக்கின்ற, தட தோள் - பெரிய தோள்களையுடைய, மைந்த - சகலபராக்கிரமசாலியே! தாழ வனும் நீயும் - உனது தோழனாகிய சுக்கிரீவனும் நீயும், வாழி வாழி - பலகாலம் வாழ்வீர்களாக; ஈண்டு - இப்பொழுது, (நீங்கள்), நும கோயில் எய்தி - உமது மாளிகையை அடைந்து, இனிதினினுசுகமாக, இருக்கை - எழுந்தருளியிருத் தலே, காணவேண்டும் - பார்க்கவேண்டும்; நும் அருள் என் - (இதற்கு) உமது அபிப்பிராயம் என்ன?' என்றான - என்று வினவினான்; வீரனும் - ஸ்ரீராம னும், 'விழுமிது - (அது) மேன்மையானது,' என்றான் - என்று சொல்லி உடன்பட்டான; (எ - று.)

அநுமான் ராமசுக்கிரீவர்கள் கட்புக்கொண்டமைக்கு உவந்து வாழ்த்திக் கூறி, அச்சுக்கிரீவனது இருப்பிடத்துக்கு எழுந்தருளவேண்டுமென விண்ணப்

பிக்க, இராமபிரானும் உடன்பட்டனனென்பதாம். விழுமிது - அங்ஙனமாகார வார்த்தை. 'தோழனும் நீயும் வாழி' என்றது - உம்மிருவர்க்கும் இப்போது நேர்ந்த சினேகம் நித்தியமாய்ச் செல்லவேணுமென்ற குறிப்பு. சிங்கம்போன்றவனே 'சிங்கம்' என்றது-உபசாரவழக்கு. வாழிய என்னும் வியங்கோள் மூற்றின் ஈற்று உயிர்மெய்கெட்டது. முதலிலுள்ள 'வாழி' என்பதை, முன்னிலையசைச்சொலென்றலுமாம். சுக்கிரீவன் மாளிகையை 'தங்கோயில்' என உளப்படுத்தியது, அபேதத்தால். கோயில் - கோ இல்: அரசனது இருப்பிடம்; சிறந்த இடமெனினுமாம். 'தாழ்ந்தவஞ்சினஞிறவன்' எனவும், 'இனிதினியிருக்கைகாண வேண்டுதுமருளுகென்றான்' எனவும் பாடமுண்டு. மேலோரிடங் கீழோர் ஒன்றுசொல்லும்போது 'ஐய', 'வீஜயீபவ' என்றாற்போல முதலில் வாழ்த்துக்கூறிப் பின்பு செய்தி சொல்லுதல், இயல்பு. (கஎ)

[யாவரும் பூஞ்சோலையை அடைதல்]

கூ அ. எகினனிரவிசேயுமிருவருமரிகளேறு
மூகவெஞ்சேணைசூழவறக்தொடர்ந்துவந்துவாழ்த்த
நாகமுநரந்தக்கார்வுநளினவாவிகளுநண்ணிப்
போகபூமியையுமேசும்புதுமலர்ச்சோலைபுக்கார்.

(இ - ள்.) இரவி சேயும் - சூரிய குமாரனான சுக்கிரீவனும், எகினன் - புறப்பட்டான்; இருவரும் - இராமலக்ஷ்மணர்களும்,—அரிகள் ஏறும்-குரங்குகளுக்குச் சிங்கம்போன்றவனான அநுமானும், வெம் ஊகம் சேனை -,கொடிய வானரசேனை, சூழ - சூழ்ந்துவரவும்,—அறம் - தருமதேவதை, தொடர்ந்து - பின்தொடர்ந்து வந்து, உவந்து-சந்தோஷித்து, வாழ்த்த - வாழ்த்தாநிற்கவும் (புறப்பட்டு),—நாகமும் - புன்னை மரங்களும், நரந்தம் காவும் - நரந்தமென்னும் மரங்களும், நளினம் வாவிகளும் - தாமரைத்தடாகங்களும், கண்ணி - பொருந்தி, போக பூமியையும் எசும் - நல்வினைப்பயன்களை யனுபவிக்குமிடமாகிய சுவர்க்கம் முதலிய லோகங்களையும் இகழும்படியான, புது மலர் சோலை - புதிய [அன்றுமலர்ந்த] மலர்களையுடைய பூஞ்சோலையை, புக்கார் - அடைந்தார்கள்; (எ - று.)

அழிந்துபோவதாயிருந்த தன்னைக் கைகொடுத்துக் காப்பாற்றுவதனால், தருமதேவதை வாழ்த்துவதாயிற்று. ஊகம் - குரங்கின் சாதிபேதங்களுள் ஒன்று; "குரங்கு முசுவு மூகமு மூன்றும், கிரம்ப காடிடப் பெயர்க்குரிய" என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்கொண்டு உணர்க. நரந்தம் - விருக்ஷவிசேஷங்களுள் ஒன்று; நாரத்தை மரமென்பர். கா என்னுஞ் சோலையின்பெயர், இலக்கணையால் மரத்திற்கு ஆயிற்று; தானியாகுபெயர். போகபூமியையும் எசுதல் - அளவிறந்த இன்பத்தைத் தரும் இடமாயிருத்தல். ரவி, ஹரி, ஸேநா, நாகம், நளிகவாபீ, போகபூமி - வடசொற்கள். 'போகபூமியையும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு. 'எகினரிரவிசேயும்' என்றும், 'சேனைசூழ்வக்தடியினை யுவந்து வாழ்த்த' என்றும் பாடம் காணப்படுகின்றது. (கஅ)

[அச்சோலையின் சிறப்பு.]

கூக. ஆரமு மகிலுக் துன்றி யவிர்பளிக் கறைய ளாவி
நாரகிண் றனபோற் றோன்றி நவமலர்த் தடங்க ணூடும்
பாரமு மருங்குக் தெய்வத் தருவுநீர்ப் பண்ணை யாடுஞ்
சூர மகளி ரூச றுவன்றிய சும்மைத் தன்றே.

(இ - ன்.) (அச்சோலை),—ஆரமும் அகிலும் துன்றி - சந்தனமரங்களும் அகில்மரங்களும் நெருங்கப்பெற்று, அவிர் பளிங்கு அறை அளாவி-விளங்கு கின்ற ஸ்படிகக்கற்களாலாகிய சிறுவீடுகள் பொருந்தப்பெற்று, நாரம் நின்றன போல் தோன்றி - (அப்பளிக்கறைகளின் விளக்கத்தால்) தெளிவான நீர் எழுந்து நின்றனபோலக் காணப்பெற்று,—நவம்மலர் தடங்கள் நாடும்பாரமும்-புதுமையான [அப்பொழுதுமலர்ந்த] மலர்களையுடைய தடாகங்களினது (கண் டோர்) விரும்பும்படியான இரண்டு கரைகளிலும், மருங்கும் - பக்கங்களிலும் உள்ள, தெய்வம் தருவு - தெய்வத்தன்மையையுடைய விருக்ஷங்களில், நீர் பண்ணை ஆடும் சூர் அரமகளிர் - நீர்விளையாடுகின்ற தெய்வத்தன்மையை யுடைய தேவதாஸ்திரீகளது, ஊசல்-ஊஞ்சல், துவன்றிய - தொங்கியசையப் பெற்ற, சும்மைத்து - ஆரவாரத்தையுடையது ; (எ - று.)

தெய்வப்பெண்கள் தம் உலகத்தைவிட்டு இங்கு வந்து தாமரைத்தடாகங் களில் ஜலக்கிரீடைசெய்து அருகிலுள்ள மரங்களில் ஊஞ்சல் விளையாடப் பெற்ற சிறப்பையுடையது அச்சோலை யென்றபடி. தரு-தருவு என உகரச் சாரியைபெற்றுவந்தது; தெரு-தெருவு, மரு-மருவு எனருற்போல. பண்ணை-மகளிர்விளையாட்டு. சும்மைத்து - ஒன்றன்பாற்குறிப்புமுற்று. அன்று, எ-ஈற் றசை. ஹாரம், நாரம், நவம், பாரம், தைவம், தரு - வடசொற்கள். துன்றி, அளாவி, தோன்றி, துவன்றிய சும்மைத்து என முடிபு காண்க. (கூக)

வேறு.

[அங்கு உள்ள இரத்தினங்களின் சிறப்பு.]

எ0. அயர்வில் கேள்விசா லறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோற்
குயிலு மாமணிக் குழுவு சோதியால்
வெயிலுக் வெள்ளிவெண் மதியு மேம்படா.

(இ - ன்.) அயர்வு இல் கேள்வி சால் அறிஞர் வேலைமுன் - தளர்ச்சியில் லாத நூற்கேள்விகள் அமையப்பெற்ற புத்திமான்களுடைய கூட்டத்திற்கு எதிரில், பயில்வு இல் கல்வியார் பொலிவு இல் பான்மை போல்-கல்விப்பயிற்சி யில்லாதவர்கள் மேன்மையடையாத தன்மைபோல,—குயிலும் மா மணி குழுவு சோதியால்-(அச்சோலையிற்) பதிக்கப்பட்டுள்ள சிறந்த [பெரிய] இரத்தினங் களினது கூட்டமாகத்திரண்ட ஒளியினால், வெயிலும் - சூரியகாந்தியும், வெள்ளி வெள் மதியும் - வெள்ளிபோன்ற வெண்மையான சந்திரனது காந்தி யும், மேம்படா - (அங்கு) மேன்மைப்பட்டு விளங்கா; (எ - று.)

அயர்வு - ஐயந்திரிபு. கேள்வியானது கல்வியை அபிவிருத்திசெய்தலால், 'கேள்விசாலறிஞர்' எனறார். வேலையெனனுங் கடலின்பெயர் இல்லக்கணையால், அதுபோலப் பரந்த கூட்டத்தை யுணர்த்திற்று; உவமையாகுபெயர். "எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும், எழுத்தறிவார்க் காணின் இலையாம்—எழுதறிவா, ராயுங் கடவுளவிசடைமுனகண்டளவில், வீயுஞ் சுரகீர்மிகை" எனப் பிற்காலத்தார்கூறியிருப்பதுங் காண்க. வெள்ளி-வெண்மையையுடைய தெனக் காரணப்பெயர். மாமணிச்சோதியால் வெயிலும் மதியும் மேம்படா என, ஒன்றினில் மற்றொன்று மறைத்ததாகக் கூறியது - மறைவணி. அங்குள்ள இரத்தினங்களின் ஒளி சூரியசந்திரர்களது ஒளியினும் மிக்கு விரஞ்சுவதென்றபடி. இனி, ஆங்குவுள்ள மணியின சோதியால் வெயிலும், வெள்ளியின் சோதியால் மதியும் மேம்படா என்று உரைப்பினுமாம். 'குழுமு' என்ற சில பிரதிகள். 'வெள்ளிவெண்ணிலவுமேம்படா' எனறு பாடமோதுவாரு முளர்.

இதுமுதல் நாற்பதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் மூனறுஞ்சீரும் மாச்சீர்களும், மற்றை இரண்டும் கூவிளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். ()

[அவர்கள் மலர்ப்பாயலி லிருந்துகொண்டு அன்போடு அளவளாவுதல்.]

எக. ஏயவண்ணதாமினியசோலைவாய்
மேயமைந்தருங்கவியின்வேந்தனுங்
தூயபூவணைபொலிந்துதோன்றினர்
ராயவண்பிணைடளவளாவுவார்.

(இ - ன்.) ஏய-தகுதியாக, அன்னது ஆம் இனிய சோலைவாய் மேய-அப்படிப்பட்டதாகிய அழகிய சோலையிற் சோந்த, மைந்தரும-ராமலக்ஷ்மணர்களும், கவியின் வேந்தனும - வாநராராஜனும [சுகரீவனும்], தூய பூ அணை பொலிந்து தோனறினர் - பரிசுத்தமான புஷ்பசயனத்தில் வீற்றிருந்து விளங்கினவராகளாய், ஆய அனபிலைடு அளவளாவுவார் - பொருந்திய அனபுடனே மனங்கலந்து உசாவுவராயினர்; (எ - று.)

ஏய-ஏய் என்பதன் அடியாப் பிறந்த செயவெனெச்சம். சோலைவாய், வாய்-ஏழனுருபு. மேய - மேவிய. கபி - குரங்கு: வடசொல். அளவளாவுதல் - தன்னளவையும் பிறனளவையும் ஒருவரையொருவர விசாரிதல். (எக)

[இராமபிரான் நீராடி விருந்துண்ணல்.]

ஏஉ. கனியுங்கந்தமுங்காயுந்தூயதன்
இனியயாவையுங்கொணரயாரினும்
புனிதன்மஞ்சனத்தொழில்புரிதபின்
னினிதிருநதுகல்விருந்துமாயினன்.

(இ - ன்.) கனியும - பழஙகளையும், கந்தமும - கிழங்குகளையும், காயும - காய்களையும், தூய நன்கு இனிய யாவையும-பரிசுதமாயும் மிகவும் இனிமையாயுமுள்ள மறறைச் சாரம [இலை] மூலம் [வேர்] முதலியவறறையும்,

கொண்டவர்த்த அமைக்க,—யாரினும் புனிதன் - யாவரினும் பரிசுத்தனுகிய ஸ்ரீராமன், மஞ்சனம் தொழில் புரிந்த - ஸ்நாநஞ்செய்தகொண்டு, பின்-பினபு, இனிது இருந்த - இனிமையாக இருந்த, நல் விருந்தும் ஆயினன - நல்ல விருந்தாளியும் ஆனன [அவற்றை யுண்டருளின னென்றபடி]; (எ - று.)

கந்தம் - வடசொல். மஞ்சனம்-மஜ்ஜந மெனனும் வடமொழியின் விகாரம்; ஸ்நாநஞ்செய்தலென்று பொருள். விருந்து - புதுமை; இங்கு ஆகுபெயராய், புதியனுய்வந்தவனமேல் நின்றது. விருந்தினனுக்கு நனமை - பெறுதற்கு அரியவனுய் ஞான ஒழுக்கங்களால் உயர்ந்துநிற்றல். விருந்தும், உம்மை-இறந்தது தழுவியது. (எஉ)

[இராமன் சுக்கிரீவனை அம்பினுல் ஒன்றுவினுவுதல்]

எங. விருந்துமாகியம்மெய்ம்மையன்பினே
டிருந்துநோக்கிநின்றிறைவன்சிந்தியாப்
பொருந்துநன்மனைக்குரியபூவையைப்
பிரிந்துளாய்கொலோநீயும்பின்னென்றான்.

(இ - ள்.) இறைவன - ஸ்ரீராமன,—விருந்தும் ஆகி-(இவ்வாறு) விருந்தினனும் ஆகி [உண்டு], பின்-பினபு, அ மெய்ம்மை அன்பினேடு - அப்படிப்பட்ட உண்மையான அனபுடனே, இருந்து நோக்கி நின்று - அருகிலிருந்து பார்த்து, சிந்தியா - ஆலோசித்து,—(சுக்கிரீவனை நோக்கி), 'பொருந்தும் நல் மனைக்கு - பொருந்திய நல்ல இல்லறவாழ்க்கைக்கு, உரிய - இன்றியமையாத, பூவையை - மனைவியை, நீயும்—, பிரிந்து உளாய்கொலோ - (எனனைப் போலவே) பிரிந்துள்ளாயோ?' என்றான - எனறு வினவினன; (எ - று.)

அதிதியாகிய தமமைச் சுக்கிரீவன் மனைவியில்லாமல் உபசரிப்பதைக் கண்டு இவ்வாறு இராமபிரான வினவின னெனக. மனை-வீடு; பூவை-கிளி: இவைமுறையே மனைவாழ்க்கைக்கும், பூவைபோனறவளுக்கும இடவாகுபெயரும், உவமவாகுபெயருமாம். கொல் - ஐயம், ஓ - வினு. நீயும், உம் - இறந்தது தழுவிய எச்சம். (எங)

[அதற்கு அனுமான் விடைகூறத் தொடங்குதல்.]

எச. என்றவேலையினெழுந்துமாருதி
குன்றுபோலநின்றிருகைகூப்பினன்

லொன்றியானுனக்குரைப்பதுண்டென.

இதுமுதல் மூப்பது கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) என்ற வேலையின்-என்று (ஸ்ரீராமன்) வினவியபொழுதில்,—மாருதி - அநுமான்,—எழுந்த - எழுந்திருந்து, குன்றுபோல நின்ற - மலைபோல அருகில் வந்துநின்று, இரு கை கூப்பினன் - இரண்டுகைகளையும் கூப்

பித்தொழுதவனும்,—(ஸ்ரீராமனைநோக்கி), 'நின்ற நீதியாய்-நிலையாய் நின்ற நீதியையுடையவனே! யான் - அடியேன், உனக்கு—,உரைப்ப-சொல்ல வேண்டுவது, ஒன்று உண்டு-ஒருவரலாறு இருக்கின்றது; (அதனை), நெடிது கேட்டி - செவ்வையாகக் கேட்டருளவாயாக,' எனை - என்றுசொல்லி, (எ - று.)—'எனை' என்னும் வினையெச்சம், மேல் கஉச-ஆங் கவியில் 'இயம்ப' என்னும் வினையோடு முடியும். ஆல் - ஈற்றசை.

கேட்டுக்கொண்டிருக்கின்றவனை 'கேட்டி' என்றது, அதற்குப்பரிகாரஞ் செய்தருளவேண்டு மெனக் குறிப்பித்தற்குப் போலும். ஒன்று+யான்= ஒன்றியான்; குற்றியலிகரம். (எச)

[இதுமுதல் இருபத்தொன்பது கவிகள் - அநுமான் கூறிய விடை.]

எடு. நாலுவேதமாநவையிலார்கலி
வேலியன்னதொன்மலையின்மேலுளான்
சூலிதன்னருட்டுறையின்முற்றினன்
வாலியென்றுளான்வரமபிலாற்றலான்.

(இ - ன.) நாலு வேதம் ஆம நவை இல் ஆர்கலி - நானகுவேதங்களாகிய குற்றமில்லாத கடலுககு, வேலி அனன - வேலியைப்போலப் பாதுகாவலா யுளளவனும், தொல் மலையின மேல் உளான் - பழமையான கைலாசபருவதத் தில் வீற்றிருபபவனுமாகிய, சூலிதன-சூலாயுதத்தையுடையவனை உருத்திர மூர்த்தியினது, அருள துறையின-கருணையின வழியே, முறறினனை - முதிர்ந் தவனகிய, வாலி எனறு - வாலியெனறு பெயாசொல்லப்பட்டுப் பிரசித்தி பெறறு, வரம்பு இல் ஆற்றலான - எல்லையில்லாத வலிமையுடையாஎனரு வாநாவீரன, உளான - இருககினறு னனறே ? (எ - று.)

சுக்கிரீவன் மனைவியையழைத்த வரலாற்றை விவரமாக் கூறததொடங்கிய அநுமான், இச்செய்யுளால், வரபலம்மிக்கவனும் வாலியெனற ஒருவனிருத் தலைத் தெரிவித்தான. ("ஸங்காத ஜ்ஞாந மங்யீச்கேத்" எனறபடி) சிவ பிரான ஞானங்கட்கு இருப்பிடமாயிருததலால், அப்பெருமானை, கடல்போற் பரந்த நானகுவேதங்கட்கும் வேலி யெனறார். அன்ன உளான என இயை யும். சூலிதன அருட்டுறையின முறறினனை எனபதற்கு - பரமசிவனது திரு வருளைப் பரிபூரணமாகப் பெற்றவனெனபது கருத்து. ஸூலீ எனற வட மொழிப்பெயா - சூலாயுதத்தையுடையவனென்று பொருள்படும். 'வேலி யனனதோர்' என்றும் பாடமுண்டு. 'நவையில்சாவியின், வேலியன்னவன் வெள்ளிவெண்கிரிச், சூலியின்னருட் டுறையுமுற்றினன்' என்றபாடமோ தாருமுளர். ஆர்கலி-நிறைந்த ஓசையையுடையது; வினைத்தொகையன்மொழி.

எசு. கழறுதேவரோடவுணர்க்கண்ணினின்
முழுமந்தரத்திருவுதேயமுன்
னழலுங்கோளராவகடுதேய்விடச்
சுழலும்வேலையைக்கடையுதோன்னனை,

(இ - ன்.) (அவன்),—கழறு - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, தேவ ரோடு - தேவர்களும், அவுணர் - அசுரர்களுமாகிய அவர்களது, கண்ணின - எதிரில், நின்று,—உழலும் மந்தரத்து - (மததாகிச்) சுழல்கின்ற மந்தரமலையி னது, உருவு - வடிவம், தேய - தேயும்படியாகவும்,—அழலும் - சீறுமியல் பமைந்த, கோள் அரா - வலிமையையுடைய (கடைகயிறுகிய வாசுகியென் னும்) பாம்பினது, அகடு - நடுவுடம்பு, தேய்விட-தேய்ந்துபோம்படியாகவும்,— சுழலும் - அலைகின்ற, வேலையை - திருப்பாற்கடலை, முன் - முற்காலத்தில், கடையும் - கடைந்த, தோளினன் - புஜபலமுடையவன்; (எ - று.)

இதுவும், அடுத்த கவியும் - வாலியினது வலிமையை யுணர்த்தும்.

வாலி கடலைக்கடைந்த வரலாறு:—தேவர்களும் அசுராகளும் ஒருங்கு கூடிச் சாவாமருந்தாகிய அமிருதத்தைப் பெறுமாறு மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகிநாகத்தைக் கடைகயிறுகப்பூட்டிச் சந்திரனை அடைதூணாக கிறுத்திப் பாற்கடலைக் கடைய முயலுகையில், இருதிறத்தாரும் அதனைக் கடையும் வலிமையிலராய் என்செய்வதென்று கலங்கிநிற்குமளவிலே, வாசுக ராஜனும் தேவேந்திரனது குமாரனுமாகிய வாலிதான் நான்றோறும் பலகடல் களிலுஞ் சென்று வைதிகநித்தியகருமங்களை முடித்துவரும் வழக்கப்படி பாற் கடல் சென்றுசேர, தேவர்கள் அவனை வேண்டிக்கொண்டதனால் அவன சுராசுரர்களை விலக்கிவிட்டுத் தானொருவனுகவே இருகைகளாலும் வாசுகியின் தலையையும் வாலையும் பிடித்து வலமும் இடமுமாக வலிய இழுத்துக் கடைக் தனன என்பதாம். இவ்வரலாறு வால்மீகத்தில் இல்லையாயினும், கல்விசைப் புலவராகிய கம்பர் கூறியிருத்தலால், புராணந்தரங்களிலேயாதல் கல்பாந்தரத் திலேயாதல் உண்டெனறு கொளளவேண்டும்; "மற்றவன முனனே னக்கா ளிராவணன்வலிதன வாலி, னிற்றுக்கட்டி யெட்டுத்திசையினு மெழுத்து பய்ந்த, வெற்றியன் தேவர் வேண்ட வேலையை விலக்கன் மதத்திற், சுற்றிய நாகத்தேய வமுதெழக் கடைந்த தோளான" என்று சுந்தரகாண்டத்திலும், "கடலைச் சுராசுரர்க் கமிழ்தெழக் கடைந்த, வீரியன" எனறு ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டத்திலுங் கூறுவன காண்க. (இச்சரித்திரத்தைக் காஞ்சிப்புரா ணத்து மணிகண்டேசுரப்படலத்திற் பரக்கக்காணலாம்.) முன்கடையுந் தோளினன - இயல்பினல்வந்த காலவழுவமைதி; கடையும் என்ற செய்பு மெனெச்சம் காலமுணர்த்தாது தன்மையுணர்த்திற் றெனினும் அமையும். தேய்வு இடுதல் - தேய்வுகொள்ளுதல். (எக)

எஎ. நிலனுநீருமாய்நெருப்புங்காற்றுமெண்
ணிலவில்பூதநான்குடையவாற்றலா
னலியின்வேலைசூழ்கிடந்தவாழிமா
மலையினின்றுமிமமலையின்வாவுவான்.

(இ - ன்.) நிலனும் - பூமியும், நீரும்-ஜலமும், நெருப்பும் - அக்கினியும், காற்றும் - வாயுவும், எனறு ஆய் - எனறுபொருந்தி, உலவு இல் - அழிவில் லாத, பூதம் நான்கு - நான்குபூதங்களும், உடைய - (தாம்தாம் தனித்தனி) உடைத்தான, ஆற்றலான் - வல்லமைமுழுவதையும் தான் ஒருசேர உடைய

வன்; அலையின் வேலை - அலைகளையுடைய ஏழுசமுத்திரங்களுக்கும் அப்பால், சூழ்கிடந்த - சுற்றிலும் பொருந்திய, ஆழி மா மலையினின்றும் - பெரிய சக்கரவாளபருவதத்தினின்றும், இ மலையின் - இங்குள்ள பருவதத்தில், வாவு வான் - தாவுந்தன்மையுடையவன்; (எ - று.)

நிலத்துக்கு நீரும், நீர்க்கு நெருப்பும், நெருப்புக்குக் காற்றும் காரணமாதலால், அம்முறைப்படி வைத்தார். பஞ்சபூதங்களுள் ஆகாயத்தை ஒழித்தது, அதற்கு மற்றவைபோன்ற ஆற்றலும் உருவமும் இல்லாமையால். 'சூழ்'என்ற மூதனிலே, இங்கு வினையெச்சப்பொருள்தந்தது; "வரிப்புனைபக்த" என்னுமிடத்திற் போல. 'நீருமாநெருப்பும்' என்றும், 'அலையும் வேலை' என்றும் பாடமுண்டு. 'நிலனுநீரொடு நெருப்புங்கால்வெளி, யுலவில் பூதமைந்துடைய வாற்றலான்' என்று பாடமோதுவாரு முளர். (எஎ)

எஅ. கிட்டுவார்பொரக்கிடைக்கின்னவர்
பட்டநல்வரம்பாகமெய்துவா
னெட்டுமாதிரத்திறுதிநாளுமுற்
றட்டமூர்த்திதாள்பணியுமாற்றலான்.

(இ - ன்.) கிட்டுவார் பொர கிடைக்கின் - நெருங்குபவர்களாய்ப் பேர் செய்தற்கு (யாவராயினும் எதிரில்) வந்தால், அன்னவர் பட்ட நல்வரம் - அவர்கள் முன்பு அடைந்துள்ள நல்லவரங்களில், பாகம் - பாதிபாகத்தை, எய்துவான் - அடைபவன்; நாளும் - நாள்தோறும், எட்டு மாதிரத்து இறுதி - எட்டுத்திக்குக்களி னெல்லையிலும், உற்ற - போய், அட்டமூர்த்தி தான் - எட்டுத் திருமேனியையுடையனான சிவபெருமானது திருவடிகளை, பணியும் - வணங்குகின்ற, ஆற்றலான் - செய்கையுடையவன்; (எ - று.)

இச்செய்யுள் - வாலிக்குஉள்ள தைவிகவரத்தையும் தெய்வபக்தியையும் தெரிவிக்கும். நல்வரமென வரபலத்தைக் கூறியது, தேகபலத்துக்கும் உபலக்ஷணமெனக் கொள்ளவுமாம். நாளும், உம்மை - தொழற்பொருளது. அஷ்ட மூர்த்தி-வடமொழித்தொடர்: பண்புத்தொகையணமொழி. சிவபிரானது அஷ்ட மூர்த்திகள்-பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், யஜமானன். அஷ்ட மூர்த்திதாள் பணிவதற்காக எட்டுத்திக்கிற் சென்றனனென நயங்காண்க. 'பட்டநல்வலம்' என்பதும் பாடம்; வலம் - பலம். பாகம் - வடசொல் (எஅ)

எக. கால்செலாதவன்முன்னர்க்கந்தவேள்
வேல்செலாதவன்மார்பின்வென்றியான்
வால்செலாதவாயலதிராவணன்
கோல்செலாதவன்குடைசெலாதரோ.

(இ - ன்.) அவன் முன்னர் - அவ்வாலியினது வேகத்திற்கு முற்பி, கால் செலாது - வாயுவும் போகமாட்டாது; அவன் மார்பின் - அவ்வாலியினது மார்பிலே, கந்தவேள் வேல் - சுப்பிரமணியக்கடவுளது வேலும், செலாது - நுழையாது; வென்றியான் வால் செலாத வாய் அலது - வெற்றியையுடை

யஞ்ண அவ்வாலியின்து வால் செல்லாத இடத்திலே அல்லாமல் [வால் சென்ற இடத்தில்], இராவணன் - ராவணனது கோல்-அதிகாரம், செலாது-செல்லாது; அவன் குடை - அவ்விராவணனது வெற்றியும், செலாது செல்லாது; (ஏ - று)—அரோ - ஈற்றசை; தேற்றமுமாம்.

இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களையும் வென்ற இராவணனது கோலும் குடையும் வாலியின்வால்சென்றவிடத்துஞ் செல்லாதென வாலியின் வீரமிகுதி கூறியபடி. வால்சென்றவிடத்தே செல்லாதெனவே, அவனுள்ள விடத்தச்செல்லாமை தானே பெறப்படும். இவ்வாறு கூறியது, முன்னொரு காலத்தில் தன்னைப்பற்றுதற்குப் பின்புறத்தேவந்த இராவணனை, வாலி, தன் வாலினற் கட்டி வலியடக்கிக் கர்வபங்கஞ்செய்ததைப்பற்றி யென்க. இனி, பின்னிரண்டடிக்கு - வாலியினது வாலின்வலிமை அழிந்தாலன்றி இராவணனது கோலுங் குடையும் அழியா வென்றுமாம்; வாலியும் இராவணனும் பின்னர் கட்புக்கொண்டன ராதலால்: இப்பொருளில், இராவணனைக்கொல்லுதற்கு வாலியைக்கொல்வது இன்றியமையா தென்பது கருத்து.

கந்தன் - ஸ்கந்தனென்ற வடசொல்லின் விகாரம். வேள் என்பதற்கு - விரும்பப்படுகின்றவ னென்பது பொருள்; அழகியன் னென்பது கருத்து: இச்சொல் மன்மதனுக்கும் பெயராதலால், அவனை விலக்குதற்கு, 'கந்தவேள்'என்றார். செலாத வாய் அலது - இரண்டு எதிர்மறை உடன்பாட்டை வற்புறுத்திற்று. கோல் - அரசாட்சிக்கும், குடை - வெற்றிக்கும் இலக்கணை. (எசு)

அ○. மேருவேமுதற்கிரிகள்வேரொடும்
பேருமேயவன்பேருமேனெடுங்
காரும்வானமுங்கதிருநாகமுந்
தூருமேயவன்பெரியதோள்களால்.

(இ - ள்.) அலன் - அவ்வாலி, பேரும் எல் - (தன் இடம்விட்டு) எழுவானலல், (அவவதிர்ச்சியினல்), மேருவே முதல் கிரிகள் - மகாமேரு முதலிய பெரியபர்வதங்களெல்லாம், வேரொடும் பேருமே - வேரோடும் இடம்விட்டுப் பெயர்ந்துபோமே; அவன் பெரிய தோள்களால் - அவனுடைய பெரிய புஜங்களால், நெடுங் காரும் - பெரிய மேகமும், வானமும் - ஆகாயமும், கதிரும் - சூரியசந்திரர்களும், நாகமும் - பர்வதங்களும், தூருமே - மறைந்து பேரய்விடுமே; (எ . று.)

அவன் இயல்பாக அடிவைத்துச்செல்லும்போதே, அவ்வதிர்ச்சியைத் தாங்கமுடியாமல், இவ்வுலகத்தைத் தாங்கவல்ல பெருமலைகளும் நிலைகுலைந்து விடும்; அன்றியும், உத்தமலிலக்கணத்திற்கு ஏற்ப அவனது தோள்கள் மிகவுயர்ந்து நிற்றலால், மேகம்முதலியவைகளெல்லாம் அதனல் தூர்ந்துவிடுமென்பதாம்: நோடர்புயர்வுநவிற்சியணி. இதனுல் - வாலியினது தேக பலமும், உயர்ந்த தோற்றமும் விளங்கும். நாகம் - சலியாதது என மலைக்குக் காரணக்குறி: நாகம் - வானுலகு எனினுமாம். பேரும் - பெயரு மென்பதன் மரூஉ. மேருவே, ஏ - உயர்வுசிறப்பு. (அ○)

அக. பாரிடந்தவெம்பன்றிபண்டைநா
ணீர்கடைந்தபேராமைகேருளான்
மார்பிடந்தமாவெனினுமற்றவன்
ரூர்கிடந்தகோடகையவல்லவோ.

(இ - ள்.) பண்டை நாள் - மூற்காலத்தில், பார் இடந்த - பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்த, வெம் பன்றி - கொடிய மகாவராகமும்,—நீர் கடைந்த பேர் ஆமை - பாற்கடலைக் கடைவதற்குச் சாதனமான மகாகூர்மமும்,—நேர் உளான் மார்பு இடந்த - (தனக்குப்) பகையாக உள்ளவனாகிய ஹிரண்யனது மார்பைக் கீண்ட, மா - (நர) சிங்கமும், எனினும் - ஆகிய இவையேயாகினும்,—அவன் தார் கிடந்த தோள் - அவ்வாலியினது வெற்றிமாலை பொருந்திய புயங்களை, தகைய வல்லவோ - எதிர்க்க வல்லனவோ? [அல்ல என்ற படி]; (எ - று.)

இச்செய்யுளும் வாலியினது வீரத்தை விளக்கும். திருமாலினது அம்சாவதாரமாகிய ஸ்ரீராமனும் வாலிக்கு எதிர்நின்று போர்புரியாது மறைந்து நின்றே அம்பெய்து அவ்வாலியைக் கொல்லப்போவதனால் இவ்வாறு கூறினரென்னலாம். 'பாரிடந்தபன்றி' என்றது:- பூமியைப் பாயாகச்சுருட்டியெடுத்துக் கடலில் மூழ்கிப்போன, இரணியாக்ஷனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக் கொண்டுவந்து விரித்தருளின வரலாற்றை உட்கொண்டு, தேவர்களும் அசுரர்களும் மந்தரபருவதத்தை மத்தாகவும் வாசுகியைக் கடைகயிறாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்தபொழுது சுழலாகின்ற மந்தர பர்வதத்திற்குக் கீழ்ப்புறத்தில் ஸ்ரீமந்நாராயணன் மகாகூர்மரூபத்தைத் தரித்து அம்மலை கடலில் அமுங்கிவிடாத படி ஆதாரமாக இருந்ததனால், 'நீர்கடைந்த பேராமை' என்றார். 'நீர்கிடந்த' என்றும் பாடம். நீர் - கடலுக்கு ஆகுபெயர்; இக்குச் சக்தருப்பகோக்கிப் பாற்கடலெனப் பொருள் கொள்ளப்பட்டது; "தாழி தனையாகத் தண்டயிர் நீராகத் தடவரையேமத்தாக," "நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருட" என்ற இடங்களிற் போல. வீருப்பும் வெறுப்பும் இல்லாத முழுமுதற்கடவுளாகிய திருமாலுக்குப் பகைவனும் நண்பனும் இல்லாமலிருக்கவும் இராணியை 'கேருவான்' எனக் கூறியது - அப்பெருமான் தனது அடியவர்க்குப் பகைவரையே தனக்குப்பகைவராகவும் அவர்க்குநண்பரையே தனக்குநண்பராகவுங் கொள்ளுமியல்பினனாதலாலென்க. 'மா' என்ற விலங்கின் பொதுப்பெயர், இக்குச் சிறப்பாய்ச் சிங்கத்தை யுணர்த்தும்; எல்லா அவயவங்களினுஞ் சிறந்த [உத்தமாங்கமாகிய] தலை சிங்கமாயிருந்தது பற்றி, 'மா' எனப்பட்டதென்க. மற்று - அசை. பண்டை, ஐ - சாரியை; "ஐயீற்றடைக் குற்றுகரம்." பண்டு-பழமை குறிக்கும் இடைச்சொல். ஓ - எதிர்மறை. (அக)

அஉ. பட்டர்ந்தரீணெடுந்தலிபரப்பிமீ
தடர்ந்துபாரம்வந்துறவருந்தனுங்
கிடந்துதாங்குமிக்கிரியைமேயினு
ணடந்துதாங்குமிப்புவனமாளெலாம்.

(இ - ள்.) அநந்தனும்-ஆதிசேஷனும்,—படர்ந்த நீள் நெடுந் தலை-(ஆயிர மென்னுங்கணக்காக) மிகுந்த மிகவும்நீண்ட பணமுடிகளை, பரப்பி - பரப்பிக் கொண்டு,—மீது - மேலே, பாரம் - பாரமானதை, அடர்ந்து வந்து உற - மிகுதியாகப் பொருந்தியிருக்கும்படி, கிடந்து - கீழ் இருந்து, இ புவனம் - இப் பூலோகத்தை, நான் எலாம் - எக்காலும், தாங்கும் - பரிப்பான்; இ கிரியை மேயினன் - இம்மலையைப் பொருந்திவாழ்கின்றவனை வாலியானவன், கடந்து - (தான் மேலே) கடந்துகொண்டு, தாங்கும் - (இப்பூமியை எப்பொழுதும்) பரிப்பான்.(எ-று)

இதனால், வாலியினது உலகங்காக்குந்திறம் கூறப்பட்டது. ஆதிசேஷன், இப்பூமியின்பொறையைத் தாங்கமுடியாமல் · வருந்தித்தாங்குகின்றான்; வாலியோ அங்ஙனமன்றிச் சிறிதும் வருத்தமில்லாமல் உல்லாஸமாக கடந்து கொண்டு தாங்குகின்றன னென்பதாம். இவ்வாறு உபமானமாகிய ஆதிசேஷனினும் உபமேயமாகிய வாலிக்கு ஏற்றங் கூறியது - வேற்றுமையணி. கிடந்துதாங்குதல் · சுமத்தல்; கடந்துதாங்குதல் - காத்தல். இப்புவனம், நாளெலாம் என்பவற்றை 'தாங்கும்' என்ற சொல் லிரண்டனோடுங் கூட்டுக. அநந்த னென்பதற்கு - அழிவில்லாதவ னென்று பொருள்; (க+அந்தம்) அந்தம்-முடிவு. உம்மை · உயர்வுசிறப்பு.

இனி, இச்செய்யுளுக்கு வேறுவகையாகவும் உரைகூறுதலுண்டு. அது வருமாறு:—கிடந்துதாங்கும் இ கிரியை - பூமியின்மீது இருந்துகொண்டு (இப்பூமியைத்) தாங்குகின்ற இந்தமலையை, மேயினன் - பொருந்தியவனான வாலி, கடந்து - கடப்பதனால், மீது - தன்மேலே, பாரம் அடர்ந்து வந்துஉற · பாரம் மிகுதியாக வருதல்பற்றி, படர்ந்த நீள் நெடுந் தலை பரப்பி—,அநந்தனும் (கடந்து) தாங்கும்: தான் ஒரிடத்திலேயே யிருந்துகொண்டு பூமியைத் தாங்குமியல்பினனான ஆதிசேஷனும் வாலி நடக்கையில் அவனது உடற் பொறையைச்சமக்கமுடியாமல் தானும் இடம்பெயர்ந்து அவனுடனே சென்றுகொண்டே தாங்கி வருவ னென்பதாம்; இதனால், வாலியினது மஹாஸத்வங் கூறப்பட்டதாம். மலைகள் தாம் வெளியில் எவ்வளவு உயர்ந்திருக்கின்றனவோ, அவ்வளவு உள்ளேயும் புக்குநின்று பூமியைச் சலிக்கவொட்டாது தாங்குகின்றன வென்ற கொள்கைபற்றி, 'கிடந்துதாங்கு மிக்கிரி' என்றார். 'அடர்ந்தபாரம்' என்று பிரதிபேதமுண்டு. 'அடர்ந்துபாரிடந்தனை யனந்தனும், கிடந்துதாங்கு மிக்கிரியின் மேவினன்' என்று பாடமோதுவாருமுளர். (அட)

அஉ. கடலுளைப்பதுங்கால்சலிப்பதும்
மிடலருக்கர்தேர்மீதுசெல்வதுந்
தொடரமற்றவன்சுரியினேற்றலா
லடலின்வெற்றியாயயதினுபவோ.

(இ - ள்.) அடலின் வெற்றியாய் - வலிமையையும் சயத்தையும் உடையவனே!—தொடர - இடைவிடாமல், கடல் உளைப்பதும்- சமுத்திரம் சப்திப்பதும், கால் சலிப்பதும் - காற்றுச் சஞ்சரிப்பதும், மிடல் அருக்கர் தேர் மீது செல்வதும் - வலிமையையுடைய சூரியர்கள் [திவாகரசாதித்தியர்கள்]

தேரிண்மேற் சஞ்சரிப்பதும்,—அவன் - அவ்வாலியனது, சுளியின் - கோபத் திற்கு, ஏற்று அலால் - இலக்காகியே யல்லாமல், அயலின் - வேறொருவகை யால், ஆபவோ - ஆவனவோ? [ஆகா என்றபடி]; (எ - று.)

இது, வாலியினது மிக்கோபத்தை வருணித்தது. கடல் முதலியன எல் லாம் அவனது கோபத்துக்கு அஞ்சியேநடக்கின்றன வென்பதாம். உளைப்பது - மேன்மேற் பொங்கியெழாமல் ஒருநிலையில் அடங்கிநிற்பதும், சலிப்பது - எல் லாவுயிரும் பொறுக்கும்படி அடங்கிநடப்பது மாகவுமாம். இயல்பிற் கடல் உளைப்பது முதலியவற்றிற்கு, வாலியின் கோபத்தினால் நிகழ்வனவாகக் கா ணங்கற்பித்துக்கூறியது ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இதனால், காற்றுமுதலி யன தனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நிற்கும்படி செய்யும் பரம்பொருள் போன்றவரம்பிலாற்ற லுடையவன் வாலியென்பது தோன்றும். "நெடுங் கடல் நிற்பதும் ஈயிறு காய்வதும் நிற்றலும் கால், ஒடுங்கிநடப்பதும் தண்கார் பொழிவதும் ஊழிதனிற், சுடுங்கனல் பற்றிச்சுடாதேயிருப்பதும் அம்பை புனைந், தடுங்கனலாழி யரங்கேசர்தந் திருவாணையினே" என்னும்படி பரம் பொருளுக்கு அஞ்சிக் கடல் முதலியன நடக்கின்றன வென்பதைத் தவ றென்று சாதிப்பார், 'அயலினுபவோ' என்றார்: ஆகவே, இங்கு அபநுதிவணி தொனிக்கு மென்னலாம். மாதந்தோறும் வெவ்வேருகச் சூரியர் பன்னிருவ ராதலால், 'அருக்கர்' எனப் பன்மையாற் கூறினர். தேர்மீதுசெல்லுதல் - உதித்தும் அஸ்தமித்தும் அந்தந்தக்காலத்திற்குத் தக்கபடி நடத்தல்.

சுளி - முதனிலைத்தொழிறபெயர். ஏற்று, எல் - பருதி. மற்று - அசை. ஆப என்ற பலவின்பால் முற்றில், ப் - எதிர்காலவிடைநிலை. 'ஆவவோ' என் றும் பாடமுண்டு. 'தொடர' எனபதை 'உளைப்பது,' 'சலிப்பது,' 'செல்வது' என்ற மூன்றிலுஞ்சு கூட்டுக. 'கடலொலிப்பது,' 'தொடரின மற்றவன் சுளியுமென்றலால்,' 'அயலினுவதோ' எனபன, பாடாந்தரம். (அரு)

அசை. வெள்ளமேழுபத்துள்ளமேருவைத்
தள்ளலானதோளரிகடாணையா
னுள்ளமின்றியவ்வுயிரையஞ்சலால்
வள்ளலேயவன்வாழவாழுமால்.

(இ - ன்.) வள்ளலே - வரையாமல் அருளுந் தன்மையை யுடைய வனே!—அவன் வாழ - அவ்வாலி வாழாகிறக, தானேயான உள்ளம் இன்றி அ உயிரை அஞ்சலால் - (வானர) சேனைக்கெல்லாந்தலைவனுகிய வாலியினது கருதது [அநுமதி] இல்லாமல் அக்குரங்குகளின் உயிரைக் கொண்டுபோதற்கு (யமனும்) அஞ்சுதலால்,—வெள்ளம் ஏழு பதது உள்ள - ஏழுபதுவெள்ள மென்னுந் தொகையுடையனவாகிய, மேருவை தள்ளல் ஆன தோள் அரிகள் - மகாமேருவையும் புரட்டிவிடவல்ல தோள்களையுடைய வானரசேனைகள், வாழும் - (அழிவில்லாமல்) வாழாகிற்கும்; (எ - று.)—அரிகள் வாழு மென்க.

வாலியினிடத்து அச்சங்கொண்டு யமனும் பின்வாங்குதலினுல், அவனது குரங்குச்சேனைகள் 'தம்முயிர்பேரய்விடுமோ?' என்ற அச்சமின்றி இனிது

உயிர் வாழ்கின்றன வென்பதாம். இதனால், வாலியினது கடவுளரும் அஞ்சுந் தன்மை கூறப்பட்டது. இனி, வாலி வாழும்போது அவனது குரங்குச்சேனை களே உயிர்கொண்டுபோதற்கு யமனும் அஞ்சிப் பின்வாங்குதல்பற்றி அக் குரங்குச்சேனைகளில்இறப்பனவின் றிப்பின்னும் பிறக்கும் வாரங்களெல்லாம் சேர்ந்து கொண்டுவருதலினாலே அவவாலிக்கு எழுபதுவெள்ளம் வாரசேனை யுளதாயிற்றென்று கருத்துக்கூறலுமாம். வெள்ளம் - ஒரு பெருந்தொகை: மிகப்பல அக்ஷௌஹிணி கொண்டது; யானையொன்றும், தேரொன்றும், குதிரைமூன்றும், காலாளைந்தும் கொண்டது - பத்தி யெனப்படும்: அப்பத்தி மூன்றுங்கொண்டது - சேனைமுகம்; சேனைமுகம் மூன்று - குல்மம்; குல் மம் மூன்று - கணம்; கணம் மூன்று - வாகினி; வாகினி மூன்று-பிரதனை பிர தனை மூன்று-சமூ; சமூ மூன்று - அநீகினி; அநீகினி பத்து-அக்ஷௌகிணி ; அக்ஷௌகிணி எட்டுப் பங்கு கொண்டது - ஏகம்; ஏகம் எட்டு - கோடி; கோடி எட்டு - சங்கம்; சங்கம் எட்டு - விந்தம்; விந்தம எட்டு - முமுதம்; முமுதம் எட்டு - பதுமம்; பதுமம் எட்டு - நாடு; நாடு எட்டு - சமுத்திரம்; அந்தச்சமுத் திரம் எட்டுப்பங்கு கொண்டது - வெள்ளம் எனக் காண்க. மேருவைத் தள்ள லான தோள் - மகாமேருவையுந்தனக்கு ஒப்பன்றென்று விலக்கும்படியான தோளென்றுமாம். ஆல் - ஈற்றசை.

அரி. மழையிடிப்புரூவயவெஞ்சீயமா
முழையிடிப்புரூமுரண்வெங்காலுமென்
றழைதுடிப்புறச்சார்வுரூதவன்
விழைவிடத்தின்மேல்விளிவையஞ்சலால்.

(இ - ள்.) விளிவை அஞ்சலால் - (வாலி ,சினந்தால் தம்தமக்கு) அழிவு நேரிடுமே ! என்று பயப்படுதலால்,—அவன் - அவவாலி, விழைவு இடத் தின் மேல் - விரும்பி வாசஞ்செய்கின்ற இடத்திற்கு நேராக,—மழை - மேகங்கள், இடிப்பு உரூ - இடிக்க மாட்டாவாம்; வயம் - வெற்றியையுடைய, வெம் - கொடிய, சீயம் மா - சிங்கமாகிய விலங்குகள், முழை - குகையில், இடிப்புரூ - கர்ச்சிக்கமாட்டாவாம்; முரண் - வலிமையையுடைய, வெம் - கொடிய, காலும் - காற்றும், மெல் தழை அடிப்பு உற சார்வு உரூது - (அங் குள்ள) மெல்லிய இலைகள் உதிரும்படியாகச் சேராது; (எ - று.)

அவவாலியிருக்குமிடத்தில் தமது வல்லமையைக் காட்டினால் தமக்கு அபாயம் நேரிடுமென்று அவன்வலிமையைநோக்கி அஞ்சி மேகமும் சிங்கமும் காற்றும் அடங்கி நடக்கு மென்றபடி. இது, வாலிக்குக் கடவுளரும் அஞ்சுந் தன்மையோடு விலங்கும் அஞ்சுந்தன்மையுங் கூறியது. சீயம்- விம்ஹமென்ற வடசொல்லின திதைவு. சீயம் மா - சீயமாகிய மா என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (அரி)

அசு. மெய்க்கொள்வாலினுண்மிடலிராவணன்
றெருக்கதோளுறததைதாடர்படுத்தநாள்
புக்கிலாதவெமபொழியரத்தினீ
ருக்கிலாதவேதுலகம்யாவதோ.

(இ - ன்.) மெய் கொள் வாலினால்-(தனது) உடம்பிற் பொருந்திய வாலி னாலே, மிடல் இராவணன்-வலிமையையுடைய இராவணனது, தோள்களோன்-(இருபதாகத்) திரண்ட தோள்களை, உற - ஒருசேர அழுந்தும்படி, தொடர் படுத்த - கட்டி எடுத்துச்சென்ற, நாள்-அந்நாளில், —பொழி - (அவ்விராவண னது உடம்பினின்று) சொரிந்த, வெம்-கொடிய, அரத்தம் நீர்-ரக்தவெள்ளம், உக்கிலாத - சிந்தாததும், புக்கிலாத-(அப்பொழுது வாலி) செல்லாததுமாகிய, வேறு உலகம் - வேறே லோகம், யாவதோ - யாது உள்ளதோ? (எ - று.)

வாலி இராவணனை வாலினாற்கட்டி அலக்ஷ்யமாகத் தூக்கிக்கொண்டு சகல லோகங்களிலும் தாவித்தாவிச் சென்றபோது, அவன்சென்ற இடங்களிலெல் லாம் ராவணனது ரத்தப்பெருக்குச் சொரிந்துகொண்டே யிருந்ததென்ப தாம். வாலினால் தொடர்படுதல என இயையும். வாலினை - வாலியென்று மாம். அரத்தம் - ரக்தமென்ற வடசொல்லின் சிதைவு. யாவது-யாதுஎன்ப தன் விரித்தல். 'புக்குலாயவெம் பொழியரத்தநீர், ருக்கிலாததெவ வுலகமுழு யாய்' எனறு பாடமோதுவாருமுளர். (அசு)

அள. இந்திரன்றனிப்புதல்வனின்னளிச்
சந்திரன்றழைத்தனையதன்மையா
னந்தகன்றனக்கரியவாணையான்
முந்திவந்தனனிவனின்மொய்ம்பினோய்.

(இ - ன்.) மொய்ம்பினோய்-வலிமையுடையவனே!—இந்திரன்-தேவேந் திரனது, தனி - ஒப்பில்லாத, புதல்வன்-புத்திரனாகிய அவன,—இன் அளி - இனிமையான குளிர்ச்சியையுடைய, சந்திரன் - பூரணசந்திரன், தழைத்த னைய - விளங்கினாற் போனற, தன்மையான - தன்மையை [வெண்மை றத்தை] யுடையவன; அந்தகன் தனக்கு - யமனுக்கும், அரிய - கடப்பதற்கு அருமையான, ஆணையான - ஆஜ்ஞையுடையவன; இவனின - இச்சுக்கிரீ வனைக்காட்டிலும், முந்தி - முன்னே [தமையனை], வந்தனன - (ஒரே தாய் வயிற்றிற்) பிறந்தவன; (எ - று.)

இதனால், வாலியின், மேனிறத்தையும், எல்லோரையுங் கீழ்ப்படித்து நடக்கச்செய்யுந் தன்மையையுங் கூறினார். அந்தகன் - (பிராணிகளுக்கு) அழி வைச் செய்பவன். அந்தகன தனக்கும் என்ற உயர்வுநிறப்பும்மை, விகாரத் தால் தொக்கது. தழைத்தனைய எனபதை - தழைத்தாலனைய என எச்சத் திரிபாகவாவது, தழைத்ததனைய என்பதன் விகாரமாகவாவது கொள்க. ஆணை - ஆஜ்ஞா என்ற வடசொல்லின் சிதைவு. (அள)

அஅ. அன்னவன்னெமக்காசனுகீவ
பின்னவன்னிளம்பதமியற்றுநாண்
முன்னவன்குலப்பகைஞன்முட்டினன்
மின்னெயிற்றுவாளவுணன்மேண்மையான்.

(இ - ன்.) அன்னவன் - அவ்வாலி, எமக்கு அரசன் ஆக - எல்லோருக்கு [வானரங்கட்கெல்லாம்] ராஜாவாக இருக்க, இன்னவன்-இச்சுக்கிரீவன், இளம்

பதம் - இனவராசாட்சியை, இயற்றும் - நடத்திவருகின்ற, நான்-காலத்தில்,— மேன்மையான்-பெருமையையுடையவனுகிய, மின் எயிறு - மின்னல்போல வெளிப்பட்டு ஒளிங்குகின்ற கோரப்பற்களையுடைய, வாள் - வாள்போற் கொடிய, அவுணன் - ஓர் அசுரன [மாயாவியென்பவன], குலம் பகைஞன் - (எங்கள்) கூட்டத்துக்குச் சத்துருவாய், அவன் முன் - அவ்வாலியெதிரே வந்து, முட்டினன் - எதிர்த்துப் போர்செய்தான் ; (எ - று.)

சுக்கிரீவன் வாலி இவ்விருதிறத்தாரிற் சேர்ந்த வானரர்கட்கெல்லாம் தம்மிற் பகையுண்டானதற்கு மாயாவியென்னும் இவ்வசுரன வாலியினுடன் போர்செய்யவந்ததே முதன்முதற்காரணமாய் நின்றதுபற்றி, அவனை 'எம் குலப் பகைஞன்' எனக கூறினனென்க. இனி, குலப் பகைஞன் - சிறந்த பகைவனென்றவாறுமாம் ; 'குலகிரி' என்றற்போல. பதம்-வடசொல். 'அன்னவன்னெமகு' 'இனனவன்னிளம்' என்றவற்றில், னகரவொற்று-விரித்தல் விகாரம். இளம்பதம் - யுவராஜபட்டம். வாள் - மற்றை ஆயுதங்கட்கும் உபலக்ஷணமாய், படைகளையுடைய பகைவனென்றுமாம். இனி, வாளெயிறு என இயைத்து - வாள்போன்ற தந்த மென்றலுமாம். (அஅ)

அக. முட்டிநின்றவன்மூரணுரத்தினே
சொட்டவஞ்சிநெஞ்சுலையவோடினன்
வட்டமண்டலத்தரிதுவாழ்வெனு
வெட்டருமபெரும்பிலனுளெய்தினன்.

(இ - ன்.) (அவ்வசுரன்), முட்டி நின்று - (அவ்வாறு) எதிர்த்துப் போர் செய்து நின்று, (வாலியின்வலிமை தனவலிமையினும் மிகுகிருததலை கோக்கி), அவன் முரண் உரத்தின் நேர் - அவ்வாலியினது வலிய பலத்துக்கு எதிரில், ஒட்ட - பொருந்துதற்கு, அஞ்சி - பயந்து, நெஞ்சு உலைய ஓடினன் - மனம் வருந்த ஓடிப்போய்,—'வட்டம் மண்டலத்து - வட்டவடிவாகிய இப்பூமண்டலத்துள், (இருந்தால்),— வாழ்வு-உயிரோடு வாழ்ந்திருப்பது, அரிது-(எனக்கு) அருமையானதாம்', எனு - எனது எண்ணி,—எட்டு அரு - பாய்ந்து செல்லுதற்கு அருமையான, பெரும் பிலனுள் - பெரிய பாதாளலோகத்து வழியில், எய்தினன - சென்றான் ; (எ - று.)

அவ வாலியோடு போர்செய்ய முடியாமற் பினவாங்கிய மாயாவி இவ்வுலகத்தில் இருந்தால் வாலி தவறுமற் கொல்வான் என்று சங்கித்துப் பாதாளலோகத்தில் ஒளிப்பதற்குப் பிலத்துவாரதிற் புகுந்தனனெனபதாம். முட்டிநின்றவன் என்று எடுத்து மாயாவியெனக் கொண்டால், 'மூரணுரத்தின்' என்பதற்குமுன் 'வாலியினது' என வருவிக்க. ஓடினன் - முற்றெச்சம். பிலன் - பிலமென்பதன ஈற்றுப்போலி. (அக)

கூ0. எய்துகாலையப்பிலனுளெய்தியா
னெய்தினங்கவற்கொணர்வெனென்னையாய்
செய்திகாவனீசிறிதுபோழ்தெனு
வெய்தினெய்தினன்வெகுளிமேயினன்.

(இ - ள்.) எய்த காலை - (இவ்வாறு மாயாவி) புகுந்த பொழுதில்,— வெகுளி மேயினன் - கோபம் பொருந்தியவனான வாலியானவன், (சுக்கிரீவனை நோக்கி), 'நோன்மையாய் - வலிமையையுடையவனே! யான், அ பிலனுள் எய்தி - அந்தப்பிலத்தவாரத்திட் புகுந்து, அங்கு - அங்கே (புகுந்துள்ள), அவன் - அவ்வசுரனை, நொய்தின் - வீரைவிலே, கொணர்வென் - பிடித்துக் கொண்டுவருவேன்: சிறிது போழ்து (அங்ஙனங் கொண்டுவருகின்ற) சிறிது நேரமட்டில், நீ—, காவல் செய்தி - (வேறொருவகையால் அவன் வெளிப் பட்டுப் போய்விடாதபடி இப்பிலத்தவாரத்தின் வாசலிலேயே) காவல் காத்துக் கொண்டிரு,' எனை - என்று சொல்லிவிட்டு, வெய்தின் - உக்கிரமாக, எய்தினன் - (பிலத்தினுட்) போனான்; (எ - று.)

மாயாவி பிலத்தினுட்புக்கதைக்கண்டு வாலியானவன் மிக்கசினங்கொண்டு தன் தம்பியாகிய சுக்கிரீவனை அப்பிலவாயிலிற் காவல்வைத்து மாயாவியைத் தொடர்ந்துசென்றனனென்பதாம். நோன்மையாய் - திருவடி பெருமானை முன்னிலைப்படுத்திய விளியுமாம். அவற்கொணர்வென் - இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால், "இயல்பின் வீகாரம்," நொய்தின் - எளிதில் என்றும், வெய்தின் - வீரைவாக என்றுங் கொள்ளலாம். செய்தி என்ற ஏவலொருமை முற்றில், த் - எழுத்துப்பேறு. 'காலையிற்பிலனுளெய்தி', 'நொய்தினிற்கவற் கொணர்வென்' என்பன - பாடபேதம்.

ஈற்றடியிற் பிராஸமும், முன்செய்யுளோடு இச்செய்யுள் அந்தாதித் தொடையாகத் தொடர்ந்தமும் கருதத்தக்கன. (கூ)

கூக. எகிவாலியும்மிருதுவேழொடேழ்
வேகவெம்பிலந்தடவிவெம்மையான்
மோகவென்றிமேன்முயல்வின்வைகிடச்
சோகமெய்தினன்றனைதுளங்கினான்.

(இ - ன்.) வாலியும்—, எகி - சென்று, இருது ஏழொடு ஏழ்பதினொன்கு ருது [இருபத்தெட்டுமாச]காலம்வரையிலும், வெம்பிலம்-கொடிய அப்பிலத்தினுள்ளே, வேகம்-வேகத்தோடு, தடவி - தேடிப்பார்த்து, (அவனைக் கண்டு), வெம்மையான் வென்றி மோகம்மேல்-கொடுந்தன்மையையுடைய அவ்வசுரனை வெல்லுதலாகிய வீரப்பற்றரும் பொருளின்மேல், முயல்வின் - முயற்சியிலே, வைகிட - பொருந்தியிருக்க,—தனை - தம்பியான சுக்கிரீவன், சோகம் எய்தினன் - துன்பமடைந்தவனும், துளங்கினான் - கலங்கினான்; (எ - று.)

பிலத்துட்சென்ற வாலியானவன் அசுரனைத் தேடுதலும், தேடிக்கண்டு பிடித்தலும், பிடித்துப் போர்செய்தலுமாகிய தொழில்களிற் பொருந்தி இருபத்தெட்டுமாசம்வரையிலும் வெளிவராததனால், அவனுக்கு என்ன அபாயம் நேர்ந்ததோ என்று காவல்காத்துநின்ற சுக்கிரீவன் கலங்கினனென்பதாம். இருது - இரண்டு மாச காலங்கொண்டது. இருது, பருவம் என்பன - ஒரு பொருட்சொற்கள். சித்திரையும் வைகாசியும்-வசந்தருதுவென்றும், ஆனியும் ஆடியும் - க்ரீஷ்மருதுவென்றும், ஆவணியும் புரட்டாசியும் - வர்ஷருதுவென்

றும், ஐப்பசியும் கார்த்திகையும் - சாத்ருதுவென்றும், மார்கழியும் தையும் - ஹேமக்தருதுவென்றும், மாசியும் பங்குனியும்-சிசிரருதுவென்றும் கூறப்படும். ஏழொடேழ் - ஏழோடுகூடிய ஏழு. ஏழ் - ழகரமெய்யீற்றுப் பெயரென்பது, தொல்காப்பியனார்கொள்கை;நன்னூலார் முதலாயினர்,எழு என்னும் முற்றிய ஓகாரவீற்றுப்பெயர் விகாரப்பட்டு அவ்வாறு நிற்குமென்பர். வென்றியாகிய மோகம்மேல் என மாறுக. இருபத்தெட்டுமோதங் கழியவும் அதனைக்குறித்துச் சிறிதும் ஆலோசனையின்றி அவ்வசுரனை வெல்வதிலேயே கருத்தாயிருந்ததனால், வெனறியை 'மோகம்' என்றார். வாலி, ருது, வேகம், பிலம், மோஹம், ஸோகம்-வடசொற்கள். வெம்மையான் - வாலியாகவுமாம். வென்றிமோகமேல் வெம்மையான எனக கூட்டி, வெற்றியாகிய மோகத்தில் வீருப்புடையவனை வாலியென்றும் உரைக்கலாம். வாலியும் மிருது—மகரவொற்று - விரித்தல்- 'மோகமோடமர்முயல்வின் வைகிட' என்ற பாடமோதுவாருமுளர். 'வெம்மை சால்,' 'சோகமெய்தி நின்றனைதளர்ந்தனன்' என்பன - பாடாந்தரம். (கூக)

கூஉ.. அழுதழுங்குறும்பிவனையன்பினிற்
றொழுதிரந்துநின்றொழிலிதாதலா
லெழுதுவென்றியாயசுசெய்கெனப்
பழுதிதென்றனன்பரியுநெஞ்சினன்.

(இ - ன்.) அழுது - புலம்பி, அழுங்குறும் - வருந்துகின்ற, இவனை.இச் சுக்கிரீவனை, (நாங்களெல்லாம்), அன்பினில் - அன்போடு, தொழுது-வணங்கி, இரந்து - பிரார்த்தித்து, எழுது வென்றியாய் - (நூல்களிற் சிறப்பித்து) எழுதத்தக்க வெற்றியையுடையவனே! நின் தொழில் இது ஆதலால் - உனது செய்கை இது [அரசாட்சி] ஆகையால், அரசு செய்க - அரசாட்சி செய்வாயாக,' என - எனறு சொல்ல,—பரியும் நெஞ்சினன் - தக்கிக்கின்ற மனமுடையனனை அச் சுக்கிரீவன், இது பழுது எனறனன்.இது குற்றமாமென்று சொன்னன் ; (எ - று.)—பரிதல்-பரிதபித்தல்.

நெடுநாள் கழிந்தும் வாலி மீண்டுவராததனால் 'அவ்வாலிக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டதோ?' என்ற அதிசங்கையினால் இச்சுக்கிரீவன் மனங்கலங்கி நிற்க, நாங்கள் இவனைத்தேற்றி 'யுவராஜாவாகிய நீயே வாலிக்குப்பிறகு அரசு புரியவேண்டும்' என்று வற்புறுத்திக்கூறவும் இச்சுக்கிரீவன் அதனைத் தடுத்துக் கூறலாயினனென்பதாம். இங்கே, இரத்தல் - வேண்டுதல். 'நின் தொழில் இதாதலால்' என்றது - அரசனுகிய வாலிக்குப்பின்பு அரசாள வேண்டுவது இளவரசனுகிய உனது கடமையாகையால் என்றபடி. எழுதல் - ஆங்காங்குத் தனது வென்றியைச் சிலாசாஸனமாகக் கற்களில் எழுதி நாட்டிவைத்தலுமாம். அழுங்குறும்பிவனை—மகரவொற்று - விரித்தல். 'அரசு கொள்கென' என்றும் பாடமுண்டு. (கூஉ)

கூஊ. என்றுதானுமவ்வழியிரும்பிலஞ்
சென்றுமுன்னவற்றேடிவேனவற்
பொன்றுவேனெனப்புகுதன்மேயினன்.

(இ - ன்.) என்று - என்றுசொல்லி,—தானும் - சுக்கிரீவனும்,—'இரும் பிலம் சென்று-பெரிய பிலத்தினுட் புகுந்து, அ வழி-அவ்விடத்தில், முன்—வன் - தமையனை, தேடுவேன் - தேடிப்பார்ப்பேன்; (அவன் 'இறக்துபோயிருக்தால்), அவன் கொன்று உளான்தனை - அவனைக்கொன்றுள்ள பகைவனை (போர்செய்து கொல்லுவேன்); கொல ஒணாது எனின் - கொல்ல முடியாதாயின், பொன்றுவேன் - (போரில்) இறப்பேன்,' எனு - என்று சொல்லி, புகுதல் மேயினன் - (அப்பிலத்தில்) நுழையப் போயினன்; (எ - று.)

'வாலி சென்ற பிலத்தினுட் புக்குப் பார்த்து அவ்வாலியை அசுரன் கொன்றிருப்பின் அவனைக்கொல்வேன்; அன்றி, யான் இறப்பேன்' என்று சுக்கிரீவன தனது துணிவை யெடுத்துக் கூறினனென்பதாம். ஒணாது=ஒன்றாது: மரூஉ. 'கொல்வனன்றெனில்' என்று பாடமோதுவாரு முளர். 'அன்று தானுமவ்வழி யரும்பிலஞ், சென்றுமுன்னவற்றேடிகானவற், கொன்றுளார் தமை' என்று சில பிரதிகளுள. (கூக)

கூச. தடுத்துவல்லவர்தணிவுசெய்துநோ
யெடுத்ததேவேலியோரியைவினையைக்
தடுத்ததகாவலும்மரிகளாணையாற்
கொடுத்ததுண்டிவன்கொண்டனன்கொலாம்.

(இ - ன்.) வல்லவர் - சொல்வன்மையையுடைய மந்திரிமார் முதலியோர், தடுத்து - (இவன்செல்வதைத்) தடைசெய்து, தணிவு செய்து - சமாதானவார்த்தைகள் சொல்லி, நோய் - (இவனுடைய) துக்கத்தை, எடுத்த வேலை - போக்கின [தேற்றின] பொழுது,—அடுத்த காவலும் - பொருந்திய அரசாட்சியையும், கொடுத்தது உண்டு -(அவ்வாரசிரேஷ்டர்கள் இவனுக்குக்) கொடுத்தது உண்டு; (அவ்வரசாட்சியை), இவன் - இச்சுக்கிரீவன், அரிகள் ஆணையால் - அக்குரங்குகளின் ஏவலை மறுப்பதற்கு அஞ்சி அதனலேயே, ஓர் இயைவினல் இயைந்த - ஒருவாறு உடன்பட்டு, கொண்டனன் கொல் ஆம் - ஏற்றுக்கொண்டான் போலும.

நாங்கள் வற்புறுத்திக்கூறவுங்கேளாது இவன்செல்வதைக் கண்ட மந்திரிமார் இவனைத் தடுத்துப் பலவாறு சமாதானங்கூறி இராச்சியத்தை யாளுமாறு பட்டங்கட்டித்தாரவே, இச்சுக்கிரீவன் அம்மந்திரிமாரது கட்டளையைக் கடக்க மாட்டாமல் அரசாளுதலை உடன்பட்டானேயன்றி முழுச்சம்மதத்துடன்ஆட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதாம். இதனல், சுக்கிரீவன்மீது சிறிதுங் குற்றமில்லை யென்பதைத் தெளிவாகக் கூறியவாறும். கொல் ஆம - அசை. காவலும் மரிகள்—மகரவொற்று - விரித்தல். ஹரி - வடசொல். இரண்டாமடிக்கு - 'எடுத்தவன்தனக்கிறைமையோடியைத்து' என்று பாடமோதுவாரு முளர். 'தடுத்துவல்லவர்,' 'நோய், கெடுத்தமேலையோர் கிளத்த நீதியால்' என்றும், 'கொண்டிலன்கொலாம்' என்றும் பாடம் காணப்படுகின்றது. (கூச)

கூஙி. அன்னகாளின்மாயாவியப்பிலத்
தின்னவாயினூடெய்துமெண்ணியாம்
பொன்னின்மால்வரைப்பொருப்பொழித்துவே
றுன்னுகுன்றெலாமுடனடுக்கினேம்.

(இ - ன்.) அன்ன காளில் - அந்தக்காலத்தில்,—'மாயாவி - (வாலியைக் கொன்ற) மாயாவியானவன், அ பிலத்து - அப்பிலத்திலிருந்து, இன்ன வாயினூடு - இத்தவ்ழியால், எய்தும் - வருவான், என்ன - என்று எண்ணி,—யாம் நாங்களெல்லாம், பொன்னின் மால் வரை பொருப்பு ஒழித்து-பொன்மயமான மகாமேருகிரியாகிய ஒருமலை ஒழியவிட்டு, வேறு உன்னு குன்று எலாம் - மனத்தால் கினைக்கப்படும் மற்றைமலைகளெயெல்லாம், உடன் - ஒருசேர, அடுக்கினேம் - (கொண்டுவந்து ஒன்றன்மே லொன்றாக) அடுக்கி வைத்து (ப் பிலத்துவாரத்தை) அடைத்துவிட்டோம்; (எ - று.)

மாயாவி - மாயையுடையவன்; இவனும், துந்துபியும் - இராவணன்மனை வியான மந்தோதரியின் உடன்பிறந்தவர்: இவர்கள் தந்தை - அசுரசிற்பியான மயன்; தாய் - ஹேமா என்ற அப்ஸாரஸ்த்ரீ: வெகுநாள்கழித்துவிடவே, அம் மாயாவி பிலத்தினுள் வாலியைக் கொன்றுவிட்டா னென்று வானரர்கள் மாறு கக் கருதி, அதனால், சுக்ரீவனுடியோரையும் கொல்லுதற்கு அம்மாயாவி மீண்டு வருதல்கூடு மென்றெண்ணி அங்ஙனம் வரவொட்டாமல் வழி யடைத்தனரென்க. பின்னிரண்டடி - உயர்வுநவிற்சியணி. 'வாயினூடேறு மென்ன' என்பதும் பாடம். (கூடி)

கூசு. சேமமவ்வழிச்செய்துசெங்கதிர்க்
கோமகன்றனைக்கொண்டுவந்தியா
மேவுகுன்றின்மேல்வைகுமவ்வேலைவா
யாவியுண்டனனவ்வியன்னவன்.

(இ - ள்.) யாம் - நாங்கள், அ வழி - அந்தவழியை, சேமம் செய்து - (அடைத்தலாகிய) காவலைச்செய்து, செம் கதிர் கோ மகன்தனை கொண்டு வந்து - சிவந்த கிரணங்களையுடைய சூரியபகவானது குமாரனாகிய சுக்ரீ வனை அழைத்துக்கொண்டுவந்து, மேவு குன்றின்மேல் வைகும் - (இருப்பிட மாகப்) பொருந்திய இம்மலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, வேலைவாய் - காலத்தில்,—(அங்கே), அன்னவன் - அவ்வாலி, அவனை - மாயாவியை, ஆவி உண்டனன் - உயிர் குடித்தான் [கொன்று னென்றபடி]; (எ - று.)

வழியடைத்தபின்பு நாங்கள் சுக்ரீவனை அழைத்துக்கொண்டு இம்மலை யில் வாழ்ந்துகொண்டிருக்கையில் வாலி மாயாவியைக்கொன்றிட்டன னென் பதாம். சேமம் - க்ஷேமமென்னும் வடமொழியின் விகாரம். 'சேமமவ்வழிச் செய்து' என்பது - கீழ்க்கவியின் அநுவாதம். வக்ரியம் - குற்றியலிகரம். ()

கூஎ. ஒளித்தவன்னுயிர்க்கள்ளையுண்டுளங்
களித்தவாலியுங்கடிதினேய்தினன்
வீளித்துநின்றுவேறுரைபெறுணிருந்
தளித்தவாறுநன்றிளவலாரென.

இதவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ன்.) ஒளித்தவன் - (பிலத்தில்) மறைந்தவனை மாயாவியினது, உயிர் - பிராணனுகிய, கள்ளை - மதுவை, உண்டு - குடித்து [மாயாவியைக்

கொன்று], உளம் களித்த - மனம் மகிக்க [செருக்கடைய்]ப் பெற்ற, வாலியும்—,கடிதின் - விரைவாக, எய்திஞன் - (பிலத்தின்வாயிலில்) வந்து, (வழி அடைபட்டிருப்பதைப் பார்த்து), விளித்து நின்று - (தம்பியைக்) கூப்பிட்டு நின்று, வேறு உரைபெறுன்-பிரதியுத்தரத்தைப் பெறுதவனுய், 'இளவலார்-(நமது) தம்பியார், இருந்து - (வாயிலில்) இருந்து, அளித்த ஆறு-காவல்செய்த விதம், நன்று - நன்றுயிருந்தது!' எனு - என்று எண்ணி, (எ - று.)—'எனு' என்பது, வருங் கவியில் 'எற்றலும்' என்பதனேடு முடியும்.

சிறிதும் ஆராய்ச்சியின்றி உடனே வெகுண்டதனுல், 'களித்த' என்றும்' 'கள்ளுயுண்டு' என்றுங் கூறினர். பகைவனேக் கொன்றதனுலுண்டான வெற்றிச்செருக்கை, உயிர்க்கள்ளுண்டு உளங்களித்ததாக்குறித்தார்: தற்குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு, 'உயிராகள்ளுயுண்டு' எனற உருவகவணி அங்கமாய்வின்றது. வேறுரை - எதிர்மொழி. 'அளித்தவாறு நன்று' என்றதும், 'இளவலார்' எனப் பலர்பாற்கு உரிய 'ஆர்' விகுதி கொடுத்துக கூறியதும் - இகழ்ச்சிக் குறிப்பு. இளவல - பண்படியாப்பிறந்த பெயர்; அல் - பெயர்விகுதி. பலர்பாலாற்கூறுதல் உயர்த்தற்கண்ணதனுரே வெனின்,—"தாம் வந்தார் தொண்டனுர்" என்றுற்போல உயாசொல்தானே குறிப்புநிலையால் இழிபுவிளக்கிற்றென்க. 'பெருன்விசைத்தளித்த' எனறும் பாடமுண்டு. (கூஎ)

கூஅ. வால்விசைத்துவான்வளிநிமிர்ந்தெனக்
கால்விசைத்தவன்கடிதினெற்றலு
நீல்நிறத்துவிண்ணெடுமுகட்டவும்
வேலைபுக்கவும்பெரியவெற்பெலாம்.

(இ - ன்.) அவன் - அவவாலி, வால் விசைத்து - வாலே வலிமையோடு தூக்கி, கால் விசைத்து - காலேப் பலமாக ஏடுத்து, வான வளி நிமிர்ந்து என-பெருங்காற்று எழுந்தாற்போல, கடிதின - வேகமாக, எற்றலும - உதைத்தத்தன்னிணமாத்திரத்தில்,—பெரிய வெற்பு எலாம் - (நாங்கள அடைததுவைத்த) பெருமலைகளெல்லாம், நீல் நிறத்து விண் நெடு முகட்டவும் - நீலநிறத்தையுடைய ஆகாயத்தினது உயாந்த உச்சியை யடைந்தனவும், வேலை புக்கவும் - கடலில் விழுந்தனவும் (ஆயின); (எ - று.)—'ஆயின' என வினே வருவிக்க.

அவவாறு சுக்கிரீவனமீது மிக்கசினங்கொண்ட வாலி தனது தாளிஞல் ஒருதையுதைத்தலும், பிலத்தைமூடியிருந்த மலைகளெல்லாம் வானிலும் கடலிலுமாகச் சென்றுசேர்ந்திட்டன வெனபதாம். நீலமெனபது, கடைக்குறையாக 'நீல்' என நின்றது. முகட்ட - பலவினபாற் குறிப்பு வினேயாலணையும் பெயர். புக்க - தெரிநிலே வினேயாலணையுமபெயா. 'வழிநிமிர்ந்தெனக், கால் பெயர்த்தவன கடிதுதைத்தலுந், நீல்நிறத்தவானெடுமுகட்டவும்' என்று சில பிரதிகளுள்ளன. மூனறுமடியில் 'நீல்நிறம்' எனறவிடத்து இடைநிலேமெய்ம்மயக்கம்இலதாகவுஞ் சந்திபெறுது, எதுகைதொடையின் பொருட்டெனக, 'வால் விசைத்து மாவழிநிறத்திட' என்று பாடமோதுவாரு முளர். (கூஅ)

கூகூ. ஏறினனவன்னெவருமஞ்சுறச்
சீறினனெடுஞ்சிகரமெய்தினன்
வேறிலாதவன்புதல்வன்மெய்ம்மையா
மாறினனும்வந்தடிவணங்கினன்.

(இ - ன்.) அவன் - வாலி, ஏறினன் - (பிலத்தினின்று) ஏறியவனும், எவரும் அஞ்சுற - யாவரும் பயப்படும்படி, சீறினன் - கோபித்து (இரைந்து கொண்டு), நெடுஞ் சிகர - பெரிய இம்மலையுச்சியை, எய்தினன் - அடைந்தான்; மெய்ம்மை ஆம் ஆறினன் - சத்தியமான வழியிற் செல்பவனுடைய, வேறு இல் - (மனத்தில்) வேறுபாடில்லாத, ஆதவன் புதல்வனும் - சூரிய புத்திரனான சுக்கிரீவனும், வந்து—, அடி வணங்கினன் - (தமையனது) பாதத்தில் வீழ்ந்து வணங்கினன்; (எ - று)

வாலியானவன் விசையோடு அம்மலைகளேத்தள்ளிப் பின்பு மிக்கசீற்றத்தோடன இம்மலையையடைய, சுக்கிரீவன மனத்திற் களங்கமில்லாதவனுதலால் அவ்வாலியினடிகளே வணங்கின னென்பதாம். மனத்திற் களங்கமின்றிப் பெரியவாநராகளின கட்டளேப்படியே நடந்தவனுதலால், 'வேறு இல்' என்றும், 'மெய்ம்மையாம் ஆறினன்' என்றுங் கூறினர்; அதுபற்றியே, அவன் அஞ்சியொடுங்கியொளியாமல் எதிர்வந்து வணங்கியது மென்க. ஆதவன் - ஆதபன: நனருகத் தபிப்பவன; தபித்தல்-வெயில்காய்தல். அவன்னெவரும்-னகரமெய் - விரித்தல்விகாரம். 'வேறிலாதவன் புகவு மெய்ம்மையால்' என்று பிரதிபேதம். (கூகூ)

கஂ0. வணங்கியண்ணநின்வரவிலாமையா
லுணங்கியுன்வழிப்படரவுன்னுவேற்
கிணங்குகரின்மையாலிறைவநும்முடைக்
கணங்களுங்காவலுன்கடன்மையென்றனர்.

(இ - ன்.) வணங்கி - (சுக்கிரீவன்) தண்டனிட்டு, (வாலியைநோக்கி), அண்ண - மூத்தவனே! இறைவ - தலைவனே! நின வரவு இலாமையால் - (வெகுநாள்வரையில்) உன வருகை இல்லாமையால், உணங்கி - ('உனக்கு என்ன நேர்ந்ததோ?' என்று) வருந்தி, உன வழி படர - உன்னிடம் வந்து சேரும்படி, உனனுவேற்கு - எண்ணிப்புறப்பட்ட எனக்கு, நும் உடை கணங்கள்-உம்முடைய கூட்டத்தார் [மந்திரிகள் முதலிய வாநரர்கள்], இணக்கர் - இன்மையால் சமமதமில்லாமையால், 'காவல் - (எங்களேக) காத்தல் [அரசாளுதல்], உன கடன்மை-உனது கடமையாம்,' என்றனர்-என்றார்கள்; (எ - று.)

சுக்கிரீவன் நேமையான வழியில் நடப்பவனுதலால், வாலிகேட்பதற்கு முன்னமே தன்மீது சிறிதுங்குறையில்லேயென்னத் தெளிவிக்குமாறு நிகழ்ந்த செய்தியையுளப்படி வாலியினிடத்துக்கூறலாயினனென்க. உன்னுவேற்கு - நான்கனுருபு,கொள்ளுதற்பொருளது. 'இணங்கு'என்னும்முதனிலேத்தொழிற் பெயராகிய மெனறொடர்க்குற்றியலுகரத்திற்கு, 'இணக்கர்' என அர்போலி பாய்வந்தது. 'இணக்கல்' எனப் பாடங்கொள்ளுதல், கேர். இறைவ நும்முடை-

ஒருமைப்பன்மையமக்கம்; மரியாதைபற்றி வந்ததனால், கழுவமைதி. இறைவராகார்கள் சுக்கிரீவனைக்குறித்த விளியுமாம். இச்செய்யுளில் 'ஆண்ண' என்றதுமுதல் அடுத்தசெய்யுளில் 'பொருய்' என்னுமளவும், முன்னே வாலியினிடத்துச் சுக்கிரீவன்கூறியதை அநுமான் அநுவதிக்கின்றான். கணம் - வடசொல். 'அண்ணனின்' என்ற பாடதத்துக்கு, அண்ணன் என்றும் பிரித்து அண்மை விளியாம்; அண்ணல் என்று பிரித்தலுமொன்று. 'கடமை' என்பதும் பாடம். (கூ00)

கூ0க. ஆணையஞ்சியிவ்வரசையெய்திவாழ்
காணிலாதவென்னவையைநல்குவாய்
பூணுலாவுதோளிணைபொருவெனக்
கோணினானெடுங்கொடுமைகூறினான்.

(இ-ள்.) (என்று நிகழ்ந்தவரலாற்றைக் கூறிப் பின்னும் சுக்கிரீவன் வாலியைநோக்கி), 'பூண் உலாவு தோள் இணை - ஆபரணங்கள் அசைந்து விளங்கப்பெற்ற இரண்டு தோள்களையுடையவனே!—ஆணை அஞ்சி - (அவ்வாகார்களின்) கட்டளையை (மறுப்பதற்குப்) பயந்து, இ அரசை எய்தி-இந்த அரசாட்சியை யடைந்து, வாழ்-(உண்மிடம் வராமல் இங்கேயே) வாழ்ந்துகொண்டிருந்த, நாண் இலாத-வெட்கமில்லாத, என்-எனது, நவையை - குற்றத்தை, பொருய் நல்குவாய் - பொறுத்தருள்வாயாக', என - என்று வேண்டவும்,—கோணினான்-(வாலி) மனம் மாறுபட்டவனாய், கெடுங் கொடுமை கூறினான்-பெரிய கொடிய வார்த்தைகளைச் சொன்னான்; (எ - று.)

தனக்கு இஷ்டமில்லாமலிருக்கவும் வாகராகளின வேண்டுகோளினால் தான செய்த காரியம் அரசாட்சியில் விருப்பத்தாற் செய்ததென வாலி எண்ணுதற்கு இடமாய் நிற்றலால், 'காணிலாத என நவையை' என்று அபூர்வமாக நோந்த தனகுற்றத்தை வெளிப்படையாகக்கூறி, 'பொருய்' என்று சரணமடைநதன னென்க. (சுகரீவன இவவாறு சரணகதனாகவும் வாலி கூமியாமற் போனதனாலேயே, தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப்பிறந்த ஸ்ரீராமன ஸரணாகதரக்ஷணரூபமான தர்மத்துக்கு விரோதியான வாலியை நிரஸித்தன னென அறிக.) பூணுலாவுதோளிணை - அனமொழிததொகை; அண்மை விளி.'தோளினை' என்னும் பாடம். கோணுதல்- சுகரீவன தன்கட்டளையைத் தவறி அரசச்செல்வத்திலுண்டான ஆசையால் இப்படிசெய்தானென்றே எண்ணியதனால். நல்குவாய் - அரசாளுவாய் என்றுமாம். கொடுமைகூறுதல்-நிஷ்டூரவார்தைகள் சொல்லுதல். (கூ0க)

கூ0உ. அடல்கடந்ததோளவணியஞ்சிவெங்
குடல்கலங்கியெங்குலமொடுங்கமுன்
கடல்கடைந்ததெவங்கரதலங்களா
லுடல்கடைந்தனனிவனுலகிலுள்ளோர்.

(இ - ன்.) (கொடியசொற்களைக் கூறியபின்னும் வாலியானவன்),—அடல் கடந்த - வலிமைமிக்க, தோள் - புயங்களையுடைய, அவனை - அவ்வாலியை, அஞ்சி - பயந்து, வெம் குடல் கலங்கி - கொடிய குடலும் கலங்கிப்போய், எம்

குலம் ஒடுங்க - எங்கள் [வானரங்களின்] கூட்டமெல்லாம் பதுங்கியொளியும் படி,—முன் கடல் கடைந்த-முற்காலத்தில் திருப்பாற்கடலை மதனஞ்செய்த, வெம் கரதலங்களால் - கொடிய (தனது) கைகளால், உடல் - (சுக்கிரீவனது) உடலை,கடைந்தனன்-குத்திக் குமைத்துக் கலக்கினன்; (அதனால்), இவன்—, உலைந்தன்ன் - மிகவருந்தினனன்; (எ - று.)

கொடியசொற்களைக்கூறியதோடு நில்லாமல் வாலி நாங்கள் பலரும் அஞ்சிக் கலங்கும்படி எம்முன்னிலையிலேயே சுக்கிரீவனைக் குத்திக்குமைத்தனனென்பதாம். இனி, அடல் கடந்த தோள் - (பகைவர்களின்) வலிமையை அடக்கி,வெற்றிகொண்ட தோளென்றுமாம். ஒடுங்கக் கடைந்தனன் என இயையும். "அச்சக்கிளவிக்கு ஐந்து மிரண்டும்" என்ற தொல்காப்பியத்தால், 'அவனையஞ்சி' என்றார். (கூ)

கூ. இவனுலைந்துலைந்தெழுகடற்புறத்
தவனியுங்கடநதெயிலடைந்தனன்
கவனமொன்றிலான்கால்கடாயென
வவனிவேலையேழரியின்வாவினான்.

(இ - ள்.) இவன் - சுக்கிரீவன், உலைந்து உலைந்து - மிகவருந்தி, எழு கடல் புறத்து அவனியும் - ஏழு சமுத்திரங்களுக்கும் அப்புறத்திலுள்ள பூமியையும், கடந்து - தாண்டி, எயில் - (அண்டச்) சுவரை, அடைந்தனன் - சேர்ந்தான்; கவனம் ஒன்று இலான் - கவலைதீர்தலில்லாதவனான வாலியும், கால் கடாய் என - காற்றுச் சென்றாற்போல [வரையுவேக்மாய்], அவனி வேலை ஏழ் - பூமியைச்சூழ்ந்த ஏழு சமுத்திரங்களையும், அரியின - சிங்கத்தைப் போல, வாவினான - (அலக்ஷ்யமாகத்) தாண்டிப் பாய்ந்தான்; (எ - று.)

வாலியினிடத்தினின்று தப்பி யோடிவிடவேண்டு மென்னுங் கருத்தினாற் சுக்கிரீவன் ஏழுகடல்களைக்கடந்து அண்டபித்திகையை யடைய, வாலியும் பின தொடர்ந்தே சிங்கம் மலைப்பிரதேசங்களைத தாண்டுவது போல ஸப்த சமுத்திரங்களையும் மிக எளிதிறகடந்து சென்றன னென்பதாம். இனி, அரியின் என்பதற்கு விஷ்ணுவைப்போல வென்றும், சூரியனபோல வென்றும், தவளை போல வென்றும், குதிரைபோல வென்றும் பலவகையாகப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. கவனம் ஒன்று இலான் - (இவனைத் தொடர்ந்து பற்றுதலன்றி) வேறுகருத்தில்லாதவ னென்றுமாம். நானகாமடியின முதலில், அவன் இவனேலையேழ் என்ற பிரித்தும் உரைக்கலாம்; அவவுரைக்கு, 'அவனிவனேலையேழ்' என்றதன வகரமெய் தொக்க தெனக. உலைந்து உலைந்து - அடுக்கு, மிகுதிபற்றிய அ.கடாய்-கடாவினால் என்னும் எச்சத்தின் திரிபு.அவனி எனற வடசொல் - (அரசரால்) காக்கப்படுவது என்று காரணப்பொருள்படும்.

[அநுமான் கூறிவருகின்ற வரலாற்றைக் கேட்டு ஸ்ரீ ராமன் வியத்தல்.]

கூ. என்றுகாண்மகனியம்பவீசனு
நன்றுநன்றெனுநனிதொடர்ந்துபின்
சென்றவாலிமுன்சென்றசெம்மரு
னன்றுவாவுதற்கறிந்தனன்கொலாம்,

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) என்று—, கால்மகன் - வாயுபுத்திரனை அநுமான், இயம்ப - சொல்ல,—ஈசனும்-தேவனுமாகிய ஸ்ரீராமனும், 'நன்று நன்று-நன்றாயிருக்கிறது நன்றாயிருக்கிறது! கனி - மிகுதியாய் [வேகமாய்], பின் தொடர்ந்து சென்ற-பின்னே விடாமல் தொடர்ந்துபோன, வாலி-வாலியால்,—முன் சென்ற செம்மல்-முன்னேபோன சுக்கிரீவன், அன்று - அக்காளில், வாவுதற்கு - தாவிச் செல்ல, அறிந்தனன்கொல்ஆம் - அறிந்தான்போலும்', எனஎன்று, (எ-று.) —'எனஎன்' என்பது, மேற்கவியில் 'வியந்து' என்பதனோடு முடியும்.

வாலி பின்னே தொடரத்தொடர முன்னேசெல்லுகின்ற சுக்கிரீவன் பின்னும் வீரந்து செல்வதனால், 'பின்சென்றவாலியினால் முன்சென்ற செம்மல்வாவுதற்கு அறிந்தனன்கொல்' என்றார்: தற்குறிப்பேற்றம். இனி, பின்தொடர்ந்துசென்ற வாலி முன்சென்ற சுக்கிரீவனால் வாவுதற்கறிந்தனன்கொலென்றுமாம். நன்று நன்று - அடுக்கு, வியப்புப்பற்றியது. செம்மல் - பெருமையிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். வாவுதற்கு - குவ்வீற்று எதிர்கால வினையெச்சம்; து, அல் இரண்டும் - சாரியைகள். தான் - அசை. ஈசனுந்தன்று—நகரவொற்று - விரித்தல்.

இக்கவியும், அடுத்தகவியும் - சில அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றன வாயினும் பயில வழங்கா; இவற்றை 'வெள்ளிப்பாட்டு' என்பர்: வெள்ளியம் பல வாணத்தம்பிரா னென்பவர் பாடிச் சொருகியவை. (கo)

[ஸ்ரீராமன் பின்னுங் கூறுமாறு வினவுதல்.]

கoடி. இனையவாவியர்தளிவறன்னெடும்
வனையும்வார்கழற்கருணைவள்ளல்பின்
பினையவீரர்செய்தமையியம்பெனப்
புனையும்வாகையான்புகறன்மேயினான்.

(இ - ள்.) வனையும் வார் கழல் - அணிந்த பெரிய வீரக்கழலையுடைய, கருணை வள்ளல் - கிருபாமூர்த்தியான ஸ்ரீராமபிரான், இளவல்தனனெடும் - இளைய பெருமாளுடனே, இனைய ஆவியர்க்கு - இவ்வாறு அதிசயித்தி, (அநுமானை நோக்கி), 'இனைய வீரர் - வீரர்களாகிய இந்த வாலி சுக்கிரீவர்கள், பின்பு—, செய்தமை - செய்த வரலாற்றை, இயம்பு - சொல்வாய்,' எனஎன்று வினவ,—புனையும் வாகையான் - பொருந்திய வெற்றியையுடையவனை சிறிய திருவடி, புகறல் மேயினான்-சொல்லத்தொடங்கினான்; (எ-று.) —அதனை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

வாகை யென்ற ஒருவகைமரத்தின் பெயர் - அதன்மலர்க்கு முதலாகு பெயர்; போரில்வென்றவர் இதனைச்சூடுதல், மரபு: ஆகவே, புனையும் வாகையான்-போர்செய்து வெற்றிகொள்ளுதலையே தனக்கு அலங்காரமாகக் கொண்டவன் என்றபடி. ஆ - ஆறு என்பதன் விகாரம். புகறல் என்ற தொழிற்பெயரில், புகல் - பகுதி, தல்-விகுதி. மற்றவை - சந்தி. (கoடி)

[இதுமுதல் நான்கு கவிகள் - அநுமான் தான் சொல்லிவந்த வரலாற்றைக் கூறிமுடித்தல்]

கoக நக்கரக்கடற்புறத்தரண்ணுகாட்
செக்கர்மெய்த்தனிச்சோதிசேர்கலாச்
சக்கரப்பொருப்பிற்றலைக்குமப்
பக்கமுற்றவன்கடிதுபற்றினான்.

(பு - ள்.) நக்கரம் - முதலைகளையுடைய, கடல் - ஏழுகடல்களுக்கும், புறத்து - அப்பாலில், நண்ணும் - (சுக்கிரீவன்) இருந்தபொழுதில்,—செக்கர் - சிவந்த, மெய்-நிறத்தையுடைய, தனி - ஒப்பில்லாத, சோதி - ஒளி வடிவமான சூரியனது பிரகாசமும், சேர்கலா - சோராத, சக்கரம் பொருப்பின் தலைக்கும் - சக்கரவாளபருவதத்தினிடத்தக்கும், அப் பக்கம் - அப்பாலில், அவன்-வாலி, உற்று - சேர்ந்து, கடிது - விரைவிலே, பற்றினான் - (அங்கு ஓடிப்போயிருந்த சுக்கிரீவனைப்) பிடித்துக்கொண்டான்; (எ - று.)

கீழ்க்கூறியவாறு சக்கரவாளகிரிக்கும் அப்பால் அண்ட பித்திகையையடைந்த சுக்கிரீவன் அதற்குமேற்போக இடமில்லையாதலால் நிகைத்துநிற்கையில், அவனைத்தொடர்ந்துசென்ற வாலியும் அவனை விரைந்து பிடித்துக்கொண்டன னென்பதாம். பூமியைச்சுற்றிலுமுள்ள ஏழுகடலுக்கு மப்பால் கோட்டை மதில்போலச் சுற்றிலுமிருக்கின்ற சக்கரவாளபருவதத்துக்கு உட்பக்கம் மாத்திரம் சூரியகிரணங்களாற் பிரகாசிக்க வெளிப்பக்கம் அவற்றால் விளங்காததால், 'செக்கர்மெய்த் தனிச்சோதி சேர்கலாச் சக்கரப்பொருப்பிற்றலைக்கு மப்பக்கம்' என்றார்; இதனை, அம்மலையினது 'லோகாலோகம்' என்னும் வடமொழிப்பெயராலும் உணர்க. நக்கரம் - நக்கரம், சக்கரம் - சக்கரம் என இரண்டு இயல்கரலே ரகரத்துக்குமுன் சிறுபான்மை அகரம்பெற்றுவந்தன. நக்கரமென்பது - யானை முதலியவற்றைப் பிடித்துக் கொல்வதான பெருமுதலைக்குப் பெயர்; இது - இங்கு மற்றை நீர்வாழுயிர்கட்கும் உபலக்ஷணம். செக்கர் - பண்புப்பெயர்; அர் - விகுதி, கு-சாரியை. சக்கராகாரமாய் [வட்டவடிவமாய்] உலகத்தை வளைந்திருத்தல் பற்றி, 'சக்கரப்பொருப்பு' எனப்பட்டது. இங்கு 'சக்கரம்' என்பதை 'சக்கரவாளம்' என்றதன் நாமை கதேயோகாக்ரஹண மென்னலாம். சேர்கலா என்ற ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தில், கு, அல் - சாரியைகள். (கoசு)

கoஎ. பற்றியஞ்சலண்பழியின்வெஞ்சின
முற்றிநின்றதன்முரண்வலிக்கையா
லெற்றுவானெடுத்தெழுதலும்பிழைத்
தற்றமொன்றுபெற்றிவனகன்றனன்.

(இ - ள்.) (வாலியானவன்),—பற்றி - (சுக்கிரீவனைப்) பிடித்துக்கொண்டு, பழியின் அஞ்சலன் - (தம்பியை வருத்துகின்றானென்று வரும்) பழிக்குப் பயப்படாதவனாய்,—வெம் சினம் முற்றி நின்ற - கொடிய கோபம் மிக்குநின்ற, தன்-தனது, முரண் வலி கையால் - மிக்க வலிமையையுடைய கையினால்,

எற்றுவான் - மோதுதற்கு, எடுத்து எழுதலும் - உயர எடுத்து எழும்பிய அளவில்,—இவன் - சுக்கிரீவன், அற்றம் ஒன்று பெற்று - அவன் சோர்ந்திருக்கின்றதொரு சமயம் பார்த்து, பிழைத்து அகன்றனன் - தப்பி உய்ந்து ஓடி விட்டான்; (எ - று.)

வாலியானவன் தன்னைப் பிறர் பழிப்பரேயென்ற எண்ணஞ் சிறிதுமில்லாமல் அச்சுக்கிரீவனைத் தரையில் மோதுமாறு உயர எடுத்தவளவில், சுக்கிரீவன் அவ்வாலி சிறிது ஏமாந்த சமயம்பார்த்துத் தப்பியோடிவந்துவிட்டனனென்பதாம். அஞ்சலன் - எதிர்மறை முற்றெச்சம். பழியின் - பழிக்குளனப் பொருள் தருதலால், வேற்றுமைமயக்கம். பழியினின்று அஞ்சானனி என்று ஐந்தனுருபாகவே கொள்ளுதலுமாம்; வடமொழிநடை. 'மூற்றிடின்று' என்பதும் பாடம். எற்றுவான் - வானீற்று எதிர்காலவினையெச்சம். (கஎன)

கஎஅ. எந்தைதமற்றவன்னெயிறதுக்குமே
லந்தகற்குமோரரணுமில்லையா
லிந்தவெற்பின்வந்திவனிருந்தனன்
மூந்தையுற்றதோர்சாபமுண்மையால்.

(இ - ள்.) எந்தை - எமது சுவாமியே! அவன் - அவ்வாலி, எயிறு அதுக்கும் எல் - பல்லிலக்கடித்துக் கோபிப்பனுலல், அந்தகற்கும் - யமனுக்கும், ஓர் அரணும் - (சார்ந்து பிழைக்கலாம்படியான) ஒரு பாதுகாவலிடமும், இல்லை - இல்லாததாகும்; (ஆனலும்), முந்தை - முன்னே, உற்றது-(வாலி) அடைந்ததாகிய, ஓர் சாபம் - ஒருசாபமானது, உண்மையால் - உள்ளதனுல், இவன் - சுக்கிரீவன், இந்த வெற்பின் - இந்தமலையிலே, வந்து இருந்தனன் - வந்து சேர்ந்து (இதுவரையிற்) பிழைத்திருந்தான்; (எ - று.)—மற்று - அசை.

வாலியின் கோபத்துக்கு இலக்கானவர் யாவரேயாயினும் தப்பியுய்தற்கு உரிய இடமில்லையானலும், 'இம்மலையில் வந்தால் வாலி இறப்பான்' என்று மதங்கமுனிவர் சாபமிட்டிருப்பதனல், சுக்கிரீவன் இம்மலையைத் தனக்குரிய அரணைக்கொண்டு இங்கே பதுங்கி உயிர்வாழ்ந்திருக்கின்றனனென்பதாம். சாபம்-சபிப்பு: வெகுண்டுகூறும் மொழி. எயிறயதக்குதல் - காரியம் காரணத்தின்மேல் நின்றது; உபசாரவழக்கு. அரண் - ரரணமென்ற வடசொல்லின் திதைவென்பர். முந்தை - ஐயீற்றடைக்குற்றியலுகரம். மற்று-அசை; வினை மாற்றுமாம். 'மற்றவன்னெயிறு'—னகரவொற்று - விரித்தல். (கஎஅ)

கஎக. உரிமை யென்றிவற் குரிய தாரமா
மருமை ருந்தையும் மவன்வி ரும்பினு
னிருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கருமை மிங்கிதை கடவு ளென்றனன்.

(இ - ள்.) கடவுள்-சுவாமியே! இவற்கு-சுக்கிரீவனுக்கு, உரிமை என்று உரிய - சொந்தமாயுள்ள பொருளென்று [இல்லறவாழ்க்கைக்கு] உரியவளான, தாரமும் - மனைவியாகிய, அருமருந்தையும்-கிடைத்தற்கரிய தேவாமிருதத்

தையும் [ருமை யென்பவளையும்], அவன் - வாலி, விரும்பினன் - விரும்பிக் கவர்ந்துகொண்டான்; இவன் - சுக்கிரீவன், இருமையும் அறத்து-இரண்டையும் [செல்வத்தையும் மனைவியையும்] ஒருசேர இழந்து, இருந்தனன்-இருந்தான்; இங்கு இதே கருமம் - இங்குச்சொல்லப்பட்ட இதுவே நடந்த செய்தியாம், என்றனன் - என்று சொல்லி (அநுமான் தான் கூறிவந்த வரலாற்றை) முடித்தனன்; (எ - று.)

இராச்சியம் முதலிய செல்வத்தையெல்லாம் முன்னமே கவர்ந்துகொண்டமைபற்றி, 'உரிமையென் றிவற்குரியதாரமாமருந்தையும் மவன் விரும்பினன்' என்றார்: அன்றியும், மற்றைச் செல்வமெல்லாம் மூத்தவனுகிய வாலிக்கே உரியனவாதலால் அவற்றையெல்லாம் கூட்கொண்டதனோடு இவனுக்கே யுரிய தாரத்தையும் கவர்ந்தன னென்றுமாம்.

தாரம், கருமம் - வடசொற்றிரிபு. மருந்தையும், உம்மை - உயர்வு சிறப்போடு இறந்ததழுவிய எச்சப்பொருளது. விரும்பினன்-காரியம், காரணமாக உபசரிக்கப்பட்டது. இருமையும், உம்மை-முற்றும்மை. "இருமைவகை தெரிந் தீண்டறம் பூண்டார்" என்று மிடத்தும்போல. இருமையென்றது - இங்கு எண்ணின்மேல் நின்றது. இதில், மைலிருதி - தன்மையுணர்த்தாமல், தன்மையுடைய பொருளையே உணர்த்துதலால், 'பகுதிப்பொருள் விகுதி' என்னும் ஸ்வார்த்தபாவதத்தித்தப்பாத்யய மென்பர். இனி, 'உருமை' எனப் பாடமோதி, ருமையென்கிற மனைவியெனப் பொருள்கொள்ளுதல் சேர். மருந்தையும்மவன், மகரவொற்று - விரித்தல். (கூகு)

வேறு.

[அவ்வாலாறுகேட்ட ஸ்ரீராமன் வாலியின்மீது சினங்கொள்ளுதல்.]

கூகூ. பொய்யி லாதவன் வான்முறை யிம்மொழி புகல
வைய ஞயிரம் பெயருடை யமலர்க்கு மமலன்
வைய நுங்கிய வாயிதழ் திடித்தது மலர்க்கட்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச் சிவந்தி.

(இ - ள்) பொய் இலாதவன் - அசத்தியமென்பது சிறிதுமில்லாதவனுன அநுமான், வரல் முறை - (சுக்கிரீவன் தன்மனைவியைப்பிரியநேர்ந்த) வரலாற்றை, இ மொழி - இவ்வார்த்தைகளால், புகல - சொல்ல,—ஆயிரம் பெயர் உடை - ஆயிரந் திருநாமங்களையுடைய, அமலர்க்கும் அமலன்-குற்றமில்லாதவரான திரிமூர்த்திகளுள்ளுங் குற்றமற்றவனுகிய [மேம்பட்ட] பரிசுத்தமூர்த்தியாகிய, ஐயன் - தலைவனுன ஸ்ரீராமனது, வையம் நுங்கிய வாய் இதழ் - உலகங்களை (முன்பு பிரளயகாலத்தில்) விழுங்கிய வாயினது அதரம் [உதடு], திடித்தது - (கோபத்தால்) துடி துடித்தது; கண் - திருக்கண்களாகிய, செய்ய தாமரை மலர்-செந்தாமரைமலர்கள், ஆம்பல் அம் போது என - செவ்வாம்பல் மலர்போல, சிவந்த - மிகச்சிவந்தன; (எ - று.)

சுக்கிரீவன் தன்மனைவியான ருமையைப் பிரியுமாறு முன்கிழக்க வரலாற்றை அநுமான் சொல்லக்கேட்ட ஸ்ரீராமன் ஸாஞ்சதபரித்ராணமாகிற

[தன்னைச் சரணமென்று அடைந்தவரைப் பாதுகாத்தல்கிற] தருமத்திற்கு விரோதமாக நடந்த வாலியின்மீது அக்ஷணமே சினங்கொண்டன னென்ப தாம். இயல்பாகக் கரியவராய்ப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப் பெரியனவாகிய கண்கள், வாலியினது கொடுமையைக் கேட்டு ஏழுந்த கோபத்தால் மிகவுஞ் சிவந்தனவென்பார், 'மலர்க்கட்செய்யதாமரை ஆம்பலம் போதெனச் சிவந்த' என்றார். ஆயிரம் பெயர்-ஸஹஸ்ரநாமம். உடை அமலன் என இயையும். வையம் - பொருள்களே வைத்தற்கு இடமானது. வையம் தங்கியது, மகாப் பிரளயகாலத்தில் சகல லோகங்களேயும் சிறிதுமழிவில்லாத படி தன் திருவயிற்றில் வைத்துக்காத்தது. ஐயன் - ஆர்யன் என்ற வடசொல் லின சிதைவு. ஆம்பலம்போது—அம்-சாரியை. அம்-அழகிய, ஆம்பற்போது என்றலுமாம். இனி, முதலடிக்கு - பொய்ம்மையில்லாதவனுன சுக்கிரீவனது வரலாற்று முறைமையை (அநுமான்) சொல்ல என்றுமாம்.

இதுமுதல் மூப்பத்தொரு கவிகள் பம்பைப் படலத்தின் பதினேராங்கவி போன்ற கலிநிலைத்துறைகள். (கசஞ)

[இதுவும், அமித்தகேய்யுரும் · கவிக்கூற்று; இராமபிரான் கோபங் கொண்டதற்குக் காரணங் காட்டுதல்.]

கசக. நிறத்துமாமறையயனெடைம்முகன்பிராதேடிப்
புறத்தகத்துணாரியதன்பொலனடிக்கமல
முறசிவப்பவித்தரைமிசையுறலறமாக்கண்
மறத்தையீட்டுதலன்றியேபிறிதுமற்றுண்டோ.

(இ · ள்.) நிறத்து (இருக்குமுதலிய) கூபோடுகளேயுடைய, மா மறை · சிறந்த வேதங்களே யோதினை, அயனெடு-பிரமதேவனும், ஐம்முகன்-ஐந்து முகங்களேயுடையவனுன ருத்திரமூர்த்தியும், பிறர் - மற்ற இந்திரன் முதலி யோரும், புறத்து - வெளிகரணங்களாகிய மொழிமெய்களாலும், அகத்து - அக்கரண [அந்தக்கரண]மாகிய மனத்தினுலும், தேடி - தேடியும், உணர் அரிய - அறிதற்கு அருமையான, தன் - தனது, பொலன் அடி கமலம் - அழ கிய திருவடித்தாமரைகள், உற சிவப்ப - (தரையில் நடப்பதனுல்) மிகவுஞ் சிவக்கும்படி, இ தரைமிசை-இப்பூமியில், உறல் - (திருமால்) திருவவதரித் தற்குக் காரணம்,—அறம் ஆக்கல்-தருமத்தைக் காத்து வளர்த்தலும், மறத்தை வீட்டுதல் - அதருமத்தை அழித்தலும், அன்றியே - அல்லாமலே, பிறிது உண்டோ-வேருென்று உளதோ? (எ · று.)—மற்று - அசை.

வாலி எவ்வாற்றலுந் தனக்கு நேரே பகைவனல்லனுயினும், அவனது நீச்செய்கையைக் கேட்டமாத்திரத்திலே ஸ்ரீராமபிரான மிகவுஞ் சீற்றங் கொண்டதற்குக்காரணமான அவனது அஷ்டாங்கிராகவிஷ்டபரிபாலக குணத் தைக் கவி விளக்கினர். மேலிரகவியிலும், இவ்வாறே காண்க. ("அஜாயமானோ பஹுதா விஜயதே" என்றபடி) இயற்கையிற் தருமத்தாறபிறந்த லில்லாத திருமால் தியவரையழித்துப் பாவதரைப் போக்குதற்கும், நல்லவரையருளித் தருமத்தை ஆக்குதற்குமே திருவவதரிப்பவ ரதலால், வாலியின் கொடுஞ்

தொழிலைக் கேட்ட்மாத்திரத்தில் இவ்வாறு கோபித்தனனென்பதாம். இக் கவி - கீழ்க்கவியோடு ஒருதொடராய்னறு, கீழ்க்கவியிற்கூறிய 'இராமபிரான் கோபித்தான்' என்பதைச்சமர்த்திக்கும்: ஆகவே, இவ்விரண்டு கவியுஞ் சேர்ந்து தொடர்நிலைச் செய்யுட்குறியணியின்பாற்படுமென்க.

ருக், யஜுஸ், ஸாமம். அதர்வணம் என வேதம் நான்குவகை யாதலால்; 'நிறத்து மாமறை' என்றார். இனி, தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என வேதம் நான்காமெனக் கூறுவாருமுளர். அயன் = அஜன்; இவ்வட சொல் - திருமாலினிடத்தினின்று தோன்றியவ னென்று பொருள்பெறும். ஸதாசிவமூர்த்தி ஸத்யோஜாதம், அகோரம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம் என்ற ஐந்து முகங்களே யுடைமையால், 'ஐம்முகன' என்றார். அடிக் கமலம் = மலம்போன்ற அடி என மூன்பின்னுகததொக்க உவமத்தொகை. தரை-தரா என்ற வடசொல்லின் விகாரம்: இது-(பலபொருள்களேயும் தன்மீதி) தாங்கு வது எனப் பொருள்படும். வீட்டுதல், வீட்டு - பருதி. 'நிறம்' என்ற சொல் ஒக்கு - தருதி, தத்துவம், நிறமை, மேனமை என்ற பொருள்களும் உண்டு. "பத்துடையடியவர்கெளியவன் பிறர்களுக்கரிய, வித்தகன" என்றபடி எம் பெருமான் தன்பக்கல் அன்புநிலேயிற் குறைபட்டார்க்கு அகப்படாததனமைய ஞதலால் 'அயனெ டைம்முகன் பிரா தேடிப்புறததகத்தணாரிய தன் பொல னடி' எனப்பட்டது; "பூதேவருங் கனகப்பூங்காழில்லைகு, மாதேவருந் தேடிக் காணு மலரடியான" என்றார் வில்லிபுத்தாரரும். (ககக)

ககஉ. ஈரமீங்கியசிற்றவைசொற்றனளென்ண்
வாரம்வீங்குதோட்டம்பிக்குத்தன்னரசுரிமைட
பாரமீந்தவன்பரிவிலனெருவன்றனிளேயோன்
ரூரம்வவ்வினனென்றசொற்றரிக்குமாறுளதோ.

(இ - ன்-) ஈரம் நீங்கிய - அன்பில்லாத,சிற்றவை-சிறியதாய் [கைகேயி], சொற்றனன் - சொன்னுள், என்ன - என்று, ஆரம் வீங்கு தோன் தம்பிக்கு - இரத்தினமாலேகளையணிந்த பருத்த தோள்களேயுடைய தன தம்பிக்கு [பர தாழ்வானுக்கு], தன் அரசு உரிமை பாரம் - (மூத்தகுமாரனுகிய) தனக்கே உரியதான இராச்சியபாரத்தை, ஈந்தவன் - கொடுத்து வந்தவனை ஸ்ரீராமன், 'பரிவு இலன் ஒருவன் - இரக்கமில்லாதவ னெருத்தன், தன் இளேயோன தாரம் - தன தமபியின் மனேவியை, வவ்வினன - அபகரித்துகொண்டான்,' என்ற—, சொல் - வார்த்தையை, (கேட்டு), தரிக்கும் ஆறு - பொறுத்துச் சும்மா இருத்தல், உளதோ - உண்டாகுமோ? (எ - று.)

ஸ்ரீராமன் தனக்கு உரியஅரசாட்சியைத் தம்பிக்குக்கொடுத்த தயாமூர்த்தி யாதலால்,வாலி தன்தம்பிக்கு உரியமனேவியை அபகரித்துக்கொண்டவரலாற் றைச் செவியுற்றமாத்திரத்திலே கடுஞ்சினங் கொண்டானென்றபடி. இச் செய்யுளும்மேற் ககஎ-ஆம் செய்யுளோடு ஒரு தொடராய் நின்று,நேடர்நிலைச் செய்யுட்குறியணியாம். தயரதன் 'உனதமகன் நாட்டையாளுக; இராமபிரான் காட்டிற்குச் செல்லவேண்டா' என்று வெகுவாகவேண்டவும், சிறிதும் இரக்க

மின்றிப் பதினெண்குவருடங் காட்டிற்குச்செல்லவேண்டுமென்று வற்புறுத்திக்கூறிய கன்னெஞ்சினளாதலால், கைகேயியை, 'ஈரநீங்கிய் சிற்றவை' என்றார். ஆசம் - முக்தாஹாரமென்றும், சந்தனக்குழம்பு என்றும் பொருள் கொள்ளலுமாம். வவ்வினன = வௌவினன்: போலி. சொற்றனள், ற் இறந்தகால இடைநிலை (ககஉ)

[இராமபிரான் 'வாலியைக் கொல்வேன்' என்றல்.]

ககஙு. உலகமேழினுமேடமும்வந்தவனுயிர்க்குகளி
விலகுமென்னினுமில்லிடைவாளியின்வீட்டித்
தலைமையோடுநின்றுரமுமுனக்கின்றுதருவேன்
புலமையோயவனுறைவிடங்காட்டென்றுபுகன்றான்.

(இ - ன்.) 'உலகம் எழினெடு ஏழும் - பதினெண்கு லோகங்களிலுமுள்ள எல்லாப் பிராணிகளும், அலன் உயிர்க்கு - அவ்வாலியின பிராணனைக் காப்பதற்கு, உதவி - சகாயமாக, வந்தும் —, விலகும என்னினும் - தடுக்குமாயினும், (யான), வில்லிடை வாளியின - வில்லினின்றும விடப்படுகின்ற அம்பினால், வீட்டி - (அவையும் உள்பட அவனை) அழித்து, தலைமையோடு - அரசாட்சியுடனே, நின தாரமும - உனது மனைவியையும, உனகு —, இனறு - இப்பொழுதே, தருவேன - கொடுப்பேன்; புலமையோய் - அறிவுடையவனே! அவன உறைவு இடம் - அவன வசிக்கின்ற இடத்தை, காட்டு - காண்பிப்பாயாக,' என்று —, புகன்றான் - (ஸ்ரீராமன சுக்ரீவனைநோக்கிக) கூறியருளினான்; (எ - று.)

அவ்வாறு சினங்கொண்ட ஸ்ரீராமன் 'அவ்வாலியுள்ளவிடத்தை இப்பொழுதே காட்டுவாயாக; யார்வந்து தடுப்பினும் சிறிதும் பினவாங்காது இப்பொழுதே அவ்வாலியைச் சங்கரிப்பேன்' எனறு கூறினனென்பதாம். அரசநீதிக்கு ஏற்பத தனனையும் காலததையும நோக்கி இததனைகாலம் ஒடுங்கியிருந்தமைபற்றி, சுக்ரீவனை இராமபிரான 'புலமையோய்' எனவிளிததான். விலக்கும் என்பது, ஏதுகைநோக்கி 'விலகும்' என விகாரப்பட்டு நினறது. ()

[அதுகேட்டுச் சுக்கிரீவன் மிகமகிழ்ந்து 'நாங்கள் சிறிது ஆலோசிக்கவேண்டும்' என்றல்]

ககச. எழுந்துபேருவகைக்கடற்பெருந்திரையிரைப்ப
வழுந்துதுன்பத்துக்கக்கரை கண்டனனினையான்
விழுந்தமேதினிவாலிதன்வலியெணவிரும்பா
மொழிந்தவீரற்கியாமெண்ணுவதுண்டெனமொழிந்தான்.

(இ - ன்.) (இவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்திற் சுக்ரீவன்), பேர் உவகை கடல் - பெரிய மகிழ்ச்சியாகிய சமுத்திரம், பெருந் திரை - பெரிய அலைகளோடு, எழுந்து இரைப்ப-பொங்கியெழ [அளவில்லாத மகிழ்ச்சியைப் பெற்று],—அழுந்து துனபத்துக்கு - (தான) அழுந்திக்கிடக்கத் தக்கமாகியகடலுக்கு, அ கரை - முடிவெல்லையை, கண்டனன் அனையான் - அண்டந்தவன் போன்றவனுய்,—'இனி—, வாலிதன வலி - வாலியினவலியை, விழுந்தமே -

க்கஅ. செறுக்கும்வன் றிறற்றிரிபுரநீயெழச்சினவிக்
கறுக்கும்வெஞ்சினக்காலன் றன்காலமுங்காலா
லறுக்கும்புங்கவனுண்டபோராடகத்தனியில்
லிறுக்குந்தண்மையம்மாயவற்கன்றியுமெளிதோ.

(இ - ள்.) செறுக்கும் - (யாவரையும்) வருத்துகின்ற, வல் திறல் - மிக்க வலிமையையுடைய, திரி புரம் - மூன்று பட்டணங்களும், தீ எழ-நெருப்புப் பற்றி யெரியும்படி, சினவி - கோபித்து, கறுக்கும் வெம் சினம் காலன் தன் - கோபிக்கின்ற கொடிய கோபத்தையுடைய யமனது, காலமும் நல்ல காலத்தையும் [வெற்றியையும்], காலால் அறுக்கும்-காலினால் உதைத்து அழித்துவிட்ட, புங்கவன் புருஷர்களுட் சிறந்த பரமசிவன், ஆண்ட - (கையிற்கொண்டு போர் செய்து) ஆண்டுவந்த, பேர் - பெரிய, ஆடகம் - பொன்மயமான, தனி - ஒப்பற்ற, வில்-தனுசை, இறுக்கும் தனமை - முறிக்கின்ற காரியம், அ மாயவற்கு அன்றியும் - அத்புதசக்தியை யுடையவனன அத்திருமாலுக்கே யல்லாமல், எளிதோ - (மற்றையோர்க்கு) எளியதாகுமோ? (எ - று.)

ஸ்ரீராமபிரான் ஸ்ரீமந்நாராயணனே யென்பதைச் சிதாகலியாணகாலத்திற் சிவதனுசை முறித்ததனலும் அறியலாமே யென்று அநுமான் மற்றுமோர் அநுமானங் கூறினனென்க. சிவபெருமானைப்பற்றி இங்கு இவ்வாறு சிறப்பித்துக் கூறியது - பிறரது வலிமையைப் பாராட்டி அவரை வென்றதாகக் கூறுவதும் கதாநாயகனுக்கு மிக்கமேன்மையை வீளக்கு மென்ற அலங்காரநூலார் கொள்கைபற்றி யென்க. புங்கவன் - ஏருதை வாகனமாக வுடையவனெனினுமாம். "கறப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள்" என்றதனால், 'கறுக்கும்' என்பதற்கு-கோபிக்கின்ற எனப்பட்டது; கருநிறமுடைய என்று உரைத்து, காலனுடு கூட்டலுமாம். காலம் - காலபாசமாகவுமாம். ஆடகம்-ஹாடகம்; வடசொல்.

ஸ்ரீராமபிரான் பரதத்வ மென்பது, இங்கு வெளியிடப்பட்டது; பால காண்டத்துப் பரசுராமப்படலத்தில் "நீதியாய் முனிந்திடேல் நீயிங்கியாவர்க்கும், ஆதியானறிந்தனை னலங்கல்நேமியாய், வேதியா விறலதேயனறி வெண்மதிப், பாதியான்பிடித்தவில் பற்றப்போதுமோ," "பொன்னுடை வனைகழற் பொலங்கொன்தாளினும், மின்னுடை நேமியானுதல் மெய்ம்மையால்" என்றதும், திருவரங்கத்துமாலையில் "மாதண்டமேவுங் காத்தாரங்கர் வடமிதிலைக், கோதண்டவேகம் பிறப்பித்தபோது குவட்டுவெள்ளி,வேதண்டமேவு மழுவாளி நாணினன் வென்றிகண்டு" என்றதும் உணர்க.

"காலன்தன் காலமுங் காலால்" என்றவிடத்து மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க. திரிபுரம் - த்ரிபுரம் என்ற வடமொழித்தொடரின் விகாரம்; மூன்றுகிய நகர மெனப் பண்புத்தொகை. வானத்திற் பறந்து திரிகின்ற நகர மெனக் கொண்டால், 'திரி புரம்' என்ற தொடர்-வினைத்தொகையும், திரி-தமிழ்ச்சொல்லுமாம். 'காலால் அறுக்கும்' என்றது, மிகவும் அலக்ஷ்யமுறை எளிதிற்செய்தமையைக் காட்டிற்று. 'போராடகத்தனியில் என்னும் படாமூண்டு,

திரிபுரம் தீயெழச் சினவியகதை:—தாராகாசுரனது புதல்வர்களாகிய வித்யுன்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று மயனென்பவனால் சுவர்க்கம் பூமி பாதாளம் என்னும் மூன்று இடங்களிலும் முறையே பொன் வெள்ளி இரும்பினால் அரண்வகுத்து இயற்றப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மையையுடைய மூன்று பட்டணங்களைப்பெற்று அவற்றில் வசித்துச் சிவபூசைசெய்துகொண்டு அச் செபக்கிரமங்களினால் எவர்க்கும் அழிக்கவொண்ணாதவராய் அத்தகைய மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம்விரும்பின இடங்களிற் பறந்து சென்று பல இடங்களின்மேலும் இருந்து அவ்வவ்விடங்களைப் பாழாக்கிவருகையில், அத்தன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மாயையினால் நிராவதாரமும் புத்தாவதாரமுஞ் செய்து பற்பலதியவழிகளைக் கற்பித்து உபதேசித்து மயக்கி அவ்வசுரர்களைச் சிவத்துவேஷிகளாகச் செய்துவிட்டதன்பின்பு, தேவர்கள் பிரார்த்தனைப்படி சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திரசூரியரைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்குவேதங்களையும் நான்கு குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை வில்நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகு அமைந்த அக்கினியை மூன்றாவதுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோராக்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ச்சென்று போர்செய்ய யத்தனித்துப் புன்சிரிப்புச்செய்து அவ்வசுரர்கள் பலரையும் பட்டணங்களோடு எரித்தருளினன் என்பதாம்.

காலன்தன் காலத்தைக் காலாலறுத்த கதை:—மிருகண்டு முனிவன் மருத்துவதி யென்பாளை மணந்துகொண்டு சிலகாலங் கழித்தபின்பு பிள்ளையில்லாக்குறையாற் காசியையடைந்து சிவபிரானைக்குறித்துத் தவஞ்செய்ய, அம்முனிவனுக்குப் பரமசிவன் பிரத்தியக்ஷமாகி வடிவிலுஞ் குணங்களினுஞ் சிறந்தவனும்பதினாறாயுமேயுடைய ஒரு புதல்வனை அநுக்கிரகிக்க, அங்ஙனமே பிறந்த குமாரன் பிரமதேவனால் மார்க்கண்டேயனென நாமகரணஞ் செய்விக்கப்பெற்றுச் சகல சாஸ்திரங்களையும் இளமையிலேயே உணர்ந்து, பின்புதனது அற்பாயுளைக்குறித்துவருந்துகின்ற தாய்தந்தையரதுயரத்தைப் போக்குமாறு,மணிகர்ணிகா கட்டத்திற் சிவபிரானை நோக்கி அரும்பெருந்தவம் புரிந்து அப்பரமசிவனால் அபயமளித்துத் தனது முடியிலே திருவடிகள் வைக்கப்பெற்று இனிதுவாழ்ந்திருக்கையில், பதினாறாயாம் கழிந்து அந்திமகாலம் வரவே, யமன் சமீபித்துக் காலபாசத்தால் மார்க்கண்டேயனைக் கட்டியிழுக்குமளவில், சிவபிரான் வெளிப்பட்டு அவ்யமன் உயிர்நீங்குமாறு அவனைக் காலாலுதைத்தித்தள்ளி, தான் அபயபிரதானஞ்செய்திருந்த ருஷிகுமாரனுக்கு என்றும்பதினாறாக நீடுழிவாழுமாறு அருள்புரிந்தனனென்பதாம். இவ்வரலாற்றினால்,மிக்கமுயற்சிகொண்டு ஊழ்வினையையும் வெல்லலாமென்பது போதரும்.

ககக. எண்ணீரின்றவனிவ்வுலகியாவையுமீன்றன்

ஃதையா

வுண்ணீரின்றவெற்குமுபதமுளதெனவுரைத்தா

னின்னதோன்றலேயவனிதற்கேதுவுண்டிறையோய்.

(இ - ன்.) இறையோய்-தலைவனே! என்னை ஈன்றவன் - என்னைப்பெற்றவனை வாயுபகவான், (முன்புஎன்னைநோக்கி), '(நீ). இவ்வுலகு யாவையும் ஈன்ற முன்தன்னை இந்த லோகங்களையெல்லாம் படைத்தவனை பிரமதேவனை, ஈன்றவற்கு-(தனது நாபீகமலத்தினின்று) தோன்றுவித்தவனை ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு, அடிமை செய்-அடிமைத்தொழில் செய்வாய், அஃது-அக்கைங்கரியமே, தவம் சிறந்த தவமாகும்; ஐயா-குழந்தாய்! (நீ அவ்வாறு செய்தால்), உன்னை ஈன்ற எற்கு-(உனக்குமாத்திரமேயல்லாமல்) உன்னைப் பெற்ற எனக்கும், உறுபதம்-சிறந்த பதவி, உளது - கிடைப்பதாம்', என - என்று, உரைத்தான் - சொல்லியிருந்தான்; இன்ன தோன்றலே-இந்த ஸ்ரீராமனே, அவன் (அதற்கு ஏற்ப வந்த) அம்மகாவிஷ்ணுவாவன்; இதற்கு —, ஏது உண்டு-வேறொருகாரணமும் உளது; (எ - று.)—அவ்வேதுவை, மேற்கவியில் காண்க.

எனதுதந்தையாகிய வாயுபகவான் முன்புஎன்னைநோக்கி 'உனக்கும் எனக்கும் கல்பபதவி கிடைக்குமாறு திருமாலுக்கு அடிமைசெய்' எனக் கூறியிருக்கின்றனன்; அத்திருமாலே யான்செய்யும் அடிமைத்தொழிலை ஏற்றுக்கொள்ளுமாறு இப்போது பிரியகஷமாக இங்கு வந்துள்ளான்; இதற்கு, யான் மேற்கூறிய காரணமன்றி வேறொர்காரணமுமுள்ளது: அதனைக்கூறுவேன்: கேட்பாயாக என அநுமான் மீண்டுங் கூறலாயின னென்பதாம். தந்தை மைந்தனை 'ஐயா' என்றது, அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. தோன்றல் - விளங்குபவன்; அல் - கருத்தாப்பொருள்விகுதி. ஹேது - வடசொல். முதலடி - முற்றுமோனை 'தவமுனக்கஃதே' என்பதும் பாடம். 'உன்னையீன்றவற்கு' என்ற பாடத்துக்கு, தன்மைப்படர்க்கை யென்க. (ககக)

கஉ0. தூன்புதோன்றியபொழுதுடன்றோன்றுவனெவர்க்கும்
முன்புதோன்றலையறிதற்குமுடிவென்னெனின்றியம்ப
வன்புசான்றெனவுரைத்தனனையவென்யாக்கை
யென்புதோன்றலவுருகினதெனிற்பிறிதெவனே.

(இ - ன்.) முன்பு - முன்னே [அக்காலத்தில்], தோன்றலை அறிதற்கு - (நீ சொன்ன) அப்புருஷோத்தமனை அறிவதற்கு, முடிவு என் - நிச்சயமான உபாயம் என்ன?' என்று இயம்ப - என்று (யான் தந்தையைக்) கேட்க,— (அவ்வாயுபகவான்),—'(அம்மகாபுருஷன்), எவர்க்கும் - யாவர்க்கும், அன்பு தோன்றியபொழுது - அன்பருண்டான காலத்தில், உடன் தோன்றுவன் - உடனே (அத்துன்பத்தைத் தீர்ப்பதற்கு எதிரில்வந்து) தோன்றுவன்; (மேலும்), அன்பு சான்று - '(அப்பகவானைக் கண்டமாத்திரத்தில் உனக்கு) உள்ளன்பு உண்டாவதே ஸ்ரக்ஷியாகும்', என-என்று, உரைத்தனன் - சொன்னன்; (அதற்குஏற்ப இப்பெருமானைக் கண்டமாத்திரத்திலே), ஐய - தலைவனே! என்யாக்கை - எனது உடம்பு, என்பு தோன்றல உருகினது - எலும்பும் உருக்காணப்படாதனவாக உருகிவிட்டது: எனின் - என்றால், பிறிது எவனே - வேறுவகையாகச் சங்கிப்பது எவ்வாறே? (எ - று.)

'நீ திருமாலுக்கு அடிமைசெய்'என்றஎனக்குவாயுபகவான் கூறியபோது, யான்'இவன்தான் திருமாலென்றுகண்டறிவதெப்படி?' என்றுவினவ, அதற்கு

RESEARCH INSTITUTE,
64, R. H ROAD. MADRAS - 4

அவவாயுதேவன் 'ஆபத்தை யடைந்தவர்களுக்கெல்லாம் முன்வந்து நின்று உதவுபவனுகிய அத்திருமால் உனனெதிரில் வந்தானுனல் உனக்கு அவனிடத்தில் யாதொரு காரணமுமின்றிப் போன்பு உண்டாம்; இதுவே, நீ அப்பெருமானைக் கண்டறிவதற்கு உரிய நெறியாம்' என அனுமானைக் கூறினன; அஃது இப்போது ஒத்திருப்பதனுலும் இவன அத்திருமாலேயெனத் துணியலாமென்று வேறோர் நுமானமும் அநுமான் காட்டின னென்பதாம். முடிவு - தொழிலாகுபெயரால், முடிவான உபாயத்தைக் காட்டிற்று. உடன தோன்றுவன் - உடன் தோன்றுபவனுகிய, எவர்க்கும் முனபு தோன்றலே - யாவரினும் முன்னே தோன்றிய [அநாதியான] அகைடவுளே ஒன்றும் உரைக்கலாம். யாக்கை-(எழுவகைத் தாதுக்களால்) யாக்கப்படுவது; யாத்தல்-கட்டுதல். 'இனிப்பிறிதெவனே' எனறு பிரதிபேத முண்டு. "அனபு தோன்றியவுடலிடைதோனறினேனறித, லின்புதோனறுமக்கடவுளே யெவவகையெனையான' என்று பாடமோதுவாருமுளர். (கூ0)

கூஉக. பிறிதுமன்னவன்பெருவலியாற்றலைப்பெரியோ
யறிதியென்னினுண்டுபாயமுமஃதருமரங்க
ணெறியினின்றனவேழினுருவழிநெடியோன்
பொறிகொள்வெஞ்சரமீபாவதுகாணெனப்புகன்றான்.

(இ - ள்.) பெரியோய்-சிறந்தவனே! பிறிதும் - மற்றும், அனனவன - அந்த ஸ்ரீராமனது, பெருவலி ஆறறலே-மிக்க பலத்தின தனமையை, அறிதி என்னின-அறிய விரும்புவாயானுலும், உபாயமும உண்டு - (அவவாறு அறிதற்கு)ஒருபாயமும் உளது; அஃது-அவவுபாயம (எதுவெனறால்),—'நெறியில் நின்றன - (போகும்) வழியிலிருப்பவையாகிய, அரு மரங்கள் எழின் - எய்வதறகு அருமையான மராமரங்கள எழிலும, ஒன்று உருவ-ஒருசேரத் துளைக்கும்படி, இ நெடியோன-பெரியவனுன இந்த ஸ்ரீராமனது,பொறிகொள் வெம்சரம - அனறபொறியைக் கொண்ட கொடிய அமபொனறு, போவது காண்-செல்வதேயாகும்,' என-எனறு, புகனறுன சொலலினுன,(அநுமான);(எ-ம.)

இங்கிருந்து நமது இருப்பிடத்திறகுச்செல்லும் வழியிலுள்ள ஸால வீரு கூங்களேழையும ஓரம்புகொண்டு துளைக்கச் சொல்லி அந்த அமபு அமமரங்களில் ஊடுருவிச்செல்வதைப் பார்த்தால், வாலியைக் கொல்வதறகு எறற வலிமை இவனுக்கு உளதெனறு நீயே தெளியலாம் என்று, சுகரீவனுக்குத் தெளியுமாறு சிறந்த உபாயதைக கூறிமுடித்தனன அனுமன் எனபதாம். (கூஉக)

[அநுமான் கூறியதற்கு இணங்கிச் சுக்கிரீவன் ஸ்ராமபிரானிடஞ்சென்று ஒன்றுகூறத்தொடங்குதல்.]

கூஉஉ. நன்றுநன்றெனுநன்னெடுங்குன்றமுநாணுக
தன்றுணைத்தனிமாருதிதாளிணைதழுவிச்
சென்றுசெம்மலிக்குறுகியாஞ்செப்புவதுளதா
லொன்றுனக்கெனவிராமனுமுரைதியஃதென்றான்

(இ - ள்.) (அதுகேட்டு சுக்கிரீவன),—நனறு நன்று எனு-'நல்லது நல்லது' எனறு மகிழ்ந்து,—தனை துணை-தனக்கு உதவியான, தனி - ஒப்பற்ற,

மாருதி-அநுமானுடைய, நல் நெடுங் குன்றமும் நாணும் - நல்ல பெரிய மலைகளும் வெள்கும்படியான [மிகவும் பெரிய வலிய], தோள் ஜோடு - இரண்டு தோள்களையும், தழுவி - அணைத்துக்கொண்டு, சென்று - போய், செம் மலை குறுகி-ஸ்ரீராமனைச்சேர்ந்து,—'உனக்கு—, யான—, செப்புவது-சொல்வது, ஒன்று-ஒருகாரியம், உளது-உண்டு', என-என்று சொல்ல,—இராமனும்—, அஃது உரைத்தி என்றான்-'அதனைச் சொல்' என்றான்; (எ - று.)

இராமனது வல்லமையைத் தெளிவதற்குரிய உபாயமாக முடிவில் அநுமான கூறியது தன்மனத்திற்குச் சம்மதமாயிருந்ததனால், சுக்கிரீவன் அநுமானைத் தழுவிக கொண்டாடி, பினபு இராமபிரானிருந்த இடத்தைக் குறுகி 'ஒன்று சொல்லவேண்டியிருக்கின்றது' என்ன, அவரிராமனும் 'கூறுவாய்' என்றனனென்பதாம். நன்று நன்று, அடுக்கு - உவகைபற்றியது; இது, அவனுமன கூறியதற்குத் தான் இணங்கியமையைத் தெரிவிக்கும். (கஉ)

[சுக்கிரீவன் ஸ்ரீ ராமனையழைத்துச் சென்று மராமரங்களேழினையும் எய்யச்சொல்லுதல்.]

கஉங. ஏகவேண்டுமிகலெறியெனவினிதுகொண்டேகி
மாகநீண்டனகுறுகிடநிமிர்ந்தனமரங்க
ளாகவைந்தினோடிரண்டினொன்றுவதின்னம்பு
போகவேயென்றன்மனத்திடாபோமெனப்புகன்றான்.

(இ - ள்.) (சுகரிரீவன),—'இ நெறி-இவவழியாக, ஏக வேண்டும்-போக வேண்டும்,' என - எனறுசொல்லி, இனிது - இனிமையாக, கொண்டு ஏகி-(ராமலக்ஷ்மணர்களை) அழைத்துகொண்டுபோய்,—'மாகம் நீண்டன - பெரிய ஆகாயததை அளாவி உயர்ந்தவையும், குறுகிட நிமிர்ந்தன - (அவவாகாயமும்) சிறியதாமபடி பாந்து வளாந்தவையுமாகிய, மரங்கள் - மராமரங்கள், ஆக ஐந்தினோடு இரண்டின - ஏழிலும், ஒன்று உருவ ஒருங்கு துளைக்கும்படி, நின் அமபு போகவே - உனது அமபொனறு சென்றமாத்திரத்திலே, எனதன் மனதது இடா போம - எனது மனத்திலுள்ள துனபம நீங்கும், என-என்று, புகன்றான - சொன்னான; (எ - று.)

இம்மராமாங்களேழையும் ஓர்அம்பையெய்து துளைத்தால், வாலியை நீ கொல்வாயெனறு உறுதியாக நம்புவேனதலால், வாலியைப்பறறியுள்ள எனது மனத்துனபம போம்; ஆகவே, எனகது உனது வலிமை தெளிவாக விளங்குமாறு இவறறை ஓர அம்பெய்து துளைகவேண்டுமெனக கூறினன் சுக்கிரீவனென்பதாம். நீண்டன நிமிர்ந்தன - பெயர்: ஆக - எல்லாஞ்சேர்ந்து என்ற படி. மாகம் - மஹாகம்; வடசொல். (கஉங)

[அங்ஙனமே தான் செய்வதாக ஸ்ரீராமன் சொல்லுதல்.]

கஉச. மறுவிலானதுகூறலும்வானவர்க்கிறைவன்
முறுவல்செய்தவன்முன்னியமுயற்சியைமுன்னி
யெறுழ்வலிதடந்தோள்களாற்சிலையைநாணேற்றி
யறிவினுளைப்பரியவற்றருகுசென்றணைந்தான்.

(இ - ள்.) மறு இலான் - (மனத்திற்) களங்கமில்லாதவனான சுக்கிரீவன், அது கூறலும் - அவ்வார்த்தையைச் சொன்னவளவில், —வானவர்க்கு இறைவன் - தேவர்க்கெல்லாந்தலைவனான ஸ்ரீராமன், அவன் முன்னிய முயற்சியை முன்னி - சுக்கிரீவன் எண்ணிய காரியத்தை அறிந்துகொண்டு, முறுவல்செய்து - புனகிரிப்புச்செய்து, எறுழ் வலி தட தோள்களால் - மிக்க வலிமையையுடைய பெரியகைகளால், சிலையை நாண் ஏற்றி - வில்லியெடுத்து நாணேறிட்டு, —அறிவினால் அளப்பு அரியவற்று - அறிவினால் அளவிட்டு அறிவதற்கு அருமையான அம்மரங்களின், அருகு - சமீபத்தில், சென்று அணைந்தான் - போய்ச்சேர்ந்தான்.

சுக்கிரீவன வார்த்தையைக் கேட்டவுடனே, ஸ்ரீராமன், அவன் மனத்திற் சிறிதுங் குற்றமற்றவனுயிருத்தலைக்கண்ட மகிழ்ச்சியினாலும், சுக்கிரீவன கூறியது தனது பெரு வலிமைக்கு மூன மிகவுஞ் சிறுதொழிலாக விருத்தலாலும புனகிரிப்புக்கொண்டு, அவனாறே செய்வதற்காக வில்லை நாணேறிட்டு அம்மரங்களுளள விடத்தைக் கிட்டினனென்பதாம். தனது உட்கருத்தை ஒளியாமல் வெளியிட்டமைபற்றி, 'மறுவிலான' எனறார். எறுழ் - உரிச்சொல; "எறுழ்வலியாகும்" எனபது. தொல்காப்பியம. எறுழ் வலி - ஒரு பொருட்பனமொழி. அரியவற்று, அற்று - சாரியை. 'தோளினிற் சிலையை நாணேற்றி' என்பதும் பாடம. (கஉச)

[இதுமுதல் ஒன்பதுகவிகள் - மாமாமங்களின் வருணனை.]

கஉடு. ஊழி பேரினும் பேர்வில்லவுலகங்களுலேதது
தாழுங்காலத்துந்தாழ்விலதயங்குபேரிருள் சூழ
மாழிமாநிலந்தாங்கியவரும்பெருங்கிரிக
ளேழுமாண்டுசென்றிருவழிநின்றெனவியைநத.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (அம்மாமரங்கள ஏழும்),—ஊழி பேரினும - யுகங்கள்மாறினாலும், பேர்வு இல - இடமவிட்டுப் பெயராதலில்லாதவை; உலகங்கள - எல்லா லோகங்களுமு, உலைந்து தாழும் காலதனும் - அழிந்துபோகுங காலதிலும், தாழ்வு இல - விழுதலில்லாதவை; தயங்குபேர் இருள் சூழ் - திகைத்தறகுக் காரணமான மிகக இருளினுற சூழப்பட்ட, ஆழி மா நிலம - கடல் சூழ்ந்த பெரிய பூமியை, தாங்கிய - (சிலைபெயராமல்) தாங்குகின்ற, அரும் பெருங் கிரிகள் ஏழும் - அரிய பெரிய ஏழு குலபருவதங்களும், ஆண்டு சென்று - அவ்விடத்தில் வந்து, ஒரு வழி நின்று என - ஒருசேர நினறாற்போல, இயைந்த - பொருந்தியவை; (எ - று.)

முன்னிரண்டடிகள் - அம்மாங்கள் அழியாது நிலைத்து நிற்றலை விளக்கவந்த உயர்வுநவிற்சியணியும், பினனிரணடடிகள் - அம்மாங்களின் பெருந்தோற்றத்தை விளக்கவந்த தற்குறிப்பேற்றவணியுமாம், அடுத்த செய்யுளிலுள்ள 'ஏழும்' என்பதையே இச்செய்யுளிலுங் கூட்டி, இச்செய்யுளிலுள்ள பயனிலைகட்கும் ஏழுவாயாக்குக. 'பேரிருள்' என்றது - சக்கரவாளபர்வதத்திற்கு அப்பாலுள்ள காடாந்தகாரத்தை. கிரிகள் ஏழு-கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், கந்தமாதனம் என்பன. மலைகள் பூமிக்கு மேலும்

கீழும் பொருந்தி அதனைத் தரித்தலால், 'மாலிலக்தாங்கியகிரி' எனப்பட்டது ; அதனை 'பூதரம்' என்னும் வடமொழிப் பெயராலும் உணர்க. ஊழி-பிரமனது ஆயுள் ; கல்பமெனப்படும். பேரினும், காலத்தும், உம்மை - உயர்வு சிறப்பு. ஏழும், உம்மை - முற்று. ஆழி - சக்கரவாளகிரியுமாம். (கஉஇ)

கஉசு. கலிகொண்டோங்கியமதியமுங்கதிரவன்ரூனுந்
தலிகண்டோடுதற்கருந்தவந்தொடங்குறுஞ்சாரன்
மலிகண்டோமென்பதல்லதுமலர்மிசையயற்கு
மிலிகண்டோமெனத்தெரிப்பருந்தரத்தனவேழும்.

(இ - ன்.) ஏழும் - (அம்மராமரங்கள்) ஏழும்,—'கலி கொண்டு ஓங்கிய மதியமும் - பதினாறு கலைகளையுங் கொண்டு வளர்ந்த சந்திரனும், கதிரவன தானும்-(ஆயிரங்)கிரணங்களையுடையவனை சூரியனும், தலிகண்டு ஓடுதற்கு-(தனது) உச்சியைக்கண்டு தாண்டிச்செல்லுதற்கு, அருந்தவம் தொடங்குறும்-செய்தற்கரியதவத்தைத் தொடங்கிச்செய்தற்குக் காரணமான [மிகஉயர்ந்த], சாரல் மலை-சாரல்களையுடையதொரு பருவதத்தை, கண்டோம்-பார்த்தோம்,' என்பது அல்லது என்று சொல்வதேயல்லாமல், மலர்மிசை அயற்கும் - தாமரைமலரில் தோன்றிய பிரமனுக்கும், இலை கண்டோம என - (அதன் நுனியி லுள்ள) இலையைப் பார்த்தோமென்று, தெரிப்பு அரு-சொல்லுதற்கு அருமை யான, தரத்தன - தனமையையுடையன ; (எ - று.)

'ஆகாயத்தில் மிக்க உயரத்திற் செல்லுகின்ற சீந்திர சூரியர்களும் தாம இவற்றின சிகரத்தால் வழிவிலகப்பட்டவராகி இனி இமமலையின உச்சியைக் கண்டுபிடித்துக் கடந்துசெல்ல வேண்டுமென்று கருதிப் பெருந்தவஞ் செய்ய முயலுமாறு அச் சந்திரசூரியர்கள் சஞ்சரிக்குமிடத்தினும உயர்ந்து சென்றதொரு விந்தியம்போன்ற மலையைக் கண்டோம்' என்று சொல்லுவ தன்றி வேறுவகையாகச் சொல்லமுடியாதபடி, மேலுலகங்களெல்லாவற்றுள ளும் உயர்ந்த சத்தியலோகத்தில் வாழ்கின்ற அப்பிரமனுலும நுனி காணப் படாமல் ஓங்கி உயர்ந்தவை அம்மராமரங்கள் என்பதாம். இனி, இலை இல்லை யென்பதன் விகாரமாய், பிரமனுக்கும் அம்மரம் முழுவதையுங கண்டோ மில்லையென்று சொல்லலாம்படி யாவர்க்குந் தெரிவித்தற்கு அரிய தனமை யனவென்றுமாம். இச்செய்யுள் - அம் மலையின உயரச்சியை விளக்கவந்த உயர்வுநவிற்சியணி. கலை - சந்திரனது பகுதி. சாரல்-மலைப்பக்கம். 'கலை கொண்டோங்கிய' என்பதைக்கதிரவனுக்கும் அடைமொழியாகக்கலாம். (கஉசு)

கஉஎ. ஒக்கநாளெலாமுழுல்வனவுலவிலவாக
மிக்கதோர்பொருளுளதெனவேயுங்கண்டிலமா
நிக்குமவ்வானமுஞ்செறிந்தவத்தருநிழற்சீதம்
புக்குநீங்கலிற்றளர்விலவிரவிதேர்ப்புரவி.

(இ - ன்.) நாள எலாம் - தினந்தோறும் [நாள் முழுவதும்], ஒக்க உழல் வன-ஒரேவிதமாக (ஓயாமல்) ஓடிச்செல்பவையாகிய, இரவி தோ புரவி-சூரிய னது தேரிற் பூட்டப்பட்ட ஏழுகுதிரைகள், உலவு இல ஆக-சிறிதும் வருத்த

மில்லாதவையா யிருத்தற்கு, மிக்கது ஓர் பொருள் உன்னு என - மேம்பட்ட தொரு காரணம் உண்டென்று, வேறு கண்டிலம் - வேறே கண்டோமில்லை; திக்கும் வானமும் செறிந்த - எல்லாத் திக்குக்களிலும் ஆகாயத்திலும் நெருங்கிப் பரந்த, அதரு - அம்மரங்களின், சீதம் நிழல் - குளிர்ந்த நிழலை, புக்கு - அடைந்து, நீங்கலின் - செல்வதனால், தளர்வு இல-(அக்குதிரைகள்) தளர்ச்சியில்லாதனவாம் ; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சூரியனது தேர்க்குதிரைகள் ஓயாமல் ஓடுவனவாயிருந்தும் இளைப்படையாமைக்குக் காரணம், அம்மரத்தின் கீழ் நிழலின்வழிச் செல்வதேயென உத்பிரேக்ஷித்ததனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இதனால், அம்மரங்கள் சூரிய மண்டலத்தினும் உயர்ந்தன வென்பதும், மிகவும் பரந்துள்ளன வென்பதும் தோனிக்கும். சூரியனது தேர்க்குக் குதிரைகள் ஏழாதலால், 'தளர்வில' எனப் பன்மையாற் கூறினர். புரவி - பால்பகாவஃறிணைப்பெயர். (கஉஎ)

கஉஅ. நீடுநாள்களுங் கோள்களுமென்ன மேனிமிர்ந்து
மாடுதோற்றுவமலரெனப்பொலிகின்றவளத்த
வோடுமாச்சுடர்வெண்மதிக்குட்கறுப்புயர்ந்த
கோடுதேய்த்தலிற்களங்கமுற்றுமெனுங்குறிய.

(இ - ள்.) (அவ்வேழுமரங்களும்),—நீடு - நெடுங்காலமுள்ள, கள்களும்-நகூத்திரங்களும், கோள்களும் - நவக்கிரகங்களும், என்ன - என்று, மேல் நிமிர்ந்து - ஆகாயத்திற் பொருந்தி, மாடு தோற்றுவ-பக்கங்களில் வீளங்குகின்ற இவை, மலர் என - (இம்மரங்களின்) புஷ்பங்களென்னும்படி, பொலிகின்ற - வீளங்குகின்ற, வளத்த - வளர்ச்சியையுடையவை; ஓடும்-ஆகாயத்திற் செல்லுகின்ற, மா சுடர் - சிறந்த ஒளியையுடைய, வெண்மதிக்கு - வெண்மையான சந்திரனுக்கு, உள் கறுப்பு - நடுவிலுள்ள மறு, உயர்ந்த கோடு தேய்த்தலின் - (இம்மரத்தின்) உயர்ந்த கிளைகள்பட்டு (அவனுடம்பைத்) தேய்த்தலால், களங்கம் உற்று ஆம் - வீரணப்பட்டதனாலேயாம், எனும் குறிய - என்று உத்பிரேக்ஷிக்கத்தக்கவை ; (எ - று.)

இம்மரங்களின் கிளைகளைச் சார்ந்து வீளங்குகின்ற கிரகங்களும் நகூத்திரங்களும் எல்லாம் இம்மரங்களின் மலர்கள்போல இருக்கின்றன என்பது, முன்னிரண்டடியிற் கூறிய பொருள் ; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இம்மரங்களின் கிளைகள் அடிக்கடி சந்திரன்மீது படுவதனால அவனிடத்தி உண்டான தழும்புகளே களங்கமென்று சொல்லப்படுகினறன என்பது, பின்னிரண்டடியிற் கூறிய விஷயம் ; ஏதுத்தற்குறிப்பேற்றவணி.

எழுவாய் வருவிக்க. கோள் - க்ரஹமென்ற வடசொல்லின் பொருள் கொண்டது ; அவை - சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்ரன், சனி, ராகு, கேது என ஒன்பதாம். மாடு-ஏழாம்வேற்றுமை யிடப் பொருளுணர்கின்ற இடைச்சொல். தோற்றுவ - பெயர். பொலிகின்ற-பெயரெச்சம். வளத்த, குறிய ; முற்று. 'உற்று' என்ற செய்தெனெச்சம் - காரணப் பொருளது. (கஉஅ)

கஉகூ. 'நீதறும்பெருஞ்சாகைகடழைக்கின்றசெயலால்
வேதமென்னவுந்தகுவனவிசும்பினுமுயர்ந்த
வாதியண்டமுன்பளித்தவனுலகினைகவனூர்
ரோதிமந்தனிப்பெடையொடும்புடை யிருந்துறைவ.

(இ - ள்.) (பின்னும் அம்மரங்கள்),—நீது அறும் - அழிவில்லாத, பெரு- பெரிய, சாகைகள் - கிளைகள் (பிரிவுகள்), தழைக்கின்ற - செழித்திருக்கின்ற, செயலால் - தன்மையினால், வேதம் என்னவும் தகுவன - வேதங்களென்றுஞ் சொல்லத்தக்கவை; விசும்பினும் உயர்ந்த - தேவலோகத்தினும் உயர்ந்தவை; ஆதி அண்டம் முன்பு அளித்தவன் - பழமையான அண்டகோளங்களை முன்னே படைத்தவனுடைய பிரமனது, உலகின் - லோகத்தில், அவன் ஊர் - அப்பிரமன் (வாகனமாக) ஏறி நடத்தும்படியான, ஓதிமம் - அன்னப்பறவை, தனி பெடையொடும் - ஒப்பற்ற பேடையுடனே, புடை இருந்து - (தமது) சார்பிலிருந்து, உறைவ - வாசஞ்செய்யப்பெற்றவை; (எ - று.)

'தூணைப்பெடை' என்றும் பாடம், 'அங்கு' - அசை.

இச்செய்யுட்கும் எழுவாய் வருவிக்கவேண்டியதே. சாகா என்னும் வட சொல்லுக்கு - மரக்கிளையென்றும், வேதத்தின் பிரிவென்றும் பொருள்கள் உள்ளனவாதலால், 'சாகைகள் தழைக்கின்ற செயலால் வேதமென்னத் தகுவன' எனச் சேம்மொழிச்சிலேடை யுவமையணி. சிலேடை-ஒருசொல்லைப் பல பொருள்படச் சொல்வது; செம்மொழிச் சிலேடையென்றும், பிரி மொழிச் சிலேடையென்றும்இருவகைப்படும்.செம்மொழிச் சிலேடையாவது- சொல் வெவ்வேறு வகையாகப் பிரியாதது; பிரிமொழிச் சிலேடையாவது - "கண்ணுஞ்சொல்லும் கரும்பிணை" என்றவிடத்து, கண், கரு பிணை - கரிய மான் போன்றது: சொல், கரும்பு இணை-கரும்பையொத்தது என்றாற்போலச் சொல் வெவ்வேறு வகையாகப்பிரிந்து வெவ்வேறு பொருளைத் தருவது. ()

கஉ0. காற்றமல்குபோதடைகனிகாய்முதலுஞ
வீற்றுமண்டலத்தியாவையும்வீழ்ந்தியாண்டுங்
காற்றலம்பினுங்கலிநெடுவானிடைக்கலந்த
வாற்றின்வீழ்ந்துபோயலைகடற்பாய்தருமியல்ப.

(இ - ள்.) காற்று அலம்பினும் - காற்று அசைத்தாலும், காற்றம் மல்கு போது - நறுமணம் மிக்க மலர்களும், அடை - இலைகளும், கனி - பழங்களும், காய் - காய்களும், முதல் - முதலிய, நானு வீற்று யாவையும்-பலவகைப்பட்ட அனைத்தும், மண்தலத்து - பூலோகத்தில், யாண்டும் - எவ்விடத்திலும், வீழ்ந்து வீழாதனவாய்,—கலி - ஆரவாரத்தையுடைய,; நெடு வானிடை கலந்த - பெரிய தேவலோகத்திற் பொருந்திய, ஆற்றின்-ஆகாசகங்காநதியில், வீழ்ந்து- விழுந்து, போய் - (அதன்வழியாகச்) சென்று, அலைகடல் பாய்தரும் - அலை கின்ற கடலில்சேர்கின்ற, இயல்ப - தன்மையையுடையவை; (எ - று.)

இதனால், அவை ஆகாசகங்கையிலும் உயர்ந்துள்ளனவென்றபடி: தொடர் புயர்வுநவிற்சியணி. யாவையும் காற்று அலம்பினும் வீழ்ந்து வீழ்ந்துபோய்ப்

பாய்தரும் இயல்ப என இயையும். இனி, முன்னிரண்டடிக்கு - எந்நாளும் இலை முதலியன உதிராதவை யென்றும், பின்னிரண்டடிக்கு- காற்றடித்தால் ஆகாசகங்கையிலும் கடலிலும் படும்படி அசைபவை யென்றும் பொருள் கொள்ளலாம். நாற்றம் - தொழிற்பெயர்; இச்சொல் இங்குத் தீநாற்றத்தைக் காட்டாது நறுமணமென்ற பொருளைத் தந்தது. தலம், நாநீர் - வட சொற்கள். பாய்தரும், தா - அணைவினை. (கஉ-o)

கஉக. அடியநான் மறையந்தணணண்டத்துக்கப்பான்
முடியின்மேற்சென்ற முடியனவாதலின்முடியா
நெடியமாலெனுநிலையணீரிடைக்கிடந்த
படியின்மேனின்றமேருமால்வரையினும்பரிய.

(இ - ள்.) (பின்னும் அம்மரங்கள்),—அடிய- அநாதியான, நால் மறை - நான்குவேதங்களையும் உணர்ந்த, அந்தணன் - பிரமதேவன் படைத்த, அண்டத்துக்கு - அண்டகோளத்தினது, அப்பால் முடியின்மேல் - மேல் முகட்டின்மேலும், சென்ற - போயுள்ள, முடியன - நுனியையுடையன; ஆதலின் - ஆகையினால், முடியா - அளவிடப்படாத, நெடிய - நீண்ட [திரிவிக்கிரமாவதாரஞ்செய்த], மால் - திருமால், எனும் - என்று சொல்லத்தக்க, நிலையன - நிலைமையுடையவை; நீரிடை கிடந்த - ஜலத்தின்மேற் பொருந்திய, படியின்மேல் - பூமியில், நின்ற - நிலைபெற்ற, மால் மேரு வரையினும் - மகாமேரு பருவதத்தினும், பரிய - பருத்தவை; (எ - று.)

மராமரங்களேழும் பிரமாண்டத்தையுங்கடந்து நிற்றலால் திரிவிக்கிரம மூர்த்தியையொத்தும், மேருமலையினும் மிகப்பருத்தும் நிற்கின்றன வென்பதாம். நெடியமால் அண்டத்துக்கப்பால் முடியின்மேற் சென்ற முடியனதலை "படிவட்டத்தாமரை பண்டுலகநீரேற், றடிவட்டத்தாலளப்ப நீண்ட - முடிவட்டம், ஆகாயமூடறுத் தண்டம்போய் நீண்டதே, மாகாயமாய் நின்ற மாற்கு" என்ற பெரியார்பாசுரத்தாலும் உணர்க, முடியா - அழிவில்லாத எனினுமாம் நெடியமால் - மகாவிஷ்ணு. அந்தணணண்டம் - சத்தியலோக மென்றுமாம். ஆதியிற் கடவுள் நீரைப்படைத்து அதன்மேல் பூமியைத் தோற்றுவித்தன ராதலால், 'நீரிடைக் கிடந்த படி' எனப்பட்டது. பூமிக்கு மத்தியிற் பொன்மயமா யோங்கிநின்ற மேருமலை தன்னிடத்துச் சூரியன் மறைவதனால் அஸ்தமனமும், வெளிதோன்றுவதனால் உதயமும் நவகண்டங்கட்கும் உண்டாகுமாறு செய்கின்றதென்று புராணங் கூறும்.

அடிய - குறிப்புப்பெயரெச்சமென்றேனும், பலவின்பாற்குறிப்புவினையாலணையும்பெயரென்றேனுங் கொள்க; அடி - பழமை. எழுவாய் வருவிக்க. அடுத்த இரண்டு செய்யுள்களிலும் இவ்வாறே. (கஉக)

கஉஉ. வள்ளலிந்திரன்மைந்தற்குந்தம்பிக்கும்வயிரத்தி
வுள்ளமேயெனவொன்பிலைஞ்சுள்வயிர்ப்புடைய
தெள்ளுநீரிடைக்கிடந்தபார்சுமக்கின்றசேடன்
வெள்ளிவெண்பட்டுடைந்துகீழ்போகியவேர.

(இ - ன்.) வன்னல் - வரையாமற்கொடுப்பவனுகிய, இந்திரன் - தேவேந்திரனது, ஈன்றற்கும் - குமாரனை வாலிக்கும், தம்பிக்கும் - (அவனது) தம்பியான சுக்கிரீவனுக்கும், வயிர்த்த - (ஒருவர்மேலொருவர்) பகைமை கொண்ட, உள்ளமே என - மனம்போல, ஒன்றின் ஒன்று - ஒன்றுபோலொன்று, உள் வயிர்ப்பு உடைய - உள்ளே வயிரத்தன்மையையுடையவை; தெள்ளும் நீரிடை இடந்த - தெளிவான கடலினிடையே பொருந்திய, பார் - பூமியை, சுமக்கின்ற - தாங்குகின்ற, சேடன் - ஆதிசேஷனது, வெள்ளி வெள் படம் - வெள்ளிபோல வெண்மையான படத்தை, குடைந்து - இழித்துக்கொண்டு, கீழ் போகிய - கீழே ஊன்றிச்சென்ற, வேர - வேரினையுடையவை; (எ - று.)

வாலிசுக்கிரீவர்கள் உள்ளே வயிரம் வளரப்பெற்றமைபோல, அம்மரங்கள் உள்வயிரம் வளரப்பெற்றன வென்றபடி: செம்மொழிச்சிலேடை பற்றி வந்த உவமையணி. வாலிசுக்கிரீவர்கட்கு வயிர்ப்பு - நெஞ்சிற்கொண்டுள்ள பகைமை; மரத்திற்கு வயிர்ப்பு - உறைப்பாட்டினுல் மரத்தினுட்புறத்திற் சேர்ந்தும் நிறவேறுபாடு: இவ்விரண்டும் வேறுபிரிக்கவும் உவமைவருதற்காக ஒன்றாக்கொண்டது; வேற்றுமையுயர்வுநவிற்சி. அம்மரத்தின்வேர்கள் நாகலோகத்திற்குக்கீழுஞ் சென்றுள்ளன வென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. சேஷன் - (பிரளயகாலத்திலும் அழியாது) எஞ்சிநிற்பவனெனக் காரணப்பெயர். (கஉ)

கஉ. சென்றுதிக்கினீயளந்தபணைகளிற்றிறவ
சென்றுநிற்குமென்றிசைப்பனவிருசுடர்திரியுங்
குன்றினுக்குயர்ந்தகன்றனவொன்றினுங்குறுகா
வொன்றினுக்கொன்றினிடைநெடியோசனையுடைய.

(இ - ன்.) (அம்மரங்கள்),—'சென்று - போய், திக்கினை - எல்லாத் திசைகளையும், அளந்தன - அளவிட்டவையாகிய, பணைகளின் - (இம்மரங்களின்) கிளைகளால் (தடைபட்டு), என்று - சூரியன், நிற்கும் - (இனிக்கதியொழிந்து) நின்றுவிடுவான்,' என்று—, தேவர் - தேவர்கள், இசைப்பன - சொல்லத்தக்கவை; இரு சுடர் திரியும் குன்றினுக்கு-சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கின்ற உதயகிரி அஸ்தகிரிகளைக்காட்டிலும், உயர்ந்த அகன்றன - ஒங்கிப் பரந்திருப்பவை; ஒன்றினும் குறுகா - ஒருவகையிலுங் குறைவில்லாதவை; ஒன்றினுக்கு ஒன்றின் இடை - ஒன்றுக்கொன்று இடையிலே, நெடியோசனை உடைய - பலயோசனைதூரம் இடைவெளியுள்ளவை; (எ - று.)

இங்கு வேறுவகையால் அம்மரங்களின் உயர்வையும், பரப்பையும் விளக்கியதோடு, அவ்வேழுமரங்களும் ஒன்றற்கு ஒன்று ஒருயோஜனைதூரம் இடம்விட்டுள்ளன வென்று, அம்மரங்கள் நெருக்கமாகவன்றி விசாலமாக மூலைத்திருப்பதைத் தெரிவித்தார். கீழ் 'மேருமால் வரையினும் பரிய' என வந்ததனுல், 'இருசுடர்திரியுங்குன்று' என்பதற்கு - மேருவென்று பொருள்கொள்ளப்படவில்லை. ஒன்றினுங் குறுகா - ஒன்றில் ஒன்று சேராதபடி யென்றுமாம். யோசனை - யோஜநா: வடசொல்: ஒரெல்லையளவு: நான்கு குரோசங்

கொண்டது: "அங்குலமறுநான்கெய்தி னதுகரம் காமேர்ந்தாங்கு, தங்குதல் தனுவெண்ருகுந் தனுவிரண்டதுவோர்தண்ட, மிங்குறுதண்டமான வீரா யிரங்குரோசத்தெல்லை, பங்கமில் குரோசநானகோ ரியோசனைப்பாலதாமே" என்பது சாண்க. இது, காத மெனப்படும்; நாற்காதத்தை யோஜனையென் பது, ஜைநநூல்வழக்கு - இசைப்பன - செயப்படுபொருள் செய்தது போல வந்தது. எனறு - ஒளியையுடையதெனப் பொருள்படுங் காரணக்குறி; எல் - ஒளி: பகுதி; று - பெயர்விகுதி நெடிதியோசனை - குற்றியலிகரம். உடைய - பலவின்பாற் குறிப்புமுற்று. (கருக)

[இராமபிரான் அம்மராங்களைக் கண்டவுடனே அம்பு எய்யுமாறு நாணைளி யெழுப்புதல்.]

கருச. ஆயமாமரமீனத்தையுநோக்கிநிண்றமலன்
ஞாயவார்கணை தூரப்பதோராதரக்தான்றச்
சேயவானமுந்திசைகளுஞ்செவிடுறத்தேவர்க்
கேய்விலாததோர்பயமவரச்சிலையினுணெறிநதான்.

(இ - ள்) அமலன - ஸ்ரீராமன்,—ஆய மா மரம் அனைத்தையும் - அத் தன்மையனவான பெரிய மராமரங்கள் ஏழையும், நோக்கி நினறு - பார்த்து நினறு,—தூய வார் கணை - பரிசுத்தமான நீண்ட அம்பை, தூரப்பட - பிர யோகிப்பதறகேற்ற, ஒர் ஆதரம் - ஒரு விருப்பம், தோனற - உண்டாக,—(உடனே), சேய வானமும - தூரத்திலுள்ள தேவலோகத்தி லிருகினற பிராணிகளும், திசைகளும - எல்லாதிகிலுமுள்ள பிராணிகளும், செவிடு உற - செவிடுபடவும்,—தேவாக்கு - தேவர்களுக்கு, வய்வு இலாதது ஓர் பயம் வர - (இதுவரையிலும் எந்நாளும்) உண்டாகாததொரு பயம் உண்டாக வும், சிலையின் நாண் எறிந்தான - வில்லில் ஏறறிய நாணியை(க்கைவிரலால்) எறிந்து (டங்காரத்தொனி) செய்தான; (எ - று)

சுக்கிரீவனுக்கு நம்புதலுண்டாக்குதற்பொருட்டு ஏழுமரங்களையும் ஒரு சேர வய்யுமாறு விரும்பி, வானமும திசைகளும் செவிடுபடவும, தேவர்களும் நடுநடுங்கவும், இராமபிரான் நாணெலியெழுப்பின னென்பதாம. தூய, சேய - தூய்மை, சேய்மை என்னும் பண்பினடியாகப்பிறந்த குறிப்புப் பெய ரெசசம். கணைக்குத தூய்மை - அஞ்சடர்களை அழித்தலும; குறிதத இலக்குத தபபாமையும். வானம, திசை எனபன - அகுளளார்க்கு இடவாகுபெயர். செவிடுபடுதல் - அளவிறந்த ஒலியைக் கேட்டலால். பயம் வருதல் - என்ன அபாயம் வருமோ வெனறு. (கருச)

[நாணெலியின் வருணனை.]

கருடு. ஒக்கநின்றதெவ்வுலகமுமங்கங்கேயோசை
பக்கநின்றவர்க்குற்றதுபகர்வதெப்படியோ
திக்கயங்களுமயங்கின திசைகளுந்திகைத்த
புக்கயன்பதிசலிப்புறவொளிததநப்பொருவில்,

(இ - ள்.) ஓசை - அவ்வொலி,—எ உலகமும் - எல்லாலோகங்களிலும், ஒக்க - ஒருசமமாக, அங்கு அங்கே நின்றது - அவ்வவவிடங்களிற் (போய்ப்) பரவிநின்றது; (என்றால்),—பக்கம் நின்றவர்க்கு - அருகில் இருந்தவர்களுக்கு, உற்றது - கேர்ந்ததை, பகர்வது - சொல்வது, எப்படியோ - எவ்வாறோ? (அந்நாணொலியினால்), திக் கயங்களும் - (எட்டுத்) திக்குயானைகளும், மயங்கின - மயக்கமடைந்தன; திசைகளும் - எல்லாத்திக்குகளும், திகைத்த - கலக்கமடைந்தன; அ பொரு வில் - போர்க்கு ஏற்ற அந்த வில். அயன்பதி சலிப்பு உற - பிரமலோகமும் அதிர்ச்சியடையும்படி, புக்கு ஒலித்தது - போய்ச் சத்தித்தது; (எ - று.)

அவ்வுலகங்களிற செனற இராமபிரானது வில்லின் நாணொலி அவ்வவ விடத்தில்தான தோன்றினதுபோலப் பேரோசை பெற்றிருந்த தெனறால், உண்மையில் அதனருகேயிருந்தவர்க்கு இவ்வாறு இருந்த தென்பது கூறுமலே விளங்கும்; அவ்வாறுதோன்றிய பேரொலியினால் திக்கஜங்கள் திகைப்படையத் திக்கிலுள்ளவர்கள் மயங்கப் பிரமலோகமும் சலித்த தெனப தாம். இச்செய்யுள் - நாணொலியின் மிகுதியைத் தெரிவிக்கவந்த தொடர் புயர்வு நவிற்சியணி. இதாகு - இரண்டாமடியிறகூறிய விஷயத்தைக் கை முதிகையாயத்தாற் சாதிக்கின்ற முதலடியிலுளள தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி அங்கமாய்வந்தது. திக்கஜங்கள - ஐராவதம, புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம் என்பன. கயம் - கஜம். உலகமும், உம்மை - முற்று; ஒகாரம் - எதிராமறை. கயங்களும், உம் - எண்ணுப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளது. திசைகளும், உம்மை - எண். (கருஇ)

கருஈ. அரிந்தமன் சிலைநாணெடி தார்த்தலுமமர
நிரிந்துநீங்கினர்கற்பத்தினிறுதியென்றயிர்த்தார்
பரிந்ததம்பியேபாங்குநின்றான்மற்றைப்பல்லோர்
புரிந்ததண்மையையுரைசெயிற்பழியவர்ப்புணருமம.

(இ - ள்.) அரிந்தமன் - பகைவர்களே அழகின்றவனான ஸ்ரீராமனது, சிலை நாண் - கோதண்டத்தினது நாணி, நெடிது ஆர்த்தலும் - மிகுதியாய் ஆரவாரித்தமாத்திரத்தில்,—அமரர் - தேவர்க ளெல்லாரும், இரிந்து நீங்கினர் - அஞ்சி ஓடினவர்களாய், கற்பத்தின் இறுதி எனறு - கல்பகாலதின் முடிவு [பிரளயகாலம்] என்று, அயிர்த்தார் - சந்தேகித்தார்கள; பரிந்த தம்பியே - (தமையனுர்ப்பக்கல்) அன்புபூண்ட இளையபெருமாள ஒருவன் மாத்திரமே, பாங்கு நின்றான் - அருகில் இருந்தான்; மற்றை பல்லோர் புரிந்த தண்மையை - மற்றை (சுக்கிரீவன் அநுமான் முதலிய) பலரும் அடைந்த விதத்தை, உரைசெயின - சொல்லத்தொடங்கினால், அவர் - அப்பலர்க்கும், பழி - இகழ்ச்சியாக, புணரும் - முடியும்; (எ - று.)

கற்பாந்தகாலம் வந்துவிட்டதெனறு தேவர்கள் அஞ்சியோடுமாறும், சுக்கிரீவன் முதலியோர் இனனபடி யஞ்சினார்களென்று சொல்லுதற்கும் முடியாதபடி அவ்வளவு மிக அதிகமான அச்சத்தை யடையுமாறும் இராம

பிரான தருஷ்டக்காரஞ் செய்கையில், இலக்குமணனெருவனே அஞ்சாது அருகிலிருந்தன னைபதாம். அரிந்தமன எனற வடசொல்லுக்கு - பாவத்தைப் போக்குபவனெனறு பொருள்கொண்டு, இயற்கையாகப் பாவமில்லாமையோடு தனக்குச் சரீரமாகவுளள சராசராங்களின பாவமும் தட்டாதவனெனறும், தனனையடைந்தவர்களது பாவதததைப போக்குபவனென்றும் மற்றும் பலவாறுகவும் கருத்துக் கூறப்படும. நெடிய நாண் என்ற எடுத்து-நீண்ட நாண் எனறுமாம. கறபம் - கல்பம்; லகரம் றகரமாகத் திரிக்தது. ஏ - பிரிநிலை. அவர்ப்புணரும்—'இயல்பின விகாரம்.'' (கஉ)

[இராமபிரான் அம்பை யெய்தல்]

கஉ. எய்தல்காண்டுங்கொலின்னமென்றரிதின்வகதெய்திப்
பொய்யினமாருதிமுதலினோர்புகழ்வுறுமபொழுதின
மெய்கொளவாசிலைகாணினோமுறையுறவாங்கி
வெய்யவாளியையாளுடைவில்லியுமவிட்டான்.

(இ - ள) பொய் இல் மாருதி முதலினோர் - பொய்மையில்லாத அநுமான முதலானவர்கள, 'இனனம - இனனமும், எய்தல் - அம்பெய்தலை, காண்டும - பார்ப்போம,' எனறு - எனறு சொல்லிக்கொண்டு, அரிதின - அருமையாக, வந்து எய்தி - வந்துசேர்ந்து, புகழ்வுறும்பொழுதில் - புகழ்ந்து கொண்டிருக்கினற சமயததில்,—ஆள் உடை வில்லியும - (எல்லா வுயிர்களையும்) அடிமையாகவுடைய விலலில வல்லவனன ஸ்ரீ ராமனும், — மொய் கொள - வலிமையைக கொணட, வரா - நீண்ட, சிலை - விலலிற் பூட்டிய, நாணினை-நாணியை, முறை - முறைப்படியே, உற ணனறுக. வாங்கி-இழுத்து, வெய்ய வாளியை - கொடிய அம்பை, விடடான - தொடுத்தான; (எ - று.)

இராமபிரான செயத நாணெலியைக் கேட்டு அஞ்சியோடியவர்களில் மாருதி முதலிய தைரியசாலிகளில சிலா அரிதில தேறி, அம்பெய்வதைப் பாரததறகாக இராமபிரானை யணுகி அப்பிரானது வலிமையைக் குறித்துக் கொண்டாடிக கூறிக்கொண் டிருக்கையில, இராமபிரான நாணை யிழுத்து அம்பு தொடுததன னைனபதாம. கீழ் அஞ்சியோடியமைபறறி, 'அரிதின வந்தெய்தி' எனப்பட்டது இராமன வாலியைக கொல்ல வல்லவனென்று துணிந்த அநுமானினது அநுமாநம இப்பொழுது மெய்யாவதனால், இஙகு 'பொய்யில் மாருதி' எனறார. 'காண்டும' எனபதில், 'டும்' விகுதி எதிர்காலங காட்டிறறு; 'அம' விகுதி முதலதிரிந்த தெனறது மொனறு. கொல்-அசை. முதலினோர், இன - சாரியை. (கஉ)

[இராமபிரான் பிரயோகித்த அம்பு மராமரங்களோடு கீழேழுலகங் களையுந் தொளைத்துச் செல்லுதல்.]

கஉஅ. ஏழுமாமரமுருவிக்கீழுலகமென்றிசைக்கு
மேழுமூடுபுகருவிப்பின்னுடனடுதியன்ற
வேழிலாமையான்மீண்டதவ்விராகவன்பகழி
யேழுகண்டபினுருவும்மாலொழிவதன்றின்னும்.

(இ - ன்.) அ இராகவன பகழி - அந்த ராமபாணம்,—எழு மா மரம் - பெரிய அவவேழு மரங்களேயும், உருவி - துளைத்துச்சென்று,—கீழ் உலகம் என்ற இசைக்கும் எழும் - கீழுலகமென்று சொல்லப்படுகின்ற ஏழையும், ஊடு புக்கு உருவி - கடுவே துளைத்துச்சென்று,—பின் - பின்பு,—உடன் அடுத்து இயன்ற - அப்பாற்பொருந்தியிருக்கின்ற, எழு - எழென்னுந்தொகை யுடைய பொருள், இலாமையால்-வேறு இல்லாமையால், மீண்டது-திரும்பி வந்துவிட்டது; (அந்த அம்பு), இனனும் - இன்னமும், எழு கண்டபின - ஏழென்னுந் தொகையையுடைய பொருளைக் காணுமாயின, ஒழிவது அன்று - துளையாமல் விடுவதன்று; உருவும் - துளைத்தேவிடும்; (எ - று.)

இராமபிரான் பிரயோகித்த அம்புகள் ஏழு மராமரங்களேயுந் துளைத்து ஏழுலகங்களேயும் ஊடுருவிச்சென்றதனால், அவ்வம்புகள் ஏழென்னும் எண் ணமைந்துள்ள பொருள்களேயெல்லாந் துளைத்துச்செல்லுமென்பது, தெற் றென விளங்குகின்றது; அவ்வாறு மிக்க வலிமைபெற்றிருந்தும் அவ்வம்பு கள் மராமரம் கீழுலகம் என்ற இரண்டைத்தவிர மற்றொன்றையும துளையா திருந்தது ஏழென்ற எண்ணமைந்தபொருள் கீழுலகங்களுக்குப்பால் வேறொன்று மில்லாமையேயா மென்பதாம். இராமபிரான் தொடுத்துவிட்ட அம்பு மராமரத்தையும கீழுலகமேழினையுந் துளைத்ததோடு மீண்டுவிடாத தற்கு 'பின னுடனடுத்தியன்ற ஏழிலாமையால' எனக் காரணங் கற்பித்துக் கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. கீழுலகமேழ் - அதலம், விதலம், சுத லம், காதலம், ரஸாதலம, மகாதலம், பாதாளம என்பன. மூன்றுமடியிலும், நான்காமடியிலும், எழு - ஆகுபெயர். கண்டபின - பின்னொன்று எதிர்கால வினையெச்சம். ஆல் - அசை. ''மாதவருமபா பெருமாளரங்கர் வலியுணரா, தாதவனமைந்தனையிர்த்தவந்நாளிலக்காயநெடும், பாதவமேழுமுடனே நெடுங் கணைபட்டுருவப், பூதலமேழு மெழுபாதலங்களும் புணபட்டவே'' என்ற திருவரங்கத்துமாலை, இங்கு நோக்கத்தக்கது. (கஙூ-அ)

[இராமபிரான் அம்புஎய்ததைக்கண்டு பலபொருள்களும் அஞ்சுதல்]

கஙூக. ஏழுவேலியுமுலகமேலுயர்ந்தனவேழு
மேழுகுன்றமுமிருடிகளேழுவரும்புரவி
யேழுமங்கையரெழுவருநடுங்கினவென்ப
வேழுபெற்றதோவிக்கணைக்கிலக்கமென்றெண்ணி.

(இ - ள்.) ஏழு வேலியும்-ஸப்தஸமுத்திரங்களும், உயர்ந்தன மேல் ஏழ் உலகமும் - உயர்ந்துள்ள மேலேழுலகங்களும், ஏழு குன்றமும் ஸப்தகுல பருவதங்களும், இருடிகள் எழுவரும - ஸப்த ருஷிகளும், புரவி ஏழும் - சூரி யனதேர்க் குதிரைகள ஏழும, மங்கையர் எழுவரும் - ஸப்தமாதர்களும், 'இ கணைக்கு - இந்த அமபுக்கு, ஏழு - ஏழென்னுந் தொகையுடையதெல்லாம், இலக்கம பெறற்றோ - குறியாகப்பெறற்றோ?' என்று எண்ணி—, நடுங்கின - (அச்சத்தால்) நடுக்கமடைந்தன; (எ - று.)

வேலை முதலியவைகள நடுங்கின என, அப்பிரதிருதங்கள் ஓரேபண்பை யடைந்தனவாக கூறியது - ஒப்புமைக்கூட்டவணி: இது, வடமொழியில

அல்லயோகிதாலங்கார மெனப்படும். (அப்பிரகிருதமாவது - கதைப்போக்குக் குச் சம்பந்தப்படாத பொருள்.) 'ஏழு' என்ற ஒரே பொருளையுடைய சொல் மீண்டு வந்தது - சோற்போநட்பின்வநிலையணி. ஏழென்னும் எண்ணினை யுடைய பலபொருள்களை ஒருங்கே யமைத்தது, கவிசமத்காரம்.

ஏழு வேலை - உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின்மயமானவை. மேலேழுலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜநலோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் என இவை. ஏழு குன்றம் - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீல கிரி என்பன: இவை, ஸப்தகுலாசல மெனப்படும். இருடிகள் ஏழுவர் - அத்திரி, பிருகு, குத்ஸர், வஷிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரஸர்; இவர்க் குப் பிறவாறு முறைப்பர். காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ரிஷ்டுப், ஜகதி என்ற ஏழுசந்தசுகளும் சூரியனது தேரின்குதிரைகளென நூல்கள் கூறும். மங்கையர் ஏழுவர் - பிராஹ்மி, மாஹேச்வரி, கௌமாரி, நாராயணி, வாராஹி, இந்த்ராணி, சாமுண்டி. வேலையும், உலகமும, குன்ற மும், இருடிகளும், புரவியும், மங்கையரும் என அஃறிணையும் உயர்திணையுங் கலந்து எண்ணி, மிகுதியினால் 'நடுங்கின' என்னும் அஃறிணை முடிபைப் பெற்றன; உயர்திணைப்பொருள் இரண்டாக, அஃறிணைப்பொருள் நான் காதல் - இங்கே, மிகுதி. என்ப - அசை; இது - புறனடையாற் கொள்க: 'என்னே' என்றும் பாடம். இலக்கம் - லக்ஷ்யம். (கஙக)

[சுக்கிரீவன் ஒன்று கூறத் தொடங்குதல்.]

கசo. அன்ன தாயினு மறத்தினுக் காருயிர்த் துணைவ
னென்னுந் தன்மையை நோக்கின ரியாவரு மெவையும்
பொன்னின் வார்கழற் புதுநிறத் தாமரை பூண்டு
சென்னி மேற்கொளூஉ வருக்கன்சே யிவையிவை செப்பும்.

(இ - ள்.) அன்னது ஆயினும் - அவ்வாறு அச்சமுண்டானாலும், யாவ ரும் - எல்லாரும், 'அறத்தினுக்கு - தருமத்துக்கு, அரு உயிர் - அரிய உயிரைக் காக்கும்படியான, துணைவன் - துணையாயிருப்பவன் (ஸ்ரீராமன்)', என்னும் தன்மையை - என்கிற இயல்பை, நோக்கினர் - நோக்கி அச்சமொழிந்தனர்; எவையும் - எல்லா வுயிகளும், (நோக்கின) அவ்வாறே அறத்துக்குத் துணைவ னென்தன்மையை நோக்கி அச்சமொழித்தன; அருக்கன் சேய் - சூரியன்மகன் [சுக்கிரீவன்],—பொன்னின் வார் கழல் - பொன்னிழையாலாகிய நீண்ட வீரக் கழலையுடைய, புது - புதிய [அன்றுமலர்ந்த], நிறம் - செந்நிறத்தையுடைய, தாமரை - தாமரை மலர்போன்ற (ஸ்ரீராமனது) திருவடிகளை, பூண்டு - பொ ருந்தி, சென்னிமேல் கொளூஉ - தலைமேற்கொண்டு [ஸாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டு], இவை இவை செப்பும்-இந்த இந்த வார்த்தைகளைச் சொல்பவனானன்; (எ-று)—அவை, மேல் இரண்டு கவிகளாற் கூறப்படும்.

இராமபிரானது நாணொலியையும் வில்லின் வேகத்தையும் பார்த்து உயர்திணைப்பொருள்களோடு அஃறிணைப்பொருள்களும் அஞ்சியனவாயினும்

இராமபிரான் தருமத்தை காட்டுதற்கே திருவவதரித்திருப்பதை யறிந்தன வாதலால் அச்சம் நீங்கியனவாக, அப்போது சுக்கிரீவன் ஸ்ரீராமனை வணங்கி ஒன்று கூறலாயின னென்பதாம். கொளுவு - செய்யு என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். அன்பு மிகுதியாற் பற்பலவகையாகக் கூறியது தோன்ற, 'இவையிவைசெப்பும்' என்றார். 'எவையும்' என்பதற்குப் பயனிலை வருவிக்கப் பட்டது: இனி, யாவரும் எவையும் நோக்கினர் என இயைத்து, உயர்திணையும் அஃறிணையும் சேர்த்து, சிறப்பினால் உயர்திணைமுடிபைப் பெற்றுவந்த திணைவழுவமைதி யெனக் கொள்ளுதலுமாம். தாமரை - உவம வாகுபெயர்; 'கழல்' என்ற அடைமொழி, இதன் பொருளை விளக்கிற்று. ()

வேறு.

[சுக்கிரீவன் ஸ்ரீ ராமனைத் துதித்தல்.]

கசக. வையமீ வானுமீ மற்றுமீ மலரின்மே
லையனீ யாழிமீ யாழிவர் முதலனீ
செய்யதீ வினைதெறுந் தேவுமீ நாயினே
னுய்யவந் துதவினை யுலகமுந் துதவினாய்.

இதுவும், அடுத்த கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்) வையம் - பூமியும், நீ - நீயே; வானும் - ஆகாயமும், நீ—; மற்றும் - மற்றை (அப்பு தேயு வாயு என்னும்) பூதங்களும், நீ—; மலரின் மேல் - தாமரைமலரில் தோன்றிய, ஐயன் - பிரமதேவனும், நீ—; ஆழி - கடலும், நீ—; ஆழி வாழ் அமலன் - திருப்பாற்கடலில் வாழ்கின்ற ஸ்ரீமந் நாராயணனும், நீ—; தீவினை தெறும்-பாவங்களை நாசஞ்செய்கின்ற, செய்ய-நன்மைக்குணத்தையுடைய, தேவும் - தருமதேவதையும், நீ—; முந்து - முற் காலத்தில், உலகம் - லோகங்களெல்லாம், உதவினாய் - உண்டாக்கின நீ, (இப்பொழுது), நாயினேன் உய்ய - நாய்போலக் கடைப்பட்ட அடியேன் பிழைக்கும்படி, வந்து - எழுந்தருளி, உதவினாய் - அருள்செய்தாய்; (எ-று.)

இராமபிரான் மராமரத்தை அம்பெய்து ஆளக்கையில், நெஞ்சிலுறும் நினைத்தற்கு அரிய அப்பிரானது மகா பராக்கிரமத்தைக் கண்கூடாகக்கண்டதனால், 'இவன் அநுமான் கூறியபடி முழுமுதற்கடவுளாகிய திருமாலின் திருவவதாரமே' என றுதெளிந்து, சுக்கிரீவன இங்ஙனங்கூறலாயினனென்க. பஞ்சபூதங்களுள் முதலதையும் ஈற்றதையுங் கூறி மற்றவற்றை 'மற்றும்' என்பதனாற் பெறவைத்தார். 'ஆழி நீ' என்பதற்கு - அழித்தற்கடவுளாகிய சிவபிரானும் நீயே என உரைத்தலும் தகும்: திருமால் ஒருவனே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் நடத்தற்குத் திரிமூர்த்தியாய் நிற்கின்ற னென்பது நூற்கொள்கை. 'ஆழிவா ழாழிமா மாலுநீ' என்ற பாடத்துக்கு - கடலிற் கண்வளர்ந்தருளுகிற சக்கரதாரனான மகாவிஷ்ணுவும் நீயே என்று பொருள். செய்ய தேவு என இயையும். தேவும் - தெய்வத்துக்கு ஒரு பெயர்; இதனைத் தேவசப்தபவ மென்பர்.

இதுமுதற் பதினெட்டுக் கவிகள் - பம்பைப்படலத்தின் மூப்பத்தேழாங் கவிபோன்ற கலிவிருத்தங்கள் (கசக)

[சுக்கிரீவனது முகமன்.]

கசஉ. என்னெனக்கரிய தெப்பொருளுமெற்கெளிதலா
லுன்னீயித்தலிலிடித்துதவினர்விதியினு
ன்னெபொப்புடையவுன்னடியருக்கடியன்பான்
மன்னவர்க்கரசவென்றுரைசெய்தான்வசையிலான்.

(இ - ள்.) மன்னவர்க்கு அரச - அரசர்களுக்கரசனே ! விதியினர் - முற் பிறப்பிற் செய்த (எனது) நல்வினையார், உன்னை —, இத்தலை-இவ்விடத்தில், விடுத்த உதவினர் - தாமே கொண்டுவந்துவிட் டருளினர்; யான் —, அன்னை ஒப்பு உடைய - தாய்க்குச் சமானமான, உன் - உனது அடியருக்கு, அடியன்- அடியார்களுக்கு அடியவனானேன்; (இனி) எற்கு - எனக்கு, எ பொருளும் - ஈந்தக்காரியமும், எளிது அலால் - (செய்துமுடித்தற்கு) எளியதாகுமே யல்லாமல், எனக்கு —, அரியது - (செய்வதற்கு) அரியது, என் - யாது உளது? என்று —, வசை இலான் - குற்றமற்றவனான சுக்கிரீவன், உரைசெய்தான் - சொல்லித் துதித்தான்; (எ - று.)

எனது ஊழ்வினை பெறுதற்கரிய பரம்பொருளாகிய உன்னையே என் னிடத்திற் சேர்த்துவிட்டதனால், இனி எனக்குப் பெறுதற்கு அரியது யாது உளது? இனி யான் உனது மகிமையை யுணர்ந்ததனால் உனது அடியார்க்கு அடியனைப் நடந்துகொள்வேனென்ற சுக்கிரீவன் கூறின னென்க. "பாக்கி யத்தாற், செங்கட்கரியானைச் சேர்ந்தோம்யாம் தீதிலமே, எங்கட்கரியதொன் றில்" என்றற்போல 'என்னெனக்கரியது எப்பொருளு மெற்கெளிதலால்' என்றான். ஊழ்வினையால் தனக்கு நேர்ந்த நன்மையைக் கருதி, உவப்பினால் 'விதியினர்' என்று உயர்வுபற்றிய பலர்பால் விருதிகொடுத்துக் கூறினன்; நினைவழுவமைதி. அடியருக்கடியன் - தாஸாநுதாஸன். வசை-இகழ்ச்சிப்படம்.

[மற்றை வானாவீரர்களின் மகிழ்ச்சி.]

கசஊ. ஆடினர்பாடினரங்குமிங்குங்கலக்
தோடினநுவகைபின்னறவையுண்டிணர்கிலார்
நேடினும்வாலிகாலனியெனநெடிதுநாள்
வாடினர்தோளெலாம்வளரமற்றவரெலாம்.

(இ - ள்.) நெடிது நாள் வாடினர் - (வாலியின் உபத்திரவத்தாற்) பல காலாக வாடிக்கிடந்த, மற்றவர் எலாம் - மற்றை வானரர்க ளெல்லாரும், 'வாலி காலனை - வாலிக்கு யமனை, நேடினும் - (இன்றைக்குத்) தேடியடையப்பெற் றோம்', எனு - என்று எண்ணி, உவகையின் நறவை - களிப்பாகிய மதுவை, உண்டு - பானஞ்செய்து, உணர்கிலார் - அறியாதவர்களாய் [தம்மையும் மறந்து],—தோள் எலாம் வள - (வாடியிருந்த) தோள்கள் முழுதும் வளரும் படி [ஆனந்தத்தால் உடம்பு பூரித்து], ஆடினர் - கர்த்தனஞ் செய்தார்கள்; பாடினர் - கீதம் பாடினர்கள்; அங்கும் இங்கும் கலந்து ஓடினர் - கண்ட இட மெல்லாங் கூடிக்கூடி ஓடினர்கள்; (எ - று.)

வாலியின் உபதிதிரவத்திஞல் மெலிந்து கிடந்த சுக்கிரீவனைச் சேர்ந்த மற்றவர்வீரர்கள் இராமபிரான் வல்லமையைக் கண்கூடாகக் கண்டதஞல் 'இவன் வாலியையழிக்கும் ஆற்ற லமைந்தவனே' என்று நிச்சயித்து மிக்க மகிழ்ச்சிகொண்டு தோள்கள்பூரிக்க மெய்ம்மறந்து ஆடுதலும் பாடுதலும் ஓடுதலும் செய்யலாஞர்க ளென்பதாம். ஆடுதல் முதலியன - உவகையின் மெய்ப்பாடுகள். ("ஓடுவார் விழுவா ருகந்தாலிப்பார், நாடுவார் நம்பிரானெங் குற்ருனென்பார், பாடுவார்களும் பல்பறைகொட்டகின், ரூடுவார்களுமாயிற் ரூய்ப்பாடியே" என்றது இங்கு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது.) மகிழ்ச்சியின் மிகுதியை விளக்குமாறு ஆடுதல் முதலிய பலதொழில்களே வானரவீரர் ஒருங்கேசெய்வதாகக் கூறியது - கூட்டவணி; இது - வடமொழியில் ஸமுச்சயாலங்கார மெனப்படும்.

உவகையை நறவாகக்கூறியது, மெய்ம்மறக்கும்படி செய்தலால். உவகையின்னறவு - உருவகவணி; னகரமெய் - விரித்தல். நறவு - 'நரு' என்ற குறியதன்கீழ் ஆகாரம் குறுகி உகரமேற்றது. வாலிதாலன் - வடமொழித் தொடர்.

[இராமபிரான் துந்துபியென்பவனது உடற்துவையைக் காணுதல்.]

சசச. அண்டமும்மகிலமும்மடையவன்றன்னிடைப்
பண்டுவெந்தனகெடும்பசைவறந்திடினும்வான்
மண்டலந்தொடுவதம்மலியின்மேன்மலியெனக்
கண்டனன்றுந்துபிக்கடலனனுடலமே.

(இ - ன்.) நெடும் பசை வறந்திடினும் - மிக்க ரக்தப்பசை வற்றிப்போயிருந்தாலும்,—அண்டமும் - அண்டகோளங்களும், அகிலமும் - (அதனிடத்துள்ள) சகல லோகங்களும், அடைய - ஒருசேர, அன்று - அந்காளில் [பிரளயகாலத்தில்], பண்டு - முன்னே, அனலிடை - காலாக்கியிற் பட்டு, வெந்த அன - வெந்தாற்போன்றதும், வான் மண்டலம் தொடுவது - ஆகாயமண்டலத்தை அளாவுவதும் (ஆகிய), கடல் அனைய துந்துபி உடல் - சமுத்திரம் போன்றவனை துந்துபியென்னும் அசுரனது உடம்பெலும்புக்குவையை, அ மலியின்மேல் - ருசியமூககிரியின்மேலே, மலை என - வேறொரு கிரியைப்போல, கண்டனன் - பார்த்தான், (ஸ்ரீராமபிரான்); (எ - று.)

'அண்டமும்...வெந்தன', 'அம்மலியின்மேல்மலியென' என்பவை - தன்மைத்தற்குறிப்பேற்றவணிகள். துந்துபியின் உலர்ந்த உடம்பெலும்புக்குவை, அண்டகோளங்களும் உலகங்களியாவும் பிரளயகாலத்தில் வெந்ததையொத்தும், மலியின்மேல் மலையிருப்பதைப்போன்றும் அந்தருயமூகமலையின்மேல் விளங்குவதை, இராமபிரான் கண்டன ணென்பதாம். உலர்ந்த பேரேத இவ்வாறுதோன்றுவது பச்சையாயிருக்கும்போது எவ்வாறு தோன்றுமோ வென்பார், 'பசைவறந்திடினும்' என்ருர். இச்சொல் மத்திமதீபகமாய் முன்னும் பின்னும் இயையும். பசை ஒட்டும்படியான ஈரம். துந்துபி இன்னனென்பது, மேல்விளக்கும். துந்துபிக்குக் கடலுவமை - ஆரவாரத்துக்கும், பெருமைக்கும், கருமைக்கும். அன - அன்ன: தொகுத்தல். அரோ-ஈற்றசை, 'அண்டமும்மகிலமும்மடைய'—மகரவொற்றுக்கள் - விரித்தல். (சசச)

[இராமபிரான் 'இது என்ன?' என வினவுதல்.]

கசநி. தென்புலக்கிழவனூர்மயிடமோ திசையின்வாழ்
வன்புலக்கரிமடிந்ததுகொலோமகரமீ
னென்புலப்புறவுலர்ந்ததுகொலோவிதுவெனு
வன்புலப்பரியநீயுரைசெயாயெனவவன்.

இதுமுதற் பதினொன்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (ஸ்ரீராமன அதனைக்கண்டு), 'இது—, தென் புலம் கிழவன் - தெற்குத்திக்குத் தலைவ [பாலக]னான யமன், ஊர் - வாகனமாக ஏறி நடத்துகின்ற, மயிடமோ - எருமைக்கடாவோ? திசையின் வாழ் - திசைகளுக்கன் தோறும் வாழ்கின்ற, வனபு உலம் கரி - வலிமையையுடைய கற்றிரள் போனற யானை, மடிந்ததுகொலோ - இறந்துகிடந்ததுதானோ? மகரம் மீன் - மகரமென்னும் பெரிய மீன், என்பு உலப்பு உற - எலும்பு (தனியே) ஒழியும்படி, உலர்ந்ததுகொலோ - உலாந்துகிடந்ததுவோ?' எனு - என்ற சங்கித்து, (சுக்கிரீவனைநோக்கி), 'அன்புஉலப்பு அரிய நீ - அனபுக்கு அளவிடதலில்லாத நீ, உரைசெயாய் - சொல்வாய்', என - எனறுசொல்ல,—அவன் - சுக்கிரீவன்,—(எ - று.)

கிழவன் - உரியவன; கிழமை - பகுதி: பெண்பால் - கிழத்தி; வயது முதிர்ந்தவ னெனனும் பொருளில், கிழவி: பகுதி - கிழம். மயிடம் - மஹிஷம் எனனும் வடமொழியின திரிபு திசையின வாழ் கரி - திக்கஜம். மகரம் - சுறுமீன்; இது, கடலில வாழ்வது: யானையை வீழுங்கவல்லது: மரக்கலத்தைக் கவிழ்ப்பது. 'அவன்' எனனுஞ் சுட்டுப்பெயர், மேற்படலதிற் பதின்மூனறுங்கவியில் 'உரைசெய்தான' என்பதனோடு முடியும். இக்கவியில், அத்துபியின் உலாந்த எலுமபுக்குவையின பருமையை நோக்கிப் பலவகையாக விகற்பித்துக் கூறியதனால், ஐயவணி. 'மகரீ' எனறும் பாடமுண்டு. ஊர் மயிடம் - வினைத்தொகை. அன்புஉலப்பரிய நீ - அளவற்ற அன்பையுடைய நீ யெனறபடி. (கசநி)

மராமரப்படலம் முற்றிற்று.

மூன்றுவது
துந்துபிப் படலம்.

வாலியினைக் கொல்லப்பட்டவனும், எருமைக்கடாவின் உருவம் பூண்டவனும், மாயாவியினது உடன்பிறந்தவனும் மயன் எனனும் அசுராதிபனது மகனுமாகிய துந்துபியென்பவனது உலாந்த எலும்புத்திரளைச் சுக்கிரீவனது திருப்பத்தின்படியே ஸ்ரீராமனது கட்டளையால் லக்ஷ்மணன் தன்காலால் வீரால் தூக்கியெறிந்த பலயோசனை தூரங்களுக்கப்பாற போய்விழச்செய்த கதையைக் கூறும் படலம். இவ்வசுரனது முழக்கம துந்துபி யென்னும் வாத்தியத்தினது பேரொலியை ஒத்தலால், இவனுக்கு இப்பெயர். துந்துபி - பேரிகை.

[இதுமுதற் பதின்மூன்று கவிகளால், சுக்கிரீவன் அத்துந்துபியெலும்பின் வாலாற்றை இராமபிரானிடங் கூறுகின்றான்.]

க. துந்துபிப்பெயருடைச்சுடுசினததவுணன்மீ
திந்துவைத்தொடநிமிர்ந்தெழுமருப்பிணையினுன்
மந்தரக்கிரியெனப்பெரியவனமகரநீர்
சிந்திடக்கருநிறததரியினைத்தடிதுவான்.

(இ - ள.) துந்துபி பெயர் உடை - துந்துபியென்கிற பெயரையுடைய, சுடு சினத்த - பகைவர்களை யழிக்கின்ற கோபத்தையுடைய, அவுணன் - அசுரன்,—மீது இந்துவை - ஆகாயத்தில விளங்குகின்ற சந்திரனை, தொட - அளாவும்படி, நிமிர்ந்து எழுமை-ஓங்கி வளர்ந்திருக்கின்ற, மருபபு இணையினுன் - இரண்டு கொம்புகளையுடையவனும்,—மந்தரம கிரி என - மந்தரமலைபோல(ச் சென்று), பெரிய வல் மகரம் நீர் சிந்திட - பெரிய வலிய மீன்களையுடைய திருப்பாற்கடலின நீர் சிந்தும்படி, கரு நிறத்து அரியினை - கருமை நிறத்தையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவை, தேடுவான - தேடுபவனனும்; (எ - று.)

எருமைக்கடாவின வடிவத்தைக கொண்ட துந்துபியென்னும் அசுரன் இயற்கை வலிமையினுலும வரபலத்தாலும் மிக்க செருக்குக்கொண்டு திருமாலோடு போர்புரியகருதி மந்தரமலைபோல (அத்திருமால் பள்ளிகொண்டுள்ள) பாற்கடலைக் கலக்கிகொண்டு சென்றன னென்பதாம். 'சந்திரமண்டலத்தை யளாவிய இணைமருப்புடையனனும்' என்றதனால், எருமைக்கடாவின் வடிவமெடுத்துச் சென்று னென்பது பெறப்பட்டது. மந்தரக்கிரி - பாற்கடலிடையே விழுந்து கலக்குதற்கு உவமை, இனி, மந்தரமலைபோல உருவத்தாற பெரியவ னென்றுமாம். அரி - ஹரி: (அசுரர் ராக்ஷர் முதலிய பகைவர்களை) அழிப்பவன; அனறி, (அடியடைந்த அடியார்களது) அருவினைகளை ஒழிதருள்பவன. இந்து - வடசொல். (க)

உ. அங்குவந்தரியெனதிர்ந்தமைதியென்னென்றலும்
பொங்குவெஞ்சினவிறலபொருதியென்றுரைசெயக்
கங்கையின்கணைவனக்கறைமிடறறிறைவனே
யுங்கள்வெங்கதவலிக்கொருவனென்றுரைசெய்தான்.

(இ - ன்.) அங்கு - அப்பொழுது, அரி - மகாவிஷ்ணு, வந்து எதிர்ந்து - எதிரில் வந்து, அமைதி என் - ('நீ இங்குவரக்) காரணம் என்ன?' என்றலும் - என்று வினவியவளவில், (அந்தபி), 'பொங்கு வெம் செருவினில் - சிற்றம் கொண்டுசெய்கிற கொடிய யுத்தத்தில், பொருதி - (என்னுடன்) போர்செய்ய வருவாயாக', என்று—, உரை செய - சொல்ல,—(அப்பொழுது திருமால்), 'கங்கையின் கணவன் - கங்காதேவிக்குத் தலைவனும், அ கறை மிடறு இறை வனே - (நஞ்சுண்டதனால்) கறுத்த கண்டத்தை யுடையவனுமான அப்பரம சிவனே, உங்கள் வெம் கதம் வலிக்கு - 'உன்போன்றவர்களது கொடிய உக் கிரமான பலத்துக்கு, ஒருவன் - (எற்றபடி போர் செய்யத்தக்க) ஒருவனு வான', என்று—, உரைசெய்தான - சொன்னனன்; (எ - று.)

திருமால் போர்செய்து கொல்லாமல் இவ்வாறு கூறியது, இவனுக்கு வாலியினல் வதை நேரவேண்டிய ஊழ்வினை உள்ளதனு லென்க. உருத்திர மூர்த்தியை எடுத்துக் கூறியது, ஸம்ஹாரக் கடவுளாதலால். பெண்பாலாகிய கங்கை சிவபிரானே நீங்காது சோந்திருக்குந் தன்மையும், சிவபிரான் குமா ரனேயுண்டாக்குதற்கு வெளிப்படுத்திய அனறபொறிகளைக் கங்காதேவி ஏற்றுக் கொண்டிருந்தமையும், பெண்பாலாகிய கங்கையைச் சிவபிரான் அன் போடு முடிமேல் வைத்துக்கொண்டிருந்ததலும் பற்றி, சிவபிரான் 'கங் கையின் கணவன்' எனப்பட்டான. ஏகாரம் - பிரிநிலை. இனி, இவவிரண்டு கவிகளுக்கும் - அப்பெரியவன மகரமீனகளையுடைய நீர் சிந்தம்படி கரு நிறத்தையுடைய ஸமுத்திராராஜனைத் தேடிவானனு னென்றும், கங்கைக்குக் கணவனன அச்சமுத்திரபுருஷன எதிர்ப்பட்டு உரைசெயதான் என்றும் பொருள் கொள்ளதலும் தகும். இவ்வுரையில், 'அரி' என்று கடலுக்குப் பெயர் உண்மையும், 'கங்கையினகணவன்' எனகிற பெயர் நதிபதியாகிய கடலிறைவனுகு நன்குபொருந்ததலும் உணர்க. 'கஙகை தங்கணிசடை' என்றும் பாடமுண்டு. (உ)

உ. கடிதுசென்றவனுமக்கடவுடன்கயிலையைக்
கொடியகொம்பினின்மடுத்தெழுதலுங்குறுகிமுன்
னெடிதிநின்குறையெனென்றலுநவன்றனனரோ
முடிவில்வெஞ்செருவெனக்கருள்செய்வான்முயல்கெனு.

(இ - ன்.) அவனும் - அவ்வசுரனும், கடிது சென்று - விரைவாகப் போய், அ கடவுள்தன் - அந்த உருத்திரபகவானது, கயிலையை - கைலாசகிரியை, கொடிய கொம்பினில் - கொடுந்தன்மையையுடைய (தன்) கொம்புகளால், மடுத்து - முட்டிக்கொண்டு, எழுதலும் - பாய்ந்தவளவில்,—முன் குறுகி - (அச்சிவபெருமான்) எதிரில் வந்து, 'நின குறை என் - உனக்குவேண்டுவ தென்ன? கொடிது - சொல்,' என்றலும் - என முவினவியவுடன், (அந்தபி), 'எனக்கு—, முடிவு இல் வெம் செரு - முடிவில்லாத கொடிய யுத்தத்தை, அருள்செய்வான் - கொடுக்கும்பொருட்டு, முயல்க - பிரயத்தனப்படு வாயாக,' எனு - என்று, நவன்றனன - சொன்னனு; (எ - று.)—அரோ - சாத்தசை.

ன்னோடு புரத்தஞ்செய்ய வரவேண்டும்; அதுதான் என் காரியம்' என்று, தன்தம்பி தான்வந்த காரணத்தைத் தெரிவித்தன னென்பதாம். மயிலை - கைலாஸ மென்ற வடசொல்லின் சிதைவு. முயல்கென - லியங் தோளின் அகலீறு - தொகுத்தல். நுவன்றனன், நுவல் - பகுதி. (கூ)

சு. மூலமேவீரமேமூடினுமோடுபோ
சேலுமேதேவர்பாலேகெனுவேவினன்
சாலநாள்போர்செய்வாயாதியேற்சால்போர்
வாலிபாலேகெனுவானுளோர்வானுளான்.

(இ - ள்) (அப்பொழுது பரமசிவன்), 'மூலமே வீரமே மூடினுமோடு- தலைமையும் வலிமையும் மிகுந்துள்ள உன்னுடனே, போர் எலுமே - (எனக்கு) யுத்தஞ்செய்ய இயலுமோ? [இயலாது]; தேவர்பால் எகு - (நீ) தேவர்களிடம் போ,' எனு - என்று, எவ்வினன - சொல்லியனுப்பினன்; (அவன் அங்ஙனமேசெனறு தேவாகளைப்போர்க்குஅழைக்க), வான உளோர் வான் உளான - அந்தச்சுவாகலோகத்திலுள்ள தேவாகளுக்குத் தேவனன இந்திரன், (அவ்வசுரனை நோக்கி), 'சால நாள் போர செய்வாய் ஆதி எல்-வெகு காலம் யுத்தஞ்செய்ய விருமபுவாயானால, சால் - இங்குச்சோராதே: போர் வாலிபால் எகு - போாக்குஉரிய வாலியினிடம் போ,' எனு-என்று.(எ று.)— இவ்வினையெச்சம், வருங்கவியில் 'விட' என்பதனோடு முடியும்.

தந்தபியென்ற அசுரன் சிவபிரானுள்ள கைலாசத்தைத் தன் கொம்பினால் முட்டிப்பாய்ந்தபொழுது அங்குநினறு வெளிப்பட்ட சிவபிரான் அவ்வசுரனைநோக்கி 'எனனெருவனால் மிகக வலிமைபொருந்திய நின்னோடு செருச்செய்ய முடியாது: ஆதலால், நீ தேவலோகத்துச் சென்றால் அங்கு மிகப்பல தேவாக ளுள்ளாராதலால், உனது எண்ணம் ஈடேறும்' என்று போாக்குக்காட்ட, அகுரு அவன செல்லவே, தேவேந்திரன் அவன்போர்புரியுமாறு வந்ததைக்கண்டு 'நினனோடு போர்புரிய எமக்கு இயலாது; வாலியென்று பேர்படைதத எனது மகனெருவன் எம்மினும் மிக்கவலிமைபெற்றவனுயுள்ளான்; அவனிடத்துப போ' எனறு விடையளித்தன னென்பதாம். மூலமே வீரமே, ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன. மூடினுய் - வினையாலணையும்பெயர். இரண்டாமடியில், ஏ - எதிர்மறை. சால் - எதிர்மறை யேவல். 'வான உளான்' என்னுமிடதிலுளள 'வான' எனற சொல் - ''வான்தோய் குடிப்பிறந்தார்'' எனனுமிடதிற் போல உயரச்சிப் பொருளதாம். வானுளோர் வானுளான - தேவலோகதத்திலுள்ள தேவர்களுள உயர்ந்தளவனனுந்திரனென்ன பொருள தந்தது. 'சால்போய்' என்ற பாடத்திற்கு - வாலி வாழும் மலைப்பக்கதற்கு சென்றென்க. (சு)

எ. அன்னவன்விடவுவந்தவனும்வந்தரிகடம்
மன்னவன்வருகபோர்செய்கெனுமலியோசி
ன்னபின்னம்படுத்தெய்தலுஞ்சினவியென்
முன்னவன்முன்னர்வந்தனியவன்முனிதலும்.

(இ - ள்.) அன்னவன் - அத்தேவேந்திரன், விட - 'அனுப்ப,—அவனும், தூதுபியும், உவந்து வந்து - மகிழ்ந்து (முரியமூகத்துக்கு) வந்து, 'அரிகள் தம் மன்னவன் - குரங்குகளுக்கு அரசனே (வாலியே)! வருக போர் செய்ய - வந்து யுத்தஞ்செய்வாயாக', எனு - என்று சொல்லிக்கொண்டு, மலையினை சென்பின்னம் படுத்து எய்தலும் - அம்மலையைப் பலவாறு காசப்படுத்திச் சேர்ந்தவளவில்,—என் முன்னவன் - எனது தமையன் (வாலி), சினவி - கோபித்து, முன்னர் வந்து - எதிரில் வந்து, அனையவன் - அவ்வசுரனோடு, மூனைதலும் - போர்செய்தவளவில்,—(எ - று.)—'நிரிவதும் பொழுதின் உணர்ந்திலர்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

தேவேந்திரன் சொற்படியே வாலியினிடத்துச்சென்று தூதுபி போர்க் கழைக்க, அவனும் போர்க்கு வர இருவரும் பொருதன ரென்பதாம். அன்னவன் - அகரச்சுட்டிடைச் சொல்லடியாப் பிறந்த பெயர். 'மன்னவன் - அண்மைவினி. எய்தலும், எய்து - முதனிலை அன்னவன் விட அத்தூதுபியை அனுப்ப என்றல், நேர். வருக-முற்றெச்சம். சிங்பிக்கும் - வடசொல். செய் கெனு - தொகுத்தல். (இ)

சு. இருவருந்நிரிவதும்பொழுதினின்னவர்களென்
றிருவருஞ்சிறிதுணர்ந்திலர்களெவ்வுலகினும்
வெருவருந்தகைவிலார்விழுவர்நின்றெழுவரான்
மருவருந்தகையர்தானவர்கள்வானவர்கடாம்.

(இ - ள்.) இருவரும் - இரண்டுபேரும் [வாலியும் தூதுபியும்], நிரிவதும் பொழுதின் - (இடசாரி வலசாரியாகச்) சுழலும்போதில், (அவவேகத்தால்), இன்னவர்கள் என்று - இவர்கள் இன்னரென்று, ஒருவரும் - எவரும், சிறிது உணர்ந்திலர்கள் - சற்றும் அறிந்தாரில்லை; எ உலகினும் - எந்த லோகத்திற் சென்றாலும், வெருவரும் தகைவு இலார் - அஞ்சுந் தன்மையில்லாத இவர்கள், விழுவர் - கீழே விழுவர்கள்; நின்று எழுவர் - (மீண்டும்) எழுந்து நிற்பர்கள்; (இவர்களே நோக்கி), தானவர்கள் - அசுரர்களும், வானவர்கள் - தேவர்களும், தாம்—, மருவு அருந் தகையர் - மிட்டவருவதற்கும் அரிய தன்மையையுடையவரானார்கள் [அஞ்சியோடினார்க ளென்றபடி].

'இவன்தான் வாலி, இவன்தான் தூதுபி' என்று ஒருவருங் காணமுடியாதவாறு மிக்கவிரைவாகச் சாரிசுழல்வதும் விழுவதும் எழுவதுமாய் இவ்விருவரும் போர் செய்கையில், தேவாசுரர்களும் அவ வுக்கிரத்தைக் கண்டு அஞ்சியோடினார்க ளென்பதாம். ஆல் - ஈற்றசை.

இதுமுதல் மூன்றுகவிகள், வாலி தூதுபியர் செய்த போரின் தன்மையைக் கூறும். (சு)

எ. தீயெழுந்ததுவிசும்புறநெடுந்திசையெலாம்
போயெழுந்ததுமுழக்குடனெழுந்ததுபுகை
தோயநன்புணரியுஞ்சுடர்தடங்கிரிகளுஞ்
சாயநின்றனவடித்தலமெடுத்திடுதலால்.

(இ - ன்.) (இவர்கள்), அடி தலம் எடுத்திடுதலால் - கால்களைத் தாக்கி வைத்தலால், தீ - நெருப்பு, விசும்பு உற - ஆகாயத்தை அளாவ, எழுந்தது - இளம்பிற்று; முழக்கு - அவ்வாரவாரம், கெடுந்திசை எலாம் - பெரிய திக்குகளெல்லாவற்றிலும், போய் எழுந்தது - சென்று பரவிற்று; புகை-அந்நெருப்பின் புகை, உடன எழுந்தது - உடனே பரவிற்று; தோயம் நல் புணரியும் - நீர்மயமான நல்ல கடலும், சுடர் தட கிரிகளும் - விளங்குகின்ற பெரிய மலைகளும், சாய் - (தம்தமது) நிலைமை, அழிந்தன - கெட்டன; (எ - று.)

தீ - அடிகள் படுகிற அதிர்ச்சியால் நிலத்தினின்று உண்டானது. கடலுங் கோதித்தது, மலைகளும் அசைந்தன என்றபடி. 'எழுந்தது புயல்' என்ற பாடத்துக்கு - பெருங்காற்று உண்டாயிற்று என்க. 'எழுந்தது' என்ற சொல் ஒரு பொருளிற் பலமுறை வந்தது - கோற்போநட்பின்வருநிலையணி. (எ)

அ. புயலும்வானகமும்புணரியும்புணரிசூ
ழுபலும்வீழ்தூளியாலறிவருந்தகையவா
மயனின்மாமகனும்வாலியுமறத்திடலினு
ரியலுமாமதியமீராறும்வந்தெய்தவே.

(இ - ன்.) புயலும் - மேகங்களும், வானகமும் - ஆகாயமும், அ புணரியும் - பெருங்கடலும், புணரி சூழ் அயலும் - அக்கடல் சூழ்ந்துள்ள மற்றைய இடங்களும், வீழ் தூளியால் பரவி விழுகின்ற தூளிகளினால், அறிவு அருந்தகைய ஆ (க) - அறிவதற்கு அருமையான தன்மையை யுடையனவாம்படி,—மயனின் மா மகனும் - மயனென்னும் அசுரத்தச்சனது சிறந்த மகனாகிய அங்கதியும், வாலியும்—, இயலும் மா மதியம் ஈர் ஆறும் வந்து எய்த - செல்லுகிற பெரிய மாதங்கள் பன்னிரண்டும் வந்து சேர [ஒருவருடகாலம்], மறத்தி - வலிமையோடு, உடலினர் - போர்செய்தார்கள்; (ஏ - று.)

வாலியும் அங்கதியும் எங்குந் தூளிபரவ அதியுக்கிரமாகப் பொருகையில் ஒருவருடகாலங் கழிந்ததென்பதாம். அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமென்று சந்திர சம்பந்தத்தாற் கொள்ளுஞ் சாந்திரமானபக்ஷம்பற்றி, 'மதி' என்று மாதத்துக்குப் பெயர். (அ)

கூ. அற்றதாகியசெருப்புரிவுறும்மளவினிற்
கொற்றவாலியுமவன்குவவுதோள்வலியொடும்
பற்றியாசையினெடும்பணைமருப்பிணைபறித்
தெற்றினனவனும்வானிடியினின்முரறினன்.

(இ - ன்.) அற்றதாகிய - அப்படிப்பட்டதான, செரு - யுத்தத்தை, புரிவுறும் அளவினில்-செய்கின்றபொழுதில்,—கொற்றம் வாலியும் - வெற்றியையுடைய வாலியும், குவவு தோள் வலியொடும் - திரண்ட (தனது) தோள்களின் வலிமையுடனே, அவன் - அவ்வசுரனது, ஆசையின் கெடும் பணை மருப்பு இணை - திக்குக்களை அளாவி நீண்ட புருத்த இரண்டு கொம்புகளையும், பற்றி-பிடித்து, பறித்து - பிடுங்கி, எற்றினன் - (அவற்றைக்கொண்டே

அவனை) அடித்தான் ; அவனும் - அவ்வசுரனும், வான இடியன - மேகத்தி லெழுகின்ற இடிபோல, நின்று உரறினன் - கர்ச்சித்து நின்றான் ; (எ - று.)

இருவரும் வெற்றிதோல்வியின்றி ஒருவருடகாலம் பொருதபின்பு,வாலி வலிமைமேம்பட்டவனாகி அவ்வசுரனது கொம்பைப் பிடுங்கி, அவற்றைக் கொண்டே அவனையடிக்க, அவன் பொறுக்கமுடியாமற் கதறினனென்பதாம். கொம்பை வேரோடு பறித்த நோவோடு அடித்ததனுஞ் சேரவே, அசுரன் கதற லாயினனென்க. புரிவுறும்மாவினில் - வீரித்தல். ஆசா - வடசொல். (கூ)

கo. தலையின்மேலடிபடக்கடிதுசாய்நெடுதாள்
ஞலையவாய்முழைதிறந்துதிரவாறெழுகமா
மலையின்மேலுருமிடித்தென்னவான்மண்ணெடுங்
குலையமாதிசைகளுஞ்செவிடுறக்குத்தினன்.

(இ - ன்.) தலையின்மேல் அடி பட-தலைமேலே அடிபடும்படியும், கடிது சாய் நெடுதாள் உலைய - விரைவில் விழுந்த நீண்ட கால்கள் ஒடியவும், வாய் முழை திறந்து உதிரம் ஆறு ஒழுக - மலைக்குகை போன்ற வாய் திறந்து ரக்தநதி பெருகவும், வான் மண்ணெடும் குலைய - மேலுலகமும் பூமியும் நடுங் கவும், மா திசைகளும் செவிடுஉற - பெரிய திக்குக்களெல்லாம் செவிடு பட வும், மாமலையின்மேல் - பெரிய மலைமேல், உரும்இடித்து என்ன - இடியிடித் தாற்போல, குத்தினன் - (வாலி அசுரனைக்) குத்தினன் ; (எ - று.)

அப்போது உண்டான அதிர்ச்சியினால் வானும்மண்ணுங் குலைந்து திசைக ளெல்லாம் செவிடாகுமாறு வாலியானவன் அவ்வசுரன் காலொடிந்து சாய வும், வாயைத் திறந்துகொண்டு இரத்தத்தைக் கக்கவும், மலையிஞ்சியிலிடி விழுந்தாற்போல அவ்வசுரனது தலைமேல் வலியக்குத்தினனென்பதாம். சாய் - சாய்ந்து என்னும் வினையெச்சத்தின் விகாரம். தான் - சாதியொருமை யாதலால், நெடுது எனனும் ஒருமையடைமொழியால் அடுக்கப்பட்டது. உதிரம் - ருதிரமென்னும் வடமொழியின் விகாரம். (கo)

கக. கவரியிங்கிதுவெனக்காதலங்கொடுதிரித்
திவர்தலுங்குருதிபட்டிசைதொறுந்திசைதொறுந்
திவரணிந்தனவெனப்பொசிந்ததைந்தனதுணைப்
பவர்நெடும்பணைமதப்பகையின்வன்கரிகளே.

(இ - ன்.) இது கவரி என - '(இவ்வாலி கையிற்கொண்டிருக்கின்ற) இது சாமரமாம்' என்று (கண்டோர்) சொல்லும்படி, காதலம்கொடு - கையி னால், 'வாலி தந்தபிணை எடுத்து', திரித்து இவர்தலும் - சுழற்றிக்கொண்டு (தான்) சுழன்றவளவில்,—குருதி - (அத்தந்தபிணியின்) இரத்தம், பட்டு இசை தொறும்-(சுழற்றுகிற வேகத்தால்) தளித்துப் படும்போதெல்லாம்,—திசை தொறும் - எல்லாத்திக்குக்களிலும் உள்ளனவாகிய, அணை பவர் நெடும் பணை

மதம் பகையின் - ஒலியெழுப்பி ஒன்று ஒத்த நெருங்கிய நீண்ட தந்தங்களையும் மதத்தையும் பகைத்தன்மையையுமுடைய, வல் - வலிய, கரிகள் - (திக்கு) யானைகளெல்லாம், அவர் அணிந்தன என - சிவப்புப் பூசப்பட்டவைபோல, பொசி அதைந்தன - அவ்விரத்தநீர் பொருந்தப்பெற்றன; (எ - று.)

கீழ்க்கூறியவாறு வாலி அத் தந்துபியின் தலைமேற் குத்தியபின்பு அவனைத் தன்கையாலெடுத்துக்கொண்டு சுழலவே, அவவேகத்தால் அவனசரன வாயினின்று பெருகுகின்ற இரத்தநீர் தெறித்துத் திக்கஜங்களின்மீது சிந்தி, அவைகள் செந்நிறப்பூச்சுப் பூசப்பட்டவைபோல விளங்கின வென்பதாம். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. 'இங்கு' - அசை. கவரி - சமரி என்னும் வடமொழியின் திரிபு; இவ்வொருவகைப் பெண்மானின் பெயர் - அதன் வால்மயிராற் செய்யப்பட்ட ராஜசிந்நத்துக்கு ஆகுபெயர். இனி, கவரி இங்கு இது என என்பதற்கு - இது ஒரு வலிய எருமையென் றெண்ணியெனப் பொருள் கொள்ளுதலு மொன்று. கவரி - சாமரமும், எருமையும்; இங்கு எருமைக்கடாவென்க. சொற்சமத்காரமையை, இங்கே 'கவரி' என்ற சொல்லைப் பிரயோகித்தார். எருமைக்கடா சாமரம்போலத் திரிக்கப்பட்டமை பற்றி கவரி கவரியாகு மென்க. (கக)

கஉ. புயல்கடந்திரவிதன்புகல்கடந்தயலுளோ
ரியலுமண்டிலமிகந்தெனையவுந்தவிரமேல்
வயிரவன்கரதலத்தவன்வலித்தெறியவன்
றுயிரும்விண்படரிவ்வுடலுமிப்பரிசோ.

(இ-ள்.) (பின்பு), அவன் - அல்வாலி,—புயல் கடந்து - மேகமண்டலத்தைத் தாண்டி, இரவிதன் புகல் கடந்து - சூரியனிருக்கு மிடத்தையுந் தாண்டி, அயல் உளோர் இயலும் மண்டிலம் இகந்து - மற்றுமுள்ள தேவர்கள் பொருந்திவாழ்கின்ற மண்டலங்களெல்லாம் கடந்து, எனையவும் தவிர - மற்றையெல்லா மேலிடங்களையும் கடக்கும்படி, வயிரம் வல் கரதலத்து மேல் வலித்து எறிய - உறுதியான வலிய கையினால் (அவவெருமைக் கடாவை எடுத்து) மேலே வலிமையோடுவீச,—அன்று - அப்பொழுது,—உயிரும் விண் படர - அதன் உயிர் மேலுலகத்துக்குச் செல்ல,—இ உடலும் - இந்த உடம்பும், இ பரிசு - இவ்விதமாக, (கீழேவீழ்ந்திட்டது); (எ - று.)

கீழ்க்கூறியவாறு வாலி தான் தந்துபியினது உடலை மிக்க உயரத்தில் எறிய, அதனால் அவ்வசுரன் உயிரொழிந்தனன்; அவனது உடம்பும் இவ்வாறு இங்கே வீழ்ந்திட்டது என்பதாம். பயனிலைவருவிக்கப்பட்டது 'இரவிதன் புவி' என்னும் பாடம். மண்டிலம் - வடசொற்றிரிபு. அசோ - ஈற்றசை. சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் புதன் சுக்கிரன் அங்காரகன் பிருகஸ்பதி சனி ஸப்தரிஷிகள் துருவன் என இவர்களின் மண்டலங்கள் வானத்தில் முறையே ஒன்றன்மேலொன்றாக அமைந்துள்ளன வென்ப தறிக. (கஉ)

கஉ. முட்டிவான் முகடுசென் றளவியிம் முடையுடற்
கட்டிமால் வரையைவக் குறுதலுங் கருணையா
னிட்டசா பமுமெனக் குதவுமிவ் வியல்பினிற்
பட்டவா முழுவதும் பரிவினு லுரைசெய்தான்.

(இ - ள்.) இ முடை உடல் கட்டி - முடைநாற்றமுடைய இவ்வுடற் பிண்டம், வான் முகடு - ஆகாயமுகட்டை, முட்டி - தாக்கி, சென்ற அளவி - போய் அளாவி, மால் வரையை - பெரிய இவ விருஷியமூகமலையை, வந்து உறுதலும் - வந்துசேர்ந்தவளவில் [இம்மலையில் வந்து விழுந்தவளவில்],— கருணையான் - அருளையுடையவரான மதங்கமுனிவர், இட்ட - (அதற்காக) கொடுத்த, சாபமும் - சபிப்பும், எனக்கு உதவும் - எனக்கு இப்பொழுது உதவியாயிருக்கின்றது; இ இயல்பினின - (என்று) இவ்விதமாக, பட்ட ஆ முழுவதும்-உண்டான வரலாறு முழுவதையும், பரிவினுல் உரைசெய்தான்- அனுபோடு சொன்னன், (சுக்கிரீவன்); (எ - று)

வாலி வீரியமெறிந்த அந்துபியினது உயிராகியவுடல் ருஷியமூகமலையில் மதங்கமுனிவர் இருந்து தவஞ்செய்கின்ற ஆச்சிரமத்தில் வந்து விழுந்து அதனை அசுத்தப்படுத்தியதனால், அம்முனிவர் கடுங்கோபங்கொண்டு ஞானக் கண்ணுல் வாலி யெறிந்த தென்று அறிந்து 'அவன இங்கு வருவானுயின் தலைவெடித்து இறக்கக்கடவன' என்றும், 'அவனைச்சோந்த மித்திரர்கள் இங்கே வந்தால் கல்வடிவமாகக்கடவர்' என்றுஞ் சபித்தார்; அச்சாபவுதலி யால் நான் இங்கே வாலிக்கு அஞ்சி ஒடிவந்து மறைந்திருந்தேன் என்று சுக் கிரீவன அவவெலும்பின வரலாறையை கூறி, தான அங்குவாழுங் காரணத தையுந் தெரிவித்தன னென்பதாம். 'உறுதலும்' என்ற வரையிலும் கீழ்ச் செய்யுளின அநுவாதம். முடை - ஒருவகைத துர்க்கந்தம். (கஉ)

வேறு.

[இராமன் 'இந்துந்துபியினுடலை எடுத்தெறி' என்று இலக்குமணனுக்குக் கட்டளையிட, அவனும் அவ்வாறு செய்தல்.]

கஊ. கேட்டன னமலனுங் கிளந்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
யோட்டென வவன்கழல் விரலி னூன்றினன்
மீட்டது விரிஞ்சனு டுற்று மீண்டதே.

(இ - ள்.) அமலனும் - ஸ்ரீராமனும், கிளந்த ஆறு எலாம் - (சுக்கிரீவன்) சொன்ன வரலாறு முழுவதையும், கேட்டனன - கேட்டு,—வாள் தொழில் இளவலை - வாளொடுத்துப் போர்செய்யுந் தொழிலையுடைய தம்பியை [லக்ஷ்மணனை] நோக்கி, 'மைந்த - வீரனே! இதனை - இவ்வுடம்பை, நீ—, தூட்டு- அப்பால் தள்ளு', என - என்று கட்டளையிட,— அவன - லக்ஷ்மணன், கழல்

வீரலின் - (தன்) கால்விரலினால், உக்கினன் - தள்ளி யெறிந்தான்; அது - அவ்வெறும்புக்குவியல், மீட்டு - மறுபடியும், விரிஞ்சன நாடு உற்று - பிரம லோகத்தையடைந்து, மீண்டது - திரும்பி வந்து விழுந்தது; (எ - று.)

இராமபிரான் மராமரத்தை யெய்து தன்னுடைய வல்லமையை விளக்கியதனால், தம்பியினுடைய வல்லமையைச் சுக்கிரீவன முதலானோர்க்கு விளக்கக் கருதி, அத்தம்பியினுடம்பெலும்பை யெடுத்தெறியுமாறு இலக்கு மணனுகருக் கட்டளையிட்டன னென்பதாம். முன்பு வாலி தூக்கியெறிந்த பொழுது ஒருமுறை பிரமலோகம்வரையிற சென்றுவந்ததனால் இங்கு மீட்டு' எனறார். வாலி தன்னுடைய பலம் விளங்குமாறு முன்பு தங்தம்பியினுடலைத் தூகி உயரவெறிந்தானுதலால், 'இலக்குமணன வாலிபோனற பலமுடைய வனே' என்று வானரர்கட்கு விளங்குமாறு அதனையே செய்யும்படி இலக்கு மணனுக்குக் கட்டளையிட்டன னெனக.

இதுவும், மேற்கவியும் - கடவுள்வாழ்த்துப்போனற கலிவிருத்தங்கள். ()

[அதுகண்டு வானரர்மகிழ, சுக்கிரீவன் ஒன்றுகூறத் தொடங்குதல்.]

கடு. ஆயிடை யரிக்குல மசனி யஞ்சுற
வாய்திறந் தார்த்தது வள்ள லோங்கிய
தூயநற் சோலையி லிருந்த சூழல்வாய்
நாயக வுணர்த்துவ துண்டு நானெனு.

இது முதல் நான்கு கவிகள் ஒரு தொடர்.

(இ - ன்) ஆயிடை - அப்பொழுது, அரி குலம் - குரங்குக் கூட்டமெல்லாம், அசனி அஞ்சுற - இடியும அச்சமடையும்படி, வாய்திறந்து ஆர்த்தது - வாய்விட்டு ஆரவாரித்தது; வள்ளல - ஸ்ரீராமபிரான, ஓங்கிய - உயர்ந்த, தூய - பரிசுத்தமான, நல் - அழகிய, சோலையில் பூஞ்சோலையிலே, இருந்த - வந்திருந்தகியிருந்த, சூழல்வாய் - சமயத்தில, (சுக்கிரீவன ஸ்ரீராமனைநோகி), 'நாயக - தலைவனே! நான உணர்த்துவது - யான சொல்லவேண்டுவது, உண்டு - (ஒன்று) உளது', எனு - எனறு, (எ - று.)—'எனு' எனனும் வினையெச்சம்—மேற கலனகாண்படலத்தின மூன்றுங்கவியில் 'எனு' என வரும் வினையெச்சத்தோடு முடிய, அது - அக்கவியில் 'காட்டினன்' எனனும் வினை முற்றைக் கொண்டு முடியும்.

இவ்வாறு வானரர்களனைவர்க்கும் தமது பலபராக்கிரமத்தைக் கண்டு களிக்குமாறு இராமபிரான தான் மராமரத்தையெய்ததனும் தனது தம்பியைக கொண்டு அத்தம்பியினுடலை உயரவெடுத்து வீசுதலுஞ் செய்தபின்பு, தாம் முன்னிருந்த இடத்தே எல்லாரும் வந்துசேர, அப்போது சுக்கிரீவன ஒன்று கூறத தொடங்கின னெனபதாம். அதன விவரத்தை, அடுத்த படலத்திற் காண்க. லக்ஷ்மணனது பிறமையையும் இப்பொழுது கண்டதனால், வானர

ஸைந்யம் மிகக்களித்தது. முதலடி - முற்றுமோனை. அஸ்தி - வடசொல். அ + :ஆயிடை ; சுட்டு நீண்ட இடத்து யகரம் தோன்றியது. (௧௫)

துந்துபிப்படலம் முற்றிற்று.

இவ்வரலாறுகள் முதனூலிற் கூறியுள்ள விவரம்.—இராம லக்ஷ்மணர்க்கும் சுக்ரீவனுக்கும் அநுமான் மூலமாக நட்புஉண்டானபின்பு, சுக்ரீவன் தன வருத்தத்திற்குக் காரணங்களாக கூறக கேட்ட இராமபிரான, 'தான உனது பகைவனை எனது அம்புகளால அழித்துவிடுகிறேன்; அஞ்சாதே' எனறு அபயப்பிரதானஞ்செய்யவும் சுக்ரீவன மனந்தெளியாமல் வாலியினது பேராற்றலைப்பற்றிப் பலபடியாகச்சொல்லி மூடிவில் வாலி மராமரங்களில் ஒனறைத்துளைத்ததையும துந்துபியின் உடலெலும்பை ஒருயோஜனை தூரம் தூக்கியெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக்கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்வது எப்படிமுடியுமோ?' எனறுசொல்ல, கேட்ட லக்ஷ்மணன உனக்கு நம்புதலில்லையாயின் இப்போது எனனசெய்ய வேண்டுவது?' என்ன, சுக்ரீவன 'இராமபிரான நீறுபூத்த நெருப்புப்போலத் தோன்றினும், வாலியின் வல்லமையை நினைக்குமபோது சங்கையுண்டாகினறது: ஏழுமராமரத்தையுந் துளைத்து இந்தத்துந்துபியின் எலுமபையும் இருநூறு விறகிடைதூரம் தூக்கியெறிந்தால எனக்கு நம்புதலுண்டாகும' எனறு சொல்ல, சுக்ரீவனுக்கு நம்புதலுண்டாகுமாறு அவனது வாதத்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியினுடம்பெலும்பைத் தனது காற்கட்டை விரலினால இலேசாகத் தூக்கிப் பதினோஜனைதூரத்திறகு அப்பால் எறிய, அதனைக்கண்ட சுக்ரீவன 'மூன்று உலராதிருக்கையில வாலி இதனைத் தூக்கி யெறிந்தான். இப்போது உலர்ந்துபோய்விட்ட இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று' எனறுகூற, பினபு இராமபிரான ஒருபாணத்தை ஏழுமராமரங்களினமே லேவ, அது அம்மரங்களைத் துளைத்தேறாடு ஏழுலகங்களையுந் துளைதுச்சென்று மீண்டு தூணீரத்தையடையவே, அதனைக் கண்ட சுக்ரீவன் இராமபிரானது திருவடிகளை வணங்கி அப்பிரானை வியந்து புகழ்ந்து முகமன கூறினனெனபதாம.

நான்காவது

கலன்காண்படலம்.

சீதாபிராட்டியின் திருவாபரணங்களைச் சுக்கிரீவன் கொண்டுவந்து காட்ட அவற்றை இராமபிரான் பார்த்தருளிய செய்தியைக் கூறும் பாகம். கலம் - அணிகலம்; கலன் என ஈற்றுப்போலி.

[இதுமுதல் முன்றுக்விகள் - ஒருதொடர்: சுக்கிரீவன் சிலசூறி, சீதையின் அணிகலமடிப்பைக் காட்டுதல்.]

இவ்வழி யாமியைந திருந்த தோரிடை
வெவ்வழி யிராவணன் கொணர மேலைநாட்
செவ்வழி நோக்கினின் றேறவி யேகொலாங
கவ்வையி னரற்றினள கழிந்த சேணுளாள்.

(இ - ள்.) மேலை நாள் - முனனொருநாளில், இவ்வழி - இந்த இடத்தில், யாம் - நாங்கள், இயைந்து இருந்தது ஓர் இடை - கூடியிருந்த சமயத்தில்,— வெவ வழி இராவணன கொணர - கொடியவழியில் மொழுகுனறவனன இராவணன எடுத்துகொண்டு வரும்போது, (அவனகையிலகப்பட்டுச் செல்கின்ற), நின தேவியே கொல்லாம - உனது மனைவியான ஜானகிப்பிராட்டியேதானோ? கழிந்த சேண் உளாள - நெடுந்தூரத்திலுள்ளா ளொருத்தி, 'செவவழி நோகின் - (இகுகாடுமலைகளிலுள்ள) நேராவழியைப் பார்த்து, கவவையின அரற்றினள - அன்பதேதாடி கதறினனை ; (எ - று.)

கழிந்தசேண் - மிகுகதூரம். கழிதல் - கடததல், மிகுதல். இனி, கழிந்த சேண் உளாள - வானததில நெடுந்தூரத்தி லிருந்தா னெனறாவது கொள்ளலாம. மிகநெடுந்தூரத்திலுளளாளாகவே, அவளது திருமேனியடையாளங கண்டுகூற இயலவில்லை யெனறபடி. கவவை = கௌவை; துனபம, பேரொலியுமாம். அரற்றுதல - அழுதல், ஒலித்தல். வெவவழி-தீயொழுக்கவழி, துர்மார்க்கம். 'செவவழி நோகினம்' எனற பாடத்துக்கு - செவவையாய்ப்பார்த்தோமென்று பொருள, 'நினதேவியேகொலாம்' எனறது, அந்தப்பெண் சீதாதேவியாயிருகுகலாமெனறு இப்பொழுது ஊகிகுகிறே னெனறபடி.

இதுமுதல் மூப்பத்துமூன்று கவிகள - இக்காண்டத்தின் கடவுள்வாழ்த்துப்போனற கலிவிருத்தங்கள். (5)

உ. உழையரினுணர்த்துவதுளமதனறுனனியோ
குழைபொருகண்ணினுள் குறித்தகோர்நதில
மழைபொருகண்ணினீனவாரியோடுதன்
பொதிந்திட்டனளையாங்களேற்றனம்.

(இ - ள்.) உழையரின உணர்த்துவது உளது என்று உன்னியோ அதாவது? குழைபோல (த் தானசென்ற திசையை இந்த ஆபரணங்கள் தனதுகணவனுக்

குத்) தெரிவிக்கக்கூடியது உண்டென்று எண்ணியேதானே, குழை பொரு கண்ணினுள் குறித்தது ஒர்நிலம் - குழையென்னுங் காதணியை மோதுகின்ற [காதளவுமீண்ட] கண்களையுடையவரான அவள் கருதியதை அறியின்றேமில்லே: தன் இழை பொதிந்து - தனது ஆபரணங்களே (துகழற்றி) ஆடையில் முடிந்து, மழை பொரு கண் இணை வாரியோடு இட்டனள் - மழையையொத்த தனது கண்களிரண்டினின்றும் பெருகுகின்ற நீருடன் கீழேபோகட்டாள்; யாங்கள் எற்றனம் - (அக்கிழிமுடிப்பைத் தரையில் விழாதமுன்னமே) நாங்கள் கைகளில் ஏந்திக்கொண்டோம்; (எ - று.)

இனி, முதலடிக்கு - இந்த வாரகங்கள் நமது செய்தியை நமது கணவனுக்குத் தூதர்போலத் தெரிவிக்கக்கூடியதுண்டென்று எண்ணியோ எனினுமாம். உழையர் - அருகிலுள்ளார், ஏவல்செய்வோர்; இங்குத் தூதர்மேலது. இன் ஒப்பு. கண்ணீர்சொரிந்துகொண்டே இழைமுடிப்பை இட்டனளென்பது, கருத்து. வாரியும் இழையுமாகிய இரண்டுபொருளுக்கு இட்டனளென்ற வினையொன்றே பொருந்தச்சொன்னது, புணர்நிலையணி; இதனை வடநூலார் ஸஹோக்தியலங்கார மென்பர். 'ஒடி' என்ற மூன்றனுருபு, அவ்வணிபற்றி வந்தது. மேகம்போலக் குளிர்ச்சியாய்க் காண்பவர்க்கு மகிழ்ச்சி விளக்குங் கண்க ளென்ற பொருளோடு மேகம்போல மிக்கநீரைச்சொரியுங் கண்க ளென்ற பொருளும் அமைய, 'மழைபொருகண்ணினே' எனப்பட்டது; "தழைத்தபொன்மூலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப், புழைத்த போல நீர்நிரந்தரம் பொழிகின்ற பொலிவால், இழைக்குநுண்ணிய மருங்குலான் இணைநெடுங்கண்கள், மழைக்கணென்பது காரணக்குறியென வகுத்தாள்" என்ற சுந்தரகாண்டச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. வாரி - வடசொல். இழை பொதிந்து - இழையை இழையிற்பொதிந்து எனவொருசொல்லேயே ஆவருத்திசெய்துகொள்க; முதல் 'இழை' - ஆபரணம்: இரத்தினங்களிழைத்துச்செய்தது; இரண்டாவது 'இழை' - நூலின்பெயர் ஆடைக்குக் காரணியாகுபெயரென்க.

வனவாசம் புறப்படுகின்றபோது இராமபிரான் சொன்னபடி தனது ஆபரணங்களிற் பெரும்பாலனவற்றை அந்தணர்களுக்குத் தானஞ்செய்துவிட்டு வந்த சீதாதேவி பிறகு வனத்தில் அத்திரிமுனிவரது ஆச்சிரமத்தில் அவர்பத்தினியான அநசூயையால் அளிக்கப்பட்ட ஆபரணங்களே அதுமுதல் அணிந்துகொண்டிருந்தனளென்பது, இங்கு அறியத்தக்கது. (உ)

உ. வைத்தனமிவ்வழிவள்ளனின்வயி
னுய்த்தனதந்தபோதுணர்கியாலெனக்
கைத்தலத்தன்னவைகொணர்ந்துகாட்டின
னெய்த்தலைப்பால்கலந்தனையநேயத்தான்.

(இ - ன்.) வள்ளல் - வரையாதருளுடையல்புடையவனே!—வைத்தனம் - (அந்தணம்எதிர்ந்த அணிகலன்முடிப்பை அப்படியே பத்திரமாக) வைத்திருக்கிறோம்; இ வழி - இப்பொழுது [அல்லது இவவிடத்தில்], நின்வயின் -

உன்பக்கல் [உனதருள்நிலையில்], உய்த்தன தந்தபோது - (அந்த ஆபரணங்களைக்) கொணர்ந்து காட்டும்போது, உணர்தி - (நீ அவற்றைச் சீதையினுடையனவா? அல்லனவா? என்று) அறிவாய், எனை - என்றுசொல்லி,— நெய்ததேலை பால் கலந்து அனைய நேபத்தான் - நெய்போடு பால் சேர்ந்தாற் போன்ற [மிகஇனிய] நன்புகிலையையுடையவனை சுக்கிரீவன், கைத்தலத்து அன்னவை கொணர்ந்து காட்டினன் - கையில் அந்த ஆபரணங்களை எடுத்துக்கொண்டுவந்து (இராமபிரானுக்குக்) காட்டினனை; (எ-று) ஆல் - ஈற்றசை.

உய்த்தன-கொணரப்பட்டவையாக; பலவின்பால் முற்றெச்சம். நெய்த்தலை - நெய்யினிடத்து; தலை - ஏழனுருபு. (கூ)

[அந்த ஆபாணங்களைநோக்கி இராமபிரான் அடைந்த நிலைமைகளை இதுமுதல் ஐந்துகவிகளிற் கூறுகின்றார்.]

ச. தெரிவுறநோக்கினன்றெரிவைமெய்யணி
யெரிகனலெய்திபமெழுகின்யாக்கைபோ
யுருகினனென்கிலமுயிருக்கூற்றமாய்ப்
பருகினனென்கிலம்பகர்வதென்கொலாம்.

(இ - ள்.) தெரிவை மெய் அணி - (சுக்கிரீவனைக் காட்டப்பட்ட) சீதாதேவியின் திருமேனியாபரணங்களை, தெரிவு உற நோக்கினன் - (இராமபிரான்) நன்றாகப்பார்த்தருளினனை; (அங்ஙனம் பார்த்தவளவில்), எரி கனல் எய்திய மெழுகின் யாக்கை போய் உருகினன் என்கிலம் - எரிகின்ற நெருப்பிற் சேர்ந்த மெழுகுபோல உடம்பு நெகிழ்ந்து உருகினனென்று சொல்லவல்லோமுமல்லோம்; உயிருக்கு ஊற்றம் ஆய் பருகினன் என்கிலம் - தனது உயிர்க்கு வலிமையாக (அந்த அணிகலங்களாகிய அமிருதத்தைக்) குடித்தானென்று சொல்லவல்லோமுமல்லோம்; பகர்வது என்கொல் ஆம் - (அப்பொழுது இராமனடைந்த நிலையைப்பற்றி மற்றும்யாம்) சொல்லக்கூடியது யாதுளது? (எ - று.)

இராமபிரான் அந்த அணிகலங்களை நன்றாகப் பார்த்தமாத்திரத்தில் தனது தேவியாருடைய திருவாபரணங்களென்று தெரிந்துகொண்டதனால் நீயிலிட்ட மெழுகுபோல உடல்கரைந்து உருகியதுமன்றி அவற்றைத் தனது ஜீவகாதாரமாகவுங் கொண்டனனென்று கருத்து உணர்க. இருவகையினுள் ஒன்றைத்தணிந்து கூறமாட்டாமை தோன்ற, இரண்டிடத்தும் 'என்கிலம்' என்றார். இங்கு, எதிர்மறை, விகற்பம்பற்றியது. அவற்றை நோக்கியது தனது உயிரின் தளர்ச்சி யொழியுமாறு அமிருதத்தைப் பருகினற்போன்றதென்றது, 'உயிருக்கு ஊற்றமாய்ப்பருகினன்' என்றதனால் விளங்கியது. ஊற்றம் - வலிமை, பற்றுக்கோடு, ஊன்றுகோல், அசைவின்றி நிற்றல் ஆதாரம். ஆய் = ஆக, எச்சத்திரிபு. போய் - உறுதிகெட்டு; எனவே, நெகிழ்ந்து என்க. போய்உருகினன் - உருகிப்போயினன என விருதி பிரித்துக்கூட்டலுமாம். 'மெழுகின்யாக்கைபோல்' என்ற பாடத்துக்கு - மெழுகினற் செய்யப்பட்டதொரு வடிவம் [பாவை] போல வென்று பொருளாம். தெரிவை -

தெரிவைப்பருவமுடைய பெண். இருபத்தாறுவது வயதுமுதல் முப்பத் தோராவதுவயது வரையிலும் மகளிர்க்குத் தெரிவைப்பருவமாம். இராவணன் சீதையை யெடுத்துக்கொண்டு செல்கின்றபோது அப்பிராட்டிக்கு முப்பத் தொருபிராயம் நிரம்பி முப்பத்திரண்டாவது பிராயம் தொடங்கிய தென்பது, இங்கு உணரத்தக்கது. (சு)

நி. நல்குவதென்னினிநங்கைகொங்கையைப்
புல்கியபூணுமக்கொங்கைபோன்றன
வல்குலினணிகளுமல்குலாயின
பல்கலன்பிறவுமப்படிவமானவே.

(இ - ள்.) நங்கை கொங்கையை புல்கிய பூணும் - அப்பிராட்டியினது தனங்களின்மீது அணியப்பட்டு அவற்றைச்சார்ந்திருந்த ஆபரணங்கள், அ கொங்கை போன்றன - (இராமபிரானுக்கு) அவ்வணிகலங்களையணிந்திருந்த தனங்களாகவே தோன்றின; அல்குலின் அணிகளும் அல்குல் ஆயின—; பல் கலன் பிறவும் அ படிவும் ஆன - மற்றையவயவங்களில் அணியப்பட்ட பல ஆபரணங்களும் அந்தந்த அவயவங்களாகவே தோன்றின; இனி நல்குவது என் - மற்றும் (அந்த ஆபரணங்கள் அப்பெருமானுக்குச்) செய்யக்கூடியது யாது? (எ - று.)

ஆரம் மேகலை முதலிய ஆபரணங்களைப் பார்த்தபோது அவற்றையணிந்த ஜாகைப்பிராட்டியின் திருமேனி யவயவங்களே நேரிற் கண்டாற்போல இராம பிரான் சிறிது ஆறுதலடைந்தன னென்பது தாற்பரியம். நல்குதல் - உதவுதல். நங்கை - மகளிரிற்சிறந்தவள் ("காரீணும் உத்தமா"); பெண்பாற் சிறப்புப்பெயர். முதலிரண்டு வாக்கியங்களில் உம்மைகள் - ஒன்றை ஒன்று கோக்கு முறையே எதிரதும் இறந்ததும் தழுவிய எச்சமாம். மூன்றும் வாக்கியத்தில் உம்மை - இறந்தது தழுவீய எச்சத்தோடு முற்றுப்பொருளுமுடையது. படிவம் - இங்கு உடலுறுப்பு. (இ)

கூ. விட்டபேருணர்வினைவிளித்தவென்கொலே
வட்டனவுயிரையவ்வணிகளென்கொலே
கொட்டிணசாந்தெனக்குளிர்ந்தவென்கொலே
சுட்டனவென்கொலோயாதுசொல்லுகேன்.

(இ - ள்.) அ அணிகள் - அந்தஆபரணங்கள், விட்ட பேர் உணர்வினை விளித்த என்கொலே - நீங்கிப்போயிருந்த (இராமபிரானது) சிறந்த அறிவை அழைத்தனவென்று சொல்வேனே? உயிரை அட்டன என்கொலே - (அவனது) உயிரைக் கொன்றன வென்று சொல்வேனே? கொட்டின சாந்து என குளிர்ந்த என்கொலே - மேலே நிரம்பச் சொரிந்த சந்தனம்போல (அப் பெருமானுக்குக்) குளிர்ச்சிசெய்தன வென்று சொல்வேனே? சுட்டன என் கொலே - (அப்பிராட்டிக்குத்) தாபமளித்தன வென்று சொல்வேனே? யாது சொல்லுகேன் - என்னவென்று சொல்லுவேன்! (எ - று.)

பிரிந்திருக்கின்ற சமயத்தில் அப்பிரிந்த பொருளே நினைப்பூட்டுகின்ற பொருள்களையாவும் ஒருபால் மகிழ்ச்சியையும் ஒருபால் மிக்கவருத்தத்தையும் விளைத்தல் இயல்பாதலால், இங்ஙனம் மாறிமாறிக்கூறினர். முதலடி மூன்று மடிகளோ, பிராட்டியின் அணிகலங்கள் அவளே இராவணன் எடுத்துக்கொண்டு போன திசையைத் தெரிவித்தலால், இராமபிரானுக்கு ஆறுதலே விளைத்தல் கருதிக் கூறியனவாகவும் கொள்ளலாம். இராமபிரானுக்கு இயல்பாகவுள்ள பேரறிவு பிராட்டியைப்பிரிந்ததனாலாகிய வருத்தத்தால் நீங்கியிருந்தது அவளது அணிகலங்களைக் கண்டதனால் மீண்டு வரலாயிற்றென்பது - முதல் வாக்கியத்தின் கருத்தும், அவ்வணிகலங்கள் அவளது மிகஅழகிய அவயவங்களே நினைப்பூட்டிப் பிரிவுத்துயரை மிகுவித்து அப்பெருமானுக்கு மரண வேதனையைச் செய்வனவு மாயின வென்பது - இரண்டாம் வாக்கியத்தின் கருத்தும், அவை அவனது விரகதாபத்தை ஒருபால் தணிவித்தனவென்பது - மூன்றும் வாக்கியத்தின் கருத்தும், அத்தாபத்தை மிகுவிப்பனவு மாயின வென்பது - நான்காம் வாக்கியத்தின் கருத்துமாம். இன்னபடியென்று ஒன்றைத் தெரிந்துகூறமாட்டாமையின், இங்ஙனம் விகற்பித்து, 'யாதுசொல்லுகேன்' எனலாயிற்று. அட்டன, அடு - பகுதி. அடுதல் - அழித்தல்; இங்கு, மிகவும் வருத்துதல்: சுடுதல் - வெதுப்புதல். விளித்த, அட்டன, குளிர்ந்த, சுட்டன - பலவின்பால் முற்றுக்கள். இச்செய்யுளிலுள்ள தன்மையொருமை முற்று ஐந்திலும், ககாரவொற்று - எதிர்கால விடைநிலை. ஓகாரங்கள் - விகற்பப்பொருளன. (சு)

எ. மோந்திடநறுமலரானமொய்ம்பினி
லேந்திடவுத்தரியத்தையேய்ந்தன
சாந்தமுமாயொளிதழுவப்போர்த்தலாற்
பூந்துகிலாயவப்பூவைபூண்களே.

(இ - ன்.) அபூவை பூண்கள் - (கொஞ்சி இன்சொற்கள் பேசுதலில்) நாகணவாய்ப்பறவைபோன்றவளான அப்பிராட்டியினது ஆபரணங்கள்,— மோந்திட நறு மலர் ஆன - (இராமபிரான்) மோந்துபார்த்தற்கு நறுமணம் வீசும் மலர்களாயின: மொய்ம்பினில் ஏந்திட உத்தரியத்தை ஏய்ந்தன - (அப்பெருமான்) தோளில் தரிக்க உத்தரீயம் போலாயின; ஒளி தழுவ சாந்தமும் ஆய்-(அப்பெருமான்மீது) ஒளிபரவுதலால் (அவனுக்குப்பூசுஞ்) சந்தனமும் போன்று, போர்த்தலால் பூ துகில் ஆய - (அவ்வொளியினால் அவனுடம்பை) மூடுதலால் (அவனுக்கு) அழகிய மேற்போர்வையும் போன்றன; (எ - று.)

இலக்குமியின் அவதாரமான உத்தமஜாதி ஸ்திரீயாகிய சீதாதேவியினது இயற்கை நறுமணமுடைய திருமேனியின் சம்பந்தத்தால் பரிமளம் பெற்ற அந்த ஆபரணங்கள் இராமபிரான ஆசரத்தோடு அடிக்கடி மோந்து பார்க்குந்தோறும் மலர்கள்போல நறுமணம்வீசி இனிமைசெய்தனவென்பார் 'மோந்திட நறுமலரான' என்றும், மற்றும் அவற்றை இராமபிரான் ஆசரத்தால் மேலாடையைப்போலத் தோளில் வைத்துக்கொண்டு கொண்டாடினனென்பார் 'ஏந்திட வுத்தரியத்தையேய்ந்தன' என்றும், அவன் அவற்றைத்

லைக்களிற்கொண்டு மோந்து பாராட்டுமிடத்து அவற்றின் ஒளி அவனது மார்பிலும் தோள்களிலும் பரவுதலாற சந்தனம் பூஞ்சோலை போலிருந்தே தென்பார் 'ஒளிதழுவச் சாந்தமுமாய்' எனறும், அவற்றை அவன் தோளுகளில் வைத்துக்கொண்டபோது அவற்றின் ஒளி அவனுடம்பு முழுவதும் பரவுதலால் ஒரு போர்வை போர்த்தாற போலாயிறனெனபார், '(ஒளி) போர்த்தலாற் பூந்துகிலாய' என்றும் கூறினர். 'ஒளி' எனறதை, 'தழுவ', 'போர்த்தலால்' என்ற இரண்டனோடுந் தனித்தனி கூட்டுக. ஆன, ஆய - முற்றுக்கள. உத்தீயம் - வடசொல். பூந்துகில் - மலாபோல மெல்லிய துகி லென்றும், மலர் போலச் சித்திரவேலை செய்யப்பட்ட துகி லெனறும் கொள்ளலாம். துகில - ஆடை; இங்கே, மேறபோர்வை. பூவை - உலமையாகுபெயர். (எ)

அ. ஈர்த்தனசெங்கணீர்வெள்ளமயாவையும்
போர்த்தனமயிர்ப்புறம்புளகமபொங்குதோள
வோர்த்தனவென்கெனோவெதும்பினனென்கொ
தீர்த்தணியவ்வழியாதுசெப்புகென்.

(இ - ள.) செம்கண்நீர வெளளம் - (இராமபிரானது) சிவந்த இரண்டு கண்களினினறும் (அப்பொழுது பெருகிய) நீரவெளளங்கள, யாவையும் ஈர்த்தன - (அங்குளள) எல்லாப்பொருளகளையும் இழுத்துக்கொணடு சென்றன; மயிர் புளகம - மயிர்ச்சிலிர்ப்புக்கள, புறம போர்த்தன - (அப்பெருமானது) திருமேனி முழுவதையும் மூடின; பொங்கு தோள வோர்தனன என்னெனோ - பூரிக்கினற (அவனது) திருத்தோள்கள் வோலை யடைந்தன வென்று சொல்வேனோ? வெதுமபினனெனகொ - (வேர்த்தல் கொள்ளாது) தாபமடைந்தா னென்று சொல்வேனோ? அவவழி தீர்தத்தினை யாது செப்புகேன் - அப்பொழுது பரிசுதத்மூர்தியான இராமபிரான அடைநத நிலை யைக் குறித்து எனன சொலவேன்! (எ - று)

வேர்த்தல் - தாபதினின் முதிர்ந்த நிலை. வெதுமபுதல் - அதன முதிராத நிலை எனகொண்டு வேறுபடுதறி, தோளவேர்தனன வெனகெனோ வெதுமபினனென்கொ வெனறு விகறபித்துக கூறலாயிற றெனக. 'தீர்தனன' என்றது, இலகுகினையாய் அவனடைந்த நிலையினமேல் நினறது. செங்கண் - உத்தமவிலகணமாகிய செவவரி பரந்து செந்தாமரை மலர்போனறகண்; சோகத்தாற கலங்கியும் கணசிவந்தன. புளகம, தீர்தனன - வடசொற்கள். 'வேர்த்தனனென்கெனோ' எனற பாடதறகு, தோள்வோதனன் என பது - சினையின் தன்மையை முதலினமேலேறறிக்கூறிய முடிபாம். மயிர்ப் புளகம் புறம்போர்த்தலும் தோள் பொங்குதலும் மகிழ்ச்சியினாலும், வேர்த்தலும் வெதும்புதலும சோகதினாலும, கணணீர்வெளளம் பெருகுதல் இரண்டினாலும் உண்டாகக்கூடிய மெய்ப்பாடுகளாதலால, அவையனைதையும் அப் பொழுது ஒருங்குபெறற இராமபிரானது நிலைமை மகிழ்சசி அல்லது சோகம் என இரண்டினொனறு துணிந்து சொலலைகூடாதபடி யிருந்ததெனபார் 'யாது செப்புகேன்' எனறு மொழிதலுமாம. இனி, கண்ணீர் வெள்ளம் பெருகுதல் மயிர்ப்புளகம் போததல் தோள பொங்குதல் தோள் வேர்தல்

என்னு மிவற்றை யடைந்தவன் பின்பு தாபமே தலையெடுத்து நின்றானென் றற்கு, இங்ஙனம் விகற்பித்துக் கூறினரென்றல் நேர். இவ்வுரை அடுத்த கவியில் 'வெம்மை மீக்கொள' என்பதற்கு ஏற்றலுங் காண்க. முதலடி - உயர்வுநவிற்சியணி. (அ)

[பெருமாள் பூர்ச்சித்துச்சாய அருகிலிருந்த சுக்கிரீவன் தாங்கிக்கொள்ளுதல்.]

கூ. விடம்பரந்தணையதோர்வெம்மைமீக்கொள
நெடும்பொழுதுணர்வினுடியிர்ப்புநீங்கிய
தடம்பெருங்கண்ணனைத்தாங்கினன்றன
துடம்பினிற்செறிமயிர்சுறுக்கென்றேறவே.

(இ - ன்.) விடம் பரந்து அனைய ஓர் வெம்மை மீக்கொள (உடம்பில்) விஷம் பரவினாற்போன்றதொரு தாபம் அதிகப்பட, நெடும் பொழுது உணர் வினோடு உயிர்ப்பு நீங்கிய - வெகுநேரம் அறிவும் சுவாசமும் நீங்கிக் கீழேவிழு பவனை, தட பெருங் கண்ணினை - மிகப் பெரியகண்களை யுடையவனை இராமபிரானை, (சுக்கிரீவன்), தனது உடம்பினில் 'செறி மயிர் சுறுக்கென்று ஏற தாங்கினன் - தன்னுடைய மார்பிற் பொருந்திய மயிர்கள் சுறுக்கென்று (அவனது மெல்லிய திருமேனியிற்) படுமாறு (கீழேவிழாதபடி) தாங்கிக் கொண்டான்; (எ - று.)

வானரவீரனை சுக்கிரீவனது உடம்பிலுள்ள மயிர்களின் வன்மையும் இராமபிரானது மலர்போல் மிருதுவான திருமேனியின் மென்மையும் பற்றி, 'தனதுடம்பினிற் செறிமயிர்சுறுக்கென்றேற' என்றார். முதலடியில் உவமை யணியும், மறறைபடிகளில் தன்மைநவிற்சியணியுங் காண்க இவையிரண டுஞ் சேர்தலால், சேர்வ்வயணி. உணர்வு - பிரஜ்ஞை. உயிர்ப்பு - மூச்சு. தட பெரு - ஒருபொருட்பன்மொழி. "கரியவாகிப் படைபாக்து மிளிர்ந்து செவவரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" ஆதலால், 'தடம்பெருங் கண்' எனப்பட்டன. சுறுக்கெனல் - கூர்மைக்குறிப்பு. (கூ)

[சுக்கிரீவனது அநுதாபவார்த்தை.]

கூ. தாங்கினனிருத்தியத்துயரந்தாங்கலா
தேங்கியநெஞ்சினனிரங்கிவிம்முவான்
வீங்கியதோளினுய்வினையினேனுயிர்
வாங்கினனிவ்வனிவருவித்தினனென்.

(இ - ன்.) தாங்கினன் இருத்தி - (அவ்வாறு சுக்கிரீவன் இராமபிரானைத் தனது மார்பில்) தாங்கிக்கொண்டு உட்காரவைத்து, அ தியரம் தாங்காது ஏங்கிய நெஞ்சினன் - (அப்பெருமானுக்கு நேர்ந்த) அத்தின்பத்தைக் கண்டு தான் பொறுத்திருக்கமாட்டாமல் மெலிந்த மனத்தையுடையவனும், இரங்கி விம்முவான் - அநுதாபங்கொண்டு சோபிப்பவனுமாகி, (அப்பெருமானை நோக்கி), 'வீங்கியதோளினுய்-பருத்த தோள்களையுடையவனே! வினையினேன்-தீவினை

புடையேனை யரன், இ அணி வருவித்தேனை உயிர் வாங்கினென் - இந்த ஆபரணங்களைக் கொண்டுவந்த உனது உயிரை ஒழியச் செய்தேன்,' எனை - என்று சொல்லிப் புலம்பி, (எ - று.)—(கன) 'எனைமுன்' என இதுமுதல் எட்டுச்செய்யுள்கள் குளகமெனக. அனறி, எனை விம்முவான் என இச்செய்யுளிலேயே முடித்து, என்றுசொல்லிப் புலம்புபவனை னென்றலுமாம்.

தான் பிராட்டியினணிகலங்களைக் கொணர்ந்து காட்டியமை இராமபிரானுக்கு இவ்வளவு வேதனையை யுண்டாக்கியதெனபதை உட்கொண்டு அதற்குக் காரணமான தனனைத தீவினையுடையே னெனறு கழிவிரக்கத்தோடு வெறுப்பவனை னென. வினையினேன - பாவியேன். (கo)

[இதுமுதல் ஏழகவிகள் - ஒருதோடர்: சுக்கிரீவன் இராமபிரானைத் தேற்றுமாறு கூறிய வார்த்தைகள்.]

கக. அயனுடையண்டகடினப்புறத்தையு
மயர்வறநாடிபென்வலியுமகாட்டியுண்
னுயர்புகழ்த்தேவியையுதவற்பாலனும்
முயருழுத்தயர்திமியாசுருதிநூல்வலாய்.

(இ - ன்.) சுருதி நூல் வலாய - வேதசாஸ்திரங்களில் வல்லவனே!—அயனுடை அண்டத்தின அப்புறதையும்-இந்தப பிரமாண்டத்திறகு அப்பாலுள்ள இடத்தையும், மய்வு அற நாடி—சந்தேகமலலாதபடி தேடிப்பார்த்து, என் வலியும் காட்டி - எனது வலிமையையும் (இராவணன முதலியோரை வர்க்குங்) தெரியச்செய்து, உன உயர் புகழ் தேவியை உதவல் பாலன் - உனது சிறந்த கீர்த்தியையுடைய மனைவியை (உனகருக) கொணர்ந்து கொடுக்கக்கடவேன; (ஆகவே), தியா உழந்து அயாதியோ - நீ இன்பமனுபவிதது மூர்ச்சிக்க கடவையோ? (எ - று.)—ஆல் - அசை.

இராவணன ஜாகையை இந்த அண்டத்திற்கப்பா லொளிதது வைத்திருந்தாலும் அங்குஞ் சென்று நனருகதேடி அப்பிராட்டி யிருக்குமிடததைக் கண்டறிந்து எனது ஆறறல் காட்டிப் பொருது இராவணனைத தொலைத்து அத் தேவியை மீட்டுக கொண்டுவந்து நின்னிடம் சமாப்பிகக தக்கவனுய்யான் இருக்க, நீ இவவாறு சோகிப்பானேனென்று சுக்கிரீவன இராமபிரானை நோக்கிக் கூறினனெனபதாம். அண்டத்திற்கு அப்புறத்தைக் கூறவே, அதறகு உட்பட்ட உலகங்களிற் சென்று தேடிக் கண்டுபிடித்தல் கூறவேண்டாதாயிற்று.

அயனுடை அண்டம் - பிரமனைத தனது அகதனுடையதாய் அவனது ஆட்சிக்கு உட்பட்ட அண்டம. மயவு - மயகக; இனி, மயவு அற - (யாரை). சோர்வடையாமல் எனினுமாம். உயாவுபுகழ்த்தேவி—திருக்குறளில் வாழ்க்கைத் துணைநலத்தில் ''தகைசான்ற சொறகாதத்துச் சோவிலான் பெண்'' என்றதையும், அங்குப் பரிமேலழகர் 'தனமாட்டுப் புகழாவது - வாழும ஊர் கற்பால் தனனைப்புகழ்வது' என்றதையுங் காண்க. பாலன - பானமையென,

னும் பண்பினடியாப் பிறந்த தன்மையொருமைக் குறிப்புமுற்று. உழத்தல் - வருந்துதல். சுருதி நூல் - உம்மைத்தொகை; சுருதியாகிய நூலெனப் பண்புத் தொகையுமாம். (கக)

கூ. திருமகளனையவத்தெய்வக்கற்பினுள்
வெருவரச்செய்துளவெய்யவன்புய
மிருபதுமீரைந்துதலையுமேவினுன்
னெருகணேக்காற்றுமோவுலகமேழுமே.

(இ - ன்.) திருமகள் அனைய - இலக்குமியைப்போனற, அ தெய்வம் கற்பினுள் - தெய்வத்தன்மையுள்ள பதிவிரதா தருமத்தை யுடையவளான அந்த ஜானகிப்பிராட்டி, வெருவர - அஞ்சும்படி, செய்து உள - (அவள்பக்கல் தீங்கு) செய்துள்ள, வெய்யவன - கொடியவனான இராவணனுடைய, புயம் இருபதும் - இருபது கைகளும், ஈர் ஐந்து தலையும் - பத்துத் தலைகளும்,—எவின - எய்தி செலுத்துமிடத்தி, உன ஒரு கணைகு ஆற்றுமோ - உனது ஓர் அம்புக்குத்தான இலகுப்போதுமோ? உலகம எழுமே - (இவை கிற்க) ஏழுலகங்களும் தாம், (எவின உன ஒரு கணைகு ஆற்றுமோ?) - எய்தி செலுத்துமிடத்தி உனது ஓர் அமபுகுதத்தான இலகுப்போதுமோ? (எ-ம.) —ஆற்றுமோ - ஆற்று வெனறபடி.

'எவின உன ஒரு கணைக்கு ஆறறுமோ' எனறது, ஆவருதலி செய்து கொள்ளப்பட்டது. இது வேண்டாதபடி 'உலகம் போதுமோ' எனறும், 'தலையுகிறவுன' எனறும் பாடங்கள காணப்படுகினறன. அழகும உதாரம விலக்கண நிறைவும பெருமாளுகு வாழ்க்கைபடுதலும் பறறி, 'திருமக னனைய' எனறன. கறபிறகுத தெயவதத்தனமை - "தெய்வக் தொழாஅள் கொழுகறறெழுதெழுவாள, பெய்யெனப பெய்யு மழை," "கொண்டான, சூறபபறிவாள பெணடாட்டி.....பெய்யெனப் பெய்யு மழை" எனக் காண்க. இனி, தெயவகறபினுள எனபதறகு - தெய்வவடிவமாம [ரூபமாய்] நிறகும அருநததி போலுங கறபினையுடையாளெனறு உரைத்தலு மொன்று. தனது ஆறறலைக கீழ்க்கூறிய சுகரீவன இவவாறு பெருமாளுடைய ஆறறலை எடுததுக்கூறினான. (கஉ)

கஉ. ஈண்டுநீயிருந்தருளேழுலோடேழனைப்
பூண்டபேருலகங்கள்வலியிறபுகுகிடைத
தேண்டியவவரக்கனைத்திருகித்தேவியைக்
காணடியானிவ்வழிகொணருகைப்பணி.

(இ - ன்.) ஈண்டு நீ இருந்தருள - இஙகேயே நீ இருந்தருள்வாய்; யான்—, எழொடு எழ் ஏழு பூணட பேர உலகங்கள் வலியன புகு-பதினனு கெனறு தொகைகொணட பெரிய உலகஙகளிலெலலாம வலிமையோடு சென்று, இடை தேண்டி - அவவிடஙகளில் (பிராடடியவத) தேடி, அ அரக் கனை திருகி - (அவ்வேயெடுத்தச்சென ற) அநத ராகூசனைத் தலை முறித்து தேவியை இ வழி கொணரும - உன மனைவியான ஜானகியை இவவிடத்திறகு

கொண்டுவந்து சேர்க்கும், கை பணி - சிறிய ஏவல்தொழிலே, காண்டி - பார்ப் பாயாக; (எ - று.)

இவ்வளவு பெரியகாரியம் தனது ஆற்றலுக்கு மிகவும் எளிதாதல் தோன்ற, 'கைப்பணி' எனப்பட்டது. கைப்பணி - கைத்தொண்டு; குற்றே வல், கைங்கர்யம்; கை - சிறுமைமேலது எழொடேழ் - மேலேழோடு கீழே ழும். தேண்டி - தேடியென்பதன் விரித்தல். கொணரும் - எதிர்காலப்பெய ரெச்சம். காண்டி - ஏவலொருமை. (கஉ)

கச. ஏவல்செய்துணைவரேம்யாங்களீங்கிவன்
ரூவரும்பெருவலித்தம்பிநம்பிநின்
சேவகமிதுவெனிற்சிறுகநோக்கலென்
மூவகையுலகுநின்மொழியின்மூக்குமோ.

(இ - ன்.) யாங்கள் - நாங்கள், ஏவல் செய் துணைவரேம் - (நீ) ஏவிய காரியங்களைச் செய்கின்ற தோழராக இருக்கிறோம்; ஈங்கு இவன் - இங்கே யுள்ள இவ்விலக்குமணனே, தா அரும் பெரு வலி தம்பி - அழிவற்ற மிக்க வலிமையையுடைய (நின்) தம்பியாவன்; நம்பி - ஆடவரிற் சிறந்தவனே! நின் சேவகம் இது - உனது வீரமோ இத்தன்மையது: எனில் - என்றால், மூவகை உலகும் நின் மொழியின் மூந்துமோ - மூன்றுவகை யுலகங்களும் உனது கட்டளையைக் கடக்குமோ? [கடக்கமாட்டா வென்றபடி]; (இங்ஙன மிருக்க), சிறுக நோக்கல் என் - (உன்னே நீ) குறையுடையனுகப் பார்க்க வேண்டியது என்ன? (எ - று.)

'நின் சேவகம் இது' என்று சுட்டியது, கீழ்கூ - ஆங் கவியிற் குறித் தனை துணைவர் - உதவி செய்பவராயிருப்பவர்; இப்படர்க்கைச்சொல் 'ம்' என்ற தன்மைப்பன்மை விகுதியோடு கூடித் தன்மைப்பன்மைக்கு வந்தது. தா - உரிச்சொல் பெருவலி - மகாபலம். நம்பி - புருஷோத்தமன்; ஆண் பாற்சிறப்புப்பெயர். (இதன் பெண்பால் - நங்கை) சிறுக நோக்கல் - உன்னே நீ எளியவனுகப்பாவித்தல். 'மூவகையுலகு' என்றது, மேல் கீழ் நடு என்ற நோக்கத்தால். இங்கு 'உலகு' என்றது, அவவிடத்து உயிர்கள்மேல் நின்றது. 'துணைவரோ யாங்கள்' எனபதும் பாடம். (கச)

கரு. பெருமையோராயினும்பெருமைபேசலார்
கருமமேயல்லதுபிறிதென்கண்டது
தருமமேயல்லதுதனித்தவேறுண்டோ
வருமையேதுனக்குநின்றவலங்கூர்தியோ.

(இ - ன்.) பெருமையோர் ஆயினும் பெருமை பேசலார் - (உத்தமர்கள் தாம்) பெருமையுடையவர்களாயிருந்தாலும் தங்கள் பெருமையைத் தாங்களே சொல்லமாட்டார்கள்; (ஆகவே), கருமமே அல்லது பிறிது கண்டது என் - அவர்கள்செய்த செயல்களே (உலகம்) கண்டதல்லாமல் வேறுகண்டதுயாது? தருமம் நீ அல்லது தனித்து வேறு உண்டோ - தருமம் நீயே யல்லாமல்

தனியே (உன்னைக்காட்டிலும்) வேறொன்று உள்ளதோ? உனக்கு அருமை எது - (இங்ஙனமான) உனக்கு அசாத்தியமான செயல் எது? [எதுவுமில்லை யென்றபடி]; (இவ்வாறிருக்கவும்), நின்ற அவலம் கூர்தியோ - (நீ ஒன்றுஞ் செய்யமாட்டாதவன்போலத் திகைத்து) நின்று சோகங்கொள்ளக்கட வையோ? (எ - று.)

பெருமை - அறிவு, ஆற்றல், செயற்கரியனசெய்தல் முதலிய சிறப்புக் கள். "பெருமை பெருமிதமின்மை" என்றபடி செருக்கின்றியிருத்தல் அவர் கட்கு இயல்பாதலால் தமது பெருமையைத் தாமே எடுத்துச்சொல்லாரென்க. அப்படிசொல்லிக்கொள்ளுதல் சிறியோரியல்பா மென்பதை "சிறுமையணியு மாந் தன்னே வியந்து" என்றதனு லுணர்க. அவர்கள் தமது பெருமையைத் தாம் கூறுமல் அரியசெயல்களைச் செய்தல் மாத்திரமுடையராகவே, உலகம் அவர்கள்செயலைக் காண்பதன்றேயன்றி வேறொன்றைக் காணவல்லதன்று என்பது, இரண்டாமடியின் கருத்து. இனி, இதற்கு - பெரியோர் தாம் செய்யக் கடவனவான காரியங்களையே நோக்குவார்களல்லது அவர்கள் நோக்குவது வேறு யாது? என்றலுமாம். "கருமமே கண்ணினர்" என்ற படி தருமமூர்த்தியாவாய் நீயென்பது, மூன்றாமடியின் பொருள். நின்ற - எளியவர்போல நின்ற 'பெருமையோராயினர்' என்றும் பாடமுண்டு. (கடு)

கக. முளரிமேல்வைகுவான்முருகற்றந்தவத்
தளிரியல்பாகத்தான்றடக்கையாழியா
னளவியொன்றவரேயன்றியையமில்
கிளவியாய்தனித்தனிக்கிடைப்பரோதுணை.

(இ - ள்.) ஐயம் இல் கிளவியாய் - சந்தேகமில்லாத பேச்சுக்களையுடைய வனே!—முளரிமேல் வைகுவான் - (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிவாழ்பவனான பிரமனும், முருகன் தந்த அ தளிர் இயல் பாகத்தான் - முருகக்கடவுளைப் பெற்ற தந்தையும் தளிர்போல் மெல்லிய இயல்பையுடைய வான அம்பிகையை வாமபாகத்திற் கொண்டவனுமான அந்தச் சிவபிரா னும், தட கை ஆழியான் - பெரிய திருக்கையில் சக்கராயுதத்தை யுடையவ னான திருமாலும், ஒன்று அளவி (துணை) ஆவரே அன்றி - ஒன்று சேர்ந்து (உனக்கு) ஒப்பாக மாட்டுவரேயல்லாமல், தனித்தனி துணை கிடைப்பரோ - (அவர்கள்) தனித்தனியே (உனக்கு) ஒப்பாகப்பொருந்துவரோ? [பொருந்தா ரென்றபடி]; (எ - று.)

திரிமூர்த்திகளும் கூடினால் உனக்கு ஒப்பாகக்கூடுமேயன்றி அவர்களில் எவரும் தனியே உனக்கு ஒப்பாகமாட்டார் என்று ஸ்ரீராமபிரானது மகிமை யைச் சுக்கிரீவன் கொண்டாடியவாறும். 'துணை' என்பது, 'ஆவரே' என் றதனோடுங் கூட்டப்பட்டது. 'ஐயம்' என்றது, திரிபுக்கும் உபலக்ஷணம்; இரண்டும் மெய்ம்மைக்கு மாறும். பொருள்களை ஐயந்திரிபற விளக்கமாக எடுத்துக்கூறுந் தெளிவானபேச்சுக்களை யுடையவனே யென்பது, 'ஐய மில்கிளவியாய்' என்றதன் கருத்து. முளரி - மூட்களையுடைய அரியை [அரையை] யுடையது, 'முருகற்றந்த' என்றது, தளிரியல்பாகத்தானுக்கு

அடைமொழி. 'தக்க' என்பதற்கு - வளர்த்த என்ற பொருள்கொண்டால், தளிரி பலுக்கே அடைமொழியாகலாம். அகரச்சுட்டு - பிரித்தற்பாற்றியது. தளிரியல் - உவமைத்தொகையன்மொழி அளவி - அளாவி. ஞெளவி - ஞெ ளை என பகுதியினடியாப் பிறந்தது. திரிமூர்த்திகளின முறைமை, இங்கே செய்யுள் நோக்கிப் பிறழவைக்கப்பட்டது. (கசு)

களை. எண்ணுடைச்சிறுகுறைமுடித்தலீண்டோரீஇப்
பின்னுடைத்தாயினுமாகபேதுறு
மின்னிடைச்சனகியைமீட்டுமீடுமால்
பொன்னுடைச்சிலையினுய்விசைந்துபோயென்றான்.

(இ - ள்.) பொன் உடை சிலையினும் - பொலிவையுடைய வில்லையுடையவனே!—என்னுடை சிறுகுறை முடித்தல்-என்னுடைய சிறிய குறையை நிறைவேற்றுதல், ஈண்டு ஒரீஇ - இப்பொழுது (நிகழ்வதை) ஒழித்து, பின் உடைத்து ஆயினும் ஆக - பினனே நிகழ்வதானாலும் ஆகட்டும்: விசைந்து போய் - விரைவிற் சென்று, பேது உறும் மின் இடை சனகியை - (இராவணன் கையிலகப்பட்டுக்) கலக்கமடைந்திருப்பவளான மின்னல் போலும் இடையையுடைய சீதையை, மீட்டு - (அவனிடத்தினின்று) மீட்டுக்கொண்டு, மீடும் - திரும்பிவருவோம், என்றான் - என்று (ஸ்ரீராமனை நோக்கிக்) கூறினான், (சுக்கிரீவன்); (எ - று.)—ஆல் - அசை.

'என்னுடைச்சிறுகுறைமுடித்தல்' எனறது-வாலிவதஞ்செய்து சுக்கிரீவன் மனைவியான ருமையை மீட்டுக்கொடுத்தல். இராவணனை வென்றவனை வாலியை வதைத்தலென்பது மிகவும் அரியபெரிய செயலேயாயினும் அதனைச்செய்து முடித்தற்கேற்ற இராமலக்ஷ்மணர்களது பேராற்றலை மராமரமெய்ததனாலும், திண்டிபியுடலை யெறிந்ததனாலும் கண்கூடாகக் கண்டுள்ளானதலால், அத்திறத்தைநோக்கி 'சிறுகுறை' என்றான். குறை - காரியம்; செய்து முடிக்கவேண்டியதாய் மிச்சமாயிருப்பது. ஒரீஇ - ஒருவி; சொல்லிசையளபெடை: நீங்கி யென்பது பொருள். பேது உறுதல் - பேதமுறுதல், கலங்குதல். இடைக்கு மின்னல் உவமை - மெல்லியவடிவிலும், ஒளியிலுமாம். மீடும்-மீள்+தும். பொன்னுடைச் சிலையினும்-பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வில்லையுடையவனே யெனினுமாம்; ('காஞ்சன பூஷிதசாப' மென்றும், 'காஞ்சன சித்ர கார்முக' மென்றும் வால்மீகி ராமாயணத்திற் காணப்படுகின்றது.) (கஎ)

[அவ்வளவில் இராமபிரான் ஓநவாறு மூர்ச்சைதெளிந்து சுக்கிரீவனை நோக்கிப் பேசத்தொடங்குதல்.]

கஅ. எரிகதிர்க்காதலனினீயகூறலு
மருவியங்கண்டிறத்தன்பிறேக்கினன்
றிருவுறைமார்பனுந்தெளிவுதோன்றிட
வொருவகையுணர்வுவந்துரைப்பதாயினன்.

(இ - ள்.) எரி கதிர் காதலன் - சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியனது குமாரனை சுக்கிரீவன், இனைய கூறலும் - இவ்வாறான வார்த்தைக

ஊச் சொன்னவனலில்,—திரு உறை மார்பனும் - இலக்குமி வீற்றிருக்கின்ற மார்பையுடையவனன திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீராமபிரானும், தெளிவு தோன்றிட - மூர்ச்சைதெளிதலுண்டாக, ஒரு வகை உணர்வு வந்து - ஒரு வாறு பிரஜ்ஞைவரப்பெற்றவனும், அருவி அம் கண் நிறந்து அன்பின் நோக்கினன - நீர்ப்பெருக்கையுடைய அழகிய கண்களைத் நிறந்து அன் போடு (சுக்கிரீவனைப்) பார்த்து, உரைப்பது ஆயினன் - (சிலவார்த்தைகள்) சொல்லுதலுடையவனனன்; (எ - று.)—அவற்றை, அடுத்த ஆறு செய்யுள் களிற் காண்க.

ஏரிகதிர் - வினைத்தொகையன்மொழி. அருவிக்கண் - மலையருவியைப் போல நீரைச்சொரியுங் கண். 'திருவுடைமார்பன்' என்பதும் பாடம் (கஅ)

[இதுமுதல் ஆறுகவிகள் - இராமபிரான் வார்த்தை.]

கக. விலங்கெழிற்றோளினுய்விஞையினேனுமிவ்
விலங்குவிற்கரத்தினனிருக்கவேயவள்
கலன்கழித்தனளிதுகற்புமேவிய
பொலன்குழைத்தெரிவையர்புரிந்துளோர்கள்யார்.

(இ - ன்.) விலங்கு எழில்தோளினுய் - மலைகள்போன்ற அழகிய தோள் களையுடையவனே!—வினையினேனும் இ இலங்கு வில் காத்தினன் இருக் கவே - தீவினையுடையேனுமான் வீளங்குகின்ற இந்த வில்லை யேந்திய கையையுடையவனுய் உயிர்வாழ்ந்திருக்கும்பொழுதே, அவள் - அந்த ஜானகி, கலன் கழித்தனள் - (தனது) ஆபரணங்களைக் கழற்றியெறிந்துவிட்டாள்; கற்பு மேவிய-பதிவிரதாதருமம் பொருந்திய, பொலன் குழை தெரிவையர் - பொன்னலாகிய குழையென்னுங் காதணியையுடைய மகளிரில், இது புரிந் தனேர்கள் யார்-இங்ஙனஞ் செய்தவர்கள் யாவரேனும் உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

கணவன் இறக்கப்பெற்ற கற்புடைமகளிர் கலன்கழித்தல் இயல்பே; கணவன் உயிர்வாழ்ந்திருக்கையில் அவன்பிரிவைப் பொறுக்கமாட்டாத துய ரத்தாலும் வேறெயொருநற்பயனை யுத்தேசித்தும் இப்படி தன்னுடைய அணி கலங்களையெல்லாம் கழற்றியெறியுங் கற்புடைமகளிர் ஜானகியைத் தவிர வேறு எவரேனும் உண்டோ? என்று பிராட்டியின் குணாதிசயத்தைப் பாராட் டிக்கூறியவாறும். கணவன் வாழ்ந்திருக்கையிலேயே அவள் கலன் கழித்த மையைப் பற்றிய இரக்கமும் இதில் தோன்றும். விலங்கு - விலங்கல் என்ப தன் விகாரம்; ஊர்க்கு ஒருபுறமாக விலகிநிற்பதுபற்றிய பெயர். மனவி இங்ஙனம் பரிதாபமான நிலைமையை யடைதற்கேற்ற பாவத்தையுடையேன் யானென்று தம்மைத் தாமே வெறுத்துக்கொண்டனர் மனுஷ்யபாவனையி னல் பெருமான். பகை வெல்லுதற்கேற்ற கருவி கையிலிருந்தும் பயனில் லாமை தோன்ற, 'இலங்குவிற்கரத்தினனிருக்கவே' என்றார். காதோலை மங் கல வாழ்க்கைக்கு இன்றியமையாத தாதலால், ஸுமங்கலிஸ்திரீகளென்ற பொருளில் 'பொலன்குழைத்தெரிவையர்' எனப்பட்டது. எதிகை நயத்தை

நோக்கி, கலங்கழித்தனள்', 'பொலங்குழைத்தெரிவையர்' என்று பாட மோதுவாரு முளர். (கக)

உ0. வாணெடுங்கண்ணியென்வரவுநோக்கயான்
ரூணெடுங்கிரியொடுந்தடங்கடம்மொடும்
பூணெடும்புலம்பியிப்பொழுதுபோக்கினே
னைணெடுஞ்சிலைசுமந்துழலுநாணிலேன்.

(இ - ள்.) வான் நெடுங் கண்ணி - வாள்போற் கூரிய நீண்ட கண்களை யுடையவளான ஜானகி, என் வரவு நோக்க - என்னுடைய வரவை எதிர் பார்த்து வருந்திக் கொண்டிருக்கவும், யான் —, (அவளது துன்பத்திற்குப் பரிகாரந் தேடாமல்), தான் நெடுங் கிரியொடும் - தாழ்வரைகளையுடைய பெரிய மலைகளுடனும், தடங்கள் தம்மொடும் - தடாகங்களுடனும், பூணெடும் - ஆபரணங்களுடனும், புலம்பி - அழுது, இ பொழுது போக்கினேன் - இவ்வாறு காலத்தை வீணுக்குக் கழித்துக்கொண்டிருக்கிறேன்: (மற்றும் யான்), நாண் நெடுஞ் சிலை சுமந்து உழல நாணிலேன - நாணியையுடைய நீண்ட வில்லைச் சுமந்து திரிதற்கு வெட்கமுறாதிருக்கின்றேன; (எ - று.)

மலையின் அடியைப் பாதமென்னும் மரபுபற்றி, 'தாள்' என்றார். 'சுமந்து' என்ற வினையின் ஆற்றலால், பகைவனை வென்று அவன் கவர்ந்த தமது பொருளை மீட்காதவர்களேனும் ஆயுதம் அவர்கட்குப் பாரமாவதேயனறிப் பெருமை பெறுதென்பது தோன்றும். 'உழல' எனறது, எங்கேனும் ஒளித் திராமல் வெளிப்படையாய் எங்குந்திரிய என்றபடி. நாணிலேன் - தன்மை யொருமை யெதிர்மறைமுற்று. 'நாண்' என்ற ஒரு சொல்லே வேறொரு பொருளில் மீளவும் பிரயோகித்தது, சோபின்வருநிலையணி 'புலம்பியே பொழுது போக்கினேன்' என்பதும் பாடம் (உ0)

உக. ஆறுடன்செல்பவரஞ்சொன்மாதரை
வேறுளார்தூயர்செயின்விலக்கிவெஞ்சமத
னூறுறத்தம்முபிருகுப்பர்யானெனைத்
தேறினடன்றுயர்தீர்க்கிற்றிலேன்.

(இ - ள்.) ஆறுடன் செல்பவர் - வழியிலே போகின்றவர்கள், அம் சொல் மாதரை வேறு உளரா தூயர் செயின் - அழகிய சொறகளை யுடைய மகளிரை வேறு எவரேனும் துன்பப்படுத்தினால், விலக்கி - (அவர்களை அது செய்ய வொட்டாதபடி) தடுத்து, வெம் சமத்து ஊறு உற தம உயிர் உருப்பர் - (அவர்களைத் தாம் எதிர்த்துச் செய்யும்) கொடிய போரில் (அவர்களால் தமக்கு) ஊறுபாடு உண்டாகத் தமது உயிரை யொழித்தலுஞ்செய்வர்; யான் - நானோ, எனை தேறினன்றன தூயர் தீர்க்கிற்றிலேன் - என்னையே நம்பியவ ளான ஜானகியின் துன்பத்தை நீக்கமாட்டாதவனுயிருக்கிறேன்; (எ - று.)

ஆறுடன செல்பவர் - வழியே செல்வோர்; அம்மகளிர்க்கு யாதொரு சம்பந்தமுமில்லாதவ ரென்றபடி. உடன் என்ற மூன்றனுருபு ஏழனுருபின்

பொருளில் வந்தது; உருபுமயக்கம். அஞ்சொல் - மாதர்க்கு இயற்கையடை மொழி. 'வலிசெயில்' என்ற பாடத்துக்கு - வலியக்கவர்ந்து சென்றானென்று பொருள். ஊறு - தழும்பு, தீமை, கொலை. 'உகுப்பரென்பதற் தேறினன்றயரதான் றீர்க்கிற்றிலேன்' என்ற பாடமானபோது, வழியே செல்பவர் மாதரைப் பிறர் வருத்துதலை விலக்கிப் போரசெய்யத்தொடங்கி அதில் ஊறு பாடுண்டாகத் தமது உயிரை நீப்பரென்பதையும் (சடாயு உயிர்நீத்ததனால்) நன்றாக அறிந்த யான் என் மனைவியின் துன்பத்தை ஒழிக்காமலிருக்கின்றேனென்று பொருள் காண்க. தீர்க்கிற்றிலேன்—கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை, ற் - இறந்த காலவிடைநிலை, இல் - எதிர்மறையிடைநிலை, கு அசாரியைகள். (உக)

உஉ. கருங்கடலெறிட்டனர்கங்கைதந்தனர்
பொருமும்புலிமானெடுபுனலுமூட்டினர்
பெருந்தகையென்குலத்தரசர்பின்னெரு
திருந்திழையரான்றீர்க்கிலாற்றிலேன்.

(இ - ன்.) பெருந் தகை - பெருமைக்குணத்தையுடைய, என்குலத்தர் - எனது குலத்தில் முன்பு தோன்றிய, அரசர்—, கருங்கடல் தொட்டனர்-கருநிறமான கடலைத் தோண்டினர்; கங்கை தந்தனர் - கங்கையை (மேலுலகத்திலிருந்து இவ்வுலகத்துக்கு) கொணர்ந்தனர்; பொரும் புலி மானெடு புனலும் ஊட்டினர் - போர்செய்யுமியல்புள்ள புலியையும் மானையும் (ஒருகுகையில்) நீருணவுஞ் செய்தனர்; பின் - அவர்கட்குப்பின் பிறந்தவனான - யானே, ஒரு திருந்து இழை அயரம் தீர்க்க நோற்றிலேன் - திருத்தமான ஆபரணங்களை யுடையவளாகிய என மனைவியொருத்தியின துன்பத்தை நீக்குதற்குத் தவஞ்செய்யாதவனு யிருக்கின்றேன! (எ - று.)

எனது குலத்து முனேனார்கள் கடலைத் தோண்டுதலும், கங்கையைக் கொணர்தலும் புலியும் மானும் ஒரு குகையில் நீருண்ணும்படி செய்தலுமாகிய அரியபெரிய செயல்களைச் செய்து பெருங்கீர்த்தி படைத்தற்கு வேண்டிய பாக்கிய முடையவராயிருந்தார்கள்; அப்படிப்பட்ட மகான்களுடைய பரம்பரையிற் பிறந்தவனான யானே எனது மனைவியொருத்தியின துன்பத்தை நீக்குதற்கு வேண்டிய பாக்கியமு மில்லாதவனு யிருக்கின்றேனென்று இரங்கிக் கூறினனென்பதாம்.

சூரியகுலத்துச் சகரமகாராஜன் அசுவமேதயாகஞ் செய்தபொழுது பூமிப் பிரதக்ஷிணத்திற்காகச்செலுத்தின குதிரையை,பொறாமைகொண்ட தேவேந்திரன மாயையால் ஒளித்துக்கொண்டு சென்று, பாதாளலோகத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த கபிலமுனிவர் பினனே கட்டிவைக்க, அவ்வேள்விக் குதிரையை நாடிச்சென்ற சகரபுத்திரர் அறுபதினாயிரம்பேர் பூமிமுழுவதும் தேடிக்காணாது பாதாளத்திற்குப் போதறபொருட்டுப் பெருவழியாகப் பரதகண்டத்தில வடகிழக்குப் பக்கத்தில் தோண்டிச்சென்ற பெரும்பள்ளமே பின்பு கங்கை மூதலியவற்றின் நீரினால் நிறைந்து சாகரமெனனும் பெயர்

பெற்றுக் கடலோடு கூடித் தானும் கடலினைபோற்பட்ட தென்பது கட்டுத் தோட்டகதை.

சூரியகுலத்துப் பகீரதசக்ரவர்த்தி கபிலமுனிவரது கண்ணின் கோபத் தீக்கு இலக்காகி உடலெரிந்து சாமபலாய நற்கதியிழந்த தனது மூதாதையரான சகரபுத்திரர் அறுபதினாயிரவரை நற்கதிபெறுவித்தற்பொருட்டு மேற்கு நோக்கி ஓடுகின்ற கங்காநதியை மேலுலகத்திலிருந்து கீழுலகத்திற்குக் கொணர்ந்தனனென்பது, கங்கைதோன்றிவரலாறு.

இரண்டாமடி - வலியவை எளியவற்றை வருத்தாதபடி அரசாட்சிசெய்தனனென்றவாறும். இங்ஙனம் ஆண்டவன், சூரியகுலத்து மாந்தாதாவென்னும் அரசன். இவனது அரசாட்சியில் எங்குஞ் சத்துவகுண காரியமாகிய சாந்தமே தலையெடுத்து ரஜோதமோகுண காரியங்களாகிய கொலை பகை அச்சம் முதலிய கொடுமைக் குணங்கள் உண்டாகவில்லையென்க. அரசனது கட்டளையில் தமக்கு உள்ள விசுவாசத்தால் எவையும் தமயால் வருத்தத்தகவற்றையும் வருத்தவில்லையென்று அரசாட்சி நீதிமுறைமை விளங்கும.

பெருந்தகை - குலத்திற்கு அடைமொழி; 'என' என்பதற்கு அடைமொழியாக்கினுல் தறபுகழ்ச்சியினபாற்படும் திருந்திழை வினைத்தொகையன மொழி. நோற்றிலேன - நலவினையுடைய னலலாமற்போனேன் என்றபடி. தொட்டனா, தொடு - பகுதி. ஒடு - எண்ணுப்பொருளது. (உஉ)

உங. இந்திரற்குரிய நீதாரிடுக்கண்மூ தத்திக
லந்தகற்கரியபோரவுணற்றேய்த்தனன்
மைந்தமற்றவனின்வந்துதித்தயானுளேன்
வெந்துயர்க்கொடுமபழிவில்லிமருங்கினேன்.

(இ - ள்.) எந்தை - எனது தந்தை [தசரத சகரவாததி], இந்திரற்கு உரியது ஓர் இடுக்கண் நீங்கத - தேவேந்திரனுக்கு நேர்ந்ததொரு பெருந்துன்பத்தை நீக்கி, அந்தகற்கு இகல் அரிய போர அவுணனை தேய்த்தனன - (பிராணிகளுக்கெலாம்) அழிவைச் செய்பவனென யமனுக்கும் எதிர்த்தற்கு அருமையான போர்வலிமையையுடைய சமபராசுரனை அழித்திட்டான்; அவனின் வந்து உதித்த யான - அவனிடத்தினின்று வந்து பிறந்த நானே, வெம் துயர கொடிய பழி வில்லின் தாங்கினேன உளேன - வெவ்விய தன் பத்தைத் தருகின்ற கொடிய பழியை வில்லுடனே சுமந்தவனு யிருக்கின்றேன்; (எ - று.)—மற்று - வினைமாற்று.

தண்டகாரணியத்தில் வைஜயந்தமென்ற நகரத்திலே இருந்து அரசாண்டு வந்தவனும் திமிதவசனனென்னும் மறுபெயருள்ளவனும், பற்பல மாயைகளில் தேர்ந்தவனுமான சமபரனென்ற அசுரன பல அசுரர்களையும் அரக்கர்களையும் உடன்கொண்டு சென்று தேவாகளுடன் பெரும் போர்

செய்து அவர்களைப் பலவாறு வருத்தித் தேவராசனை இந்திரனையு முட்பட வென்று அவனது பொன்னுலகத்தை அபகரித்துக்கொண்டு அரசிருந்தவிட, அங்ஙனம் அரசிழந்த தேவேந்திரன் தசரத சக்கரவர்த்தியை அடுத்துச் சரண மடைந்து தன் குறையைக்கூறித் தனக்கு உதவிசெய்யுமாறு பிரார்த்திக்க, அவனது அந்நிலையை நோக்கி இரக்கங்கொண்ட தசரதர் அவவேண்டு கோட்கு இணங்கிக் கைகேயியையும் உடனழைத்துக்கொண்டு இந்திரனுக்கு உதவியாகத் தேவாசுரயுத்தத்தில் தலையிட்டுச் சம்பரனுடன் எதிர்த்துக் கடும் போர் புரிய, அந்த உக்கிரமான யுத்தத்தை ஆற்றமாட்டாமல் அவன் மாயை யால் முறைந்து ஒட்டங்காட்டவே, அவன் சென்ற சென்ற திசைகளிலெல் லாம் தசரதர் விடாது தொடர்ந்து சென்று பொருது அவனைச் சுற்றத்துடன் கொன்று, முன்பு அவனுற் கவரப்பட்ட இந்திரனது அரசாட்சி தமக்கு உரிய தாகப் பெற்றவராய் மீண்டு உடனே அவ்வரசாட்சியை இந்திரனுக்குக் கொடுத்தருளின ரென்பது, இங்கு அறியவேண்டிய கதை.

இடக்கண் நீரத்து அவுணற்றேய்த்தணன் - அவுணற்றேய்த்து இடக்கண் ணீர்த்தனன் என விருதிபிரித்துக்கூட்டுதல் இலக்கணத்திற்கு ஏற்கும். அவ னின், ஐந்தனுருபு - நீக்கம். வெந்துயர்க்கொடும்பழி - மனைவியைக் கவர்ந்த வனை நாடிக்கொனறு மனைவியை மீட்காமையால் வந்தது. அது செய்யாத எனக்கு வில் ஒருபாரமே யென்பதும் சுற்றடியில் விளங்கும்; (உ0) "சிலை சுமந்து" என்றற்போல. 'கொடும்பழி வில்லின தாங்கினை' என்றது, புணர்நிலையணி. 'இந்திரற்குற்றதோரிடுக்கண்' எனபதும் பாடம். (உஉ)

உசை. விரும்பெழிலெந்தையார்மெய்ம்மையீயுமேல
வரும்பழியென்றலான்மகுடஞ்சூடலேன்
கரும்பழிசொல்லியைப்பகைஞன்கைக்கொளப்
பெரும்பழிசூடினேன்பிழைத்ததென்னரோ.

(இ - ள்.) விரும்பு - (யாவரும்) விரும்பத்தக்க, எழில் - அழகையுடைய, எந்தையார் - எனது தந்தையாரது, மெய்ம்மை - சத்தியம், ஈயும் எல்-தவறு மாஞல், பழி வரும - (அதனுல் எனக்குப்) பழியுண்டாகும், என்றலால் - என்று எண்ணியதனுல், மகுடம் சூடலேன் - முடிசூட்டிக் கொள்ளாமல் வன வாசம் போந்தவனை யான்,—கரும்பு அழி சொல்லியை - கருப்பஞ்சாற்றை (இனிமை மிகுதியால்) வெல்கின்ற சொற்களை யுடையவளான என்மனை வியை, பகைஞன் கைக்கொள - பகைவனுன இராவணன் வஞ்சித்துக் கவர்ந்துகொள்ள அதனுல், பெரும் பழி சூடினேன் - மிக்கபழிப்பை மேற் கொண்டேன்; பிழைத்தது என-(யான் பழியினைது) நீங்கியது எங்ஙனம்! (எ - று.)—அரோ - ஈற்றசை.

தந்தையாரின் சத்தியத்தை நிலைநிற்கச் செய்யாவிட்டால் அதனுல் வரக் கடவதான பழிக்கு அஞ்சி இராச்சிய பட்டாபிஷேகஞ்செய்து கொள்ளுதலை விட்டுத் தம்பிக்கு அரசுகொடுத்து வனவாசம்பேர்ந்த யான், அங்ஙனம் வந்த இடத்தில் மனைவியைப் பகைவன் கவர்ந்துகொள்ளும்படியான தனுற் பெரும்

பழிப்பை யடைந்தேன்; இப்படியான் பழியினின்று தம்பும்வகையில்லாதிவ னானேனே! என்று இரங்கிக் கூறியவாறும். எந்தையார்மெய்ம்மை - தசரதர் கைகேயிக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்கள். அவை தவறுமல் தசாதர் சத்தியவாதியாதற்பொருட்டே இராமன் வனவாசம்போந்தமைவெளிப்படை.

மகுடம் - வடசொல். கரும்பு - அதன்சாற்றுக்கு முதலாகுபெயர் அழி சொல் - பிறவினைவினைத்தொகை. கருப்பஞ்சாற்றை அழித்தல் தனது இனி மைமிகுதிக்கு ஒப்பாகாமையால். (உச)

[மீளவும் இராமன் மூர்ச்சிக்க, சுக்கிரீவன் தெளிவித்தல்]

உடு. எண்ணெநொந்தின்னனபன்னியீடழித்
துன்னருந்துயரத்துச்சோர்கின்றுன்றணைப்
பண்ணருங்கதிரவன்புதல்வன்பையுள்பார்த்
தன்னவெந்துயரெனுமளக்கர்நீக்கினன்.

(இ - ன்.) எண்ண - என்று, இன்னன - இத்தன்மையனவான வார்த்தை களே, நொந்து பன்னி - வருந்திக்கொண்டே சொல்லி, ஈடு அழித்து - வலி யொடுங்கி, உன் அருந் துயரத்து சோர்கின்றுன்தனை - தினைக்கவும்ஒண் ணுதல் தக்கதினுல் மூர்ச்சிக்கின்றவனன ஸ்ரீராமனை,—பன் அருங் கதி ரவன் புதல்வன - வருணித்துச்சொல்லுதற்கருமையான கிரணங்களையுடைய வனுகிய சூரியனது புத்திரனன சுக்கிரீவன,—பையுள் பார்த்து - (அவன டைந்த) துன்பத்தைப் பார்த்து, அனை வெம் துயா எனும் அளக்கர் நீக்கி னன் - அந்தக்கொடியதுன்பமென்கிற கடலினின்று நீங்கிக் கரையேறச் செய்தான்; (எ - று.)

அன்ன வெந்துயர் - மூர்ச்சை. அதனினின்று நீக்குதல் - தெளிவித்தல். ஈடழிதல் - மனேபலமும் தேகபலமும் ஒழிதல் பனைரு - கொருங்குதற் கரு மையான எனினுமாம். அளக்கர் - அளக்க அரியது. ஈற்றடி - உருவகவணி. 'பண்ணியேங்கியே' என்ற பாடத்திற்கு - இரண்டாமடியில் தனைரு எனக் கொண்டு, சேரத்தகாத எனப் பொருள்கொள்ளலாம்; அது மோனேநயம் நிறக்கும். (உடு)

[இதுமுதல் எட்டுக்கவிகள் - தளகம்: இக்கவி, இராமபிரான் வார்த்தை.]

உசு. ஐயநீயாற்றலினைற்றினனல
துய்வனேயெனக்கிதினுறதிலேறுண்டோ
வையகத்திப்பழிதீரமாய்வது
செய்வனின்குறைமுடித்தன்றிச்செய்கிலேன்.

(இ - ன்.) ஐய - அன்பனே! நீ ஆற்றலின் - நீ (என்னைத்) தேற்றிய தனல், ஆற்றினேன் அலது - (எனது தன்பத்தை ஒருவாறு) தணித்துக் கொண்டேனேயல்லாமல், உய்வனே - யான்பிழைக்கக்கடவேனே? எனக்கு இதின் உறுதி வேறு உண்டோ - எனக்கு மரணத்தைக்காட்டிலும் நல்லது

வேறுஉண்டோ? [இல்லை யென்றபடி]; வையகத்து இ பழி தீர மாய்வது செய்வன் - இவ்வுலகத்தப்பரவுகின்ற இப்பழிப்பு ஒழியும்படி இறத்தலைச் செய்வேன்; (ஆனால்), நினகுறை முடித்தலன்றி செய்கலேன் - உனது குறையை நிறைவேற்றியல்லாமல் அது செய்யமாட்டேன்; (எ - று.)

யான் மரணமடைவது என்னளவில் இனியதேயானாலும் உயிர்நண்ப னை உனக்கு வாக்குதத்தஞ்செய்தபடி உன்மனைவியைக் கவர்ந்தவனைக் கொன்று உன் மனைவியை மீட்டு உனக்குக் கொடுத்தல்லாமல் மரணமடை யற்பாலேனல்லே னென்றன னென்க ஏகாரமும், ஓகாரமும் - எதிர்மறை. 'எனக்கு இதின் உறுதி வேறுண்டோ' என்பதறகு - எனக்கு நீ செய்த உதவியைக் காட்டிலுஞ் சிறந்தது வேறொன்று உண்டோ வென்று உரைப் பாரு முளர். (உசு)

[அச்சமயத்தில் அநுமான் சொன்ன வார்த்தைகள் இதுமுதல் ஏழகவிகளிற் கூறுகின்றார்.]

உள. என்றனனிராகவனினியகாலையில்
வன்றிறன்மாருதிவணங்கிஞனெடுங்
குன்றிவர்தோளினுய்கூறவேண்டுவ
தொன்றுளதனினீயுணர்ந்துகேளெனு.

(இ - ன்.) என்றனன் இராகவன் - என்று கூறினன் இராமபிரான்: இனிய காலையில் - இந்தச்சமயத்தில்,—வல் திறல் மாருதி - மிக்கவலிமையை யுடைய வாயுகுமாரனை அநுமான், வணங்கினன் - (இராமபிரானைத்) தொ ழுது,—'நெடுங் குன்று இவர் தோளினுய் - பெரியமலையையொத்த தோள் களையுடையவனே! கூறவேண்டுவது ஒன்று உளது - (நான்) சொல்லவேண் டுவது ஒன்று உண்டு: அதனை நீ உணர்ந்து கேள் - அதனை நீ திருவுளம்வைத் துக் கேட்பாயாக,' எனு - என்று சொல்லி,—(எ-று.)—'என நிகழ்ந்தினன்' என மேல் கூ-ஆம் செய்யுளோடு தொடர்ந்து முடியும்.

ராகவன் - வடசொல்; ரகுவெனனும் அரசனது குலத்தில் அவதரித்த வன்; ததிதாந்தநாமம். வல் திறல் - ஒருபொருட்பன்மொழி; (பகைவர்க் குக்) கொடிய வலிமை யெனினுமாம். இவர்தல்-விரும்புதல்; பொருந்துதல்; இங்கு, இது, உவமவாசகமாய் நின்றது. உணர்ந்து கேள் - கேட்டுஉணர் என விருதிபிரித்துக்கூட்டுதல் நலம். (உஎ)

உஅ. கொடுநெதொழில்வாலியைக்கொன்றுசுகாமகன்
கடுங்கதிரோன்மகனுக்கிக்கைவளர்
செடும்படைகூட்டினலன்றிசேடரி
தடும்படையரக்கர்தமிருக்கையாணையாய்.

(இ - ன்.) ஆணையாய் - ஆஜ்ஞை எங்குஞ்செல்லத்தக்கவனே!—கொடுந் தொழில் வாலியை கொன்று-கொடியதொழிலையுடைய வாலியை (முதலில்)

வதைத்து, கடும் கதிரோன் மகன் கோமகன் ஆக்கி - கீஷ்ணமான கிரணங்களே யுடையவனுகிய சூரியனது குமாரனுன சுக்கிரீவனே (வாகரங்களுக்கு) அரசனுகச்செய்து, கை வளர் நெடும் படை கூட்டிஞல் அன்றி - செழித்து வளர்ந்துள்ள பெரிய (வாகர) சேனையைச் சேர்த்தாலல்லாமல், அம்பு படை அரக்கர்தம் இருக்கை நேடி அரிது - கொல்லும் ஆயுதங்களேயுடைய இராக்கதர்களது இருப்பிடம் தேடியுணர்தற்கு அரியது; (எ - று.)

கோமகன் - தலேவனுன புருஷன். 'கைவளர்' என்றவிடத்து, கை - தமிழுபசர்க்கம்; எல்லாப்பக்கங்களிலும் மிகுதியாய்ப்பொருந்திய என்றும், கை போல உரியசமயங்களில் உதவும் தன்மை மிக்க வென்றும் கொள்ளலாம். ஆணை - ஆஜ்ஞா என்ற வடசொல்லின் திதைவு. அதனேயுடையவனேயென்பார், 'ஆணேயாய்' என்றூர். எங்கட்கெல்லாம் கட்டளேகூறத்தக்க தலேவனே! என்றவாறுமாம். மூன்றுமடியில், படை - சேனை; நான்காமடியில் படை - ஆயுதம். 'ஆணேயால்' என்ற பாடத்துக்கு - நமது கட்டளேப்படி தேடுதலரியது என்னலாம். 'அரக்கனதிருக்கை' என்பதும் பாடம். (உஅ)

உக. வானதோ மண்ணதோ மற்றுவெற்பதோ
வேணமாகர்தமிருக்கைப்பாலதோ
தேனுலாந்தெரியலாய்தெளிவதன்றுகா
மூனுடைமானிடமானதுண்மையால்.

(இ - ள்.) தேன் உலாம் தெரியலாய் - வண்டுகள் வந்து மொய்க்கும் மலர்மாலேயை யணிதற்கு உரியவனே!—(இராவணன் முதலிய அரக்கர்களின் இருப்பிடம்), மண்ணதோ - தரையிலுள்ளதோ? மற்று—, வெற்பதோ-மலேகளின் மேலுள்ளதோ? வானதோ - (அன்றி) வானத்திலுள்ளதோ? ஏனமாகர்தம் இருக்கை பாலதோ - இவற்றினும் வேருன பெரிய நாகலோகத்திலுள்ளதோ? நாம—, ஊன் உடை மானிடம் ஆனது உண்மையால் - குறைபாடுடைய மனிதப்பிறப்பின்பாற் பட்டிருத்தலால், தெளிவது அன்று - (இன்னவிடத்ததென்று) எளிதில் அறியக்கூடியதன்று; (எ - று.)

மற்று - வினேமாற்று. ஏனை - மற்றை. நாகர்தமிருக்கை - சர்ப்பசாதியார் வசிக்குமிடம்; நிழலகம். தேன்உலாம் - (மலர்களில்) தேன்தானும்பப்பெற்ற எனினுமாம். ஊன், மானிடம் - ஊநம், மாநுஷம் என்ற வடசொற்களின் விகாரம். மநுஷ்யசாதிக்குக் குறைபாடு, தேவர்கள்போல இருந்தவிடத்திலிருந்தபடியே புத்திவிசேஷத்தால் எல்லா லுலகங்களின் செய்தியையும் அறியமாட்டாமை; ஸாமாந்யநியாயம்பற்றி, இந்த அடைமொழி மனிதசாதிக்குக் கொடுக்கப்பட்டது. இனி, ஊனம் - ஆகாசகமநத்தால் எங்குஞ் செல்ல மாட்டாமையுமாம். அநுமான் முதலியோர் முகத்திலும் வாலிலும் வாகரம் போலினும் மற்றைப்படி மனிதர்போன்ற வடிவமுடைய ராதலால், 'நாம் மானிடமான தண்மையால்' என்று அநுமான் கூறினன். (உக)

கூ0. எவ்வுலகங்களுமிமைப்பினெய்துவர்
வவ்வுவரவ்வழிமகிழ்ந்தயாவையும்
வெவ்வினைவந்தெனவருவர்மீள்வரா
லவ்வவருறைவிடமறியற்பாலதோ.

(இ - ள்.) (அந்த ராக்ஷஸர்களோ), இமைப்பின் ஏ உலகங்களும் எய்துவர் - ஒரு மாத்திரைப் பொழுதிலே எல்லாவுலகங்களிலும் போய்ச்சேருவார்கள்; அ வழி மகிழ்ந்த யாவையும் வவ்வுவர் - அந்த இடங்களில் தாம் விரும்பிய பொருள்களெல்லாவற்றையும் கவர்ந்து கொள்வார்கள்; (இங்ஙனம் எல்லாவிடத்தும்), வெவ வினை வந்து என வருவர் மீள்வர் - (அவ்வவ்வுயிர்கள் செய்த) கொடிய கருமம் (தடுக்கமுடியாமலும் எதிர்பாராமலும் திடீரென்று ப்யனூட்ட) வந்தாற்போல வருவார்கள் (அவ்வினை பயனூட்டியவுடன் தொலைவதுபோல அங்கங்கு விரும்பிய பொருள்களைக் கவர்ந்து கொண்டவுடன்) திரும்பிச் செல்வார்கள்; ஆல் - ஆதலால், அ அவர் உறைவு இடம் அறியல் பாலதோ - அத்தன்மையையுடைய அவ்வரக்கர்கள் வசிக்குமிடம் எளிதில் அறியத்தக்கதாமோ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

இமைப்பு - இயல்பாகக் கண்ணிமைக்கும் பொழுது. ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். (கூ0)

கூக. ஒருமுறையேபரந்துலகம்யாவையுந்
திருமகளுறைவிடந்தேரவேண்டுமால்
வரன்முறைநாடிடவரம்பின்ரூலல
கருமையுண்டளப்பருமாண்டுவேண்டுமால்.

(இ - ள்.) ஒரு முறையே-ஒரேசமயத்திலே, உலகம்யாவையும் பரந்து - உலகங்களெல்லாவற்றிலுஞ் சென்றுபார்வி, திருமகள் உறைவு இடம் தேர வேண்டும்-சீதாபிராட்டியிருக்கின்ற இடத்தைத் தேடியறியவேண்டும்; (அங்ஙனமன்றி), வரல்முறை நாடிட - வரிசைக்கிரமமாய் [ஓரிடத்தின் பின் மற்றோரிடமாக]த் தேடுதலில், உலகு வரம்பு இன்று ஆல் அருமை உண்டு - உலகம் வரையறையில்லாதபடி பரந்து கிடத்தலால் சிரமமுண்டு; (அன்றியும் அவ்வாறு தேடுதற்கு), அளப்பு அரும் ஆண்டு வேண்டும் - அளவிடுதற்கரு மையான [மிகப்பலவான] வருடங்கள் செல்லும்; (எ - று.)

அரக்கர்கள் கணப்பொழுதில் எவ்வுலகத்திலுஞ் சென்று விரும்பிய பொருளைக் கவர்ந்து மீளத்தக்க ராதலால், எக்காலத்திலே வானரர்களெல்லாரும் வெவ்வேறாக உலகமுழுவதும் பரந்துசென்று பிராட்டியிருக்குமிடத்தைத் தேடியறிய வேண்டும்; அங்ஙனமன்றி, இரண்டொருவர் புறப்பட்டு ஓரிடத்தின பின் மற்றோரிடமாக முறையே தேடுவதென்றால் உலகம் அதிவிஸ்தீர்ண மாதலால் அருமையாகும்; மேலும் அதற்கு அநேக வருஷங்கள் சென்றுபோம் என்பதாம். 'உலகு வரம்பின்ரூல் அருமையுண்டு' என்றது, நாம் ஓரிடத்திற் தேடுகையில் அவர் மற்றோரிடத்திலிருக்கவும், பின்

னர் நாம் அந்த இடத்திற்போய்த் தேடுகையில் முன்பு நாம் தேடியான இட்த்தில் அவர் வந்து சேர்ந்திருக்கவும் கூடுமாதலால் காரியம் சித்திபெறுதென்ற கருத்தைக் கொண்டது. 'ஆல்' மூன்றனுள் - முன்னதும், 'பின்னதும் - அசை ; மற்றையது - ஆதலால் எனபதன் விகாரம். (கூக)

கூஉ. எழுபத்தாகியவெள்ளத்தெம்படை
பூழியிற்கடலெனவுலகம்போர்க்குமா
லாழியைக்குடிப்பினுமயன்செயண்டத்தைக்
கீழ்மடுத்தெடுப்பினுங்கிடைத்தசெய்யுமால்.

(இ - ள்.) எழுபத்து ஆகிய வெள்ளத்து எம் படை - எழுபது வெள்ள மென்னுந் தொகையையுடைய எமது [வாகர] சேனை, ஊழியில் கடல் என உலகம் போர்க்கும் - கற்பாந்த காலத்துப் பொங்குங் கடல்போல (உலக முழுவதும்) பாந்து மூடவல்லது ; (மற்றும் அது), ஆழியை குடிப்பினும் - கடலைக் குடிக்க வேண்டுமெனறாலும், அயன் செய் அண்டத்தை கீழ் மடுத்து எடுப்பினும் - பிரமாண்டத்தைக கீழேபிடித்து எடுகவேண்டுமென்றாலும், கிடைத்த செய்யும் - (அங்ஙனம் தமகரு) கோர்ந்த கட்டளைகளைத் தவறாது செய்யமாட்டும் ; (எ - று.)—'ஆல்' இரண்டும் - அசை.

எம்படை - எம்மவர்கூட்டம். அயனசெய் அண்டம் - பிரமன பிராணிகளைப் படைத்தற்கு இடமான அண்டம. கிடைத்த - பெயர். மடுத்தல் - கொள்ளல். இந்த எழுபது வெளளம வாகரசேனையும் நமது கட்டளைக்கு உள்ளாகி எகாலத்தில உலகமுழுவதுஞ்சென்று பிராட்டியைத் தேடும்படி செய்தல் வேண்டு மென்றறகு இது கூறப்பட்டது. (உக)

[அநுமான் சேன்னதை ஸ்ராமன் அங்கீகரிக்க, அனைவரும்
வாலியிருக்குமிடத்தை நோக்கிப் புறப்படுதல்.]

கூக. ஆதலா லன்னதே யமைவ தாமென
நீதியாய் நினைந்தனை னெனநி கழ்த்தினுன்
சாதுவா மெனறவத் தனுவின் செல்வனும்
போதுநாம் வாலிபா லென்னப் போயினர்.

(இ - ள.) ஆதலால்—, நீதியாய் - நீதிநெறியை யுடையவனே ! அன்னதே அமைவது ஆம் என நினைந்தனென் - முனபு வாலியைக்கொன்று பிராட்டியைத் தேடுவதே தக்கதாமென்று எண்ணுகின்றேன, என நிகழ்த்தினுன் - என்று (அநுமான) கூறினுன் ; சாது ஆம என்ற அ தனுவின் செல்வனும் - சாந்தகுண முடையவனென்று பிரசித்தனை அந்த வில்வீரனுகிய ஸ்ரீராமனும், நாம் வாலிபால் போதும் என்ன - '(ஆனல்) நாம் (இப்பொழுது) வாலியினிடத்திற்குச் செல்வோம்' எனறு சொல்ல, போயினர் - (சுக்கிரீவனும் அவன் மந்திரிகளாகிய நால்வரும் இராமலக்குமணரும் புறப்பட்டு அவ்விடத்தைக் குறித்துச்) செல்லலானார்கள் ; (எ - று.)—சுக்கிரீவன் மந்திரிகள் நால்வர் - அநுமான், தாரன், நளன, நீலன என்பவர்.

ழேழ் (உ அ) - ஆ கவியிற் கூறியது, இக்கவியில் 'அன்னது' எனச் சுட்டப்பட்டது. ஸாது, தமஸ் - வடசொற்கள். சாது - சற்குணமுடையோன். சாது ஆம் எனற - (அநுமான் வார்த்தையை) நல்லதென்று உடன்பட்ட எனறுமாம்; ஸாது - அங்கிகாரத்தை யுணர்த்தும வடசொல். தனுவின் செல்வன - வில்லினல்வரும் மேன்மையை யுடையவன. போதும் - தன்மைப் பன்மைமுற்று. முதலடி - முற்றுமோனை. (கூ)

வே று.

[அவர்கள் மலைச்சாரல்வழியே செல்லுதல்.]

கூச. வெங்க ணளி யேறு மீளி மாவும் வேக நாகமுஞ்
சிங்க வேறி ரண்டொ டுந்தி ரண்ட வன்ன செய்கையார்
தங்கு சால மூல மார்த மால மேலம் வாழைமாப்
பொங்கு நாக முந்து வன்று சார லூடு போயினர்.

(இ - ள்.) வெம் கண் ஆளி ஏறும் - அச்சந்தருகின்ற கண்களையுடைய ஆண்யாளி யொனறும், மீளி மா (இரண்டு) உம் - பராக்கிரமத்தையுடைய புலிகளிரண்டும், வேகம் நாகம் (இரண்டு) உம் - கடைவிரவையுடைய யானைகளிரண்டும், சிங்கம் ஏறு இரண்டொடும் திரண்ட அனன - இரண்டு ஆண் சிங்கங்களுடனே கூடிச் சென்றனபோனற, செய்கையார் - தன்மையை யுடையவர்களாய், (சுகரீவனும் அவன் மந்திரிகள் நால்வரும் இராமலக்ஷ்மணர்களும்),—தங்கு சாலம் - நிலைபெற்ற ஆச்சாமரங்களும், மூலம் ஆர் தமாலம் - வேருனறிய பச்சிலைமரங்களும் எலம் - எலமரங்களும், வாழை - வாழைமரங்களும, மா - மாமரங்களும், பொங்கு நாகமும் - செழித்து வளர்கினற சுரபுனனைமரங்களும், இவன்று - நெருங்கிய, சாரலூடு - மலைச்சாரல்களின வழியாக, போயினர் - செல்லலானார்கள: (எ - று.)

'சிங்கவேறு' எனபதை அடுத்துள்ள 'இரண்டு' என்ற சொல், 'மா' எனறதனோடும், 'நாகம்' என்றதனோடும் கூட்டப்பட்டது, தகுதிபற்றி. ஆளி யேறு - சுகரீவனுக்கும், புலியிரண்டு - அவன் மந்திரிகள நால்வருள் நனனீலன எனபவர்க்கும், யானையிரண்டு - அநுமான் தாரன் எனபவர்க்கும், சிங்கவேறிரண்டு - இராமலக்ஷ்மணர்க்கும் உவமையெனக காண்க. ஏறு - ஆண்மைப் பெயர். ஆளி - யாளியென்பதன் மரூஉ; யாளி சிங்கம்போல்வ தும் துதிக்கையுடையது மரபியதொரு மிருக விசேஷம். பல பராக்கிரமங்களின் மிருதிபற்றி, யாளி முதலியன ஒப்பாம். மிருகராஜனுடைய சிங்க உவமை, சக்கரவாததி திருகுமாரர்களுக்கு ஏற்றது; பிறவும் இங்ஙனங் காண்க; அரிய பெரிய மலைகளிலே சிரமமினறி அலக்ஷ்யமாக ஏறியும் இறங்கியும் கம்பீரமாகச் செல்லுதற்கும் இவ்விலங்குகள் ஒப்பாகத்தக்கன. திரண்ட பெயர். நாகமும் எனற உம்மை - செவவெண்ணின் ஈற்றதாகிய எச்ச வும்மை. வேகநாகம், விம்ஹம், ஸாலம், மூலம், தமாலம், எலம், நாகம் - வடசொறகள். நாகம் - வேறேயொருவகை மாமுமாம். மூலம் ஆர் - அடி பருத்த என்றும், நிலைமைபெற்ற என்றும் உரைக்கலாம். சார்ந்துள்ளது சார

லென மலைப்பக்கத்துக்குக் காரணக்குறி. 'தமாலமேலமாலேபோற் பொங்குநாகம்,' 'தமால மேகமாலேபோற் பொங்குநாகம்,' 'தமால மேலமாலுடன் பொங்குநாகம்' என்பன - பாடபேதங்கள்.

இக்கவிமுதலாகவே வாலிவதைப்படலமென்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - பெருமபாலும் ஈற்றுச்சீரொன்று வீளச்சீரும் மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நானகுகொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள்; இவற்றைச் சந்தவிருத்த மென்றலு முண்டு: இனி, இவற்றை முதலாறு சீர்களையும் மூனறு பெருஞ்சீர்களாகப் பிரித்துக் கலிவிருத்தமென்றல் ஒருசாரார் கொள்கை. (கூசு)

[இதுமுதல் ஏழுகவிகள் - அம்மலைவழியின் வருணனை.]

கூடு. உழையுலாநெடுங்கண்மாதரூசலூசலல்லமேவ
தழையுலாவுசந்தலர்ந்தசாரல்சாரலல்லமேவ
மழையுலாவுமுன்றிலில்லமன்றனூறுசண்பகக்
குழையுலாவுசோலைசோலையல்லபொன்செய்குன்றமே.

(இ - ள்.) (அந்தவழி யெல்லாம்),—உழை உலாம் நெடுங் கண் மாதர் ஊசல் - மானபாலை போன்ற (நோக்கமுளை) நீண்ட கண்களையுடைய வானரமகளிர் ஆடும் ஊஞ்சல்களும்,—ஊசல் அல்லவே - அந்த ஊஞ்சல்களல்லாத இடங்களிலே, தழை உலாவு சந்து அலர்ந்த சாரல் - தழைகள் காற்றினாலசைந்தாடப்பெறற சந்தனமரங்கள மலர்ந்த மலைச்சாரல்களும்,—சாரல் அல்லவே - அச்சாரல்களல்லாத இடங்களிலே, மழை உலாவு முன்றில் - மேகங்கள் சஞ்சரிக்கப்பெற்ற (மலைகளின) முன்னிடங்களும்,—அல்ல - அவையல்லாத இடங்களில், மன்றல் நாறு குழை உலாவு சண்பகம் சோலை - வாசனை வீசுவனவும் தளிர்வினங்குவனவுமான சண்பக மரங்களினுலாகிய சோலைகளும்,—சோலை அல்ல - அச்சோலைகளல்லாத இடங்களில், பொன் செய் குன்றமே - பொன்னே உறபதஞ்செய்கினற சிறுமலைகளுமேயா யிருந்தன; (எ - று.)

உலாம் - உலாவும் எனபதன்விகாரம்; இது, உலமவாசகமாய் நின்றது. உழை - மான்; ஆகுபெயராய் அதன நோக்கினை யுணர்த்திற்று. இனி, உழை உலாம் - நோக்கத்தாற் பக்கங்களில் உலாவுகின்ற என றலுமாம். முன்றில் = இல்முன்; இலக்கணப்போலி; வீட்டின்முன்னிடம்; இங்குமுன்னிடமென்ற மாத்திரமாயிற்று. சண்பகம் - சம்பக மென்ற வடசொல்லின் விகாரம். பொன்செய்குன்றம் - பொன்உண்டாகப்பெற்ற குன்றுகள்; பொன்மயமான குன்றுக ளென்றும், வினோயாட்டின்பொருட்டுப் பொன்னு லியற்றப்பட்ட செய்குன்றுகள் - [செயற்கைமலைகள்] என்றும், அழகுசெய்கின்ற குன்றுக ளென்றும் உரைப்பினும் அமையும். ஊசல், ஊசலல்ல சாரல், சாரலல்ல முன்றில், அவையல்ல சோலை, சோலையல்ல குனறம் எனத் தொடர்ச்சிப்

படித்திச்சொன்னது, ஓர்மைமணிமாலையணி; இதனை வடநூலார் எகாவளி யலங்கார மென்பர். பினபினஞக வருவனவற்றிற்கு முனமுன்ஞக வந்த வற்றை விசேஷ்யங்களாகவேனும விசேஷணங்களாகவேனுஞ் சொல்லுதல், இதன் இலக்கணம். இங்கு விசேஷணமாகக் கூறியது, "நென்மலை யல்லன நிறைவருதாரம், சொனமலையல்லன தொடுகடலமிர்தம், நன்மலை யல்லன நிதிதருநிதியம், பொன்மலையல்லன மணிபடு புளினம்" என்ற பரலகாண்டச் செய்யுளும் இவ்வாய்பாடமைந்ததாதல் காண்க. (கூஇ)

கூசு. அறங்கணாறுமேனியாரிக்கணங்களோடுமங்
கிறங்குபோதுமேறுபோதுமீறிலாதவோதையாற்
கறங்குவார்கழற்கலன்கலிப்பமூநுகண்முகிழ்த்
துறங்குமேகநன்குணர்ந்துமாகமீதுலாவுமே.

(இ - ள்.) அறங்கள் நாறும் மேனியார் - தருமங்களவீளங்குந் திருமேனி யையுடையவர்களான இராமலக்ஷ்மணர்கள், அரி கணங்களோடும் - வாநர வீரர்களுடைய கூட்டங்களுடனே, அங்கு - அம்மலைச்சாரல்வழியில், இறங்கு போதும் ஏறு போதும் - இறஙகுகின்றபொழுதும் ஏறுகின்றபொழுதும, கறங்கு வார் கழல் கலன் - (அவர்கள் காலிலணிந்துளள) ஒலிக்குமியலபை யுடைய நீண்ட வீரக்கழலாகிய ஆபரணம், ஈறு இலாத ஓதையால் கலிப்ப - எல்லையில்லாத ஓசையுடனே ஒலிததலால், மூந்து கண்முகிழ்த்து உறங்கும் மேகம் - முனபு (அம்மலைகளிற்) கண்மூடியுறங்கிக கொண்டிருந்த மேகஙகள், நனகு உணர்ந்து - நனறாகத தூக்கந்தெளிந்து, மாகம்மீது உலாவும் - பெரிய வானத்திற் சஞ்சரிக்கும; (எ - று.)

மலைச்சாரல்களிற் படிந்து கிடக்கின்ற மேகங்கள அங்கு இவர்கள் விசைபட நடந்துவருதலாற் சிதறுவனவாயின; இவாகள் இறஙகியும் ஏறியும் நடக்கின்றபொழுது இவர்கள காலணிகன ஒலிதது ஆரவாரிக்கின்றன ; இவ லியல்புகளைக்கொண்டு, இவவாறு உதபிரேக்ஷிததா ; தம்குறிப்பேற்றவணி. இராமலக்ஷ்மணர்களுடைய தோறறததைக் காணும் பொழுதே அவர்கள் தருமகுணமுள்ளவாகளெனபது நன்கு விளங்கும்படியிருத்தலால், 'அறங்கள் நாறுமேனியார்" என்றார். 'அரிக்கணங்கள்' எனபது, கீழ்க்கூறிய ஐந்து வாக ரர்களை. கணம, மேகம் · வடசொறகள். கழற்கலன் - இருபெயரொட் டுப் பண்புத்தொகை. (கூஈ)

கூஎ. நீடுநாகமூடுமேகமோடநீருமோடநே
ராடுநாகமோட மானையானையோடவாளிபோ
மாடுநாகநீடுசாரல்வாளையோடும்வாவியு
டோடுநாகமோட வேங்கையோடும்யூகமோடுமே.

(இ - ள்.) (இவர்கள் விசைபட வரும்போது), மேகம் நீடு நாகமூடு நீட - (கீழ்க்கூறியபடி) மேகங்கள் (சிதறியெழுந்து) உயர்ந்த வானத்திலே ஓடாகிற்க, நீரும் ஓட - (அங்ஙனஞ் சிதறும் மேகங்களினின்று) நீரும் வழிந்

தோட,—மாடு நாகம் நீடு சாரல் - பக்கங்களிற் சுரபுன்னைமரங்கள் செழித்து வளரப்பெற்ற அம்மலைச்சாரல்களில், (இவர்கள் வரும் வீசையால் அஞ்சி), கோ ஆடு நாகம் ஓட - எழுந்து படமெடுத்தாடு மியல்புள்ள பாம்புகள் ஓடிப் போக, மானம் யானை ஓட - தனியாக்கோபமுடைய யானைகள் ஓட, ஆளி போம் - சிங்கங்களும் (அவற்றினூடனே) செல்லும்; வாலியூடு வாளையோடும் ஓடு நாகம் ஓட-சுனைகளிலே வாளைமீன்களுடனே ஓடுமியல்புள்ள நீர்ப்பாம்பு களும் அஞ்சிவிலக, வேங்கையோடும் யூகம் ஓடும் - புலிகளுடனே கருங் குரங்குகளும் (அச்சத்தால்) ஓடுவனவாயின; (எ - று)

'நாகம்' என்பது-ஆகாயம், பாம்பு, சுரபுன்னைமரம் முதலிய பல பொருள் குறிக்கும் ஒருபெயர்த்திரிசொல். முதலடியில் 'நீடுநாகம்' என்றதனால் வானமெனபதும், இரண்டாமடியில் 'ஆடுநாகம்' என்றதனால் பாம்பென் பதும், மூன்றாமடியில் 'நாகநீடு' என்றதனால் மரமென்பதும், நான்காமடியில் 'வாலியூடோடுநாகம்' என்றதனால் நீர்ப்பாம்பென்பதும் விளங்கின. இவற் றிற்கு வேறுசுடினும் பொருத்தமாயிற் கொள்க. அச்சத்தால் தடுமாறியோடு மிடத்து, தம்மிற்பகையுடையனவும் ஒருங்குசேரலாகும். மேகங்கள் நீர் சொரிந்துகொண்டு ஓடுதலையும் அச்சத்தாலான்தாகக் குறித்தார். (ஈஎ)

ஈஅ. மருண்டமாமலைத்தடங்கள்செல்லலாவவல்லமா
றெருண்டிலாமதத்தயானைசீறிநின்றுசிந்தலா
லிருண்டகாழகிற்றடத்தொடிற்றுவீழ்ந்தசந்துவந்
திருண்டபோதழிந்தநீதனெழுக்குபேரிழுக்கினே.

(இ - ள்.) தடத்தி - மலைப்பக்கங்களிலே, மால் தெருண்டிலா மதத்த யானை - மயக்கந்தெளிந்திலாத மதத்தையுடைய யானைகள், சீறி நின்று - கோபங்கொண்டுநின்று, சிந்தலால் - தாக்குதலினால், இற்று வீழ்ந்த - முறிந்து விழுந்த, இருண்ட காழ் அகில் ஒடு - கருநிறங்கொண்ட வயிரம்பற்றிய அகில்மரங்களுடனே, சந்து - சந்தன மரங்களும், வந்து உருண்டபோது - உருண்டுவந்தபோது, அழிந்த (அவைபடுதலாற்) சிதைந்த, தேன் - தேன் கூடுகளிலுள்ள தேன, ஒழுக்கு - ஒழுகுதலினாலாகிய, பேர் இழுக்கின் - மிக்க வழுக்கலினால்,—மருண்ட மா மலை தடங்கள் செல்லல் ஆவ அல்ல - (அனைவரும்) மருளும்படியான பெரியஅம்மலைகளின்வழிகள் எளிதில்நடந்து செல்லத்தக்கன வல்லவாயிருந்தன; (எ - று.)

மயக்கந்தெளியாத மதயானைகள் சீற்றங்கொண்டு மோதுதலால் முறிந்து விழுந்த அகில்மரங்களும் சந்தனமரங்களும் உருளும்போது அம்மரங்கள் படுத லால் அம்மலைகளிற்கட்டியுள்ள தேனிறால்கள் சிதைய அவற்றினின்று வழி கின்ற தேன்பெருக்கினால் அம்மலைகளின் வழிகள் வழுக்குடையனவாகி நடந்து செல்வார்க்குக் கால்சறுக்குதலால் எளிதிற் செல்லவொண்ணாதபடி யிருந்தன என்பதாம்

''குறவரும்மருளுங்குன்றம்'' என்றபடி பலர்க்கும்அச்சம் விளைத்தலால், 'மருண்டமாமலை' எனப்பட்டது. மருண்ட - மருளுதற்குக் காரணமான

எனப் பெயரெச்சம் காரியப்பொருளது; 'நோய்தீர்ந்த மருந்து' என்ற விடத்துப் போல. ஆல் - பெயர், அல்ல - முற்று 'தடத்தொடு' என்பதிலுள்ள 'ஒடு' உருபு, பிரித்து 'அதில்' என்பதனோடு கூட்டப்பட்டது ஒழுக்கு - ஒழுகு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'ஒழுக்கு பேரிழுக்கு' என இயல்பானது, சேய்யுளோசை நயம்பற்றி; இன் - எது. (கூஅ)

கூகூ. மினன்மணிக்குலந்துவன்றிவில்லலர்ந்துகிண்குலா
யனல்பரப்பவொப்பமீதிமைப்பவந்தவிப்பபோற்
புனல்பரப்பவொப்பிருந்தபொன்பரப்புமென்பவா
லினைவியற்றடக்கைவீரரேகுகின்றகுன்றமே.

(இ - ள்.) மினல் மணி குலம் - மின்னுதலையுடைய (பதுமராக) இரத்தினக்களின் கூட்டம், துவன்றி - நிறைந்து, வில் அலர்ந்த - ஒளியினாற் பரவி, விண் குலாய் - ஆகாயமளவும் விளங்கி, அனல் பரப்ப ஒப்ப மீதி இமைப்ப - நெருப்புப்பரவுவனபோல அம்மலைகளின்மேற் பிரகாசிக்க,—வில் தட கை இனைய வீரர் ஏகுகின்ற குன்றம் - வில்லையேந்திய பெரிய கையையுடைய இத்தவீரர் [இராமலக்ஷ்மணர்] செல்லுகின்ற அம்மலைகள், வந்து அவிப்ப போல் - மிசைந்துவந்து (அந்நெருப்பை) அவிப்பனபோல, புனல் பரப்ப ஒப்பு இருந்த பொன் பரப்பும் - நீர் பரவுவனபோ லிருந்த பொன்னி னொளியைப் பரவச்செய்யும், என்ப - என்ற (தெரிந்தகவிகள்) வருணிப்பார் கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை. 'என்ப' என்பதையும் அசை யென்னலாம்.

அம்மலைகளிற் பதுமராக ரத்தினங்கள் நெருப்புப்போல ஒளிவீச அந் நெருப்பையவிக்கும் நீர்ப்பெருக்குப்போலப் பொன்னொளி வீசுமென்பது கருத்து.

மினல் - மின்னல்: தொகுத்தல். மணி - இங்கே, செம்மணி; பதுமராகம், மாணிக்கம். குலாய், குலாவு - பகுதி: ஈறுதொக்கது. பரப்ப, அவிப்ப - பல வின்பாற் பெயர்கள். இமைப்ப - செயவெனெச்சம். (கூக)

சஅ மருவியாடும்வாவிதோறும்வானயாறுபாயும்வந்
திருவியார்தடங்கண்மீனினேறுபாயுமாறுபோ
லருவிபாயுமொன்றினொன்றினினபாயுமேனலிற்
குருவிபாயுமோடிமந்திகோடுபாயுமாடெலாம்.

(இ - ள்.) மாடு எலாம் - அம்மலையிடங்களி லெல்லாம்,—மருவி ஆடும் வாவிதோறும் - விரும்பி நீராடத்தக்க எல்லாச் சுனைகளிலும், வான யாறு வந்து பாயும் - ஆகாசகங்காநதி வந்துபாயும்; ஆர் தடங்கள் மீனின் ஏற - நீர் நிரம்பிய சுனைகளிலுள்ள ஆண்மீன்கள், இருவி பாயும் - (புனங்களிலுள்ள) தினைத்தான்களினமேற் பாயும்; அருவி ஆறு போல் பாயும் - நீரருவிகள் நதிகள்போலப் பெருகும்; ஆனை ஒன்றின் ஒன்றின் பாயும் - யானைகள் ஒன்றன்மேல் ஒன்று பாயும்; குருவி எனலில் பாயும் - குருவிகள் தினைக்கதிர்

களிற் பாயும்; மந்தி ஓடி கோடு பாயும் - பெண் குரங்குகள் விளைந்து மரக் கிளைகளின் மேற் பாயும்; (எ - று.)

அம்மலைகளின் பலவகைவளங்களை இதனாற் கூறுகின்றார். அம்மலைகளி லுள்ள வீரும்பிரோடத்தக்க நீர்நிலைகளில் ஆகாசகங்காநதி வந்து பரியுமென் றதனால், அம்மலைகளினது வானத்தையளாவிய மிக்கவுயர்ச்சி தோன்றும்; தொடர்புயர்வு நவிற்சியணி. அம்மலைச்சுனைகளிலுள்ள ஆண்மீன்கள் அருகிற் புணங்களிலே இருக்கின்ற தினைத்தான்களின்மேற் பாயுமென்றதில், மீன்களின்கொழுமை கூறுமுகத்தால் அம்மலைகளின் நீர்வளத்தை விளக்கிய வாறும். அருவி - மலைநீர்ப்பெருக்கு. தனித்தனிகிறியதெனத்தக்க அம்மலை யருவி ஒவ்வொன்றுமே நதிபோலப்பாயுமென்றதனால், அந்நீர்ப்பெருக்கின் மிகுதி உணர்த்தப்பட்டது. அம்மலைகளிலுள்ள யானைகள் கொழுத்து மதமேறி ஒன்றோடொன்று மோதிப் பொருமென்க. தினைவளத்தாலும் லோபத் தாற்கடிந்து காப்பவரெவரு மில்லாமையாலும், குருவிகள் தாம்விரும்பிய படி தினைக்கதிர்களிற் பாய்ந்து இரைகொள்ளும். ஆண்பாலினும் வலிமை குறைந்ததெனத்தக்க பெண்பாலாகிய மந்தியும் ஓடி மரக்கிளைகளின்மேல் தாவுமென்றது, அம்மலைக்குரங்குகளின் கொழுமை கூறியபடி. மந்தி- குரங் கின் பெண்ணைப்பெயர். கோடு - மலையுச்சியென்றலும் அமையும். இருவி - அறுப்பறக்கப்பட்ட தினைத்தான். 'ஒன்றினொன்றின்' என்பதில், ஈற்றி லுள்ள இன - சாரியை. (சo)

சக. தேனிழுக்குசாரல்வாரிசெல்லமீதுசெல்லுநாண்
மீனிழுக்குமன்றிவானவில்லிழுக்கும்வெண்மதிக்
கூனிழுக்குமற்றுலாவுகோளிழுக்குமென்பவால்
வானிழுக்குமேலவாசமன்றனூருகுன்றமே.

(இ - ள்.) வான் இழுக்கும் - வானத்திலுள்ளாரையும் (விரும்பியுட் கொள்ளும்படி) இழுக்கின்ற, எலம் வாசம் மன்றல் - ஏலக்காய்களின் கறு மணம், நாறு - வீசப்பெற்ற, குன்றம் - மலைகள்,—தேன் இழுக்கு சாரல் வாரி செல்ல - (முன்கூறியபடி) தேன் பெருகுதலால் வழுக்குகின்ற சாரல் களில் நீர் வெள்ளம் பெருகுதலால்,—மீது செல்லும் கள்மீன் இழுக்கும் - வானத்திற்செல்லுகின்ற நகூத்திரங்களை இழுக்கும்; அன்றி - அல்லாமலும், வான வில் இழுக்கும் - ஆகாயத்திற் காணப்படுகின்ற இந்திரதனுசை இழுக் கும்; வெண் மதி கூன் இழுக்கும் - வெண்மையான இளம்பிறைச்சந்திரனை இழுக்கும்; மற்று உலாவு கோள் இழுக்கும் - மற்றும் வானத்திற்சஞ்சரிக் கின்ற கிரகங்களை இழுக்கும்; என்ப - என்று (கவிகள்) வருணிப்பர்; (எ - று.) —ஆல் - அசை.

அம்மலைகளின் உயர்வையும் அவற்றிற்பெருகுகின்ற நீர்ப்பெருக்கின் மிகுதியையும் கன்குவிளக்குந் தொடர்புயர்வுநவிற்சியணி. இழுக்குசாரல் - வினைத்தொகை. கள்மீன் - தினத்தைக் குறிக்கின்ற அசுவினி முதலியன. இழுக்கும், இழு - பகுதி. கூன் - வளைந்த வடிவம். மற்று உலாவுகோள்

நவக்கிரகங்களுள் சந்திரன் நீங்கலாகச் சூரியன் அங்காரகன் முதலிய எட்டு வான் - வானவர்க்கு இடவாகுபெயர். வாச மன்றல் - ஒருபொருட் பன்மொழி. 'வானிழுக்கு மேலவாய மன்றனும்' என்ற பாடத்திற்கு - மேல ஆய என்றபிரித்து, மேன்மையுடையனவான (பலவகை) வாசனைகள் வீசுகின்ற என்று பொருள் காணலாம். (சக)

[இராமன் முதலியோர் கிஷ்கிந்தமலையைச்சார்ந்து ஆலோசித்தல்.]

சஉ. அன்னதாயகுன்றினுமுசென்றவீரரைந்தொடைக்
தன்னலாயயோசனைக்குமும்பரேறியிம்பரிற்
பொன்னினொடிழிந்ததன்னவாலிவாழ்பொருப்பிடந்
தன்னினூர்கள்செய்வதென்னையென்றுநின்றுசொல்லுவார்.

(இ - ள்.) அன்னது ஆய - அத்தன்மையதான, குன்றின ஆறு - மலை வழியிலே, சென்ற - போன, வீரர் - (இராமபிரான் முதலிய) வீரர்கள்,— ஐந்தொடு ஐந்து உன்னல் ஆய யோசனைக்கும் உம்பர் ஏறி - ஐந்தோடுகூடிய ஐந்து [பத்து] என்று எண்ணத்தக்க யோசனைதூரங்கட்கும் மேற்கடந்து, பொன்னின் நாடு இம்பரில் இழிந்தது அன்ன வாலி வாழ் பொருப்பு இடம் தன்னினூர்கள் - பொன்மயமான தெய்வலோகம் இங்கு இறங்கிவந் தாற்போன்றதான வாலிவாழும் (கிஷ்கிந்த) மலையினிடத்தை யடைந்து, நின்று - அங்குநின்று, செய்வது என்னை என்று சொல்லுவார் - இனிச் செய்யவேண்டுவதென்ன வென்பதைக் குறித்து (த் தமக்குட்) பேசிக்கொள்ள லானார்கள்; (எ - று.)

அன்னதாய ஆறென்க. இரண்டாமடியில், 'உம்பரேறியிம்பரில்' என்றது - தொடைமுரணின்பாற்படும். (சஉ)

கலன்காண்படலம் முற்றிற்று.

ஐந்தாவது

வாலிவதைப்படலம்.

வாலியினது வதையைப்பற்றிக் கூறும் பாகம். வாலிவதை - ஆரும் வேற்றுமைத்தொகை. இராமன வாலியைக் கொனற செய்தியை உணர்த்தலால், இதில் ஆனறுருபு - செயப்படுபொருளது. வதை - கொலை; வத மென்ற வடசொல் ஈறுதிரிந்தது.

[அச்சமயத்தில் இராமபிரான் தன்கருத்தை வெளியிடுதல்.]

க. அவ்விடத்தியாமனீயழைத்துவாலியானதோர்
வெவ்விடதத்தின்வருதுபோர்வீளைக்குமேல்வைவேறுநின்
றெவ்விடததுணிந்ததமைருதமென்கருதிதென்றனன்
றெவ்வடக்கும்வெனறியானுரைறிதென்றுசிந்தியா.

(இ - ள்.) அ இடதது - அச்சமயதில், தெவ அடக்கும் வென்றியான, இராமன - பகைவர்களையழித்து அடையும் வெற்றியையுடையவனான ஸ்ரீராமபிரான், சிந்தியா - ஆலோசித்து, இது நன்ற என்ற - இதுதான கல்ல தென்று ஒனறைத்துணிந்து, (அதனைச் சுகரீவனை நோகிச் சொல்பவ னாய்,)— நீ—, வந்து - சென்று, அழைதது - (வலியப் போர்க்கு) அழைத்து, வாலியானது ஓர் வெவ விடததின போர் வீளைகும் எல்லை - வாலியாகிய ஒப்பற்ற கொடிய விஷததுடனே எதிரதது யுததஞ் செய்யுமபொழுது, வேறு நின்று எவ்விட - வேறாக (ஓரிடததில யான மறைந்து) நின்று அம்பு செலுததுவதாக, துணிந்து அமைந்தது - நிச்சயித்துப் பொருந்தியதாகிய. இது—, என கருதது - எனறு கருதது,' என்றனன - எனறு சொல்லியருளி னான், (எ - று.)—உம்மை - இசைகிறை.

கிஷ்கிந்த மலையையடைந்து இனிச் செய்ய தென்னவெனபதைக் குறித்து அனைவரும பேசி யாலோசிகின்ற சமயத்தில், இராமபிரான சிறிது சிந்தனை செய்து ஒன்றை நிசசயிததுச் சுகரீவனை நோகி, 'நீ சென்று வாலியை வலியப் போர்க்கு அழைதது அவனும் நீயும் போர்செய்கையில் நான் தனியே மறைந்து நின்று அவனமேல் அமபுதொடுதெய்து அவனைக் கொல்லக் கருதினேன்' எனறு கூறினனெனபதாம்.

சொற்களைப் பலவிடததுந் துணிதது எடுத்துக் கூட்டி இங்ஙனம் பொருள்கொண்டது, கொண்டுகூட்டுப்பொருள்கோள்; [நன-பொது-சூஎ] இது, தொல்காப்பியததில் 'மாட்டு' எனனுஞ் செய்யுளுறுப்பாம். அவ்விடத்து எனறனனென்க; அவ்விடத்து அழைததவன்று போர் வீளைகுமென்று இயைத்துப் பொருள்கொள்ளவுமாம். எல்லை - பொழுது மிக்க கொடுமை யுடைமைபற்றி, 'வாலியானதோர்வெவ்விடம்' எனறார். எவ்விட என்பது எதனை நோக்கி எவ்விட வெனக் குறுக்கலும் விரிதலுமாகிய விகாரங்களை யடைந்தது; "எவ்வருவெஞ்சிலைதடகையிராமன் தன்னை" என்றபெரியர்

ரருளிச்செயலிலும் 'இவ்வாறு காண்க. எவ்விட—எவ்விட; (அம்பினைச்) செலுத்த, அல்லது எ விட-அம்பினைச் செலுத்த எனக் காண்க. கல்லோர்க்கு கலிவுசெய்யுந் தீயோரை எவ்வகை உபாயத்தாலாவது, அடக்கவேண்டுமென்னுஞ் சங்கற்பமுடையவ னென்பதும், எவ்வாற்றாலும் வெற்றியையே பெறுபவ னென்பதும், கல்லோர்க்கு கலிவுசெய்பவரையே தனக்குப் பகையாகக் கொள்பவ னென்பதும் விளங்க, 'தெவ்வடக்கும் வெந்நியான்' எனாரர். சிந்தியா - உடன்பாட்டெச்சம்.

(க)

[அதுகேட்டவுடன் சுக்கிரீவன் ஆரவாரித்தல்.]

உ. வார்த்தையன்னதாகவானியங்குதேரினுண்மக
னீர்த்தரங்கவேலையஞ்சநீலமேகநாணவே
வேர்த்துமண்ணுளோரிரிந்துவிண்ணுளோர்கள்விம்மமே
லார்த்தவாசையீசனுண்டவண்டமுற்றுமுண்டதே.

(இ - ள.) வார்த்தை அன்னது ஆக - (இராமபிரான் அருளிச்செய்த) வார்த்தை அத்தன்மையதாக [இராமன அவ்வாறு சொல்ல எனறபடி], (அது கேட்டமாத்திரத்தில்),—வான இயங்குதேரினுனை மகன் - ஆகாயத்தில் இடைவிடாது செல்கின்ற தேரையுடையவனுகிய சூரியனது குமாரனை சுக்கிரீவன், நீர் தாங்கும் வேலை அஞ்ச - நீரமயமான அலைகளை வீசுவதுமான கடல் அஞ்சும்படியாகவும், நீல மேகம் நாண - நீலநிறமுள்ள மேகங்கள் வெட்கமடையும்படியாகவும், மண் உளோர் வேர்த்து இரிந்து - நிலவுலகத்திலுள்ளார் (அஞ்சி) உடல்வியர்த்து ஓடும்படியாகவும், விண் உளோர்கள் விம்மமேலுலகத்தில் லுள்ளவர்களும் அஞ்சிக் கலங்கும்படியாகவும், மேல ஆர்த்த - (இராமன வார்த்தைக்கு இணங்கி மகிழ்ந்து) மிகுதியாக ஆரவாரஞ் செய்த, திசை - திசையானது, ஈசன உண்ட அண்டம் முற்றும் உண்டது - ஸ்ரீவேசுவரனை எம்பெருமானுல் (கல்பாந்தகாலத்தில்) உட்கொள்ளப் படுகின்ற அண்டகோளம் முழுவதையும் வியாபித்தது; (எ - று.)

அச்சுக்கிரீவனது ஆரவாரம் அண்டகோளம் முழுவதும் கேட்கும்படியாயிருந்த தென்பதாம். அவ்வாரவாரத்தின் மிகுதியை விளக்கும் அதிசயோக்தி இது. இப்பேரொலி கடல் முழக்கத்தினும் இடி முழக்கத்தினும் பெரியதாயிருந்த தென்பது, இரண்டாமடியால் விளங்கும். இரிந்து=இரிய; எச்சத்திரிபு. வேர்த்தல் - அஞ்சுதலாலும், ஓடுதலாலும் ஆவது. திசை அண்ட முற்றும் உண்டது - உண்ணுதலை உண்பதுபோலச் சொன்ன மரபு வழுவமைதி. வார்த்தை, தரங்க வேலை, நீலமேகம், ஈசன், அண்டம் - வட சொற்கள்.

இனி, மூன்றின செய்யுளோடு இச்செய்யுளைக் குளகமாக்கி, (க) அப்பொழுது இராமன (சுக்கிரீவனை நோக்கி) நீ அழைத்து வந்து வாலியான தோர் வெவ்விடத்தின் போய்விடுக்கும் எல்லை (நான) வேறு நினை எவ்விடத்தண்டி அமைந்தது இது எனகருத்து' என்னன; (உ) வார்த்தை என்னதாக, (க) எவ்வாற்றாலேனும் பகைவனை யடக்கி வெற்றி கொள்ள

வேண்டு மென்றிருக்கின்றவனை (உ) வான் இயங்கு தேரினன்மக(ன்)னும் கன்று இதுவென்ற சிந்தியா [கல்லது இதுவென்ற எண்ணி அச்சொல் லுக்கு இணங்கி] (உ) நீர்த்தரங்கவேலை யஞ்ச * * * ஆர்த்த ஓசை அண்ட முற்றும் உண்டது என்று அன்வயித்துப் பொருள் கொள்ளலுமாம். (உ)

[சுக்கிரீவன்வலியப் போர்க்கு அழைத்துத் தோள்தட்டிக் கர்ச்சிக்கின்ற முழக்கம், தூங்குகின்ற வாலியின் செவிகளில் நுழைதல்.]

ங. இடிதது ரப்பி வருது போரெ திர்த்தி யேல டர்ப்பனென் றடித்த லங்கள் கொட்டி வாய்ம டித்த திதத லங்குநீள் புடைத்து நின்று ளைதத பூசல் புக்க தெண்ப மிகவிடந் துடிப்ப வங்கு றவகு வாலி திண்செ விததொ ளைக்கணை.

(இ - ள்.) (உடனே சுகிரீவன), அடித்து - (கிஷ்கிந்தாபுரியைச்) சமீ பித்து, வாய் மடித்து - உதடுகளை மடித்துகொண்டு, வருது போர் எதிர்த்தி ஏல் அடர்ப்பன எனறு - 'வந்து எதிர்தது (எனனுடன) போர்செய்வையா னால் (உனனைக்) கொல்வேன (யான)' எனறு இடித்து உரப்பி - இடியிடித் தாற் போல அதட்டி, அடி தலங்கள் கொட்டி - கால் கொட்டிக் கொண்டு, அலங்கு தோள புடைதது - விளகுகினற தோள்களைத் தட்டி, நினறு - நிலைகினறு, உளைத்த - வலியப் போர்கு அழைதத, பூசல் - ஆரவாரமான து, அங்கு உறங்கு வாலி திண் செவி தொளைக்கணை - அக்கிஷ்கிந்தா புரியி னுள்ளே தூஙகிக்கொணடிருகினற வாலியினுடைய வலிய காதுகளின் தூளியிலே, மிகவு இடம துடிப்ப புகுத்தி - (அவனுகு) இடப்பக்கம மிகுதி யாய்த துடிககும்படி நுழைந்தது; (எ - று)—எனப - அசை.

இங்ஙனம் சுகிரீவன அரைகூவிக கொகரிகினற முழகுகம செவிப் படுகினற சமயததில வாலிகு உடனே நேரும் பெருந்தீங்கிற்கு அறிகுறி யாக இடக்கண்ணும் இடத்தோளும துடித்த செய்தியையும இதிற் கூறினர். ஆடவர்க்கு இடக்துடித்தல், தீங்மிதது. 'அடித்தலங்கன கொட்டி' எனப தற்கு - தொடை தட்டி யெனறு உரைப்பாரு முனர். வாய்மடித்தல் - கோபக் குறி. உளைதல் - அழைத்தல்; ஒலித்தலுமாம பூசல் - பேரொலி. (ங)

வேறு.

[அப்பேரோலியை வாலி கேட்டமை.]

ச. மாற்பெருங் கடகரி முழக்கம் வாளரி யேற்பது செவித்தலத தென்ன வோங்கிய வார்ப்பொலி கேட்டன னமளி மேமலொரு பாற்கடல் கிடந்தரி தயின பாண்மையான்.

(இ - ள்.) அமளிமேல் - படுக்கையின்மேல், ஒரு பால் கடல் கிடந்தரி அனைய - ஒருபாற்கடல் படுத்திருந்தது போனற, பாண்மையான் - தன்மை யையுடையவனுகிய வாலி,—மரல் பெருங் கட கரி முழக்கம் வான் அரி செவி

தலத்து எற்பது என்ன - மயக்கங்கொண்ட பெரிய மதயானையின் முழக்கத்தைக் கொடிய சிங்கம் காதுகளில் ஏறறுக்கொண்டாற்போல, ஒங்கிய ஆர்ப்பு ஒலி கேட்டனன் - மிகுதியான அந்த(ச் சுக்கிரீவனது) கர்ச்சனை முழக்கத்தைச் செவியுற்றனன; (எ - று.)

ஒருமலைச்குகையினுள்ளே படுத்து உறங்கிக்கொண்டிருக்கின்ற சிங்கம் மதமயக்கங்கொண்ட யானையின கர்ச்சனையைக் கேட்டுத் துயிலுணர்ந்தாற் போல, குகைபோல மலையிடையேயிருக்கின்ற கிஷ்கிந்தாபுரியினுள்ளே படுக்கையிற படுத்து உறங்குகின்ற வாலி சுக்கிரீவன் செருக்கி அறைகூவுகின்ற முழக்கத்தைக் கேட்டுத துயிலுணர்ந்தன னெனபதாம; உவமையணி. வாலியினது மகாபலமும், சுக்கிரீவனது பலக்குறைவும், அவனுல் இவன் எளிதில் அழிக்கத்தக்கவனு யிருத்தலும், இம்முழக்கங்கேட்ட மாத்திரத்தில வாலி மகிழ்ச்சியுற்றனனேயனறிக கலகமுற்றில னென்பதும் தோனற, இவ வொப்புமை கூறினர். அமளி - மெத்தை. வெண்ணிறமும் கம்பீரமான தோற்றமும் பற்றி, 'பாற்கடல் கிடந்ததேயனைய பானமையான' எனறார். ஆர்ப்பு ஒலி - ஒருபொருட் பனமொழி.

ரகரவொறரோடு கூடிய வல்லொறறும் றகரவொறறும், ஓசையொப் புமைபறறி, வீரவி எதுகை யமைக்கப்பட்டன.

இது முதல் இருபத்து நானகு கவிகள் - இக்காண்டத்தின் கடவுள் வாழ்த்துப்போனற கலிவிருத்தங்கள். (ச)

[வாலி சீறித்தல்]

பி. உருத்தனன்பொரவெதிர்ந்திளவலுற்றமை
வரைததடநீதாளினனமனததினெண்ணினன்
சிரித்தனனவ்வொலிதிசையினப்புறத
திரிதததவ்வுலகமொரேழொடேழையே.

(இ - ள்.) வரை தட தோளினன - மலைகள போன்ற பெரிய தோள் களையுடையவனன வாலி,—இளவல் உருத்தன பொர எதிர்ந்து உற்றமை. தனது தமபியான சுக்கிரீவன் கோபித்துப் போர்செய்தறகு எதிர்த்து வந்த மையை, மனதினை எண்ணினன் - மனதில் ஆலோசித்து, சிரிததனன - சிரித்தான்; அ ஒலி - அந்தச்சிரிப்பினுசையானது, அ உலகம் ஓர ஏழொடு ஏழை - அந்த உலகங்கள பதினனகையும், திசையின அப்புறதது இரிததது - திக்குக்களின எல்லைக்கு அப்பால் அஞ்சியோடும்படி செய்தது; (எ - று.)

அச்சிரிப்பொலி எலலாவுலகதது உயிரகளையும் அஞ்சி நிலைகுலைந்து நெடுந்தூரம் ஓடும்படி செய்த தென்பதாம். அவவொலியின மிகுதியை வினக் கும் உயர்வு நவிறசி. முன்பு போரிற பலமுறை பலபடி தோறறோடி அஞ்சி யெரளித்தவன் மீணடுவந்து வலியப் போர்க்கு அழைததல பறறிய இகழ்ச்சி யினுலும், கோபத்தாலும், வாலி வீராட்டகாசஞசெய்தன னெனக. இளவல் - இளையோன; அல் - பெயர்விகுதி. இரிததது - இரிந்தது எனபதன் பிற

வினை, 'உருத்திரன்' என்பதை 'சிரித்திரன்' என்பதனோடுகூட்டி முன்போல் பிறிதுமாம். (இ)

[வாலி எழுதலும், தோள்களை உதறுதலும்.]

கூ. எழுந்தனன்வல்விரைந்திறுதியூழியிற்
கொழுந்திரைக்கடல்கிளர்ந்தனையகொள்கையா
னழுந்திபதக்கிரியருஞ்சின்மால்வரை
விழுந்தனதோள்புடைவிசித்தகாற்றினே.

(இ - ள்.) ஊழி இறுதியில் - கற்பாந்தகாலத்தில், கொழுந் திரை கடல் கிளர்ந்த அனைய - செழுமையான அலைகளையுடைய கடல் (உலகங்களழியுமாறு) பொங்கியெழுந்தாற் போன்ற, கொள்கையான் - தன்மையையுடையவனும், வல் விரைந்து எழுந்தனன் - (சுக்கிரீவனையழித்தற்பொருட்டு வாலி உடற்பூரிப்புடனே) மிகவிரைவாய் எழுந்தான்; (அங்ஙனம் அவன் கோபாவேசத்தோடு எழுந்ததனாலாகிய அதிபாரத்தால்), அதிரி அழுந்தியது - அத்தக்ஷிஷ்கிந்தமலை கீழே சென்றுவிட்டது; தோள் புடை விசித்த காற்றின் - (மற்றும் அவன் தோள்களையுதறியபோது அவனுடைய) தோள்கள் பக்கங்களில் எழுப்பிய காற்றினால், அருஞ்சில் மால் வரை விழுந்தன - (அத்தமலையின்) அருஞ்சிலுள்ள பெரியமலைகள் (நிலைபெயர்ந்து) விழுந்திட்டன; (எ - று.)

வல் - விரைவு குறிக்கும் இடைச்சொல்; இது, சாரியையினோடேயேற்று வல்லெனவும், வல்லேயெனவும் நிற்கும். வல் விரைந்து - ஒருபொருட் பன்மொழி. திரைக்குக் கொழுமை - மிகுதியும், வளர்ச்சியும். அழுந்துதல் - பூமியினுள்ளாதல். தோள்புடைவிசித்த காற்று - தோள்கள் வீசுதலினாலாகிய காற்று. (கூ)

[அவனது கோபாக்கினி.]

எ. பொய்ப்பொடித்தனமயிர்ப்புறத்தவெம்பொறி
காய்ப்பொடுற்றெழுவடகனலுங்கண்கெட
தீப்பொடித்தனவிழிதிவர்நாட்டினு
மீப்பொடித்தனபுகையுயிர்ப்புவீங்கவே.

(இ - ள்.) வெம் பொறி - வெவ்விய அனற்பொறிகள், போய் பொடித்தன மயிர் புறத்த - (கோபாவேசத்தால் அவனுடம்பிற்) சிலிர்த்தனவான மயிர்களினிடத்தவாய் எழுந்தன; காய்ப்பொடு உற்று எழு வட கனலும் கண் கெட - (ஊழிக்காலத்திலே உலகங்களையழித்தற்கு) உக்கிரத்தைக் காணமாட்டாமற் கண்பார்வைகெடும்படி, விழி - (வாலியின்) கண்கள், தீ பொடித்தன - கோபாக்கினியைப் பொறிபொறியாய்ச் சிந்தின; உயிர்ப்பு வீங்க - (அவனுடைய) மூச்சுக்காற்று (க் கோபாவேசத்தாற்) பெரிதாயெழ, புகை - (அதிலிருந்து எழுந்த) புகைகள், தேவர் நாட்டினும் மீ பொடித்தன - தேவலோகத்திற்குமேலுஞ் சென்றன; (எ - று.)

போய்ப் புறத்ப் - புறத்துப் போயின வென விகுதிபிரித்துக்கூட்டுக. காய்ப்பு - கொதிப்பும், கோபமுமாம். உம்மைகள் - உயர்வுசிறப்பு. கண்கெட - ஒளிகெட என்றும், பெருமைகெட என்றும் கொள்ளலாம் 'போய்ப்பொடித்தன மயிர் புறத்தவெம்பொறி' என்ற பாடத்திற்கு - இரண்டுவாக்கியமாக்கி யுரைக்கலாம். (எ)

[அவன் கைதட்டுதல்]

அ. கைக்கொடுகைத்தலம்புடைப்பக்காவலின்
றிக்கயங்களுமதச்செருக்குச்சிந்தின
வுக்கனவுருமினமுலைந்தவும்பரு
நெக்கனநெரிந்தன நின்றகுன்றமே.

(இ - ன்) கைகொடு கைத்தலம் புடைப்ப (வாலி கோபாவேசத்தோடு) ஒருகையினால் மற்றொருகையைத் தட்ட, (அதனாலாகிய பேரொலியால் அஞ்சி), காவலின் திக்கயங்களும் மதம் செருக்கு சிந்தின - (உலகத்தைத்) தாங்குதலுடைய திக்கஜங்களும் மதத்தினாலாகிய களிப்பை யொழித்தன; உரும் இனம் உக்கன - இடிக்கூட்டங்கள் வலியழிந்தன; உம்பரும் உலைந்த - (அவ்வொலியிருகியாலாகிய அதிர்ச்சியால்) மேலுலகங்களும் நடுங்கின; நின்ற குன்றம் நெக்கன நெரிந்தன - (நிலவுலகத்திற் புடைபெயராது) நிலை பெற்ற மலைகளும் நெகிழ்ந்து நொருங்கின; (எ - று.)

கைக்கொடு—ககரவொற்று - எதுகை நோக்கிவந்த விரித்தல்விகாரம். கொடு - கொண்டு; தொகுத்தல்; மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபு. காவல். காவுதல்: சுமையெடுத்தல்; காவு என்ற பகுதியின் தொழிற்பெயர். இன் - சாரியை. திக்கஜம் - வடமொழித்தொடர். உக்கன, நெக்கன என்றவற்றில் - உகு, நெகு - பகுதி. உரும் இனம் உக்கன - (அவ்வதிர்ச்சியால்) இடிக்கூட்டங்கள் கீழேசிந்தின என்றலுமாம். உலைந்த - மூற்ற. நெக்கன, முற்றெச்சம். நின்ற குன்றம - அசலமாகிய மலைகள். கையொடுகைபுடைத்ததனாலாகிய ஆரவாரம் எவ்வுலகத்திலுஞ் சென்று நடுக்கத்தை யுண்டாக்கிற் றென்க. உலைதல் - கம்பமடைதல். 'நின்ற குன்றம்' என்றதற்கு - (நிலவுலகத்தைச் சூழ்ந்து) நின்ற சக்கரவாளபர்வதத்தோட ரென்று உரைப்பாரு முளர். (அ)

['வந்தேன், வந்தேன்' என்று கோல்லிக்கொண்டு வாலி எழுதல்.]

கூ. வந்தனென்வந்தனெனென்றவாசக
மிந்திரிமுதற்றிசையெட்டுங்கேட்டன
சந்திரன்முதலிய தாரகைக்குழாஞ்
சிந்தினமணிமுடிச்சிகரந்தீண்டவே.

(இ - ள்.) வந்தனென் வந்தனென் என்ற வாசகம் - '(இதோ) வந்து விட்டேன் வந்துவிட்டேன்' என்று (அப்பொழுது வாலி வீரவாதமாகக்) கூறிய சொற்கள், இந்திரி முதல் திசை எட்டும் கேட்டன - திக்குமுதலிய எட்டுத்திக்குக்களிலும் (எல்லாப்பிராணிகளுக்கும்) கேட்டன; மணி முடி

சிகரம் தின்ட - (அவன் உடல்பூரித்து எழுந்தபோது அவனது) இரத்தின கிரீடமணிந்த (சிரசாகிய) மலைச்சிகரம் பட்டதனால், சந்திரன் முதலிய தாரகை குழாம் சிந்தின - சந்திரனைத் தலைவனாகக்கொண்ட நக்ஷத்திரங்களின் கூட்டங்கள் கீழேயுதிர்ந்தன ; (எ - று.)

மூலிரண்டடி - அவனது உரத்தாலும், மற்றைபிரண்டடி - அவன் ஓங்கிவளர்ந்த உயர்ச்சியாலும் வருணித்தன. உயர்வுபிரியணி இச்சிரி - இந்திரனது சம்பந்தமான இந்து: இந்திரனைத் தலைவனாகக்கொண்டதாகிய சிகரம்; சிகரத்திற்குப்பாலன், இந்திரன். 'ஐச்சீ' என்ற வடசொல் இந்திரி பென விகாரப்பட்ட தென்னலாம். வரசம் திரா, சந்திரன், தாரகா, மணி, சிகரம் - வடசொற்கள். சந்திரனுக்கு நக்ஷத்திரங்கள் மனைவிய ரென்னும்படி சந்திரன் தாரகாதிபதியாதலால் சந்திரனை முதல்வனாகக் கொண்ட தாரகைகளின் குழா மென்றார். இனி, 'முதலிய' என்பதற்கு - முதலான என்று உரைத்தல் ஏலாது ; சந்திரன் தாரகைகளி லொன்றல்ல னாதலால். இங்கு 'முதல்' என்றது - "அரசமுதல வெழுத்தெல்லாம்" என் புழிப்போலாது "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்புழிப்போலும். உயர்வும் பருமையும் வலிமையும் பற்றி, 'முடிச்சிகரம்' எனப்பட்டது இதனால், வாலி பர்வதாகாரமான தேகமுடையவ னென்பது போதரும். கேட்டனன் - செவிப் புலனுயின. (கூ)

[அவன் எழுந்துவரும் விசையால் வீசிய காற்றும், அவனது மயிர்த்துளைகளினின்று எழுந்த அண்டபோறிகளும்.]

கo. வீசினகாற்றின்வேர்பறிந்தவெற்பின
மாசைபையுற்றனவண்டப்பித்திகை
பூசினவெண்மயிர்பொடித்தவெம்பொறி
கூசினனந்தகன்குலிந்ததும்பரே.

(இ - ள்.) வீசின காற்றின் - (அவன் விசைபட வரும்போது) வேகமா யெழுந்த காற்றினால், வெற்பு இனம் - மலைகளின் கூட்டங்கள், வேர் பறிந்து நிலைபெயர்ந்தவையாய், ஆசைபை உற்றன - திக்குகளின் கடையெல்லையிற் போய்விழுந்தன ; வெள் மயிர் பொடித்த வெம்பொறி - (அவனது உடம் பின்) வெண்ணிறமான மயிர்கள் வெளிச்சிதறிய வெவ்விய கோபாக்கினியின் பொறிகள், அண்டம் பித்திகை பூசின - அண்டகோளத்தின் சுற்றுச் சுவரை மறைத்தன ; (அத்தீப்பொறிகளைக்கண்டு), அந்தகன் கூசினன் - யமனும் கண்கூசினன் ; உம்பர் குலிந்ததும் - (இமையாக்கண்ணராகிய) மற்றைத் தேவர்களும் நிலைகுலைந்தார்கள் ; (எ - று.)

ஆரா, அண்டம், பித்திகா, அந்தகன் - வடசொற்கள். அந்தம் - (பிராணி களுக்கு) அழிவு: அதனைச்செய்பவன், அந்தகன். 'உம்பர்' என்றது - ஆகு பெயராய், மேலுலகத்தவரைக் குறிக்கும் ; ஆகவே, 'குலிந்தது உம்பர்' என் றது - சொல்லிலேநோக்கிய முடிபு. ஆசையை யுறுதல் - திக்கை யடைதல்,

மயிர்பொடித்த வெம்பொறி - ரோமத்துவாரங்களிலிருந்து எழுந்த நீப் பொறிகள். (கஅ)

[வாலி கோபத்தாற் பற்களைக் கடித்தலும், தோள்களைத் தட்டுதலும்.]

கக. கடித்தவாயெயிறு குகனல்கள்கார்விசும்
பிடித்தவாயு குமுருமினத்திற்சிந்தின
தடித்துவீழ்வனவெனத்தகர்ந்துசிந்தின
வடித்ததோள்வலயத்தின்வயங்குகாசரோ.

(இ - ன்.) கடித்த வாய் எயிறு உகு கனல்கள் - (வாலி கோபத்தாற்) கடித்த பொழுது (அவன்) பற்களினின்று வெளிப்பட்ட கோபாக்கினிகள், கார் விசும்பு இடித்த வாய் உகும் உரும் இனத்தின் சிந்தின - கார்காலத்து மேகங்கள் இடித்தபொழுது வீழும் இடிகளின் கூட்டம் போல (க் கடுமை யாய் எங்குஞ்) சிதறின; (அவன் தோள் தட்டியபொழுது), வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசு - சிறந்த (அவனது) தோள்வளைகளில் விளங்கு கின்ற இரத்தினங்கள், தடித்து வீழ்வன என தகர்ந்து சிந்தின - மின்னல் கள் கீழ் விழுந்தாற்போல கொருங்கிச்சிதறின; (எ - று)—அரோ-ஈற்றசை.

வாய் எயிறு - வாயிலுள்ள பற்கள் என்றும், இடித்த வாய் - இடித்த இடங்களில் என்றும் உரைத்தலுமாம் கார் - கருமை யென்ற பண்பின் அடி விகாரப்பட்டது; இக்கே, கருநிறமுடைய மேகங்கள் மழைபொழியும் பருவத்திற்கு இருமடியாகுபெயர். தடித், வலயம் வடசொற்கள். வடித்தல்-தேர்ந்தெடுத்தல். (கக)

[வாலியின் உக்கிரம்]

கஉ. ஞாலமூகாற்றிசைப்புனலுகாகரு
மூலமுமுற்றிடமுடிவிற்றீக்குமக்
காலமுமொத்தனன்கடலிற்றுண்கடை
யாலமுமொத்தனனெவருமஞ்சவே.

(இ - ன்.) (அப்பொழுது வாலி),—எவரும் அஞ்ச - (காண்பவர்) யாவ ரும் அஞ்சும்படி,—ஞாலமும் - பூலோகமும், நால்திசை புனலும் - நான்கு திக்குக்களிலுமுள்ள கடல்களும், காகரும் - தேவர்களும் [அல்லது பாதாள லோகவாசிகளும்], மூலமும் - (இவற்றிற்கெல்லாம்) ஆதிகாரணமான மகத் தத்வம் முதலிய தத்வங்களும், முற்றிட - அழியும்படி, முடிவில் - (மகாகற் பத்தின்) அந்தத்தில், தீக்கும் - (அனைத்தையும்) எரிக்கின்ற, அ காலமும் - அந்தக் காலாக்கினியையும், ஒத்தனன் - போன்றான்; தான் கடை கடலில் - (முன்பு) தன்னால் கடையப்பட்ட பாற்கடலினின்று தோன்றிய, ஆலமும் - விஷத்தையும், ஒத்தனன் - போன்றான்; (எ - று.)

சர்வசங்காரகாலத்தில் அனைத்தையும் எரிக்கின்ற கற்பாந்தகாலாக்கினி போலவும், முன்பு தான் கடைந்தபோது பாற்கடலினின்று எழுந்த ஹாலா

ஹலவிஷம்போலவும் வாலி அதிபயங்கரனுக்கோபாவேசங்கொண்டு கொதிப்புடன் போர்க்கு வாலாயின னென்பதாம். காலம் - காலாக்கினிக்கு ஆகு பெயர். அகாசுரட்டு, பிரசித்திபற்றியது. ஆலம் - ஹாலஹலென்ற வடசொல்லின விகாரம். 'காலமும்,' 'ஆலமும்' என்ற உம்மைகள் - ஒன்றை ஒன்று சேர்க்கி எதிரதும் இறந்தமை தழுவிய எச்சம். எவரும் - முற்று. மற்றை யும்மைகள் - எண். 'தீர்க்கும்' எனபதும் பாடம். (கூ)

[அப்போழது அவன் மனைவியான தாரை விலக்குதல்.]

கஙு. ஆயிடைத்தாரையென்றமிழ்ந்திற்றீரன்றிய
வேயிடைத்தோளினுளிடைவிலக்கினுள்
வாயிடைப்புகைவரவாலிகண்வருந்
தீயிடைதன்னெடுங்கூதமீங்குள்.

(இ - ன்.) ஆயிடை - அப்பொழுது,—தாரை என்று - தாரையென்ற பெயர் கூறப்பட்டு, அமிழ்ந்தின தோணிய - தேவாகிருதம்போலத் காணப்படுகின்ற, வேய் இடை தோளினுள மூங்கிலின தனமையைத தனனிடத்தே கொண்ட தோளாகளையுடையவள,—வாயிடை புகை வர - (வாலியின) வாயினினறு புகைகிளமப, வாலி கண வரும - அவனது கண்களிலிருந்து வெளியெழுகின்ற, தீயிடை - நெருப்பில, தன நெடிய கூதல் தீங்குறுன தனது நீண்ட கூந்தல் எரிகின்றவளாய், இடை விலக்கினுள - (போராகுப் புறப்பட்டுச் செல்லலான வாலியை) இடையில விலக்கினுள; (எ - று)

அ + இடை = ஆயிடை: செயபுளிற சுட்டுநீண்டவிடதது யகரமெய் தோனறிறது. தாரை - ஆகுபெயரான வடசொல. ஐ மபொறிபட்டும் இனிய னாதல பறறி, அமிருதம போலத தோனறிய னென்றார். திரண்டு உருண்டு நீண்டு வளைதது எழுமை இளமூங்கில - மகளிரதோளுகது உவமைபரம், 'வேயிடைத் தோளினுள விரைவிறபற்றினுள' என்றும பாடம். (கூ)

[வாலி அத்தடையை மீறுதல்.]

கசு. விலக்கலிலவிடுவிடுவினிதுளானுயங
கலகியக்கடல்கடைதமுதுகண்டென
வுலக்கவின்னுயிர்குடித்தெல்லிமீள்குவன்
மலைக்குலமயிலெனமடந்தைகூறுவாள்.

(இ - ன்.) 'மலைகுலம் மயில - மலையில்விளையாடுகின்ற சிறந்த சாதி மயில் போன்றவளே! விலக்கலி விடு விடு - (எனனைத) தடுதததலை விட்டிடு விட்டிடு; அ கடல் கடைந்து அமுது கண்டு என-அத்தப்பாற்கடலைக்கடைந்து அமிருதம உண்டாகப்பெற்றார போல, விளித்துளான உரம் கலகி-(எனனை வலியப் போர்க்கு) அழைத்துளளவனுன சுக்கிரீவனது வலிமையைச் சிதையச்செய்து, உலக்க இன உயிர் குடித்து - (அவன) இறக்க (அவனது) இனி மையான உயிரைக் குடித்து, ஒலலை மீளகுவன - விரைவில் திரும்பிவருவேன்,' என - என்று (வாலி) சொல்ல,—மடந்தை கூறுவாள். (அவன்)

மனைவியான தாரை (மீண்டும்) சொல்வாள்: (எ - று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

மகளிர்க்கு மயில் - சாயலில் உவமம். மயில் குறிஞ்சிநிலத்துப்பறவை யாதலால், மலை மயிலுக்கு அடைமொழியாக்கப்பட்டது. மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் விளையாடுதல் வாநரவரசியாகிய தாரைக்கும் ஏற்கும். மயில் - இங்கு அண்மைவிளி. மருளுதல் தோன்ற 'மலைக்குல மயில்' என விளித்தானுமாம். 'விலக்கலே' என்பதை எதிர்மறைபொருமை யேவலாகக் கொண்டு, விலக்காதே யென்று உரைத்து, விடுவிடு - எனவே விட்டிடு விட்டிடு என்றலுமாம். விடுவிடு - அடுக்கு, அணிவுபற்றியது. உரம் கலக்கி - மார்பை நிலைகலங்கச் செய்து எனினுமாம். உயிர் குடித்து - உண்ணப்படாதது உண்ணப்படுவது போலச் சொல்லப்பட்ட மரபுவழுவமைதி. ஒல்லை-விரைவு குறிக்கும் இடைச்சொல். மீள்குவன்—கு - சாரியை, அன் - தன்மை பொருமை வினைமுற்றுவிகுதி. ''அன்னதையையு மடியாள பணியு மலர்ப், பொன்னினழகும் புலிப்பொறையும்—வன்னமுள, வேசிதையிலும் விறன மந்திரி மதியும், பேசி லிவையுடையாள் பெண்'' எனறபடி உத்தம மனைவியாகும் மாதுக்கு இருக்க வேண்டிய குணங்களாவுங் குறை வினறி நிறைந்த பெண்ணிவ ளென்பது தோன்ற, 'மடந்தை' எனறார். மந்திரி போலச் சமயோசித மறிந்து கலலஆலோசனை சொல்லும் திறம், இங்குக் கருதத்தக்கது. (கசு)

[சுக்கிரீவன் வலியவந்து போர்க்கு அழைப்பதன் காரணத்தைத் தாரை சொல்லுதல்.]

கடு. கொற்றவனின்பெருங்குவவுத்தோள்வலிக்
கிற்றையனல்லனீடுண்டேகுவான்
பெற்றிலன்பிறந்திலன்பெயர்த்தும்போர்செயற்
குற்றதுநெடுந்தூணையுடைமையாலென்றாள்.

(இ - ள்.) 'கொற்றவ - வெற்றியையுடைய தலைவனே! —இற்றையன் அல்லன - (சக்கிரீவன்) இத்தனைகாள் இருந்தவன் போன்றவனல்லன்; நின் பெருங்குவவு தோள் வலிக்கு ஈடுண்டு எகுவான் - உனது பெரியதிரண்ட தோள்களின வலிமைக்கு (இத்தனைகாளாய்க்) குழைவுகொண்டு செல்பவனை அவன், பெற்றிலன் - இன்றைக்குப் புதிதாக ஓர் உடல்வலிமையைப் பெற்றனில்லை; பிறந்திலன் - (அப்பிறப்பொழிந்து) வேறொருபிறப் பெடுத்துத் தோன்றினனுமில்லை: பெயர்த்தும் போர்செயற்கு உற்றது - (அங்ஙனமிருக்கவும் அவன்) மீளவும் (உன்னுடன்) போர்செய்தற்கு வந்தது, நெடுந் தூணை உடைமையால்—பெரிய ஒரு தூணைவனைப் பெற்றதனை யாகும்,' என்றாள் - என்று (தாரை வாலியை நோக்கிக்) கூறினாள்; (எ - று)—ஆல் - ஆசை.

குவவு - உரிச்சொல். இற்றையன - இன்றைத்தினத்தில் வந்துள்ளவனை அவன், இத்தனைநாள்போல நின்பெருங்குவவுத்தோள்வலிக்கு ஈடுண்டு

எருவா னல்லன் என்று உரைப்பினுமாம். 'இற்றனை முன்னோ ளீடுண்
டேகுவான்' எனறு பாடமோதுவாரு முளர். 'பெற்றிலன பெருந்திறல்'
என்று சிலபிரதிகள. (கடு)

[இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்: தாரைக்கு வாலி
தன்வலிமைமீதுசபதஞ்செய்தல் கூறல்]

கசு. மூன்றெனமுற்றியமுடிவில்பேருல
கீன்றுடனுற்றனவெனக்குமேருவெனத்
தோன்றினுகதோற்றவைதோல்வியுமென்றலின்
சான்றுளவன்னவைதையல்கேட்டியால்.

(இ - ள.) மூன்று எனறு-(மேல் கீழ் நடு என) மூனறாக (ஈருக்கப்பட்டு),
முற்றிய நிறைந்துள, முடிவு இல் பேர் உலகு - அழிவிலலாத பெரிய
உலகங்களெல்லாவறறிலுமுள்ள பிராணிகள யாவும், எனறு உடன உற்றன-
கருதத இணங்கி ஒருங்குசேர்ந்துவையாய், எனகது நேர் என தோனறினும் -
எனனக்குப் பகைபாக வந்துஎதிர்த்தாலும், அவை தோற்று தொலையும் - அவை
யெலலாம் தோல்வியடைந்து அழியுமை, என்றலின - எனகிற பொருளைச்
சாதிததற்கு, சானறு உள - (நமேல) சாஷிகள் உள்ளன; அன்னவை -
அவற்றை, தையல் கேட்டி-பெண்ணே! (பானசொல்லக) கேட்பாய்; (எ று.)

எனறு - எதிரதது கூறினுமாம்; இச்சொலலில், எல் பகுதி. தையல் -
அழகுடையவள. அனனவை கேட்டி ஆல- அவற்றை (முன்பு யான்சொல்லக்)
கேட்டுள்ளாயனறே எனனவுமாம. முதற்பொருளில, கேட்டி - ஏவலொ
ருமைமுறறு; ட் - எழுத்துபபேறறு. இபபொருளில, கேட்டி - முன்னிலை
யொருமையீறறுதகாலமுறறு; ட் - இறந்தகாலவிடைநிலை. ஆல் தேறறம்;
அவறறை நீ அறியாய் எனறபடி. (கசு)

கள. மநதரமெடிவரைமத்துவாசுகி
யநதமில்கடைகயிறடைகலாழியான்
சந்திரனூணைதிர்தருககின்வாங்குக
ரிநதிரன்முதலியவமாபேணியோர்.

கஅ. பெயர்வுறவலிக்கவுமிடுக்கில்பெற்றியா
ரயர்வுறவுற்றதைநோக்கியானது
தயிசெனக்கடைநதவர்க்கமுதநதந்தது
மயிலியற்குயின்மொழிமறக்கலாவ்தே.

இவையிரண்டுகவிகளும் - குளகம்; ஒருதகு உரைகசப்படுகின்றன.

(இ - ள்.) (கள) மந்தரம் நெடு வரை - பெரிய மந்தரமலை, மத்து - மத்
தாகவும், வாசுகி - வாசுகியெனனும் மகாநாகம், அந்தம் இல் கடை கயிறு -
எல்லையில்லாத [மிகநீண்டு] கடையுத கயிறுகவும, ஆழியான் - சக்கராயு
தத்தையுடையவனன திருமால், அடை கல-(அமமந்தரகிரி) கடலில்அழுந்தி

வீடாதபடி கூர்மரூபீமாய்க் கீழேநின்று தாங்கும் பீடமாகவும், சந்திரன்—, தூண் - அட்டதூணுகளும், எதிர் தருக்கின வாங்குகா - (ஒருவர்க்கொருவர்) எதிராகினறு, களிபபுடன கடைகயிறதையிழுப்பவர், இந்திரன முதலிய அமரர் ஏனேயோரா - இந்திரன முதலான தேவர்களும அவர்கட்கு மாறான அசுராகளுமாக அமைந்து, (கஅ) பெயாவுஉற வலிகளவும் மிடுக்கு இல் பெறறி யார் - (மததாகிய அந்த மந்தரகிரி) நிலேபெயருமாறு இழுததற்கும் வலிமை யில்லாத தனமையை யுடையவர்களாய், அயாவுறல் உற்றதை - (அததேவா சுரர்கள) தளர்ச்சியிக்கதை, யான் - நான, நோக்கி - பார்த்து, அது தயிர் என கணடக்கி - அப்பாறகடலைத் தயிர்கடைவதுபோலக்கடைந்து, அவர்களு அமுதம் தந்தமை - அவர்கட்கு அமிருதத்தை உண்டாக்கிக் கொடுதத நிற மும், மயில் இயல் குயில் மொழி - மயில்போன்ற சாயலையும் குயில் கூவுவதி போன்ற இனசொற்களையு முடையவளே! மறக்கல ஆவதோ - மறக்கக் கூடியதோ? (எ - று.)

தேவர்கள அசுராகளைத் துணைகொண்டு பாற்கடல் கடையத் தொடங் கியபொழுது மததாகிய மநதரகிரி கடலினுளளே அழுந்திவிட, தேவாகள் வேண்டுகோளினுல திருமால பெரியதோர ஆமைவடிவ மெடுதது அம்மலை யினகீழேசென்று அதனைத் தனமுதுகினமீது கொண்டு தாஙகி அமமலை கடலில் அழுந்தி விடாமற கடைதறகு உபயோகமாமபடி அதறகு ஆதாரமாக எழுந்தருளியிருந்தன னெனபது, பிரசிததம. அடைகல - கமமபபட்டடை; அதாவது - கமமாளாகள பொனமுதலியவறறை வைதது வெட்டு தறகு ஆதாரமாக கொள்ளுங கருவி; இகரு, அது, ஆதாரமான பீட மெனற மாதத்திரமாய் நினறது. மதது - மநதரமென்ற வடசொலலின விகா ரம. வாஸுகி - அஷடமகாநாகஙகளி லொனறு. அநதம இல - அழிவில் லாத வெனினுமாம. வாங்குகர், ங - பெயரிடைநிலே. ஏனேயோர - மறறொரு வகுப்பினர்; இங்கு, அசுராயிறறு.

வலமும் இடமுமாக இழுதலிக் கடைதறகேயனறி அந்த மதது நிலே பெயருமாறு இழுததறகும எனப் பொருள்படுதலால, உம - இழிவுசிறபபு. அயாவு உறல் - தளாச்சியடைதல. உறறது - மிகுதி. மயிலியற குயின் மொழி - உலமைத் தொகை உம்மைத்தொகைகளின புறதது பிறந்த அன மொழிததொகை. 'தந்ததும்' என்ற உம்மை - உயர்வு சிறபபு. 'மறக்க லாவதோ' என்ற பாடதநிற்கு - யான் கடைந்து அமுதந்தந்த பெருமையும் (யாராலேனும்) மறக்கத்தகுதாமோ? எனறு பொருள். (கஎ, கஅ)

கசு. ஆற்றினனை மாருமவுணர்யாவருங
தோற்றனரெனேயவாசொல்லறபாலதோ
கூற்றுமென்பெயாசொலக்குலேயுமாலினி
மாற்றவற்காகிவந்தெதிருமாண்பினேர்.

உ0. பேதையெதிர்குவினினும்பெற்றுடை
யூதியவரங்களுமுமுமுள்ளதிற
பாதியுமெனனதாறபகைபபதெனுங்ன
தீதுயொழிகெனநின்றுகூறினன்.

இவையிரண்டுசெய்தலும் - குணகம்; ஒருங்கு உரைக்கப்படுகின்றன.

(இ - ள்.) (கக) ஆற்றினென் - வலிமையோடு போர் செய்தவனை என்னை முன்னிலையில், அமரரும் அவுணர் யாவரும் எனையவர் தோற்றனர் - தேவர்களிலும் அசுரர்களனைவரிலும் எத்தனைபேரைத் தோல்வியுண்டார்கள்; சொல்லற்பாலதோ - (அங்ஙனம் தோற்றவர்களது தொகை) சொல்லத் தக்கதோ? [அன்றென்றபடி]; கூற்றும் - (பிராணிகளை உடல் வேறும் உயிர் வேறுமாகக்) கூறுபடுத்துபவனை யமனும், என் பெயர் சொல நடுங்கும் என் பெயரை (எவரேனும்) சொன்ன வாலியே நடுங்குவான்; இனி - இவ்வாறான பின்பு, மாற்றவற்கு ஆகி வந்து எதிரும் மாண்பினோர் - (எனது) பகைவனை சுக்கிரீவனுக்குத் துணைபுரிந்து வந்து (என்னெதிரே) மாறுபடுந் தன்மையுடையோர், (உ0) பேதையர் - அறிவில்லாதவரேயாவர்; எதிர்குவர் எனினும் - (அங்ஙனம் அவர்கள் என்னை) எதிர்ப்பரேயானாலும், பெற்றுடை - (அவர்கள்) பெற்றுள்ள, ஊதியம் வரங்களும் - லாபகரமான [சிறந்த] வாக்களிலும், உரமும் - பலத்திலும், உள்ளதில் பாதியும் என்னது - அவர்களிடமுள்ளதிற் பாதியோ (அவர்களை விட்டு நீங்கி) என்னுடையதாய்விடும்; ஆல் - ஆதலால், பகைப்பது ஈங்ஙனம் - (அவர்கள் என்னைப்) பகைத்துப் பயன் பெறுவது எப்படி? (ஆகவே) நீ அயா ஒழிக-(யான போர்க்குச்செல்வதைப் பற்றி) நீ அன்பமடையா திருப்பாயாக, என கின்று கூறினன் - என்று (வாலி) சிறிது பொழுது நின்று (தாரைக்குச்) சமாதானஞ் சொன்னன்; (எ - று.)—ஆல் - அசை.

இனி, முதலடிக்கு - (இவ்வாறு) தேவர்களனைவரையும் அசுரர்களனைவரையும் அயர்தீர்த்தே னென்று உரைப்பினுமாம். 'ஆற்றலிலமரர்' என்றும், 'ஆற்றலினமரர்' என்றும் பாடமுண்டு. சொல்லற்பாலதோ என்பதற்கு-(மற்றையோரைப் பற்றிச்) சொல்ல வேண்டியது முண்டோ? என்றலு மொன்று. 'எனையர்சொல்லற்பாலரோ' எனறும் பாட மோதுவர். 'குலியு மாரினி' என்று பாடமாம்போது மாற்றவற்காகி வந்தெதிரு மாண்பினோர் இனி ஆர் எனறு முடிதலு, சுக்கிரீவனுக்குத் துணையாய்வருது எனினுமெதிருந் திறமுடையோ வேறு யா? எனறுமு பொருள் கொளலாம்.

எதிர்குவர், கு சாரியை. ஒழிகென - வீகாரம். என்னுடைய தேகபல வரபலங்களோடு அவர்களுடைய தேகபல வரபலங்களிற் பாதியும் என்னிடம் வந்துசேரு மெனக. அயர் - இலேசம். (கக-உ0)

[சுக்கிரீவனுக்கு இராமன் துணையாய்வந்ததைத் தாரை வாலிக்குக்கூறல்.]

உக. அன்னதுகேட்டவளசசவாயவற்
இன்னுயிர்நட்பமைந்திராமனெண்பவ
னுன்னுயிர்கோடலுக்குடன்வருதானெனத்
தன்னியவன்பினர்சொல்லினுரைத்தாள்.

(இ - ள்.) அண்ணல் கேட்டு - அவ்வாறு (வாலி சொன்னதைக்) கேட்டு, அவன் - அந்தத் தாரையரனவள், (வாலியைநோக்கி), 'அரச - தலைவனே! இராமன் என்பவன்—, ஆயவற்கு இன உயிர் நட்பு அமைந்து - அந்தச் சுக்கிரீவனுக்கு இனிய பிராணநேகிதனுப்பொருந்தி, உன் உயிர் கோடலுக்கு உடன் வந்தான் - உனது உயிரைக் கவர்தற்காக அவனுடன் வந்திருக்கின்றான். எனை - என்று, தனதனிய அன்பினர் சொல்லினர் - (கும்பிடதனப்) பொருந்திய அன்பை யுடையவர்கள் சொன்னர்கள்,' என்றான் - என்று சொன்னள்; (எ - று.)

கேட்டவன் என ஒரு சொல்லாகவும் எடுக்கலாம். அரசன் - பிராணநாயகன். ஆயவன் - ஆகிய அவன், உன் உயிர்கோடல் - உன்னைக் கொல்லுதல். தன்னிய அனபினர் சொல்லினர் - நமக்கு அநுகூலரான சிலர் வந்து சொல்லக் கேள்வியுற்றேன் என்றபடி. என்றதனால், அதனைச் செவ்வையாக விசாரித்துப் பார்த்துக்கொண்டுதான் போகவேண்டு மென்றாளாம். (உக)

[இதுமுதல் ஆறு கவிகள் - வாலி அதற்கு மாறுகூறல்.]

உஉ. உழைத்தவல்வினருவினைக்கூறுகாண்கலா
தழைத்தயருலகினுக்கறத்தினுறலா
மிழைத்தவற்கியல்பலவியம்பியென்செய்தாய்
பிழைத்தனைபாவியுன்பெண்மையாலென்றான்.

(இ - ள்.) 'பாவி - தீவினையுடையவளே?—உழைத்த - (தாம்) செய்து சேர்த்த, வல் இரு வினைகளு - கொடிய இருவகையான கருமங்களுக்கு, ஊறு காண்கலாது - அழிவு காணுமல, அழைத்து - (வருத்தமிகுதியாற்) கூவிக கொண்டு, அயர் - வருந்துகின்ற, உலகினுகு - உலகத்திலுள்ள உயிர்களுக்கு, அறத்தினை ஆறு எலாம் - தர்மமார்க்கங்களெல்லாம், இழைத்தவற்கு - செய்து காட்டுபவனுன அந்தப்பெருமானுக்கு, இயல்பு அல - தகுதியல்லாத வார்த்தைகளை, இயம்பி - சொல்லி, என செய்தாய் - என்ன அபசாரப்பட்டாய்! உன பெண்மையால் பிழைத்தனை - உனது பெண்தன்மைகு ஏற்ற பேதைமையால் (இங்ஙனம்) தவறுசெய்து விட்டாய்,' எனறான - எனறு (தாரையைநோக்கி வாலி) கூறினன்; (எ - று.)

அவ்வாறு தாரைசொல்லக கேட்டவுடன், வாலி, 'பிறப்பு அநாதியாய் வருதலாற் பலபிறப்புக்களில் தாம்செய்து சேர்த்த கொடிய கருமங்களை யொழிக்கும் உபாயத்தைக் காணுமல் வருந்திக் கதறுகின்ற உலகத்தவர்கள் உய்யுமாறு அவதரித்துத் தாமமார்க்கங்களெல்லாம் தான் அனுஷ்டித்துக் காட்டும் புருஷோத்தமனுன அந்த இராமபிரான் விஷயத்தில், 'அவன் சுக்கிரீவனுக்குத் துணையாய் இடையே புகுந்து உன்னைக்கொல்ல வந்திருக்கின்றான் என்று சிறிதுந் தகுதியில்லாத வார்த்தையைச் சொல்லிப் பேசராதம் பண்ணினையே! பாவி! ''நூண்ணறிவுடையோர் நூலெலாடி பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைதே'' என்றபடி பெண்மைக்கு இயல்பான பேதைமையால் நீ இது செய்தனைபோலும்' என்று வெறுத்து உரைத்

தனனென்க. உழைத்த - பெயரெச்சம், காரணப்பொருளது. 'கோய் நீர்த்த மருந்து' என்ற விடத்திற் போல; வருந்துவதற்குக் காரணமான வெனினுமாம். நல்வினையும் பிறப்பிற்கு ஏதுவாதலால், 'வல்லிருவினை' என்றார். "இருள்சேரிருவினையும்" என்றார் திருவள்ளுவனாரும். அழைத்தல் - நமது வினைகள் தீரு முபாயங் கூறுபவனை நாடியழைத்தலுமாம். அல பெயர். (உட)

[இது முதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்]

உசு. இருமையுநோக்குறுமியல்பினுற்றி
பெருமையோவிங்ஙித்பெறுவதென்கொலோ
வருமையினின்றுயிரளிக்குமாறுடைத்
தருமமேதகவிர்க்குமோதன்னைத்தானோ.

(இ - ன்.) இருமையும் நோக்குறும் இயல்பினுக்கு - இம்மை மறுமை யென்னும் இரண்டின் பயன்களையுங் கருதுகின்ற இயல்பையுடையவனை அத்தப்பெருமானுக்கு, இது பெருமையோ - நீ சொன்னபடி செய்வது பெருமையாகுமோ? இங்கு இதின் பெறுவது என்கொலோ - இவ்வாறு செய்வதனால் (அவன்) அடையும் இலாபந்தான் யாதோ? அருமையின்றி நின்று - அருமையான பொருளாய் நின்று, உயிர் அளிக்கும் - எல்லாவுயிர்களையும் பாதுகாக்கின்ற, ஆறு உடை - தன்மையை யுடைய, தருமமே - தருமந்தானே, தன்னை தான் தவிர்க்குமோ - தன்னைத் தான் ஒழிக்குமோ? (எ - று.)—அரோ - ஈற்றசை.

இருமையும் நோக்குறும் இயல்பினுன் - இம்மைப்பயனுகிய புகழும் மறுமைப்பயனுகிய புண்ணியமும் அறத்தினுற் சித்திக்கலைக் கருதி அவ்வறத்தைப் பரிபாலனஞ்செய்யு மியல்புடையவன்; "மண்ணிடை யாவ ரிராகவனன்றி மாதவ மறத்தொடும் வளர்த்தார்" என்றார் பாலகாண்டத்தில் தருமமூர்த்தியான அவன் தருமவிரோதமான காரியத்தைச் செய்யமாட்டானென்பான், 'தருமமே தவிர்க்குமோ தன்னைத் தான்' என்றான். ஒருவரோடொருவர் பொருகையில் அவர்களி லொருவனுக்கு உதவியாய் இடையேபுகுந்து மற்றொருவனைக் கொல்லுதலாகிய அதருமத்தைச செய்து பழிபாவங்களைப் பெறுவ னென்றவாறு. தர்மம் - வடசொல். (உக)

உச. ஏற்றபேருலகெலாமெய்தியீன்றவண்
மாற்றவளேவமற்றவடன்மைந்தனுக்
காற்றருமுவகையாலளித்தவையணைப்
போற்றலியின்னனபுகறற்பாலியோ.

(இ - ன்.) ஏற்ற பேர் உலகு எலாம் - (தன்தந்தை) மேற்கொண்டு அரசாட்சிசெய்த பெரிய உலகமுழுவதையும், எய்தி - (மூத்தமகனுகிய தனக்கு) உரிமையாகப்பெற்று, (உடனே), ஈன்றவள் மாற்றவன் எவ-தன்னைப்பெற்ற தாயினது சக்களத்தியான, கைகேயி சொன்னதனால், அவன்தன் மைந்தனுக்கு-அவளுடைய மகனை பரதனுக்கு, ஆற்ற அரும் உவகையால் அளித்த-

கொள்ளுதற்கு அரிய மகிழ்ச்சியுடனே கொடுத்தருளிய், ஐயனே - சிறந்தவனான இராமபிரானே, போற்றலே - துதியாமல், இன்னன புகறற்பாலையோ - (அவனைக் குறித்து) இத்தன்மையனவான பழிமொழிகளைக் கூறத் தகுவையோ? (எ - று.)

முதலிற் பட்டாபிஷேகத்திற் கென்று குறிப்பிட்ட காளிற்கு முன்னின காளில் தசரதசக்கரவர்த்தி மந்திரிகளோடு ஆலோசித்து ஸ்ரீராமனை வரவழைத்து 'இராச்சிய பாரத்தை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று சொல்லித் தனது ஆளுகைக்கு உட்பட்ட உலக முழுவதையும் வாக்தானமாகக் கொடுக்க, அவன் அதனை ஏற்றுக் கொள்ளுதற்கு உடன்பட்டமை, 'ஏற்ற பேருலகெலாமெய்தி' எனப்பட்டது. ஈன்றவள் - கௌஸல்யை. ஈன்றவன் மாற்றவன் - மாற்றுத்தாய். மற்று - வினைமாற்று, அசையுமாம். ஆற்றரும் உவகை - அளவற்ற மகிழ்ச்சி; அதனை, அயோத்தியா காண்டத்தில் "இப்பொழுதெம்மனோரா லியம்புதற் கெளிதே யாருஞ் செப்பருங் குணத்திராமன் றிருமுகச்செவ்விநோக்கில், ஒப்பதே முன்புபின் பவ்வாசகமுரைக்கக்கேட்ட, அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா," "தெருளுடைமனத்தி மன்ன னேவலிற்றிறம்பவஞ்சி, இருளுடையுலகந், தாங்குபின்னலுக்கினையன்கி னின்றான், உருளுடைச்சகடம்பூண்ட வுடையவ னுய்த்தகாரே, றருளுடை யொருவனீக்க வப்பிணியவிழ்ந்த தொத்தான்" எனக் கூறினர். அளித்தல் - பரதன் பெற்றுக்கொண்டு ஆளுமாறு அரசாட்சியைத் தான் கைவிட்டு வனவாசஞ் சென்றமை. போற்றலே - முன்னிலை யொருமை யெதிர்மறை முற்றெச்சம். புகறல் - புகல்தல். தனக்கு உரியதான நிலவுலகத்தரசாட்சி முழுவதையும் மாற்றுந்தாய் சொல்ல அவள் பிள்ளைக்கு மிக்கமகிழ்ச்சியுடன் கொடுத்து வந்த மகா குணசாலியான இராமபிரானைத் துதிப்பதை விட்டு அந்தப் பெருமான்மேல் இப்படி அபவாத வார்த்தை சொல்லலாமோ? என்றான். பாலை - பாண்மையென்ற பண்பினடியாப் பிறந்த முன்னிலையொருமைக் குறிப்பு முற்று. (உச)

உடு. நின்றபேருலகெலாமெருக்கினேரினும்
வென்றிவெஞ்சிலையலாற்பிரிதுவேண்டுமோ
தன்றுணையொருவரும்தன்னில்வேறிலான்
புன்றொழிற்குரங்கொடுபுணருநட்பனே.

(இ - ன்.) நின்ற பேர் உலகு எலாம் - நிலைபெற்ற பெரிய உலகங்களெல்லாம், எருக்கி னேரினும் - ஒன்றுசேர்ந்து எதிர்த்தாலும், (அந்தஇராமபிரானுக்கு), வென்றி - வெற்றி தருவதற்கு, வெம் சிலை அலால் - (அவனது) வெவ்விய கோதண்டமே யல்லாமல், பிரிது வேண்டுமோ - வேறொருவுதவி வேண்டுவதுண்டோ? [வேண்டா என்றபடி]; தன் துணை தன்னில் வேறு ஒருவரும் இலான் - தனக்குச் சமானம் தன்னைக்காட்டிலும் வேறொருவரு மில்லையாகப் பெற்றவனான அப்பெருமான், புல் தொழில் குரங்கொடு புணரும் நட்பனே - அற்பமான செய்கையையுடைய ஒரு குரங்காகிய சுக்கிரீவனோடு சிநேகஞ் செய்வதனை? (எ - று.)

கெருக்கி - ஒன்றையொன்று கெருக்கி; தம்மில் ஒன்றுசேர்த்து என்றபடி. தன்துணை ஒருவரும் தன்னில் வேறிலான் - "தானே யுவமை தனக்கு" என்னும்படி தனக்குத் தானே நிக ரென்னலாமே யன்றி வேறு உவமை கூறப்பெறாதவன்; "தனக்குவமையில்லாதான" என்றார் திருவள்ளுவர்: "தன்னெப்பாரில்லப்பன்" எனாரூர் ஆழ்வார். பிறிது வேண்டுமோ - வேறு துணையை (அவன) வேண்டுவனே? என்றும் பதப்பொருள் கூறலாம். புணரும் நட்பனே - நட்புப் புணர்வனே, பொருந்தும் நட்பினை யுடையவனே? (உடு)

உசு தம்பியரல்லதுதனக்குவேறுயி
ரிம்பரினிலதெனவெண்ணிமீயய்ந்தவ
னெம்பியும்யானுமுற்றெதிர்ந்தபோரிடை
யம்பிடைதொடுகுமோவருளினுழியான்.

(இ - ன்.) தம்பியர் அல்லது தனகு வேறு உயிர் இலது என எண்ணி - தன்தமபிமாகனே யல்லாமல தனகு வேறோருயிர் இல்லையெனறு எண்ணி, இம்பரின எய்ந்தவன - இவ்வுலகத்தில் (அவர்களோடு) இணங்கி நடப்பவனும், அருளின ஆழியான - அருள் நிறைந்த தொரு கடல்போன்றவனுமான அவவிராமபிரான, எம்பியும் யானும் உறறு எதிரந்த போரிடை - எனதம்பியான சுக்கிரீவனும் யானும் எதிரத்து நினறு செய்யும் போரில், இடை அம்பு தொடுகுமோ - நடுவில் (தான எனமேல) அமபுதொடுப்பனே? [அப்படி அவன் தொடுக்க மாட்டா னெனறபடி]; (எ - று)

இம்பரின் இலது எனறு இயைத்து உரைத்தல் சிறவாமை யுணர்க. உற்று எதிரதல் தவந்தவயுதஞ செயய உடனபட்டு எதிர்தல். போரிடை, இடை - ஏழனுருபு.

கீழ் உஉ - ஆஞ் செய்யுளிற் சுருஙகச்சொன்னதை அடிதத நான்கு செய்யுள்களும் விவரிதத்தன வாதலால, அது - தொகுத்திச் சுட்டலும, இவை - வகுதலுக் காட்டலுமாம். (உசு)

[வாலி மறுத்துச்சொல்லத் தாரை தடுக்க அஞ்சுதல்]

உள. நீருதநிரீ யிறையிவ ணிமைப்பில் காலியி
லுருதத்தவ னுயிராகுடிக துடன்வந தாரையுங்
கருதத்தழித தெய்துவென் கலங்க லென்றனன்
விரைக்குழல் பின்னுரை விளம்ப வஞ்சினாள.

(இ - ள்.) நீ இறை இவண் இருத்தி - நீ சிறிது பொழுது இங்கே இருப்பாய்; இமைப்பு இல் காலியில் - கண்ணிமைப்பொழுது மில்லாத காலத்தில் [ஒருமாதத்திரைப் பொழுதிற குளளாகவே], உருத்தவன் உயிர் குடித்த கோபித்து வந்தவனை சுக்கிரீவனது உயிரைப் பருகி, உடன் வந்தாரையும் கருத்து அழித்து -,அவனுடன் வந்தவாகளை மனமழியச் செய்து, எய்துவென் - மீண்டு வருவேன்; கலங்கல் - (நீ) மனக்கலக்கமுறுதே, என்

ற்கு அஞ்சி நின்றுவிட்டாள்; (எ - று.)

ன்ன - என்று (தாரையை நோக்கி வாலி) கூறினன்; பின் - அதன் பின்பு, வரை குழல் - நறுமணமுள்ள கூந்தலை யுடையவளான தாரை, உரை விளம்ப அஞ்சினள் - (அக்கணவன்கருத்திற்கு மாறான) வார்த்தை சொல்லு

இருத்தி - எவலொருமை. இறை - காலநுட்பம். உருத்து அவனுயிர் குடித்து என்று பிரித்தும் உரைக்கலாம். 'உடன்வந்தாரை' எனறது, அவனது அமைவரான அநுமான் முதலியோரை. கலங்கல - எதிர்மறையொரு மையேவல்; எதிர்மறைவியங்கோளுமாம். விரைகுழல் - இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்தப பிறந்த அன்மொழித்தொகை. பின உரை என்று எடுத்து, மாறனசொல் லெனவுந் தரும். (உஎ)

வேறு.

[வாலி அம்மலையின் ஒருபுறத்தில் வருதல்.]

உஅ. ஒல்லைச் செருவேட் டுயர்வல்புய வோங்க லும்ப
செல்லைக் குமப்பா லிவர்கின்ற விரண்டி ஞேடு
மல்லற் கிரியின் றலைவந்தனன் வாலி கீழ்பாற்
றெல்லைக் கிரியின் றலைதோற்றிய ஞாயி றென்ன.

(இ - ன்.) வாலி - (இவ்வாறுகூறித் தாரையை நிறுத்திய) வாலியான வன்,—ஒல்லை - விரைவில், செரு வேட்டு - போரை விரும்பி, உயர - (அப் போரிலிருப்பதற்காற் பூரித்து) உயர்ந்து, உம்பர எல்லோகும் அப்பால் இவர் கின்ற - தேவலோகத்தின எல்லைகடு அப்பாலும் மேலெழுகின்ற, வல் புயம்-வலிய தோளகளாகிய, ஓங்கல் இரண்டினேடும் - இரண்டு மலைகளுடனே, —மல்லல் கிரியினதலை - வளங்களையுடைய அம்மலையினிடத்து,—கீழ்பால் தொல்லை கிரியின தலை தோறறிய ஞாயிறு எனன - கிழக்குத்திசையிலுள்ள பழமையான உதயகிரியின் சிகரதலில் உதித்துவிளங்கிய சூரியன் போல, வந்தனன் - வந்தான; (எ - று.)

போரேர்வதெனற மகிழ்ச்சியால் தோள்கள் பூரித்தல், சுத்தவீரியல்பு; "செருவென்ற மாறறக் கேட்டுச் சிந்தையி னுவகை பொங்க, மருவொன்று மலங்கணமார்பும் வாகுபூதரமும் பூரித்து" எனக காண்க. இயல்பாகவே மலைகள்போலுள்ள தோள்கள யுத்தோற்சாகததால மிகவும் பூரிக்க வந்தனெனபார், சமதகாரச் தோன்ற 'தோள்களாகிய இரண்டுமலைகளுடனே ஒருமலையின் தலையில் வந்தான' என்றார. ஒல்லை - இடைச்சொல். வேட்டு, வேள் - பகுதி. ஓங்கல் - உயர்ந்தது என மலைக்குக் காரணக்குறி; அல் - கருத் தாப்பொருள்விகுதி. மல்லல் - உரிச்சொல். ஞாயிறு - போலி. 'ஒல்லை' என்றது - 'உயர்' என்பதனேடும், 'வேட்டு' என்பதனேடும், 'வந்தனன்' என் பதனேடும்; 'செருவேட்டு' எனறது - 'உயர்' ஏன்பதனேடும், 'வந்தனன்' என்பதனேடும் சேர்த்தகும்.

இதுமுதற் பதினேழு கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ் சீரொன்று புளிமாங்கனிச்சீரும், மறைறைநானகும் மாச்சீர்களுமாகிய நெடிலடிநான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (உஅ)

[இதுவும் அது]

உக. நின்றனெதிர்பாவருநெஞ்சுநடுங்கியஞ்சத்
தன்தோளுள்வலியாற்றகைமால்வரைசாலும்வாலி
குன்றாடுவந்துற்றனன்கோளவுணன்குறித்த
வன்றாணிடைத்தோன்றியமாகரசிங்கமென்ன.

(இ - ன) தன் தோள வலியால் - தனது தோள்களின வலிமையால், தகைமால் வரை சாலும் - அழகிய பெரிய மலையையொத்த, வாலி - வாலியானவன்,—கோள் அவுணன குறித்த வல் தூணிடை தோனறிய மாகர சிங்கம என்ன - கொடுமையையுடைய இரணியாசுரன குறிப்பிட்ட வலிய தூணினிடத்து வெளிப்பட்ட பெரிய நரசிங்கமூர்த்தி போல,—எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கி அஞ்ச - (தனனைக) காணகினற எல்லாரும் அஞ்சி மனம்நடுங்கும்படி, குனறுவிடு வந்து உறறனன் நின்றன் - அமமலையின ஒருபுறத்தில் வந்துசேர்ந்து நின்றான்; (எ - று.)

எதிர் நினறன :என றெடுத்து, சுக்கிரீவனெதிரில் நின்று னெனினு மாம். நடுங்கி அஞ்ச - அஞ்சி நடுங்க: விகுதிபிரித்துககூட்டல். தோனவலி- புஜபலம, 'சாலும' என்றது, உவமவாசகமாய நினறது. வரை சாலும் - மலையின தனமை யமைந்த வெனனலாம. கோள் - வலிமையுமாம் நரஸிம்ஹம்- மனிதவடிவங்கலந்த சிங்கவடிவம். (உக)

[வாலி ஆவாரஞ்சேய்ய, அப்பேமோலி எல்லாவுலகங்
களிலும் பாவுதல்.]

உ.O. ஆர்க்கின்றபின்னேனறனெதிர்நோக்கினன்றுமார்ததான்
வேர்க்கின்றவானதருமேமறுவெறிதுவீழப்
போர்க்கின்றதெலலாவுலகுமபொதிர்வுற்றபூசல்
கார்க்குன்றமன்னுனிலநதாவியகாலினென்ன.

(இ - ள்.) ஆர்கினற பினனுனதனெ நோக்கினன - கர்ச்சிகின்ற தன்தம்பியான சுக்கிரீவனைப் பாரத்து, தானும ஆரத்தான - (வாலி) தானும் கர்ச்சித்தான்; (அதனால்), வேர்க்கின்ற வானத்து உரும் ஏறு வெறித்து வீழ. (அஞ்சி) வியர்கினற மேகங்களினின்று பேரிடிகள உக்கிரமாய் விழுந்திடும்படி, பொதிர்வு உற்ற - மிகுதிகொண்ட, பூசல் - பேரொலியான து,—கார் குன்றம் அன்னுன நிலம தாவிய காலின என்ன - கருநிறமுடையதொரு மலையைப் போனறவனுன திருமால் உலகமுமூதாவியளந்த திருவடிகள் போல, எல்லாம் உலகும் போர்கினறது - எல்லாவுலகங்களிலுஞ் சென்று பரவிற்று; (எ - று.)

பின்னேன் - பின்பிறந்தவன். 'வேர்க்கின்ற வானம்' என்றது, மழை ஆளித்தல்பற்றி. காலின, இன் - சாரியை. 'காலிதன்னை' என்ற பாடம எளிதிற் பொருந்படும. உவமையணி; கீழிரண்டுசெய்யுள்களும் இவ்வாறே. உருமேறு விழுதல், ஒலிமிகுதியாலான அதிர்ச்சியால். (கூ-o)

[இராமன் வாலியைநோக்கி அதிசயித்தல்.]

கூக. அவ்வேலையிராமனுமன்புடைத்தம்பிக்கைய
செவ்வேசெலநோக்குதிதானவர்தேவர்நிற்க
வெவ்வேலையெம்மேகமெக்காலொடெக்காலவெந்தீ
வெவ்வேறுலகதிவன்மேனியைமானுமென்றான.

(இ - ள்.) அவ்வேலை - அப்பொழுது,—இராமனும் - ஸ்ரீராமபிரானும்,—அனபு உடை தம்பிக்கு - (தன்பக்கல்) அனபையுடைய தமபியான இலக்குமணனேநோக்கி, 'ஐய - அப்பா! செவவே செல நோக்குதி - கண்ருக(க கண பார்வை) செலலுமாறு காண்பாயாக: தானவர் தேவா நிறக - அசுராகளும தேவர்களும் இருக்கட்டும்; உலகதது வெவவேறு-உலகததில தனிததனியேயுள்ள, எ வேலை - எந்தக்கடலும், எ மேகம - எந்த மேகமும, எ காலொடு - எந்தக்காற்றும், எ கரலய வெம தீ - வெவவிய எநதக்காலாகினியும், இவன மேனியை மானும் - இந்த வாலியின உடம்பை ஒகுமா?' என்றான - எனறு வியந்து கூறினான; (எ - று.)

கடல் முதலியவற்றில் எதிவும இவனுடமபை யொவவா தெனறபடி. தானவாகளும் தேவாகளும இவனுகு ஒபபாகமாட்டா ரெனபான, 'தானவர் தேவா நிறக' எனறு பாராமுகமாகக கூறினான. தாநவா - தநுவினமகளள; வடமொழித் தநதிதாந்தநாமம. தமபிக்கு எனறான என இயையும. செல - செல்ல: தொகுதல். வேறு+வேறு=வெவவேறு: மரூஉ. 'எமமேகம' எனற விடத்து 'எம்மேரு' எனப் பாடமோதுவாரு முளர். தமையனா தம்பிமை 'ஐய' என்றது, அனபுபற்றி வந்த மரபுவழுவமைதி. உலகத்து வெவவேறு மானும் என இயைத்து உரைத்தலுமாம. (கூக)

[அதற்கு இலக்குமணன் 'சுக்கிரீவன் செய்தியாலாகிய கலக்கத்தால் ஒன்றையும் உணர்ந்திலேன்' என்றல்.]

கூஉ. வள்ளறகிலையான்பகர்வானிவன்றமமுன்வாணுள
கொள்ளக்கொடுங்கூற்றுவனேகொணர்ந்தான்குரங்கி
னெள்ளறகரும்போரதுசெய்கலனென்னுமின்ன
லுள்ளதறிஞான்றவுணர்வுறறிலனென்றுமென்றான.

(இ - ள்.) வள்ளறகு - வரையாதருளுமியல்பினனான இராமபிரானே நோக்கி, இலையான - இலையபெருமான் [இலக்குமணன்], பகர்வான - விடை கூறபவனும், 'இவன - இச்சுகரீவன, தமமுன வாழ்நான கொண்ட-(தனது) தமையனதி ஆயுளை யொழித்தற்கு, கொடுங் கூறறுவனே கொணர்ந்தான். கொடிய யமனை அழைததுக்கொண்டு வந்தான; குரங்கின் எள்ளறகு அரும்

போர்அது செய்கலன் - (சாதாரணமாய்க்) குரங்குகள் செய்தற்குரிய இகழ்ச்சிக்கு இடமில்லாத போரைச் செய்வானல்லன், என்னும் உ என்பதனுடன் கூட்டுக. இன்னல் - துன்பம், உள்ளத்தின் ஊன்ற - மனத்திற் பதிதலால், ஒன்றும் உணர்வுற்றிலன் - ஒன்றையும் அறிந்தானில்லை,' வீரனான-என்று சொன்னான்; (எ - று.)

சுக்கிரீவன்செய்கின்ற முயற்சி தருமயுத்தமுறைமைக்கு மாறென்பதை உள்ளத்திற்கொண்டு மனங்கலங்கியதைபற்றி, இலக்குமணன் இவ்வாறுகூறினான். 'கூற்றுவன்' என்றது, இராமபிரானை; ''வாலிகாலன்'' என்னாரும். உலகத்து உயிர்களைச் சங்காரிக்கின்ற யமன் இவ்வாலியைச் சங்காரிக்கத் தகுதியில்லாதவனென்பது தோன்ற, 'கொடுங் கூற்றுவன்' எனலாயிற்று. தம்முன் - தமது முன்பிறந்தவனைத் தலையனுக்குக் காரணக்குறி. முன்-காலவாகுபெயர். வாணன் - வாழ்நான் என்பதன் மரூஉ. 'குரங்கென் றெண்ணற்குறும்போர்செய வெண்ணினன்' என்ற பாடத்திற்கு - குரங்கின்தொழிலென்று இகழ்தற்குஏற்ற போரைச் செய்ய எண்ணினனென்னும், 'குரங்கினெனன்னர்க்கரும் போர் செய வெண்ணினன்' என்ற பாடத்திற்கு - உள்ளே தமையனைக் கொல்வதற்குக் கூற்றுவனை உடனழைத்து வைத்துக்கொண்டு வெளியே குரங்குகள் ஸாமான்யமாகச் செய்யும் இகழ்ச்சிக்கிடமில்லாத போரைச் செய்யக் கருதினனே யென்றும் தமதினத்தவரோடு பெரும்போர் செய்யக்கருதினனேயென்றும் பொருளாம். 'எள்ளற்குறும் போர்செயலெய்தினமென்னுமின்னல்' என்றும் பாடங்காணப்படுகின்றது. (கூஉ)

[மற்றும் இலக்குமணன் சுக்கிரீவனது அச்சிரமத்தை எடுத்துக்கூறல்.]

கூக. ஆற்றது பின்னும்பகர்வான றக்காறழங்கத்
தேற்றதுசெய்வார்களைக்கேறுதல்செவ்விதன்றன்
மாற்றனெனைத்தம்முனைக்கொல்லியவந்துநின்றான்
வேற்றார்கடிறத்தியவன்றஞ்சமெண்வீரவென்றான்.

(இ - ன்.) ஆற்றது பின்னும் பகர்வான் - மனம்பொருமல் (இலக்குமணன்) மீளவும் (தமையனைநோக்கிக்) கூறுபவனும், 'வீரமகாவீரனே! அறத்து ஆறு அழுங்க - தருமமார்க்கம் கெட, தேற்றது செய்வார்களை - நம்பத்தகாத காரியத்தைச் செய்பவர்களை, தேறுதல் - நம்புதல், செவ்வியதன்று - நன்மையையுடையதன்று; மாற்றன் எனை - பகைவனைபோல, தம்முனை கொல்லிய வந்துநின்றான் - தனது தமையனைக் கொல்லவந்து நின்றவனுமிய, இவன் - இச்சுக்கிரீவன், வேற்றார்கள் சிறத்து தஞ்சம் என் - அயலார் விஷயத்தில் தஞ்சமாவது எப்படி?' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)—ஆல் - அசை.

நம்பிக்கைக்கு மாறான காரியத்தைப் பிறர்பக்கல் செய்பவன் ''கைக்குமாம், தேவரே கின்னினும் வேம்பு'' என்றபடி நம்விஷயத்திலும் அங்ஙனஞ் செய்யக்கூடுமாதலாலும், ''அன்பீனு மார்வமுடைமை யதனீனும், நண்பென்னுநாடாச்சிறப்பு'', ''அருளென்னும் அன்பீன்குழவி'' என்றபடி உலகின

நிடத்துத் தொடர்புபற்றிச் செய்யும் அன்புதானே அத்தன்மையாற் பிறர் வருந்தக்காணும்விடத்தும் தொடர்புபற்றுதே நிகழ்வதாதலால் நிறந்த உறவினனை தமையனையே கொல்லத்துணிந்தவன் யாதொரு தொடர்புமில்லாத பிறர்க்கூத் துணையாவ னென்பது துணியப்படாமையாலும், இச்சுக்கிரீவனே காம் நம்பலாகா தென்பது, இலக்குமணன் கூறிய கருத்து. தம்முனை மாற்றான் என என்ற மொழிமாற்றி, தமையனைப்பகைவனென்றெண்ணி யென்றலுமாம். ஆற்றாது - எச்சம். தேற்றாது - பெயர். செவ்விது - முற்று. கொல்லிய - எதிர்காலவினையெச்சம் தேற்றாது - ஆலோசியாமல் எனினுமாம். ()

[இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்; அதற்கு இராமபிரான் கூறுஞ் சமாதானம்.]

கூ. அத்தாவிதுகேளெனவாரியன்கூறுவானிப்
பித்தாயவிலங்கினெழுக்கினைப்பேசலாமோ
வெத்தாயர்வயிற்றினும்பின்பிறந்தார்களெல்லா
மொத்தாற்பரதன்பெரிதித்தமனுதலுண்டோ.

(இ - ள்.) 'அத்தா - அப்பா! இது கேள் - (யான்சொல்லும்) இதனைக் கேட்பாய்,' என - என்று, ஆரியன் கூறுவான் - சிறந்த தலைவனை இராமபிரான் (மேல்வருமாறு) சொல்வான்:—இ பித்தா ஆய விலங்கின் ஒழுக்கினை பேசல் ஆமோ - பைத்தியங்கொண்டதுபோன்ற [விவேகமில்லாத] இவ்வகை மிருகங்களின் ஒழுக்கத்தைக்குறித்து (இங்ஙனம் ஆராய்ச்சிசெய்து) பேசுதல் கூடுமோ? எ தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம் ஒத்தால் - எந்தத் தாய்மார் வயிற்றிலும் பின்னேபிறந்தவர்களெல்லாரும் (தம் தம் தமையனோடு) இணங்கியே நடந்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ - (கமனி) பரதன் மிகவுஞ் சிறந்தவனுதல் உண்டோ? (எ - று)

ஜ்ஞாநஹீநமான மிருகஜாதிகளின் ஒழுக்கமுறைமை இப்படி ஆராய்ந்து பேசத்தக்கதன்று என்றும், விவேகருணிபமான விலங்கினத்திலேயன்றிப் பகுத்தறிவுடையரான மனிதரிலும் எல்லாரும் பரதன்போலத் தமையனார்க்குக் கீழ்ப்படிந்து நடப்பதுண்டோ? என்றும், விலங்கின் இயற்கைப் பேதைமையையும், முன்பிறந்தோனுக்கு அடங்கி நடத்தலின் அருமையையும் சுக்கிரீவனது செய்கைக்குச் சமாதானமாகப் பெருமான் இளையபெருமானுக்கு எடுத்துக்காட்டினர் "தன்னடியார் நிறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதருரைக்குமேல், என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தாரென்பர்போலும்" என்றபடி பெருமாள் தமது அன்பர்கள் பக்கல் வரம்பு கடந்த திருவருள்பாலித்து அவர்கள்குற்றத்தைக் குணமாகக்கொள்ளும் மகாகுணமுடையவ ராதலால், இவ்வாறு சுகரீவனைத் தழுவிப்பேசலாயினர். தனக்கென்று தன் தாயார் வாங்கிக்கொடுத்த இராச்சியத்தைக் கைகொள்ளாது விட்டு அதனைத் தமையனார்க்கு வலியச்சென்று கிரப்பந்தித்துக்கொடுக்கும் உத்தமகுணம் பரதாழ்வானொருவர்க்கேயன்றிப் பிறரெவர்க்கும் வாய்க்காதென்பது, பின்னிரண்டடியால் விளங்கிற்று. "தாயுரைகொண்டு தாதை

யுதலிய தாணிதன்னோத், திவினே யென்னோத்தச் செற்னோமுகத்திற்றேக்கிப், போயினே யென்றபோழ்து புகழினெய் தன்மைகண்டால், ஆயிராமர் நின்கோவரோ தெரியினம்மா", "என்புகழ்கின்ற தேழையெயினனே னிரவியென்பான், றன்புகழ்க்கற்றை மற்றையொளிகோத் தவீர்க்குமாபோல், மன்புகழ்பெருமை நுங்கண் மாபிளெர் புகழ்களெல்லாம், உன் புகழ்ரக்கிக் கொண்டா யுயர்குணத்தாவுத்தோனாய்" என்று அதனைக் குகப்பெருமான் பாராட்டிக் கூறியதைக் காண்க.

இங்கு 'அத்தர்' என்றதற்கு, ஈக - ஆஞ் செய்யுளில் 'ஐய' என்றதற்கு உரைத்தது உரைக்க. ஆர்யனென்ற வடசொல் - அடையத்தக்கவனென்றும், (தீவினைகளினின்று) சேய்மையாய் விலகிச் செல்பவனென்றும் காரணம் பொருன்பெறும். விலங்கு - திர்யக்: குறுக்காக வடிவமையப்பெற்றது. ஒழுக்கு - ஒழுகு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். பாதன் என்ற திருநாமத்திற்கு - எல்லாப்பாரங்களையும் சிர்வகிக்க வல்லவ னென்று பொருன்; பின்பு இராமபிரான் - வனவாசஞ் செல்லவும் தசரத சக்கரவர்த்தி மேலுலகஞ் செல்லவும் காவலனில்லாததாகின்ற இராச்சியபாரத்தை வகிக்குக் தன்மைபற்றிப் பரதனென்று திரிகாலஞானியான வசிட்டமாமுனிவர் முன்னமே இவனுக்குப் பெயரிட்டனர். உத்தமன் - வடசொல். (ஈச)

ஈடு. விற்றுங்குவெற்பன்னவிலங்கெழிற்றோளமெய்ம்மை
யுற்றுர்சிலரில்லவரேபலரென்பதுண்மை
பெற்றருழைப்பெற்றபயன்பெறும்பெற்றியல்லா
லற்றுர்நினைவென்றலுக்காருகரார்கொலென்றான்.

(இ - ன்.) வில் தாங்கு - ஒளியைக்கொண்ட, வெற்பு அன்ன - மலை போன்ற, இலங்கு எழில் - விளங்குகின்ற அழகையுடைய, தோள - தோள் களையுடையனே! (உலகத்தில்), மெய்ம்மை உற்றுர் லெர் - (வேதசாஸ்திரங் களிற் கூறியபடி) தவறுத கல்லொழுக்கம் பொருந்தியர் லெரே: அல்லவரே பலர் - அக்கல்லொழுக்கமுடையவரல்லாதவரே பலர்; என்பது—, உண்மை-உண்மையாகும்; பெற்றருழை - (நாம்) சந்திக்கப்பெற்றவரிடத்தில், பெற்ற பயன் பெறும் பெற்றி அல்லால் - கோக்க நற்குணத்தைத் திரித்துக்கொள் ளுந்தன்மையல்லாமல், நவை அற்றுர் என்றலுக்கு ஆருகர் ஆர்கொல் - குற்ற மற்றவரென்று சொல்லுதற்கு உரியவர் யாவருனர்? என்றான் - என்று (இரா மன் இலக்குமணனே நோக்கி) கூறினன்; (எ - று.)

வேதசாஸ்திரங்களிற் கூறிய விதிமுறைப்படி தவறுத கல்லொழுக்க முடையவர் லெரும் அவ்வகையொழுக்கமில்லாதவர் பலருமாயிருப்பதுதான் உலகத்து இயல்பு; "கெல்லுக்குமியுண்டு நீர்க்குநரையுண்டு, புல்லிதழ் பூவிற்கு முண்டு" என்றபடி குற்றமில்லாதவர் உலகத்தில் அரிய ராதலால், அவரவரிடமுள்ள குணங்களை மாத்திரம் நாம் திரித்துக்கொள்ள வேண்டு மென்ற பெருமான் இளையபெருமானுக்குச் சமாதானங் கூறியருளின ரென்ப தாம். வில் தாங்கு - வில்லைத் தரித்த என்றும், எழில் - எழுச்சி யென்றும் உரைக்கலாம். ஆருகர், க் - பெயரிடைநிலை, கொல் - அசை. (ஈடு)

[அப்பொழுது வாலி சுக்கிரீவர் போர்க்கு நேருந்துதல்.]

கூக. வீரத்திறலோரிவையின்னவிளம்பும்வேலை
நேரிற்றிரிவான்மகனிற்றின்செம்மலென்றிப்
பாரிற்றிரியும்பனிமால்வரையன்னபண்பார்
மூரித்திசையாணையிரண்டெனமூட்டினரே.

(இ - ள்.) வீரம் திறலோர் - பராக்கிரமத்தையும் பலத்தையு மூடைய வர்களான இராமலக்குமணர்கள், இன்ன இவை விளம்பும் வேலை - இத்தன்மை யனவான இவ்வார்த்தைகளை(த் தமிழில்) பேசிக்கொண்டிருக்குஞ் சமயத் தில்,—நேரில் திரிவான் மகன் - தேரிலேறி (உலகமெங்குஞ்) சுற்றி வருபவ னான சூரியனது குமாரனான சுக்கிரீவனும், இற்றின் செம்மல்-இற்றினது புதல்வனான வாலியும், என்ற—, இ பாரில் திரியும் பனி மால்வரை அன்ன பண்பார் - இந்த உலகத்திற் சஞ்சரிக்கும் குளிர்ச்சியுள்ள பெரிய மலைகள் போன்ற நிண்மையுடையவர்கள், மூரி திசை யாணை இரண்டு என மூட் டினர் - வலிமையையுடைய இரண்டு திக்கஜங்கள் (ஒன்றோடொன்று போர் செய்தற்கு நெருங்கினாற்) போல (ப் போர்க்குத் தமிழில்) நெருங்கி னார்கள்; (எ - று.)

வலியு பெரிய வடிவிற்கும், கோபாவேசத்திற்கும் உவமை. மூன்றுமடி - இல்போநதுவமையணி. அசலமாய் ஸ்திரமாயிருக்கும் மலைகளல்லாமற் புடைபெயர்ந்து நிலவுலகமெங்குந்திரியும் மலைகளுளவாதலால் அவைபோன்ற வர்களென்க. பண்பு ஆர் என்று பிரித்து, திரியும் மலைகள்போன்ற தன்மை பொருந்திய திக்கஜங்களென்று உரைப்பர் ஒருசாரார். 'என்ற' என்ற பெய ரெச்சத்தின் ஈற்று அகரம் தொகுத்தல் விகாரப்பட்டது. (கூக)

[அவ்விருவரும் சாரி திரிதல்.]

கூஎ. குன்றேடுகுன்றெறுத்தனர்கோளரிக்கொற்றவல்லை
மொன்றேடுசென்றொன்றென றிருற்றனவேயுமொத்தார்
நின்றூர்திரிந்தார்நெடுஞ்சாரிநிலக்திரிந்த
வன்றேட்குயவன்றிணிமட்கலத்தாழியென்ன.

(இ - ள்.) குன்றேடு குன்று ஒத்தனர் - மலையோடு மலை (நெருங்கி னாற்) போன்றவர்களும், கோள் கொற்றம் வல் அரி ஏறு ஒன்றோடு ஒன்று எதிர் சென்று உற்றனவேயும் ஒத்தார் - கொல்லுமியல்பையும் வெற்றியை யும் வலிமையையுமுடைய ஆண் சிங்கங்கள் ஒன்றோடொன்று எதிர்த்துச் சென்று நெருங்கியவற்றையும் போன்றவர்களுமாய், நின்றூர் - (தமிழில்) நெருங்கி நின்றவர்களான அந்த வாலி சுக்கிரீவர்கள், நெடுஞ் சாரி திரிந்தார் - தொடர்ச்சியாகப் பலமுறை வலசாரி இடசாரி திரிந்தார்கள்; (அங்ஙனம் அவர்கள் திரிகின்ற கதியிசையால்), நிலம் - நிலவுலகத்தினிடங்கள், வல் தோள் குயவன் திணி மண்கலத்து ஆழி என்ன - வலிய கைகளையுடைய குய வன் வனைகின்ற மண்பாத்திரங்கட்குத் திண்கருவியான சக்கரம்போல, நின்ற - சுழலலாயின; (எ - று.)

கோள் - உயிர்கொள்ளுதல். ஸிம்ஹமென்ற பெயரின் காரணப்பொருள் தோன்ற, 'கோள்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. சிக்கம் உலகம் - பலபராக்கிரமங்களுக்கும், உச்சிரத்தனமைக்கும். நிரிந்த - முற்று. தன்முகத் தொழில் செய்தற்கு ஏற்ற கைவலிமையையுடையவ னென்பார், 'வன்தோட் குயவன்' என்றார். உவமையணி. 'எதிர்சென்ற உற்றன' எனபதை, 'குன் றேருகுன்று' என்றதனோடுஞ் சேர்க்க. 'கினரோர்,' 'குயவன்றிரி' என்பன பாடபேதம். (கஅ)

[அவர்கள் உராய்தலால் தீ எழுதல்.]

கஅ. தோளோடுதோடேய்த்தலிற்றொன்னிலதாங்கலாற்றூத்
தாளோடுதாடேய்த்தலிற்றந்ததழற்பிறங்கல்
வாளோடுமின்னோடுவபோனெடுவானினோடுங்
கோளோடுகோளுற்றனவொத்தடர்ந்தார்கொதித்தார்.

(இ - ள்.) கோளோடு கோள் உற்றன ஒத்து அடர்ந்தா - (இரண்டு) கிரகங்கள் தம்மில்நெருங்கியன போனமு நெருங்கியவர்களான அவவாலி சுக்கிரீவர்கள், கொதித்தார் - கோபாவேசங் கொண்டவர்களாய், தோளோடு தோள் தேய்ததலின - ஒருவர்தோளோடு மற்றொருவர்தோளே உராய்தலினு லும், தொல் நிலம் தாங்கல் ஆற்று தாளோடு தாள தேய்த்தலின் - பழமை யான நிலவுலகந் தாங்கமாட்டாத [மிக்கவலிமைகொண்ட] ஒருவர்காலோடு மற்றொருவராலே தேய்த்தலினுலும், தந்த - உண்டான, தழல் பிறங்கல் - நீப்பிழம்புகள், வாளோடு மின ஒடிவ போல் - ஒளியோடு மின்னல்கள் ஒடி வனபோல, நெடு வானின் ஒடிம் - பரந்த வானத்தில் விரைந்து செல்லும்; (எ - று.)

தோளோடு தோள் தேய்த்தல் - ஒருவர்தோளினுல் மற்றொருவர்தோளை ஒற்றுதல். தாளோடு தாள் தேய்ததல் - ஒருவர்காலால் மற்றொருவராலே எற்றுதல். பிறங்கல் - உயர்ந்து விளங்குவது எனப் பொருளபடும்; அல் கருத் தாப்பொருள்விகுதி. வாள - உரிச்சொல். ஒடிவ - பெயர். பெரிதாய்விளங்கும் வடிவத்துடன் நெருங்குதல்பற்றி, 'கோளோடு கோளுற்றன வொத்து' என உவமைகூறினன். கோளோடு கோள் - சூரியசந்திர ரென்னலாம். அடர்ந் தார் - பெயர். கொதித்தா - முற்றெச்சம. 'வானினோட' என்றும் பாட முண்டு. (கஆ)

[அவர்கள் சுந்தோபசுந்தர் போலுதல்.]

கஆ. தந்தோள்வலிமிக்கவர்தம்மொருதாய்வயிறுறின்
வந்தோர்மடமங்கைபொருட்டுமலைக்கலுற்றார்
சிந்தோடரியொண்கட்டிலோத்தமைகாதல்செற்ற
சுந்தோபசுந்தப்பெயர்த்தொல்லியினேருமொத்தார்.

(இ - ள்.) தம் தோள்வலி மிக்கவர் - தமது புஜபலத்தால் மிக்கவர் களும், ஒரு தாய் வயிற்றின் வந்தோர் - ஒருதாயின் வயிற்றிலிருந்து பிறந்த

வர்களும், மட மங்கையொருட்டு மலைக்கல் உற்றூர் - மடமைக்குணமுள்ள ஒருபெண்ணின் நிமித்தமாய் (த் தம்மிற்) போர்செய்யத் தொடங்கியவர்களு மான அவவாலி சுக்கிரீவர்,—சிந்து ஓடு - சிதறிப் பாய்ந்த, அரி - (உத்தமவிலக் கணமாகிய) சிவந்த இரேகைகளோடுடைய, ஒள் கண் - பிரகாசமான கண் களோடுடைய, நிலோத்தமை - நிலோத்தமையென்பவளிடத்துக் கொண்ட, காதல் - ஆசையினால், செற்ற - பகைத்து ஒருவரோடொருவர் போர்செய்த, சுந்த உபசுந்தர் பெயர் தொல்லையினோரும் - சுந்தன் உபசுந்தன் என்னும் பெயரையுடைய பழமையான அசுரர்களும், ஒத்தார் - போன்றார்கள்; (எ - று.)—தம் - சாரியை. 'தாம்' என்பது சிறந்த பாடம்.

சுந்தோபசுந்தர் வரலாறு :—திருமாலால் நரசிங்காவதாரத்திற் கொல் லப்பட்டவனான இரணியகசிபுவென்னும் அசுராதிபதி குலத்தில் நிகும்ப னென்பவனது புத்திரர்களாய்த் தோன்றிய சுந்தன் உபசுந்தன என்ற இரு வரும் தம்மில் மிக்கமனவொற்றுமையுடையராய் கடற்றல் இருத்தல் படித் தல் உண்ணல் உறங்கல் முதலிய எல்லாச்செயல்களிலும் எப்பொழுதும் ஒருவரை யொருவர் விடப்பிரியாராய்த் தமது சுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்து வந்தனர். அவர்கள் இளமையில் மூவுலகத்தையும் வெல்லக்கருதி விந்தியகிரியையடைந்து மிக்க வீரதானுட்டானத்தினே திரிமூர்த்திகளைக் குறித்து நெடுங்காலம் அரிய பெரிய தவத்தைச் செய்கையில் அத்தவத்தின் கடுமையைக்கண்டு அஞ்சிய தேவர்கள் மாயையாற் பலமகளிரையேவி அவர்க ளுடைய தவத்திற்குப் பலவாறு பங்குசெய்ய முயன்றும் முடியவில்லை. பின்னர்ப் பிரதியக்ஷமான திரிமூர்த்திகள் அச்சுந்தோபசுந்தர் வேண்டியபடி யெல்லாம் அவர்கட்கு வரங்களைக கொடுத்தருளுகையில், அவவசுரர்கள் 'நாங்கள எவராலும் கொல்லப்படாதவ ராகவேண்டும்' என்று வரம் வேண் டினர். அதற்கு ஆதிதேவர்கள் 'உங்களிருவர்க்கும் பிறவுயிர்களெல்லாவற்று லும் மரணமில்லை' என்று வரமளித்தார்கள். பின்பு அவவிருவரும் மிகச் செருக்கி மூவுலகையும் வெல்லத்தொடங்கி இந்திராதி தேவர்கட்கும் பற்பல முனிவர்கட்கும் மனிதர்கட்கும் மற்றும் பலர்க்கும் மிக்க அன்பத்தை யினைத்து அகேகம்பிராணிகளை அழித்து வந்தனர். பிறகு தேவர்களும் முனி வர்களும் பிரமனைச் சரணமடைந்து செய்திகூற, அக்கடவுள் விசுவகர்மா வைக்கொண்டு மூவுலகத்துமுள்ள அழகிய பிராணிகளினுடைய உடம்பிற் சிறந்த சௌந்தரியத்தில் எள்ளளவு எள்ளளவாக எடுத்தச்சேர்த்து அது கொண்டு எவ்வுலகத்தும் ஒப்புயர்வில்லாத கட்டழகுடைய ஒருபெண்ணை யுண்டாக்கி அக்காரணத்தால் அவளுக்குத் திலோத்தமையென்று பெயரிட்டு அவளைச் சுந்தோபசுந்தரிருக்கின்ற இடத்திற்கு அனுப்பினன். விந்தியமலை யின் தாழ்வரையில் அவ்விருவரும் உல்லாசமாக வீற்றிருக்கையில் அங்கு மலர்கொய்துவந்த அம்மங்கையைக் கண்டு அவளழகை வியந்து ஒருக்கு காமுற்று அருகுசென்று அவளுடையவலக்கையைச்சுந்தனும், இடக்கையை உபசுந்தனுமாகப் பிடித்துக்கொண்டார்கள். இயல்பில் மிகக் கொழுப்பை யுடைய அவவிருவரும் பின்பு வரதானத்தினாலும் செல்வத்தினாலுமாகிய களிப் பேறிஅப்பொழுது மதுபானஞ் செய்ததனாலான மதமும் கொண்டவராய்த்

காமக்களிப்புற்றுத் தம்மில் மாறுபட்டுத் தம்பியை நோக்கி அண்ணன் 'தம்மையனுகிய என்னுற் காதலிக்கப்பட்ட இவன் உனக்குத் தாய்முன்றயன்றே? இவளே நீ விரும்புதல் எற்குமோ?' என்றும், அதற்கு ஈடாகத் தமையனே நோக்கித் தம்பி 'தம்பியாகிய என்னுற் காதலிக்கப்பட்ட இவள் உனக்கு மருமகன் முறையன்றே? இவளே நி விரும்பலாமோ?' என்றும் கூறிக் கோபங் கொண்டு தம் கையிலுள்ள கதாயுதத்தால் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு போர் செய்தி இருவரும் ஒருங்கே ஒருவரால் ஒருவர் அழிக்தனர் என்பதாம்.

("மூராரியை மூராரிநாபிமுனிவாழ்முனியை முக்கட், புராரியை நோக்கி முன்னுட் புரி பெருக்தவத்தின் மிக்கார, சுராரிகடம்மிற் சுக்தோப சுக்தரென்றிருவர் தங்கள், திராரியேவலினுன் வந்த திலோத்தமைதன்னைக் கண்டார்,'' ''காண்டலுமவண்மேல்வைத்தகாதலாலுழந்தி நெஞ்சி, லீண்டிய அயாத்தோடு மிருவரு நயந்தபோழ் தப், பூண்டகுபொலிவினடனபொருட்டமர் தமமிற்பூண்டு, மாண்டனரென்னும் வார்தனை மாகில மறியுமன்றே'' என்ப காண்க.)

ஒருதாய்வயிற்றின் வந்தோர் - ஸஹோதரர் 'மடமங்கை' என்றது, சுக்கிரீவன் மனைவியும் இம்பொழுது வாலிவசத்திலிருப்பவளுமான ருமையை. மடமை - மடவுக்குணங்களி லொன்று; அது - நாணம் முதலிய பிறவற்றிற்கும் உபலக்ஷணம். பொருட்டு - காண்காம்வேற்றுமைச் சொல்லுருபு. முதலிரண்டடிகளிற்கூறிய மூன்று விசேஷணங்களும் - சுந்தோபசுந்தர்க்கும் ஏற்கும்; ஆகவே, அவை - பொதுத்தன்மையாம் உவமை, பின்னிடாமற் போர் செய்தற்கும் அமையும். திலோத்தமா - வடசொல்; திலம் - எள், உத்தமா - மேலானவள். செற்ற, செறு - பகுதி: செறுத்தல் - பகைத்தல், பொருதல். ஸுந்த+உபஸுந்த=ஸுந்தோபஸுந்தர்: வடமொழிப்புணர்ச்சி, குணசந்தி. சுந்தோபசுந்தர் - உயிரினையும்மைத்தொகை, பண்மைவிகுதிபெற்றது. சுந்தோபசுந்தப்பெயர் - ''திலவிகாரமா முயாதிணை.'' 'உண் கண்' என்ற பாடத்திற்கு - மையுண்ட கண்க ளெனக (கூக)

[மற்றும் அவர்கட்குச் சிலஒப்புமைலதுத்தல்.]

சo. கடலொன்றினெடொன்றுமலைக்கவுங்காவன்மேருத்
திடலொன்றினெடொன்றமர்செய்யவுஞ்சீற்றமென்ப
துடல்கொண்டிரண்டாகியுடற்றவுங்கண்டிலாதே
மிடலிங்கவர்வெந்தொழிற்கொப்புரைவேறுகாணேம்.

(இ - ன்.) கடல்ஒன்றினெடுஒன்று மலைக்கவும் - கடல்கள் ஒன்றுடொன்று போர்செய்யவும், காவல்மேரு திடல் ஒன்றினெடு ஒன்று அமர் செய்யவும் - (நிலவுலகத்தைப்) பாதுகாப்பதான மேருமலை (யிரண்டு) ஒன்றுடொன்று போர்செய்யவும், சீற்றம் என்பது இரண்டு ஆகி உடல் கொண்டு உடற்றவும் - கோபமென்கிற குணத்தானே இரண்டு புருஷவடிவங்கொண்டு தாகி (ஒன்றுடொன்று) போரசெய்யவும், கண்டிலாதேம் - பார்க்காத யாம்,

இன்று மிடல் அவர் வேம் தொழிற்கு வேறு ஒப்பு உரை காணேம் - இவ்வுல கத்தில் வலிமையையுடைய அவ்வாலி சுக்கிரீவர் செய்யுங் கொடியபோர்த் தொழிற்கு வேறு உபமானங் கூற அறியோம்; (எ - று.)

கடல் ஒன்றினெடுஒன்றுமலைத்தலும், மேருத்திடல் ஒன்றினெடுஒன்று அமர்செய்தலும், சீற்றமென்பது உடல்கொண்டுஇரண்டாகியுடற்றலும். உள வாயின் வாலிசுக்கிரீவர் இங்ஙனங் கடும்போர்செய்தற்கு ஒப்புமையாகுமென் பது கருத்து; இல்போநுவமையணி. பூமிக்கு மேலும் கீழும் நின்று அதனை நிலைநிறுத்துதலாலும், நதிகளின் உற்பத்திக்கு இடமாகி நின்று அது கொண்டே நிலவுலகத்து உயிர்களைப் பாதுகாத்தலாலும், மலைகள் 'பூதரம்' என்றும், 'கோத்ரம்' எனறும் பெயரெறும; அவையல்புகளைப் பெரியமலை யாகிய மேருவுக்குச் சிறப்புவகையா லேறறி, 'காவல்மேரு' எனப்பட்டது: ''தெரித்தீண்டுமைத்த தீவெலைக்கு நடுவாஞ் சம்புத்தீவதனைத், தரித்து நடு வண் மேருவெனுஞ் சயில மதனிற் றனிலகரும்'' என்ற சூர்மபுராண மும் காண்க; 'மேரு, பூமிக்கு நாராசம் போலத் தென்திருவும் முதல் வட திருவும் வரையும உள்ளே வளர்ந்து வட திருவத்தில் மேலோங்கியிருக்கும் பொன்மயமாகிய மலை' என்ற நூறகொள்கையும நோக்கத்தக்கது. திடல் - மேடு; இதனே உயர்ந்தமலை. கண்டிலாதேம் - எதிர்மறைத் தனமைப்பணமை யிறந்தகால வினையாலணையும் பெயர. அண்டங்கள் நாம பலவாதலாலும் ஒவ்வொரு அண்டத்திறகும் ஒவ்வொரு மேருகிரி உளதாதலாலும், இரண்டு மேருமலைகள் இங்குகொள்ளப்பட்டன; இல்போநுவமை பற்றியுமாம். ()

[அவர்கள் கண்களினின்று வெளிப்படுந் தீ.]

சக. ஊகங்களினையகர்வெங்கணுமிழ்ந்ததியான்
மேகங்களெரிந்தனவெற்புமெரிந்ததிக்கி
னாகங்கணடுங்கினநானிலமுங்குலைந்த
மாகங்களோநண்ணியவிண்ணவர்போய்மறைந்தார்.

(இ - ன்.) ஊகங்களின் நாயகர் - வாநரதலைவர்களான அந்த வாலி சுக்கிரீவாகளுடைய, வெம கண் - வெவ்விய கண்கள், உமிழ்ந்த - சொரிந்த, தீயால் - நெருப்பினால், மேகங்கள் எரிந்தன—: வெற்புமெரிந்த-மலைகளும் எரிந்தன; திக்கின நாகங்கள் நடுங்கின - திக்கஜங்கள அஞ்சிநடுங்கின; நால் நிலமும் குலைந்த - நால்வகைப்பட்ட நிலங்களும் நிலையழிந்தன; மாகங்களோ நண்ணிய விண்ணவர் போய் மறைந்தார் - வானுலகங்களைச் சார்ந்து வசிக் கின்ற தேவர்கள் (அவற்றை விட்டு நெடுந்தூரம் அப்பால்) ஒடி ஒளித் தார்கள்; (எ - று.)

உமிழ்தல் - வெளிப்படுத்தல். எரிந்த, குலைந்த - முற்று. திக்கின் நாகங் கள் - மேழ எட்டுத்திசைகளிலும் இருந்து உலகதைதத்தாங்குகின்ற வாசுகி முதலிய அஷ்டமகாசர்ப்பங்களுமாம். நால் நிலம் - முல்லை, குறிஞ்சி, மரு தம், நெய்தல். முல்லையும குறிஞ்சியும் திரிந்ததே பாலை யாதலாற் பாலைக் குத் தனியே நிலமில்லை யென்பதுபற்றியும், பிராணிசஞ்சாரத்திறகுச் சிறவா

மையாலும், பாலை விலக்கப்பட்டது. (சுற்றடிக்கு - நிலவுலகத்தில் நிகழும் போரைக் கண்டு வியத்தற்பொருட்டு வரும் வழக்கப்படி) பெரிய வானத்தினிடங்களே யடைந்த தேவர்கள் அஞ்சி மறைந்துபோய்விட்டார்க ளென்றும் உரைக்கலாம். உயர்வுநவிற்சியணி. (சக)

[அவர்கள் பலவிடங்களிலும் ஓடியோடிப் போதல்.]

சஉ. விண்மேலினரோநெடுவெற்பின்முகட்டினரோ
மண்மேலினரோபுறமாதிரவீதியரோ
கண்மேலினரோவெனயாவருங்காணநின்றார்
புண்மேலிரத்தம்பொடிப்பக்கடிப்பார்புடைப்பார்.

(இ - ன்.) விண்மேலினரோ - வானத்தின்மேலுள்ளாரோ, நெடி வெற் பின் முகட்டினரோ - பெரியமலைகளின் சிகரங்களி லுள்ளாரோ, மண்மேலி னரோ - நிலவுலகத்தி லுள்ளாரோ, புறம் மாதிரம் வீதியாரோ - (அவ்வுல கத்தின்) சுற்றிலுள்ள திசைகளின் கடையெல்லையொழுங்கி லுள்ளாரோ, (அன்றி), கண்மேலினரோ - நமது கண்களிலுள்ளாரோ, என - என்று, யாவ ரும் காண - எல்லாரும் (விகற்பித்து) நோக்கும்படி, நின்றார் - (எங்கும் ஓடித்திரிந்து சென்று) நின்றவர்களாய் (அவரிருவரும்), புண்மேல் இரத் தம் பொடிப்ப கடிப்பார் புடைப்பார் - புண்களுண்டாகி அவற்றினின்று இரத்தம் சிந்தும்படி (ஒருவரையொருவர்) கடிப்பவர்களும் குத்துபவர்களு மானார்கள்; (எ - று.)

இவ்வாறு போர் செய்யும் வாலிசுக்கிரீவர்கள், திடீரென்று ஆகாயத்தி லெழுவார்கள், மலைச்சிகரத்திற் குதிப்பார்கள், தரையில் வருவார்கள். திக்கு களிலோடித்திரிவார்கள், எல்லாவுயிர்களின் கண்களிலும் இருக்கின்றவர்கள் போல அங்கங்கே நிற்பார்கள், இரத்தங் கொப்பளிக்கும்படி ஒருவரையொரு வர் கடிப்பார்கள், குத்துவார்கள் என்பதாம். வெகு விசையோடு சென்று படவிடங்களில் நின்று போர்செய்தார்க ளென்பது, முதல்மூன்றடிகளால் விளக்கிற்று. அவர்கள் அப்படி அதிவிரைவாகச் சுழன்று திரியும்போது எங்கும் காணலாம்படி யிருத்தலால், 'கண்மேலினரோ' என்றார். இரத்தம் - ரக்தம் புடைப்பார் - அடிப்பவருமாம். (சஉ)

[அவர்கள் கர்ச்சனையும், குத்துதலாலாதும் ஓசையும்]

சஙு. ஏழொத்துடனைந்திசையெட்டொடிரண்டுமுட்டு
மாழிக்கிளரார்கலிக்கைம்மடங்கார்ப்பினோசை
பாழித்தடக்கோளிணமார்பினுங்கைகள்பாய
வூழிக்கிளர்காரிடியொத்ததுகுத்துமோதை.

(இ - ன்.) ஆர்ப்பின் ஓசை - (அவ்விருவரும்) கர்ச்சித்து ஆரவாரிக்கின்ற ஓசையானது,—ஏழ் ஒத்து டன் ஆம் - (தம்மிலுள்ள) ஏழுவகைகளும் தம் மூன் ஒத்து - ஒருங்குசேர்ந்தனவும், திசை எட்டொடு இரண்டும் முட்டும் -

பத்தத் திக்குளிலும் பரவிகிறைவனவுமான, ஆழி-கடல்களில், னெர் - உண் டாகின்ற, ஆர் கலிக்கு - கிறைந்த ஓசையினும், ஐம் மடங்கு - ஐந்து மடங்கு அதிகப்பட்டதும்; பாழி தடதோளினும் - வலிமையுள்ள பெரியதோள்களி லும், மார்பினும் - மார்பிலும், கைகள் பாய - கைகள் விரைந்து சென்று சேரும்படி, குத்தும் - (ஒருவரை ஒருவர்) குத்துதலினாலாகிய, ஓதை - ஓசை யானது,—ஊழி னெர் கார் இடி ஒத்தது - கற்பாந்தகாலத்தில் (பெருமழை பொழிந்து உலகங்களே யழித்தற்கு) எழுகின்ற மேகங்களின் இடிமுழக்கத் தைப் போன்றது; (எ - று)

எழுகடல்களும் பொங்கித் தம்மில் ஒருங்குசேர்ந்து பத்துத்திசைகளி லும் பரவும்போது உண்டாகின்ற ஓசையினும் பலமடங்கு மிகுதியா யிருக் தது அவர்கள் கர்ச்சனைமுழக்க மென்பது, முன்னிரண்டடிகளின் பொருள். 'ஏழொத்தலகம்' எனவும் பாடம். இரண்டு - மேல், கீழ். ஆர் கலி - வினைத் தொகை. கலிக்கு, கான்கனுருபு - எல்லைப்பொருளில் வந்தது. குத்தும் ஓதை- பெயரெச்சம், காரணப்பொருளது. (சுக)

[அவர்கள் கடித்தலாற் பொடிக்கும் இரத்தம்.]

சச. வெவ்வா யெயிற்றுண் மிடல்வீரர்க டிப்ப மீச்சென்
றவ்வா யெழுசோ ரியதாசைக டோறும் வீச
வெவ்வா யுமெழுந் தகொழுஞ்சுடர் மீன்கள் யாவுஞ்
செவ்வா யைநிகர்த் தனசெக்கரை யொத்த மேகம்.

(இ - ன்.) மிடல் வீரர் - வலிமையையுடைய அவ்வீரரிருவரும், மீ சென்ற - ஒருவர்மேலொருவர் பாய்ந்து, வெவ வாய் எயிற்றுல் கடிப்ப - கொடிய தன்மையையுடைய பற்களாற் கடித்தலினால், அவ வாய் எழு-அந்தக் கடித்த வாயிலிருந்து வெளிப்படுகின்ற, சோரி அது - இரத்தமானது, ஆசை கன்தோறும்வீச - எல்லாத் திக்குகளிலும்தெறிக்க, (அவ்விரத்தம் பட்ட தனால்),—எவ்வாயும் எழுந்த கொழுஞ்சுடர் மீன்கள் யாவும் - (வானத்தில்) எவ்விடத்திலும் விளங்குகின்ற மிக்க ஒளியையுடைய நக்ஷத்திரங்களெல்லாம், செவ்வாயை நிகர்த்தன - அங்காரகனைப் போன்றன; மேகம் - மேகங்கள், செக்கரை ஒத்த - செவ்வானத்தைப் போன்றன; (எ - று.)

அவர்கள் ஒருவரை யொருவர் கடித்த வாயிலிருந்து தெறித்த இரத்தம் பட்டதனால் யாவும் செங்நிறமாயின வென்க. செவ்வாய் - நவக்நிரகங்களி லொருவன். அவனது நிறம், செம்மை. சோரிவது சோரியெனக் காரணக்குறி.

வே று.

[வாலியின் தோள்களும், சுக்கிரீவனது மார்பும் தகர்தல்.]

சரு. வெந்த வல்லிரும் பிடைகெடுங் கூடங்கள் வீழ்ப்பச்
சிந்தி யெங்கணுஞ் சிதறுவ போற்பொறி தெறிப்ப
விந்தி ரன்மகன் புயங்களு மிரவிசே யுரனுஞ்
சந்த வண்ணெடுந் தடக்கைக டாக்கலிற் றகர்வ.

(இ - ள்.) வெற்ற வல் இரும்பிடை - (உலக்ஷணத்திற்) பழுக்கக்காய்ச்சி வலிய இரும்பின்மேல், நெடுங் கூடங்கள் வீழ்ப்ப - (கருமான்) பெரிய சம்மட்டிகளை யிட்டு அடிக்க, (அதனால் அவ்விரும்பு), பொறி தெறிப்ப - அனற் பொறிகள் தெறிக்கும்படி, எங்கணும் சிந்தி சிதறுவ போல் - எல்லாப்பக்கங்களிலும் சிந்திச் சிதறுவது போல,—இந்திரன் மகன் புயங்களும் - இந்திரகுமாரனை வாலியின் தோள்களும், இரவி சேய் உரனும் - சூரியகுமாரனை சுக்கிரீவனது மார்பும், சந்தம் வல் நெடுந் தட கைகள் தாக்கலின் தகர்வு - அழகிய வலிய நீண்ட பெரிய கைகள் அறைவதனால் உடைந்துபோவன வாயின ; (எ - று.)

வாலியின் தோள்களுக்கும் சுக்கிரீவனது மார்புக்கும் இரும்பும், சுக்கிரீவன் வாலி என்னும் இவர்கள் கைகளுக்கு இரும்பையடிக்குஞ் சம்மட்டியென்னுங் கொல்லன்கருவியும் உவமை. 'பொறிதெறிப்ப' என்றதை உபமேயத்திற்குங் கொள்ளலாம். சிதறுவ - சிதறுவது என்பதன் விகாரம்.

இது முதல் இருபத்தாறு கவிகள் - பம்பைப்படலத்தின் பதினாறுக்கவி போன்ற கலிநிலைத்துறைகள். (சு)

[இருவரும் போரும் வகைகள்.]

சசு. உரத்தினுண்மடித்துக்குவர்பாதமிட்டுதைப்பர்
கரத்தினுல்விசைத்தெற்றுவர்கடிப்பர்கின்றிடிப்பர்
மரத்தினுலடித்துரப்புவர்பொருப்பினம்வாங்கிச்
சிரத்தின்மேலெறிந்துறுக்குவர்தெழிப்பர்தீவிழிப்பர்.

(இ - ள்.) (இருவரும் ஒருவரை யொருவர்), உரத்தினுல் மடித்து உக்குவர் - மார்பினுல் நெட்டித்தள்ளுவார்கள் ; பாதம் இட்டு உதைப்பர் - கால்களை நீட்டி உதைப்பார்கள் ; கரத்தினுல் விசைத்து எற்றுவர் - கைகளால் வேகங் கொண்டு தாக்குவார்கள் ; கடிப்பர் - கடிப்பார்கள் ; கின்றி இடிப்பர் - தேய்ன்று மோதுவார்கள் ; மரத்தினுல் அடித்து உரப்புவர் - மரங்களைக்கொண்டு அடித்து அதட்டுவார்கள் ; பொருப்பு இனம் வாங்கி - மலைவர்க்கங்களைப் பெயர்த்தெடுத்து, சிரத்தின்மேல் எறிந்து - தலைமேல் வீசி, உறக்குவர் - அச்சமுறுத்துவார்கள் ; தெழிப்பர் - ஆரவாரிப்பார்கள் ; தீ விழிப்பர் - நெருப்புப் புறப்பட(க் கோபத்தால்) விழித்துப் பார்ப்பார்கள் ; (எ - று.)

உறக்குவர், உறக்கு - பகுதி. தீவிழிப்பர்-மத்யமபதலோபஸமாஸம். ()

[இருவரும் அதுவும்]

சஎ. எடுப்பர்பற்றியுற்றிருவரையொருவர்விட்டெறிவர்
கொடுப்பர்வன்குரங்குத்துவர்கைத்தலங்குளிப்பக்
கடுப்பினிற்பெருங்கறங்கெனச்சாளிகைபிறங்கத்
தடுப்பர்பின்றுவசொன்றுவர்தழுவுவர்விழுவர்.

(இ - ள்.) ஒருவரை ஒருவர் - ஒருவரை மற்றொருவர், பற்றி எடுப்பர் - பிடித்துத் தூக்குவர் ; உற்று விட்டு எறிவர் - நெருங்கி வீசியெறிவர் ; வந்த

உரம் கொடுப்பர் - (அங்ஙனம் எறியப்பட்டு வீழ்ந்தவர் உடனே ஒடி) வந்து (எதிரிக்குத்) தன் மார்பை (அவன் தாக்குமாறு) காட்டுவர்; கைத்தலம் குளிப்ப குத்துவர் - (அவ்வாறு காட்டிய மார்பில் தமது) கைமுஷ்டி புதையும்படி குத்துவார்கள்; கடுப்பினில் - வேகத்தோடு, பெருங் கறங்கு என - பெரிய காற்றடியைப்போல, சாரிகை பிறங்க - வலசாரி இடசாரி முறைகள் விளங்க, (கடந்து), தடுப்பர் - (ஒருவரை யொருவர்) தடுப்பார்கள்; பின்றவர் - (வீசையோடு வலியத் தாக்குதற்பொருட்டுச் சிறிது) பின்வாங்குவார்கள்; ஒன்றவர் தழுவுவர் வீழுவர் - பொருந்தி (ஒருவரை யொருவர்) தழுவிக் கொண்டு கீழ் வீழுவார்கள்; (எ - று.)

உற்றுப் பற்றி - நெருங்கிப் பிடித்து எனினுமாம். கொடுத்தல் - இலக்காக்குதல். "ஊக்கமுடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற்குப் பேருந் தகைத்து" என்றபடி பொருகையில் தன்பலங்கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குதல் விலங்குகட்கு இயல்பாம். இனி, பின்றவர் - கால்களோடு கால்களைப் பின்னி யெனினுமாம். கறங்குவது கறங்கு எனக் காரணக் குறி; கறங்குதல் - சுழலல். (சவ)

[இதுவும் அது.]

சஅ வாலினு லுரம்வரிந்தனர்நெரித்துகவணிப்பர்
காலினுனெடுங்கால்பிடித்துடற்றுவர்கழல்வர்
வேலினுலறவெறிந்தனவிறல்வலியுகிராற்
றோலினு லுடனெடுவரைமுழையெனத்தொளைப்பர்.

(இ - ன்.) உரம் வாலினால் வரிந்தனர் - (ஒருவர்) மார்பை (மற்றொருவர் தமது) வாலினாற் கட்டி, நெரித்து உக வலிப்பர் - (எலும்புகள்) நொருங்கிப் பொடியாம்படி இழுப்பர்; காலினுல் நெடுங் கால் பிடித்து உடற்றுவர் - (தமது) காலால் (மற்றொருவரது) நீண்ட காலை மாட்டியிழுத்து வருத்துவர்; கழல்வர் - (பின்பு) சிறிது தெளிவர்; வேலினுல் அற எறிந்த அன - வேலாயுதத்தைக்கொண்டு நன்றாக எறிந்தாற்போன்ற [மிகக்கூரிய], விறல் வலி உகிரால் - மிக்க வலிமையையுடைய நகங்களினால், தோலினுல் உடல் நெடு வரை முழை என - தோலுடன் உடம்பு பெரிய மலையின் குகைபோலாகும்படி [பிளவு கொடுக்கும்படி], தொளைப்பர் - துளைப்பார்கள்; (எ - று.)

அன - அன்ன: தொகுத்தல். விறல் வலி - ஒருபொருட்பன்மொழி; வெற்றியைத்தரும் வலிமை யெனினுமாம். தோலினுல், ஆலுருபு - உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. 'எறிதென' என்ற பாடம் ஏற்கும். (சஅ)

[இதுவும் அது.]

சஆ. மண்ணகத்தனமலைகளுமரங்களுமற்றுங்
கண்ணகத்தினிற்றோன்றியயாவையுங்கையா
லெண்ணகப்பறித்தெறிதலினெற்றலினிற்ற
விண்ணகத்தினோமறைத்தனமறிகடல்வீழ்ந்த

(இ - ள்.) மண் அகத்தன மலைகளும்-நிலத்தினுள்ளே ஊன்றியிருப்பன வாகிய மரங்களையும், மாங்களும் - மரங்களையும், மற்றும் கண் அகத்தினில் தோன்றிய யாவையும் - மற்றும் கண்ணெதிரிற் காணப்பட்ட எல்லாப் பொருள்களையும், எண் கை கையால் பறித்து - (அவர்கள்) வலிமையினால் கைகளாற் பெயர்த்தெடுத்து, எறிதலின் - (அவற்றை ஒருவர்மேல் ஒருவர்) வீசியெறிந்ததனாலும், எற்றலின - (அவற்றைக் கைகளிற்கொண்டு அவற்றால்) அடித்ததனாலும், இற்ற - (அம்மலைமுதலியன) முறிக்தவையாய், விண் அகத்தினை மறைத்தன - ஆகாயத்தினிடத்தை மறைத்தவையும், மறி கடல் வீழ்ந்த - (அலைகள்) மடங்கப்பெற்ற கடலில் (போய்) விழுந்தனவு மாயின; (எ - று.)

'மண்ணகத்தன' என்பதை மரங்களுக்கும் இயைக்கலாம். கண் அகத்தினில் - கண்பார்வையினிடத்தில்; கண்முனனிலையில் என்றபடி. 'இற்ற' என்ற இறந்தகாலப்பலவின்பால் முற்றெச்சத்தில், இறு-பகுதி. மிகுதியால் வானமெங்கும் பரவி நிறைதலால், 'விண்ணகத்தினை மறைத்தன' என்றார். (இ)

[ஒருவர்க்கு ஒருவர் தோற்காமற் சமமாகப் பொருதல்.]

நிம. வெருவிச்சாய்ந்தனர்விண்ணவர்வேறென்னவிளம்ப
லொருவர்க்காண்டமொருவருந்தோற்றிலருடன்று
செருவிற்றுய்த்தலிற்செங்கனல்வெண்மயிர்செல்ல
முரிபுற்கானிடையெரிபரந்தனவெனமுனைவர்.

(இ - ள்.) ஆண்டு அமர் - அப்பொழுது (நிகழ்ந்த) போரில், ஒருவர்க்கு ஒருவரும் தோற்றிலர் - ஒருவர்க்கு ஒருவர் தோற்காதவராய், உடன்று செருவில் துய்த்தலின் - உக்கிரமாய்ப் போர்செய்தலில் ஆசுத்தமடைவதனால், முரி புல் கானிடை எரி பரந்தன என - உலர்ந்த புற்கள் நிறைந்த காட்டில் நெருப்புக்கள் பரவியன போல, வெண் மயிர் செம கனல் செல்ல - வெண்ணிறமான தங்கள் உடம்பு மயிர்களிலிருந்து சிவந்த நெருப்பழல, முனைவர் - அவ்விருவரும் போர்செய்பவரானார்கள்; (அப்போரினகடுமையைக் கண்டு), விண்ணவர் வெருவி சாய்ந்தனர் - தேவர்கள் அஞ்சி நிலைகுலைபவரானார்கள்; (என்றால்), வேறு விளம்பல் என்னை - (அப்போரின் கடுமையைக் குறித்து) மற்றும் சொல்லலாவது என்ன இருக்கின்றது! (எ - று.)

உடன்று, உடல் - பகுதி. 'உடன்று' என்றது, 'செரு' என்றதன்பின் வருவித்த 'செய்தல்' என்பதனோடு சேரும். 'செங்கனல் வெண்மயிர் செல்ல' என்றவிடத்துத் தொடைமுரண் காண்க. (நிம)

[பிறகு வாலி சுக்கிரீவனைக் குத்திக் குமைத்து நிலைகுலைத்தல்.]

நிக. அன்னதன்மையராற்றலினமர்புரிபொழுதின்
வன்னெடுந்தடக்கைவள்புயத்தடுதிறல்வாலி
சொன்னதம்பியைத்தும்பியையரிதெனத்தெளிந்தான்
கொன்னகங்கனிற்கரங்களிற்குலைத்தகமலைத்தான்.

[சுக்கிரீவன் வாலியைத் தாக்குதல்.]

இக. தயங்குதாரகைநிரைதொடுத்தணிந்தனபோல
வயங்குசென்னியன்வயப்புலிவானவல்லேற்றோ
டியங்குமார்பினனெல்லைவந்தடுகிறல்வாலி
பயங்கொளப்புடைத்தெற்றினன்குத்தினன்பலகால்.

(இ - ள்.) தயங்கு தாரகை நிரை தொடுத்த அணிந்தன போல-விளங்குகின்ற நக்ஷத்திரங்கள் வரிசையாக (மாலையாய்த்) தொடுத்து அணியப்பட்டன போல, வயங்கு - (மலர்மாலை) விளங்குகின்ற, சென்னியன் - முடியையுடையவனான சுக்கிரீவன்,—வய புலி - வலிய புலியும், வானம் வல் ஏற்றோடு - மேகத்தில் தோன்றுகின்ற வலிய இடியேறும், உயக்கும் - (கேட்டு) வருத்தும்படியான, ஆர்ப்பினன் - ஆரவாரத்தைச் செய்துகொண்டு, ஒல்லை வந்து - விரைவாய் வந்து அடு திறல் வாலி பயம் கொள - பகையழிக்கும் வலிமையையுடைய வாலி அச்சங்கொள்ளும்படி, புடைத்து - (அவனை) அடித்து, எற்றினன் - மோதி, பல கால் குத்தினன் - பலமுறை குத்தினான்.

தாரகை, பயம் - வடசொற்கள். வய - உரிச்சொல். 'வானம் வல் ஏற்றோடு' என்பதற்கு - வானத்தையனாவிவளர்ந்த [மிகப்பெரிய] வலிய ஆண் சிங்கமும் என்றும் உரைக்கலாம். 'அணிந்தனவெண்பூ' என்று பாடாந்தரம்.

[சுக்கிரீவனை, வாலி உயிர்நிலைகளில் தாக்குதல்.]

இங. அயிர்த்தசிந்தையனந்தகன்குலைகுலைந்தஞ்சச்
செயிர்த்துநோக்கினன்சினத்தொடுசிறுநகைசெய்யா
வயிர்த்தகையினுங்காலினுங்கதிர்மகன்மயங்க
வுயிர்த்தலந்தொறும்புடைத்தனனடித்தனனுதைத்தான்.

(இ - ன்.) (அப்பொழுது வாலி), அயிர்த்த சிந்தையன் - (தோற்றோடிய வன் மீளவும்வந்த தென்ன வென்று) சங்கித்த மனத்தையுடையவனும், அந்தகன் குலைகுலைந்து அஞ்ச - யமனும் அஞ்சிநடுங்கும்படி, செயிர்த்து நோக்கினன் - கோபித்து உறுக்கிப்பார்த்து, சினத்தொடு சிறு நகை செய்யா - அக்கோபத்தாற் சிறிதிரிப்புச்சிரித்து, வயிர்த்த கையினும் காலினும் - உறுதி கொண்ட (தன்) கைகளாலும் கால்களாலும், கதிர் மகன் மயங்க - அச்சுக்கிரீவன் மயக்கமடையும்படி, உயிர்த்தலம்தொறும் - (அவனது) உயிர்நிலைகளிலெல்லாம், புடைத்தனன் அடித்தனன் - குத்தி அடித்து உதைத்தான்—.

கையில்புடைத்தனன் அடித்தனன் காலின் உதைத்தான் என முறை நிரனிறைப்பொருள்கோள். வயிர்த்தல் - வைரங்கொள்ளுதல். கதிர் மகன் - சூரிய புத்திரன். கதிர் - ஒளி; ஒளியை யுடையவனுக்குப் பண்பாகுபெயர். குலைகுலைந்து அஞ்ச - அஞ்சிக் குலைகுலைய: விகுதிபிரித்துக்கூட்டல். இனி, குலை குலைந்து - நாரல் நிலைகுலைந்து என்றலுமாம். 'சினத்தொடு' என்றதில், 'ஒடு' உருபு - ஆலுருபின பொருளில் வந்தது; "ஊசியொடு குயின்ற நூலும் பட்டும்" என்றவிடத்துப் போல. உயிர்த்தலம் - உடம்பில் மர்ம

ஸ்தானங்கள் இவ்குக்கூறிய கிரிப்பு, வீரத்தைஎழுத்த வெகுளி மகை ; இகழ்ச்சி பற்றியதமரம். மயங்குதல் - அறிவு கலங்குதல். அயிர்த்த சிந்தையன்-சிந்தை அயிர்த்தவன். (இசை)

[சுக்கிரீவன் சிதைந்து, இராமனிருக்கின்ற திசையை நோக்குதல்.]

நிரு. கக்கிஞனுயிருயிர்ப்பொடுஞ்செவிகளிற்கண்ணி
ணுக்கதாங்கெரிப்படலியோடுதிரத்தினெழுக்கந்
திக்குநோக்கினன்செங்கதிரோன்மகன்செருக்கிப்
புக்குமீக்கொடுநெருக்கினனிந்திரன்புதல்வன்.

(இ - ன்.) அங்கு - அப்பொழுது, உயிர்ப்பொடும் உயிர் கக்கினன் - (சுக கிரீவன்) பெருமூச்சுடனே உயிரைக் கக்கலானன் ; செவிகளின் - (அவனு டைய) காதுகளிலிருந்தும், கண்ணின் - கண்களிலிருந்தும், எரி படலி யோடு - நெருப்பின் தொகுதியோடு, உதிரத்தின் ஒழுக்கம் - இரத்தப் பெருக்கு, உக்கது-வெளிப்பட்டது ; (இவ்வாறு சிதைவுறற), செம் கதிரோன் மகன் - அந்தச் சூரியகுமாரன் [சுக்கிரீவன], திககு நோக்கினன் - (வேறுகதி யில்லாமையால் இராமபிரான் எழுந்தருளியிருக்கின்ற) திசையை (த் தின மாய்) நோக்கினன் ; இந்திரன் புதல்வன - இந்திரகுமாரனை வாலியோ, செருக்கி - கர்வங்கொண்டு, புக்கு மீ கொடு நெருக்கினன - மேல்மேல் தாக்கி வருத்திக்கொண்டிருந்தான் ; (எ - று)

உயிர்ப்பொடும் உயிர் கக்கினன் - பிராணன் 'போய்விடு மென்னும்படி பெருமூச்சுவிடலானன் எனக. படலம், ருதிரம் என்ற வடசொற்கள் விகா ரப்பட்டன. செம் கதிரோன் - செந்நிறமான கிரணங்களை யுடையவன். நெருக்குதல் - நெங்கடப்படுத்துதல். 'திக்கு நோக்கினன்' என்பதற்கு. (இராமனிருக்கின்ற) திசையைநோக்கி ஓடிவரலானன் என்றும், 'புக்கு மீக் கொடு நெருக்கினன்' என்பதற்கு - தொடர்ந்து அவனமேற்பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டு நெரித்தான் என்றும் உரைப்பினுமாம். (நிரு)

[வாலி சுக்கிரீவனைத் தரையில்மோதுதற்கு எடுக்குஞ்சமயத்தில்
இராமபிரான் வாலியின்மேல் அம்புதொடுத்தல்.]

நிசு. எடுத்துப்பாரிடையெற்றுவாம்பற்றியென்றிளவல்
கடிதலத்தினுங்கழுத்தினுந்தன்னிருகரங்கண்
மடுத்துமீக்கொண்டவாலிமேற்கோலொன்றுவாங்கித
தொடுத்துநாணெடுதாளிறுத்திராகவன்றுரந்தான்.

(இ - ன்.) பற்றியெடுத்து பாரிடை எற்றுவாம் என்ற - '(இவனைப்)பிடித் தெடுத்துத் தரையில் மோதுவோம்' என்ற எண்ணி, இளவல் - தம்பியான அச்சுக்கிரீவனது, கடி தலத்தினும் - இடையிலும், கழுத்தினும் - கழுத்தி லும், தன் இரு கரங்கள் மடுத்து - தனது கைகளிரண்டையுஞ் செலுத்தி, மீ கொண்ட - (அவனை) மேலேயெடுத்த, வாலிமேல் - வாலியினமீது,—இரா கவன் - இராமபிரான், கோல் ஒன்று வாங்கி - ஓர் அம்பை யெடுத்து,

தொடுத்த - (தனது வில்லில்) வைத்து, காணைடு தோள் இறுத்து - அவ்வில் ணியுடனே (தனது) கையையும் இழுத்து, நாண்தான் - செலுத்தினான். ()

வாலிமேல் நாண்தான் என இயையும். ஏற்றவாம் - தனித்தன்மைப் பன்மை. இளவல் - இளையவன்: அல் - பெயர்விகுதி. ராகவன் - ரகுகுலத் தில் அவதரித்தவன்; வடமொழித் தத்திதாந்தாமம் அரையில் ஒரு கையை யும் கழுத்தில் ஒரு கையையுங் கொடுத்துச் சக்திவனே வாலி தூக்கி மேலே யெடுத்துப் பூமியிலேமோதிக் கொல்ல யத்தனிக்கையில், அதுகண்ட இராம பிரான் 'இனி நாம் சும்மாவிருக்லாகாது' என்று நினைத்து ஒருபாணத்தை யெடுத்துக் கோதண்டத்திற் பூட்டி நாணியைத் தோளளவும் இழுத்து வாலி யின் மார்பை இலக்குவைத்து அந்த அம்பைப் பிரயோகித்தனனென்க. தன்னையடுத்துக் குறைவேண்டின ஓர் அத்தனனது குறையைத் தீர்த்தற் பொருட்டுக் குபேரன்மேற் போர்தொடங்கிய ரகுவினது குலத்தில் அவ தரித்தவரான பெருமான் தம்மையடுத்தவனான சக்திவனது குறையை நீக் கும்பொருட்டு வாலிமேல் அம்புதொடுத்தல் இயல்பே என்பது தோன்ற, இங்கு அப்பெருமானை 'இராகவன்' என்ற திருநாமத்தாற் குறித்தனரென்ன லாம். அடுத்தவரை எவ்வகையாலேனும் குறைதீர்த்தப் பாதுகாத்தலே வீரத மாகக்கொண்ட குலத்தில் தோன்றியவரென இவ்விசேஷ்யம் ஒரு கருத்தை புட்கொண்ட தாகுதலால், கருத்துடையடைகோளியணி. 'தோளுறத்த' என்பது, பாடபேதம். (நிசு)

[அந்த இராமபாணம் வாலியின் வலியமார்பை எளிதில் துளைத்தல்.]

நிசு. காரும்வார்சுவைக்கதலியின்கனிகனியினைக்கழியச்
சேரும்சூரியிற்சென்றதுதின்றதன்செப்ப
நீரும்நீர்தருகெருப்பும்வன்காற்றுங்கீழ்நிமிர்ந்த
பாரும்சார்வலிபடைத்தவனுரத்தையப்பகழி.

(இ - ன்.) அ பகழி - அந்த (இராம)பாணமானது,—நீரும்—, நீர் தரு கெருப்பும் - நீரைஉண்டாக்கிய நீரும், வல் காற்றும் - (அந்நெருப்பையுண் டாக்கிய) வலியகாற்றும், கீழ் நிமிர்ந்த பாரும் - (இவற்றிற்கு ஆதாரமாய்க்) கீழே விளங்குகின்ற பூமியும், (ஆகிய பூதங்கள் காரும்), சார் - கொண்ட, வலி - வலிமையை, படைத்தவன் - பெற்றவனான வாலியினது, உரத்தை - மார்பை,—கரும் வார் சுவை - முதிர்ந்த மிக்க உருசியையுடைய, கதலியின் கனியினை - வாழைப்பழத்தை, கழிய சேரும் - தைத்துச் செல்லுகின்ற, சூரியின் - ஊசிபோல, சென்றது - (எளிதில் துளைத்துக்கொண்டு) சென் றது, (என்றால்), செப்ப நின்றது என் - (அந்த ராமபாணத்தின் ஆற்றலைக் குறித்து மற்றும்) கூறவேண்டியதாய் நின்றது யாது உளது? [ஒன்றுமில்லை யென்றபடி]; (எ - று.)

அந்த இராமபாணமானது, தான்குபெரும்பூதங்களின் வலிமை முழுவ தும் நிறைந்த திடகாத்திரமுடைய வாலியின் மார்பிலே, கனிந்த வாழைப்

பழுத்தில் வரை இறங்குவதுபோலச் சிறிதுத்தடைப்படாமல் நுழைந்த தென் பதாம். ஐம்பெரும்பூதங்களுள் முதலதான வானத்திற்கு வடிவமில்லாமை பற்றி, அதனை இங்குக் கூறுராயினர். 'காருண்,' 'உரத்தில்' என்பனவும் பாடம். கதலி, ஸ-ஜி-வடசொற்கள். (இஎ)

[வாலி வீழுதல்]

இஅ அலங்குதோள்வலியழிந்தனன்றம்பியையருளான்
வலங்கொள்பாரிடையெற்றுவானுற்றபோர்வாலி
கலங்கிவல்விசைக்கால்கிளர்க்கதிறிவுறக்கடைக்கால்
விலங்கன்மேருவும்வேர்பறித்தாலெனவீழ்ந்தான்.

(இ - ன்.) அலங்கு தோள் வலி அழிந்தனன் தம்பியை - விளங்குகின்ற தோள்களின் வலிமை யழிந்தவனும் தனது தம்பியுமான சுக்கிரீவனை, அருளான் - (அவன்பக்கல் சிறிதும்) கருணைகொள்ளாதவனும், வலம் கொள் பாரிடை எற்றுவான் உற்ற - வலிமைகொண்ட தரையில் மோதிக் கொல்லுதற்குத் தொடங்கிய, போர் வாலி - போரில்வல்ல வாலியானவன்,—கலங்கி - (அந்த ராமபாணம் பட்டவுடனே) மிலேலகலங்கி,—கடைகால் - கற்பாத்தகாலத்தில், வல் விசை கால் கிளர்த்து எறிவுற - வலிய வேகத்தையுடைய காற்று எழுத்து வீசதலால், மேரு விலங்கலும் வேர்பறித்தால் என - மேருகிரி மிலேபெயர்த்து வீழுந்தாற்போல, வீழ்ந்தான் - விழுந்திட்டான்; (எ - று.)

"பேராண்மை யென்பதறக ணெனறுற்றக்கா, ஓராண்மை மற்றத னெஃகு" என்றபடி, தாக்ஷிணியமின்றிப் பகைவரையழித்தல் தகுதியாயினும் அப்பகைவர்க்குப் போரில் தன்பம்நேர்ந்த இடத்து அவரை அழித்திடாமல் அன்போடுவிடுதல் மிக்க பராக்கிரமத்தையுடைய வீரனது யுத்ததருமமும், தன் தம்பியினிடத்தே மைந்தனிடத்திற்போல அன்பு செலுத்துதல் தன்தை யொப்பவனை தமையனது கடமையுமா யிருக்க, அந்த நீதிசாஸ்திரக் கொள்கைக்கும் தருமசாஸ்திரக் கொள்கைக்கும் மாறுக வாலி தன் தம்பியான சுக்கிரீவனை வலியழித்தலிலும் சிறிதும் இரக்கமின்றிக் கொல்லத்துணிந்தனனதலால் "அதிகமான புண்ணிய பாபங்களுக்கு இம்மையிலேயே பயன்நுகராகும்" என்றபடி அத்தீவினைமிகுதியால் உடனே அழியலாயின னென்பது தோன்றக் கூறினர். இப்படிப்பட்டவனை, "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என்று கொடும்பகைஞனை இராவணனை முதல்காட்போரில் அருள்செய்து விடுக்கும் இயல்புடையவனும் தம்பியர்பக்கல் வரம்பில்லாத அன்புடையவனுமாகிய ஸ்ரீராமபிரான் கொல்லுதல் தகுதியே யென்பதும் இதில் விளங்குதல் காண்க. இவ்வகைப் பெருங்குற்றத்தைத் தன் கண்ணுற் காணுமளவும் பெருமான் அம்புசெலுத்தாமற் பொறுத்திருந்து அதைகண்ட பின்னரே அம்புதொடுத்தனனென்பதும் கருதத்தக்கது. கால் - காலமென் பதன் விகாரம். மேருவும், உம் - உயர்வு சிறப்பு. வல்விசைக் கால் - பிரசண்டமாருதம். 'அழித்த தன்தம்பியை' என்றும் பாடம். (இஅ)

[வாலி சுக்கிரீவனையெடுத்த பிடி நெகிழ்தல்.]

நிகழ். சையம்வேரொடுமுருமுறச்சாய்ந்தெனச்சாய்ந்தான்
வையமீதிடைக்கிடந்தபோதடுதிறல்வாலி
வெய்யவன்றருமதலையைமிடல்கொடுகவரும்
கைநெகிழ்ந்தனனெனிழ்ந்திலன்கடுங்கணைகவர்தல்.

(இ - ன்.) உரும உற - இடி விழுதலால், சையம் - மலை, கோரொடும் சாய்ந்து என - அடியோடு மலைபெயர்ந்து விழுந்தாற் போல, வையம்மீது இடை - பூமியிலே, சாய்ந்தான்கிடந்த - விழுந்துகிடந்த, போர் அடுதிறல் வாலி - போரிற்பகையழிக்கும் வலிமையையுடைய வாலியானவன்,—வெய்யவன்தருமதலையை மிடல் கொடு கவரும் கை நெகிழ்ந்தனன்-சூரியன்பெற்ற குமாரனான சுக்கிரீவனை வலிமைகொண்டு தூக்கியெடுத்த கைகளின் பிடி நெகிழ்ந்து விட்டான்: (ஆனால்), கடுங் கணை கவர்தல் நெகிழ்ந்திலன் - உக்கிரமான (இராம) பாணம் (தனது உடம்பையும் உயிரையும்) பற்றிய பிடி நெகிழப்பெற்றானில்லை; (எ - று.)

சுக்கிரீவனை வலியழித்த நிலையில் வாலி வலிய எடுத்துத் தனையில் மோதிக் கொல்லயத்தனித்தமை, அவ்வாலியைக் கொல்லுமாறு இராமபிரான் அவன்மேல் அம்பு தொடுத்தற்குக் காரணமென்பது கீழ்க்கூறியதனால் விளங்கிற்று: அங்ஙனம் காரணமாகிய வாலியின் கைப்பிடி தளர்த்தாலும், அதன் காரியமாகிய இராமனம்பின்பிடி தளர்க்கிலதெனச் சமத்காரத் தோன்றக் கூறினார்; இதனை, "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழுஞ் சூழ்ந்த வன் கேடு" என்றற்போலக் கொள்க. அத்திருக்குறளி னுரையிற் பரிமேலழகர் 'சூழ்கின்றபொழுதே தானும் உடன்சூழ்தலின், இவன் பிற்படினும் அறக் கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது' என்றதனுள் காண்க. சற்றடி - தோடைமாண். இனி, வாலி சுக்கிரீவனைப்பிடித்த கைகளை கழுவவிட்டு(த் தன்மார்பிற்பட்டு உருவிச் செல்லுகின்ற அம்பைப்) போகவொட்டாமல் உறுதியாகத் தன் கைகளாற் பிடிப்பவனை னென்ற உரைத்தலுமாம். (இக)

[வாலி இராமபாணத்தை வலியப்பிடிக்க முயலுதல்.]

கூ0. வெற்றிவீரனதடுகணைபவன்மிடலுரத்தி
டுற்றதப்புறத்துருதமுனுறவலிக்கரத்தாற்
பற்றிவாலினுங்காலினும்பிணித்தகப்படுத்தான்
கொற்றவெங்கொடுமறலியுஞ்சிரதலக்குலைத்தான்.

(இ - ன்.) வெற்றி வீரனது அடு கணை - ஜயத்தையுடைய மகாவீரனான இராமபிரானது தவருமற் பகையழிக்கவல்ல அம்பானது, அவன் மிடல் உரத்தினூடு உற்றது - அந்த வாலியினது வலிமையையுடைய மார்பிற் சேர்ந்தது; அப்புறத்து உருத முன் - (அதனை முழுவதுந் தொளைத்துக்கொண்டு) அப்பாற் சென்று விடாததன் முன்னே, (அதனை அவ்வாலி), உறவலி கரத்தால்-மிக்க வியையுடைய (தன்) கைகளால், பற்றி - பிடித்து, வாலினும் காலினும்

பிணித்த - (தனது) வாலினுற்கட்டியும் கால்களால் நடுத்தும், அகப்படுத்தான்· அப்பாற்போகவொட்டாமற்செய்தான்; (அப்போராற்றலைக்கண்டு), கொற்றம் வெம் கொடி மறலியும் - (எங்கும்) வெற்றியையுடைய பயங்கரனான கொடிய யமனும், சிரதலம் குலைந்தான் - (அத்திறத்தைக் கொண்டாடித்) தலையசைத்தான் [சிரக்கம்பஞ் செய்தானென்றபடி]; (எ - று.)

உற்றது - பெயர். உற்றதாகிய கணை யென இயையும். வெம், கொடி - ஒரு பொருட்பன்மொழியுமாம். மறலி சிரதலங்குலைந்தான் - அஃறிணையாகிய கணை தான் தொடர்ந்த உயர்திணையாகிய முதலின் முடிபைக் கொண்டது; [தன் - பொது - உக.] (கூ)

[வாலியின் கோபாவேசம்.]

கக. எழுந்துவான்முகடிடித்துகப்படுப்பலென்றிவரு
முழுந்துபோர்வுழித்திசைதிரிந்திறுப்பலென்றுறக்கும்
விழுந்துபாரினேவேரொடும்பறிப்பலென்றேருரு
மழுந்துமிச்சமெய்தவனுர்க்கோலென்றயிர்க்கும்.

(இ - ன்.) (அப்பொழுது வாலி),—எழுந்து-மேற்கிளம்பி, 'வான் முகடு இடித்து - வானத்தின் முகட்டை யிடித்து, உக படுப்பல் - சிந்தும்படி செய்து விடுவேன்,' என்று - என்றெண்ணி, இவரும் - மேலெழுவான்; 'உழுந்து போர்வுழி - (ஓர்) உளுந்து விலைபெயர்த்து (ஒருமுறை) உருளுமளவிலே [அதிவிரைவில் என்றபடி], திசை திரிந்து - எல்லாத்திக்குக்களிலுஞ் சேர்ந்து, இறுப்பல் - (அத்திக்குக்களே யெல்லாம்) அழித்து விடுவேன்,' என்று - என்றெண்ணி, உறக்கும் - குதிப்பான்; 'விழுந்து - கீழ்விழுந்து, பாரினை வேரொடும் பறிப்பல் - பூமியை அடியோடு பெயர்த்தெடுப்பேன்,' என்று ஒரும் - என்று எண்ணுவான்; அழுந்தும் இசரம் எய்தவன் ஆர்கொல் என்று அயிர்க்கும் - ('மிகவலிய என்மார்பில்) பாய்ந்து செல்லுகின்ற இந்த அம்பைத் தொடுத்தவன் யாரோ?' என்று சந்தேகிப்பான்; (எ - று.)

இராமபாணம்பட்டதனால் வாலி துள்ளித் துடிக்கும்போது "எண்பது கோடி கணைக்தெண்ணுவன" என்றபடி அவன் கொண்ட பல எண்ணங்களை இங்ஙனம் எடுத்துக்கூறினர். வான் முகடு - அண்டகோளத்தின் மேலிடம், மேலுள்ள அண்டகடாகம். உழுந்துபோர்வுழி - உழுந்து உருளுங் கால வெல்லை. திரிதல் - சுற்றுதல். உறக்கும் - கோபிப்பானெனினுமாம்; உறக்குதல் - கொதித்தலுமாம். ஓர்தல் - ஆலோசித்தல்; கரும முடிக்கத் துணிதலுமாம். அயிர்த்தல் - ஐயப்படுதல். (கக)

[இதுவும் அது.]

கூ. எற்றுங்கையினிலத்தொடுமெரிப்பொறிபறப்பச்
சுற்றுநோக்குருளுஞ்சுடுசரத்தைத்துணிக்கரத்தாற்
பற்றிவாலிளங்காலினும்வலியுறப்பறிப்பா
னுற்றுருமையினுலேவுமலியெனவுருளுமம்.

(இ - ன்.) (மற்றும் வாலி),—கையினை நிலத்தொடும் எற்றும் - (தன்) கைகளைத் தரையோடு மோதுவான; எரி பொறி பறப்ப - (தன் கண்களி லிருந்து) நெருப்புப்பொறிகள் பறக்கும்படி, சுற்றும் நோக்குறும் - எல்லாப் பக்கங்களிலும் விழித்துப்பார்ப்பான்; சுடு சரத்தை - உக்கிரமான அத்த அம்பை, இணை கரத்தால் பற்றி - (தனது) இரண்டுகைகளாலும் பிடித்து, வாலினும் காலினும் - (தனது) வாலின் உதவியையும் கால்களின் உதவியை யும் கொண்டு, வலிஉற பறிப்பான் - வலியப் பெயர்த்தெடுத்தற்கு, உற்று - தொடங்கி, உருமையின் - (அம்முயற்சி) நிறைவேறுததால், உலவு உறும் - வருத்தமடைவான்; மலை என உருளும்-மலை (புரண்டாற்) போல (நிலவு பொருமல் நிலத்திற்) புரள்வான்; (எ - று.)

கையினை நிலத்தொடும் எற்றும் - கைகளைத் தரையில் அறைவான், கைகளால் தரையை மோதுவான். பறப்ப - இனம்ப. பறிப்பான் - எச்சம். பறித்தல் - பிடுங்குதல். (கூ)

[வாலியின் சங்கை.]

கூ. தேவரோவெனவையிர்க்குமத்தேவரிச்செயலுக்
காவரோவலர்க்காற்றலுண்டோவெனுமயலோர்
யாவரோவெனநகைசெயுமொருவனேயிறைவர்
மூவரோடுமொப்பான்செயலாமெனமொழியும்.

(இ - ன்.) தேவரோ என - ('இந்த அம்பை என்மேல் எய்தவர்) தேவர் களோ?' எனவு. அயிர்க்கும் - சந்தேகிப்பான்; (மற்றும்), 'அ தேவர் - அந்த தேவர்கள், இ செயலுக்கு ஆவரோ - இவ்வகையான செயல்செயகார்களோ? (அன்றியும்), அவர்க்கு ஆற்றல உண்டோ - அவர்கட்கு (எனதுடலைத் தாக்கவல்ல அமபைச்செலுத்தும்) நிறமை யுண்டோ?' எனும் - என்றும் எண்ணுவான; 'அயலோர் யாவரோ - (இதை செய்தவர்) வேறு யாரோ?' என - என்று எண்ணி, நகைசெயும் - சிரிப்பான; 'ஒருவனே இறைவர் மூவரோடும் ஒப்பான் செயல் ஆம் - தானொருவனே நிரிமூர்த்திகளுக்கும் ஒப்பாகினறவனது செய்கையாகும் (இது),' என மொழியும - எனறும் (தனக்குட்) சொல்லிக்கொள்வான; (எ - று.)

தவத்தவயுத்தமாக இருவர் போர்செய்கையில் இடையே ஒருவர்மேல் தாம் அம்பு செலுத்துதலாகிய இத்தகுநியில்செயலைப் புண்ணியப்பயனே நுகர்பவரும் விசேஷஞான முடையவர்களு மான தேவர்கள உடன்பட்டுச் செய்திடா ரெனபான், 'அத்தேவர் இச்செயலுக்கு ஆவரோ' என்றான். தேவ ராஜகுமாரனை என்விஷயத்தில் தேவர்கள் இப்படிச் செய்யக் கடவரல்ல ரென்ற கருத்தை யுட்கொண்டதுமாம். நகைசெய்தது, அத்தொழிலைக் குறித்த இகழ்ச்சிபெற்றி. நிரிமூர்த்திகளி லொருவர்க்குத் தனியே இவ்வகைத் நிறம் இல்லை யெனபதுபற்றி, 'ஒருவனே இறைவர் மூவரோடு மொப்பான் செயலாம்' என்றான். நிரிமூர்த்திகட்கும் ஒப்பான ஒருவனே இது செய்ய வல்லவனென்க. நிரிமூர்த்திகளின் ஆற்றலையுமுடையவன் இராமபிரானென்

ப்பதை இத்தலத்தில் மற்றும் பல இடங்களிலும் காணலாம். இறைவர் - நீலே வர். மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர் ; தொகைக்குறிப்பு. (கூ)

[இதுவும் அது.]

கூச. நேமிதான்கொலோநீலகண்டன்னெடுஞ்சூல
மாமிதாங்கொலோவன்றெனிற்குன்றுருவயிலு
நாமவிந்திரன்வச்சிரப்படையுமென்னடுவட்
போமெனுந்துணிபோதுமோயாதெனப்புழுங்கும்.

(இ - ன்.) ஆம் இது - என்மாபிற்பட்ட இப்படைக்கலம், நேமிதான் கொலோ - (ஸ்ரீமகாவிஷ்ணுவினது) சக்கராயுதமேயாகுமோ? நீலகண்டன் கெடுஞ் சூலம் ஆம் கொலோ - (விஷத்தை அமுதுசெய்ததனால்) கறுத்த கழுத்தை யுடையவனான சிவபிரானது நீண்ட சூலாயுதமாகுமோ? அன்றன்னில் - அவையல்லவென்றால், குன்று உரு அயிலும் - மலையினுருவத்தைச் சிதைத்த, நாமம் இந்திரன வச்சிரம் படையும் - பிரசித்திபெற்ற இந்திரனது வச்சிராயுதமும், என் நடுவண் போம் எனும் துணை போதுமோ - எனது மார்பில் நுழைந்து செல்லு மெனனத்தக்க வலிமை யமைந்ததோ? யாது - (மற்றும் இது) எதுவோ? என - என்று சங்கித்து,புழுங்கும் - தவிப்பான் ; (எ-று.)

முனைஞரில் மலைகள் சிறகுடையனவாயிருந்து பறந்து சனங்களின் மேல் விழுந்து அழித்துக்கொண்டிருந்ததனால் இந்திரன் அவற்றின்சிறகைத் தனது வச்சிராயுதத்தால் அரிந்தன னென்ற வரலாறுபற்றி, 'குன்றுருவயிலும் இந்திரன் வச்சிரப்படை' எனப்பட்டது. அயிலுதல் - உண்ணுதல்; இங்கே, அழித்தலுக்கு இலக்கணை. புழுங்குதல் - கோபதாபங் கொண்டு கொதித்தலுமாம். நீலகண்டன்னெடு—னகரமெய் - விரித்தல் விகாரம். நடுவண் - நடுவிடம். 'நேமிதானகொலோ', 'சூலமாங்கொலோ' என்றவற்றிற்கு அவற்றின அம்சமோ என்பதருத்தி; இங்ஙனங்கொள்ளாவிட்டால், கீழ் (கூக) "அழுந்துமிச்சாமையத்தவன்" என்றதனோடு மாறுபடும். அங்கு அம்பென்று அறிந்தவன் இங்கு எவையோவென்று சந்தேகித்தல் இயலாமை காண்க.

இனி, 'குன்று உருவ அயிலும்' என்பதற்கு - (சிரௌஞ்சமென்னும்) மலையைத் தனைத்த (முருகக்கடவுளின்) வேலாயுதமும் என்றும் உரைக்கலாம். உருவுதல் - ஊடுருவுதல். இங்கு அறிய வேண்டிய கதை:—முருகக்கடவுள் அசுரர்களை யழித்தற்பொருட்டுப் படையெடுத்துத் தேவர்களுடனே சூரபதுமனது மகேந்திராகாரத்தைநோக்கிச் செல்லும் வழியிடையே வானுறவோங்கிய சிரௌஞ்சகிரியைக் கண்டு தேர்வகன் நிகைத்நிடுதலும், நாரதமுனிவர் கூறியதனால், அம்மலையில் ஒருசார் மாயமாபுரியிலே சூரபதுமனதுதம்பியான தாரகன் பல அசுரசேனையுடனே யிருத்தலை யறிந்து, முருகக்கடவுள் தனக்குத் தம்பிமுறையாகின்ற வீரவாகுவைச் சேனையோடு போர்க்கு அனுப்ப, தாரகாசுரன் சேனையுடன் வந்து போர்செய்கையில், அசுரர்கள் அழிந்திட, யானை முகமுள்ள அத்தாரகாசுரன் கடும்போர்புரிந்து சுப்பிரமணிய மூர்த்தியாகமான பூதகணங்களையழித்து முடிவில் முன்னிற்கமாட்டாமல் அம்மலை

யின் ஒருகுகையிலே ஒளித்தனளாக, தொடர்ந்துசென்ற வீரவாகு மூத்தலியோர் பலர் அக்குகையினுள்ளே அம்மலையின் மாயையால் மயங்கிக்கிட-தாரகன் போர்க்களம் புகுந்து பூதகணங்களை வருத்தித்தாத்த, இச்செய்திகளை நாரதமுனிவர் சொல்லக் கேட்டு முருகக்கடவுள் சேனையுடன் சென்று போர்செய்து அவனசுரனது தந்திரங்களையும் தந்தங்களையும் அணித்து அவனது சேனைகளை அழிக்கையில், அவன் அக்கிரௌஞ்சமலையுடன்கூடிப் பலமாயைகள் புரிய, ஆறுமுகமூர்த்தி வேலாயுதத்தை யெறிந்து அம்மலையையும் அவனசுரனையும் அழித்திட்டனனென்பதாம். அன்றியும், இவ்வரலாறு பரசுராமனுக்கும் சுப்பிரமணியனுக்கும் ஒருங்கு படைக்கலவித்தை பயிற்றுவித்தபின்பு அவர்கள் நிறத்தைப் பரீக்ஷிக்கையில் பரசுராமன் அம்பெய்து கிரௌஞ்சகிரியைத் தளைக்க, குமாரமூர்த்தி தனது வேற்படையை அக்கிரியின்மீது எறிந்து அதனைப்பிளந்து தனது வேலின நிறத்தைக்காட்டினனென்ற வரலாறு உண்டு. 'குன்றருவயிலோ' என்பதும் பாடம். (கச)

[வாலி அந்த அம்பைக் கொண்டாடுதல்.]

கூறி. வில்லினற்றுரப்பரிதிவெஞ்சரமெனவியக்குஞ்
சொல்லினனெடுமுனிவரோதாண்டினனென்னும்
பல்லினற்கடிப்புறும்பலகாலுந்தன்னுரத்தைக்
கல்லியார்ப்பொடும்பறிக்குமப்பகழியைக்கண்டான்.

(இ - ன்.) ஆர்ப்பொடும் - ஆரவாரத்துடனே, தன உரத்தை கல்லி பறிக்கும் - தனது மார்பைத் தோண்டிப் பெயர்த்துச்சென்ற, அப் பகழியை - அந்த அம்பை, கண்டான் - பார்த்தவனான வாலி,—'இவெம் சரம் - இந்தக் கொடிய அம்பு, வில்லினல் தூரப்பு அரிது - ஒருவில்லினால் எய்துசெலுத்தற்கு அருமையானது,' என - என்று, வியகரும் - ஆச்சரியப்படுவான்; 'நெடுமுனிவர் - மகாரிஷிகள், சொல்லினல் தூண்டினரோ - (தங்கள்) சொற்களின் வலிமையைக்கொண்டு (இதனை) எவினர்களோ?' எனனும் - என்றெண்ணுவான்; பலகாலும் பல்லினல் கடிப்புறும் - (கோபத்தாலும் வருத்தத்தாலும்) பலமுறை தன்பற்களால் (பற்களை) கடித்துக்கொள்வான்; (எ-று.)

சொல் - அருள்கொண்டு கூறினாலும் வெகுண்டு கூறினாலும் அந்தந்தப் பயன்களைத் தவறாமல் விளைத்திடுகின்ற நிறைமொழிகள். இனி, சொல்லினல் மந்திரபலத்தால் என்றுமாம். கல்லி எனற இறந்தகால வினையெச்சத்தில், கல் - பகுதி. (கஅ)

[வாலி அந்த அம்பைத் தன்மார்பினின்று பிடுங்கக் கருதுதல்.]

கூசு. சரமெனும்படிதெரிந்ததுபலபடச்சலித்திதி
ரமெனும்பதமுயிரொடுமுருவியவொன்றைக்
கரபிரண்டினும்வாலிதுங்காலினுங்கழற்றிப்
பரமனின்னவன்பெயரறிகுவெனெனப்பறிப்பான்.

(இ - ன்.) 'சரம்' எனும் படி தெரிந்தது - (இஃது ஓர்) அம்பு என்கிற நிலைமை தெரிந்ததே; பல பட சலித்து என் - பலவாறுதச் சங்கித்து என்ன பயன்? உரம் எனும் பதம் உயிரொடும் உருவிய ஒன்றை - (எனது) மார்பென் கிற இடத்தை (எனது) உயிருடனே ஆளைத்துக்கொண்டு சென்ற ஒப்பற்ற தான அந்த அம்பை, கரம் இரண்டினும் - (எனது) இரண்டு கைகளாலும், வாலினும் காலினும் - வாலின் உதவியைக்கொண்டும் கால்களின் உதவியைக் கொண்டும், கழற்றி - (எனது உடம்பைவிட்டுக்) கழலப்பண்ணி, இன்னவன் பரமன பெயர் அறிகுவென் - இதனைத்தொடுத்தவனான பெரியோனது பெயரைத் தெரிந்துகொள்வேன்,' என - என்று எண்ணி, பறிப்பான்-(அந்த அம்பை வாலி தன்மார்பினின்று) பிடுங்குபவனைனன்; (எ - று.)

ஹிம்ஹிப்ப தென்பது 'சரம்' என்ற வடமொழிப்பெயரின் காரணப் பொருளாதலால், 'சரம் எனும்படி தெரிந்தது' என்பதற்கு - (இந்த ஆயுதம்) சரமெனப்படுக்தன்மை(என்னைமிகவருத்துகின்றவிதத்தால் எனக்கு அநுபவ விக்தமாய்த்) தெரிந்தது என்றலுமாம். சலித்தல் - எண்ணம்மாறுதல்; இனி, சலித்து - வருந்தி யெனினுமாம். பரமன் - சிறந்தவன; வடமொழிப் பெயர். தன்மார்பைத் தாளைக்கும்படி அம்புசெலுத்தியவன் அனைவரினுஞ் சிறந்தவனதல் வேண்டு மென்பதுபற்றி, 'பரமன' என்றான்; அன்றி, இத்தகுதியில் செயலைச் செய்தவனென்று இகழ்ச்சிக்குறிப்பால் 'பரமன்' என்றனுமாம். 'பரமனன்னவன்' என்ற பாடத்திற்கு - கடவுள் போன்றவனெனக. அம்பு களில் உடையவன் பெயரைச் சொல்லிவைத்தல் இயல்பாதலால், அது கொண்டு இதனை எய்தவனினனெனறு அறியலா மென்க. (சுசு)

[வாலி அந்த அம்பைப் பறித்தல்.]

சுஎ. ஒங்குரும்பெருந்திறலுடைமனத்தனுள்ளத்தன்
வாங்கினன்மற்றவ்வாளியையாளிபோல்வாலி
யாங்குநோக்கினமாருமவுணருமும்பிறரும்
வீங்கினர்கடோள்வீரரையார்வியவாதார.

(இ - ன்.) ஒங்கு - உயர்ந்த, அரு-(பிறாபக்கல்) அருமையான, பெருக் திறல் - மிக்கவலிமையை, உடை - உடைய, மனத்தன - மனத்தையுடைய வனும், உள்ளத்தன் - (அந்த வலிமைக்கு ஏற்ற) மனக்கினர்ச்சியையுடைய வனுமான, யாளி போல் வாலி - சிங்கம்போன்ற வாலியானவன், அவ் வாளி யை வாங்கினன் - அந்த அம்பை(த் தன் மார்பினின்று) பறித்தெடுத்தவிட் டான; ஆங்கு நோக்கினர - அப்பொழுது அதனைப்பார்த்தவர்களான, அமர ரும் - தேவர்களும், அவுணரும் - அசுரர்களும், பிறரும் - மற்றையோரும், தோள் வீங்கினர்கள் - (அந்த அற்புதத்தைக் கண்டதனலாகிய மகிழ்ச்சியால்) தோள்கள் பூரித்தார்கள்; வீரரை வியவாதார் யார் - (உலகத்தில்) வீரரைக் கொண்டாடாதவர் எவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)—மற்று - அசை; பின்பு எனினுமாம்.

இங்கு 'ஒங்கு அரும் பெருக்திறல்' என்றது - மனோபலத்தை; (மனோ பலம் - தைரியம், தெஞ்சுறுதி.) உள்ளமென்பது ஊக்கமென்னும் பொருள

தாதலே, "உன்னமுடைமை யுடைமை," "உன்னத்தினேய துயர்வு," "உன்ன மிலாதவ ரெய்தார்" எனத் திருக்குறளிலும்; "உள்ளமில்லவர்," "புளிஞருன் சுருங்கி" எனச் சிந்தாமணியிலுங் காண்க. ஊக்கமாவது - மனம் மெலிதலின் றீத் தொழில் செய்தலிற் கினர்தல், உன்னம் - ஆகுபெயர். 'மனத்தினு ரவோன்' என்று பாடமோதுவாரு முளர். பின்னிரண்டடி - வேற்றுப் பொருள்வைப்பணி. அதுகண்டு தேவர்கள் அசுரர்கள் முதலானவர்கள் வாலி யைக் கொண்டாடி மகிழ்ந்தார்க ளென்ற சிறப்புப்பொருளே, உலகத்திலே சுத்தவீரர்களைக் குறித்து யார்தான் அதிசயிக்கமாட்டாரென்ற பொதுப் பொருள்கொண்டு விளக்கினர். (கூஎ)

[வாலியின் மார்பினின்று பெருகிய இரத்தவெள்ளம்.]

கூஅ. மோடுதெண்டிரைமுரிதருகடலெனமுழங்கி
யீடுபேருலகிறந்துளதாமெனற்கெளிதோ
காடுமாவடுவிலங்கல்கள்கடந்ததக்கடலி
னூடுபோதலுற்றதனியாத்துயர்த்துளதுதிரம்.

(இ - ன்.) காடு - காடுகளேயும், மா வடு விலங்கல்கள் - மிகப்பெரிய மலைகளேயும், கடந்தது - தாண்டியதாய், அ கடலின் ஊடு போதல் உற்ற தனை ஒத்து - கடலிற்சென்று சேரத் தொடங்கியதைப் போன்று, உயர்ந்த உளது - உயர்ந்துள்ளதாகிய, உதிரம் - இரத்தவெள்ளமானது,—மோடு தெள் திரை முரிதரு கடல் என - உயர்ச்சியான தெளிந்த அலைகள் மடங்கப் பெற்ற கடல்போல, முழங்கி - ஆரவாரஞ் செய்துகொண்டு, ஈடு பேர் உலகு இறந்துளது ஆம் - வலிய பெரிய (பல) உலகங்களைக் கடந்தாம்' எனற்கு - என்று வருணித்துச் சொல்லுமாறு, எளிதோ - எளியதாமோ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

அம்பைப் பறித்தவுடனே வாலியின் மார்பினின்று பெருகி வளர்ந் தெழுந்து காடுமலைகளைக் கடந்துசெல்கின்ற இரத்தவெள்ளமானது கற்பாந்த காலத்தில் உலகங்களில் வியாபித்து அவற்றையழிக்கும் பிரளயக்கடலினும் மிகப்பெரிதா மென்பது, இதன் தாற்பரியம். அந்தப் பிரளயக்கடலைத் தனக்கு உவமை கூறும்படி எளியதன் றென்க. மோடு - உயர்ச்சி. ஈடு - பெருமை; தெடிற்றொடர்க்குற் றுகாத்தின் டகரவொற்று இருவழியிலும் இரட்டாதுகின்றது. முரிதரு, தா - அணைவினை. 'அக்கடல்' எனறவிடத் தில், சுட்டு - பிரசித்திபற்றியது; உலகறிசுட்டு: செய்மைபற்றியதுமாம். உயர்ந்துளது - ஒங்குபெருகியது. 'போதலுற்றதனை' என்றும் படிக்கலாம்.(கூஅ)

[அதுகண்டு சுக்கிரீவனும் வருந்துதல்.]

கூக. வாசத்தாரவன்மார்பெனுமலைவழங்கருவி
யோசைச்சோரியைநோக்கினனுடன்பிறப்பென்னும்
பாசத்தாற்பிணிப்புண்டவத்தம்பியும்பசுங்க
ணீசத்தாரைகள்சொரிதரநெடுநிலஞ்சேர்ந்தான்.

(இ - ள்.) வாசம் தாரவன் - வாசனையையுடைய மலர்மாலையைத் தரித்த வனுடைய அந்த வாலியினது, மார்பு எனும் - மார்பாகிய, மலை - மலையினின்று, வழங்கு - பெருகிய, சோரி ஓசை அருவியை - இரத்தவெள்ளமாகிய ஓரவிரத்தையுடைய அருவிப்பெருக்கை, நோக்கினன் - பார்த்து, உடன்பிறப்பு என்னும் பாசத்தால் பிணிப்புண்ட அ தம்பியும் - உடன்பிறந்தவனென்பதனிபற்றி உண்டான அன்பாகிய கயிற்றினாற் கட்டப்பட்ட தம்பியான அச்சுக்கிரீவனும், பசுங் கண் - பசுமையான (தன்) கண்களினின்று, நேசம் தாரைகள் சொரிதர - அன்பிற்கு அறிகுறியான நீர்த்தாரைகள் பெருக, நெடு நிலம் சேர்ந்தான் - பெரிய தரையில் விழுந்தான்; (எ - று.)

எவ்வளவு பகைமை யிருந்தபோதிலும் ''மரணாந்தானி வைராணி'' என்றபடி எதிரியிறந்தவளவிற் பகைமை நீங்குதலால், அன்புடைத் தம்பியான சுக்கிரீவன் தன் தமையனது மரணத்தைக் குறித்து வருந்தினனென்க. இங்ஙனமே இராவண னிறந்தபின்னர் விபீஷணன் வருந்துவதுங் காண்க. வாலிக்குச் சுக்கிரீவன்பக்கலுண்டானதற்போலப் பெரும்பகைமை சுக்கிரீவனுக்கு வாலியினிடம் ஆகிலில் உண்டானதில்லை யென்பதும் உணரத்தக்கது. மார்பெனும் மலைவழங்கு அருவி ஓசைச்சோரி - உருவகம். உடன் பிறப்பு - ஸஹோதரபாவம். பாசத்தால் - பாசமாகிய பாசத்தால் எனச் சீலேடையுருவகம். பாசம் - அன்பும், கயிறும். அன்புடையார்க்குப் பிறரிடத்தித் தன்பங்கண்ட வழிக் கண்ணீர்விழு மாதலால், அச்சோகக்கண்ணீர் 'நேசத்தாரை' எனப்பட்டது. 'வாசத்தார்' என்றது, போர்க்கு அறிகுறியான அம்பைப் பூமாலையை; அலங்காரத்திற்கு அணியும் நறுமலர்மாலையையுமாம். ()

[வாலி அந்த அம்பிற்பொறிக்கப்பட்டுள்ள பெயரைப் பார்க்கத் தொடங்குதல்]

எ0. பறித்த வாளியைப் பருவலித் தடக்கையாற் பற்றி
யிறுப்பெ னென்றுகொண் டெழுந்தனன் மேருவை யிறுப்
முறிப்பெ னென்னினு முறிவதன் றுமென மொழியாப்[போன்
பொறித்த நாமத்தை யறிகுவா னேக்கினன் புகழோன்.

(இ - ன்) மேருவை இறுப்போன் - மகாமேருகிரியையும் முறிக்கவல்லவனும், புகழோன் - கீர்த்திபெற்றவனுமான வாலி,—பறித்த வாளியை - (தனது உடம்பினின்று) கழற்றிய அம்பை, பரு வலி தட கையால் பற்றி - பருத்த வலிமையுள்ள பெரிய (தன்) கைகளாற் பிடித்து, இறுப்பென் என்று கொண்டு - ஒடிப்பேனென்று கருதி, எழுந்தனன் - எழுந்து, 'முறிப்பென் என்னினும் முறிவது அன்று - (யான்) முறிக்க முயன்றேனாலும் (இது) முறியமாட்டாது,' என மொழியா - என்று (தனக்குட்) சொல்லிவிட்டு, பொறித்த நாமத்தை அறிகுவான நோக்கினன் - (அதிற்) செதுக்கப்பட்டுள்ள பெயரை (இனனதென்று) அறியும்பொருட்டுப் பார்க்கலானான். (எ - று.)—ஆம் - அசை.

அறிகுவான் - எச்சம்; கு-சாரியை. 'எழுத்தனன்' என்பதற்கு - முறித்தத் தொடங்கியென்றும் பெருள் கொள்ளலாம். 'மேருவை யிறுப்பேன்' என்றும், 'மேருவையிரண்டாய்' என்றும் பாடமுண்டு. (எ0)

வே று.

[வாலி அந்த அம்பில் இராம நாமாங்கிதத்தைப் பார்த்தல்]

எக. மும்மைசா லுலகுக் கெல்லா மூலமக் கிரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்குந் தனிப்பெரும் பதத்தைத் தானே
யிம்மையே யெழுமை நோய்க்கு மருந்தினை யிராம னென்னுஞ்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களிற் றெரியக் கண்டான்.

(இ ன்.) மும்மை சால் - மூன்றென்னுந் தொகையமைந்த, உலகுக்கு எல்லாம் - உலகங்க ளெல்லாவற்றிற்கும், மூல மந்திரத்தை - முக்கியமந்திரமாக வுள்ளதும்,—தமர்க்கு - தன்னை ஜபிக்கின்றவர்களான அடியார்கட்கு, தம்மையே முற்றும் நல்கும் - தம்மையே முழுவதுங் கொடுக்கின்ற, தனிப் பெரும் பதத்தை - ஒப்பற்ற சிறந்த சொல்லாக வுள்ளதும்,—தானே - தான் தனியாகவே, இம்மையே - இப்பிறப்பிலேயே, எழுமை நோய்க்கும் மருந்தினை - எழுவகைப்பட்ட பிறப்புக்களாகிய நோய்களெல்லாம் ஒழிப்பதற்கு மருந்தாகவுள்ளதுமான,—இராமன் என்னும் செம்மை சேர் நாமந்தன்னை - 'ராம:' என்கிற சிறப்புப்பொருந்திய திருநாமத்தை,—கண்களின் தெரிய கண்டான் - தனது கண்களினால் (அந்த அம்பிலே) விளங்கப் பார்த்தான், (வாலி) (எ - று.)

தாரகமந்திரமென்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற சிறந்த மகாமந்திரமான ராமநாமத்தின் மகிமை, இங்கு உணர்த்தப்பட்டது; "நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே, தின்மையும் பாவமும் சிதைத்து தேயுமே, சென்மமும் மரணமுமின்றித் தீருமே, இம்மையே ராமவென்றிரண்டெழுத்தினால்" என்றும், "இறுவரம்பி னிராமவென்றே ரும்பர், நிறுவ ரென்பது நிச்சயம்" என்றும் இந்நூல்தொடக்கத்திற் கூறியதுங் காண்க: மேல் கூ - ஆஞ் செய்யுளும் நோக்கத்தக்கது. மூல மந்திரம் - தலைமையான மந்திரம். எல்லாவுலகத்தவராலும் அறிந்து ஜபிக்கப்படுவ தென்பார், 'உலகுக்கெல்லாம் மூலமந்திரம்' என்றார். உலகம் பதினான்காயிருக்க 'மும்மைசால்உலகு' என்றது, மேல் கீழ் நடு என்ற நோக்கத்தால்; அவை ஸ்வர்க்க பூமி பாதாளமெனத் தொகுத்தலைக் கப்படும். மும்மை - மூன்றாயிருக்குந் தன்மை. ராமநாமத்தை ஜபித்தவர் அப்பெருமானுக அவதரித்த ஸ்ரீமந்நாராயணனது பரமபதத்தை யடைந்து அந்த எம்பெருமானுடைய ஸ்வரூபம் முழுவதையும் நிரிகரணங்களாலும் அறவகுத்து ஆனந்தமடைதல்பற்றி, 'முற்றும் தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும்பதம்' எனப்பட்டது. ஸாலோகம் ஸாமீப்யம் ஸாரூபம் ஸாயுஜ்யம் என்னும் முத்திநிலை நான்கையும் அளிக்குமென்பது பற்றி, 'தம்மையே முற்றும் நல்கும்' என்றருளினார். 'தம்மை' என்றது, அந்த நாமத்தின் பொருளான எம்பெருமானைக் குறித்தது; பன்மை, உயர்வுபற்றியது. தமர் -

தம்மவர், தம்மைச்சார்ந்தவர்; இலைப்பெயர் 'தாமே' என்ற எகாரம் - பிரிநிலை; வேறொன்றன் உதவியை வேண்டாம லென்றபடி. 'இம்மையே' என்ற எகாரம் - தேற்றம்; "சரீராவஸாநத்திலே மோக்ஷம்" என்று போருளாளப் பெருமான் தாமே திருவாய்மலர்ந்தருளியபடியும், "சரணமாகுக் தனதா னடைந்தார்க்கெல்லாம், மரணமாஞல் வைகுக்தங் கொடுக்கும் பிரான்" என்று கம்மாழ்வார் அருளிச்செய்தபடியும், எம்பெருமானது அடியார்கட்கு இப் பிறப்பின் முடிவிலேயே முத்தி கிடைத்தலால், 'இம்மையே எழுமை தோய்க் கும் மருந்து' எனப்பட்டது எழுமை - தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன், நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புகள். முத்தி பெற்றவர்க்கு மீண்டும் கருமவசமான பிறப்பு இல்லையென்பது உணர்க. இரா மன் - 'ராமஃ' என்ற வடசொல்லின் விகாரம். செம்மை-செவ்வி. இராமகாம மென்ற ஒருபொருளினிடத்து மூன்று தன்மைகளைக் கூறியது, பலபடப் புனைவணி. 'கண்டான்' என்றவிடத்து, 'கண்களின்' என வேண்டாது கூறி யது, கண்கள் படைத்தபயனைக் கண்டானென ஒரு சிறப்புப்பொருள் தோன்றநின்றது. தெரியக் கண்டான் - நன்றாகப் பார்த்தா னென்க. மூல மக்ரம், பதம், நாமம் - வடசொற்கள்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - மராமரப்படலத்தின் பதினேராங் கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (எக)

[தன்மேல் அம்பெய்தவன் இராமனென்று உணர்ந்து வாலி இகழ்தல்.]

எஉ. இலலறகதுநகதகம்பிமியமம'ஞாக்காகததகள
வில்லறந்துறந்தவீரன்றொன்றலால்வேதநூலிற்
சொல்லறந்துறந்திலாதசூரியன்மரபுந்தொல்லை
நல்லறந்துறந்தெனைகைவாகாணுட்கொண்டான்.

(இ - ன்.) 'இல் அறம் துறந்த நம்பி - (தனது) இருகத்திலிருந்து தரு மஞ்செய்தலேலிட்டு வகவாஸம்புக்க சிறந்த ஆண்மகனும், எம் ஆனோர்க்கு ஆக - எம்மைப்போன்றவர்களுக்காக, தங்கள் வில் அறம் துறந்த - தங்கட்குப் பரம்பரையாக உரிய விற்போர்முறைமையை விட்டிட்ட, வீரன்-வீரனுமான இராமன், தோன்றலால் - பிறந்ததனால்,--வேதம் நூலில் சொல் அறம் துறந் திலாத சூரியன் மரபும் - வேதசாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட தருமங்களைக் கைவிடாமல் அனுட்டித்திவந்த சூரியகுலமும், தொல்லை நல்அறம் துறந் தது-தொன்றுதொட்டு வருகின்ற நல்ல தருமத்தை விட்டதாயிற்று,' என்ஞ- என்ற எண்ணி, நகை வர-சிரிப்புண்டாக, காண் உள் கொண்டான்-நாணத்தை மனத்திற் கொண்டான்; (எ - று.)

இல்லறம்துறந்த நம்பி - மனையாள் முதலானோரோடு இருகத்தில் வாழ்ந்து செய்யுங் இருகஸ்தாச்சிரமதருமத்தை விட்டுத் தாய் தந்தை தம்பி முதலிய சுற்றத்தார்பக்கல் அன்பின்றி நீங்கி வாகப்பிரஸ்தாச்சிரம தருமத்தை மேற் கொண்டு இருகத்தைவிட்டு மனையாளோடு தவவேடம்பூண்டு வனத்திற் சென் றவ னென்றபடி. அன்றி, இல்வாழ்க்கைக்குத் தகுணபாகிய மனைவியை (இரா

வணன் கவர) இழந்துவிட்டு அதற்கு எதிரொன்றுஞ்செய்யாதவு னென்ற பொருளில் 'இல்லறத்துறந்தம்பி' என்றதுமாம்; இலக்ஷ்ணே. எம் அனுஜர் - எம்மோடொத்தவர்; இங்கு 'எம்மனுஜர்க்காக' என்றது, எமக்காக என்றபடி; ஒப்பில்போலியும், தனமைப்படர்க்கையுமாம்: பனமை - தன்தம்பியையுங் கூட்டிய உளப்பாட்டுத் தன்மைப்பன்மை: எனக்குப் பிரதிகூலமாகவும், என் தம்பிக்கு அநுகூலமாகவு மென்க; என்னைத் தொலைத்தற்காகவும், சுக்கிரீவனுக்கு உதவியாகவும் என்றவாறு. வில்லறம்துறத்தல் - இருவர் த்வந்த்வ யுத்தஞ்செய்கையில் வில்போர்முறைமைக்கு மாறுக இடையே தான் புகுந்து மறைந்துநின்று அவர்களிலொருவர்மேல் அமபெய்தல்; "இருவரு ழனேந்த போரி லிளோத்தவற் குதவியாகப், பொருவது கடனன்றி" என்றது, மகாபாரதம். நம்பி - ஆடவரிறந்தவன், புருஷோத்தமன. இங்கு 'நம்பி,' 'வீரன்' என்றவை - இகழ்ச்சிக்குறிப்பாய் எளிமைகுறிக்கும். தோனறலால் அறத்தது என இயையும். ("ஏகஃ பாபானி குருதே பலம் புஷ்கலதே மஹாஜனஃ" என்றவாறு,) இப்படி என்பக்கல் இராமனுருவன அநீதிசெய்ததனால் அவன பிறந்த சூரியகுலமு முழுவதற்குமே சிறப்பழிந்த தெனரு னெனக. நகைப்பு வந்தது, இகழ்சிபற்றி. "பிறர்பழியுந் தம்பழியும் நாணுவர் நாணுக்கு, உறை பதி யெனனு மூலகு" என்றபடி பிறாகுவரும்பழியையும தமக்குவந்த தாகவேகருதி நாணுதல் உயாநதோரியல் பாதலால, இராமனது பழிகதத்தக்க செயலேகருத்தி வாலி நாணங்கொண்டான. அனறி, நாண் உட்கொண்டது. 'இங்ஙனஞ்செய்த போலிவீரனது அம்புபட்டதனால் தான உயிரிழகக நோதல்கருதி யென்றுமாம். நாண - நாணம்; லஜ்ஜை: முதனிலைதொழிற பெயா. வேதனூல் - உம்மைத்தொகையும், பண்புதொகையுமாம. தொலலை. பழமையான. (எஉ)

[இதுவும் அது.]

எக. வெள்கிடமகுடஞ்சாய்க்குமவெடிபடசிரிகுமீட்டு
முள்கிடுமிதுவுதானேரோகுகற்மோவென்றனனு
முள்கிடுங்குழியிற்புக்கமூரிவெங்களிகல்பாணை
தொள்கொடுங்கிடகதென்னத்துயருழந்தழிந்துசோவான்.

(இ - ன்.) முன்கிடும் குழியில் புக்க - முழுகி அழுந்ததக்க பெருங்குழியிலே விழுந்து அகப்பட்டுக்கொண்ட, மூரி வெம களி கல் யானை-வலிமையையுடைய வெவவிய மதங்கொண்ட சிறநத ஓர ஆண்யானையானது, தொன் கொடும் கிடந்தது எனன - வருநதத்துடனே (அங்கு) கிடந்தது போல, துயர் உழந்து அழிந்து சோர்வான் - தனபமனுபவித்துக்கொண்டு மிகவு மழிந்து தளர்பவனுன வாலி,—வெள்கிட - மனத்திலநாணமுற்றதனால், மகுடம் சாய்க்கும்—கிரீடமணிந்த தலையைச் சாயப்பான; வெடிபட சிரிக்கும் - பெருமுழக்கமுண்டாகச் சிரிப்பான்; மீட்டும் உன்கிடும்-(கடந்தசெய்கியைக் குறித்து) மீளவும் ஆலோசிப்பான்; இதுவும தான் ஓர ஒகுது அதமோ என்று உன்னும். இப்படி அம்பெய்ததானும் ஒரு சிறந்த தருமமாகுமோ வென்று எண்ணுவான்; (எ - மு.)

வெல்கிட, உள்கிடும், முன்கிடும என்றவற்றில்—வெள்கு, உள்கு, முன்கு - பகுதி. மகுடம் - கிரீடம்: வடசொல்; அதனையணியும் முடிக்குத் தானியாகுபெயர். இங்கு 'வெடிபடச்சிரிக்கும்' என்பதனால், கீழ்ச்செய்யுளில் 'நகைவர' என்றது - புன்சிரிப்பு உண்டாக என்றவாறும். 'வர' என்ற சொல்லும், (புதிதாகச் சிறிது) எழுதலைக் குறிப்பிக்கும். இனி, மீட்டும் வெடிபடச் சிரிக்கும் என்று இயைத்தால், கீழ்ச்செய்யுளில் 'நகைவர' என்றதும் வெடிசிரிப்பாகலாம். உள்குதல் - வருத்தத்தோடுசிந்தித்தல். முன்கிடுகுழி - பெரும்பள்ளம், படுகுழி. யானை பிடிப்பவர் யானைக்காட்டில் ஒரு பெரும்பள்ளத்தைப் பறித்து அதன் இப்புறத்திலே தாம் பழக்கிவைத்துள்ள கொணர்ந்த பெண்யானையை நிறுத்த, அப்புறத்திலுள்ள ஆண்யானை அதனோடுசேரும் விருப்பத்தால் ஓடிவருகையில் அப்படுகுழியில் வீழ்ந்துமேலேற மாட்டாமல் அகப்பட்டுக்கொள்ள, அதனை அவர்கள் பின்பு தந்திரமாக வலங்கிட்டு மேலேற்றித் தம்வசப்படுத்திக் கொள்ளுதல், இயல்பு; அவ்வாறு இராமன செய்த தந்திரத்தால் வாலி அகப்பட்டு வருந்தலாயின னென்பது, பின்னிரண்டடியிற கூறிய உவமையால் விளங்கும். நல் யானை-உத்தம விலக்கணமமைந்த கஜம். தொன்கு - கெகிழ்வு, குழைவு; இச்சொல்லுக்கு-வலியென்ற பொருளு முண்டு; இங்கே இலக்கணையாய்க் கால்வலிவு கென்னவுமாம். அது, அம்புகளு உவமையாம். உழந்து, உழ - பகுதி. சாய்க்கும்-அசைக்கு மெனினு மாம. 'வெல்கிடும்,' 'சோரும்' என்பன - பாடபேதம். (எசு)

[இராமபிரான் வாலியின் எதிரில் வருதல்.]

எச. இறைதிறம்பினனுலென்னையிழிதுளோரியற்கையென்னின்
முறைதிறம்பினனுலென்றுமொழிகின்றமுகத்தான்முன்னர்
மறைதிறம்பாதவாய்மைமன்னர்க்குமுன்னஞ்சொல்லுந்
துறைதிறம்பாமற்காக்கத்தீதானறிஞன்வந்துதோன்ற.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ன்.) 'இறை - எப்பொருட்கும் இறைவனான இராமன், திறம்பினன் - நீதிதவறினன்: (என்றால்), இழிந்துளோர் இயற்கை - தாழ்ந்தவர்களது இயல்பு, எனை - என்னுடைய (அந்த லோகரையகணும்), என்னில் - எனலிலையத்திலே, முறை திறம்பினன் ஆல் நீதிதவறினனன்றே! என்று,—மொழிகின்ற - சொல்கின்ற, முகத்தான் - வாயையுடையவனான அந்த வாலியினது, முனனர் - எதிரில்,—மறை திறம்பாத - வேதத்தின் கருத்தோடு மாறுபடாத, வாய்மை - உண்மைப்பொருள்களை யுணர்த்தும் நூல்களான தரும சாஸ்திரங்கள், மன்னர்க்கு முன்னம் சொல்லும்—அரசர்கட்கென்று பழமையாகச் சொன்ன, அறை - நல்லொழுக்க வழிகள், திறம்பாமல் - தவறுதபடி, காக்க - பாதுகாத்தற்கு, தோன்றிஞன் - அவதரித்தவனான இராமபிரான், வந்து தோன்ற—, (எ - று.)—''கண்ணுற்றான் வாலி கோக்கி எதிரான் இயம்பலுற்றான்'' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும். 'ஆல்' இரண்டனுள், முன்னது - அசை, பின்னது - தேற்றம்.

முகத்தான் முன்னர் வந்து தோன்ற என இயையும். இறை - நீண்ட. 'என்னில்' என்பதற்கு - என்றால் என்ற பொருள்கொண்டு, 'இறை நிறம்பினன்' என்றதனோடு இயைத்தலு மொன்று. தருமு சாஸ்திரங்கள் வேதத்தின் பொருளே கினைத்துச் செய்யப்பட்டனவாய் அதனுல் ஸ்மிருதி யென்று பெயர் பெறுதலால், 'மறைநிறம்பாத வாய்மை' எனப்பட்டன; அவை - மநுஸ்மிருதி, கௌதமஸ்மிருதி முதலியன. வாய்மை - மெய்ம்மை; பொருள்களே உள்ளபடியுணர்த்தும நூல்களுக்கு, இங்கே ஆகுபெயர். முன்னர் - முன்னிலையில்: இடமுன்; ஆர - சாரியை. முனைம் - நெடுநாளாக: காலமுன்; அம் - சாரியை. ராஜநீதிமுறைமையைத் தவறுமற் பாதுகாத்தற் பொருட்டுத் திருவவதாரஞ்செய்த பெருமா னெனை. தோன்ற - காணப்பட.

[வாலி இராமனைநோக்கி இகழ்ச்சியாகப் பேசத்தொடங்குதல்.]

எரு. கண்ணுற்றுன் வாலிநீலக்கார்முகில்கமலம்பூத்து
மண்ணுற்றுவரிவிலேந்திவருவதேபோலுமாலைப்
புண்ணுற்றதனியசோரிப்பொறியொடும்பொடிப்பநோக்கி
யெண்ணுற்றுரையென்செய்தாயனறேசுவானியம்பலுற்றுன்.

(இ - ன்.) நீலம் - நீலநிறமுள்ள, கார் முகில் - கார்காலத்துமேகமொன்று, கமலம் பூத்து - (தன்பக்கல்) தாமரைமலர்களை மலரப்பெற்று, வரி வில் ஏந்தி - கட்டமைந்த வில்லொன்றை யேந்திக்கொண்டு, மண் உற்று வருவதே போலும் - நிலவுலகத்தைச்சார்ந்து வருவது போலுள்ள, மாலை - திருமாலின் திருவவதாரமூர்த்தியான ஸ்ரீராமபிரானை, கண் உற்றுன - கண்ணெதிரிற் கண்டவனை, வாலி - வாலியானவன்,—புண் உறுறுதி அனையசோரி - புண்ணிலிருந்து வெளிப்படுவதுபோன்ற இரத்தம், பொறியொடும் பொடிப்ப - நெருப்புப்பொறிகளுடனே (தனகண்களினின்று) வெளிப்படும்படி, நோக்கி. (கோபதாபத்தோடு அப்பெருமானை) நோக்கி (என) எண்ணுற்றுய் - என்ன நினைத்தாய்? என் செய்தாய் - யாதுசெய்தாய்!' என்று - எனை சொல்லி, ஏசுவான் - (பின்னும்) பழிப்பவனுய், இயம்பல் உறுறுன - சொல்லத் தொடங்கினன்; (எ - று.)—அச்சொற்களை, அடுத்த பதினேந்து கவிகளிற் காண்க.

நீலமுகில் - காளமேகம். அது - இராமபிரானது திருமேனிக்கு நிறத்திலும், கண்டவர் கண்குளிரச் செய்யுந் தன்மையிலும் உவமம். அப்பெருமானது கண் கையாய் உந்தி பதும முகம் எனலும் அவையவகன் செந்தாமரைமலர் போலுதலாலும், அவனிறைவன் சோதண்டத்தைக் கையிற்கொண்டு தரையில் நடந்து வருதலாலும, 'நீலக்காரமுகில் கமலம்பூத்து வரிவிலேந்தி மண்ணுற்று வருவதே போலும் மாலை' என்றுர்; நம்குறிப்பேற்றவணி. கார்முகிலுக்கு இந்திரவில் இருத்தலால் இல்பொருளுவமையணியெனல் ஏலாது. கண்களிலிருந்து இரத்தம் தெறிக்கவும் நீப்பொறி சிந்தவும் கடுமையாக நோக்கி யென்பது, மூன்றுமடியின பொருள். கண்ணுறறுன நோக்கி யென்று இயைத்து, கண்களாலுனறனவைத்து உறுகிப்பார்த்து என்றலு

மாம். 'என்' என்பதை, மத்திமதீபமாக, 'எண்ணுற்றாய்' 'செய்தாய்' என்ற இரண்டனோடும் கூட்டுக; 'என நினைந்து என்செய்தாய்' என்றல் வழக்கு. எசுவான் - முற்றெச்சம். (எஅ)

[ஐந்துழதம் பதினேந்து கவிகள் - வாலி இராமனை ஏசியன.]

எசு. வாய்மையும்மரபும்காதல் மனனுயிர்தோறுநின்ற
வள்ளல்தன்மைத்தனேநீபாதன்முன்றோன்றினையே
தீமைதான்பிறரைக்காதலுதானசெயதாறறிகனரோ
தாய்மையும்மன்றிநட்புந்தருமமுந்தழுவிநின்றாய்.

(இ - ள்.) வாய்மையும் - சதியத்தையும், மரபும் - தான்பிறந்த குலத்தினபெருமையையும், காத்தல் - பாதுகாத்தல், (அதன்பொருட்டு), மன் உயிர் தோறந்த - சிறந்த (தனது) உயிரைவிட்ட, வள்ளல் - வரையாதருளுமியல்பினனும், தூயவன - பரிசுதத்தியுடையவனுமான தசரதசக்கரவர்த்தியினது, மைந்தனே - புத்திரனே! நீ—, பாதன முன தோனறினுயே - பாதனுகுத தமையனுகப் பிறந்தாயே! பிறரை தீமை காதலு - பிறரைத் தீயசெயலசெயயாதபடி விலக்கி, தான (தீமை) செய்தால் - தான தீயசெயல்செய்தால், தீஙகு அனறு ஆமோ - (அது) குறறமல்லாததாகுமோ? தாய்மையும அனறி - (உலகத்திறகுத்) தாயாயிருககுக தன்மையைமாத்திர மல்லாமல, நட்பும - சிநேக குணத்தையும், தருமமும் - தாமத்தையும், தழுவி நினறுய - தழுவி நின்றவனே! (சொல); (எ - று.)—'தீமைதான பிறரைக் காதலி' எனற விடதத்தில், தான - அசை.

முன்பு கைகேயிக்கு இரண்டு வரமளித்த வாகினி சதியம் பிறழலாகாதெனபதறகாகத் தனது அருமையான மூதத குமாரன வநவாஸம்போகும்படி நோந்து, 'தனமகனேக காட்டுக்குத துரத்திவிட்டுத் தான் உயிர்வாழ்ந்தான் இக்குலத்தில் ஒருவன்' எனற பழிப்புத தான்பிறந்த மநுகுலத்திறகு வராதபடி புததிரசோகதத்தால் உயிரநீதத மகாநுபாவன தசரதசக்கரவர்த்தியென்பான, 'வாய்மையும் மரபும் காதலி மனனுயிரதறந்த வள்ளல் தூயவன' எனறான. மன உயிர் - நிலைபேறான உயிர எனினுமாம். வளளல் - பிறர்க்காகத தனது உயிரையுந் துறப்பவன. தூயவன் - தாய்மையுடையவன, பழிக்கு அஞசி நடந்தவன; திரிகாணசுதியுடையான. அப்படிப்பட்டவனது மகனுகப் பிறநத நீ அப்பெருமைகளெலலாம் மாறுக இவவாறு தீச்செயல் செயயக்கடவையோ வெனறானும். பாதனது குணாதிசயங்கள், முன்பு கூறப்பட்டன. அவனது தமையனுகப் பிறததறகுத தகவனலலன நீயெனறவாறு. 'தீமைதான பிறரைக காதலி' எனறவிடத்தில, காத்தல் - "செல்லிடததுக் காப்பான சினஙகாப்பான" எனறவிடதது போல நின்றது. பிறா தீமை செயயாதபடி காப்பவன தான தீமைசெய்யாமலிருந்தாலனறோ நகுதியா மெனபான, 'தீமைதான பிறரைகாதலிதத தான் செய்தால் தீஙகனறோ' என்றான. உலகதது உயிர்கட்கெலலாம் தாய்போல ஒருநிகராக அனபுடையனு யிருககுததகக நீ ஒருவனிடத்திச் சிநேகத்தாற்

பக்ஷபாதமாகத் தருமமார்க்கத்தவறி மற்றொருவனுக்கு இப்படி பெருந்தீங்கு புரியலாமோ வென்பது, ஈற்றடியாற் போதரும். (எக)

எஎ. குலமிதுகல்வியீதுகொற்றமீதுற்றுநின்ற
நலமிதுபுவனமூன்றுநாயகமுன்னதன்றே
வலமிதிவ்வுலகந்தாங்கும்வண்மையீதென்றுற்றிண்மை
யலமரச்செய்யலாமோவறிந்திருந்தயர்ந்தாரேபோல்.

(இ - ள்.) குலம் இது - சிறந்தகுலம் உன்னுடையது; கல்வி ஈது - சிறந்தகல்வி உன்னுடையது; கொற்றம் ஈது - வெற்றி உன்னிடையது: உற்று நின்ற நலம் இது - பொருந்தின்ற நற்குணநற்செயல்கள் உன்னுடையன; புவனம் மூன்றும் நாயகம் - மூன்று உலகங்கட்குந் தலைமை, உன்னது அன்றே - உன்னுடையதன்றே? வலம் இது - சிறந்தபலம் உன்னுடையது; இ உலகம் தாங்கும் வண்மை ஈது - இந்த உலகத்தைப் பாதுகாக்கின்ற மேம்பாடு உன்னுடையது; என்றல்—,அறிந்து இருந்து - (எல்லாம்) அறிந்திருந்தும், அயர்ந்தனார்போல் - (அனைத்தையும்) மறந்தவர்போல, திண்மை அலமர - அவ்வுறுதிகளெல்லாம் நிலைகலங்கும்படி, செய்யலாமோ - (நீ இப்படி) செய்யலாமோ? (எ - று.)

சாதியொருமையாக, 'நலமிது' எனப்பட்டது வலம் - பலம்: வடசொல் திரிபு. அலமர, அலமா : பகுதி. 'நாயகமிது நின்றேளின்' எனவும் பாடமுண்டு. (எஎ)

எஅ. கோவியற்றருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லா
மோவியத்திதழுதவொண்ணுவருவத்தாயுடைமையன்றே
வாலியைச்சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுஞ்செய்கை.

(இ - ன்.) ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தாய் - சித்திரத்தி லெழுத முடியாத வடிவழகையுடையவனே!—கோ இயல்தருமம் - ராஜதர்மமானது, உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் - உங்கள் குலத்திற் பிறந்தவர்கள்ளெல்லார்க்கும், உடைமை அன்றே உரியபொருளன்றே; (அங்ஙனமிருக்க நீ இப்படி செய்தா யாதலால்),—ஆவியை - உயிர்போன்றவளும், சனகன் பெற்ற அன்னத்தை - ஜாகமகாராஜன் (யாகபூமியினின்று கிடைக்கப்) பெற்றவளர்த்த அன்னப்பறவை போன்றவளும், அமிழ்தின் வந்த - அமிருதம்போல அருமையாகக்கிடைத்தவளுமான, தேவியை - மனைவியை [சீதையை], பிரிந்த பின்னை - பிரித்தபின்பு, செய்கை திகைத்தனை போலும் செய்யுஞ்செயலில் தடுமாற்றமுற்றாய்போலும்; (எ - று.)

கோ இயல் தருமம் - அரசர்கட்கு இயல்பாகப் பொருந்திய தர்மம். கோவியல் தருமம் என்றுபிரித்து, பெரிய ராஜதருமமென்றலு மொன்று. 'உடைமை' என்ற பன்மை, இலக்குமணனை உளப்படுத்தியது; அவனும் இராமனுடன் நிற்றல், மேல் ககக - ஆம் கவியால் விளங்கும். தக்கபடி அமையாத

விடத்துக் கலைத்தக்கலைத்துச் சீர்திருத்தி எழுதக்கூடிய சித்திரத்திலும் இராமனது திருமேனியழகை உள்ளபடி எழுதவியலா தென அதன் சிறப்பு உணர்த்தப்பட்டது; "எழுதவரியபெருமான்" என்பர் பிறரும். பெற்ற - பெருட்பேருப் பெற்ற. ஆவி, அன்னம் - உவமையாகுபெயர்கள். இன்றியமையாமையிலும் மிக்க அன்பிற்கு இடமாகுதலிலும் ஆவியும், நடையழகில் அன்னமும், சீதைக்கு உவமை. அமிழ்து - இனிமைக்கேயன்றிக் கிடைத்தற்கருமைக்கும் உவமையாயிற்று. மனைவியைப் பிரிந்த விசனத்தால் அறிவு கலங்கியமைபற்றி உனது குலத்தார்க்குச் சொந்தமான இராசதருமத்திற்கு மாறுக இப்படி செய்தனைபோலு மென்றான். (எஅ)

எக. அரக்கரோ ழிவுசெய்துகழிவரேலதற்குவேரேறர்
குரக்கினத்தரசைக்கொல்லமனுநெறிகூறிற்றுண்டோ
விரக்கமெங்குருத்தாயென்பாலெப்பிழைகண்டாயப்பா
பரக்கழியிதுபூண்டாற்புகழைபார்பரிக்கற்பாலார்.

(இ - ன்.) அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவர் எல்-இராக்கதர் (உனக்கு) ஒரு தீங்கைச் செய்து சென்றால், அதற்கு - அதற்காக, வேறு ஓர் குரங்கு இனத்து அரசை-(அவ்வினத்தினும்) வேறுபட்ட குரங்குகளின் கூட்டத்திற்கு அரசனை ஒருவனை, கொல்ல - கொல்லுமாறு, மனு நெறி கூறிற்று உண்டோ - மனுவினுற் சொல்லப்பட்ட தருமசாஸ்திரம் சொன்னதுண்டோ? இரக்கம் எங்கு உருத்தாய் - (உனக்குரிய) கருணையென்கிற குணத்தை எங்கே இந்தியொழித்துவிட்டாய்? என்பால் எ பிழை கண்டாய் - என்னிடத்தில் என்ன குற்றத்தைப் பார்த்தாய்? அப்பா—! நீ—, பரக்கழி இது பூண்டால் - இத்தப்பெரும்பழிப்பை யேற்றுக்கொண்டால், புகழை பரிக்கற்பாலார் யார் - சீர்த்தியைத் தரிக்கத்தக்கவர் வேறுயாவருளர்? [எவருமில்லையென்றபடி]; (எ - று.)

அழிவு - கேடு. அதற்கு - அதற்கு ஈடாக வென்றவாறு. குரங்கு + இனம் = குரக்கினம்; வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று. இரக்கம் சிறிதும் இலேயாயினேயே யென்பான், 'இரக்கம் எங்கு உருத்தாய்' என்றான். உருத்தல் - சொரிதல். மநு - ஓர் அரசன். நெறி - நல்லொழுக்க வழி; அதனைக்கூறும் நூலுக்கு ஆகுபெயர். பரக்கழி - பெருநிந்தை; பெருந் தீங்குமாம். (எக)

அ0. ஒலிகடலுலகத்தன்னி லூர்தருகுரங்கின்மாடே
கலியதுகாலம்வந்துபரந்ததோகருணைவள்ளால்
மெலியவர்பாலதேயோவொழுக்கமும்விழுப்பந்தானும்
வலியவர்மெலிவுசெய்தாற்புகழன்றிவசையுமுண்டோ.

(இ - ன்.) கருணை - அருளையுடைய, வள்ளால் - வரையாதருளுமியல்பினனே!—ஒலி கடல் உலகத்தன்னில் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்திலே, ஊர்தரு குரங்கின்மாடே - ஓடித்திரிகின்ற குரங்குகளி

னிடத்தில்மாத்திரம், கலியது காலம் வந்து பார்த்தோ - கலிதாலம் வந்து பாவிற்றே ? ஒழுக்கமும் - நல்லொழுக்கமும், வீழுப்பம்தானும் - மேன்மைக் குணமும், மெலியவர் பாலதேயோ - வலிமை முதலியவற்றிற் குறைந்தவரிடத்தில் மாத்திரம் இருக்கவேண்டியனவோ? வலியவர் மெலிவு செய்தால் - வல்லமையுடையோர் இழிதொழிலைச் செய்தால், புகழ் அன்றி வசையும் உண்டோ - (அதனால் அவர்கட்குக்) கீர்த்தியுண்டாவதன்றிப் பழிப்பும் உண்டாகக்கடவதோ! (எ - று.)

திருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற நான்கினுட் கலியுகம் வேதசாஸ்திரங்கட்கு விலக்கான தீயசெயல்கள் கிகழப்பெறுவதென்பது, வெளிப்படை. மற்றை எவ்வகையினத்திலும் நேராமல், குரங்கினமான தன் விஷயத்தில் மாத்திரம் கருணைவள்ளலான இராமபிரானால் இவ்வகையான அநீதி நேர்ந்தமைபற்றி, 'குரங்கின்மாடே கலியதுகாலம்வந்து பார்த்தோ' என்றான். இந்த மிகக்கொடிய செயல் கலியின் தொடக்கத்திற் கன்றி அதன்முதிர்ச்சிக்கே யேற்றதென்பது தோன்ற, 'பார்த்தோ' எனலாயிற்று. இராமசரித்திரம் நிகழ்ந்தது திரேதாயுகத்தினிடையே யென்பது, இங்குக்கருதத்தக்கது. தருமம் திருதயுகத்தில் நான்கு பாதமும், திரேதாயுகத்தில் மூன்று பாதமும், துவாபரயுகத்தில் இரண்டு பாதமும், கலியுகத்தில் ஒருபாதமுமாக நிகழ்ந்து, அதன் முதிர்வில் வாவாக் குறைந்திடுமென்க. கினது கருணையும் வண்மையும் இவ்வாறே முடிந்தனவென்று எகலவான், 'கருணைவள்ளால்' என்று விளித்தான். கலியது - கலிபுருஷனது, 'அது' ஆறனுருபு. குரங்கின்மாடு, மாடு - ஏழனுருபு; எ - பிரிநிலே. ஊர்தரு தா - தூணேவினே, ஊர்தல் - செல்லுதல். வள்ளால் - வள்ளல் என்றதன் ஈற்றயல் திரிந்த விளி. ஒழுக்கமும் வீழுப்பந்தானும் மெலியவர்பாலதேயோ - பண்மை யொருமை மயக்கம்; (தனித்தனி) பாலதோவென்க. எ - பிரிநிலே; ஓ-வினு. மெலியவர் - அறிவு ஆண்மை ஆற்றல் என்றவற்றிற் குறைபாடுடையவர். அவற்றில் மிக்கவர், வலியவர். வீழுப்பம் - உரிச்சொல்; நற்குணமுமாம். ஒழுக்கமும் வீழுப்பமும் வேண்டியது எளியவர்க்கு மாத்திரமோ, வலியவர்க்கு வேண்டியதில்லேயோ வென்பது, முன்றுமடியின் பொருள். நான்காமடியின் பொருள் - வலியவர் தீமைசெய்தாலும் அவர்க்குப் பழிவராது புகழே வருமோ? என்பது. 'வசையன்றிப் புகழுமுண்டோ' என்றும் பாடம் காணப்படுகின்றது. (அ0)

அக. கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவபெற்றதாதை
பூட்டியசெல்வமாங்கேதம்பிக்குக்கொடுத்துப்போந்து
காட்டொருகருமஞ்செய்தாயெம்பிக்கிவ்வாசைகல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய்கருமந்தானிதன்மேலுண்டோ.

(இ - ன்.) கூட்டு ஒருவரையும் வேண்டா - (போர்வெற்றிபெறுதற்குத்) துணையாக ஒருவரையும் வேண்டாத, கொற்றவ - வெற்றியையுடையவனே! பெற்ற தாதை - பெற்றதந்தை [தசரதசக்கரவர்த்தி], பூட்டிய - (மூத்தமக

னை உனக்கு) உரியதாகக்கொடுத்த, செல்வம் - அரசாட்சிச் செல்வத்தை, ஆங்கே - அப்பொழுதே [அல்லது அவ்விடத்திலேயே], தம்பிக்கு கொடுத்து - (உனது) தம்பிக்கு [பரதனுக்கு] உரியதாகும்படி கொடுத்துவிட்டு, போந்து - வனவாஸம்புகுந்து, நாடு ஒரு கருமம் செய்தாய் - (இவ்வாறு) நாட்டிலே ஒரு வகைப் புதுமையான காரியத்தைச் செய்தாய்; எம்பிக்கு - என் தம்பிக்கு [சுக்கிரீவனுக்கு], இ அரசை கல்கி - இந்த எனது அரசாட்சியைக் கொடுத்து, காடு ஒரு கருமம் செய்தாய்-காட்டில் அதற்குமாறான ஒருவகைப் புதிய செயலைச் செய்தாய்; இதன்மேல் கருமம் உண்டோ - இதனிலும் மேலான செயல் வேறு உண்டோ? [இல்லைபோலும் என்றபடி]; (எ - று.)—தான் - அசை.

கூட்டு - தீணை. கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ-அஸஹாய சூரனே யென்றவாறு; "தீணைவேண்டாச் செறுவென்றி" என்ற புறநானூறு, இங்கு நோக்கத்தக்கது. பூட்டிய - வலியக்கொடுத்தவன்றபடி. இனி, மங்கலவழக்காக 'காட்டொரு கருமஞ்செய்தாய்' என்றதற்கு - நாட்டிலே தம்பியை உயிர்நீங்கச்செய்தாய் என்றும், 'காட்டொரு கருமஞ்செய்தாய்' என்றதற்கு - காட்டிலே எண்ணெய்கொண்ருய் என்றும் கருத்து உரைத்து, 'இதன்மேல் கருமம் உண்டோ' என்பதற்கு - இதற்குமேலும் உரிய செயலுண்டோ வென்று பொருள்கொள்ளலுமாம். (அக)

அடை. அறைகழலலங்கல்வீரராயவர்புரிவதாண்மைத்
தறையெனலாயிற்றன்றேதொன்மையினுணூற்கெல்லா
மிறைவனீயென்னைச்செய்ததீதெனிலிலங்கைவேந்தன்
முறையலசெய்தானென்றுமுனிதியோமுனிவிலாதாய்.

(இ - ன்.) அறை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையும், அலங்கல் - போர்ப் பூமாலையையுந் தரித்த, வீரர் ஆயவர் - வீரராயுள்ளவர், புரிவது - எத்தொழிலைச் செய்கின்றார்களோ அத்தொழில், ஆண்மை தறை எனல் ஆயிற்று அன்றே - ஆண்மைக்குரிய செயலாய் விட்டதன்றே! தொன்மையின் நல் நூற்கு எல்லாம் இறைவன் நீ - பழமையான சிறந்த சாஸ்திரங்களுக்கெல்லாம் தலைவனான நீ, என்னை செய்தது - என்பக்கல் செய்தது, ஈது - இத்தன்மையான செயல், எனில் - என்றால், இலங்கை வேந்தன் முறை அல செய்தான் என்ற முனிதியோ - இலங்கா நகராதிபதியான இராவணன் நீதியல்லாத காரியங்களைச் செய்தானென்று (அவன்மேற்) கோபிக்கக் கடவையோ? முனிவு இலாதாய் - (இயல்பிற்) கோபமில்லாதவனே! (எ - று.)

'வல்லான் ஆடியதே ஆட்டம்,' 'கெருடிபழகுகிறவன் இடறிவிழுந்தால் அதவும் ஒருவித்தை' என்றாற்போல வலிமையையுடையவீரர் எதுசெய்கின்றனரோ அதுவெல்லாம் பராக்கிரமச் செயலாய் விட்டதா வென்பது, முதல் வாக்கியத்தின்பொருள். வேதசாஸ்திரங்களிற்கூறிய அனுட்டானங்களை நடப்பித்த அவற்றிற்கெல்லாந் தலைவனுகின்றநீ என்விஷயத்தில் இப்படிசெய்துவிட்டு ராக்ஷஸராஜனான ராவணன் உன் விஷயத்தில் அக்ரமஞ்செய்தானென

ன்று கோபிக்க இடமுண்டோ? என்றது. இரண்டாம் வாக்கியம். மூனிவின் தாய் - இயல்பிற் சாந்தகுணமுடையவனே யென்றபடி. (அடி)

அசு. இருவர்போ தெதிரும் காலை யிருவரு நல்லுற் றோரே
பொருவர்மேற் கருணை தூண்டி யொருவர்மே லொளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்த
றருமமோ பிறிதொன் றோமோ தகுகில தென்னும் பக்கம்.

(இ - ள்.) இருவர் போ எதிரும் காலை - இரண்டுபேர் (தம்மில்) எதிர்த்து போர்செய்து கொண்டிருக்கும்பொழுது, இருவரும் நல் உற்றோரே - அவ்விரண்டுபேரையும் (ஒருசமமாகத் தமக்கு) நல்ல உறவினராகவே (பிறர் கொள்ளுவது தகுதியாயிருக்க அவ்வாறுபாவிப்பதை விட்டு), ஒருவர்மேல் கருணை தூண்டி (அவ்விருவருள்) ஒருவர்மேல் அருளைச் செலுத்தி, ஒருவர்மேல் - மற்றொருவர்மேல், ஒளித்து நின்று - மறைந்துநின்று, வரி சிலை குழைய வாங்கி - கட்டமைந்த வில்லை நன்றாகவளையும்படி வளைத்து, வாய் அம்பு மருமத்தி லெய்தல் - கூர்நுனியையுடைய அம்பை மார்பிற் செலுத்துதல், தருமமோ. தருமமாகுமோ? (அல்லது) பிறிது ஒன்று ஆமோ - அதர்மமாகுமோ? (எப்படியானாலும்), தகுகில தென்னும் பக்கம் - தகாததெனப் படுகிற பகுபாதமே; (எ - று.)

ஒருவாமேல் எய்தல் என இயையும தருமமோ, அதருமமோ, எப்படியானாலும், தகாததெனப்படுகின்ற பகுபாத மென்றுசொல்லத் தடையில்லை யெனபதாம். தருமமோ பிறிதொன்றோமோ எனறதில் ஐயமுண்டானாலும், தகுகிலதென்னும்பக்கமென்றற்கு ஐயமில்லை யெனக. இது - வெளிப்படை யெனறவாறு, நிருக்குறளில் நடுவுநிலைமையென்ற அதிகாரத்தில் நடுவுநிலைமை 'தகுதி' எனறும், அதனையுடையார் 'தக்கார்' என்றும், அஃதில்லாதவர் 'தகவிலர்' எனறும் கூறப்பட்டதனால், அதற்கு மாறான பகுபாதத்திற்கு 'தகுகிலதென்னும்' எனற அடைமொழி எற்கும். தகுகிலது—கு - சாரியை, இல் - எதிர்மறையிடைநிலை. பக்கம் - பகுபம்: வடசொல்திரிபு: இலக்கணையாய், ஒருபுறஞ்சார்தலைக் குறித்தது. (அடி)

வேறு.

அச. வீர மன்றுவி தியன்று மெய்ம்மையின்
வார மன்றுநின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்றுப கையன்று பண்பொழிற்
* தீர மன்றிது வென்செய்த வாறுநீ.

(இ - ள்.) (நீ செய்த இச்செயல்), வீரம் அன்று - பராக்கிரமகாரியமன்று; விதி அன்று - (வேதசாஸ்திரங்களில்) விதித்த செய லன்று; மெய்ம்மையின வாரம் அன்று - உண்மையின்பாற சேர்வது மன்று; நின மண்ணினுக்கு என் உடல் பாரம் அன்று - உன்க்குஉரியதாகின்ற இந்தப்பூலோகத்திற்கு என் ஒருத்தனுடையவுடம்பு பொறுக்கவொண்ணாத பாரமாகாது; பகை அன்று.

(உனக்கு நான்) பகையுமன்று; (இங்ஙனமெல்லாமிருக்கவும்),நீ—, பண்பு ஒழிந்து - பெருமைக்குணத்தை விட்டு, ஈரம் அன்று இது செய்த ஆறு - அன்புக்குரியதல்லாத இச்செயலைச் செய்தது, என் - யாதுகாரணம்பற்றி?

வார்ம் - பக்கம், பங்கு, வகுப்பு. பூமிபாரநிவிருத்தியின் பொருட்டுக் கொடியவரைக்கொல்லுதல் ஆன்றோர்செயலாம்; ஆனால், யான் கொடியவனல்ல ஞதலின் என்னை நீகொன்றது அந்தநற்செயலின் பாற் படாதென்பான, 'நின்மண்ணினுக்கு என்உடல் பாரமன்று' என்றான். மற்றவை, வெளிப்படை. 'நினமண்' என்றது, சக்கரவர்த்தியின மூத்தகுமாரனுதலால், திருக்குறளில் 'பண்புடைமை' என்றவிடத்து 'பண்பாவது - பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாதேனின்றே எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்றார் பிறரும்' எனப் பரிமேலழகருரைத்தது, இங்குக் கொள்ளத்தக்கது. ஈற்றடியில், அன்று - பெயர்; மற்றையடிகளில், மூன்று. ஆறு - தன்மை.

இதுமுதல் மூப்பத்திரண்டு கவிகள் - பம்பைப்படலத்தின் மூப்பத்திரண்டாங்கவி போன்ற கலிவிருத்தங்கள். (அசை)

அரு. இருமைநோக்கினின்றியாவர்க்குமொக்கின்ற
வருமையாற்றலன்றோவறங்காக்கின்ற
பெருமையென்பதிதென்பிழைபேணல்விட்
டொருமைநோக்கியொருவற்குதவலோ.

(இ - ன்.) இருமை நோக்கி நின்று - இம்மைமறுமைப்பயன்களை (உபேக்ஷியாமற் பெறக்) கருதி நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற அருமை ஆற்றல் அன்றே - (ஒருவர்பக்கல் பக்ஷபாதமுடையராகாது) எல்லார்க்குஞ் சமமாகின்ற அருமையானசெயலைச் செய்தலன்றே, அறம் காக்கின்ற பெருமை என்பது - தருமத்தைப் பாதுகாக்கின்ற பெருந்தன்மையென்று சொல்லப்படுவது? பிழை பேணல் விட்டு - (பழிபாவங்களாகிய) குற்றங்கள் (தன்பக்கல்லாதபடி) குறிக்கொண்டுகாத்தலை விட்டு, ஒருமை நோக்கி - ஒருபுறத்தில் சாய்ந்து [பக்ஷபாதங்கொண்டு], ஒருவற்கு உதவல் - ஒருவனுக்கு உதவி செய்தலாகிய, இதுவோ - இச்செயலோ, என் - என்னுங்கொல்? [அறங்காக்கின்ற பெருமை யாகாதென்றபடி]; (எ - து.)

இருமை - இம்மை, மறுமை யென்னும் இரண்டு; இங்கு, ஆகுபெயராய், இம்மைப்பயனாகிய புகழையும் மறுமைப்பயனாகிய புண்ணியத்தையுங் குறிக்கும். இனி, இம்மைமறுமைகளில்வரும் நன்மைதீமைகளைப்பற்றி ஆலோசித்து நின்று என்னவுமாம். யாவர்க்கும் ஒக்கின்ற அருமை - பகை நொதுமல் நண்பு என்னும் மூன்று பகுதியார்க்கும் ஒப்பாகச்செய்யும் அரியசெயல்; அவ்வகை நடுவுநிலைமையின் சிறப்பை, "தகுதியென வொன்றும் நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்" எனக் காண்க. இ - தெரிநிலை.

அசு. செயலேச்செற்றபகைதெறுவான்றெரிந்
தயலேப்பற்றிததுணையமைந்தாயெனின்
புயலேப்பற்றுமப்பொங்கரிபோக்கியோர்
முயலேப்பற்றுவதென்னமுயற்சியோ.

(இ - ள்.) செயலே செற்ற - (உனது) பாதகாவலே யழித்த [உண்மைத் தனிப்படுத்திச் சீதையைக்கவர்ந்து சென்ற], பகை - பகைவனுன இராவணனே, தெறுவான் - அழித்தறபொருட்டு, தெரிந்து - ஆலோசித்து, அயலே - வேறொருவனே [சுக்கிரீவனே], துணை பற்றி அமைந்தாய் - துணேவனுகக் கொண்டு பொருந்தினுய், எனின் - என்றல்,—புயலே பற்றும் - காளமேகம் போனறதான யானேயைப் பிடித்து உயிர்கவரவல்லமை, பொங்கு-கோபித்து எழுமியல்பினதமான, அ அரி - அப்படிப்பட்ட சிங்கத்தை, போக்கி - துணேயாகக்கொள்வதை விட்டு, ஓர் முயலே பற்றுவதி - ஒருமுயலேத் துணே யாககொள்வது என்ன முயற்சியோ---? (எ - று.)

உனது பாதுகாவலேப் போக்கி உனமனேவியைக்கவர்ந்து உனேமான பங்கப்படுத்திய பகைவனுன இராவணனேக் கொல்லுதறபொருட்டு ஆலோசித்துச் சுக்கிரீவனேத் தோந்தெடுத்துத் துணேவனுகக்கொண்டு அவனேநீ கூடினேயென்று கருதவேமென்றல், அந்த இராவணனே மிகவளரிதில்வெல்ல வல்ல ஆற்றலேயுடைய என்னேத துணேககொள்வதைவிட்டுப் பலபராக்கிரமங் களிற் குறைபாடுடைய சுக்கிரீவனேத் துணேக்கொள்வது யானேயையழித்தற் பொருட்டு அதனே எளிதிலழிக்கவல்ல சிங்கத்தைத துணேக்கொள்வதை விட்டு அதனகாலினுல் நசுங்கிப்போகத்தக்க எளியஜந்துவான முயலேத் துணேக்கொள்வதுபோல அறிவுடைமுயற்சியாகா தென்றல். செற்ற, செறு-பகுதி. தெறுவான - எச்சம். புயல் - உவமையாகுபெயர்; கரியபெரிய வடிவிலும, மதமழைசொரிதலிலும், பெருமுழக்கத்திலும் உவமை. (அசு)

அஎ. காரியன்றகளகநிறதிதானமை
யூரியன்றமதிக்குளதாமெனச்
சூரியன்மரபுக்குமோர்தொன்மறு
வாரியன்பிறந்தாக்கினேயாமரோ.

(இ - ள்.) ஊர் இயன்ற மதிக்கு - நாடெங்கும் சஞ்சரிக்கின்ற சந்திரனுக்கு, கார் நிறம் இயனற களங்கம் - கருநிறம் பொருந்திய களங்கம், தொனமை உளது ஆம் - தொன்முதொட்டு உள்ளது, என - எனற எண்ணி, சூரியன் மரபுக்கும் ஓர் தொல் மறு - சூரிய வம்ச முழுவதுக்கும் ஒரு சிலே யான களங்கத்தை, ஆரியன் பிறந்தி ஆக்கினேஆம் - தலேவனுன நீ பிறந்து உண்டாக்கினேபோலும்; (எ - று.)— அரோ - ஈற்றசை. 'உளதாம்' என்றதில், ஆம் - அசை.

சூரியவம்சம் சந்திரவம்சம் என்று உலகத்திற் பிரசித்தமான இராஜகுலங்க ளிரண்டனுள், ஒன்றற்கு ஆதிபுருஷனுன சந்திரனுக்குத் தொன்று

தொட்டு மறுஇருபதைகருதி மற்றொரு சுடரான சூரியனது குலத்திற் பிறந்தவனுமிய நீ அக்குலமுழுவதுக்குமே கிலேயான மறுவை உண்டாக்கினே போலு மென்றான்; தன்குறிப்பேற்றவகையால் இழித்துரைத்தபடி. சக்கிரனுக்கு இயல்பிற் களங்கமிருப்பது போல, களங்க மில்லாதிருந்த சூரியகுலத்திற்கும் நீ பிறந்து கிலேயான களங்க முண்டாகும்படி செய்தா யென்க. 'ஊர் இயன்ற மதி' என்பதற்கு - ஊர்தல் [சஞ்சரித்தல்] பொருந்திய மதி யென்றலுமாம்; "வானூர் மதியம்" என்ப: இப்பொருளில், ஊர் - முதனிலைத் தொழிற்பெயர். தொல் மறு - முன்னோரினவரையுந் தொடரும் மறு; இனி என்றும்கிலேத்துத் தொன்மையாகும் மறு. மறு - இங்கே, பழிப்பு. பழியைக் கரியதென்றல், கவிசமயம். ஆரியன்-முன்னிலேப்படர்க்கை; அண்மை விளியுமாம். இங்கு 'ஆரியன்' என்றது, இகழ்ச்சிக்குறிப்பு. (அஎ)

அஅ. மற்றொருத்தன்வலிந்தறைகூவவந்
தற்றவெண்ணெயொளித்துயிருண்டநீ
யிற்றையிற்பிறர்க்கும்மிகலேலெறன
நிற்றிபோலுங்கிடந்தநிலத்தரோ.

(இ - ள்.) மற்று ஒருத்தன் வலிந்து அறைகூவ - வேறொருவன் [சுக்கிரீவன்] (என்னே) வலியப் போர்க்கு அழைத்ததனால், வந்து உற்ற - (இங்கு அவனுடன் பொருதற்கு) வந்து சேர்ந்த, என்னே—, ஒளித்து உயிர் உண்டமறைந்து நின்ற (அம்பெய்து) உயிரைக்கவர்ந்த, நீ—, (நாணமின்றி), இம்மறையின - இப்பொழுது, கிடந்த நிலத்து - (யான்) விழுந்து கிடக்கின்ற இவவிடத்தில், பிறாக்கும் இகல் ஏறு என நிற்றி போலும் - மற்றையோர்க் கெல்லாம் வலிய ஆண்சிங்கம் போல(ப் பெருமிதத் தோன்ற) நிற்கின்றாய் போலும்! (எ - று.)—அரோ - ஈற்றசை.

பிறர்க்கும்மிகல்—மகரவொற்று - விரித்தல். (அஅ)

அஉ. நூலியற்கையுநுங்குலத்துந்தையர்
போலியற்கையுஞ்சீலமும்போற்றலே
வாலியைப்படுத்தாயலேமன்னற
வேலியைப்படுத்தாய்விறல்வீரனே.

(இ - ள்.) விறல் வீரனே - வலிமையையுடைய வீரனே! நூல் இயற்கையும் - சாஸ்திரங்களின் முறைமையையும், நும் குலத்து உத்தையர்போல் இயற்கையும் - உங்கள் குலத்தில் உனது தாதை மூதாதை பேரன்றவர்களது இயல்பையும், சீலமும் - நல்லொழுக்கத்தையும், போற்றலே - (நீ) பாதுகாவாமல், வாலியை படுத்தாய் அலே - வாலியை யழித்தாயல்லே; மன் அறம் வேலியை படுத்தாய் - ராஜதருமத்தின வேலியை யழித்திட்டாய்; (எ - று.)

'நும்' என்ற பன்மை - இலக்குமணனே உள்படுத்தியது. போற்றலே - முன்னிலே யொருமை யெதிர்மறை முற்றெச்சம்; இது, வாலியைப்படுத்த

லென்பதனோடு இயையும். 'வாலியை' என்றது தன்மைப்படர்க்கை; என்னை யென்றபடி. அக்கிரமமாக என்னைக் கொன்றதனால் ராஜதருமத்தின் பாதி காவலை யழித்திட்டாயென்க. வேலி - காவல். மன் அறம் - நிலைபெற்ற தருமமெனினுமாம். 'மன்னறவேலியைப் படுத்தாய்' என ஒரு தருமத்தின் ஆரோபித்தற்பொருட்டு, 'வாலியைப்படுத்தாயலே' என உண்மையை யொழித்தது, ஒழிப்பணியெனப்படும் அபஹ்நுதியலங்காரம். இங்கு 'விறல்வீரனே' என்றது, இகழ்ச்சிக்குறிப்பு அலை - அல்லை, தொகுத்தல். (அக)

கூ0. தாரமற்றொருவன்கொளத்தன்கையிற்
பாரவெஞ்சிலைவீரம்பழிப்பதே
நேருமன்றுமறைந்துநிராயுதன்
மார்பினெய்யவோவில்லிகல்வல்லதே.

(இ - ன்.) தாரம் - (உன்) மனைவியை, ஒருவன் கொள-ஒருவன் கவர்ந்து கொள்ள, (அவனுக்கு எதிர்செய்யாததோடு இப்படி வேறொருவனே அம்பெய்து கொல்லுதலால்), தன் கையில் பாரம் வெம் சிலை - உன்கையிலேந்திய பெரிய கொடிய வில், வீரம் பழிப்பதே - வீரச்செயலிற் பழிப்படைவதா! வில் இகல் வல்லது-(நீ) வில்லேக்கொண்டு போர்செய்தலில் வல்லவனானது, நிராயுதன் மார்பின் - கையில் ஆயுதமில்லாதவனது மார்பிலே, நேரும் அன்று மறைந்து எய்யவோ - வெளிப்படையாக எதிரில் வந்து மல்லாமல் ஒளித்து நின்று அம்பெய்தற்குத்தானே! (எ - று.)—மற்று - அசை,

தாரம் - தாரஃ என்ற வடசொல்லின் விகாரம். பாரம், நிராயுதன்-வட சொற்கள். நினைவில் கைக்குப்பாரமாகவே யமைந்ததென்ற இழிப்புத் தோன்ற, 'பாரவெஞ்சிலை' என்றனுமாம். பழிப்பதே, எ-வினை. 'சிலைவீரம்' என்பதை 'பழிப்பதே' என்பதற்கு எழுவாயாக்கியுரைப்பினுமாம். பழிப்பது-பழிக்கப்படுவது எனச் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. ()

[இந்த வாலியின்வார்த்தைகளுக்கு இராமன் பதில் சொல்லத்தொடங்குதல்.]

கூக. என்றுதானுமெயிறுபொடிபடத்
தின்றுகான்றுவிழிவழித்தீயுக
வன்றவாலியனையனகூறினை
னின்றவீரனிணையநிகழ்த்கினை.

(இ - ன்.) என்று—, எயிறு பொடிபட தின்று - பற்கள் பொடியாம்படி (நெறநெறவென்று) கடித்துக்கொண்டும், விழிவழி தீ உக கான்று - கண்களின் வழியாய் பொறிகள் சிந்தும்படி (கோபாக்கினியை) உமிழ்ந்துகொண்டும், அன்று அ வாலி அனையன கூறினன் - அப்பொழுது அந்தவாலி அத்தன்மையனவான வார்த்தைகளைச் சொன்னன்; நின்ற வீரன் தானும் இனைய நிகழ்த்தினன் - எதிரில் நின்ற மகாவீரனான இராமனும் இத்தன்மையனவான வார்த்தைகளைச் சொல்லலானன்; (எ - று)—அவற்றை, அடுத்த பதினெரு கவிகளிற் காண்க.

காண்டு, ஒரு - பகுதி. 'அனறவவாலி' என்பது தொக்கது. 'அன்று' என்பதை வினைத்தொகையாகக் கொண்டு, கோபித்த என்றலுமாம்; அன்றுதல் - சிறுதல்.' (கக)

[இதுமுதற் பதினெருகவிகள் - இராமபிரான் தான் வாலியைக் கொன்றதற்கு நியாயங்கூறுதல்.]

கூஉ. பிலம்புக்காய்நெடுநாள்பெயராயெனைப்
புலம்புற்றுன்வழிப்போதலுற்றுன்றனைக்
குலம்புக்கான்றமுதியர்குறிக்கொணீ
யலம்பொற்றாரவனேயாசென்றலும்.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்) பிலம் புக்காய் - (முன்னாளில் மாயாவியைத் தொடர்ந்து) பாதாள வழியினுள்ளே சென்றவனை நீ, நெடு நாள் பெயராய் - வெகு காலமாகவும் மீண்டுவாராமலே யிருந்துவிட்டாய், எனை - என்கராரணத்தால், புலம்பு உற்று - சோகமடைந்து, உன் வழி போதல் உற்றுன்றனை - நீசென்ற அப்பிலத்துவாரவழியிலே செல்லத்தொடங்கியவனை சுக்கிரீவனை நோக்கி, குலம் புக்கு ஆன்ற முதியர் - உங்கள் குலத்தில் தோன்றி அறிவினால் அமைந்த பெரியோர், 'குறிக்கொள் - (நாங்கள் சொல்வதை) ஊன்றிக்கேட்பாய்: பொன் தாரவனே - பொன்னாலாகிய ஆரத்தை யணிந்தவனே! நீ அரசு அலம் - நீ (எங்கட்கு) அரசனதல் அமையும்,' என்றலும் - என்று சொன்ன வளவில்,—(எ - று.)—(சுக்கிரீவன் அதற்கு இணங்காமல்) 'என' என்று அடுத்த கவியோடு தொடரும்.

சுக்கிரீவனிடத்துக் குற்றமில்லாமையையும், வாலியினிடத்துக் குற்ற மிருத்தலையும் காட்டுதற்கு, முன்பு நிகழ்ந்த செய்தியை எடுத்துக் கூறுகின்றார், பூர்வத்தில் நீ மாயாவியைத் தூரத்திக்கொண்டு பாதாளலோக வழியாகிய பெரிய பிலத்தினுள்ளே சென்று வெகுநாளளவும் வராம லிருந்துவிட்டாய்; உன்னால் அந்தப் பிலத்துவாரத்தின் வாயிலிற் காவலாக நிறுத்தப்பட்ட உன் தம்பியான சுக்கிரீவன் பின்பு மிகவுந் துன்பமடைந்து அப்பிலத்தினுள்ளே தானுஞ் செல்லுதற்குப் புறப்பட்டான்; அவனை உங்கள் குலத்திலுள்ள பெரியவர்கள் மறித்து, 'நீயும் போய்விட்டால் எங்கட்குக் கதி யார்? இனி நீயாவது இருந்து அரசாட்சிசெய்' என்று வெகுவாய்ச்சொல்லி நிறுத்தினார்களென்க. மாராமரப்படலத்தின் கூ, கக, கூட, க00 - ஆம் கவிகள் நோக்கத்தக்கன. நெடுநாள் - இருபதெட்டுமாசம். ஆன்ற, ஆன் - பகுதி. அலம் - சஞ்சலம் என்ற கொண்டு, அலம் பொன் தாரவனே - அசைகின்ற பொன்னாரத்தையுடையவனே! நீ—, அரசு குறிக்கொள் - இராச்சியத்தை ஆளக்கருதுவாய் என்ற பதவுரை கூறவுந் தகும். 'முதியர்' என்பது, மந்திரிகளை; அவர்கள், 'முதுவர்,' 'மூனோர்', 'மூத்தோர்' எனப்பெயர் பெறுவர். (கூ)

கூடு. வானமாளவென்றம்மூனைவைத்தவன
ருனுமாளக்கினேயினிறத்தடிக்
தியானுமாள்வெனிருந்தாசாள்கிலே
னானமானவுரைபகர்ந்தீரென.

(இ - ன்.) (அதனை மறத்துச் சுக்கிரீவன்),—'என் தம்மூனை வானம் ஆள வைத்தவன் - என்று தமையனுன வாலியை வீரசுவர்க்கமடையுமாறு கொன்றிட்டவனுன மாயாவி, தானும் மான - தானும் இறக்கும்படியாகவும், கினேயின் இற - (அவன்) சுற்றத்தவர்களும் அழியும்படியாகவும், தடிந்து - கொன்று, யானும் மான்வென் - தானும் இறப்பேன்; இருந்து அரசு ஆண்டி லென் - (என்தமைபனிறந்த பின்பு நான்மாத்திரம்) பிழைத்திருந்து உயிர் வாழமாட்டேன்; ஈனம் ஆன உரை பகர்ந்தீர் - (எனக்குத்) தகாததான வார்த்தையை நீங்கள் சொன்னீர்கள்,' என - என்று (அத்தப் பெரியோர்களை நோக்கிச்) சொல்ல.—(எ - று.)—'வீரரும் முதியரும் முன்பரும்பற்றியென' என்று அடுத்த கவியோடு தொடரும்.

மராமரப்படலத்தின் கூ, கூ - ஆம் கவிகள் நோக்கத்தக்கன. அப் பிலத்தினுள்ளே மாயாவி வாலியைக் கொன்றுவிட்டானென்று மாருகக் கருதியதனுல், 'என் தம்மூனை வானமான வைத்தவன்' என்றுன். போரிற் புறங்கொடாது இறந்தவர் வீரசுவர்க்கமடைவரென்னும் நூல்துணிபுபற்றி, 'வானம்ஆன' எனப்பட்டது; போரிற்கொன்றவ னென்ற பொருளில் 'வான மாளவைத்தவன்' என்றது. பிறதினவிற்சியணி. ஈனம் - இழிவு. குறை பாடு, கேடு. (கூ)

கூச. பற்றியான்றபடைத்தலைவீரரு
மூற்றுணர்ந்தமுதியருமுன்பரு
மெற்றுநம்மரசெய்துவையாமெனக்
கொற்றநன்முடிகொண்டதக்கோனிலான்.

(இ - ன்.) (மீளவும்), ஆன்ற படைத் தலை வீரரும் - சிறந்த சேனைபதி களும், முற்ற உணர்ந்த முதியரும் - (அறிய வேண்டுவன) யாவும் அறிந்த மந்திரிகளும், முன்பரும் - (மற்றுமுன்ன) பெரியோர்களும், பற்றி - (சுக்கிரீ வனை அப்பிலத்தினுட் செல்லவிடாது) பிடித்துக்கொண்டு, 'எற்றம்-நிகழ்ந்த செயல்) எத்தன்மையதா யிருப்பினும், நும் அரசு எய்தலை - உங்கட்கு உரிய அரசாட்சியை நீ அடையக்கடவாய்,' என - என்று சொல்லி நிர்ப்பந் திக்க,—(அதனுல்தான்), அ கோது இலான் - குற்றமற்றவனுன அச்சுக்கிரீ வன், கொற்றம் கல் முடி கொண்டது - வெற்றிக்கு அறிகுறியான கிரீடத் தைச் சூட்டிக்கொண்டது (நிகழ்ந்தது); (எ - று.)—ஆம் - அசை.

மராமரப்படலத்தின் கூ, கoo - ஆம் கவிகள் நோக்கத்தக்கன. பற்றி என என்ற இயையும். படைத் தலை வீரர் - சேனைக்குத் தலைமை பூண்ட வீரர். முதியர்-அறிவொழுக்கங்களினுற் பெரியவர்; முதுமை யென்ற பண்பி

னடியாப் பிறந்த பெயர், முன்பு - பெருமை; அதனையுடையோர் முன்பர். எற்றும் - வாலிமாயாவிகளின் செய்தி எவ்வாறாயினும் என்றபடி. முடிகொண்டது - அரசாட்சியை ஏற்றுக்கொண்டது. கொண்டது - தொழிற் பெயர், வினைமுற்றின் தன்மையடைந்தது; இதனை வடநூலார் பாவேப்ரயோக மென்பர். (கச)

கூடு. வந்தவுண்னைவணங்கிமகிழ்ந்தன
னெந்தையெங்கணினைத்தவாற்றலிற்
றந்தவுண்ணரசென்றுதருக்கிலான்
மூந்தையுற்றதுசொற்றமுனிந்துளீ.

இதனும், அடுத்த கலியும் - குளகம்.

(இ - ள்.) வந்த உன்னை மகிழ்ந்தனன் - மாயாவியைக்கொன்று (பிறகு) மீண்டு வந்த உன்னைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து, வணங்கி - (உன்னை) நமஸ்கரித்து, 'எந்தை - எமது தலைவனே! இனத்தவர் - நமது இனத்தாரான வானரர்கள், என்கண் - என்னிடத்தில், ஆற்றலின் தந்த - வலியைக் கொடுத்த, உன் அரசு-உனது அரசாட்சி (இது),' என்று-என்று தொடங்கி, தருக்கு இலான் - அகங்கார மில்லாதவனை சுக்கிரீவன், மூந்தை உற்றது சொற்ற - மூன்பு நிகழ்ந்த செய்தியைச் சொன்ன வார்த்தைகளை, நீ முனிந்து - நீ வெறுத்து,—(எ - று.)—'இங்ஙனே' என அடுத்த கலியோடு தொடரும்.

மராமரப்படலத்தின் கஎ, கூ, கoo - ஆம் கவிகளை நோக்குக எந்தை - அண்மைவிளி. தமையனைத் தந்தையைப்போலப் பாவிக்க வேண்டுதலால், 'எந்தை என விளித்தான். ஆற்றலின் தந்த - முயற்சியாற் கொடுத்த என்றும், எற்றுக்கொள்ளுமாறு கொடுத்த என்றும் கொள்ளலாம். தருக்கு - யானென்னுஞ் செருக்கு. உற்றது - பெயர். சொற்ற - இறந்தகாலப் பலவின் பால் வினையாலணையும்பெயர்; சொல் - பகுதி, அ விகுதி, ற் - இறந்தகால விடைநிலை; இனி, 'சொற்ற' என்பதைச் செயவெனெச்சமாக் கொண்டு, சொல்லவென்று உரைத்தலுமாம்; து - சாரியை. அப்பொழுது, முனிந்து - கோபித்து என்னலாம். (கடு)

கூக. கொல்லுற்றனையும்பியைக்கோதவற்
கில்லையென்பதுணர்ந்துமிரங்கலி
யல்லல்செய்யேலுனக்கபயம்பிழை
புல்லலென்னவும்புல்லலிபொங்கினுய்.

(இ - ள்.) அவற்கு கோத இல்லை என்பது உணர்ந்தும் - அச்சுக்கிரீவனிடத்திற் குற்றமில்லையென்பதை (அவன் சொற்களினுல்) அறியலாயிருந்தும், இரங்கலை - (அவனிடத்து நீ) இரக்கங்கொள்ளாதவனுய்,—'அல்லல் செய்யேல் - (என்னை நீ) துன்பப்படுத்தாதே; உனக்கு அபயம் - உனக்கு அடைக்கலப்பொருள் (யான்); பிழை புல்லல் - (எனது) குற்றத்தைப்பொறுத்

தருள்வாய்,' என்னவும் - என்று (அச்சுக்ரீவன்) சொல்லவும், புல்லலே - பொறுத்திடாதவனும், பொங்கினாய் - சீறி, உம்பியை கொல்லல் உற்றனை - உன் தம்பியான அவனைக் கொல்லத்தொடங்கினாய்; (எ - று.)

மராமரப்படலத்தின் கஅக, கஅஉ - ஆங் கவிகளே நோக்குக. அவற்கு - உருபுமயக்கம். அபயம் - அஞ்சாதே யென்று அபயமளித்துக் காக்கத்தக்க பொருளாகின்றேன் யான் என்றபடி. புல்லல் - 'அல்' விகுதிபெற்ற உடன் பாட்டுவியங்கோள். ''மக்கட் பதடி யெனல்'' என்றவிடத்து 'எனல்' என் பதுபோல. புல்லுதல் - அமைதல். (கக)

கூஎ. ஊற்றமூற்றுடையானுனக்காரமர்
தோற்றுமென்றுதொழுதுயர்கையனீ
கூற்றமுண்ணக்கொடுப்பனென்றெண்ணினுய்
நாற்றிசைக்கும்புறத்தையுநண்ணினான்.

(இ - ன்.) ஊற்றம் உற்று உடையான்-வலிமையை மிகுதியாக உடைய வனான சுக்ரீவன், நீர் அமர் உனக்கு தோற்றும் என்று - 'அருமையான போரில் உனக்குத்தோற்றோமையாம்' என்றுசொல்லி, தொழுது உயர்கையன்-அஞ்சலிசெய்து சிரமேற்கொண்ட கைகளையுடையவனாய்; (அங்ஙனம் உன்னை அவன சரணமடையவும்), நீ—,(ஆதரியாமல்), கூற்றம் உண்ண கொடுப்பன் என்று எண்ணினாய்-''(இவனுயிரை) யமன்உண்ணும்படி கொடுப் பேன் [இவனைக்கொன்றி விடுவேன] யான்' என்று நினைத்தாய்; (பின்னர் அவன் அஞ்சி), நால் திசைக்கும் புறத்தையும் நண்ணினான் - நாலு திக்குக் களின் கடையெல்லையையும் ஓடிச்சேர்பவனானான்; (எ - று.)

மராமரப் படலத்தின் கஅக - ஆங்கவியை நோக்குக. தோற்றும், முடி - லிருந்தி, இறந்தகாலம் காட்டிற்று; தனிதந்மைப் பணமை. தோற்றும் என்று - தோற்போமென்று எண்ணி யென்றலுமாம். தொழுது-கூப்பி. (கஎ)

கூஅ. அன்னதன்மையறிந்துமருளலே
பின்னவன்னிவனென்பதும்பேணலே
வன்னிதானிடுசாபவரம்புடைப்
பொன்மலைக்கவனண்ணலிற்போகலே.

(இ - ன்.) அன்ன தன்மை அறிந்தும் அப்படி அவன் வலியிழந்து ஓடிப் போகின்ற தன்மையை யறிந்தும், அருளலே - (அவன்பக்கல்) நீ அருள்செய் யாதவனும், இவன் பின்னவன் எனபதும் பேணலே - இவன (உனது) தம்பி யென்பதையும் கருதாமல் அவனைத் தாக்கித்தாததி வருத்தினும்; (பின்பு), அவன் - அச்சுக்ரீவன், வன்னி தான இடு சாபம் வரம்பு உடை பொன் மலைக்கு நண்ணலின் (மதங்க) முனிவரா லிடப்பட்ட சாபமாகிய தடை யெல்லையையுடைய அழகிய ரிசியமூககிரிக்குப் போய்ச் சேர்ந்ததனால், போகலே - (அங்கு நீ) செல்லாதவிட்டாய்; (எ - று.)—அதனால் அவன் உயிர்தப்பிப் பிழைத்தானென்க.

மராமரப்படலத்தின் கஅக, கஅஎ, கஅஅ, அத்துபிப்பட்டலத்தின் கஉ - ஆம் கவிகளைப் பார்க்க. உனக்கு அழிவைச்செய்வதான சாபத்திற்கு அஞ்சி அங்கு நீ செல்லாதுவிட்டனையென்றி, சாணமடைந்தவனைப் பாதுகாத்தல் வேண்டுமென்ற விசேஷதருமத்தையாவது, வலியிழந்துபுறங்கொடுத்து ஓடுகின்றவனைத் தரத்திற்கொல்லலாகாதென்ற ராஜதருமத்தையாவது, தம்பி பக்கல் அன்புவைத்தல் வேண்டுமென்னும் உறவுரிமையையாவது சிறிதேனுங் கருதி அவனைவிட்டிலை யென்பதாம். தம்பியரைத தன்னுயிர்போலப் பாவிப்பவனும் வலியிழக்தபகைவனை 'இன்றுபோய் நாளைவா' என்று அனுபோடு சொல்லி விடுத்தருள்பவனும், சரணகதரக்ஷணத்தைப் பரமதருமமாகக் கொண்டுள்ளவனுமான இராமபிரான், மேற்கூறிய பெரியகுற்றங்களைப் பார்த்துப் பொறு னெனபது, வெளிப்படை. வண்ணி - வாணி என்ற வடசொல்லின் விகாரம்; அது - பிரமசாரியின் பெயர்: இங்கு, நித்தியப்பிரமசாரியான மதங்கமுனிவனைக் குறித்தது. சாபம் - 'இங்கு வாலி வந்தால் தலைவெடித்து இறப்பானாக' என்பது. (கஅ)

கூக. ஈரமாவதுமிற்பிறப்பாவதும்
வீரமாவதுங்கல்வியின்மெய்க்நெறி
வாரமாவதுமறமருவனபுணர்
தாரமாவதுதாங்குந்தருக்கரோ.

(இ - ன்.) ஈரம் ஆவதும் - அனபின் செயலாவதும், இல் பிறப்பு ஆவதும - உயர்குலத்திற பிறந்ததன் பயனுவதும், வீரம் ஆவதும் - வீரத்தினபயனுவதும, கல்வியின் மெய் நெறி வாரம் ஆவதும் - கல்விகற்று உணர்ந்த உண்மையான நீதிமார்க்கத்திற்கு உரிய செய லாவதும், மற்று ஒருவன் புணர் தாரம் ஆவது தாங்கும் தருக்கு அரோ - மற்றொருவன சேர்ந்த மனைவியை(க் கற்புநிலைமை தவறுதபடி) பாதுகாக்கும் பெருமையே யனறோ; (எ - று.)—அரோ - தேற்றம்; 'இடைச்சொற்களுக்கு இடத்திற்கு ஏறப்பொருள்கொள்ளலாம்' இவ்விலக்கணம். வடநூலாக்கும் ஒக்கும்.

ஈரம், இற்பிறப்பு, வீரம் என்பன - அவற்றின் காரிய மென்ற பொருளில் நின்றன; உபசாரவழக்கு. வாரம் - உரிமை. தாரமென்பது உயர்திணைப் பொருளுணர்த்தும அஃறிணைச் சொல்லாதலால், 'தாரம் ஆவது' எனப்பட்டது; 'ஆவது' என்பது, பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது. (கக)

கoo. மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பலெளியவர்ப்பொங்குத
லறந்திறம்பலருங்கடிமங்கையர்
திறந்திறப்பதெளிவுடையோர்க்கெலாம்.

(இ - ன்.) தெளிவு உடையோர்க்கு எலாம் - தெளிந்த அறிவையுடைய வர்கட்கெல்லாம்,—வலியம் எனு - 'வலியுடையோம் யாம்' என்று கருதி, மனம் புறம் திறம்பல் - மனம் வீரத்தில் தவறுகச்செல்வதாய், எளியவர்

பொங்குதல் - எளியார்மீது கோபித்தல், மறம் திறம்பல் - பராக்கிரமச் செயலினின்று தவறுவதும்,—அருங் கடி மங்கையர் நிறம் திறம்பல் - (பிறர் புகுதற்கு) அரிய பாதுகாவலையுடைய மாதர்களது கற்பினவலிமையை யழித்தல், அறம் திறம்பல் - தருமத்தினினறு தவறுதலுமாம்; (எ - று.)

தெளிவுடையோர்க்கெல்லாம் எளியவர்ப் பொங்குதல் மறந்திறம்பலும், மங்கையர் நிறந் திறம்பல் அறந்திறம்பலு மா மென்க. புறம் - வீரம்; அக் கிரமவழி யெனறுங் கொளலாம். நிறம் திறம்பல் - கற்புநிலைக்கு மாறுக ஒழுகுதல். வலியிழந்து ஓடிய சுக்கிரீவனை விடாது தூரத்திதூரதி யடித் துக் கொல்ல முயனறதலுலும், அவன மனைவியான ருமையைக் கவர்ந்து கொண்டதலுலும், தெளிவுடையோரனைவரும் வெறுகததக்க மறநிறம்ப லும் அறந்திறம்பலு மாகிய பெருங் குற்றங்கள் வாலியினிடம் நிகழ்ந்தன வென்பது உணாக. (500)

கoக. தருமமின்னதெனுந்தகைத்தன்மையு
மிருமையுந்தெரிதெண்ணிலெண்ணினு
லருமையும்பிதனுயிர்த்தேவியைப்
பெருமைநீங்கினையெய்தப்பெறுதியோ.

(இ - ள்.) தருமம் இனனது எனும் - அறம் இத்தன்மைய தெனகிற, தகை தனமையும் - தகுதியையும், இருமையும் - இம்மை மறுமைப் பயன் களையும், தெரிந்து எண்ணில - ஆராய்ந்து கருதாமறபோனும்; எண்ணினால் (அவறை) ஆலோசித்து அறிந்தால், அருமை உம்பிதன ஆர்உயிர் தேவியை- அருமையான உன் தம்பியினது அரிய உயிர் போன்ற மனைவியை, பெருமை நீங்கினை எய்த பெறுதியோ - பெருந்தனமையொழிந்து சோக்கடவையோ? (எ - று.)

இம்மைப்பயன் - புகழ். மறுமைப்பயன் - புண்ணியம். உயிர்த்தேவி - உயிரோடொத்த மனைவி; பிராணகாயகி. "அறம் புகழ் கேண்மை பெருமை யிந்நான்கும், பிறன்தாரம் நச்சுவார்ச்சேரா - பிறனதாரம், நச்சுவாரச்சேரும் பகை பழி பாவமென், றச்சதரோ டிந்நாற்பொருள்" என்பது காணத் தக்கது. (500)

கoஉ. ஆதலானுமவனெனக்காருயிர்க்
காதலானெனலானுநிற்கட்டனை
னேதிலாருமெளியரென்றுரையுந்
தீதுதீர்ப்பதென்சிந்தைக்கருத்தரோ.

(இ - ள்.) ஆதலானும் (நீ இப்படியெல்லாஞ் செய்தாய்) ஆதலாலும், அவன எனக்கு ஆர் உயிர் காதலான் எனலானும் - அச்சுக்கிரீவன் எனக்கு அருமையான உயிர்போன்ற நண்பனனதனுலும், நின் கட்டனை-உன்னை உயிர்பறித்தேன்; (அன்றியும்), ஏதிலாரும் - யாதொருசம்பந்தமுமில்லாத அயலாரையும், எளியர் என்றுரையும் - எளியவர்களோயும, தீது தீர்ப்பது -

னபமொழிப்பது, என் சித்தை கருத்து - எனது மனக்கருத்தாம்; (எ - று.) —அரோ - ஈற்றசை.

உயிர்க்காதலான் - பிராணசிநேகிதன். நிற் கட்டனென் - இரண்டாம் வேற்றுமைத்தொகை. கட்டனென், கன் - பகுதி. 'என்னூர்' என்றது, பகுதிப் பொருள் விகுதியாய் நின்றது. (கஉஉ)

[இவ்வாறு இராமபிரான் சொல்ல, அவற்றிற்கு வாலி எதிர்கூறத் தொடங்குதல்]

கஉங. பிழைத்ததன்மையிதுவெனப்பேரெழி
றழைத்தவீரனுரைசெயத்தக்கிலா
திழைத்தவாலியியல்பலவித்துணை
விழைத்திறத்தொழிலென்னவிளம்புவான்.

(இ - ன்.) பிழைத்த தனமை இது - நீ தவறுசெய்தலிதம் இது, என - என்று, பேர் எழில் தழைத்த வீரன உரைசெய - மிக்க அழகு நிரம்பிய மகா வீரனான இராமபிரான் சொல்ல, தக்கிலாது இழைத்த வாலி - தகாத செயலைச் செய்த வாலியானவன, 'இ துணை - (தகாதனவென்றுநீசொன்ன) இவ்வளவும், இயல்பு அல-(வாநரமான எங்கள் பிறப்புக்கு) உரியனவல்ல; விழைதிறம் தொழில் - விரும்பியபடி தொழில்செய்தலே (எங்கள பிறப்புக்கு உரியது),' என்ன - என்று, விளமபுவான் - சொல்பவனானன்; (எ - று)—இது, தொகுத்துச் சுட்டல்; இதன விவரணத்தை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

'தன்மையிது,' 'தக்கிலாது' என்பன - தொகுதியொருமைகள்; தக்கிலாது - எதிர்மறை யிறந்தகால வினையாலணையும் பெயர். 'இயல்பல இத்துணை விழைத்திறத்தொழில்' எனபதற்கு - தகுதியல்லாதனவாக நீ கருதிக் கூறிய இவ்வளவும் (எங்களுகது) விரும்பிச் செய்யதத்க தொழில்களேயாம் எனனும பதவுரை கொளளலாம. பேர் எழில் - மஹாஸௌந்தர்யம். தழைத்தல் - நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக மேனமேல் வளரப் பெறுதல். (கஉங)

[இதுமுதல் மூன்று கவிகள் - வாலிகூறும் சமாதானம்.]

கஉச. ஐயநுங்களருங்குலக்கற்பினப்
பொய்யின்மங்கையர்க்கேய்ததபுணர்ச்சிபோற்
செய்திலன்னெமைத்தேமலர்மேலவ
னெய்தினெய்தியதாகவியற்றினான்.

(இ - ன்.) ஐய - தலைவனே! நுங்கள் - உங்களுடைய, அருங் குலம் - அருமையான குலத்தில் தோனறிய, கறபு இனம் - பதிவிரதாதருமத்தையும் அதற்கு இனமான நாணம் முதலிய குணங்களையுமுடைய, பொய் இல் மங்கையர்க்கு - பொய்ம்மையில்லாத மாதர்கட்கு, ஏய்ந்த - பொருந்திய, புணர்ச்சி போல் - விவாகம்போல, எமை - எங்களுக்கு, தேன் மலர் மேலவன் -

தேனே யுடைய (திருமாலின் திருநாபித்) தாமரை மலரின்மேல் தோன்றியவனை பிரமன், செய்திலன் - நியமஞ்செய்தானில்லை; எய்தின் எய்தியது ஆக இயற்றினன் - நேர்ந்தால் நேர்ந்தபடி யாருமாறு நியமஞ்செய்தான்; (எ-று.)

'நுங்கள்குலம்' என்றது, மனிதப்பிறப்பை. கற்பின்-கற்பு நிலைமையை யுடைய, அந்த மங்கையை ரெனலுமாம். பொய்யின்மை - மனம்வேறு சொல் வேறு தொழில்வே றுகாமை, திரிகரணசுத்தி. செய்திலனெனை - விரித்தல், எனை-உருபுமயக்கம். தேமலர்-தெய்வத்தன்மையை யுடைய மலரெனினுமாம்; தே - தெய்வத்திற்கு ஒருபெயர். யாதொரு நிரமமு மில்லாமல் நேர்ந்தபடி புணருமாறு எங்கட்குப் பிரமதேவன் நியமஞ்செய்தனனென்க.

கoநி. மணமுமில்லைமறைநெறிவந்தன
குணமுமில்லைக்குலமுதற்கொத்தன
வுணர்வுசென்றுழிச்செல்லுமொழுக்கலா
னிணமுநெய்யுமிணங்கியதேமியாய்.

(இ - ள்.) நிணமும் - பகைவருடற்கொழுப்பும், நெய்யும் - பூசியநெய்யும், இணங்கிய - பொருந்திய, தேமியாய் - சக்கராயுதத்தையுடையவனே! உணர்வு சென்ற உழி செல்லும் ஒழுக்கு அலால் - மனம்போன வழியே நடக்கும் நடக்கை யல்லாமல், (எங்களுக்கு), மறை நெறி வந்தன மணமும் இல்லை - வேதமார்க்கப்படி வந்தவையான விவாகக்கிரமங்களும் இல்லை; குலம் முதற்கு ஒத்தன குணமும் இல்லை - வம்சபரம்பரைக்கு ஒத்தனவான குணங்களும் இல்லை; (எ - று.)

மறைநெறி வந்தன - வேதங்களிற்கூறிய முறைமையால் வந்தவை; வைதிகசம்பிரதாயப்படி வந்தவை. குலம் முதற்கு ஒத்தன - குலத்தின் சிறப்புக்கு ஏற்றவை யெனினுமாம் சென்றுழி - தொகுத்தல். ஒழுக்கு - ஒழுக்கம். நிணம் - பகைவருடலிற்பாயும்போது அங்கிருந்து ஒட்டிக்கொண்டது. "திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனேயென்னும்" என்றபடி அரசன் விஷ்ணுவின் அம்சமென்பதுபற்றி, 'தேமியாய்' என்ற இராமனை விளித்தான். 'மறைநெறிவந்தன' என்றதை 'குணம்' என்பதனோடும், 'குலமுதற்கொத்தன' என்றதை 'உணர்வுசென்றுழிச்செல்லும் ஒழுக்கு' என்பதனோடுங் கூட்டியுரைப்பாரு முளர்; (எங்கள்) மிருகராஜருக்குத் தக்கவாக மனம்போனபடியொழுகும் ஒழுக்கமென்க. (கoஅ)

[வாலிக்கு இராமன் மீண்டும் எதிர்கோல்லத் தொடங்குதல்.]

கoசு. பெற்றிமற்றிதுபெற்றதொர்பெற்றியிற்
குற்றமுற்றிலெனீயதுகோடியால்
வெற்றியுற்றதொர்வெற்றியினுயெனச்
சொற்றசொற்றகைக்குற்றதுசொல்லுவான்.

(இ - ன்.) வெற்றி உற்றது ஓர் வெற்றியினுய் - (என்னை) ஜயித்த தன்மையையுடையவனும் (இயல்பில்) ஜயசாலிபுமானவனே! பெற்றி இது - (எங்கள் பிறப்புக்குரிய) தன்மை யிது: (ஆதலால்), பெற்றது ஓர் பெற்றியின் - காணடைந்துள்ள ஜாதித்தன்மைப்படி, குற்றம் உற்றியென்-யாதொரு குற்றத்தையுஞ் செய்திலேன்; அது நீ கோடி - அதனை நீ (மனத்திற்) கொள்வாய், எனு - என்று, சொற்ற - சொன்ன, சொல் தகைக்கு - சொற்களின் பெருமையையுடையவனுன வாலிக்கு, உற்றது சொல்லுவான் - தக்க சமாதானஞ் சொல்பவனுயினன், (இராமபிரான்); (எ று.)—அதனை, அடித்தி ஒன்பதாவதிலைரிற் காண்க. மற்று, ஆல் - அசைகள்.

கோடி - கொள்+இ; ட்-எழுத்துப்பேறு. அது கோடி - அதனை அறி என்றபடி. 'வெற்றியுற்றதொர் வெற்றியினுய்' என்பதற்கு - ஜயம் தான் அடைத்தொரு ஜயத்தையுடையவனேயென்று பொருள்கொண்டு, வெற்றிகளுள்ளும் மேம்பட்ட வெற்றியையுடையவனே யென்று கருத்துரைத்தலும் அமையும்; எவராலும் வெல்லுதற்கு அரிய தன்னைக் கொன்றிட்டதையே சிறந்தவெற்றியாகக் குறித்தான். சொற்ற, ற்-இறந்தகாலவிடைநிலை. சொற்றகை-ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; கன்ருகப்பேசவல்லவ னென்க உற்றது - தக்கது. இக்கவியிற் பிராஸ மென்னுஞ் சொல்லணி காண்க. (கஅசு)

[இதுமுதல் ஒன்பது கவிகள் - இராமபிரான் வாலியின் வார்த்தையை மறுத்துப்பேசுதல்]

கஅஎ. நலங்கொடேவரிற்ரேன்றிநவையறக்
கலங்கலாதறநன்னெறிகாண்டலின்
விலங்கலாமையினங்கியதாதலா
னலங்கலார்க்கிதடிப்பதன்ருமரோ.

(இ - ன்.) (நீங்கள்), நலம் கொள் தேவரின் தோன்றி-சிறப்புக்கொண்ட தேவர்களின் புதல்வராய்ப் பிறந்து, நவை அற-(ஐயக்கிரிபுகளாகிய) குற்றங்களில்லாதபடி, கலங்கலாது நல் அறம் நெறி காண்டலின் - மிலேகலங்காமல் என்றும் ஒருபடியாகவுள்ள சிறந்த தருமமார்க்கத்தை யறிந்திருத்தலால், விலங்கு அலாமை வினங்கியது - (நீங்கள் ஸாமாந்யமான) மிருகஜாதி யன்றென்பது விளங்கிற்று; ஆதலான் - ஆகவே, அலங்கலார்க்கு இது அடுப்பது அன்று ஆம் - போர்வெற்றிகட்குரிய மாலைகளைத் தரிப்பவர்களான வீரர்கட்கு இது தகுவதன்றும்; (எ - று.)—அரோ - தேற்றம்.

விளங்கியது - கன்ருகத் தெரிகின்ற தென்றபடி. 'அலங்கலார்க்கு' என்றது - முன்னிலைப்படர்க்கையாக, போர்வீரர்களான உங்கட்கு எனவாரும். அஃறிணையினின்று பிரித்ததனுல், உயர்திணையாக் கூறினர். முன்பு கூறியவற்றையெல்லாம் தொகுத்து, தொகுதியொருமையாக 'இது' எனப்பட்டது. அடுப்பதன்று - அடாது. (கஅஏ)

கoஅ. பொறியின்யாக்கையதோபுலனுக்கிய
வறிவின்மேலதன்றேலுவறத்தாறுதா
னெறியிதேனுண்மையைநோர்நின்றுணர்ந்தீ
பெறுதியோபிழையுற்றுறுபெற்றிதான்.

(இ - ன்.) அறத்து ஆறு தான் - தருமமார்க்கந்தான், பொறியின் யாக்கையதோ ஐம்பொறிகட்கு இடமான உடம்பைப் பற்றியதோ! புலன் கோக்கிய அறிவின்மேலது அன்றே - விஷயங்களை ஆராய்ந்தறிகின்ற அறிவைப் பற்றிய தன்றே! நெறியின் நோன்மையை - அத்தத் தருமமார்க்கத்தின் பெருமையை, நோ நின்று உணர்ந்த - நன்றாக அறிந்திருந்த, நீ—, பிழை உற்று உறு பெற்றி தான் பெறுதியோ - தவறுகளை மிகுதியாகச் செய்யுந் தன்மையைப் பெறக்கடவையோ? (எ - று.)

நீ, வடிவினுல் விலங்காகிய வாநரம்போலிருப்பினும், பகுத்தறிவுடைமையால் மனிதர் போலுதலால், தருமமார்க்கத்தை யறிந்திருந்தே தவறுகள் செய்தது, தகாது என்பதாம். தொல்காப்பியத்து மரபியலில் "மக்கள்தாமே ஆறறிவுயிரே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே" என்ற சூத்திரத்தின் உரையில் 'பிறப்பென்றதனுல், குரங்குமுதலாகிய விலங்கினுள் அறிவுடையன வெனப்படும் மனவுணர்வுடையன உளவாயின், அவையும் ஈண்டு ஆறறிவுயிரா யடக்கு மென்பது' என்பது, இக்குக் காணத்தக்கது. (கoஅ)

கoகூ. மாடுபற்றியிடங்கர்வலித்திடக்
கோடுபற்றியகொற்றவற்கூயதோர்
பாடுபெற்றவுணர்வின்பயத்தினுல்
வீடுபெற்றவிலங்கும்விலங்கோ.

(இ - ன்.) இடங்கர் - முதலை, மாடு பற்றி வலித்திட - (தன்னை) ஒரு பக்கத்திற் பிடித்துக்கொண்டு வலிய இழுத்ததனுல், கோடு பற்றிய கொற்றவன் கூயது - சங்கத்தை ஒருகையிலேந்தியுள்ள வெற்றியையுடையவனை திருமாலைக் கூவியழைத்ததாகிய, ஓர் பாடு பெற்ற உணர்வின் பயத்தினுல் - ஒப்பற்ற பெருமைபெற்ற அறிவின் பயனுல், வீடு பெற்ற - (அத்தன்பத்தினின்று) விடுபடுதலையும் பிறகு முத்தியையும் அடைந்த, விலங்கும் - யானையும் [கஜேந்திராழ்வானும்], விலங்கு அரோ-மிருகஜாதியேயன்றே; (எ - று.)

மிக்க விஷ்ணுபக்தியுடையனை இந்திரத்யும்நனென்னும் அரசன் வழக்கப்படி ஒருநாள் விஷ்ணுபூஜை செய்துகொண்டிருந்தபோது அகத்தியமகாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன்கருத்து முழுவதையும் திருமாலிப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனுல் அவ்விருடியின்வருகையை அறிந்திடாதுய் அவனுக்குஉபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன்,தன்னை அரசன் அலட்சியஞ்செய்தானென்று மாருக்கருதிக்கோபித்து, 'நீ, யானைபோலச் செருக்குற்றிருந்ததனுல், யானையாகக்கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனெயினும்,

முன்செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் வீடாமற் நான் தோறும் ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப்பூசித்து வருகையில், ஒருகாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறித்தற்குப்போய் இறங்கியபொழுது, அங்கே முன்பு நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றி யிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தாற் பெரியமுதலையாய்க் கிடந்த ஹூஹூவென்னுங் கந்தர்வன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமற் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனும் அங்கு எழுந்தருளி, தனது சக்ராயுதத்தைப்பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்று விடுவித்து, இறுதியில் அதற்கு முத்தியை யருளினன் என்ற வரலாறு, இங்குக் குறித்தது.

அந்தக் கஜேந்திரன்போலவே நீயும் ஸாமாந்யமான விலங்கென்று கொள்ளத்தக்கவனல்லை யென்பதாம்.

மாடு - பக்கம். வெற்றிக்கு அறிகுறியாகச் சங்கத்தை வாயில்வைத்து ஊதுதலும், சங்கத்தின் நாதத்தினாற் பகைவரை அச்சமுறுத்தி வெல்லுதலுந் தோன்ற, 'கோடுபற்றிய கொற்றவன்' என்றார். 'வீடுபெற்ற' என்றது, இரட்டுறமொழிதல். வீடு - விடு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்; பற்றுக் களைவிட்டு அடையுமிடமுமாம். கூயது - கூ - பகுதி, ய் - இறந்தகாலவிடை நிலை. (கஅக)

கஉ0. சிந்தைநல்லறத்தின்வழிச்சேர்தலாற்
பைந்தொடித்திருவின்பரிவாற்றுவான்
வெந்தொழிற்றிறல்வீடுபெற்றெய்திய
வெந்தையும்மெருவைக்கரசல்லனே.

(இ - ன்.) நல் அறத்தின் வழி - நல்ல தருமமார்க்கத்தில், சிந்தை சேர்தலால் - மனம் சென்றதனால், பைந் தொடி திருவின் பரிவு ஆற்றுவான் - பசுமையான [பசும்பொன்னாலாகிய] தொடியென்னுங்கைவளையை யணிந்த திருமகள்போன்ற சீதையினது துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு, வெம் தொழில் திறல்-கொடிய போர்த்தொழிலில் (தனது) திறமையை(க்காட்டி), வீடு பெற்று எய்திய - பரமபதஞ் சேர்ந்து ஆனந்தமடைந்த, எந்தையும் - எமது (பெரிய) தந்தையான ஜடாயுவும், எருவைக்கு அரசு அல்லனே - கழுகுகளுக்கு அரசனன்றே ; (எ - று.)

சூரியசாரதியான அருணனது புத்திரனும் சம்பாதியின் தம்பியுமாகிய ஜடாயு, நெடுநாளாய்த் தசரதசக்கரவர்த்திக்கு உயிர்த்தோழனாயிருந்தனன். இவன் பின்பு தசரதகுமாரர்களான ராமலக்ஷ்மணர்களைத் தண்டகாரணியத்திற் கண்டு அவர்களைத் தனது புத்திரர்போலவே பாவித்து அன்புபாராட்டி அவர்கட்குப் பாதுகாவலாய்நிற்க, அவர்களும் தசரதனினும் பிராயம்முதிர்ந்தவனை இவனைத் தமது பெரிய தந்தையாகப் பாவித்து வந்தனர். இங்ஙன

மிருக்கையில், இராவணன், மாயமான் வடிவுபூண்ட மரீசனது சூழ்ச்சியால் இராமலக்குமணரை அப்புறப்படுத்தி, தனித்து நின்ற சீதையை வலிய எடுத்துத் தேரினமேல் வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் செல்லுகையில், அவன் கூக்குரலிட்டதைக் கேட்டுக் கழுகரசான ஜடாயு ஒடிவந்து எதிர்த்துப் பெரும்போர் செய்து அவனது கொடி முதலியவற்றைச் சிதைத்து, முடிவில், அவனெறிந்த தெய்வவாளினால் சிறகு அழுபட்டு விழ, அரக்கன் சீதையைக் கொண்டுபோய் இலங்கையில் அசோகவனத்திற் சிறைவைத்திட்டான. பின்பு வந்த இராமலக்குமணர் பர்ணசாலையிற் சீதையைக் காணுமற் கலங்கி அவளைத் தேடிச் செல்லும் வழியில் ஜடாயு வீழ்ந்து கிடக்கக்கண்டு சோகிக்கையில், குற்றுயிருடன் விழுந்துகிடந்த அந்தக் கழுகரசன் நடந்த செய்தியைச் சிறிதுகூறி உயிர்நீப்ப, இராமபிரான் அவனுக்குப் பரமபத மளித்துச் சரம கைங்கரியஞ் செய்து முடித்தனன் என்ற வரலாறு, ஆரணிய காண்டத்திற் கூறப்பட்டது.

"விலங்கானேனுதலினுல் விலங்கினேன்" என்று ஜடாயு கூறியதுங் காண்க. ஜடாயுபோலவே நீயும் ஸாமான்யமான விலங்கென்று கொள்ளத் தக்கவனல்லை யென்பதாம். எழுவகைப் பிறப்பினுள் விலங்கும் பறவையும் வேறு வேறாக கூறப்படினும், இவ்விரண்டும் நால்வகைக் கதிகளுள் விலங்கு கதியில அடங்குதலால், இவருக் கழுகரசு வாகரத்தோடொப்ப எடுத்துப் பட்டது.

ஆறறிவான் - எச்சம்; அவாய் நிலையால், இதற்கு 'காட்டி' என்ற முடிகருஞ் சொல் வருவிக்கப்பட்டது. எந்தையும்மெருவை, மகரவொற்று - விரித்தல். 'வீடு' என்பதை ஆவருத்தி செய்துகொண்டு, வீடு பெற்ற-உயிர் நீங்குதலை யடைந்து, வீடு எய்திய - பரமபதமடைந்த என்று பதவுரை கூறலுமாம். (கஅ0)

கக. நன்றுதீதென்றியறிகல்லறி
வின்றிவாழ்வதன்றேவிலங்கின்னிடை
நின்றநன்னெறிநீயறியாநெறி
யொன்றுமின்மையுன்வாய்மையுணர்த்துமால்.

(இ - ன்.) நன்று தீது என்று - (இனைது) கல்லதென்றும் (இன்னது) கெட்டதென்றும், இயல் தெரி - (அதனதன்) இயலபை (உள்ளபடி) உணர்கின்ற, கல் அறிவு-கல்ல பகுத்தறிவு, இன்றி-இல்லாமல், வாழ்வது அன்றே-உயிர்வாழ்ந்திருப்ப தனறே, விலங்கின இடை - மிருகங்கட்கு (மனிதரோடின்ன) வேறுபாடு; நின்ற நல் நெறி - நிலைபெற்ற சனமார்க்கங்களுள், நீ அறியா நெறி ஒன்றும் இலை - நீ அறியாத வழி ஒன்றுமில்லையென்பதை, உன் வாய்மை உணர்த்தும - உன வாயினின்று (இப்பொழுது) வந்த சொற்களே தெரிவிக்கும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இடை - அந்தரம். தாரதமியம். நன்றுதீதென்ற இயல்தெரி கல்லறிவு-விவேகம். விலங்கின்னிடை, னகரவொற்று - விரித்தல். (கஉக)

கஉஉ. தக்கவின்னதகாதனவின்னவென்
றெருக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும்புத்தேளிரே.

(இ - ன்.) தக்க இன்ன - தகுதியானவை இவை, தகாதன இன்ன - தகுதியல்லாதவை இவை, என்ற—, ஒக்க-நீதிநூல் முறைமைக்குப் பொருந்த, உன்னலர் ஆயின் - எண்ணுதவர்களாஞல், உயர்ந்தஉள மக்களும் விலங்கே - (எல்லாப் பிராணிகளினுஞ்) சிறந்துள்ள மனிதர்களாயினும் மிருகத்துக்கு ஒப்பானவர்களே; அ விலங்கும் - அந்த மிருகங்களேயாயினும், மனுவின் நெறி புக்க எல் - மநுதர்ம சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ள முறைமைகளிற் பொருந்தி நடந்தனவாயின், புத்தேளிரே - தேவர்கட்கு ஒப்பானவையே.(எ - று)

உணவு உறக்கம் அச்சம் முதலிய பலதொழில்களும் ஐம்பொறியுணர்வும் மனிதர்க்கும் மிருகங்களுக்கும் சமமாயிருப்பினும், மிருகங்களினும் மனிதர் சிறப்புடையராக மதிக்கப்படுதற்குக் காரணம், நல்லவை தீயவைகளைப் பகுத்தறியும் அறிவு மிருதி மிருகங்களுக்கு இல்லையாக, மனிதர்க்கு அத்தப் பகுத்தறிவு இருத்தலேயாம்; ஆதலின், உயர்ந்த பிறப்பிற் பிறந்திருந்தும் அதற்கு ஏற்ற விவேகத்தை புடையராகாத மனிதர் மிருகங்களோடு ஒப்பர்: இழிந்த பிறப்பிற பிறந்துள்ள அந்த மிருகங்கள் தாம் தமது பிறப்பிற்கு உரிய அறிவினும் மேம்பட்ட அவவுணர்வு மிருதியோடு கூடிய நீதிநெறியே ஒழுகுமாயின் விசேஷ ஞான முடைய தேவர்கட்குச் சமமாகு மெனபதாம். "விலங்கொடு மக்களேனய நிலங்குநூல், கற்றுரோ டேனையவர்" என்ற திருக்குறள் இக்கு நோக்கத்தக்கது.

உம்மை யிரண்டும் - முறையே உயர்வு சிறப்பும், இழிவு சிறப்புமாம். ஏகாரங்கள் - தேற்றம். 'மக்கள்' என்ற பெயர், "மக்கள தாமே ஆறறிவுபிரே" என்ற தொல்காப்பியத்தின்படி ஐம்பொறியுணர்வோடு மனவறிவையும் உடைமையாகிய அவர்களது விசேடத்தை விளக்கும். 'உயர்ந்தன' என்ற அடைமொழி, "அரிதரிது மானிடராத லரிது" என்றவாறு எல்லாப் பிறப்பினும் மனிதசன்மத்திற்கு உரிய ஏற்றத்தை எடுத்துக் காட்டியபடி.

தக்க, புக்க - இறந்தகால வினையாலணையும் பெயர்கள். இன்ன - இகரச் சுட்டடியாப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர்; ன்-சாரியை, ன-சந்தி, அ - பலவின்பால்விகுதி. ஒக்க - மாறுபடாமல், சரியாக, செயவெனெச்சம். உன்னலர் - எதிர்மறைப் பலர்பால் முற்று. மநு - வடசொல்; இது - இக்கே, அவனுற் செய்யப்பட்ட தரும சாஸ்திரத்தைக் குறித்தலால், கருத்தாவாகுபெயர். மனுவின்னெறி, னகாமெய் - விரித்தல். எல் - என்னில் மரூஉ. புத்தேளிர், இர் - பலர்பால் விகுதி; கேளிர், மகளிர் என்ற விடங்களிற் போல. (கஉஉ)

ககஙூ. காலனுற்றல்கடிந்தகணிச்சியான்
பாலினுற்றியபத்திபயத்தலான்
மாலினுற்றருவன்பெரும்பூதங்க
ணாலினுற்றலுமாற்றுழிகண்ணினை.

(இ - ள்.) காலன் ஆற்றல் கடிந்த - யமனுடைய வல்லமையை யழித்த (அவனை)வென்ற, கணிச்சியான்பாலின - மழுவென்னும் ஆயுதத்தை யுடையவனான சிவபிரானபக்கல், ஆற்றிய - (நீ) செய்த, பத்தி - பக்தி, பயத்தலான் - பயன தந்ததனால்,—மாலினால் தரு வல பெரும் பூதங்கள் நாலின் ஆற்றலும் - திருமாலாற் படைக்கப்பட்ட வலிய பெரிய பூதங்கள் நானகிற்கு உள்ள வலிமைகளெல்லாம், ஆற்றுழி கண்ணினைய - (உனது) வலிமையிற் பெற்றன; (எ - று.)

நல்வினைசெய்தால் நற்பயன விளையுமெனபதற்கு இது கூறப்பட்டது. பூதங்கள் நான்கு—இவை - ஆங் கவியிற் கூறப்பட்டன. காலனுற்றல் கடிந்த கணிச்சியான—முன ''காலனறன காலமுங் காலா, லறுக்கும் புங்கவன்'' என்றது காண்க. பால் - ஏழனுருபு; இன் - சாரியை. கணிச்சி - சூலமுமாம். பக்தி. பூதம் - வடசொறகள.

'அண்டத்தையும, அண்டகாரணங்களையும் தானே உண்டாக்கும' என்ற படி அண்டத்தினகாரணமான பஞ்சமகாபூதங்களைப் பிரமனைக்கொண்டன்றி எம்பெருமான தானே படைத்தருளுதலால், 'மாலினுல்தரு வனபெரும் பூதங்கள்' எனப்பட்டன; இது, ஸமஷ்டிஸருஷ்டியின் பாற்படும். ஆற்றுழி - ஆறறலில். ஆறறு - ஆறறல் என்பதன விகாரம, உழி - ஏழனுருபு. மாற்று உழி என்று பிரித்து, பூதங்கள் நானகின வலிமையையும் போக்கும் படியான திறததைப் பெற்று யென்று உரைத்தலும் ஒன்று. (ககஙூ)

ககச. மேவருந்தருமத்துறைமேவினு
சேவரும்பவத்தாலிழிந்தோர்களுந
தாவருந்தவருமபலதன்மைசா
லேவரும்மூளர்நீமைதிருந்தினர்.

(இ - ன்.) எவரும் - குற்றமுடையரா யிருந்தவர்களிலும், பவத்தால் இழிந்தோராகளும் - பிறப்பினால் தாழ்ந்தவர்களிலும், மேவு அருந் தருமம் துறை மேவினர் - சோதற்கு அரிய [மிகச்சிறந்த] தருமமார்க்கத்திற் சேர்ந்து நடந்தவர்களும்,—தா அருந் தவரும - குற்றமில்லாத தவத்தைச் செய்தவர்களான முனிவர்களிலும், பல தன்மை சால் தேவரும் - பலவகைப்பட்ட குணங்கள் நிறந்த தேவர்களிலும், நீமை திருந்தினர் - நீயசெயல் செய்தவரானும், உளர் - (உலகத்தில்) உண்டு; (எ - று)

இன்னார் நல்லனவே செய்வர், இன்னார் நீயனவே செய்வர் என்னும் நியதி யில்லை யென்க. ஏமம் - குற்றம்; அதனையுடையவர், ஏமர்; ஏமஞ் சேர்ந்தவ ரென்க; 'தவர்' என்றற் போல. பவம் - வடசொல் பவத்தான்

இழிந்தோர்கள் - இழிபிறப்பினர். தா - உரிச்சொல்; அழிவுமாம். தேவரும் முனர், மகரமெய் - விரித்தல். திருந்துதல் - செய்து முடிதல். பின்வரும் 'தவர்' எனபதற்கு எதிராக 'ஏவர்' எனறும், 'தேவர்' என்பதற்கு எதிராக 'பவத்தாலிழிந்தோர்கள்' எனறுங் கூறினர். 'தீமை திருந்தினர்' என்பதற்கு - தீமை செய்து பின்பு சீர்திருந்தப்பெற்றவ ரென்று உரைப்பாரு முளர். (ககச)

ககஙி. இனைய தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னல்வரு மேன்மையுங் கீழ்மையு
மனைய தன்மைய றிந்தும ழித்தனை
மனையின் மாட்சியென் றுன்மனு நீதியான்.

(இ - ள்.) இனையது ஆதலின் - (உண்மை) இதனனமையதாயிருத்த லால், எ குலத்து யாவர்க்கும - எந்தக குலத்திற் பிறந்த எவர்க்கும், மேன மையும் கீழ்மையும் - உயாவும் இழிவும், வினையினல் வரும் - (அவரவர்செய் யுஞ்) செயல்களாலேயே வரும்; அனைய தனமை அறிந்தும் - அததன்மை யை (நீ) உணர்ந்திருந்தும், மனையின் மாட்சி அழித்தனை - (அயலான்) மனை வியின கற்பை யழித்தாய், எனறுன - எனறு சொன்னன: (யாவனெனின்), மனு நீதியான் - மநுதாமசாஸ்திரத்திற் (சொல்லப்பட்ட) நீதிநெறி தவறாத நடப்பவனான ஸ்ரீராமபிரான; (எ - று.)

வினை - கர்மம். நல்வினையால் மேன்மையும்,' தீவினையாற் கீழ்மையும் வரு மென்க. மாட்சி - பெருமை; இங்கே, சிறப்பினல், கற்பை யுணர்த் திற்று. (ககஙி)

வே று.

[பிறகு வாலி வேறென்றுவினவ, அதற்கு இலக்குமணன் விடைகூறத் தொடங்குதல்.]

ககக. அவ்வுரை யமையக் கேட்ட வரிகுலத் தரசு மாண்ட
செவ்வியோ யனைய தாகச் செருக்களத் தருத்தெய் யாதே
வெவ்விய புளிஞ ரென்ன விலங்கியே மறைந்து வில்லா
லெவ்விய தென்னை யென்ற னிலக்குவ னியம்ப லுறறான்.

(இ - ன.) அ உரை அமைய கேட்ட-அந்த (இராமபிரான்) வார்ததையை நனறாக கேட்ட, அரி குலத்து அரசும் - குரங்குகளின கூட்டததிறகு அரச னான வாலியும், (அவனிராமனை நோகக), 'ஆண்ட செவவியோய் - (எல்லா வுயிர்களையும்,) ஆளுகினற சிறப்பையுடையவனே! அனையது ஆக - அப்படி யானால், செருக்களத்து உருத்து எய்யாதே - போர்க்களததில் முன நின்று (எனமேல்) அம்பு தொடுக்காமல், வெவ்விய புளிஞர் என்ன - கொடிய வேடர் கள் (மறைந்து நின்று விலங்குகளினமேல் அமபுதொடுததல்) போல, விலங் கியே மறைந்து - (எதிர்ப்படாமல்) விலகி மறைந்துநின்று, வில்லால் எவ லியது - வில்லைக்கொண்டு (என்மேல் அம்பு) செலுததியது, என்னை-என்ன

காரணத்தால்?' என்ரூன் - என்றுவினவினூன்; இலக்குவன் இயம்பல் உற்ரூன்-(அதற்கு) லக்ஷ்மணன் விடைகூறத்தொடங்கினூன்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க

அரசு மாண்ட என்ற பிரித்தால், 'மாண்ட' என்பதற்கு - மாட்சிமைப் பட்ட என்ற பொருளாம்: ஆக - செயவெனெச்சம். 'அனையதாக செருக் களத்து' என்ற வலிமிகாத பாடத்திற்கு, 'ஆக' என்பது-வியங்கோண்மூற்ற; அவ்வாறுக வென்ற பொருள், உருத்தல் - உருவங்காட்டுதல் புளிஞர் - புளிந்த ரென்ற வடசொல்லின் விகாரம் எவ்வியது - (அம்பை) எவியது. லக்ஷ்மண னென்ற வடசொல், விகாரப்பட்டது; அது - சகலலக்ஷணங்களும் பொருந்தியவ னென்றும், லக்ஷ்மியோடு [இராமனுக்கு அடிமைசெய்தலாகிய செல்வத்தோடு] கூடியவ னென்றும் காரணப்பொருள்பெறும். 'விலங்கினை மறைந்து' என்றும் பாடமுண்டு.

இதுமுதல் ஐந்து கவிகள் - மராமரப்படலத்தின் பதினேராங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (ககக)

[இலக்குமணன் கூறிய பிரதியுத்தரம்.]

ககள. முன்புநின்றம்பிவந்துசரண்புகமுறையிலோயைத்
தென்புலத்தெய்ப்பனென்றுசெப்பினன்செருவினீயு
மன்பினையுயிருக்காகியடைக்கலமியானுமென்றி
யென்பதுகருதியண்ணன்மறைந்துநின்றெய்தினென்ரூன்.

(இ - ன்.) நின் தம்பி முன்பு வந்து சரண் புக - உன்தம்பியான சுக்கிரீ வன் முதலில் வந்து சரணமடைய, (அப்பொழுது ஸ்ரீராமன்), முறைஇலோ யை - நீதிநெறியில்லாதவனை உன்னை, தென்புலத்து உய்ப்பன் என்ற செப்பினன் - கொல்லுவதாக (அவனுக்கு) வாக்குதத்தஞ் செய்தருளினன்; (பிறகு), நீயும்—, செருவில் - போரில், உயிருக்கு அன்பினை ஆகி - (உனது) உயிரினிடத்து அன்புடையையாய், யானும் அடைக்கலம் என்றி - 'நானும் (உனக்கு) அடைக்கலம்' என்று சொல்லுவாய், என்பது கருதி - என்பதை எண்ணியே, அண்ணன் மறைந்து நின்று எய்தினன் - (எனது) தமையனான இந்தஸ்ரீராமன் உனதுஎதிரில்நில்லாமல் மறைந்துநின்று அம்பெய்தனன், என ரூன் - என்ற (இலக்குமணன் வாலிக்கு ஏற்ற) விடைகூறினூன்; (எ - று.)

பெருமான் வாலியை எதிரில்வந்து கொலைசெய்யாதது ஏனெனின்,— அவர் முதலில் தம்மைச்சரணமடைந்த சுக்கிரீவனுக்கு அப்பொழுது அபய மளித்து வாலியைக்கொன்று உதவுவதாகப் பிரதிஜ்ஞைசெய்தனர்; பிறகு வாலியினெதிரில்வந்துபோர்செய்தால், வாலியும் போரில் தமது திறத்தைக் கண்டு அஞ்சித் தன்னுயிர்பாதுகாத்துக்கொள்ளுங்கருத்தினுற் சரணமடைந் திடுவனுயின், பின்பு, தஞ்சமடைந்தவர்களைக் கொலைசெய்யக் கூடாமை யால் முன்செய்தபிரதிஜ்ஞை தவறிப்போய்விடும் என்கிற உத்தேசங்கொண் டே பேராற்றலையுடையரான பெருமான் வாலிகண்ணெதிரில்தோன்றுமல் மறைந்து நின்று அவன்மேல் அம்பெய்தனரே யன்றி வேறில்லை யென்க.

அன்பனுக்கு வாக்களித்தது தவறலாகா தென்பது கருதியே இவ்வாறு செய்யலாயிற்று.

சரண் - ஸ்ரணம்; வடசொல் விகாரம். தென்புலத்துஉய்த்தல் - உயிரை உடம்பினின்றுஒழித்துத் தென்திசையிலுள்ளவனான யமனிடத்திற் செலுத்துதல். அடைக்கலம் - பாதுகாக்கத்தக்க பொருள். 'என்றி' என்ற முன்னிலையொருமைமுற்றில், இகரவிகுதி-எதிர்காலங்காட்டிற்று; ற் - எழுத்துப்பேறு. அண்ணல்'என்று எடுத்தும் உரைக்கலாம்; தமையனென்றும், பெருமையிற்சிறந்தவனென்றும், தலைவனென்றும் பொருள்படும். எய்தது - தொழிற்பெயர். விளைமுற்றின் தன்மையடைந்தது இனி, எய்தது என்பதி கருதி (ஆம்) என்று மாறஇயைத்துப் பொருள்கொள்ளவுமாம். (கஎஎ)

[வாலி சமாதானமடைந்து ஸ்ரீராமனை வணங்குதல்.]

கஎஅ.கவிகுலத்தரசுமன்னன்கட்டுரைமனத்திற்கொண்டா
ணவியுறுமனத்தனெயிறத்திறனழியச்செய்யான்
புவியிடையண்ணலென்பதெண்ணினன்பொருந்திமுன்னே
செவியுறுகேள்விச்செல்வன்சென்னியையிறைஞ்சிச்சொன்னான்.

(இ - ன்.) முன்னே செவியுறு கேள்வி செல்வன் - முன்னமே [இளமையிலேயே] (பலபெரியோர்கள்பக்கல்) கேட்டுஉட்கொண்ட நூற்கேள்விகளாகிய செல்வத்தை யுடையவனான, கவி குலத்து அரசும் - குரங்குகளின் கூட்டத்திற்கு அரசனான வாலியும், மன்னன் கட்டுரை மனத்தில் கொண்டான் - இளையபெருமான் சொன்ன அத்தகுதியான வார்த்தையை மனத்திற்கொண்டவனும், 'புவியிடை - உலகத்திலே, அண்ணல் - பெருமையிற் சிறந்தவனான இராமன், அவியுறு மனத்தன் ஆதி - கோபதாபங்கொண்ட மனத்தையுடையவனும், அறம் திறன் அழிய செய்யான் - தருமமார்க்கம் அழியும்படி தொழில்செய்யமாட்டான்,' என்பதை எண்ணினன் - என்பதைக் கருதியவனாகி, பொருந்தி - அடங்கி, சென்னியை இறைஞ்சி - (இராமபிரானைக்குறித்து) தலைவணங்கி (நமஸ்கரித்து), சொன்னான் - சொல்பவனானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்துளெல்லாந் தலை" என்ற திருக்குறளும். அதனுரையிற் பரிமேலழகர் 'செவியான்வருஞ் செல்வம்-கேள்வியான் எல்லாப்பொருளையும் அறிதல்' என்றதும், இக்கு நோக்கத்தக்கன. அறிவை யுண்டாக்கி வளர்ப்பனவான நூற்கேள்விகளை முன்னமேயுடையவனாதலால், வாலி இராமலக்ஷ்மணர்சொன்ன சமாதானங்களை உளங்கொண்டு ஆராய்ந்து அவைசரியேயென்ற சம்மதித்துத் தனகோபதாபங்களொழிந்தனனென்க. 'முன்னேசெவியுறு கேள்விச்செல்வன்' என்ற அடைமொழி இங்ஙனம் ஒருகருத்தையுட்கொண்டதனால், கருந்துடியடைமொழியணி மன்னன் - கூத்திரியகுலத்தில் அவதரித்தவன், அன்னன் என்று பிரித்து, அவனென்று பொருள்கொள்ளவுமாம். கட்டுரை - ஏற்றசொல். 'அவியுறு மனத்தனெ' என்பதற்கு

(வாலி) சமாதானங்கொண்ட மனத்தையுடையவனு யென்றும், 'பொருந்தி' என்பதற்கு - (அந்தச் சமாதானவார்த்தைகள் தகுதியாமென்று) சம்மதித்து என்றும் பொருள்கொள்ளலாம். அவிதல் - தபித்தல், அமைதல், தணிதல். உறு - ஆணவியே. பொருந்துதல் - அமைதல், இயைதல் அவனடியில் தனதுமுடிபடும்படி வீழ்ந்து ஸாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்யமாட்டாமையால், தனதுதலைவணக்கமாத்திரத்தால் அவ்வந்தனக்குறிப்பைத் தெரிவித்தனனென்க. (ககஅ)

[வாலி இராமனைத் தனதுகுற்றங்களைப்
பொறுத்தருளுமாறு வேண்டுதல்.]

ககஙூ. தாயெனவுயிர்க்குநல்கித்தருமமுந்தகவுஞ்சால்பு
நீயெனநின்றநம்பிநெறியினீணுக்குநேர்மை
நாயெனநின்றவெம்பானலையறவுணரலாமே
தீயனபொறுத்தியென்றுன்சிறியனசிந்தியாதான்.

(இ - ள்.) 'தாய் என உயிர்க்கு நல்கி - தாய்போல உயிர்கள் பக்கல் அன்புசெய்து, தருமமும் தகவும் சால்பும் நீ என நின்ற - தருமமும் கடவுநிலைமையும் நற்குணநிறைவும் நீயேயென்று சொல்லும்படி நின்ற, நம்பி - புருஷோத்தமனே! நெறியினின் நோக்கும் நேர்மை - (வேதசாஸ்திரங்களிற் கூறிய) சன்மார்க்கப்படி பார்க்கும் நேர்வழியால், நாய் என நின்ற எம்பால் தலை அற உணரலாமே - நாய்போல எளியராய் நின்ற எங்கள்பக்கல் குற்றங்களில்லாமற் பார்க்கமுடியுமோ? தீயன பொறுத்தி - (என்னுடைய) தீய செயல்களைப் பொறுத்தருள்வாய்,' என்றான் - என்று (இராமபிரானைநோக்கிச்) சொன்னான்: (யாவனெனில்),—சிறியன சிந்தியாதான் - சிறிய எண்ணங்களைக் கொள்ளாதவனான வாலி; (எ - று.)

தாயெனவுயிர்க்குநல்கி—"தாயொக்குமன்பின்" என்றது காண்க. தருமமும் தகவும் சால்பும் நீயென நின்ற - இவனல்லாது இவ்வுலகில் தருமம் முதலியன வேறு இல்லையென்னும்படி அவற்றின் சொரூபமதாய் நின்ற என்றபடி; தருமமுதலியன சிறிதிக்கவுமல் அவற்றை முழுவதுமுடையவனென்ற கருத்து, இங்ஙனம் ஒற்றுமைநயம்படக் கூறப்பட்டது. தகவு-தகுதி; இது கடவுநிலைமையாதலை, "தக்கார் தகவிலர்" என்ற திருக்குறளிலுங் காண்க. சால்பு - பலநற்குணங்களால் நிறைதல், குணபூர்த்தி. நம்பி - அண்மைவிளி. மூன்றுமடியினிற்றில், ஏ - வினு. பிறர்குணங்களைக் குற்றமாகக் கொள்ளுதல், தாம்பிடித்ததே சாதிப்போமென்னுந் தருக்கு, மனம்வேறு சொல்வேறுதொழில்வேறுதல் முதலிய கீழ்மைக்கட்டண்மை யில்லாதவனென்பது, 'சிறியனசிந்தியாதான்' என்றதன் பொருள். ஆனாலுபற்றியே, அபராதக்ஷமணம் வேண்டுகின்றனனென்க. நெறியினின் நோக்கும் நேர்வழியை எளியேமான எங்களிடத்தில் தவறுமற் பார்க்க முடியுமோவெனினும் அமையும். 'நம்ப,' 'உணரலாமோ' என்பன, பாடபேதம். (ககஙூ)

[வாலி மற்றும் பிராத்திதித்து வேறு சில கூறத்தொடங்குதல்.]

கஉ0. இரந்தனன் பின்னு மெந்தை யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனத்துக் கொள்ளே
லரந்தைவெம் பிறவி யென்னுயிர்க் கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ளா லொன்று கேளெனை மறுத்துஞ் சொல்வான்.

(இ - ன்.) பின்னும் இரந்தனன் - (வாலி) மற்றும் (இராமபிரானைப்) பிரார்த்திப்பவனாய்,—'எந்தை-எமதுதலைவனே! யாவதும் எண்ணல் தேற்றா குரங்கு என கருதி - எதையும் ஆராய்ந்தறியமாட்டாத குரங்கென்று (என்னை) திருவுள்ளம்பற்றி, நாயேன் கூறிய மனத்து கொள்ளேல் - நாய்போற கடைப்பட்டவனுடைய எளியேன் (உன்னைக்குறித்து நிந்தனையாகச்) சொன்ன சொற்களை மனத்திற்கொள்ளாதே; அரந்தை - வருத்தத்தைச் செய்கின்ற, வெம் - கொடிய, என் பிறவி நோய்க்கு - எனது பிறப்பாகிய வியாதிக்கு, அரு மருந்து அனைய - அருமையான ஔஷதம் போன்ற, ஐயா - சுவாமி! வரம் தரு - (வேண்டியவர்க்கு) வேண்டியவரங்களை (யெல்லாம்) கொடுத்தருள்கின்ற, வள்ளால் - வரையாதருளுகியல்பினனே! ஒன்று கேள் - யான் சொல்வதொன்றைக் கேட்டருள்வாய்,' என - என்றுசொல்லி, மறுத்தும் சொல்வான் - மீளவும் கூறுபவனானை; (எ - று.)—அவற்றை, அடுத்தகவி முதல் எழுகவிகளிற் காண்க.

எந்தை - அண்மைவிளி. குரங்கு ஒரு நிலைக்கொள்ளாத சபலசித்தத்தையுடைமையால், அதற்கு 'யாவதுமெண்ணல்தேற்றாரு' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.பிறப்பையொழித்து எனக்கு முத்தியைத் தந்தருள்பவனே யென்பது, மூன்றுமடியின் பொருளை. வள்ளால் - வள்ளல் எனுதனை ஈற்றயல்கிரிந்த விளி. யாவது - யாது எனுதன் விரித்தல், இகில், அசாரியை யென்றலுமாம். அரு மருந்து - கிடைத்தற்கரிய மருந்து, எளிதிற் பெறவொண்ணுத மருந்து, பெறப்பேறாகக்கிடைத்த மருந்து, கூறிய-இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும் பெயர். நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல் - எளியேன்சொன்ன பழிமொழிகளைகருதித்து உன்திருவுளத்திற் சிற்றங்கொள்ளாதே யென்றவாறு சுக்கிரீவனவிஷயமாகத தான் செய்தகுற்றங்களுக்காகக் கீழ்க்கவியிலும், இராமபிரானைத் தான பழித்தவற்றிற்காக இக்கவியிலும் பொறைவேண்டினனென வேறுபாடு உணாக. ஒன்று - யான்செய்வதொரு விண்ணப்பமென்க. (கஉ0)

வேறு.

[வாலி இராமபிரானைத்துதித்து ஒருவரம் வேண்டுதலை
இதுமுதல் ஏழுகவிகளிற் கூறுகின்றார்.]

கஉக. ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனே
ஞவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ மூதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ.

(இ-ள்.) ஏவு கூர் வாளியால்- தொடுத்துச்செலுத்திய கூரிய அம்பினால், எய்தி - (என்னை) அடித்து, நாய் அடியனேன் ஆவி போம் வேலையாய்- நாய்போற் கடைப்பட்டவனான அடியேன் உயிர்நீங்குஞ் சமயத்தில், அறிவு தந்தருளினாய் - தத்துவஞானத்தை (எனக்குக்) கொடுத்தருளினாய்; மூவர் நீ - (பிரமவிஷ்ணுருத்திரரென்னும்) திருமூர்த்திகளும் நீயே; முதல்வன் நீ - அவர்கட்கெல்லாம் ஆதிகாரணனான ஸ்ரீமந்நாராயணனும் நீயே; பாவம் நீ தருமம் நீ - பாவமும்நீயே தருமமும்நீயே; பகையும் நீ உறவும் நீ - பகைமையும் நீயே உறவுமுறைமையும் நீயே; மற்றும் நீ - மற்றையவும் நீயே; முற்றும் நீ - யாவும் நீயே; (எ - று.)

எய்தல் - நால்வகை யூறுபாட்டி லொன்று; அவை - எறிதல், குத்தல், வெட்டல், எய்தல் எனபன அடியனேன் - அடிமை யென்ற பணிபினடியாப்பிறந்த தனமை யொருமைகருதிப்பு வினையாலணையும்பெயர்; அன் - சாரியை. வேலையாய்—வாய் - ஏழனுருபு. இராமபாணம்பட்டதனால் உயிர்நீங்குஞ்சமயத்தில் தத்துவஞானமடைதல், அதனால் அப்பெருமான ஜகத்காரணனும் ஸர்வவியாபியுமான ஸ்ரீமந்நாராயணனென்பதை யுணர்ந்து அதிகின்றான. 'மூவர்' என்றது - படைத்தல்தொழில் செய்யும் பிரமதேவன், காத்தல்தொழில் செய்யும் மகாவிஷ்ணுவாகிய உபேந்திரமூர்த்தி, அழித்தல்தொழில் செய்யும் உருத்திரமூர்த்தி எனபவர்களை. இவர்கள் ஸ்ரீமந்நாராயணனது சொரூப மெனபதை "இருகூலமும பொருமாநீ ராகத்தி லெந்தை யந்தண், முருகூர் கமலமுனியாய்வருகுகு முறைமையினுற, புருகூதனுகுகுத திருத்தமபியானிப்புரக்கு முமை, யொருகூறு கொண்டவனுயழிக்கு முகாந்தத்திலே" எனபது காண்க. 'முதல்வன்' எனறது, எல்லாவுலகங்கட்கும்மூலமாய்ப் பரமபதத்திலெழுந்தருளியிருக்கின்ற ஆதிமூர்த்தியை. இனி, திருப்பாற்கடலி லெழுந்தருளியிருக்கின்ற திருமாலின வியூகமூர்த்திகளாகியவாசுதேவன சங்கர்ஷணன பிரத்யுமநன் அநிருத்தனஎன நால்வருட் பிரதானமூர்த்தியான வாசுதேவன் பிரமவிஷ்ணுருத்ரரூபிகளாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செயயுமு மற்றைமூவர்க்குக் காரணனுதலால், அவவாசுதேவனை 'முதல்வன்' எனறும், மற்றையோரை 'மூவர்' என்றுங் கூறியதாகவும கொளளலாம. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" எனறபடி ஸகலசேதநாசேதநகளின உளளும புறம்பும எம்பெருமான் வாகியறக் கலந்துநிற்றலால், 'பாவம நீ தருமம் நீ பகையும் நீ உறவும் நீ மற்றும்நீ முற்றும்நீ' என்றான். "விதிதோனுதி, மூவருமாகிய யகதமூவர்க்கு முதல்வனுகி, யாவரும யாவு மாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப் பற்பல், தேவரு மாகி நின்ற செங்கண்மா லெங்கள்கோவே" என்பர் விலலிபுதனாரும்.

இதுமுதல் ஐந்துகவிகள் - மராமரப்படலத்தினுகு - ஆங் கவிபோன்ற கலிவிருத்தங்கள். (கூஉ)

கூஉ. புரமெலாமெரிசெய்தோன்முதலினோர்பொருவிலா
வரமெலாமுருவியென்வசையிலாவணிமைசா
லுரமெலாமுருவியென்னுயிரெலாநுகருநின்
சரமலாற்பிறிதுலேயுளதோதருமமே.

(இ - ள்.) புரமீ எலாம் எரிசெய்தோன் முதலினோர் - திரிபுரங்களேயும் எரித்திட்டவனான சிவபிரான் முதலிய தேவர்கள் (எனக்குத் தந்தருளிய), பொருவு இலா வரம் எலாம் - ஒப்பில்லாத வரங்க ளெல்லாவற்றையும், உருவி ; இடையேபுகுந்து பழுதுபடச்செய்தும், என் - எனது, வசை இலா வலிமை சால் - குற்றமில்லாத வலிமை மிக்க, உரம் எலாம் - மார்பு முழு வதையும், உருவி - துளைத்து துளைத்தும், என் உயிர் எலாம் நுகரும் - எனது உயிர்முழுவதையும் உட்கொண்ட, நின் சரம் அலால்-உனது அம்பே யல்லாமல், பிறிது வேறு தருமம் - தனியே வேருயுள்ள தருமமென்பது, உளதுஎ - இருக்கின்றதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)—ஈற்றேகா ரம் - வினை. அரோ - அசை.

உனது அம்பு தருமவடிவமேயாவ தென்பதாம். தருமந்தவறியவர்களைத் தவருதண்டித்துத் தருமத்தைப் பரிபாலிப்ப தென்க. முதலினோர் வரம் என்றும், என் உரம் என்றும் இயையும். உருவுதல் - தைத்து முழுவதுந் துளைத்துக்கொண்டு செல்லுதல், புதைத்தோடல். வரங்களோ ஒருவாறு ஒதுக்கிவிட்டதே, இங்கே 'வரமெலாம் உருவி' எனப்பட்டது. வலிமைக்கு, வசை - போரில் தோற்றல், 'எல்லாம்' என்றது - முதலிரண்டடிகளில் பொரு ளின்பன்மைகுறித்தும், மூன்றாமடியில் ஒருபொருளின் பலவிடங்குறித்தும் நின்றது. 'உயிர் நுகரும்' என்றது - உயிரைக் கவர்ந்து கொண்ட அதாவது உயிரை உடம்பினின்று ஒழித்த என்றபடி; உண்ணுதல் உண்பதுபோலவும், உண்ணப்படாதது உண்ணப்படுவதுபோலவுஞ் சொல்லப்பட்ட மரபுவழு வமைதி. (கஉஉ)

கஉஊ. மாவலச்சூலியார்வாழ்த்துநர்க்குயர்வர
மோவலற்றுதவினின்னெருதனிப்பெயரியம்
பாவலிப்புடைமையாலாகுமப்பொருளோர்ந்
தேவரிற்கண்டவெற்கரிதெனினோதினை.

(இ - ள்.) தேவ - சுவாமி!—தேரின் - ஆலோசிக்குமிடத்து,—மா வலம் சூலியார்-மிக்க வலிமையையுடைய சூலாயுதத்தையுடையவரான சிவபிரான், வாழ்த்துநர்க்கு - (தன்னைத்) துதித்தவர்கட்கு, உயர் வரம் - சிறந்த வரங் களை, ஒவல் அற்று உதவல் - ஒழிவில்லாமற் கொடுத்தல், நின ஒரு தனி பெயர் இயம்பு ஆவலிப்பு உடைமையால் ஆகும் - உனது ஒப்பற்ற திருநாம மொன்றைக் கூறும் பேரன்பையுடைமையினாலாகும்: (எனவே), அ பொ ருள் நின்னை - அந்தப்பெயர்க்குரிய பொருளாகிய உன்னை, கண்ட - பிரதி யக்ஷமாகத் தரிசித்த, எற்கு - எனக்கு, அரிது - பெறுதற்கு அரிய பொருள், என ஓம்ஒ - யாதாகுமோ? [யாதுமில்லை யென்றபடி]; (எ - று.)

நினது திருநாமத்தை உச்சாரணஞ் செய்து வருகின்றதன் பலத்தாற் சிவபிரான் தனைத்துதித்தவர்கட்கெல்லாம் வேண்டிய வரங்களைத் தவரு மற கொடுத்து வருகின்றன னென்றல், அப்படிப்பட்ட திருநாமமகிமையை யுடைய உன்னையே நேரில்தரிசித்தவனான எனக்குப் பெறுதற்கு அரியபேறு

உண்டோ? என்பதாம். இங்ஙனம் ஒருபொருளச்சொல்லி அதுகொண்டு கைமுதிகனியாய மென்னுந் தண்டாபூபிகா னியாயததால் மறறொரு பொருளச் சாதித்தல், தொடர்நிலைச்செய்யுட்டொநட்பேறணி; வடநூலார் காவ்யார்த்தாபத்தியலங்கார மென்பர். (கைமுதிக னியாயமாவது:- "மங்கைமுகம் திங்களேயே வாட்டிற்று அறைகுவதென், பங்கயமென்போது படும் பாடு" என்றற்போல, 'சொல்லவேண்டுவ தெனன?' எனனும் வாய்பாடு அமையக் கூறுதல்; இதனை, தண்டாபூபிகா னியாயமெனப் படுவதும்: ஒரு தண்டம் அபஹரிக்கப் பட்டமை கூறுதலால், அதிற கட்டிலைதத அப்பம முதலிய உணவு அபஹரிக்கப்பட்டமை தானே விளங்க வைத்தலெனப் பொருள் காண்க.) "ராம எனற திருநாமம், திருமாலின ஸஹஸ்ரநாமங்களுக்கும் ஸம மானது" என்று சிவபிரான உமாதேவிக்கு உபதேசிததருளியதும், காசியில் இறக்கும் பிராணிகட்கு உயிர்நீங்குஞ் சமயத்திற் சிவபிரான தாரகமந்திரமான ராம நாமத்தை வலச்செவியில் ஓதுதலால அவ்வுயிரான யாவும் முத்தி பெறுகினறன வெனபதும முதலியன உணரத்தகன. இகசம்பாரமாயணத்தின் முதலிற் காணப்படுகின்ற தனியன்களுள் ஒனறில் "சம்பகாடனனுமைசெவி சாறறு பூங், கொம்பனைடன கொழுக னிராமப்பேர்" எனறதும், "சீராமா வென் றெருகாலுரைத்தா லுன்தன திருநாமமாயிரத்துக் கிணையாமெனறே, நீராருஞ்சடையான் பாகதனமைக்கு நிகழ்ததிடி லம்மந்திரத்துக கிணையொன்றுண்டோ, பாராருமதனையுச்சரிதனீடென" எனப் பிணனோகூறியதுங் காண்க.

மஹாபலம், ஸுலபீ - வடசொற்கள். சூலியாரை - 'ஆர்' என்ற பலர்பால் விகுதி, உயர்வுபறறியது. வாழ்த்துகர், க் - பெயரிடைநிலை. ஒவல் - ஒருவல் எனபதன் மரூஉ ஆவலிப்பு - செருகுகு எனினுமாம்; "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வனினாமங்கற்ற, ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாகருளானே" எனறவிடத்துப்போல. 'அப்பொருளே நின' எனறது, அபபொருளகின்னெயெனற உருபு பிரிததுக்கூட்டப்பட்டது. இனி, 'அபபொருளே' எனபதற்கு- அப்பொருளாகினறுய் நீயெனறு உரைததலுமாம்; அவவுரைகு 'பொருளே' என்றதில், ஐகாரம் - முன்னிலையிளகுகினற தெனக: புறநானூறறில் "வானவரமபனே," "காணகாடனே" எனறவற்றிலும், சூளாமணியில "ஆதியங்கடவுளே," "போதியங்கிழவனே" எனறவற்றிலும் போல. நிழகண்ட - கின்னைக்கண்ட என இரண்டாம் வேற்றுமைதொகை. எற்கு - எனகு: அகரச்சாரியை தொக்கது. (கஉரு)

கஉச. யாவரும்மெவையுமாயிருதுவும்பயனுமாய்ப்
பூவுலல்வெறியுமொதமொருவருமபொதுமையா
யாவனீயாவதென்றறிவினாருளினர்
தாவரும்பதமெனக்கருமையோதனிமையோய்.

(இ - ன்.) யாவரும் - எல்லாவுயர்திணைப் பொருளகளும், எவையும் - எல்லா அஃறிணைபபொருள்களும், ஆய - ஆகியும், இருதுவும் - (வசந்தருது முதலிய அறுவகை) ருதுக்களும, பயனும-(அந்தந்தருதுக்களிலுண்டாகினற)

பலன்களும், ஆய்-ஆகியும், பூவும்நல்வெறியும் ஒத்து ஒருவுஅரும் பொதுமை யாய். பூவையும் அதனிடத்தேயுள்ள நல்ல மணத்தையும் போல (எல்லாப் பொருளிலும்) விட்டு நீங்காமற் கலந்து (அனைத்திற்கும்) பொதுவாயுள்ள வனே! தனிமையோய் - ஒப்பறறவனே! நீ யாவன் என்று - நீ யாரென்றும் (உனது தன்மை) யாதென்றும், அறிவினூர் அருளினூர்-(எனக்கு) அறிவு (உண்டாகித்) தெரிவித்ததனு; (ஆதலால்), தா அரும் பதம் எனக்கு அருமையோ - அழிவில்லாத பரமபதம் [முத்தி] எனக்குக் கிடைப்பது அரு மையாமோ? [ஆகாதென்றபடி] (எ - று.)

ஸ்தல சேதநாசேதநங்களின உள்ளும் புறம்பும் எம்பெருமான் வாசியறக் கலந்து நிற்றலால், 'யாவரும் எவையுமாய்' எனப்பட்டது; "யாவையும் யவ ருந் தானுய்" என்னூர் கம்மாழ்வாரும். 'இருதுவும் பயனுமாய்' எனறது காரணங்களும் காரியங்களும் அவனே யெனறதை விளக்கும். 'பூவும் நல் வெறியுமொத்து ஒருவரும்' எனறாலோனும், மலரில் மணம்போல விடாமல எல்லாப் பொருளிலும் எங்கும் வியாபித்திருப்பவனென்று கருத்து. சிறந்த பொருளோடு இழிந்தபொருளோடு வாசியற எங்கும் ஒரு தன்மையா யிருத் தல் பற்றி, 'பொதுமையாய்' எனறனன். நீ இன்னனென்றும் உனது தன்மை இதுவென்றும் அறியும்படி உன கடாட்சத்தினால் எனக்குத் திவ்விய ஞான உபயமானதனால், இனிப் பரமபதங்கிடைப்பது எளிதென்பதாம்; "ஜ்ஞாநாத் மோக்ஷ:" "கற்றீண்டு மெய்ப்பொருள் காண்டலாதலிப்படுவர், மறறீண்டு வாரா நெறி" எனபன காண்க.

யாவரும் மெவையுமாய — மகரவொறறு - விரிதல். 'யாவர்' எனறது - மக்கள தேவர் முதலாயோரையும், 'எவை' எனறது - மறறை உயிருள்ளவறறையும் உயிரில்லாதவறறையும் குறிக்கும். பொதுமையாய + யாவன = பொதுமையா யாவன: தனிக்குறிலேச்சாரியை யகரம், யகரமவரக கெட்டது. சிறப்புத தோன்ற, உயர்திணையாகவே 'அறிவினூர் அருளினூர்' எனறார்; உயர்திணைச் சொல்லுதலபறறி வந்த திணைவழுவமைதி: "செந்தாரப் பசுங்கிளியாரா சென றாகவே" எனறாற போல, [கன - பொது - உண்] ஒருவு அரு - நீங்குதலில் லாத; ஒருவு - முதனிலைத தொழிறபெயர். (உச)

கஉரு. உண்டெனுந் தருமமே யுருவமா யுடையநிற்
கண்டுகொண மேடனினிக் காணவெண் கடவெனே
பண்டொடின் றளவுமே யென்பெரும் பழவினைத
தண்டமே யடியனேற் குறுபதந் தருவதே.

(இ - ன்.) உண்டு எனும் - உள்ளதெனறு (நூல்களிற்) கூறப்படுகின்ற, தருமமே - தருமதத்தையே, உருவம் ஆய் உடைய - வடிவமாகக்கொண்டுள்ள, நின் - உன்னை, கண்டுகொணமேடன - தரிசிக்கப்பெறறேன்: இனி என் காண கடவேனே - இனி எந்தபபொருளைக காணவேண்டியவனு யிருக்கின்றேன்! [ஒனறையுங காணக்கடவேனலலேன் எனறபடி.]; எனபெரும பழவினை - எனது பெரியதும் தொன்றுதொட்டு வருவதுமான, கருமம பண்டொடு

இன்று அளவுமே - முன்னே தொடங்கி இன்றை வகீரியிலுமே புன்னது [இனி இல்லை];(எனெண்ணல்), தண்டமே- (எனது தீவினைகட்கு நீ செய்தருளிய) இத்தண்டனைதானே, அடியனேற்கு உறுபதம் தருவதே - அடியேனுக்கு நல்ல பதவியை [பரமபதத்தை]த் தருவதாகும்; (எ - று)

இராமபிரான் - தருமஸ்வரூபி யென்பது, முதலடியில் விளங்கிற்று. முதல் வாக்கியம் - கண்படைத்த பயனைக் காணவேண்டிய பரம்பொருளாகிய உன்னைக் காணப்பெற்றேனதலால், இனி யான் காணவேண்டியதொரு பொருளுமில்லை யென்றவாறும். பிறப்பு அநாதியாய் வருதலாற் பலபிறப்புக் களிற்காரணகாரியத் தொடர்ச்சியாய்ச் செய்து, சேர்க்கப்பட்ட பலகருமங்கள், 'பெரும் பழ வினை' எனப்பட்டன. அங்ஙனம் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அநுபவிக்கப் பட்டனவும் [ஸஞ்சிதமும்] பிறந்த இவ்வுடம்பால் முகந்து நின்றனவும் [பிராரப்தமும்] ஒழியப் பின்னும் அநுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தன [ஆகாமியம்] வினைக ளின்முன் இருள்போல எம்பிராணருளாற் கெடுதலால், 'பண்டெ டின்றன வுமே என்பெரும்பழவினை' என்றான். எம்பெருமானைக் கொல்லப்பட்டவர் வீடுபெறுவ ரென்னுந்துணிவுபற்றி, 'தண்டமே அடியனேற்கு உறுபதந்தரு வதே' எனப்பட்டது; மேல் கஉச - ஆங் கவியையுங் காண்க. இனி, பின்னி ரண்டடிகட்கு - தொன்றுதொட்டு இன்றுவரையிலும் யான்செய்து போந்த பழைய பெரிய கருமங்கட்குப் பிராயச்சித்தம் அடியேனுக்கு நீ முற்றி தந்தருள்வதே பென்று தூதிவகையால் வேண்டியதாக உரைப் பாரு முளர். 'தண்டமே' என்ற ஏகாரம் - பிரிநிலை. 'தருவதே' என்ற ஏகாரம் - தேற்றம் (கஉஙி)

வேறு.

கஉசு.மற்றினி யுதவி புண்டோ வானினு முயர்ந்த மானக்
கொற்றவ நின்னை யென்னைக் கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந் தெரிவுறச் செய்த செய்கை
யெற்றர செய்தி யெய்தி வீட்டர செனக்கு விட்டான்.

(இ - ள்.) வானினும் உயர்ந்த மானம் கொற்ற வ - வானத்தைக் காட்டிலும் உயர்ந்த பெருமையையுடைய ஜயசாலியான அரசனே!—எம்பி - என் தம்பி [சுக்கிரீவன்],—என்னை கொல்லிய நின்னை கொணர்ந்து - என்னைக் கொல்லுதற்பொருட்டு உன்னை அழைத்துக்கொண்டுவந்து,—தொல்லை - பழமையாக [நெடுநாளாக], சிற இனம் குரங்கினோடும் - சிறிய இனமாகிய குரங்குகளுடனே, தெரிவு உற செய்த - ஆலோசனையமையச் செய்த, செய்கை - செயல்களையுடைய, வெற அரசு - சிறந்த பயனில்லாத தான (எனது) அரசாட்சியை, எய்தி - அடைந்து, வீடு அரசு - முத்தியுலகத் திற் சிறக்க வீற்றிருக்குந் தன்மையை, எனக்கு விட்டான் - எனக்குக்கொடுத் தான்; (ஆதலால்), இனி மற்று உதவி உண்டோ - இதனைக் காட்டிலும்

மேலாக (எனக்கு அவன் செய்யக்கூடிய) வேறு உபகாரம் உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

கொணர்ந்து, எய்தி, வீட்டான் என இயையும் என் தம்பி என்னைக் கொல்லுதற்காக உன்னை அழைத்துவந்து சேர்த்து என்னைக்கொன்று எனது இந்த எளிய இராச்சியபாரத்தைத் தான் அடைந்து மிகச்சிறந்த மோக்ஷமாம் ராஜ்யத்தை எனக்குக் கிடைக்கச்செய்தன ஞதலால், அவன் எனக்குச் செய்த மஹோபகாரமேயாயிற் றென்றான். இங்ஙனங் கூறியதனால், வாலிக்குச் சுக்ரீவனிடமிருந்த பகைமை மாறியமை பெறப்பட்டது. குற்றத்தைக் குணமாகக் கூறிய இலேசவணியும், இழிந்தபொருளைப் பெற்றுக்கொண்டு உயர்ந்தபொருளைத் தருதலாகிய மாற்றுநிலையணியும் இதில் அமைந்திருத்தல் காண்க. குரங்குகட்கு இயல்பாகிய விவேகக்குறைவும், சபலசித்தமும், திரிபுணர்ச்சியும் முதலிய இழிவுகள்பற்றி, 'சிற்றினக்குரங்கு' எனப்பட்டது. தன்னையுந் தன் தம்பியையும் மாறுபட்ட சமயங்களில் தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தாமற்போனமை கருதி 'சிற்றினக்குரங்கு' என்று வெறுத்தானுமாம்; வாநரமஹிரிகள் இருவரிடத்துங் குற்றங்கள்வாராமற் காத்தற்கு உரியராகாது சுக்ரீவனே அறிவைத்திரித்து இருவரையுங் கெடுத்தமை இங்குக் கருதத்தக்கது. மானமாவது - எப்பொழுதும் தம்மிலையினின்று தாழாமை. 'வானினும் உயர்ந்த' என்றது - மிகவுயர்ந்த என்றபடி; இது, "வரனுயர் தோற்றம்", "வான்றோய்குடி" என்றாற்போல, இலக்கணைவழக்கு. கொல்லிய - எதிர்காலவினையெச்சம்.

இதுமுதல் இப்படலமுடியுமளவும், மராமரப்படலத்தின் பதிஞெராங் கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (கஉக)

[வாலி இராமனை ஒருவரம் வேண்டுதல்.]

கஉஎ. ஓவியவுருவகாவியுளதொன்றுபெறுவதுண்பாற்
பூவியலறவமாந்திப்புந்தி வேறுறற்றபோது
தீவினையியற்றுமேனுமெம்பிமேற்சீறியென்மே
லேவியபகழியென்னுங்கூற்றினேயெவலென்றான்.

(இ - ன்.) ஓவியம் உருவ - சித்திரத்திலெழுதிய வடிவம்போ லழகிய வடிவத்தையுடையவனே! 'நாயேன் உன்பால் பெறுவது ஒன்று உளது - எளியேன் உன்பக்கல் வேண்டிப்பெறுவதொரு வரம் இருக்கின்றது: அது எதுவென்றால்,—(என் தம்பியான சுக்ரீவன்), பூ இயல் நறவம் மாந்தி - மலர்களிலுண்டான மதுவைக் குடித்து, புந்தி வேறு உற்ற போது - அறிவு மாறுபட்டபொழுது, தீ வினை இயற்றும் எனும் - கெட்டகாரியஞ் செய்வனெனும், எம்பிமேல் - அவன்மேல், சீறி - கோபங்கொண்டு, என்மேல் எவிய பகழி என்னும் கூற்றினை எவல் - என்மேல் (இப்பொழுது நீ) செலுத்திய அம்பாகிய யமனைச் செலுத்தாதிருப்பாயாக, என்றான - என்று (வாலி இராம பிரானை) வரம்வேண்டினான்; (எ - று)

எம்பிமேல் எவல் என்க. இதனால், வாலிக்குத் தம்பியினிடமுள்ள அன்பு வினங்கும். மனத்திற்குத் திருப்தியுண்டாகுமளவும் கலைத்துக் கலைத்துச் சீர்

திருத்தி மிகவும் அழகியதாக எழுதக்கூடியதாதலால், ஒத்திரவடிவம், இராமபிரானது அதிசௌந்தரியமுள்ள திருவடிவத்திற்கு ஒப்புமையாகக் குறிக்கப்பட்டது. இயற்கையுருவதத்திற்குச் செயற்கையுருவத்தையும் செயற்கை யுருவத்திற்கு இயற்கை யுருவத்தையும் ஒப்புமைகுறித்தல் கம்பரியல்பாதலே இந்நூலிற் பிறவிடங்களிலும் காணலாம். சுக்கிரீவன் இயல்பினுல் எப்பொழுதும் அறிவுகிலை கலங்கித் தீவினையியற்றுபவனல்ல னெண்பது, இரண்டாமடியால் விளங்கும். இலக்காகக் குறிப்பிட்ட பிராணியைக் கொல்லுதலில் தவருமை பற்றி, 'பகழியென்னுங் கூற்று' எனப்பட்டது; உருவகம். புத்தி - புத்தி: மெலித்தல். (கூஎ)

[வாலி இராமனை மற்றுமொருவரம் வேண்டுதல்]

கூஎ அ. இன்னுமொன்றிரப்பதுண்டாலெம்பியையுப்பிமார்க
டன்முனேக்கொல்வித்தானென்றிகழ்வரேற்றடுத்திதக்கோய்
முன்முனேமொழிந்தாயன்றேயிவ்வுறைமுடிப்பதையா
பின்னவன்வினையின்செய்கையதனையும்பிழைக்கலாமோ.

(இ - ள்.) இன்னும் இரப்பது ஒன்று உண்டு - இன்னமும் (யான் உன்னிடம்) வேண்டுவதொரு வரமிருக்கின்றது: (அது என்ன வென்றால்),— எம்பியை - என தம்பியை [சுக்கிரீவனை], உம்பிமார்கள் - உன் தம்பியர், தன்முனே கொல்வித்தான் என்று இகழ்வர்எல் - தனது தமையனைக் கொல்வித்தவனிவனென்று பழிப்பாராஞல், (அப்பொழுது அவர்களை), தக்கோய் தடுத்தி - தகுதியான சிறந்த குணங்களை யுடையவனே! (நீ) தடுத்தருள்வாய்; ஐயா - சுவாமி! இவன் குறை முன் முடிப்பது முனே மொழிந்தாய் அன்றே - இவனுக்கு ஆகவேண்டிய காரியத்தை முதலிற் பூர்த்திசெய்து கொடுப்பதாக முன்னமே (நீ உடன்பட்டு) அருளிச்செய்தாயன்றே ; பின் - மற்றும், அவன் - அச்சுக்கிரீவன், வினையின் செய்கை அதனையும் பிழைக்கல் ஆமோ - ஊழ்வினைப்பயனையும் தப்பமுடியுமோ? [முடியாதன்றே என்ற படி]; (எ - று.)—ஆல் - அசை.

தக்கோய் - நடுவுநிலைமை முதலிய சற்குணங்களை யுடைய உத்தமனே யென்றபடி. வினையின் செய்கையதனைப் பிழைத்தல் - முற்பிறப்பிற் செய்த கருமங்காரணமாக நேரும் காரியதத்திற்கு உள்ளாகாது விலகுதல். 'மற்றும், வினைப்பயன் யார்க்கும் விலக்கொண்ணாதாதலால் இங்ஙனம் நேர்ந்து விட்டது' என்பது, ஈற்றடியின் கருத்து. இனி, முதலில் உடன்பட்ட பின்பு அவனது காரியத்தின் நிலைமையைப் பிழையாகக் கொள்ளுதல் தகுதியாகாதென்று உரைப்பாரு முளர். தன் முன் - தனது முன்பிறந்தவன்; முன் - காலவாகுபெயர் முனே - முன்னே; தொகுத்தல். (கூஎ)

[வாலி இராமனுக்கு அறுமனைப்பற்றித் தகவுரைகூறல்.]

கூஉ கூ. மற்றிலெனெனினுமாயவரக்கனிவாலிற்பற்றிக்
கொற்றவநின்கட்டங்குரக்கியற்றெழிலுங்காட்டப்
பெற்றிலென்கடந்தசொல்லிற்பயனிலைப்பிறிதொன்றேனு
மூற்றதுசெய்கென்றலுமுரியனிவ்வறுமனென்றான்.

(இ - ன்.) கொற்றவ - வெற்றியையுடையவனே! மற்று இலென் எனினும் - (உனக்கு) வேறொரு பேருதவி யெதனையுஞ் செய்யவல்லனல்லேனாயினும்,—மாயம் அரக்கனை வாலின் பற்றி நின்கண் தந்து - வஞ்சனையையுடைய ராக்ஷஸராஜனை ராவணனை வாலினாற் சுற்றியெடுத்து உன்னிடத்திற் கொணர்ந்து ஒப்பித்து, குரங்கு இயல் தொழிலும் காட்ட - ஒரு குரங்கு காரியஞ் செய்ய இயன்ற தொழிலையாயினும் செய்து காட்ட, பெற்றிலென் - பாக்கியம் பெறுதலு மியானேன்; கடந்த சொல்லின் பயன் இலை - நடந்து போன செய்திகளைச் சொல்லுதலாற் பயனில்லை: உற்றது செய்க என்றலும் - ஆகவேண்டியதான இச்செயலைச் செய்வாயாக வென்று சொன்னலும், பிறிது ஒன்று எனும் - வேறொரு செயலைச் செய்கவென்றலும், (அதனைச் செய்து முடித்தற்கு), இ அனுமன் உரியன் - இந்த ஹநுமான் உரியவன், என்றான் - என்று (வாலி இராமனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

முன்னிரண்டடிகளில், உம்மைகள் - இழிவு சிறப்பு. பின்னிரண்டடிகளில், உம்மைகள் - எண்ணுப்பொருளன. கடந்த - இறந்தகாலப் பலவின் பால் வினையாலணையும் பெயர். சொல் - மூதனிலைத்தொழிற்பெயர்; இன - ஐந்தனுருபு, ஏது. 'செய்க' என்பது, 'பிறிதொன்று' என்றதனோடும் இயைத்துத் தக்கது. என் - என்னின் என்பதன் மரூஉ. "கற்றார்முற் றேன்ற கழிவிரக்கம்" ஆதலாலும், அது கழிந்த நீராகு அணைகோலுதல்போல வீணுரை யாலும், 'கடந்தசொல்லிற்பயனிலை' என்றான். குரக்கியற்றொழில்-விரைந்து தாவிச்சென்று பற்றி விடாப்பிடியாகக் கொணர்தல். (கூடுக)

[வாலி இராமனை நோக்கி மற்றுஞ் சிலகூறுதல்.]

கக0 அனுமனெனவபவனியாழியையநின்செய்யசெங்கைத்
தனுவெனநினைதிமற்றென்றம்பிநின்றம்பியாக
நினைதியோர்தூணிவரின்னேரியையவரிலெரியுண்டவ்
வனிதையைநாடிக்கோடிவானினுமுபர்ந்தகோளாய்.

(இ - ன்.) ஆழி ஐய - சக்கராயுதத்தையுடைய தலைவனே! அனுமன் என்பவனை - ஹநுமானை, நின் - உனது, செய்ய - அழகிய, செம் கை - சிவந்த கையிலேந்திய, தனு என - வில்லைப் போல, நினைதி - தவறாமல் விரைந்து பகையழித்து (உதவுபவனாக) நினைப்பாய்; மற்று - மற்றும், என் தம்பி - எனது தம்பியான சுக்கிரீவனை, நின் தம்பி ஆக நினைதி - உன் தம்பியான இலக்குமணனைப் போலவே (மிக்க அன்புடன் நினைக்குந் தறைவல்களை செய்பவனாக) நினைப்பாய்; இன்னோர் அனையவர் ஓர் தூணைவர் இலை - இவர்கள் போன்றவர்களான தூணையாயுதவுபவர் வேறில்லை; வானினும் உயர்ந்த தோளாய் - வானத்தைக்காட்டிலும் உயர்ந்த [மிகவுயர்ந்த] திருத்தோள்களை யுடையவனே! நீ—, ஈண்டு - இப்பொழுது, அ வனிதையை - அந்தப் பெண்ணை [சீதாபிராட்டியை], நாடி - (இவர்களைக்கொண்டு) தேடி, கோடி - பெறுவாய்; (எ - று.)

செய்ய - செவ்வியையுடைய. 'கின்தம்பி என்றது - தருஇபற்றி இலக்குமணனைக் குறித்து; "யாவர்க்கும்தொழுகுலமா மிராமன்பின்பு பிறக் தானுமுள னென்னப் பிரியாதான்" எனற (அயோத்தியாகாண்டத்திற்) பாதன கூறியது காண்க. வஞ்தா என்ற வடசொல்லுக்கு - கணவனே யடை பவனெனபது பொருள். கோடி - கொள்+இ: ட் - எழுத்துப்பேறு. இராம பிரான திருமாலின் அவதாரமெனபதை யுணர்ந்தனனாதலால், 'ஆழியைய' எனற விளித்தான; இனி, ஆழி - ஆஜ்ஞாசக்காமுமாம. அணைவர் - உதவி செய்பவர். (கூ0)

[பிறகு வாலி சுக்கிரீவனையணைத்துச் சிலகூறத்தொடங்குதல்]

கூக. ஏன்றவறங்கியமபிபபினனரிருதனனிளவறன்னை
வன்றுணைத்தடக்கைகூட்டிவாகினென்றழுவிமைந்த
வொன்றுனக்குரைப்பதுண்டாலுறுதியஃதுணர்ந்துகோடி
குனறினுமுயர்ந்ததோளாய்வருந்தலேயென்றுகூறும்.

(இ - ள்.) எனற அவறகு இயம்பி - எனற (வாலி) அந்த இராமபிரானை நோக்கிச் சொல்லி,--பின்னர் - பினபு. இருந்தனன் இளவல்தனனை - அருகி லிருந்தவனுடைய தனது தம்பியான சுக்கிரீவனை, வல்தட அணை கை நீட்டி வாகினை தழுவி - வலிய பெரிய (தனது) இரண்டு கைகளையும் நீட்டிச் சேர்த்து அணைதலுகொண்டு,—'மைந்த - பிளளாய்! உனக்கு உரைப்பது உறுதி ஒனறு உண்டு - உனக்கு (நான இப்பொழுது) சொல்வதான நன்மை யொனறு இருகின்றது; அஃதை உணர்ந்து கோடி - அதனைக் கேட்டறிந்து மனத்திறுகொண்டு அறுட்டிப்பாய்; குனறினும் உயர்ந்த தோளாய் - மலை களைக்காட்டிலும் உயர்ந்துளள தோள்களையுடையவனே! வருந்தலே - (என் மரணதறகாக) நீ வருந்தாதே', என்று - எனறுசொல்லி, கூறும்-(மறறும்) சொல்வான்; (எ-று.)—அதனை, அடுத்த ஆறுகவிகளிறு காண்க. ஆல்- அசை.

இருத்தல் - எங்கித்திகைத் திருத்தல். தமையன் தந்தையோடொப்பவ னாதலால், மகனைடொப்பவனான தமபியை 'மைந்த' என்று விளிததான. உறுதி - நிலையான நனமையைத்தரும் மொழி, இதமொழி. (கூக)

[இதுமுதல் ஆறுகவிகள் - சுக்கிரீவனுக்கு வாலி உறுதிகூறல்; இதோபதேசம்]

கூஉ. மறைகளுமுனிவர்யாருமலர்மிசையயனுமற்றைத்
துறைகளின்முடிவுஞ்சொல்லுந்துணிபொருடுணிவிற்றாக்கி
யறைகழலிராமனெய்யவறிநிறுத்தவந்த
நிறையொருசங்கையின்றியெண்ணுதியெண்ணமிக்கோய்.

(இ - ள்.) எண்ணம் மிக்கோய் - ஆலோசனைமிக்கவனே! மறைகளும், வேதங்களும், மற்றை அறைகளின் முடிவும் - மற்றைச் சாஸ்திரங்களின்

சித்தாந்தமும், முனிவர் யாரும் - எல்லாவிருடிகளும், மலர்மிசை அயனும் - தாமரைமல்கின்மீது வாழ்கின்ற பிரமனும், சொல்லும் - சொல்லுகின்ற, அணி பொருள் - தேர்ந்தபொருளாகிய பரப்ரஹ்மந்தானே, அறம் நெறி நிறுத்த - தருமமார்க்கத்தை நிலைநிறுத்தச் செய்யும்பொருட்டு, அறை கழல் இராமன் ஆகி - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய இராமனாக அவதரித்து, அணிவில் தூக்கி - (அம்பெய்த பகைவனைத்) தண்டிக்கும் வில்லை யேந்திக் கொண்டு, வந்தது—; (இத்தனமையை), இறை ஒரு சங்கை இன்றி - சிறிதும் சந்தேகமில்லாமல், எண்ணுதி - மனத்திற்கொள்வாய்; (எ - று)

இறை - தூல். முடிவு - தேர்ந்தகருத்து. சொல்லும் அணி பொருள் - நிச்சயித்துச் சொல்லப்பட்ட பொருள. அணி வில் - வினைத்தொகை. சங்கை - ஸங்கா என்ற வடசொல்லின விகாரம் இனி, 'இறை ஒரு சங்கை இன்றி' என்பதற்கு - தலைமையான ஒருசங்கத்தை [ஸ்ரீபாஞ்சஜந்யத்தை] (இடக்கையில்) உடையனல்லாமல் என்று பொருள்கொண்டு, அதனை 'அணி வில்தூக்கி' எனறதனோடு இயைப்பினுமாம்; "சங்குறை காத்தொரு தனிச் சிலைதரித்தான்" எனறார் பாலகாண்டத்திலும். இனி, அணிவின்தூக்கி அணி பொருள் என்று எடுத்து இயைத்து, தெளிவோடு ஆலோசித்து நிச்சயித்த பொருளென்றலு மொனறு. 'இறை' எனபதற்கு-கையில எனறும் பொருள் கூறலாம்; "இறை வளையாழ்தழீஇ" எனற சிந்தாமணியிற்போல. எண்ணம் மிக்கோய் - மிக்க ஆலோசனையை யுடையவனே யெனக. மிகுதி-சிறப்பின் மேலதுமாம். தனனல் அழித்தற்கு அரிய பெரிய பகைவனைத் தவறுதி அழிக்கவல்ல நல்துணைவனை நாடியடைந்த அருமையைத் தான பாராட்டியமை தோனற, 'எண்ணம் மிக்கோய்' எனறு விளித்தான. (கஉஉ)

கஉஉ. நிற்கின்றசெல்வம்வேண்டிநெறி நின்றபொருள்களெல்லாங்
கற்கின்றவிவன்றனமங்கருதுவவினைக்கண்டாய்
பொற்குன்றமனைய தோளாய்பொதுகின்றதலைமைநோக்கி
னெற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றுமேதுவேண்டா.

(இ - ன்.) பொன் குன்றம் அனைய தோளாய் - பொன்மயமான மலையை [மகாமேருகிரியை]ப் போல மிகவுயர்ந்து விளங்குகின்ற தோள்களையுடைய வனே! நிற்கின்ற செல்வம் வேண்டி - (அழியாமல எந்நாளும) நிலைநிற்கின்ற முத்திச்செல்வத்தை யடைய விரும்பி, நெறி நின்ற - அதற்குரிய (யோக மார்க்கம் முதலிய) வழிகளில் நினற, பொருள்கள எல்லாம் - சிறப்புடைப் பொருள்களாகிய (வீடுபெறும் விருப்பமுள்ள) உயிர்கள்யாவும், இவன தன் நாமம் கற்கின்ற - இவ்விராமபிரானுடைய திருநாமத்தை ஜபிக்கின்றன: இவனே கருதுவ - இவனைத் தியானிக்கின்றன; கண்டாய் - (இதனை) உணர் வாய்; பொதுகின்ற தலைமை நோக்கின - (இங்ஙனம் விசேஷமாகவனறி) ஸாமான்யமாக இவனிடத்துள்ள சிறப்பைப் பார்த்தாலும், (அதற்கு), எனகொன்ற வலியே சாலும - என்னைகொன்றிட்ட இந்த வலிமையே சாகடி போதும்: இதற்கு ஒனறும் ஏது வேண்டா - இதனைக்காட்டிலும் மேலான காரணமொன்றும் (அதனைச்சாதிப்பதற்கு) வேண்டுவதில்லை; (எ - று.)

முத்தி, நித்தியமான இசுவரிய மாதலால், 'நிற்கின்ற செல்வம்' எனப் பட்டது. அதனைவேண்டினின்ற பொருள்கள் - முமுக்ஷுக்களான ஆத்மாக் கள். உடமையும் உயிரையும் வேறுபிரிதலுக்கூறுமிடத்து அஃறிணையாகக் கூறுதல் இலக்கண மாதலால், 'பொருள்களெல்லாம் கற்கின்ற கருவி' எனப்பட்டன. நெறி - ஞானம், யோகம், பகதி, பிரபத்தி என்ற உபாயங் கள். கண்டாய் - தேற்றம். நிற்கின்றசெல்வம்வேண்டி நெறிநின்றபொருள்க ளெல்லாம் கற்கின்ற இவனதன்நாமம் - ''கற்பா நிராமபிரானேயல்லால் மற் றுங்கற்பரோ, புறபாமுதலாப் புலலெறும்பாதி யொன்றினறியே, கற்பால யோத்தியில்வாழுஞ் சாசரம்மூற்றவும், நறபாலுக்குய்த்தனன் நான்முகனூர் பெற்றநாட்டுளே'' எனவூர் நமமாழ்வாரும். தலைமை - முதனமை. (கஙஙு)

கஙூச. கைதவமியற்றியாண்டுங்கழிப்பருங்கணக்கிமீமை
வைகலுப்புரிந்துளாருமவனுயாநிலையைவள்ள
லெப்தவாபெறுவதெனருளினையடியிறைஞ்சிமெய்வல்
செய்தவர்பெறுவதையாசெப்பலாதன்மைததாமோ.

(இ - ள்.) ஐயா - அப்பா! கைதவம இயற்றி - வஞ்சனையைச் செய்து, யாண்டும் கழிப்பு அருங கணகளு இல நீமை - எவ்விடத்துந் தீர்த்தக்கொள் ளுதறகு அருமையான எண்ணிறநத பாவச்செயலகளை, வைகலும புரிந்து உளாரும - தனதேதாறும் செய்துளளவர்களா யிருந்தாலும, வளளல் எய்த வா - வரையாதருளுமியல்பினனான இராமபிரானுல அமபெயது கொல்லப் பட்டவர், வான உயர் நிலையை பெறுவா - மிகவுயாநத தானதைத [பரம பதநதை]ச் சேர்வர், எனறுல—,இனை அடி இறைஞசி ஸவல செய்தவர் பெறுவது - (அவனது) உபயபாதகளை வணஙகி (அவனுகு)க்குற்றேவல் செய்தவர முததிபெறுவது, செப்பல ஆம தனமைத்து ஆமோ - சொலல வேண்டிய தனமையையுடையதாகுமோ? [அன்றெனறபடி]; (எ - று.)

எம்பெருமானுக்கும் பிறர்க்கும திரோகஞ்செய்து எண்ணில்லாத தீவினைகளையுமறியவர்களும் அப்பெருமானுறை கொலலபபடுவராயின் அத் தண்டனையினுல் தமது தீவினைகளெல்லாந்தீர்ந்து முத்திபெறுவ ரென்றுல், அவனது இரண்டு திருவடிகளையும் நமஸ்கரித்தல பபபக்தி விசுவாசங் களுடன அவனுக்குக் குறறேவல்செயதொழுகியவர் முத்திபெறுவ ரென்பது சொல்லவேண்டியதுமுண்டோ? எனபதாம்; தொடர்நிலைச்செய்யுட்பொருட் பேறணி; ''பொருளொன் றுரைக்கத் தண்டாபூபிகை, வழககால் மற்றொரு வண்பொருள தோனறல, தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியே'' என அதனிலக்கணங் காணக. யாண்டும் கழிப்பு அருமை - புண்ணியதீர்த்த ஸ்நானம் ஸ்தலயாத்திரை முதலியவற்றலும் தீர்க்கவொண்ணுதனவாதல்; மிகக்கொடியன வெனக. யாண்டும் - எபபொழுதும் எனினுமாம. நல்லோர்க் கேயன்றித தீயோர்க்கும் ஓரினயனதையுந் தீர்த்த வீடுதந்தருளும் பரமோ தாரனுதலால், 'வள்ளல்' எனறார். (கஙூச)

கஉடு. அருமையின்விதியினஞேயுதவுவானமைத்தகாலே
யிருமையுமெய்தினுய்மற்றினிச்செயற்பாலதெண்ணின்
றிருமறுமார்பனேவலசெனனியிற்சேர்த்திச்சிறுதை
யொருமையினிறுவிமும்மையுலகினுமுயர்தியன்றே.

(இ - ன்.) விதியினஞே - ஊழ்வினைதானே, உதவுவான் அமைந்த காலே தணைசெய்தற்குப் பொருந்திய பொழுது, அருமை என - அடைதற்கு அருமையானது யாதுளது? [எதுவுமில்லை யென்றபடி]; (ஆகவே), இருமையும் எய்தினுய் - இம்மைமறுமையின பங்களை யெல்லாம் நீ அடைந்தாய்: இனி செயல்பாலது எண்ணின் - இனிமேல் நீ செய்யவேண்டியது யாதெனறு ஆலோசிக்குமிடத்து, திரு மறு மார்பன் எவல் செனனியின சேர்த்தி - இலக்குமியையும் ஸ்ரீவத்ஸமெனனும் மறுவையும் திருமார்பிலுடையவனுனை திருமாலாகிய இவ்வீராமனது கட்டளையைத் தலைமேறகொண்டு, சிறுதை ஒருமையில் நிறுவி - மனத்தை (ச் சஞ்சலப்படாதபடி அக்குற்றேவல செய்தலாகிய) ஒருதனமையிலே நிற்கச்செய்து, மும்மை உலகினுமு உயர்தி - மூனறு உலகங்களினுமு மேமபடுவாய; (எ - று.)—அனறே - ஈறறசை. மற்று - வினைமாற்று; அசை யெனினுமாம.

உனக்கு ஆசூழ்வக்து வாய்த்ததாதலாற் பெறறதறகரியதெதவுமில்லையென்பது, முதலடியின் பொருள். அது எவராலுந் தடுத்தறகரிய பெருவலியினதெனபது, வெளிபபடை. உயாததிக்கொண்டாடுவதனை, 'விதியினஞே' எனறு உயாதிணைப்பலர்பாலாற கூறினன்; திணைவழுவமைதி. இனி, விதியினஞே - தெய்வம் என இராமபிரானைக குறித்ததுமாம. இன - சாரிபை. உதவுவான் - எச்சம. சென்னியிற சேர்த்தலுதல - சிரஸா வஹித்தல். ஒருமையில் நிறுவி - இறையுணர்வில் நிறுத்தி யெனினுமாம். மும்மையுலகினுமு உயர்தி - மூன்று உலகங்களிலுமுளள உயிரகளெலலாவற்றினும் மேன்மையடையக் கடவாய்.

கஉசு. மதவியல்குரக்குச்செய்கையர்வெடிமாற்றிவள்ள
லுதவியையுண்ணியாவியுற்றிடத்துதவுகிற்றி
பதவியையெவாக்குநலகுமபண்ணவன்பணித்தயாவுஞ்
சிதைவிலசெய்துகொய்திற்றீர்வருமபிறவிதீர்தி.

(இ - ன்.) மத இயல் - மடமை மிக்க, குரஙகு செய்கை - வாநரவியற் கையையும், மயாவொடு - மயகத்தையும், மாறறி - ஒழித்து, வள்ளல் உதவியை உனனி - வரையாதருளுமியலபினனை இராமபிரான (உனக்குச்) செய்த உதவியை (மறவாமல்) உளளதிறமகொண்டு, உறற இடத்து ஆவி உதவுகிறறி - (அவனுக்காக) வேணடியசமயத்தில் (உனது) உயிரையும் கொடுக்கக கடவாய; (மற்றும), எவர்க்கும் பதவியை நலகும பணணவன பணித்த யாவும் சிதைவு இல செய்து (எலலார்க்கும) உயாகதியை அளித்தருளுகின்ற முதற கடவுளான அவ்வீராமபிரான கட்டளையிட்ட செயல்களை யெலலாம கெடாதனவாகச் செய்து, கொய்தின தீவு அரும பிறழி நீர்தி - எளிதில் நீங்குதறகு அரிய பிறப்புக்கனை எளிதில் நீங்கப்பெறுவாய்; (எ - று.)

'மத' என்பது மடமையுணர்த்துவதோர் உரிச்சொல்லாதலே, "மதவே மடனும் வலியு மாகும்" என்ற தொல்காப்பியத்தா லுணர்க: இது உரைச் சாரிபைபெற்று 'மதவு' எனவும் நிற்கும்; "பதவு மேய்ந்த மதவுநடை கல் லான" எனக் காண்க. குரக்குச்செய்கை - திரிகரணங்கள் வரம்புகடந்த விசைவையும் சஞ்சலத்தையும் அடைதல். மயர்வு - இயற்கைப்பேதைமை யாலும் மதபானத்தாலும் மனம்மயங்குதல், ஒன்றைப் பிறிதொன் றாகத்துணிதல்; ஒடு - எண்ணெடு. உன்னி - கருதி. உற்றஇடத்து - ஆபத்து சேர்ந்தபோது, இடையூறுஉற்றவிடத்து உற்றிடம் - தொகுத்தல். உதவு கிற்றி என்ற ஏவலொருமைமுற்றில், கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை. 'நெய்கின்' என்றது, 'தீர்வரும்,' 'தீர்கி' என்னும் இரண்டனெடும் இயை யும். சிதைவில - மூற்றெச்சம். பதலி - இங்கே, பரமபதம். பிறவிதீர்தல்- முத்திபெறுதல். (கூடு)

கூடஎ. அரசியற்பாரம்பூரித்தயர்ந்தநீயிகழாதையன்
மரைமலர்ப்பாதநீங்காவாழ்நிமன்னரென்பா
ரெரியனற்குரியாரென்றேயெண்ணுநியெண்ணம்யாவும்
புரிதிசிற்றடிமைகுற்றம்பொறுப்பரென்றெண்ணவேண்டா.

(இ - ன்.) அரசு இயல் பாரம் - இராச்சியபாரத்தைப் பெற்ற மகிழ்ச்சி யால், பூரித்து - மனம்மிகக்களித்து, அயர்ந்தனை இகழாதை - அறிவுகெட்டு (இராமபிரானை) இகழ்ச்சி செய்யாமல், ஐயன் மரை மலர் பாதம் நீங்கா வாழ்நி - அப்பெருமானுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளை விட்டு நீங்காமல் வாழக்கடவாய்; மன்னர் என்பார் எரி அனற்கு உரியார் என்றே எண்ணுநி - அரசர்கள் பற்றியெரிகின்ற நெருப்பை உலகம் கூறுதற்கு உரி யவர்க ளென்றே நினைப்பாய்; எண்ணம் யாவும் புரிதி - (அங்ஙனம் நினைத்த அஞ்சியொழுகிச் சக்கரவர்த்தித்திருமகனைய அப்பெருமான்) நினைத்த காரி யங்களையெல்லாம் (குறிப்பறிந்து) செய்யக்கடவாய்; சிறு அடிமை குற்றம் பொறுப்பர் என்று எண்ணவேண்டா - (அரசர்கள்) சிறிய அடிமைகளின் பிழைகளைப் பொறுப்பரென்று நினைக்கலாகாது; (எ - று.)

"ஆளியுறைபாம்பு மரசும் நெருப்பும், முழையுளைபெரு மென்றிவை தாங்கும், இளைய எளிப யின்றன வென்றெண்ணி, இகழி னிழுக்கந்தரும்" என்ற ஆசாரக்கோவையும், "அகலா தணுகாது நீக்காய்வார்போல்க, இகல் வேந்தர்சேர்ந்தொழுகுவார்", "இளையரினமுறைய ரென்றிகழார் கின்ற, ஒளியோ டொழுகப்படும்," "பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங், கெழுதகைமை கேடுதரும்" என்ற திருக்குறட்பாக்களும், 'அவன்பொருளை செறம்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுத லான், அவன் வேண்டாதன செய்தற்கு எதுவாய கெழுதகைமை கேடுதரு மென்றார். இவைமூன்றுபாட்டானும், பொறுப்பரென்று அரசர்வெறுப்பன செய்யற்க வென்பது கூறப்பட்டது' என்ற பரிமேலழகருரை வாக்கியங்க ளும், "கைவரும்வேந்தனமக்கென்றுகாதலித்து, செவ்வியதெரியாதரையற்க -

ஒவ்வொருகால், எண்ணையனேனு மரியன் பெரிதம்மா, கண்ணினனுள்வெயர்ப் பிணன்" என்ற நீதிநெறிவிளக்கமும், 'அரசரும் நெருப்பும் பாம்பும் சமி' என்ற பஞ்சதந்திரமும் காண்க அயர்த்தனை - முற்றெச்சம். மரை - முதற் குறைவிகாரம். அன்ற - அனலென்றற்கு அடிமை - அடிமையானவர்; உயர்திணைப்பொருள்தரும் அஃறிணைச்சொல். வேண்டா - வேண்டும் என்ற விதிகோன்முற்றின எதிர்மறை. (கஉஎ)

[சுக்கிரீவனை வாலி இராமன்கையில் ஒப்பித்தல்.]

கஉஅ எண்ணரித்தகையவாயவுறுதிகள்யாவுமேங்கும்
பின்னவற்கியம்பிநின்றபேரொழிலானைநோக்கி
மன்னவர்க்கரசன்மைந்தமற்றிவன்சுற்றத்தோடு
முன்னடைக்கலமென்றுந்தியுயர்கரமுச்சிவைத்தான்.

(இ - ள்.) என்ன - என்று, இ தகைய அய - இத்தன்மையனவான, உறுதிகள் யாவும் - இதங்களே யெல்லாம், எங்கும் பின்னவற்கு இயம்பி - (தன்மரணத்திற்காக) எக்கமடைகின்ற தன்தம்பியான சுக்கிரீவனைநோக்கிக் கூறி,—(பிறகு வாலி),—நின்ற பேர் ஒழிலானை நோக்கி-எதிரில்நின்ற மிக்க அழகை யுடையவனான ஸ்ரீராமபிரானைப் பார்த்து, 'மன்னவர்க்கு அரசன் மைந்த - (தசரத) சக்கரவர்த்தியின் திருக்குமாரனே! இவன் - இந்தச்சுக்கிரீவன், சுற்றத்தோடும் - (தனது) உறவினத்துடனே, உன் அடைக்கலம் - உனது அடைக்கலப்பொருளாவன்', என்று - என்றுசொல்லி, உந்தி - (அச் சுக்கிரீவனை இராமபிரான்பக்கல்) செலுத்தி, உயர் கரம் உச்சி வைத்தான் - உயரவெடுத்த (தன்) கைகளை(த்தனது) சிரமேற்கொண்டு நமஸ்காரஞ்செய் தான்; (எ - று)—மற்று - அசை.

எங்குதல் - இரங்குதல். நின்ற பேரொழிலான் - என்றும் மாறுமல் நிலை நின்ற மகாசௌந்தரியத்தையுடையவனெனினுமாம். மன்னவர்க்கு அரசன்- அரசர்கட்கு அரசன், ராஜராஜன். சுற்றம் - பந்துவர்க்கம்; நட்பினரும், பரி ஜனமும், இதில் அடங்கும். அடைக்கலம் - பாதுகாக்கத்தக்க பொருள். உந்தி - தன்னால் தழுவப்பட்டிருந்த சுக்கிரீவனை இராமன் முன்னிலையிற் சேர்த்து என்க; 'உயர் கரம் உச்சிவைத்தான்' என்பதற்கு - (அவ்விராம பிரான் இச்சுக்கிரீவனைத் தான்பாதுகாப்பதாக உடன்பட்டு அடைக்கலமாக ஏற்றுக்கொண்டருளின னென்பதற்கு அறிகுறியாகுமாறு அப்பெருமானது சிறந்த வலக்கையைப்பிடித்து (இச்சுக்கிரீவனது) தலையின்மேல் வைத்தன னென்று உரைப்பாரு முளர். பின்னவன் - பின்பிறந்தவன். (கஉஅ)

[பிறகு வாலி சுக்கிரீவனைக்கொண்டு அங்கதனை வருவித்தல்.]

கஉக. வைத்தபினுரிமைததம்பிமாமுகநோக்கிவல்லே
யுய்த்தனிகொணர்தியுன்றனிளங்கருமகனையென்ன
வத்தலையவனையேவியழைத்தலைணைந்தானென்ப
கைத்தலத்துவரிசிலைக்கலக்கினன்பயந்தகாளை.

(இ - ன்.) வைத்த பின் - (இவ்வாறு உயர்காரத்தை உரை) வைத்தபின்பு, உரிமை தம்பி மா முகம் நோக்கி - உரிய அன்பிற்கு இடமான தன் தம்பியாகிய சுக்கிரீவனது அழகிய முகத்தைப் பார்த்து, 'உன் தன் ஒரு அரு மகனை - உன்னுடைய சிறந்த அருமையான புதல்வனை [தங்கதனை], வல்லே உய்த்தனை கொணர்தி - விரைவில் இங்கு அழைத்துக் கொண்டு வருவாய்,' என்ன - என்று சொல்லி, அ தலை அவனை ஏவி - அவ்வங்கதனிருந்த இடத்திற்கு அச்சுக்கிரீவனை அனுப்பி, அழைத்தலின் - (அவனைக்கொண்டு அங்கதனை) அழைத்ததனால், கைத்தலத்து உவரி நீரை கலக்கினன் பயந்த காளை அணைந்தான் - தன்கைகளாற் கடலைக் கடைந்தவனை வாலி பெற்ற ஒப்பாரு மிகுய அவ்வங்கதன் அங்கு வந்து சேர்ந்தான்; (எ - று) — என்ப அடை.

அங்கதன் - வாலிக்குத் தாரையினிடம் பிறந்த புதல்வன். தம்பியினிடம் தான் கொண்ட அன்புரிமையால் ஒற்றுமை நயப்படுத்தி, 'உன் தன் மகனை' என்றான்; இதுவரையில் யான் பாதுகாத்ததுபோலவே இனி நீ அவனைக் காக்கவேண்டுமென்று குறிப்பித்தற்கு இவ்வாறு கூறினனுமாம். அத்தலை - அவ்விடம்; அப்பொழுது எனினுமாம். இலக்கணையாய் 'உவரி' என்பது பாற்கடலையும், 'நீர்' என்பது - பாலையுங் குறித்தன. 'தந்தை யெப்பான் மைந்தன்' என்றபடி வாலிபோலவே பலபராக்கிரமங்கள் சிறந்தவனங்கத னெனபது தோன்ற, 'கைத்தலத்து வரிநீரைக் கலக்கினன் பயந்த காளை' என்றார். காளை - இளவெருது போன்ற இளவீரன்; உவமையாகுபெயர்: கடை வலிமை காம்பீரியங்களால் உவமை. மா முகம் - கம்பீரமான முகம், பொலிவு பெறும் முகம். உய்த்தல் - செலுத்துதல். (கஉக)

[வந்த அங்கதன் வாலியைக் காணுதல்.]

கசஅ. சுடருடைமதிய மென்னத்தோன்றினன்றுன்றியாண்டு
மிடருடையுள்ளத்தோரையெண்ணினுமுணர்க்திலாதான்
மடருடைநறுமென்சேக்கைமலியன்றியுதிரவாரிக்
கடரிடைக்கிடக்குகாதற்றுதையைக்கண்ணிற்கண்டான்.

(இ - ள்.) இடர் உடை உள்ளத்தோரை - துன்பமுள்ள மனத்தையுடைய வரை, யாண்டும் - எவ்விடத்தும் [எப்பொழுதும்], எண்ணினும் உணர்க்திலாதான் - மனத்தினுல் அறிந்து மில்லாதவனுன அங்கதன், சுடர் உடை மதியம் என்ன தோன்றினன் - ஒளியையுடைய பூர்ணசந்திரன் (உதித்தாற்) போல அங்கு வந்து சேர்ந்தான்; தோன்றி - (அங்ஙனம்) வந்து,—மடர் உடை நறு மெல் சேக்கை மலி அன்றி - பூவிதழ்களினுலாகிய வாசனை வீசுகின்ற மெனமையான படுக்கையாகிய மலியனமீ தன்றி, உதிரம் வாரி கடர் இடை - இரத்தப்பெருக்காகிய கடலி னிடையே, கிடந்த - படுத்துக் கொண்டிருக்கின்ற, காதல் தாதையை - அன்புக்கு உரிய தன்தக்தையான வாலியை, கண்ணின் கண்டான் - கண்களாற் பார்த்தான்; (எ - று.)

வாலியின் அரசாட்சியின்கீ ழிருந்த கிஷ்கிந்தாபுரி முழுவதிலும் எப்பொழுதும் எவரும் எக்காரணத்தாலேனும் வருத்தமுற்றதில்லையாகவே, அங்கதன் பிறந்த கான்முதல் அன்பமுற்ற மனத்தவனைக் கண்களாற் பார்த்திலை

ஞதலால், இடருடையுள்ளத்தோர் இன்னவாறிருப்பரென்று மனத்திலு ணர்ந்தானுமில்லை யென்க. 'எண்ணினும்' என்ற உம்மை - இறந்தது தழு விய எச்சத்தோடு, இழிவுசிறப்பு சுடருடைமதி - கலைகள்நிறைந்த சந்திரன். அம் - சாரியை. இனி, 'தோன்றினன்' என்பதைப் பெயராக்கொண்டு, (வாலியினுற் கடையப்பட்ட பாற்கடலினின்று) ஒளியுள்ள சந்திரன் (தோன் றினற்)போல (வாலியின் மகனுய்த் தாரையினிடமிருந்து) தோன்றியவனை அங்கதனென்று உரைத்தலு மொன்று. வாலி மேனிறத்தினுற் சந்திரன் போல்வனென்பது, மராமரப்படலத்தின் அ-ஆஞ் செய்யுளிற் கூறப்பட் டது; இனி வரும் அடுத்த செய்யுளிலும் காண்க. தந்தையொடொப்பான் மைத்தனுதலால், இங்கு அங்கதனுக்குச் சந்திரனே உவமைகூறினர். மடருடை றுமென் சேக்கை - புஷ்பசயனம், மலர்ப்பள்ளி. இனி, மடர் உடை-பூவிதழ் களையுடைய [அதாவது - காம்பரிந்தமலர்களே மேலே பரப்பிவைக்கப்பெற்ற] என்றும் பதப்பொருள் கூறலாம் அப்படிக்கையின் உயர்வுபற்றி 'மேல்' என் றார். உதிரவாரி-செங்கீர். இயல்பாக மிகவுயர்ந்த மலர்ப்பள்ளியின்மீது பள்ளி கொண்டிருத்தலேவிட்டுப் புதலையாக இரத்தவெள்ளத்தினிடையே வீழ்ந்து கிடந்த தாதையைக் கண்டனனென்க; மேலீது படுப்பதைவிட்டுக் கட லிடையே கிடந்தனன். மனத்தினுற் காணுதலும் உளதாதலின், அதனி னின்று பிரித்தற்கு 'கண்ணிற்கண்டான்' என்றார். தன்பங்கொண்ட மன முடையவரெவரையும் எங்கும் எப்பொழுதும் மனத்தினுலும் அறியாதவ னென அங்கதகுமாரன் இரத்தக்கடலிற்கிடந்து மிகவருந்துகின்ற உள்ளத்தை யும் உடலையுமுடைய தனது பிராணபதமான தந்தையைத் தன்கட்புலனுக் கண்டானென, இரக்கத்தோன்றக் கூறினர். தாதை - தாத என்ற வடசொல் லின் விகாரம். மடல் கடல் என்பன - எதுகை நோக்கி, மடர் கடர் என லகாரகரப்போலி பெற்றன; பந்தர், சாம்பர் என்பன போல (கசஅ)

[கண்ட அங்கதன் வாலியின்மேல் விழுதல்.]

கசக. கண்டனண்கலுழிசோருங்குருதியுங்காலைமாலைக்
குண்டலமலம்புகின்றகுவவுத்தோட்குரிசிறிங்கண்
மண்டலமுலகில்வந்துகிடந்தமதியின்மீதா
விண்டலந்தன்னினின்றோர்மீன்விழுந்தென்னவீழ்ந்தான.

(இ - ன்.) காலை மாலை - சூரிய சந்திரர்போல, குண்டலம் அலம்புகின்ற - குண்டலமென்னுங் காதணி அசைந்து விளங்கப்பெற்ற, குவவு தோள் - திரண்ட தோள்களையுடைய, குரிசில் - அங்கத குமாரன்,—கண்டனன் - (அங்ஙனம் தந்தையைப்) பார்த்து,—கலுழி சோரும் குருதியும் - (தன்கண்களி னின்று பெருகுகின்ற) கலக்கமுள்ள கண்ணீரும் இரத்தமுமாய், திங்கள் மண்டலம் (விண்தலந்தன்னினின்று) உலகில் வந்து கிடந்தது - சந்திரமண் டலம் வானத்திலிருந்து நிலவுலகத்தில் வந்துவிழுந்து கிடந்ததாக, அ மதி யின்மீது ஆ - அந்தப் பூர்ணசந்திரன்மேலே விண்தலந்தன்னினின்று ஓர்மீன் விழுந்தென்ன - வானத்திலிருந்து ஒருநக்ஷத்திரம் விழுந்தாற்போல, வீழ்ந் தான் - (தரையில் விழுந்து கிடக்கின்ற அந்த வாலியின்மேல் தான் சோகத் தால்) விழுந்திட்டான்; (எ - று.)

கலுழிநீர் - கலங்கல்நீர்; கலுஷீ என்ற வடசொல்லின் விகாரம். சோக மிகுதியாற் கண்ணீரோடு குருதியும் கண்களினின்று வெளிப்பட்டது. இலக்கணையால், 'காலே' எனபது - காலேயில் உதித்துவிளங்குஞ் சூரியனையும், 'மாலே' என்பது - மாலேப்பொழுதில் உதித்துவிளங்கும் பூர்ணசந்திரனையுங் குறித்தன. ஒளிமிகுதியும் வட்டவடிவும்பற்றி, சூரியசந்திர மண்டலங்கள் - குண்டலங்கட்கு உவமை. இனி, காலே மாலே என்றவற்றை உதயபர்வதம் அஸ்தமநபர்வதம் என்றுகொண்டு, அவற்றைத் தோள்கட்கு உவமையாக்கி யுரைத்தலுமாம். ஆ - ஆக என்பதன் விகாரம்; இதனை இங்கு அசையென்னலாம். மீன் - விண்மீன். முனனிரண்டடிகளில் உவமையணியும், பின்னிரண்டடிகளில் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்ததனால், சேர்வையணி. 'கால' என்ற பாடமோதி, காணயாறுபோல நீர்ப்பெருக்கையும் இரத்தத்தையும (கண்கள்) தொடர்ச்சியாய்ச் சொரியவென்ற உரைப்பாரு முளர்; மாலே - இடையறாத தொடர்ச்சிக்கு இலக்கணை. காதிலணிந்த குண்டலங்கள் தோளளவுந் தொங்குதலால், 'குண்டலமலம்புகின்ற குவவுத்தோள்' என்றார். குரிசில் - பெருமைபிற் சிறந்தவன்; ஆண்பாற்சிறப்புப்பெயர். (கசக)

[இதுமுதல் நான்குகவிகள் - வாலியைக்குறித்து அங்கதன் புலம்பல்.]

கசஉ. *எந்தையேயெந்தையேயிவ்வெழுதிரைவளாகத தியார்க்குஞ்*
சிந்தையாற்செய்கையாலோதீவினைசெய்திலாதாய்
கொந்தணியதுதானற்கன்முகநோக்கிக்கூற்றம்
வந்தமையன்றேவஞ்சாதாரதன்வலியைதீர்ப்பார்.

(இ - ள.) எந்தையே எந்தையே - எனதந்தையே! எனதந்தையே!! இவ்வெழுதிரை வளாகத்து - மேலெழுகின்ற அலைகளேயுடைய கடல் சூழ்ந்த இங்கிலவுலகத்தில், யாராகும் - எவராகும், சிந்தையால் செய்கையால ஓதீவினை செய்திலாதாய் - மனத்தினுலும் செய்கையினுலும் ஒருதீங்கையுஞ் செய்யாதவனே! கொந்தணி - (அகுணமிருந்தும் நீ இவ்வாறு) தின்பமடைந்தாய்!! அது தான தீர்க - அது அப்படியிருக்கட்டும்: நின முகம் நோக்கி கூற்றம் வந்ததே அன்றே - உனது முகத்தைப் பாராதும் (அஞ்சாமல்) யமன் (உன்னிடத்திலும்) வந்துவிட்டதேயன்றே; (இனி), அஞ்சாத அதன வலியை தீர்ப்பா ர்- அச்சங்கொள்ளாமல் அதன்வலிமையை யொழிக்கவல்லவர் வேறு யாவருளர்! [எவருமிலலை யெனறபடி]; (எ - று.)

'எந்தையே எந்தையே' எனற விளியடுக்கு, புலம்பற்பற்றி வந்தது. எழுதிரை - வினைத்தொகையன்மொழியாய், கடலுக்குறித்தது. இனி, 'எழுதிரை' என்பதைப் பண்புத்தொகையாகக்கொண்டு, எழுகடல்சூழ்ந்த நிலவுலக மென்றலுமாம்; இப்பொருளில், திரை - கடலுகருக் கினையாகு பெயர். வளாகம் - சூழப்பட்ட இடம். நிர்கரணங்களுன ஆதிகாரணமான மனத்தையும, பிற்பட்ட காரியமான செய்கையையுங் கூறவே, இடைப்பட்டதான சொல்லினுலும் எவர்க்குந் தின்பஞ் செய்யாதவனென்பது போதரும். சிந்தையால் தீவினைசெய்தல் - பிறர்க்குத தீங்குசெய்யுமாறு மனத்தினுல் நினைத்தல். 'கொந்தணி' என்றும், 'வலிமைதீர்ப்பார்' என்றும் பாடமுண்டு. (கசஉ)

கசஉ. தறையடித்ததுபோற்தீராத்தகையவித்திசைகடாங்குன்
க்றையடிக்கழிவுசெய்தகண்டகனெஞ்சமுன்ற
னிறையடிக்கோலவாலினிலமையையுன்னுந்தோறும்
பறையடிக்கின்றதந்தப்பயமறப்பறந்ததன்றே.

(இ - ன்.) தறை அடித்ததுபோல் - ஆணியடித்தாற்போல, தீரா தகையு-இடம் விட்டுப் பெயராததன்மையை யுடையனவாக, இ திசைகள் தாங்கும் - இந்த எட்டுத் திக்குக்களையும் (கீழிருந்து) தாங்குகின்ற, தறை அடிக்கு-(எட்டுத் திக்) கஜங்களுக்கும், அழிவுசெய்த - தோல்வியை விளைத்த, கண்டகன் - கொடியவனான இராவணனது, நெஞ்சம் - மனம், உன்தன் நிறை அடி கோலம் வாலின் நிலைமையை உன்னும்தோறும் - உனது பருத்த அடியை யுடைய அழகிய வாலின் தன்மையை நினைக்கும்பொழுதெல்லாம், பறை அடிக்கின்றது - பறையடிக்கின்றதுபோலப் படபடவென்று துடிதுடிக்கின்றது; அந்த பயம் - அந்த அச்சம், அற பறந்தது அன்றே - (இப்பொழுது நீ இறத்தலால் இனி) முழுவதும் போய்விட்டதன்றே! (எ - று.)

திசைகள் தாங்கும் கறையடி - எட்டுத் திசைகளிலும் கீழிருந்து நிலவுலகத்தைத் தாங்கும் யானைகள். 'தறையடித்ததுபோல் தீராத்தகைய' என்றது - அவயானைகள் இடம் விட்டுப் பெயராமல் ஒரு நிலையில் நிற்றற்கும், நிலவுலகம் எட்டுத்திசையிலும் நிலைபெயராமைக்கும் உவமையாகத் தக்கது. கறை அடி - உரல்போன்ற கால்களை யுடையது என உவமைத்தொகையன்மொழியாய் யானையைக் குறிக்கும். திக்கஜங்களை இராவணன் வென்றது, திகுவிசயகாலத்தில் லென்க. கண்டகம் - வடசொல்; முள்; அது போலப் பிறர்க்கு உபத்திரவஞ் செய்பவன், கண்டகன். இராவணனை வாலி வாலினுற் கட்டி வலியடக்கிக் கர்வபங்கஞ் செய்தது, மராமரப்படலத்தின் கூ, அ-ஆஞ் செய்யுள்களிற் கூறப்பட்டது; உத்தரகாண்டத்து வாலி வாலாற்கட்டுண்ட படலத்திற் பார்க்கக்காணலாம். ஆகவே, இராவணன் அவ்வாலியினது வாலின வலிமை நிலையை நினைக்குந்தோறும் அச்சத்தால் அவன்மனம் மிகத் துடிக்கின்றதென்க. பறையடித்தல் இப்பொருளதாதலை, "பந்தடிக்குந்தோறும் நெஞ்சம் பறையடிக்கினறது" எனச் சடகோபராந்தாதியிலும், "இருவர்மாமனமும் பறையறைந் தயர்வுடனடுங்க" என வில்லிபுத்தூரார் பாரதத்திலுங் காண்க; "நெஞ்சு பறைகொட்ட" என்றார் பிறரும். பயம் - வடசொல். 'கறையடிக்கிழிவுகண்ட', 'நினையுந்தோறும்' என்பன, பாடாந்தரம். (கசஉ)

கசச. குலவரைநேமிக்குன்றமென்றவாணுயர்ந்தகோட்டின்
றலைகளுநின்பொற்றளிற்றழும்பினித்தவிர்ந்தவன்றே
மலைகொளுமாவுமற்றுமதியமும்பலவுந்தாங்கி
யலைகடல்கடையவேண்டினுரினிக்கடைவரையா.

(இ - ன்.) ஐயா - அப்பா!—குலம வரை - (அஷ்ட) குலபர்வதங்கள், நேமிக் குன்றம் - சக்கரவாளகிரி, என்ற - என்னும் பெயர் சொல்லப் பட்டு, வான் உயர்ந்த - ஆகாயத்தையளாவி யுயர்ந்துள்ள, கோட்டின் - மலைகளின்,

தலைகளும் - சிகரங்களும், இனி - இனிமேல், மின் பொன் தாளின் தழும்பு தவிர்ந்த அன்றே - உனது அழகிய பாதங்களே வைத்தலா லாகுஞ் சுவட்டை நீங்கினவன்றே ! மலை - (மந்தர) கிரியையும், கொளும் அரவும் - (கடை கயிறாகக்) கொண்ட (வாசுகியென்னும்) பாம்பையும், மற்றுமீ—, மதியமும்- (அடை தூணாகக் கொண்ட) சந்திரனையும், பலவும் - (ஸ்ரீகூர்மமாகியே அடை கல் ஒஷதிகள் முதலிய) பல உபகரணங்களையும், தாங்கி - கொண்டு, அலை கடல் கடைய வேண்டின் - அலையெறிகின்ற பாற்கடலைக் கடைந்துதருமாறு (தேவர்கள்) பிரார்த்தித்தால், இனி ஆர் கடைவர் - (நீ இறந்தொழிதலால்) இனிமேல் வேறையார் கடைந்து உதவமாட்டுவர்! [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)—அன்றே - தேற்றம்.

மகாபலசாலியான வாலி ஒன்றினின்று ஒன்றுக் பலமலைகளில் தாவிக் குதிக்கும் போது அவன்கால்கள் அழுந்துதலால் அம்மலைச்சிகரங்கள் தழும் படைந்திருந்தன வென்க. 'என்று' என்றதை எண்ணுப்பொரு ளிடைச் சொல்லாக்கி, குலவரையென்றதனோடும் இயைத்தலுமாம்; [நன் - இடை- கா.] கொளும் - கொள்ளும்: தொகுத்தல். (கசச)

கசடு, பஞ்சின்மெல்லடியாள் பாகன்பாதகமல்லயாவு
மஞ்சலித்தறியாச்செங்கையாணையாயுமர்யாரு
மெஞ்சலரிருந்தாருன்னுயின்னமுதீந்ததீயோ
துஞ்சினவள்ளியோர்கணின்னின்யார்சொல்லற்பாலார்.

(இ - ன்.) பஞ்சின மெல் அடியாள் பாகன பாதகம் அல்ல யாவும் அஞ் சலித்து அறியா - பஞ்சுபோல் மென்மையுள்ள பாதங்களே புடையவளான அம்பிகையைத் தனது திருமேனியின் இடப்பாகத்திற கொண்டவனுகிய சிவபிரானது திருவடிநிலைகளே (தத தொழுவதே யன்றி அச்சிவபாதகையல் லாத (மற்றவை) எவற்றையுங் கும்பிட்டறியாத, செம் கை - சிவந்த கைகளே புடைய, ஆணையாய் - ஆஜ்ஞாசக்கர முடையவனே! உனதுல் - நீ கடல் கடைந்து அமிருதம் கொடுக்கப் பெற்றதனுல், அமரர் யாரும் எஞ்சலர் இருந்தார் - தேவர்களெல்லாரும் இறந்து குறையாதவர்களாய் நின்றார்கள்; (அங்ஙனமிருக்க), இன் அமுது ஈந்த நீயோ துஞ்சினை - இனிமையான அமிருதத்தை (அவர்கட்கு)க் கொடுத்த நீயோ இறகின்றாய்; (ஆகவே), மின்னின வள்ளியோர்கள் சொல்லல் பாலார் யார் - உன்னைப் போல வண் மையை புடையவராகச் சொல்லத் தக்கவர் யாவருளர்! [எவரு மில்லை யென்றபடி.]; (எ - று.)

வாலியின் சிவபக்தி, மராமரப்படலத்தின் எடு, எசு - ஆஞ் செய்யுள் களிலும் கூறப்பட்டது. தனக்குக்கிடைத்த அமிருதத்தைத் தான் உண்டு அதனுல் அழிவின்றி உயிர்வாழாது அதனைத் தேவர்கட்குக் கொடுத்து அவர் களே அமரராக்கிய வண்மை மிகவும் அரியசெயலாதலால், அதனைப் பாராட் டிப் புலம்பினன். (பிற்காலத்தில் அதிகமானென்னும் வள்ளல் தனக்கு அரு மையாகக் கிடைத்தமுள்ளுண்டால் நீடுழிகாலம் உயிர்வாழத் தக்கதமான அமிருதத்தன்மையைத்தரும் மிக இனிய கருநெல்லிப்பழத்தைத் தான்

உண்ணுது அதனை ஒளவையார்க்குக் கொடுத்து அவளை நெடுங்காலம் உயிர் வாழ்ந்திருக்கச் செய்தமை, இங்குக் கருதத்தக்கது.)

பஞ்சின் மெல் அடி - செம்பஞ்சுக்குழம்பு பூட்டிய மென்மையான பாத மெனினுமாம். பாதகம் - பாதுகா என்ற வடசொல்லின விகாரம்; மிகையடி. ஆணையாய் - எங்குத்தவறுத கட்டளையை யுடையவனே யெனறபடி. நீயோ, ஓ - தெரிநிலே. 'அடியான் பங்கன பதயுகமலதியாதும்', எனவும், 'பதமல ரலது' எனவும் பாடம். வள்ளியோர்-வண்மை யெனற பண்பினடியாப்பிறந்த பெயர்; இ - சாரியை. அஞ்சலித்தல் - கைகூப்பிததொழுதல். (கசஅ)

[வாலி அங்கதனைத் தழுவித் தேறுதல் கூறல்.]

கசசு. ஆயன பலவும்பணி யழுங்கினன்புழுங்கி நோக்கித்
தீயுறுமெழுகிற்சிந்தையலமவருஞ்செங்கணவாலி
நீயினியயாவாயல்லையெனறுதனைனெஞ்சிறபுலலி
நாயகனிராமன்செய்தநல்வினைப்பயனிதென்றான்.

(இ - ள்.) ஆயன பலவும் பணனி - இவ்வாறுரைய பலவாத்தைகளையும் அடுதடுத்துச்சொல்லி, அழுங்கினன - (அங்கதன) அழுதான; நோககி - (அதனைப்) பாரத்து, புழுங்கி - தவிதது, தீ உறு மெழுகின - நெருப்பி லிட்ட மெழுகு போல, சிந்தை அலமவரும - மனம் நெகிழ்ந்து உருகுகின்ற, செம கண வாலி - (கலக்கததாற) சிவந்த கணகளையுடைய வாலியானவன, (அந்த அஙகதனை நோககி), இனி நீ அயாவாய் அலலை என்று - 'இனி நீ வருந்தக் கடவாயலலை' எனறு சொல்லி, தன நெஞ்சின புல்லி - தனது மனப்பூரவ மாக [உணமையான அனபுடனே] (அவனை) அணைத்துக்கொணடு, நாயகன இராமன செய்த நல் வினை பயன இது எனறான - '(எல்லாப பொருள்களுக் குந் தலைவனான இராமபிரான செய்த புணணியதினி பயன இது' எனறு கூறினான; (எ - று.)

புழுங்குதல் - தாபங்கொள்ளுதல். அலம்வருதல - கலக்கமடைதல். அலம் - சஞ்சலம். நாயகன - ''பூதநாயகன புவிமகள நாயகன பொருவில், வேதநாயகன'' எனக் காண்க மூவுலகங்களையும் வென்றிட்ட இராவணனை வெனறவனான தனனை வெல்லுதல் மிக்க புண்ணியத்தின பயனலன்றிக் கூடாதெனனுங் கருத்தால், 'இராமன செய்த நல்வினைப்பயன் இது' என்றான். 'இது' என்றது, தனனைக் கொல்லுதலை. இனி, இராமன் செய்தநல்ல காரியத்தின பயன் இதுவெனறு உரைதலுமாம; இவ்வுரைக்கு, 'நல்வினை' எனறது, தன்மேல் அம்பெய்ததை: அது தான முதற்பெறுதற்குக் காரண மாதல்பற்றி, அதனை 'நல்வினை' எனக கொணடாடுகினறனனெனக. இதன திறம், அடுததகவியில் விளங்கும். தன நெஞ்சின புல்லி - தன மார்போடு அணைத்து எனினுமாம; நெஞ்சு - தானியாகுபெயர். (கசசு)

[இதுமுதல் மூன்றுகவிகள் - அங்கதனுக்கு வாலி அறிவுகூறியன.]

கசள. தோன்றலுமிறநததறறுந்துகளதத்துணிநதுநோககின்
மூன்றுலகத்தினோர்க்குமூலமாதமுடிநதவண்மேற

யான்றவமூடைமையாலிவ்விரு நிலமுற்றுமுடனாளுந்
சான்றவனின்றவிரன்றரன்வந்துவிடுதந்தான்.

(இ - ன்.) *அகல்* அம - (ஐம்பூதங்களாகிய) குற்றங்களில்லாமல், *அணிந்து நோக்கின்* - நிச்சயித்துப் பார்க்குமிடத்து,—*தோன்றலும்* பிறத்தலும் - பிறத்தலும் இறத்தலும், மூன்று உலகத்திலுள்ளோர்க்கும் - மூன்று வகைப்பட்ட உலகங்களிலுள்ளவரெல்லார்க்கும், மூலத்தே முடிந்த அன்றே-தொன்றுதொட்டே யமைந்துள்ளனவன்றே? யான் தவம் உடைமையால்-நான் முன்புசெய்த தவத்தை யுடைமையால், இ இறுதி வந்து சேர்ந்தது - இத்தன்மையான கன்மரணம் (எனக்கு) வந்து வாய்த்தது: *யார்க்கும்* சான்று *என நின்ற வீரன்* - எல்லார்க்கும் சாக்ஷியாய் நிற்கின்ற மகாவீரரான இராம பிரான், *தான் வந்து விடுதந்தான்* - தானே என்பக்கல் எழுந்தருளி (எனக்கு) முத்தி தந்தருளினான்; (எ - று.)

'*அகலறத் துணிந்து நோக்கின்*' என்றதை, "*கற்க கசடற*" என்றற் போலக் கொள்க. '*துணிந்து நோக்கின்*' என்றதை '*நோக்கித் துணியின்*' என மிருதிபிரித்துக் கூட்டலாம். முதலிரண்டடி - மூன்று உலகங்களிலு முள்ளாரனைவர்க்கும் ஜநநமரணங்கள் தொன்றுதொட்டு இயல்பாக விருத்த லால் என் மரணத்தைக்குறித்து நீ வருந்தவேண்டாவென்று யாக்கை நிலையா மையையும் உலகியலையுங் கூறி மகனைத் தேற்றுகின்றவாறும். இனி, பிரத்த லும் இறத்தலும் அவரவர்க்கு ஆதிகாலத்திலேயே [கருவாய்ப் பதிகின்ற பொழுதே] அவரவரது பூர்வஜந்ம கர்மத்திற்கு ஏற்றபடி அமைக்கிட்டன வன்றோவென்று பொருள்கொள்ளலுமாம்; "*அளக்தன போகமெல்லா மவரவர்க் கற்ஸ்தாளே, யளக்தனவாழநாளும்.*" "*சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப்பயத்தினாகும், ஆதலுமழிவுமெல்லா மவைபொருட் டியல்புகண் டாய், நோதலும் பரிவுமெல்லாம் நுண்ணுணர் !வின்மையன்றே*" என்ற சிந்தாமணி, இங்கு ஒப்புநோக்கத்தகும். சிறப்புப்பற்றி '*உலகத்திலோர்*' என உயர்திணை மேல் வைத்துக்கூறினாரெனினும், உபலக்ஷணத்தால், அஃறிணை யுயிர்களையுங் கொள்க. பிறந்த உயிர் என்றைக்கேனும் எவ்வாற்றாலேனும் இறக்கவேண்டியதாயினும், எனக்கு இப்பொழுது இராமன்கையால் மரணம் கோர்ந்தது, யான்செய்த மாதவத்தின் பயனேயாம்: ஏனெனில், உடனே வீடுபேறுவாய்க்கின்றதன்றெனெப்பது, பின்னிரண்டடியின் பொருள். உல கத்து உயிர்கள் யாவுஞ் செய்யும் கருமங்களெல்லாம் ஸர்வாந்தர்யாமியான எம்பெருமான் தவறாது உணர்தலால், '*யார்க்கும் சான்றென நின்ற வீரன்*' என்றார். திருமாலின் ஸஹஸ்ரநாமங்களுள் '*ஸாக்ஷி*' என்பது ஒரு திருநாம மாதலுணர்க: "*வஞ்சித்த, எங்குமுள ளொருவன் காணுங்கொ லென்றஞ்சி*" என்றார் பின்னேரும். (கசஎ)

கசஅ. *பாலமைதகவிர்தியென்சொற்பற்றுகியென்னினைய*
மேலொருபொருளுமில்லாமெய்ப்பொருள்வில்லுந்தாங்கிக்
கால்தரைதோய்நின்றுகட்புலக்குற்றதம்மா
மால்தருமும்பிறவிநோய்க்குமருந்தெனவணங்குமைந்த.

(இ - ன்.) ஐய! அப்பா! மைந்த - பிள்ளாய்! பாலமை தவிர் நீ - மிக்க இளமைப்பருவத்தின் தன்மையைக் கடந்த நீ, என் சொல் பற்றுதி என்னின் - (தந்தையான) எனது வார்த்தையை மீடாமற் கொள்வாயானால்,— மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் (தன்னினும்) மேன்மையாக ஒருபொருளும் இருக்கப்பெறுத தத்துவப் பொருளாகிய பரப்ரஹ்மந்தானே, கால் தரை தோய நின்று - (தன்) கால்கள் நிலத்திற்படும்படி (மனிதவடிவங் கொண்டு) நின்று, வில்லும் தாங்கி - ஒரு வில்லையுங் கையில் எடுத்திக்கொண்டு, கண் புலக்கு உற்றது - (நமது) கண்ணின் புலனுக்கு [காட்சிக்கு] விஷயமாயிற்று; அம்மா - ஆச்சரியம்! மால்தரும் பிறவி நோய்க்கு - மயக்கத்தைச்செய்கின்ற பிறப்புக்களாகிய வியாதிகளைப் பற்றற வொழித்தற்கு, மருந்து - தக்க ஔஷதமாகும் (அது), என - என்று எண்ணி, வணங்கு - (அவ்விராமமூர்த்தியை) நமஸ்காரிப்பாய்; (எ - று.)

பாலமை - பாலர்தன்மை; பாலர் - மிக இளையோர், எழுபிராயத்திற்கு உட்பட்ட பருவத்தினர். 'பாலமைதவிர்' எனத் தனியே எடுத்து, பால்ய குணத்தை நீ விட்டிடு வென்று உரைப்பாரு மூளர். பற்றுதியென்னின் என வணங்கு என்ற இயையும். மெய்ப்பொருள் - உண்மைப்பொருள், பரம் பொருள், பரதத்வம். கால்கள் நிலத்தில் தோயாமை தேவர்கட்கு இயல் பாதலை, "கால்நிலந் தோயாக் கடவுள்" என்றதனாலும் உணர்க. "அடிகள் காணியில் தோய்தலால்", "இருநிலஞ் சேவடியுந்தோயும்" எனப் பிற ரும் கால்நிலந்தோய்தலைத் தெய்வமன்மையுணர்ந்து மனிதரென்ற துணி தற்குக் காரணமாகக் கொண்டமை காண்க. 'மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள் கால்தரைதோய நின்று' என்றது, பரத்வத்தை இருந்தது தெரியாதபடி விட்டுச் சௌலப்பியத்தை மேற்கொண்டு என்றவாறும். 'வில் லுந் தாங்கி' என்றது, துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலநஞ் செய்து தருமத் தைப் பாதுகாத்தற்குச் சித்தனாய் நிற்றலைக் காட்டும். கட்புலக்கு உற்றது - நமது கண்ணுக்கு இலக்காயிற்று; நம்மாற் காணப்படுவதாயிற்று என்றபடி. அம்மா - வியப்பிடைச்சொல். அமரர்க்குங் காணுதற்கரிய பரம்பொருள் எளி யேமான நமக்குக் கட்புலனாதே! என்று அதிசயித்ததாம். புலக்கு - புலத் திக்கு: அத்துச்சாரியை தொக்கது; "நிலக்கு" "வையக்கு", "மாடக்கு" என்ற விடங்களிற் போல. மால்தரும் பிறவி - அவாவினுலுண்டாகும் பிறப் புக்க ளெனினுமாம்; "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்னுர் பிறரும்.

'கால்தரை', 'மால்தரும்' என்ற விடங்களில் இடைநிலைமெய்ம்மயக் கம் இலதாகவும் சந்திபெறுது இயல்பாய் நின்றது, எதுகைத்தொடையின் பொருட் டென்க; மராமரப்படலத்தில் (கூஅ) "நீல்நிறத்து" என்னுற்போல.

கசகூ. என்னுயிர்க்கிறை நிசெய்தானென்பதையிறையுமெண்ணு
தன்னுயிர்க்குறை நிசெய்தியிவற்கமருற்றதுண்டேற்
பொன்னுயிர்த்தெளிரும்பூணுப்போதுதிநிலைமை நோக்கி
மன்னுயிர்க்குறை நிசெய்வான்மலரடிசுமந்துவாழ்தி.

(இ - ன்.) பொன் உயிர்த்த ஒளிரும் பூணும் - பொன்னைச் செய்யப் பட்டுவிளங்குகின்ற ஆபரணங்களையுடையவனே! என் உயிர்க்கு இறுதிசெய் தான என்பதை இறையும் எண்ணுத - எனது உயிர்க்கு அபாயத்தைச்செய் தான் (இவனிராமன்) என்பதைச் சிறிதும்மனதிற்கொள்ளாமல், உன் உயிர் க்கு உறுதி செய்தி - உனது உயிர்க்கு நிலையான நன்மையைச் செய்துகொள் ளக்கடவாய்: (அதாவது),—இவற்றை அமர் உற்றது உண்டேல் இவனுக்குப் (பகைவரோடு) போர்செய்ந்தாலும், போதுதி - (நீயும்) அணைசெல்வாய்; மன் உயிர்க்கு நிலைமை நோகி உறுதி செய்வான் - நிலைபெற்ற உயிர்கட்கு (அவ்வவற்றின) பக்குவத்தைப் பார்த்து (அதற்கு ஏற்ப) நன்மைசெய்தருள் பவனை இப்பெருமானுடைய, மலர் அடி - செந்தாமரை மலர்போன்ற திரு வடிகளை, சுமந்து - தலைமேற்கொண்டு, வாழ்தி - வாழ்வாய்; (எ - று.)

உயிர்த்தல்-உண்டாக்கப்படுதல். (கசக)

[இதுவும் அடுத்தகவியும் - வாலி அங்கதனை இராமபிரான் வசத்தில் ஒப்பித்தல்.]

கரு0. என்றனனியவாயவுறுதிகள்யாவுஞ்சொல்லித்
தன்றுணைத்தடக்கையாரத்தனயனைத்தழுவிச்சாலக்
குன்றினுமுயர்ந்தநிண்டோட்குரக்கினத்தரசன்கொற்றப்
பொன்றிணிவயிரப்பைம்பூட்புரவலன்றன்னைநோக்கி.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ன்.) என்றனன் - என்று, இனைய ஆய - இத்தன்மையனவான, உறுதிகள் யாவும் - இதமொழிகளை யெல்லாம், சொல்லி—, —குன்றினும் சால உயர்ந்த நிண் தோள் குரங்கு இனத்து அரசன் - மலையைக்காட்டிலும் மிகவுயர்ந்த வலியதோள்களையுடைய வானரசமூகத்திற்கு அரசனை வாலி, தனயனை - தனமகனை அங்கதனை, தன் தட அணை கை - தனது பெரிய கைகளிரண்டினாலும், ஆர தழுவி - (மீண்டும்) இறுக அணைத்துக்கொண்டு,— கொற்றம் - வெற்றியையுடைய, பைம் பொன் திணி வயிரம் பூண் புரவலன் தன்னை நோக்கி - பசும்பொன்னுற்செய்யப்பட்டு வச்சிரரத்தினங்கள் பதித்த ஆபரணங்களையணிதற்குரியவனும் காத்தற்றொழிலில்வல்லவனுமான இராம பிரானைநோக்கி,—(எ - று.)—'என்று' என அடுத்தகவியோடு தொடரும்.

தனயன் - வடசொல். புரவலன் - ஜகத்ரக்ஷகன். இங்கே, கொற்றம் - வாலிவதத்தாலானது. (கரு0)

கரு க. நெய்யடைநெடுவேற்றானைநீனிறநிருதரென்னுந்
துய்யடைக்கனலியன்னதோளினன்றொழிலுத்தியன்
பொய்யடையுள்ளத்தார்க்குப்புலப்படாப்புலவமற்றுன்
கையடையாருமென்றவ்விராமற்குக்காட்டுங்காலே.

(இ - ன்.) 'பொய் அடை உள்ளத்தார்க்கு - பொய்ம்மை பொருந்திய மனத்தையுடையவர்கட்குப்புலப்படா - புலனாகாத [அறியப்படாத], புலவ- ஜ்ஞாகல்வரூபியாவனே! (இத்த என்மகன்),—நெய் அடை - நெய் பூசிய,

கெடு வேல் - நீண்ட வேலாயுதத்தை யேந்திய, தானை - சேனைகளையுடைய, நீல் நிறம் நிருதர் என்னும் - கருநிறமுள்ள அரக்கர்களாகிய, தய் அடைக்கு-பஞ்சின் மூட்டைக்கு, அனலி அன்ன - நெருப்புப் போன்ற, தோளினன் - தோளையுடையவன்; தொழிலும் தூயன - குற்றமற்ற செயல்களையுமுடையவன்; (இங்ஙனமாகிய இவனும்), உன் கையடை ஆகும் - உனக்கு அடைக்கலமாவன்,' என்று - என்றுசொல்லி, அ இராமற்கு காட்டும் காலை-அந்த இராமபிரானுக்கு (அங்கதனை)க் காண்பிக்கும்பொழுது,—(எ - று)—'தன்னடி தாழ்தலோடும்' என அடுத்த கவியோடு தொடரும். மற்று - அசை; வினைமாற்றுமாம்.

கையடை - அடைக்கலம்; பாலகாண்டத்திற் கையடைப்படல மென்ற விடத்துங் காண்க. கை அடை என்றுபிரித்து - ஒருவரது கையை [ஸ்வாதீகத்தை] யடைவது என்றுவது, ஒருவரது கையில் [வசத்தில்] சேர்வது என்றுவது பொருள்பட்டுக் காரணக்குறியாகத்தக்கது; அரக்கர்களை மிகவளிதில் அழிக்கத்தக்க தோள்வலிமையையுடையவ னென்பது, 'நிருதரென்னுந் தய்யடைக்கு அனலியன்ன தோளினன்' என்றதன் கருத்து. 'கனலி' என்று எடுத்தால், 'அடை' என்றதை காண்காம் வேற்றுமைத்தொகையென வேண்டும். தய்யடை - பஞ்சுப்பொதி. நெய் அடை - (பகைவரது) நிணந் தோய்ந்த வெனினுமாம். பொய்ம்மையுடையார்க்குத் தானும் பொய்யனவன் எம் பெருமானெனக; ''மெய்யனகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம், பொய்யனகும் புறமேதொழுவார்க்கெல்லாம்,'' ''மெய்யர்க்கே மெய்யனகும் விதியிலாவென்னப்போலப், பொய்யர்க்கே பொய்யனகும் புட்கொடியுடைய கோமான்'' என்றும் ஆழ்வார்களும், 'புலப்படாப் புலவ' என்ற விடத்து மூண்டுதொடைகாண்க. தொழிலும் தூயன - மனமொழிகளில் மாத்திரமேயன்றிச் செயலிலும தூய்மையுடையவ னெனினுமாம். காட்டுதல் - காட்டிக் கொடுத்தல், ஒப்பித்தல். (உடுக)

[அங்கதனை இராமன் அங்கீகரித்தலும், வாலி பரமபத மடைதலும்]

கருஉ. தன்னடி தாழ்தலோடுதாமரைத்தடங்கணணும
பொன்னுடைவாளோடீட்டிநீயிதுபொறுத்தியென்ற
னென்னலுமுலகமேழுமீன்றவிறைவாலி
யன்றிலைதுறந்துவானுக்கப்புறத்துலகஞனன்.

(இ - ன்.) தன் அடி தாழ்தலோடும் - (அங்கதகுமாரன) இராமபிரானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கியவளவில்,—தாமரை தட கணணும் - செந்தாமரை மலர்போன்ற பெரிய திருக்கண்களையுடையவனான இராமபிரானும், பொன் உடைவாளோடு ஈட்டி நீ இது பொறுத்தி எனறன் - (அங்கதனைத் தான் அடைக்கலமாக ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக) அழகிய (தனது) உடைவாளோடு தன் கையிலெடுத்தநீட்டி 'நீ இதனை ஏற்றுக்கொள்வாய்' என்று கட்டளையிட்டருளினன்; என்னலும் - என்றுசொனனவளவில், உலகம் ஏழும் ஈத்தின - ஏழுவகைப்பட்ட உலகங்களிலுள்ள உயிர்களெல்லாம் (இராமபிரானைத்) துதித்தன; (பினபு), வாலி—, இறந்து—, அ

நிலே அறத்த - அந்த உடம்பையிட்டு, வானுக்கு அப்புறத்து உலகன் ஆனன்- மேலுலகங்கட் கெல்லாம் அப்பாலுள்ளதான முத்தியுலகத்தை யடைந்த னனன்; (எ - று.)

தாமரைக்கண்ணன் - புண்டரீகாக்ஷன். கணன் - தொகுத்தல். உடை வாள் - உடையிற் சொருகிவைக்கும் வாள், உடையினமீது கட்டும் வாள். உடை - அரையிலுடுக்கும் ஆடை. உடுக்கப்படுவது உடையெனக் காரணக் குறி, ஐ - செயப்படுபொருள் விகுதி. பொருத்தல் - கையிலேந்துதல். அக் நிலே - உயிர்நிலே. திருக்குறளில் "கள்வார்க்குத் தள்ளுமுயிர்நிலே" என்ற விடத்தில் 'உயிர்நிலே' என்றது உடம்பாதல் காண்க; 'உயிர்கிற்றற்கு இட னுகலின், உயிர்நிலே யெனப்பட்டது' எனறு அங்கு உரைத்தனர், பரிமேலழ கர். 'இறந்து அங்நிலே அறந்து' என்றது, ஒருபொருட்பன்மொழி. இனி, 'அங்நிலேஅறந்து' எனபதற்கு - அந்த உலக சம்பந்தத்தைப் பற்றறவிட்டு என்றும், வழியிலுள்ள இடங்களே யெல்லாம் கடந்து என்றும் பொருள் கொளளலாம். தனது உயிர் நண்பனை சுக்ரீவன் விரும்பியபடி அவனுக் குப் பழம் பகையாகிய வாலிக்குப் பரமபதமளித்து அவன் மகனை அங்கதனை அவன் விருப்பதினபடி தனக்குத் தினவனுக ஏற்றுக் கொள்ளுகையிற் பெருமான் திருவுள்ளமுவந்து கண்மலர்ந்திருந்தமை தோனற, 'தாமரைத் தடங்கணன்' எனறார். பகைவன் மகனிடத்துப் பகைமை பாராட்டாது அன்புவைத்தருளிய அருமைக் குணத்தைக் கொண்டாடி, எல்லாவுலகங்களுந் துதித்தனவென்க. தந்தைபோலன்றி மைந்தன எம்பெருமானுடைய கரு ணைக்கு இலக்காயினமை குறித்து அதிசயித்து அவவங்கதனைப் புகழ்ந்தன வென றலுமாம். (கடிஉ)

[இராமபாணம் இராமனிடம் மீளுதல்.]

கடிஉ. கையவ ணெஞ்ச நிலோடுங கடுங்கணை காலவாலி
வெயயமார் பகத்துட் டுங்கா துருவிமேக் குயர மீப்போய்த்
தூய்யநீர்க் கடலுட் டோய்ந்து தூய்மல ரமரர் சூட்ட
வையன்வெங் விடாத கொற்றத் தாவம்வந் தடைந்த தன்றே.

(இ - ள்.) அவண் - அப்பொழுது, கை நெஞ்சநிலோடும் - (வாலி தன் மாபிற் செல்லுகின்ற இராமபாணத்தை இழுத்துப்பிடித்திருந்த) கைப்பிடி தனர்ந்த வளவில், கடுங் கணை - விரைவையுடைய அந்த அம்பானது, காலன் வாலி வெய்ய மார்பு அகத்தின் தங்காது - யமன்போலக் கொடியவனுன வாலியினது கொடியமார்பினுள்ளே தங்காமல், உருவி - அத்தமார்பைத் துளைத்துக் கொண்டு அப்புறங்கழனறு, மேக்கு உயர மீ போய் - மேலே உயர எழுந்துசென்று, தூய்ய நீர் கடலுள் தோய்ந்து - பரிசுத்தமான சமுத் திர ஜலத்தில் நீராடி, அமரர் தூய் மலர சூட்ட - தேவர்கள் பரிசுத்தமான (கற்பகதருக்களின்) மலர்மாலைகளைச் சூட்டப் பெற்று, ஐயன வெங் விடாத கொற்றத்து ஆவம் வந்து அடைந்தது - ஸ்ரீராமபிரானுடைய முதுகைவிட்டு நீங்காத [அவனது தோளின் புறத்தில் கட்டப்பட்டுள்ள] வெற்றியை, யுடைய அம்புராத்தூணியில் வந்து சேர்ந்தது; (எ - று.)—அன்றே - சற் றுமை; அப்பொழுதே யெனினுமாம்.

தெய்வத்தன்மையுடையோர் செலுத்தத் தெய்வத்தன்மையுள்ள அம்புகள் இங்ஙனம் தொழில் செய்த பின்னர் அவர் பக்கல் மீளுதல், இயல்பு. வெய்யமார் பகத்தன் தங்காது உருவி - "வயிரக்குன்றக், கல்லொக்கு நெஞ்சில் தங்காது அப்புறங்கழன்று கல்லாப், புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே" என்றார் தாடகைவதைப்படலத்திலும். பரிசுத்தமான இராமபாணம் கொடிய இடத்தில் தங்குதற்குப் பிரியப்படாமல் விரைந்து அப்பாற் சென்றிட்ட தென்றவாறும். அய்யநீர் - தன்னில் நீராடியவர்க்குத் தீவினை தீர்த்துத் தூய்மையை யளிக்கும் புண்ணிய தீர்த்தம். ஐயசீலமான அம்புகள் தங்கும் புட்டிலாதலால், 'கொற்றத்து ஆலம்' எனப் பட்டது. (கருத்து)

வாலிவதைப்படலம் முற்றிற்று.

ஆ ரு வ து

அரசியற்படலம்.

அரசு இயல் படலம் - (சுக்கிரீவனது) அரசாட்சியின இயல்பைக் கூறும் பாகம். இராமபிரான் வாலியை வதைத்த பினனர் அவனது அரசாட்சியை அவன் தமபியான சுக்கிரீவனுககு அளிக்க, அவன் அதனைப் பெற்றுவாகா ராஜனுய்க் கிஷ்கிந்தாநகரத்தில் அரசாட்சி புரிந்த செய்தியைக் கூறுவது இப்படலம். இராமபிரானது திருததந்தையாரான தசரதசகரவர்த்தியினது அரசாட்சி முறைமையைக கூறும் பாகத்திறகு 'அரசியற் படலம்' என்று பாலகாண்டததிற் பெயாகூறிப்போந்த கமபநாடா, எல்லாவுலகங்கட்கும் அரசனை அவ்விராமபிரானுககுப் படைதது உணமைசெய்து 'மஹாராஜன்' என்று பேர்பெறுஞ் சுகரீவனது சிறப்புதோனற இங்கும அததொடராற் படலப்பெய ரமைதது எனனலாம்.

[வாலி பரலோகமடைந்த பின்னர் அவன் மனைவியான தாரை வந்து அவனுடம்பின்மேல் விழுதல்.]

க. வாலியு மேகி னுண்விண் வரம்பிலா வாற்ற லோடும
பாலியா முன்னர் நின்ற பரிதிசேய் செவகை பற்றி
யாலிலைப் பள்ளி யானு மங்கத னோடும போனுன்
வேல்விழித் தாரை கேட்டாள் வந்தவன் மேனி வீழ்ந்தாள்.

(இ - ள.) வாலியும விண எய்தினன வாலியும் பரமபத மடைந்தான்; ஆல் ஆலை பள்ளியானும் - (பிரளயகாலத்தில ஆதிசேஷனது அம்சமான) ஓர் ஆலிலையைப் படுகுமிடமாகக் கொண்டருள்பவனன திருமாலின அவ தாரமாகிய ஸ்ரீராமபிரானும, வரம்பு இலா ஆறறலோடும பாலியா - வரை யறை யில்லாத திறத்துடனே (அவனுக்கு அவவாறு பரமபதத்தை) அளித்தி, முன்னர் நினற பரிதி சேய் செவ கை பற்றி - எதிரில் நினற சூரியகுமார னுன சுக்கிரீவனது சிவந்த கையைப் பிடித்துகொண்டு, அங்கதனோடும் போனுன் - அங்கதனையும் அழைத்துக்கொண்டு சிறிது விலகிச் சென்றான்; (அச்சமயத்தில),—கேட்டாள் - (தனகணவனுன வாலி இறந்த செய்தியைக்) கேள்வியுற்றவளான, வேல் விழி தாரை - வேலாயுதம் போனற கண்களை யுடைய தாரையானவள், வந்து - (கிஷ்கிந்தா நகரத்து அந்தப்புரத்திலிருந்து போர்க்களத்திறகு) வந்து, அவன மேனி வீழ்ந்தாள் - அவ வாலியினுடம்பின் மேல் விழுந்தாள்; (எ - று.)

வாலியும், ஆலிலைப் பள்ளியானும் என்ற எச்சவும்மைகள் - தைதத் தொடர்புக்கு உரியன. ஆறறலோடும், அங்கதனோடும் எனற உம்மைகள் - இசைநிறை. அங்கதனோடும் என்ற உம்மையை 'பரிதிசேய்செங்கைபற்றி

என்றதை நோக்கிவந்த இறந்தது தழுவிய எச்சமென்னலுமாம். 'வீண்' என்றதை மத்திமதீபமாகக் கொண்டு 'பாலிய' என்றதனோடுங் கூட்டுக. பாலியா-பாலித்து: உடன்பாட்டிறந்தகால வினையெச்சம். வாமபிலாவாறறல் - அநந்த வீரியம்; இது, மற்றைக் கடவுட் குணங்கட்கும் உபலக்ஷணம். 'வரம்பிலா வாற்றலோடும்' என்றதனால், மகா பலசாலியான வாலியை எளிதிற்கொன்ற இராமபிரானது திறத்தையும், தன்னும் கொல்லப்பட்டவர்க்கு முத்தியளிக்கும் ஈச்சுரகுணத்தையும் பாராட்டியவாறும். வீண் - இங்கே, பரமாகாசம்.

'ஆலிலைப்பள்ளியான்' என்றது, எம்பெருமானது பரத்வத்தை விளக்கும்; பூவும் அழியுங் கற்பாந்தகாலத்திலும் தான மழிவின்றி அவற்றைத் தனது திருவயிற்றினுட்கொண்டு பாதுகாத்தருளும் முழுமுதற்கடவுளென்க. பிரமன் முதலிய சகல தேவர்களுமுட்பட யாவும் அழிந்துபோகின்ற கற்பாந்த காலத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன்வயிற்றில் வைத்துகொண்டு சிறு குழந்தைவடிவமாய்ப் பிரளயப்பெருங்கடலிலே ஆதிசேஷனது அம்சமான தோராலிலையினமீது பள்ளிகொண்டு அறிதுயில் செய்தருளுகின்றன னெனபதை நூலுகொள்ளுக. இது, எம்பெருமானது செயற்கரியன செய்யும் விசித்திரசக்தியையும், பேரருளுடைமையையுங் காட்டும.

அங்கதன் - வாலியின மகன். வீழிக்கு வேல - கூர்மைகரும், ஆடவர் நெஞ்சுறுதியை யழிதது அவர்கு வருத்தத்தை விளக்குந் திறதற்கும் உவமை. பாலியாமுனனா ரினற ஆலிலைப்பள்ளியான் என்று அந்வயித்து உரைததலுமாம். வாலி எனற பெயர்க்கு - வாலில் வலிமையுள்ளவனென்றும் வாலினிறு பிறந்தவனெனறும் பொருள். மகாமேருகிரியின வடக்குச் சிகாதகிலுள்ளதொரு சரசில் ஒருகால மூழ்கியதனற் பெண்வடிவமடைந்த ருக்ஷராஜஸ எனனும வாநராராஜனது வாலினழகைகண்டு காமுற்ற இந்திரனது அநுகிரகத்தால் அக்குரங்கின் வாலினிடமாக மிக்க வால் வலிமையுடன் தோனறியவன வாலி யெனறும், பிறகு அவவாநராதிபனது கழுத்தினழகைக் கண்டு காதல்கொண்ட சூரியனது அநுக்கிரகத்தால் அக்குரங்கின கழுததினிடமாகக் கழுத்தழகுடன தோன்றியவன சுக்ரீவ னென்றும் உணாக.

'வாலியுமேகயார்களும வரைவிலாவரமபினபம்,' 'அங்கதனோடுகிற்ப,' 'அவண்மேலின் வீழ்ந்தான' எனபன - பாடபேதம.

இதுமுதல் மூனறு கவிகள - மூதறிரும் நான்காஞரும் வினச்சீர்களும், மறறைநானகும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட

அறுசீராசிரியவிருத்தங்கள் (க)

[தாரை வாலியின்மார்பிற் புரளுதல்.]

உ. குங்குமமுங்கொடடியனன குவிமுலைக்குவட்டிறகொக்கப்
பொங்குவெங்குருதிபோர்ப்பப்புரிகுழல்சிவப்பப்பொற்றே
ளங்கவன்லங்கன்மார்பிற்புரண்டனளுன்றசெக்கர்
வெங்கதிர்விசும்பிற்சேரன்றுமின்னெனத்திகழுமெய்யாள்.

(இ - ன்.) குவி முலை குவட்டிற்கு ஒக்க - நுனிகுவிந்த மலைச்சிகரம் போன்ற (தனது) தனங்களின் பொலிவுக்கு ஏற்றவண்ணமாக, குங்குமம் கொட்டி அன்ன - குங்குமப்பூவின் குழம்பைச் சொரிந்தாற் போன்றனவாய், பொங்கு வெம் குருதி போர்ப்ப - (வாலியின் மார்பிலிருந்து நீள்ர்த்துவருகிற பயங்கரமான இரத்தப் பெருக்குக்கள் (தம்முலைக்குவடுகளில்) மூழ்வதும் பாவும்படியாகவும், புரி குழல் சிவப்ப - நுனிசுருண்ட (தனது) கூந்தல் (இரத்தம்படிதலாற்) சிவக்கும்படியாகவும், பொன் தோள் அங்கு அவன் அலங்கல் மார்பில் - அழகிய தோள்களோடுடைய அவ்விடத்தே இடக்கின்ற அவ்வாலியினது மாலையணிந்தமார்பிலே, (தாரையாரணவள்), அகன்ற செக்கர் வெம் கதிர் விசும்பில் தோன்றும் மின் எனை நிகழும் மெய்யாள் பரந்த செவ்வானமாகிய வெவ்விய சூரியகிரணம் பரந்தவானத்திலே காணப்படும் மின்னற்கொடிபோல விளங்கும் வடிவத்தையுடையவளாய், புரண்டனன் - புரண்டாள்; (எ - று.)

வாலி முதலிய வானரர்கள் முகத்திலும் வாலிலும் குரங்குவடிவமும் மற்றை யுறுப்புக்களிற் பெரும்பாலும் மனிதர்போன்றவடிவமு முடையவ ரென்பது உணரத்தக்கது. வாலியின்மார்பில் தாரைவீழ்ந்து புரளும்போது, அம் மார்பில் இராமபாணம் தைத்த வாயினின்று பொங்கிவழிகின்ற இரத்தம் தாரையின் தனபாரம் முழுவதிலும் படிந்தது. இயற்கையழகு நிறைந்த அம் முலைக்குவடுகளுக்கு ஏற்ற செயற்கையழகாகக் குங்குமப்பூவின் குழம்பை முழுவதும் கிரம்பப்பூசி மியல்பு போன்றதென்க தலைவிரிகோலமாய் அவன் வீழ்ந்து புரளும்போது அவளது கடைகுழன்றகருங்குழல் இரத்தம் படிதலாற் சிவந்ததை 'புரிகுழல் சிவப்ப' என்றார். வாலியினது அகன்ற மார்பு இரத்தப் பெருக்கினால் அந்திப்பொழுதிற் சூரியகிரணம் படிதலாற் சிவந்த மேகங்கள் பரவிய வானம்போன நிறப்ப, அம்மார்பில் வீழ்ந்து புரளுகின்ற மெல்லிதாய் விளங்கும் வடிவமுடைய தாரை அச்செவ்வானத்தில் அவ்வப்பொழு விளங்கும் மின்னற்கொடி போன்றனள்.

குவி முலை - நிரண்டதனமுமாம். முலைக்குவடு - முன்பின்னைத்தொக்க உவமத்தொகை; நிரட்சியையுடைய தனமென்பது கருத்து. புரி குழல் - விரும்பப்படும் [அழகிய] கூந்தலென்றும், பின்னியலங்கரிக்கப்பட்ட கூந்த லென்றுங் கொள்ளலாம். அலங்கல் - அலங்காரத்திற்காகத் தரித்த மாலை களும், போர்ப்பூமாலையும்.

'கொட்டியென்ன', 'கோட்டியென்ன', 'குவட்டிற்கோத்த', மின்னெ னதனவளுமெய்யாள' என்பன பாடபேதம். அங்கவன்' என்பதில், அங்கு - அசை யென்னலுமாம். உவமையணி. (உ)

[தாரை புலம்பத் தொடங்குதல்-]

உ. வேய்ங்குழல் விளிகொ ணல்யாழ் வீணையென் றினைய நாண
வேங்கின ளிரங்கி விம்மி யுருகின ளிருகை கூப்பித்
தாங்கின டலையிற் சோர்ந்து சரிந்துதாழ் குழல்க டள்ளி
யோங்கிய குரலாற் பன்னி யினையன வுரைக்கலுற்றாள்.

(இ - ன்.) வேப் குழல் - புள்ளாங்குழலினெனியும், வீளி கொள் நல் யாழ் - இன்சயமைதியைக் கொண்ட நிறந்தயாழென்னும் இசைக்கருவியின் நாதமும், வீணை - வீணையினெனியும், என்ற இனைய - என்று இத்தன்மை யனவான இன்னிசைகளெல்லாம், நாண - (இவள் குரலினினிமைக்கு ஒப் பாகாமல்) வெள்கும்படி,—(தாரைபானவள்)—ஏங்கினள் - ஏக்கங்கொண்டு, இரங்கி - பரிதபித்து, விம்மி - பெருமூச்செறிந்து, உருகினள் - உள்ளமும் உடலும் கரைந்து, இரு கை கூப்பி தலையில் தாங்கினள் - தனது இரண்டு கைகளையுங் குவித்துத் தனதலையின்மேல் வைத்துக் கொண்டவளாய், சோர்ந்து - தேகபலமும் மனோபலமும் தளர்ந்து, சரிந்து தாழ் குழல்கள் தன்னி - (பாரத்தால்) சாய்ந்துதாழ்கின்ற தலைமயிர்கள் அலிழ்ந்து விழுந்து புரளப் பெற்றவளாய், ஒங்கிய குரலால் - உரத்தகுரலினால், இனைய - இத் தன்மையனவான வார்த்தைகளை, பன்னி உரைக்கல் உற்றாள் - அடுத்தடுத்துச் சொல்லத்தொடங்கினள்; (எ - று.)—அவ்வார்த்தைகளை, அடுத்த பதின் மூன்று கவிகளிற் காண்க.

இனைய காண உரைக்கலுற்றாளென இயையும்; அவளதுகுரலின் இயல் பான இனிமைமிகுதியை எடுத்துக்காட்டியவாறும். வேய்ங்குழல் - மூங்கி லினாலாகிய ஊதுகுழல்; வேற்றுமைப்புணர்ச்சியில் யகரத்தின்முன் வலிவர இனமெலி மிக்கது: [நன - மெய் - உக.] யாழ் - வீணையின் சாதிபேதம். குழல், யாழ், வீணை என்பன - அவற்றின் ஒலிக்கு முதலாகுபெயர். இனைய, இனையன - இகரச்சுட்டடியாப்பிறந்த பலவின்பாற்பெயர்கள்; ன், ஐ, அன் - சாரியைகள்.

'வீளிநல்யாழ்' என்றும், 'ஒங்கிய குரலால்' என்றும் பாடமுண்டு; வீளி - ஓர் இசை. (ங)

வேறு.

[இதுமுதற் பதின்மூன்று கவிகள் - தாரை புலம்பல்.]

ச. வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் வேலை காண்கிலே
னுரைசே ராருயி ரேயெ னுள்ளமே
யரைசே யானிது காண வஞ்சினேன்.

(இ - ள்.) உரை சேர் - மேன்மைபெற்ற, (என்) ஆர் உயிரே - எனது அருமையான உயிர்போன்றவனே! என் உள்ளமே - எனது மனம்போன்ற வனே! (என்) அரைசே - எனது தலைவனே!—வரை சேர் தோளிடை நாளும் வைகுவேன் - மலைகள்போன்ற (உனது) தோள்களினிடையே நாள் தோறும்தங்குபவளாய், (அதனால்), கரை சேரா இடர் வேலை காண்கிலேன் - கரையில்லாத துன்பக்கடலை (இதுவரையில் ஒருநாளும்) காணுதிருந்தவளான, யான் - நான், இது காண அஞ்சினேன் - (உனது) இவ்வாறான நிலைமை யைப் பார்க்கப் பயப்படுகின்றேன்; (எ - று.)

முதலடி - உன்னால் எப்பொழுதும் ஆலிங்கனஞ்செய்யப்பெற்றவனென்பதையும், உனதுபுயவலிமையின் பாதுகாவலுக்கு உள்ளானவனென்பதையுங் காட்டும். இரண்டாமடி - இதுவரையிற் சிறிதுக் தன்பமனுபவியாதிருந்தவனென்றபடி. உரை - உயர்ச்சி; இனி, உரைசேர் - புகழ்பெற்ற எனினுமாம். இன்றியமையாமையும் ஒற்றுமையும் பற்றி, உயிரே உன்மேல் என விளித்தான். அரைசு=அரசு; இடைப்போலி. 'இது' - தன்கணவனுக்கு நேர்ந்த அபாயம். காண - கண்டதனால்; காணுதற்கு எனினுமாம். 'வேலை கண்டிலேன்' என்பது பிரதிபேதம்.

இதுமுதல் இருபத்துமூன்று கவிகள் - முதற்றிரும் மூன்றுஞ்சீரும் மாச்சீர்களும், மற்றையிரண்டும் வினச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (ச)

இ. தயாரேலெதாலியாதவென்னையும்
பயிராயோபகையாதபண்பினாய்
செயிர்தீராய்விதியானதெய்வமே
யுயிர்போனலுடலாருமுய்வரோ.

(இ - ன்.) பகையாத பண்பினாய் - (இதுவரையில் எப்பொழுதும் என்னோடு) மாறுபடாத குணத்தையுடையவனே! தயாரேல தொலியாத என்னையும் - (உனக்குநேர்ந்த) தன்பத்தைக் கண்டதனாலே உயிர்நீங்காமலிருக்கின்ற என்னை, பயிராயோ - இனி நீ அழைக்கமாட்டாயோ? செயிர்தீராய் - (என்னிடத்திற்) கோபம்நீங்காத, விதி ஆன தெய்வமே - எனது விதியினவடிவமான கடவுளே! உயிர் போனல் உடலாரும் உய்வரோ - உயிர்நீங்கிவிட்டால் அதனபின்பு உடம்புமாத்திரம் பிழைத்திருக்குமோ?

இதுவரையில் என்னோடு நீ மாறுபடாததன்மையையுடையையாயினும், நீ இறக்கதைக்கண்டும் உயிர்மாயாத என்னை இனி அன்புகொண்டு அழைப்பாயல்லேபோலும் என்பது,முதல்வாக்கியத்தின கருத்து. இவன் வாய்திறந்து ஒன்றுமபேசாதிருக்தமைபற்றிக் கூறியது இது. 'எனையும்' என்ற உயர்வு சிறப்பும்மை, முன்பு தான் அவனுடைய உழுவலன்புக்கு முழுவதும்இடமாயிருக்தமைபற்றியது. பயிர்தல் - அழைத்தலாதலை, "பயிரும் பைங்கிளி" எனச்சிந்தாமணியிலும் காண்க. இனி, முதலிரண்டடிக்கு-முன்பு நீ என்னோடு இயல்பில்மாறுபடாததன்மை யுடையையாயினும் உனக்கு நேர்ந்த தன்பம் காரணமாகயான் உயிர்நீங்காதிருத்தல்பற்றி என்னை நீ அருவருக்காமலிருப்பாயோ என்றும் உரைக்கலாம்; பயிர்த்தல் அருவருத்தல். விதி - இருவினைப்பயன் செய்த உயிரையே சென்றடைதற்கு ஏதுவாகிய கியதி. அனைத்தும் தெய்வத்தினுருவமேயாதலால், 'விதியானதெய்வம்' எனப்பட்டது. "குலமகட்குத்தெய்வம் கொழுனனே" ஆதலால், 'விதியானதெய்வமே' என்று தன்கணவனையே விளித்தானெனக் கொள்ளலுமாம். தனக்குப் பெருந்தன்பந்தந்தமைபற்றி, 'செயிர்தீராய்' என்றுன். 'உயிர்நீங்கினால் உடல் தனித்துப் பிழைக்குமோ?' என்றது, தனக்கு உயிரானவரில் இறந்தபின்பும் தான்பிழைத்

நிருப்பதுபற்றி அதிசயித்து விஞ்ஞியவாறும். ஜீவித்திருத்தலும் இராமை யும் விதியின் காரியமாதலால், இங்ஙனம் விதியைநோக்கி விஞ்ஞலாயிற்று. 'உடலாரு முய்வரோ' என்றவிடத்துப் பலர்பால்விகுதி. இழிப்புப்பற்றி வந் தது; தீணைவழுவமைதி: [ன்-பொது - உ] 'செயிர்தீராய்' என்பதற்கு - (என்னையுங்கொன்று எனது இக்) குற்றத்தைத் தீர்ப்பவராகவென்று உரைப் பாரு மூளர்: செயிர் - துன்பமுமாம். உடல்ஆரும் உய்வரோ என்றுபிரித்து, (உலகத்தில்) யாரேனும் உடல் பிழைத்திருக்கப் பெறுவரோ? என்று உரைப் பர் ஒருசாரார். பண்பிஞெய் - 'பண்பிஞய்' என்ற ஈறுதிரிந்த விளியின் ஈற் றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று; [ன் - பொது - உ] (ஞ்)

கூ. நறிதாகல்லமிழ்துண்ணகல்கலிற்
பிறிபாவின்னுயிர்பெற்றபெற்றிதா
மறியாரோகமனரதன்றெனிற்
சிறியாரோவுபகாரஞ்சிந்தியார்.

(இ - ன்.) (எனது கொழுநனே!)—கமனர் - (உனது உயிரைவாங்கிய) யமனர், நறிது ஆம் கல் அமிழ்து - நறுமணமுள்ளதான சிறந்த அமிருதத்தை, உண்ண - (தாம்) உண்ணுமாறு, நல்கலின் - (தமக்கு நீ) கொடுத்ததனால், இன் உயிர் பிறியா பெற்ற - இனிமையான தமது உயிர் (தமது உடம்பை விட்டு) நீங்காதிருக்கப்பெற்ற, பெற்றி - தன்மையை, தாம் அறியாரோ-தாம் அறிந்திலரோ? அது அன்று எனின் - அங்ஙனமன்றுஞல், (அந்த யமனர்), உபகாரம் சிந்தியார் சிறியாரோ - (தமக்குப் பிறர்செய்த) உதவியை ஞாபகத் திற்கொள்ளுதலில்லாத அற்பகுணமுடையவர்தாமோ? (எ - று.)

தேவர்களும் அசுரர்களும் ஒருங்குகூடிச் சாவாமருந்தாகிய அமிருதத் தைப் பெறுமாறு மந்தரமலையை மத்தாகநாட்டி வாசுகிநாகத்தைக் கயி ருகப்பூட்டிச் சந்திரனை அடைதாளுகநிறுத்திப் பாற்கடலைக் கடையமுயல் கையில், இருதிறத்தாரும் அதனைக்கடையும் வலிமையிலராய் எனசெய்வ தென்று கலங்கிநிற்குமளவிலே, வாநராராஜனும் தேவேந்திரனது குமாரனு மாகிய வாலி தான் நான்தோறும் பலகடல்களிலுஞ்சென்று வைதிகவித்திய கருமங்களை முடித்துவரும் வழக்கப்படி பாற்கடல்சென்றசேர, தேவர்கள் அவனை வேண்டியதனால், அவன் சுராசுரர்களை விலக்கிவிட்டுத் தானொருவ னுகவே இரண்டுகைகளாலும் வாசுகியின் தலைபையும் வாலையும் பிடித்து வலமும்இடமுமாக வலியஇழுத்தக்கடைய, அக்கடலினின்று அமிருதமுண் டாக, அதனைத் தேவர்கள் பெற்று உண்டு மரணந்தவிர்ந்து அமராயின ரென்ற வரலாறு இங்கு உணரத்தக்கது. அத்தேவர்களில் யமனும் ஒருவ னென்பது வெளிப்படை. இவ்வாறு தனக்கு என்றென்றைக்கும் உயிர்நீங்கா திருக்கும்படி அருள்செய்தவன் நீயென்பதை யமன் அறிந்திருந்தால் இப் பொழுது உனது உயிரைக் கவர்க்கடவனேஞ? அல்லன்: ஆதலால், அவன் அவ்வியல்பை அறிந்திலன்போலுமென்பது, மூன்றியவாக்கியத்தின் தாற்பரி யம். அன்றி, அதனை அவன் அறிந்திருந்தும் இங்ஙனஞ்செய்திருந்தானுயின்

உபகாரஸ்மிருதியில்லாத அற்பனுதல் வேண்டுமென்பதுத், பிதியவாக்கியத் தின் கருத்து. நமனுர் என்றவிடத்துப் பலர்பால் செறல் [கோபம்] பற்றி வந்தது; [நன் - பொது - உ.அ.] பிறியா - பிறியாமல்: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; பிறி பிரி என இரண்டுவகையும் இலக்கியங்களிற் பயிலின் றன. நமன் - யம னென்ற வடசொல்லின் சிதைவு. உபகாரம் - வடசொல்; (இதன் எதிர்மொழி - அபகாரம்.) உபகாரஞ்சிந்தியார் - நன்றி மறந்தவர், நன்றிகெட்டவர், கிருதஜ்ஞதையில்லாதவர், க்ருதக்நர். (ஈ)

எ. அணங்கார்பாகனையாசைதோறுமுற்
றணங்காவொண்மலர்கொண்டுளன்பொடு
மிணங்காக்காலமிரண்டொடொன்றினும்
வணங்கா நித்துணைவைகவல்லியோ.

(இ - ன்:) ஆசைதோறும்உற்ற - திக்குகள்தோறுஞ்சென்று, உள் அன் பொடும் இணங்கா - மனப்பூர்வமான பக்தியுடனகூடி, உணங்கா ஒண்மலர் கொண்டு - வாடாமல் விளங்குகின்ற மலர்களைக்கொண்டு, அணங்கு ஆர் பாகனை காலம் இரண்டொடு ஒன்றினும் வணங்காது - சிறந்த தெய்வமகளா கிய அம்பிகை பொருந்திய இடப்பக்கத்தை யுடையவனான சிவபெருமானை முக்காலத்திலும் வந்தித்து வழிபடாமல், இ துணை வைக வல்லியோ - இவ் வளவுநேரம் ஒரிடத்தில் வெறுமனே தங்கியிருக்கவல்லியோ? (நீ); (எ - று.)

வாலி மகா சிவபக்தனுதலாலும், நாளுதோறும் பல திசைகளிலுஞ் சென்று மீன்பவனுதலாலும், தானசெல்லுமிடங்களில் ஆங்காங்குச் சிவ பூசை செய்வனென்க; "எட்டுமாதிரத திறுதிநாளுமுர, நட்டமூர்த்தி தான் பணியுமாறறலான்" என்றும் மராமரப்படலத்தும். இணங்கா - உடன்பாட் டெச்சம். காலம் இரண்டொடு ஒன்று - காலை, நண்பகல், மாலை எனபன. 'அணங்கோர்பாகனை' என்பதும் பாடம். ஆரா - வடசொல். (ஏ)

அ. அரைசேபூவணையாடைவைகுவாய்
தரைமேலாயுறுதண்மையீதனக்
கரைவேனின்றிடுபூசலகண்டுமொன்
றுரையாயென்வயினூனமையாவதோ.

(இ - ன்.) அரைசே - தலைவனே! பூ அணை - மலர்களாலாகிய படுக்கை யில், ஆடை - மெல்லிய மேல்விரிவஸ்திரத்தினமீது, வைகுவாய் - படுப்பவ னான நீ, தரைமேல் ஆய் உறு தனமை - (அதற்கு மாருக) வெறுந்தரையிற் பொருந்தியிருக்கின்ற தன்மை, ஈது - இதுவும், எனை - எனதகாரணத்தால், கரைவேன் நின்ற இடு - (யான்) மனங்கரைபவனாய் உனது எதிரில் நின்று செய்கின்ற, பூசல் - அழுகையை, கண்டும் - பார்த்தும், ஒன்று உரையாய் - ஒன்றும் பேசாமலிருக்கின்றாய்; (அங்ஙனம் நீ உபேக்ஷைசெய்யுமாறு), என் வயின் ஊனம் யாதோ - என்னிடத்தில்நேர்ந்த குற்றம்யாதோ? (ஐ - று.)

பூவணை - மல்லிப்பள்ளி, புஷ்பசயனம். இன்று இடு என்றுபிரித்து, இப் பொழுது செய்கின்ற என்றலுமாம். ஒருபுலனுக்கு உரியவினையை மற்றொரு புலனுக்குரிய வினையாகக்கூறும் உபசாரவழக்கினால் 'கேட்டு' என்றபொரு ளில் 'கண்டு' என்றதாகக் கொண்டால், பூசல் - பேரொலி யென்னலாம். ஊசம் - வடசொல். 'வரையார்தோள் பொடியாடவைகுவாய்' என்று முத லடியிலும், 'கரையாதேனிடுபூசல்' என்று மூன்றாமடியிலும் பாடமோ தவாரு முளர். (அ)

கூ. நையாநின்றனனினிருந்திங்ஙன்
மெய்வானோர்திருநாடுமேவினை
யையாநீயெனதாவியென்றதும்
பொய்யோபொய்யுரையாதபுண்ணியா.

(இ - ன்.) பொய் உரையாத புண்ணியா - பொய் பேசாத நல்வினை யுடையவனே! நான் இருந்து இங்ஙன் நையா நின்றனன் - நான் இங்கே யிருந்து இவ்வாறு வருந்தினேன்; (அங்ஙனம் வருந்தவும் நீ), மெய் வானோர் திருநாடு மேவினாய் - வாய்மை தவறாத தேவர்கள் வசிக்கும் மேன் மையான நாட்டை யடைந்து இன்புறுகின்றாய்; ஐயா-தலைவனே! நீ எனது ஆவி என்றதும் பொய்யோ - 'நீ என்னுடைய உயிர்' என்று (என்னை நோக்கி நீ வாழ்நாளில் மிக்க அன்புடன்) சொல்லி வந்ததும் பொய்யா குமோ? (எ - று.)

இங்ஙன் - இங்ஙனம் என்பதன் விகாரம். நையாநின்றனன் - நைகின் றேன்; ஆநின்று - நிகழ்காலவிடைநிலை. 'நையாநின்றனனினிருந்து நீ, மெய்வான் மங்கையர் கொங்கை மேவினாய்' என்று முதலிரண்டடிகள் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. உயிர் துடிக்கையில் உடல் இன்பமடைவ தென்பது உலகத்திலில்லை யாதலால், 'நீயெனதாவியென்றதும் பொய்யோ' என்றான். 'என்றதும்' என்ற உம்மை - உயர்வு சிறப்பு. 'நீ எனது ஆவி' என்று என்னை நோக்கி நீ சொல்லிக் கொண்டிருந்த வார்த்தை பொய்யாகாம லிருத்தற் பொருட்டாவது சத்தியவாதியான நீ என்னை விட்டு நீங்காதிருக் கக் கடவாயன்றோ? என்றவாறும், உன்வார்த்தை பொய்யாய் விட்டால் அது பற்றி அங்கே சத்தியவாதிகளான தேவர்கள் உன்னை எவ்வாறு மதிப்பரென் றற்கு, 'மெய் வானோர்' என்றான். (கூ)

கo. செருவார்தோளநின்சிந்தையுளெனெனின்
மருவார்வெஞ்சரமெனையும்வெளவுமா
லொருவேனுள்ளனையாகிலுய்திலா
யிருவேமுள்ளிருவேமிருந்திலேம்.

(இ - ன்.) செரு ஆர் தோள - போர்த்தொழிலே நிரம்பப்பயின்ற தோள் களை யுடையவனே! நின் சிந்தை உளென் எனில் - உனது நெஞ்சில் நான் இருந்தேனென்பது மெய்யானால், மருவார் வெம் சரம் எனையும் வெளவும்

ஆல்-பகைவரது [இராமனுடைய] கொடிய அம்பு (உன்னைப்போலவே) என்னையும் நிச்சயமாக உயிர்வாங்கி யிருக்கும; ஒருவேன் உள் உளே ஆகில் - தனிப் பட்டவளான எனது நெஞ்சில் நீ இருந்தா யென்பது மெய்யானால், உய்தி ஆல் - (என்னைப்போலவே) நீயும் நிச்சயமாகப் பிழைத்திருப்பாய்; (இப்படி யில்லாமையால்), இருவேம் இருவேம் உள் இருந்திலேம் - நாம் இருவரும் ஒருவருள்ளத்தில் ஒருவர் இருந்தோமில்லை; (எ - று.)

மருவார் - சேராதவர், விரும்பாதவர்; எனவே, பகைவராயிற்று. ஈரம் - வடசொல். 'ஆல்' இரண்டும் - தேற்றம். உளே - உண்மையென்னும் பண்பினடியாப் பிறந்த முன்னிலையொருமைக் குறிப்புமுற்று. இருவேம்-இரண்டு என்னும் எண்ணுப் பெயரினடியாப் பிறந்த தனமைப்பன்மைப் பெயர்; (இரு வீர், இருவர் என்பன - இதன் முன்னிலை படர்க்கைகள்.) 'மருவார்' என்ற பன்மை, சேதல்பற்றியது. 'சிந்தையேனெனின்' எனவும் பாடம். (கo)

கக. எந்தாய்நீயமிழ்தீயயாமெலா
மூய்ந்தாமென்றுபகாரமுண்ணுவார்
நந்தாநாண்மலர்சிந்திநண்பொடும்
வந்தாரோவெதிர்வாணுளோரெலாம்.

(இ - ள்.) 'எந்தாய் - எமது தலைவனே! நீ அமிழ்து ஈய - நீ அமிருதத்தை(ப் பாற்கடலினின்று உண்டாக்கி)க் கொடுத்ததனால், யாம் எலாம் உய்ந்தாம் - நாங்களனைவரும் (அதனையுண்டு) என்றும் அழிவினழி உயிர் வாழப் பெற்றோம்,' என்று - என்று சொல்லிகொண்டு, உபகாரம் உண்ணுவார் - (முனபு நீ தமக்குச் செய்த) உதவியை மறவாமல் மனதிற் கொள்பவராய், வான் உளோர் எலாம் - மேலுலகத்திலுள்ளவர்களான தேவர்கள் யாவரும், நந்தா நாள் மலர் சிந்தி - வாடாத அன்று மலர்ந்த [புதிய] (கற்பகதருக்களின்) மலர்களை (உன்மேற்) சொரிந்து கொண்டு, நண்பொடும் எதிர் வந்தாரோ - அன்பு பாராட்டி உனது எதிரில் வந்து உன்னை எதிர்கொண்டு உபசரித்தார்களோ? (எ - று.)

உண்ணுதல் - நினைத்தல். நந்துதல் - கெடுதல். 'நந்தா மலர்' எனவே, தேவதருக்களின் மல ரென்றதாயிற்று. மலர் சிந்துதல் - புஷ்பவர்ஷம். (கக)

கஉ. ஓயாவாளியொளித்துநின்றெய்வா
னேயாவந்தவிராமனென்றுளான்
வாயாலேயினனென்னின்வாழ்வெலா
மீயாயோவமிழ்தேயுமீகுவாய்.

(இ - ள்.) அமிழ்தேயும் ஈகுவாய் - சாவாமருந்தாகிய அமிருதம்வேண்டுமென்றால் அதனையும் (பாற்கடல் கடைந்து எடுத்து யாதொரு தொடர்பு மில்லாத தேவர்கட்கெல்லாம்) கொடுத்தவனான நீ,—ஓயா வாளி - (தனக்கு இலக்கானவரது உயிரைக் கவர்ந்ததன்றி) ஒழியாத அம்பை, ஒளித்து நின்று நின்றான் - மறைந்து நின்று (உன்மேல்) எய்ததற்கு, ஏயா - உடன்படே

வந்த—, இராமன் என்று உளான் - இராமனுனவன், வாயால் எயினன் என்னின் - தன வாய்மொழியால் (இன்னது தருகவென்று உன்னை) எவினனுயின், வாழ்வு ஏலாம் ஈபாயோ - உன் செல்வ வாழ்க்கைகளே யெல்லாம் (உன் தம்பியான சுக்கிரீவனுக்கு) நீ கொடுக்கமாட்டாயோ? (எ - று.)

தினது பெருவண்மையை உணராமல் நின்னை இராமன் மறைந்து நின்று அம்பெய்து சொன்றது வீணைன்பதாம். 'ஒயா வாளி' என்பதற்கு - எப்பொழுதும் விசையையுடைய அம்பென்று கருத்துரைப்பாரு முளர். எய்வான் - எதிர்காலவினையெச்சம். எயா - எய்ந்து: உடன்பாட் டிறந்தகால வினையெச்சம்; எய்தல் - இசைதல், இணங்குதல். 'என்றுளான்' எனபது, 'என்றவன்' என்றதுபோல முதல் வேற்றுமைச் சொல்லுருபின தன்மைய தாய் நின்றது; இனி, 'இராமனென்றுளான்' என்றது, பராமுகந்தோன்ற நின்ற தென்னலாம். 'ஒயாவாளி யொளித்து நின்றெய்வான் ஏயாவந்த' என்றது, அவனது அடாத செய்கையைக் காட்டியவாறும். எயினன்=எவினன், வாயாலேவுதல் - வாய்திறந்து கூறுதல். ஈகுவாய், கு - சாரியை. 'வாயாலேவினனன்றி வாளியால், வீயாயேயமுதீயுமீளியாய்' எனறும் பாட முண்டு. (கூ)

கஉ. சொற்றேன்முந்துறவண்ணைசொற்கொளா
யுற்றுணன்னதுசெய்கலானெனை
வுற்றுயும்பியையூழிகாணுநீ
யிற்றுபானுனியென்றுகாண்கெனே.

(இ - ன்.) முந்துற - முன்னமே [சுக்கிரீவனுடன் போர்செய்தற்கு நீ புறப்படும்பொழுதே], சொற்றேன் - (இராமனெனபவன் சுக்கிரீவனுக்குப் பிராணசிநேகிதனு யமைந்து உன்னுயிர் கொள்ளுதற்கு உடன் வந்தனை னென்று) சொன்னேன்: அன்ன சொல் கொளாய் - அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல், அற்றுன் அன்னது செய்கலான் எனை - அவனிராமபிரான் அவ்வாறுன தகுதியில் செயலைச் செய்யமாட்டானென்று சொல்லி, உம்பியை உற்றுய் - உன் தம்பியை [சுக்கிரீவனை] (ப்போரின் பொருட்டுச்) சேர்ந்து, ஊழி காணும் நீ இற்றுய் - (நெடுங்காலம் இறவாதிருந்து) கற்பாந்த காலத்தைக் காணவல்ல நீ இறந்து விட்டாய்; யான் உனை என்று காண் கெனே - நான் உன்னை இனி எப்பொழுது காண்பேனே! (எ - று.)

சொற்றேன். ற் - இறந்தகால விடைநிலை. அற்றுன் - அகரச்சுட்டடியாப் பிறந்த பெயர்; ன், அ - சாரியைகள்: அவை நகரமாத்திரமாய் உகரங் கெட்டது. இனி, அற்றுன - (விருப்புவெறுப்பு) இல்லாதவன் என்றலும், ஒப்பில்லாதவன் என்றலுமாம். இற்றுய்+யான்=இற்றுயான்: தனிக்குறிலைச்சாராத யகரம், யகரம்வரக் கெட்டது. காண்கென, க் - எதிர்காலவிடைநிலை. (கூ)

கச. நீறுமேருவுநீகெருக்கினைன்
மாறேர்வாளியுண்மார்பையீர்வதோ
தேறேன்யானிதுதேவர்மாயமோ
வேறோர்வாலிகொலாய்விளிந்துளான்.

(இ - ள்.) நீ நெருக்கினால் - நீ சென்றதாக்கினால், மேருவும் நீறு ஆம் - மகாமேருகிரியும் பொடியாய் விடுமே; (அங்ஙனமிருக்க), ஓர் வாளி - ஓர் அம்பு, மாறு - (உனக்கு) எதிராய், உன் மார்பை ஈர்வதோ - (மகாபலசாலியான) உனது மார்பைப் பிளக்கமாட்டுமோ? இது தேவர் மாயமோ யான் தேறேன் - இது தேவர்கள்செய்த மாயைதானோ? யான் அறிகின்றேனில்லை; (அன்றி), விளிந்துளான் - (இங்கே) இறந்துள்ளவன், வேறு ஓர் வாலிகொல் ஆம் - (நீ யன்றி) வேறே ஒருவாலிதானோ? (எ - று.)

'விளிந்தநீ' எனவும் பாடமுண்டு. (கச)

கரு. தகைநேர்வண்புகழ்நின்றதம்பியார்
பகைநேர்வாருளரானபண்பினு
லுகநேர்ந்தியுலந்தழிந்தவான்
மகனேகண்டிலீயோநம்வாழ்வெலாம்.

(இ - ள்.) மகனே - பிள்ளாய்! [அக்கதனே!] தம்பியார் - (உன்தந்தைக்குத்) தம்பியாரான சுக்கிரீவர், தகை நேர் - பெருமைபொருந்திய, வண் - நிறைந்த, புகழ் - (வாலிக்குத்தம்பியாயிருத்தலாகிய) புகழிலே, நின்ற - (முதலில்) நிலைத்திருந்த, (பின்பு), பகை நேர்வார் உளர் ஆன பண்பினால் - (அவரோடு) பகைமைகொள்பவரான தன்மையினால், உக - (உன் தந்தையார்) இறக்க, நம் வாழ்வு எலாம் - நமது செல்வவாழ்க்கைகளெல்லாம், நேர் நின்று உலந்து அழிந்த-தருகிகெட்டு அழிந்துபோயின; கண்டிலீயோ - (இதனை நீ) பார்த்தாயில்லையோ? (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சிலப்பதிகாரத்தில் "நோதகவுண்டோ நம்மகனுரக்கினி" என்றவிடத்திலும், மணிமேகலையில் "நினக்கிவன் மகனுய்த்தோன்றியதூஉம்" என்றவிடத்திலும் 'மகன்' என்பது - புருஷனென்றமாத்திரமாய்க் கணவனென்ற பொருளில், வந்திருத்தலால், இங்கும் 'மகனே' என்பதற்கு - (என்) கணவனே! என்று பொருள்கொண்டு, அதற்குஏற்ப இச்செய்யுளுக்கு உரைகூறலுமாம். 'கண்டனீயோ' எனவும் பாடமுண்டு. புகழ்நின்ற என்பதற்கு - புகழினின்றும்(நீங்கி) என்றும், பகை நேர்வார் என்பதற்கு - பகையாய் எதிர்ப்பவரென்றும் உரைத்தலுமாம். அழிந்த-முற்று. 'புகழ்நின்று' என்ற பாடத்திற்கு புகழை யொழித்தென்க. (கரு)

கசு. அருமந்தற்றமகற்றும்வில்லியா
லொருமைந்தற்குமடாததன்னினுர்
தருமம்பற்றியுதக்கவர்க்கெலாங்
கருமங்கட்டனீயென்றல்கட்டதோ.

(இ - ள்.) அருமந்த - (கிடைத்தற்கு) அரிய மருந்து போன்று, அற்றம் அகற்றும் - (பிறரது) ஆபத்தை நீக்குகின்ற, வில்லிபார்-வில்லில்வல்லவரான இராமபிரான், ஒரு மைந்தற்கும் அடாதது உன்னினர் - ஒருவீரனுக்கும் தகாதசெயலைச்செய்ய நினைத்துச் செய்துவிட்டார்; தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம் - தருமமார்க்கம்பொருந்திய பெரியோர்களுக்கெல்லாம், கருமம் கட்டளை என்றல் - (அவரவர்செய்யுஞ்) செயலே (அவரவரது பெருமையாகிய பொன்னின்மாற்றை யறிவதற்கு ஏற்ற) உரைகல்லாகு மென்பது, கட்டதோ-(அறுட்டானத்தில் வாராத வெறுங்) கட்டுப்பாடு வார்த்தைதானோ?

'ஒருமைந்தற்குமடாதது' என்றது, இருவர் தம்மிற்பொருகையில் அவர்களுள் ஒருவர்மீது மூன்றுமவரொருவர் மறைந்துநின்று அம்பெய்தலே. இனி இரண்டாமடிக்கு - எனது ஒருபுதல்வனுக்கு மாத்திரம் தகாதகினைவைநினைத்தார் என்று உரைப்பர் ஒருசாரார்; அப்படிஎனக்கொன்று சிற்றப்பனுக்கு அரளித்துவிட்டார் என்பது, அதன்கருத்து. அருமந்த - அருமருந்து என்றதன் மரூஉ. 'அருமைத்தற்றமகற்றும்' என்ற பாடத்திற்கு - அருமையான பலத்தினால் (பிறரது) துன்பத்தைப்போக்குகின்ற என்று பொருள். 'அருள் வத்தற்றமகற்றும்' என்றும் பாடமுண்டு. கட்டளை - கட்டளைக்கல்; உரைகல். "பெருமைக்கு மேனைச்சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக்கல்" என்ற நீதி உண்மையாகுமானால், பெரியோர்களெல்லாரும் நல்லதொழில்களையே செய்யவேண்டுமே; அங்ஙனம் இராமபிரான் செய்யாமையால், அக்நீதி வெறுங்கட்டுப்பாடான வார்த்தையோ? என்றுன். கட்டதோ என்றதில் 'அது' - பகுதிப்பொருள்விகுதி. 'கட்டதோ' என்பதற்கு-உண்மையாகுமோ? என்றும், நீக்கிவிட்டதோ? என்றும் உரைக்கலாம் 'கருமங்கட்டளையென்கை விட்டதோ' என்ற பாடமோதுவாரு முளர். (கசு)

[இதுவும், அடுத்தகவியும் - அநுமான் தாரையை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு வாலிக்கு அந்திமக்கிரியை செய்வித்தமை கூறும்.]

கஎ. என்றுளின்னன்னபன்னியின்னிலா
டொன்றுவள்ளுணர்வேதுமுற்றிலா
னின்றுளந்நிலைநோக்கிநீதிசால்
வன்றுண்மால்வரையன்னமாருதி.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ன்.) என்றுன் இன்னன பன்னி - என்ற இத்தன்மையனவான வார்த்தைகளே மேன்மேற்சொல்லி, இன்னலோடு ஒன்று - துன்பத்தோடு கூடி, உள் உணர்வு எதும் உற்றிலாள் - அகத்திலெழும் அறிவு சிறிதும் பொருந்தாதவனாய் [மூர்ச்சித்து], நின்றுன் - செயலொழிந்தான்; அந்நிலை நோக்கி - அந்த நிலைமையைப் பார்த்து, நீதி சால் வல் தான் மால் வரை அன்ன மாருதி - நீதிநிரம்பியவலிய தாழ்வரைகளையுடைய பெரியமலை

போன்றவனுமான அநுமான்,—(எ - று.)—'ஏவி' என் அடுத்தகவியோடு தொடரும்.

இன்னல் என்ற பெயர் - இன் அல் என்று பிரித்து, 'இனியதல்லாத தென்ற காரணப்பொருள்படும். மலையின் அடிப்பக்கத்தை 'பாதிசைலம்' என்னும் மரபுபற்றி, அது இங்கே 'தாள்' எனப்பட்டது. இனி, வல் தான் - வலிய முயற்சியையுடைய என்று உரைத்து அநுமானுக்கு அடைமொழியாக்குதலுமாம்; சுக்கிரீவனுக்கும் இராமனுக்கும் சிநேகஞ்செய்வித்தது முதலாக அநுமானது முயற்சி வலிமைத்திறம் பிரசித்தம். வலிய கால்களையுடைய அநுமரனென்றலு மொன்று. அநுமானுக்கு மலை - அழித்தற்கு அரிமை, அளக்கலாகா அளவு, அளக்கலாகாமலே, கம்பீரமான தோற்றம், பெருமை முதலியவற்றில் உவமம். மாருதன் - வாயு; அவனது மகன், மாருதி: வட மொழித் தத்திதாந்தநாமம். கேஸரியென்னும் வாநரவீரனது மனைவியான அஞ்சநா தேவியினிடத்தில் வாயுவின் அநுக்கிரகத்தால் தோன்றியவன் இவன். 'இன்னலோடொன்றுஞள்' என்றும் பாடமுண்டு. (எ)

கஅ. மடவாரால்மடந்தைமுன்னர்வா
ழிடமேவும்படி யேவிவாலிபாற்
கடன்யாவுங்கடைகண்டுகண்ணனு
டனுவற்றவெலாமுணர்த்தலும்.

(இ - ன்.) மடவாரால் - (தாரையுடன் வந்து நின்ற அவன் தோழியர்களான) வாநரமகளிரைக்கொண்டு, அ மடந்தை - அத்தத்தாரையை, முன்னர் வாழ் இடம் மேவும்படி ஏவி - முன்பு (அவள்) வசித்திருந்த இடத்தில் [கிஷ்கிந்தாநகரத்து அரண்மனையந்தப்புரத்தில்) போய்ச்சேரும்படி அனுப்பிவிட்டு, வாலிபால் கடன் யாவும் கடைகண்டு - வாலிவிஷயமாகச் செய்யவேண்டிய கடமைகளை [அத்திமக்கிரியைகளை] யெல்லாம் (அவ்வத்தனைக்கொண்டு) முழுவதும் செய்வித்து, உடன் ஆ (க) - உடனே, கண்ணனோடு - ஸ்ரீராமபிரானுடன், உற்ற எலாம் உணர்த்தலும் - நடந்தசெய்திகளையெல்லாஞ்சொன்ன வளவில்,—(எ - று.) 'அருக்கனுர்மேலெக்கிரிபுக்க போழ்தினில்' என அடுத்த கவியோடு தொடரும்.

மடவார் - மடமைக்குணமுடையவர்; மடமை - பேதைமை: அறிந்தும் அறியாதுபோலிருக்குக்தன்மை; இது, மகடூஉக்குணம் நான்கில் ஒன்று: மற்றவை - நாணம், அச்சம், பயிர்ப்பு. "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்றபடி மடமைக்குணம் சிறத்தலால், இதுபற்றி, மகளிர்க்கு மடவாரென்று பெயராயிற்று. கடைகண்டு - நிறைவேற்றி. கண்ணன் - கரியோனென்னும் பொருளதாகிய கிருஷ்ணனென்னும் வடமொழியின் திரிவு; இது, இங்கே அவதாரப்பெயரன்றி வந்த காரணப்பெயர்; "சுவணவண்ணனெடு கண்ணுறை தோளன்" என்றார் ஆரணியகாண்டத்திலும். உணர்த்தல் - தெரிவித்தல். 'உடனுய்', 'உரைத்தலும்' என்பனவும் பாடம். (கஅ)

[சூரியாஸ்தமநசமயமாதல்.]

கசு. அகம்வேர றற்றுகவீசருக்கனுர்
புகுமேலைக்கிரிபுக்கபோழ்தினி
னகமேவியாத்தகுரக்குநாயகன்
முகமேவியாத்ததுமூரிமண்டிலம்.

(இ - ன்.) அகம் வேர் அற்று உக - இருள் வேரோடு அழிந்து போம் படி, வீசு - ஒளி வீசுகின்ற, அருக்கனுர் - சூரியபகவான், புகு மேலைக்கிரி புக்க போழ்தினில் - (காள்தோறும் தான்) செல்லுமிடமான மேற்குத்திசை யிலுள்ள அஸ்தமநகிரியை அடைந்தபொழுதில்,—மூரி மண்டிலம் - பெரிய அச்சூரியமண்டலமானது, நகமே ஒத்த குரக்கு நாயகன் முகமே ஒத்தது - மலைபோன்ற வாநராராஜனை வாலியின் முகத்தையே போன்றது [இரத்தக் தெரித்ததனும் சிவந்த அவன்முகம்போல அஸ்திப்பொழுதிற்குரிய செக்கிற மிகுதியை யடைந்தது]; (எ - று.)

இவ்வுவமை, ஒளிமழுங்கியதற்கும் எற்கும்: இனி, வாலியின் முகம் இயல்பிற் செக்கிறமுடைய தாதலாற் சாயங்காலத்துச் சூரியனுக்கு உவமை கூறப்பட்டதென்று கொள்ளுதலும் அமையும். இவ்வர்ணனை வால்மீகிராமா யணத்திலே தாரைபுலம்பலில் "நீ உயிரொழிந் திருக்கையிலும் உன்முகம் மிழ்ச்சி பெற்றதுபோல அஸ்தகிரியையடைந்த சூரியன்போன்ற வர்ண முடையதாய்ப் பிழைத்திருக்கும்போது இருந்தவாறுபோலவே காணப்படு கின்றது" என்று வந்துள்ளது. இவ்வாறே ஊன்றி நோக்குமிடத்து, கம்ப ராமாயணத்திற் கூறிய பொருள்கள் பலவற்றை வால்மீகிராமாயணத்தில் ஆங் காங்கு வெளிப்படையாகவும் மறைபொருளாகவுங் காணலாம். ஆனபற் றியே, சுலோகம் சுலோகமாக ஒழுங்காய் மொழிபெயர்க்கப் படாததாகவும் பல இடங்களில் மாறுபாடுடையதாகவும் இருக்கையிலும் கம்பராமாயணத் தை வால்மீகிராமாயணத்தின் வழிநூலென்பர் உணர்ந்தோர்.

அகம் - பாவம்; வடசொல்; அது, இலக்கணையாய், அதுபோலக் கரு கிறமான இருளே யுணர்த்திற்று. அகம் என்ற சொல்லுக்கு மரமென்றும் ஒருபொரு ளுள்ளதனுல், முதலடிக்கு - இருளாகிய மரம் வேரோடு அற்று விழும்படி அதனைவீசியெறிகிற சூரியனெனக் கொள்ளலாம்; சிலிஷ்டரூப கம். இனி, பாவமாகியமரம் வேரோடு அற்றுவிழும்படி அதனைவீசியெறிகின்ற சூரியனென்றலும் அமையும். சூரியனை வந்தனைவழிபாடுகள் செய்வார்க்குத் தீவினைகள் யாவும் தொலையுமென நூற்கொள்கையுண்டு. வேர் அறுதல் - மிர்மூலமாதல். நகம் என்ற வடசொல், வடவாதது [புடைபெயராதது] என்ற காரணப்பொருள்படும். மூரி - பழமையும், வலிமையுமாம். மண்டிலம் - வட சொல்லிறிபு. மேலைக்கிரி, ஐ - சாரியை. (கக)

[சூரியன் அஸ்தமித்தலும், இராமன் இராப்பொழுதைக் கழித்தலும்.]

உ0. மறைநந்தான்மாலையருக்கன்வள்ளியோ
னுறைநந்தான்மங்கைநிறத்தையுண்ணுவான
குறைந்தாமெனஞ்சுகுழைந்தழுங்குவா
னிறைந்தார்கங்குலின்வேலைநீந்தினான்.

(இ-ள்.) மாலை-மாலைப்பொழுதில், அருக்கன்-சூரியனை, மறைந்தான்—; வள்ளியோன் - வண்மைக் குணமுடையவனான இராமபிரான், மங்கை நிறத்தை உன்னுவான - சீதையின் மேனிமையைக் கருதுபவனாய், உறைந்தான் - (அங்கு ஓரிடத்தில்) தங்கி, குறைந்தான் - மெலிந்தவனும், நெஞ்சு குழைந்து அழுங்குவான - மனம் நெகிழ்ந்து வருந்துபவனுமாகி, நிறைந்து ஆர் கங்குலின் வேலை நீந்தினான் - நிறைந்துபொருந்திய இராப்பொழுதாகிய கடலை அறிதிற்கடந்தான்; (எ - று.)

மனைவியைப் பிரிந்து வருந்துபவனாகு இராப்பொழுதி நீண்டதாகத் தோன்றுமாதலாலும், அதனைக்கழித்தல் அரிதாதலாலும், 'நிறைந்தார்கங்குலின் வேலை நீந்தினான்' எனலுரர். மாலை - அந்திப்பொழுது. (உ0)

[சூரியோதய வர்ணனை.]

உக. புதல்வன்பொன்மகுடமிபாதுதலான்
முதல்வன்பேருவகைக்குமுந்துவா
னுதவும்பூமகள்சேரவொண்மலர்க
கதவஞ்செய்யகாதகினீக்கினான்.

(இ-ள்.) புதல்வன - தன்மகனான சுக்கிரீவன், பொன்மகுடம் பொறுத்தலால் - பொன்மயமான கிரீடத்தை (அன்றைத்தினத்தில்) தரிக்கப்போவது பற்றி, முதல்வன - (அவனது) தந்தையான சூரியன், பேர் உவகைக்கு முந்துவான - (அதனைக்கண்டு) மிக்க மகிழ்ச்சியை யடைதற்கு முற்பட்டவனாய்,—உதவும் பூமகள் சேர - (அந்தப் பட்டாபிஷேகத்திற்கு) உதவியாயினை திருமகள் வந்து (அவனைச்) சேரும்படி, ஒள் மலர் கதவம் - (அவளிருக்குமிடமான) சிறந்ததாமரைமலர்களின் இதழ்களாகிய கதவுகளை, செய்ய காதகின் நீக்கினான் - தனது சிவந்த கிரணங்களாகிய கைகளினால் திறந்து விட்டான்; (எ - று.)

இராப்பொழுது கழியுமளவில் இயல்பாகச் சூரியனுதித்தலே - அற்றைநாள் தன்மகனாகிய சுக்கிரீவன் முடிசூடும் நாளாதலால் அம்மகோத்ஸவத்தைக்கண்டு மிகவும்மகிழ்தற்பொருட்டே சூரியன எதிரில்வந்ததாகவும், சூரியனுதித்தவளவில் தாமரை இதழ்விரிந்தமலர்தலே - திருமகள் அவனைச்சேரும்படி அவளிருக்குமிடமான தாமரையென்னும் வீடுகளின இதழ்க்கதவுகளைத் தனது சிவந்த கிரணங்களாகிய கைகளே நீட்டித் திறந்துவிட்டதாகவும் உத்ப்ரேக்ஷித்தார்; தற்குறிப்பேற்றவணி. பூமகள சேர - இரவில் தாமரை இதழ்

குலித்திருக்கும்போழ்து அதனுள்ளே வசித்திருக்கின்ற திருமகள் அதிலிருந்து வெளிப்பட்டுத் தன்மனைச்சேருமாறு எனக. இனி, செல்வமளிப்பவளான திருமகள் அவ்விடத்து மலருந் தாமரைகளில் வந்துவீற்றிருக்கும்படி யெனக் கொண்டு அதற்கேற்ப உரைத்தலுமாம் மகுடம், கரம் - தற்சமவடசொற்கள். காமென்பது கிரணமென்றும் கையென்றும் பொருள்படுதலை "காமென்ப கிரணஞ் செங்கை" என்ற நிகண்டினாலும் அறிக. 'காத்தின்' என்ற ஒரு சொல்லுக்கே காமாகியகரத்தால் [கிரணமாகிய கையினால்] என்று இருபொருள் கொண்டுரைத்தலு சிலேடையுநவகும். 'செய்ய' என்ற அடைமொழி, இருபொருளுக்கும் ஏற்கும். கதவம், அம - சாரியை. எல்லாமலர்களிலும் தாமரை சிறத்தலால், 'ஒண்மலர்' எனப்பட்டது. பூமகன் - சிறந்த மலராகிய செந்தாமரையில் வாழும் பெண். முதல்வன் - அந்திதேவியின் புதல்வரான தேவர்களுள் முந்தியவனாய் ஆதித்யனென்று போற்பெற்றவ னெனறுமாம்.

இதுவரையில் வாலிவதைப்படல மென்றும், இதற்குமேல் அரசியற் படல மென்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (உக)

[சுக்கிரீவனுக்கு முடிசூட்டும்படி இராமன் இலக்கு
மணனுக்குக் கட்டளையிடுதல்.]

உஉ. அதுகாலத்திலருட்குநாயகன்
மதிசாறமபியைவல்லியேவினன்
கதிரோன்மைந்தணியையகைகளால்
விதியான்மௌலிமிலைச்சுவாயெனை.

(இ-ன்.) அதுகாலத்தில் - அப்பொழுது,—அருட்கு நாயகன் - கருணைக்குத்தலைவனான இராமபிரான,—மதிசால் தம்பியை - அறிவுமிக்க தன தம்பியான இலக்குமணனே நோக்கி,—'ஐய - அப்பா! கதிரோன மைந்தனை - சூரியன் மகனான சுக்கிரீவனை, கைகளால் - (உன்) கைகளால், விதியால் மௌலி மிலைச்சுவாய் - நூல்முறைமைப்படி முடிசூட்டுவாய்,' எனற - என்று, வல்லே எனினன் - விரைவாகக் கட்டளையிட்டான; (எ - று.)

கைகேயி பெற்ற வரத்தின்படி தசரதன்வார்த்தையைப் பரிபாலனஞ் செய்தற்பொருட்டுப் பதினான்கு வருஷம் வனவாஸஞ்செய்வதாக உடன்பட்டு வந்த இராமபிரான் அவ்வனவாசகாலத்திலே தான் நகரத்தினுட்பிரவேசிக்கலா காதென்று கொண்டு, தானே கிஷ்கிந்தாபுரியுட்சென்று சுக்கிரீவனுக்குப்பட்டாபிஷேகஞ் செய்யாமல், இலக்குமணனே நோக்கி 'நீ போய் முடிசூட்டிவா' என்று கட்டளையிட்டருளின னென்க. இராமபிரானது வனவாசம் மாத்திரமே கைகேயி வேண்டிய வரமென்பதும், இலக்குமணனும் சீதையும் அப்பெருமானைப்பிரியமாட்டாமல் தாமாக உடனவந்தன ரென்பதும் அறியத்தக்கன. பட்டாபிஷேகம் நகரத்திலேயே நடத்தவேண்டிய சடங்கென்பது, வெளிப்படை.

வல்லே மிலேச்சவாய் என இயைத்தலுமாம். தம்பியைத் ..... இய வென்றவினித்தது. அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. ஐயகைகளால் என்ற எடுத்து, அழகிய கைகளால் என்ற உரைத்தலும் அமையும். மௌலி - சிர; வடசொல்: இது. இங்கு இடவாகுபெயராய், அதிலணியுங் கிரீடத்தைக் குறித்தது; 'முடி' என்ற தமிழ்மொழி போல. 'மிலேச்சிவாவெனு' என்ப அம் பாடம். (உஉ)

[அதந்துவேண்வேனகோணநம்படி இலக்குமணன் அனுமானுக்குக் கூறுதல்]

உசு. அப்போதையருணின்றவண்ணலு
மெய்ப்போர்மாருதிதன்னீவீரரீ
யிப்போதேகொணரின்னசெய்வினைக்
கொப்பாம்யாவையுமென்றுணர்த்தலும்.

இதமுதல் மூன்றுகவிகள - குளகம்.

(இ - ள்.) அருள்கின்ற அண்ணலும (இராமபிரானது) கட்டளையில் நிற் கின்ற பெருமையிற சிறந்தவனான இலக்குமணனும்,—அப்போதே - அப் பொழுதே, மெய் போர் மாருதிதன்னை - நீதிதவறாத போரைச் செய்தலில் வல்ல அநுமானை நோக்கி,—வீர - வீரனே! இன்ன செய்வினைக்கு ஒப்பு ஆம் யாவையும் நீ இப்போதே கொணர் - இந்த [பட்டாபிஷேக] காரியத்திற்கு வேண்டுவனவான எல்லாப்பொருள்களையும் இப்பொழுதே நீ கொண்டுவந்து சேர்ப்பாய்,' என்ற உணர்த்தலும் - என்ற கூறியவுடனே,—(எ - று).— 'யாவையும் நண்ணும் வேலையில்' என அடுத்தகவியோடு தொடரும்.

அருள் - அருள்மொழி; இலக்ஷ்மண. அருள் கின்ற - தமையனாரது கட் டளையைக் கடவாத என்க; இனி, (இராமனது) அருளுக்கு இலக்காய் கின்ற என்றலும், ஜீவகாருண்யம் பொருந்திய என்றலுமாம். அண்ணல் - ஆண்பாற் சிறப்புப்பெயர். மெய் போர் மாருதி - உடல்வலிமை கொண்டு செய்யும் போரில் வல்ல மாருதி யென்றலும், சத்தியதர்மமும் போரிலும் வல்ல மாருதி யென்றலுமாம். 'மெய்ப் போர் மாருதி' என்ற பாடத்திற்கு - உண்மையான புகழையுடைய மாருதி யென்க. உணர்த்தல் - தெரிவித்தல். 'உரைத்தலும்' எனவும் பாடமுண்டு. கொணர் - கொணை என்பது ஈறுகுறுகி விரித்தல்விகா ரகம் பெற்றது. (உக)

[அங்ஙனமே அநுமான் கொணர்தல்.]

உச. மண்ணுங்நீர்முதன்மங்கலங்களு
மெண்ணும்பொன்முடியாதியாவையு
நண்ணும்வேலையினம்பிதம்பியுங்
கண்ணஞ்செய்வனசெய்துசெம்மலி.

(இ - ள்.) மண்ணும் நீர்முதல் மங்கலங்களும் - (சக்கிரீவனே) நீராட்டு தற்குரிய புண்ணியதீர்த்தம் முதலிய மங்கலகரமான பொருள்களும், எண்

ணும் பொன் முடி ஆதி யாவையும் - (யாவராலும்) நன்குமதிக்கப்படுகின்ற பொன்மயமான கிரீடம் முதலிய மற்றும் எல்லா உபகரணங்களும், மண்ணும் வேலையில் (அனுமனுற் கொணரப்பட்டு) வந்து சேர்ந்தவளவில்,—நம்பி தம்பியும் - புருஷோத்தமனான இராமபிரானது திருத்தமபியாகிய இலக்குமணனும், செம்மலை - பெருமையிற் சிறந்தவனான சுக்கிரீவனுக்கு, திண்ணம் செய்வன செய்து - (முடிசூட்டுதற்குமுன்பு) தவறுமற் செய்யவேண்டிய செயல்களைச் செய்து, (எ-று.)— 'மௌலிசூட்டினன்' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

மண்ணும் நீராமுதல் மங்கலங்கள் - மங்கலஸ்நானஞ் செய்வித்தற்கு வேண்டும் நீர் முதலியன. மண்ணும்நீர் - அபிஷேகதீர்த்தம்: கங்கைமுதலிய புண்ணியநதிகளின தீர்த்தமும், சமுத்திரஜலமும். மண்ணுங்நீர் எனறவிடத்து, நகர்வொற்று - விரித்தல்விகாரம். நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; ஆண் பாற்சிறப்புப்பெயர்: இதறகு - பூர்ண 'எனனாறு பொருளுரைப்பர். கமதி தலைவனைக் கொண்டால், 'நம்' முதனிலையாக கமக்கு இனனு னெனனும் பொருள் பட வருவதோ ருயர்ச்சிசொல்லாம்; பி - பெயர்விகுதி. (யாவராலும்) நம்பப்படுபவ னென்று பொருள்கொண்டால், இ - செயப்படுபொருள் விகுதியாம். திண்ணம் - உறுதி. செமமல்-செவவையுடையோன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். செம்மலை - உருபுமயக்கம் - ஈற்றடி - முற்றுமோனை. ஆதி - வடசொல். (உசு)

[சுக்கிரீவ பட்டாபிஷேகம்.]

உரு. மறையோராசிவழங்கவாணாளோர்
நறைதோய்கண்மலர்தூவகன்னெறிக்
கிறையோர்முன்வினைசெய்யவேந்தலைத்
தறையோர் நூன்முறைமௌலிசூட்டினன்.

(இ-ள்.) மறையோர் ஆசி வழங்க-பிராமணர்கள் ஆசீர்வாதஞ் செய்யவும், —வான உளோர் நறை தோய் நாள் மலர் தூவ - தேவர்கள் தேனநிரம்பிய அன்றுமலர்ந்த [புதிய] (கற்பகதருக்களின்) மலர்களைச் சொரியவும்,—நல் நெறிக்கு இறையோர் முன் வினை செய்ய - சன்மார்க்கத்திறகுத் தலைவரான முனிவர்கள் புரோகிததொழில்செயயவு-ட, எந்தலை - பெருமையிற்சிறந்தவனான அச்சுக்ரீவனை, தறையோர் நூல் முறை - நல்லொழுக்கவழியில்நடப்பவரான பெரியோர்கள கூறிய சாஸ்திரங்களில் விதித்த முறைமைப்படி மௌலி சூட்டியினன - முடி தரிப்பித்தான்; (எ - று.)

மறையோர் - வேதம்வல்லவர்; வேதங்களை ஓதுதலோடு ஓதுவித்தற்கும் உரியவர். இச்சடங்கிற்கென்று பிராமணர்கள் வரவழைக்கப்பட்டன ரென்பர் ஒருசாரார்; மற்றொருசாரார், வானரர்களிலும் பிராமணஜாதிகளுண்டென்பர். ஆயிஸ்-வடசொல. நறை தோய்-தறமணம் நிரம்பிய எனினுமாம். நன்னெறி - வேதசாஸ்திரங்களிற்கூறிய நல்லொழுக்க வழி. முன்வினைசெய்

தல் - முன்னே இருந்து செய்யவேண்டுந் தொழிலைச் செய்தல். 'நன்னெறிக் கிறையோன்றன்னிளையோனை வேந்தலே' என்ற பாடம் சிறவாது; குளகச் செய்யுள்களுட் கீழ்ச்செய்யுளில் 'நம்பிதம்பி' என எழுவாய் வந்தபின்னர் இச்செய்யுளில் 'நன்னெறிக்கிறையோன்றன்னிளையோன்' என அப்பொருளையே யுணர்த்தும் எழுவாய் வந்து கூறியதுகூற லாகுதலால். ஏந்தல் - ஆண்பாற்சிறப்புப்பெயர்: இதற்கு - ஏந்தியவன், உயர்ந்தவன் எனக் காரணப்பொருள்கொண்டால், இதில் அல் - கருத்தாப்பொருள்விகுதி யென்னலாம். (உரி)

[பின்பு சுக்கிரீவன் வந்து இராமனைவணங்க, அப்பெருமான் அவனுக்குச் சிலஉறுதிமொழி கூறத் தொடங்குதல்.]

உசு. பொன்மா மௌலி புனைந்து பொய்யிலான்
றன்மா னக்கழ றுழும் வேலியி
னன்மார் பிற்றழு வற்று நாயகன்
சொன்ஞன் முற்றிய சொல்லி னெல்லையன்.

(இ - ன்.) (சுக்கிரீவன்), பொன் மா மௌலி புனைந்து - பொன்மயமான சிறந்த கிரீடத்தைத் தரித்து, பொய் இலான் தன் மானம் கழல் தாழும் வேலியில் - பொய்மைமொழியில்லாதவனை இராமபிரானது பெருமையை யுடைய திருவடிகளில் வணங்குமளவில்,—நாயகன - (எல்லாப்பொருள் கட்குந்) தலைவனும், முற்றிய சொல்லின் எல்லைபான்-நிரம்பிய பாவைகளின் தடையெல்லை எவ்வளவுண்டோ அவ்வளவையும் அறிந்தவனுமான அவ் வீராமபிரான், நல் மார்பில் தழுவற்று - அழகிய தனது மார்பில் (அத்தச் சுக்கிரீவனை) அணைத்துகொண்டு, சொன்ஞன் - (இலஉறுதிகளைக்) கூறினானென்; (எ - று)— அதனை, தூக்கத பதினெருகவிகளிற் காண்க.

'வாலியைக்கொன்று அவனது அரசாட்சியையும் உனது மனைவியையும் உனக்குக்கொடுப்பேன்' என்று முன்பு சுக்கிரீவனுக்கு வாக்குதத்தஞ்செய்த படி இராமபிரான் கிறைவேற்றிவிட்டமைபற்றி, அப்பெருமானை இங்கே 'பொய்யிலான்' என்றார். இனி, பொய்யிலான - சுக்கிரீவன, பொன் மா மௌலிபுனைந்து, தன் - தனது [இராமனது], மானக்கழல் தாழும்வேலியில் என்று பதவுரைகூறலுமாம்; இவ்வுரைக்கு, தனது காரியத்தை இராமபிரான் முடித்தவுடன் தான் அவனதுகாரியத்தை முடிப்பதென்ற கோட்பாட்டிற்கு இணங்கிய சுக்கிரீவன் அங்ஙனமே தான் முடிதரித்துக்கொண்டவுடன் இராமகாரியஞ் செய்தற்பொருட்டு இராமனிடம் வந்தமைபற்றி அவனை 'பொய்யிலான்' என்றதாகக் கொள்க. தழுவற்று, உறு - இணைவினை. 'தழுவற்றாயகன்' என்ற பாடத்திற்கு, 'அந்நாயகன்' என்றது அநாயகனெனத் தொகுத்தல் விகாரமடைந்த தென்க. 'முற்றிய சொல்லிலெல்லையான்'— "தென்சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்" என்றார் அயோத்தியாகாண்டத்திலும். இனி, முற்றியசொல் - பழமையான வேதம்:

அதின் எல்லை - வேதாந்தம்; அதற்கு விஷயமானவன் என்று உரைத்தது மாம். (உ-க)

வேறு.

[இதுமுதற் பதினேழுகவிகள் - சுக்கிரீவனுக்கு இராமபிரான் உறுதிகூறல்]

உஎ. ஈண்டுநின் றேகி நீயின் னியல்பமை யிருக்கை யெய்தி
வேண்டுவ மரபி னெண்ணி விதிமுறை யியற்றி வீர
பூண்டபே ரரசுக் கேற்ற யாவையும் புரிந்து போரின்
மாண்டவன் மைந்த னேடும் வாழ்திநற் றிருவின் வைகி.

(இ - ன்.) வீர - வீரனே! நீ—, ஈண்டுநின்று ஏகி - இவ்விடத்திலிருந்து போய், நின் இயல்பு அமை இருக்கை எய்தி - உனக்குஇயல்பாக [உரியதாக] ப் பொருந்திய இருப்பிடத்தை [கிஷ்கிந்தாபட்டணத்தை] யடைந்து வேண்டுவ - நீசெய்யவேண்டுவனவான காரியங்களை, மரபின் எண்ணி முறைப்படி ஆலோசித்து, விதிமுறை இயற்றி - (அச்செயல்களைச் சாஸ்திரங்களில்) விதித்த முறைப்படி செய்து, பூண்ட பேர் அரசுக்கு ஏற்ற யாவையும் புரிந்து-(நீ) ஏற்றுக்கொண்ட பெரிய அரசாட்சிக்குத் தக்க செயல்களெல்லாவற்றையுஞ் செய்து, போரில் மாண்டவன் மைந்தனேடும் - போரிலிறந்தவனான வாலியினது மகனாகிய அங்கதனுடனே, நல் திருவின் வைகி வாழ்தி - சிறந்த செல்வவாழ்க்கையில் நிலைபெற்று வாழ்வாயாக; (எ - று)

'போரின்மாண்டவன்மைந்தனேடும் நல்திருவின்வைகி வாழ்தி' என்றதனால், அங்கதனை இளவரசனாக்கொண்டு வாழ்வாயாக வென்று உணர்த்தியவாறும். இருக்கை-இருக்குமிடம்; 'கை' விகுதிபெற்ற தொழிலாகுபெயர். வேண்டுவ - பலவின்பாற்பெயர்.

இதுமுதல் இப்படலம்முடியுமளவுமுள்ள இருபத்தெட்டுக்கவிகள் - இப்படலத்தின் முதற்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (உ ஏ)

உஅ. வாய்மைசாலறிவின்வாய்த்தமந்திரமாந்தரோடுந்
தீமைதீரொழுக்கின்வந்தநிறத்தொழின்மறவரோடுந்
தூய்மைசால்புணர்ச்சிபேணித்தகளபுதொழிலியாகிச்
சேய்மையோடணிமையின்றித்தேவரிற்றெரியநிற்றி,

(இ - ன்.) வாய்மை சால் - சத்தியத்தோடு கூடிய, அறிவின் - அறிவினால், வாய்த்த - சிறப்பமைந்த, மந்திர மாந்தரோடும் - மந்திரிகளுடனும். தீமை தீர் ஒழுக்கின் வந்த - குற்றமற்ற நல்லொழுக்கத்தோடு கூடியொழுகிய, நிறம் தொழில் மறவரோடும் - வலிமைக்கேற்ற தொழில்களையுடைய வீரர்களான சேனைத்தலைவர்களுடனும். தூய்மை சால் புணர்ச்சி பேணி - பரிசுத்தியமைந்த சேர்க்கையை விரும்பிச்செய்து, தகள் அறு தொழிலே ஆதி குற்றமற்ற செயல்களைச் செய்பவனாய், சேய்மையோடு அணிமை இன்றி தேவரின் தெரிய நிற்றி - (அந்த மந்திரிகள் சேனாபதிகள் முதலியோர் கூடி

னுடன் பழகுமிடத்து உண்ணவிட்டேயிலை) கெடுத்தாரந்தில் கிற்றலும் மிக கெருக்குதலு மில்லாமல் (உணர்ச்) தேவர்களைப்போலக் கருதும்படி கிற் பாயாக; (எ - று.)

பட்டாபிஷேக காலத்தில் அரசர்கட்கு அறிவுடையோர் நீதிபோதித்தல் முறைமை; அதன்படி, மூற்றுணர்வினனென இராமபிரான் மகாராஜர்க்கு இக்ஷ்வாகும் நீதிபோதஞ் செய்கின்றன னென்க. இராமனுக்கு நாளைக்கு முடி சூட்டுவதென்று நிச்சயித்தபோது தசரதசக்கரவர்த்தி சொன்னபடி வஸிஷ்ட முனிவர் நீதியுணர்த்தியதை அயோத்தியா காண்டத்திலும், ஸௌராஷ்ட்ர தேசத்தைத் தேவகாரத்தில் அரசாண்ட சோமகாந்தராஜன் தன் மகனுக ஏம கண்டனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய நிச்சயித்தபோது அவனுக்குத் தரு மோபதேசஞ் செய்ததை வினாயகபுராணத்து உபாசனா காண்டத்து அரசியற் கைப் படலத்திலுங் காண்க. இங்கு 'சேய்மையோ டணிமை யின்றி' என்ற விஷயம், ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் வாலி அங்கதனுக்கு அறிவு கூறு மிடத்து "யாருடனும் அதிக நிகேகம் செய்யத்தக்கதன்று, நிகேகமில்லாமை யும் செய்யத் தக்கதன்று; இரண்டும் பெரிய குற்றமாம்; ஆகையால், இடை நிகாராய் ஒழுகவேண்டும்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

சேய்மையோடு அணிமை இன்றி—திருக்குறளில் மன்னரைச் சேர்ந் தொழுகலென்னும் அதிகாரத்தில் "அகலா தணுகாது தீக்காய்வார்போல்க, இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்" என்றது காண்க. மிக விலகினும் பயன் கொடாமல் மிக நெருங்கினுல் தம்மை அவர் அவமதித்ததாக நினைத்துக் கோபித்தல், வேந்தரியல்பு. தேவரின தெறிய நிற்றி—மற்றும் திருக்குறளில் அவ்வதிகாரத்தில் "இளைய ரினமுறைய ரென்றிகழார் கின்ற, வொளியோ டொழுகப்படும்" என்றவிடத்திற் பரிமேலழகர் 'ஒளி - உறங்காகிற்கவும் தாம் உலகங்காகின்ற அவர் கடவுள் தன்மை; அதனேடு பொருந்த ஒழுகுத லாவது - அவர் கடவுளரும் தாம் மக்களுமாய் ஒழுகுதல்' என்றது காண்க. "நிலகீண்முடித் தேவரும் வேந்தரு, முலகமாந்தர்க ளொப்பவென்றே துப" எனறது, ஸாமாந்ய நியாயம். தேவரின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப் பொரு வது நிற்றி - ஏவலொருமை. தகுதி யல்லாத வழியால் நட்புப் பாராட்டுதலே யொழித்தற்கு, 'தூய்மைசால் புணர்ச்சிபேணி' என்றார். மந்திரமாந்தர் - ஆலோசனைக்கு உரிய ஆடவர். தொழிலே - தொழிலே புடையாய்; முன் னிலே யொருமைக் குறிப்பு வினையாலணையும் பெயர். (உ௮)

உக. புகையுடைத்தென்னிலுண்டுபொங்கனலங்கென்றுன்னு
மிகையுடைத்துலகறுதலோர்வினைய மும்வேண்டற்பாற்றே
பகையுடைச்சிந்தையார்க்கும்பயனுறுபண்பிற்றீரா
நகையுடைமுகத்தையாகியின்னுரைகல்குரவால்.

(இ - ள்.) உலகம் - உலகத்தில் வாழ்கின்ற ஜந்துக்களின் சமூகம்,—புகை டைத்து என்னின் - (ஓர் இடம் மேலே காணப்படும்) புகையையுடையதா யிருந்தால், (அதுகொண்டு), அங்கு பொங்கு அனல் உண்டு என்று உன்

னும் - அவ்விடத்திலே எழுந்தெரியு மியல்புடைய பெருப்பு உள்ளது என்று ஊகித்து உணர்கின்ற, மிகை உடைத்து - மிகுதியான அறிவை யுடையது: (ஆதலால், அந்த அநுமாநப் பிரமாணம் வேண்டுவ தாதலோடு), நூலோர் வினையமும் வேண்டல் பாற்றே - நீதிநூல்வல்லவராற் கூறப்படுகின்ற வஞ்சனையும் (அரசர்க்கு) விரும்பத் தக்கதேயாம்; பகை உடை சிந்தையார்க்கும் - (உன்பக்கல்) பகைமையுள்ள மனத்தை யுடையவர்களுக்கும், பயன உறு பண்பின் தீரா - (அவரவர் தகுதிகேற்ற) பயனுண்டாம்படி எல்லாரியல்பு களும் அறிந்த நடத்தலினின்று நீங்காம லிருந்துகொண்டே, நகை உடை முகத்தை ஆகி - மலர்ச்சியையுடைய முகத்தை யுடையையாய், நாவால் இன் உரை நல்கு - நாவினால் இனிமையான சொற்களைச் சொல்வாயாக.

பொறிகளாற் காணுங் காட்சியையே யன்றிக் குறிகளால் உய்த்துணரும் அநுமானத்தையும் பிரமாணமாகக் கொள்ளுதல் உலகவியல் பாதலால் அக் கோட்பாட்டிற்கு இணங்கி உலகத்தோடு ஒத்து ஒழுக வேண்டு மென்பார், 'புகையுடைத் தென்னி னுண்டு பொங்கன லங் கென்றனு மிகையுடைத் தலகம்' என்றார்; காணப்படும் பொருளைக்கொண்டு காணப்படாத பொரு ளின் நிலையையும் நிச்சயித்தறிதல் வேண்டுமென்க. மிகை - மிக்கது; கண் ணாற் கண்டதற்குமேலும் ஒன்றைக் கொள்ளுதலால், 'மிகை' எனப்பட்டது. உலக வியல்பு இத்தன்மைய தாதலால், அநுமாநப் பிரமாணத்தால் ஆர்ய மிடத்தும் குற்றங்கட்கு இடமில்லாமற் குணம் நிரம்பியவனு யொழுகல் வேண்டுமென்று கருத்துக் கொள்ளுதலுமாம். "எல்லாஞ், சலவருட் சாலச் சலமே நலவருள், நன்மை வரம்பாய்விடல்" என்றபடி யோக்கியரிடத்துத் தாமும் யோக்கியமாய் ஒழுகுதலும் அயோக்கியரிடத்துத் தாமும் அயோக்கிய மாய் ஒழுகுதலும் அரசர்க்கு உரியன வாதலால், 'நூலோர் வினையமும் வேண்டற்பாற்றே' என்றார். 'வினையமும்' என்ற உம்மை - இறந்தது தழு வீய எச்சத்தோடு இழிவு சிறப்பு; எ - தேறறம். 'நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே' என்று பொதுப்படக் கூறியவர் அதற்கு உதாரணமாகச் சிறப்பாய் ஒன்றை யெடுத்துக் காட்டுகின்றார் பிறனிரண்டடிகளில். அகத் திற் பகைமை யுடையராய்ப் புறத்திற் கூடியொழுகுவார்பகல் நீயும் அவர் போலவே நின்று புறத்தில் முகமலர்ச்சி காட்டி இன்சொற்பேசி அகத்தாற் சிதையாமல் அந்த அகப்பகைவரை அழித்தற்கு வேண்டிய ஜாகரூகை யிலேயே யிருத்தல் வேண்டு மென்க. திருக்குறளிற் கூடாநட்பு என்னும் அதிகாரத்தில் "மிகச்செய்து தம்மென்னுவாரை நகச்செய்து, நட்பினுட் சுப் புல்லற்பாற்று," "பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட், டகநட்பொரீஇ யிடல்" என்றவை இங்கு நோக்கத் தக்கன. பண்பு - எல்லாரியல்புகளும் அறிந்த நடத்தல்; "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்ற கலித் தொகையைக் காண்க. மனப்பூர்வமாக வன்றி யெனபது தோன்ற, 'நாவால் இன்னுரை நல்கு' என்றார். 'பகை நண்பு கொதுமல் எனனும் வேறுபா டின்றி யாவரிடத்தும் ஒரு நிகராக இன்சொற் பேசுதலே நாவினியல்பாகக் கொள்ள வேண்டு' மென்பது தோன்ற, இது கூறினருமாம். 'பகையுடைச் சிந்தையார்க்கும்' என்ற உம்மையால், மற்றையோரிடத்து மலர்ந்த முகத்

தையும் இனிய சொல்லையு முடையனுதல் வேண்டி மென்புனி பெறப் பட்டது.

வினையம். அம் - சாரியை. வினய மென்ற வடசொல்லின் விகாரமெனக் கொண்டு, பணிவென்று பொருள்கூறவுந்தகும். இனி, நூலுணர்ந்தோராற் கூறப்படுகின்ற பிரிதறல் பொருத்தல் பொருதல் முதலிய செயல் வகை களே 'வினையம்' எனறு சாதியொருமையாற் குறித்ததாகக் கொண்டும் உரைக்க லாம். பாற்று - பான்மையென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முறறு. தீரா - தீராமல்: ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம் முகதுதை - முன்னிலை யொருவைக் குறிப்பு வினையாலணையும் பெயர். 'இன் னுரை நவிறி நாவால்' எனவும் பாடமுண்டு. (உக)

கூ0. தேவருமருடறகொத்தசெயிறறுசெல்வமஃதுன்
காவலுக்குரியதென்றுலண்ணுகருதிக்காண்டி
யேவருமினியகண்படையலவர்சிவாபென்று
மூவகையியலோரா வுணிவர்கருமுலர்மூன்றின்.

(இ - ள்.) தேவரும் மருடறகு ஒத்த - (பெருஞ்செல்வததிலிருப்பவர்க ளான) தேவர்களும் அதிசயித்து மயங்குதற்கு, செயிர் அறு செல்வம் அஃது - குறறமறற மிகப்பெருஞ்செல்வமானது, உன காவலுக்கு உரியது - உனது பாதுகாப்பிறகு உரிய பொருளாயிறறு, எனறுல—, தனனது கருதி - அச் செல்வத்தின் சிறப்பை மனததிறகொண்டு, காண்டி - (அதனைப்பாதுகாத்த லில) விழிப்புடனிருப்பாய; உலகம் மூன்றின் - மூனறு உலகங்களிலுமுளள, எவரும் - எலலாரும், முனிவராகும் - முனிவர்கட்கும், இனிய நண்பர் வி ரவார் அயலவர் எனறு மூவகை இயலோர் ஆவர் - இனிமையான சிநேகித ரும் பகைவரும் (இவரிருதிறத்தினரு மலலாமல்) கொதமலா புள்ளவரு மெனறு மூனறவகைப்பட்ட தன்மையுடையோராவர்; (எ - று.)

மருடல - மருள+தல்; இம்மருட்கை, வியப்பினுலாகியது. 'தேவரும் வெஃகறகொத்த' எனற பாடததிறகு - தேவர்களும விரும்பதறகாக என்று பொருள். காண்டி எனற எவலொருமைமுற்றில், ட் - எழுத்துப்பேறு. எவர்- எசார விறுவடியாப்பிறந்த பெயர; இங்கு எஞ்சாமை குறித்தது. அயலவர் - உதாவீன ரெனப்படுவர். விரவார் - சேராதவர். முனிவர் - முன்னியவர்; பெரியோர். பொருள்களினிடத்துப் பெரும்பாலும் விருப்பு வெறுப்புக்களே யொழித்தவர்களான இருடியர்க்கும் மூவகையியலோரா ரெனவே, பிறர்க்கு அங்ஙனமாவரெனபது கூறவேண்டாதாயிறறு. உமமை - உயாவுசிறப்பு. உல கம் மூன்று - சுவாகாகம், பூமி, பாதாளம. (கூ0)

கூக. செய்வனசெய்தல்யாண்டுநீயனிருதியாமல்
வைவனவந்தபோதுமவசையிலினியகூறன்
மெய்சொலலவழுக்கல்யாவுமேவினவெஃகலின்மை
யுய்வனவாக்கிதம்மோடியாவனவுவகுசெய்வாய்,

(இ - ள்.) யாண்டும் - (மேற்கூறிய மூவகையோருள்) எவ்விஷயத்திலும், தீயன சிந்தியாமல் - தீமையான காரியங்களைக் கருதாமல், செய்வன செய்தல் - (வருணச்சிரமமுறைமைகட்கு ஏற்றபடி) செய்யவேண்டிய காரியங்களைச் செய்தலும், வைவன வந்தபோதும்-(பிறர்) வைத வசைச்சொற்கள் (தமது கேள்விக்கு) வந்தபோதிலும், வசை இல இனிய கூறல் - (தாம்சொல்லுஞ் சொற்களை) வசைச்சொற்களில்லாமல் இனியனவாகச் சொல்லுதலும், மெய் சொலல் - மெய் பேசுதலும், யாவும் வழங்கல் - (தாம் கொடுத்தற்கு இயைவனவான) பொருள்களை யெல்லாம் (இரப்பவர்க்குக்) கொடுத்தலும், மேவின வெஃகல் இன்மை - (பிறரிடத்திற்) பொருந்திய பொருள்களைத் தாம் அபகரிக்க நினையாமையும், (ஆகிய இச்செயல்கள்) உய்வன ஆகி தம்மோடு உயர்வன - (தம்மையுடைய உயிர்களை) நற்கதிபெறுவனவாகச்செய்து அவ்வுயிர்களோடு தாமும் மேம்படுவனவாம் ; (ஆகலே), உவந்து செய்வாய்- (இவற்றை நீ) விரும்பிச்செய்வாய்; (எ - று.)

யாண்டும் - எவ்விடத்தும். வைவனவந்தபோதும் என்பதற்கு - தாம் வசைமொழி கூறத்தக்க சந்தர்ப்பங்கள் நேர்ந்தபொழுதும் என்று உரைத்தலுமொன்று. வசை - இகழ்ச்சிச்சொல், நிட்டு. திருக்குறளில் 'வெஃகாமை' என்பதற்கு பரிமேலழகர் 'பிறர்க்குரியபொருளை வௌவக்கருதாமை' என்று பொருளுரைத்தது இங்கு உணரத்தக்கது. இனி, ''முன்னிய, பல்பொருள் வெஃகுஞ் சிறுமை.....செல்வமுடைக்கும் படை'' என்றபடி 'மேவின வெஃகலின்மை' என்பதற்கு - பொருந்திய பலபொருள்களையும் விரும்புதலில்லாமை யென்று உரைத்தலுமாம். 'மெய்யன வழங்கல்' என்ற பாடத்திற்கு - மெய்ம்மையையுடைய சொற்களைச் சொல்லுதலும், மேவினயாவும் வெஃகலின்மையும் என இரண்டாக்குக. உய்தல் - உஜ்ஜீவித்தல். 'உவந்து செய்வாய்' என்றவிடத்தில், 'உயர்ந்தோளாய்' என்ற சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (கூக)

கூஉ. சிறியரென்றிகழ்ந்துதேஎவுசெய்வனசெய்யன்மற்றிந்
நெறியிகந்திபாலோர்தீமையிழைத்தலாலுணர்ச்சிநீண்டு
குறியதாமேனியாயகூனியாற்குவவுத்தோளாய்
வெறியனவெய்திநொய்தின்வெந்துயர்க்கடலின்வீழ்ந்தேன்.

(இ - ன்.) குவவு தோளாய - திரட்சியையுடைய தோள்களையுடையவளே!—சிறியர் என்று இகழ்ந்து - (வலிமைமிலேமைகளில்) எளியவரென்பதுபற்றி அலக்ஷ்யஞ்செய்து, தேவு செய்வன செய்யல் - (எவ்விஷயத்திலும்) வருத்தந்தருஞ்செயல்களைச் செய்யாதே ; யான் - நான், இந்நெறி இகந்து - இந்தச்சன்மார்க்கத்தின் வரம்பைக் கடந்து, ஓர் தீமை இழைத்தலால். ஒருதீங்கு செய்ததனாலே, உணர்ச்சி நீண்டு குறியது ஆம் மேனி ஆய கூனியால் - அறிவுநீண்டு குறுகியவடிவமுடையவளான கூனியினால், நொய்தின் - எளிதில், வெறியன எய்தி - இல்லாமைகளை யடைந்து, வெம்துயர் கடலின்

வீழ்ந்தேன் - கொடிய துன்பமாகிய கடலில் விழுந்தேன்; (எ - று.)—மற்று - அசை, வினைமாற்றுமாம்.

இராமன் சிறுவனாயிருந்தகாலத்தில் ஒருநாள் கையிற் சிறுவில்லும் மண்ணுண்டையுங்கொண்டு விளையாடிவருகையில் ஒருகால் விற்கொண்டு எய்த உண்டை கைகேயியின் வேலைக்காரியான மந்தரையெனனும் கூனியின் முதுகின்புறத்திலதெறிக்க, அவன், தனது கூனுடைமையை இராமன் இங்ஙனம் பரிகசித்தனனென்று தவறாகக்கருதி, மனம்வருந்தி, அவன்மேற் சினங்கொண்டு, அரசன்மைந்தனுதலின் அப்பொழுது ஒன்றுஞ்செய்யமாட்டாமற் சென்று, தனக்கு 'வாய்க்குத்தருணம் நோக்கிக் கறுக்கொண்டிருந்து,' பின்பு தசரதன் இராமனுக்குமுடிசூட்ட நிச்சயித்ததையுணர்ந்தவளவிற் கோபதாபம் மிக்கவளாகி, அதற்கு எப்படியாவது தான் தடைசெய்ய வேண்டுமென்று நிச்சயித்து, கைகேயிக்குக் கலகஞ்செய்து அவள் மனத்தை மாற்றி அவளைக் கொண்டு இராமபட்டாபிஷேகத்தைத் தவிர்த்து அப்பெருமானை வனம்புகுவித்தனளென வாலாறு அறிக

உணர்ச்சிகீண்டு - தீர்க்காலோசனை யுடையளாய் என்றபடி. குறியதாம் மேனி - கூன்கொண்ட உடம்பு. 'உணர்ச்சிகீண்டு குறியதாயேனியாய' என்ற அடைமொழி கொடுத்ததனால், உடலின சிறுமைபற்றி இகழலாகாதென்பது தோன்றும். கூனி - கூனுடையவள்; இ - பெண்பால்விகுதி. இராசாங்கம் சுற்றம் பொன மணி நெல் வாகனம் அடிமை முதலாக ஐசுவரியங்கள் பல வாதல்பற்றி அவற்றின இன்மைகளும் பலவாதலால், 'வெறியன' எனப் பன்மையாற்கூறினர். 'வெங்கயர்க்கடல' எனறது, சீதையைப் பிரிந்ததனலாகிய சோகத்தை. நகர்நீங்கி வனவாசம்புக்கது அதற்குக் காரணமாதலால், கூனி பரம்பரைக்காரணமாவள். செய்யல் - எதிர்மறை யொருமையேவல். 'செய்யன்மூற்றும்,' 'நெறியிகழ்ந்து' என்றும் பாடமுண்டு குவவு - உரிச்சொல்.

நகூ. மங்கையர்பொருட்டாலெய்துமாந்தர்க்குமரணமென்றல்
சங்கையின்றுணர்திவாலிசெய்கையாற்சாலுமின்னு
மங்கவர்திறத்தினுனேயல்லலும்பழியுமாத
லெங்களிற்காண்டியன்றேயிதனின்வேறுறுதியுண்டோ.

(இ - ள்.) 'மங்கையர் பொருட்டால் - மகளிர்நிமித்தமாக, மாந்தர்க்கு மரணம் எய்தும் - ஆடவர்க்கு மரணம்நேரிடும்', எனறல் - என்கிறபொருளை, சங்கை இன்று உணர்தி - சந்தேகமில்லாமல் அறிந்துகொள்வாயாக: வாலி செய்கையால் சாலும்,—(இவ்விஷயம) வாலியின் செயலால் உறுதிப்படும்; இன்னும் - மற்றும், அவர் திறத்தினுனே - அந்தமகளிர் காரணமாகவே, அல்லலும் பழியும் ஆதல் - துன்பமும் பழிப்பும் நேர்தலே, எங்களில் காண்டி அன்றே - எங்கள் பக்கல் கண்டாயனறே? இதனின் வேறு உறுதி உண்டோ - இத்தகீதியை யறிதலேகாட்டிலும் நன்மைதருவது வேறு உண்டோ? [இல்லையென்றபடி]; (எ - று.)—அங்கு-அசை.

தெளிந்த உறுதிப்பொருளாகும் இது என்று உறுதியுரைத்தவாறும்.

சுக்கிரீவன் மனைவியான ருமையை வாலி காதலித்துத் தன்வசப்படுத்தி யமைபற்றி மிக்கமனஸ்தாபக்கொண்டிருந்த சுக்கிரீவன் பிறகு இராமபிரா னைக்கொண்டு வாலியைக்கொன்றமை கீழ்க் கூறப்பட்டது. இராமன் அர சொழிந்து வனவாசத்திற்குப் புறப்படும்பொழுது சீதையை நோக்கி 'நீ அயோத்தியாபுரியிலேயே இருப்பாயாக' என்று உறுத்திச்சொல்லவும் கேளா மல் அவள் கிட்கிந்தாகாண்டத்தைக்கூறி வலிவில் தானும் உடனே புறப்பட்டது மன்றி, 'வனவாசம் புக்கவிடத்தும் மாயமானைக்கண்டு பொன்மானென்று பிரமித்து அதனிடத்து விருப்பங்கொண்டு அதனைப் பிடித்துத் தரும்படி இராமபிரானை வற்புறுத்தித் தூண்டியனுப்பினாளாதலால் உம்மை இராவ ணன் வந்து சீதையைக் கவர்ந்து சென்ற இராமபிரான சோகக்கடலில் வீழ்த் தமையும்; மாயமானுக வந்த மாரீசன் தெற்றுராம் ஒட்டுக காட்டியபிறகு இராமபிரானெய்த அம்புபட்டு விழுகையில் தன்மெய்வடிவங்கொண்டு 'ஹா வஸீதே லக்ஷ்மணு!' என்று இராமன குரலாற் சத்தமிட்டு விழுந்து இறக்க, அக்குரலகேட்டவுளவில் இலக்குமணன அரக்கன் வஞ்சனையினுவென்ற உணர்ந்து வானரவீரருக்க, ஆவவண்மையைய யுணராமற சீதை இராமனுக்கு அபாயம நேர்ந்தென்றே கருதிப் புறடழுது கூது தீதத்தமொருட்டுத தன்னைவிட்டுச்செல்லாத இலக்குமணனமேற குறைகூறலே, இலக்குமண இராமனது பலபராக்கிரமங்களை யெடுத்துச்சொல்லி உண்மையுணர்த்தவும், கேளாமல் ஜாங்கி இலக்குமணனைப் பலவாறு பழித்தது நெருப்பில் விழத் தொடங்கலும், அப்பழிக்கு அஞ்சி இளையபெருமான அவளைத் தனியேவிட்டு இராமனிடம சென்றமையும், பின்னிரண்டடியில் அறியவேண்டியபொருன கள். எங்களில் - எனனிடத்தும், என தம்பியான இலக்குமணனிடத்தும்; எனனிடத்து அல்லலும, இலக்குமணனிடத்துப் பழியும் சீதைகாரணமாக நேர்ந்தமை காண்டியென முறையே கொள்க.

மாந்தா - இங்கே ஒனறெழிபொதுச்சொல்: ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவான இச்சொல, 'மங்கையரொருட்டால' எனறதன குறிப்பினால, பெண்பாலியொழித்து ஆணபாலைக காட்டிறறு. இனறி + உணாதி = இன றுணாதி: இன்றியெனனும வினையெச்சத்தின ஈற்று இகரம செய்யுளில் உகரமாயிற்று; [தன் - உயிர் உரு.] அனறே - தேறறம். 'வாலிசெய்கையே சாலும்' எனவும், 'இதற்கு வேறேதியாதோ' எனவும. 'இதறகு வேறவமை யுண்டோ' எனவும பாடம். மரணம் - வடசொல.

பிறன்மனைவியை விரும்புதல பெருங்கேடு வினைததலால அது கூடா தென்றும, அவவாறே தன மனைவியின சொறகேடடலும பெருந்தீங்கு பயத்தலால் அதுவும் ஆகாதென்றும, மகளிர பிறாமேற பழிகூற அஞ்சா ராதலால் அவரிடத்து அதிஜாகிரதையாகப் பழகவேண்டு மென்றும் உறுதி கூறியவாறும். "தூமகேது புவிகெனதேனிய, வாமமேகலை மங்கைய ரால் வருங், காமமில்லையெனிற் கடுங்கேடெனும், நாமமில்லை நாகமுமில் லையே" என்றது அயோத்தியா காண்டத்தில வலிஷ்டா இராமனுக்குக் கூறிய நீதி.

(கூட)

RESEARCH INSTITUTE,
84, R. H. ROAD, MADRAS-4

கூசை. நாயகனல்லனம்மைநனிபயக்தெடுத்துநல்குந்
தாயெனவினிதுபேணத்தாங்குதாங்குவாரை
யாயதுதன்மையெனுமுறவம்பிகவாவண்ணந்
தீயனவந்தபோதுசுடுதியாற்றீமையோரை.

(இ - ள்.) 'நாயகன் அல்லன் - (இவன் நமக்கு) அரசனல்லன்; நம்மை பயந்து எடுத்து நனி நல்கும் தாய் - நம்மைப் பெற்று எடுத்து வளர்த்து நன்றாகப் பாதுகாத்துக் தாயாவன்', என - என்று எண்ணியும் சொல்லியும், இனிது பேண இனிமையாய் (உண்ணச் சனங்கள்) வீரும்பும்படி, தாங்குவாரை தாங்குதி - பாதுகாத்தற்குரிய சனங்களைப் பாதுகாப்பாயாக; ஆயது தன்மை எனும் - அங்ஙனம் (எல்லாக்குடிகளிடத்தும்) கண்ணோட்டஞ் செய்வதை கினைது இயல்பாகக் கொண்டாலும், தீயன வந்தபோது - (அவர்களில் எவராலேனும் நாட்டில்) தீங்குகள் நேர்ந்தபோது, தீமையோரை - அச்சொடியவரை, அறம் வம்பு இகவாவண்ணம் - தருமத்தில் னெல்லையைக் கடவாத படி, சுடுதி - கண்டிப்பாயாக; (எ - று.)—ஆல் - அசை.

தமது அரசாட்சியின்கீழ் வாழுங் குடிகளிடத்து மிக்க அன்புடையராய் ஒழுகுதலும் அங்ஙனம் ஒழுகுமிடத்தும் அவர்களில் யாரேனுங் குற்றஞ்செய்தால் அவர்களைக் கண்ணோட்டமின்றிக் குற்றத்திற்கு ஏற்றபடி தண்டித்தலும் அரசர்க்கு முறைமையா மென்க. "குடிபுறங்காத் தோம்பிக் குற்றங்கடிதல், வடுவன்று வேந்தன்றொழில்," 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்; களைகட்டதனொடு நேர்" என்ற திருக்குறள்களும், அவற்றின் உரையிற் பரிமேலழகர் 'தண்டஞ்செய்தல், பொருளகோடல், கோறல் என ஒறுப்பு மூன்று,' 'தன்கீழ்வாழ்வாரை யொறுத்தல் அறனன்மையின் வடுவா மென்பதனை ஆசங்கித்து அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தின் நீக்கித் தூயராகுதலும் சாதித்தரும மென்றார்,' 'கொடியவர் என்றது - நீக் கொளுவுவார், நஞ்சிடுவார், கருவிபிரிக்கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொளவர், பிறனில்விழைவார் எனநிவர் முதலாயினரை, இவரை வட நூலார் ஆததாயி யென்ப. இப்பெறியாரைக கண்ணோடிக் கொல்லாவழி, புற்களைக்கு அஞ்சாகின்ற பைங்கூழ் போன்று நலிவுபல எய்தி உலகு இடர்ப்படுதலின், சோறலும் அரசருக்குச் சாதித்தரும மென்பதாயிற்று. இவையிரண்டு பாட்டானும், செங்கோல்செலுத்தும் வெணகுடைவேந்தற்குத தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பாலவல்ல வென்பது கூறப்பட்டது' என்றவை யும், இங்கு நோக்கத்தக்கன.

'நாயகன் அல்லன்' என உண்மைத் தன்மையை மறுத்து 'தாய்' என மற்றொரு தன்மையை ஏற்றியது, ஒழிப்பணியேனப்படும் அபவாதுதியலங் காரம்: "சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை, மறுத்துப் பிறி தாரைப்ப தவனுதி யாகும" என அதன இலக்கணங் காண்க. 'மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும், பால் மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்றாதலால், ஆண்பாற்குப் பெண்பால் உவமையாயிற்று. இனி, நாயகன் அல்லன் என்று எடுத்து, நமது அரசன் அல்லவன் என்று உரைப்பாரு முளர்.

'இனிது பேணி' என்ற பாடத்திற்கு - தாயென்ற குடிகள் தீங்கு நீக்கும் படி அவர்களே இனிமையாக விரும்பிப் பாதுகாப்பா யென்று உரைக்க. 'அம்மரம்பிகவாவண்ணம்,' 'தியனகண்டபோது' என்பன பிரதிபேதம். எனும் - எனினும் என்றதன் மரூஉ. (கூ)

கூரு. இறத்தலும்பிறத்தருணுமென்பனவிரண்டும்யாண்டுந்
திறத்துளிநோக்கிற்செய்தவினைதரத்தெரிந்தவன்றே
புறத்தினியுரைப்பதென்னேபூவின்மேற்புனிதற்கேனு
மறத்தினதிறுதிவாழ்நாட்கிறுதியஃதுறுதியென்ப.

(இ - ன்.) திறத்தலுளி நோக்கின் - உண்மையான வழியாற் பார்க்கு மிடத்து,—இறத்தலும் பிறத்தல்தானும் என்பன இரண்டும் - (உலகத்துப் பிராணிகள்) சாதலும் பிறத்தலும் என்ற சொல்லப்படுவனவான இரண்டு தன்மைகளும், யாண்டும்-எப்பொழுதும், செய்த வினை தர தெரிந்த அன்றே- (அந்தப் பிராணிகள்) செய்த கருமங்கள் தம்பயனும் உண்டாக்க உண்டாவன வன்றே ? பூவின்மேல் புனிதற்கு எனும் - (திருமாலின் நாபித்) தாமரை மலரில் தோன்றிய பரிசுத்த குணமுடையவனான (படைத்தற் கடவுளாகிய) பிரமதேவனுக்கே யானாலும், அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி - தரு மத்தை விட்டுத் தவறுதல் ஆயுளின அழிவுக்குக் காரணமாம்: அஃது (வாழ் நாட்கு) உறுதி - தருமத்தை விட்டுத் தவறுதல் ஆயுளுக்கு உறுதியைச் செய் வதாம். என்ப - என்று (பெரியோர்) கூறுவர்; (எனவே), இனி—, புறத்தி உரைப்பது என்னே - வேறுகவுள்ளவர்களைப் பற்றிக் கூறவேண்டுவது யாது? [யாதுமில்லை யெனறபடி]; (எ - று.)

திறம் - தத்துவம். 'உளி' என்றது, மூன்றும் வேற்றுமையின் பொருள் படுவதோ ரிடைச் சொல்; திருக்குறளில் ''இயல்புளிக் கோலோச்சு மன்ன வன்'' என்ற விடத்திற போல. தெரிந்த - முற்ற. அனறே தேற்றம். 'அஃது' எனச் சுட்டியது, அறத்தை ஈற்றடியில், காரணங்கள் காரியங்க ளாக உபசரிக்கப்பட்டன. தருமத்தின வரம்பைக் கடந்து நடத்தல் ஆயு ளின் அழிவுக்கும், அவ்வரமபு நடவாமல் அதில் நிற்றல் ஆயுளின் வளர்ச்சிக் குக் காரணமாமென்க. இனி, 'அஃது உறுதி' என்பதற்கு - அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி என்னும் அது நிச்சய மென்று உரைப்பாரு முளர். 'புறத்தினியுரைப்ப தென்னே' என்று தண்டாபூபிகாநியாய மெனப்படும் கைமுதிக நியாயத்தைக் கொண்டு சாதித்தது, தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி யென்னுங் காவ்யார்த்தாபத்தியலங்காரம். (கூ)

ஙசு. ஆக்கமுங்கேடுந்தாஞ்செயறத்தொடுபாவமாய
போக்கிவேறுண்மைதேறார்பொருவருமபுலமைநூலோர்
தாக்கினவொன்றேடொன்றுதருக்குமுஞ்செருவிற்றக்கோய்
பாக்கியமன்றியொன்றும்பாவத்தைப்பற்றலாமோ.

(இ - ன்.) ஒன்றோடு ஒன்று தாக்கின தருக்கு உறும் - (பிராணிகள்) ஒன்றோடொன்று தாக்கியனவாய்க் களிப்படைதற்கிடமான, செருவில் -

போரில், தக்கோய் - பிறந்தவனே!—ஆக்கமும் கேடும்* - செல்வமடைதற்குக் காரணமும் வறுமையடைதற்குக் காரணமும், தாம் செய் அறத்தொடு பாவம் ஆய போக்கி - அவ்வுயிர்கள் செய்த புண்ணியமும் பாவமும் ஆகிய வற்றைத் தவிர்த்து, வேறு உண்மை - வேறு இரகசியமே, பாருவு அரும் புலமை நூலோர் - ஒப்பற்ற தேர்ந்த அறிவைத் தரும் நூல்களில் வல்லவர் கள், தேறார் - அறியார்; (ஆகவே), பாக்கியம் அன்றி பாவத்தை ஒன்றும் பற்றல் ஆமோ - செல்வத்திற்குக் காரணமான நல்வினையைச் செய்வதல்லா மல் அதற்கு மாறாக வறுமைக்குக் காரணமான தீவினையைச் சிறிதேனும் கைக்கொள்ளலாமோ? [கொள்ளலாகாது என்றபடி]; (எ - று.)

ஆய - இறந்தகாலப் பலவின்பாற் பெயர். முதலடியில் ஆக்கத்திற்குக் காரணம் அறமும், கேட்டிற்குக் காரணம் பாவமுமாம் என முறைநிரனிறைப் பொருள்தோள் காண்க.* காரணங்கள் காரியங்களாக உபசரிக்கப்பட்டன புலமை - பாண்டித்யம். "தாக்கின ஒன்றோடு ஒன்று தருக்கு உறும்" என்ற தைத் தனிவாக்கியமாக்கி, (அறமும் பாவமும்) ஒன்றோடொன்று பகைமை கொண்டு மாறுபடும் என்றலும் அமையும்; அன்றி, தக்கோய்! (அறமும் பாவ மும்) ஒன்றோடு ஒன்று தாக்கித் தருக்குற்றுச் செருச் செய்கையில் (அறிவு டையோர்) பாக்கியத்தைப் பற்றுவதல்லாமற் பாவதையைச் சிறிதேனும் பற்ற லாமோ வென்று உரைத்தலுந் தகும்; இதனை வாலி சுக்கிரீவ புத்தத்திற் பெருமாள் கொடியவனை வாலியை ஆகரியாமல் நல்லவனை சுக்கிரீவனை ஆதரித்ததுபோலக் கொள்க 'பாக்கியமன்றி மற்றும் பாவத்தை' எனவும் பாடம். (கூசு)

கூஎ. இன்னதுதகைமையென்பவியல்புளிமரபினெண்ணி
மன்னரகிபற்றியென்கண்வருவழிமாரிக்காலம
பின்னுறமுறையினுன்றன்பெருங்கடற்சேனையோடுந்
தன்னுகிபோதியென்றுன்சுக்கரனவனுஞ்சொல்வான்.

(இ - ள்.) இன்னது தகைமை என்ப - கீழ்க்கூறிய இது (அரசர்க்குத்) தக்க முறைமையா மென்று (அறிந்தோர்) கூறுவர்: (ஆகலால்), இயல்பு உளி - (நூல்களிற் கூறிய) இயல்பினுல், மரபின எண்ணி - முறைப்படி ஆலோசித்து, மன் அரசு இயறறி - சிறப்பாக அரசாட்சியைச் செய்து, வரு வழி மாரி காலம் பின் உற - இனி வரும் முறைமையி லுள்ளதான மழைக் காலம் கழிந்த பின்பு, முறையின உனதன பெருங் கடல் சேனையோடும் - ஒழுங்காகவுள்ள உனது பெரிய கடல்போற் பரந்த சேனையுடனே, என் கண் தன்னுகி - என்னிடம் வரக்கடவாய்; போதி - இப்பொழுதே செல்வா யாக, என்றுன் - என்று (சுக்கிரீவனை நோக்கிக்) கூறினை, சுக்கரன - அழ கியவனை இராமபிரான்; (அதுகேட்டு), அவனும் சொல்வான - அச்சுக்கிரீ வனும் கூறுவான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

'என்கண் வருவழி மாரிக்காலம் பின்னுற' என்பதற்கு என்னிடத்தில் நீ வரும்பொழுது மழைக்காலம் கழிந்திடுக: முறையின் - அதன் பின்பு

என்று உரைத்தலுமாம். அன்றி, 'மாரிக்காலம் பின் உற எண்கண் வருவழி உன் தன் மூறையின் பெருங்கடற்சேனையோடும் துன்னுதி' என்று மொழி மாற்றி, மழைக்காலங் கழிந்த பின்பு நீ என்னிடம் வரும்போது உனது ஆளுகையின் கீழ்ப்பட்ட பெரிய கடல்போன்ற சேனையுடன் வருவாயாகவென்று உரைத்தலும் தகும். முறையின் துன்னுதி - (நான் உனக்கு உதவி செய்த பின்னர் நீ எனக்கு உதவிசெய்யவேண்டிய) முறைமையின்படி வருவாய் என்றலுமாம். "பின்னுவ" என்ற பாடத்திற்கு - மழை நாட்கள் கழிவன வாதல் வேண்டுமென்க. பலஇடங்களிலும் அலைந்துதிரிந்து பிராட்டியைத் தேடுதற்கு மழைக்காலம் இனியதன்றாதலால், அதுகழிந்தபின்பு சேனையுடன் வருக வென்றான். இங்கு "மாரிக்காலம்" என்றது - ஆடிமுதலிய நான்கு மாதங்களென முதனூலுரைகளால் விளங்கும் இராமன் என்ற திருநாமம் தனது கட்டழகினைப் பிறர் மனத்தைக் களிக்கச்செய்பவனென்ற பொருள் படுதலால், சுந்தர னென்றதை அதன் பரியாயநாம மென்னலாம். ஸுந்தரன் - வடசொல். "இன்னவை" என்பது பிரதிநிதேசம். (கூஎ)

[கிஷ்கிந்தாநகரத்தினுள் வந்துவசிக்கும்படி இராமனைச் சுக்கிரீவன் பிரார்த்தித்தல்.]

கூஅ. குரங்குறையிருக்கையென்னுங்குற்றமேகுற்றமல்லா
லரங்குறுதுறக்கநாட்டுக்கரசெனலாயதன்றே
மரங்கிளரருவிக்குன்றம்வள்ளனீமனத்தினெம்மை
யிரங்கியபணியாஞ்செய்யவிருத்தியாற்கின்னுளெம்பால்

(இ - ன்.) வள்ளல் - வண்மைக்குணமுடையவனே!—மரம் கிளர் அருவி குன்றம் - மரங்கள் செழித்துவளரப்பெற்றதும் நீரருவிகளே யுடையதுமான (நாங்கள்வசிக்கின்ற) கிஷ்கிந்தகிரி, குரங்கு உறை இருக்கை எனலும் குற்றமே குற்றம் அல்லால் - குரங்குகள் வசிக்கின்ற இடமாகு மென்னும் ஒரு குற்றத்தை யுடையதே யல்லாமல், (மற்றைப்படி செல்வ இன்பங்களால்), அரங்கு உறு துறக்கம் நாட்டுக்கு அரசு எனல் ஆயது அன்றே - சபைகள் நிறைந்த சுவர்க்கலோகத்தினும் மேம்பட்டதென்று சொல்லத்தக்க தாகிய தன்றோ? (ஆதலால்), நீ—, மனத்தின் எம்மை இரங்கிய பணி யாம் செய்ய - உன் திருவுள்ளத்தில் எங்கள்பக்கல் இரக்கங்கொண்டு கட்டளையிடுங் காரியங்களை யாம் செய்யுமாறு, இல் நாள் எம்பால் இருத்தி - சிலதினங்கள் (அந்த) எமது இடத்தில் வந்து வசிப்பாயாக; (எ - று)—ஆல் - அசை.

அரங்கு - சுதர்மை முதலியன; ரங்கம் என்ற வடசொல்லின் விகாரம்; கர்த்தகஞ் செய்யுமிட மென்ற பொருளும் இதற்கு உண்டு அரசு - அரசனுறையுமிடம் [ராஜதானி] என்றுகொண்டு, சுவர்க்கலோகத்திற்கு இராஜதானியான அமராவதி நகரமென்று உரைப்பாரு முளர். நிலவள நீர்வளச் செழுமைகொண்டு வாசத்திற்குச்சிறந்த இடமாமென்றற்கு, 'மரங்கிளரருவிக்குன்றம்' என்றான். அன்றே - தேற்றம். (கூஅ)

கூகூ. அரிந்தமனின்னையண்மியருளுக்குமுரியேமாகிப்
பிரிந்துவேறெய்துஞ்செல்வம்வெறுமையிற்பிறிதொன்றுமோ
கருந்தடங்கண்ணினுளோநாடலாங்காலங்காறு
மிருந்தருடருகியெம்மோடென்றடியிணைபின்வீழ்ந்தான்.

(இ - ள்.) அரிந்தம - பகைவர்களை யழிப்பவனே! நின்னை அண்மி - (காங்கள்) உன்னைச்சரணமடைந்து, அருளுக்கும் உரியேம் ஆகி - (உனது) கருணைக்கும் உரியவர்களாயிருந்து, பிரிந்து - (உன்னை) விட்டுப்பிரிந்து, வேறு எய்தும் - தனியே அனுபவிக்கின்ற, செல்வம் - செல்வமான து, வெறுமையின பிறிது ஒன்று ஆமோ - ஏழ்மையினும் வேறுன்தொன் றுகுமோ? [ஆகாது]; (ஆகவே) கருந தடங் கண்ணினுளை நாடல் ஆம் காலம் காறும் - கரிய பெரிய கண்களையுடையவளான பிராட்டியைத் தேடுதற்கு ஏற்றகாலம் வருமளவும், எம்மோடு இருந்து அருள்தருதி - (நீ கிஷ்கிந்தா காரத்தில்) எங்களுடன வசித்தருள்வாய், என று - என்று சொல்லி, அடி இணைபின் வீழ்ந்தான் - (இராமபிரானது) உபயபாதங்களில் விழுந்து வணங்கினன், (சுக்ரீவன்); (எ - று)

நாங்கள் உன்னையடைந்து உனது கருணைக்கும் இலக்காகி நண்பான பினபு உன்னைவிட்டுப்பிரிந்து தனியேயனுபவிக்குஞ் செல்வம் வறுமையின் பாற்படுமேயனறி இன்பத்தராதாதலால் மழைக்காலங்கழிபுமனவும் நீயும் எங்களுடன கிஷ்கிந்தாகாரத்தினுள வந்து வசிப்பாயாக வென்று பிரார்த்தித்து இராமனது திருவடிகளில் விழுந்து வணங்கினன சுக்ரீவன என்பதாம். அரிந்தமன - வடசொல்; அரி - பகைவர். அண்மி, அண்மு - பருகி. அருளுக்கும் உரியேம், உமமை - இறந்தது தழீய எச்சத்தேறு, உயாவு சிறப்பு. வெறுமையிற பிறிதொன்றுமோ - பெறறும் பெறாதே போலாம் என்றபடி. 'வறுமையிற்பிறிதனறுமால்' என்ற பாடத்திறகு - வறுமையினும் வேறனறுகு மாதலால் என்று பொருள். இவ்வு 'அரிந்தம' என்ற விளித்தது, வாலியைக்கொன்ற திறத்தில் ஈடுபட்டதனால. காறு - எல்லைகுறிப்பதோர் இடைச்சொல். (கூக)

[இதுமுதல் ஐந்து கவிகள் - இராமபிரான் அதனை மறுத்துக்கூறல்.]

சo. ஏந்தலுமிதனைக்கேளாவிண்ணிளமுறுவலுறை
வேறுதமையிருக்கையெம்போல்விரதிபர்விழைதற்கொவ்வா
போந்தவணிருப்பினெம்மைபோற்றலேபொழுதுபோமா
றேர்ந்தினிதியற்றுமுன்றனரசியற்றருமருதீர்தி.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ள்.) ஏந்தலும் - பெருமையிற் சிறந்தவனான இராமபிரானும்,—இதனை கேளா - இந்த வார்த்தையைக் கேட்டு—இன்ன இள முறுவல் காற - இனிமையான புன்சிரிப்பு உண்டாக,—(சுக்ரீவனை நோக்கி)—வேந்த அம்ம இருக்கை - அரசர்கள் வசித்தற்கு உரிய நகரத்தினுள்ளிடல்லன், எம்

போல் வீரதியர் விளிழதற்கு ஒவ்வா - எம்மைப்போன்ற வீரதாரட்டான மூடையோர் விரும்பிவசித்தற்குத்தகாதனவாம்; (அன்றியும்), அவண்போந்து இருப்பின் - அவ்விடத்தில் [கிஷ்கிந்தாநகரத்தினுள்] யாம் வந்து வசித்தால், எம்மை போற்றவே பொழுது போம் - எம்மை உபசரித்தலிலேயே (உனக்குப்) பொழுதுகழிந்திடும்; ஆல் - ஆதலால், தேர்ந்து இனிது இயற்றும் உன் தன் அரச இயல் தருமம் தீதி - (நீ) ஆராய்ந்து இனிமையாகச்செய்யவேண்டிய அரசாட்சிக்கு உரிய தருமத்தினைறும் தவறியவனுவாய்; (எ - று.)

இச்செய்யுளிலுள்ள 'எத்தலும்', 'இதனைக்கேளா', 'இன்னினமுறுவல் நாற' என்ற மூன்றும், மேல் சூசு - ஆங் கவியில் வருகின்ற 'எனருன' என்னும் முற்றைக் கொள்ளும்.

"வீரதியர்" என்றது, வானப்பிரஸ்தாச்சிரமத்திற்கு உரிய வீரதங்களையனுட்டிப்பவரை. வானப்பிரஸ்தாச்சிரமமாவது - இல்லந்துறந்து மனைவியோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ்செய்யும் நிலையாம். எம்மைப் போற்றவே பொழுதுபோம் - எம்மை உபசரிப்பதற்கே பொழுது சரியாய்ப் போம்; இராசாங்ககாரியம் பார்ப்பதற்குப் பொழுதில்லைபா மெனக. வாதி என்ற வடசொல், விரதி யென விகாரப்பட்டது. 'சேர்ந்தனை நிற்கமுண்பவ ரசியற்றருமந்தீதி' என்றும் பாடமுண்டு. (சு0)

சக. ஏழிரண்டாண்டியான் போந்திருவனத்திருக்கவென்றேன்
வாழியாயரசர்வைகும்வளநகர்வைகலில்லேன்
பாழியந்தடந்தோள்வீரபார்த்திலீபாலுமன்றே
யாழிசைமொழியோடன்றியாணையின்பமென்றேனே.

(இ - ன்.) வாழியாய் - வாழ்வையுடையவனே!—ஏழ் இரண்டு ஆண்டு - பதினுலகுவருஷகாலம், யானபோந்து எரி வனத்தி இருக்க - நானசெனறு வெவ்வியகாட்டில் வசிப்பதாக, எனறேன் - (கைகேயியின முன்னிலையில்) உடனபட்டுக்கூறிவந்தேன்: (ஆதலால்,அப்பதினுலைக்கு வருஷகாலத்திற்குள்), அரசர் வைகும் வளம் நகர் வைகல் ஒல்லேன - அரசர்கள வசிப்பதற்குஉரிய செல்வவளமுள்ள நகரத்தினுள் வசித்தற்கு உடனபடேன்; (மற்றும்), பாழி அம் தட தோள் வீர - வலிமைபை யுடைய அழகிய பெரிய தோளகளையுடைய வீரனே! யாழ் இசை மொழியோடு அனறி வீணைகானம்போலினிய சொற்களையுடையளான சீதையோடுகூடி யல்லாமல், யான்உறைஇனபம - நான் (நகாதத்தினுளவந்து) வசித்தி அடையும் இன்பம், என்னே - யாதோ? பார்த்திலே போலும - (இதனை நீ) ஆராய்ந்து (பார்த்தாயில்லை) போலும்; (எ - று.)—அனறே - ஈறறசை.

இங்குக்குறித்த விஷயம், வாலியை ஸம்ஸ்காரித்தானபின்பு, கிஷ்கிந்தா புரியினுளளே எழுந்தருளிச் சுக்ரீவனுக்கு முடிசூட்டி எல்லாரையும் மகிழ்விக்கவேணடு மென்று வேண்டிய அறுமாலுக்கு ஸ்ரீராமன் "பதினுன்கு வருஷங்கள் கழியுமளவும் யான நகரினுள்ளாவது, ஊரினுள்ளாவது புகேன்; இவ்வாறு என் தந்தையின கட்டளையாதலால், அதனை ஒருகாலும் தவறேன்.

ஆதலால், நீங்களெல்லாருஞ் சேர்ந்து சுக்கிரீவ பட்டாபிஷேகத்தைக் கிஷ்கிந்தையில் நடத்தக் கடவீர்'' என்று அருளிச்செய்ததாக ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் வந்துள்ளது.

எரி வனம்-வெயிலின் கடுமையால் தீப்போற்சுடுகின்ற வனம்: தீப்பற்றியெரியும் வனம். என்றேன், எல் - பகுதி. 'வனத்திருக்கவெனறேன்' என்ற பாடத்திற்கு - வனத்திலிருப்பேனாக வென்று சொனனேனென்ற பொருள். 'வாழியாய்' என்ற விளிமேலுறற பெயரில், வாழ் - முதனிலைத் தொழிற் பெயரென்றும், இ - சாரியை பெனறும் கொள்ளுதல் அமையும். யாழிசை மொழி - உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அனமொழித்தொகை. (சக)

சஉ. தேவிதேவறகுகண்வைத்தசேமத்துளிருப்பதான்ற
ஞெலிபோற்றுணைவரோடுமளவிற்கரியவின்ப
மேவினனிராமனென்றுலையவிவ்வெய்யமாற்ற
மூவகையுலகமுற்றுங்காலத்துமுற்றவற்றே.

(இ - ள.) 'தேவி - தனமனைவியான சீதை, வேறு - தனியாய், அரக்கன் வைத்த சேமத்துள் இருப்ப - இராவணன கொண்டுபோய் வைத்த காவலுள்ள விடத்திலே யிருக்க, இராமன தான—தன் ஆவிபோல துணைவரோடும் - தனது உயிர்போனற நண்பாகளுடனே, அளவு இடற்கு அரிய இன்பம் - அளவிடக்கூடாத (மிகவும் அதிகமான) - இனபத்தை, மேவினனன். அடைந்தான,' எனறல - எனறு (ஜனகர) சொலலுமபடியானல், ஐய - அப்பா! இ வெயய மாற்றம் - இக்கத கொடிய சொல், மூவகை உலகம முற்றும காலத்தும முற்ற வற்றே - (மேல கீழ நடி என) மூனறவகைப்பட்ட உலகங்களும அழியுங்காலத்திலும அழியவல்லதோ? [அந்தப் பெரும்பழி எனறெனறைக்கும நீஙகா தெனறபடி]; (எ - று.)

மூவகையுலகமுற்றுங்காலத்தும - கல்பாந்த காலத்திலும், 'சிறையிடையிருப்ப' எனறும் பாடமுணடு. ஐய எனபதை 'ஐ எனனும உரிச்சொல்லடியாப் பிறந்த குறிப்புபபெயரெச்ச மெனக கொண்டு, வியகத்தக என்றலுமாம். வற்று - வனமை யென்னும பண்பிடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. (சஉ)

சஎ. இல்லறந்துறந்திலாதோரியற்கையையெதிர்ந்துபோரின்
வில்லறந்துறந்துவாழ்வேற்கின்னனமேண்மையில்லாச்
செல்லறம்புரிந்துநின்றதீமைகடருமாறு
கல்லறந்துறந்தநோன்பினவையறதோற்பலென்றான்.

(இ - ள்.) இல் அறம் துறந்திலாதோர் இயற்கையை எதிர்ந்து - இருகஸ்தாச்சிரம தருமத்தைக் கைவிடாதவர்களுடைய இயல்புக்கு மாறுபட்டு, போரின் வில் அறம் துறந்து - யுத்தத்தில் வில்லேக்கொண்டு செய்யுந் தருமத்தைச் செய்யாது விட்டு, வாழ்வேறகு - வாழ்பவனுடைய எனக்கு, இன்னன -

இவைபோன்றவை '[நகரத்தினுள் வந்து வசித்து நண்பர்களோடு இனிது வாழ்தல் முதலியன], மேன்மை இல்லா சில் அறம் - சிறப்பில்லாத அற்ப வொழுக்கங்களாம்; புரிந்து நின்ற தீமைகள் தீரும் ஆறு - (மனைவியைப் பிரிதற்குக் காரணமாக யான்) செய்துள்ள தீவினைகள் நீங்கும்படி, நல் அறம் அறந்த நோனபின் - நல்ல தருமமாகிய இல்லறத்தைத் துறந்து அனுட்டிக்கும் வானப்பிரஸ்தாச்சிரம தருமங்களால், நவை அற நோற்பம் - குற்றமில்லாமல் தவஞ்செய்வேன், என்றான - என்று கூறினன். (இராமன); (எ - று.)

எவ்வகைத் தீக்கருமஞ் செய்தாயினும் தனது தருமபத்தினியைக் காத்தல் வேண்டுமென்பது, கிருகஸ்தாச்சிரமதருமம்; தான் மனைவியைப் பாதுகாவாது விட்டமை பற்றி 'இல்லறத்தறந்திலாதோ நியற்கையை யெதிர்ந்து' என்றான். 'போரின் வில்லறத்தறந்து வாழ்வேற்கு' என்றது, தன்மனையாளைக் கவர்ந்த மாற்றாரைப் பொருது தொலைக்காமல் தான உயிர் வாழ்தல் பற்றி, தானபூண்ட மனிதகேஷத்திற்கு ஏற்றபடி ஒழுகுபவனதலால், தனது நிஜரூபமான தெய்வத்தனமையைப் பாராட்டாமல 'புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு கோற்பல' எனறான. இனி, புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு (இராவணன) செய்த நிஷ்குகள ஒழியுமபடி யெனறலுமாம. ''அற னெனப்பட்டதோ யில்வாழ்கை'' எனறபடி இல்லறம் சிறததலால், அது, 'நல்லறம்' எனப்பட்டது: ''இலலறமல்ல நல்லறமனறு'' எனறார் ஔவை யாரும். இங்கு - 'அதனோ டறந்த நோனபு' எனறான. வானப்பிரஸதாச்சிரமத்தை திருக்குறளில் ''அறத்தாறறி னில்வாழ்கை யாறறிற புறததாற் றில்'' என்றவிடத்தில் இல்லை விட்டு வனத்துச் செல்லும் நிலையை இல்லறத திற்குப்புறமாகிய நெறியென்றமை காண்க. அந்நிலையின் வகைபலவறறுள இல்லந்துறந்து வனத்துச் சென்று மனைவியோடன்றித தனித்துச் செயயுந் தவம், இங்குக் குறிக்கப்பட்டது. நோற்பல், அல் - தனமை யொருமை விகுதி. 'இயற்கையை யிழந்து போரின, வில்லறந்தறந்து வாழ வெளிஞனை விளிவில் வீர', 'நல்லறம் தொடர்ந்த நோனபின்' எனறும பாடல் காணப்படுகின்றது. (சூ)

சச. அரசியற்குரியயாவுமாற்றுழியாற்றியான்ற
இரைசெயற்குரியசேனைக்கடலொடுநிங்கணென்கின்
விரசுகவென்பனின்னேவேண்டினென்வீரவென்ரு
னுரைசெயற்கெளிதுமாகியரிதுமாமொழுக்கினின்ரூன்.

(இ - ன்.) வீர - வீரனே! அரசு இயற்கு உரிய யாவும் - அரசாட்சிக்கு உரிய செயல்களே யெல்லாம், ஆற்று உழி ஆறறி - செய்யவேண்டிய முறைப்படி செய்து, ஆன்ற இரை செயற்கு உரிய சேனை கடலொடும-பெரிய அலைகள் வீசுதற்கிடமான கடல்போனற சேனையுடனே, நிங்கள் நான்கின என் பால் விரைக - நான்கு மாதங் கழிந்தவளவில் என்பக்கல் வந்து சேர்வாயாக; 'நின்னே வேண்டினேன - உன்னே (இங்ஙனம்) வேண்டுகினறேன், என்றான் என்றும் கூறினை: (யாவனெனில்),—உரைசெயற்கு எளிதும் ஆகி.

சொல்லுதற் கெளியதுமாய், அரியதும் ஆம் - (அனுட்டித்தற்கு) அரியதுமான, ஒழுக்கில் - நல்லொழுக்கத்தில், நின்றுன் - சலியாது நிலைநிற்பவனை இராமபிரான்; (எ - று.)

. சேனையிலுள்ளாரது வரிசையொழுங்குகளைச் சேனையாகிய கடலுக்கு அலையாகக் கருதுக. திங்கள் - சந்திரன்'; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாசமென்று சாந்த்ரமாகரீதியாய்க் கணக்கிடுதல் பற்றி, திங்களென்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று: இலக்கணை என்பான என்றுபிரித்து, என்பதாக என்று உரைத்தலுமாம். நல்லொழுக்கம் சொல்லுதற்கு எளிதாயினும் அனுட்டித்தற்கு அரியதாதலால், 'உரைசெயற்கெளிதுமாகி யரிதுமாமொழுக்கு' எனப்பட்டது. "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என்றபடி வனவாசஞ் செய்வேனென்பது முதலிய விரதங்களைப்பற்றிய நியமவார்த்தைகளைச் சொல்லுதல் எவர்க்கும் எளிதாயினும் அந்நியமப்படி தவறுதல் நடத்தல் எவர்க்கும் அரிதாதலும் உணர்க. ஒழுக்கு - ஒழுகு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'அரசியல்,' 'வீரசுக' எனப் போலியாகவும் பாடங் காணப்படுகின்றது. (சச)

[சுக்கிரீவன் உடன்பட்டுச் சொல்லுதல்.]

சடு. மறித்தொருமாற்றங்கூறுன்வானுயர்தோற்றத்தன்னுன்
குறிப்பறிந்தொழுகன்மரீதாகோதிலராதலென்னு
நெறிப்படர்கண்கள்பொங்கிநீர்வரநெடிதுதாழ்ந்து
பொறிப்பருந்துன்பமுன்னுக்கவிக்குலத்தரசன்போனுன்.

(இ - ன்.) (அவ்வார்த்தைகளைக்கேட்டு), கவி குலத்து அரசன் - குரங்குகளின் கூட்டத்திற்குத் தலைவனுன சுக்கிரீவன், மறித்து ஒரு மாற்றம் கூறுன் - (அதனைத்) தடுத்து ஒருவார்த்தையும் சொல்ல மாட்டாதவனுய், வான உயர் தோற்றத்து அன்னுன் குறிப்பு அறிந்து ஒழுகல் கோது இலர் ஆதல் என்னு - (வான்போலுயர்ந்த தவவேடத்தையுடைய அவரிராமபிரானது குறிப்பை யுணர்ந்து அதன்படி நடத்தலே குற்றமில்லாதவராகுதலாம்' என்று எண்ணி, படர் கண்கள் நீர் பொங்கி நெறி வர - பரந்த தன்கண்களினின்று நீர்பொங்கித் தொடர்ச்சியாய் ஒழுக, நெடிது தாழ்ந்து - நீளமாக [ஸாஷ்டாங்கமாய்விழுந்து] நமஸ்கரித்து, பொறிப்பு அருந்துன்பம் உன்னு - எழுதமுடியாத [மிகவும் அதிகமான] துன்பத்தை மனத்திற் கொண்டு, போனுன் - (கிஷ்கிந்தாநகரத்தை நோக்கிச்) சென்றுன்; (எ - று) மாதோ - அசை.

திருக்குறளில் "வானுயர்தோற்றம்" என்றதும் அதற்குப் பரிமேலழகர் 'வானம்போலுயர்ந்த தவவேடம்' என்று பதப்பொருளுரைத்து 'வானுயர் தோற்றமென்பது "வான்றோய்குடி" என்றற்போல இலக்கணை வழக்கு' என்றதுங்காண்க. 'வானுயர்கொற்றத்தன்னுன்' என்றபாடத்திற்கு வானத்தையளாவியுயர்ந்த வெற்றியையுடைய அவனென்னலாம்; கொற்றம், வாலி வதத்தாலாகியது. குறிப்பு - குறித்த கருமம். பொறிப்பருந் துன்பம் -

இராமபிரானைப் பிரிந்ததனாலாகிய சோகம்; இராமபிரானது தோலிரக சோகத் தைக் கருதிப்பதனாலாகிய சோகமுமாம். இதனே, கண்ணீர் பொங்கி வருதற் குக் காரணம். 'பொறுப்பருந் தன்பம்' என்று பாடமோதி, பொறுக்கமுடி யாத துயர மென்று உரைப்பாரு முளர். (சஎ)

[இராமன் அங்கதனுக்கு அறிவுகூறல்.]

சசு. வாலிகாதலனுமாண்டுமலரடிவணங்கினானே
நீலமாமேகமன்ன நெடியவனருளினோக்கிச்
சீலநீயுடையையாதலிவன்சிறுதாதையென்னு
மூலமேதந்தநுந்தையாமெனமுறையினிற்றி.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வாலி காதலனும் ஆண்டு மலர் அடி வணங்கினானே - வாலி யின்மகனன அங்கதனும் அப்பொழுது இராமபிரானது தாமரைமலர்போன்ற திருவடிகளே நமஸ்கரிக்க, அவ்வங்கதனே நீலம் மா மேகம் அன்ன நெடியவன் அருளின் நோக்கி - நீலநிறமுடைய சிறந்த மேகத்தைப் போன்ற பெரியவ னன இராமபிரான் கருணையோடு பார்த்து, நீ சீலம் உடையை ஆதல் - நீ நல்லொழுக்கமுடையனுவது (எங்ஙனமெனின்),-இவன சிறு தாதை என்னு- இச்சுக்கிரீவனே (உனக்குச்) சிறிய தந்தையென்று கருதாமல், மூலமே தந்த நுந்தை ஆம் என - உன்பிறப்பிற்குக் காரணமான உன்னைப்பெற்ற தந்தை யைப்போலவே கொண்டு, முறையில் நிற்றி - அவன்கட்டளையில் நிற்பா யாக; (எ - று.)—'நோக்கி' என்றது, அடுத்த செய்யுளில் 'கூறி' என்பத னோடு தொடரும்.

இனி, பினனிரண்டடிக்கு—நீ சீலம் உடையை - நீ நல்லியல்பையுடை யாய்; ஆதல் - ஆதலால், இவன் சிறுதாதை எனனு - இச்சுக்கிரீவனே உனக் குச்சிறியதந்தையென்று கருதாமல் மூலமே தந்த நுந்தை ஆம் என - முன்பு உன்னைப்பெற்ற தந்தையான வாலியைப் போலவே கொண்டு, முறையில் நிற்றி - முறைப்படி அவனுக்கு அடங்கி நிற்கக்கடவாய் என்று பதவுரை கூறலுமாம். மூலமேதந்த நுந்தை - ஸாகூாத்பிதா. நிறமும், மையாறு கரு தாது கருணைமழை பொழிதலும், தாபத்தை யொழிக்குங் குளிர்ந்த தோற்ற மும்பற்றி, 'நீலமாமேகமன்ன நெடியவன்' என்றார். நெடியவன்-பெருமைக் குணமுடையான் (சசு)

[இராமன் அங்கதனுக்கும் அனுமானுக்கும் விடையளித்தல்.]

சஎ. என்னமற்றினியகூறியேகலற்றொடரவென்றான்
பொன்னடிவணங்கிமற்றப்புகழுடைக்குரிசில்போனான்
பின்னர்மாருதியைநோக்கிப்பேரொழில்வீரனீயு
மன்னவனரசுக்கேற்றதாற்றுதியறிவினென்றான்.

(இ - ள்.) என்ன மற்று இனைய கூறி - என்றும் மற்றும் இத்தன்மை யனவான வார்த்தைகளையுஞ் சொல்லி, அவன் தொடர ஏது என்றான் - அச்

சுக்கிரீவனுடனேகூடச் செல்வாயாகவென்று கூறியருளினான்; மற்று-உடனே, அ புகழ் உடை குரிசில் - கீர்த்தியையுடைய பெருமையிற் சிறந்தவனை அவ்வங்கதன், பொன் அடி வணங்கி - (இராமபிரானது) பொன்போலச் சிறந்த திருவடிகளை நமஸ்கரித்து, போனான் - (கிஷ்கிந்தா நகரத்திற்குச்) சென்றான்; பின்னர் - பின்பு, (இராமபிரான்), மாருதியை நோக்கி - அநுமானைப் பார்த்து, 'பேர் எழில் வீர - மிக்க அழகையுடைய வீரனே! கியும்—, (சென்று), அன்னவன் அரசுக்கு ஏற்றது - அச்சுக்கிரீவனது அரசாட்சிக்கு வேண்டிய காரியத்தை, அறிவின் ஆற்றால் - (உனது) அறிவினாற் செய்வாயாக', என்றான் - என்று அருளிச்செய்தான்; (எ - று.)

சுந்தரனென்று ஒருபெயர் பெறுமாறு அழகிற் சிறத்தலால், அநுமானை, 'பேரெழில்வீர' என விளித்தல் தகும் இனி, பேர் எழில் வீர - மிக்க எழுச் சியையுடைய வீரனே யென்றுங் கொள்ளலாம்; எழுச்சி - உயர்ச்சி, பெரு வடிவங்கொள்ளுதல்: இராமலக்ஷ்மணர் முன்னிலையில் அநுமான் பெருவடி வங்கொண்டு காட்டியமை, மராமரப் படலத்திற் கூறப்பட்டது. குரிசில் - ஆண்பாற் சிறப்புப் பெயர். (எ)

[அநுமான் 'இங்கிருந்து பணிசெய்வேன்' என்றல்.]

எஅ. பொய்த்தலிலுள்ளத்தன்புபொழிகின்றபுணர்ச்சியானு
மித்தலையிருந்துநாயேனையினவெனக்குக்கக்க
கைதைதொழில்செய்வேமெனின்றுகழலிணைவணங்குங்காலை
மெய்த்தலைநின்றவீரனிவ்வுரைவிளம்பிவிட்டான்.

(இ - ள்.) அன்பு பொழிகின்ற - அன்பை மிகுதியாக வீளக்கின்ற, பொய்த்தல் இல் உள்ளத்து புணர்ச்சியானும் - பொய்படுதலில்லாத மனக் கலப்பை யுடையவனான அநுமானும், (இராமபிரானை நோக்கி), 'நாயேன் - அடியேன், இ தலை இருந்து - இவ்விடத்திலே இருந்து, ஏயின - (உன்னால்) கட்டளை யிடப்பட்டனவும், எனக்கு தக்க - எனது நிலைமைக்கு ஏற்றனவு மான, கைதைதொழில் - அடிமைத் தொழில்களை, செய்வேன - (உனக்குச்) செய்வேன்,' எனறு - எனறுசொலலி, கழல் இணை வணங்கும் காலை - (அப் பெருமானது) உபயபாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கும்பொழுது,—மெய்த் தலை நின்ற வீரன் - சத்தியத்தில் நிலைபெற்ற வீரனான இராமபிரான், இ உரை விளம்பிவிட்டான - இந்த வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று)— அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

பொய்த்தலில் உள்ளத்துப் புணர்ச்சி - அகம் வேறு புறம் வேறுகாமல் மனப்பூர்வமான கண்பு. இனி, மூதலடிக்கு—பொய்த்தல் இல் உள்ளத்து அன்பு - பொய்படாததும் மனப்பூர்வமானதுமான அனபை, பொழிகின்ற - மிகுதியாக வீளக்கின்ற, புணர்ச்சியானும் - நண்பையுடையவனான அநுமா னும் எனறு பதவுரை கூறலுமாம். இனி 'அன்புபொழிகின்ற' என்பதற்கு - அன்பினால் வெளிப்படுங் கண்ணீரைச் சொரிகின்ற எனறு உரைப்பாரு முளர். அநுமான் இவ்வாறு கூறுதற்குக் காரணம் அவன் இராமபிரான்பக்கல்

கொண்ட புத்திப்பேருங் காதலென்பது தோன்ற 'மொய்த்தலிலுண்டாம் துன்பு பொழிகின்ற புணர்ச்சியான்' என்றும், இராமபிரான் அதனை மறுத்தலைத் தற்குக் காரணம் அப்பெருமானது நேர்மையென்பது தோன்ற 'மெய்த்தலே நின்றவீரன்' என்றுங் கூறினர். நாயேன் - நாய்போற் கடைப்பட்டவனா யான்: நாயுவமை, எளிமையைக் காட்டும். எயினன் = எயின. 'எனக்குத்தக்க' என்றது, இரட்டுறமொழிதலால், எனது அடிமைத்திறத்திற்கு ஏற்ற என்ற பொருளோடு, யான் செய்தற்கு இயன்ற என்ற பொருளையுங் காட்டும். கைத்தொழில் - சிறுதொழில், குற்றேவல். விளம்பிவிட்டான் - ஒருசொல் நண்மையது; விடு - துணைவினை: துணிவையுங் காட்டும். 'விளம்பியிட்டான்' என்பதும் பாடம். (சஅ)

[இராமபிரான் அதனை மறுத்துக்கூறல்.]

சகூ. நிரம்பினனெருவன்காத்தநிறையரசிறுதிநின்ற
வரம்பிலாததனேமற்றோர்தலைமகன்வலிதிற்கொண்டா
லரும்புவநலனுந்தீங்குமாகலினையநின்போற்
பெரும்பொறைபறிவினோரானிலையினைப்பெறுவதம்மா.

(இ - ள்.) நிரம்பினன் ஒருவன் காத்த - (அறிவு ஆண்மை பெருமை யென்னும் மூவகையாற்றலும்) நிறைந்தவனன ஒரரசன் பாதுகாத்துநின்ற, இறுதி நின்ற வரம்பு இலாத நிறை அரசு - அதனை கடையெல்லை யில்லாததும் (செல்வவளங்கள்) நிறைந்ததுமான அரசாட்சியை, மற்று ஓர் தலைமகன் - வேறோரரசன், வலிதின் கொண்டால் - வலியக் கைப்பற்றிக் கொண்டால், (அவ்வரசாட்சியில்), நலனும் தீங்கும் அரும்புவ - நன்மைகளேயன்றித் தீமை களும் மிளைவனவாம்; ஆகலின் - ஆதலால், ஐய - அப்பர! நின் போல் பெரும் பொறை அறிவினோரால் நிலையினை பெறுவது - (அவ்வாறன சுக்கிரீவனது அரசாட்சி) பெரிய பாரத்தைத் தாங்கவல்ல அறிவையுடைய உன்னைப் போன்றவர்களாலேயே நிலைபெறக் கடவதாகும்; (எ-று.)—அம்மா- நற்றசை.

'நிரம்பினனெருவன்' என்றது, இங்கு வாலியாம். 'மற்றோர்தலைமகன்' என்றது, இங்குச் சுக்கிரீவனும். 'கொண்டான்' என்ற பாடமும் ஏற்கும். இறுதிநின்றவரம்பு - அழிவு; அஃதில்லாத தென்க. பொறை - பொறுக்கப் படுவது; பொறுத்தல் - சுமத்தல். 'பெரும்பொறை யறிவினோரால்' என்ப தற்கு - மிக்க பொறுமைக் குணத்தையும் அறிவையு முடையவர்களா லென்று பொருள் கூறலுமாம். (சக)

ரு0. ஆன்றவற்குரியதாயவரசினைநிறுவிப்பா
லேன்றெனக்குரியதாயகருமமுமியற்றற்கொத்த
சான்றவர்நின்னினில்லையாகலாற்றருமந்தானே
போன்றதோர்வேண்டுவத்தலிலேபோதியென்றான்.

(இ - ள்.) (முதலில்), ஆன்றவற்கு உரியதாய அரசினை நிறுவி - (பல குணங்களாலும்) நிறைந்தவனான சுக்கிரீவனுக்கு உரியதாகிய அரசாட்சியை (அவன்பக்கல்) நன்றாக நிலை நிற்கும்படிசெய்து, அப்பால் - பின்பு, எனக்கு உரியதாய கருமமும் என்று இயற்றற்கு ஒத்த - எனக்கு ஆகவேண்டிய தான காரியத்தையும் ஏற்றுக்கொண்டு செய்யத்தக்க, சான்றவர் - பெரியோர், நின்னின் இல்லை - உன்போல் (எவரும்) இல்லை; ஆகலால் - ஆதலால், தருமம் தானே போன்ற நீ - தருமமே வடிவெடுத்தாற் போன்றவனான நீ, யானே வேண்ட - நான் வேண்டுகின்றபடியே, அ நிலை போதி - அவ்விடத்திற்கு [சுக்கிரீவனிடத்திற்கு]ச் செல்லக்கடவாய், என்றான் - என்றி (அறுமாறுசொல்லி இராமன்) கூறினான்; (எ - று.)

ஆன்றவன் என்றதில், சால் என்றதன் மரூஉவான ஆல் - பகுதி. (80)

[அநுமான் கிட்கிந்தைக்குச் செல்ல, இராமலக்ஷ்மணர் வேறொரு மலைக்குச் செல்லுதல்.]

நிக. ஆழியானனையகூறவாணியீதாகினஃதே
வாழியான்புரிவேனென்றுவணங்கிமோருகியும்போனான்
சூழிமால்யானையன்னதம்பியுந்தானுந்தொல்லை
யூழிகாயகனும்வேறோருயர்தடங்குன்றமுற்றான்.

(இ - ன்.) ஆழியான் - சக்கராயுதத்தை யுடையவனான திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீராமன், அனைய கூற — அவ்வார்த்தைகளைச் சொல்ல,— (அதுகேட்டு), மாருதியும் - அநுமானும் — (அவ்விராமபிரானை நோக்கி), 'வாழி - வாழ்வாயாக; ஆணை ஈது ஆகின் - (உனது) கட்டளை இதுவானால், யான் அஃதே புரிவேன் - அடியேன அவ்வாறே செய்வேன்,' எனற - என்றுசொல்லி, வணங்கி - (இராமபிரானை) நமஸ்கரித்து, போனான் - (கிஷ்கிந்தா நகரத்தைநோக்கிச்) சென்றான்; தொல்லை ஊழி காயகனும் - பழமையான உலகத்திற்குத் தலைவனாகிய ஸ்ரீராமனும், சூழி மால் யானை அனைய தம்பியும் தானும் - முகபடாத்தையுடைய பெரிய யானையைப்போன்ற தன் தம்பியான இலக்குமணனும் தானுமாக, வேறு ஓர் உயர் தட குன்றம் உற்றான் - உயர்ந்த பெரிய வேறொருமலையைச் சேர்ந்தான்; (எ - று.)

ஆழியான் - (யாற்) கடலிற் பள்ளிகொள்பவனென்றும், பிரளயவெள்ளத்திற படுத்திருள்பவனென்றும், கடல்போற கருநிற முடையவனென்றும், ஆஜ்ஞாசக்காத்தை யுடையவனென்றுங் கொள்ளலாம். வாழிய என்னும் யகாரவீற்று வியங்கோள் முற்று ஈறுகெட்டு 'வாழி' என நின்றது. இத் தன்மையதான உத்தமகுணத்தால் உனக்கு ஒரு திருஷ்டிதோஷ முண்டாகாமல் நீ நீடுழிகாலம் வாழ்வாயாக வென்பான, இங்கு 'வாழி' என்றான். இதோர் மேலோரை வாழ்த்துவது தகுதியோ வெனின்,—வரம்புகடந்து பொங்கும் பரிவையுடைய பக்தர்கள் அவ்வாறான அன்பின் மிகுதியால் தமது நிலையையும் எதிர்த்தலையின் நிலையையும் மறந்து இவ்வண்ணம் வாழ்த்துதல்

மரபாமென்க. 'வாழியாய்' என்ற பாடத்திற்கு - என்றென்றைக்கும் அழியாத வாழ்வை யுடையவனே யென்று பொருள். 'சூழியானே' எனவே, காட்டியானையன்றி நாட்டியானே யெனறதாம். மனம்போனபடி காட்டில் திரியும் யானை போலன்றி ஒருபாகனுக்கு அடங்கி நடக்கும் யானைபோலத் தனது தமையனாரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தம்பியான இலக்குமண னெனக. யானையுவமை மிக்க வலிமைக்கும். அடங்காத சீற்றத்திற்கும், கம்பீரமான தோற்றத்திறகும் ஏற்கும். ஊழிநாயகன் தம்பியும் தானும் உற்றுன-தலைமை பற்றி வந்த திணைவழுவமைதி தொல்லை யூழி நாயகன் அநாதியான காலத்திறகுத் தலைவ னெனறலுமாம். (இ5)

[இதுவும் அடுத்தகவியும் - சுக்கிரீவன் அரசாளுதலைக்கூறும்;
இப்படலத்திற்கு உயிர்நிலைக்கேய்புள்கள் இவை.]

நூ2. ஆரியனருளிற்போயவ்வகன்மலையகத்தனைய
சூரியன்மகனுமானத்துணைவருங்கிளையுஞ்சுற்றத்
தாரையைவணங்கியன்னைதாயெனத்தந்தைமுந்தைச்
சீரியன்சொல்லெயென்னச்செவ்விதினரசுசெய்தான்.

(இ - ன்.) ஆரியன் அருளின போய் - சிறந்தவனான இராமபிரானது கட்டளையினால் சென்று, அ அகல் மலை அகத்தன் ஆய - விசாலமான அக்கிஷ்கிந்தமலையி னுள்ளிடத்தைச் சேர்ந்தவனான, சூரியன மகனும் - சூரிய புத்திரனான சுகரீவனும்,—மானம் தூணைவரும் கிளையும் சுற்ற:பெருமையையுடைய (அரசாட்சிக்குத) தூணையாயுள்ள மந்திரிகள முதலியோரும் உறவினரும் (தனனைச்) சூழ்ந்து நிறக,—தாரையை வணங்கி - (வாலியின் மனைவியான) தாரையை நமஸ்கரித்து, அனனள் தாய் என - (தமையன் மனைவியான) அவள (தனக்குத்) தாயெனறு சொல்லும்படியாகவும், முந்தை சீரியன சொல்லே தந்தை எனன - தனக்கு முனபிறந்தவனும [தமையனும்] சிறப்புளளவனுமான வாலியின வார்த்தையே தனக்குத் தந்தை யென்று சொல்லுமபடியாகவும், செவ்விதின் அரசு செய்தான் - சிறப்பாய் அரசாட்சியைச் செய்தான்; (எ - று.)

"ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸமः=தமையன் தந்தையோ டொப்பான்" என்றபடி தமையனாரைத் தந்தையைப் போலக் கொண்டு நன்கு மதித்தலும், அவர் மனைவியைத் தாயைப்போலக் கொண்டு நன்கு மதித்தலும் வேண்டுமன்றே? அவ்வாறே சுக்கிரீவன் 'தன்தமையன மனைவியான தாரையைத் தாயைப்போலக் கொண்டு அவன் சொற்கேட்டு நடப்பவனுயின னென்பதும், தன தமையனான வாலி இறந்து விட்டதனால் அவன சொல்லே அந்த ஸ்தானத்திற கொண்டு பிதருவாக்கிய பரிபாலனஞ் செய்யலாயின னென்பதும், பின்னிரண்டடியில் விளக்கும். வாலி இறக்கும்போது சுக்கிரீவனை அருகிலழைத்து அவனுக்குச் சில நல்லறிவுகளைக் கூறின னென்பது, கீழ் வாலி வதைப் படலத்திற சொல்லப் பட்டது. அவவுறுதி மொழிகளைச் சுக்கிரீவன் தலைமேற் கொண்டு அவற்றின்படி நடந்தன னென்பது, இங்குச் சூறிய

வாரும். மூக்தை - மூக்து தோன்றியவன். இனி, 'மூக்தைச் சிரியன் சொல' என்பதற்கு-பழமையானவனும் சிறப்புள்ளவனுமான இராமபிரான் கூறிய உறுதிமொழிகளென்று உரைத்தலுமாம். மந்திரிகள் முதலியோர் அரசர்க்கு உறுதிச்சுற்ற மெனப்படுபவ ராதலால், அவர்கள் உரிய சமயங்களில் வந்து சூழ்ந்து உதவுதலை 'மானதத்தணேவர் சுற்ற' எனக் கூறினார்; "சூழ்வார் கண் ணுக வொழுகலான் மனனவன், சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" என்ற திருக்குறளைக் காண்க. சுற்றத்தாரைத் தழுவுதல் செல்வம் படைத்தகன் பயனும் செல்வத்தைப் பாதுகாத்தற்கும் விருத்திசெய்தற்கும் காரணமாதலால், அவர்களைத் தழுவுதல் 'இளைசுற்ற' என்றதனைக் கூறப்பட்டது. "கொடுத்தலு மினசொலு மாறறி னடுகிய, சுற்றதாற் சுற்றப்படும்" என்றபடி இனசொற் சொல்லுதல் வேண்டுவன கொடுத்தல் முதலியவற்றை இவன் உடைய ஞகுதலால், இவனைச் சுற்றத்தார் நீங்காது தழுவுவ ரென்க ஆர் யன எனற வடசொல், சரணமடையத் தக்கவ னென்று காரணப்பொருள் பெறும். 'மூக்தைச் சிரியர் சொல்' எனற பாடதத்திற்கு - பழைய பெரியோர் (நூல்களிற் கூறியுள்ள) சொற்களென்று பொருளாம் (இ)

இ. வளவரசெய்திமற்றைவானரவீரர்யாருங்
கிளைஞரினுதவவாணிகிளர்திசையளப்பக்கிளர்
ளவிலவாற்றலாண்மையங்கதன்றங்கள்செல்வத்
திளவரசியற்றவேவியினிதினினிருந்தானிப்ப.ல்.

(இ - ள்.) வளம் அரசு எய்தி - செல்வமிகுதியை யுடைய அரசாட்சியை அடைந்து,—மற்றை வானர வீரர் யாரும் இளைஞரின் உதவ - மற்றை வானர வீரர்கள யாவரும் சுற்றத்தார் போல வேண்டுவன செய்யவும், ஆணை கிளர் திசை அளப்ப - (தனது) ஆஜ்ஞையானது நீண்ட திக்குக்களின் எல்லையை அளாவவும்—அளவு இல ஆறறல ஆண்மை அங்கதன் - அனவில்லாத பலத்தையும் பராகிரமத்தையு முடைய அங்கதன், கேளோடு - அன்புடன், தங் கள் செல்வதது இளவரசு இயற்ற - தங்கள அரசாட்சிச்செல்வத்திற் கெல் லாம் இளவரசனாய் ஆட்சி செய்யுமாறு, எவி - கட்டளை யிட்டு, இனிதினின் இருந்தான் - (அக்ஷிஷ்கிந்தா நகரத்திற் சுக்கிரீவன) இனிமையாய் வீற்றிருந் தான; இப்பால் - இப்புறம், (எ - று)--'வள்ளலும் அவண்கின்று ஏகி' என அடுத்த கவியோடு குளகமாத் தொடரும்.

சுக்கிரீவன் இராமன் எண்ணும் இருவருட் சுக்கிரீவன் செய்தியை இவ் வாறு கூறி, மேல் இராமன செய்தியைக் கூறுகின்ற ராதலின், வேறுபாடு தோன்ற, 'இப்பால்' எனறார்; அங்குச் சுக்கிரீவன செய்தி அதிலாக இங்கு இராமன செய்தி இது வென்க. வாரா என்ற வடசொல், கொஞ்சங்குறைய மனிதர் போன்ற வடிவமுடையவ ரென்று பொருள்படும். கிளர்தல் - விளங் குதலுமாம். ஆணை கிளர்திசை அளப்ப - தனது ஆஜ்ஞை எங்குக் தடையின் றிச் செல்ல வென்க; 'ஸுக்ரீவாஜ்ஞை' என்று சிறப்பித்துக் கூறல் வழக்கு. இனிதினின் இருத்தல் - சௌக்கியத்துடன் வாழ்தல்; அல்லது, காண்பவர்

கேட்பவர்கட்கு இனிமை யுண்டாகுமாறு இருத்தல். அங்கதன் தங்கள் செல்வத்து இளவரசு இயற்ற எவி இனிதினின் இருந்தான் - அங்கதன் இளவரச ஞயிருந்து இராசாங்க காரியமெல்லாம் பார்த்து வரச் சுக்கிரீவன் இன்ப மனுபவித்துக்கொண்டிருந்தன னென்க. 'அங்கத னறங்கொள் செல்வத்து" என்றும் பாடமுண்டு. (திரு)

[இராமன் ரிசியமுககிரியில் வசித்தல்]

திரு. வள்ளலு மவணின் றேகி மதங்கன திருக்கை யாய
வெள்ளவான் குடுமிக் குன்றத் தொருசிறை மேவி மெய்ம்மை
யளனுறு காதற் றம்பி யன்பினு லமைக்கப் பட்ட
வெள்ளிலில் சாலை யெய்தி யினிதினி னிருந்த காலை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வள்ளலும் - வரையாதருளு மியல்பினனான ஸ்ரீராமனும், அவண் நின்று எகி - அவ்விடத்திலிருந்து சென்று, மதங்கன தி இருக்கை ஆய வெள்ளம் வான குடுமி குனறத்து ஒரு சிறை மேவி - மதங்க முனிவனது இருப்பிடமாயுள்ளதும் நீர்ப்பெருக்குக்களையும் ஆகாயத்தையளாவிய சிகரத்தையு முடையதுமான ரிசியமூககிரியின ஒரு பக்கத்தை யடைந்து, (அவ்விடத்தில்), அள்ளுறு மெய்ம்மை காதல் தம்பி அன்பினுல் அமைக்கப் பட்ட எள்ளல் இல் சாலை எய்தி - அள்ளியெடுக்க மனமினதாகிய [மிகவும் அதிகமாகிய] உண்மையான பக்தியை யுடைய தன்தம்பியான இலக்குமண னுல் அனபுடன செய்யப் பட்ட குற்றமில்லாத பர்ணசாலையை அடைந்து, இனிதினின் இருந்த காலை - (அங்கு) இனிமையாய் வசித்திருந்த பொழுது. (எ - று.)—'இரவி எகினுள்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

மதங்கன தி இருக்கை - மதங்க முனிவன் வசிக்குமிடம்; இந்த ரிசியமூக கிரியே வாலிக்கு அஞ்சிய சுக்கிரீவன் தங்கியிருந்த இடம். எள்ளல் இல் - பழித்தற் கிடமில்லாத என்க. மெய்ம்மைக்காதல் - நிஜபக்தி காதல், இங்கே ராமபக்தி. (திரு)

"சுக்கிரீவனுக்குரிய தொன்முடிகவித்தே, மிக்கதிறல் வானரர்கள்மேவ வரசெய்திக், கக்குமுகின்மிக்க மழைக்காலமதன்ரு, லிக்கண்வருவரையென வீராகவன் விடுத்தான" என்னும் ஒட்டக்கூத்தருத்தராகாண்டச் செய்யுளி னுல், இப்படல வரலாற்றைச் சுருங்கவுணரலாம்.

இப்படலத்தின் பயன்—சுக்கிரீவன் அரசாட்சியையும் மனைவியையும் அடைந்த செய்தியை எப்பொழுதும் கேட்பவன் அரசாட்சியையடைவன் என்று ஸ்காந்த புராணம் கூறுகின்றது.

அரசியற்படலம் முற்றிற்று.

ஏழாவது

கார்காலப் படலம்

மழைக்காலத்தைப் பற்றிக் கூறும் பாகம். மழைக்கால வருணனையும், அக்காலத்திற் சீதையின் பிரிவைக்குறித்து இராமபிரான் இரங்குதலும், இலக்குமணன் தேற்றுதலும், அக்கார்காலம் கழிதலும், இப்படலத்திற் கூறப் படுகின்றன. சுக்கிரீவனுக்குத் தவணைகுறித்த நான்குமாதகாலத்தை இராம பிரான் கழித்த செய்தியை இதிர்கூறுகின்றார். கருமையென்னும் பண்புப் பெயரின் விகாரமான 'கார்' என்பது - ஆகுபெயராய். அக்கிறத்தையுடைய மேகத்தைக் குறிக்கின்றது. கார்காலம் - மேகங்களை யுடைய காலம், மேகங் களுக்கு உரிய காலம்; மேகங்கள் மழைபெய்யுங் கால மென்க. கார்க்கால மென வலியிகாது இயல்பானதற்குக் காரணம், வருமொழி வடமொழியா யிருத்தலே யாதல்வேண்டும். மாதம் பன்னிரண்டனுட் சித்திரைமுதலாக இரண்டிரண்டு மாதங்கள் - முறையே இளவேனிற்பருவம், முதிர்வேனிற் பருவம், கார்ப்பருவம், கூதிர்ப்பருவம், முன்பனிப்பருவம், பின்பனிப்பரு வம் எனப்படும்; இவையே வஸந்தருது, க்ரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சிசிரருது என்பன. பருவம், ருது, பெரும்பொழுது என் பவை - ஒருபொருட் சொற்கள். இம்முறைப்படி, ஆவணி புரட்டாசி மாஸங் கள் கார்காலமாம். தேசபேதத்தாலும், காலபேதத்தாலும் சிறிது முன்பின் னாதலும் உண்டு. அன்றியும் முதிர்வேனிற்பருவத்தின் பிற்பாதியாகிய ஆடி மாதத்திலேயே மழைதொடங்கி கூதிர்ப்பருவத்தின் முற்பாதியாகிய ஐப்பசி மாதம் வரையிற் பெய்த லியல்பாதலால், மழைக்காலமாகிய அந்த நான்கு மாதங்களும், ஆங்காங்குச் சென்று சீதையைத் தேடுவித்தல் முதலாக மேற் செய்யவேண்டும் காரியமுயற்சிக்கு ஏற்றகால மல்லவென்று இராமபிரானுற் கொள்ளப்பட்டன வென்பதும் உணர்க.

இனி, இப்படலத்திற்கு 'சரற்காலப்படலம்' என்று பெயர் கூறுவாரு முளர்; அது, இப்படலத்தின் இறுதியிற் சரத்காலத்தின் வரவும் அக்கால வருணனையும் கூறுதல்பற்றியெனக் கொள்ளவேண்டும்.

உய்த்துணர்கோக்குமிடத்து, இரண்டிரண்டு மாதங்களாகக் குறிக்கப்பட்ட ஆறுபருவங்களும், வெயிற்காலம் மழைக்காலம் பனிக்காலம் என்று பகுக் கும்போது மூன்றாய் அடங்குதலால் வர்ஷருதுவும் சரத்ருதுவுமாகிய நான்கு மாதங்களையுமே கார்காலமென்றுகொண்டு படலத்திற்குப் பெயரமைத்த தென்றல், தகுதி; "மழைக்காலத்திற்கு வேண்டுபவற்றிற்காக மற்றையெட்டு மாதங்களில் முயலவேண்டும்" என்னும் பொருளுள்ள வடமொழி மேற் கோள் *இங்குக் கருதத்தக்கது.

---

* "வர்ஷார்த்தம் மஷ்டௌ ப்ரயதேத மாஸான்."

வே று.

[தக்ஷிணயனம்: சூரியன் தெற்கே ஓதுங்குதல்]

5. மாலியல் வடதிசை நின்று வானவ
னேவிய மேயென வொளிக்க வின்குலாத்
தேவியை நாடிய மூக்கித் தென்திசைக்
கேவிய தூதென விரவி யேகினன்.

(இ - ன்.) ஒலியமே என - சித்திரத்தி லெழுதிய பிரதிமையேபோல, ஒளி கவின் குலாம் - ஒளியோடு கூடிய அழகு விளங்கப்பெற்ற, தேலியை - தன்மனைவியான சீதையை, நாடிய - தேடும்பொருட்டு, மூக்கி - (அநுமான் முதலிய வாநரர்களே அனுப்புதற்கு) முன்னமே, வானவன்—, தேவாதி தேவனை ஸ்ரீராமபிரான், தென்திசைக்கு ஏவிய - தெற்குத்திக்கிற்கு அனுப்பிய, தூது என - தூதன் போல, இரவி - சூரியன், மா இயல் வடதிசை நின்று - பெருமை பொருந்திய வடக்குத்திக்கினின்று, எகினன் - (தெற்குத்திக்கிற் குச்) செல்லலானன் ; (எ - று.)

தைமாசம் முதல் ஆனிமாசம் வரையில் ஆறுமாசம் உத்தராயணமும், ஆடிமாசம் முதல் மார்கழி மாசம் வரையில் ஆறுமாசம் தக்ஷிணயநமுமாம். சூரியன் வடபுறமாக ஒதுங்கிச்சஞ்சரிக்குங் காலம் - உத்தராயணம் ; அவன் தென்புறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்குங் காலம் - தக்ஷிணயநம். (''சுவேதமலைக்கு வடக்கில் சிருங்கவார் என்கிற பர்வதம் உண்டு. அது, மூன்று கொடுமுடிகளையுடைய காரணத்தால், அப்பெயரால் விளங்குகின்றது. அம்முடிகளுள் ஒன்று தென்புறத்திலும், மற்றொன்று வடபுறத்திலும் இன்னொன்று நடுவிலும் இருக்கின்றன. தென்புறச் சிருங்கத்திற் சூரியன் சஞ்சரிப்பதனால் தக்ஷிணாயநமும், வடபுறச்சிருங்கத்திற் சஞ்சரிப்பதனால் உத்தராயணமும், நடுச் சிருங்கத்தில் வரும்போது விஷுவமும் உண்டாகின்றன' என்பது புராணம்.) தக்ஷிணாயனத்தொடக்கமாகிய ஆடிமாசம் முதலாகச் சூரியன் வடதிசையினின்று தென்புறமாக ஒதுங்குகின்றனன். அங்ஙனம் அவன் இயல்பால் வடக்கிலிருந்து தெற்கே செல்லுதற்கு, தெற்கு முகமாக இராவண னெடுத்துச் சென்ற சீதையைத் தேடுதற்கு இராமனால் மூக்கித் தூதனுப்பப்பட்டு அத்திசை நோக்கிச் சென்றாற்போல வென்று கவி தானாக ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறியதனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி ; [ஹேதூத்ப்ரேக்ஷாலங்காரம்] இது சமயத்திற்கேற்பக் கூறிய உவமையாதல் காண்க. சூரியன், விளக்கத்தைச் செய்பவனுதலால் காணுமற்போன பொருளைத் தேடிக்கண்டு பிடித்தற்கு ஏற்றவனவன். சூரியனது ஸஞ்சாரம் எம்பெருமான் கட்டளைப் படியே நடப்பதாதலால், அவனே அப்பெருமானால் ஏவியனுப்பப் பட்டவனென்றல் ஏற்கும்.

வானவன் - தேவன் ; இப்பொதுப் பெயர், சிறப்பாய்த் திருமாலைக் குறித்து, அப்பெருமானது அவதாரமான இராமபிரானே புணர்த்திற்று.

1, 'வானவனேவிய தூதென' என்பதற்கு - இந்திரனேவிய தூதன்போல

வென்று உரைப்பினும் அமையும் சூரியபுத்திரனும வாகாராஜனுமான சுக்கிரீவன் தென்திசைக்கு இனி அனுப்புந் தூதன் வாயுபுத்திரனும் வாகரனும் வேகத்திலும் சோர்வின்மையிலும் கல்வியிலும் சிறந்தவனுமான அநுமான்; ஸாகூாத் தேவராஜனை இந்திரன் அத்திசைக்கு முன்னியனுப்பிய தூதன், தேவர்களில் முதல்வனும் வேகமாகச் செல்லுதலிலும் சோர்வின்மையிலும் பேர்பெற்றவனும் அநுமானுக்குக் கல்விகற்பித்த ஆசிரியனுமான சூரியன் என்க. தேவர்கள் தாமானதிலையில் நின்றுவது வாநரம் முதலிய பிறப்புக்களில் தோன்றியாவது சீதையைத்தேடுதல் முதலிய இராமகாரியத்திற்குத் துணைசெய்யக் கடமைப்பட்டவரென்பது, கருதத்தக்கது. இனி, 'மானவன்' என்ற பாடம் - மனிதரிற் சிறந்தவனென்றும், மநுகுலத்திலவதரித்தவனென்றும் பொருள்பட்டு இராமனைக் குறிக்கும்.

வடதிசை பெருந்திசையும் மங்களத்திசையும் புண்ணியத்திசையு மாதலால், அதற்கு 'மா இயல்' என்ற அடைமொழி சொடுக்கப்பட்டது. மா வியல் என்று எடுத்தால், மிகப்பெரிய என்று பொருள்படும்; ஒருபொருட் பன்மொழி: வியல் - அகலமுணர்த்தும் உரிச்சொல். நின்று - ஐந்தாம்வேற்றுமைச்சொல்லுருபு, நீக்கப்பொருள்- மனத்திற்குத் திருப்தியுண்டாகுமளவும் கலேத்துக்கலேத்து எழுதிச் சீர்திருத்தி யமைக்கக்கூடு மாதலால், சித்திரப் பாவை மிக அழகியதாம்; அவ்வடிவம் இயற்கையழகுமிக்க பிராட்டிக்கு உவமையாகக் கொள்ளப்பட்டது. எ - பிரிகிலேயோடு, உயர்வுசிறப்பு. குலாம் - குலாவும் என்பதன் விகாரம். காடிய - செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம். காடிய எவிய என இயையும்.

இதுமுதல் இருபத்தைந்து கவிகள் - மூன்றுஞ்சேர்ந்து மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (4)

[காளமேக வருணனை]

உ. பையணிப்பஞ்சலிப்பாந்தளேந்திய
மொய்ந்நிலத்தகளியின் முழங்குநீர்நெயின்
வெய்யவன்விளக்கமாமேருப்பொற்றிரி
மையெடுத்தொத்ததுமழைத்தவானமே.

(இ - ள்.) மழைத்த வானம் - மழையையுட்கொண்ட மேகமானது,— பை அணை - படம்பொருந்துதலேயுடைய, பல் தலே - பல தலேகளேயுடைய, பாந்தள - ஸர்ப்பராஜனை ஆதிசேஷனில், ஏந்திய - சுமக்கப் படுகின்ற, மொய் நிலம் - அணுக்கள் செறிந்த பூமியாகிய, தகளியில் - அகலில், முழங்கு நீர் நெயின் - ஆரவாரிக்கின்ற கடலாகிய நெய்யிலே, மேரு பொன் திரி - மேருமலேயாகிய அழகிய திரியில், வெய்யவன் விளக்கம் ஆ சூரியனே விளக்காகக்கொண்டு, மை எடுத்து ஒத்தது - மையெடுத்தாற் போன்றது; (எ - று.)

பூமியாகிய தகழியிலே கடல்நீராகிய நெய்யினிடையே மேருமலேயாகிய திரியிற் சூரியனாகிய சுடர்ப்பிழம்பில் எடுத்த மை மேலே பரவினற்போன்

றது, நீர்கொண்ட கரிய மேகங்கள் வானத்தில் லெங்கும் பரவிய தோற்ற மென்க. இவ்வுவமை, நிறமும் செறிவும் பற்றியது பலபொருள்களைத் தம் மூன் இயைபுடையனவாகவைத்து ஒப்புமைகுறித்ததனால், தற்குறிப்பேற்ற வியைபுவமையணி. "வையந் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக" என்ற முதலாழ்வா ரருளிச்செயலே அடியொற்றியது, இவ்வருணனே. சூரியனதுகிரணமாகிய வெயிலினைக் கடல்நீர் சுவறி ஆவியாக எழுவதே மேகத்திற்குக் காரணமென்ற சாஸ்திரக்கொள்கை இவ்வருணனைக்கு மூலமென்பதை நுட்பமாய் நோக்குக. சூரியன் பூமியின் நடுவிலுள்ள மேருமூலைக்கு மேலாக வானத்தில் அம்மலையை வலம்வருகின்றன னென்ற புராணக்கொள்கைபற்றி, மேருவைத் திரியென்றார்; அத்திரியில் மங்கலகரமாக வலஞ்சுழல்கின்ற விளக்கு, சூரியன். 'பாந்த ளேக்கிய' என்ற கிலத்திற்கு அடைமொழி கொடுத்ததனால், பூமியின்கீழ் இருந்து அனைத்தாங்கும் ஆதிசேஷனே விளக்குத் தண்டாகக் கொள்க.

அணை - அணைதல்: முதனிலைத் தொழிற்பெயர். அணைத்தலை - இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுந்தொக்கதொகை. இனி, அணை யென்பதைப் பாந்தளுக்கு அடைமொழியாக்கி, (திருமாலுக்குத்) திருப்பள்ளி மெத்தையாகவிருக்கும் ஆதிசேஷ னென்றலுமாம்; அணை-படுக்கை: "புல்கும், அணையார் திருமாற்கு அரவு" என்றார் பெரியாரும். பாந்தன் - பாம்பு. மொய் - பெருமையையுடைய வெனினுமாம். தகளி = தகழி; போலி. நெயின = நெய்யின்: தொகுத்தல். இன் - ஏழனுருபு; ஐந்தனுருபாக்கி, நெய்யைக்கொண்டு என்றலுமாம்: ஏதப்பொருள். வெய்யவன் - உஷ்ணகிரணன். விளக்கம் - விளக்கு; (பொருள்களை) விளக்கச்செய்வது. ஆ = ஆக; தொகுத்தல். பொன் கிரி - பொன்மயமான கிரி யெனவுமாம். இனி, பொன் - பொன்மயமான, மா மேரு - மகாமேருகிரி, கிரி என்ற பதவுரை கூறுதலு மொன்று. மழைத்த - வினைச்சொல் தன்மைபபட்ட 'மழை' என்ற பகுதியினமேற பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். வானம் - வான்; அம் - சாரியை: இது, மேகத்திற்கு இடவாகுபெயர். பல் + தலை = பஃறலை: [ந் - மெய் - உகி.] ஆய்தக்குறுக்கம்; [ந் - எழுத்து - சுட] மாத்திரை, கால்; [ந் எழுத்து - சுச]

[அம்மேகங்களால் வானம் இருளுதலும், வெயில்தணிதலும்.]

கூ. ஞணுறுதலருங்கடனஞ்சுறுங்கிய
கண்ணுதல்கண்டத்தின்காட்சிகாணலாய்
விண்ணகமிருண்டதுவெயிலின்வெங்கதிர்
தண்ணியமெனிற்தனதழைத்தமேகமே.

(இ - ன்.) தழைத்த மேகம் - செழித்துப் பரவித் தாழ்ந்த மேகங்களினால்,—விண் அகம் - ஆகாயத்தின் இடமானது,—ஞண்ணுதல் அரு - (பிறர்) சமீபித்தற்கும் அரியதான, கடல் நஞ்சம் - (பாற்) கடலினின்று தோன்றிய விஷத்தை, நுங்கிய - விழுங்கிய, ஞண்ணுதல் 'கண்டத்தின் - (நெருப்புக்) கண்ணை நெற்றியிலுடையவனான சிவபிரானுடைய கழுத்தினை, காட்சி -

தோற்றத்தை, காணல் ஆய் - (தனனிடத்திற) பார்க்கலாகும்படி; இருண்டது - கறுத்தது; வெயிலின வெம் கதிர் - சூரியனுடைய உஷ்ணமான கிரணங்கள், தண்ணிய - குளிர்ச்சியுடையனவாய், மெலிக்தன - உக்கிரக்தணிக்தன; (எ - று.)

சிவபிரானது நஞ்சுண்டு கறுத்த கண்டம்போல வானம் இருளடையும் படியாகவும், வெவ்விய சூரியகிரணங்கள் வெப்பக் தணியும்படியாகவும், நீர் கொண்ட காளமேகங்களை வானத்திற்பரவித் தழைத்தனவென்பதாம். முதல் வாக்கியம் - காட்சியணி. இரண்டாவது - தன்மைநவிற்சி. திருப்பாற்கடல் கடைந்தபோது அதனினின்று எழுந்ததோர் அதிபயங்கரமான பெருவிஷத்தைக் கண்டவளவில் அதன கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் அஞ்சியோடிய தேவர்களின் வேண்டுகோளினால் அவ்விஷத்தைச் சிவபிரான் அமுதுசெய்து கண்டத்தில் நிறுத்திவைத்திட்டனனென்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது. 'தழைத்தமேகம்' என்பதைத் தனிவாக்கியமாகக் கொண்டு, (இவ்வாறு ஆகும்படி) மேகங்கள் தழைத்தன வென்றலுமாம்; இவ்வுரையில், தழைத்த - முற்று. முன்னின உரையில், தழைதத - பெயரெச்சம்.

நஞ்சம், அம் - சாரியை. கண் நுதல்-கண்ணையுடைய நெற்றியையுடையவன்; இரண்டாம்வேற்றுமையுருபும் பயனு முடனதொக்கதொகைப்புறத் தோற்றந்த அன்மொழித்தொகை. கண்டம் - வடசொல். ஆய்=ஆக; எச்சத திரிபு. வெயில் - வெம்மையையுடையது; சூரியகிரணம்; 'இல்' விகுதிபெறற பெயர்; இங்கே, சூரியனுக்கு இலக்கணை. இரண்டாமடி, முற்றுமோனை. மெலிந்தன தழைதத - முரண்தொடை. (கூ)

[வானம்இருண்டமை.]

சு. நஞ்சினிளவிர்நெடுங்கடலினங்கைய
நஞ்சனநயனத்தினவிழ்ந்தகூந்தலின்
வஞ்சனேயரக்கர்தம்வடிவிறசெயகையி
னெஞ்சினினிருண்டதுநீலவானமே.

(இ - ன்.) நீலம் வானம் - நீலநிறமுள்ள ஆகாயமானது,—நஞ்சினின் - விஷம்போலவும், நளிர் நெடுங் கடலின - குளிர்ந்த பெரிய கடல் போலவும், நக்கையர் அஞ்சனம் நயனதின - மகளிரது மையிட்ட கண்கள் போலவும் அவிழ்ந்த கூந்தலின - அவிழ்ந்த கூலைமயிர் போலவும், வஞ்சனே அரக்கர்தம் வடிவின - வஞ்சனைகுணமுள்ள இராக்கதாகளுடைய உடம்பு போலவும், செய்கையின - (அவர்களுடைய) தீச்செயல்போலவும், நெஞ்சினின - (அவர்களுடைய) மனம் போலவும், இருண்டது - (காளமேகங்கள் பரவியதனால்) கறுத்துத் தோன்றிற்று; (எ - று.)

ஒரு பொருளுக்குப் பல உபமானங்கள் காட்டியதனால், பல பொருளுவமையணி. 'நக்கையர்' என்றதை 'கூந்தலின்' என்பதனோடும், 'அரக்கர்தம்' என்றதை 'செய்கையின்', 'நெஞ்சினின' என்பவற்றோடும் கூட்டுக. "நஞ்

கையார்' என்ற பாடத்திற்கு - சீதாபிராட்டியாருடைய வென்று பொருளாம். தீவினையைக் கருநிறமுடைய தென்றல் கவிமரபு; ஆதலால், அரக்கர் தஞ்செய்கை இருட்சிக்கு உவமையாயிற்று. அவர்களுடைய மனம் அஜ்ஞான மாகிய இருளினாலும் தீயசிந்தனைகளாலும் கறுத்திருத்தலால் அதனையும் உபமானமாக்கினர்; "அகங் குன்றி மூக்கிற் கரியார்" என்ற திருக்குறளும், "மங்கை பங்கன் சிற்றம்பல மதரியாச், சூழினமலிமனம்போன் றிருளாகின்ற கோதிலம்" எனற திருக்கோவையாரும் நோக்கத்தக்கன. 'நீலம்' எனற அடைமொழி, இயற்கைத் தோற்றம் பற்றியது.

பினனிரண்டடி - சந்தர்ப்பத்திற்கு ஏற்ற உவமையாம். 'நஞ்சினினை' முதலியவற்றில், இன - ஐந்தனுருபு, ஒப்புப்பொருள. 'நஞ்சினின்', 'நெஞ்சினின' எனறவற்றில், முதலாவது இன - சாரியை. காளமேகங்களடர்ந்த வானம் சீதையைப் பிரிந்த இராமபிரானுக்கு மிக்க வருத்ததைத வினைதல் பற்றியும, அதற்கு விஷத்தை முதலுவமையாக எடுத்துக கூறுதல் ஏற்கும். அவவாறு வீரங்களுக்குக் காமோதீபகமாய் வேதனை தருதலில களிரெடுங் கடலும் இருண்டவானமும் சமமாம. பிராட்டியாரின கணனழகும், அவிழ்ந்த கூந்தலும், அரக்கர்தம் வடிவு செய்கை நெஞ்சுகளும் இராமனுககு வருத்ததத வினைதல், வெளிப்படை. (ச)

[மேகங்கள் மின்னுதல்.]

நி. நாட்களினனிர்கடனாகவுற
வேட்கையிற்பருகியமேகமின்னுவ
வாட்கைகண்மயங்கியசெருவின்வார்மதப்
பூட்கைகணிறைந்தபுண்டிறப்பபோன்றவே.

(இ - ன்.) நாட்களில் - உரிய நாள்களிலே [அல்லது பலநாள்களாக], களிர கடல் நாரம் - குளிர்ந்த கடலின் நீரை, நா - நாவினால், உற - மிகுதியாக, வேட்கையின பருகிய - விருப்பதோடு குடித்த, மேகம் - மேகங்கள், மினனுவ - மினனுகினறவை,—வான் கைகன் மயங்கிய செருவின் - வாளாயுததைத யேந்திய கைகளையுடைய வீரர்கள் கைகலந்து செய்யும் போரில், வார் மதம் பூட்கைகள் - மிகுதியான மதத்தைக் கொண்ட யானைகள், நிறைந்த புண் திறப்ப - (அவவாட்படைகளால் வெட்டப்பட்டு) உடம்பு திறந்து மிக்க விரணத்தை வெளிக்காட்டுவனவற்றை, போனற - போனறன; (எ - று.)

நிரம்ப நீர்கொண்ட கரியமேகங்களின இடையிடையே காணப்படுகின்ற மின்னல்கள், போரில் வாள்கொண்டு அணிக்கப்பட்ட மதயானைகளின உடம்பிற் பலவிடங்களிலும் தோல்கிழியக் காணப்படும் சிவந்த புண்கள் போன்றன வென்பதாம்; உவமையணி. மின்னுவ - பெயர்; ஏழுவாய். திறப்ப - பெயர்; செயப்படுபொருள்: அ - விகுதி, ப்-இடைநிலை. போன்றவினைமுற்று. மேகம் மினனுவ - மின்னுவனவாகிய மேகங்களென்க. பூட்கைகள் திறப்ப - திறப்பனவாகிய பூட்கைகளே யெனக. நாட்களின் - நகைத் திரங்கள் போல, மின்னுவ எனபாரு முளர்.

'காவுத', வேட்கையின் என்றவை - கற்பனையால் வந்தன; இங்ஙனம் கூறுதல், ஸ்மாதீ யெனனுங் குணவலங்காரத்தின் பாற்படும்; அதன் இலக்கணத்தை "உரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேல், தருவினே புணர்ப்பது சமாதியாகும்" எனக் காண்க. வேட்கை - நீர்வேட்கையாகிய தாகத்தா லென்னலாம். வாட்கைகள் - இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகைப் புரத்துப் பிறந்த அனமொழித் தொகை. 'வாட்கணம்' என்ற பாடத்திற்கு - வாள்களின் கூட்ட மென்க. அவராமுள்ள அதிக்கையை யுடைமையால், யானைக்கு 'புழைக்கை' என்று ஒரு பெயருண்டு; அது,'பூழைக்கை'யென முதல் நீண்டும் வழங்கும்: அது, பூட்கையென மருவியழிதன்க. நிறைந்த - (இரத்தம்) நிரம்பிய வெனினுமாம். 'நிறத்த புண்' என்ற பாடத்திற்கு - செந்நிறம் மிக்க புண்ணென்று பொருளாம். (இ)

[இடிமுழக்கம்.]

கூ. நீணிறப்பெருங்கரிநிரைத்தகீர்த்தெனச்
சூனிறமுகிற்குலந்துவன்றிச்சூழ்திரை
மானிறவெடுநெடுங்கடல்வாரிமூரிவான்
மேனிரைத்துளதெனமுழக்கமிக்கதே.

(இ - ள்.) சூல் - கருக்கொண்ட [நீரை உட்கொண்ட], நிறம் - (கரு) நிறம்மிக, முகில் - மேகங்களின், குலம - கூட்டமானது,—நீல் நிறம் பெருங் கரி நிறைத்த நீர்த்து என நீலநிறத்தையுடைய பெரிய யானைகள் வரிசைப் பட்டு நின்ற தன்மைபோல, அவனறி - நிரைத்து நெருங்கி,—சூழ் திரை - சுழல்கின்ற அலைகளையுடைய, மால் நிறம் - கருநிறமுள்ள, நெடுங் கடல் - பெரிய கடலின், வாரி - நீர், மூரி வானமேல் நிறைத்துளது என - (எழுந்து) பெரிய வானத்திற் பரவினாற் போல, முழக்கம் மிக்கது - ஆரவாரம் மிகுந்தது [மிக்க முழக்கத்தைச் செய்தது]; (எ - று.)

கரிய பெரிய யானைகள் தொகுதிப்பட்டு நின்றாற் போல நீர்கொண்ட காளமேகங்கள் நெருங்கிக் குமுறினதால், கரிய பெரிய கடல் வானத்தி லேறி ஆரவாரித்தாற்போ லிருந்த தென்பதாம். முன்னிரண்டடியில் உவமை யணியும் பின்னிரண்டடியில் தற்குறிப்பேற்றவணியுங் காண்க. கரிநிறைத்த நீர்த்தெனவும் கடல்வாரி வானமேல் நிரைத்துளதெனவும் முகிற்குலம் அவன்றி முழக்கம் மிக்கது என்று அக்வயித்துப் பொருளுரைத்தால், யானை கடல் என்னு மிரண்டும் மேகத்திற்குக் கரிய பெரிய வடிவம் முழக்கம் என்னு மிரண்டிலும் உவமையாம்.

நீல் - நீலமென்ற வடசொல்லின் விகாரம். நீர்த்து—நீர்மை யென்ற பண்புப்பெயர் ஈறுபோயிற்று; அது - பகுதிப் பொருள் விகுதி. 'நீர்த்தன' என்ற பாடத்திற்கு - தன்மையை யுடையனவாய் என்று பொருள். சூழ் கடல் என்றும் இயைக்கலாம்; (பூமியைச்) சூழ்ந்துள்ள கடல் (எழுந்து) வான் மேல் நிரைத்தாற்போல வென்க. 'பெருங்கரி,' 'சூழ்ந்தன,' 'நிறைத்துள தென' என்பவையும் பாடம். (ஈ)

[இதுமுதல் நான்கு கவிகள் - மின்னல்களின் வருணனை.]

எ. அரிப்பெரும்பெயரவன்முதலினோரணி
விரிப்பவுமொத்தனவெற்புமீதுதீ
யெரிப்பவுமொத்தனவேகிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்தமின்னெலாம்.

(இ - ன்.) தெரிந்த மின் எலாம் - (வானத்திலே மேகங்களிற) காணப் படுகின்ற மின்னல்க ளெல்லாம்,—அரி பெரும் பெயரவன முதலினோர் - வானத்திலுள்ள ஹரியென்னும் பெரும்பெயரை யுடையவனான இந்திர முதலிய தேவர்களுடைய, அணி - ஆபரணங்கள், விரிப்பவும் - ஒளிவீசுவன வற்றையும், ஒத்தன - போனறன; வெற்புமீது தீ எரிப்பவும ஒத்தன - மலை களின் மேல் நெருப்புப் பற்றிப் பொருள்கள் யெரிப்பவற்றையும் போன் றன; ஏசு இல் ஆசைகள் சிரிப்பவும் ஒத்தன - பழித்த லில்லாத திக்குக்கள் சிரிப்பவற்றையும் போன்றன; (எ - று)

வானத்திலுள்ள இந்திரன் முதலிய தேவர்களுடைய ஆபரணங்கள் இடையிட்டு ஒளிவீசினற் போலவும், மலைகளின மேல் இயல்பாகப் பற்றி யெரிகிற நெருப்புக்களின் சுவாலைகள அல்லது பொறிகூட்டங்கள் போல வும், ஒன்றையொன்று இகழ்தலில்லாத திக்குக்கள ஒன்றை நோக்கி ஒன்று கண்பினற் சிரித்தாற் போலவும், வானத்திற் பரவித்தழைத்த மேகங்களில் மின்னல்கள் விளங்கின வென்பதாம். தற்குறிப்பேற்றவணி. சிரிக்கும்போது பற்களினெனளி வெளியே தோன்றுதல், இயல்பு. 'அரிப்பெரும் பெயரவன் முதலினோர்' என்றது, அஷ்டதிக்பாலகாளே யென்பர் ஒருசாரார்.

பெரும் பெயர் - சிறந்த பெயர். அரி - ஹரி யென்ற வடசொல்லின் விகாரம்; அது, (பகைவர்களே) அழிப்பவ னென்று பொருளபடும். 'அரிப் பெரும் பெயரவன்' என்பதற்கு - ஹரியென்னும் பிரசித்தமான திருநா மத்தை யுடையவனாகிய திருமா லென்று உரைப்பாரு முளர்; ஹரி - (கொடிய அசுரர் முதலியோரை அல்லது அடியார்களுடைய தின்பங்களே) அழிப்ப வன. விரிப்ப, எரிப்ப, சிரிப்ப - பெயாகள். உம்மைகள மூன்றனுள், மூன் னது - எதிரது தழுவிய எச்சமும், நடுவிலுள்ளது - இறந்தது தழுவிய எச் சத்தோடு எதிரது தழுவிய எச்சமும், பினனது - இறந்தது தழுவிய எச்சமு மாம். ஏசு - முதனிலைத் தொழிறபெயர். மின்னுவது மின் எனக் காரணக் குறி. 'அரிப்பெரும் பெயரவன் முதலினோர் அணி விரிப்ப' என்பதற்கு - இந்திரன முதலிய தேவர்கள் தங்கள் ஆபரணங்களே யெடுத்து விரித்தால் அவற்றை யென்றும், 'வெற்புமீது தீ எரிப்ப' என்பதற்கு - மலைகளின்மேல் (உலக்களம் வைத்துத் தருத்திகொண்டு) நெருப்பெரிப்பவற்றை யென்றும் உரைப்பர் ஒருசாரார். 'வெற்பின்' என்றும் பாடம். (எ)

அ. மாதிரக்கருமகன்மாரிக்கார்மழை
யாதினுமிருண்டவிண்ணிருந்தைக்குப்பையிற்
கூதிர்வெங்காலெடுந்திருத்திக்கோளமைத்
தீதுவெங்கனலுமிழுலையுமொத்ததே.

(இ - ன்.) மாரி கார் மழை-மழைக்காலத்துக் காளமேகமானது,—மாதிரம் - திக்குக்களாகிய கருமான், யாதினும் இருண்ட விண் இருந்தை குப்பையில் - எல்லாப்பொருள்களைக் காட்டிலும் கறுத்த ஆகாயமாகிய கரிக் குவியலில், வெம் கூதிர் கால எடுந் திருத்தி கோள் அமைத்து - வேக முள்ள வாடைக் காற்றாகிய பெரிய ஊதுதிருத்தியின் வலிமையைக்கொண்டு, ஊது - ஊதிவளர்த்த, வெம் கனல் - வெவ்விய அக்கினியின் சுவாலைகளை, உமிழ் - வெளிப்படுத்துவதான, உலையும் - உலைக்களத்தையும், ஒத்தது - போன்றது; (எ - று.)

அங்ஙனம் உமிழும் அக்கினிச் சுவாலைகளை மின்னல்க ளென்க; பல பொருள்களைத் தம்முள் இயைபுடையனவாக வைத்து உருவகஞ் செய்தது, இயைபுநவக வணியின் பாற்படும். 'கார்மழை வெங்கனலுமி ழுலையை யொத்தது' என்றது - இவ்வுருவகத்தை அவகமாகக் கொண்ட தற்குறிப்பேற் றம். கருமகன் - கொல்லன்: இரும்புவேலை செய்பவன்; இதனை கர்மக னென்ற வடசொல்லின் திரிபென்னலாம்; தொழிலாளியைக் குறிக்கும் பொதுப்பெயர். இங்கே சிறப்பாய், கருமானைக் குறித்த தென்க. தொகுதி யொருமையாக 'யாதினும்' என்றார்; கருநிறமுடைய பொருளனைத்தினு மென்க: இதிற் பகுதியாகிய 'யாதினு' - எஞ்சாமை குறிப்பது. 'திருத்திக் கோள் அமைத்து' என்பதற்கு - திருத்திக்கருவியை யமைத்து என்பாரு மூளர். இனி, இச்செய்யுளுக்கு, யாதினுமிருண்டவிண் ணென்பதை எழுவா யாக்கி, மாரிக் கார்மழையாகிய கரிக்குவியலிலென்ற உரை கொளினும் பொருந்தும். (அ)

கூ. பிரிந்துறைமகளிரும்பிலத்தபாந்தளு
மெரிந்துயிர்ருடுங்கிடவிரவியின்கதி
ரரிந்தனவாமெனவசனிகாவென
விரிந்தனதிசைதொறுமிசையின்மின்னெலாம்.

(இ - ள்.) மிசையின் - மேலே [வானத்திலே], திசைதொறும் - திக்குக் கள் தோறும் [எல்லாத்திக்குக்களிலும்], மின் எலாம்-மின்னல்களெல்லாம்,— பிரிந்து உறை மகளிரும் - (கணவரைப்) பிரிந்து வசிக்கின்ற மாதர்களும், பிலத்த பாந்தளும் - பூமியின் கீழிடத்திலுள்ள பாம்புகளும், எரிந்து உயிர் நடுங்கிட - தவித்து உயிர் துடிக்கும்படியாக,—இரவியின் கதிர் அரிந்தன ஆம் என - சூரியகிரணங்களே அறுத்தனவைத்தன போலவும், அசனி கா என - இடிகளின் காக்குக்கள் போலவும், விரிந்தன - விளங்கின; (எ - று.)

பொருளீட்டுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்துசெல்லுந் தலைவன் அங்ஙனம் தான் பிரிந்துசெல்லும்போது கார்காலத்தில் மீண்டு வருவதாகத்

காலங்குறித்துச் சொல்லிப்போதல் இயல்பாதலின், அக்காலம் வருமளவும் ஒருவாறு பிரிவுத்துயரைப் பொறுத்துக்கொண்டு ஆறியிருந்த தலைவி அக்காலம் வரக்கண்டவளவிலும் அவன் வரவு காணுளாயின பிரிவாற்றாது மிக வருந்துவளாதலால், 'பிரிந்து உறைமகளிர் எரிந்து உயிர்கடுங்கிட மிசையின் மின்னெலாம் திசைதொறும் விரிந்தன' என்றார். வேந்தற்குற்றுழிப்பிரிவிலும் தலைவன் தான் கார்காலத்தில் மீண்டுவந்து சேர்வதாகத் தலைவிக்குக் காலங் குறித்துச் செல்லுதலுண்டு. அக்காலத்தின வருகையை மேகத்தில் விளங்கும் மின்னல்கள் முந்திதெரிவித்து அம்மகளிரை மிகவருந்தச் செய்யுமெண்க, அக்காலங் குறியாதுசென்ற பிரிவுகளிலும், வெப்பமும் தட்பமும் மிகாது இடைநிகராதாய் நீரும் நிழலும் பெற்றுக் களிசிறந்து மிருகங்களும் பறவைகளும் தம்தம் துணையோடு இன்புற்று விளையாடுங் காலமாதலால் வருத்தத்தை மிகுவிக்கு மென்பார், பொதுப்பட ' பிரிந்து உறை மகளிர்' என்றனரென்க. இவ்வகை வருத்தம் பிரிந்த ஆடவர்க்கும் உளதாகவும், மகளிரை எடுத்துக்கூறியது, வருத்தம் பொறுக்கமாட்டாத அபலைகளெனப் படுமவர்களது மெல்லியல்பைப் பாராட்டியெனக. இடியோசையைக் கேட்டவளவிலே நாகங்கள் அஞ்சித்துடித்தல் இயல்பாதலே "விரிகிறகாகம் விடருளதேனும் உருமின் கடுஞ்சினஞ் சேணினறு மூட்கும்" என்ற நாலடியாரினுலும் அறிக. மின்னலும் இடியும் ஒன்றேயாகினற உண்மைநிலையை கருதி ஒற்றுமை நயததால் இடிமுழக்கத்தின் தன்மையை மின்னலொளியின் மேலேற்றி 'பிலதபாந்தள் எரிந்து உயிரடுகிட மின்னெலாம் விரிந்தன' என்றார்; "எப்பொரு ளெத்தனமைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" ஆதலின், மின்னல் பாய்தலினுலாகும் ஒசையே இடியெனக. இங்ஙனமிருக்கவும் மின்னலே 'அசனிநாவென' என்றது, உரப்பேகூயாற கூறியதாம். பிலத்தினுள்ளேயிருக்கின்ற பாபபுகள் அஞ்சிருநது மினனலைக கண்டாலும் நடுங்கும்; "பார்தகடல்பருகி மேகம் பாப்பினமபதைப்பமின்னி" என்பது சிந்தாமணி. 'பிரிந்தமைமகளிரும் பிலதபாந்தளும், எரிந்துயிர் கடுங்கிட' என்றவிடத்து ஒப்புமைக் கூட்டவணியும், மறறைப் பகுதியில் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்திருத்தலால், சேர்வையணி. சூர்யகிரணம்-செங்கிறமும் ஒளியும் பற்றியும், நா - செங்கிறம் பற்றியும் மின்னலுக்கு ஒப்பாம். (கூ)

கo. சூடினமணிமுடித்துகளின்விஞ்சையர்
கூடுறைநீக்கியகுருதிவாட்களு
மாடவர்பெயர்தொறுமாசையானியி
னீடைகளொளிபிறழ்வனவுமொதகதீதை.

(இ - ன்.) சூடின மணி முடி - தரித்த ரத்தினகிரீடத்தையுடைய, துகளின் - மாயையுன்ன, விஞ்சையர் - வித்தியாதார்கள், கூடு உறை நீக்கிய - (போர்செய்தற்பொருட்டு) உறையினுள்ளே யிருத்தலே நீக்கி எடுத்து உருவிச் சுழற்றிய, குருதி வாட்களும் - (பகைவரது) இரத்தந்தோய்ந்த வாளாயுதங்களையும்,—ஆடவர் பெயர்தொறும்-இக்குக்களுக்கு உரிய புருஷர்களான இக்

பாலகர்கள் இடம்விட்டுச் செல்லுந்தோறும், ஆசை யானையின் ஓடைகள் ஒளி பிறழ்வனவும் - அத்திக்குக்களாகிய யானைகளின் நெற்றிப்பட்டங்கள் அசைந்து இடையிட்டு ஒளிவிளங்குவனவற்றையும் ஒத்தது - போன்றது: (அம் மின்னல்களின் தோற்றம்); (எ - று.)

வித்தியாதரர் - பதினெட்டுத் தேவகணங்களுள் ஒருவகையார்; மாலி காஞ்சனம் முதலிய மாயைவித்தைகளில் தேர்ந்தவர்: அதுபற்றியே, இவர் கட்கு இப்பெயர் விஞ்சை - வித்தை: வித்தர ரென்ற வடசொல்லின் சிதைவு; வித்தை-வித்தை. வித்சை, விஞ்சை என விகாரப்படும்வழி காண்க. வித்தியா தரர்களின் மாயைத்தேர்ச்சி விளங்க, அவர்கட்கு 'ஆகளின்' என்ற அடை மொழி கொடுக்கப்பட்டது. ஆகள் குற்றம்; மாயைக்கு இலக்காமே. 'ஆகளில்' என்ற பாடத்திற்கு - (போரிற பின்னிடுதலாகிய) குறை மில்லாத வென்று பொருள். வித்யாதரர்கள் தாமிருக்குமிடம் பிறர்க்குத்தெரியாதபடி வானத்தி லும் மேகங்களிலும் மாயையால் மறைந்திருந்து போர்செய்தற்பொருட்டு உறைகளிலிருந்து வாளாயுதங்களை உருவியெடுத்துச் சுழற்றுமிடத்து அவ் வாள்களினெளி வினங்களைப் போன்றது மின்னல்களின் தோற்ற மென்க.

ஆடவர் - இங்கே இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அஷ்டதிக்பாலகர்கள்; கிழக்கு, தென் கிழக்குமுதலாக முறையே எட்டுத்திக்குகளிலும் இவர்கள் நின்று அவற்றைப் பாதுகாப்பர். திக்குகளைப்பாதுகாக்கின்ற இந்திரன்முதலிய எண்மரையும், அத்திக்குகளாகிய யானைகளை வாகனமாகக்கொண்டு எதிரடத்தும் யானை வீரர்களாகக் கற்பித்தார். அவர்கள் அங்ஙனம் எதிர்செல்லும்போது புடை பெயர்கின்ற அத்திசைகளாகிய யானைகளின் நெற்றியிலுள்ள பொற்பட்டங் கள் அசைந்து பளபளவென்று ஒளிவீசுதலும் மின்னலுக்கு உவமையாகப் பட்டன. தூற்றுறிப்பேற்றவணி. 'ஆசையானையின்' என்பதற்கு - ஐராவதம் முதலிய அஷ்ட திக்கஜங்களினுடைய வென்று உரைப்பாரு முளர்; அவை பூமியினதீழையிருந்து நிலதைதத் தாங்குவன.

மணிமுடி - இரத்தினங்கள் பதித்த கிரீடம். கூடு - இடமே, படைக் கூடு. உறை - உறைதல்: முதனிலைத் தொழிற்பெயர். இனி, கூடு உறை - உறைக்கூடு என ஒருபொருட் பனமொழியாக்குதலு மொன்று. 'கூடுற நீக் கிய' என்ற பாடத்திற்கு, கூடு உற நீக்கிய-கூடுகளினின்று மிகுதியாக உருவி யெடுத்த வென்றும், 'ஆடுவ பெயர்தொறும்' என்ற பாடத்திற்கு - நடனஞ் செய்துகொண்டு புடைபெயருந்தோறு மென்றும் பொருளாம. 'ஒத்தவே' என்ற பாடத்திற்கு - (மின்னல்கள்) ஒத்தன வென்க. (கo)

[மின்னல்களும், மழைக்காற்றும்.]

கக. எண்வகைநாகங்கடிசைகளெட்டையு
நண்ணினராவளாததினையமின்னகக்
கண்ணின்மெய்வடிவெனக்கருங்கார்விசும்
புண்ணிறையுயிர்ப்பெனவுதைபொங்கவே.

இதனும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) எண்வகை நாகங்கள் - (கீழேயிருந்து பூமியைத்தாங்குகின்ற) அஷ்டமகாநாகங்கள், (அங்கிருந்து மேலெழுந்து), திசைகள் எட்டையும் - எட்டுத் திக்குகளையும், கண்ணின - சமீபித்தனவாய, நாவளைத்தி அனைய - (தம்தம்) நாவை (அடிக்கடி) வெளியேநீட்டி அவற்றால் அத்திக்குகளைவளைத் தாற் போன்றனவாக, மின் நக மின்னல்கள் - (எல்லாத்திக்குகளிலும்) பிர காசிக்க,—கார் விசும்பு - காளமேகங்கள், கண்ணன் மெய் வடிவு என கருகி - திருமாலினது திருமேனியின் நிறம்போலக் கறுத்து, உள் நிறை உயிர்ப்பு என - தமக்குள்ளே நிறைந்த சுவாசத்தை (வெளிவிட்டாற்) போல, ஊதை பொங்க - குளிர்ந்த காற்று அதிகப்பட, (எ - று.)—'ஊதை உலயாது' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

தற்குறிப்பேற்றவணி. மழைபெய்தற்குக்காரணம் குளிர்ந்த காற்றென் கிற சாஸ்திர நுட்பத்தைக் கருதி, அவ்வகைக் காற்றின் அமைதியைக் கூற லாயினர். எண்வகை நாகங்கள் - வாசுகி, அநந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன். இவை - பூமியின்கீழ் கடலில் இருந்து பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனுக்கு உதவியாய்ச் சுற்றி லும் கிழக்கு முதலிய எட்டுத்திக்கிலும் முறையே நின்று பூமியைத் தாங்கு வன; காசிய மகாமுனிவரது மனைவியருட் கத்ருவென்பவளிடம் தோன் றிய தெய்வத் தன்மையுள்ள சர்ப்பங்கள்: இவற்றைக் கடவுட் பாம்பென்ப. 'நண்ணின' என்பதற்கு - (தீண்ட) விரும்பினவையாய் எனறு உரைத்தலு மொன்று: கண்ணன் மெய்வடிவெனக் கருதிக் கார்விசும்பு—''வான, ஆற னிந்து சென் றூர்கலிமேய்ந்தகிற், சேறணிந்த முலைத்திருமங்கைதன், வீற னிந்தவன மேனியின் மீண்டவே'' என்றூர் பாலகாண்டத்தி ஆற்றப்படலத் திலும். இனி, 'கண்ணுதன் மிடறெனக் கருகி' என்று பாடமோதினவரு முளர்; அது, கீழ்ப்போந்த மூன்றுஞ் செய்யுளோடு கூறியதுகூறலா மாத லாற் சிறவாது.

கண்ணன் - கிருஷ்ணனென்ற வடசொல்லின் சிதைவு; கருகிறமுடை யவ னென்பது பொருள்: அது - இங்கு, அவதாரப்பெயரன்றிப் பொதுப் படப் பெயராய்நின்ற காரணக்குறி. இங்கே, கண்ணன் - இராமபிரா னென்று கொள்ளுதலும் ஏற்கும்; அரசியற்படலம் கை - ஆஞ்செய்புளைக் காண்க. 'உயிர்ப்பு' என்பதனபின் 'வெளிவிட்டால்' என ஒருசொல் வருவித்தி, அது 'விசும்பு' என்ற எழுவாய்க்கும் 'உயிர்ப்பு' என்ற செயப்படுபொருளுக்கும் முடிக்குஞ் சொல்லாக்கப்பட்டது. இனி, 'கருக' என்ற பாடம். முடிபுக்கு இனியதாம். கருகொண்டு கறுத்த மேகங்கள் அக்கருப்பத்தின் முதிர்ச்சி யாற் பெருமூச்சுவிட்டாற் போலக் காற்று வீச வென்க. இனி, காளமேகங் கள் இராமபிரானது திருமேனிநிறம்போலக் கறுத்து (அப்பெருமான் சீதா பிராட்டியாரை நினைத்துநினைத்துத் துயிலுற்) பெருமூச்சுவிடுமாறுபோலக் காற்றுவீசவென்று உரைத்தலும் அமையும். 'வானம்' என்றதுபோல, 'விசு

ம்பு' என்றதும், ஆகாயத்தின் பெயர் இடவாகுபெயராய் மேகத்தைக் குறித்தது; திருக்குறளில் வானநிறப்பெனனும் அதிகாரத்தில் ''விசும்பிற் றுளி வீழின்'' என்றவிடத்திற் போல. நாகம் - நகத்தில் வாழ்வது எனப் பாம்புக்குக் காரணக்குறி; வடமொழித தத்திதாந்த நாமம்: நகம் - மரமும், மலையுமாம். 'மின்னின்,' 'மின்னுவ' 'ஊதையோடின' எனவும் பாடமுண்டு. (கக)

[எங்கும் காற்று அடித்தல்.]

கூட. தலேமையுங்கீழ்மையுந்தவிர்தலின்றியே
மலேயினுமரத்தினுமற்றுமுற்றினும்
விலேநிணந்தளவழிவிலங்கும்வேசைய
ருலேவுறுமனமெனவுலாயதூதையே.

(இ - ள்.) ஊதை - அந்த மழைக்கார்ருனது,—தலேமையும் கீழ்மையும் தவிர்தல் இன்றியே - மேலான இடத்திலும் கீழான இடத்திலும் நீங்குதலில்லாமலே, மலேயினும் மரத்தினும் மற்றும முற்றினும் - மலேகளிலும் மரங்களிலும் மற்று எல்லாப்பொருள்களிலும்,—விலே நிணந்து - (பொருள் கொடுப்பவரது உருவம் குணம் முதலியவற்றைக் கருதாமல் தமது இன்பத்திற்கு) விலேயாகக் கொடுக்க வேண்டிய பொருளேயே கருதி, உள வழி விலங்கும் அப்பொருட்கொடை யுள்ளவரிடத்தே பாய்ந்துசெல்லுதின, வேசையர் உலேவு உறு மனம் என - விலேமகளிரது சுழற்சி பெருக்கிய மனம போல, உலாயது - சென்று வீசியது; (எ - று.)

குலம் வடிவம் குணம் செயல் முதலியவற்றுல் மேலோர் கீழோர் என்னும் வேறுபாடு கருதாது, விலேகொடுப்பவ ரெவரேயெனும செல்லுதல், விலே மாதரது மனத்தின இயல்பு. இக்ஙனம் தமது இனபத்தை விலே கொடுப்பவர் யாவர்க்கும கொடுப்ப தல்லது அதரகு ஆவா ஆதரா எனனும வரையறை கொள்ளாமை பற்றியே, அவர்கட்கு, வரைவினமகளி ரென்றும், விலே மாதரென்றும், பொருட் பெண்டிரென்றும பெயராயிற்று; மற்றும, 'கணிகா' என்ற வடமொழிப்பெயரும், (பொருளேயும் பொருளுடையாரையுமே) கருதுதல்பற்றியதே. இவ்வாறுன வேசையரது மனம் மேல் கீழ் எனற வேறுபாடு கருதாமலும் ஒரிடததிலேனும நிலேத்திராமலும் விலேபொருளுளவரிடதது லெல்லாம் செல்லுதல் போல, காற்றும் மேல் கீழ் எனற வேறுபாடினறி நேர்ந்த இடததிலெலாஞ் சென்று வீசிற தெனபதாம். உவமையணி. முதலடி, எங்கும் விலகில்லே யென்பதைக் காட்டிற்று.

இன்றியே, எ - தேற்றம். வேசை - வேஸ்யா என்ற வட சொல்லின் விகாரம். உலேவு - நிலேயின்மை; ஒரிடததிலேனும நிலேத்திராமை. இத்தன்மை, உபமேயமான ஸதாகதியாகிய காற்றிற்கும் ஏற்றது. மனம் - மனஸ் என்ற வடசொல்லின திரிபு. உலாயது—உலாவு எனற பகுதி சுறுதொக்கது; ய் - இறந்தகால விகைதிலே. விலங்குதல் - விலகிச் செல்லுதல். தமது நிலத்திற்கு ஏற்ற ஒருவரிடத்தே செல்லுதலாகிய நேகழியைவிட்டுப் பொரு

ளையே பிரதானமாகக் கொண்டு வில்லை கொடுப்பவரிடத் தெல்லாம் செல்லுத லின் தகுதியின்மை தோன்ற, 'விலங்கும்' எனப்பட்டது. 'தலைமையுங் கீழ்மையுந் தவிர்த லின்றியே' என்றதனால், ஆகாயம் முதலாகப் பூமிமுழு வதிலும் வீசிற்றென்க. 'உலவுறுமுளமென வுலாயதாதையே' என்றபாடம், முற்றுமோனை கொண்டதாம்; உளம் - மனம். (கஉ)

[வாடைக்காற்றின் மிகுதி.]

கஙூ. அழுங்குறுமகளிர்தமன்பர்த்தீர்ந்தவர்
புழுங்குறுபுணர்முலைகொதிப்பப்புக்குலாய்
கொழுங்குறைத்தசையெனவீர்ந்துகொண்டது
விழுங்குறுபேயெனவாடைவீங்கிற்றே.

(இ - ன்.) வாடை - வாடைக்காற்றானது.—தம் அன்பர் தீர்ந்தவா - தமது கணவரைப் பிரிந்தவர்களாய், அழுங்குறு - வருந்துகின்ற, மகளிர் - மாதர்களுடைய, புழுங்குறு புணர் முலை-தாபங்கொண்ட (ஒன்றோடொன்று) நெருங்கிய தனங்கள், கொதிப்ப - மிகவும் வெப்பமடையுமபடி, புக்கு உலாய் - (அவற்றினமேற்) சென்று வீசி—(அக்கொங்கைகளை), கொழு (மை) தசை குறை என - கொழுமையுள்ள மாம்சத்தண்ட மென்று கருதி, ஈர்த்து கொண்டு - அரிந்து எடுத்துக் கொண்டு, அது விழுங்குறு - அத்த சையை விழுங்க வந்த, பேய் என - பேய் போல, வீங்கிற்று - வளர்ச்சி பெற்றது; (எ - று.)

வாடைக்காற்று, தலைவரைப் பிரிந்த தலைவியரது கொங்கைகள் மிகத் தபிகுமாறு வீசிக்கொண்டு, அக்கொங்கைகளாகிய ஊனைத் தின்ற ஊனைப் பெருக வந்த பேய்போல மிகவும் பயங்கரமாய் அதிகப்பட்ட தென்பதாம், தற்குறிப்பேற்றவணி. இனி, மூன்றும் அடிக்கு - கொழுமையான உடற் குறையினின்று தசையை (க்கீண்டெடுத்துக்கொள்ளுமாறு) போல அக்கொங் கையை அரிந்து கொண்டு என்ற பதவுரை கூறுவுமாம்; தலைவரைப் பிரிந்த தலைவியரது தனங்களுக்கு வாடைக்காற்று மிக்கதாபத்தை விளைத்தல், தலையற்ற உடம்பினின்று பேய் தசையை யீர்த்து விழுங்குவது போலு மென ஒரு நயம் தோன்றும். தலைவரைப் பிரிந்த மகளிர் வாடையால் தபித் தலை "பனிப்பியல்வாகவுடைய தண் வாடை யிக்கால மிவ்வூர்ப், பனிபபியல் வெல்லாக் தவிர்ந் தெரிவீசும்" என்ற திருவீருத்தத்தாலும் உணர்க. தம் அன்பர் - தமது அனபுக்கு இடமானவர்; தம்மிடத்து அன்புகொண்டவர். விழுங்குறு, அழுங்குறு, புழுங்குறு என்றவற்றில், உறு - துணைவினை. அன் பர்த் தீர்ந்தவர் - இரண்டாம் வேற்றுமைத் தொகை; ஆதலால், "இயல்பின் விகாரம்." தசை=சதை: மாம்சம்; எழுத்துமிலேமாறுதல், இலக்கணப்போலி. வாடை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசுவது; இதிற் பகுதியான வடக்கு என்பது ஈறுறு உயிர் மெய்யும் ககரவொற்றும் நீங்கி முதல் நீண்டது; ஐ - லிருந்து: பகுதியீற்று அகரம் தொக்கது, 'கொழுங்குறைத்தசையி லென்பீர்

ந்து கொண்டது' என்ற பாடமோதுவாரு முளர்: உலாய், ய் - இறந்த கால வினையெச்ச விகுதி. (கஈ)

[அப்பொழுதைய வானத்தின் காட்சி]

கச. *ஆர்த்தெழுதுகள்விசும்படைத்தலானுமின்*
கூர்த்தெழுவாளெனப்பிறழுங்கொட்பினுந்
தார்ப்பெரும்பணையின்றிண்டழங்குதாவினும்
போர்ப்பெருங்களமெனப்பொலிந்ததும்பரே.

(இ - ன்.) *ஆர்த்து* - ஆரவாரஞ் செய்து கொண்டு, *எழு* - மேலெழுகின்ற, *துகள்* - புழுதி, *விசும்பு* அடைத்தலானும் - ஆகாயத்தை மறைத்தலினாலும், —*மின்* - மின்னல்கள், *கூர்த்து எழு வாள்* என - கூர்மை கொண்டு விளங்குகின்ற வாளாயுதங்கள் போல, *பிறழும்* - அசைந்து ஒளி வீசுகின்ற, *கொட்பினும்* - சுழற்சியினாலும்,—*விண்* - மேகங்கள், *தார் பெரும் பணையின்* - மலர்மாலையையணிந்த பெரிய முரசவாத்தியங்கள் போல, *தழங்கு* - ஒலிக்கின்ற ஒலி, *தாவினும்* - எங்கும் பரவுதலாலும்,—*உம்பர்* - ஆகாயமானது, *பெருமபோர் களம் என பொலிந்தது* - பெரிய யுத்தகளம் போல விளங்கிற்று; (எ - று.)

காரணங்காட்டி உவமித்ததனால், ஏதுவுவமையணி. யுத்த களத்திற் சேனைகள் செல்லும் பொழுது அவற்றின கால்கள் படுதலால் தூளிகள் மேலெழுந்து பரவி வானத்தை மறைக்கும்; இங்கு காற்றடித்தலால் ஆரவாரித்துக் கொண்டு தூள் மேலெழுந்து வானத்தை மறைக்கின்றன. வானத்தில் மின்னல்கள் அசைந்து விளங்கிச் செல்லுதல், போர்க்களத்தில் வீரர்கள் உரைகழித்து உருவி யெடுத்துச் சுழற்றும் வாளாயுதங்கள் அசைந்து பளபளவென்று பிரகாசித்தல் போலும். இடிமுழக்கத்திற்கு வாத்திய கோஷம் உவமை. போர்க்கு அறிகுறியாகவும், யுத்தத்தில் வீரர்களுக்கு உற்சாகத்தை வளர்த்தற் பொருட்டும், வாத்தியங்களை முழக்குதல், இயலபு. *துகள்* - தூளி என்ற வடசொல்லின் விகாரம் கொட்பு - சுழற்சி; இப்பல்பெண்ணாகொள்ளலாம். அலங்காரமாகவும் போர்க்கு அறிகுறியாகவும் வாத்தியங்களிற் பூமாலைகட்டுதல் இயல்பாதலால், 'தாரப் பணை' எனப்பட்டது. 'வான்,' 'விசும்பு' என்றவை போல, 'விண்' எனறு ஆகாயத்தின் பெயரும், இடவாகுபெயராய் மேகத்தைக்குறித்தது; ''விண்ணின்று பொய்ப்பின்'' எனத் திருக்குறளிலும் காண்க. *தழங்கு* - வினையடியாய்ப்பிறந்த பெயர். *தாவு* - தாவுதல்; மூதனிலைத் தொழிற்பெயர். இனி, மூன்றும் அடிக்கு—*தார்* - சேனையில் அடிக்கப்படுகின்ற, *பெரும் பணையின்* - பெரிய பறைகள் போல, *விண் தழங்கு* - மேகங்கள் ஒலிக்கின்ற, *தாவினும்* - வலிமையினாலும் [மேகங்கள் வலிமையாக முழங்குதலாலும்] என்று உரைக்கவும்படும். உம்பர் என்ற பெயரில் உகரச்சுட்டு மேலிடத்தைக் குறிக்கின்றது; (இதன் எதிர்மொழி, இம்பர்; இவ்விடம்.)

'*தழங்கலானுமேல்*' என்ற பாடமோதுவாரு முளர். (கச)

[மேகங்கள் மலைமேல் மழை பெய்தல்.]

கரு. இன்னகைச்சனகியைப்பிரிந்தவேந்தன்மேன்
மன்மதன்மலர்க்கணைவழங்கினனெனப்
பொன்னெடுங்குன்றின்மேற்பொழிந்ததாரைகண்
மின்னெடுந்துவன்றினமேகராசியே.

(இ - ன்.) இன் னகை சனகியை பிரிந்த வேந்தல் மேல் - இனிமையான புன்சிரிப்பையுடைய சீதையைப் பிரிந்த இராமபிரான்மேல், மனமதன் மலர் கணை வழங்கினன் என - மன்மதன (தனது) புஷ்பபாணங்களை மேன்மேற் பிரயோகித்தாற் போல,—மின்னெடும் துவனறின மேக ராசி - மின்னல் களுடனே நெருங்கிநிறைந்த மேகங்களின் கூட்டங்கள், பொன் நெடுங் குன் றின்மேல் - பொன்னையுடைய பெரிய மலையின்மேல், தாரைகள் பொழிந்த - மழைத்தாரைகளைச் சொரிந்தன; (எ - று.)

உவமையணி. அனைத்தையும் பொறுத்தலும் எதற்குஞ்சலியாமையும் பெருமையும் வணையும் அளக்கலாகாஅளவும் முதலிய குணங்களையுடைய இராமபிரான், அக்குணங்களையுடைய மலைக்கு உவமையாகாததற்கான. மன் மதனது வர்ணம, மேகவர்ணம். மேல்மேல் அம்புதொடுத்தலே 'பாணவர்ஷம்' என்றல், மரபு. கார்காலம் காமோத்தீபகமாய்ச் சீதையைப்பிரிந்த இராமனே வருத்துதல் தோன்ற காலத்திற்கேற்ற உவமையாக இவ்வருணனை கூறின ரென்க. மேகத்திற்கு மின்னல்கள் கூடியதற்கு ஏற்ப, மன்மதனுக்கு அருகத் தடனிருக்குமபோது அணியும் அணிகலங்களின் ஒளியைக் கொள்க. இங்கே 'பொன்னெடுங்குன்று' என்றது அப்பொழுது இராமபிரான் எழுந்தருளி யிருக்கின்ற இடமான ரிஷ்யமூககிரியை பொன்வரையுஞ்சுரங்களையுடைய பெரிய மலையெனக. பொதுப்பட மலைகளின்மே லெனலுங் கொள்ளலாம்.

பிராட்டியின் புன்சிரிப்பிற பெருமாளுக்கு உள்ள ஈடுபாடு தோன்ற, 'இனகைச் சனகி' என்றார். வேந்தல் - பெருமையிற் சிறந்தவன: ஆண்பாற் சிறப்புப்பெயர். வேந்தியவன - [உயர்ந்தவன்] எனக் காரணக்குறியாம; வேந்து - பகுதி, அல் - பெயர்விகுதி. மன்மத னெனற வடமொழிப்பெயர் - (பிராணி களுடைய) மதியை [அறிவை]க் கலக்குபவ னெனறு பொருள்படும். தாமரை மலர், மாமலர, அசோகமலர, முல்லைமலர், நீலோற்பலமலர் எனனும் ஐந் தும் மன்மதனுக்கு அம்புகளாம். பொழிந்த - முற்று. தாரா - வட சொல். மேகராசி - வடமொழித்தொடர். ராஸி யெனக் கொண்டால், கூட்டம்; ராஜி யெனக் கொண்டால், வரிசை. சனகி - ஜாநகீ என்ற வட சொல்லின் திரிபு; ஜநகமகாராஜன வளர்த்த மகளெனறு பொருள். (எ)

[மழைத்தாரைகளும், இடிகளும்.]

கசு. கல்லிடைப்படுதுளித்திவலிகாரிடு
வில்லிடைச்சரமெனவிசையின்வீழ்ந்தன
செல்லிடைப்பிறந்தசெங்கனல்புகைந்தின
வல்லிடைமணிகிறந்தழலியற்றல்போல்.

(இ - ன்.) கல்லிடை - (அந்தமலைபிறுள்ள) கற்களின் இடையே, படும்- சொரிகின்ற, துளி கிவலே - மழைநீர்த்துளிகள்,—கார் இடு வில்லிடை சரம் என - மேகங்களில் தோன்றிய இந்திரவில்லிலிருந்து பாய்கின்ற அம்புகள் போல, வீசையின் வீழ்ந்தன - வேகத்தோடு விழுந்திட்டன; செல்லிடை பிறந்த செம் கனல்கள் - மேகங்களிலிருந்து தோன்றிய செந்நிறமான இடியாகிய நெருப்புகள்,—மணி அல்லிடை சிறந்த அழல் இயற்றல் போல்-(அம்மலையிலுள்ள) இரத்தினங்கள் இராத்திரிகாலத்திலே மிகுதியாகப் பிரகாசித்து அக்கினிச்சுவாலைபோன்ற ஒளியை வீசுதல்போல, சிந்தின—; (எ-று)

முதல்வாக்கியம் - தந்துநிப்பேற்றவணியும், இரண்டாவதுவாக்கியம் - உவமையணியுமாம். 'செல்லிடைப்பிறந்த செங்கனலிற்சிந்தின, எல்லிடை மணிசிதர்ந்தழலியற்றல்போல்' என்ற பாடத்திற்கு—மணி சிதர்ந்து - (மழைத்துளிகள் விசையோடுவிழுதலால் அம்மலையிலுள்ள இரத்தினங்கள் சிதறி, செல்லிடை பிறந்த செம் கனலின் - மேகங்களினின்று விழுகின்ற சிவந்த இடிவடிவான நெருப்புக்கள்போலவும், எல்லிடை மணி) அழல் இயற்றல் போல் - பகலில் (சூரியகாந்த) ரத்தினங்கள் அக்கினிச்சுவாலையை வீசுதல் போலவும்; (எல் இடை) சிந்தின - ஒளியை இடந்தோறும் வீசின என்ற பொருள்கொள்ளலாம்; இவ்வுரைக்கு சிலசொற்களே ஆவருத்தி செய்துகொள்ளவேண்டும். 'இயற்றல்போன்றும்' என்ற பாடத்திற்கு - மேகங்கள் மழைபொழியும்போது இரத்தினங்களையுஞ் சிந்தினவாகக் கொண்டு செல்லிடை பிறந்த - மேகங்களினின்று தோன்றியவையும், செம் கனலின் சிந்தின-சிவந்த நெருப்புகள்போலக் கீழேசிந்தியவையுமான, எல் இடை மணி - ஒளியைத் தம்மிடத்திற்கொண்ட இரத்தினங்கள், சிதர்ந்து - சிதறி, அழல் இயற்றல் போன்ம் - அக்கினிச்சுவாலையை வீசுதல்போல விளங்கும் என்ற பொருள்காணலாம்; போன்ம்=போலும்.

'கவலை' என்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது; பொருள் ஒன்றே. ஸரம் - வடசொல். செல்வது செல் என மேகத்திற்குக் காரணக்குறி (கஉ)

[மழைத்தாரைகள் விழுதலாற் பெருங்கற்கள் புரளுதல்.]

கஎ. மள்ளர்கண்மறுபடைமானைபாணைமேல்
வெள்ளிவேலெறிவனபோன்றமேகங்க
டள்ளருந்துளிபடத்தகர்ந்துசாய்கிரி
புள்ளிவெங்கடகரிபுரள்வபோன்றவே.

(இ - ன்.) மேகங்கள் - (மலையிலுள்ள கரியபெரிய கற்களின்மேல் மழைத்தாரைகளைச் சொரிகின்ற) மேகங்கள்—மள்ளர்கள் - வீரர்களுடைய, மற்று படை - (பகைவர்களை) எதிர்த்துப் போர்செய்யவல்ல சேனைகள், மானம் யானைமேல் - பெரிய யானைகளின்மேல் வெள்ளி வேல் எறிவன போன்ற - வெண்ணிறமான வேலாயுதங்களை யெறிவன போன்றன; தன் அருள் துளி பட - (அம்மேகங்களினுடைய) விலக்கவொண்ணாத தீர்த்தாரைகள் (விசை

யோடு) விழுதலினால், தகர்ந்து சாய் - பிளந்து விழுகின்ற, கிரி - அப்பெருங் கற்கள், புள்ளி வெம் கட கரி புரள்வ போன்ற - உத்தம லக்ஷணமாகிய செம்புள்ளிகளையும் வெவ்விய மதத்தையுமுடைய யானைகள் (அவ்வேல்கள் படுதலாற்) புரண்டு விழுவன போன்றன; (எ - று)

தந்தூழிப்பேற்றவணி: வருணனை வடிவுபற்றியது. மறுபடை - வினைத் தொகை; மாறுபாடுகொண்ட சேனை யெனினுமாம். வெள்ளி - இகரவீருகு பெற்ற பண்புப்பெயர். வெள்ளி வேல்-வெள்ளியாலாகிய வேலெனினுமாம். எறிவன, புரள்வ-பெயர். போன்ற - மூற்று. கிரி - பெருங்கல்லுக்கு இலக்கணை; மலையெனவே கொண்டும் அமைக்கலாம். புள்ளி பெருமையுமாம். கடம்-கன்னம்; அதிலிருந்து பெருகும் மதஜலத்திற்கு இடவாகுபெயர் இனி மள்ளர்கள் - போர்வீரர்கள், மறு படை மானம் யானைமேல் - எதிர்ச்சேனைகளிலுள்ள பெரிய யானைகளின்மேல், எறிவன - எறிவனவாகிய, வெள்ளி வேல்-வெண்ணிறமான வேலாயுதங்களே, போன்ற - ஒத்த, மேகங்கள் தன் அருகளி - மேகங்களினுடைய விலக்கவொண்ணாத மழைத்தாரைகள், பட - விழுதலினால் என்று பதவுரை கூறுவாரு முளர்.

யானையை யெதிர்த்துப் போர்செய்வார் பெரும்பாலும் வேலினாற் பொரும் இயல்பிற்கு ஏற்ப, 'மள்ளர்கண் மறுபடை மான யானைமேல், வெள்ளி வேலெறிவன' எனப்பட்டது; அதனை, திருக்குறளில் "யானை பிழைத்த வேல்," "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்" என்றும், சீவகசிந்தாமணியில் "விழித்து மேற்சென்றவேழம் வேலினால் விலக்கிநிற்பார்," "விரும் புவார் வேழவேற்போர்" 'சென்றுனிகல்களிறுயிரமிரியச் சினவேலோன்" எனறும் வருவனகொண்டு உணர்க. (கஎ)

[இதுமுதல் ஏழுகவிகள் - மழைவருணனை]

கஅ. வானிடுதனுக்கெடுங்கருப்புவின்மழை
மீனெடுங்கொடியவன்பகழிவீழ்துளி
தானெடுஞ்சார்துணிபிரிததன்மைய
ரூனுடையுடம்பெலாமூழ்ததலோத்ததே.

(இ - ள்.) மழை - மேகம். மீன் நெடுங் கொடியவன்-மீனின்வடிவத்தை யெழுதிய உயர்ந்த துவசத்தையுடைய மன்மதனுக்—வான் இடு தனு - அம்மேகத்தில் தோன்றிய இந்திரதனுசு, நெடுங கரும்பு வில் - (அம்மன் மதன்கையிற்கொண்டு வளைக்கும்) நீண்ட கரும்பாகிய வில்லாக,—வீழ்துளி-(மேகத்தினின்று) விழுகின்ற மழைத்தாரைகள், பகழி - (மன்மதன எய்யும்) அம்புகளாக—நெடுஞ் சார் - நீண்ட மலைச்சாரல்கள், துணை பிரிந்த தன்மையர் - துணைவரைப் பிரிந்தவர்களாக,—ஊன் உடை உடம்பு எலாம் மூழ்கல் ஒத்த - (மழைத்தாரைகள் மலைச்சாரல்களைத் தழுவித்தல்கள் அப்பிரிந்தாருடைய) தசையையுடைய உடம்புகளிலெல்லாம் (மன்மதபாணங்கள்) தைத்தலைப் போன்றன; (எ - று.)—தான் - அசை.

பலபொருள்களைத் தம்முள் இயைபுடையனவாக வைத்து உருவகஞ் செய்தது, இயைபுருவகவணி. இவ்வுருவகத்தை அங்கமாகக்கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணியாகும் இச்செய்யுள். சார் - சாரல் என்பதன் விகாரம்.' 'சார்' என்பதையே மலையைச்சார்ந்துள்ளதான பக்கத்திற்குக் காரணப்பெய ரென்று கொள்ளலுமாம். தோள் பிரிந்த தனமையர் - மகளிரைப்பிரிந்த ஆட வரும், ஆடவரைப்பிரிந்த மகளிரும்: இருவரும் ஒருவர்க்கொருவர் இல்வாழ்க் கைக்குத் தோணியாவர். பிராணநாயகனை அல்லது பிராணநாயகியைப் பிரிந்த தனால் உயிர்போய் ஊன்மாத்திரமேயாயுள்ள உடம்பென்ற விசேஷார்த்தம் தோன்ற, 'ஊனுடையுடம்பு' எனலுமாம். ஊனுடை யுடம்பு - உயிரையுடைய உடன்பன் றென்றபடி; மேல் உஉ-ஆஞ்செய்யுளின முதலிரண்டடிகளைக் காண்க. உடம்பு எலாம் - உடம்பு முழுவதிலு மென்றலுமாம். 'உருக்க லொத்ததே' என்று முற்றுமோனையமையக் காணப்படுகின்ற பாடத்திற்கு - மழைத்தாரைகள் மலைச்சாரல்களைக் கரைத்துக்கொண்டு பெருகுதல், மன் மத பாணங்கள் பிரிந்தாருடைய உடம்பை யுருக்கினற் போலு மென்று பொருள் காண்க.

இனி இச்செய்யுளுக்கு—இந்திர வில்லாகிய நீண்ட கரும்பு வில்லை யுடைய மேகமாகிய மன்மதன் எய்யும் அம்புகள்போல விழுகின்ற மழைத் துளிகள், தாம் நெடுஞ் சார் தோள் பிரிந்த தன்மையர் - தாம்தாம் நெடுநாளாக சச் சார்ந்துள்ள [அல்லது தம்மகருப் பெருஞ்சார்பாகவுள்ள] தோளை யைப் பிரிந்தவர்களுடைய ஊனுடைய உடம்புகளிலெல்லாம் நன்றாகத் தைத்து உருவுவனபோலிருந்தன [அதாவது காமோத்தீபகமாய் அவர்களு டைய பிரிவுத்துயரை மிகுவித்தன] என்று உரைப்பாரு முளர். 'தாநெடுஞ் சார்தோள்' என்பதும் பாடம்.

'மீனெடுங்கொடியன் வன்பகழி' என்றும் பாடமுண்டு. (கஅ)

கசு. தீர்த்தனுங்கவி களுஞ்செறிந்துநம்பகை
பேர்த்தனரினியனப் பேசிவானவ
ராரத்தெனவார்ததன மேகமாய்மலர்
தூர்த்தனவொதத்தனதுள்ளிவெள்ளமே.

(இ - ன்.) 'தீர்த்தனும் - பரிசுத்தமூர்த்தியான இராமபிரானும், கவி களும் - குரங்குகளும், செறிந்து - சேர்ந்து [அல்லது சேர்ந்திட்டதனால்], இனி - இனிவிரைவில், நம பகை பேர்த்தனர் - நமக்குப்பகைவராயுள்ள இராவணன்முதலிய இராகதர்களை அழித்தவராவர்', என பேசி - என்று (தங்களுக்குட்) சொல்லிக்கொண்டு, வானவர்-தேவர்கள், ஆர்த்து என-(மகிழ்ச் சியால்) ஆரவாரித்தாற்போல, மேகம் - மேகங்கள், ஆர்தன - ஆரவாரித் தன; துள்ளி வெள்ளம் - (அம்மேகங்கள் சொரிகின்ற) மழைத்துளிகளின் தொகுதிகள், ஆய் மலர் தூர்த்தன ஒத்தன - (அங்ஙனம் மகிழ்ச்சிகொண்ட தேவர்கள்) தேர்ந்தெடுத்த [சிறந்த] (நறபகத்தருக்களின) மலர்களை (அவ் விராமபிரான்மேலும் குரங்குகளின்மேலும்) மிகுதியாகச்சொரிந்து சிறப்பிய வற்றைப் போன்றன; (எ - று.)

தந்துநிப்பேற்றவனி. நீருக்கு 'மேகபுஷ்பம்' என்ற வடமொழியிற் பெயர்வழங்குதலும், மலர்களைச் சொரிதலைப் புஷ்பவர்ஷமென்னும் வழக்கும், இங்கு உணரத்தக்கன.

தீர்த்தனும் கவிகளும் பேர்த்தனர் - உயர்திணையும் அஃறிணையும் வீரவீச் சிறப்பினால் உயர்திணைமுடிபையேகொண்ட திணைவழுவமைதி; 'பொன்னனும் குதிரையும் வந்தார்கள்' என்றற்போல. இனி 'கவிகள்' என்பதைப் பொருளினால் உயர்திணை யென்றே கொண்டால், இம்முடிபு வழாநிலையே யாம். பேர்த்தனர் - தெளிவும் விரைவும்பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி; தூர்த்தன - பெயர், அன்னி - தளி யென்பதன் விரித்தல்.

'பேர்த்தன நினிதென' என்றும் பாடமுண்டு. (கக)

உ0. வண்ணவிற்கரதலத்தரக்கன்வாளினன்
விண்ணிடைக்கடிதுகொண்டேடகும்வேலையிற்
பெண்ணினுக்கருங்கலமனையபெய்வளை
கண்ணெனப்பொழிந்ததுகால மாரியே.

(இ - ன்.) வண்ணம் வில் கரதலத்து அரக்கன் - அழகிய வில்லை யேந்திய கையையுடைய இராவணன், வாளினன் - வாளாயுதத்தைக்கொண்டவனும், கொண்டு - (சீதையை) எடுத்துக்கொண்டு, விண்ணிடை - ஆகாயத்திலே, கடிது ஏகும் வேலையில் - வீரைவாகச் செல்லுகின்ற சமயத்தில், பெண்ணினுக்கு அருங் கலம் அனைய பெய்வளை கண் என - மகளிர்க்கு அருமையான ஆபரணம்போன்றவளும் அணிந்த வளையல்களையுடையவளுமான சீதாபிராட்டியின் கண்கள் மிகுதியாக நீர்சொரிந்தாற் போல, காலம் மாரி பொழிந்தது - (மேகம்) கார்காலத்தமழையை மிகுதியாகச் சொரிந்தது (எ-று.)

இராவணன் வஞ்சனையாகச் சீதையைத் தனரையோடு பெயர்த்தெடுத்துத் தனது தேரில் வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது, கழுகரசனும் தசரதனுக்கு நண்பனும் அதனால் இராமபிரானுக்குப் பெரியப்பன் முறையாகின்றவனுமான ஜடாயு வந்து எதிர்த்துப் பெரும்போர்செய்து இராவணனுடைய தவசம் குண்டலம் கிரீடம் கவசம் முதலியவற்றைப்பறித்துச் சிதைக்க, இராவணன் தன்கையிலுள்ள வில்லை வளைத்து மிகப்பல அம்புகளை அச்சடாயுவின்மீது மேன்மேல் தொடுக்கவும், அவன் அந்த அம்புகளைத் தனது சிறகுகளினாலும் கால்களாலும் மூக்கினாலும் சின்னபின்னப்படுத்தியதன்றி, இராவணனது வில்லைப் பறகளாறபறித்துக் கால்களால் ஒடித்துவிட்டு, மற்றும் அவனது சாரதி தேர்க்குதிரைகள் தேர் அம்பராத்தாணி முதலியவற்றை அழிக்கவே, இராவணன் தனது சூலம் தண்டம் முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்து அவைபயனிலவான பின்னர் வேறொரு படைக்கலமுமின்றி, முன்பு தான் கைலாசகிரியைப் பெயர்த்தெடுத்த காலத்திற் சிவபிரான் தனக்கு வரமாகக்கொடுத்த சந்திரஹாஸமென்னும் மிகச் சிறந்த வாளாயுதத்தை யெடுத்து அதுகொண்டு சடாயுவைச் சிறகறுத்து வீழ்த்திவிட்டு அப்பாறசென்றனனென்ற கதைக்குறிப்புத் தோன்ற,'வண்ண

வீற்காதலத் தரக்கன் வாளினன், விண்ணிடைக்கடிதுகொண்டேகும் வேலை யில்' என்றார். மற்றும், இவ்வாறு சடாயுவைச் சிறகறுத்துத் தள்ளியபின்பு இராவணன் இவனைப்போன்ற வேறுயாராவது ராமலக்ஷ்மணர்களாவது வந் திடுவரோவென்ற அச்சத்தால் அதிவேகமாகச்சென்றனனென்பதும், சடாயு இராவணனது தேரைச் சிதைத்துவிட்டதனற் பின்பு இராவணன் தனை யோடு சீதையைத் தோளின்மேற்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லலாயி னனென்பதும், தனனே இராவணனெடுத்த மாதரிரத்திலே அலறிக்கதறிப் புலம்பத்தொடங்கிய சீதை சடாயுவைக்கண்டவளவிற் சிறிது ஆறியிருந்தவள் சடாயுசிறகரிறவிழ இராவணன விரைந்தோடும்போது மிகக்கலங்கிப் புலம் பிக் கண்ணீரொரியலாயினனென்பதும், இங்கே கருதத்தக்கன. வஞ்சனே யாற் சீதையையெடுத்துச் செல்லும் அரக்கனது கையில் வில் அலங்காரத் திற்காக அமைந்ததேயன்றிப் போர்வெற்றிக்காக அமைந்திலதென்பது, 'வண்ண விற் காதலத் தரக்கன்' என்றதனாற் பெறப்படும்.

பெய்வளை கண்ணெனப் பொழிந்தது காலமாரி—''தழைத்தபொன் மூலைதடங்கடந்தருவிபோய்த்தாழப், புழைத்தபோல நீர்நிரத்தம்பொழி னின்ற பொலிவால், இழைக்குநுண்ணியமருங்குலா ளிணெடுங்கண்கள், மழைக்கணென்பது காரணக்குறியென வகுத்தான்'' என்பர் சுந்தரகாண்டத்

சிறந்த பெண்ணை 'ஸ்த்ரீரத்நம்', 'பெண்மணி' என்றல் போல, 'பெண் ணருங்கலம்' என்றலும் மரபு; ''பெண்ணருங்கலத்தோடு பிணைந்த பேரருள்'' என்ற சிந்தாமணியையும், ''பெண்ணருங்கலமிது பெறுகவி'' என்ற சூளா மணியையுங் காண்க. பெண்களுக்குச் சிறந்த ஆபரணம்போல அழகு செய் பவளெனக; இவளொருத்தியினது நற்குணநற்செயல்களினால் ஸ்த்ரீ ஜாதி முழுவதற்குமே ஒருசிறப்பு உண்டாகின்றதென்பது, தேர்ந்த கருத்து. இங்கே 'பெண்' எனறது, சாதியைக் குறித்தது. பெய் வளை - வினைத் தொகையன்மொழி. இதற்கு - சொரிந்த வளையல்களையுடையவளென்று பொருள் கொள்ளலுமாம்; இராவணன் கொண்டு செல்லும்போது சீதை ஆபரணங்களைக்கழற்றி ஆடையில் முடிந்து வழியிலே போகட்டன னென் பது மேலே கலனகாண்படலத்திற் கூறப்பட்டது. பெய்வளை கண்ணெனப் பொழிந்தது—''மழைபொருகண்ணினீரவாரியோடு தன், இழைபொதிந்திட்ட னன்'' எனறது கலன்காண்படலம்.

'பெண்ணினுக்கருங்கலமனைய பெய்வளை' என்ற சொற்போக்கில் மக ளிர்க்கெல்லாம் ஓர் அணிகலமாயிருப்பவளும் இயற்கையழகுமிக்கவளுமான இவள் அணிகலமணிதல் அழகினுக்கு அழகுசெய்தவாறேயாகு மென்பது தோன்றும்.

'அரக்கன்வானினி, லெண்ணிடைக்கடிது கொண்டேகுமேல்வையில்' என்றும், 'பொழிந்தன' என்றும லெபிரதிகளிற் காணப்படுகின்றது. (கூ0)

உக. சிரஞ்சுட்ர்மதிபுனைதேவன்விண்டொடர்
புரஞ்சுடவிடுசரம்புரையுமின்னின
மரஞ்சுடப்பொறிநிமிரயிலினுடவ
ருரஞ்சுடவுளைகதனபிரிந்துளோர்க்கெலாம்.

(இ - ள்.) சிரம் - (தனது) முடியில், சுடர் மதி புனை - ஒளியையுடைய சந்திரனைத் தரித்த, தேவன் - கடவுளாகிய சிவபிரான், விண் தொடர் புரம் சுட - ஆகாயமார்க்கத்திற் பறக்குசெலலுகின்ற திரிபுரங்களை எரித்தற் பொருட்டு, விடு - பிரயோகித்த, சரம் - அக்கினியை முனையாகவுடையதான அம்புபோலும், ஒத்துவிளங்குகின்ற, மின் இனம் - மினனல்கள், அரம் சுட பொறி நிமிர் அயிலின் அராவுதலால் உண்டாகின்ற தீப்பொறிகள் மேலே நிமிர்கின்ற வேலாயுதங்களை போல, ஆடவர் உரம் சுட - (கார்காலத்திற்குத் தாம் அறிகுறியாகித்) தலைவியரைப்பிரிந்த தலைவர்களுடைய நெஞ்சைத் தகிக்க, பிரிந்து உளோர்க்கு எலாம் - அந்த ஆடவர்கட்கெல்லாம், உளைந்தன - (நெஞ்சுகள) வருந்தின ; (எ - று.)

மினனல்கள் தாம் பாயும்போது எதிர்ப்பட்ட பொருள்களைத் தவறாமல் எழிக்கவல்லனவாகின்ற இயல்பை முதலிரண்டடிகளில் உவமைகொண்டு விளக்குகிறார் ; (மினனல்பாய்தலே இடிவிழுதலாம்.) சுடா மதி - ஒன்று அல்லது இரண்டு கலைகள் மாத்திரத்தால் மிச்சப்பட்ட பிறைச்சந்திரன். பிறையாயிருப்பவன சுடர்பெற்று மதியாகுமாறு அவனைத்தன்சிரத்திற்கு ஓர் அணியாகக்கொண்டருளிய கடவுளெனபது, 'சிரஞ் சுடர் மதி புனை தேவன' என்றதில் தோனறும்; இனம - வர்க்கம். அரம் - வாள்வீசேடம். அரஞ்சுடப் பொறி நிமிர் அயில் - அரத்தினால் அராவப்படுமபோது நெருப்புப்பொறிகளெளிப்படுதலும் வேலெனறலு மொனறு. உரம - மாபு; மனதிறகு இடவாகுபெயர். இனி, உரம் சுட - நெஞ்சினஉறுதியைப் போக்க வெனினுமாம். பிரிந்துளோர்க்கு, எலாம் - அதனதறுப்பாகிய உள்ளமும் புறததறுப் பாகியஉடலும ஆகிய அனைதும், உளைந்தன - தவிதத னெனறலும் அமையும். பிரிந்துளோருரஞ்சுட (அந்த) ஆடவர்க்கு எலாம் உளைந்தன எனறு மொழிமாறுதல் தகுதி. சரணமடைந்தவனைத் தலைமேற்கொண்டு குறை நீதது அபிவிருத்தி யடையச் செய்தி பரதுகாக்கு மியல்புடைய கடவுளே பகைதத அசுராகளைப் பட்டணங்களோடு எரிப்பவனுயின னெனபது விளங்க, சிரஞ்சுடாமதிபுனை தேவன் விண்தொடா புரஞ்சுட விடுசரம்' எனறார். சந்திரன, உலகததிற்கு ஒளியைக் கொடுக்கும் லோகோபகாரி யாதலால், கடவுளாற் காக்கப் பட்டான்; விண்தொடர்புரங்கள், பறந்து சென்று பல இடங்களின மேலும் இருந்து அந்தந்த இடங்களைப் பாழாக்கி உயிர்களை யழிகக தலைப்பட்டதனால் அத்தேவனால் எரிக்கப்பட்டன வென்க. ஆடவர் - ஆண்மக்கள்; அறிவு, நிறை, ஓர்பு, கடைப்பிடி யென்னும் ஆடேக் குணங்களை யுடையார்.

இச்செய்யுளின் முதலடியும், நான்காமடியும் 'பரஞ்சுடர்ப்பண்ணவன் பண்டு விண்டொடர்', 'உரஞ்சுட வுளைந்தனர் பிரிந்தோரெலாம்' எனறு சில பிரதிகளிற் காணப்படுகினறன.

மேகங்கள் மழைபெய்யும்போது இடையிடையே தோன்றும் மின்னல் களே வருணித்த தாதலால், இச்செய்யுள் இங்கு கின்றது. மின்னின என்ற பாடத்திற்கு - மின்னல்களையுடைய மேகங்க ளென்க. சிவபிரான் திரிபுர மெரிகைத் தொடுத்த அம்பாகிய திருமாலைப்போல விளங்குகின்ற மின்ன லோடு கூடிய மேகங்க ளென்னலாம். (உக)

உஉ. பொருடரப்போயினர்ப்பிரிந்தபொய்புடற்
குருடருதேர்மிசையுயிர்கொண்டுய்த்தலான்
மருடருபிரிவினோய்மாசுணங்கெடக்
கருடனேபொருவினகாலமாரியே.

(இ - ன்.) பொருள் தர போயினர் - செல்வஞ் சம்பாதித்தற் பொருட் டுத் தேசாந்தரஞ் சென்ற தலைவரைப் பிரிந்த—பொய் உடற்கு - (பிராண நாயகரைப் பிரிந்ததனால்) உயிர் நீங்கிய உடம்பு மாத்திரமாயுள்ள தலைவி யர்க்கு, உருள் தரு தேர்மிசை உயிர் கொண்டு உய்த்தலால் - (வீரர்க்து செலல வல்ல) சகரர்களைமந்த தேர்களின மேல் அப்பிரிந்த தலைவர்களா கிய உயிர்களை மீட்டுக கொண்டு வந்து சேர்த்தலால்—காலம் மாரி - கார்கா லத்து மழைகள—மருள தரு பிரிவின நோய் மாசுணம் கெட - மயக்கத் தைச் செயகின்ற (அத்தலைவியரது) பிரிவுதனபங்களாகிய பெரும் பாம்பு கள் அழியும்படி (வந்தி), கருடனே—,பொருவின - ஒத்தன; (எ - று.)

எதுவுவமையணி. தலைவன தலைவியை மணஞ்செய்து கொண்டதன் பின்பு பிரியும பிரிவு ஆறவகைப்படும. ஓதறபிரிவு, காவறபிரிவு, பகைதணி லினைப்பிரிவு, வேந்தற் குறறழிபிரிவு, பொருளவயிறபிரிவு, பரத்தையிற் பிரிவு என. அவறறில், பொருளவயிறபிரிவாவது - திரவியஞ் சமபாதித்தல் காரணமாகத் தலைவன தலைவியைப பிரிந்து தேசாந்தரதிறகுச் செல்லுதல் தாதை மூதாதை முதலிய தன முனனோரால ஈட்டப்பட்ட பொருள் கொணடு இல்லறஞ் செய்தால், அதனால வரும பயன அவாக்கு ஆவதல்லது தனகு ஆகாமையால் தனது பொருள கொண்டு இல்லறஞ் செய்தற்காகத் தான பொருளீடடுதற பொருட்டுச் செலவம கிறைந்தவனன தலைவனும் செல்வனெனக. அவவாறு தலைவியைப் பிரிந்து செல்லும்போது தலைவன, தான காராகாலத்தே மீண்டு வருவதாக காலகுறிதசெல்வன. கற் பொடு பொருந்திக் கணவன சொல்தவறாத தலைவி அவவார்தைதையை நமபி அக்கால வரவை எதிரோக்கிக் கொண்டு அதுவரை பிரிவுத்துயரை ஒரு வாறு பொறுததுக் கொண்டு இல்லத்து இருப்பன. இவவன மிருக்கையில், மூனபெயல்மாரி தொடங்கியதாக அதகண்டு அவள் கார்காலம் வந்த வள வினும் தலைவன வாவிலலையே யெனறு வருந்தத தொடஙகுவள். இவள் செய்தி இவவணமாக, பிரிந்து சென்ற தலைவன, பொருளீட்டிக் கொண்டு வாவிருக்கு மளவிலே, மூனபெயல் மாரியைக் கண்டு, குறித்தகாலம் வந்து விட்டதே யெனறு கருதி, தலைவியிலை யாதாகுமோ வென்று சிந்தித்து, பாகனை விரைந்து தோ செலுத்தச் சொல்லி, பாதாழ்வானுக்குக் கூறிய பதி னொன்று வருடத தவணை கடவாதபடி புஷ்பகமேறி அதிவிரைவாக மீண்டு

வரும் இராமபிரான் போல அதிவேகமாக மீண்டு வந்து தலைவியைச் சேர்ந்து மகிழ்விப்பன். இப்படி, உயிர் நீங்கிய உடம்பில் உயிரைக் கொண்டு சேர்த்தாற் போலப் பிராண நாயகனை விரைவில் தேர்மீது கொண்டு சேர்ப்பது, காலமாரி யென்க. மழை அக்காலத்திற்கு ஞாபகமாகி அவனை விரைவு படுத்தலால் இங்ஙனங் கூறப்பட்டது. ஆகவே அத்தலைவியின் பிரிவு நோயாகிய மகாரோகத்தைத் தான் செய்யுமையில் நின்றபடியே அறத்தலைக் குல் கருடன் போன்றது காலமாரி யென்றார். மரணந்தமான துன்பத்தைத் தருதலால் 'பிரிவினெய் மாசுணம்' எனப்பட்டது.

நோயினர்ப் பிரிந்த-இரண்டாம் வேற்றுமைத் தொகை. பிரிவின் நோய்-பிரிவினாலாகிய நோய்; விரகவேதனை. 'பிரிவுநோய்,' 'காரினமாரி' என்பன பாடபேதம். மாரி - பால்பகா அஃறிணைப் பெயராதலால், 'பொருவின' என்னும் பன்மை முற்றைக் கொண்டது. (உ உ)

உசு. முழங்கின முறைமுறை முரிமேகநீர்
வழங்கின மிடைவன மானையானைக
டழங்கின பொழிமத நிவலைதாழ்தரப்
புழுங்கின வெதிரெதிர் பொருவபோன்றவே.

(இ - ள்.) மூரி மேகம் - பெரிய மேகங்கள், முறை முறை முழங்கின - மாறிமாறி இடிமுழக்கஞ் செய்தனவாய், நீர் வழங்கின - மழையைப் பெய்து கொண்டு, மிடைவன - ஒன்றோடொன்று நெருங்குபவை—மானம் யானைகள் - பெரிய யானைகள், தழங்கின - கர்ச்சித்துக் கொண்டு, பொழி மதம் நிலை தாழ்தர - (தமது உறுப்புக்களினின்று) சொரிகின்ற மதநீர்த்தாரைகள் பெருக, புழுகின எதிர் எதிர் பொருவ - கோபங்கொண்டு ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்வனவற்றை,போன்ற - ஒத்தன; (எ - று.)

உவமையணி. முழங்கி வழங்கி மிடைவனவான மேகங்கள், தழங்கித் தாழ்தரப் பொருவனவான யானைகளைப் போன்றன வென்க. கரிய பெரிய மேகங்கள், அவலகைவடிவினால் யானைகள் போலும். மேகங்களை குமுறுதல்-யானைகள் கர்ச்சித்தலையும் இவை மழை பொழிதல் - அவை மதநீர் சொரிதலையும், இவை ஒன்றோடொன்று நெருங்குதல் - அவை ஒன்றை யொன்று எதிர்த்து நெருங்கிப் போர்செய்தலையும் ஒக்கு மென்றார். 'புழுங்கின' என்பதற்கு - (கோபதாபத்தால்) உடல் வியாதனவாய் என்றும் உரைக்கலாம்.

முழங்கின, வழங்கின தழங்கின, புழுங்கின - முற்றெச்சம். மிடைவன, பொருவ - பெயர். போன்ற - முற்று. முறைமுறை - அடிக்கடி, தாழ்தர, தா - தணிவினை, எதிர் எதிர் - ஒன்றற்கு ஒன்று எதிராக. (உ ரு)

உசு. விசைகொடுமாருதமறித்துவீசலா
லசைவுறுசிறுதுளியப்புமாரியி
னிசைவுறவெய்வன விலையவாயிருந்
திசையொடிசைசெருச்செய்தலொத்தவே.

(இ - ன்.) மாருதம் - காற்று, விசை கொடு - வேகம் கொண்டு, மறித்து வீசலால் - மாறி மாறி [வாடையும் தென்றலும் மேல்காற்றும் கீழ்காற்றுமாக மடங்கி] வீசுதலால், அசைவு உறு சிறு தளி - (தம்மிடத்தினின்று) அசைதல் பொருந்திய சிறிய மழைநீர்த்துளிகளே, அம்பு மாரியின் - பாணவர்ஷத்தைப்போல, இசைவுஉற எய்வன - (எதிர்ப்பக்கத்தில் கெடுத்தாமன வஞ்)சென்றசேரும்படி செலுத்துவனவான மேகங்கள்,—இருதிசையொடு திசை - பெரிய திக்குகளோடு திக்குகள், இபைவ ஆய - (போர்செய்ய)இணங்கினவையாய் செரு செய்தல் - போர்செய்தலே, ஒத்த - போன்றன; (எ - று.)

தம்துரிப்பேற்றவணி. பலபடியாக அடிக்கும் காற்றின் விசையால் மழைத்தாரைகளே மேகங்கள் எதிரெதிரே செலுத்துதலைப் பார்க்குமிடத்து, திசைகளோடு திசைகள் அம்பு தொடுத்துப் போர்செய்கின்ற வாறுபோலிருந்த தென்பதாம் அசைவு உறு - தம்மைவிட்டுப்புடைபெயர்தல் பொருந்தியவென்க; மேகரூபமாகக் காணப்படுகின்ற சீரான்றிரட்சி காற்றுப்பட்டதனால் சீராகப்பரிணமித்து மழையாகப் பொழிகின்றதென்க. இனி, அசைவு உறு - ஓசை மிக்க என்றலுமாம். இயைதல் - சம்மதித்தல். கீழ் ஏழாஞ்செய்யுளில் "எசிலாசைகள் சிரிப்ப" என்றதனோடு மாறுகொளக் கூறலாகாமைப் பொருட்டு, திசைகள் தம்மிற்போர்செய்ய இசைந்து வீளையாட்டாகப் போர் செய்வன வென்றுரைக்க. இனி, 'இயைவாய்' என்பதற்கு நெருங்குவனவாய் என்று உரைப்பாரு முளர். 'விசையவாய்' என்ற பாடத்திற்கு - வேகமுள்ளனவாய் என்று பொருள்.

அப்புமாரி-மென்றொடர் வன்றொடராயிற்று: அப்பு மாரி - அம்புகளினாலாகிய மழை யென வேற்றுமைப் புணர்ச்சியாகவாவது, அம்பாகிய மழை யென அல்வழிப் புணர்ச்சியாகவாவது விரிக்கலாம்; அம்புகள் மழைபோலச் சொரியப்படுதல். எய்வன - பெயர்.

செருச்செய்த செய்கையே' என்றும், 'செருச்செய்த வொத்தவே' என்றும், 'செருச்செய்வபோன்றவே' என்றும் பாடம் காணப்படுகின்றது. (உசை)

அக்கார்காலத்தில் உலகத்துப்பொருள்களின் நிகழ்ச்சியை இதுமுதல் இருபத்து நான்குகவிகளில் வருணிக்கின்றார்.

[உலர்ந்த மாங்கள் தளிர்த்தல்]

உரு. விழையுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந்
தழையுற வுயிருற வுயிர்க்கு மாதரின்
மழையுற மாமுக மலர்ந்து தோன்றின
குழையுறப் பொலிந்தன வுலவைக் கொம்பெலாம்.

(இ - ன்) விழையுறு - (யாவராலும்) விரும்பப்படுவதான, பொருள் - செல்வத்தை, தர - சம்பாதித்துக்கொண்டு வரும்பொருட்டு, பிரிந்த - (தம்மைவிட்டுப்) பிரிந்த (அயல்நாட்டுக்குச்) சென்ற, வேந்தர் - (தமது) தலைவர் [ணவர்], வந்து உழை உற் - (கார்காலம் வந்தவளவிலே) மீண்டுவந்து தம்

மிடம்சோ (அதனால்), உயிர உற - மூன்புபிரிந்த நிலையில் உயிர்கிடந்தது போலிருந்த சமது உடம்பில் உயிர்பொருந்த, உயிர்க்கும் - மூச்சுவிடுகின்ற, மாதரின் - மகளிர்போல,—உலவை கொம்பு எலாம் - (மழையில்லாமலிருந்த காலத்தில்) உலர்ந்துகிடந்த மரங்களின் கிளைகளெல்லாம், மழை உற - மழை வந்தவளவிலே, குழை உற பொலிந்தன - தளிர்கள்பொருந்த வினங்கியவை யாய், மா முகம் மலர்ந்து தோன்றின - அழகிய முகம் மலர்ந்து காணப் பட்டன; (எ - று.)

உவமையணி. காலத்திற்கு ஏற்ற வருணனையாக, அக்கால நிகழ்ச்சி களையே ஒன்றற்கு ஒன்று உவமையாக அமைத்தார். கொம்புகளுக்கு முகம்-முன்னே காணப்படும் இடம். மலர்ச்சி - செழித்தல், அழகியதாகக் காணப் படுதல். பொலிதல் - இளர்தல். 'மாந்தரின்' என்ற பாடத்திற்கு - மனிதர் கள்போலவென்று பொருள்கொண்டு 'வேந்தர்' என்றதற்கு அரசரென்று உரைக்க. உலவை - உலத்திலேயுடையது; உல-பகுதி, ஐ - கருத்தாப்பொருள் விகுதி. உலத்திலெனினும், உலர்திலெனினும், ஒக்கும். 'மழையுற மணமுற மலர்ந்த தோன்றின, குழையுறப் பொலிவுற முலவைக் கொம்பெலாம்' என்ற பிரதிபேத முண்டு. (உஇ)

வே று.

[பாதிரி பூவாமையும், வெண்காந்தள் பூத்தலும் முதலியன.]

உசு. பாடலம் வறுமை கூரப் பகலவன் பசுமை கூரக்
கோடல்கள் பெருமை கூரக் குவலயஞ் சிறுமை கூர
வாடின மயில்கள் பேசா தடங்கின குயில்க ளன்பர்த்
தேடுறத் தளர்ந்தார் போன்றுந் திருவுறக் களிந்தார் போன்றும்.

(இ - ன்.) (அக்கார்காலத்திலே),—பாடலம் - பாதிரிமரங்கள், வறுமை கூர - (மலர்களில்லாமையால்) வெறுமையாயிருக்குந் தன்மை மிக—பகல வன் - சூரியன், பசுமை கூர - குளிர்ந்திருக்குந் தன்மைமிக—கோடல்கள் - வெண்காந்தட்செடிகள், பெருமை கூர - (மலர்களைப்பெறுதலாற்) பெருமை மிக,—குவலயம் - குவளை மலர்கள், சிறுமை கூர - வாட்டம் மிக,—மயில் கள்—, திரு உற களிந்தார் போன்று - செல்வம் வாய்த்ததனால் மகிழ்ச்சி பெற்றவர்போல, ஆடின - களித்துக் கூத்தாடின; குயில்கள்—, அன்பர் தேடுற தளர்ந்தார் போன்று - தம்மை விட்டுப்பிரிந்த அன்புள்ள உறவின ரைத் தேடவேண்டியவராய்த் தளர்ச்சி யடைந்தவர்போல, பேசாது அடங் கின - பேசாமல் அடங்கின; (எ - று.)

உவமையணியை அங்கமாகக் கொண்டுவந்த தன்மை நவிற்சியணி. 'சித்திரையிற் பாதிரி பூத்தது' என்றபடி பாதிரிமரம் இளவேனிற்பருவத்தே பூப்ப தாதலால், கார்காலத்தில் மலரின்றிப் பாழடையும். அப்பருவத்தில், மேகஞ்சாரத்தாலும், மழையினாலிய குளிர்ச்சியினாலும், சூரியனுடைய வெப்பம் பூமியில்தோன்றாது கார்த்திகைக் கொடியென்றும், கார்த்திகைப் பூவென்றும் வழங்கும்படி வெண்காந்தள் மழைக்காலத்திற் பூத்தல், இயல்பு.

அக்காலத்திற் குவளைமலர்கள் குவிந்திடும். 'மயிலாடக் குயில்வாட மாமுகில் எழுக்தது,' "மாவிற் குயிலு மயிலு மொளிசெய்ய, மேவிப் புயல்தவழும்" என்றபடி, மழைக்காலத்தில் மயிலுக்குக் கொண்டாட்டமும், குயிலுக்குத் தின்டாட்டமு மாதலால், மயில்ஆடும் குயில்கூவாது ஒடுங்கும். அப்பொழுது அரசாட்சிச் செல்வம்பெற்று மகிழ்ந்த சுக்கிரீவனைக் களித்தாடுகின்ற மயிலுக்கும், பிராட்டியைத் தேடுங் கவலையாற் சோர்ந்திருக்கின்ற இராமபிரானைக் கூவாது ஒடுங்குகின்ற குயிலுக்கும் காலத்திற்கேற்ற உவமையாகக் கொண்டு, 'இருவுறக்கினர்க்தார் போன்றும், அன்பர்த் தேடுறத் தளர்ந்தார் போன்றும்' என்றார். உபமான உபமேயங்கள் முறைமாறியிருத்தல், எதிர்நிரல் நிறைப் போருள்கோள். இராமபிரானுடன இருந்த அவஞெடொப்ப இன்ப் துன் பங்களை அனுபவிக்கின்ற இலக்குமணனையும், சுக்கிரீவனுடன் இருந்த அவஞெடொப்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற தாரன், நீலன், நளன் அநுமான் முதலிய வானரர்களையும் உளப்படுத்தி, 'தளர்ந்தார்,' 'இளர்ந்தார்' என்ற பன்மையாற் கூறினர். தளர்ந்தாரைப் பாடலம் குவலயம் என்பவற்றிற்கும், இளர்ந்தாரைப் பகலவன் கோடல்கள் என்பவற்றிற்கு முட்பட உவமையாக்குதலு மொன்று; அப்பொழுது தாபமின்றித் தண்ணென்றிருத் தலைச் சூரியனுக்கு ஆக்கமாகக் கற்பித்தவாறும்.

பகலவன்-(தனது சேர்க்கையாற்) பகற்பொழுதைச் செய்பவன். பசுமை-இங்கே, குளிர்ச்சியின் மேலது; குளிர்ந்தநீரை 'பச்சைஜலம்' என்னும் வழக்கையுங் காண்க இனி, பகலவன் பசுமைகூற - சூரியன் மிகவும் ஒளிமழுங்க வென்றலுமாம். கோடல், கொடியாகவும் உண்டு. மயில் - மயூர மென்ற வட சொல்லின் திரிவது. அன்பர்த் தேடுற - இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஈற்றடியில் உம்மைகள் - எதிரதும் இறந்ததும் தழுவியன.

'அன்பாற் கேடுறத்தளர்ந்தாபோன்றும்' என்று பாடமோதுவாருமுளர். 'அன்பர் தேடுற' என்றும், 'ஆக்கந்தேடுற' என்றும் காணப்படுகின்றது.

இச்செய்யுளில், வறுமை பசுமை, பெருமை சிறுமை, ஆடின அடங்கின, தளர்ந்தார் இளர்ந்தார் என்ற அடிதோறும் மாறுபட்ட சொற்கள் வந்தது, முரண்தொடை.

இதுமுதற் பத்துக் கவிகள் - அரியற்படலத்தின் முதற்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (உக)

[சங்காந்தட்பூ.]

உள. நானிறச்சுரும்பும்வண்டுநண்மணியணியுஞ்சாரற்
சேறணுகமலர்க்குசாய்ந்தசேயிதழ்க்காந்தட்செம்பூ
வேனிலிலவென்றதம்மாகாரெனவியக்குநோக்கி
மானிலக்கிழத்திகைகண்மறித்தனபோன்றமன்னோ.

(இ - ன்.) நால் நிறம் சுரும்பும் - பலநிறங்களையுடைய (வண்டின் சாதி பேதமாகிய) சுரும்புகளும், வண்டும் - கருவண்டுகளும், நல் மணி அணியும் - சிறந்த இரத்தினங்கள்போல் அலங்கரிக்கப்பெற்ற [அழகிதாக மொய்க்கப்

பெற்ற], சாரல் - மலைச்சாரல்களில், தேன் உக மலர்ந்து சாய்ந்த - தேன் வழிய மலர்ந்து சாய்ந்து அசைகின்ற, சேய் இதழ் காந்தள் செம் பூ - சிவந்த இதழ்களையுடைய செங்காந்தள்மலர்கள்,—மால் நிலம் நிழத்தி - பெரிய பூமி தேவி, நோக்கி - (கார்காலத்தின் அழகைப்) பார்த்து, வேனிலை வென்றது அம்மா' கார் என வியந்து - 'வசந்தகாலத்தை வென்றுவிட்டது கார்காலம்' என்று அதிசயித்து, மறித்தன - (அந்தவேனிற்காலத்தைக் குறிப்புக்காட்டித்) தடுத்தனவான, கைகள் - கைகளை, போன்ற - ஒத்தன; (எ - று.)—மன், ஓ - ஈற்றசை அம்மா - அதிசயத்தைக்காட்டும் இடைச்சொல்.

தற்குறிப்பேற்றவணி. அக்கார்காலத்திற் செங்காந்தள்மலர்கள் மலர்ந்து சாய்ந்து அசைவது, பூமிதேவி கார்காலத்தைப் பார்த்து இது வசந்தகாலத்திலுஞ் சிறந்ததாயிருக்கின்ற தென்று கொண்டாடி அவ்வசந்தகாலத்தை 'இனி நீ வேண்டா' என்று கைகளாற் சைகைகாட்டித் தடுக்கின்றவாறுபோலிருந்தது என்று உத்ப்ரேக்ஷித்தார். இதழ்விரிந்த செங்காந்தள்மலர், அகங்கைவிரித்தாற்போலிருக்கும்; "காந்த னஞ்செங்கை" என்றார் பிறரும். வேனில் - இங்கே இளவேனில். அது பருவங்களுட்சிறந்ததென்ற தலைமை பெற்ற தாதலால் அதனைவென்றமை 'அம்மா' என்று வியக்கும்படியாயிற்று. இனி, வேனில் - முதுவேனிலும் உட்படப் பொதுப்பட வெயிற்காலமாகிய நான்கு மாதங்களென்று கொள்ளுதலும் ஒன்று; வெயிற்காலத்திலுண்டான வெப்பம் வேர்வை முதலிய குற்றங்களை யொழித்ததனால், வேனிலைக் கார் வென்றது. 'வேனிலை வென்றது' என்றதற்கு - (கம்மை வற்றச்செய்யும்) வெயிற்காலத்தை யொழித்தது என்றும், 'நிலத்திழித்தி கைகள் மறித்தன போன்ற' என்றதற்கு - பூமியாகிய பெண் கைகளை விரித்துக்கொண்டு ஆட அக்கைகள்போன்றன வென்றும் உரைப்பாரு முளர். சுரும்பு-பொறிவண்டு. கால் நிறம் - பலவகையான என்றலுமாம்.

'சாரற்காந்தள்' என்றதனால், காந்தள் குறிஞ்சிநிலத்தென வினங்கிற்று: (மலையும், மலைசார்ந்த இடமும் - குறிஞ்சி) மால் - பெருமை: உரிசசொல். நிலத் திழத்தி - பூமிக்கு உரியவன். திழத்தி-உரிமையை யுணர்த்தும் 'திழமை' என்னும் பண்பினடியாப் பிறந்த பெண்பாற்பெயர்; இ - விகுதி, அ-சாரியை; (இதன் ஆண்பால், திழவன்.) 'நவமணியணியும்' என்றும், 'மலர்ந்த சந்தச் சேயிதழ்' என்றும், 'மலர்ந் தசைந்த' என்றும் பாடாந்தரம். 'நவ மணி யணியிற் சார' என்ற பாடத்திற்கு - பலநிறங்களையுடைய சுரும்புகளும் கருவண்டுகளும் நவரத்தினசசிதமான (கைகளிலணியும் வளை மோதிரம் முதலிய) ஆபரணங்கள் போல(க் காந்தள் மலர்களிற்) சூழ்ந்தமொய்க்க என்று பொருள். (உஎ)

[வெண்காந்தள்.]

உஅ. வாளையிற்றரவம்போலவண்றலைகான்றமானத்
தாளுடைக்கோடறம்மைத்தழீஇயனகாதறங்க
ளீளலவையுமன்னவிழைவனவுணர்வுவீந்த
கோளரவென்னப்பின்னியவற்றெடுங்குழைந்துசாய்ந்த.

(இ - ள்.) வாள் எயிறு அரவம் - வாளாயுதம்போன்ற [கூரிய] பற்களை யுடைய நாகங்கள்,—போல வல் தலை கான்ற - (தங்கள்) வலிய தலை போல மலர்களை மேற்புறத்தில் வெளிப்படுத்திய, மானம் தான் உடை கோடல் தம்மை-பெரிய நாளத்தையுடைய வெண்காந்தட்செடிகளை, (நாக்கங்களென்றே எண்ணி), காதல் தங்க தழீஇயன - ஆசைபொருந்தத் தழுவிக்கொண்டன வாய், மீளல - விட்டுநீங்காமலிருந்தன; அவையும் - அவ்வெண்காந்தட் செடி களும்,—அன்ன விழைவன உணர்வு வீந்த கோள் அரவு என்ன - அத் தனைமையனவாகவே விரும்புவனவாய் (அக்காதல் மிகுதியால்) உணர்ச்சி நீங்கிய கொலைசெய்ய மியல்புள்ள நாகங்கள்போல, அவற்றொடும் பின்னி குழைந்து சாய்ந்த - அந்த நாகங்களுடனே பின்னிக்கொண்டு ஒற்றுமைப்பட் டுச் சாய்ந்துகிடந்தன; (எ - று)

ஆணும் பெண்ணும் ஈருடம்பு ஒருடம்பாகுமாறு தம்மிற் பின்னிக் கொண்டு இழைந்து போகம்நுகர்தல், நாகங்களின இயல்பு. நீண்டு வளர்ந்த வெண்காந்தட்செடிகள் பாம்பின்படம் போன்ற மலர்களை யுடையனவாம் போது, பாம்புகள்போலும்; இதுபற்றியே, "காந்தளும் பாந்தளைப் பாரித் தலர்ந்தனவே" 'வெய்யவா ளரவுபைத்தாலித்தனனங்காந்தளவிழ்ந்தலர்ந் தன,' "பைந்நாகப் பள்ளி மணிவண்ணனிற் பாயல் கொண்டு, கைந்நாகம் அஞ்சுங் கமழ் காந்த ளஞ்சாரல்" எனறார் பிறரும். முதல்வாக்கியம்—அம் மலையிலுள்ள நாகங்கள், நீண்ட தாளின்மீது விரிந்தமலரைக்கொண்ட வெண் காந்தட் செடிகளைப் பார்த்து, தமக்குத் துணையாதற்கேறற வேறறப் பாலராகிய நாகங்க ளென்று பிரமித்து, ஆசையோடு அவற்றை இறுகத்தழு விக்கொண்டு விடாதிருந்தன வென்றவாறும்; மயக்கவணி. இரண்டாம் வாக்கியத்திலே, அசேதநமாகிய அச்செடிகள - அததழுவதலுக்கு உட்பட்டு அவற்றோடு பினனிக்கொணடு சாய்ந்துகிடந்ததை, இந்நாகங்களும் அவ்வாறே காமவசப்பட்டு மோகாதிசயத்தால் உணர்ச்சி நீங்க அவசமாய் அவற்றோடு பினனி ஒற்றுமைபபட்டுச் சாய்ந்துகிடந்தாற் போலுமென்ற வருணித்தார்; தற்குறிப்பேற்றம் இவவாறு இரண்டு அணிகள தம்மில் வேறுபாடு தோன் றச் சோகது ஒந்ததலுல் சேர்வையணி. நாகங்கள் காந்தட் செடிகளைத் தழுவிய பின்பும் நாகமல்ல வென்று உணர்ந்து விடாமலிருந்ததற்குக் காரண தததை விளக்கியது, இரண்டாம் வாக்கியம்.

தலை காலுதல் - படமெடித்தாற்போலப் பூப்பூத்தல். தழீஇயன = தழுவி யன: சொல் விகாரப்பட்டு அளபெடுத்ததலுல, சொல்லிசை யளபெடை; மாத்திரை, மூனறு. கோள் - உயிரைக சொள்ளுதல், உயிரைக் கவர்தல், கொல்லுதல்; கொள எனனும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். குழைதல் - நெகிழ்ந்து ஒன்றுதல்.

'அரவம்போல வானறலை தோனற வார்ந்த,' 'கோடறம்மிற்றழீஇயன' 'மீனலவாங்' எனறும பாடமுண்டு. இச்செய்யுள் "வானெயிற்றரவம் போன்ற வான்றலை தோன்றவார்ந்த, தாளுடைக் கோடறம்மிற் றழுவின காதறங்கி, மீன மெல்லணையின் மனனன் விழைவிலுணர்வு வீந்த, தோனெனப் பின்

னியாங்கே யவற்றொடுங் கலங்கிச் சாய்ந்த" என்று சில பிரதிகளிற் காணப் படுகின்றது. (உரை)

[தும்பலப்பூச்சி.]

உகூ எள்ளிடவிடனுமின்றியெழுந்தனவிலங்குகோபந
தள்ளுறத்தலைவாதம்மைபிரிந்தவர்தழீஇயதூமக்
கள்ளுடையோதியார்தங்கலவியிற்பலகாற்கான்ற
வெளளடைத்தமபற்குப்பைசிதார்ந்தெனவிரிந்தமாதோ.

(இ - ள்.) எள் இடவும் இடன் இன்றி - ஓர் எள்ளைப் போகடுதற்கே னும் வெறுமிடமில்லாதபடி, எழுந்தன இலஞ்சு - தரைமேற் பொருந்தியன வாய் விளங்குகின்ற, கோபம் - இந்திரகோபமெனனும் பட்டுப் பூச்சிகள்,— தள்ளுற - (சிலகாலங்) கழிய, தம்மை பிரிந்தவர் - தம்மைவிட்டு நீங்கி அயல் நாட்டுக்குச் சென்றிருந்தவர்களான, தலைவர் - (தமது) கணவர், தழீஇய - (கார்காலத்தில்) மீண்டுவந்து சேரப்பெற்ற, தூமம் கள் உடை ஓதியார் - (அகிற் புகை முதலிய வாசனைப்)புகை யூட்டப் பெற்றதும் (சூடிய மலர்க ளின்) தேனை யுடையதுமான கூந்தலை யுடையவர்களாகிய மகளிர், தம் கலவி யில் - தாம் (அகக்கணவரோடு) அடுத்தடுத்துச் செய்யுஞ் சோக்கையில், பல நால் காணற - பலமுறை உமிழ்ந்த, வெள் அடை தம்பல குப்பை - வெறறி லைத் தம்பலங்களின தொகுதிகள, சிதார்ந்து என - சிந்திக்கிடந்தாற் போல, விரிந்த - மிகுதியாயிருந்தன; (எ - று.)—மாது, ஓ - ஈறதசை.

தம்பலம் - வெற்றிலை பாக்கு சுண்ணமபுகள் சேர்ந்த சேர்க்கையின் சாரம்; தாம்பூலந் தரிக்குமபோது அதனினின்று வாயில் ஊறுவது. இது போனற நிறமுடையதா யிருத்தல் பறறி, மழைக்காலத்திலே தரைமீது நிறைந்து காணப்படும் இந்திரகோபமெனனும் பட்டுப்பூச்சிகளுகுத் தம்ப லப்பூச்சி யெனற பெயராம். சில பல நாள்கள் தலைவியரைப் பிரிந்து சென றிருந்த தலைவர் காரகாலம் வந்த வளவிலே மீண்டுவந்து சோந்தனராக "பிரிந்தவர் கூடினுற பேசல்வேண்டுமோ" எனறபடி அத்தலைவியர் காதல் கைவிஞ்சி அவரோடு அடுத்தடுத்துச் சேருமபோது அடிக்கடி தாம்பூலம் உப யோகித்தல கொண்டு தம்பலம் உமிழ அததம்பலங்கள் எங்குங கிடந்தாற் போன்றன. அம்மழைக்காலதிலே தரையில் அடர்ததியாக நிரமபிக் காணப் படுகினற இந்திர கோபங்க ளென்று வருணிததார். நற்குறிப்பேற்றவணி. தாம்பூலம் உபயோகிகும் போது முதலில் ஊறுகினற ரசததை உமிழ்ந்து விட்டுப் பின்பு ஊறும் ரசத்தை உட்கொள்ள வேண்டுமெனனும் நேகரோக் கிய முறைபற்றித் தம்பலம உமிழ்தல் இயல்பு.

டன் - ஈற்றுப்போலி. நாமைகதேயே நாமகரணம் [ஒருபெயரின் ஒரு பகுப்பைகொண்டு அப்பெயரைக் குறித்தல்] எனனும் நியாயத்தால், இந்திர கோபத்தை 'கோபம்' என்றார். தள்ளுற - தள்ள; உறு - தனேவினை. 'தள்ளுற' என்பதறகு - (பிரிவுத்தியாரால தமக்குத்) தளாச்சி யுண்டாகவென் றும் உரைக்கலாம். தழீஇய - தழுவிய. தூமம் - வடசொல். கலவி - கலத்

தல்: 'வி' விகுதி பெற்ற தொழிற்பெயர். அடை - இலை. தம்பல் - கைடக் குறை விகாரம்; இயற்கை நலத்தினால் மாதவிரமன்றிச் செயற்கை நலத்தா லும் கணவரை மேன்மேல் மகிழ்விக்கின்றன ரெனபார், 'தூமக் கன்னுடை யோதியார்' என்றார். 'தூமக்கன்னுடை யோதியார்' எனற பாடத்திற்கு - (சூடிய) மலர்மாலைகளின் தேனையுடைய கூந்தலையுடையவர்களான் மகளிர் ரென்ற பொருள்; தாமம் - மாலை. 'எள்ளிட விடனுமினறி' என்ற விடத்து இழிவு சிறப்பும்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

'இடமொன்றின்றி', 'தழுவத்தாய' என்பன பாடபேதம். (உக)

[வேங்கைமலர், கோன்றைமலர், மலையநவி.]

ந.o. நீங்கனிகாவ லோங்குஞ்சேணுயர்குன்றிற்செம்பொன்
வாங்கினகொண்டுபாரின்மண்டுமாலியாறுமான
வேங்கையின்மலருங்கொன்றைவிரிந்தனவீயுமீர்த்துக்
தாங்கினகலுழிசென்றுதலைமயக்குறுவதம்மில்.

(இ - ள) நீம் - இனிமையான, கனி - பழத்தையுடைய, காவல்-காவல் மரம், ஓங்கும் - உயர்ந்திருக்கப்பெற்ற, சேண் உயர் குன்றின - ஆகாயத்தை யளாவி உயர்ந்திருக்கின்ற மகாமேருமலையினின்று, வாங்கின செம் பொன் கொண்டு-பிருதியான சிவந்த பொன்னை யடிதலுக் கொண்டு, பாரில் மண்டு-பூமியில் பிக்குப்பெருகுகின்ற, மால் யாறு - பெரிய (ஜம்பூவனனும்) நதியை, மான - ஒப்ப,—(அந்த நிலையமூகநிரியி லிருந்து) வேங்கையின் மலரும் - வேங்கை மரத்தின மலாகளையும, கொன்றை விரிந்தன வீயும் - கொன்றை மரத்தில் மலாந்தனவான மலாகளையும, ஈர்த்து தாங்கின - இழுத்துத் தம் மீது கொண்டு வருவனவான, கலுழி - நீாப்பெருகுக்கள, சென்று-பெருகி, தம்மில் தலைமயக்கு உறுவ - தமக்குள் [ஒன்றோடொன்று] கலப்பனவா யின; (எ - று.)

'இந்த ஜம்பூகவீபத்தின் நடுவிலுளள மேருவெனனும பொன்மலையைச் சார்ந்து தெற்கிலிருக்கின்ற கந்தமாதனமெனனும உபபர்வதத்தில் உள்ள தொரு மிகப்பெரிய காவல்மரத்தின் பழங்கள் மகாகஜப்பிரமாணமுள்ளவை யாய் அம்மலையின மேல்விழுந்து சிதைய அவறறின் ரஸத்திலுல் ஜம்பூநதி யென்ற ஓர் ஆறு பெருகுகின்றது. அவவாற்றுக் கரையின் மண்ணுனது அந்த ரஸத்தில் கனேந்து காற்றினுல் உலர, ஜாம்பூநதமென்ற பெயர் கொண்டு விளங்கும்படியான ஸ்வர்ணமாகின்றது. அந்த காவல் மரத் தைப்பற்றித் தான. இந்தத் தீவுகு ஜம்பூத்வீபமெனகின்ற பெயர் உண்டா யிற்று' எனறு புராணம் கூறும். (''பட்டமார்ந்து மாகரியனவெனப் பருத் தக், கொட்டை நுண்ணிய காவலின் கொழுங்கனிச்சாறு, பெட்ட சம்புமா நதியென வலங்கொடு பெருகி உட்டெளிக்கும் பொன்மேருவைச்சுல வினி தோடும்,'' ''அதிருமப்புனலருந்தின ருகுகரையசும்பு, ததையும் வெக்கதிர் காற்றுதவுலர்ந்து சுற்சாம்பு நதமெனுமபொனு மாங்கதினணி புனை லத் தோர், இதமில் வெம்பிணி கரைதிரையற்றினிதிருப்பார்'' என்றபாவேதமும்,

''கடிகமழு நாவலெனுன்று தெனபால் நின்றகாரணத்தாற் பாரதன்றன்கண்ட மூற்றும், இடனுடைய நாவலந்தீவெனப்பேர்பெற்றது இத்தருவின் நீங்களி நீராரும் மேருத், தடவரையைப் புடை சூழ்ந்து வடபாற்சென்று சம்புநதிப் பெயாபெறும் புச்சலிலந்தத்தோர், உடல்முழுதும பொனமயமா யயுத மேலு மொரு மூவாயிரமாண்டக் குறுவானறே'' என்ற கந்தபுராணமும் காணத்தக்கன.)

அந்த நாவற்பழத்து ரஸத்தின் சம்பந்தத்தாலும் பொன்மயமான மேரு மலையினின்று பெருகுதலாலும் பொனனைக் கொழித்துக்கொண்டு வரு கின்ற ஜம்பூநதியை இந்த நிசியமூகமகாகிரியில் மழைபெய்தலாற் கார்கா லத்தே மலர்ந்த பொனனிறமமிக்க வேங்கைமலர்களையும் கொனறைமலர் களையும் அடித்துக்கொண்டு வருகின்ற ஆறறுப்பெருக்கிற்கு உவமை கூறி னார்; உவமையணி.

சேண் உயர் - மிகவுயர்ந்த என்றமாம்; ஒருபொருட் பன்மொழி. மேரு மலை எண்பத்துநாலாயிரம் யோஜனை உயரமுள்ளதென்று புராணம் கூறுத லால், அதனை 'சேணுயர் குனறு' எனறல் தகும். அந்த நாவல் மாதத்தின் உயரம் பதினேராயிரம் யோஜனையளவென்று புராணம் கூறுதலால், 'நாவ லோங்கும்' எனப்பட்டது. செம் பொன் - மாறறுயர்ந்த பொன. கழுழி - காட்டாறு: கழுழ்தலையுடைய தெனக் காரணபபெய ரென்னலாம்; கழுழ் தல் - கலங்குதல்; இ - பெயர்விகுதி கழுவுதி எனற வடசொல்லின திரிபெ னக் கொண்டாலும் இவ்வாறே பொருள்படும். தலைமயங்குதல் - கலத்தல்; இது இப்பொருளதாதலை ''சாறறும் வேள்வியும் தலைமயங்குமே'' எனப் பால காண்டத்திலும் காண்க. இதில், 'தலை' என்பது - தமிழ் உபஸர்க்கம்; தலைக் கூடுதல், தலைப்பிரிவு என்றவற்றிற்போல. மயக்கு - மயங்குஎன்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். மயக்கு உறுதல் - கலப்படைதல்.

'வீயுமீதாய்த்தாங்கின நதிகள்சென்று' என்பது பாடாந்தரம். (நூ0)

[செங்காந்தள்மலர், கொன்றைமலர், இந்திரகோபம்.]

நூக. நன்னெடுங்காந்தட்போதினைவிரிகடுக்கைமென்பூத்
தன்னியகோபத்தோடுநேதான்றியதோற்றந்தும்பி
யின்னிசைமுரல்வநோக்கியிருநிலமலர்க்கையேந்திப்
பொன்னெடுங்காசையீட்டிகொடுப்பதேபோன்றதன்றே.

(இ - ன்.) நல் - அழகிய, நெடு - காளம் உயர்ந்த, காந்தள் போதில் - செங்காந்தண்மலரில், நறை விரி கடுக்கை மெல் பூ - வாசனைவீசுகின்ற மென் மையான கொனறை மலர்கள், தனனிய கோபதோடும் - பொருந்திய தம்பலப் பூச்சிகளுடன், தோனறிய - விளங்குகின்ற, தோற்றம் - காட்சியா னது—இன இசை முரல்வ - இனிமையான இசையைப் பாடுவனவான, தும்பி நோக்கி - வண்டுகளைக் குறித்து, இரு நிலம - பெரிய பூமிதேவி, மலர் கை ஏந்தி - விரிந்த (தன்) கைகளை உயர எடுத்து, பொன்னெடும் காசை

சுட்டி - பொன்னோடு இரத்தினங்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு, கொடுப்பதே - கொடுப்பதையே, போன்றது - ஒத்தது; (எ - று.)—அனறே-ற்றசை.

தரையில் உயர்ந்தெழுந்த காந்தட்செடிகளின் செவ்வந்தமலர்களிற் கொன்றைமரத்தினின்று விழுந்த பொன்னிறமான மலர்கள் தங்க அவற்றுடன் தும்பலப்பூச்சிகளும் எழுந்து அந்தச்செங்காந்தன்மலர்களிற் சேர்ந்த தோற்றமானது. வண்டுகள் இனிமையாக இசைபாடுவதைக் கேட்டு மகிழ்ந்து பூமிதேவி தன்கையிலே உயர எடுத்து அவற்றிற் பொன்னையும் மாணிக்கத்தையும் வைத்துக்கொண்டு அவ்வண்டுகளுக்குப் பரிசு கொடுக்கின்றவாறு போலிருந்த தென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. காந்தட்குக் கையும், கொன்றைமலர்க்குப் பொன்னும், இந்திரகோபத்திற்கு மாணிக்கமும் நிறத்தால் உவமம். காந்தட்குக் கை வடிவிலும் ஒப்பாம். 'கொடுப்பதே' என்ற தேற்றகாரம, தற்குறிப்பேற்றத்திற்கு அங்கமாய் நின்றது.

கறை வினி - தேன் மிக்க எனினுமாம். இந்திரகோபத்திற்கு எழுதலும் இயல்பாதலை "சிந்தூரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ் சோலையெங்கும், இந்திரகோபங்களே யெழுந்தம் பரந்திட்டனவால்" என்ற பெரியாருரைச் செயலினாலும், 'பூமியிலே தோற்றுவன சிலவும், ஆகாசத்திலே எழும்புவன சிலவும் காலடியிட்டு மேல்செல விழுந்தாப்போலேயிருப்பன சிலவுமா யிராகின்றனவாய்த்து' என்ற அதன் வியாக்யான வாக்கியத்தாலும் அறிக. தும்பி-வண்டின் சாதிபேதம். முரல்வ - பலவின்பாற்பெயர்; முரல்வது என்பதன் விகாரமாகக்கொண்டும் உரைக்கலாம். தும்பி இசை முரலுதல் - ரீங்காரஞ் செய்தல். மலர்க்கை - மலர்தலையுடைய கை யென இரண்டனுருபும் பயனுக்தொக்கதொகை. காசு - வரத்தினங்களுக்கும் பொதுவான பெயர்; இங்கே சிறப்பாய், செங்நிறமுடைய பதுமராகமென்னும் மாணிக்கத்தைக் குறித்தது. 'போன்றவன்றே' என்ற பாடத்திற்கு, எழுவாயாகிய தோற்றம் என்ற பால்பகா அஃறிணைப்பெயரைப் பண்மையாகக் கொள்ளவேண்டும்.

'கடுக்கைநன்பூ' என்றும், 'இருநிலமகன் கையேற்றி' எனறும், 'காசை நீட்டி' என்றும் பாடங்கள் காணப்படுகின்றன. (ஈக)

[வண்டோலி, இடிமுழக்கம், மயில்ஆதேல், தோன்றிப்பூ, கருவிளமலர்]

ஈஉ. கிளைத்தணிமழலைவண்டுகின்னரஞ்சிகர்த்தமின்னுக்
குளிக்குரன்மேகம்வள்வார்த்தூரியத்துவைப்பபோன்ற
வளைக்கையர்போன்றமஞ்ஞைதோன்றிகளரங்கின்மாடே
விளக்கினமொத்தகாண்போர்விழியொத்தவிளையின்மென்பூ.

(இ - ன்.) கிளை - கைக்கிளை யென்னும் இசைக்கு, அணை - சமமான, மழலை - இனிய ரீங்காரத்தையுடைய, வண்டு - வண்டுகள், கின்னரம் கிகர்த்த-யாழைப்போன்றன; மின்னும் அளி குரல் மேகம்-மின்னுவனவும் மழை பெய்தலையும் இடிமுழக்கத்தையு முடையனவுமான மேகங்கள், வள் வார்

தூரியம் தலைப்ப போன்ற - செறித்த தோற்கயிற்றால் கட்டப்பட்ட மத்தளங்கள் ஒலிப்பன போன்றன; மஞ்ஞை - மயில்கள், வேல் கையர் போன்ற - வேலையல்லாயணித்த கைகளை யுடையவர்களான மகளிரைப் போன்றன; தோன்றிகள் - செங்காந்தன்மலர்கள், அரங்கின்மாடே - நாட்டியமாடுமிடத்திலே, (ஏற்றிவைக்கப்பட்ட), விளக்கு இனம் - விளக்குக்களின் கூட்டத்தை, ஒத்த - போன்றன: வேயின் மெல் பூ - மென்மையான கருவிளமலர்கள், காண்போர் விழி ஒத்த - பார்ப்பவர்களுடைய கண்களைப்போன்றன; (எ-று)

வண்டுகள் இனிமையாக ரீங்காரஞ்செய்தல் யாழிசைத்தல்போலிருக்க, மேகங்கள் இடியிளுலும் மழைத்தாரைகளாலும் முழங்குதல் மத்தளங்கட்டு வதுபோலிருக்க செங்காந்தள் மலர்கள் நாட்டியசாலையில் விளக்குக்களேற்றி வைத்தாற்போலிருக்க மயில்கள் ஆடுதல் மகளிர் நாட்டியமாடுதல்போலிருக்கிறது; கருவிளமலர்கள் அந்த நாட்டியத்தை இமைமூடாமல் கண்ணுறப்பார்ப் பவர்களுடைய கண்கள்போலிருக்கின்றன என்பதாம். இயைபுவமையணி. (''அவற்றருவி, தாழ்ந்து வீழ்ந்தலை முழவிற்றமும்பின மதகரம் பாடச் சூழ்ந்து மாமயிலாடி நாடகந் துளக்குறுத்தனவே'' ''தோன்றி யஞ்சட லேந்த'' ''புல்லிய கொம்புதானேர் கருவிளை பூத்ததேபோ, லொல்கியோர் கொம்புபற்றி யொருகணல் நோக்கிநின்றூள்'' ''பாடல்வண்டியாழ்செயும்'' என்ற சிந்தாமணிப்பகுதிகள் இக்கு நோக்கத்தக்கன.) இச்செய்யுளில் வாக்கியந்தோறும் ஒவ்வோர் உவமைச்சொல்லே அமைத்தது, பலவயிற்போலி யுவமை யெனப்படும்.

கிளை-எழிசைகளில் ஒன்று; மற்றவை - குரல், துத்தம், உழை, இளி, விளரி, தாரம். கின்னரம் வீணை. வள் - நெருக்கமும் வலியும்; வனமுமாம், தூர்யம-வடசொல். நிகர்த்த - போன்ற, ஒத்த - முற்று. அவைப்ப - பெயர். நாட்டியமாடும்மகளிர்தம்மை அலங்கரித்துக்கொண்டுவரும் இயல்பு தோன்ற, 'வேல் கையர்' என்றார். மஞ்ஞை-பெயர்த்திரிசொல். விளகு - ஓர் செடி; சாக்கணஞ்செடி யென்பர்.

'மாலைத்துளிக்குரன்மேகம்,' 'வள்வாய்த் தூரியம்' 'தோன்றினானங் கின்மாட்டு, வினக்கினமாகக் காண்போர்விழி கருவிளையின்மென்பூ' என்பன பாடாந்தரம். (கூ2)

[வண்டுகளின் ஒலியும், கூதாளச்செடிகள் மலர்தலும்.]

கூ. பேடையுஞ்சிமிறும்பாயப்பெயர்வுழிப்பிறக்குமோசை
யூடுறத்தாக்குந்தோறுமொல்லெனவிபிறப்பநல்லா
ராடியற்பாணிக்கொக்குமாரியவமிழ்தப்பாடற்
கோடியதாளங்கொட்டண்மலர்ந்தகூதாளமொக்க.

(இ-ள்.) ஞிமிறும்-ஆண்வண்டுகளும், பேடையும்-பெண்வண்டுகளும், பாய-(ஒன்றன்மேலொன்று) மோதுமாறு, பெயர்வுழி-வேகதேரடுவரும் பொழுது, பிறக்கும் - (அவைருகையினால்) உண்டாகின்ற, ஓசை - ஓசையும்,—ஊடுறத் தாக்கும் தோறும்-(அவ்வண்டுகள்) இடையேபொருந்த (ஒன்

றைஒன்று)மோதும்பொழுதெல்லாம், ஒல் ஒலி பிறப்ப - ஒல்லென்னும் ஓசை உண்டாவனவும்,—நல்லார் ஆடு இயல் பாணிக்கு ஒக்கும் - (அம்மலையில்) தேவமாதர்கள் (வக்கு களித்து) ஆடுகின்ற முறைதவறாத கூத்திற்கு ஒத்திருக்கும் [அக்காட்டியத்திற்கு ஏற்பச் சிலவகை வாத்தியங்கள் முழங்கினற்போலு மென்றபடி]; ஆரிபம் அமிழ்தம் பாடல் - (அப்பொழுது அவர்கள் பாடுகின்ற) அமிருதம்போ லினிய வடமொழிப்பாட்டுக்களுக்கு ஏற்ப, கோடிய தாளம் கொட்டல் ஒக்க - புதுமையான தாளங்களே முழங்கத்தொடங்கினற் போல, கூதாளம் மலர்ந்த - கூதாளச்செடிகள் மலர்ந்தன ; (எ - று.)

வண்டுகள் ஆணும்பெண்ணும் ஒன்றன்மேலொன்று மோதும்பொருட்டு விசைபடவரும்பொழுது அவ்வருகையாலுண்டாகும் ஒலியும், அவை தம்மில் மோதும்போது உண்டாகும் ஒலியும், அம்மலையில் தேவமாதர்கள் வக்கு ஆடும் காட்டியத்திற்கு ஏற்பச் சிலவகைவாத்தியங்கள் முழங்கினற் போலும் ; கூதாளச்செடிகள் மலர்ந்தது, அப்பொழுது அம்மாதர்கள்பாடும் இனிய வட மொழிப்பாட்டுக்களுக்கு ஏற்பத் தாளங்கொட்டத் தொடங்கினற் போலும் என்பதாம் ; தந்துநீப்பேற்றவணி. கூதாளச்செடிகளின் மலர், வடிவில் தாளம்போலிருக்கு மென்க. கூதாளம் - ஓர்செடி ; கூதாளி - கூதளம். தாளி, நறந்தாளி எனவும்படும் ; கார்காலத்து மலர்வது

பேடை - பறவைகளின் பெண்மைப்பெயர். ஞிமிறு - வண்டுகளில் ஒரு சாதி; பொன்வண்டு. 'மிஞிறு' என்பது, எழுதுகையிலேமாறி 'ஞிமிறு' என நிற்கும்; இலக்கணப்போலி. முன்னே 'பேடை' என்றதனால், ஞிமிறு-ஆண்வண்டைக் குறித்தது. பெயர்+உழி=பெயர்வுழி: வகரம் - உடம்படுமெய்யல்லாத மெய்; மெய்யீற்றுடம்படுமெய் யென்பாரு முளர். பெயர்வு உழி - எனப் பிரித்தும் அமைக்கலாம். தாக்குதல் - மோதுதல், நன்றாகஸ்பரிசித்தல். ஒல்லெனல் - சப்தானுகரணம், ஒலிக்குறிப்பு. பிறப்ப - பெயர். கல்லார் - அழகியவர். 'நல்லாள்' என்பது இலக்குமிக்குப் பெயராதலால், 'நல்லார்' என்பது - அதன் பன்மையாய் மகளிரைக்குறிக்கும் ; இங்கே, சிறப்பாய், தேவமாத ரென்று கொள்ளப்பட்டது. பாணி - இங்கே, கூத்து. ஆர்யம் - வடசொல்; தேவபாஷை. அமிழ்தம் - வடசொல்லிகாரம். கோடி - புதுமை; அதனடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம், 'கோடிய' என்பது. இனி, 'கோடிய' என்பதை 'கோடு' என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்த இறந்தகாலப் பெயரெச்ச மெனக்கொண்டு, வளைவுள்ள என்ற பொருள்கூறலுமாம். பாடற்கு ஒடிய என்றுபிரித்தும் பொருள்கொள்ளக்கூடுமாயினும், கொட்டல், கூதாளம் என மேல்வருகின்ற சொற்களோடு மோனைத்தொடை நோக்குமிடத்து அது சிறவாதாம். 'கோடியர் தாளங்கொட்டல்' என்ற பாடம் - கட்டுவர் தாளங்கொட்டுத லென்ற பொருள்படும். மலர்ந்த - முற்று.

'கூதாளமொப்ப,' 'கூதாளமொத்த,' 'கோடியதாளம் கொட்டமலர்ந்த கூதாள மன்றே' என்பன பாடாந்தரம். (கூகூ)

[காட்டாறுகளும், நிரம்பப்பூத்த கொன்றைமரங்களும்.]

கூச. வழைதுறுகானயாறுமாகிலக்கிழத்திமக்கட்
குழைதுறுமலைமாக்கொங்கைசுரந்தபாலொழுக்கையொத்த
வீழைவுறுவேட்கைகாளும்வேண்டினர்க்குதவவேண்டிக்
குழைதொறுங்கனகங்தூங்குங்கற்பகவிகர்த்தங்கொன்றை.

(இ - ள்.) வழை துறு சானம் யாறு-சுரபுன்னைமரங்கள் நிறைந்த காடுகளில் (மலைகளினின்று) பெருகிய நதிகளை,—மா நிலம் கிழத்தி - பெரிய பூமி தேவியாகிய தாய், மக்கட்கு-தன்புதல்வர்களாகிய ஜனங்கள் ஜீவிப்பதற்காக, உழை துறு மலை மா கொங்கை சுரந்த - புடைபருத்து நெருங்கிய மலைகளாகிய (தனது) பெரியதனங்களினின்று (தன்பிஞற்) சுரந்து பெருகவிட்ட, பால் ஒழுக்கை - பாலின் தாரைகளை, ஒத்த - போனதனை ; கொன்றை - (பொன் னிறமான மலர்களை நிரம்பப்பூத்த) கொன்றைமரங்கள்,—விழைவு உறு வேட்கை - (பொருள்களை மேனமேல்) விரும்புதல் பொருந்திய ஆசையி னால், காளும் வேண்டினர்க்கு - எந்நாளிலும் வேண்டுபவர்கட்கு, உதவ வேண்டி - கொடுப்பதை உத்தேசித்து, குழைதொறும் கனகம் தூங்கும் - தளிர்கள் தோறும் பொன்னைத் தொங்கவிட்டுக்கொண்ட, கற்பகம் - கல்பக விருக்ஷத்தை, விகர்த்த - ஒத்தன ; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. "மண்மாதர் விண்வா, யழைத்துப் புலம்பி முலை மலைமேனின்று மாறுகளாய்," 'காரார் வரைக் கொகுடை,'' "சோலைமலையோ டிரண்டாய், மேதினியாள் கொங்கை கிகர் வேங்கடம்,'' "பொதியமுமிமய மும் புணர்முலையாக,'' "அலைநீ ராடை மலைமுலை யாக,'' "கொங்கையே பரங்குன்றமுங் கொடுங்குனறும்" எனப் பலரும் மலைகளைப் பூமிதேவியின் கொங்கைகளென்றல் காண்க. யாறு நிலக்கிழத்தி மக்கட்குக் கொங்கைசுரந்த பாலொழுக்கை யொத்த—"சரயுவென்பது தாய்முலையனைகிவ், வரவுநீர் நிலத் தோங்கு முயிர்க்கெலாம்'' என்றார் பாலகாண்டத்து ஆற்றுப்படலத்தி லும். யாற்றுப்பெருக்குப் பிரஜைகள் ஜீவிப்பதற்கு இன்றியமையாததாகு தலும், அந்நீரின் இனிமையும், இங்கு விளங்கும். எனகது இப்பொருள் வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளினிடத்துச் செல்லும் ஆசையு மாகிய வேறுபாடு தோன்ற, 'விழைவுறு வேட்கை' எனப்பட்டது; பொருள்களின்மேல் தோனறும் பற்றுள்ள மொன்றும், அப்பொருள்களைப் பெறவேண்டுமென்ற மேன்மேல்விகழும் ஆசை யொன்று மாக வேறுபாடு காண்க. வேண்டினர் - அபேக்ஷித்தவர்.

ஒழுகுவது ஒழுக்கு எனக் காரணக்குறி ; கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதி விகாரப்பட்ட பெயர். நாளும் - நாள்தோறும் ; உம்மை - தொறுப்பொருளது. கல்பகம் - (தன்னிடத்தே வந்து வேண்டுவார் வேண்டுவனவற்றைக்) கல்பிப்பது ; கல்பித்தல் - உண்டாக்கிக் கொடுத்தல். தூங்குதல் - தொங்குதலாலே, "கொழுங்கனி கோட்டிடைத் தூங்குவ" எனச் சிந்தாமணியிலுங் காண்க. ஒத்த, விகர்த்த - மூற்று. விழைவுறு வேட்

கையை வேண்டினார்க்குச் சேர்க்காமல், கற்பகத்திற்கு உரியராகி, (வேண்டி பவர்களிடத்துத் தான்கொண்ட) மிக்க விருப்பத்தால் அவர்கட்குக் காலதாமதமில்லாமற் கொடுத்தற் பொருட்டு முன்னமே சித்தமாய்ப்பொன்களைத் தன் வடிவில் இடக்தோறும் காய்த்து நிரம்ப மிகுதியாகக் கொண்ட கற்பக மென நுமரம். 'வேட்கையேறடும்' என்ற பாடமோ அவரு முளர். (சு)

[காடுகள் செழித்தலும், மான்கள் களித்தலும்.]

கூரு. பூவியல் புறவ மெங்கும் பொறிவரி வண்டு போர்ப்பத்
தீவிய களிய வாகிச் செருக்கிய காமச் செவ்வி
யோவிய மரன்க டோறு முரைத்தற வுரஞ்சி யொண்சேந்
நாவிய செவ்வி நாறக் கலியொடும் புலர்த்த கவ்வி.

(இ - ள்.) பூ இயல் புறவம் - மலர்கள் பொருந்திய காடுகள்,—எங்கும் - எவ்விடத்திலும், பொறி வரி வண்டு போர்ப்ப - உடற்புள்ளிகளையும் இசைப் பாட்டுக்களையுமுடைய வண்டுகள் மொய்த்து நிறைய, தீவிய களிய ஆகி - (காண்பவர்க்கு) இனிமையான களிப்பைத் தருவனவாய், செருக்கிய - செழித்தன; (அவ்விடத்தில் ஆண்மான்கள்), காமம் செவ்வி - (தாம்கொண்ட) காமத்தின் முதிர்ச்சியால், ஓவிய மரன்கள் தோறும் உரைத்து அற உரிஞ்சி - நோவுபட்ட மரங்களி லெல்லாம் உராய்ந்து நன்றாக உடல் தேய்ந்து வந்து, ஒள் சேந்நாவிய செவ்வி நாற - (அம்மரங்களுட் சந்தனம் அகில் தேவதாரு முதலிய வாசனை மரங்களின் சம்பந்தத்தால்) பிரகாசமான நிறமுள்ள கஸ்தூரிக்கு உரிய கல்ல வாசனையை (உடம்பில்) மிகுதியாக வீச,—கலியொடும் - அந்த ஆண்மான்களோடு, கவ்வி - பெண்மான்கள், புலர்த்த - (அவற்றை வேற்றினமாகிய கஸ்தூரிமானோடு சேர்த்து வந்தவராகக் கொண்டு) பிணங்கின;

புலர்த்தலாவது - ஆணும் பெண்ணும் இன்ப நிலையிற் பரஸ்பரம் ஒரு மனஸ்தாபங் கொள்ளுதல்; பிரணயகலகம், ஊட லெனவும்படும். கொழுப் பிஞ்ஞ மரங்களில் உராய்ந்து அவற்றின் மணத்தைப் பெற்று வந்த ஆண் மானுக்குக் கஸ்தூரிமானுடனே கூடி அவற்றின மணம் பெற்று வந்தனவாக மாறுபடக்கருதிப் பெண்மான்கள் மனஸ்தாபப்பட்டன வென்றதில் மயக்கவணி காண்க; காதல் மிகுதியாற் பெண்மான்களைக் குறித்து ஓடி வரும்போது வழியில் நேர்பட்ட மரங்களில் உராய்ந்து உடல் தேய்ந்து அம் மரங்களின் நறுமணத்தைப் பெற்று வந்தனவாகவும் கொள்ளலாம். முதல் வாக்கியம், நன்மைநவிற்சியணி. வண்டு போர்த்தல் - மணத்தையும் மதுவை யும் நாடி வண்டுகள் சூழ்தல்.

புறவம் - முல்லை நிலம்; காடும், காடு சார்ந்த இடமும். 'போர்ப்ப' என் றதனால், மனத்தை மறைக்குமாறு மிகுதியாக அடர்ந்து மொய்க்கின்றன வென்றதாம். தீவிய - இனிமையை உணர்த்தும் 'தீம்' என்பதன் மேற் பிரிந்த குறிப்புப் பெயரெச்சம்; இ - சாரியை. செருக்கிய - முற்று. ஓவிய என்ற இறந்தகாலப் பெயரெச்சத்தில், ஓவு - பகுதி; ஓவுதல் - இல்லை,

இசைதல். இனி, ஒலியும் என்று எடுத்து; சித்திரத்திலெழுதினும் போன்ற [மிக அழகு பெற்ற] மாக்களி லெனறலுமாம். மான - பேலி. கஸ்தூரி மானெனனும் ஒருவகைமானினது நாபியிலுள்ள கொழுப்பாதலால், கஸ்தூரிக்கு 'மருகநாபி' எனறு பெயர்; அது நாபி யெனறும் வழங்கும். ஆவ்வட சொல, 'நாவியெனத தமிழில விகாரப்பட்டது. நாவிய - நாவி யெனபதன மேற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். கலே - மானின ஆணமைப் பெயர்; "இரலேயுங கலேயும் புல்வாய்க் குரிய" எனறார் தொல்காப்பியனார். கலே மான என ஒரு சாதிமானுமாம். 'கலே' என வந்ததனால், நவ்வி - பெண்மையை யுணாதத்திறறு. புலந்த - மூற்று. 'காமச செவவி, யோவலின மரங்க டோறு முரைததவாறிஞ்சி' எனறு பாடமோதி, எல்லாரும விரும்பும் அழகு நீங்காத மாங்கன்றோறும் (கஸ்தூரிமான்கள) உராய்ந்த இடததிலே (கலேமானகள்) உராய்ந்து கஸ்தூரிமான்களின மணம் வீச வென்று உரைப் பாரு முளா.

'புறவமோங்கும,' 'மான்கடோறும்,' 'நாவியினமணங்கறை' என்பன பாடபேதம். (கூடு)

வே று.

[குவளை குவிதலும், முல்லை அரும்புதலும்.]

கூசு. தேரி னன்னெடுந நிசைசெலச் செருக்கழிந தொடுங்கு
கூ யிற்றருங் கண்ணைனைக் குவிந்தன குவளை
மா ணனைவர் வரவுகண் டுவகின்ற மகளிர
மூ ன மென்குறு முறுவலொத் தரும்பின் முல்லை.

(இ - ள்.) தேரினன் நெடுந் நிசை செல - (தம்மைப்பிரிந்து தமது நலே வன்) தேரிலேறியவனுய்(ப் பொருளீட்டுதல் முதலிய காரிய நிமித்தமாய்) நெடுந்தூரஞ் செல்ல, செருக்கு அழிகத ஒடுகும - (அபபிரிவுத்தனபத தாற) களிப பொழிகத ஒடுகிய, கூர் அயில தரும் கண ணை-கூரிய வேலா புதத்தைப் போனற (மகளிர) கணகள போல, குவளை குவிந்தன - கருங் குவளை மலாகன இதழ் குவிந்தன; மாான அனனவா வரவு கணடு - மன மதனைப் போனற [மிக அழகிய] தமது தலைவர் (அநநனம் பிரிந்து சென்றிருந்து குறித்தகாலத தவறாமல்) மீண்டு வருதலைப் பார்தது, உவக்கின்ற - மகிழ்கின்ற, மகளிர் - மாதரது, மூரல் மெல குறு முறுவல் - பறகள் சிறிது வெளிதோனறுமபடி உண்டாகின்ற புனசிரிப்பை, ஒத்தி - போனறு, முல்லை அரும்பின - முல்லைக் கொடிகள [அல்லது முல்லைச் செடிகள] அரும்பெடுததன; (எ - று.)

உவமையணி. கருநிறமும் மென்மையும் வடிவும பற்றி மகளிர் கண ணுக்குக் கருங்குவளை மலரும, வெணணிறமும வடிவும் பறறிப் பல்லுக்கு முல்லை யரும்பும் உவமையாம். 'மூரல் மெனகுறுமுறுவ லொத்தி' எனறதனும், புன சிரிப்புக் கொள்ளுங்காலததிச் சிறிது வெளியே தோனறும் பறகளைப் போனறு எனபது கருத்தாம். தன்பதி,ாற கண் மலர்ச்செல்றி இடுங்

குதல் இயல்பு; (அது பற்றித் தன்பம் 'இடுக்கண்' எனப் பெயர் பெறுதலுங் காண்க.) நெடுந்திசை செல - வேற்றுதற்றிசையில் நெடுந்தூரத்தில் உள்ள தேசாந்தரத்திற்குப் போக. இனி, 'தேரினன நெடுந்திசை செல' எனப தற்கு - ஒற்றைத் தனியாழித் தேரவனுன சூரியன வேறொரு பெருந்திசை யாகிய வடக்கே சென்று விட [அதாவது நனருய் அஸ்தமித்து விட] எனறு உரைத்தலும் ஒனறு; பிரிந்த மகளிர பிரிவாறறுமைத் துயராற்ற பகலினும் இரவில் மிகுதியாக வருத்துதல் இயலபு. 'செருகுகழிந தொடுக்குங கூரயிற் றருக்கண' எனவே, பிரிந்த மகளிர கணணெனபது போதரும். தேரினன-றெந்த தேரையுடையோன: எனவே. சூரியனும். பிரிந்த தலலியர் சூரி யாஸ்தமனததைக் குறித்து மிக வருந்துதலை "ஒளியவன விசும்பிய்ங்குந், தேரும் போயிற்றுத திசைகளும் மறைந்தன செய்வதொன றறியேனே" எனற பெரிய திருமொழியினலும் உணாக. 'தேரின மன நெடுந்திசை செல' எனற பாடத்திற்கு, மன - தலைவன, தேரிற் செல எனறே பொரு ளாம்.

தேரில் கல் நெடுந் திசை செல எனறு எடுத்து, பினவாக்கியத்தில் வரு கினற 'மாரனனவா' என்பதையே 'செல' எனறதகும் வினைமுதலாக்கி யுரைத்தலும் அமையும். மற்றும் தனனைத் தேரினமேல் தூக்கிவைத்துக் கொணடவனுன இராவணன நெடுந்தூரஞ்சென்றனனுகத் தனிவொழிந்து ஓடுங்கிய (பிராட்டியினது) கூரிய வேலையொகுங் கண்களபோல வென்ற லும் ஏற்கும.

'கூரயிற்றருங கண்ணைன்க குவிந்தன குவளை' எனறது, "அடுக்கிய தோறறம் விடுதறல் பண்பே" எனற தொல்காபியதது உவமவியலில் விலக் கப்பட்ட அடுதததுவரலுவமை யாகாது; பொதுத்தனமை வேறுபடுதலால். கூர்மையும், ஆடவர்நெஞ்சுருதியைப் போகுதலும் பறறி, மகளிர கண் ணுக்கு வேல் உவமைகூறப்படும. •

தரும்-உவமவுருபு. 'அயிற் கருங்கண' எனறு பாடமோதுவாரு முனர். மாரன-வடசொல; (பிராணிகளை ஆசைகோயால) மாணவேதனைப்படுதறபவன். 'உவப்புறு மகளிர' எனபது பாடம்.

'குவளைமலர்போலும கண்' என்றும், 'முல்லையரும்புபோலும் பல்' என் றும் தொனறுதொட்டு உலகத்திற் பிரசித்தமாக வழங்குகினற உபமான உப மேயங்களை மாற்றி, 'கண்கள்போனறன குவளைகள' என்றும் 'பற்கள்போல றன முல்லையரும்புகள' எனறும சொல்லுதல் எதிர்நிலையணி யெனப்படும் ப்ரதீபாலங்கார மெனபர் ஒருசாரார். விபரீதவுவமை யென உவமையணி யிலேயே அடக்குவர் தணடியாசிரியர்; தொல்காப்பியனுர் கருத்தும் அதுவே. "உயர்ந்ததனமேற்றே யுளனுங்காலே" என்றபடி உபமேயததினும் உபமா னம் சிறந்திருத்தல்வேண்டு மெனபது அலங்காரதாலார்தணி பாதலால், அதன்படி, உபமேயத்தை உபமானமாகக்கூறுதல் உபமேயததைச் சிறப்பிக்கு மென உணர்க. 'உலகத்து இவை உவமை இவை உவமிக்கப்படும் பொருள் என்று கிலைபெற்றன உளவேயில்லை: உரைக்குங் கவியது குறிப்பினன்,

உவமையும் உவமிக்கப்படும்பொருளாம்; உவமிக்கப்படுபொருளே உவமையாகவும் அமையும்' என்பது, கக்கீரர்கொள்கை.

இதுமுதற் பதினாறு கவிகள் - முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றீம் விளச்சீர்களுமாகிய கெடிலடி கான்கு கொண்ட கலிநிலைத் துறைகள். (கூ)

[அருவிகள் பொன்னைக்கோழித்தலும், தாமரைக்கோடிகளின் எழுச்சியும்]

கூ. களிக்குமஞ்ஞையைக்கண்ணுளாரினமெனக்கண்ணுற்
றளிக்குமன்னரிற்பொன்மழைவழங்கினவருவி
" வெளிக்கண்வந்தகார்விருந்தெனவிருந்துகண்டுள்ளங்
களிக்குமங்கையர்முகமெனப்பொலிந்தனகமலம்.

(இ - ள்.) களிக்கும் மஞ்ஞையை - (கார்காலத்திற்) களித்துக்கூத்தாடுகின்ற மயில்களை, கண்ணுளார் இனம் என - கூத்தாடிகளின் வர்க்கமென்று கருதி, கண்ணுற்ற - (அவை ஆடுங் கூத்தைப்) பார்த்து, அளிக்கும் - அன்போடு (அவற்றிற்குப் பொன்னை நிரம்பப்) பரிசுகொடுத்தருளுகின்ற, மன்னரின் - அரசர்கள் போல, அருவி - (மலையினின்றுபெருகுகின்ற) நீர்ப் பெருக்குக்கள், பொன்மழை வழங்கின - (மலைச்சாரலங்களினின்று அடித்துக் கொண்டுவந்த) பொன்னை மிகுதியாகப் பக்கங்களிற்சொரிந்தன; வெளிக் கண் வந்த கார் - ஆகாயவெளியிலே வந்த மேகங்களை, விருந்து என - விருந்தாளிகளென்று கருதி, இருந்து கண்டு - (தாம் வீட்டினுள்) இருந்தபடியே (அவரது வருகையை) நோக்கி, உள்ளம் களிக்கும் - மனம் மகிழ்கின்ற, மங்கையர் - மாதர்கள், முகம் என - முகம்மலர்தல் போல, கமலம் - தாமரைக் கொடிகள், பொலிந்தன - நீரினுள்ளே எழுச்சிபெற்றன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. கண்ணுள - கூத்து; அதனை யாடுபவர், கண்ணுளர். இனி, கண்ணுளர்-மூங்கிலின்மேல் வீறியாடுங் கழைக்கூத்தாடிகளுமாம்; கண் - கணு; மூங்கிலுக்குச் சினையாகுபெயர்; 'வரை' என்பது போல; அதில் ஏறுபவர், கண்ணுளர் என்க. 'பொன்வழங்கினமலையருவி' என்றும் பாடம் உண்டு. நீர்நிலைகள் கோடைக்காலத்தில் வற்றியபோது, "அக்குளத்திற், கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே, ஒட்டி யுலர்வார்" என்றபடி, அவற்றிலிருந்த தாமரைக்கொடிகளும் வாடியுலர்ந்திடக்கும்; பின்பு கார்காலத்தில் நீர்நிலைகள் நிரம்புமளவில் " நீரளவேயாகுமாம்நீராம்பல் " என்றபடி அக்கொடிகள் தளிர்த்துமலர்ந்து செழிப்பனவாம். வானத்தில் மழைவந்தவளவிலே நீர்நிலைகளின் அகதிதே தாமரைக்கொடிகள் எழுச்சிபெறுதற்கு விருந்தினர் வாயிலில்வந்தவளவில் அவர்வருகையை மாதர்கள் வீட்டின் அகத்திலிருந்தபடியேநோக்கினமனமகிழ்ந்து அம்மகிழ்ச்சியால்முகமலர்தலே உவமைகூறினர். இவ்வாறன்று, 'மங்கையர்முகமெனப் பொலிந்தன கமலம்' என்பதற்கு - மகளிர்முகம்போலத் தாமரைகள் மலர்ந்தன வென்று பொருள்கொள்ளுதல், கார்காலத்தின் இயல்பிற்குச் சிறவாது இத்தன்மையை நோக்கி 'உள்ளங்குளிர்ந்து மங்கையர் முகமெனத் தளிர்த்தன கோடு' என்று பாடங்கொண்டாரு

மூளர். இனி, மனமுபெய்தலவளவிலே தாமரைக்கொடிகள் செழிப்பதுமாத்திரத்தைக்கொண்டு, தாமரைமலர்ந்தனவென்னுமளவாக வருணித்தலும் ஒரு சார் கவிமரபாம்; மேல் சரி - ஆஞ் செய்யுளின மூன்றுமடியையும் பார்க்க. படிதாண்டாப் பத்தினிகளாதலால் திருகத்தின் அகதத்திலிருந்தபடியே கண்டனர். "அடித்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடித்தது காட்டும் முகம்" என்றபடி, உள்ளங்களித்ததுபற்றி முகம் மலர்ந்ததாம். "மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து, நோக்கக்குழையும் விருந்து" ஆதலால், விருந்தினர் வருந்தாதபடி அவரைக்கண்டவளவில் இன்முகங்கொளலுதல் விருந்தினரையுபசரிப்பவர்க்கு இன்றியமையாமை யுணர்க. கணவன்கருத்திற்கு ஏற்ப விருந்தினரையுபசரித்தல், இல்வாழ்க்கைத்துணைவியராகும் மனைவியரியல்பு; பெருந்தடங்கட்பிறைநுதலார்க்கெலாம், பொருந்துசெல்வமுங்கல்வியும் பூத்தலால், வருந்திவந்தவர்க்கீதலும் வைகலும், விருந்து மன்றி வீடுவ தரவையே" என்றார் பாலகாண்டத்து நாட்டுப்படலத்திலும்: சிலப்பதிகாரத்திற் கண்ணகி "தொல்லோர்சிறப்பின், விருந்தெதிர்கோடலு மிழந்த வென்னே" என்று கழிவிரக்கத்தோடுகூறியதும் இதுபற்றியே: திருக்குறளில் வாழ்க்கைத்துணைநலத்தில் மனைத்தகமரண்புகளில் விருந்தயர்தலே அடக்கினர் பரிமேலழகரும்.

"வெளிக்கண் வந்தனர் விருந்தென' என்ற பாடம் - வாயிலில்வந்துள்ளார் விருந்தாளிகளென்று அறிந்து என்றபொருள்படும். வெளிக்கண், கண்-ழனுருபு. விருந்து-புதுமை; இப்பண்புப்பெயர், ஆகுபெயராய், புதியவராய் வந்தவரைக்குறித்தது. உள்ளம் - அகத்துறுப்பு, அந்தக்காரணம். மங்கையர் - இங்கே பருவப்பெயராகாமல், பொதுப்பட, மகளிரென்றமாத்திரமாய்நின்றது; அப்பருவத்திற்குப்பிராயவெல்லை, பன்னிரண்டுமுதற் பதினமூன்றளவும். கமலம் - தற்சமசுடசொல். 'கமலம்' எனபதற்கு - நீரென்றுரைத்தல், சிறவாது. (கூஎ)

[தேனீ.]

கூஅ. சரதநாண்மலரியாவையுங்குடைந்தனதடவிச்
சுரதநூறெரிவிடரெனத்தேன்கொண்டுதொகுப்ப
பரதநூன்முறைநாடகம்பயனுறப்பகுப்பா
னிரதமீட்டுறுங்கவிஞரைப்பொருவினதேனீ.

(இ - ன்.) சுரதம் நூல்-சிற்றின்பவிளையாட்டுநூல்களே, தெரி-ஆராய்ந்து அறிந்த, விடர் என - காமுகர்கள் (பலமகளிரிடத்துஞ் சென்று சேர்ந்து இன்பங்கொள்ளுமாறு) போல, சரதம் நாள் மலர் யாவையும் குடைந்தன தடவி - ரஸத்தோடு [தேனோடு] கூடினவான அன்றுமலர்ந்த மலர்களையெல்லாம் துளைத்து முழுவதும் ஸ்பரிசித்து, தேன் கொண்டு - (அவற்றினின்று) தேனைக்கொண்டு, தொருப்ப - சேர்ப்பனவாகிய, தேன் ஈ-தேனீக்கள், பரத நூல் முறை-பரதசாஸ்திரத்திற்கூறிய முறைமைப்படி, நாடகம் - நாடகத்தை, பயன் உற பகுப்பான் - (காண்பவர்க்கு இனிமையாகிய) பயன் மிகுமாறு

பாகுபாடுகளமையச் செய்தற்பொருட்டு, இரதம் ஈட்டுறும் - ரஸங்களைச் சேர்க்கின்ற, கவிஞரை - கவிகளை, பொருவின - ஒத்தன ; (எ - று)

உவமையுரை. விடரெனக் குடைந்தன தடவி யென்ற இயையும். விடர்-இடையொழுக்கமுடைய காமுகர். பருவமடைந்த பல மாதரிடஞ் சென்று கூடிக்குலாவித்தழுவி இன்பங்கொள்ளுதல், அவரியல்பு. தேனுண்டுகூடி மலர்ந்த புதுமலர்களிலெல்லாம் குடைந்து தடவித்தேன் கொள்ளுந் தேனீக்கு அவர் உவமையாயினர். (''மாதவியீன்ற மணிமேகலைவல்லி, போதவிழ் செவ்வி பொருந்துதல்வீரும்பிய, உதயகுமரனு முலகாள்வண்டின், சிதையா வுள்ளஞ் செவ்விதினருந்த'', ''ஒருதனியோங்கிய திருமணிக்காஞ்சி..... காமர்செவ்விக் கடிமலரவிழ்ந்த, உதயகுமரனெனு மொருவண் டுணீஇய, வீரைவொடுவந்தேன்'' என்ற மணிமேகலையும், ''பெண்டிர்கலம்வெளவித் தண்சாரற் ருதண்ணும் வண்டின்'' என்ற கலித்தொகையும் இங்குக் காணத்தக்கன.) சுரதநூல் - காமசாஸ்திரம். பாவம் ரஸம் தாளம் என்னும் மூன்றின் அமைதியையு மூடைமையால், நாட்டியசாஸ்திரத்திற்குப் பரதசாஸ்திர மென்றபெயராம்;பரதாசாரியரென்பவரால் அபிவிருத்திசெய்யப்பட்டதென் பதுபற்றி அங்ஙனம்பெயர்வந்த தென்றலும் உண்டு. 'நாடகம் - கதைதழுவி வருங் கூத்து' என்றனர் அடியார்க்குநல்லார். காவியவகைபலவற்றுள், ஸ்ராவ்யப்ரபந்தமாகிய [கேட்பதற்குரிய நூல்களாகிய] மற்றையவற்றினும், த்ருச்ய ப்ரபந்தமாகிய [காட்சிநூலாகிய] நாடகம் சிறந்ததாம். அந்த நாடகம், வடமொழியிற் பத்துவகையாகப் பகுக்கப்படும். அவற்றின் - இலக்கணங்களும், அவற்றிற்குரிய ஸந்திகளும், அவற்றின் பகுப்புக்களும், அவற்றின் இயல்புகளும் அளவிறந்தன. அவையெல்லாம், இங்கு - விரிப்பிற் பெருகும். நாடகம்-ஐந்து அல்லது எழு அங்கங்களை யுடையதாய்வரும். ரஸ மெனினும், சுவை யெனினும் ஒக்கும். உவகை, பெருமிதம் அழுகை வியப்பு, நகை, அச்சம், இளிவரல், வெகுளி, நடுநிலை என்னும் ஒன்பதும் நாடகரசமாம்; இவை - முறையே வடமொழியில் ஸ்ருங்காரம், வீரம், கருணை அத்புதம், ஹாஸ்யம், பயாநகம், பீபத்ஸம், ரௌத்ரம் சாந்தி எனப்படும். இந்த நவரஸங்களும் அமைய இயற்றப்படும் நாடகம் உத்தமஜாதியாம்; இரண்டொருசுவைகள் குறையக் கூறலும் உண்டு. காண்பவர்க்கு இடர்தோறும் சுவைமிகவும் தோன்றுமாறு ரஸங்களைச் சிலக்கியமாக அமைத்தாலன்றி நாடகம் சிறவாதாதலால், அவற்றை நாடித் தொகுத்தல், நாடகமியற்றுங் கவிகட்கு இன்றியமையாக்குணமாம். பலவகை ரஸங்களை நாடிக்கொண்டு ஒருங்குதொகுக்கும் நாடகப்புலவர் போல, புஷ்பரசமாகிய தேனைப் பலமலர்களினின்றுங் கொணர்ந்து கூட்டில்தொகுத்தன தேனீக்க ளென்பதாம்; (ரஸம் - சுவையும், ஸாரமும்.) இனி. 'சுரதநூல்தெரி விடர் என' என்பதற்கு - காமநூலை யுணர்ந்த விடர் (மகளிரவயவங்களிலுள்ள காமமனைத்தையும் ஒருவழியிலாக்குமாறு) போல வென்று உரைப்பாரு முளர்.

மலரியாவையும் - தன்னெழிலெய்ம்முன் யகரம்வர இகரம் தோன்றிற்று. கவிஞர் - செய்யுள்செய்பவர். 'தேன்கொடு' என்பதும் பாடம். தேனீ - தேனைச்சேர்க்கும் ஈ, இரண்டனுருபும்பயனுந் தொக்கதொகை. (ரூஅ)

[மான்கள் களித்தல்.]

நோக்கினை மைநோக்கழிகண்ட துண்மருங்கும்
ருக்கணங்கருஞ்சீதைக்குதாக்கருந்துன்ப
மாக்கினமதுநிகழ்வென்றரும்பெறலுவகை
வாக்கினுமையாமெனக்களித்தனமான்கள்.

(இ - ள்.) 'நோக்கினுல் - (தனது) பார்வையழகினுல், நமை - நம்மை, நோக்கு அழி கண்ட - பார்வையழகு கெடுமாறு செய்த [வெற்றிகொண்ட], நுண் மருங்குல் தாக்கு அணங்கு அருஞ் சீதைக்கு - நுண்ணிய இடுப்பை யுடைய மோகினி போன்ற அருமையான சீதைக்கு, தாக்கு அருந்துன்பம் - தாக்கும்படியான (பொறுத்தற்கு) அரிய துன்பத்தை, நமது உருவின் ஆக்கினன் - (மாரீசனென்னும் ராக்ஷஸன்) நம்முடைய [மரண] வடிவத்தைக் கொண்டு செய்தான், என்று - எனபதனுல் (நமக்கு உண்டாகின்ற), அரும் பெறல் உவகை - பெறுதற்கு அரிய மகிழ்ச்சியை. வாக்கினன் உரையாம் - வாயாற் சொல்லக்கடவோமல்லோம்,' என - என்று (இராமனிடத்து அச்சத் தாற் பேசாமற் களித்தாற் போல), மான்கள் களித்தன - (அந்த நிசியழுக நிலையில்) மான்கள் குரல்காட்டாமற் களிப்புற்றன; (எ - று)

இராவணன் சூர்ப்பணகை வார்த்தையினுற் சீதையினிடங் காதல் கொண்டு அப்பெண்ணரசியைக் கவர்ந்துவரக்கருதி அதற்கு மாரீசனைத் துணையாக வேண்ட, அவன மாயையாற் பொன் மானுருவங்கொண்டு, ஸ்ரீராம லக்ஷ்மணர் ஜாகையுடன் வசிக்கின்ற ஆச்சிரமத்தின் அருகில சென்று லீலையாட, அப்பொன்மானைப் பார்த்துச் சீதை அதனிடம் ஆசைகொண்டு அதனைப் பிடித்துத் தருமாறு பலமுறை வேண்ட, இராமன அதனைத் தொடர்ந்து சென்றபோது, அது அவனகையிலகப்படாமல ஓட்டங்காட்டி நெடுந்தூரம் இழுக்கடிக்கவே, அதைக்கண்டு இராமன் மாயமானென்று துணிந்து அதனமேல் அம்புதொடுக்க, மாரீசன் இராம பாணம்பட்டு வீழ்ந்து இறக்கும் போது தனது குரலெடுத்து இராமன் குரலைக்கொண்டு, அவன தனக்கு அபாயம் சேர்ந்தவிடத்து மனைவியையும் தம்பியையும் கூப்பிடுமாறுபோல, 'ஹாஸீதே! ஹாலக்ஷ்மண!!' என்று அரற்றி இறக்க, அக்கூக்குரல் கேட்ட வுடனே சீதை இராமனுக்கு அபாயம் சேர்ந்ததென்றே கருதிவருத்தி இலங்கு மணனை இராமனிடத்திற்கு வற்புறுத்தியனுப்ப, இவ்வாறு ஒருவருமின்றிச் சீதை தனித்துநின்ற சமயம் பார்த்து இராவணன் அவளை எடுத்துச்சென்று இலங்கையிற் சிறைவைத்தன னென்ற செய்தி, ஆரணிய காண்டத்தில் விரித்து உரைக்கப்பட்டது.

கண்ணழகிற் சீதைக்கு ஒப்பாகாமல் தோற்றுப்போய்த் தங்களை அவள் வென்றதற்காக அவளிடங் கறக்கொண்டு அவ்விஷயத்தில் எதிரொன்றுஞ் செய்ய வல்லமையில்லாதிருந்த மான்கள், மாரீசன் தங்கள் வடிவத்தைக் கொண்டு அவட்குப் பெருந்தீங்கு செய்ததைப்பற்றி மகிழ்ச்சிகொண்டு, அம் மகிழ்ச்சியை வாய்விட்டுக்கூறினுல் இராமன் அந்த மாயமானைப்போலவே

கும்மையும் அம்பெய்து கொன்றுவிடுவோ வென்று அஞ்சிப் பேசாமற் களித்து நின்றுற் போன்றது என்று, அக்காற்காலத்தில் அம்மலையிலே மான்கள் களிப்படைந்தும் ஆரவாரஞ்செய்யாமல் நின்றமையை வருணித்தார். தந்நறிப் பேற்றவணி. மதங்கர் முதலிய மூனிவர்களுடைய தவத்திற்கு இடையூறுமோ வென்றெண்ணி மான்கள் ஆரவாரஞ் செய்யாமல் ஊமைகள்போல மௌனமாக வீருத்தல்பற்றி அம்மலைக்கு 'ருச்யமூகம்' என்று பெயராயிற் றென்பது, இங்கே கருதத்தக்கது; ருச்யம் - மான், மூகம் - ஊமை. விசுவாமித்திரமுனிவனது யாகத்தில் இராமபிரானுக்குத் தோற்ற மாரீசன் நிஜரூபத் தோடு ஒன்றும் எதிர்செய்யமாட்டாமல் மான் வடிவங்கொண்டு பழிதீர்த்துக் கொண்டதுபோல சீதையின் கண்ணழகுக்குத் தோற்ற மான்கள் தாம் எதிரொன்றுஞ் செய்யமாட்டாது மாரீசனது மான்வடிவத்தாற் பழிதீர்த்துக் கொண்டனவாகக் கருதிக் களித்தன வென்க 'வாக்கிஞனுரையா மௌன' என்றதில், (அம்மஹிழ்ச்சி சொல்லுக்கு அடங்குவதன்றுதலால்) அதனைச் சொல்லவல்லோமல்லோ மென்று என்ற பொருளுந்தோன்றும்; வரம்புகடந்த மஹிழ்ச்சி யுண்டானபொழுது ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் சும்மா இருத்தல், இயல்பு: இராவணனை இராமன் கொன்றிட்ட செய்தியை அறுமான்வந்து சொன்னவளவிற் சீதை இனையதின்ன நியம்புவதென்பதோர் நினைவிலாது நெடிதிருந்தா ளென்ப; யுத்தகாண்டத்து மீட்சிப் படலத்தில் ''மேக்குநீங்கிய வெள்ளவுகையா, லேக்கமுற் றிறுன்றியம்புவதியாதென, நோக்கிநோக்கி யரிதென நொந்தாளே, பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ'' என்பதுங் காண்க. மான்கள் கார்காலத்தியல்பாற் களித்தும் அவ்விடத்தினியல்பாற் குரல் காட்டாமலும் இருந்ததற்கு, இவ்வகையான ஒருகாரணத்தைக் கவி தாமாகக் கற்பித்து உரைத்தார்; ''இயல்பின்வீளே நிறனன்றி யயலொன்று, தான்குறித் தேற்றுதல் தற்குறிப்பேற்றம்'' ஆதலால், மாயையால் எந்த வடிவம் வேண்டு மானலும் கொள்ளவல்லவனை மாரீசன் வேறு எவ்வடிவமுங் கொள்ளாமல் மான்வடிவங்கொண்டது, இவ்வருணனைக்கு மூலம்.

நோக்கு - நோக்குதல், அழி - அழித்தல்: இரண்டும், முதனிலைத்தொழிற் பெயர். 'கண்ட' என்பது, செய்தவென்னும் பொருளதாய்வினைத; 'நிருகை ரக்கண்ட படலம்', 'மநுநீதிகண்ட புராணம்' என்ற இடங்களிற் போல. 'நமைநோக்கழிகண்ட' என்றது, நம்மைக் கண்ணேற்கெடுத்த என்றற்போல நின்றது. 'நுண்மருங்குல்' என்றது - அவளது மெல்லியல்போடு, துன்பம் பொறுக்கும் ஆற்றலின்மையையுங் காட்டும். தாக்கருந்துன்பம் - இராமவிரகம். தாக்கு அணங்கு - ஆடவரைத் தாக்கி வருத்தும் மோகினி யெனலும் பெண் தெய்வம்; இது - மிக்க அழகிற் சீதைக்கு உவமம். பிறரைத்தாக்கும் பெண்ணை அரிய சீதைக்குத் தான் தாக்கும் அரியதின்பத்தைச் செய்தாளென ஒரு சமத்காரந்தோன்ற நின்றது, இரண்டாமடியின் சொற்போகு. தாக்கணங்கு அரு என்ற இரண்டும் சீதைக்கும், தாக்கு அரு என்ற இரண்டும் இராவணத்திற்கும் அடைமொழி. இனி, தாக்கு அணங்கு - எல்லாரிடத்திலுஞ்சென்று சேருந் திருமகளாகிய என்பாரும், கொல்லியம்பாவை போன்றவளான என்பாரும், 'தாங்கரு' என்பது 'தாக்கரு' என விகாரப்பட்ட தென்று

கொண்டு பொறுத்தற்கரிய வென்று உரைப்பாரும், 'தாங்கரு' என்று பாட மோதுவாரு முளர்.

வீதா என்ற வடசொல், சீதை யென விகாரப்பட்டது; அச்சொல்லுக்கு, கலப்பையுழுபடைச்சா லென்று முதலிய பொருள்: ஜநகமஹாராஜா யாகஞ் செய்தற்குச் சாலையமைத்தற்பொருட்டு நிலத்தை யுழுதபொழுது அப்படைச் சாலினின்று தோன்றியவ ளாதலால், பிராட்டிக்குச் சீதையென்ற பெயரா யிற்று; இடவாகுபெயராகிய காரணக்குறி. இதிருநாமம் - இவன் மற்றை யோர்போல ஒருதாயின வயிற்றினின்று பிறந்தவனல்ல னெனப் பிராட்டி யினது அயோநிஜத்வமாகிய திருவவதாரச்சிறப்புத் தோன்ற நின்றது. இவள் ஜநகமஹாராஜன்வளர்த்ததாக னெனபது உணர்க. அரும்பெறல் - பெறலரும் என மொழிமாறுக.

'நோக்கழிசெய்த', 'ஆக்கினைமுருவாலெனு மரும்பெறலுவகை, வாக்கி னலுரையாவென', 'ஆக்கினை நமதருவின' என்ற பாடங்களும் ஏற்கும்.(நூ)

[அன்ன்ப்பறவைகள் நதிகளிற் குடைந்துவிளையாடுதல்.]

சo. நீடுகெஞ்சுறு நேயத்தாலெடி துறபிரிந்து
வாடுகின்றன மருளுறுகாதலின் மயங்கி
கூடுநன்னதித்தடந்தொறுங்குடைந்தன படிவுற்
றாடுகின்றனகொழுநரைப்பொருவின வன்னம்.

(இ - ன்.) நெடிது உற பிரிந்து - நெடுநாளாக விட்டுப்பிரிந்து, கெஞ்சு உறு நீடு நேயத்தால் - மனத்திற் பொருந்திய மிக்க அன்பினால், வாடுகின்றன - வாட்டமடைந்தனவாயிருந்து, மருளுறு காதலின் மயங்கி - மோகத்தைச் செய்யுமபடியான மிக்க ஆசையுடன வந்துசேர்ந்து, கூடி நல நதி தடம் தொறும் குடைந்தன படிவு உற்று ஆடுகின்றன - (தாம்) வந்துசேரப் பெற்ற சிறந்த நதிகளின இடந்தோறும குளித்து நீராடி விளையாடுகின்றனவான, அன்னம் - அன்னப்பறவைகள்,—கொழுநரை பொருவின - கணவரைப் போன்றன; (எ - று.)

நதிகளில் நீரவறறியகாலத்தில் அவற்றைவிட்டுப்பிரிந்துபோய் நெடு நாளாய் அந்நதிகளினிடங்களைப்பற்றிய ஞாபகத்திடனவாடியிருந்த அனனப் பறவைகள் கார்காலம்வந்தவளவிலே மிக்க ஆசையுடன மீண்டுவந்து 'காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் விழுந்தது' என்றாற்போல அந்நதிகளிற் பலபடி குளித்து பலமுறை நீராடி விளையாடுகின்றன; அவற்றிறகு, தலிலியரை நெடுநாள பிரிந்து அனபினால் வருநதியிருந்த தலிலவர் கார்காலம வந்தவள விலே மிக்க காதலுடன மீண்டுவந்து அவர்களிடம் கூடிக்குலாவிக் களித்தலே உவமை கூறினார். உவமையணி. அனனத்திறகுக் கூறிய அடைமொழிகளின விஷயம், கொழுநர்க்கும் ஏற்றது. 'கூடும் நல் நதித் தடம்தோறும்' எனப தற்கு - சிறந்த நதியின்பெருக்கு வந்துசேரப்பெறற நடாகங்களி லெல்லாம் என்று உரைப்பாரு முளர்

கேயம் - ஸ்கேஹம், அன்னம் - ஹம்ஸம்: இவ்விருசொற்களையும் வட மொழிச்சிதை வெண்ணலாம்.

'கேயத்தாற்பிரிந்தழி கினேன்தி,' 'தடந்தொறும்படிந்தன குழைவுற்று' என்பன பாட்டேதம். (சு0)

[கோக்குகள் வரிசைவரிசையாய் வானத்திற் பறத்தல்]

சகூ காரெனும்பெயர்க்கரியவண்மார்பினிற்கதிர்முத்
தாரமென்னவும்பொலிந்தனவளக்கருமலக்கர்
நீர்முகந்தமாமேகத்தினருகுறநிரைத்தகூ
கூரும்வெண்ணிறத்திறத்தனபறப்பனகுரண்டம்.

(இ - ள்.) அளக்க அரும் - அளவிடுதற்கு அருமையான, அளக்கர் கடலினின்று, நீர முகந்த - நீரைக் கவர்ந்துசெல்கின்ற, மா மேகத்தின் - கரிய மேகத்தின், அருகு உற - சமீபத்திலே பொருந்த, நிரைத்த - வரிசைப்பட்டு, கூரும் வெள் நிறம திறத்தன பறப்பன - மிகுதியான வெண்மைநிறத்தினை மேன்மையையுடையவையாய்ப் பறகின்றவையான, குரண்டம் - கொக்குகள்,—கார் எனும் பெயர் கரியவன் மார்பினில் - திருவ்ஷ்ணனென்ற (நிறத்தினால்) பெயர்பெற்ற கருநிறமுடையவனுடைய திருமாலின மார்பில் உண்டாகின்ற, கதிர் முத்த ஹாரம் என்னவும் - பிரகாசமுளள முகதாஹாரம் போலவும், பொலிந்தனவினங்கின; (எ - று.)—உவமை - அடுத்ததசெய்யுளில்வரும் வர்ணனையை நோக்கி எதிரதழுவியஎச்சமாய் நின்றது.

நிறமும் தோற்றமும் பற்றி வந்த உவமையணி. கார்-கருமை பென்னும் பண்புப்பெயரின விகாரம்; கருநிறமுடையவனைக் குறிக்கும்போது, பண் பாகுபெயர். இனி, கார் எனும் பெயர கரியவன - கானமேகமெனனும் பெய ரையுடைய திருமால் என்றுங் கொள்ளலாம். "தானதாமரைத்தடமணிவயல் திருமோகூர், நானுமேவினன்கமர்ந்து நின்றசுரைத்தகர்க்குக், தேனுநான் குடைச் சுரிகுழலாகமலக்கட் கனிவாய்க், கானமேகத்தை யன்றி மற்றொன் றிலன் கதியே" என்ற ஆழ்வாருளிச்செயலைக் காண்க; (பாண்டியநாட்டி லுள்ள திருமோகூரென்னுந திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெரு மானது திருநாமம் - காளமேகபெருமான்; அத்தலதது காச்சியார் திரு நாமம் - மேகவல்லி.) இனி, கானமேகமாகிய திருமாலென்றலு மொன்று; இப்பொருளில், 'எனும்பெயர்' என்றது - உருவகவருபினதன்மையது. எனும் - என்னும்: தொகுத்தல். முத்த, ஹாரம் - வடசொல்திரிபுகள். முத் தாரம் - முத்தமாலை. அளக்க அரும் என்பது, அளக்கரும் எனத் தொகுத் தல்விகாரமடைந்தது; அருமை யென்ற பண்புப்பெயர், ஈற்றுஜகாரம்மாத் திரம்கெட்டது. 'அளக்கர்' எனற பெயர்-அளக்கஅரு என்பதன் விகாரமாய், அளத்தற்கு அரிய தென்ற காரணப்பொருளபடும; அந்தஉற்பத்தியருத்தந் தோன்ற 'அளக்கரும்அளக்கர்' என விசேடித்துக்கூறினர். கடலினின்று எழும் நீராவிகள் திரண்டு காளமேகமாகத்தொகுதலால, கடலினின்று நீரை மொண்டுசென்ற மேக மென்றல், மாபு. முகத்தல் மொள்ளுதல். குரண்டம்

வடசொல். 'கூரும் வெண்ணிறத்திரையெனப் பறப்பன' என்ற பாடம், 'ஆரமென்னவும் பொலிந்தன' என்றவிடத்தவுமையை இறந்தஅதழுவிய எச்சமாகக்கொள்ளுதற்கு ஏற்கும்; திரைஎன - அலைகள் போல வெண்க.

'காரெனுங்கிறக் காியவன்,' 'கவின் மூத்தாம்,' 'நீர்றுகர்ந்த மூமேகத் தின்மருங்குற நிறைத்த' என்பன பாடபேதம். (சக)

[நாரைகள் வரிசைவரிசையாய் வானத்தில் பறத்தல்.]

சஉ. மருவிநீங்கல்செல்லாநெடுமாலியவானிற்
பருவமேகத்தினருகுறக்குருகினம்பறப்ப
திருவினுபகனிவனெனத்தேமறைதெரிக்கு
மொருவன்மார்பினிலுத்தரியத்தையுமொத்த.

(இ - ன்.) மருவி - (பல) ஒன்றுசேர்த்து, நீங்கல் செல்லா - (நடுவில்) நீங்கிப்போகாமல், நெடு மாலிய - நீண்ட வரிசைப் பட்டனவாய், வானில் . ஆகாயத்திலே, பருவ மேகத்தின் அருகு உற - காலகாலத்துக் காளமேகத் தின் சமீபத்திலே பொருந்த, பறப்ப - பறந்திறைவையான, குருகு இனம் - நாரைகளின் கூட்டங்கள், —திருவின் நாயகன் இவன் என - ''இலக்குமியின் கணவன் இவன்' என்று, தேமறை தெரிக்கும் - தெய்வத்தன்மையுள்ள வேதங்கள் சிறப்பாகத் தெரிவிக்கப்பெற்ற, ஒருவன் - ஒப்பற்ற [ஏகமூர்த்தியான] திருமாலின், மார்பினின் - திருமார்பிற் சாத்திய, உத்தரியத்தையும் - மேலாடையையும், ஒத்த - போன்றன; (எ - று.)

இதுவும், நிறமும் தோற்றமும் பற்றி வந்த உவமையணி. நாரை, வெண்ணிறமுடையது. அதன் காலின் செங்நிறம், உத்தரீயத்தின் கரைபோலுமென்க. கிருஷ்ணாச்சிரமத்தவர் மாபில் உத்தரீயக்தரித்தல், மரபு. திருமால் தோளில் உத்தரீயஞ்சாத்தியுள்ளதை 'மீயோங்கு செம்பொன் முடியாயிர மின்னிமைப்ப, ஒயா வருவித்திர ளுத்தரியத்தை யொப்பத், தீயோ ருளராகியதா லவாதீமைதீர்ப்பான், மாயோன் மகரக்கடனின்றெழு மாண்ப தாகி'' என்று சுந்தரகாண்டத்திலுங் கூறுவர். மருவி - ஒன்றோடொன்று நெருங்கி. திருவின் நாயகன் - ஸ்ரியஃபதி. திருவின் நாயகன் இவன் - எல்லா ஐசுவரியங்களுக்குந் தலைவனிவனேயென்றவாறும். வேதத்திற்குத் தெய்வத் தன்மை - என்றும் ஒருபடிப்பட நித்தியமாயிருத்தலும், எம்பெருமானால் வெளியிடப்படுதலும், பொருள்களின் இயல்பை உள்ளபடிகூறுதலும், அனைவராலும் சிறந்தபிரமாணமாக அங்கீகரிக்கப்படுதலும் முதலியன. மின்னலோடுகூடியகாளமேகத்தின் அருகில் வரிசையாக நெருங்கிப்பறக்கும் வெண் குருகுகள், திருமகளைத் திருமார்பிற்கொண்டவனை திருமாலின் மார்பிற் சாத்திய வெண்பட்டுத்தரீயம் போன்றன வெண்க.

செல்லா-செல்லாமல்: நீறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; 'மாலிய' என்னும் குறிப்புவினையாலணையும்பெயரோடு சேரும். செல்லாத என நீது

கெட்டஎதிர்மறைப்பெயரெச்சமாகக் கொண்டால், 'மாலே' என்னும் பெயர்க்கு அடைமொழியாம். ஒருவன்-அத்விதீயன. மார்பினின்—இன்-சாரியை, இன்-ழனுருபு. 'மார்பினில்' எனறும் பாடமுண்டு. உத்தரீயம்-மேலே தரிக்கும் ஆடை: வடசொல்; (அரையிலுடுக்கும் ஆடை, அந்தரீய மெனப்படும்.) உம்மை. கிழ்ச்செய்யுளின வர்ணனையை நோக்கி இறக்தது தழுவிய வச்சமாம். 'உத்தரியத்தினையொத்த' எனவும் பாடங் காணப்படுகினறது.(சுஉ)

[பசும் புல்.]

சுக. உறவெதுப்புறுங்கொடுங்தொழில்வேனிலாலெழியத
" றிறநினைப்பருங்காலெனுஞ்செவ்வியோன்சேர
நிறமனத்துறகுளிர்ப்பினினெடுநிலமடக்தை
புறமயிர்த்தலமபொடித்தனபோன்றனபசும்புல.

(இ-ள்.) பசும் புல்-(தரையில் எஙகும் முளைத்துச் செழிக்கின்ற) பசுநிறமான புற்கள்,—உற வெதுப்பு உறும கொடுங் தொழில் வேனிலான் ஒழிய-ழிவும் தாபததைச் செய்கினற கொடுங் தொழிலையுடைய வெயிற் காலமாகிய அரசன் நீங்க, திறம் நினைப்பு அருங் கா எனும் செவ்வியோன் சேர-மேன்மையை நினைத்தற்கும் அரியதாகப் பெற்ற [மிக்க மேனமையுள்ள] கார்காலமாகிய நற்குண நறசெயல்களை யுடையவன (அரசனுய்) வந்து சேர, (அதுபற்றி), நெடு நிலம் மடந்தை-பெரிய பூமிதேவி, நிறம் மனத்து உறு குளிர்ப்பினின-மாட்சி பெற்ற (தன்) மனத்திற் கொண்ட குளிர்ச்சியால் [மகிழ்ச்சியால்], புறம் பொடித்தன-உடம்பு முழுவதுஞ் சிலிர்த்தனவான, மயிர்த்தலம்-மயிர்களை, போன்றன-ஒத்தன; (எ-று.)

தனக்கும் தன்பிரஜைகளுக்கும் மிக்கதாபத்தைச் செய்து கொடியவனுயிருந்த வெயிற்காலமாகிய அரசன நீங்க, அதற்கு மாறுசத் தன்க்கும் தன் பிரஜைகளுக்குங் குளிர்ச்சியைச் செய்பவனும் மனத்திற்கும் எட்டாத வளவு மேன்மையைப் யுடையவனுமான கார்கால மென்கிற உத்தமபுருஷன் அரசனுய் வந்து சேரப்பெற்றமை பற்றி, பூமிதேவி அகக்குளிர்ந்து உடம்பு முழுவதும் மயிரசிலிர்த்தாற் போனறன, அக்காரகாலததிலே தரையி லெஙகும் முளைத்துச் செழிகின்ற பசும்புற்கள் என்பதாம். நற்குறிப்பேற்றவணி. மயிர் சிலிர்த்தல், மகிழ்ச்சியாலும் குளிர்ச்சியாலும ஆவது. காலம், ருது என்பன வடமொழியில் ஆண்பாற் சொற்களாதலால், அவற்றை ஆண்மகனுகக் குறித்தார்: காலம் உலகத்தையும்உயிர்களையும் தனவசப்படுத்தி நடத்தலால், அதனை அரசனுகக் கூறுதல் தகும்; சிலப்பதிகாரத்தில் "காரசாளன்," "பனியரசி யாண்டுளன", "இன்னிளவேனில் யாண்டுளன்" என்றவை காண்க. செவ்வியோன்-கல்லோன்.

வெதுப்பு-வெதுப்புதல், வெதும்பச் செய்தல்: பிறவினை முதனிலைத் தொழிற்பெயர். வெதுப்பு உறும-உஷ்ணம் பொருந்திய வெஙகால், வெதுப்பு-வெதும்பு எனனும் தன்வினை முதனிலை திரிந்த தொழிற்பெயராம். நிறம்-உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருளின்பஙகளும்

டத்தற்கு ஏதுவாதல்; திருக்குறளில் 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்திற் பரக்கக் காண்க. 'நிறநினைப்புறும்,' 'மனத்துறு களிப்பினில்' என்பன பாடபேதம். (சசு)

[மயில்கள் தோகைவிரித்து ஆடுதலும், கூவுதலும்.]

சச. தேனவாமலர்த் திசைமுகன் முதலினர்தெளிந்தோர்
ஞானநாயகனவையுறு நோக்கினர்நல்கக்
கானம்பாவையும்பரப்பிய கண்ணெனச்சனகன்
மானைநாடிநின் றழைப்பனபோன் றனமஞ்ஞை.

(இ - ள்.) மஞ்ஞை - மயில்கள்,—தேன் அவாம் மலர் திசைமுகன் முதலினர் - தேன் சொரிகின்ற (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிய நான்கு முகமுடையவனை பிரமன் முதலிய, தெளிந்தோர் - தெளிந்த அறிவுடையவர்கள், ஞானம் நாயகன் நலவை உற நோக்கினர் - தத்துவஞானத்திற்குத் தலைவனை இராம பிரானது (சீதையைப் பிரிந்ததனாலாகிய) துன்பத்தை நன்றாகப் பார்த்தவர்களாய், நல்க-(சீதையை நாடி) உதவும் பொருட்டு, கானம் யாவையும் பரப்பிய - காடுகளிலெல்லாம் பரப்பிய, கண் என-கண்கள் போல, (தமது தோகைக் கண்களைப் பரப்பி), சனகன் மானை நாடி நின்று அழைப்பன போன்றன - ஜாகிப்பிராட்டியைத் தேடி நின்று அழைப்பவற்றை யொத்தன; (எ - று.)

கார்காலத்தில் மயில்கள் களித்துத் தமது தோகைக்கண்களைப் பரப்பிக் கொண்டு கூத்தாடுதலும், கூவுதலும் இயல்பு. அப்படி அக்காடுகளெங்கும் காணப்படுகின்ற மயிற்கூட்டைக் கண்களை, எண் கண்ணனை பிரமன் முதலிய தலைமைத் தேவர்கள் இராமபிரான் சீதையைப் பிரிந்து வருந்துதலைப் பார்த்துத் தாம் சீதையை நாடிக் கண்டு உதவக் கருதிக் காடுகளி லெங்கும் கண்களைப் பரப்பினாற் போலு மென்றும்; அம்மயில்கள் தோகைக் கண்களைப் பரப்பிக் கொண்டு கூத்தாடிக் கூவுதலை, அவை தமது மிகப் பல கண்களைப் பரப்பிக் கொண்டு எழும்பி எழும்பிச் சீதை சென்ற விடத்தை நாடி வணவும் அவளை உரத்த குரல் கொண்டு அழைப்பனவும் போன்றன வென்றும் உற்பிரேக்ஷித்தார்; தற்குறிப்பேற்றவணி. இயல்பிலேயே எட்டுக் கண்களையுடைய னென்று காட்டுதற்கு, 'திசைமுகன்' எனலுற்ற. ஆயிரங் கண்ணனை திருமாலாகிய இராமபிரான் தேடிக்காணமாட்டாத சீதையைத் தான் தேடிக் காணுதற்குத் தனது எட்டுக்கண்கள் போதா வென்ற படைத்தற் கடவுளான பிரமன் தனது திவ்ய சக்தியால் மிகப்பல கண்களைக் கொண்டு அவற்றைக் காடுகளெங்கும் பரப்பி விழித்து நோக்கலாயின னென்க; மற்றைத் தெளிந்தோர்க்கும் இவ்வாறே கொள்க. பிரமன் முதலிய தேவர்கள் மற்றையோரினுஞ் சிறந்த அறிவையுடையரா யிருப்பதனாலே, எம்பெருமானுக்கு உதவி செய்யும் நாட்ட முடைய ராணமை பற்றி, 'தெளிந்தோர்' எனப்பட்டனர்; அன்றியும், தேயமிடை யிட்டவற்றையும் காலமிடையிட்ட வற்றையும் தமது ஞானக் கண் கொண்டு காணவல்லவ ரென்பது தோன்ற

இவ்வாறு கூறினருமம். ஞான நாயகன் - தத்துவ ஞானத்தை அடியார்கட்கு அளிப்பவன், தத்துவ ஞானத்திற்குப் புலனுகிறவன், இனி, தத்துவ ஞானத்தை யுடைய (தன்மை) தலைவ னென்றும் கொள்ளலாம். 'நிசை முகன் முதலினர் தெளிக்தோர் ஞானநாயகன் கலை உற நோகினர் நல்க' என்பதற்கு - பிரமன் முதலிய தேர்ந்த அறிவுடையோர் இராமபிரான் அன்பமடைய (அதனை)ப் பார்த்தவர்களாய் (அவனுக்கு) உதவி செய்தற்காக என்றும். பிரமன் முதலியோர் ஞான நாயகனுடைய அன்பத்தைத் தெளிந்தவர்களாய் [நன்றாக அறிந்தவர்களாய்] (சீதை யிருக்கின்ற இடத்தை நன்றாகப் பார்த்து இராமபிரானுக்கு) உதவி செய்ய என்றும் பதவுரை கூறலாம்

இனி, 'நோக்கின' என்ற பாடத்திற்கு, பிரமன்முதலிய தெளிந்தோர்க்கும் தத்துவஞானத்திற்கும் தலைவனன இராமபிரானுடைய அன்பத்தை (மயில்கள் தாம்) பார்த்தலையாய் (அவனுக்குச் சீதையைகாடிக்கொடுத்து) உதவுமாறு என்ற பொருள் கொண்டு அதற்கேற்பக் கருத்து அமைக்க வேண்டும். தெளிந்தோரது ஞானத்திற்கு நாயக னெனலுமாம். ''தேடாகின்ற வெண்ணயிரைத் தெரியக்கண்டாய் சித்தையுவந், தாடாநிணரூயாயிரங்களுடையாய்க் கொளிக்குமாறுண்டோ'' என்று (பம்பைப்படலத்தில்) இராமபிரான் மயில்களேநோக்கி இரக்கியுள்ளா ஞதலால், அவை இவ்வனம் பிராட்டியை நாடிக்கண்டு உதவுமாறு முயலத்தகும். இனி, நோக்கினவாய் நல்கும் பொருட்டுக் காடுகளெல்லாம் தம் தம் கண்களைப் பரப்பின போல வென்று கற்பனையமைத்தலும் ஒன்று.

அவாவுதல் - இறக்குதல். அவாம் - அவாவும். இனி, தேன் அவாம் - வண்டுகள் விரும்பத்தக்க எனினுமாம். நிசைமுகன் - நான்குதிசையையும் நோக்கிய (நான்கு) முகமுடையவன். கானம் - காநகமென்ற வடசொல்லின் லிகாரம், பரப்பிய, பரப்பு - பகுதி; இதனை 'பர' என்றதன பிறவினையென்றல், பு - பிறவினை விகுதியும்; 'பரம்பு' என்றதன் பிறவினையென்றல், மெலிவலியாதல் - பிறவினைக்குறியுமாம். சனகன் மான - ஜநகமகாராஜன் வளர்த்த பெண், மான் - உவமையாகுபெயர்; பார்வையழகில் உவமம்: வனவாசத்திற் களிப்பவனென்பதும் போதரும். சனகன - விதேகதேசத்து மிதிலாபுரியின் அரசன்.

'தேனின மாமலர்', 'ஞானநாயக னலையற நோக்கென நல்க,' 'நலையற நல்கின நோக்கி,' 'நலையற நோக்கெலாநல்க,' 'கண்ணனசனகன்' எனபன பாடபேதம். (சச)

[சேந்தாமரைமலர்களும் கோடிகளும்.]

சடு. செஞ்செவேலவர்செறிகிலேக்குரிகிலிருண்ட
குஞ்சிசேயொளிகதவுறப்புதுநிறங்கொடுக்கும்
பஞ்சிபோர்த்தமெல்லடியெனப்பொலிச்தனபதுமம்
வஞ்சிபோலியர்மருங்கெனநடங்கினவல்லி.

(இ - ன்.) செம் செவ் வேலவர் - (பகைவரிரத்தந்தோய்தலால்) மிகவுஞ் செங்நிறமான வேலாயுதத்தை யுடையவர்களும், செறி சிலை குரிசிலர் - கட்டமைந்த வில்லை யேந்திய வீரர்களுமான தலைவர்களுடைய, இருண்ட குஞ்சி கருநிறமான தலைமயிர்முடி, சேய் ஒளி கதுவ - சிவந்த ஒளியைக் கொள்ளுமாறு, புது நிறம் கொடுக்கும் - (அதற்குப்) புதிய நிறத்தைக்கொடுக்கின்ற, பஞ்சி போர்த்த மெல் அடி என - செம்பஞ்சுக்குழம்பு மிகுதியாக ஊட்டப்பெற்ற மென்மையான (மாதர்களுடைய) பாதங்கள் போல, பதுமம் பொலிந்தன - செந்தாமரைமலர்கள் விளங்கின; வஞ்சி போலியர் மருங்கு என - நீர்ஞ்சிக்கொடிபோல மெல்லிய வடிவுடையரான மாதரது நுண்ணிய இடைபோல, வல்லி நுடங்கின - பூங்கொடிகள் மெல்லியனவாய் அசைந்தன.

உபமான உபமேயங்களை மாற்றிக்கூறியதனால், எதிர்நிலையுவமையணி. செந்தாமரை மலர்கட்குச் செம்பஞ்சுக்குழம்பை மிகுதியாக ஊட்டிய மகளிரடிகள் நிறத்திலும் மென்மையிலும் அழகிலும், கொடிகட்கு அவாது இடை மெல்லிதாய் நுடங்கும் வடிவிலும் உவமம். 'வஞ்சிபோலியர்' என்பதை 'அடி' என்றதனோடுங் கூட்டுக. தலைவனும் தலைவியும் கூடிக்குலாவும் இன்பலீலையில் அவ்வின்பத்தை மிகுவிக்குமாறு தலைவி தலைவன்மேல் ஏதேனுமொரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டு கோபங்காட்டி அவ்வூடலை முதிரவிட்டனளாக, இன்சொல்முதலிய வேறு உபாயங்களினால் தணிக்கக்கூடிய லீலையைக் கடந்து காலில்விழுதலாகிய ஒருபாயத்தினாலன்றித் தணிக்கக்கூடாத லீலையையடைந்த அப்பெருட்புலவிக்காலத்தில், அதனைத் தணித்தற்பொருட்டு, யாவரையும் வசப்படுத்தும இயல்பினதான வணக்கத்தைத் தலைவன் மேற் கொண்டு ("சில்லரிச்சிண்சிணிமென தெய்வமலாச்சேறடியைத், தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்" என்றபடி) அவன் பாதங்களில் தனது முடி படுமாறு வீழ்ந்தவணக்க, அவன் அதற்கும் இணங்காது ("புலந்தவள் கொடி யென நடுங்கிப் பொன்னரிச், சிலம்பொடு மேகலை மிழற்றச் செனனிமே, லலங்கல்வா யடிமலரணிந்து" என்றபடி) கோபந்தீர அவனைக காலால் முடிமேல் உதைக்கும்போது, அப்பாதத்தில் மிகுதியாக ஊட்டப்பட்டிருந்த செம்பஞ்சுக்குழம்பு பட்டவிடத்தி லெல்லாம் தலைவனது தலைமயிர்முடி இயற்கைக கருநிறம் நீங்கிச் செயற்கைச் செந்நிறங்கொண்டு விளங்குமென்பது, முதல் மூன்றடிகளில் உணரத்தக்கது; "ஊடலிற் கனன்று, மறித்து நோக்கியர் மலரடி மஞ்சனப்பஞ்சி, குறிததகோலங்கள் பொலிந்தன வரக்கர் தங்குஞ்சி" என மேற் சுந்தரகாண்டத்தில் வருவதுங் காண்க. கார்காலத்தில் தாமரை மலர்வ்னனை வருதற்குக் காரணம், கூவ - ஆஞ் செய்யுளின உரையிற் காட்டப்பட்டது.

'செஞ்செவ்வேலவர்' எனபது, ஓசையின்பம் நோக்கித் தொகுத்தல் விகாரப்பட்டது. செறி சிலை - வலிமைமிக்க வில் லெனினுமாம் குரிசில் என்ற ஆண்பாற் சிறப்புப்பெயரின் மேல், அர் - பலர்பால்விகுதி. குஞ்சி - ஆடவர் தலைமயிர்; (குடுமி, சிகை, பகுசி என்பனவும் இது. ஐம்பால், ஒதி கூந்தல், கோதை என்பன - மகளிர் தலைமயிரைக் குறிக்கும்) கதுவுதல் -

பற்றுதல். பஞ்சிபோர்த்தல் - அரக்குரஸத்தைப் பஞ்சினுலெடுத்துத் தடவுதல். பத்மம், வல்லி - வடசொற்கள். நடங்குதல் - துவளுதல். (சகு)

[குயில்கள் குரலடங்குதல்.]

சசு. நீயிரன்னவர்குதலேயராதலினேடிப்
போயதையலைத்தருதிரென்றிராகவன்புகலத்
தேயமெங்கணுந்திரிந்தனபோய்தேடிதேடிக்
கூயவாய்க்குரல்குறைந்தபோற்குறைந்தனகுயில்கள்.

(இ - ள்.) குயில்கள்--, —நீயிர் - நீங்கள், அன்னவர் குதலேயர் ஆதலின் - 'அந்த ஜாநகியாருடைய மழலேச்சொற் போன்ற இனிமையான குரலேயுடையவர்க ளாதலால், போய தையலே தேடி தருதிர் - (என்னை விட்டுப் பிரிந்து) போன அந்த அழகிற் சிறந்தவளைத் தேடி (எனக்கு)க் கொணர்ந்து கொடுக்கக் கடவீர்கள்,' என்று இராகவன் புகல - என்று இராம பிரான் (குயில்களைநோக்கிக்) கூற, (அவை அதற்கு இணங்கி), தேயம் எங்கணும் திரிந்தன போய்தே - எல்லாவிடங்களிலுஞ் சென்று திரிந்து வந்து, இடை தேடி - அந்த அந்த இடங்களில் (பிராட்டியாரைத்) தேடி, கூய ஆய் - உரக்கக்கூவிக்கூவி அழைத்தனவாய், குரல் குறைந்த போல் - குரலொடுங்கினபோல, குறைந்தன - (கார்காலத்திற்) குரலொடுங்கின [கூவாமலிருந்தன].

தற்குறிப்பேற்றவணி. நீயிர் அன்னவர்குதலேய ராதலின் - நீங்கள் குரலினினிமையால் அந்த ஜாநகியாரோடு ஒத்த நண்ப ராதலா லென்றபடி. இனி, நீங்கள் மாதர்குதலேபோன்ற குதலேயையுடையீ ராதலாற் பிரிந்து சென்ற (சீதையாகிய) மாதைத் தேடித்தரவல்லீ ரென்றலுமாம். முன்னை உரையில், அன்னவர் - உயர்வுப்பன்மை; இவ்வுரையில், பொருட்பன்மை. தருதிர் - முன்னைபொருளில், எவற்பன்மை; இப்பொருளில், முன்னிலைப் பன்மை. நீங்கள் குரல்காட்டியழைத்தால் அவன் தன் இனமென்று கருதி உங்களிடம் வந்து சேர்வ ளென்றவராறும்; குயில்மொழியாளான சீதையை வருவித்தற்குக் குயிலைத் தூதுபோகப்பறவையாகக் கொண்டன ரென்க. 'நீயிர் அன்னவர் 'குதலேயர்' என்ற வாக்கியத்தில், முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி காண்க; 'குதலேயிர்' என்பது-வழாநிலே. நீயிர் - முன்னிலைப் பன்மைப் பெயர்: இது, முதல்வேற்றுமையில் மாத்திரமே வரும். செய்யுளாதலின், 'அன்னவர்' எனச் சுட்டுப் பெயர் முதலில் வந்தது; ''செய்யுட்கு ஏற்புழி'' என்றார் நன்னூலாரும்: [பொ சூ.] பிறரிடம் சொல்லும்போது அவர்க்கு நன்குமதிப்பு நிகழுமாறு தன் மனைவியைப் பன்மையாக்குறிக்கும் இயல்புபற்றி, 'அன்னவர்' என்றார். 'அன்னவன்' என்றும் பாடமுண்டு. குதலே - நிரம்பாமெனசொல். மகளிர்க்குக் குதலே எப்பருவத்திலுங் கூறப்படும். ராகவன் என்ற திருநாமத்திற்கு - ரகுமகாராஜனது வம்சத்தில் அவதரித்தவ னென்று பொருள்; வடமொழித் தத்திதாந்தநாமம். ரகுவென்பவன் - தசரதனது மூதாதை; அவன் மிக்க வீரமும் கொடையுமுடையவ

ஞதலால், இராமபிரானே அவன் சம்பந்தமான பெயராற்குறித்தார். கூய - பலவின்பாற்பெயர். 'போயத்தையலே' என்பது பிரதிபேதம். (சக)

[பசுக்கள் புல்மேய்தல், காளான், பிடவமலர்.]

சஎ. பொழிந்தமாநிலம்புற்றரைக்குமட்டியபுனிற்ரு
வெழுந்தவாம்பிகளிடறினசெறிதயிர்சேய்த்த
மொழிந்ததேனுடைமுகிழ்முலையாய்ச்சியர்முழவிற்
பிழிந்தபால்வழிநுரையினீப்பொருவுவபிடவம.

(இ - ள்.) பொழிந்த மழைபெய்யப்பெற்ற, மாநிலம் - சிறந்த பூமி, புல்தர - பசும்புற்களே யுண்டாக்கிக்கொடுக்க, குமட்டிய - (அவற்றை) நிரம்ப மேய்ந்ததெவிட்டிய, புனிறு ஆ - கன்றையீனறுகெநோளாகாத பசுக்கள், எழுந்த ஆம்பிகள் - ஆங்காங்குப்பூத்தெழுந்த காளாண்களே, இடறின - கால்களால் இடறித்தள்ளின; (அவ்வாறுசிதறிய காளாண்கள்), செறி தயிர் எய்த்த - இடறிச்சிதறப்பட்ட கட்டித்தயிரை பொத்தன; பிடவம் - பிடவமென்னுஞ் செடியினமலர்கள்,— மொழிந்த தேன உடை - பேசுகின்ற தேன்போலினிய சொற்களே யுடைய, முகிழ் முலை ஆய்ச்சியர் - (கோவின்) அரும்புபோன்ற தனங்களேயுடைய இடைச்சாதிப்பெண்கள், முழவில் பிழிந்த - குடங்களிற் கறந்த, பால் - பாலினினறு, வழி - மேலேவழிகின்ற, நுரையினே - நுரையை, பொருவுவ - ஒப்பன; (எ - று.)

நிறமும் வடிவும் பற்றிய உவமையணி. முல்லைநிலத்துப்பொருள்கட்கு அந்நிலத்துப்பொருள்களே உவமைகூறப்பட்டன; இடதற்கேற்ற உவமை. குமட்டுதல் - தேக்கெறியுமாறு வயிறுகையைத் தினனுதல். புனிறு - ஈன்றணிமை, சிலநாளைக்குமுன்பிரஸவித்தநிலை; இது கூறியது, ஈன்றணிமையையுடைய பசுக்களாதலால் ஆம்பிகளைக் கடந்துகாலெடுத்துவைக்கும் ஆற்றலின்றி அவ்விடத்திலிடறின வென்று காட்டுதற்கு. செறிதல் - இறுகுதல். தேன் - உவமையாகுபெயர்; நாவிற்கு இனிய தேன் போலச் செவிக்கு இனிய சொற்க ளென்க. 'மொழிந்த' என்றதனைமொழி, 'தேன' என்பதன் ஆகுபெயர்ப்பொருளே விளக்கிற்று; 'மொழிந்த தேன' எனவே, சொல்லென்ற தாயிற்று. முகிழ் தாமரையரும்புமாம். ஆய்ச்சியர் - ஆய சென்பதன் பெண்பால்; பசுக்களேயுடைமைபற்றி, இப்பெயர். ஆ - பசு. முழவு - முழாவென்பதன் விகாரம். அடிக்கப்படும்வாத்தியங்களின பொதுப்பெயராகிய இது, சிறப்பாய் கடவாத்திய மெனப்படுங் குடமுழாவை யுணர்த்த, இங்கு, அது - குடமென்றமாத்திரமாய் நின்றது. மடிநிறையப் பால்கொண்டு சுரக்கும பசுக்களேக் கறத்தலாவது முலையைப்பிழிதலேயாதலால், 'பிழிந்த' என்றார். பிடவம் - ஓர்செடி; காராகாலத்தே பூப்பது: குட்டிடபிடவமெனனுங் கொடியென்றலு முண்டு. பிடா, பிடாவு, பிடவு எனறும் வழங்கும். 'பிடா' எனபது குறியதனிறுதிக்குறுகி 'அம்' சாரியை பெற்று 'பிடவம்' எனகின்றதென்க. 'பொழிந்தவானிலம்புற்ற' எனற பாடத்திற்கு - பொழிந்தமழையால் நிலத்திற் புல்லுண்டாக வென்ற பொருள்.

'முழாவில்,' 'பொருவின' என்பன பிரதிபேதம். (சவ)

[வேங்கை, புன்னை, முல்லை, செங்கழுநீர் மலர்தல்]

சஅ. வேங்கைநாறினகொடிச்சியர்வடிக்குழல்விரைவண்
டேங்குகாகமுநாறினதுளைச்சியரைம்பா
லீங்குநாண்முல்லைநாறினவாய்ச்சியதோதி
ஞாங்கருற்பலமுழகுதியர்பித்திகைநாற.

(இ - ள்.) வேங்கை - (குறிஞ்சிநிலத்துக் கருப்பொருளாகிய) வேங்கை மரங்கள், (மலர்ந்து), கொடிச்சியர் வடி குழல் நாறின - (அந்நிலத்து மகளிராகிய), குறத்தியருடைய சிறந்த கூந்தல் போல நறுமணம் வீசின; நாகமும் - (நெய்தல்நிலத்துக் கருப்பொருளாகிய) புன்னைமரங்களும், (மலர்ந்து), விரை வண்டு ஏங்க - விரைந்து செல்லு மியல்பினவான வண்டுகள் (மொய்த்து) ஆரவாரிக்கும்படி, நுளைச்சியர் ஐம்பால் நாறின - (அந்நிலத்துமகளிராகிய) செம்படவச்சிகளுடைய கூந்தல் போல நறுமணம் வீசின; ஞாங்கர் உற்பலம் - பக்கத்திலுள்ள (மருதநிலத்துக் கருப்பொருளாகிய) செங்கழுநீர்க்கொடிகள், (மலர்ந்து), உழத்தியர் பித்திகை நாற - (அந்நிலத்துமகளிராகிய) கடைசியருடைய கூந்தல்போல நறுமணம்வீச,—ஆங்கு நாள் முல்லை - அவறறினருகிலேயுள்ள அன்றுமலர்ந்த (முல்லைநிலத்துக் கருப்பொருளாகிய)முல்லைக்கொடிகள், ஆய்ச்சியர் ஓதி நாறின - (அந்நிலத்து மகளிராகிய) இடைச்சிகளுடைய கூந்தல்போல நறுமணம்வீசின; (எ - று.)

எதிர்நிலையுவமையணி. அந்தந்நிலத்துமாதரது கூந்தலின் இயற்கை நறுமணச்சிறப்பை விளக்குமுகத்தால் அக்காலமலர்களை வருணித்தார். உத்தமஜாதிஸ்திரீகளின் கூந்தல் இயற்கை நறுமணம்வீசு மெனபது, கொளகை. வேங்கை முதலியவறறை அவற்றின மலர்களாகவே கொள்ளலுமாம். இனி, கொடிச்சியாவடிக்குழல் வேங்கைநாறின என்று மாற்றி, குறிஞ்சிநிலத்து மகளிரது சிறந்த கூந்தல்கள (அக்காலத்தில்மலர்ந்த) வேங்கைமலர்களைச் சூடி அவற்றினமணம்வீசின வெனறு பொருளகொள்ளுதலுமாம்; வேங்கை மலராகன கொடிச்சியர்வடிகுழலில் (சூட்டபபட்டி) மணம்வீசின வெனபரும, நாறின தோனறின வெனபாரு மூளர்: இவை, மற்றைவாகியங்களுக்கும் ஒகுமும். வடிதல்-தேர்ந்தெடுதல்; வடிக்குழல் - சிறந்ததென்றுதேர்ந் தெடுக்கதக்க கூந்தல: நானகாம்வேற்றுமை யுருபும் பயனுந் தொக்க தொகை; வடி - முதனிலைத்தொழிற்பெயர். இனி, வடிக் குழல் - (சூடிய மலாகளின் தேன) பெருகுதலையுடைய கூநத லெனினுமாம்; இப்பொருளில், வடிதல் - பெருகுதல்; வடி - முதனிலைத்தொழிற்பெயரே; வடி-தேனுமாம். விரைவண்டு - நறுமணத்தை நாடுகிற வண்டு எனறும், தேனைவிரும் புகிற வண்டு எனறும கொள்ளலாம்; விரை - வாசனை, தேன். மூன்றின பொருளில், விரை வண்டு - வினைத்தொகை; இப்பொருளில், இரண்டனுருபும் பயனுந்தொக்க தொகை. வேங்கை வண்டுமலர்மரமாதலால், 'விரை வண்டு ஏங்க' என்றதை அதற்குச்சேரவொட்டாதபடி பின்னேவைத்தார்; அதனை, முல்லை உற்பலங்களுக்குங் கூட்டுக இவ்வி, அதனை முதல்வாக்கியத் தோடுங் கூட்டி, அங்கு, விரை வண்டு ஏங்க - விரைந்து செல்லுமியல்பின

வான வண்டுகள் (வேங்கை மலர்களினருகில் வந்துமொய்த்து நறுமணத்தையும் தேனையும் கொள்ளமாட்டாமல் தூரத்தில் நின்றபடியே) எக்கமடைய வென்று பொருள்கொள்ளுதலுமாம், முன்பு, ஏங்குதல் - ஒலித்தல்; இப்பொழுது இரங்குதல். நுளைச்சியர் - நுளையர் என்பதன் பெண்பால். ஐம்பால் - ஐந்து பகுப்பை யுடைய தென்றுவது, ஐந்து தன்மையை யுடைய தென்றுவது கொள்க; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அனமொழித் தொகை. ஐந்து பகுப்பாவன - மயிரை உச்சியில் முடிதலாகிய முடியும், பக்கத்தில் முடித்தலாகிய கொண்டையும், பின்னே செருகுதலாகிய சுருளும், சுருட்டிமுடித்தலாகிய குழலும், பின்னிவிடுதலாகிய பனிசையுமாம். ஐந்து தன்மையாவன - மணம், மதி, மென்மை, நெய்ப்பு, கருமை. நாகம் - உத்பலம் - வடசொற்கள். உற்பலம் - இங்கே, செங்குவளை. உழத்தியர் - உழவர் எனபதன பெண்பால். பிதற்கையெனினும், பித்தை யெனினும் ஒக்கும். 'பித்தையி னுற' என்றும் பாடமுண்டு. 'பிணனகாறு' எனற பாடத்திற்கு, பின்னகம் - மயிர்முடியாம். பரலுக்குத் தனியே நிலமில்லை யாதலாலும், அதன சிறப்பினமைபறறியும், அதனை இங்குக கூறுராயினர். 'எயிற்றிய மைம்பால்' எனற பாடத்திற்கு - பாலைநிலத்துமகளிரது கூர்தலெனறு பொருள்; அப்பொழுது, நாகம் - சுரபுனைமரம் எனறு கொண்டு, அவ்விடத்திறகுச் சேய்மையதாதலால் நெய்தல்நிலம் இங்குக கூறப்பட்டில தெனக: அப்பாடம், மோனைத்தொடைக்கு ஏறகும்.

'வெடிக்குழல்,' 'விழைவண்டு,' 'வினர்வண்டு'. 'ஒங்குநாண்முல்லை', 'ஞாங்கருற்பலம பாதநியர்பித்திகைநாற' என்பன பிரதிபேதம. (சஅ)

[இராமபிரான் கார்காலத்தைக் கண்டு மிகவும் வருந்துதல்]

சகூ. தேனரைக்கொண்டபேரல்குலாடிருமுகஞகாணு
ஞரைக்கண்டுயிராற்றுவானல்லுணர்வழிதானை
மாமறற்கெண்ணிலபல்லாயிரமலர்க்கணைவகுத்த
காமரைக்கண்டனன்வெகுதுயர்க்கொருகரைகாணுன்.

(இ - ள்.) தேனரை கொண்ட பேர் அல்குலாள் திரு முகம் காணுன் - தேனபிராட்டியினுடைய அழகிய முகத்தைக் காணுதவனை இராமபிரான,— மாறறுக் எண இல் பல் ஆயிரம் மலர் கணை வகுத்த காமரை கண்டனன் - மாணுக்தமான வருத்ததைச் செய்பவனை மனமதனுக்குக் கணகில்லாத பல ஆயிரக்கணக்கான புஷ்பபாணங்களைச் செய்துகொடுத்த அந்தக்கார்காலத்தைப் பார்த்து, வெம் துயர்க்கு ஒருகரை காணுன் - கொடிய தனது துன்பமாகிய கடலுக்கு ஒருமுடிவெல்லையைக் காணுதவனும், கல் உணர்வு அழிந்தான் கல்லஅறிவு அழித்தவனுனன் [ப்ராஜ்ஞதப்பிஷ்ட என்றபடி]; ஆனை கண்டு உயிர் ஆற்றுவான - (தனமனைவியைக்காணுத அவன்) வேறு யாரைக் கண்டுதான துயர்தணிந்து உயிரை வைத்துக்கொண்டிருக்கமாட்டுவன்? (எ-று.)

திரு - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை. ஆர் யார்: மரூஉ. மிகவும் மோஹாந்தீபமாய்க் காதலை மேன்மேல் வளர்த்து மனமதனுக்கு உதவி செய்

கின்ற வென்பது, மூன்றுமடியின் கருத்து. முல்லை முதலிய பலவகை மலர் களே யுண்டாக்கியும், அம்மலர்கட்கிடமான பலவகைச்செடி கொடி மரங் களைச் செழிக்கச்செய்தும், புஷ்பபாணனை மன்மதனுக்கு உதவி செய்த வென்றவாறுமாம். நான்காமடியில், 'காரைக் கண்டனன், காரைகாணன்' என்றவிடத்து ஒருவகைச் சொற்சமத்காரங் காண்க. கண்டனன், காணன் என மாறுபட்ட சொற்கள் வந்தது, தோடைமுரண். 'துயர்க்கு ஒருகரை காணன்' என்றது, உருவகவிசேடம். இராமன் உணர்வு அழிந்தான் - தினை வழுவமைதி ; [கன் - பொது - உ.] (சக)

[அதனைப்பற்றிய கவிக்கூற்று.]

நிற. அளவில்காரெனுமப்பெரும்பருவம்வந்தணைந்தாற்
றளர்வரென்பதுதவம்புரிவோருக்குந்தகுமாற்
கிளவிதேனினுமமிழ்தினுங்கிளைததவெள்வளைதோள்
வளவியுண்டவன்வருந்துமென்றுலதுவருந்தோ.

(இ - ள.) அளவு இல் - (சிறப்பிறகு) ஓர் எல்லையில்லாததான [அள விறந்த சிறப்பையுடைய], கார் எனும் அ பெரும் பருவம் - கார்காலமென் கிற அந்தச் சிறந்த காலம, வந்து அணைந்தால் - வந்து சேர்ந்தால், தவர்வர் - தெஞ்சுறுதியழிவார்கள், என்பது - எனகிற விஷயம், தவம் புரிவோருக்கும் தகும் - (முற்றத்துறந்தி) தவஞ்செய்பவர்களான முனிவர்கட்கும பொருத் தம: ஆல் - ஆதலால்,—கிளவி (தனது) சொற்கள், தேனினும அமிழ்தினும் கிளைதத - தேனைக்காட்டிலும் அமிருதத்தைக்காட்டிலும் செழித்த [இனிமை மிகப்பெற்ற], வெள வளை - வெண்ணிறமான வளையல்களையணிந்தவளாகிய சீதையினது, தோள் - தோள்களை, வளவி - தழுவி, உண்டவன் - இன்ப மனுபவித்துக் கொண்டிருந்தவனான ஸ்ரீராமன, வருந்தும - (கார்காலம் வந்தபொழுது) வருந்துகினறான, எனறால்—, அது வருத்தோ - அது ஒரு வருத்தமெனறு விசேடமாகக் கொள்ளத்தக்கதோ ? [அனறு என்றபடி].

அது இயல்பே என்றதாம். 'மனையாளோடு கூடிவாழும் வாழ்க்கையைப் பற்றறவிட்டுச் சென்று தவஞ்செய்கின்றவர்களான துறவிகளுக்கும் கார் காலம் மனவுறுதியைப் போக்கவல்லது' எனற ஒருதனமையைக்கொண்டு, 'இயற்கையழகிலும் செயற்கையழகிலும் மிக்கவளான சீதையோடு கூடிக் குலாவிப் போகம நுகர்ந்துகொண்டிருந்தவன் அவளைப் பிரிந்த நிலையிற் கார காலத்தைக்கண்டு தளர்ந்து மிகவருந்துதல் இயல்பே' என்ற பொருளை எளி தில் சாதித்ததனால், தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியின்பாற்படும.

பெரும்பருவம் - பெரும்பொழுது எனறுமாம் ; பெரும்பொழுது = ருது: (மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு எனபன - சிறுபொழு தெனப்படும்.) 'பெரும்பருவம' எனறது, (பிரிந்தார்க்குக்) கழித் தற்கு அரியது என்ற பொருளும் தோனற நின்றது. உம் - உயர்வுசிறப்பு. ஆல் - ஆதலால் என்பதன் விகாரம் ; அசையாகவும், தேற்றப்பொருளதாக வும் கொள்ளத்தகும். கிளவி - பேச்சு ; கிளை - பகுதி; னெத்தல் - பேசுதல்.

வெள்வளை - சங்கினுலாகிய வளை; அதனையணிந்தவளைக் குறித்தலால், பண்புத்தொகையென்மொழி. வளவுதல் எனினும், வளாவுதல் எனினும் ஒக்கும்; வளைதல், கலத்தல். வருத்து - வருத்தம், வேருந்துதல் ஒ-எதிர்மறை. 'அளவி யுண்டவன் வருந்து மென்ரு லது வருந்தோ' என்று பாடமோதி, 'அளவி - அளாவி', 'அருந்தோ - அருமையோ' என்று உரைப்பாரு முளர். 'கிளைத்த வள் வளைத்தோள்' என்ற பாடத்திற்கு - செழித்தவளான பிராட்டியினது வளையல்களை யணிந்த தோள்களென்று பொருள். 'கிளைத்தவள் கிளைத் தோள்' என்ற பாடத்தில், கிளைத் தோள் - மூங்கில்போன்ற தோள். 'தளர் வது' எனவும் பாடம். (இ0)

[இராமபிரான் இரங்கத்தோடங்கிஞ னேன்றல்.]

நிக. காவி யுங்கரு ங் குவளையு நெய்தலுங் காயாம்
பூவை யும்பொரு வானவன் புலம்பினன் றளர்வா
ஞவி புஞ்சிறி துண்டுகொ லாமென வயிர்த்தான்
ஆவி யன்னமன் ஞடிறத் திவையிவை சொல்லும்.

(இ - ன்.) காவியும் - காவிமலரையும், கருங் குவளையும் - கருங்குவளை மலரையும், நெய்தலும் - கருநெய்தல்மலரையும், காயாம் பூவையும் - காயா மலரையும், பொருவான் - (தனது திருமேனிநிறத்தில்) ஒப்பவனுனை, அவன் - அந்த இராமபிரான், புலம்பினன் வளர்வான் - புலம்பித் தளர்ச்சியடைபவ னுய், ஆவியும் சிறிது உண்டுகொல் ஆம் என அயிர்த்தான் - (இவனுடம்பிற்) சிறிது உயிரும் உளதோ வென்று சங்கிக்கத்தக்கவனுகி, ஆவி அன்னம் அன்னஞ்சிறத்து - மென்மையான இறகின் அழகையுடைய அன்னப் பறவையைப் போன்றவளான பிராட்டியின் விஷயமாய் (த்தான்கொண்ட காதல் மிகுதியால்), இவை இவை சொல்லும் - இந்த இந்த வார்த்தைகளைச் சொல்பவனுனன்; (எ - று.)—அவற்றை, அடுத்த பண்ணிரண்டுகவிகளிற் காண்க.

காவி, கருங்குவளை, நெய்தல் என்ற மூன்றும் - நீலோற்பலத்தின் சாதி பேதம். காயா - ஓர்செடி. பொரு வானவன் - ஒத்த தேவாதிதேவனுன ஸ்ரீராமன் என்றும், பொரு ஆனவன் அல்லது பொருவு ஆனவன் - காவி முதலியவற்றை (த் தனக்கு) உவமையாகப்பெற்றவன் என்றும் பதவுரை கொள்ளலாம். மன்மதாவத்தைகளுள், அழுங்கலும் மொழிபலபிதற்றலுமா கிய மோகமும், அயர்ப்பும் மயக்கமுமாகிய மரணமும் இங்கே கூறப்பட்டன; இவை - சந்தாபம் வசிகரணம் என்று முறையே பெயர்பெறும். முல்லைமலரும் நீலமலருமாகிய மன்மதனது நான்காவது ஐந்தாவது அம்புகள் செய்யும் அவத்தைக ளெனப்படும். கொல் - வினை. ஐயம். ஆம் - அசை. அயிர்த்தான் - அயிர்க்கப்பட்டான் எனச் செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளது. அன்னம் கடையழகில் உவமம். இவை யிவை = பின்வருபவை.

'காரும் பூவையும்,' 'பூவையுஞ்செறிமேகமும் பரவையும் போல்வான்,' 'உண்டுகொலாமென வயர்வான்' என்பன பாடபேதம். (இக)

[இதமுதற் பன்னிரண்டு கவிகள் – காளமேகம் முதலியவற்றை நோக்கி இராமபிரான் இரங்கிக் கூறுதல்.]

வேறு.

[இதுவும், அடுத்தகவியும் - காளமேகத்தைநோக்கி இரங்கல்.]

நிலை. வாரோர் முலையா ளிமறைக் குரவ
ரூரே யறியே னுயிரோ டுழல்வே
னீரே யுடையா யருணின் னிலையே
காரே யெனதா விகலக் குறியே.

(இ - ன்.) காரே - காளமேகமே!—வார் எர் முலையாளே மறைக்குரர் வாழ் ஊரே அறியேன்-ச்சணிந்த அழகிய தனங்களே யுடையவளான சீதை கய எடுத்துக்கொண்டுபோய் ஒளித்துவைத்திருப்பவராகிய இராக்கதர் வாழ்கின்ற ஊரையேனும் இன்னதென்ற அறியமாட்டாமல், உயிரோடு உழல்வேன்-உயிரைவைத்துக்கொண்டு திரிந்துகொண்டிருக்கின்றேன்; நீரே உடையாய் - (நீ) நீரையேயுடையவனுமிருக்கின்றனையே [நீர்மையையேயுடைய வனுமிருக்கின்றனையே]; அருள் நின இலையே-அருள் உன்னிடத்தில் இல்லையோ? எனது ஆவி கலக்குறியோ - உன்னுடைய உரை (இச்சமயத்தில் இவ்வாறு) கலங்கச் செய்வையோ! (எ - று.)

எர் - எழுச்சியுமாம். இராவணனையே இகழ்ச்சிப்பன்மையாக 'மறைக்குரர்' என்றதாகவுங் கொள்ளலாம். அவருடைய உருவம் வலிமை சேனை முதலியவற்றை அறியாமையே யன்றி அவரிருக்கின்ற ஊரையேனும் அறியேன் எனப் பொருள்படுதலால், ஏ - இழிவுசிறப்பு. தனக்குப் பெருந்தீங்குசெய்த அவர்க்குத் தன்னால் யாதொருதீங்குஞ்செய்யமாட்டாமையைப் புலப்படுத்துவான், 'வாரோமுலையாளேமறைக்குரர் வாழ்' என்றான; வாழ்தல் எவ்வகையாலுங் குறைவினறி வசித்தல், செல்வத்தோடுமகிழ்ந்திருத்தல், ஜீவித்திருத்தல். உழலுதல் உலைந்துதிரிதல். எனக்குப்பெருங்கேடுசெய்த வர்விஷயத்தில் இவ்வளவு அறியாமையோடுகூடிய யான் உயிரையிழந்திருத்தலுங் குற்றமில்லை: அதுசெய்யாமல் உயிருடனிருக்கின்றேன் என்ற அநுதாபந் தோன்ற, 'உயிரோடுழல்வேன்' என்றான; உயிர்நீக்காதிருத்தலால் வருந்துகின்றே னென்றுணர்த்தம். ''உண்ணிலாவிய தயரம்பிடித்துந்த வாருயிர் நின் றாசலாட'' எனறபடி உயிர் நிற்கவும்மாட்டாமல் நீங்கவும் மாட்டாமல் அலையப பெறுகின்றே னென்ற பொருளில் 'உயிரோ டுழல்வேன' என்றதாகவுங் கொள்ளலாம். இரட்டுறமொழித லென்னும் உத்தியால், 'நீரே யுடையாய்' என்பதற்கு இருபொருள ஒருங்குகொள்ளப்பட்டது; சிலேடையணி யெனலாம். நீரே யுடையாய் - நீர்மயமாவிருக்கின்றாய்; ஏ-பிரிநிலை. நீர்மை யென்ற பண்புப்பெயர், ஈறுபோய் 'நீர்' எனநிற்கும். நீர்மை-இங்கு, உலகத்தவரிரக்கமெல்லாம் பாதுகாத்தல்., நீரின் தன்மை - தண்மை, அருளென்பதும் தண்மையே. நீர்மை - இனியதன்மை நிரையும் நீர்மையையு முடையனனை நீ தண்ணளியில்லாமலிருக்கற்பாலை

யோவென்றான். நின் அருள் இலேயோ-நினது அருள் (என்பக்கல்) இல்லேயோ வென்றலு மொன்று. அருள் நின் நிலேயோ என்று பிரித்து, அருளேயுடைய நினது நிலேமை இதுதானே வென்றும், நினது இந்நிலேமை அருளாமோ வென்றும் உரைத்தலுமாம். நெஞ்சில் தவறிவிழுந்தவர்மேற் கல்லேயெடுத்துப் போகட்டாற்போல, பிராணநாயகியைப்பிரிந்து அவளிருக்குமிடமுந் தெரியாமையால் அரையுயிராயிருப்பதை நீயும் காதலேவளர்த்து நிலேகலக்கு வது தகா தென்பது, தேர்ந்தகருத்து.

'ஊரே யுணரேன்' என்ற பாடத்திற்கு, இரண்டாமடி - முற்றுமோனை கொண்டதாம். 'வாரேய்,' 'மறைக்குநன்', 'ஊரேதறியேன்,' 'அருணீன் நிலேயோ', 'அருளின்னிலேயோ' என்பன பாடபேதம்.

இதுமுதல் எழு கவிகள் - நாற்சீரும் மாச்சீராகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். அன்றி, 'வாரோர்மூலே யாளமறைக்கு நர்வாழ்' என இவ்வாறு பிரித்து, பெரும்பாலும் முதற்சீர் மாங்கனிச்சீரும், இரண்டாவது கூவினச்சீரும், மூன்றாவது கூவிளங்காய்ச்சீரு மாகிய ஐந்தடி நான்கு கொண்ட வஞ்சிவிருத்தமாகக் கொள்ளினும் இழுக்காது.

தலேவன் தலேவியர் காதலாலிரங்குதலேக் கூறுமிடத்துப் பெரும்பாலும் இவ்வகைவிருத்தம் உபயோகிக்கப்படுகின்றது; பாலகாண்டத்துக் கடிமணப் படலத்திற் சீதை இராமன் என்னுமிருவ ரிரக்கற்கும் இவ்விருத்தமே உபயோகித்தனர்: சுந்தரகாண்டத்து உருக்காட்டுபடலத்திற் சீதை இரங்குதற்கும் இதுவே; அதிவீராமபாண்டியரும் நைடதத்துச் சுயம்வரப்படலத்தில் நளன் தமயந்தி என்னுமிருவ ரிரக்கலேயும் இவ்விருத்தத்திலேயே கூறுதல் காண்க. (டுடு)

டுகூ. வெப்பார்நெடுமின்னினையிற்றைவெகுண்
டெப்பாலும்விசும்பினிருண்டெழுவா
யப்பாதகவஞ்சவரக்கரையே
யொப்பாயுயிரைகொண்டலதாவலி யோ.

(இ - ள்.) வெப்பு ஆர் - (காண்பவர்க்கு) அச்சந்தருந்தன்மை மிக்க, நெடு மின்னின் - நீண்ட மின்னல்களாகிய, எயிற்றை - கோரதந்தங்களேயுடையாய், இருண்டு - கருநிறங்கொண்டு, வெகுண்டு - சீர்சிறந்து, விசும்பின் - ஆகாயத்திலே, எ பாலும் - எந்தப்பக்கத்திலும், எழுவாய் - தோன்றுகின்றாய்; (ஆதலால்), அ பாதகம் வஞ்சம் அரக்கரையே ஒப்பாய் - கொடுந்தொழிலேயும் வஞ்சனேயையுமுடைய அந்த இராக்கதரையே போல்பவனுனை, உயிர் கொண்டு அலது ஒலியோ - (எனது) உயிரைக் கவர்ந்தல்லாமல் அப்பாற்போகமாட்டாயோ? (எ - று.)

உவமையணி. உபமானமாகிய அரக்கர்க்கு இயையும்போது, 'மின்னின் எயிற்றை' என்பதற்கு-மின்னல்கள்போன்ற கோரதந்தங்களேயுடையா யென்றும் பொருள்கொள்ளலாம். இருண்டு வெகுண்டு விசும்பின் எப்பாலும்

எழுதல், கானமேகத்திற்கும் அரக்கர்க்கும் ஒக்கும். அரக்கர் எனது உயிர் நிலையாகிய [பிராணகாயகியான] சீதையைக் கவர்ந்துகொண்டு அப்பாற் சென்றனர்; நீ எனதுயிரைக் கவர்ந்துகொண்டதான் செல்லையோ என்றனும். வெகுண்டு-கோபித்து: இக்காரணச்சொல் காரியப்பொருளின்மேல் நின்று, 'கர்ச்சித்து என்றதாயிற்று; உபசாரவழக்கு. மேகம் கர்ச்சித்தல் - குமுறுதல், இடிமுழங்குதல். தன்னை வருத்துதல்பற்றி, கோபங்கொண்டு எனறனுமாம்.

வெப்பு - கடுமை, எயிற்றை - முன்னிலை யொருமைக் குறிப்புமுற்று; எயிறு - பகுதி: பல்; ஐ - விகுதி. 'எயிற்றின்' என்ற பாடத்திற்கு - பற்களுடனே யென்று பொருள். 'எப்பாலும்' என்றதை 'ஒப்பாய்' என்பதனோடு இயைத்து, எல்லாவகையாலும் ஒத்திருப்பாய் என்றலும் ஒன்று. ஒப்பாய் - ஒப்பவனனமேகமே! என விளியுமாகலாம். 'அரக்கனையே' என்பதும்பாடம்.

இங்கு, மேகம் முதலிய அஃறிணைப்பொருள்களைக் கேட்டல்முதலிய செயல்கட்குரியனவாகக் கூறுதல், வழுவமைதியின்பாற்படும்; தொல்காப்பியத்துப் பொருளியலில் "சொல்லாமரபினவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்" என்றதும், செய்யுளியலில் "ஞாயிறு திங்களறிவே காணே, கடலேகானல் விலங்கோரனே, புலம்புறபொழுதே புன்னே நெஞ்சே, அலையல பிறவும் நுவலிய நெறியாற், சொல்லுகபோலவும் கேட்குக போலவும், சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்" என்றதுங் காண்க: விரகவேதனையால் அறிவுதிரிந்த நிலையில் தலைவன் தலைவியர் இவ்வாறெல்லாம்பேசுதல் எற்கு மென்பது கருத்து. (நாகு)

[மயிலேநோக்கி நாங்கல்.]

நாச. அயிலெழியார்வினையாரமிழ்தின்
குயிலேமொழியார்க்கொணாய்கொடியாய்
துயிலேனருவேனுயிர்சோர்வுணர்வாய்
மயிலேயெனைநீவலியாடுதியோ.

(இ - ன்) மயிலே—!—அயில் எ விழியார் - வேலாயுதமும் அம்பும் போலக் கூறிய கண்களையுடையவரும், வினை ஆர் அமிழ்தின் குயிலே மொழியார் - (பாற்கடலில்) தோன்றிய அருமையான தேவாமிருதத்தையும் குயில்கூவுதலேயுமே போன்ற [மிகஇனிய] சொற்களையுடையவருமான ஜானகியாரை, கொணராய் - தேடிக் கொண்டுவந்து (எனக்குக்) கொடுத்து உதவமாட்டாய்; கொடியாய் நீ - கொடுந்தன்மையுடையையான நீ, துயிலேன் ஒருவேன் உயிர் சோர்வு உணர்வாய் - தூக்கங்கொள்ளாதவனும் (மனவியைப்பிரிந்து) தனித்திருப்பவனுமான எனது உயிர் தளர்ச்சியடைதலை யறிவாய்; (அறிந்திருந்தும்), எனை வலி ஆடுதியோ - என்னை (இச்சமயத்தில்) உன்வலிமைகாட்டி நலியற்பாலையோ! (எ - று.)

முதலடியில், எ - ஒருமொழித்தொருமொழியாகிய வினைச்சொல். ஆர்மிழ்து—ஆர் - அருமை யென்ற பண்புப்பெயர் ஈறுபோய் இடைஉகரமும்

கேட்டு ஆதிரீண்டது; (சுவை) கிரம்பிய என வினைத்தொகையுமாம். அம்ருதம் - தன்னைநுகர்ந்தவர பிறிதுநுகராமல் தடுக்கும் இனிமையில் உவமம். அமிழ்தின - அமிருததோடு என்க. மொழியார்க் கொணராய் - இரண்டாம்வேற்றுமைத்தொகை; "இயல்பின் விகாரம்." 'மன்மதாவத்தைகளுள் துயிலாமையும் ஒன்று; பிரிவாற்றுமைக்கு உரிய குறிகளுள் "வாராவுரைக்குமும்" என்றதுங் காண்க. சோர்ந்திருக்கின்ற சமயத்தில் உதவி செய்வதைவிட்டு மேன்மேல்வருத்தியழிக்கத் தொடங்குதல் பகைவர்க்கும் வீரச்செயலாகா தென்பான், 'உயிர்சோர்வுணர்வாய் வலியாடுதியோ' என்றான்; இராவணனையும் போரில் 'இன்றுபோய் நாளைவா' என்று அருள் செய்யும் இயல்பின ஞாலமும், தன்னைப்போலவே பிறரையும் நினைத்தல் பெரியோரியல்பாதலாலும் என்க. 'கொடியாய்' என விளித்ததும் இது பற்றியே. மயில் தனது தோகையினுற் சீதையின் கூந்தலையும், தனது சாயலினுற சீதையையும் போலிருத்தலால், அப்பொருள்களை நினைப்பூட்டி கலிவுசெய்யு மென உணர்க; ஸ்மாரகபதார்த்தமமய்க் காமோத்தீபகப்பொருள் களிலொன்று மென்க. எனை - தெருத்தல். 'உலையாரமுதின்,' 'சோர்வு ணராய்', 'அயிலேர் விழியார் குயிலேய் மொழியார்' என்ற பிரதிபேதம்.(இசை)

[பூங்கொடியைநோக்கி இரங்கல்.]

நிரு. மழைவாடையொடாடிவலிக்குயிர்மே
னுழைவாய்மலர்வாய்கொடியாய்கொடியே
யிழைவாணுதலாளிடைபோலிடையே
குழைவாயெனதாவிகுழைக்குதியோ.

(இ - ன்.) கொடியே--!—மழை வாடையொடு ஆடி - மழைக்காலத்தில் வீசுகின்ற வாடைக்காற்றிற்கு ஏற்ப அசைந்து [வாடைக்காற்றோடு பழகி], வலிந்த உயிர்மேல் நுழைவாய் - வன்மைகொண்டு (எனது) உயிரில் நுழைகின்றாய்; மலர்வாய் - மலாபெற்றிருப்பாய் [மலர்ச்சிகொண்டிருப் பாய்]; இழை - (என்னுடு) கூடியிருந்த, வாள் நுதலான் - பிரகாசமுள்ள நெற்றியை யுடையவளான சீதையினது, இடை போல்—,இடையே குழை வாய் - இடையிடையே அவண்டுகாட்டி, எனது ஆவி குழைக்குதியோ - என்னுடைய உயிரை இளகச்செய்யத்தகுவையோ? கொடியாய் - சொல் வாய்; (எ - று.)

மழைக்காலத்து வாடைக்காற்றோடு பழகியதனால் அதன்குணத்தை நீயும் உடையையாய், அது வன்மைகொண்டு எனது உயிரின்மேல் வீசிவருத் துதல்போல நீயும் எனது எதிரில் உனது மெல்லிதாய்த்துவளும்வடிவைக் காட்டி அசைத்துகொண்டு சீதையின் இடையை ஞாபகப்படுத்தி என் னுயிரை வலியத்தாக்கி வருத்துகின்ற யெனருளை. 'மலர்வாய்' என்றதனால், என்வருத்தத்தைக்கண்டு சிறிதேனும் இரங்காமல் என்முன்னிலையில் மலர்ந் திருக்கின்றனையே யென்றனும்; வருத்தமுற்றவர்க்கு, பிறர்மலர்ச்சியைக் காணுமிடத்து வருத்தம்மிகுதல் இயல்பு. கொடியாய் - (எனக்குச் சமாதான

மாக யாதொன்றும்) பேசாதிருக்கின்றாய் என்றும் பொருள்படும். 'செய்யாய்' என்னும் வார்ப்பாட்டுச்சொல் உடனபாடு எதிர்மறை என்ற இரண்டிலும் வரும். 'மலர் வாய் கொடியாய்' என்பதற்கு - மலராகிய வாயினுற் பேசாய் என்று உரைப்பாரு மூளர். 'கொடியே' என்ற விளி, கொடுமையை யுடையாய் என்ற பொருளும் தோன்ற நின்றது; (சுந்தரகாண்டத்து உருக் காட்டுபடலத்தில்) ''தழல்வீச வுலாய்வரு வாடை தழீஇ, அழல்வீ ரென தாவி யறிந்திலிரோ, நிழல்வீரையனருட னீர் நெடுகா, ஞழல்வீர் கொடியீ ருரையாடலிரோ'' என வரும் பிரட்டி யிரங்கல், இங்கு நோக்கத்தக்கது. 'இழை' என்ற வினைத்தொகை, நுதலாளுக்கு அடைமொழி; இனி, (உலகத் திற்கு) ஆபரணம்போன்ற என்றும் உரைக்கலாம். நுதலுக்கு அடைமொழி யாக்கி, ஆபரணங்களுக்கு ஒளியைத்தரும் நெற்றியை யுடையா ளென்றலு மாம். இடையே குழைவாய்-இடந்தோறும் [கண்டஇடமெங்கும்] குழைந்து காட்டுவா யெனினுமாம். 'இடைபோ லிடையே குழைவாய் குழைக்கு நியோ' என்றதில, ஒருவகைச் சொற்சமத்காரம் தோன்றும். ஸ்மாரக பதார்த்தங்களெல்லாம் [ஞாபகப்படுத்துவனவான பொருள்க ளனைத்தும்] பிரிந்தார்க்கு நலிவுசெய்யுமாதலால், 'நுதலாளிடைபோ லிடையேகுழைவாய் எனஆவி குழைக்குநியோ' எனப்பட்டது.

வாள் - ஒளியை யுணர்த்தும்போது உரிச்சொல்; ''வாளொளியாகும்'' என்பது, தொலகாப்பியத்து உரிச்சொல்லியற சூத்திரம். வலிந்து - வருத்தி யெனினுமாம்.

இரண்டாம்அடி, 'உழைவாய்மலரா லொடியாய் கொடியே' என்றும் காணப்படுகின்றது. 'நுதலாரிடை,' 'குழைக்குவையோ' என்பன பிரதி பேதம். (டுடு)

[மானோக்கி இரங்கல்.]

டுசு. விழையேன்விழைவானவைமேன்மையினின்
றிழையேனுணாவேனவையின்மையினுற்
பிழையேனுயிரோடுபிரிந்தனரா
லுழையேயவரெவ்வுழையாருரையாய்.

(இ - ன்.) உழையே - மானே!—நவை - குற்றத்திற்கு இடமான பொருளை, விழைவால் விழையேன - ஆசையால் விரும்பக்கடவேனல்லேன்: மேனமையினின்று இழையே - பெருமைக்குணத்தினின்று கெழிக்கட வேனல்லேன: உணர்வேன - (பொருள்களை நல்லது அல்லது தீயது என்று உள்ளபடி) அறியக்கடவேன்: அவை இன்மையினால் - மேற்கூறிய தனமைகள (எனிடத்தில்) இல்லையானதனால், பிழையேன் - பிழைபாடு டையனுயினேன்; (ஆதலால்), உயிரோடு பிரிந்தனர் - (என்னுடைய) உயி ரோடு (ஜானகியார் எனனேவிட்டுப்) பிரிந்துபோயினர்; அவர் எ உழையார் உரையாய் - அவர் (இப்பொழுது) எவ்விடத்தில் லிருக்கின்றார்? சொல்வாய்; (எ - று)—ஆல்- அசை.

. பொன்மானுடைய இது மெய்வடிவமாயிருக்குமா, அல்லது மாயையுருவ மாகுமா என்று ஆய்ந்து அதன் இயல்பை உள்ளபடி உணராமல், அன்புள்ள தம்பி 'மாயை யிது' என்றுகூறவுங் கேளாமல், தையல்சொற்கேட்டு, அந்த மானைப் பிடிக்கவிரும்பி, அதனைத்தான தொடர்ந்துசென்றமையே, சீதையை இராவணன் கவர்தற்கு இடமாயிற்று என்ற நடந்த செய்தியைப்பற்றிக் கழிவிரக்கத்தோடு கூறிய வார்த்தையாகும், முதல் மூன்று அடிகள். 'அவை' என்றது - விழையாமை, மேன்மையினின்று கெடுழாமை, உணர்வு என்ற வற்றைச் சுட்டும். பிராணநாயகியாரான அவர் என்னை விட்டுப் பிரிந்தது, எனது உயிர் உடம்பை விட்டுப் பிரிந்ததுபோலு மெனபான், 'உயிரோடு பிரிந்தனர்' என்றான்; இதனால் சீதையின் இனறியமையாமையைப் புலப் படுத்தினன். ஈற்றடியில் 'உழை' என்ற சொல்லை வெவ்வேறு பொருளில் அமைத்தது, சொற்சமத்காரமாம்: உழை - மானும், இடமும். மான் வடிவங் கொண்டவனால் அவா பிரிக்தனராதலால் அவரிருக்கின்ற இடதைத மானே! நீ சொல்லக் கடவாய் என வேண்டின னெனக. விழையேன, இழையேன் - தன்மை யொருமைம தெரிநிலை யெதிர்மறை முற்றுக்கள். பிழையேன் - உடன்பாட்டுக் குறிப்பு முற்று. கலை - குறம்; ஆகுபெயராய், அதற்கு இடமான பொருளை யுணர்த்திற்று. இழைதல் - நெகிழ்தல்

இனி, இச்செய்யுளுக்கு வேறு வகையாகவும் உரைகொள்ளலாம்; அது வருமாறு:—விழைவு ஆனவை விழையேன் - விரும்பத்தக்க பொருள்க ளெவற்றையும் விரும்புகின்றேனில்லை; மேன்மையில் நின்று இழையேன் - (அறிவு நீரை ஓர்ப்புக் கடைப்பிடி என ஆடவர்க்குரிய) மேனமைக்குணங்க ளில் நிலைத்துத் தொழில் செய்ய ஆற்றலிலேன்; உணர்வு எனவை இன்மை யினால் - புத்தியும் மற்றை அந்தக்காணங்களாகிய மனம் சித்தம் அகங்காரம் என்பனவும் ஒழிதலால், பிழையேன - இனி உயிர் வாழ மாட்டேன்; உயி ரோடு பிரிந்தனர்-என் உயிரோடு (அந்த ஜாநகியார் என்னை விட்டுப்) பிரிந்து சென்றார் எனக் காண்க. விழைவானவை - உணவு, படுக்கை, மலர் முதலி யன. இழைத்தல் - செய்தல். எனவை - ஏனையவை. 'பிழையேன்' என் றது - தெரிநிலை யெதிர்மறை முற்று.

இனி, 'விழையேன விளைவா லருண் மெய்ம்மையினின்று' என்ற பாடத்திற்கு - அடியில் வருமாறு பொருளுரைக்கலாம்:—உழையே-மானே ! விழையேன் - (மாரீசனுடைய மாயமானைப் போல உன்னைப்பிடிக்க) விரும் பேன்; விளைவால் காரியத்தால், அருள் மெய்ம்மையினின்று இழையேன் - கருணையினின்றும் சத்தியத்தினின்றும் நெகிழமாட்டேன்; உணர்வேன் - (உனது இயல்பை) அறிவேன்; கலை இன்மையினால் - (உன்னிடத்தில் யாதொரு) குற்றமும் இல்லாததனால், பிழையேன் - (தொடர்தல் அரத்த தல் அம்பெய்தல் கொல்லுதல், என்றாற்போல) யாதொரு தவறும் (உனக்குச்) செய்யமாட்டேன் என்க.

'மெய்ம்மையினின், நிழையே னுணர் வென்வயி னின்மையினும், பிழையே னுயிரொருண்டு பிரிந்தனால்' என்றும் பாடமுண்டு. 'விழை வேன்', 'இழவேன்' எனபன பிரதிபேதம். (இசு)

[தனது உயிரை நோக்கி இரங்கல்.]

நிஎ. பயில்பாடகமெல்லடிபஞ்சனையார்
செயிரேதுமிலாவொடுதீருதியோ
வெயிராதுடனேயகல்வாயலையோ
யுயிரேகெடுவாயுறவோர்கிலையோ.

(இ - ன்.) உயிரே - (எனது) உயிரே!—பயில் - அணிந்த, பாடகம் - பாடக மென்னும் ஆபரணத்தை யுடைய, மெல் அடி - மென்மையான பாதங் கள், பஞ்சு அனையார் - பஞ்சுபோல மென்மையா யிருக்கப் பெறறவரும், செயிர் ஏதும் இலாவொடு - யாதொரு குற்றமு மில்லாதவருமான ஜானகியா ரோடு, தீருதியோ - என்னை விட்டு நீங்கிப்போகக் கடவையோ? (அப்படிப் போவதானால்), அயிராது உடனே அகல்வாய் அலையோ - சங்கை கொள்ளா மல் அவர் பிரிந்த அப்பொழுதே அவருடன் சென்றிருக்கக் கடவாயன்றே! கெடுவாய்—! உறவு ஒர்கிலையோ - (பிராண னுகிய உனக்கும் பிராண காயகி யாராகிய அவர்க்கு முள்ள) உறவுரிமையை (அப்பொழுது) அறிந்தாயில் லையோ? (எ - று.)

உயிரே! நீ அப்பொழுதே என் உடம்பை விட்டு நீங்கியிருந்தால் வருத்த மில்லாதிருக்குமே யென்றவாறும். அன்றியும், எனது உயிராகிய நீ அவரை விடாமல் தொடர்ந்து சென்று அவருடனிருந்தால் வருத்தமெனப தேது? என்றவாறுமாம். மூன்றாமடிக்கு - (நீ போவதானால்), "உண்ணிலாவிய தய ரம் பிடித்துந்த வாருயிர் நின நூசலாட" எனறபடி உட்ம்பை விட்டுப் போவதா? போகாம லிருப்பதா? என்ற சங்கை கொண்டாய் போலப் போவ தும் வருவதுமா யிருந்து வருத்தாமல் உடனே [விரைவிற] சென்றுவிடக் கடவாயன்றே என்ற கருத்து. 'உறவோர்கிலையோ' எனபதற்கு - (எனக் கும் அவர்க்கு முள்ள) உறவுரிமையை அறிகின்றா யில்லையோ எனறலுமாம். இனி, பின னூனறடிகட்கு - ஒரு குற்றமுமில்லாத அவரோடு (நீ உறவு) ஒழிகின்றாயோ? அவர் போனவுடனே நீயும் சங்கை யின்றிப் போகக்கடவா யனறே? உயிரே! கெடுவாய்! நெடுநாள் பழகிய உரலையாவது நினையாயோ? என்றும் உரைக்கலாம். 'கெடுவாய்' என்றது, இரக்கத்தால் கிட்டாதே தோன்ற விளிப்பது; கொடியவனே! எனக.

பயிலுதல் - பழகுதல்; சிறப்பித்துச் சொல்லப்படுதலும், பொருத்த லும், ஒலித்தலுமாம். பாடகம் - ஒருவகைக் காலணி; பாதகடக மெனறவட சொல்லின் சிதைவு. அலை - அன்மையென்னும் எதிர்மறைப்பண் பினடியாப் பிறந்த முன்னிலை யொருமைக் குறிப்புமுற்று, ஓர்கிலை—கு - சாரியை. இல்- எதிர்மறை யிடைநிலை. (இ)

[கொன்றையைநோக்கி இரங்கல்.]

நிஅ. ஒன்றைப் பகராய் குழலுக் குடையாய்
வன்றைப் புறுநீள் வயிரத் திணையோ
கொன்றைக் கொடியாய் கொணர்கிற் றிலையோ
வென்றைக் குறவா கவிருந் தினையோ.

(இ - ன்.) கொன்றை கொடியாய் கொன்றைமரமாகிய கொடியவனே!— குழலுக்கு உடையாய் - (ஜாகியாருடைய) கூந்தலோடு நீ (பகைமை) உடையையாய், (அதனால் அவரிடத்தும் என்னிடத்தும்), வல் தைப்புஉறு நீள் வயிரத்தினையோ - வலிய ஊன்றிய நீண்ட கறவுடையாயோ? (அதனாலே தான்), ஒன்றை பகராய்·யாதொருவிடையுங் கூறாமல், கொணர்கிற்றிலையோ- (அவரை என்னிடம்) கொண்டுவந்து கொடாமலுமிருக்கின்றாயோ? என்றைக்கு உறவுஆக இருந்தனை - (நீ) என்றைக்குத்தான் உறவாக இருந்தாய்?

கொன்றைமரம் கார்காலத்தில் மலர்த்தவினங்கிக் காமோத்தீபகமாய் வருத்துதலால், அதனை 'கொடியாய்' என்றுவிளித்து இரங்குபவனனுன். கொன்றைக்காயை மகளிர்கூந்தலுக்கு வடிவில் உவமையாகக்கூறும் மரபு பற்றி, 'குழலுக்கு உடையாய்' என்றான். 'கொன்றை' என்ற சொல் கொன்று யென்ற ஒருபொருள்படுதலாலும், அச்சொல் அம்மரத்திற்குப் பெயராய்த் தொன்றுதொட்டுவழங்குதலாலும், அன்பு நண்பு அருள் இன்றிக் கொல்லுமியல்புடையாய் நீ யென்பான், 'என்றைக்குஉறவாகவிருந்தனையே' என்றான்; நீ என்றென்றைக்கும் கொன்றையென்ற பெயர்பெற்றிருக்கின்றனையேயன்றி ஒருநாளேனும் உறவென்ற பெயர்பெற்றிலை யென்றனும்: 'ஆக்வதும்' என்ற இதன் வடமொழிப்பெயரையுங் காண்க, கொன்றை மனிதர் சூட்டிக்கொள்ளும் மலரன்றுதல்பற்றி, நீ என்றைக்கு அவர் கூந்தலோடு சம்பந்தமுடையையாயிருந்தா யென்ற பொருளில் 'என்றைக் குறவாகவிருந்தனையே' என்றதுமாம்; அவர்கூந்தலோடு உனக்கு என்றைக்கும் நண்பு இருந்ததில்லை யென்க. என்னைவிட்டுப்பிரிந்தநிலையிலும் பிரியாதநிலையிலும் எந்நாளிலும் நீ அவர்கூந்தலுக்கு ஒப்பாகத் தகுதியுடையையல்லையென்ற பொருளுந் தோன்றும்; இவ்வளவுதகுதியற்ற உனக்குப் பகைமையும்கறவும் ஏன்? என்றபடி. திருமாலுக்கும் அப்பெருமானது திருவவதாரமூர்த்திகளுக்கும் கொன்றைமலர் உரியதன் றென்னும் உண்மை இங்குப் புலனுகு மெனபர் ஒருசாரார். ஒன்றைப் பகராய் - (இப்படிவருத்துகின்ற எனக்குச் சமாதானமாக) ஒருவார்த்தையையுஞ் சொல்லாய் என்றவாறுமாம்: ஒருவார்த்தையையேனும் சொல்வாய் எனினுமாம். அசேதனமாகிய மரம் ஒன்றையுஞ்சொல்லாமலும் பிரிந்தவரைக் கொணராமாட்டாமலும் நின்றமைக்குப் பகைமையும் வயிரமும் காரணமாகக் குறிக்கப்பட்டன.

தைப்பு உறு - தைத்தல் பொருந்திய; (எளிதில் நீராதபடி) நன்றுக அழுந்திய என்க. நீள் வயிரம் - நெடுங்காலமாகவுள்ள வைரம். சலஞ்சாதித்தல். 'குழலுக்கு உடையாய்' என்றதை - (காயினும்) கூந்தலுக்கு (ஒப்புமை)

உடையாய் என்ற பொருளும், கூர்தலுக்கு (ஒத்த காய்களை) உடையாய் என்ற பெர்ருளும், 'வல் தைப்புற மீன் வயிரத்தினை' என்றது-வலிய உள்ளே ஆழ்ந்த மீண்ட வைரத்தையுடையாய் (வயிரம் - மரவைரம்.) என்ற பொருளும், 'கோடியாய்' என்றது - கொடிகளையுடையாய் என்ற பொருளும் (மரத்தைச்சார்ந்து கொடிகள்படர்ந்திருத்தல் இயல்பு) தோன்றின்றன. கொணர்கிற்றிலையோ - (அவரைக்) கொண்டுவரமாட்டாயோ என்றமாம்.

'குழலுக்குடைவாய்', 'வயிரத்தினையே', 'கொணர்கிற்றிலையே', 'கொணர்கின்றிலையே', 'இருந்தனையோ' என்பன பிரதிபேதம். (நிஅ)

வேறு.

[முல்லைமலரையும், இந்திரகோபத்தையுங்குறித்து இரங்கல்.]

நிசு. குராவரும் பணைய கூர்வா ளெயிற்றுவெங் குருளை நாகம்
விராவுவெங் கடுவிற் கொல்லு மெல்லினர் முல்லை வெய்தி
னுராவருந் துயர மூட்டி யோய்வற மலைவ தொன்றே
விராவண கோப நிற்க விந்திர கோப மென்னை.

(இ - ன்.) குரா அரும்பு அனைய - குராமரத்தின் அரும்பையொத்த, கூர் வாள் எயிற - கூரிய ஒளியுள்ள பற்களையுடைய, வெம் குருளை நாகம் - கொடிய இளமையான பாம்பினிடத்து, விராவு - பொருந்திய, வெம் கடுவின் - வெவ்விய விஷம் போல, மெல் இணர் முல்லை வெய்தின் கொல்லும் - மென்மையான மலர்களையுடைய முல்லைக்கொடி கொடிதாய் (என்னை) மரண வேதனைப்படுத்தும்; உராவு அருந் துயரம் மூட்டி-பொறுத்தற்கு அரிய துன்பத்தை யுண்டாக்கிவளர்த்து, ஒய்வு அற மலைவது - ஒழிவில்லாமல் (என்னை எதிர்த்துப்) போர்செய்வது, ஒன்றே - இதொன்றுமாத்திரமோ? இராவண கோபம் நிற்க இந்திரகோபம் என்னை - இராவணகோபமொன்று இருக்கையில் இந்திரகோபமொன்று (என்னைவருத்தத் தலைப்பட்டது) என்னை?

கார்காலத்துக் காணப்படும் பொருள்களெல்லாம் காமோத்தீபகமாய் விரகிகளை வருத்தும்; அவற்றில், முல்லைமலரும் தும்பலப்பூச்சியும் இங்குக் குறிக்கப்பட்டன. பிரிந்தாரது பற்களை முல்லையரும்பும், அதரத்தை இந்திரகோபமும் ஞாபகப்படுத்துதலாலும் வருத்துவனவாம். முல்லைமலர் மன்மதனது பஞ்சபாணங்களுள் நான்காவதாய் 'சந்தாபம்' எனப் பெயர்பெற்ற "வனத்திலுற முல்லை கிடைகாட்டும்" என்றபடி அழுங்கலும் மொழிபலபிதற்றலுமாகிய மோஹாவஸ்தையை விளைத்து மிகவருத்துதலும் உணரத்தக்கது. முதல்மூன்றடிகட்கு - நாகம் (கரிய) கொடியவிஷத்தினால் (பிராணிகளைக்) கொல்லும்; முல்லை மெல்லிய (வெண்ணிறமான) மலரினால் துயர மூட்டி ஒய்வற (என்னைத்) மலைவது; இதமாத்திரமோ என்றும் பதவுரை கொள்ளலாம்.

ஈற்றடியால், தன்மனைக்கொண்டு இந்திரனென்று நினைவைத்தவனை இராவணனது கோபம் நிற்கையில், அவனால் அடக்கப்பட்டவனும்

அவனுக்கு அஞ்சியொளிப்பவனுமான இந்திரனது கோபம் தணிப்பட்டது எங்ஙனமோ! என்று வியந்தவாறும். ராக்ஷஸராஜனை இராவணன்து கோபம் என்னை வருத்தலாம் தேவராஜனை இந்திரனது கோபம் என்னை வருத்தக்கடவதோ வென்னும் பொருளும் தோன்றும். ராவணகோபம், இந்த்ர கோபம் - வடசொற்கள். 'ராவணகோபம்' என்பது - இராவணனுடைய மறைப்பு என்றுபொருள்பட்டு, இராவணன சீதையைஎடுத்துச்சென்றதெளித் தலை யுணர்த்தும்; கோபம் [கோபம்]- மறைத்தல். கோபம் [கோபம்] என்று கொண்டு சினமென்றுபொருளுரைத்தும் அமைக்கலாம். சொல்நிலைபற்றி 'இந்திரகோபம்' என்பது இந்திரனுடைய மறைப்பு அல்லது இந்திரனுடைய சினம் என்று கற்பிக்கப்பட்டது. கோபதாதைச் செங்நிறமுடையதாக வருணித்தல், கவிமரபு. தம்பலப்பூச்சிக்குப் பெயராம்போது, இந்த்ர கோபம் - இந்திரனுற் காக்கப்படுவ தென்று காரணப்பொருள்படும்; மழை யினல் அது தோன்றிப்பாவுதலாலும், இந்திரன் மேகவாகனனும் மழைக்குத் தலைமையுணுதலாலும் அங்ஙனம் அதற்குப் பெயராயிற் றெனக. இவ்வாறு இந்திரனது சம்பந்தமுடையதாய்ச் செங்நிறதோடு தன்னை வருத்துவதாகிய அதனை இராமபிரான் இந்திரனதுகோப மெனக் கற்பித்தலும் எற்றதாம்.

குரவமரத்தின அரும்பு - பாப்பின பல்லுக்கு கூரிய வடிவிலும் நிறத் திலும் ஒப்பாம். குரா - மருதோன்றி அல்லது வாடாக்குறிஞ்சி; குரவகம் - வடசொல். நாகத்தின் விஷப்பற்கள் - காளி, காளாத்ரி, யமன, யமதூதி என நாலகாம். குருளை - இளமைப்பெயர். தொல்காப்பியத்து மரபியலில் "நாயே பனறி புலி முயல் நானகும் ஆயுங்காலைக் குருளை யெனப" என்ற சூத்திரத்தின் உரையில் "ஆயுங்காலை" என்றதனல் "சிறுவெள் எரவினவரிக குருளை" என்பதை கொள்க என்று அமைக்கப்பட்டமை காண்க. முதிரக்து வலிதளாக்த தல்லாமல் இளம்பருவத்து வலிமையோடுள்ள நாக மென்றறகு, 'குருளை நாகம்' எனப்பட்டது. இனமைகாரணத புதிதாக மல ரும் முல்லைக்கு உவமையாதல்வேண்டி 'குருளைநாகம்' எனறுரைாம் நாகம். இளையதாயினும் விஷத்தினகடுமைக்குக் குறைவில்லையே; அவ்வாறே, முல்லை இளையதாயினும வருத்துதலிற குறைவிலலை யென்றதுமாம். நாகம் நகத்திலுள்ளது: முல்லையும நகத்திலுளளதே; (நகம் - மலையும், மரமும்.) கடு - வடசொல்; மிக்கவருத்தத்தைச் செய்வதென்று பொருள்படும்; கடுமை யையுடையது கடு வெனத் தமிழ்மொழியுமாகலாம். வெய்ய - வெம்மை யையுடையதாய். உராவுத லெனினும் உராய்த லெனினும் ஒக்கும். உரா வுதல் - ஸ்பரிசித்தல், தாக்குதல். இனி, 'உராவுவரும்' எனபது 'உராவரும்' என,த தொக்கு ஒரு சொல தன்மைப்பட்ட தெனக் கொண்டு, வளர்த்து வருகின்ற எனலுமாம். 'மூட்டி' என்ற வினைக்கு ஏறப, அன்பமாகிய தெருப்பை யென்னலாம். மூட்டுதல் - மூளச்செய்தல். கொல்லும்' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு கொல்வதான முல்லை வெய்தாய்த் தோன்றி மலைவது மாத்திரமோ என ஒருவாக்கியமாக்கவும் இடமுண்டு. அயாமூட்டி மலைவது என்று பிரித்தாலும் பொருள்படும்; அனபதத்தை அதபவிப் பித்து என்க. இணர் - பூங்கொத்து, பூ; பூக்தாதுமாம். மெல் முல்லை இணர்

என மொழிமாற்றி, மென்மையான மூல்லைப்பூ வென்றலும் அமையும். மென்மையான தனமையை யுடைய இதற்கு இவ்வாறு வருத்தும் வன்மை எங்ஙனமமைந்ததோ வென்று அதிசயித்தல் தோன்ற, 'மெல்லினர் மூல்லை குருகே நாகம் விராவுவெங்கடுவின் வெய்திற் கொல்லும்' எனப்பட்டது. அது இங்ஙனம் விபரீதமிலை யடைந்ததற்குக் காரணம் இராவண கோபமே யென்பது தோன்ற, அதனையடுத்து இராவணகோபத்தை நிறுத்தினன்.

ராவண னென்ற வடசொல் - கூவினவ னென்று பொருள்படும். கைலாச கிரியின் கீழ்க் கையகப்பட்டுக் கொண்ட பொழுது பேராரவார மிட்டமை பற்றி, இவனுக்கு இப்பெயர் சிவபிரானால் அளிக்கப்பட்டது; இனி, 'ராவணன் - கூச்சலிடச் செய்தவன் என்றுங் கொள்ளலாம். தான் செய்யும் பல தனபங்களால் உலகத்தாரை அலறிக் கதறிக் கூவச்செய்தான் இவன். இனி, விச்சிரவன் மகனென்னும் பொருளில் (வடநூல் விதிப்படி) ஆதேசம் வந்து ராவணனென்றுமிற தென்றுங் கூறுவர்.

'ஒய்வுற' என்ற பாடத்திற்கு - (யான்) ஒய்வடையுமாறு [வலிமைதளர்ந்து தொழியும்படி] என்று பொருளாம். 'கூர்வாயெயிற்று', 'வன்குருகே', 'மூல்லையெறும்', 'உராவுவெங்கையாம்', 'ஒய்வுறவுலைப்பது', 'இராவண கோபந்தீர்க்க,' 'இந்திரகோபமன்னே', 'இந்திரகோபமன்றே' என்பன பிரதிபேதம்.

இதுமுதல் ஆறு கவிகள் - அரசியற் படலத்தின் முதற்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (ஙகூ)

[வாடைக்கு இரங்கல்.]

கூ0. ஓடைவாணுதலினுலையொளிக்கலாமுபாயமுன்னி
நாடிமாரீசனுசோராடகநவ்வியானுர்
வாடையாய்க்கூற்றினுருமுருவினைமாற்றிவந்தார்
கேடுசூழ்வார்க்குவேண்டுமுருக்கொளக்கிடைத்தவன்றே.

(இ - ள்.) (முன்பு), மாரீசனுர்—, ஓடை வாள் நூதலினுலை ஒளிக்கல் ஆம் உபாயம் உன்னி நாடி - அரசன் மனைவியணியும் பொற் பட்டத்தை யணிதற்குரிய ஒளியுள்ள நெற்றியை யுடையவளான சீதையை வஞ்சனையாற் கவர்தற்கு ஏற்ற உபாயத்தை ஆலோசித்து அறிந்து, ஓர் ஆடகம் நவ்வி ஆனுர் - பொனமயமானதொரு மான்வடிவமாயினர்; (இப்பொழுது), கூற்றினுரும் - யமனும், வாடை ஆய் உருவினை மாற்றி வந்தார் - (என்னை வருத்துதற்கு) வாடைக்காற்றாகத் தனது ரூபத்தை மாற்றிக்கொண்டு வந்தார்; கேடு சூழ்வார்கு - (எங்கட்குத்) தீங்கு செய்யவருபவர்க்கு, வேண்டும் உரு கொள கிடைத்த அன்றே - அதற்கு வேண்டியவாறெல்லாம் வடிவங்கள் கொள்ளும் படி கிடைத்தன வன்றே! (எ - று.)

தலைவியைப் பிரிந்த தன்னைக் கார்காலத்து வாடைக்காற்று மரண வேதனைப் படுத்துவது பற்றி, அதனை யமனெனவே குறித்தனன். 'ஓடைவாள்

தலிஞன்' என்றது, நெற்றியழகில் ஈடுபாட்டிஞல். ஒண்டவாள் நுதலிஞன்- பட்டமகிஷியாதற்குரியவள். ஒடை - நுதலுக்கு அடைமொழி; நுதலாளுக்கு அடைமொழியாக்கி, நீரோடைபோல எனது தாபத்தைத் தணிக்கின்ற நெற்றியழகுடையா ளென்றலுமாம். 'மாரீசனுர்', 'கூற்றினுர்' என்ற பன்மைகள், கோபம் பற்றியன; இகழ்ச்சிக் குறிப்புமாம். 'கூற்றவதி - வாழ்நாள் இடையறுதி செல்லுங் காலத்தினேப் பொருள் வகையாற் கூறுபடுத்துங் கடவுள்' என்பது, தொல்காப்பியவுரை உன்னி நாடி - ஊகித்து உணர்ந்து. நாடி - விரும்பி யெனினுமாம். ஈற்றடி - காமரூபிகளாய் வரபலத்தால் வேண்டும் வடிவங்கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கட்கு இவ்வாறு நலிதற்கூசச் சமயோசிதமான வடிவங்கள் அமைந்த நிறத்தைக் குறித்து வியந்தவாறும். சூழ்தல் - ஆலோசித்தல், செய்தல். கிடைத்த - முற்று. 'கிடந்த' என்றும், 'கிடைத்தது' என்றும் பாடமுண்டு. அன்றே - தேற்றம். (கூ0)

[மின்னுகின்ற மேகத்தை நோக்கி இரங்கல்.]

கூக. அருவினையரக்கரென்னவந்தாமதனின்யாரும்
வெருவரமுழங்குகின்றமேகமேமின்னுகின்றாய்
தருவலென்றிரங்கினையோதாமரைமறந்ததைய
லுருவினைக்காட்டிக்காட்டியொளிக்கின்றியொளிக்கின்றாயால்.

(இ - ள்.) அரு வினை அரக்கர் என்ன - (பொறுத்தற்கு) அரிய தீய செயலேயுடைய இராக்கதர் போல, (கரிய பெரிய வடிவ மூடையையாய்), அந்தரம் அதனின் - வானத்திலே, யாரும் வெருவா முழங்குகின்ற - யாவரும் அஞ்சும்படி கர்ச்சிக்கின்ற, மேகமே—! மின்னுகின்றாய் - மின்னுகின்ற நீ, தருவல் என்று இரங்கினையோ - (அரக்கர்போலன்றி 'இராமனுக்குச் சீதையைக் கொடுப்பேன் யான்)' என்று (என்பக்கல் சிறிது) இரக்கங் கொண்டாயோ? தாமரை மறந்ததையல் உருவினை காட்டி காட்டி ஒளிக்கின்றாய் ஒளிக்கின்றாய் - செந்தாமரை மலரில் வசித்தலே விட்டு (வீசாத தேசத்தில்) தோன்றிய [இலக்குமியாகிய] அழகிற் சிறந்தவளான சீதையின வடிவத்தை (நீ) காண்பித்துக் காண்பித்து மறைக்கின்றாய் மறைக்கின்றாய்; (எ - று.)

ஆல் - ஈற்றசை; ஆதலால் என்பதன் விகாரமெனக் கொண்டு, காட்டிக் காட்டி ஒளிக்கின்றாயாதலால் தருவலென்று (சிறிது) இரங்கினையோ என்று இயைத்தலுமாம். மின்னலே சீதையின் வடிவமாகக் குறிக்கப்பட்டது. காட்டிக் காட்டி, ஒளிக்கின்றாய் ஒளிக்கின்றாய் - அடுக்குக்கள், பல முறை யென்பதைக் காட்டும். தாமரை மறந்த தையல்—"மையறு மலரி னீகை யான்செய்மாதவத்தின் வந்து, செய்யவளிருந்தாளென்ற.....அந்தக் கடிநகர்.....அழைப்பது போன்ற தம்மா" என்றார் பாலகாண்டத்து மிதிலைக் காட்சிப் படலத்திலும். திருமகளின் அவதாரமானவ ளென்பது, இதன் கருத்து. "திருமால் இராமனுனபோது திருமகள சீதையாகத் தோன்றினள" என்பது புராணம் உவமையணியும் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்து வந்த சேர் வையணி.

'அரக்கனென்ன,' 'அந்தரமதனில்,' 'யாவும்வெருவர,' 'தருவனென்று,' 'தாமரை அலர்ந்த,' 'ஒளிக்கின்ற யொக்கின்றயால,' 'ஒளிக்கின்றசொக் கின்றயால' என்பன பிரதிபேதம். 'இரங்கிலாயோ' என்ற பாடமும் ஏற் கும்; காட்டியதனோடு நில்லாமல் மீண்டும் ஒளித்து விடுகின்றதனால், தருவ லென்று இரங்குகின்றயில்லையோ என்று கூறியதாம். 'அந்தரமதனின்' என்றதில், 'அது' - பகுதிப்பொருள் விகுதி. (ஙக)

[இதுவும், அடுத்தகவியும் - மந்மதோபாலம்பநம்:

மன்மதனைப் பழித்தல்.]

சுஉ. உண்ணிறைந்துயிர்க்கும்வெம்மையுயிர்சுடவுடலையுள்ளம்
புண்ணுறவாளிதூர்த்தல்பழுதினிப்போதிமாரா
வெண்ணுறுகல்வியுள்ளத்திலையவனின்னையுன்னைக்
கண்ணுறுமாயிற்பின்னையாரவன்சிற்றங்காப்பார்.

(இ - ள்.) மாரா - (பிராணிகளை ஆசைநோயால்) மரணவேதனைப்படுத்து பவனை மன்மதனே!—உன் நிறைந்த - உள்ளிடம் முழுவதிலும் நிரப்பி, உயிர்க்கும் - (அங்கு இடங்கொள்ளாமையாற்) பீறிக்கொண்டு வெளிப்படுவது மான, வெம்மை - விரகதாபமானது, உயிர் சுட - (எனது) உயிரை யெரித்து விட, இனி - பின்பு, உடலை - (உயிரற்றதான எனது) வெற்றுடம்பை, உள்ளம் புண் உற வாளி தூர்த்தல் - உள்ளிடம் புண்கொள்ளுமாறு (நீ) மேன் மேல் அம்பெய்து அழித்தல், பழுது - பயனற்ற காரியமாம்; (ஆதலால்), போதி - அப்பாற்செல்வாய்; (மற்றும்)—எண் உறு கல்வி உள்ளத்து இரா யவன் - (யாவராலும்) நன்குமதிக்கப்பெற்ற கல்வியில் சேர்ந்த மனத்தை யுடைய (என்) தம்பியான இலக்குமணன், இன்னை-இப்பொழுது, உன்னை கண்ணுறும் ஆயின் - உன்னைப் பார்ப்பனனால், பின்னை - பின்பு, அவன் சிற்றம் காப்பார் யார் - அவன் (உன்மேற்கொள்ளும்) கோபத்தைச் சாந்தப் படுத்தி (அதனால்வருந் தீங்கினின்று உன்னை)ப் பாதுகாக்கவல்லவர் யாவ ருளர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

'பிராணநாயகனை நான் சிறிது பிரிந்திருந்த சமயம் பார்த்துச் சீதை யைக் கவரத்தொடங்கிய சூர்ப்பணகை இலக்குமணனால் அங்கபங்கஞ்செய் யப்பட்டுப் பட்டபாட்டை அறியாயோ? மன்மதா! பிராணநாயகி பிரிந்திருக் கின்ற சமயம்பார்த்து என்னை மிகவும் வருத்தத் தலைப்பட்டனையே! உன்னை இலக்குமணன் பார்த்தால் உன்கதி என்னாகும்?' என்றவாறும். தனது மெல் லிய மலரம்புகளை யெய்து பிரமன்முதல் எறும்புஈறாக அனைத்துயிரையும் தன்வசப்படுத்தி வருகின்ற வில்வீரனை மன்மதனையும் அழிக்கவல்ல வில் வன்மையை யுடையவன் இலக்குமணனென்பது இங்கு விளங்கிற்று. இராம பிரான் ஸகஸ்ரபகவானது அம்சமேயாதலால் பொறுமையை மேற்கொண் டிருந்தருள்வன்: இலக்குமணனே, பகவதம்சத்தோடு ஆதிசேஷனது அம்ச மும் கலந்தவனதலால், சிற்சில சமயங்களிற் கோபத்தை மேற்கொள்வன்;

மேற்ற நசரதனும் கைகேயியுமாக இராமபிரானை வனவாசத்திற்கு அனுப்பிய போது பெருமான் இணங்கி உடனே புறப்பட்டு விட்டனனாக இலக்குமணன் இதனைக் கேட்டவுடன் பெருஞ்சீற்றங்கொண்டு ஆயுதபாணியாய்ப் போர்க்குச்சன்னத்தனாகித் தந்தைதாயரைப்பழித்து வீரவாதங்கள் கூறிக்கொண்டு 'இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து மறுவேலை பார்ப்பேன்' என்று தொடங்கியபோது இராமன் அவனுக்குத் தனிவுரைபலகூறி அரிதில் அவனைச் சாந்தப்படுத்தும்படியாயிற்று என்ற விவரம், அயோத்தியா காண்டத்து நகர்நீங்குபடலத்திற் பாடக்கூறப்பட்டது இலக்குமணன் இத்தகைய வலிமையுஞ் சீற்றமுமுடையனுதல்பற்றி அவன் பெயரைச் சொல்லி மன்மதனை வெருட்டுவானுமினன் இராமபிரான். அப்பொழுதைய கோபம் தாய்தந்தையர்மேல் தகாதவழியிற்கொண்ட தாதலால், பலபடிசொல்லித் தான்தணிக்கலாயிற்று; மன்மதன்மேற்கொள்ளுங் கோபமோ அத்தன்மைய தன்றுதலால் தன்னுலுந்தணிக்கக்கூடியதன்று என்பது தோன்ற 'யாரவன் சீற்றங்காப்பார்' என்றனன்.

உயிர்த்தல் - வரய்விடுதல். வருத்தத்தால் உஷ்ணத்தோடு பெருமூச்சு விடுதல், உள்ளிறைந்ததாபம் அங்கு அடங்காமல் ஒருபுறத்தால் வெளிப்படுவதாகக் கற்பிக்கப்பட்டதுபோலும். 'வாளிதூர்த்தல்' என்பது கிரம்ப எய்தலென ஒருசொல் தன்மைப்பட்டு 'உடலல்' என்ற செயப்படு பொருளுக்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. தூர்த்தல்-கிறைத்தல். 'உள்ளம் புண்ணுற' என்பதை 'உயிர்சுட' என்றதனோடு இயைத்தலுமாம்; உள்ளம் - அத்தக்காரணமாகிய மனம். பழுது - வீண். இது பயனின்மை குறிப்பதோர் உரிச்சொல்லாதலை "பழுது பயமின்றே" என்னுந் தொல்காப்பியத்து உரிச்சொல்லியற் சூத்திரத்தாலுணர்க. இச்சொல்லுக்கு - குற்றமென்ற பொருளும் உண்டு; ஆகவே, நீ இனி வாளிதூர்த்தல் செத்தபாம்பையடிப்பதுபோலப் பெருமைக்குக்காரணமாகாது என்று உரைத்தலுமாம். இனி உள்ளிறைந்த உயிர்க்கும் வெம்மையையுடைய உயிர் எரியும்படியாகவும் மனம் புண்ணுறும்படியாகவும் (என்) உடலை வாளிதூர்த்தல் (உனக்கு) அபாயத்திற்கு இடமாகும்: ஆதலால், இப்பொழுதே விலகிச்செல் என்று உரைப்பாரு முளர்.

'இனி' என்பது - எதிர்காலத்தைக்குறிப்பதோர் இடைச்சொல். எண்ணுறு கல்வியுள்ளத்தினோயவன் - எல்லாக்கலைகளிலும் தேர்ந்தவன்; ஸகல கலா பாரங்கதன். எண்ணுறு கல்வி - பதினென்கென்றும் அறுபத்துநான்கென்றும் எண்ணப்படுகின்ற கலைகளென்றலுமாம். இங்கு 'எண்ணுறுகல்வியுள்ளத்து' என்ற விசேஷணத்தை இளையவனுக்குக்கொடுத்தது, அக்கலைகளுய்த்துரிகின்ற உன்னை அவன் காணவும் வல்லனென்றற்கு. 'இன்னே' என்பது, கிகழ்காலத்தைக்குறிப்பதோர் இடைச்சொல்லாம். கண்ணுறுதல் - கண்பொருந்துதல்: ஒரு சொல் தன்மைப்பட்டு, பார்த்தலென்னும் பொருளதாய், 'உன்னை' என்ற செயப்படுபொருளுக்கு முடிக்குஞ்சொல்லாம். அவனது சீற்றத்தை "யாவ நாலும், மூட்டாத காலக்கடைத்தீயென மூண்டெழுந்தான்", "கண்ணிற் கனைத்தியுக மெற்றியிற் கற்றைகாற, விண்ணிற்சுடருஞ் சுடர்தோன்ற

மெய்க்கீர்விரிப்ப உண்ணிற்கு மூயிர்ப்பெனு மூதைபிறக்க கின்ற, அண்ணற் பெரியோன் தனதாதியின் மூர்த்தியொத்தான்' என அயோத்தியாகாண் டத்திற் காண்க. காத்தல் - தடுத்தலாதலே ''செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான்'' எனத் திருக்குறளிலுங் காணலாம்.

'உலையுமுள்ளம்,' 'உலைவேனுள்ளம்', 'தூர்த்தால்', 'மார' என்பன பிரதி பேதம். (சுஉ)

சுஊ. வில்லும்வெங்கணையும்வீரர்வெஞ்சமத்தஞ்சினர்மேற்
புல்லுரவல்லவாற்றல்போற்றலர்குறித்தல்போலா
மல்லுரன்பகலுநீங்காயனங்கையருளிற்றீர்ந்தாய்
செல்லுமென்றெளிவந்தேமைச்செயலுறுஞ்சீர்மைத்தாமோ.

(இ - ன்.) அனங்க - மன்மதனே!—வில்லும் வெங்கணையும் - வில்லும் கொடிய அம்பும், வெஞ்சமத்து அஞ்சினர் வீரர்மேல் புல்லுர அல்ல - கொடிய போரில் அஞ்சினவர்களான வீரர்களின்மேற் சாரக்கடவனவல்ல: (மற்று), ஆற்றல் போற்றலர் குறித்தல் போல் ஆம் - (தனது) வலிமையை தன்குமதி யாதவர்களேபே உத்தேசித்தனவாகும் (அவை); (இங்ஙன மிருக்க), நீ—, அருளின் தீர்ந்தாய் - கருணையினின்று நீங்கியவனுய், அல்லும் நல் பகலும் நீங்காய் - இரவும் பகலும் (எம்மைவிட்டு) நீங்காதவனுகி, செல்லும் என்று எளிவந்தேமை செயல் - (உனதுவலிமை எம்மிடத்துப்) பலிக்கு மென்பது, கருதி எளியவராகிய எம்மை (இவ்வாறு வருத்தஞ்) செய்தல், உறும் சீர் மைத்தா ஆமோ. தக்கபுகழ்க்கு உரியதாகுமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

சோர் வடைந்தவன், அச்சமுற்றவன், படை யிழந்தவன், ஒத்தபடை யெடாதவன், போரிற் பின்வாங்கியவன் என்னும் இவர்கள்மேலும், மற்றும் இப்படிப்பட்டதன்மையுடையவர்மேலும் ஆயுதஞ்செலுத்தலாகாது என் பது யுத்தவிதி. ஆற்றல் - திறமை; பலபராக்கிரமங்கள். போற்றலர் - போற் றுதவர் என எதிர்மறைவினையாலணையும்பெயர்; போற்றுதல் - பாராட்டு தல், கொண்டாடுதல், புகழ்தல், துதித்தல், 'மங்கலமென்பதோ ரு ருண்டு போலும்' ''நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம். எரிப்பச்சுட் டெவ்வதோயாக்கும்'' என்றஇடங்களிற் போல 'போல்' என்றது - ஒப்பில் போலியாய்நின்றது; அதாவது - உவமைப் பொருளுணர்த்தாத போலென் ஞுஞ்சொல். ''ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்'' என்ற தொல்காப்பியத் தால், இது உரையசையாகு மென உணர்க; இதனை வாக்யாலங்காரமென்பர் வடநூலார். வெஞ்சமத்தஞ்சினரை 'வீர' என்றது, இகழ்ச்சிக் குறிப்பு. வீரர்வெஞ்சமத்தி என்றுஎடுத்து வீரர்கள்செய்யுங் கொடியபோரில் என்றலு மாம். வீரர் வில்லும் வெங்கணையும் என்று இயைத்து, வீரரது வில்லும் அம்பும் என்பாரு முளர். 'ஆற்றல் போற்றலர் குறித்தல் போலாம்' என்பதற் கு - (அஞ்சினர்மேற் படைக்கலஞ்செலுத்துதல்) வீரம்வேண்டாதாரதுகருத் தேயாமென்று உரைப்பாரு முளர்; வலிமையென்பது தன்னைப் போற்றுதல

கைக்குறித்ததேயா மென்று உரைத்தலுமாம். 'போற்றலர்க்குறித்தபோலாம் என்றும் பாடம் காணப்படுகின்றது.

'செல்லும் என்ற எளிவந்தேமை' என்பதற்கு - 'நீர் (என்னைவிட்டுப்) போம்' என்றுவேண்டி எளிமைகாட்டுகிற எம்மையென்று உரைப்பர் ஒரு சாரார். அருளின் தீர்ந்தாய் - அருள்சிறிதுமில்லாதிருக்கின்றாய் என்றபடி. அல்லும்பகலும் = அஹோராத்ரம். விரகிகளுக்கு இரவுவளவு கொடியதன்றாலால், பகலுக்கு 'நல்' எனற அடைமொழி கொடுக்கப்பட்டது பலபொருள்களோப் பாததிப் பொழுதுபோக்குதறகும், காரியாந்தரங்களிற் செல்லுதற்கும் உரியதாதலாற் பகலில ஒருவாறு ஆறியிருத்தல்கூடும். அதினுமுட்பட ஆறவொண்ணுதபடி நீ அருளின்றி எமமை வருத்துகினறா யென்றவாறும். அகக்கண் - வடசொல்: அங்கமில்லாதவன் (ந + அங்க = அநங்க.) சிவபிரானது நெற்றிக்கண்ணின நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து ஒழிந்தமைபற்றி, இவனுககு இப்பெயர். செல்லுதல - பலித்தலெனனும் பொருளதாதலை "செலலாவிடத்துச் சினந்தீது சேல்லிடத்தும், இல்லதனிற் றீய பிற" எனத் திருக்குறளிலுங் காணக. எளிவந்தேமை - எளிமைபொருந்திய யாம்; தனித்தன்மைப்பனமை: இயல்புபறறியது. 'சீர்மைத்து' என்ற குறிப்பு வினையாலணையும்பெயரில், 'மை' என்றது - பகுதிப்பொருள்விகுதி.

'கணையும்வீர', 'கணையும்வாளும', 'புல்லுவ', 'ஆற்றல்போற்றலர்க்குறித்தப்போலாம்', 'எளிவந்தோர்மேறசெலுத்தலும்' எனபன பிரதிபேதம்.

புல்லுக—உ - சாரியை, ந் - பெயரிடைநிலை. சமம் - ஸமரம் என்ற வடசொல்லின் திதைவு. (கூக)

[இராமனுக்கு இலக்குமணன் தேறுதல்கூறத் தொடங்குதல்.]

கூச. என்னைத தகைய பன்னி யீடழிந தியங்கு கினற
தன்னையொப் பானை நோக்கித தகையழிந தயர்ந்த தம்பி
நின்னையெத தகையை யாக நினைகதனை நெடியோ யென்னைச்
சென்னியிற் சுமநத கையன் றேறறுவான் செப்ப லுற்றான்.

(இ - ள.) எனன - இ தகைய பன்னி - என்று இத்தன்மையனவான வார்த்தைகளை மேனமேறசொல்லி, ஈடி அழிந்து இயங்குகின்ற - வலிமை யழிந்து விசனப்படுகின்ற, தன்னை ஒப்பானை - (தனக்குச் சமானமானவ ரெவரு மில்லாமையால்) தனனைத் தானே ஒப்பவனான இராமபிரானை, நோக்கி பார்த்து, தகை அழிந்து அயாந்த-துணி வொழிந்து தளாச்சியடைந்த, தம்பி - தம்பியான இலக்குமணன், சென்னியில் சுமந்த கையன - (தன்) தலைமேல் (கூப்பி) வைதத்துக்கொண்ட கைகளையுடையவனும், தேற்றுவான் - (அத்தமையனுரைத்) தேற்றும்பொருட்டு, (அப்பெருமானை நோக்கி), நெடியோய் - பெரியவனே! நின்னை எ தகையை ஆக நினைந்தனை - உன்னை என்ன தன்மையையுடையவனாக நினைத்தவிட்டாய்?' எனனு - என்றுசொல்லி, செப்பல் உற்றான் - (மற்றும் சிலவார்தைகளை) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)—அவதாரம், அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

நடு அழிதல் - தேகபலமும் மநோபலமும் தளர்தல். இரங்குதல்-புலம்பு தல், பரிதபித்தல். தன்னே ஒப்பான்—உபமேயத்தையே உபமானமாகவுஞ் சொன்னது. இயைபின்மையணி ; வடநூலார் அநந்வயாலங்காரமென்பர். ஒப்பொருளுக்கு ஒப்பு வேறொன்றுமில்லை யெனபது இதன கருத்து. 'தன்னெப்பாரில்லப்பன", "தனக்குவமையில்லாதான்" என்றார் முனனோ நும். 'தனனேயொப்பானே நோக்கி' எனறது - 'தகையழிந்தயர்ந்த,' 'என்னு', செப்பலுற்றான்' என்பவற்றோடு சேரும். 'நெடியோய்' என்றது - பெருமைக்குணமுடையவனே யெனற பொருளோடு அண்ணு!' என விளிதத வாறுமாம். நின்னே எத்தகையையாக நினைந்தனை - உனது ஆற்றல் முதலிய பற்றைநோக்கி நீ இவவாறு இரங்கற்பாலையல்லே யென்றபடி. எனனு - உடன்பாட் டிறந்தகால வினையெச்சம். சென்னியிற் சுமந்த கையன் - கைக ளிரண்டையுங் கூப்பித் தலையின்மேல் வைத்துக்கொண்டு இரியங்கமஸ் காரஞ்செய்தவனுய். தேற்றுவான் - தேற்றுதற்கு: எதிர்காலவினையெச்சம்; தேறறுபவனுய் என முடறெச்சமாகவுங் கொள்ளலாம்.

'பணியிடருழந்திரங்குகின்ற', 'தகையழிந்தயருந்தம்பி' என்பன பிரதி பேதம். தகையை - முன்னிலையொருமைக்குறிப்புவினையாலணையும் பெயர்.

வேறு.

இதுமுதல் ஐந்துகவிகள் இலக்குமணன் கூறுந் தேறுதல் வார்த்தை.

சூடு. கால நீளிது காரு மாரியும் வந்த தென்றக வற்சியோ
நீல மேனிய ரக்கர் வீரநி னேர்த்த முங்கிய நோ்மையோ
வாலி சேணிமை டங்தை வைகிட நாட வாரலி லாமையோ
சாலு நல்லுணர் கேள்வி வீரதளர்ந்த தென்னேத வத்தினேனுப்.

(இ - ன்.) சாலும் - மிகுதியான [அல்லது சிறப்புமிக்க], நல் உணர் - நல்ல அறிவையும், கேள்வி-நூற்கேள்விகளையுமுடைய, வீர-வீரனே! தவத்தினேனுய் - தவவொழுக்கத்தை யுடையவனே! —கார்காலமும் நீளிது - மழைக் காலமும் நீட்சியுடையது: மாரியும வந்தது - மழையும் வந்துவிட்டது, என்ற-என்றதனுலாகிய, வற்சியோ - கவலைதானே? நீலம் மேனி அரக்கர் வீரம் நினைத்து அழுங்கிய நோ்மையோ - கறுத்த உடம்பையுடைய இராக்கதரது பராக்கிரமததை நினைதது மனமொடுங்குகின்ற தனமையோ? மடந்தை வைகு இடம் நாட - பிராட்டியிருக்கின்ற இடததைத் தேடியுணர்தற்கு, வாலி சேணை வாரல் இலாமையோ - வாலியினுல் தொகுத்துவைக்கப்பட்ட தான வாநரசேனை வராமைதானே! தளர்ந்தது எனனை - நீ (தளர்ச்சியடைந்த தற்குக் காரணம இவற்றில்) யாதை? (எ - று.)

சீதையினிடத்துக் காதலிலேயே ஊன்றியிருக்கின்ற இராமபிரானது மனததை மாற்றும்பொருட்டு இவவாறு விகறபிதது வினவலானுன், இவற் றில் எது உண்மையான காரணமென்பதை ஆராய்தலிற் கருததுச்செல் லுவே துயரம் சிறிது நணியுமென பது, இலக்குமணனகருதது. சோகாவஸ்தை

வீரரஸத்தில் மாற்றவேண்டுமென்னுங் கருத்தினால், 'வீர' என விளித்தனன். இரண்டாமடியில் அரக்கரதவீரத்தை யெடுத்துரைத்தலும் இதுபற்றியே. எல்லாம் அறிந்தவனும் மகாவீரனும் ஐம்பொறியடக்கும் ஆற்றலுடையவனுமான நீ இவ்வாற தளர்ச்சியடையக் காரணமில்லை யென்பான், 'சாலு நல் லுணர் கேள்வி வீர தளர்ந்ததென்னே தவத்தினோய்' என்றான்.

கார்காலமும் நீளிது, மாரியும் வந்தது என்ற உம்மைகள் - ஒன்றை ஒன்று நோக்கி முறையே எதிரதழுவிய எச்சமும், இறந்ததழுவிய எச் சமுமாம். காலதாமதமாகும்படி இடையே மாரிக்காலம் வந்துவிட்டதே, மேற் செய்யவேண்டும் முயற்சிக்கு மழை தடையாகின்றதே யென்பதுபற்றிய கவலையோ என்பது, முதலடியின் பொருள். காரும் காலம் நீளிது - கார்ப் பருவமும் நீண்டகால முடையது என்றும் பதப்பொருளாகலாம். காலம் நீளிது - (சீதையைப்பிரிந்து) நெடுங்காலமாயிற்று: (அதனோடு) காரும் மாரி யும் வந்தது - மேகமும் மழையும் (இடையீடாய்) வந்து சேர்ந்தன என்றலு மொன்று; காரும் மாரியும் வந்தது - பண்மை யொருமை மயக்கம்: காரும் வந்தது, மாரியும் வந்தது எனத் தனித்தனி இயைக்க 'மடந்தை' என்பது - இக்கே பருவப்பெயராகாமற் பெண்ணென்ற மாத்திரமாய் நின்றது; அப்பரு வத்திற்கு வயதெல்லை, பதினொன்றுமுதற் பத்தொன்ப தளவுமாம். வாரல் இலாமை - வருதலில்லாமை. வாரல் - தொழிற்பெயர். 'உணர்' என்றது - இயற்கையறிவையும், கல்விஞானத்தையும், தத்துவஞானத்தையுங் குறித்தது. கேள்வியாவது - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட் டல்; இது, கல்வியிலுளதாகிய அறிவை வலியுறுத்தும். "ஞான மனுட்டான மிவை நன்றுகவே யுடையனென குரு"வினிடம் உபதேச மொழிகளைக் கேட்டலையும் உணர்த்தும்; அது, சிரவண மெனப்படும். முதற்பொருளை யுணர்தற்கு உபாயமான கேள்வி விமரிசம் பரவுமென்பவற்றுள் முதலதாத லால், 'நல்லுணர் கேள்வி' எனபதற்கு நல்லதத்துவஞானத்திற்குக் காரண மான கேள்வி யென்றும் பதவுரை கொள்ளலாம். மாவுரியுடுத்தலும் சடை முடித்தரித்தலுமாகிய தவவேடத்தைப் பூண்டு வாகப்ரஸ்தாச்ரமதர்மம்போன்ற ஒழுக்கத்தையுடையனதல் பற்றி, 'தவத்தினோய்' என விளிக்கப்பட்டனன். 'வாலிசேனை' என்றது, அதன்சிறப்பைக் காட்டும்.

'அழுங்கியநீர்மையோ,' 'வாரலதாகவோ' என்பன பிரதிவேதம். நீளிது - நீட்சியையுடையது.

இதுமுதல் ஆறு கவிகள் - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீ ராசிரியவிருத்தங்கள். (சுடு)

சுசு. மறைதுளங்கினுமதிதுளங்கினும்வானுமாழ்கடல்வையமுக்
நிறைதுளங்கினுநிலைதுளக்குறுநிலைமைநின்வயினிற்குமோ
பிறைதுளங்குவவனையபேரெயிறுடையபேதையர்பெருமைநின்
னிறைதுளங்குறுபுருவமென்னிலையிடைதுளக்குறுமிசையுமோ.

(இ - ன்.) மற்ற அனங்கினும்-வேதங்கள் பிறழ்வனவாலுலும், மதி அனங்கினும் - சந்திரன் நிலைதவறுவதாலுலும், வானும் ஆழ் கடல் வையமும் நிறை அனங்கினும் - ஆகாயமும் ஆழ்ந்த கடல்சூழ்ந்த பூமியும் நிலைதவறுவன வாலுலும், நிலை அனங்குற நிலைமை நின்வயின் நிற்குமோ - இயற்கைநிலை கலங்குந்தன்மை உன்னிடத்தில் உண்டாகக்கடவதோ? [அன்று என்றபடி]; பிறை அனங்குவ அனைய - பிறைகள்பல வினங்குவன போன்ற, பேர் எயிறு உடைய - பெரிய பற்களையுடைய, பேதையர் - நல்ல அறிவில்லாதவர்களான இராக்கதர்களுடைய, பெருமை - பெருமையான அ—நின் - உன்னுடைய, இறை அனங்குற புருவம் என் - மேன்மைவினங்கும் புருவங்க ளென்கிற, சிலை - வீற்கள். இடை அனங்குற - நடுவிடம் அசைந்த மாத்திரத்தில், இசையுமோ - பொருந்தி நிற்குமோ? [நிற்கமாட்டாது என்றபடி]; (எ - று.)

அனங்குதல் - நிலைகலங்குதல், ஒளிசெய்தல், அசைதல். வேதங்கள் பிறழ்தலாவது - உயர்கதி பெறுதற்குரிய மனிதர்க்கு வேண்டும் உறுதிப் பொருள்களை யுணர்த்துதற்கென்றே அமைந்தவையும் எம்பெருமானது கட்டளைபோலுமான வேதங்கள் அந்நன்மை நல்வழிதீவழி தெரிவிப்பதில் நிலை தடுமாறுதல்; அதாவது - செய்யவேண்டுவனவற்றை விலக்குதலும், தவிர வேண்டுவனவற்றை விதித்தலும், சந்திரன் நிலைதவறுவதாவது - எம்பெருமானது சங்கற்பத்தின்படி நாள்தோறும் உரியகாலத்தில் உதித்து அஸ்தமிக்கும் முறைமை பூண்ட சந்திரன் அம்முறைமை தவறுதல் சந்திரனைக் கூறியது, மற்றைக் கிரக நக்ஷத்திரங்களுக்கும் உபலக்ஷணம். உதயாஸ்தமனகாலங்கள் நாள்தோறும் மிகவும் வேறுபடுவனவாக வினங்கியும் நியமந்தவறாதிருத்தலாகிய விசேடம்ப்ற்றி, சந்திரனை யெடுத்துக்கூறினர். நிறை - நிலை, உறுதிப்பாடு. வான் நிறைஅனங்குதல் - ஆகாயம் எல்லாப் பொருள்கட்கும் இடங்கொடுத்தலும், ஒலியைத் தன்குணமாகவுடைமையும், வடிவமில்லாமையும் முதலிய இயல்புகள் மாறுதல். வையம் நிறைஅனங்குதல் - பூமி வன்மையும், பொருள்கட்கு இடமாதலும், மணத்தைக் குணமாகவுடைமையும் முதலிய இயல்புகள் மாறுதல். பஞ்சபூதங்களுட் காரணமாய் முதலதாகிய வானத்தையும் காரியமாய் ஈற்றதாகிய வையத்தையுங் கூறவே, இடைப்பட்டன வான வாயு அக்கினி ஜலம் என்னும் மற்றைமூன்று பூதங்களையுங் குறித்தவாறும். இப்படி அஸம்பாவிதமான செயல்களெல்லாம் சேர்ந்தாலும் உனது உறுதிநிலை மாறக்கடவதன்றே யென்பது, முதலிரண்டடியின் பொருள். இதனை, "வேலை கரையிழந்தால் வேதநெறி பிறழ்ந்தால், ஞால முழுது நடுவிழந்தாற் - சீலம், ஒழிவரோ செம்மை யுரதிறம்பாச் செய்கை, யழிவரோ செங்கோலவர்" என்றுற்போலக் கொள்க.

வீற்போல வளைந்துள்ள நின்புருவங்களை நீ கொள்ளுங்கோபத்தாற் சிறிது நெறித்தமாத்திரத்திலே அரக்கர்கள் பலம், பராக்கிரமம், ஆயுதம், சேனை, செல்வம், வரம் முதலியவற்றாலாகிய பெருமைகளெல்லாம் ஒழியத் தாமும் அழிந்திடுவ ரென்பது பின்னிரண்டடியின் பொருள். புருவமென்பது சிலை எனற்பின்டத்து, 'சின்' என்றது-உருவகவுருபு. இனி, புருவம் மெல் சிலை.

ன்றடுத்து, புருவங்களாகிய மெல்லிய வில்க ளென்று பொருள்கொள்ளு நலுமாம்; அரக்கர் பெருமை அழிதற்கு தினை கோதண்டமாகிய வலிய வில் வளைந்து அசையவேண்டு மென்ப தில்லை. தினை புருவங்களாகிய மெல்லிய வில்கள் நெறித்து அசையுமளவே போது மென்றதாம். பேதையர் - அறிவி லார். இராமபிரானது வல்லமை தமது வலிமைகளினும் மிகவும் மேலான தென்று உணராமல், அப்பெருமானுக்குத் தீங்குசெய்யத் தொடங்கியதனால், அரக்கர் 'பேதையர்' எனப்பட்டனர். பிறை - கலைகுறைந்தசந்திரன். இளஞ் சந்திரன். அரக்கரது கோரதந்தத்திற்குப் பிறைச்சந்திரன் - வளைந்தவடிவி லும், வெண்ணிறத்திலும் உவமம். அக்கோரப்பற்கள் பலவாதலால், அவற் றிற்கு ஒப்பாதற்பொருட்டு இல்பொருளுவமையாகப் பல சந்திரப்பிறைகள் கொண்டு, 'பிறைகளங்குவனைய பேரெயிறு' என்றார்.

மறை - (சிலசாதியார்க்கும் பெண்பாலார்க்கும் ஓதுவிக்கவும் ஓதவும் கேட்கவு மாகா தென்று) மறுக்கப்படுவது; மறு - பகுதி, ஐ - செயப்படு பொருள்விகுதி. இனி, (எளிதில் உணரலாகாதபடி ஆழ்ந்த) மறைபொருளை யுடைய தென்றுங் காரணப்பொருள்கொள்ளலாம். 'தளங்கினும்' எனற வற்றி லுள்ள உம்மைகள் - எண்ணுப்பொருளோடு அவை தனக்காவென எதிர்மறைப்பொருளையுங் காட்டும். மதி - நன்கு மதிக்கப்படுவது; அன்றி, மது - தேன்: இங்கு அமிருதகிரணம்; அதனையுடையது மதி யென ஏதுப் பொருள்கூறுதலுமாம். வையம் - (பொருள்களை வைக்குமிடமெனப் பொருள் படுங் காரணக்குறி. 'இறை' என்பதை இயல்பாகிய அணைமவிளியாகக் கொண்டு, தலைவனே யெனறு உரைத்தலு மொன்று. 'இடை தளங்குற' என்பதற்கு - முன்னும்பின்னு மில்லாமல் நடுவிற் சிறிது பொழுது அசைந்தா லென்று உரைத்தலுமாம். 'இலை யிறை தளங்குற' என்ற பாடதற்கு-வில் சிறிது பொழுது அசைய வென்று பொருளாம், இறை - கால விரைவு. முத லடியில், நகாவொற்று - விரித்தல்.

'புருவவெஞ்சிலை,' 'தளங்குற வியலுமோ' என்பன பாடபேதம். (சுக)

கூள. அணுமனெண்பவனளவறிந்தனமறிஞவங்கதனறியோ
ரெனையரென்பதொரிறதிகண்டிலமெழுபதென்றெணுமியல்பினர்
வினையின்வெந்தயர்வினதுங்களும்வரவுசென்றனவெளிதினின்
றணுவெணுந்திருநுதலிவந்தனள்சதமம்வன்றுயர்தவிர்த்தியே.

(இ - ன்) அறிஞ - அறிவுடையவனே!—அணுமன் என்பவன் அளவு அறிந்தனம் - அணுமான் என்பவ னொருவனுடைய (அறிவு பெரு வடிவு கொள்ளுந்திறம் வலிமை முதலியவற்றின்) அளவை அறிந்தோம்: அங்ஙதன் ஆதியோர் - அங்ஙதன் முதலானவர்களாகிய, எழுபது என்று எணும் இயல் பினர் - எழுபது வெள்ளமென்று எண்ணிச் சொல்லப்படுந் தகுதியுடையவர் கள், அனையர் - அறிவு பெருவடிவு கொள்ளுதல் வலிமை முதலியவற்றில் அத்தன்மை யுடையோர், என்பது ஓர் இறுதி - என்கிற ஒரு வரையறையை, கண்டிலம் - அறிந்தோமில்லை; வினையின் - நீவினைபோல, வெம் தயர்

விரவு - கொடிய தீதின்பந்தருந்தன்மை பொருந்திய, திங்களும் - (மழைக் கால) மாதங்களும், விரைவு சென்றன - விரைவிற் கழிந்து போகலாயின; (இனி),—நின - உன்னுடைய, தனு எனும் திரு நுதலி - (ஒப்புமையால்) வில்லென்று சொல்லத் தக்க அழகிய புருவங்களை யுடைய மனைவியான ஜாதகிப் பிராட்டி, எளிதில் வந்தனள் - சுலபத்தில் வந்து சேர்ந்தவளாவள்; சரதம் - (இது) நிச்சயம்; (ஆதலால்), வல் அயர் தலிர்தி - கொடிய துன்பம் நீங்குவாயாக; (எ - று.)

அனுமானுடைய ஸம்பாஷிதத்தினாலும் அப்பொழுது அவன் பெருவடிவங் கொண்டு காட்டக் கண்டதனாலும் அவனுடைய அறிவு பெருவடிவுகொள்ளுந் திறம் வலிமை முதலியவற்றை நேராக உணர்ந்தமைபற்றி 'அனுமனென் பவனைவறிந்தனம்' என்றும், மற்றை அங்கதன் முதலிய வாநரவீரர்கள் எழுபது வெள்ளமென்னுந் தொகையுடைய ரென்பதை அனுமான வார்த்தையாலும் சுக்கிரீவன்சொல்லாலும் அறிந்தேயன்றி அவர்களுடைய அறிவு திறம் வலிமை முதலியவற்றை நேராகக் கண்டுணரச் சந்தர்ப்பம் வாய்க்காமை பற்றி 'அங்கதனுதியோர் எழுபதென்றெண்ணுமியல்பினர் எனைய ரெனப தொரிதுதி கண்டிலம்' என்றுங் கூறினன். இதனால், காண நேருமிடத்து அவாகளுடைய அறிவுமுதலியனவும் அனுமானுடையனபோலவே யிருத்தல் கூடுமென்பதை யுணர்த்தித் தேறுதல் கூறினனும். சென்றன வந்தனள் எனறது - விரைவும் நிச்சயமும் பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி.

அனுமன - ஹநுமான் என்ற வடசொல்லின் விகாரம். வாயுவின அம்சத்தோடு ருத்திராம்சமும முடையனை இவன, பிறந்தவுடனே இளஞ்சூரியனைக கனிந்த பழமென்று கருதிப் பிடித்தற்குப் பாய்ந்த பொழுது, அதனையறிந்து கோபங்கொண்ட இந்திரனது வச்சிராயுதத்தினால் அடிக்கப்பட்டுச் சிதைந்த கனன முடையவ னைதனால், இவனுக்கு 'ஹநுமான்' என்று பெயராயிற்று; ஹநு - கன்னம், மான் - வடமொழிப்பெயாவிகுதி. இவனுக்கு இப்பெயர் இந்திரனால் இடப்பட்டது. இவன - சுக்கிரீவனுக்குச் சினேகிதனும், மந்திரியுமானவன. ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவன்; (மற்றையோர் - அசுவத்தாமா, பலிசக்காவர்த்தி, வியாஸன், விபீஷணன, கிருபாசாரியன், பரசுராமன் என்பவர். சிரம் ஜீவி - நெடுங்காலம் [அதாவது கல்பகாலமளவும்] பிழைத்திருப்பவன்.) அனுமான, நித்தியப்பிரமசாரி. இவனுக்கு 'திருவடி' என்று ஒருதிருநாமம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வழங்குகின்றது: அதற்குக்காரணம, இவன் எமபெருமானது திருவடிக்கு அடியவனுயிருத்தல். அனுமானைச் சிறியதிருவடி யெனறும், கருடாழ்வானைப் பெரிய திருவடி யென்றும் வழங்குதல், மரபு. இராமாவதாரத்தில் மாதந்திரம் திருமாலுக்கு அனுமான் அடிமையாய் உதவுதலும், எப்பொழுதும் திருமாலுக்குக் கருடன் அடிமையாய் உதவுதலுமாகிய வேறுபாடு, அதற்குக் காரணம.

'என்பவன்' என்றது, பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது; எனப்படுபவன் எனச் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை யெனக்

கொண்டு, ஊரெனப்படுவது உறையூர்' என்றுரைப்போல என்று சிறப்பித்துக் கூறப்படுபவனது எனப் பொருள் கொள்ளலுமாம். இறுதி - எல்லை. 'எழுபது' என்றது - இலக்கணையாய் எழுபது வெள்ளத்தைக் குறித்தது. வெள்ளத்திற்கு ஒருவராக எழுபது வெள்ளத்திற்குத் தலைமைபூண்ட எழுபது படைத்தலைவர்களே மாத்திரமே 'எழுபதென்றெணுமியல்பினர்' என்றும் குறித்ததாகவுங் கொள்ளலாம். திருநுதலி - அழகிய நெற்றியை யுடையவ ளென்றுமாம்; அதற்கும் வளைந்தவடிவில் வில் உவமை கூறப்படும். தனு - நுஞ்ஸ் என்ற வடசொல்லின விகாரம். தநு எனனும் வடசொல்லின் திரி பெனக் கொண்டு, (உனது) வடிவத்தி லொரு கூறென்று சொல்லத்தக்க பிராட்டியென்றலு மொன்று; இப்பொருளில், 'தனுவெனும்' என்றது - நுதலிகு அடைமொழி: முற்றினபொருளில், நுதலுக்கு அடைமொழி.

'அனுமனென்பவ னறிவறிந்தனை யறிதி யங்ஙனமைதியோ', 'அறிஞ னங்கத ஞதியோ', 'எனவ ரெனபதொரிறுதி', 'எழுப தெனபதொர் பா வையோ', 'எழுபதென்றெழு பாவையோ', 'எளிதினிற் றனுவெனுந் திரு நுதலி' எனபன பாடாந்தாம். (கூவ)

கூஅ. மறையறிந்தவர்வரவுகண்டுமைவலியும்வஞ்சகர்வழியொடுங்
குறையவென்றிடர்களைவெனென்றனைகுறைமுடிந்ததுவிதியினு
மிறைவவங்கவரிறுதிகண்டினிதிசைபுனைந்திமையவர்கடா
முறையுமும்பருமுதவிநின்றருளுனார்வழிந்திடலுறுதியோ.

(இ - ன்.) இறைவ - தலைவனே!—(முன்பு), மறை அறிந்தவர் வரவு கண்டு - வேதங்களே யுணர்ந்தவர்களாகிய (தண்டகாரணிய வாஸிகளான) முனிவர்களை (உனனிடம்) வந்து சரணமடைந்ததை (நீ) ஆர்த்தது, (அவர் கட்கு), உமை வலியும் வஞ்சகர் வழியொடும் குறைய வென்று இடர் களை வென னென்றனை-'உங்களை வலியவருத்துகின்ற வஞ்சனையுடையவர்களான அரக்கர்கள் சந்ததியோடும அழியும்படி அவர்களைச் செயித்து (உங்கள்) இன் பங்களை நீக்குவேன்' என்று வாக்குதத்தஞ் செய்தருளினையு; (அதற்குஏற்ப), விதியினால் குறை முடிந்தது - விதிவசமாக (அவ்வரக்கர்களால் உனக்கும்) குற்றஞ்செய்யப்பட்டது; (ஆதலால் இனி), அங்கு அவர் இறுதி கண்டு - அத் தனமையான அவ்வரக்கர்களுடைய அழிவைச் செய்து, இனிது இசை புனைந்து - இனிமையாகக் கீர்த்தியைப் பெற்று, இமையவர்களும் தாம் உறை யும் உம்பர் உதவி நின்றருள - தேவர்கட்கும் அவர்கள் வசிக்கு மிடமான தேவலோகத்தை (உரியதாக)க் கொடுத்தருளி நிற்பாய்; (அதனை விட்டு), உணர்வு அழிந்திடல் உறுதியோ - அறிவழிந்து நிலைப்பது தகுதியோ? [அனை னென்றபடி]; (எ - று.)

இராமபிரான மனைவியோடும் தம்பியுடனும் வனவாஸம்புறப் பட்டுத் தண்டகாரணியத்திற்கு எழுந்தருளி விராதனை வதைத்துச் சரபங்கமுனிவர்க் குப் பரமபதமளித்து அப்பாற் செல்லும்போது, அவ்வனத்தில் வஸிப்பவர்க ளான வாலகில்யர் முதலிய முனிவர்கள் எதிர்கொண்டுவந்து உபசரித்து,

அரக்கர்களால் தங்கட்கு உண்டான அன்பங்களைத் தெரிவித்து இராமபிரானைச் சரண்மடைய அப்பெருமான் தான் அரக்கர்களை விரைவில்வேரறுத்து விடுவதாக உறுதிமொழிகூறி அம்முனிவர்கட்கு அபயமளித்தனனென்பது ஆரணியகாண்டத்திற் கூறப்பட்டது. 'நமக்கு நேரில் தீங்குசெய்யாதவர்களை நாம் அழிக்கவேண்டுமே' என்று சிறிதும் ஆலோசிக்கவேண்டாதபடி அவ்வரக்கரால் உனக்கும் தீங்கு நேர்ந்ததென்பதை 'குறைமுடிந்தது விதியினுல்' என்றதனுல் உணர்த்தினன். குறை - இகழே, சிதையைக்கவர்ந்தமை. லோககண்டகரான அவ்வரக்கரை அழிப்பதற்கு ஒருவியாஜமாக இச்சீதாபஹரணம் நேர்ந்ததை நல்லதாகக்கொள்ளவேண்டுமென்பது, குறைமுடிந்தது விதியினுல்' என்றதனுற் போதரும். இராவணன் இக்கிராதி தேவர்களென்று அவர்களுடைய ஸ்தானங்களைக் கவர்ந்துள்ளானுதலால், 'இமையவர்கள்தாம் உறையுமும்பருமுதலி' எனலாயிற்று.

வஞ்சகர் - மாயையுடையோர். இறைவன் - இறைமை யென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர். இமையவர் - இமையில் லிசேடமுடையவர்; அதாவது மூடாத இமையையுடையவர். 'உணர்வழிந்திடலொழிதியால்' என்பதும் பாடம். (கூ)

கூ. காதுகொற்றநினக்கலாதுபிறர்க்கெவ்வாறுகலக்குமோ
வேதனைக்கிடமாதல்வீரதையன்றுபேதைமையாமரோ
போதுபிற்படலுண்டிதோர்பொருளன்றியின்றுபுணர்த்தநீயல்
யாதனக்கியலாததெந்தைவருந்தலென்னவியம்பினுன்.

(இ - ன்.) எந்தை - எமது ஐயனே!—காதுகொற்றம் - (பகைவரை) அழித்தலாலாகும் வெறறி, நினக்கு அலாது - உனக்கே உண்டாகுமல்லாமல், பிறர்க்கு எ ஆறு கலக்குமோ - அயலார்க்கு [அந்த அரக்கர்கட்கு] எப்படி உண்டாகுமோ? [உண்டாகா தெனறபடி]; வேதனைக்கு இடம் ஆதல் - வருந்துதற்கு இடமாவது, வீரதை அன்று - வீரத்தன்மையாகாது: பேதைமை ஆம் அரோ - (அது) எளிமையின்பாற்படுமென்றே? போது பிற்படல் இது ஓர் பொருள் உண்டு - காலத்தை அநுஸரித்தலாகிய இச்செய்கை யொன்று (வழக்கத்தில்) இருக்கின்றது; அன்றி - அதனைப் பாராட்டாமல், இன்று புணர்த்தினை - இப்பொழுதே முயற்சிசெய்வையாளுலும், உனக்கு இயலாதது யாது - உனக்குச் சாத்தியமாகாதது யாது உளது? [எதுவுமில்லை யென்றபடி]; (ஆகவே), வருந்தல் - வருந்தாதே, என்ன இயம்பினுன் - என்று (இராமபிரானை நோக்கி இலக்குமணன்) கூறினன். (எ - று).

காதுகொற்றம் - காதுதலாறபெறுகொற்றம்; காலங்காந்தபெயரெச்சம் [வினைத்தொகை], காரணப்பொருளில் வந்தது: காதுதல் - அழித்தல். வீரதை - வீரதா என்ற வடசொல். ஆவீறு ஐயாயிற்று. 'வீரதை அன்று' என்பதற்கு - வீரத்தன்மையாகாமல் எனறும் பொருள்கொள்ளலாம்; 'அன்றி' என்னும் வினையெச்சம் செய்யுளில் 'அன்ற' என நிறுநிரியும்; அதன்மூன்லி இயல்பாம்; ''அன்றி யின்றி யென் வினையெஞ்சிகரம், தொடர்பினு

ஞ்சர மாய்வரி னியல்பே'' என்பது காண்க. பேண்தகை - அறிவின் மையுமாம். அரோ - தேற்றம். பகைவரை வெல்லக்கருதும் அரசர் அதற்கு ஏற்றகாலத்தை இன்றியமையாததாகக்கொள்ளும் வழக்கப்படி இம்மழைக் காலங்கழிவதை எதிர்பார்க்கலாயிற்றே யன்றி உனது பெருக்கிறத்திற்கு எப்பொழுதும்வெற்றிவாய்ப்பதிற் சந்தேகமில்லை யென்றுசொல்லித் தேற்று வான், 'போதுபிற்படலுண்டிதோர்பொரு ளன்றி யின்று புணர்தியேல் யாதனக்கியலாதது' என்றான். கிருக்குரளில் ''இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது'' என்றவிடத்திற் பரிமேலழகர் 'காலமாவது - வெம் மையும் குளிர்ச்சியும் தம்முள்ஒத்த நோய்செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானே வருந்தாதுசெல்லு மியல்பினதாம்' என்றது காண்தக்கது. பிற்படல் - பின்போதல். போது பிற்படல் உண்டு - காலத்தை அநுஸரித்தலென்பதொன்று உண்டு: இது ஓர் பொருள் அன்றி இதனை முக் கியமான தொன்றாகக் கொள்ளாமல் என்றும்; போது பிற்படல் உண்டு - (வேதனைக்கு இடமாதலாற்) பொழுது வீணேகழிந்து போவதுமாம்: இது ஓர் பொருள் அன்றி - இப்படிவருத்தலை ஒருகாரியமாகக் கொள்ளாமல் என்றும்; போது பிற்படல் உண்டு - இம்மழைக்காலம் விரைவில் கழிந்து போவது: இது ஓர்பொருள் அன்றி - இந்தச்சீதாவிரகத்தையே முக்கியமாகக் கொள்ளாமல் என்றும் பொருள்கொள்ளலாம். புணர்த்தல் - உபாயஞ்செய்தல். தமையன் தந்தைக்குச் சமான ஞதலால், அவனை 'எந்தை' என விளித்தல் தகும். வருந்தல் - எதிர்மறைவியங்கோள்.

' பிறர்க்கிவ்வாறுகலக்குமோ ', ' பிறர்க்குவந்துகலக்குமோ ', 'தினக்க லாமை', 'வீரமதன்று', 'வேதனைக்கிடமான வீரமதன்றதீர்வதுதன்றோ', 'பொருளன்று கின்றபுணர்த்தியேல்', 'இன்றதணிந்திடில்' என்பன பிரதி பேதம். (உக)

[இராமன் சிறிது ஆறுதலும், பின் பெயல்மாரி தொடங்குதலும்.]

எ0. சொற்ற தம்பியு கைக்கு ணர்ந்துயிர் சோர்வொ டுங்கிய தொல்லியோ, னிற்ற வின்னலி யக்க மெய்திட வைகல் பற்பல வேக மே, லுற்று நின்றவி னைக்கொ டும்பிணி யொன்றின் மேலுட னொன் றாய், மற்றும் வெம்பிணி பற்றி னலென வந்தெ ழுந்தது மாரியே.

(இ - ள்.) உயிர் சோர்வு ஒடுங்கிய தொல்லியோன் - (சீதையைப்பிரிந்த சமயத்திற் கார்கால வரவினல்) உயிர்தளர்ச்சியடைந்தமைபற்றி ஒடுங்கிநின்ற அநுஜனான ஸ்ரீமந் நாராயணனது திருவவதார மூர்த்தியாகிய இராமபிரான், சொற்ற தம்பி உரைக்கு உணர்ந்து - (இவ்வாறு தேறுதல்) கூறிய தம்பியான இலக்குமணனது வார்த்தைகளினல் உணர்ச்சிபெற்று, இற்ற இன்னல் - நீங் கிய துன்பத்தோடு [துன்பம்நீங்கியவனுய்] இயக்கம் எய்திட-புடைபெயர்ச்சி யடைய—வைகல் பல் பல ஏக - (அவ்வாறே) பலபலநாள்கள் கழிய,—மேல் - பின்பு, உற்று நின்ற வினை கொடும் பிணி ஒன்றின்மேல் மற்றும் வெம் பிணி ஒன்று உடன் உராய் பற்றினல் என - உண்டாகி நின்ற நீவினைபோலக்

களுமாம். அம்மகளிரழகைக்கண்டு அவர்களிடத் காதல்கொண்டு அக்காம தாபத்தால் தபிக்கின்ற ஆடவர்களின்மேல், அம்மாதர்கள் உடம்பைச் சூழ உடுத்த ஆடையின்மேலும் அவர்கள் இருந்து ஆடும் ஊசலின்மேலும் பட்டு வருகின்ற வாடைக்காற்று வீசி அவர்கட்கு மிக்க வெப்பத்தைத் தருதற்கு, நீப்பட்டு வெந்ததனாலாகிய புண்ணிலே கூரியஅம்பு வீழ்ந்து வருத்தத்தைமிகு வித்தலே உவமைகூறினர். உவமையணி. இனி, தூசுதொடர் ஊசல் தொடர் வற்று என்பதற்கு - ஆடை தொடர்ச்சியாய் அசையுமாறு (அதனைச் சார்ந்து என உரைத்தலும் அமையும்.

இழை - இரத்தினங்களிழைத்துச் செய்யப்பட்டது என ஆபரணத்திற் குக் காரணக்குறி. நனி - உரிச்சொல். கூர்மைக்குக் குற்றம், மழுங்குதல். 'ரம்பா' என்பது ஒருதேவமாதின்பெயராதலால், அவ்வடசொல்லின் விகார மான 'அரம்பை' என்பதன் பன்மையாகிய 'அரம்பையர்' என்பது தேவ மாதரை யுணர்த்தும். 'பாசிழை மடந்தையர்' என்பதும் பாடம். (எஉ)

எங. வேலைநிறைவுற்றனவெயிற்கதிர்வெதுப்புஞ்
சிலமழிவுற்றபுனலுற்றுருவுசெப்பிற்
காலமறிவுற்றுணர்தல்கன்னலளவல்லான்
மாலைபகலுற்றதெனவோர்வரிதுமாதோ.

(இ - ள்.) வேலை நிறைவுற்றன - கடல்கள் நிரம்பின; வெயில் கதிர் - சூரியனுடைய கிரணங்கள், வெதுப்பும் சிலம் அழிவுற்ற - தபிக்கின்ற இயற் கை யழிந்தன; புனல் உற்று உருவு செப்பின் - (அடியிலுள்ள சிறுதுவாரவழி யாக) நீர் வந்துசேரப்பெறும் நாழிகைவட்டிலைக்கொண்டு, கன்னல் அளவு - நாழிகைக்கணக்காக, காலம் அறிவுற்று உணர்தல் அல்லால் - காலத்தை அறிய முயன்று அறிவதே யல்லாமல், மாலை பகல் உற்றது என ஓர்வு அரிது - இராத்திரிவந்தது பகல்வந்தது என்று அறிதல் அரிதாயிற்று; (எ - று.)—மாது, ஒ - ஈற்றசை.

"நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றுந் தடிந்தெழிலி, தானல்காதாகி விடின்" என்பதனால், 'மழையினால் வேலைநிறைவுற்றன' என்றார். இத் திருக்குறளினுரையிற் பரிமேலழகர் தன்இயல்புகுறைதலாவது - நீர்வாழுயிர் கள் பிறவாமையும், 'மணிமுதலாயின படாமையுமாம்' என்று ராதலின், அவ்வகைக்குறைதல் இலவானதை 'வேலைநிறைவுற்றன' என்று ரென்ன லாம். மழைக்குமுதலான கடற்கும் மழைவேண்டு மென்பதாயிற்று. இனி, கடல்கள் நீர்நிறையப்பெற்றன வெனினும் இழுக்காது; சிலப்பதிகாரவுரை யில், அடியார்க்குநல்லார் 'மூன்நீர் - கடல்: ஆகுபெயர் ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீர் என இவை யென்பார்க்கு, அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இனமுமாகலானும், இவற்றை முன்நீரென் றல் பொருந்தியதன்று. முதியநீரெனின், "நெடுங்கடலுந் தன்னீர்மைகுன் றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின், ஆகாது" என்றதி காண்க.

அப்பெருமழைக்காலத்திற் சூரியகிரணங்களாற் சிறிதும் வெப்பம் உண்டாகவில்லை யென்றது இரண்டாம் வாக்கியம்.

காழிகை வட்டிலாவது - ஆழமுள்ள ஒருபாத்திரத்திலே நீரைநிறைத்து அதிலே பிரமாணப்படிசெய்து அடியிற் சிறுதுளையிட்டிருக்கும் தாமிரவட்டிலே விடுக்கில் அத்துளைவழியே நீர்ஏறி உள்ளேகிரம்ப அவ்வட்டில் அமிழ்வது ஒருநாழிகை யெனக்கொண்டு காலத்தை அளவிடுதற்குரிய கருவி. 'பன்னிரண்டரைப்பலம் எடையுள்ள தாமிரத்தைக்கொண்டு மகததேசத்தின் ஒரு படியளவாகச் செய்யப்பட்டதும், இருபது குன்றிமணி யெடையுள்ள பொன்னிஞல் நாலங்குலவளவாகச் செய்த சலாகை கொள்ளுமளவாக அடியில் துளையிடப்பட்டதுமான ஒருபாத்திரத்தைத் தண்ணீரில்இட அப்பாத்திரம் எவ்வளவு காலத்தில் தண்ணீரால் நிறையுமோ அவ்வளவுகாலம் ஒருநாழிகை யென்று அறியப்படும்' என்ற ஸ்ரீ விஷ்ணுபுராணம் இங்கு நோக்கத்தக்கது. "வீறுறு நான்குமாடமாமனைவி ளங்குசெம்பொன் காவிரல்கள், கூறிய நான்கினீளம தாக்கிக்கொண்டு நீள்சலாகைகொள் புழையா, ஆறெனுந்தொடி சேர்செம்பிஞலுழி யமைவுறவமைத்த வள்ளத்தைத, தேறியநீர்மேற்சேர்ப்ப வங்காழித்சென்றதோர் கடிகையென் றுரைப்பர்" என்ற ஸ்ரீ பாகவதத்தையுங் காண்க. அப்பெருமழைக்காலத்திற் காளமேகங்கள் வானமுழுவதும் படர்ந்து கவிந்துகொண்டதஞல் எங்கும் இருண்டமைபற்றிச் சூரியனது உதயாஸ்தமநங்கள் தெரியாமற்போகவே, அடியிற் சிறு துவாரமுடையதும் நீரிற்பெய்யப்பட்டு நாழிகையின் வரையறையைத் தெரிவிப்பதுமான ஒரு வகைக் கிண்ணத்தைக்கொண்டு ஒவ்வொரு நாழிகையாகக் கணக்கிட்டுக் காலத்தை முயன்று உணர்ந்தாலன்றி இரவு வந்ததென்றும் பகல் வந்ததென்றும் வெளிதில் அனைவரும் உணர்தல் இயலாதாயிற்று என்பது, மூன்றும் வாக்கியத்தின் கருத்து. "குறுநீர்க்கன்ன லெண்ணுநரல்லது, கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாய்தலின்" எனபது அகநானூறு. புனல் உற்ற உருவுதல்-சிறு துவாரத்தின வழியாக நீர் நுழைந்துசெல்லுதல். இனி, 'புனல் உற்ற உருவு செப்பு' என்பதற்கு - நீர்நிறைந்து அழுந்துகின்ற கிண்ண மென்று உரைப்பாரு முளர்.

'உற்றது' என்ற ஒருமைவினைமுற்றை, 'மாலை உற்றது' என்றும், 'பகல், உற்றது' என்றும் தனித்தனி கூட்டி முடிக்க; ("கத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க்கல்லா லரிது" என்ற திருக்குறளி னுரையில் அரிது என்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க' என்றார் பரிமேலழகரும்: இவ்வாறு ஒருமைச்சொல்லை வாக்யபேதமாகத் தனித்தனி கூட்டிமுடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போல ப்ரத்யேகபந்தான்வய மென்பர் வடநூலார்.) 'அரிது' என்ற முற்றிற்கு 'ஓர்வு' எனற தொழிற்பெயர் - எழுவாய். இனி, ஓர்வு அரிது - ஓர்தற்கு அரியது எனக்கொண்டால், காலமென்பது எழுவாயாம். உருவு செப்பு - வினைத்தொகை. செப்பின்-இன் ஐந்தனுருபு, ஏது.

இனி, 'புனலுற்றுருகுசெப்பின்' என்றும் பாடம் காணப்படுகின்றது; அதற்கு, புனல் உற்ற உருகுசெப்பின் என்று எடுத்து, நீர்பட்ட உருகிய தாமிரம் போலவென்று பொருள்கொண்டு, அதனை 'வெயிற்கதிர் வெதுப்புஞ்

சிலமழிவுற்ற' என்றதனோடு கூட்டி, அனல்பட்டு உருகித் தாபங்கொண்ட செம்பு தீர்ப்பட்டதனால் வெப்பம் மாறித் தட்பமடைந்தாற்போலச் சூரியனது உஷ்ணகிரணங்கள் பெருமழையினால் வெப்பம் மாறித தட்பமடைந்தன, என்று கருத்தை உரைக்கவேண்டும்; உற்றருகு - பெயரெச்சவீறு தொகுத்தல். அங்ஙனம் உரைக்குமிடத்து, 'கன்னலளவு அல்லால்' என்பதற்கு - நாழிகை வட்டிலேக்கொண்டே யல்லாமல் என்று பொருள் காண்க. இவ் வுரையில், கன்னல் - நாழிகைவட்டில்; முந்தின உரையில், கனனல் - நாழிகை.

'வெதும்பும்', 'உற்றவென' என்பன பிரதிபேதம். (எஉ)

எசை. நெற்கிழியநெற்பொதிநிரம்பினநிரம்பாச்
சொற்கிழியநற்கிளிகடோகையவர்தூய்மென்
பற்கிழிமணிப்படர்திரைப்பரதர்முன்றிற்
பொற்கிழிவிரித்தனசினைப்பொதுளுபுன்னை.

(இ - ள்.) தோகையவர்-மயில்போன்றவர்களான மகளிருடைய, நிரம்பா சொற்கு - நிரமபாதமென சொற்களாகிய மழலைச்சொற்களுக்கு, இழிய - தோற்றலையுடைய, கல் கிளிகள் - அழகிய கிளிகள, நெல கிழிய நெல் பொதி நிரம்பின - நெறகள் கிழியுமாறு நெறபோர்களிற் பதுங்கி நிறைந்தன; தூய் மெல் பற்கு இழி - (மகளிரது) சுதந்தமான மெல்லிய பற்களுக்குத் தோற்ற, மணி - முத்துக்கள், படர் திரை - பரவுகின்ற (கடலின) அலைகளில், (நிரம்பின) - மறைந்து நிறைந்தன; பாதர் முனறில் - நெய்தல் நிலத்து மனிதர்களுடைய வீட்டு வாயில்களில், சினை பொதுளு புனனை - அரும்புகள் நிறைந்த புன்னைமரங்கள, பொன கிழி விரித்து அன - பொனமுடிந்த சிலை முடிப்பை யவிழ்த்தாற் போனறன; (எ - று.)

பெருமழையைப் பொறுக்கமாட்டாமற கிளிகள் ஓடி நெற்போர்களிற் பதுங்குதலை, அந்நிலத்து மகளிரது மழலைச்சொற்களுககு அவை தோல்வியடைந்ததனால் முன நிற்றறகு வெளகி மறைந்தனவாக வர்ணித்தது முதல் வாக்கியம். இரண்டாம் வாக்கியத்தில், கடற்கரையில் அலைகளால் ஒதுகப் பட்டனவும் சிப்பி முதலியவற்றினின்று தோன்றியனவுமான முத்துக்கள் பெருமழையால் தள்ளப்பட்டு அக்கடலின் அலைகளில் மறைதலை, அந்நிலத்து மகளிரது பற்களுககுத் தாம் தோற்றதனால் அம்முத்துக்கள் முன் நிற்கவெள்கிக் கடலில் மறைந்தன வென வர்ணித்தார். நெய்தல்நிலத்திற புனனைமரங்கள் நிறைய அரும்பெடுத்திருந்தவை அக்காலத்தில் மலர்தல், பொனமுடிந்திருந்த சிலைமுடிப்பை யவிழ்த்தாற போலு மென்பது, மூன்றும் வாக்கியத்தின கருத்து; இவவுவமை, நிறம்பற்றியது. முதலிரண்டு வாக்கியங்களில் தந்குறிப்பேற்றவணியும், மூன்றும் வாகியத்தில் உவமையணியுமாகச் சேர்ந்து வந்ததனால், சேர்வையணி.

இழிய - இழிதலை [தோற்றலை] யுடைய: 'இழி' என்னும் முதனிலைத் தொழிறபெயரின் மேல் வந்த குறிப்புப் பெயரேச்சமாகவாவது, அவ்வனைய

பலவின்பாற் குறிப்புவினையாலணையும் பெயராகுவதும் கொள்க; இழிதலால் [தோற்றலால்] எனப் பொருள் கொண்டால், தெரிநிலேச் 'செயவெனெச்சமாம். இனி, மகளிரது மழலேச்சொற்களேத் தாம் கற்றுக் கொள்ளுதற்காக (அங்கிலத்தில்) இறங்குதலேயுடைய நல்ல கிளிகளெல்லாம் உரைத்தலும் அமையும. மகளிர்ச்சாயலுக்கு மயிலும் அவர்கள் கூந்தலுக்கு மயிலின் தோகையும் உவமை கூறப்படும். முதல் வாக்கியத்திலுள்ள 'நிரம்பின' என்ற வினேமுற்றையே இரண்டாம் வாக்கியத்திற்கும் எடுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். 'தோகையவர்' எனறது மதிமயீபமாக, இரண்டு வாக்கியத்திலுஞ் சேர்த்து உரைக்கப்பட்டது. பரதர் - நெய்தனிலமாக்கள்: இதன் பெண்பால் பரத்தியர். கடலும் கடல் சார்ந்த இடமும, நெய்தனிலம். 'முன்றில் - இல் முன என்பது முன பினனுகச் சொல்லிலே மாறி விகாரப்பட்டது: இலக்கணப்போலி; இல் - வீட்டினது. முன - முன்னிடம் எனக கொள்ளினும் அமையும். பொதுளுதல - நெருங்குதல், செழித்தல. புன்னே, நெய்தனிலத்து மரம். 'தூமென' எனற பாடத்திற்கு தூய்மை யென்னும் பண்புப்பெயர் ஏறுபோதலோடு இடை யகரமுங் கெட்டதெனக. முதலடியில் 'நிரம்பின நிரம்ப' எனற விடத்துத் தொடைமுரண் காண்க.

இனி, இச்செய்யுளுக்கு வேறொருவகையாகவும் உரைக்கலாம்: அதுவருமாறு:—நல் கிளிகள நிரம்பாச் சொல கிழிய - மழலேச்சொறகள் சிறிது வெளிப்பட [வாய்திறந்து மழலேச் சொறகளேச் சிறிது பேசிக்கொண்டு], நெல்கிழிய நெல் பொதி நிரம்பின - நெறகள் கிழியுமாறு நெருகநிர்ந்தொருதி களிற் சென்று நிரமபின; தோகையவர் தூய் மெல் பல் கிழி மணி - மகளிரது வெண்ணிறமான அழகிய பறகளபோல ஒளிவிட்டு விளங்குகினற முத்துக்களேக் கொழிகினறன, படர் நிரை - பரவுமியலபுள்ள (கடலின) அலேகளவந்து உலாவப்பெற்ற, பரதர் முனறில் - நெய்தனிலமாக்களின் வீட்டுவாயிலில், னேப்பொதுளுபுனே (மலர்ந்து) பொறகிழி விரிதலன எனக் காண்க. மழைக்காலதறற கிளிகள் வேறு இரை தேடமாட்டாமல் வயல்களிலுள்ள நெருகதிர்களி லிருக்கினற நெற்மேல கொறித்து அவற்றினுள்ளீட்டை யுட்கொள்ளுமாறு விளேச்சல்களிற சென்று சேர்ந்து கிறைந்தன வென்க. (எச)

எடு. நிறங்கருகுகங்குலபகனின்றகிலேவா
வறங்கருதுசிந்தைமுனியந்தணரினுலிப்
பிறங்கருகெடுத்துளிபடப்பெயர்வில்குன்றி
னுறங்கலில்விலங்கலிலநின்றவுயர்வேழம்.

(இ - ள்.) நிறம் கருகு கங்குல் - (இருளினுற்) கறுத்துத் தோன்றுகின்ற இராதிரிகாலத்திலும, பகல் - பகற்பொழுதினும், நின்ற நிலே வேரு - தரம் கின்ற தவநிலே நீங்காத, அறம் கருதி சிந்தை முனி அந்தணரின - தருமமார்க்கத்தையே எண்ணுகினற மனததில் (எல்லாப்பற்றுக்களேயுங்) துறந்த முனிவர்கள் போலவும்,—பிறங்கு அரு கெடு ஆலி துளி பட - விளங்குகின்ற அருமையான பெரிய மழைநீர்த்துளிகள் தமமேல் விழுதலால், பெயர்வு

இல் - சலித்தலில்லாத, குன்றின் - மலைகள் போலவும்,—உயர் வேழம் - உயர்ந்த யானைகள், உறங்கல் இல் லிலங்கல் இல கின்ற - (அப்பெரு மழைக் காலத்தில்) தூங்குதலில்லாமலும் இடம் விட்டுப் பெயர்தலில்லாதனவாகவும் கின்றன ; (எ - று.)

அப்பெருமழையிலே யானைகள் இரவிலுமுட்பட உறங்குதலிலவாய் கின்றதற்கு - அல்லும்பகலும் அகவாதமும் அயிலின்றி ஒருபடிப்படத் தவ நிலையில் நிற்கும் மூற்றத்துறந்த முனிவர்களும், யானைகள் பெருமழைத்துளி படுதலால் இடம்விட்டுப் பெயராது கின்றதற்கு - பெருமழைக்குச் சலியாது நிற்கும் மலைகளும் உவமையாம். உவமையணி. அந்தணரின் உறங்கலில், குன்றின் விலங்கலில என முறையே இயைந்து பொருள்படுதல், முறைநிரனிறைப்போநள்தோள். பெயரில் குன்று—'அசலம்' என மலைக்கு ஒரு பெயராதலுணர்க. இனி இரவுபகல் என்ற வேறுபாடின்றி எப்பொழுதும் ஒரு நிலையாகத் தவநிலையில் நிற்கும் முனிவர்கள் பெருமழையிலும் அங்கிலை பெயராது நிற்பாதலால், அவர்கள் விலங்கலின்மைக்கும் உவமையாகலாம்.

நீவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ; அந்தணர்க்கு அடை மொழி: இனி நீவா - நீங்காமல் என ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகக் கொண்டு 'அறம் கருதி' என்பதனோடு இயைத்து, தர்மஸ்வரூபியான கடவுளைத் தியானிக்கின்ற என்றலு மொன்று. மூனி யந்தணர் - வினைத்தொகை; மூனிதல் - வெறுத்தல். அறங்கருதி கிருதையுடையவர்களும் (பற்றுக்களை) மூனிபவர்களுமான அந்தணர்கள்போல வென்றும் பதவுரை கூறலாம். அந்தணர் - அம் தண் அர்: அழகிய தண்மையை [குளிர்ச்சியான அருளை]யுடையவர் எனப் பொருள்படும். திருக்குறளில் நீத்தார்பெருமை யென்னும் அதிகாரத்தில் "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றதும், அதனுரையிற் பரிமேலழகர் 'அந்தணரென்பது அழகியதட்பத்தினையுடையாரென எதிப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மேலன்றிச் செல்லா தென்பது கருத்து, என்றதும் காணத்தக்கன. பிறங்குதல் - மிகுதலுமாம். 'உயர்வேழம்' என்றதில், உயர்வு - தேகபல மநோபலங்களின் மிகுதியுமாம்.

'நீர்வாய்', 'நீங்காது,' 'உறங்கல்' என்று பாடமோதுவாரு முளர். (எரி)

எசு. சந்தினடையிற்படலிலவேதிகைதடந்தோ
றந்தியிடகிற்புகைநுழைந்தகுளிரன்ன
மந்திதுயிலுற்றமுழைவன்கடுவனங்கத்
திந்தியமலித்ததனியாகியினிருந்த.

(இ - ள்.) குளிர் அன்னம் - அப்பெருமழையினாற் குளிர்கொண்ட அன்னப்பறவைகள்—சந்தின் அடையின் படலை - சந்தனமரத்தின் இலைகளால் மேலே வேயப்பட்ட பர்ணசாலைகளில், வேதிகை - மேடைகளிலே, தடம் தோறு - ஒவ்வொண்டன்தோறும், அந்தி இடு - காலைமாலைகளில் (முனிவர்கள் ஓமம் வளர்த்தற் பொருட்டு) இட்டு எரிக்கின்ற, அகில்-அகிற்கட்டை

களின், புகை-புகையில், நுழைந்த - தாம் நுழைந்து குளிர் காய்ந்தன; மந்தி-பெண்குரங்குகள், முழை - மலைக்குகைகளில், துயில் உற்ற - (போய்ப்புகுந்து) தூங்கின; வல் கடுவன் - வலிய ஆண்குரங்குகள், அங்கத்து - யோகத்தின் அஷ்டாங்கங்களுள் ஒன்றான ப்ரத்யாஹார மென்னும் அங்கத்திலுல், இந்தியம் அவித்த - பஞ்சேந்திரியங்களே யடக்கிய, தனி யோகியின் - ஒப்பற்ற யோகி போல, இருந்த - (குளிரினுல்) ஒடுங்கியிருந்தன; (எ - று.)

யோகி - யமம், நியமம், ஆஸநம், ப்ராணயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்னும் எட்டு அங்கங்களுடன் யோகஞ்செய்பவன். ஐம்பெறிகளையடக்கி மனத்தை ஒருவழி நிறுத்தி யோகஞ் சேர்ந்த அவன் அசைவின்றி நிற்றல், இங்கே பெருமழையிற் குளிர்மிகுதியால் ஆண் குரங்குகள் விறைத்து நிற்றற்கு உவமை. "பொறியுணர்வெல்லாம் புலத்தின் வழாமை ஒருவகைப் படுப்பது தொகைநிலை யாமே" என்பதனுல், ப்ரத்யாஹாரத்தின் இலக்கண மறிக. 'சப்தாதிவிஷயங்களிற் பற்றிநிற்கின்ற இந்திரியங்களைத் தடுத்துச் சித்தத்திற்கு இசையச்செய்வது ப்ரத்யாஹாரமாம். இதனுலே, மிகவுஞ்சஞ்சலமான இந்திரியங்கள் நன்றுய்வசப்படுகின்றன. அவை வசப்படாதபோது, யோகியானவன் யோகத்தைச்சாதிக்கமாட்டான்' என்று புராணம் கூறுதலால், 'அங்கத்து இந்தியமவித்த தனியோகி' என்றார். கடுவன் மந்தியைப்பிரிந்து தனித்து நிற்றலும் கருதத்தக்கது. வல்கடுவனுதலால், மந்திபோல முழையிற்புகுந்து துயிலுறுமல் மழையிலேயே நின்றனவென்க; இதனுல், இராவணதிராக்ஷஸவதத்திற்கு ஏற்றசேனையாகுங் குரங்குகளின் ஊறஞ்சாமையெனும் உயர்குணம் உணரலாகும்.

அந்தி யென்பது - இரவுடன் பகல் கூடுங் காலமாகிய காலைச் சந்திக்கும், பகலுடன் இரவு கூடுங் காலமாகிய மாலைச்சந்திக்கும் பொதுவாம். மந்தி - குரங்கின் பெண்மைப்பெயர்; கடுவன் - அதன் ஆண்மைப் பெயர்; "குரங்கு முசுவு மூகமு மந்தி", "குரங்கினேற்றினேர்க் கடுவனென்றலும்" என்பன தொல்காப்பியம். கடுவன் - கடுமையையுடையது எனப் பொருள்படுங் காரணக்குறி; இதில், அன் - பெயாவிகுதி; உயர்திணை யாண்பால் விகுதியன்று; ஆண்பிணைச் சொல்லாதலால்.

இனி, பின்னிரண்டடிகட்கு மந்தி - பெண்குரங்குகள், முழை - மலைக்குகைகளில், வல் கடுவன் அங்கத்து - வலிய ஆண்குரங்குகளின மடியில், துயில்உற்ற - படுத்துத் தூங்கின ; (அவை துயில்கொடாதிருக்குமாறு அவ்வாண்குரங்குகள்) இந்தியமவித்த தனியோகிபோல அசையாதிருந்தன எனறு பொருள்கூறலுமாம். முன்னிரண்டடிக்கு, தடம் தோறு - அம்மலைப்பக்கங்களிலெல்லாம் வேதிகை - மேடைகளில் சந்தின, அடையின படலை - சந்தனமரத்தின் இலைகளாற்செய்த படல்களின்கீழ், அந்தி இடு - குளிர் காய்வதற்காகவும்வெளிச்சத்திற்காகவும் புலிமுதலியன அஞ்சி அருகில் வராதிருத்தற்காகவும் வேடர்கள் இரவில் இட்டு எரிக்கின்ற, அகில் - அகிற்கட்டைகளின், புகை - புகையில், குளிர்கொண்ட அன்னங்கள் நுழைந்தனவென்று உரைப்பாரு முளர். மந்தி முழை துயிலுற்ற - பெண்குரங்குகள் மலைக்குகை

களில் தங்கின என்றலுமாம்; மேல் அo - ஆஞ் °செய்யுளில் 'தயிலுவந்து' என்பதை க்ரண்க.

நறுமணமுள்ள மரங்களான சந்தனமும் அகிலும் மலையில் மிக்குள்ளன வென்னும் மலைவளம் இச்செய்யுளிற் போதரும்.

"சந்தினிடையிற் படலை வேய்ந்திசை தடந்தோ றந்தியிடஞ் புகை நுழைந்த குளிருள்ள மந்தியிலுற்ற முழை வன்கடுவனங்கத் திந்தியமவித்த தனியோகரினிருந்த" என்றும், 'சந்தினிலையிற்படலை' என்றும்,'நுழைந்த' என்றும், 'முறைவனகடுவன்' என்றும் பிரதிபேத முண்டு. (எசு)

எள்: ஆசில்சுனைவாலருவியாயினழையரைம்பால்
வாசமணநாறலிலவாணமணிவன்கா
லூசல்வறிதானவிதணெண்மணிகள்விண்மேல்
வீசலிலவானினெடுமாரிதுளிவீச.

(இ - ள்.) வானின் - மேகங்களினின்று, நெடு துளி மாரி வீச - பெருந் துளிகளையுடைய மழை மிகுதியாகப்பெய்தலால்,—ஆசு இல் சுனை - குற்ற மில்லாத மலைநீரூற்றுக் குளங்களும், வால் அருவி - சுத்தமான மலையருவி களும், ஆய் இழையர் ஐம்பால் வாசம் மணம் நாறல் இல ஆன - மகளிரது கூந்தலின் நறுமணங்கள் (தம்மிடம்) வீசுத லில்லாதன வாயின; மணி வல் கால் ஊசல் - இரத்தினமயமான வலியகால்கள் நாட்டி அவற்றில் அமைக்கப் பட்ட ஊஞ்சல்கள், வறிது ஆன - இருந்து ஆடுவ தில்லாதன வாயின; இதண் - பரண்கள், ஒன் மணிகள் விண்மேல் வீசல் இல - ஒளியுள்ள இரத் தினங்களை வானத்தில் எறிதல் இல்லாதனவாயின; (எ - று.)

பெருமழை பெய்தல்பற்றிக் குளிர்மிகுதலால் மலைச்சுனைகளிலும் மலை யருவிகளிலும் மகளிரெவரும் தலைந்த நீராடாமையால், அச்சுனைகளும் அருவிகளும் அம்மாதரது கூந்தலின் நறுமணம் வீசுதலில்லாதன வாயின வென்க. உத்தமஜாதி ஸ்திரீகளின் கூந்தலுக்கு இயற்கைத திவ்வியபரிமள மும், வாசனையெண்ணெய் தடவுதல் நறும்புகையூட்டல் மலர்சூடுதல் என்ன மிவற்றாலாகிய செயற்கை நறுமணமும் ஆக இருவகை மணங்களிருத்த லால் அவற்றை 'வாசம்' 'மணம்' என இரண்டு சொற்களாற் குறித்தார்; இனி இவற்றை ஒருபொருட்பன்மொழி யெனறலு மொன்று. அம்மழைக் குளிரில் எவரும் ஊஞ்சலில் இருந்து ஆடிக் குளிர்ந்தகாற்றைப் பெறவிரும் பாததனால், அங்கு அமைக்கப்பட்டுள்ள ஊஞ்சல்கள் ஆளின்றி வெறுமையாய் விட்டன. தினை முதலியவறின கதிர்களைக் கிளிமுதலிய பறவைகள் உண் டிடாமைப்பொருட்டு வேட்டுவமாதர்கள் அருகிலமைக்கப்பட்ட பரண்களிற் காவலாக இருந்து அங்குள்ள இரைதினைக்கதிர்களையெடுத்து வானத்தில்வீசிப் பறவைகளையோட்டுதல் இயல்பு; பெருமழை பெய்தல்பற்றிப் பறவைகள் வெளிப்படாமல் ஒடுங்கிவிட்டதனால், அங்ஙனம் ஓட்டுதல் வேண்டாதாயிற் றென்க. பரணிலுள்ளார் மணிகள் வீசுதலிலானதைப் பரணின்மேல் வைத் திக்கூறினார்; உபசாரவழக்கு. இனி, இதண் - பரண்களிலிருந்து, ஒண்மணி

கள் விண்மேல் வீசுதலில்லையாயின வென்று பொருள் கொள்ளலுமாம். 'இதண்' என்றவிடத்து, 'கவண்' என்று பாடமோதி, கல்லெறி கபிறகள் மணிகள் வீசுதலிலவாயின வென்றலும் ஏற்கும். இனி, இதண் - பரண்கள், ஊசல் வறிது ஆன - ஊஞ்சல்கள் வறுமையாகப்பெற்றன வென்று உரைத்து மணிகள் பரணினின்று அல்லது (கவணினின்று) விண்மேல் வீசுதலில வாயின வென்றலு மொன்று; பரணிலுள்ள ஊஞ்சல்களிற் பாதுகாவலின் பொருட்டு எவரும் இராததனால் அவை வறிதாயினவென்க. 'வானி னெடு மாரி துளிவீச - ஒண்மணிகள் விண்மேல் வீசலிலவான' என்றதனால், மேகங் களினின்று பெய்யும் பெருமழைதானே பெருக்துளிகளே வீசிக் கற்களே வீசுதற்பேரலப் பறவைகளே வராதிருக்கச்செய்ததனால் அதற்காகக் கற்கள் வீசுதலில்லையாயிற் றென்ற கருத்து விளங்கும்.

சுனைக்குக் குற்றமின்மை - தன்னில் நீராடுவார்க்கு நோய்தராமை, பாவந்தீர்க்கும் புண்ணியதீர்த்த மாதலுமாம்: அருவிக்குத் தூய்மையும் இவ் வாறே. ஆய் இழையர் - ஆராய்ந்து எடுத்து அணிந்த ஆபாணங்களே யுடைய வர். 'வறியவானை' என்னுஞ் 'வறிதான' என்றது, பண்மையொருமை மயக் கம்; (தனித்தனி) வறியதென்க. இரண்டாமடியில், மணி - உறுதியுமாம். ()

எஅ. கருந்தகைய தண்ணினையகைதைமடல்கரத
றருந்தகையபோதுகிளையிற்புடைதயங்கப்
பெருந்தகையபொற்சிறையொடுக்கியுடல்பேரா
திருந்தகுருகின்பெடைபிரிந்தவர்களென்ன.

(இ - ன்.) கருந் தகைய - கருநிறமுள்ள, தண் ணினைய - குளிர்ச்சியான [காணுதற்கு இனிய] கிளைகளையுடைய, கைதை - தாழைமரங்களின், மடல்- மடல்களிலே, காதல் தரும் தகைய போது - (காண்பவர்க்கு) ஆசையை மூட்டுந் தன்மையனவான மலர்கள், கிளையின் புடை தயங்க - சுற்றமாகிய நாரைகள்போலப் பக்கங்களிற் சூழ்ந்துவிளங்க,—குருகின் பெடை - (அங்கு) நாரைகளின் பேடைகள் [பெண்நாரைகள்] - பெருந் தகைய பொன் சிறை ஒடுக்கி-பெருமைக்குணமுள்ள அழகிய (தங்கள்) சிறகுகளே ஒடுக்கிக கொண்டு, உடல் பேராது - உடம்பு இடம்விட்டுப் பெயரப் பெறாமல், பிரிந்தவர் கள் என்ன இருந்த - (தலைவரைப்) பிரிந்த தலைவியர்போல இருந்தன.

மழைக்காலத்தில் தாழை மிகுதியாகப்பூத்தல், இயல்பு. தாழை மலர் காமோத்தீபகப் பொருள்களி லொன்றுதலால், 'காதல்தருந்தகையபோது' எனப்பட்டது; அது, மன்மதனுக்கு வானாயுத மெனப்படும். இனி, காதல் தருந்தகைய போது - மிக அழகிய மலர் என்றவாறுமாம். தலைவரைப்பிரிந்த மகளிர் கார்காலத்திலே பிரிவுத்துயர் மிகுதியால் இடம் விட்டுப் பெயராமாட் டாமல் ஒரு புறத்தில் ஒடுங்கிக்கிடக்குமாறு போலப் பெண்குருகுகள் பெரு மழையால் தமது பெரிய சிறகுகளே யொடுக்கிக்கொண்டு இடம்விட்டுப் பெய ராமல் ஒருபுறத்தி லிருந்தன வென்க. அப்பேடைக்குருகுகளினருகே சுற்றி லும் பூத்து நின்ற தாழை மலர்கள், அப்பேடைகளைக் சூழ்ந்து நிற்கும் அவற்

றின் சுற்றமாகிய குருகுகள் போலும் என வருணித்தார். தாழைமலர்கள் வடிவிற் குருகுபோலுதலை, "அருகு கைதை மலரக் கெண்டை, குருகென் றஞ்சும்" என்ற பெரிய திருமொழியாலும் உணர்க. புடை தயங்க - பக்கங்களில் நிகைத்து நிற்க எனினுமாம்; தாழை மலர்கள் அசைவுறநிற்றல், குருகினங்கள் நிகைத்து நிற்பதாகக் கற்பிக்கப்பட்டது. உவமையணி. கைதை - கேதக மென்ற வடசொல்லின் சிதைவு.

'கருந்தகை யகன்னெய', 'சிறையொடுங்கி', 'இடைபோராது', 'குருகின் றுணை பிரிந்தவர்களென்ன' என்பன பிரதிபேதம். (எஅ)

எங். பதங்கமுழுவொத்தவிசைபண்ணிமிறுபன்ன
விதங்களினடித்திடுவிகற்பவழிமேவு
மதங்கியரையொத்தமயில்வைகுமரமூலத்
தொதுங்கினவுழைக்குலமழைக்குலமுழக்க.

(இ - ன்.) பதங்கம் - (பலவகைநீர்ப்) பறவைகள், முழவு ஒத்த - (தமது ஒலியினால்) மத்தளந் தட்டினைப் போன்றனவாக,—பல் ஞிமிறு - பலவகையான வண்டுகள், இசை பண்ண - (தமது ஒலியினால்) இசைப்பாட்டுப்பாட,—மயில் - மயில்கள், விதங்களின் நடித்திடு - பலவகைத்தாளவமைப்புக்களுடன் நர்த்தனஞ் செய்கின்ற, விகற்பம் வழி - பலவேற வகைப்பட்ட (நாட்டிய) மார்க்கங்களில், மேவும் - பொருந்திய [பயின்று தேர்ந்த], மதங்கியரை-கூத்தாடி மகளிரை, ஒத்த - போன்றன [அம்மழைக்காலத்திற் களித்து பலவாறு கூத்தாடின வென்றபடி]; மழை குலம் உழக்க - மேகங்களின் கூட்டங்கள் (இடி முழக்கத்தால் அச்சத்தை வினைத்தல்) கலங்கச் செய்ய, உழை குலம் - மான் கூட்டங்கள், வைகும் மரம் மூலத்து - (அவவாறான மயில்கள்) தங்கப் பெற்ற மரங்களின் அடியிலே, ஒதுங்கின - (விழித்த கண் வாங்காமல் அந்த நாட்டியத்தைக் காணச் செல்பவர் போல மருண்ட நோக்குடன்) போய்ச் சேர்ந்தன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. பதங்கம் - பறவைப் பொதுப்பெயர்; இவ்வட சொல், எழும்பிச் செல்வதென்று பொருள்படும் ஞிமிறு - மிஞிறு என்பதன் எழுத்து நிலைமாறிய இலக்கணப்போலி. விதம, விகல்பம், மூலம், குலம் - வடசொற்கள். மதங்கியர் - இளமைப் பருவமுடைய நாட்டியப் பெண்கள். விதங்களினடித்திடு விகற்பவழி மேவும் மதங்கியர்— "விதங்களின விதிமுறை சதிமிதிப்பவர் மதங்கியர்" என்றார் பாலகாண்டத்து நகரப்படலத்திலும். விதங்களினடித்திடு விகற்ப வழி—'இருவகைக் கூத்தாவன - வசைக் கூத்து, புகழ்க்கூத்து: வேத்தியல், பொதுவியல்: வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து: சாந்திக்கூத்து விநோதக் கூத்து: ஓரியம், தமிழ்: இயல்பு கூத்து, தேசக் கூத்து எனப் பலவகைய; இவை, விரிந்த நூல்களிற் காண்க' என்பது முதலாகச் சிலப்பதிகாரத்து, அடியார்க்கு நல்லாருரையிற் காண்க. 'முழக்க' என்றவெடுத்து, முழங்கவென்றுரைத்தலு மொன்று; தன்வினைப்பொருளில் வந்த பிறவினை. 'பதங்கொண் முழவொத்தமுகில் பண்ஞிமிறபன்ன' என்ற

பாடம், கீழ்ப்போந்த கூஉ-ஆஞ்செய்யுளோடு கூறியதுகூறலா மாதலாற் றிறவாது. 'பதங்கமுழுவொக்க' என்பது பிரதிபேதம். (எக)

அ0. விளக்கொளியகிற்புகைவிழுங்கமளிமென்கொம்
பிளக்குமிடைமங்கையருமைந்தர்களுமேமறத்
தளத்தகுமலர்த்தவிசிகந்துகுசந்தின்
றெளேத்துயிலுவந்துதுயில்வுற்றகுளிர்தும்பி.

(இ - ள்.) மெல் கொம்பு - மெல்லியபூங்கொம்பும், இளேக்கும் - (மெல்லி தாயிருக்குந்தன்மையில் ஒப்பாகாமல்) தோற்கும்படியான, இடை - இடையையுடைய, மங்கையரும் - இளமைப்பருவமுள்ள மகளிரும், மைந்தர்களும் - இளமைப்பருவமுள்ள ஆடவரும், அகில் புகை விளக்கு ஒளி விழுங்கு அமளி ஏற-மேலேஅகிற்கட்டைகளேயெரித்து ஊட்டும்புகை விளக்குகளின் ஒளியைத் தெரியாதபடி கவிந்துகொள்ளப்பெறற சட்டியில் ஏறிப் படுக்க,—குளிர் தும்பி - குளிர்கொண்ட வண்டுகள், தளத்தகு மலர் தவிசு இகந்து - விட்டிடத்தக்க தாமரைமலராகிய படுக்கையை விட்டு, நகு சந்தின் தொளே துயில் உவந்து - மலர்ந்துவிளங்குகின்ற சந்தனமரத்தின் தளேயில் [பொந்தில்] தங்குதலே விரும்பி, துயில்வுஉற்ற - அங்குச்சோந்து தூங்கின; (எ - று)

பெருமழைக்காலத்திற் குளிர்தீருமாறு மங்கையரும் மைந்தரும் விளக்கின் ஒளிதெரியாதபடி மிகுதியாக அகிற்புகையூட்டப்பெற்ற படுக்கையில் ஏறி ஒருவரையொருவர் தழுவிச் சயனிப்பாராயின ரென்றது, முனனிரண்டடி. அப்பெருமழையில் தாமரைமலர்கள் இதழ்குவிந்தும் நீரில்ஆழ்ந்தும் மிக்க குளிர்ச்சிகொ இடமாயும் விலகத்தக்கனவானதனால் வண்டுகள் அத்தாமரை மலராகிய தங்குமிடத்தை விட்டுக் கரையிலுள்ள மலர்ந்த சந்தனமரங்களின பொந்துகளில் விருப்பத்தோடு சென்றுசோந்து இனிது உறங்கலாயினவென் பது, பினனிரண்டடியின கருத்து. "புதிய மழைத்தாரைகளால் அழிக்கப் பட்ட தாதுகளேயுடைய தாமரைமலர்களே வீரைவாகப் பறறறவிட்டு, வண்டு கள், தாதுகளோடுகூடிய புதிய கடமபமலர்களே மகிழ்ச்சியோடு சேர்கின் றன" என்று ஸ்ரீவால்மீகிராமாயணத்திற் கூறியது நோக்கத்தகுவது.

அடுத்தசெய்யுளும் இவ்வாறான கருத்தினடையதே.

மென்கொம்பு இளேக்கும் இடை - மெல்லிதான மரக்கொம்பினும் நுண்ணிதான இடை. இளேகளும் இடை - இளேத்தற்குக்காரணமான இடை எனப் பெயரெச்சம் காரியப்பொருளதாய்க் காரணப்பெயரைக் கொண்டது. தளத்தகு - தள்ளத்தகு: தொகுத்தல். துயில் தங்குதல்; முதனிலேத்தொழிற் பெயர். இப்பகுதி, தூங்குதலெனனும்பொருளோடு தங்குதலெனனும்பொரு ளேயுமுடையது; வேகசிந்தாமணியில் "திருத்துயில்பெற்ற மார்பன்" என்ற இடத்தில் 'துயிறல் - தங்குதல்' என்றார் நச்சினார்க்கினியரும் துயில்வுறு தல் - தூக்கத்தையடைதல்.

இனி, தளம் தகு மலர் என்று பிரித்து - இதழ்கள்நிறைந்த அழகிய தாமரைமல ரென்று உரைத்தலும், 'தளக் கமலமலர்' எனறு பாடமோது

தலும் பிறவா. 'வீளவ்கமலி', 'தகுசந்தின்', 'அலைத்திடாறத்துயில்வதிந்த' என்பன பிரதிபேதம். (அ0)

அக. தாமரைமலர்த்தவிசுகந்துதகையனன
மாமரனிரைத்தொகுபொதும்பருழைவைகத்
தேமரனடுக்கிதணிடைச்செறிகுரம்பைத்
தூமருவெயிற்றியரொடன்பர்துயில்வுற்றூர்.

(இ - ன்.) தகை அன்னம் - அழகிய அன்னப்பறவைகள், தாமரை மலர் தவிசு 'இகந்த - தாமரைமலராகிய தங்களிருப்பிடத்தை விட்டுநீங்கி, மா மரன் நிரை தொகு பொதும்பர்உழை வைக - பெரிய மரங்களின வரிசை யடர்ந்த சோலையிற் சேர்ந்துவசிக்க,—தேம் மரன அடுக்கு இதண்இடை செறி குரம்பை - நறுமணமுள்ள மரக்கட்டைகளே அடுக்கியமைத்த பரணிற் பொருந்திய குடிசையில், தூ மருவு எயிற்றியரொடு - வெண்ணிறம்பொருந் திய பற்களையுடையவர்களான வேட்டுவப்பெண்களுடனே, அன்பர் - (அவர் களது) அன்புள்ள கணவரான வேடர்கள், துயில்வுற்றூர் - தங்கித்தூங்க லானார்கள்; (எ - று.)

தாமரைமலரை விரும்பித் தங்குமிடமாகக்கொண்டு அதனிடத்தில்வசிக் கும் அனனப்பறவைகள் அப்பெருமழைக்காலத்தில் அம்மலர்கள்பொலிவிழந் ததனாலும் குளிர்மிகுதியாலும் அவற்றைவிட்டு மரங்களடர்ந்த சோலைகளிற் சோந்து வசிக்கலாயின; வேடர்கள் வேட்டுவமகளிரும் அப்பெருமழையிற் குளிராமிகுதியால் தங்களகுடிசைகளுட்சென்றுசேர்ந்து தினைமுதலியவற்றிற் குகாவல்செய்யுங் கவலையின்மையால் இனிதுதுயிலபவராயினர் எனபதாம். தவிசு - ஆசனம்; மெத்தையுமாம். மாமரன - மாமரங்களுமாம். பொதும்பர் - மரச்செறிவு; பொதும்பு எனற மெனறொடர்க்குறறியலுகரத்திற்கு, அர் - போலி. தேமரன் - சந்தனம் முதலியன. 'எயிறறியர்' எனற சொல் - 'எயிறு' எனற பகுதியின்மேற் பிறந்த பெண்பனமைப்பெயராய்ப் பற்களே யுடையவரெனனும பொருளையும், 'எயினர்' எனபதன பெண்பாலாய் வேட் டுவமாதரென்னும் பொருளையும் உணர்த்தும். இங்கு, எயிற்றியராகிய எயிற்றிய ரென்று ஆகுபெயர்த்திசெய்துகொண்டு, இரட்டுறமொழிதலாகப் பற்களையுடையவராகளான வேட்டுவப்பெண்க ளெனற பொருள கொள் ளப்பட்டது: பிரிநிலைபொருளில், 'எயின்' எனற ஜாதிப்பெயர் - பகுதி; அ - சாரியை, உகரங்கெட்டது: இருபொருளிலும 'இ' என்ற பெண்பால் விகுதி யின்மேல், அர் - பலர்பால்விகுதி.

மரன் நிரை தொகு பொதும்பர் உழை வைக - மரங்களின கூட்டத் திற் பொருந்திய பொந்துகளிற் போய்ப்படுத்துயிருக்க எனபாரு முளர். 'தூ மருவு எயிற்றியர்' என்பதற்கு-தசை பொருந்திய பற்களையுடையவ ரென்பர் ஒருசாரார். 'மாமரநிரைத் தொருபொதும்பினுழை' என்ற பாடத்திற்கு - பெரியமரங்களின்வரிசையையுடையதான ஒரு சோலையினுள்ளே யென்க.

அ.உ. வள்ளிபுடைசுற்றியுயர்சிற்றிலைமரந்தோ
றெள்ளருமறிக்குருளொடண்டர்களிருந்தார்
கள்ளரினெளித்தமுழவெடுங்கழுதொடுங்கி
முள்ளெயிறுதின்றுபசிமூழ்கிடவிருந்த.

(இ - ள்.) வள்ளி புடை சுற்றி - கொடிகள் பக்கங்களிற் சூழ்ந்துகொள்ளப்பெற்று, உயர் - ஓங்கிவளர்ந்த, சிறு இலை மரம்தோறு - சிறிய இலைகளையுடைய மரங்களினகீழ், எள் அரு மறி குருளொடு - இகழாமற் பாதுகாக்கத்தக்க ஆட்டுக்குட்டிகளுடனே, அண்டர்கள் - இடையர்கள், இருந்தார் - தங்கினர்கள்; களரினை ஒளித்த உழல் - திருடர்கள்போல மறைந்துதிரிவன வான, நெடிய கழுது - பெரிய பேய்களும், ஒடுங்கி—, முள் எயிறு தின்று பசி மூழ்கிட இருந்த - முட்கள்போலக் கூரிய (தங்கள்) பற்களை மென்று தின்றுகொண்டு மிக்க பசியுடனே யிருந்தன; (எ - று.)

பெருமழை தம்மேற்பெய்தற்கு அஞ்சி ஒதுங்குவார்க்கு, பெரிய இலைகளையுடைய ஆலமரம் முதலியவற்றினும் சிறிய இலைகளையுடைய புளியமரம் முதலியன இனியனவாதலால், அப்பெருமழையில் இடையர்கள் தாம் தவறுதல் பாதுகாத்தற்குரிய ஆட்டுக்குட்டிகளுடனே சிற்றிலை மரங்களினடியில் ஒதுங்கினரென்க. திருவள்ளுவர் திருக்குறளென்னும் நூலையியற்றிக் கொண்டு திருமயிலையினின்று மதுரையைநோக்கிச் செல்லும் வழியிலை ஒரு பெருங்காட்டில் மழைக்கு அஞ்சி ஆலமரத்தினடியிற போய்நிற்க, அங்குத் தாம் மேய்க்கும் ஆடுமனைதுடன புளியமரத்தினகீழ் நின்ற இடைக்காடர் திருவள்ளுவரைப் புளியமரத்தினகீழ் வரும்படி அழைக்க, அதனை நாட்பத்தை யுணர்ந்து வள்ளுவர் அங்குப போய்ச்சேர்ந்தன ரெனனும் வரலாறு இக்குக் கருதத்தக்கது. * இடையர்க்கு ஜீவநோபாயமான ஆடுகளுள்ளும் குட்டிகள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளக்கூடாத பருவத்தன வாதலால் அவற்றை இடையாகள உடனகொண்டு சென்றன ரென்பது விளங்க, மறிக்குருளுக்கு 'எள்ளரு' எனற அடைமொழி கொடுக்கப்பட்டது. பேய்களும் வெளிகளிலம்பமாட்டாமல் ஒரு புறத்தே ஒடுங்கிப் பசியில் மூழ்கிப் பறகளை மெனறுகொண்டு வாடியிருந்தனவென மழையின் மிகுதியை யுணர்த்தியவாறும். பசி மூழ்கிட - பசிதீயில் தாம் மூழ்க என்க.

வள்ளி - வல்லி என்ற வடசொல்லின விகாரம்; இனி, வள்ளி - வள்ளியென்னும் ஒருவகைக் கொடியெனறும், சிறறிலைமரம் - சிற்றிலைமரமென்னும் ஒருவகை மரமெனறுங் கொள்வர் ஒருசாரார். குருள் - குருளை யென்ற இனமைப்பெயரின விகாரம். உழல் நெடுங்கழுது கள்ளரின் ஒளித்த என்று

"ஆங்குமுழைகண்டஞ்சியாலடிதனிற்போய்நின்றான்
பாங்குறபுளிக்கீழ்நின்றபரிக்கிடைக்காடனன்னோற
றூங்குபுத்தகத்தப்பேயாதையுகுசிற்றிலைக்கீழ்வாவென்
றோங்குபேரொலியாற்கூவவுடனவனுற்றனனேர்ந்தே."—புலவர்புராணம்.

மாற்றி, எங்குந்திரிபுமியல்பினவான பெரும்பேய்கள் (வெளிப்புறப்படமாட்டாமல்) திருடர்போல ஒரிடத்தில் ஒளித்துக்கொண்டு என்றலுமாம்.

'மறிக்குழிகொளண்டர்,' 'ஒளித்துறை நெடுங்கழுது,' 'தின்றுமுகந்த விருளெங்கும்,' 'பரிமுழ்கியவிருந்த' என்பன பிரதிபேதம். (அ2)

அ2. சரம்பயினெடுந்துளிதிமிர்ந்தபுயல்சார
வரம்பெயர்வில்வன்கரிகரந்துறவொடுங்கா
வரம்பகனெடும்பிரசம்வைகல்பலவைகு
முரம்பினினிரய பலமுழைஞ்சிடைநுழைந்த.

(இ - ள்.) கிமிர்ந்த புயல் - வானத்தில் நெருங்கிய மேகங்களினின்று, சரம் பயில் நெடுந் துளிசார - அம்புகளொத்த பெரிய மழைத்தாரைகள் தம்மேல் விழுதலால்,—உரம் பெயர்வு இல் வல் கரி - (இயல்பில்) மனத் துணிவு குலைதலில்லாத வலிய யானைகள்,—ஒடுங்கா - ஒடுங்கி,—வரம்பு அகல் நெடும் பிரசம் வைகல் பல வைகும் முரம்பினில் நிரம்பல - அளவற்ற பெரிய தேன்கூடுகள் பலநாளாய்த் தங்கப்பெறற மலையின மேட்டு வெளிகளில் தாம் கூட்டமாக நிறைந்து வசிக்கமாட்டாதனவாய்,—கரந்து உற - (மழை தம் மேற்படாதபடி) ஒளித்துவசிக்க(க் கருதி),—முழைஞ்சு இடை நுழைந்த - மலைக்குகைகளில் (ஒவ்வொன்றாக) நுழைந்திடன; (எ - று)

வானத்தில் நெருங்கி நிறைந்த மேகங்களினினறு பெரிய மழைத்தாரைகள் அம்புகள்போலத் தம்மேல்விழ அவற்றைப் பொறுக்கமாட்டாமல், தேக பலமும் மனோபலமும் இயல்பில் மிக்கனவான யானைகளும் ஒடுங்கித்தம்மேல் அம்மழைபடாதபடி ஒதுங்கி வசிக்கக் கருதி, தாங்கள கூட்டங்கூட்டமாக வசித்துக்கொண்டிருந்த விசாலமான மலையின்மேட்டு வெளியிடங்களை விட்டு மலைக்குகைகளினுளளே ஒவ்வொன்றாக அரிதில் நுழைந்து செல்லலாயின என்பதாம். மூன்றும்அடி - முரம்புக்கு அடைமொழி; அங்குவந்து அவ்வளவு உயரத்திலேறி யெடுப்பவரெவரு மினமையால் தேனகூடுகள் பலநாளாக அம் மலையின் கற்பாறை மேட்டுவெளிகளில் அழிவினறிக் கட்டியபடியே யிருக்கின்றன வென்க. இயல்பிலே மிக்க துணிவையும் வலிமையையு முடையன வான யானைகளும் அம்மழையின் மிகுதியால் இவ்வாறு ஒடுங்கி ஒளிக்கத் தலைப்பட்டன வென்பது விளங்க, 'உரம்பெயர்வில் வன் கரி' என்றார்.

இனி, இச்செய்யுளுக்கு - மேகங்களினினறு அம்புபோன்ற நெடுந்துளி தம்மேற் சார்ந்ததனால் வலியயானைகள ஒடுங்கி ஒளிக்க, தேன்கூடுகள் (அம் மழைத்தாரைகள் விழுந்ததனால் உடைந்து) பலநாளாய்த் தாமிருந்த கற்பாறை மேட்டிற் கொள்ளாமல் மலைக்குகைகளினுள்ளும் போய்ச் சேர்ந்தனவென்று உரைத்தலும் ஒன்று.

'நெடுந்துளிபடுந்தொறுதகர்ந்த', 'கரியுலைந்துறவொடுங்க', 'கிரந்துபுயல் சார', 'புயல்சாரல்', 'குரம்பையினில்வன்கரிகுலைந்துறவொடுங்கா', 'வரம்பக னறும்பிரசம்' என்பன பிரதிபேதம். பயில் - உவமவருபு. (அ2)

[அந்தப் பின்மாரிக்காலத்தில் இராமபிரான் சீதாவிரகத்தால் மிகவருந்தி இலக்குமணனைநோக்கிச் சிலசொல்லத்தொடங்குதல்.]

அசை. இத்தகைய மாரியிடை தன்னியிரு ளெய்த
மைத்தகும ணிக்குறுக கைச்சனகன் மான்மே
லுய்த்தவுணர் வத்தினனெ ருப்பிடையு யிர்ப்பான்
வித்தகனி லக்குவனே முன்னினன்வி ளம்பும்.

(இ - ள்) இ தகைய மாரியிடை - இத்தன்மையதான பெருமழைக் காலத்திலே, இருள் தன்னி எய்த - இருட்டும் அடர்ந்து வந்துசேர [இருண்டஇராத்திரியி லென்றபடி], வித்தகன்-அறிவுடையவனான இராமபிரான், மை தகு மணி - மையென்றுசொல்லத்தக்க[மிகக்கறுத்த] கண்ணின்கருமணியையும், குறு நகை - புன்சிரிப்பையுமுடைய, சனகன் மான்மேல் - (பார்வையழகினால்) மான்போன்றவளான சனகமகாராசனதுமகளாகிய சீதையினிடத்தில், உய்த்த - செலுத்திய, உணர்வத்தினன் - 'அறிவையுடையவனும், (அதனால்), நெருப்பு இடை உயிர்ப்பான் - நெருப்புப்போல [உஷ்ணமாக] இடையிடையே பெருமூச்சுவிடுபவனுமாய், இலக்குவனே முன்னினன்விளம்பும் - இலக்குமணனேநோக்கிச் (சிலவார்த்தைகள்) சொல்லலானான்; (எ - று.)
—அவற்றை, அடுத்த பதினெருகவிகளிற் காண்க.

மைத்தகு மணி—"உன் கஞ்சனிற் கருகி," "கருமணியம்பாலகத்துப் பதித்தன்னபடியவாய்" என்றார் பிறரும். இனி, மணி - தானியாகுபெயராய், கருமணிகட்கு இடமான கண்க ளென்று கொண்டு, மைத் தகு மணி - மை யிட்ட அழகிய விழிக ளென்றலுமாம். 'மைத்தகுவிழி' என்றும் பாடமுண்டு. ஜாகதியினது கரிய கண்களின் பார்வையழகிலும் புன்சிரிப்பினழகிலும் இராமபிரானுக்குள்ள ஈடுபாடு விளங்க, 'மைத்தகுமணிக் குறுநகைச் சனகன் மான்மேல்' என்றார். 'மைத்தகுமணிக்குழல் மலர்ச்சனகன்மான்' என்ற பாடத்திற்கு - மைபோன்ற கரியகூந்தலில் மலர்களைச்சூடிய ஜாகதி யென்று பொருள். மண்மாதாவத்தைகளுட் சுப்பிரயோகமெனப்படும் தினைப்பு'சனகன் மான்மேல் உய்த்தஉணர்வத்தினன்' என்றதனாலும், விப்பிரயோகமெனப்படும் வெய்துயிர்த்திரங்கல் 'நெருப்பிடைஉயிர்ப்பான்' என்றதனாலும், மோகமெனப்படும் மொழிபலபிதற்றல் 'இலக்குவனேமுன்னினன்விளம்பும்' என்றதனாலுங் கூறப்பட்டன: ஜ்ஞாநஸ்வரூபியான ஸ்ரீராமபிரான் தான்கொண்ட மநுஷ்யாவதாரத்திற்கு ஏற்பக் காலத்தினவசப்பட்டு அப்பொழுது பலவாறு இரங்கிக்கூறலாயின னென்பதும், தன்பத்தை ஆற்றுதற்குக் கருவியான அறிவே அதனை மிகுதியாகப்பாராட்டுதற்குக் காரணமாதலுந் தோன்ற, 'வித்தகன்' என்றார். இலக்குவன் - லக்ஷ்மணன் என்ற வடமொழிப்பெயரின் விகாரம்; அத்திருநாமம் - லக்ஷ்மியோடு [இராமனுக்கு அடிமைசெய்தலாகிய செல்வத்தோடு] கூடியவ னென்று பொருள்படும். உத்தம புருஷ லக்ஷணங்கள் பொருந்தியவனென்று இதற்குப் பொருள் கூறுதலு முண்டு.

'மாரியிடைதன்னியிருளெய்த' என்பதற்கு - மழையினால் இருளடைய வென்றுரைப்பாருமுளர். 'மைத்தகணிக்குறைகை,' 'நெருப்பினிலுயிர்ப் பான்','வித்தகவிலக்குவன்முனின்னனவினம்பும்' என்பன பிரதிபேதம். (அச)

வேறு.

[இதுமுதற் பதினேழுகவிகள் - ஓராமபிரான் இரங்கல்.]

அடு. மழைக்கரு மின்னெயிற் றரக்கன் வஞ்சனை
யிழைப்பருங் கொங்கையு மெதிர்வுற் றின்னலி
னுழைத்தன ளுலேந்துயி ருலக்கு மொன்றினும்
பிழைப்பரி தெனக்குமி தென்ன பெற்றியோ.

(இ - ன்.) இழை பருங் கொங்கையும் - ஆபரணங்களையணிந்த பருத்த தனங்களையுடையவளான சீதையும்—மழை கரு - மேகம்போலக் கருநிற முடையவனும், மின் எயிறு - மின்னல்போன்ற பற்களையுடையவனுமான, அரக்கன் - இராக்கதனுகிய இராவணனது, வஞ்சனை - வஞ்சனைக்கு, எதிர்வு உற்று - இலக்காகி, இன்னலின் உழைத்தனள் - துன்பத்தால் வருந்திய வளாய், உலேந்து - வாடி, உயிர் உலக்கும் - உயிராழிவன்; எனக்கும்—, ஒன்றி னும் பிழைப்பு அரிது - ஒருவகையாலும் பிழைத்தல் அரியதாயிருக்கின்றது; இது என்ன பெற்றியோ - இது என்ன நிலைமையோ? (எ - று)

மேகம்போலக்கருநிறமுடையவனும் மின்னல்போல வினங்கும்பற்களை யுடையவனுமான இராவணனது வஞ்சனையிலகப்பட்டுச் சீதை துன்பத்தால் மிகவருத்திப் பிழைக்கும்வகையொன்றுமில்லாமல் உயிரழிய, யானும் அவ் வாறே கருநிறத்தையும் மின்னல்களையுமுடைய காளமேகத்தின் கொடு மைக்கு இலக்காகி மிகவருத்திப் பிழைக்கவகையின்றி உயிராழிகின்றேன். இது என்ன காலபலம்! என்று இரங்கியவாறும்.

மூன்றுமடி - முற்றுமோனை.

'அரக்கன்வஞ்சனை இழைப்பருங்கொங்கையும் எதிர்வுற்று' என்பதற்கு- இராவணனவஞ்சனையிலகப்பட்ட சீதையும் (இக்காலத்திற்கு) இலக் காகி யென்று உரைப்பாருமுளர். இழைப்பு அரு என்று பிரித்து, (செயற்கையாகச்) செய்யவொண்ணாதவென்றுரைப்பர் ஒருசாரார். 'அரக் கர்', 'இன்னலுள்' என்பன பிரதிபேதம். 'இதென்ன பெற்றியோய்' என்ற பாடத்திற்கு - பேரியல்பையுடையவனே! இது என்ன? என்று பொருளாகவேண்டும்.

இது முதல் இப்படலமுடியுமளவுமுள்ள முப்பத்தேழுகவிகள் - இப் படலத்தின் முதற்கவி போன்ற கலிவிருத்தங்கள். (அடு)

அசு. தூநிறச்சுடுசரந்தூணிதூங்கிட
வானுறப்பிறங்கியவயிரத்தேரொடும்
யானுறக்கடவிதையிதுவுமிக்கிலே
வேனிறத்துற்றதொத்தழியும்வீகிலேன்.

(இ - ன்.) தூ நிறம் சுடு சரம் - சுத்தமான நிறமுள்ளன்வும் (பகைவரை) எரிப்பனவுமான அம்புகள், தூணி தூங்கிட - (எனது) அம்பறாத்தூணியில் உறங்கிக்கிடக்க [தொழிலின்றி வாளாவீருக்க], வான் உற பிறங்கிய வயிரம் தோளொடும் - ஆகாயத்தையளாவ [உயர்ந்து] விளங்கிய உறுதியுள்ள புயங் களுடனே, யான் இதுவும் உறக்கடவதே - யான் இவ்வாறான துன்பத்தையும் அனுபவிக்கக்கடவதோ! இ நிலை - (எனக்குநேர்ந்துள்ள) இந்நிலைமை, வேல் நிறத்த உற்றது ஒத்தழியும் - வேலாயுதம் நெஞ்சில்ஊன்றியது போன்ற தாகவும், வீதிலேன் - இறவாமலிருக்கின்றேனே! (எ - று.)

பகையழித்தற்குவேண்டிய சாதனங்களான இயற்கைவலிமையும்செய றகைவலிமையும் என்னிடம் பூர்ணமாக இருந்தும் அவை எனக்குத் தீங்கு செய்தவனுக்கு எதிர் செய்யமாட்டாமல் வீணேகிடக்க யான் இப்படி துன்ப மனுபவித்துக்கொண்டு நாணமின்றிப் பிழைத்திருத்தல் தகுதியோ! இதனி னும் யான் இறத்தலே மேலன்றே என்பதாம்.

அம்புக்குத் தாய்மை - தகாதவரை இலக்காகக்கொள்ளாமை யென்ன லுமாம்; இலக்கானவரைத் தவறுமலழிப்பதும் அது. இனி, தூ - தசைதோய் ந்த வென்றும், இறகுகட்டிய வென்றும் உரைக்கலாம். தூணி - வடசொல். தூங்குதல் - சோம்பியிருத்தலும், தொங்கிக்கொண்டிருத்தலுமாம். 'சுடுகணை,' 'உற்றதொத்தளவும்வீகலேன்' என்பன பிரதிபேதம். 'சரத்தூணிதூங்குற' என்றபாடத்திற்கு - அம்பறாத்தூணி (கட்டப்பட்டுத்) தொங்கிக்கொண்டிருக்க வென்று பொருளாம். 'இங்கிலேவேல்நிறத்தற்றதொழியும்' என்பதற்கு - இந்தமழைத்தாரைகள் வேல்கள்மார்பிற்பட்டனபோல வருத்தவும் என்பாரு மூளர். ஒத்தழி - ஒத்தஉழி என்பதன் தொகுத்தல்; 'உழி' என்னும்விகுதி பெற்ற எதிர்காலவினையெச்சமாகவுங் கொள்ளலாம். முதலடி - முற்றுமோனை.

அ எ. தெரிகணைமலரொடுந்திறந்தநெஞ்சொடு
மரியவன்றயரொடும்யானும்வைகுவே
னெரியுமின்மினிமணிவிளக்கினின்றுணைக்
குரீஇயினம்பெடையொடுந்துயில்வகூட்டினுள்.

(இ - ன்) குரீஇ இனம் - ஆண்குருவிகளின் வருக்கங்கள்,—எரியும் - ஜ்வலிக்கின்ற, மின்மினி - மின்மினிப்பூச்சியாகிய, மணி விளக்கின் - அழகிய விளக்கின் வெளிச்சத்திலே, இன் துணை பெடையொடும் - இனிமையான (தமது) வாழ்க்கைக்குத் துணையாகிய பெண்குருவிகளுடன், கூட்டினுள் துயில்வ - (தங்கள்) கூடுகளினுள்ளே (சுகமாய்த்) தூங்குகின்றன; யானும் - நானே, தெரி கணை மலரொடும் - (மன்மதனுல்) தேர்ந்தெடுத்தெய்யப்பட்ட புஷ்பங்களாகிய பாணங்களுடனும், திறந்த நெஞ்சொடும் - (அவை தைத் துப் பாய்தலாற்) பிளந்த நெஞ்சுடனும், அரிய வல் அயரொடும் - பொறுத் தற்கு அரிய கொடிய துன்பத்துடனும், வைகுவேன் - (மனைவியைப்பிரிந்து வனத்தில்) வசிக்கின்றேன்! (எ - று.)

குருவிகளும், தங்கள்கூடுகளினுள்ளே, இரவில் இடையிட்டுவிளக்கும் மின்மினிப்பூச்சிகளே விளக்காகவைத்துக்கொண்டு தம்தம்பேடையைப்பிரி

யாமல் அவற்றுடன்கூடி இனிமையாகப்படுத்துத்துங்குகின்றன; அவ்வளவு மின்றி நான் மனைவியைப்பிரிந்து மன்மதபாணங்களால் மனம்பிளந்து உபத்திரவப்பட்டுக்கொண்டு படுக்கைகொள்ளாமல் இருளில் வனத்திலிருக்கின்றேனே! என்பதாம். பிந்தினவாக்கியத்தில் 'கூட்டினுள்' என்பதற்கு எற்ப, முற்றினவாக்கியத்தில் 'வனத்தில்' என்பது வருவிக்கப்பட்டது. பின்வாக்கியத்தில் 'மின்மினியாகிய விளக்கு விளங்க' என்பதற்கு எற்ப முன்வாக்கியத்தில் 'இருளிலே' என்பது கொள்ளவேண்டும். இழிந்தபிறப்பாகிய பறவையினத்திற் சேர்ந்த குருவிக்கு உள்ளவளவு நல்வினைப்பயனும் உயர்ந்த மானுடப்பிறவியில்தோன்றிய தனக்கு இல்லாமற்போனதைக்குறித்து இரங்கியவாறும். தனைவரைப்பிரிந்து வருந்துபவர் தனியோடு கூடிவாழ முயிர்களைக் காணுமிடத்து அவை காமோத்தீபகமாகித் தமது பிரிவுத்துயரை வளர்த்தலால் மிகவருந்தி அவ்வுயிர்களின்மேற் பொறாமைகொண்டவர் போன்று தமது நிலைமையைக்குறித்து நிட்டூரமாகப் பேசும் உலகவியல்பு, இங்குக் கருதத்தக்கது.

'யானும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு. எரிதல் - பிரகாசித்தல். மின்மினி - இருளில் மின்னுவதொரு பறக்கும்புழு;மின்-மின்னல்போல, மினி - மின்னுவது எனக் காரணப்பொருள் காண்க: மின்னுதல் - இடையிட்டு விளங்குதல்; இ - கருத்தாப்பொருள்விகுதி. மணி விளக்கு - இரத்தினமாகிய விளக்கு என்றும், இரத்தினங்கள்பதித்த விளக்கு என்றும் கொள்ளலாம். 'குருவி' என்ற சொல் 'குரீஇ' என்று விகாரப்பட்டு அளபெடுத்தலால், சொல்லிசையளபெடை. 'மலர்களாற்றிறந்த' என்பது பிரதிபேதம். (அ)

அ அ. வானகமின்னினுமழைமுழங்கினும்
யானகமெலிகுவேனெயிற்றராவெனக்
கானகம்புகுந்தியான்முடித்தகாரிய
மேனகுங்கீழ்நகுமினியென்வேண்டுமால்.

(இ - ள்.) வான் அகம் மின்னினும் - மேகம்மின்னினால் அதனைக் கண்டும், மழை முழங்கினும் - மேகம் இடிமுழக்கஞ்செய்தால் அதனைக்கேட்டும், எயிறு அரா என-விஷப்பற்களையுடைய நாகம் (அஞ்சிவருந்துவது) போலே, யான் அகம் மெலிகுவேன் - நான் மனம்வருந்துபவனானேன்; (ஆகவே),—யான் நான் அகம் புகுந்து முடித்த காரியம் - நான் வனவாசம்வந்து சாதித்த காரியத்தைக் குறித்து, மேல் நகும் கீழ் நகும் - மேலுலகத்தவர் சிரிப்பர் கீழுலகத்தவர் சிரிப்பர்; இனிஎன் வேண்டும்-இன்னும் (நான்) என்னசிறுமையையடையவேண்டும்? [ஒன்றுமில்லை யென்றபடி]; (எ-று.)—ஆல்-ஈற்றசை.

தான் மணஞ்செய்து கொண்ட மனையாளை மாற்றான் கவர்ந்துகொள்ள இழந்து அதற்கு எதிரொன்றுஞ் செய்யமாட்டாது வருந்துதலாகிய இது சிறுமையுட்சிறுமை யென்பதாம். தனது மனவலிமை சிறிதுமின்றி யொழிந்தமை, முன்னிரண்டடியிற் குறிக்கப்பட்டது. மின்னலுக்கும் இடிக்கும் அஞ்சிநடுங்குதல் பாம்பினியல்பாதல், முன்பு கூறப்பட்டது; வீரனின் கார்

காலத்து வருந்துதலும் அவ்வாறே. தனனைத் தானே பழித்துக்கொள்ளுஞ் சமய மாதலால், தனக்கு நரகத்தை உவமைகூறிக்கொண்டான். 'மேல்', 'கீழ்' என்பன - இடவாகுபெயர். 'மேல்' என்றது, தேவர்களை. 'கீழ்' என்றது, நாகர்களை. மேலுலகத்தாரும் கீழுலகத்தாரும் நகுவ ரென்றதனால், இவ்வுலகத்தார்நகுவரெனபது கூறுமலேபெறப்பட்டது; அன்றி, 'கீழ்' என்றதில் நிலவுலகம் அடங்கு மென்றலுமாம். நகுதல் - இங்கே, இகழ்ச்சிச் சிரிப்பு; பரிஹாஸம்: இனி யான்வேண்டும்-இதைக்காட்டிலும் எனக்கு வேறு அவமானம் வேண்டுமோ? என்றபடி; இனி, இதற்கு-இவ்வாறுனபின்பு (இவ்வுலகத்தில் எனக்கு) யாதுவேண்டுவது? [ஒன்றும் வேண்டுவதில்லை] என்றும் உரைக்கலாம்; இனி நான் பிழைத்திருந்து யாது செய்யவேண்டு மென்றதாம். 'முழக்கினும்', 'மெலிகுவன்', 'வேண்டுமோ' என்பன பிரதிபேதம். 'யானகமின்னுவன்' எனற பாடத்திற்கு - நான் மனந்துடிப்பேன் என்ற பொருள். (அஅ)

அசு. மறந்திருந்துய்கலேன்மாரியீதெனி
னிறந்துவிண்சேர்வதுசரதமிப்பழி
பிறந்துபின்றீர்வலோபின்னரன்னது
துறந்துசென்றுறுவலோதுயரின்வைகுவேன்.

(இ - ள்.) துயரின் வைகுவேன் - துன்பத்தில் தங்குபவனுனான், மறந்து இருந்து உய்கலேன் - (சீதையை) மறந்திருந்து பிழைக்கமாட்டுவேனல்லேன்; மாரி ஈது எனின் - மழை இத்தன்மையதானால், இறந்து விண் சேர்வது சரதம் - (நான்) மரணமடைந்து பரலோகத்தையடைவது நிச்சயம்: இ பழி - (சீதையை இராவணன் கவர்ந்து செல்ல இழந்த தாகிய) இத்தப் பழிப்பு, பிறந்து பின் தீர்வலே - மற்றொரு ஜன்மமெடுத்து அப்பிறப்பில் (அவனுக்கு எதிர்செய்து) தீர்க்கடவேனோ? (அன்றி), பின்னர் - மற்றொரு பிறப்பில், சென்ற துறந்து - இல்லறத்தைவிட்டுத் துறவறத்தையடைந்து, அன்னது உறுவலோ - (இப்பழிதீரப்பெறுதலாகிய) அந்நிலைமையை யடைவேனோ? (எ - று.)

எப்படியும் இப்பிறப்பிலேயே இப்பழி தீரப்பெறுதல் எனக்கு இயலாதென்பதாம்; துறவறமடைந்தவர்க்கு முன்னை நிலையின் தொடர்புகளெல்லாம் நீங்குதலால் இப்பழியும் தீர்ந்திடு மென்றுகொண்டு, 'துறந்துசென்று அன்னது உறுவலோ' எனப்பட்டது. இப்பிறப்பில் துறக்கமாட்டாமையை 'மறந்திருந்து உய்கலேன்' என்றதனால் உணர்த்தினன். பழிதீர்வல் என இயையும். ஓகாரங்கள் - ஐயவிளு. 'மாரி ஈது எனின்' என்றது - மழைக்காலம் இப்படி எனக்கு வருத்தஞ் செய்வதானால் என்றபடி; இப்படி விடாமல் மழைபெய்து கொண்டிருக்குமானால் என்றவாறுமாம். 'இறந்துவிண் சேர்வது சரம்' என்ற பாடத்திற்கு - (யான்) இறந்து மேலுலகமடைவதே தகுதியா மென்று பொருள்; 'உய்கிலேன்,' 'தீர்வலே,' 'உறுவலே' என்பன பிரதிபேதம். (அசு)

கூ0. ஈண்டுநின்றரக்கர்தமிருக்கையாமினிக்
காண்டலிற்பற்பலகாலங்காண்டுமால்
வேண்டுவதன்றிதுவீரகோய்தென
மாண்டனெனென்றதுமாட்சிப்பாலதால்.

(இ - ள்.) வீர - வீரனே! யாம் - நாம், ஈண்டு நின்று - இவ்விடத்திலே யிருந்து, இனி - இனிமேல், அரக்கர்தம் இருக்கை காண்டலில் - (இராவணன முதலிய) இராக்கதர்களின் இருப்பிடத்தைத் தேடிக்கண்டுபிடிப்பதில், பல்பல காலம் காண்டும் - மிகப்பலநாள்கள் கழியக்காண்போம்; ஆல் - ஆதலால், இது வேண்டுவது அன்று - சீதையைத்தேடும் முயற்சி வேண்டா; கோய் தென மாண்டனென் என்றது-(சீதையைப் பிரிந்ததனாலாகிய) ஆசை நோய் அழிக்க இறந்தே னென்பதே, மாட்சிப்பாலது - பெருமையிற் சேர்வ தாம்; (எ - து.)—ஆல் - ஈற்றசை.

சீதையைக் கவர்ந்துசென்ற அந்த அரக்கரின் இருப்பிடத்தை நாம் இங் கேயிருந்து தேடியுணர்தற்கு இன்னும் எத்தனை காலஞ் செல்லுமோ? இம் முயற்சியில் வெகுகாலங்கழித்தலைக் காட்டிலும் 'சீதையைப்பிரிந்ததனாலாகிய காதல்நோயினால் இராமன இறந்தான்' என்று அனைவருஞ் சொல்லும்படி யான் இப்பொழுதே இறந்து விடுவதே பெருமையைத் தருவதாகும் என்ப தாம். இன்பம் நுகர்ந்து கொண்டு பலகாலம் உயிர் வாழ்தலினும், இன்பந்தீர உயிரொழிதலே மேல்என்க.

இருக்கை - இருக்குமிடம்; 'கை' விகுதிபெற்ற தொழிலாகு பெயர். 'காலம்' என்றது - வர்ஷம அல்லது யுகம் என்றவாறும்; காலத்தின் பெரும் பகுப்பைக் காட்டும். 'வீர' எனறது, இலக்குமணனே நோக்கிய அண்மை விளி. மாட்சிப்பாலது - பெருமையின பகுப்பிற சேர்வது. 'வேண்டுவதன் றது', 'மாண்டனனென்பது மாட்சிப்பாலதாம்' என்பன பிரதிபேதம். (கூ0)

கூக. செப்புருக்கனையவிமமாரிச்சீகரம்
வெப்புறப்புரஞ்சுடவெந்துவீவதோ
வப்புருக்கொண்டவாணெடுங்கணையிழை
துப்புருக்குமுதவாயமுதந்துய்த்தயான்.

(இ - ன்.) அம்பு உரு கொண்ட - அம்பின் வடிவத்தைக் கொண்ட [அம்புபோன்ற கூரியவடிவமுள்ள], வான் நெடுங் கண் - ஒளியுள்ள நீண்ட கண்களையுடைய, ஆய் இழை - தோக்தெடுத்து அணிந்த ஆபரணங்களை யுடையவளான சீதையின, துப்பு உரு குமுதம் வாய் - பவழம்போன்ற நிறமுடையதும் செவவரம்பல்போன்றதுமான அதரத்தினது, அமுதம் - அமிருதம்போலினிமையான ரஸத்தை, துய்த்த - பருகி இனபமனுபவித்த வஞன யான்——இ மாரி சீகரம் - இந்த மழைத்துளிகள் செம்பு உருக்கு அனைய - செம்பை (நெருப்பிலிட்டு) நீராக உருக்கி அதனைப்பெய்தாற்போன றனைய, வெப்பு உற புறம் சுட-வெப்பம் மிகுமாறு (என) உடம்பை எரிக்க, வெந்து வீவதோ - தனித்து அழிவது தகுதியோ! (எ - து.)

செம்பு - தாமிரம். வெப்பு - வெம் என்ற பகுதியிற்மேல் 'பு' என்னும் விகுதி பெற்ற பண்புப் பெயரொன்றும் வெம்பு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெய ரென்றுங் கொள்ளலாம். செப்புருக்கு| அப்புரு - மென்றொடர் வன்றொடராயிற்று. 'புறஞ்சுட' வென்ற பாடத்திற்கும் பேர்ருன் அதுவே. 'வீவதோ' என்றதில் தொழிற்பெயர் வினைமுற்றின் தன்மையை யண்டத்தது. அமிருதமுண்டவன் அழிவது அடுக்குமோ? என்ருலும்.

'வீவனெ,' 'குமுதரா நுகர்ந்து துப்ப்த யான்', 'அப்புருத்தனெயவாய்' என்பன பிரதிபேதம். (கக)

கூ. நெய்யடைதீயெதிர்நிறுவிநிற்கிவள்
கையடையென்றவச்சனகன்கட்டுரை
பொய்யடையாக்கியபொறியிலெனெடு
மெய்யடையாதினிவிளிதனன்றோ.

(இ - ள்.) நெய் அடை தீ எதிர் நிறுவி - (ஓமாகுதியாக) நெய் சேர்த்து வளர்க்கப்பெற்ற அக்கினியின முன்னிலையில் (சீதையைக் கொணர்த்து) நிறுத்தி, நிற்கு இவன் கையடை என்ற - 'உனக்கு இவன் அடைக்கலப் பொருன்' என்று (என்னை நோக்கிச்) சொன்ன, அ சனகன் கட்டுரை - அந்தச்சனக மகாராஜனது உறுதிச்சொலை, பொய் அடை ஆக்கிய - பொய் பொருந்தியதாகச் செய்துவிட்ட [பழுதுபடுத்திவிட்ட], பொறி இலேனெடு - கல்வினையில்லாதவனன என்னிடத்தில், மெய் அடையாது - சத்தியமென் பது அமையாது; (ஆகவே) இனி விளிதல் னறு - இனி (யான்) இறத்தலே நல்லது; (எ - று)—அரோ - ஈற்றசை; தேற்றமுமாம்.

சனகமகாராசர் தாம் வளர்த்த பெண்ணன சீதையை அக்கினி சாகுஷி யாக எனக்குக் கன்யகாதானஞ்செய்து கொடுத்தபோது சாஸ்திரோக்தமாய் ஓமத்தையவர்த்து அக்கினிக்கு முன்பாக எனது எதிரில சீதையைக்கொண்டு வந்து நிற்கச்செய்து என்னைபபார்த்து 'எனபெண்ணன இத்தச்சீதை இனி உனக்கு அடைக்கலமாவன்' என்றுசொல்லி என்னிடத்தில் அவளை ஒப்பித்த னர்; அதற்கு இணங்கிச் சீதையைக் கைப்பற்றின யான் பினபு அதன்படி அவளைப் பத்திரமாகப் பாதுகாவாமல் விட்டிட்டே னதலால், அத்தச் சொல் லைப் பழுதுபடுத்தியவனனேன; இப்படி சொல்தவறிய எனனிடம் இனிச் சத்தியம் சேராது ஆகவே யான் இவவாறு பெய்யனும் உயிர்வாழ்தலினும் இறத்தலே மேல் என்பதாம். மேன்மேற் பொய்த்தல் ஒழிதலால், 'விளிதல் னன்று' எனப்பட்டது. கையடை - அடைக்கலம்; பாலகாண்டத்திற் கைய டைப்படல மென்ற வீடத்தும் இக்காண்டத்து வாலிவதைப் படலத்தில் "பொய்யடை யுள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவமற்றன், கையடை யாரு மென் றவ்வியாமற்குக் காட்டுங்காலே" என்றவிடத்தும் காண்க. கை அடை என்று பிரித்து, ஒருவாது கையை [ஸ்வாதீகத்தை] யடைவது என்றுவது, ஒருவர்து கையில் [வசததில] சேர்வது எனறுவது பொருன்பட்டுக் காரணக் குறியாகத் தக்கது; தவறுற்ற பாதுகாக்கத்தக்க பொருளென்பது கருத்து. தம்மிடம் பிதர் ஒப்பித்த அடைக்கலப்பொருளைப் பாதுகாவாதிவிடுதல் பாதக

மாதலால், 'பொறியிலேன்' என்றார்; அங்ஙனம் அருமையான ஜாகையை இழவாது வைத்துக்கொண்டு வாழப் பாக்கியமில்லாத யான் என்று தன்னை வெறுத்துக்கொண்டதுமாம். பொய் அடை - பொய் அடுத்தது; அடை--அடு - பகுதி. ஐ - விகுதி. கிற்கு - நினைக்கு; அகரச்சாரியை தொக்கது. 'நிற் கவள்' என்ற பாடம் சிறவாது. (கூஉ)

கூங. தேற்றுவாய்நீயுளையாகத்தேறிநின்
றூற்றுவேனுளனுகவாய்வளை
தோற்றுவாளல்லளித்துன்பமாரினி
மாற்றுவார்துயர்க்கொருவரம்புண்டாகுமோ.

(இ - ள்.) தேற்றுவாய் நீ உளை ஆக - (என்னைத்) தேற்றுபவனும் நீ யிருக்க, தேறி நின்று ஆற்றுவேன் நான் உளன ஆக - தேறுதலடைந்து நின்று (பிரிவுத் துன்பத்தைப்) பொறுத்துக் கொள்பவனும் நான் இருக்க, (இவ்வளவினாலே), ஆய் வளை தோற்றுவாள் அல்லள் - ஆராய்ந் தெடுத்தணிந்த வளையல்களை யுடையவளான சீதை இங்குவந்து தோன்றுபவ ளல்லள்; இ தனபம் இனி ஆர் மாற்றுவார் - இத்தனபத்தை வேறு யார் தீர்ப்பவர்? [எவருமில்லை யென்றபடி]; (ஆகவே), துயர்க்கு ஒரு வரம்பு உண்டாகுமோ - இத்தனபத்திற்கு ஒருமுடி வெல்லையும் உளதாமோ? (எ - று.)

நீ யொருவன் என்பக்கத்தில் நினறு தேற்றிக்கொண்டிருக்க அந்த உன் வார்த்தையைக்கேட்டு நான தேறி ஒருவாறு துயர் தணிவதனால் மாத் திரமே சீதை வந்து சேர்வாளா? அவள் வராமற்போனால் இத்தன்பத்தை வேறெவரும் தீர்ப்பவ ரில்லையே; ஆகவே, இத்தன்பத்திற்கு ஒருமுடி வுண்டோ? என்பதாம். உளை - உண்மை யென்னும் பண்பினடியாப் பிறந்த முன்னிலை யொருமைக் குறிப்புமுற்று. கலித்தொகையில் "உளனு வென் னுயிரை யுண்டு" என்றவிடத்திற்போல, 'உளன்' என்றது - தன்மையொரு மையாய் நின்றது; (("இலனென்று தீயவை செய்யற்க" என்ற திருக்குறளில் 'இலன' என்பதும் அது.) 'உளென்' என்று பாடமோதுவாரு முளர். ஆய் வளை - வினைத்தொகை யன்மொழி. 'இதற்கொரு வரம்பு' என்பது பிரதி பேதம். (கூங)

கூச. விட்டபோர்வாளிகள்விரிஞ்சன்விண்ணையுஞ்
சுட்டபோதிமையவர்முதலதொல்லையோர்
பட்டபோதுலகமுமுயிரும்பற்றறக்
கட்டபோதல்லதுமயில்கைக்காண்டுமோ.

(இ - ள்.) விட்ட - யான் இனித் தொடுக்கின்ற, போர் வாளிகள் - போர்க்குச் சிறந்த அம்புகள், விரிஞ்சன் விண்ணையும் சுட்டபோது - பிரம னது சத்திய லோகத்தையும் எரித்தபோதும், இமையவர் முதல் தொல்லை யோர் பட்டபோது - தேவர்கள் முதலிய பழமையானவர்கள் அழிந்தபோதும், உலகமும் உயிரும் பற்று அற கட்டபோது - உலகங்களையும் பிராணிகளை யும் மிச்சமில்லாதபடி அழித்தபோதும், அல்லது - அல்லாமல், மயிலை

காண்டுமோ - மயில் போன்ற சாயலே யுடையவளானீ சீதையைப் பார்ப் போமோ? (எ - று.)

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன் முதலிய அரக்கர்க ளிருக் கின்ற இடமும் அவர்கள் சீதையை ஒளித்து வைத்திருக்கின்ற இடமும் எமக்குத் தெரியவில்லை யாகையாலும் அதனைப் பிரமனுவது மற்றைத் தேவ கணங்களாவது வேறு பிராணிகளாவது தெரிவிக்கவுமில்லை யாகையாலும், இனி நான் அம்புதொடுத்து எல்லாவுலகங்களையும் எல்லாப் பிராணிகளையும் அழித்தாலன்றிச் சீதையைக் காணமுடியாது என்பதாம். விண் - மேலுலகம்; இங்கே, மேலுலகங்க ளேழினுள்ளும் மேலதான சத்திய லோகத்தைக் குறித்தது

'விட்டதோர் வடிக்கணே விரிந்த விண்ணையும்,' 'உலகமும் யாரும் பற் றற', 'மயிலைக்காண்குமோ' என்பன பிரதிபேதம். (கூச)

கூரு. தருமமென்றொருபொருடன்னையஞ்சியான்
றெருமருகின்றதுசெறுநர்தேவரோ
டொருமையின்வந்தனரேனுமுய்கலா
ருருமெனவொலிபடுமுரவிலோயென்றான்.

(இ - ன்.) உரும் என - இடிமுழக்கம் போல, ஒலி படும் - (தாணின்) ஒசையுண்டாதற் கிடமான, உரம் விலோய் - வலிமையையுடைய வில்லை யுடையவனே!—யான் தெருமருகின்றது - 'யான் (உலகங்களையும் உயிர்களை யும் அழிக்காமல்) இப்படி வருந்துகின்றது, தருமம் என்ற ஒரு பொருள் தன்னை அஞ்சி - தருமமென்கிற ஒரு சிறந்தபொருளைக் காவாமல் விடுவ தற்கு அஞ்சியேயாம்; (அன்றி), செறுநர் - பகைவர்களான அரக்கர்கள், தேவ ரோடு - தேவர்களுடன், ஒருமையின் வந்தனரேனும் - ஒருங்கு சேர்ந்து (எனக்கு எதிராக) வந்தாலும், உய்கலார் - (இறந்திடாமல்) தப்பிப்பிழைக்க மாட்டார்களே, என்றான் - என்ற (இலக்குமணனே நோக்கிக்) கூறினன், (இராமபிரான்); (எ - று.)

தருமமென்கிற ஒருபொருளுக்கு அஞ்சியன்றே, உலகங்களையும் உயிர் களையும் அழித்துச் சீதையைக் கண்டிடாமல் இன்னது செய்வதென்று தெரி யாத மனத்தடுமாற்றமுற்று இப்படி வருந்துகின்றேன்; இல்லாவிட்டால், அரக்கர்களும் தேவர்களும் ஒன்றாகக்கூடி எதிர் நின்றாலும் என் முன் உயிர் தப்பிப் பிழைத்துப் போகமாட்டுவரோ? என்று இலக்குமணனே நோக்கி இராமன் கூறினனென்பதாம். என் மனைவியைக்கவர்ந்தவர் அரக்கரேயா யிருக்க அதனபொருட்டு நிஷ்காரணமாய் அனேக லகங்களையும் எல்லாப் பிராணிகளையும் அழிப்பது அதர்மமாகுமே யென்பதை ஆலோசித்தே யென் பது 'தருமமென்றொரு பொருள்தன்னை யஞ்சி' என்றதன் கருத்து. தெரு மருகின்றது - மனஞ்சுழல்கின்றது, கிலேசகாலத் தொழிற் பெயர். இதனைத் தொழிற் பெயர் வினைமுற்றின் தன்மையடைத்தாகக் கொண்டு தரும மென்ற ஒருபொருளுக்கு அஞ்சியே யான் வருந்துகின்றது என்று முடித் தலுமாம். இவ்வகைமுடிபை வடநூலார் பாவேப்ரயோக மென்பர். 'ஒருமை

யின் வாய்த்தனர்' என்பதும் பாடம். 'அருமையி னவிந்தன ரென்னு மஃதா லால்' என்ற பாடத்திற்கு - அரக்கர்கள் தேவர்களுடனே அருமையாக அழிந்தார்க ளென்று சொல்லும்படி செய்வதை விட்டு யான் தெருமருகின்றது இத்தருமத்தை யஞ்சியே யென ஒரேவாக்கியமாக உரைக்க; அருமையின் - பிறர்க்கு அரிய வண்ணமாக வென்க. நான் கோபித்தாற் செறுநர் தேவரோடு அவிந்தனரென்னும் தல்லாமற் பிறிதென்னும்? என்று இசையெச்சமாகச் சிலசொற்கள் வருவித்துத் தனிவாக்கியமாக முடிப்பாரு முளர்.

செறுத்தல் - கோபித்தல், கெருக்குதல், பகைத்தல், வெறுத்தல். 'உரு மெனவெலிபடு மூவிலோய்' என்றது இலக்குமணனே நோக்கிய வினி.

'அருமையின் வீந்தனரென்னு மஃதலால்' என்பது பிரதிபேதம். (கஞ)

[இதுமுதல் ஏழகவிகள் - இலக்குமணன் இராமனுக்குத் தேறுதல் கூறல்.]

கூசு. இளவலுமுரைசெயவாணெண்ணுகாளினு
முளவலகூதிருமிறுதியுற்றதாற்
களவுசெய்தவனுறைகாணுங்காலம்வந்
தளவியதயர்வதெனுணையாழியாய்.

(இ - ள்.) இளவலும் - (இவ்வாறு இராமபிரான் சொல்லக்கேட்ட) தம்பி யான இலக்குமணனும், உரைசெய்வான் - (அப்பெருமானே நோக்கி அடி யில் வருமாறு) கூறுவான்:—ஆணை ஆழியாய் - ஆஜ்ஞா சக்கரத்தையுடைய வனே!—எண்ணும் நாள் - (கழிக்கவேண்டுமென்று) கருதப்பட்ட மழைக் காலத்து நாள்கள், இனும் உள அல் - இன்னமும் உள்ளனவல்ல; கூதிரும் இறுதி உற்றது - சரத்காலமும் முடிவையடைவதாயிற்று; ஆல் - ஆதலால், களவுசெய்தவன் உறை காணும் காலம் வந்து அளவியது - (ஜாநகிப்பிராட்டி யாரை) வஞ்சனையாற் கவர்ந்து சென்றவனான இராவணனுடைய இருப்பிடத் தைத் தேடிக்காணுதற்கேற்ற காலம் வந்து சேர்வதாயிற்று; அயர்வது என் - (நீ) வருந்துவானேன்? (எ - று.)

இளவல் - இளையபெருமான்; இளமையுடையோ னெனத் தம்பிக்குக் காரணப்பெயர். அல் - பெயர் விகுதி. எண்ணுதல் - நினைத்தல்; குறித்தலு மாம்: (சீதையைத்தேடும் முயற்சி செய்யத் தொடங்குதற்குத் தவணையாக முன்பு சுக்கிரீவனுக்குக்) குறித்த (மழைக்காலத்து) நாள்களென்க. இனி, எண்ணும் நான் - (அரிதிற்கழிதல்பற்றி) ஒன்று இரண்டு என்று எண்ணிக் கணக்கிடப்படுகின்ற (மழைக்காலத்து) நாள்களென்றுங் கொள்ளலாம். அன்றி, (நீ இவ்வாறு சோவிரகத்தாற்) சிந்தைப்படும் நாள்கள் இனிமேலும் உள்ளனவல்ல வென்றலும் ஏற்கும். இனி, எண்ணுகாளினிலுள பகற்கூதிரு மிறுதியுற்றது' என்றும் பாடங் காணப்படுகின்றது; அதற்கு - (முன்பு சுக்கிரீ வனுக்குத் தவணையாகக்) குறிப்பிட்ட (நான்குமாத) காலத்திற் சேர்ந்த சரத்காலமும் பாதியளவுமுடிவையடைந்தது என்று பொருளாம்; 'காளினி லுள கூதிரும் பகல் இறுதியுற்றது' என்ற மொழிமாறாக: பகல் - பகுதி, பாதி. இனும் - இன்னும்; தொகுத்தல். ஆல் - அசையுமாம்.

களவுசெய்தவன் - திருடியவன், அபஹரித்தவன். உறை-வசிக்குமிடம், உறைதல் அல்லது உறுதல் - வசித்தல். 'காலமீதளவியலாகிபசி' என்ற பாடத்திற்கு, காலம் ஈது அளவு இயல் ஆகிபசி - காலமாகிய இது வந்துசேரும் தன்மைபோயிற்று என்றும், காலம் மீது என்றுபிரித்து, காலத்தின் மேல் [இனி மேல்] வருவதாயிற்று என்றும் உரைக்கலாம். 'காலமீதளவிறந்தயர்வேன்' என்ற பாடமானபோது, காலமீது என்பதைத் தனி வாக்கியமாக முடித்து, (நீ) அளவுகடந்து வருந்துவதென்னே? என்று பொருள் கொள்க. இனி, 'உறை' என்ற சொல்லுக்கு - வாழ்நாளென்ற ஒருபொருளிருத்தலால், சீதை யைக்களவுசெய்த இராவணனுடைய வாழ்நாளை முடிவுகாணுங்காலம் [அவனை யழிக்குங்காலம்] வந்து நெருங்கியது எனினும் அமையும். எங்கும் சுற்றிச் செல்வதாதல்பற்றி ஆஜ்ஞையைச் சக்கரமென்றல் மரபு. 'எண்ணுகாளினி யுளகல,' 'களவுசெய்தவருறைகாணுங்காலமது' என்பன பிரதிபேதம். (கூக)

கூஎ. திரைசெயத்திண்கடலமிழ்தஞ்செங்கணு
ணுரைசெயத்தரினுமதுதொழிலுவந்திலன்
வரைமுதற்கலப்பைகண்மாடுகாட்டித்தன்
குரைமலர்த்தடக்கையாற்கடைந்துகொண்டனன்.

(இ - ன்.) திரை செய் - அலைகள் வீசுகின்ற, அ திண் கடல் - வலிய அக்கரப் பாற்கடலானது, அமிழ்தம் - அமிருதத்தை, செம்கணுன் உரைசெய தரினும் - சிவந்த திருக்கண்களை யுடையவனான திருமால் ('கொடு' என்று) கட்டளையிட்ட மாத்திரத்திலே கொடுக்கக்கடவ தானாலும், அ தொழில் - அவ்வாறு தனது ஆஜ்ஞையின் வலிமைகாட்டிச் சடக்கெனப் பெறுவதை, உவந்திலன் - (அத்திருமால) விரும்பாதவனாய், வரை முதல் கலப்பைகள் மாடு காட்டி - (மந்தர)கிரி முதலிய உபகரணங்களை அவனிடத்திற் கொணர்த்து தாபித்து, தன் குரை மலர் தட கையால் கடைந்து - தனது ஆபரணங்க ளொலிக்கப்பெற்ற செந்தாமரைமலர்போன்ற பெரிய கைகளால் (அக்கடலைக்) கடைந்தே, கொண்டனன் - (அதனினின்ற அமிருதமுண்டாக (அதனைப்) பெற்றுக்கொண்டான்; (எ - று.)

முன்னொரு காலத்தில், இவ்வண்டகோளத்திற்கு அப்புறத்திலுள்ள வித்ஞானலோகத்திற்குச் சென்ற திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை பிரசாதிக்கப் பெற்ற ஒரு வித்தியாதர மகன், மகிழ்ச்சியோடு அம் மாலையைத் தன் கைவீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டு வருங்கையில், துர்வாஸமகாமுனி எதிர்ப்பட்டு அவனை வணங்கித் துதிக்க, அவ் விஞ்சைமன்னை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டான்; அதன் பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத் தோடு தேவலோகத்திற்கு வந்து, மிக்க உல்லாசமாக ஐராவதயானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனுக்கு அம்மாலையைக் கைசீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரிமேல் வைத்தவளவில், அம்மதக்களிற அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கிழித்து

காலால்மிதித்துத் தலைத்தலிட்டது: அதுகண்டு முனிவன் கடுங்கோபங் கொண்டு 'இங்ஙனஞ் செல்வச்செருக்குற்ற நினது ஐசுவரியங்க ளெல்லாம் கடலில் ஒளித்துவிடக் கடவன' என்று சாபங்கொடுக்க, உடனே தேவர் செல்வம் யாவும் ஒழிந்தன. ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களுடன் திருமாலைச் சரண மடைந்து, அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி, அசுரர்களையுந் தூண்டிக்கொண்டு, மந்தரமலையை மத்தாகநாட்டி, வாசுகியென்னும் மகாநாகத் தைக் கடையிருகப்பூட்டி, சந்திரனை அடைதாளுக நிறுத்தி, பாற்கடலைக் கடைய முயலுகையில், வாசுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அது நோக்கித் திருமால் தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாசுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளவே, அக்கடலினின்று அமிருதம் முதலியன உண்டாயின; அவற்றைத் திருமால் கைக்கொண்டு தேவர்கட்குத் தந்தருளினன் என்பது, இக்குக் குறித்ததை. "மேனுள், தாழி தரையாகத் தண்டயிர் நீராகத் தட வரையே மத்தாகத் தாமரைக் கைக்கோவ, ஆழிகடைந் தமுதமெங்களுக்கே யீந்தாய்" என்று ஆரணியகாண்டத்தில் வந்ததும் காண்க இவ்வரலாற்றினுல், தன்னைச் சரணமடைந்தாரைத் தன்சிரமம்பாராது பரிபாலிக்கும் பகவானது கருணை வெளியாம். வாலி கடல்கடைந்து தேவர்கட்கு அமிருத மளித்ததாகக் கூறியதனேடு இது மாறுகொளக் கூறலாகாதவாறு எங்ஙனமெனின், கல்ப பேதத்தினுல் என்று சமாதானங் கூறியமைப்பர் ஆன்றோர்.

வரம்பிலாற்றலையுடைய திருமால் 'அமிருதம் முதலிய அரும்பொருள் களைக் கொடு' என்று பாற்கடலுக்கு ஒரு கட்டளைகூறி அம்மாத்திரத்திலே அக்கடல் அஞ்சி அப்பொருள்களை யெல்லாம் கொணர்ந்து கொடுக்கப் பெற் றுக்கொள்ள வல்லனேயாயினும் அவ்வாறு சடக்கெனச்செய்து காரியத்தைச் சாதித்துக்கொள்ளத் திருவுளங்கொள்ளாமல் அதற்குவேண்டிய உபகரணங் களை யெல்லாஞ் சேர்த்துக்கொண்டு தக்கவழியால் முயன்றே காரியத்தை முடித்தருளினன் என இதனை எடுத்துக் கூறியது, தினது பழுதுபடாத அம்புகளினுல் உலகமனைத்தையும் ஸகல பிராணிகளையும் அழித்துப் பிராட் டியைக் காணவல்ல பேராற்றலுடையை யாயினும் அங்ஙனஞ் செய்யாது வாகரசேனைகள் முதலிய ஸாதனங்களைத் திரட்டித் தக்கவழியாற சீதையைக் கண்டு பகைவென்று அத்தேவியைச் சேர்தலே தக்கதென்பதற்குக் திதரிசனம் காட்டியவாறும். அடுத்த இரண்டு செய்யுள்களும் இவ்வாறே.

செம் கணன் - உத்தம லிலக்கணமாகிய சிவந்தரேகைகள் படர்ந்த கண் களை யுடையான், செந்தாமரைக் கண்ணன். இங்கே 'செங்கணன்' என்றது - திருமாலின் இயல்பிற்சிவந்த திருக்கண்களையே; தேவர்கள் செல்வங்களை யெல்லாம் தான் ஒளித்து வைத்துக்கொண் டிருத்தற்காக அப்பெருமான்

தேவர்கள்பக்கல் பரிவினுல் தன்மீது சினந்து கண்சிவந்ததாக் கருதிச் சமுத் திராராஜன் அஞ்சத்தக்கா னென்பதை யுணர்த்தும். இதனுல் திருமாலின் திவ்யசக்திக்குமுன் சமுத்திராராஜன் அசக்த னென்றவாறும். "நெடுங்கடல் கிற்பதும்.....அங்கேசார்ந் திருவாணையினே" என்றபடி கடல் முதலிய அனைத்தும் எம்பெருமான கட்டளைக்கு அஞ்சி அடங்கி நடக்குமென்க. 'திரைசெய்' என்ற அடைமொழி - கடலின இயற்கை யாடம்பரத்தையும், 'திண்' என்றது - அதற்கு ஏற்ற இயற்கை வலிமையையுங் காட்டும். அகரச் சுட்டு - பிரசித்தி பற்றியது. குரைத்தல் ஒலித்தல்; இங்கே, வளைமுதலிய ஆபரணங்க ளொலித்தல்; இனி, "பலகுரைதன்பம" என்றவிடத்திற் போல, குரை - அசையெனினுமாம். (கஎ)

கூஅ. மனத்தினினுலகெலாம்வகுத்துவாய்ப்பெயு
நினைப்பினனுயினுநேமியானெடு
மெனைப்பலபடைக்கலமேந்தியாரையும்
வினைப்பெருஞ்சூழ்ச்சியிற்பொருதுவெல்லுமால்.

(இ - ள்) (மற்றும்),—நேமியான் - சக்கராயுதத்தை யுடையவனன அத்திருமால், மனத்தினின் - திருவுள்ளத்தில் நினைத்த மாத்திரத்தில், உலகு எலாம் வகுத்து வாய் பெயும் - உலகங்களே யெலலாம கூறுகூறுக்கி வாயிற் போகட்டுக்கொண்டு உண்டு விடத்தக்க, நினைப்பினன் ஆயினும் - சங்கற்ப சக்தியை யுடையவனுனலும், (அவவாறு செய்யாமல்), எனை பல நெடும் படைக்கலம் ஏந்தி - மிகப்பல பெரிய ஆயுதங்களேக் கைகளிற் கொண்டு, (அவற்றல்), யாரையும் - (அசுரர் அரக்கா முதலிய கொடியவர்கள்) அனை வரையும், வினை பெருஞ் சூழ்ச்சியின - போர்த்தொழிலுககு உரிய பெரிய தந்திரங்களுடன, பொருது - போர்செய்தே, வெல்லும் ஜயிகின்றனன; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

'உலகு' என்றது - இங்கு, இடத்தையும், இடத்தி கிகழ்பொருளாகிய ஜீவராசிகளேயும் உணர்த்திற்று. வகுத்தல் - வகைப்படுத்தல், பகுத்தல். வாய்ப் பெய்தல் - உட்கொள்ளுதல். இனி, உலகெலாம் வகுத்து வாய்ப்பெயும் மனத்தினின் நினைப்பினன - உலகங்களேயெல்லாம் படைத்தலும் உண்ணு தலும் செய்யவல்ல மனத்தின் சங்கற்பதனத யுடையானென்று உரைத்தலு மொன்று; இவ்வுரையில், வகுத்தல் - உண்டாகுதல். பெயும் - பெய்யும், தொகுத்தல். நேமியான் - சக்ரபாணி. எனைப்பல - எத்தனேயோபல; எனை - எத்தனேயென்பதன் விகாரம்; எனேயென்பதன விகாரமெனக் கொண்டு, மற்றும்பல வென்றலுமாம். படைக்கலம் - போர்க்கருவி; கலம் - உபகரணம் தான் பரமபதத்தில் அல்லது திருப்பாற்கடலில் இருந்தபடியே தனது சுதரி சனமென்னும் சக்காயுதத்தை யேவி அதுகொண்டு கொடியவாகளே யெல் லாம் அறத்தொலேக்கவல்ல ஆற்றலுடையனுயிருந்தும் அவவாறு செய்யாமல் அச்சக்கரம் முதலிய ஆயுதங்கள் பலவற்றை யேந்திக்கொண்டு அத்தந்த கொடியவர்களுன்னிடத்திற் சென்று சமயோசிதமாகப் போர்செய்தே அவ

களை வெல்லுகின்ற தென்பது விளங்க, 'தேமியான் செடும் எனைப்பல படைக்கலமேந்தி யாரையும் வினைப்பெருஞ் சூழ்ச்சியிற் பொருது வெல்லும்' என்றார். மகாமாயாவிகளான அக்கொடியவர்களுடைய பெருமாயைகளுக்கு எதிர்செய்து வெல்லவல்ல மாயாசக்தியுடனே யென்பதும், 'வினைப்பெருஞ் சூழ்ச்சியின்' என்பதில் தோன்றும். இனி, வினைப்பெருஞ் சூழ்ச்சியின் - பகைவரிடத்துச் செய்யுந் தொழிலுக்குரிய பெரிய (ஸாமதாதிபேததண்டங்களாகிய) உபாயங்களுடனே யெனினும் அமையும் சூழ்ச்சி - ஆலோசனையுமாம். 'மனத்தினில்', 'நேமிநேமியோ டெனைப்பல', 'எனைப்பகல்' 'சூட்சியின்' என்பன பிரதிபேதம். (கஅ)

கக கண்ணுடைநுதலினன்கணிச்சிவானவன்
விண்ணிடைப்புரஞ்சுடவெகுண்டமேலைநா
ளெண்ணியசூழ்ச்சியுமீட்டிக்கொண்டவு
மண்ணலேலியொருவராலறியற்பாலவோ.

(இ - ள்.) அண்ணலே-பெருமையிற் சிறந்தவனே!—கண் உடை நுதலினன் - (நெருப்புக்) கண்ணையுடைய நெற்றியை யுடையவனை, கணிச்சி வானவன் - மழுவை யேந்திய மகாதேவனுடைய சிவபிரான், விண்ணிடை புரம்சுட - ஆகாயத்திலே சஞ்சரிக்கின்ற திரிபுரங்களை யெரித்தற்காக, வெகுண்ட - கோபங்கொண்ட, மேலை நாள் - முற்காலத்திலே, எண்ணிய சூழ்ச்சியும் - ஆலோசித்த ஆலோசனைகளும், ஈட்டிக்கொண்டவும் - சேர்த்துக் கொண்ட உபகரணங்களும், ஒருவரால் அறியற்பாலவோ-ஒருத்தரால் அறியத் தக்கனவோ? [ஒருவராலறியலாகாதவாறு மிகப்பல வென்றபடி] (எ - று.)

ஒருவரால் அறியற் பாலவோ - ஒருவராலும் அறியற்பாலன வல்ல வென்றுங் கொள்ளலாம். உலகங்கட்கெல்லாம் உபத்திரவஞ் செய்கின்ற திரிபுரத்து அசுரர்களை அழித்திடுமாறு தேவர்கள் பிரார்த்தித்த பொழுது, சிவபெருமான் தனது திருவடித் தொண்டர்களான அவ்வசுரர்களைத் தானே யழிப்பது எங்ஙனமென்று சிந்திக்க, அக்குறிப்பிற்கு ஏற்பத் திருமால் உடனே மாயையினால் ஜிநாவதாரமும் புத்தாவதாரமுஞ் செய்து விபரீதமான பற்பல வாதங்களைக் கற்பித்து அவ்வசுரர்கட்கு உபதேசித்து மயக்கி அவர்களை யெல்லாம் சிவத்வேஷிகளாகச் செய்து விட, அதன் பின்பு சிவபிரான் 'போர்க்குரிய சிறந்த கருவிகளின்றிப் போர் செய்வது எவ்வாறு? அவை கூடினால், ஒரு கணத்தில் அவ்வசுரர்களை யழித்திடலாம்' என்று சொல்ல, அதன்படி தேவர்கள் தேர் குதிரை சாரதி வில் நாணி அம்பு முதலிய யுத்தோபகரணங்களை யெல்லாஞ் சித்தஞ் செய்ய, பிறகு பாசுபதன் மூப்பத்து மூக்கோடி தேவகணங்களோடும் மிகப்பல வெள்ளக்கணக்கான பூத சேனைகளோடும் புறப்பட்டுச் சென்று அத்திரிபுரம் மூன்றும் ஒருங்கு கூடிய சமயம் பார்த்து அம்புதொடுத்து அவ்வசுரர்களைப் பட்டணங்களோடு எரித்திட்டன னென்பது இங்குக் குறித்தது. "கருவிலூதெயில்காணாபோர்க், கரு

வியொன்றிலங் காண் வரக், கருவி கூடிற் கணத்தவர், கருவலாழிறல்காண் டியால்,'' ''உருகெழுதில மொருகையமும், ஓருசுட நிருபுடையாழியும், சுரு திகள் தகளறவாசியும, மருமல ரணையவன வலவனும்'', ''தடநெடுவடவரை சாபமும், படவரவிறை பகாநாரியும், மடல்விரி தளவினன் வாளியும், கடவு னர் பிறர் பிறகருவியும்'' என்பன இங்கு அறியதக்கன. இந்த உபகரணங களில்லாமலே எளிதில் திரிபுர சங்காரஞ் செய்யத்தக்க நெறறிக் கண்ணே யும் அக்கினிஸ்வரூபமான மழுவாயுதத்தையு முடையனுயிருந்தும் அவ்வாறு செய்திலனெனபது தோனற, 'கண்ணுடைறுதலினன் கணிச்சிவானவன்' என்ருர். கணிச்சி - சூலமுமரம். பகையை தவருமலழிதற்கு, தக்கஆலோ சனையும் தக்க உபகரணங்களும் இன்றியமையாதன வென்பது, இங்குவிளக் கப்பட்டது.

அண்ண னென்பது அண்ணலென ஈறுதிரிந்த தெனக் கொண்டு, அண்ணலே [அண்ணனே] தமையனே யென்றலு மொன்று 'ஒழுவரால் அறியற்பாலவோ' என்பதற்கு - ஒருவரால் அறிய வேண்டியனவோ? [லோ கப்பிரசித்தமானவை யல்லவோ] என்று உரைப்பாரு முளர்.

'அதலவன்,' 'அதனெடுங்கணிச்சிவானவன்' என்பன பிரதிபேதம்.(கக)

கஂ0. ஆருநர்யாரையுந்தூணவராக்கிப்பின்
னேகுறுநாளிடையெய்தியெண்ணுவ
சேகுறப்பன்முறைதெருட்டிச்செய்தபின்
வாகையென்றெருபொருள்வழுவற்பாலதோ.

(இ - ள்.) ஆருநர் யாரையும் - (தமக்கு) அறுகூலானவர்க ளெல்லா ரையும், தூணவர் ஆக்கி - தூணேயாக வந்தி உதவுபவர்களாகச் சேர்த்துக் கொண்டு, எண்ணுவ சேகு உற பல் முறை தெருட்டி - ஆலோசிக்க வேண் டிய விஷயங்களை உறுதியாகப் பலமுறை ஆலோசித்துத் தெளிந்து, பின் - பின்பு, எகுறு நாளிடை எய்தி-(காரியத்தின் பொருட்டுச்) செல்லுதற்குரிய நாளிற் சென்று, செய்த பின் - (காரியத்தைச்) செய்தால், வாகை என்ற ஒரு பொருள் வழுவல் பாலதோ-(அக்காரியத்தில்) வெற்றி யென்ற ஒரு பொருள் தவறக் கூடியதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

ஆருநர் யாரையும் - தக்கவர்களை யெல்லாம் எனினுமாம். சேகு - மர வயிரீம்; இங்கு, உறுதிக்கு இலக்கணை. சேகு உற - உறுதியமைய. 'சேகற' என்ற பாடத்திற்கு - இடையீடில்லாமல் என்று பொருளாக வேண்டும்; சுற்றமற என்பாரு முளர். வெற்றி பெற்றவர் வாகைமரத்தி மலர்களாலிய மாலையைத் தரிக்கும் மரபு பற்றி, வெற்றிக்கு வாகையென்று பெயராயிற்று. வாகை யென்றொரு பொருள் வழுவற்பாலதோ-தவருமல் வெற்றியிடைக்கு மென்றபடி. 'பன்முறைதெரிந்துசெய்தபின்' என்பது பிரதிபேதம். (கஂஂ)

கoக. அறத்துறைநிறம்பினராக்காற்றலர்
மறத்துறைநமக்கெனவலிக்கும்வண்மையோர்
நிறத்துறைநன்னெறிநிறம்பலுண்டெனிற
புறத்தினியார்நிறம்புகழும்வாகையும்.

(இ - ன்.) ஆற்றலர் - வலிமையையுடையவர்களான, அரக்கர் - இராக்கதர்கள், அறம் அறை நிறம்பினர் - தருமமார்க்கந் தவறியவர்களாய், மறம் அறை நமக்கு என வலிக்கும் வண்மையோர் - (கொடியவழியே நமக்குச் சிறந்தது) 'என்று நிச்சயித்த உறுதியையுடையவர்; (அவர்கள் இவ்வாறு), நிறம் அறை நல் நெறி நிறம்பல் உண்டு எனின் - தகுதியுள்ள இடமாகிய சன்மார்க்கத்தை விட்டுத் தவறுதல் உள்ள தெனுமுல், புறத்து இனி - அப்பால், புகழும் வாகையும் - கீர்த்தியும் வெற்றியும், யார்நிறம் - யாரிடத்திற் சேரும்? (அவர்களிடத்திற் சேரா; அவர்களே யழிக்கச் செல்பவனும் தருமமார்க்கந் தவறுதலுமான உன்னிடத்திலேயே சேரு மென்றபடி);(எ - று.)

'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பது உறுதி யாதலால, தருமவழியிற செல்லுதலேவிட்டுத் தீயவழியிலேயே செல்பவர்களான அரக்கர்கள் பழியையும் தோல்வியையும் அடைந்து அழியத் தர்மாத்மாவானநீயே புகழையும் வெற்றியையும் அடைவாய் எனறு தேற்றியவாறும். புறத்து இனி- அப்புறம். இனி, இச்செய்யுளுக்கு - தருமமார்க்கந் தவறியவர்களான அரக்கர்கள் பலபராக்கிரமமுடையவர்க ளாதலால் '(எப்போதும்) போர்வெற்றி நமக்கே (யுளதாம்)' என்று நிச்சயிக்கும் உறுதியுடையோர்; (ஆனலும்) மேன்மையிற்சேர்ந்ததான சனமார்க்கத்தினின்று தவறுதல் (அவர்களிடத்தில்) உளதென்றுல், (உன்னைவிட்டு) வேறுயாரிடத்திற் புகழும் வெற்றியும் கூடும்? என்று உரைகூறலுமாம். நிறத்துறை - நிறத்து உறை என்றும் பிரிக்கலாம். 'ஆற்றலால்,' 'நிறத்துறை,' 'புறத்தினில் யார்தாம் புகழும் வாழ்க்கையும்' என்பன பிரதிபேதம். (கoக)

கoஉ. பைந்தொடிக்கிடர்கூளபருவம்பையவே
வந்தடுத்துளதினிவருத்தநீங்குவா
யந்தணர்க்காகுநாமரக்கர்க்காகுமோ
சுந்தரத்தனுவலாய்சொல்லுநீயென்றன்.

(இ - ன்.) பைந்தொடிக்கு இடர் கூள பருவம் - பசுமையான [பசும் பொன்னலாகிய] தொடியெனனும் கூளையை யணிந்தவளான பிராட்டிக்கு (சேர்ந்த) துன்பத்தை நீக்குதற் கேற்ற காலம், பையவே வந்து அடுத்து உளது - மெல்ல வந்துசேர்ந்துவிட்டது; இனி வருத்தம் நீங்குவாய் - இனி மேல் துன்பத்தைத்தவிர்வாய்; அந்தணர்க்கு ஆகும் நாம்-முனிவர்கட்கு உதவியாகவேண்டிய நாம், அரக்கர்க்கு ஆகுமோ - இராக்கதர்கு இலக்காகத் தடவோமோ? சுந்தரம் தனு வலாய் - அழகிய வில்லில் வல்ல வீரனே!

சொல்லு நீ - நீ சொல்வாய், என்றான் - என்று (இராமபிரானைநோக்கி) (இலக்குமணன்) கூறினன்; (எ - று.)

முனிவர்கட்குக் கொடுமைசெய்கின்ற அரக்கர்களைத் தொலைத்து அவ் விருடிகட்கு உதவியாக வேண்டிய நாம் அவ்வரக்கரியற்றிய இடையூறினிற்கு உள்ளாகி அதனினின்றுமீளாமலே அழிந்துவிடுவது தகுதியோ? சொல்என்ற தேறுதல்கூறினன். 'ஆகும்' என்ற சொல் இரண்டனுள், முன்னது - பெய ரெச்சம்; பின்னது - தன்மைப்பன்மை பெயர்காலமுற்று; இதில், 'கும்' விகுதியே காலங்காட்டும். பையெனல் - மந்தக்குறிப்பு 'அந்தணர்க்காகு மோ வரக்கர்க்காகுமோ', 'அந்தணர்க்காமற மரக்கர்க்காகுமோ' என்பன பிரதிபேதம். (கஉஉ)

[மழைக்காலம் முடிவையடைதல்.]

கஉக. உறுதியஃதேயென்வுணர்ந்தவுழியா
னிறுதியுண்டேகொலிம்மாரிக்கென்பதோர்
தெறுதுயருழந்தனன்றேயத்தேய்வுசென்
றறுதியையடைந்ததப்பருவமாண்டுபோய்.

(இ - ன்.) (இவ்வாறு இலக்குமணன் சொன்னவார்த்தைகளைக் கேட்டு), அஃதே உறுதியே என உணர்ந்த-அவன்சொன்னவிஷயம் தக்கதே யென்ற திருவுள்ளத்திற் கொண்ட, ஊழியான் - காலத்திற்குத்தலைவனான இராம பிரான், இ மாரிக்கு இறுதி உண்டேகொல் என்பது ஓர் தெற துயர் உழந்த னன் - இந்தமழைக்காலத்திற்கு ஒருமுடிவு உளதோ வென்றுஎண்ணுதலினு லாகிய ஒப்பற்ற கொடிய துன்பத்தை யனுபவித்தவனுய், தேய - மெலிவ டையுமனலில்,—அ பருவம் - அந்தக்கார்காலமானது, ஆண்டு போய் - தனது ஆளுகையைச்செலுத்திவிட்டுச்சென்று, தேய்வு சென்ற அறுதியை அடைந் தது - நாளடைவில் மெலிவுற்று முடிவையடைந்தது; (எ - று.)

காலத்திற்கு நியாமகனான இப்பெருமான் காலத்திற்குவசப்பட்டவன் போலக் கார்காலத்திற்குவருந்தியது, தான்கொண்டமநுஷ்யாவதாரத்திற்கு ஏற்ற பாவனையே யென்பது விளங்க, இங்கு 'ஊழியான்' என்றார். இனி, ஊழியான் - காலஸ்வரூபி யெனினுமாம், உண்டே, எ - வினு. கொல் - இரக்கந் தோன்றநின்றது. தெற துயர் - அழிக்கும் துன்பம்; மாணவேதனை யைச்செய்யுந் துன்பமென்க: நிலைபெற்ற துன்ப மென்றலுமாம்: தெறுதல்- அழித்தல், தகுதல். உழத்தல் - அனுபவித்தல், வருத்துதல். ஆண்டு-ஆட்சி செய்து. கார்ப்பருவம் தேய்வு செல்லுதலாவது - நாளடைவில் வரவர மழை குறைதல். அது அறுதியை யடைதலாவது-மழை இல்லையாதல். 'தேயத் தேய்வுசென்று' என்றவிடத்துச் சொற்சமத்காரம் காண்க. (கஉக)

இதுமுதல் இப்பட்லம் முடியுமளவுமுள்ள பதினேட்டுக் கலிகள் - அப்பொழுதை நிலைமைகளை வருணிப்பன: சரத்காலவர்ணனை.

[மேகங்கள் வெளுத்தல்.]

கoச். மள்கலில்பெருங்கொடைம நவிமண்ணு ளோரு
ருள்கியபொருளெலாமுதவியற்றபோ
தெள்கலிலிரவலர்க்கிவ தினைமையால்
வெள்கியமாந்தரின்வெளுத்தமேகமே.

(இ - ள்.) மள்கல் இல் - பின்வாங்குதலில்லாத, பெருங் கொடை - பெரிய ஈகைத்தொழிலில், மருவி-பொருந்தி, மண்உளோர் உள்ளிய பொருள் எலாம் உதவி - உலகத்திலுள்ளவர்கள் பெறவிரும்பிய பொருள்களையெல்லாம் (தம்மிடத்திலுள்ளவனவும் அவர்கட்குக்) கொடுத்து, அற்ற போது - (தம்மிடம்) பொருள் இல்லையானபோது, எள்கல் இல் இரவலர்க்கு ஈவது இன்மையால் - இகழப்படாத யாசகர்க்குப் பொருள் கொடுக்கமாட்டாமையால், வெள்கிய - நாணமடைந்த, மாந்தரின் - மனிதர்கள் (தமது இயற்கை நிறம் மாறி வேற்றுநிறமடைதல்) போல, மேகம் வெளுத்த-(தம்மிடமுள்ள நீர்முழுவதையும் பெய்துவிட்ட) கானமேகங்கள் வெண்ணிறமடைந்தன; (எ - று.)

உள்மையணி. "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்ற வையத்தியற்கை" என்றாரேனும், "எல்லா மிரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்" என்பவராதலால், உயர்குடிப்பிறந்த உத்தமரான கொடை வள்ளல்கள் தம்மிடம் வந்த யாசகர்க்கு அவர் வேண்டும் பொருளைத் தாம் கொடுக்கக்கூடாமைபற்றி லஜ்ஜைப்பட்டு அதனால் வைவர்ணியமடைவ ரென்க.

மள்கல் - மறத்தல்; அழிதலுமாம். பெருங்கொடை - ஏற்றோர்க்கு மாற்றாது கொடுத்தல். மள்கலில் பெருங்கொடை மருவுதல் - இரப்பவர்க்கு இல்லையென்று சொல்லாத மகா தாத்ருத்வத்தைப் பெற்ற அக்குணத்தில் நிலைபெறுதல். யாசகர் நாணத்தைவிட்டு வாய்திறந்து 'எனக்கு இன்னது இல்லை, வேண்டும், தருக' என்ற இளிவரவுபடச் சொல்லுதல் வேண்டாத படி அவர்கள்கருதியவளவிலே குறிப்பறிந்து கொடுத்துவந்த மகோதாரிக ளென்பது விளங்க, 'மண்ணுளோருள்ளிய பொருளெலா முதவி' என்றார். அற்ற போது - தாம்வறுமையடைந்தபோது. இரவலர் - இர வலர்---இரத்தலில் வல்லவர்; அன்றி, இரவல் அர் - இரத்தற்றொழிலே யுடையோர். (கoச)

[காளமேகங்களின் அடர்த்தியாலாகியிருந்த இருள் ஒழிதல்]

கoஞ். தீவினைகல்வினையென்னத்தேற்றிய
பேர்வினைப்பொருடனியறிந்துபெற்றதோ
ராய்வினிமெய்யுணர்வுணுகவாசறு
மாயையின்மாய்ந்ததுமாரிப்பேரிருள்.

(இ - ள்.) நிலினை நல்லினை என்ன - பாவம் புண்ணியம் என்று, நேர் நிய - (நூல்களால்) அறிவிக்கப்பட்ட, பேர் வினை - பெரிய கருமங்களின், பொருள்தனை - நிலையும் நன்மையுமாகிய பயன்களை, அறிந்து - உணர்ந்து, பெற்றது - அடைந்ததான, ஓர் - ஒப்பற்ற, ஆய் வினை மெய்உணர்வு - ஆராய் தற்கெழிலேயுடையதான தத்துவஞானம், அணுக - உண்டாக, (அவ்வன வீலே), ஆசறு - அழிகின்ற, மாயையின் - அவித்யை போல, மாரி பேர் இருள் மாய்ந்தது - வருஷா காலத்திற் கார்மேகங்களின் அடர்த்தியாலாகிய பெரிய இருள் (சரத்கால வ்ருத்தவளவீலே) இருந்த இடம் தெரியாதபடி அழிந்தது; (எ - று.)

மாயை, அவித்யை, விபரீதஞானம், மயக்கம். மருள் என்பன - ஒரு பொருட்சொற்கள்; அஃதாவது - இருவினைப்பயனும் மறுபிறப்பும் கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தன்மையனவாகவும் மாறுபடவுணர்தல். மெய்யுணர்வு - தத்துவஞானம்; அஃதாவது - இருவினைப் பயன்களையும் பிறப்பு வீடுகளையும் கடவுளின் சொரூபத்தையும் ஐயந்திரிபற உள்ளபடி உணர்தல். இம்மெய்யுணர்வு ஒருவர்க்குத் தோன்றிய மாத்திரத்தில் அவரிடம் முன்பு இருந்த அவித்யை தானேயொழியும் அத்தன்மையை, கார மேகங்களின் நெருக்கத்தா லுண்டாகியிருந்த பெரிய இருள் சரத்காலம் வந்த வளவீலே நீங்கிவிட்டதற்கு உவமைகூறினர். உவமையணி. "இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி, மாசற காட்சியவர்க்கு" என்ற திருக்குறள், இங்கு நோக்கத்தக்கது.

பேர்வினை - பண்புத்தொகை; வினைத்தொகையாகக் கொண்டு, (ஒன்றற்கு ஒன்று) மாறுபட்ட வினைகளென்றும், அழியுமியல்புள்ள வினைகளென்றும் உரைக்கலாம். 'பேய்வினை' என்ற பாடமோதி, பேய்போலப் பொல்லாதனவாகிய (இரு)வினைகளென்பாரு முளர்; நல்வினையும் உயிரைப்பந்தமுறுத்திப் பிறவிக்குக் காரணமாதலால், அதனையும் 'பேய்வினை' எனத்தகும். தத்துவஞானத்தின் வகைகளான கேள்வி விமரிசம் பாவனை என்ற மூன்றில், நல்லாசிரியரிடத்து உபதேசமாகக் கேட்ட பொருளைப் பிரமாணங்களைக் கொண்டும் யுக்தியைக்கொண்டும் தெளிய ஆராய்தலாகிய விமரிசத்தின் அமைதியை, 'ஆய்வினை' என்ற அடைமொழிகொண்டு விளக்கினர்; "ஓர்த்தல் - முடிதல். 'ஆசறு' என்ற பாடத்திற்கு, ஆசு உறு - எளிமையை யடைகின்ற என்ற பொருள்கொள்ளவேண்டும்; ஆசு - அற்பம்.

இச்செய்யுளில் இடையிரண்டடிகளில் ஆசிடையிட்ட எதுகையும், ஈற்றடியில் இனவெதுகையோடு வருக்கவெதுகையும் வந்தன. ஆசிடையிட்ட எதுகையாவது - எதுகைச்சொல்லின் முதலெழுத்திற்கும் இரண்டாமெழுத்திற்கும் இடையே யாலழ என்னும் மெய்யெழுத்துக்களுள் ஒன்றைப்பெற்று வருவது; 'ஆலேறு, பால்வேறு' என்றாற்போல இனவெதுகையாவது - வல்லினமும் மெல்லினமும் இடையினமுமாகிய மூவினங்களுள் ஓரினமெய்களில் ஒன்றற்கு ஒன்று எதுகையாய் வருவது; இங்கு, இடையினவெதுகை:

வகரத்திற்கு யகரம் வந்தது வருக்க வெதுகையாவது - உயிரெழுத்தக்ளுன் ஒன்றற்கு ஒன்று எதுகையாய் வருவது; இங்கு வகரத்தின்மேலுள்ள இகரத்திற்கு யகரத்தின்மேலுள்ள ஈகாரம் எதுகையாயிற்று. (கஅ)

[இடியும் மழையும் மின்னலும் இல்லையாதல்]

கஅக. மூளமர்தொலிவுறமுரசவிந்தபோற்
கோளமைகோண்முகில்குமுறலோவின
நீளடுகணெனத்துளியுநீங்கின
வாளுறையுற்றெனமறைந்தமின்னெலாம்.

(இ - ன்.) மூன் அமர் தொலிவுற - (வீரர்களுன் ஒருவரோடொருவர்) மாறுபட்டுச்செய்த போர் முடிந்தவனவிலே, முரசு அவிந்த போல் - போர்ப் பறைகள் (முழக்கப்படாது) ஒலியடங்கின போல, கோள் அமை கோண் முகில் - நீர்கொண்டிருக்குந் தன்மையொழிந்த வலிய மேகங்கள், குமுறல் ஓவின - இடிமுழங்குத லொழிந்தன; நீள் அடு கணை என - நீண்ட கொலை செய்யவல்ல அம்புகள் (போரொழிந்த வளவிலே எய்து சொரியப்படாத வாறு) போல, துளியும் நீங்கின - மழைத்துளிகளும் ஒழிந்தன; வாள் உறை உற்று என - (போரொழிந்த வளவிலே) வாளாயுதங்கள் உறையினுள்ளே (செருகப்பட்டு) மறைந்தாற்போல, மின் எலாம் மறைந்த - மின்னல்களெல்லாம் மறைந்தன; (எ - று.)

உவமையணி. 'மூளமர் தொலிவுற' என்பதை மூன்று வாக்கியங்களுக்குங் கூட்டுக. கோள் என்ற சொல் இரண்டனுள், முன்னது - கொள என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். அமைதல் - அடங்குதல். 'கணமுகில்' என்ற பாடத்திற்கு, முகில் கணம் - மேகங்களின் கூட்டமென்க.

'மூளமர் முற்றற,' மூளமர் முதலற,' 'குளிறலோவின' என்பன பிரதி பேதம். (கஅ)

[மலைநீர்ப் பெருக்குத் தணிதல்.]

கஅஎ. தடுத்ததாணெடுங்தடங்கிரிகடாழ்வரை
யடுத்தநீரொழிந்தனவருவிதூங்கின
வெடுத்தநூலுத்தரியத்தொடெய்திகின்
றுடுத்தவாணிறத்துகிலொழிந்தபோலுமே.

(இ - ன்.) தடுத்த - குறுக்கிட்டு வழிமறிக்கின்றனபோன்ற, தாள்-அடிப் பக்கங்களையுடைய, நெடுந் தடகிரிகள் - உயர்ந்த பெரிய மலைகள்,—தாழ் வரை அடுத்த நீர் ஒழிந்தன - தாழ்வரைகளைச் சார்ந்திருந்த நீர்வெள்ளங்க ளொழிந்தனவும், அருவி தூங்கின - அருவிகள் மாத்திரமே தணிந்துபெருகப் பெற்றனவுமாகி,—எடுத்த நூல் உத்தரியத்தோடு எய்தி நின்ற - தரித்த பூணூலாகிய உத்தரீயத்துடன் பொருந்தினின்று, உடுத்த வால் நிறம் பாலில் ஒழிந்த-அரையிலுடுத்த வெண்ணிறமான ஆடையொழிந்தவற்றை, போலும் - ஒக்கும்; (எ - று.)

இருகஸ்தாச்சிரமத்தவர் அரையிலுடுக்கும் ஆடைமேரடி தோளில் உத்தரீயத்தை உபவீதமாகதரித்தல் உண்டு; எப்பொழுதேனும் அந்த மேலாடை தரிக்கப்படாததனலாகுங் குற்றம் இல்லையாகுமாறு அவர்கள் தாம் இயல் பாகதரிக்கும் இரண்டு பூணூல்களுடன் உத்தரீயத்தின் பொருட்டென்ற ஒருபூணூலைச் சேர்த்துத் தரித்தலும் இயல்பாம். மலைகள், சுற்றிலும் எங்கும் தாழ்வரைகளைச் சார்ந்து நீர்வெள்ளங்கள் தங்கப்பெற்றபோது அரையில் ஆடையுடுத்தனபோலவும், மேலே அருவிகள் நிறைந்து பெருகப்பெற்ற போது பூணூல்களோடு உத்தரீயத்தையுந் தரித்தனபோலவு மிருந்தன; அவைதாம் இப்பொழுது மழை நின்றுவிட்டதனல் தாழ்வரையுடுத்த நீரொழிந்து அருவிகள்மாத்திரமே தனிந்து பெருகப் பெற்றனவாய், அரையில் ஆடையுடுத்தலின்றிப் பூணூலுத்தரீயந் தரித்த மாத்திரத்தோடு நின்றுற் போலும் என வருணித்தார்: தற்குறிப்பேற்றவணி. அடிமலையைப் பாத சைலமென்னும் வழக்குப்பற்றி, 'தான்' என்றார்; "வரைத்தான் வாழ்வேன்" என்ற சிலப்பதிகாரமும் காண்க. தாழ்வரை - மலையடிவாரம், மலையின் அடிப் பக்கம். உபமேயத்திற்கூறிய முறைக்கு மாறுக உபமானத்திற்கூறிய முறை, எதிர்நிரனிறைப் பொருள்கோளின் பாற்படும் 'தடித்தான்' என்ற பாடத நிறகு - பருத்த அடிப்பக்கமென்க. (கoஎ)

[ஆறுகள் நீர் குறைதல்.]

கoஅ. மேகமாமலைகளின்புறத்துவீதலான்
மாகயாறியாவையும்வாரியற்றன
வாகையாற்றகலிழந்தழிவினன்பொருள்
போகவாறெழுகலான்செல்வம்போன்றவே.

(இ - ன்.) மாதம் யாறு யாவையும் - திக்குகளையனாவிப்பெருகிய நதிக ளெல்லாம்,—மேகம் மா மலைகளின புறத்து வீதலால் - மேகங்கள் பெரிய மலைகளின் மேலிடத்தினினறு நீங்கி விட்டதனல், வாரி அற்றன-நீர்வருவா யொழிந்தன: ஆகையால்—, தகவு இழந்து - பெருமையொழிந்து,—அழிவு இல் நல் பொருள் போக - (பயன்கொடுத்தன்றி) அழிதலில்லாத நல்ல புண்ணியம் கழிந்து விட, ஆற ஒழுகலான - சனமார்க்கத்திற் செல்லாதவ னுடைய, செல்வம் - செல்வம் குறைவடைதலில, போன்ற-ஒத்தன; (எ - று.)

"கூத்தாட்டவைக்குழாததற்றே பெருஞ்செல்வம், போக்கு மதிவிளிக் தற்று" என்றபடி முற்பிறப்பில் ஒருவன் செய்த நல்வினை காரணமாக அவ னிடத்துச் செல்வம் பலவகையால் தானே வந்து கூடி அந்நல்வினை நீங்கிய பொழுதானும் குறையலாகும்; இங்ஙனம் காரணமான நல்வினை நீங்கிய பொழுது காரியமான செல்வமும் குறைவடைதலில, காரணமான மேகங் கள் மலைப்பக்கங்களே விட்டு நீங்கிய பொழுது காரியமான நதிகளும் நீர் குறைதற்கு உவமை கூறினர்; உவமையணி. அங்ஙனம் ஒருவன் முற் பிறப்பின் நல்வினைப் பயனுற செல்வமுடையனனு பொழுது மற்றும் நல் வினைகளையே தொடர்ச்சியாகச் செய்துவரின அச்செல்வம் இடையறாது

தொடர்தல் கூடும்: அங்ஙனஞ் செய்யாதவனது செல்வ மென்பது விளக்கு, ஆருழுகலான் செல்வம்' என்றார். ''வினைப்பகை வீயாது பின சென்ற டும்'', ''வீயா | அடம்பொடு நினை வுயிரு மில்லை'' என்ற விடங்களிலும், வீதல் - நீங்குதற் பொருளது. மாகம - நிக்கென்னும் பொருளதாதலை, ''மாக நீள் விசும்பிடை'' எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. தகவு - அழகுமாம். (கூசு)

[வானத்து மேகங்கள் நீங்கியவளவிற் சந்திரன் விளங்குதல்.]

கo கூ. கடந்திறந்தெழுகளிறனைய கார்முகில்
லிடந்திறந்தேகலிற்பொலிந்ததிந்துவு
நடந்திறனல்வுறுநங்கைமார்முகம்
படந்திறந்துருவலிற்பொலியும்பான்மைபோல்.

(இ - ள்.) கடம் திறந்து எழு களிறு அனைய - கன்னங்கள் திறந்து (அவற்றின் வழியாக மதநீர் சொரிந்து கொண்டு) புறப்படுகின்ற ஆண்யானை போப் போறிருந்த, கார் முகில் - காளமேகங்கள், இடம் திறந்து ஏகலின் - (தாம் அடர்ந்து கவிந்துகொண்டிருந்த) வானத்தினிடத்தைத் திறந்துவிட்டுக் கொண்டு விலகிச் சென்றதனால்,—இந்துவும் - சந்திர மண்டலமும்,—படம் திறந்து உருவலின் - (மறைவாக விட்டிருந்த) திரைச்சீலையை உருவித்திறந்து விட்டதனால், திறன் நடம் நவில்வுறு நங்கைமார் முகம் பொலியும் பான்மை போல் - பலவகையான நாட்டியத்தை யாடுகின்ற மகளிரது முகம் விளங்கும் விதம் போல, பொலிந்தது - விளங்கிற்று ; (எ - று.)

உருவுதிரையாக இட்டிருந்த சீலையைத் திறந்த வளவில் மறைவு நீங்க அரங்கில் நாட்டியமாடும் மாதரது முகமண்டலம் விளங்கினாற் போல, வானத்தைக் கருகிறமாய்க் கவிந்து கொண்டிருந்த மேகங்கள் விலகிய வளவில் மறைவு நீங்கச் சந்திரமண்டலம் விளங்கிற்று எனபதாம் ; உவமையணி. களிய பெரிய வடிவும், விரைந்த கதியும், முழக்கமும், மழைபொழிதலும் பற்றி, 'கடந்திறந்தெழுகளிறனைய கார்முகில்' எனறார். நங்கை - சிறந்த பெண், பெண் பாற் சிறப்புப்பெயர், மார் - பலர்பால் விகுதி. (கoக)

[வாடைக்காற்று வீசுதல்.]

கக o. பாசிழைமடந்தையர்பகட்டுவெம்முலை
பூசியசுகந்தனம்புழுகுகுங்கும
மூசினமுயங்குசேறுலரமொண்டுற
வீசியதுபொம்பொடிவிண்டுவாடையே.

(இ - ள்.) பாசு இழை மடந்தையர் - பசுமையான [பசும்பொன்னால் செய்த] ஆபரணங்களை யணிந்த மகளிருடைய, பகடு வெம் முலை - பெரியனவும் விருப்பந் தருவனவுமான தனங்களில், பூசிய—, சந்தனம் - சந்தனக்குழம்பும், புழுகு - கஸ்தூரிப்புழுகும், குங்குமம் - குங்குமப்பூவின் குழம்பும்,

மூசின - கலந்தனவாகிய, முயங்கு சேறு - குழைச்சேறு, உலர - உலரும் படி, வாடை - வாடைக்காற்றானது, நறும் பொடி - நறுமணமுள்ள (மலர்களின்) மகரந்தப் பொடிகளை, வீண்டு-(அம்மலர்களினின்று) வெளிப்படுத்தி, மொண்டு - கவர்ந்து, உற வீசிய - மிகுதியாக வீசிற்று; (எ - று.)

மகளிர்மார்பிலுள்ள சந்தனக்கலவைச்சேறு உலரும்படி வாடைக்காற்று மலர்களின மகரந்தப் பொடிகளை முகந்து வீசிற்று என்பதாம். "வெம்மை வேண்டல்" எனற தொல்காப்பியத்தால், வெம்மை யெனபது - வீருப் பத்தை யுணர்த்தும்போது உரிச்சொல்லாம். இனி, பகட்டு வெம் மூலை - (காண்பவர்க்கு) மினுக்கஞ் செய்வனவும் (காலவியல்பால்) வெப்பத்தையுடை யனவுமான தனங்க ளெனினுமாம். முயங்கு சேறு - தன்னில் அகப்பட்ட வரை எளிதில் மீளவொண்ணுதபடி தழுவுஞ் சேறு - எனக் குழைசேறும். மொண்டு, விண்டு—மொள், விள் - பகுதி. வீசிய - வீசியது எனபதன விகாரம். மாறி மாறி வெவ்வேறுக வீசுதல் பற்றி, வாடைகள வீசின வெனப் பண்மை கூறினருமாம். விண்டு - (மலர்களைத்) திறந்து எனறும், வெளிப் பட்டு என்றும், வாடை விண்டு எனற மாறி - வாடைக்காற்று எனறும் [விண்டு - காற்று], விண்டு வாடை - மலைக்காற்று என்றும் [விண்டு - மலை] பொருள் கொள்ளலாம். 'பூசின சந்தனம் புலராக் குங்கும, மூசிய முழுகு சேறுழிய மொண்டற, வீசின நறுமலர்', 'பூசிய சாந்தினைப் புலர்த்து குங் குமம்' என்பன பிரதிபேதம். (கசo)

[அன்னப்பறவைகள் வானத்திலேங்கும் பறந்து செல்லுதல்.]

ககக. மன்னவன்றலைமகன்வருத்தமாற்றுவா
னருநெறிப்பருவம்வந்தணுகிற்றுதலால்
பொன்னினைகாடியபோதுமென்பபோ
லன்னமுந்திசைதிசையகன்றவிண்ணின்வாய்.

(இ - ள்.) மன்னவன தலைமகன் வருத்தம் மாற்றுவான் - தசரதசக்கரவர்த்தியினது மூத்தகுமாரனை இராமபிரானுடைய வருத்தத்தை யொழித்தற்கு, அருநெறி பருவம் வந்து அணுகிற்று ஆதலால் - அப்பெருமான் கூறிய முறைமையிலுள்ள காலம் வந்து சேர்ந்த தாதலால், பொனனினை காடிய போதும - சீதாபிராட்டியைத் தேடும் பொருட்டுச் செல்வோம் யாம், என்ப போல் - என்று புறப்பட்டன போல,—அன்னமும் - அன்னப்பறவைகளும், விண்ணினவாய் - வானத்தில், திசைதிசை அகன்ற - திக்குகள்தோறும் (பறந்து) சென்றன; (எ - று.)

பெருமழைக்காலத்தில் ஒடுங்கிகிடந்த அன்னப்பறவைகள் அம்மழை நீங்கிய வளவிற ளெர்ச்சி கொண்டு மெழுந்து ஆகாயமார்க்கமாகப் பல விடங்களிலும் பறந்து செல்லுதல் இயல்பு; அதனை, 'மழைக்காலம் கழிந்தவுடன் சீதையைத் தேடும் முயற்சி செய்யக்கடவீர்' என்று முன்புஇராமபிரான் வாக்கு இட்ட கட்டளையை அநுசரித்து அன்னப்பறவைகளும் சீதையைத்

தேடும் பொருட்டுத் திசைதோறும் சென்றுற்போலு மென வருணித்தார். தற்குறிப்பேற்றவணி.

மன்னவன் - சக்கரவர்த்தித் திருமகனார். வருத்தம் - சீதா விரகத்தாலாயது. 'அந்நெறிப்பருவம்'என்றது, சரத்காலத்தினபிற்பகுதியை. பொன் - செல்வத்திற்கு உரிய தலேவி, இலக்குமி. இங்கு, அவளது திருவவ தாரமான சீதை. திசை திசை - அடுக்கு, தொறுப் பொருளது. அகன்ற - முற்று. 'நன்னெறிப் பருவமு நணுகிற் ருகலால்,' 'பொன்னினே காடியே போதும்' என்பன பாடபேதம். (ககக)

[நீர் தெளிதலும், மீன் பிறழ்தலும்.]

ககஉ. வஞ்சனைத் தீவினை மறந்தமாதவர்
நெஞ்சென நெளிந்தனநீரிரீர்தொறும்
பஞ்சென நிவக்குமென் பாதப் பேதைய
ரஞ்சனக்கண்ணெனப்பிறழ்ந்தவாடன் மீன்.

(இ - ன்.) நீரம் - நீர்நிலேகளிலுள்ள நீர்கள், வஞ்சனே தீவினே மறந்த மா தவர் நெஞ்சு என தெளிந்தன - வஞ்சனேக் கிடமான பாவச்செயல்களே யறியாத பெருந்தவமுடையராண முனிவர்களது மனம்போலத் தெளிவடை ந்தன; நீர்தொறும் - அந்நீரிலெல்லாம்,—ஆடல் மீன் - வினேயாடு மியல்பை யுடைய மீன்கள்,—பஞ்சு என நிவக்கும் மெல் பாதம் பேதையர் அஞ்சனம் கண் என பிறழ்ந்த - பஞ்சின்மேல் நடக்கவேண்டுமென்று சொன்னவளை விலே கன்றிச்சிவக்கும்படியான மென்மையாகிய பாதங்களேயுடைய மகளிர் தமது மையிட்ட கண்கள்போலப் பிறழ்ந்தன; (எ - று.)

முதல் வாக்கியத்தில், வஞ்சனேக்கிடமான பாவச்செயல்களேக் கனவி லும் அறியாத பெருந்தவமுடையராண முனிவர்களது மனம் ஐயங்கிரிபுகளா லும் பலவகைக் கவலேகளாலுமாகுங் கலக்கங்க ளினறித் தேர்ந்தஞானத்தா லும் தணிவிலுலும் தெளிந்திருத்தலே, மழையொழிந்தபின்பு நீர்நிலேகளில் நீர் கலக்கமின்றித் தெளிவடைதற்கு உவமைகூறினர். இரண்டாம் வாக்கி யத்தில், அத்தெளிந்தநீரிற் கயல்மீன்கள் பிறழ்தலுக்கு, மகளிர்கண்கள் பிறழ் தல் உவமை கூறப்பட்டது: உவமையணி; எதிர்நிலே யுவமையணி யெனி லும் இழுக்காது. பஞ்சென்று சொனன மாத்திரத்திலே அதன்மேல் நடத் தற்குக்கூசிக் கன்றிச்சிவக்கும் பாதங்களெனக் கால்களின் மென்மை மிகுதி யைக் குறித்தவாறும்; உயர்வுநவிற்சியணி: பஞ்சினும் மிகமென்மையான பாதமென்பது, தோற்றகருத்து. பேதையர் - "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்," "நண்ணரிவுடையோர் நூலொடுபழகினும், பெண்ணறிவென் பது பெரும் பேதைமைத்தே" என்றபடி மகடூஉக்குணமாகிய பேதைமை யையுடைய ரென்றபடி; பேதைமை - இளமையுமாம். நீர்க்குப் பண்மை கூறியது, நிலேவேறு பாடுகளாலாகிய பாகுபாடு பற்றியென்க. (ககக)

[தாமரைமலரும், செங்கிடையும்.

ககஉ. ஊடியமடந்தையர்வதனமொத்தன
தாடொகமலர்ந்தனமுதிர்ந்ததாமரை
கூடினர்துவரிதழ்க்கோலங்கொண்டன

(இ - ன்.) தான் தொக மலர்ந்தன - நாளத்திலே பொருந்த மலர்ந்தன வாய், முதிர்ந்த - காளடைலில் முதிர்ச்சிபெற்ற, தாமரை - செந்தாமரைமலர் கள், ஊடிய மடந்தையர் வதனம் ஒத்தன - (தலைவரோடு) பிணங்கிய மகளி ரது முகத்தைப் போன்றன [ஒருபுறமாகச் சாய்ந்தன என்றபடி]; சேடு உற நறு முகை விரிந்த - அழகுமிக்க நறுமணமுள்ள அரும்புகள் மலரப்பெற்ற, செம் கிடை - செங்கிடையென்னுஞ் செடிகள், கூடினர் அவர் இதழ் கோலம் கொண்டன - (தலைவரோடு) கலவிசெய்த மகளிரது சிவந்த வாயிதழ்களின் தோற்றத்தைக் கொண்டன; (எ - று.)

தலைவர்மீது ஊடல்கொண்டமகளிர் அவர்க்குமுகங்கொடாமல் 'தன்னை யான் முகத்தை நோக்கின் தான் முலைமுகத்தை நோக்கும்" என்றபடி கோபக்குறியாக முகத்தைச் சாய்த்துவைத்துக்கொள்ளுதல் இயல்பு. அங்ன னம் சிறிதுகோட்டிய மகளிர்முகங்களை, சிலநாள்களுக்குமுன்பு நாளத்திலே மலர்ந்து பின்பு முதிர்ந்து ஒருபுறத்தே சாய்கின்ற செந்தாமரை மலர்கட்கு உவமைகூறினர். கோலம் கொண்டன - கோலத்தை யொத்தனவென்றபடி; 'கொண்டன'என்பது - உவமவாசகமாய் நின்றது. கோலத்தைத் தம்மிடத்தே கொண்டன [தாம் உடையனவாயின] என்று பொருளுரைத்தாலும் கருத்து அதுவே. செங்கிடை - ஒருவகைக் கிடைச்சி [சிவப்புகெட்டி]; இது, நீரில் தோன்றுவது. இயற்கைச் செங்கிறத்தோடு தாம்பூலச் சிரித்தலு லாருஞ் செயற்கைச் செங்கிறமுஞ் சேர்தலாற் செங்கிறம் மிக்கிருக்கும் கிலேயில் மகளி ரது வாயிதழ்கட்குச் செங்கிடை ஒப்பாகாதென்னுங் கருத்தை யுட்கொண்டு, தலைவரோடு கூடியதனாற் செயற்கைச்செங்கிறம்நீங்கிய மகளிர்வாயிதழ்களோப் போன்றன செங்கிடை யென்றார். உவமையணி. இக்குவருணித்தற்கு எடுத் தக்கொண்ட இரண்டுபொருள்களுள், ஒன்றற்கு ஊடியமகளிர் சம்பந்தமாக வும், மற்றொன்றற்குக் கூடியமகளிர்சம்பந்தமாகவும் உவமைகூறினர்.

'தாடொறுமலர்ந்தன', 'சேடுறநறுமுகை' என்னும் பாடமுண்டு.'வாடிய மடந்தையர்,' 'தாடொறு மலர்ந்த காண்முதிர்ந்த' என்ற பிரதிபேதங்களும் காணப்படுகின்றன. (ககஉ)

[தவளைகள் தூலடங்குதல்.]

ககச. கல்லியிற்றிகழ்கணக்காயர்கம்பலீப்
பல்லிதச்சிறுகொணப்பகர்வபல்லரி
செல்லிடத்தல்லதொன்றுரைத்தல்செய்கலா
ஸ்லறிவாளரினவிர்தாவெலாம்.

(இ - ள்.) கல்வியின் நிகழ் - கல்விகற்றதனால் விளக்கம்பெற்ற, கணக் காயர் - சிறுபள்ளிக்கூடத்து உபாத்தியாயரின் கீழ், கம்பலை - ஆரவாரத் தோடு கல்விகற்கின்ற, பல் லிதம் சிறார் என - பலவகைப்பட்ட சிறுவர்கள் போல, பகர்வ - (மழைக்காலத்திற்) கத்திக்கொண் டிருந்தனவான, பல் அரி எலாம் - பலவகைப்பட்ட தவளைகள் யாவும்,—செல் இடத்து அல்லது ஒன்று உரைத்தல் செய்கலா நல் அறிவாளரின் - (தமது சொற்கள்) பலிக்கு மிடத் தல்லது மற்றையிடங்களில் ஒருசொல்லையுஞ் சொல்லுதல் செய்யாத நல்ல அறிவுடையவர்கள்போல, நா அவிந்த - (அத்தச்சரற்காலத்திலே மிகுதி யாகக்கத்தாமல்) வாயடங்கின; (எ - று.)

மழைக்காலத்தில் மிகுதியாகக்கத்துதலும், மழை பொழிந்தான காலத் தில் அங்ஙனங்கத்தாதிருத்தலும், தவளைகளியல்பு. அவைமிகுதியாகக்கத்திக் கொண்டிருந்த நிலைக்கு - தெருப்பள்ளிக்கூடங்கள்போன்ற சிறுபள்ளிகளிற் பெரும்பாலும் மூலபாடங்களையேகற்பிக்கும் ஆசிரியரின் கீழ்ப்படிந்து அவர் சொல்வனவற்றைத் தாம் அனைவரும் ஒருங்கே சொல்லிக் கல்வி பயிலுஞ் சிறுவரது பேரொலியையும், அத்தவளைகள் அங்ஙனம் எப்பொழுதுமே கத்து தலை யொழிந்து ஒவ்வொரு சமயத்தில் மாத்திரம் ஒலிசெய்து கொண்டு மற் றைச்சமயங்களி லெல்லாங் குரலடங்கி யிருந்த நிலைக்கு - கல்லறிவுடையோர் தமதுசொல்செல்லத்தக்க இடங்களில் மாத்திரமே சொற்களை உபயோகித்து மற்றையிடங்களில் யாதொன்றுஞ் சொல்லாமல் மௌனமா யிருத்தலையும் உவமை கூறினர். உவமையணி. செல்லுதல் - கேட்டு நன்கு மதித்து அதன்படி நடக்கப் பெறுதல். கணக்கு ஆயர் - கணக்கை ஆய்தலுடையவ ரென்க; கணக்கு - எண்ணும், எழுத்தும்.

கம்பலை - உரிச்சொல். சிறார் - சிறுமையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் பெயர். பல்வித்தச் சிறார் - பிராயம் வடிவம் சாதி குலம் நாடு முதலியவற்றுற் பலவேறுவகைப் பட்ட சிறுவர்; இங்குக் குறித்தது, பால சிக்ஷையாகக் கல்வி பயிலும் மாணக்கர்களே யென்க. பலபடி ஆரவாரித்தற் குக் கல்விபயிலுஞ்சிறுமையும், நாவடக்கத்துட னிருத்தற்குக் கல்வி நிரம்பிய நல்லறிவானமையும் ஒப்புமை கூறிய நயங் காண்க.

'செல்லிடத்து', 'நல்லுணர்வாளரின்' என்பன பிரதிபேதம். (கசு)

[மயில்கள் ஒடுங்குதல்]

கசுடு. தஞ்சிறைபொதிக்கினதழுவுமின்னல
கெஞ்சுறுபயனிலநிணைப்புறீண்டன
மஞ்சுறுநெடுமழைபிரிந்தமாமயி
லெஞ்சினமிகிலைநாட்டன்னமென்னவே.

(இ - ன்.) மஞ்சு உறு நெடு மழை பிரிந்த மா மயில் - மேகங்களினின்று பெய்த மிகுதியான மழை நீங்கப் பெற்ற அழகிய மயில்கள்,—தம் சிறை ஒடுக்கின - தமது சிறகுகளே [தோகைகளே] ஒடுக்கிக்கொண்டவையும், தழு வும் இன்னல - சேர்ந்த அன்பத்தையுடையவையும் [அன்பமூற்றவையும்]

செஞ்சு உறு பயன் இல - மனத்திற் பொருந்திய பயனில்லாதவையும் [யா தொரு பயனையும் மனத்தால் விரும்பாமல் வெறுப்புக் கொண்டவையும்], மீனப்பு நீண்டன - சிந்தை மிக்கவையுமாகி,—மிதிலை நாட்டு அன்னம் என்ன - மிதிலை நாட்டில் திருவவதரித்த ஜானகிப் பிராட்டி பேரில், எஞ்சின - ஒடுங்கின; (எ - று.)

அன்னம் - அன்னப்பறவை போன்றவள்; உவமையாகுபெயர்: மிதிலை நாடு - மிதிலாபுரியையுடைய நாடு; விதேகதேசம். மிதிலை - மிதிலா என்ற வடசொல்லின் விகாரம்; மிதியென்னும் அரசனு லமைக்கப் பட்டமை பற்றி வந்த காரணப் பெயர். 'மஞ்சுறுநெடுமழை பிரிந்த மாமயில் எஞ்சின' என்ப தற்கு - அழகு பொருந்திய பெரிய மேகங்கள் நீங்கி விட்டன வாதலால் அழகிய மயில்கள் ஒடுங்கின வென்றும் பதப்பொருள் கூறலாம்.

"மேகங்களினூல் விடப்பட்ட ஆகாயத்தைப் பார்த்துக் காடுகளில் ஆண் மயில்கள் தோகையாகிய ஆபரணம் ஒழிந்தனவும், தம்பேடைகளிடம் விருப்ப மற்றனவும், ஒளிகுறைந்தனவும், மகிழ்ச்சியற்றனவும், சிந்தை மிக்கனவு மாயின" என்றது, ஸ்ரீவால்மீகிராமாயணம்.

'தழுவுமின்னலி, னெஞ்சுறுமம்மரு நினைப்பு நீடின, மஞ்சுறு கெடு மழை பிரிதலான்மயி, லஞ்சின மிதிலை நாட்டன்ன மன்னவாய்' என்பது பிரதிபேதம். (சகடு)

[கடலும், நதிகளும்.]

சகசு. செறிபுனற்பூந்துகிறிரைக்கையாறறிரைத்
துறுதுணைக்கான்மடித்தெதாத்தவோதநீ
ரெறுழ்வலிக்கணவனையெய்திபாதெலா
முறுவலிக்கின்றனபோன்றமுத்தெலாம்.

(இ - ள்.) ஒதம் நீர் - கடல்நீர், திரை கையால் - (தனது) அலைகளாகிய கைகளினுல், செறி புனல் பூ அகில் - (நதிகளாகிய மாதரது) திரண்ட நீரா கிய அழகிய ஆடையை, திரைத்து - மடக்கிப்பிடித்து, உறு துணை - (இல் வாழ்க்கைக்கு) உற்ற துணையாகிய [மனைவியாகிய] அக்நதிகளே, கால் மடு த்து ஒத்த - (சேர்தலின் பொருட்டு) வலிய இழுத்தாற் போன்றதாக, யாறு எலாம் - அந்நதிகள் யாவும், எறுழ் வலி கணவனை எய்தி - மிக்க வலிமையை யுடைய அந்தத் தமது கணவனைத் தழுவி, முறுவலிக்கின்றன - புளகிப்புச் செய்கின்றவற்றை, முத்து எலாம் போன்ற - முத்துக்களெல்லாம் ஒத் தன; (எ - று.)

மழைக்காலத்தில் நதிகள் மிகுதியாகப் பெருகும் வெள்ளத்தால் தாமே கடலில்வீழ்ந்துருவிச் சென்றுபாயும்: மழைதணிந்த காலத்திலோ வெள்ளங் குறைதலால் தாமே கடலிற் சென்று சேராமாட்டாமற் கடலையடுத்து நிற்கும்: அக்காலத்தில் கடலினின் எழுகின்ற அலைகள் அந்நதிகளின் வழியாக எதி

சேறும் பொழுது நதிகட்குச் சமுத்திரசங்கம முண்டாகும். கடலில் ஸங்கம ஸ்தானங்களிற் சிப்பிகளினின்று முத்துக்களுண்டாதலும். அவை சரத்கால த்திற் கடலினலைகளாற் கொழிக்கப் பட்டுக் கடலோரத்தில் விளங்குதலும் இயல்பு. நதிகளாகிய மாதர்க்குக் கடலைக் கணவனென்றல் மரபு; 'நதிபதி' என்ற கடலின் பெயர் வழக்கைக் காண்க. கணவனது காதற் குறிப்பைக் கண்ட விடத்து மாதர் சிரிப்பை அகத்தில் அடக்க மாட்டாமற் புன் சிரிப்புச் செய்வர். சிரிக்குங்காலத்துப் பற்கள் சிறிது வெளித்தோன்றும், பற்களுக்கு முத்து - வடிவிலும் வெண்ணிறத்திலும் ஒளியிலும் உவமையாம். இவ்வள வும், இவ்வர்ணனைக்கு மூலம். கடலாகிய கணவன் தனது அலைகளாகிய கை களால் நதிகளாகிய தமது வாழ்க்கைத்துணைவியரின் நீராகிய ஆடையைப் பிடித்துக் கலவியின்பொருட்டு வலிய இழுத்தாற் போன்றதாக, அந்நதிகளா கிய பெண்கள் அக்குறிப்பின்படி அக்கடலாகிய கணவனைத் தழுவி அக்கண வன் செயலைக் குறித்துப் புன்சிரிப்புச் செய்ய, அப்பொழுது சிறிது வெளித் தோன்றிய அம்மாதரது பற்கள் விளங்கினாற் போல, முத்துக்கள் பிரகாசித் தன எனக் கருத்து உணர்க. நற்குறிப்பேற்றவணி. ("மேகலை செறிந்த லோடும், நல்லெழில் கனிந்த கோதை நகையுனத்தடக்கலாற்றான், முல்லை மென்முகையு ணாண வரும்பிய முறுவல் பூத்தான்" என்னும் கைடதம் முதலி யன ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கன.) இனி, இச்செய்யுளின் முன்னிரண் டடிகட்கு வேறுரை கூறுவரேனும் பொருத்தமாயிற் கொள்க; (அப்பொ ருள் சரத்கால வர்ணனைக்கு ஏற்குமா வென்பது கருதற்பாலது)

செறி புனல் - (நதிகளிடத்துப்) பொருந்திய நீர் என்றும், பூந் தகில் - பூப்போல் மெல்லிய ஆடை யென்றுங் கொள்ளலாம். உறு தினை - ஏற்ற தினை. எறுழ் - வலிமையுணர்த்தும் உரிச்சொல். எறுழ் வலி - ஒருபொருட் பன்மொழி.

'உறுதகக்கான்மடுத்தோடியோதநீர்' என்பது பிரதிபேதம். (ககக)

[பாக்குக்குலைகள் முதிர்ந்து பழுத்தல்.]

ககள. சொன்னிறைகேள்வியிற்றொடர்ந்தமாந்தரி
னின்னிறப்பசலையுற்றிருந்தமாதரிற்
றன்னிறம்பயப்பயநீங்கித்தள்ளரும்
பொன்னிறம்பொருந்தினபூகந்தாறெலாம்.

(இ - ன்.) சொல் நிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தரின் - சொற் கள் நிறைந்த நூற்கேள்விகளைக் கேட்டலில் இடைவிடாத மனிதர்கள் போல வும்,—இன் பசலை நிறம் உற்று இருந்த மாதரின் - இனிமையான பசலை நிறத்தை யடைந்திருந்த மகளிர் போலவும்,—பூகம் தாறு எலாம் - பாக்குமரத் தின் குலைகளெல்லாம், தன் நிறம் பய பய நீங்கி - தமதுநிறம் மெல்ல மெல்ல நீங்கப்பெற்று, தள் அரும் பொன் நிறம் பொருந்தின - இழை

வொண்ணுதல் [விரும்பத்தக்கதும் கொண்டாடத் தக்கதுமான்] பொன்னிறத் தையடைந்தன; (எ - று.)

பாக்குமரத்தின் குலைகள், இளமையா யிருக்கும்போது பசுமைநிறம்மாறி, பழுக்குமளவிற் பொன்னிறமடையும்: அதற்கு, ஞான அநுட்டானங்களையுடைய கல்லாசிரி யர்பக்கல் நூற்பொருள்களை உபதேசமுகத்தாற் பலகாலுங்கேட்டுப் பயின் றவர் காளடையில் அஜ்ஞானவிருள்நீங்கி ஞானவொளிபெறுதலையும், ஆசை கோயுற்ற மகளிர் தமது இயற்கைநிறம் மாறிப் பொன்னிறமான பசலையை யடைதலையும் உவமைகூறினர். உவமையணி. பசலையாவது - தலைவரைக் கூடப்பெறாத நிலையிற் காதல்மிகுதியால் வருவதொரு நிறவேறுபாடு. அது பொன்னிற முடைமையை, "பொன்தெளித் தெழுதியன்ன பூம்புறப்பசலை மூழ்கி" என்னுஞ் சிந்தாமணியாலும் உணர்க. சொல் நிறை கேள்வி - புகழ் நிறைந்த நூற்கேள்வி யெனினுமாம். கேள்வியின் சிறப்பை, திருக்குறளில் 'கேள்வி' என்னும் அதிகாரமுழுவதிலுங் காணலாம், தத்துவஞானத்திற்கு முதலுபாய மாதலால், இது எடுத்துக் கூறப்பட்டது. 'தாறெலாம் பொருந் தின' என்றதற்கு ஏற்ப 'தம் நிறம்' என்னாது, 'தனிநிறம' என்றது, பன்மை யொருமைமயக்கம்: 'தங்நிறம்' என்பதும் பாடம். பயப்பய - பையப்பைய என்றதன் போலி; அடுக்கு, காலக்கிரமத்தில் லென்பதைக் காட்டும். தன்னு ரும் - நீக்கமுடியாத எனினுமாம். பூகம் - வடசொல்.

இனி, முன்னிரண்டடிகட்கு - புகழ் நிறைந்த நூற்கேள்வியின் பொரு ட்டு கல்லாசிரிய நிருக்கின்ற இடத்தை நோக்கி வேற்றுநாட்டுக்குப் பிரிந்து சென்ற தலைவரால் இனிய பசலை நிறத்தை யடைந்த மாதர்போல என்று உரைப்பாரு முளர். ஞானம் காரணமாகத் தமது கொழுநர் தம்மைப்பிரிந்து வேறிடஞ்செல்ல அப்பிரிவாற்றுமையாற் பசலைநிறைமடைந்தமகளிரென்க. அறவகைப் பிரிவினுள் ஒதற்பிரிவாகிய இது முதலதாதலாலும், உயர் தோர்க்கு உரியதாதலாலும், எடுத்துக் கூறப்பட்ட தென்க.

'தொடர்ந்த மைந்தரால்' என்பது பிரதிபேதம். (கசஎ)

[முதலிகள் வெயிலில் உறங்குதல்.]

கசஅ. பயின்றுடல்குளிர்ப்பவும்பழனநீத்தவ
ணியன்றிலவிளவெயிலெழுதுமெய்யன
வயின்றொறும்வயின்றொறுமடித்தவாயன
தயின்றனவிடங்கர்மாத்தடங்கடோறுமே.

(இ - ன்.) இடங்கர் மா - முதலைகளாகிய விலங்குகள்;—பயின்று - (தாம் கெடுநாளாக மிக்க நீரில்) வாழ்ந்தமைபற்றி, உடல் குளிர்ப்பவும் உடம் புகுளிரப்பெற்றதனாலே, பழனம் நீத்த அவண் இயன்றில - வயல்களும்

நீர்நிலைகளுமாகிய அவ்விடங்களில் [தமக்கு உரியவிடங்களில்] வசிக்காமல், இள வெயில் எழுதும் மெய்யன - இளமையான சூரியகிரணம் உடம்பின் மேல் எழுதினாற்போலப் படியப்பெற்ற உடம்பையுடையவையாக, தடங்கள் தோறும் - (நீர் நிலைகளின்) கரைகளி லெல்லாம், வயின் தொறும் வயின் தொறும் - பற்பலவிடங்களில், மடித்த வாயன துயின்றன - வாயை மூடிக் கொண்டு இனிமையாய்த் தூங்கின; (எ - று.)

பெருமழைக் காலத்தில் நீரிலேமுழுகிக்கிடந்த முதலைகள் குளிர் மிக்க மைபற்றி இப்பொழுது இளவெயில்காயக் கரையிலே கிடக்கின்றனவென்க. பயின்று உடல்குளிர்ப்ப - மிகுதியாய் உடமபுகுளிர வெனினுமாம். குளிர்ப்பவும்; உம்மை - அசைநிலை. 'குளிர்ப்பவண்பழனம்' என்ற பாடமும் எற்கும். பழனம் நீத்தி - உம்மைத்தொகை. நீத்தி - பெயர்; நீர்த்தப்படுவது என நீர் நிலைகளுக் காரணக்குறி. குளம் எரி மடு முதலிய நீர்நிலைகளிற் போலவே கழனிகளிலும் மழைவளத்தால் நீர்மிக்கிருந்தமை தோன்ற, நீர்நிலைகளோடு பழனத்தையுங் கூட்டினர். முதலை நீர்வாழுயிராதல்பற்றி, பழனதையும் நீத்தையும் 'அவண்' எனச் சுட்டினர்

'கெய்தற்கு மா - சுறவும், முதலையும்' எனவும், இடையஞராகப் பொரு ளுரையில் கக்கீரர்; அதனை மறுத்து 'முதலையும் சுறவும் மீனுதலின், மா வெனறல் மரபன்று' என்றனர் தொல்காப்பியப் பொருளதிகார வுரையில் நச்சினர்கினியர் அங்ஙனமே 'இனி' முதலையும் சுறவும் மா வென்பர்; " கெண்டையஞ்சினை மேய்ந்து கிளர்ந்து போய், முண்டகத்துறை சேர்ந்த முதலைமா, வண்டல் வார்கரை மாமகரக்குழாங், கண்டு கினறு கனலுங் கழி யெலாம்" எனக்காட்டுவா ருளராயினும், அவை மீனெனப் படுவவல்லது மாவெனப்படா' எனபா சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லார். உய்த்து கோக்குமிடத்து, தேவர் மனிதர் விலங்கு புள் ஊர்வன நீரவாழ்வன தாவரம் எனனும் எழுபிறப்பினுட் புள்முதலியன தேவர் மக்கள் விலங்கு நரகர் எனனும நால்வகைக்கதிகளுள் விலங்குகதியில் அடங்குதலால், 'அசு ணமா' எனபதுபோல 'இடங்கர்மா' எனபதும் தகுமெனக. "போழ்ந்தமா கிடங்கிடைகிடந்த பொங்கிடங்கர்மா", "சேரவொன்றையொன்று மூன் தொடர்ந்து சீறிடகர்மா" எனனூர் பாலகாண்டத்திலும். இனி, மா - பெரிய என, தடத்திறகு அடைமொழியாகவுமாம்.

மூன்றுமடி. முற்றுமோனை. 'இயன்றன வினவெயிலேய்ந்த மெய்யன' என்பது பிரதிபேதம். (கசஅ)

[வஞ்சிக் கொடிகள் செழித்தல்.]

கசக. கொஞ்சுறங்கிளிகெடுங்குதலைகூடின
வஞ்சிறையபுபதவளகவோளிய
வெஞ்சலில்குழையனவிடை றுங்குவ
வஞ்சிகள்பொலிந்தனமகளிர்மானவே,

(இ - ன்.) வஞ்சிகள் - வஞ்சிக்கொடிகள்,—கொஞ்சும் கிளி கெடுத் குதலை கூடின - கொஞ்சிப்பேசுகின்ற கிளிகளின் மிகுதியான மழலைச்சொற் கள் தம்மிடத்தே பொருந்தப் பெற்றவையும் [கிளி கொஞ்சுவதுபோன்ற நிறைந்த மழலைச்சொற்கள் பொருந்தியவையும்], அம் சிறை அறு பதம் அளகம் ஒளிய - (தம்மிடத்தே மொய்க்கின்ற) அழகிய இறகுகளையுடைய கண்டுக ளாகிய கூந்தலின் ஒழுங்கை யுடையவையும், எஞ்சல் இல் குழையன - குறை வில்லாத தளிர்களை யுடையவையும் [ஒளியிலும் வீசியிலுங் குறைவில்லாத குழையென்னுங் காதணியை யுடையவையும்], இடைறடங்குவ - இடை போல ஒல்கி ஒசிவனவும் [இடை ஒல்கி ஒசியப்பெற்றனவும்] ஆகி, மகளிர் மான - மாதர்கள்போல, பொலிந்தன - விளங்கின; (எ - று.)

இரண்டாமடியில் உருவகத்தையும், முதலடி மூன்றுமடிகளிற் கெம் மொழிச்சிலேடையையும் அங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. வஞ்சி கட்குச் சேரும்போது, முதலடிக்கு - கிளிகள் கொஞ்சிப் பேசிக்கொண்டு தம்மைச் சார்ந்திருக்கப்பெற்றவை யென்பது கருத்து. குதலை - நிரம்பாமென் சொல். மகளிர்க்கு மதலை எப்பருவத்திற்குங் கூறப்படும். அறுபதம் - ஆறு கால்களை யுடையதெனப் பொருள்படுங் காரணக்குறி; பண்புத்தொகை யன் மொழி. 'மகளிர் மாலைபோல்' என்பது பாடாந்தரம். (ககக)

[நத்தைகள் சேற்றில் மறைதல்.]

கஉ0. அளித்தன முத்தினந்தோற்பமானஞர்
வெளித்தெதிர்விழிக்கவும்வெள்கிமேன்மையா
லொளித்தனவாமெனவொடுங்குகண்ணன
குளித்தனமண்ணிடைக்கூனைநத்தெலாம்.

(இ - ன்.) கூனல் நத்து எலாம் - முதுகுவளைவையுடைய நத்தைகளெல் லாம்,—அளித்தன முத்தினம் தோற்பதாம் - சிறந்தவையான முத்துக்கள் (மகளிர்பற்களுக்கு ஒப்பாகாமல்) தோல்வியடைந்துவிட்டதனால், மான் அஞர் எதிர் வெளித்தன விழிக்கவும் வெள்கி - (பராவையழகில்) மான போன்றவர்க ளான அம்மாதரது எதிரில் தாம் வெளிப்பட்டு (அவர்களைப்) பார்ப்பதற்கும் நாணமுற்று, மேன்மையால் ஒளித்தன ஆம் என - (தமது) மேன்மையான இயல்பினால் ஒளித்து விட்டன போல,—ஒடுங்கு கண்ணன - ஒடுங்கிய கண்களை யுடையவையாய், மண்ணிடை குளித்தன - சேற்றில் மூழ்கின; (எ - று.)—ஆம் - அசை.

நத்தைகள் காலவியல்பினால் மண்ணில் மறைக்கதற்கு, தமது மகளாகிய முத்துக்கள் அங்குள்ள மாதரது பற்களுக்குத் தோற்றதனால் அம்மகளிரெதி ரில் தாம் நின்று புலனுவதற்கு நாணி யொளிப்பனபோல வெனக் காரணம் கற்பித்துக் கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. முத்துப்பிறக்கு மிடத்தை ரிருபதில் நத்தையும் ஒன்றுதலை, "தந்திவராகமருப்பிப்பி" என்ற தொடர் தத்துச் செய்யுளில் 'நத்து சலஞ்சலம்" என்றதனாலு முணர்க. இங்கு 'மேன்

மை' என்றது, மானத்தில் தோக்கம் வைத்தலை. 'மென்மையால்' என்ற பாடத்திற்கு - மெல்ல வென்று பொருளாம். உம்மை - இழிவு சிறப்பு. இரண்டாமடி - முற்றுமோனை.

"அளித்தனமுத்தினைத் தோற்றமானவை, நிளிக்கெதிர் விழிக்கலமென்று வெள்கியே, யொளித்தனவாமென வோங்குநீரிடைக், குளித்தன வானிறக் கூனகந்தெலாம்" என்றும பாடமுண்டு; அதன் பொருள் வருமாறு:—வால் நிறம் - வெண்ணிறமுள்ள, கூன - வளைவையுடைய, நத்தை எலாம் - சங்குகளெல்லாம், 'அளித்தன முத்த இனம் தோற்ற - (யாம்) ஈன்றனவான முத்துக்கள், [மகளிர் பற்களுக்குத்] தோற்று விட்டன வாதலால், மான் அஞ்சர் இளிக்கு எதிர் விழிக்கலம் - அம்மகளிரது அவமதிச்சிரிப்பிற்கு இலக்காக அவர் முன் நிற்கக்கடவோ மல்லோம்', என்று - என்று எண்ணி, வெள்கி - வெட்கங்கொண்டு, ஒளித்தன ஆம் என - ஒளித்திட்டன போல, ஒங்கு நீரிடை குளித்தன - உயர்ந்து தெழுந்து அலைசுகின்ற நீரில் மூழ்கின எனக் காண்க. (கூ0)

[நண்டுகள் வளைகளிற் புகுதல்.]

கூக. மழைபடப் பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேரிலைப் புரையிற் றங்குவ
விழைபடு பெடையொடு மெள்ளி னள்ளிகள்
புழையடைத் தொடுங்கின வச்சை மாக்கள்போல்.

(இ - ன்.) மழை பட பொதுளிய - மழைபெய்ததனைத் செழித்த, மருதம் தாமரை - மருதநிலத்திலுள்ள தாமரைக்கொடிகள், தழைபட - தங்கு வளர, பேர் இலை புரையில் தங்குவ - (அவற்றினது) பெரிய இலையின் கீழ்த் தங்கு வனவான, எள் இல் நள்ளிகள் - பழிப்பிற்கு இடமில்லாத [குற்றமற்ற] (ஆண்) நண்டுகள்,—இழைபடு பெடையொடும் - (தம்மோடு) கூடிய பெண் நண்டுகளுடனே,—அச்சை மாக்கள் போல் - லோபிகள் போல, புழை அடைத்து ஒடுங்கின - தமது வளையின் வாயிலை(ச் சேற்றால்) அடைத்துக் கொண்டு அதனுள்ளே சேர்ந்தன; (எ - று.)

யாசகர் வீருக்கினர் சுற்றத்தார் என்னும் இவரது வரவுக்கு அஞ்சி லோபிகள் வீட்டுவாயிற் கதவை யடைத்து உள்ளே தாளிட்டுக் கொண்டு தாமும் தம்மனைவியருமாக அகத்தில் வாழ்வர்; அவர்களை, ஆண் நண்டுகள் தமது பேடைகளுடனே தமது வளையினுட் செல்லும்போது அதன் வாயைச் சேற்றால் அடைத்துக் கொண்டு உள்ளே புக்கு வசித்தற்கு உவமை கூறினர்; உவமையணி.

இனி, இச்செய்யுட்கு வேறும் ஒருரை வருமாறு:—எள் இல் நள்ளிகள்- இழுப்படாத ஆண்நண்டுகள், புழை அடைத்து, ஒடுங்கின வச்சைமாக்கள் போல் - தமது வீட்டு வாயிற்கதவை யடைத்துக் கொண்டு உள்ளே பதுங்கி

வெக்கும் லோபிகன் போல, மழை பட பொதுளிய மருதம் தாமரை தழை பட பேர் இலை புரையில் - மழைபெய்தலால் ஒடுங்கிக் கிடந்த மருத நிலத் தத் தாமரைக் கொடிகள் பின்பு தழைக்க (அவற்றின்) பேரிலைச்சுருளி னுள்ளே, இழை படு பெடையொடும் தங்குவ - தம்மைச் சேர்ந்த பெடை யுடன் தங்குவன வாயின எனக் காண்க.

பெடை - பெண்மைப்பெயர்; இது, பறவைகட்கன்றிப் பிறவற்றிற்குச் சிறபான்மையுருதலை, தொல்காப்பியத்து மரபியலில் "பேடையும் பெடையு நாடி ஞென்றும்" என்ற சூத்திரத்தில், 'நாடின்' என்ற மிகை கொண்டு அமைக்க. யாதொரு தீங்குஞ் செய்யாத தென்பார், 'எள்ளில்' என்ற அடை மொழி கொடுத்தார். முன்னர், 'பெடை' என வந்ததனால், 'கள்ளி' என் னும் கண்டின் பொதுப்பெயர் கண்டின் ஆண்மேல் நின்றது. பகுத்தறி வில்லாத விலங்கு போன்ற மனித ரென்ற இழிவு விளங்க, 'வச்சை மாக் கள்' என்றார். விழைபடு என்ற பிரித்து விரும்பிய வென்று பொருளுரைத் தல், மோனைத் தொடைக்குச் சிறவாது. மருதத் தாமரை - நீர்வளத்தாற் கழனிகளிலுள்ள தாமரை யென்க.

'புரையுட்டங்குவ,' 'விழைவுடைப்பெடையொடும் வெள்ள கள்ளிகள்', 'இழைபடப்பெடையொடும்' என்பன பிரதிபேதம். (கூக)

கார்ப்பருவம், கூதிர்ப்பருவம் என்ற இருவகைப் பருவங்களின் வரு ணனை இப்படலத்தில் விரித்துரைக்கப்பட்டது; பெருங்காப்பிய விலக்கணங் களுட் பருவவருணனை ஒன்றுத லுணர்க.

கார்காலப்படலம் முற்றிற்று.

எட்டாவது
கிட்கிந்தைப் படலம்.

கிஷ்கிந்தா பட்டணத்தில் நடந்த செய்திகளைக் கூறும் பாகம். மழைக் காலம் கழிந்தவளவிலும், முன்பு சொன்னபடி சுக்கிரீவன் சேனைகளுடன் வந்திலனாக, இராமபிரான் கோபங்கொண்டு, கிஷ்கிந்தைக்குச் சென்று செய்தியறிந்து வரும்படி இலக்குமணனை யனுப்பியதும், அவ்விளைய பெருமான் சென்றது முதலாகச் சுக்கிரீவன் இராமபிரானிடம் வந்து சமாதானங் கூறியது ஈறாக நிகழ்ந்த செய்திகளும், இப்படலத்தில் விரித்து உரைக்கப் படுகின்றன.

[சொன்படி சுக்கிரீவன் வந்திலனென்பதுபற்றி இராமபிரான் சினந்து சில வீரவார்த்தைகள்கூறி இலக்குமணனைக் கிட்கிந்தைக்கு அனுப்புதலை இதுமுதல் எட்டுக்கவிகளிற் கூறுகின்றார்.]

அனை காலமு கலும ளவினின்
முன்னை வீரனி ளவலை மொய்ம்பினெய்
சொன்ன வெல்லையி னூங்குமத் தூங்கிய
மன்னன் வந்தில னென்செய்த வாறோ.

இது முதல் எட்டுக்கவிகள் - குளகம்.

(இ - ன்.) *அன்ன காலம் அகலும் அளவினில்*-அத்தன்மையதான சரத் காலங் கழியுமளவில்,—*முன்னை வீரன்* - மூத்தவனும் வீரனுமாகிய இராம பிரான்,—*இளவலை* - தம்பியான இலக்குமணனை நோக்கி,—*மொய்ம்பினெய்* - வலிமையையுடையவனே! *சொன்ன எல்லையின் ஊங்கும்* - (முன்பு தான்) சொன்ன தாங்குமாதத்தவணை கழிந்ததன்மேலும், *தூங்கிய அமன்னன்* - ஜாக்கிரதையின்றியிருந்த அச்சுக்கிரீவமகாராஜன், *வந்திலன்* - இங்கு வந்தானில்லை; *செய்த ஆறு என்* - (அவன்) செய்த விதம் யாதாயிருந்தது! (எ - று.)—*அரோ* - ஈற்றசை.

இச்செய்யுளில் '*அகலுமளவினில்*', '*முன்னைவீரன்*', '*இளவலை*' என்றவை மேல் எட்டாஞ்செய்யுளில் '*என்றான்*' என்பதனோடு தொடர்ந்து முடியும். '*சொன்ன வெல்லையி னூங்கும்*' என்றதை '*தூங்கிய*' என்பதனோடும், '*வந்திலன்*' என்பதனோடும் இயைக்கலாம். *முன்னை* - முன் பிறந்தவன்;, தமையன்; *ஐ* - பெயர்விகுதி. இனி, *முன்னை வீரன்* - எல்லா வீரருள்ளும் முதன்மைபெற்ற வீரனெனினுமாம். *மொய்ம்பினெய்* என்பதற்கு - தோள் வலிமை யுடையவனே யென்று பொருள் கொள்ளலுமாம்; இவ்வுரையில், மொய்ம்பு என்பதற்கு - தோளென்றும் வலிமையென்றும் பொருளுள்ளதனால், அதனை '*மொய்ம்பின் மொய்ம்பினெய்*' என ஆவ்ருத்திசெய்துகொள்ள வேண்டும். *தூங்குதல்* - காரியத்திற் கருத்தின்றியிருத்தல். தனது சொல்லை அவன் உபசேஷித்ததும், அவன்தான் சொன்னசொற்படி நடவாமற் பொய்த்த

அம், செய்ந்நன்றி மறந்ததாகிய தருதியில் செயல்களைப்பற்றிய வருத்தத தால் 'என்செய்தவாறு' என்றான். அரசாட்சி பெற்றதனாலாகிய களிப் பினால் தன்னையும் தனக்கு உதவிசெய்த நம்மையும் மறந்து இங்ஙனமாயின னென்னுங்கருத்தி அமைய, 'மன்னன்' என்றான்; இங்ஙனம் இவ்வீசேஷ் யம் ஒரு கருத்தை உட்கொள்ளுதலால், கருத்துடை யடைகோளியணி ஊங்கு - இடைச்சொல் 'மூன்றினும்', 'என்செய்யு மாறரோ' என்பன பிரதிபேதம்.

இதுமுதல் சுசு - கவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத் தங்கள். (க)

உ. பெறலருந் திருப்பெற்றுதவிப்பெருக்
திறனினோர்நிலன்சீர்மையிற்றீர்ந்தன
னறமறந்தனனன்புகிடக்கநம்
மறனறிந்திலன்வாழ்வின்மயங்கினன்.

(இ - ன்.) (அச்சுக்ரீவன்), பெறல் அருந் திரு பெற்ற - பெறுதற்கரு மையான அரசாட்சிச் செல்வத்தை (கம்மாற்) பெற்று, உதவி பெருக் திறன் னினோர்நிலன் - (தனக்கு நாம் செய்த) அவ்வுபகாரத்தின் பெருமையைக் கரு தினுளில்லை; (ஆகவே), சீர்மையின் தீர்ந்தனன் - சிறந்த ஒழுக்கத்தினின்று நீங்கிவிட்டான்; அறம் மறந்தனன் - (தனக்கு உதவிசெய்தவர்க்கு எதிருதவி செய்வதாகிய) தருமத்தை மறந்துவிட்டவனை அவன், அன்பு கிடக்க நம் மறன் அறிந்திலன் - (நாம் அவன் பக்கல் செய்த) அன்பை மறந்தது இருக் கட்டும் நமது பல பராக்கிரமங்களையும் ஞாபகத்திற் கொண்டானில்லை; வாழ் வின் மயங்கினன் - (அரசாட்சிபெற்று இன்புற்ற) வாழும் வாழ்க்கையில் அமிழ்ந்து கிடக்கின்றான்; (எ - று.)

பெருக்கிறன் - பெருமைக்குணம். உதவிப்பெருக்கினை "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமுமாற்றலரிது", "காலத்தினாற் செய்த னன்றி கிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" எனக் காண்க. "எத் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பவாதலால், 'சீர்மையிற்றீர்ந்தனன்' என்றார். அறம் - "னறி மறப்பது நன்றன்று" என்பது; மறன் - வல்லமை. வாழ்வின் மயங்கினன் - (தான் பெற்ற) வாழ்வினால் அறிவுகெட்டான் எனினுமாம். வாலியினின்று மீட்டுப் பெறுதற்கரிய ருமையென்னும் மனைவியைப் பெற்றமையும் 'பெற லருந் திருப்பெற்று' என்றதில் அடங்கும்.

'உதவப்பெறற்கிறம்' என்று பாடமோதுவாரு முளர்; அதற்கு - (நாம் உதவியதனால்) பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்றப் (பின்பு) தான்பெற்ற வழியை நினைத்தில னென்பது பொருள். (உ)

கூ. நன்றிகொன்றருநட்பினைகாரறுத்
தொன்றுமெய்ம்மைசிதைத்துரைபொய்த்துளாற்
கொன்றுநீக்குதல்குற்றத்தினீங்குமாற்
சென்றுமற்றவன்சிந்தையைத்தேர்குவாய்.

(இ - ன்.) (இவ்வாறு), நன்றி கொன்று - (தனக்கு ஒருவன் செய்த) நன்றியைச் சிதைத்து [தான் பெற்ற உதவிக்குக் கைம்மாறு செய்யாமல் அதனை மறத்துவிட்டு], அரு நட்பினை கார் அறுத்து - அருமையாகக்கொண்ட நேசத்தைப் பந்தமற ஒழித்து, ஒன்றும் மெய்ம்மை சிதைத்து உரை பொய்த்தனால் - (யாவர்க்கும்) எற்றதான சத்தியத்தை யழித்துப் பேச்சுத்தவறிய வினை, கொன்று நீக்குதல் - கொன்றொழித்தல், குற்றத்தின் நீங்கும் - பழி பாவங்களினின்று நீங்கிய செயலேயாம்; ஆல் - ஆதலால், சென்று அவன் சிந்தையை தேர்குவாய் - (அச்சுக்ரீவனைத் தண்டித்தற்பொருட்டு நீ) போய் அவனது மனநிலையை அறிந்து வருவாய்; (எ - று.)—மற்று - வினைமாற்று; அசையுமாம்.

கார் - கயிறு; இங்கே, அன்பிலுலாகும் பாசபந்தத்தை யுணர்த்திற்று. நட்பினை காரறுத்து - நட்பைப்பற்றறவிட்டு; "நட்பு காரற்றன" என்றார் காலடியாரிலும். நீக்குதல் - இவ்வுலகத்தில் இல்லாதபடி செய்தல்.

'நட்பினைகாரறுத்து', 'பொய்த்தனோர்க்கொன்று' என்பனபிரதிபேதம்.

சு. வெம்புகண்டகர்விண்புகவோரறுத்
திம்பர்நல்லறஞ்செய்யவெடுத்தசிற்
கொம்புமுண்டருங்கூற்றமுமுண்டுங்க
ளம்புமுண்டென்றுசொல்லுநம்மாணையே.

(இ - ன்.) வெம் புகண்டகர் விண் புக வோர் அறுத்து - உக்கிரங்கொண்ட கோடியவர்கள் போரிலிறந்து [வீரசுவர்க்கமடையும்படி (அவர்களைப்) பற்றற அழித்து, இம்பர் நல் அறம் செய்ய - (இவ்வுலகத்தில்) நல்லதருமத்தை நிலை நிறுத்துதற்பொருட்டு, எடுத்த - (காம்) ஏந்திய, வில் கொம்பும் - வில்லும், உண்டு - இருக்கின்றது; அருங் கூற்றமும் உண்டு - (எவராலுந்தடுத்தற்கு) அரிய யமனும் இருக்கின்றான்; உங்கள் அம்பும் உண்டு - (வாகரவீரர்களாகிய) உங்களையுங்கொல்லவல்ல அம்பும் (நம்மிடம்) இருக்கின்றது, என்று—, நம் ஆணை சொல்லு நமது கட்டளையாகச் (சுக்ரீவனிடஞ்) சொல்வாய்; (எ - று.)

வெம்புகண்டகர் விண்புக வோறுத்தல் - அஷ்டதிக்கிரகம். இம்பர் நல் லறஞ்செய்தல் - தர்மஸம்ஸ்தாபநம். கண்டகம் - முள்; அதுபோலப் பிறர்க்கு உபத்திரவஞ் செய்பவர், கண்டகர். வெம்பு கண்டகர் - (உலகம்) தவித்தற்குக் காரணமான கொடியவ ரெனினுமாம். வோறுத்தல் - நிர்மூலஞ்செய்தல், எடுத்த - கையிற்கொண்ட, விற் கொம்பு - வில்லாகிய மூங்கில்; தருந்தண்டம். உங்கள் அம்பு - ஆரும்வேற்றமையுருபும் பயனுந்தொக்கதொகை; மத்ய மபதலோப ஸமாஸம்; அரக்கரையேயன்றி வாகரரையும் அழிக்கும் அம்

பெண்ண; 'எல்லனம்பு' என்ற பாடமும் ஏற்கும். விராதன் முதலிய அரக்கர் களையும் வாலியையுங் கொன்ற வில்அம்புகளைக்கொண்டே உன்னையும் உன் னைச்சார்ந்தவர்களையும் யமனுக்கு இரையாக்குதல் கூடுமென்று நாம் சொன்ன தாகச் சொல்லக் கடவாய் என்பதாம். நம் ஆணை சொல்லு - நீமது கட்டளை யைச் செல்வாய். (ச)

நி. நஞ்சமன்னவரைநலிந்தாலது
வஞ்சமன்றுமனுவழக்காதலா
லஞ்சிலேம்பதிலொன்றறியாதவ
னெஞ்சினின்றுநிலாவகிறுத்துவாய்.

(இ - ன்.) நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது - விஷத்தைப்போலக் கொடியராயுள்ளாரைத் தண்டித்தால் அது, வஞ்சம் அன்று - கொடுமையா காது: (எனெனில்),—மனு வழக்கு ஆதலால் - மநுதர்மசாஸ்திரத்திற் கூறிய நீதியாதலால்; (இத்தன்மையை), அஞ்சில் ஐம்பதில் ஒன்று அறியாதவன் நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய் - ஐந்தபிராயத்திலும் ஐம்பதபிராயத் திலும் தக்கதொருசெயலே யறியாதவனுன அச்சக்கிரீவனது மனத்திற் பதிந்துவினங்குமபடி நீ சொல்லி நிலைபெறுத்துவாய்; (எ - று.)

"கொலையிற்கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடு நேர்" என்றபடி கொடியவரைகொல்லாவிடின் உலகம் பலவாறு நலிவுபட்டு வருந்துதலாற் பயிர்செழிதலுவளருமாறு புற்களையைக்களைதல் போல நல்லோரைப் பாதுகாத்தற்பொருட்டுத் தீயோரைக்கொன்றொழித் தல் தருமமாமென உணர்க. நஞ்சமனனவர் - தன்னையுட்கொண்டவரை வருத்துபவர்; தனனையுண்டவரை வருத்திக்கொல்லும் விஷம்போலத் தன்னை நட்புக்கொண்டவர்க்குத் தீமைகளுசெய்பவர் என்றபடி. மனு - இக்கே, ஸ்வா யம்புவமநு; அவரே அறநூலியற்றியவர். நஞ்சமன்னவரை நலித்தல் வஞ்ச மன்று' எனபதை மநுதர்ம சாஸ்திரத்தில் இராசதருமவ்கூறும் எழாவது அத் தியாயத்தில தண்டப்பிரசமஸையிற காணலாம். இனி, மனு வழக்கு - மனு வென்னும் முதலரசன முதலாக வழங்கிவருஞ் செயலென்றலுமாம்.

அஞ்சி லேம்பதி லொன்றறியாதவன் - அஞ்சிலும் ஒன்று அறியாதவன் ஐம்பதிலும் ஒன்று அறியாதவ னென்க; இளமையோடு முதுமையோடு வாசி யற எப்பொழுதுமே செய்வது அறியாதவன என்றபடி: இனையில் ஆராய்ச் சியின்றித் தனது அண்ணனை வாலிபக்க தவறுல் [மராமரப்படலம் - கக] செய்தான, இப்பொழுது முதுமையில் எனக்குப் பிழைசெய்தான் என வாரும். 'அஞ்சிலறியா ரைம்பதிலும் அறியார்' என்பது ஒருபழமொழி. "அஞ்சிலறியாதா ரைம்பதிலுந் தாமறியா,ரென்சொலெனக்கோவெதிராசா— நெஞ்ச, முனதாமொழிந்தவற்றையேயுகக்க விண்டு, மனுதாபமற்றிருக்கை யால்" எனறார் ஸ்ரீமணவாளமாமுனிகளும். இப்பழமொழி, 'ஆறிலறியார் 'தூறிலுமறியார்', 'தொட்டிறபழக்கம் சுடுகாடுமட்டில்' எனபன போல்வது. உலகவழக்கச்சொல்லைத தழுவிகொண்டு சொல்லியது, உலகவழக்குநுவிற்சி யணி; இதனை லோகோக்தியலங்கார மென்பர் வடநூலார். ஐந்து, ஐம்பது

னைதனை இல்லை, இனமை முதுமைகட்கு இலக்கணை. அஞ்சு - பேரி. இனி, மூன்றுமடிக்குப் பிறவாறுகூறும் பொருள்களெல்லாம் சிறவாமை யுணர்க; மற்றும் அவை கலிக்துபொருள் கொளுதலின பாற்படும்: [கலிவிஷ்டகல் பனை.] நெஞ்சில் நின்றுநிலாவ நிறத்தால் - தெளியச்சொல்லி வலிய உணர்த்துதல்.

'அஞ்சியல்லதொன்றுரறிவாரவர்', 'அஞ்சிலம்பதிலொன்றறியாதவன்' என்பன பிரதிபேதம். (சு)

சு. ஊருமாளுமரசுமுஞ்சுற்றமு
நீருமாளுதிரேனபதுநோந்தநாள்
வாருமவாலிராமெனின்வானரப்
பேருமாளுமெனும்பொருள்பேசுவாய்.

(இ - ள்.) ஊரும் - (உங்களுடைய) நகரமும் [கிஷ்கிந்தாபுரியும்], ஆளும் - அடிமைகளான குடிகளும், அரசும் - அரசாட்சியும், நும் சுற்றமும் - உமகன் உறவினமும், நீரும்-நீங்களுமாக, ஆளுதிர் - (இவவுலகததில்) ஆட்சி பெறக்கடவீர் [பயினறு வாழக்கடவீர்], எனபது—, நேர்ந்த நான் - (உங்கட்குச்) சமமதமானால், வாரும் - உடனே புறப்பட்டு நம்பகல வரக்கடவீர்கள்; வாரலிர் எனின் - அங்ஙனம் வராமற் போவீரேயானால், வானரம் பேரும் மாளும் - வாநரமென்கிற பெயருரும் (உலகததில்) இல்லாதொழியும், எனும் - என்கிற, பொருள் - உண்மையை, பேசுவாய் - (சுக்கிரீவன் அங்கதன் முதலானவர்களிடம் நீ) சொல்வாய்; (எ - று.)—ஆம் - அசை.

'நும்' என்பதை ஊர் ஆள் அரசு என்றவறறோடும் கூட்டுக. நாடு நகரங்களுடனும் குடிகளுடனும் பந்துவர்க்கத்துடனும் அரசாட்சியுடனும் நீங்கள் உலகத்தில் உயிர்வாழ்ந்திருக்க வேண்டுமெனபது உங்கள்விருப்பமாகுமானால் என்பது முன்னிரண்டடியின பொருள். 'நோந்தநான்' எனபதை 'நேர்ந்தக்கால்' என்றுற்போல எதிர்காலவினையெச்சவாய்பாடுபடவந்ததாகக் கொள்க. இனி, நீரும என்பதில் உம்மையை அசையாக்கி, நீங்கள் உங்கள ஊரையும் குடிகளையும் அரசையும் சுறறத்தையும் ஆளக்கடவீ ரென்பது உங்கட்குப் பிரியமானால் என்று உரைத்தலுமாம். 'நீருமாளுதிரேயெனி னேர்ந்தநான் வாரும்' என்று பாடமானபோது, 'நோந்தநான்வாரும்' எனபதற்கு - (முன்பு சொன்னகான்கள கழிந்துபோய் விட்டன): நேர்பட்ட இனறைக்காவது வாருங்கள் என்று பொருளாம்.

வானரப்பேரும் மாளும் - வாநரமெனனும் பெயருமில்லாமற போம்படி எல்லா வாநரங்களையும் அழித்துவிடுவோம் யாம் என்றபடி. 'அரசுமுஞ்சுற்றமும்' என்ற பாடம் மோனைத்தொடையுடையதாம். 'வாரலிரேயெனின்' எனபது பிரதிபேதம். (சு)

எ. இன்னுநாடுதுமிங்கிவர்க்குப்வலி
தன்னினுரையெனதணிநதாரெனி
னுன்னைவெல்லவுலகொருமூன்றினு
நின்னலாற்பிறரின்மைநிகழ்த்துவாய்.

(இ - ள்.) இன்னும் இங்கு இவர்க்கும் வலி தன்னினுளை நாடுதும் என துணிந்தார் எனின் - 'இனி வேறுக இவ்விராமலக்குமணரைக் காட்டி லும் வலிமைபொருந்தியவரைத தேடித் துணையாக அடைவோம்' என்று (அச்சுக்கிரீவன் முதலியோர்) நிச்சயித்தார்களாயின, உன்னை வெல்ல உலகு ஒரு மூன்றினும் இன அலால் பிறர் இன்மை நிகழ்த்துவாய் - உன்னை வெல்லு தற்கு மூன்று உலகங்களிலும் உன்னையல்லாமல் வேறு எவருமில்லாமையை (அவர்கட்குச்) சொல்வாய்; (எ று.)

தற்புகழ்ச்சியாகாகிருக்குமாறு தன்னைச் சேர்த்துகொள்ளாமல் இலக்கு மணனை மாதரிரமே குறித்தனன இராமபிரான்; இது. அப்பெருமானது பெருந்தகைமையைக் காட்டும். தனையடக்க வேண்டுமாயின தானே அடக் கிக்கொண்டா லல்லது பிறரெவராலும் அடக்கவொண்ணுத பேராற்றலை யுடையவர் இளையபெருமாளெனபது, இங்கு விளங்கிறது. பிறரால வெல்ல வொண்ணுத பேராறறலோடு வேண்டியபொழுது தன்னைத்தானே அடக்கிக் கொள்ளவல்ல மகாசக்தியையு முடையவன இலகுமணனெனக. இங்கு இவர் - இவ்வாறு [வாலியையழைத்துத் தனக்கு அரசளித்து] உதவிய இவர்க ளெனறபடி. இவர்க்கும எனபதில், நானகனுருபு - எல்லைப்பொருளது. உம் - உயர்வு சிறப்பு. (எ)

அ. நீதியாதிநிகழ்தற்பாலதினிற்றது
வேதியாதபொழுதுவெகுண்டவண்
சாதியாதவாசொறறரதத்தக்கனை
போதியாதியென்றான்புகழ்ப்பூணினான்.

(இ - ள்.) ஆதி - முதலில், நீதி நிகழ்தற்பாலது இனறு - (சுகரிவன முதலி யோர்க்கு) நீதியை யெடுத்துககூறினாலு,—அது வேதியாத பொழுது - அந் நீதிச்சொல (அவர்கள் மனததிறகொணட மாறுபாட்டை) மாறறுதபொழுது, வெகுண்டு அவண் சாதியாது - (நீ) கோபித்து அவவிடத்தில [அப்பொழுது] (அவரகளை) அழித்துவிடாமல், அவசொல தரதகனை - அவர்கள சொனன உததரங்களை (என்னிடம்) கொண்டுவந்து சொல்லகடவாய்: போதி ஆதி - சொல்வாயாக, எனறான - எனறு சொல்லி விடைகொடுத்தான்: (யாவ னெனின),—புகழ் பூணினன் - புகழையே தனக்கு ஆபரணமாகக கொள்பவ னாகிய இராமபிரான்; (எ - று.)

இச்செய்யுளில் 'புகழ்ப்பூணினன' எனறதை இப்படலத்து முதற்செய் யுளில் 'முன்னேவீரன' என்றதற்கு விசேஷணமாகக கொண்டு அதனோடு இயைத்து முடிபு அமைக்க.

இராமபிரான முன்கோபங் கொண்டவனனறிச் சாந்தகுணத்தை யுடை யவனுதலால் முடிவில இக்கனக் கட்டளை கூறியருளினன. புகழ் தன்னை அழகுபடுத்துவதெனக கருதி அதனை விரும்பதோடு மேற்கொள்பவ னென் பதும், புகழினால் விளகுபவ னெனபதும், 'புகழ்ப்பூணினன' எனறதன் கருத்து. விரைவை மேறகொள்ளாது பொறுமையை மேறகொண்டு இவ்

வாறு கட்டளை கூறியது, புகழ்க்குக் காரணமென்பது விளங்க, இங்கு 'புகழ்ப் பூணினன்' என்றார். 'ஆதி' என்ற சொல் இரண்டனுள், முக்கியது - வட மொழிப் பெயர்; பிற்கியது - 'ஆ' என்ற வினைப்பகுதியின்மேற் பிறந்த வவலொருமைமுற்று; இ - விகுதி, ந் - எழுத்துப்பேறு ஆதி போதி என மாற்றி, 'விரைந்து கோற்செல்வாய் என்றலு மொன்று; ஆதி - நேரோடல். நிகழ்த்தினை - முற்றெச்சம். வேதித்தல் - போதித்தல். நீதியாதி நிகழ்த்தினை நின்றது வேதியாதபொழுது எனபதற்கு - நீதி முதலியவற்றைச் சொல்லி (அவற்றுல்) அவர்களிருந்த நிலைமாறுதபொழுதென்று உரைத்தலுமொன்று; இப்பொருளில், 'நின்றது' என்பது - ஒருசொல். இனி, நீதி முதலியவற் றைச்'சொல்லி, (அவர்கள) நின்ற நிலைமை (நீதிக்கு) மாறுக இராதபோது, கோபங்கொண்டு அவர்கள்பக்கல் ஒன்றுஞ் செய்யாமல் அவர்கள்சொன்ன சொல்லை எனக்குத் தெரிவிக்கக்கடவை யென்று கட்டளையிட் டருளின னென உரைத்தல் சிறவாமை யுணர்க. தாரத்தக்கனை - தாரத்தக்காய்.

'நீதியாகநிகழ்த்துதி,' 'வெகுண்டிடல்', 'போதியாக வென்றான்' என் பன பிரதிபேதம். (அ)

[அக்கட்டளையை மேற்கொண்டு இலக்குமணன் செல்லுதல்.]

கூ. ஆணை சூடியடிதொழுதாண்டிறை
பாணியாதுபடர்வெரின்பாழ்படாத்
தூணிபூட்டிததொடுசிலைதொட்டருஞ்
சேணினீங்கினன்சிந்தையுணீங்கலான்.

(இ - ள்.) ஆணை சூடி - (அந்தத் திருத்தமையனுது) கட்டளையை (இலக்குமணன்) சிரமேறகொண்டு, அடி தொழுது - (அப்பெருமானது) திருவடிகளை வணங்கி, ஆண்டு இறை பாணியாது - அவ்விடத்திற் சிறிது பொழுதும் தாமதித்து நிற்காமல்,—படர் வெரின் - பார்த்த தனது முதுகில், பாழ்படா தூணி பூட்டி - அம்புகள் பற்றறுதலில்லாத அம்பறாத்தூணியை [அகூயதூணீரத்தை]க் கட்டிக்கொண்டு, தொடு சிலை தொட்டு - அம்பு தொடுத்தலிற் சிறந்த வில்லைக் கையிற் பிடித்து, சிந்தையுள் நீங்கலான் - மனத் தில் (இராமபிரானை) விட்டுப் பிரியாதவனுய் [இராமபிரானைத தியானித்துக் கொண்டே], அருஞ் சேணில் நீங்கினன - செல்லுதற்கு அரிய நீண்டவழி யிற் செல்லலானுன். (எ-று.)

இறை - காலநுட்பம். பாணித்தல் - பொழுது நீட்டித்தல். முதுகு பார் திருத்தல், உத்தமவிலக்கணம். வில்லேயேந்திய தூணியைப்பூட்டி யுத்த சன் நத்தனபோலச் சென்றது, அச்சமுறுத்திக காரியதனைச் சாதித்துக்கொள்ளு தற்கு; தற்காத்துக்கொள்ளுதற்காக முன ஜாக்கிரதையாய்க் கொண்டதுமாம். ஈற்றடியில் முரண்தொடை காண்க. பெருமாளிடம் இளையபெருமாளுக்கு உள்ள பக்திவிசேஷம், இச்செய்யுளில் வெளியாம். நிஜபக்தியுடையார் இறைவனை எப்பொழுதும் தியானிகு மியல்புபற்றி, 'சிந்தையுள் நீங்கலான்

சேணில்நீங்கினன்' என்றார். ஏதேனுமொருகாரியமுற்றுதமாயச் செல்லும் பொழுது கடவுட்டியானத்தோடு செல்லுதல் அடியாரியல் பென்பதும், அவர்கட்கு அது காரியசித்திக்கு மூலமா மெனபதும் கருதத்தக்கன. இனி, 'சிந்தையுள் நீங்கலான்' என்பதற்கு - இராமபிரானது மனத்தினின்று நீங்காத அன்புடைத்தம்பியான இலக்குமண னென்று உரைப்பினும் இழுக்காது.

'வேரிற்', 'சிந்தையினீங்கலான்' என்பன பிரதிபேதம். (கூ)

[இலக்குமணன் வாநாங்கள் செல்லும் வழியாற் செல்லாது வேறு வழியாற் செல்லுதல்.]

கo. மாறுநின்றமரனுமலைகளு
நீறுசென்றுகெடுநெறிநீங்கிட
வேறுசென்றனன்மெண்மையனாயினு
மாறுசென்றிலனணியினேகுவான்.

(இ. ள்.) ஆணியின் எகுவான் - (ஸ்ரீராமனது) கட்டளைப்படி செல்பவனான அவ்விலக்குமணன்,—மென்மையன் ஆயினும் - மெல்லிய இயல்பை யுடையவனாயினும், ஆறு சென்றிலன் - (சுக்கிரீவன் முதலியோர் முன்பு தங்களை ருசியமூககிரியினின்று கிஷ்கிந்தாபுரிக்கு அழைத்துக்கொண்டுபோன) வழியாற் செல்லாமல், மாறு நின்ற மானும் மலைகளும் நீறு சென்று கெடுநெறி நீங்கிட வேறு சென்றனன் - குறுக்கேநின்ற மரங்களும் மலைகளும் (தான் செல்லும் விசையாற்) பொடியாகி நெடுந்தூரம் சென்றவிடும்படி புதியதொரு வழியைக் கற்பித்துக்கொண்டு சென்றான் ; (எ - று.)

இலக்குமணன் சுகுமாரமான சரீரமுடையவனாதலால் இதுவரையிற் பலர் சென்று அடிப்பட்ட வழியால் எளிதில் இனிது செல்லத்தக்கவனாயினும், சுக்கிரீவன் முதலியோரைத் தம்பக்கல் மாறுபாடுகொண்டவராகக் கருதினனாதலால், அவர்கள் தமது ஊர்க்கு வழக்கமாக அமைத்துள்ள வழியில் ஏதேனும் வஞ்சனைத்தீங்கு புரிக்து வைத்திருப்பரோ வென்னுஞ் சங்கை கொண்டவனாய் அவ்வழியாற் செல்லாது வேறுபுதியதொருவழி கற்பித்துக்கொண்டு செல்லலாயின னென்க. முதலிரண்டடியிற் குறித்தது, மகாபலசாலியான அவ்விளையபெருமாள் செல்லும் விசையினாலாகிய செயல். மாறுநின்ற - தனது செலவிற்குத் தடையாய்நின்ற என்றபடி. தனது தலைவனது கட்டளையை மேற்கொண்டு செல்பவனாதலால், அதற்கு எற்றபடி செல்லும்போது தனக்கு உண்டாகுஞ் சிரமத்தைச் சிறிதும் பார்த்திலனென்பது விளங்க, 'ஆணையினேகுவான்' என்றார்; மெய்வருத்தம்பாராது கருமமே கண்ணைச் செல்லுதல், உத்தமதாதலக்ஷணம். 'ஆணையினேகுவான்' என்றது இராமபிரானது கட்டளைதானே ஒருபுருஷவடிவமெடுத்துச் சென்றாற்போல் பல னென்றவாறுமாம். 'மெல்மையினேங்கிடு,மாறுசென்றவனாணையினேகுவான்' என்ற பாடத்திற்கு - சத்தியத்தாற் சிறந்த தருமமார்க்கத்திலே செல்

பவனனை இராமபிரானை கட்டளையின்படி செல்லும் இலக்குமண னென்ற பொருளாம். (கo)

[இலக்குமணனது அடிவைப்புக்களால் மலைகள் அழிந்துதல்.]

க்க. விண்ணுறத்தொடர்மேருவின்சீர்வரை
மண்ணுறப்புக்கழுந்தினமாதிரங்
கண்ணுறத்தெரிவுற்றதுகட்செவி
யொண்ணிறக்கழற்சேவடியூன்றலால்.

(இ - ன்.) ஒள் நிறம் கழல் சே அடி ஊன்றலால் - பிரகாசமான நிற முள்ள வீரக்கழலையணிந்த சிவந்த (இலக்குமணனதுபாதங்கள்) (அவன் செல் லும்போது) அழுந்துதலால்,—விண் உற தொடர் மேருவின் சீர் வரை - மேலுலகத்தையளாவவளர்ந்துள்ள மேருமலையினது (உயரத்தின்) எல்லையள வாக [மேருமலையின் உயரம் எவ்வளவோ அவ்வளவுதூரம் தாழ என்றபடி]; மாதிரம் - மலைகள், மண் உற புக்கு அழுந்தின - தரையிலேபொருந்த உட் சென்று அழுந்தின; (அப்பொழுது), கட்செவி கண் உற தெரிவுற்றது - (பூமியின் கீழ் இருந்து அதனைத்தாங்குகின்ற) ஆதிசேஷன் கண்களுக்குப் புலனுயிற்று; (ஏ - று.)

உயர்வுநவிற்சியணி [அதிசயோக்தி] 'மகாமேருகிரி எண்பத்திலுலாயி ரம் யோஜனை யுயரமுள்ளது' எனறு புராணம் கூறும். கட்செவி - கண்களே யே காதுகளாகவும் உடையது எனப் பாம்பிற்குக் காரணக்குறி; அன்மொழித் தொகை. 'சக்ஷுஸ்ஸ்ரவஸ்:' என்ற வடசொல்லும் இப்பொருளது. பொருள் களைக் காணுதலும் ஒலிகளைக்கேட்டலுமாகிய இரண்டு புலனகளும் பாம்பிற் குக் கண்ணுகிய பொறியொன் றிலே அமைந்திருத்தல் காண்க. 'கட்செவி' என்றது - இங்கே, சிறப்பினுல் நாகராசனை ஆதிசேஷனைக குறித்தது. பொதுப்பட நாகங்களே யுணர்த்தினதாகக்கொண்டு, பூமியின கீழுள்ள நாகங் கள் கட்புலனுயின வென்றலுமாம். இப்பொருளில், 'தெரிவுற்றது கட்செவி' என்றது, சாதியொருமைபற்றி யென்க. 'உண்ணிறம்' என்ற பாடத்திற்கு - நிறம் உண் என மாறி, நிறங்கொண்ட வென்று பொருளாம். கழல் - வீரர் தமது வீரத்திற்கு அறிகுறியாகக் காலிலணிந்துகொள்வதோ ராபரணம். (கக)

[இலக்குமணனது வேகம்.]

கஉ. வெம்புகாணிடைப்போகின்றவேகத்தா
லும்பர்தேயுமராமரத்தூடுசெ
லப்புகோன்றனனன்றடல்வாலிதன்
றம்பிமேற்செலுமானவன்றம்பியே.

(இ - ன்.) அன்று - அப்பொழுது, அடல் வாலிதன் தம்பிமேல்செலும் - வலிமையையுடைய வாலியின் தம்பியான சுக்ரீவனை நோக்கிச் செல்லு கின்ற, மானவன் தம்பி - மநுகுலதிலகனை ஸ்ரீராமபிரானது திருத்தம்பி

யாகிய இலக்குமணன்,—வெம்பு கானிடை போகின்ற வேகத்தால் · வெப் பங்கொண்ட காட்டிற் செல்கின்ற வீசையினால், உம்பர் தோயும் மராமரத்து ஊடு செல் அம்பு போன்றனன் · மேலுலகத்தையளாவி வளர்ந்திருந்த (ஏழு) மராமரங்களினிடையே துளைத்துச்சென்ற (இராம) பாணத்தைப் போன் றான்; (எ · று.)

உவமையணி. இராமபாணம் மராமரங்களேழினையும் எளிதில் துளைத் தப்பாற்சென்றதுபோல இலக்குமணன் தான் செல்லுங் காட்டுவழியி லுள்ள மரங்களெல்லாம் தான் செல்லும் வீசையால் அழித்துத்தள்ளிக் கொண்டு செல்லுதல்பற்றி, அதனை இவனுக்கு உவமை கூறினர் மராமரம்· ஸாலவிருக்ஷம்; ஒருவகை ஆச்சாமரம். 'உம்பர்தோயுமராமரம்' என்றது, உயர்வுநவிற்சி. உம்பர் · உகரச்சுட்டடியாப்பிறந்த பெயர்; இதன் எதிர் மொழி·இம்பர்; (இவ்விடம்.) மாருதன் · வாயுவம்சமுதலியகுலத்திற் பிறந்த வன்; வடமொழித்தத்திதாந்தநாமம்.

'அம்பிற்சென்றனனலடல்', 'மன்னவன்றம்பியே' என்பன பிரதிபேதம்.

[இதுவும் அது.]

கக. மாடுவென்றியொர்மாதிரயாணையின்
சேடுசென்றுகெடிலொருதிக்கின்மா
நாடுகின்றதுநண்ணியகால்பிடித்
தோடுகின்றதுமொத்துளனுயினன்.

(இ · ன்) மாடு · பக்கத்திலுள்ள, வென்றி · வெற்றியையுடைய, ஓர் மாதிர யானையின் · ஒரு திசைகஜத்தினது, சேடு · இளங்கன்று, சென்று கெடில் · விலகிச்சென்று மீண்டுவருதலின்றிக் காணுமற் போய்விட்டால், நாடுகின்றது · (அதனைத்) தேடுவதாய், நண்ணிய கால் பிடித்து ஓடுகின்றது · (அந்த யானைக்குட்டியினது) பொருந்திய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அது சென்றவிடத்தைக் குறித்து விரைந்து செல்வதான, ஒரு திக்கின் மா உம் · வேறொரு திக்கஜத்தையும், ஒத்து உளன ஆயினன் · போன்றவனானன், (அவ்விலக்குமணன்); (எ · று.)

பக்கத்தில் நின்ற ஒருதிக்கஜத்தின் குட்டியான யானைக்கன்று அதனை விட்டுவிலகிச்சென்று மீண்டுவரவேண்டிய சமயத்தில் வராது காணுமற்போன விடத்து அத்திக்கஜத்தின் நண்பாகிய மற்றொருதிக்கஜம் அந்த யானைக்குட் டியைத் தேடுவதாய் அது கால்வைத்துச்சென்ற அடிச்சுவடுகளைப் பற்றிக் கொண்டு அதுசென்றவிடத்தைக்குறித்து விரைந்துசென்றாற் போன்றனன் இலக்குமணன் என்பதாம். உவமையணி. ஸ்ரீராமபிரானுற் புதல்வனைப் போல் அபிமானிக்கப்பெற்ற சுக்கிரீவன் அவ்வருமையை மனத்திற் கொள் ளாதவனாய்த் தான்சென்ற விடத்தினின்று வரவேண்டிய சமயத்தில் வந்திலனாக, இராமபிரானது கருத்திற்கு ஏற்ப இளையபெருமாள் அச்சுக்கிரீவனைக் குறித்து அவனிருக்கின்ற இடத்தைநோக்கிக் கவனமாய்வழியுணர்ந்து செல் லுதல் கருதத்தக்கது. சேடு · இளமை: இளங்கன்றிற்குப் பண்பாகுபெயர்.

கால் - காற்சுவடடிதறகு இலக்கண. உம்மை - கீழ்ச்செய்யுளிற் கூறிய உவமையை நோக்கிவந்த இறந்தது தழுவிய எச்சம். மாதிரயானை, திக்கின்மா : பூமியினதேழு திசைதோறும் நின்று அதனைத்தாங்குந் தெய்வயானை; கண்ட வலிமை காம்பீரியங்களால் வீரர்க்கு யானை உவமைகூறப்படும்; பூபாரத்தை வகித்தல்பற்றி, இராமலக்ஷ்மணர்க்குத் திக்கஜங்கள் ஒப்பாம்.

'சேடுசென்றுசெடில்','சேடுதன்றுசெடில்' என்பன பிரதிபேதம்.(கஉ)

[இலக்குமணன் நகரியழகுகரியினின்று கிஷ்கிந்தமலையை விரைவில் அடைதல்.]

க்ச. உருக்கொளொண்கிரிபொன்றினின்றெண்றினைப்
பொருக்கவெய்தினன்பொன்னெளிர்மேனியர
னருக்கன்மாவுதயத்தினின்றத்தமாம்
பருப்பதத்தினையெய்தியபண்பினால்.

(இ - ன்.) அருக்கன் - சூரியன், மா உதயத்தினின்று - பெரிய உதய கிரியிலிருந்து, அத்தம் ஆம் பருப்பதத்தினை எய்திய பண்பினால் - அஸ்தமன கிரியை யடைந்தவிதமாக [அடைந்ததுபோல வென்றபடி],—பொன் ஒளிர் மேனியான் - பொன்னிறமாய் விளங்குகின்ற திருமேனியை யுடையவனான இலக்குமணன், உரு கொள் ஒன் கிரி ஒன்றினின்று - பெருவடிவுகொண்ட பிரகாசமான ஒரு மலையினின்று [ருசிபமூககிரியிலிருந்து], ஒன்றினை - மற்றொருமலையை [கிஷ்கிந்தமலையை], பொருக்க எய்தினன் - விரைவிலடைந்தான்; (எ - று.)

உவமையணி. இடையேதங்குதலும் தட்டுத்தடங்கலும் இன்றிவிரைந்து சென்று சேர்ந்தமை, இவ்வுவமையால் விளக்கும். இலக்குமணன் பொன்னிறமுடையனுதலை, ஆரணியகாண்டத்தில் "சுவணவண்ணன்" என்பதனாலும் உணர்க. சூரியனுவமை, செங்நிறத்திற்கும், திருமேனி யொளிக்கும் ஏற்கும். உதயம் - சூரியன் முதலியோர் உதிக்கு மிடமாய்த் திழக்கிலுள்ள தொரு மலை. அவர்கள் அஸ்தமிக்குமிடமாய் மேற்கிலுள்ள மலை, அஸ்தம். பொருக்க - விரைவுக்குறிப்பிடைச்சொல் 'பண்புபோல்' என்பதும் பாடம்.

[இதுவும் அது.]

கரு. தன்றுணைத்தமையன்றனிவாளியிற்
சென்றுசேணுயர்கிட்கிந்தைசேர்ந்தவன்
குன்றினின்றொருகுன்றினிற்குப்புறும
பொன்றுளங்குனைச்சீயமும்போன்றனன்.

(இ - ன்.) தன் துணை தமையன் தனி வாளியின் சென்று - தனக்கு உற்றதுணைவனும் தமையனுமான இராமபிரானது ஒப்பற்ற அம்புபோல (த் தடையின்றி வீரைந்து) போய், சேண் உயர் கிட்கிந்தை சேர்ந்தவன்-(ருசிபமூககிரியினின்று) மிகவுயர்ந்த கிஷ்கிந்தமலையை யடைந்தவனான அவ்விலக்குமணன்—குன்றினின்று ஒரு குன்றினில் குப்புறும் - ஒரு மலையி

னின்று மற்றொரு மலையில் தாவிப்பாய்கின்ற, பொன் னிலைக்கு உவமை யே மும் - பொன்னிறமாய் விளங்கும் பிடரிமயிர்களை யுடையதோர் ஆண்சிங்கத் தையும், போன்றனன் - போன்றான்; (எ - று.)

உவமையணி- பலபராக்கிரமங்களிலும் கம்பீரமானநடையிலும் தோற் றத்திலும் சிங்கம், இலக்குமணனுக்கு உவமையாம். கீழ் கூ - ஆஞ்செய்யு ளில் பெருமரங்கள்பலவற்றை எளிதில்அழித்து அப்பாற்செல்லுதலில் இலக் குமணனுக்கு இராமபாணத்தை உவமைகூறியவர், இங்கு நட்டுத்தடங்க லின்றிக் குறித்தவிடத்திற்கு விரைந்துசென்றுசேர்தலில் இலக்குமணனுக்கு இராமபாணத்தை உவமைகூறுகின்றனராதலால், அதனோடு இது கூறியது கூறலென்னுங் குற்றத்தின் பாற்படாதென உணர்க; பொதுத் தன்மையி லுள்ளவேறுபாடு கருதத்தகாது. அசேதநமாகிய அமபுபோல இலக்குமணன் தன்னைச்செலுத்தின தலைவனுக்குப் பாதகிரனுய் ஒழுகி அவன்செலுத்திய விடத்துச் செல்லவேண்டுமென்பதும், இராமபாணமபோலத் தடையின்றிக் காரி யத்தைச்சாதித்து மீண்பவனென்பதும், இலக்கானவரைத் தவறுதல் எளிதில் அழிக்கவல்லவனென்பதும், இவ்வுவமைமுகத்தால் தோன்றும்.

கிட்கிந்தை - கிஷ்கிந்தமென்ற வடசொல்லின் விகாரம் குப்புறுதல் - குனித்தல். சேயம் - வின்ஹமென்ற வடசொல்லின் சிதைவு. தமையன் - தம் ஐயன்; தமதுதந்தை போல்பவனெனனும் பொருளபற்றி முன்பிறந்தவனைக் குறிக்கும்: 'தமையான் தந்தையோடொப்பான்' என்றல், நூல்வழக்கு. சேண் - உயர்ச்சி; சேண்உயர் - ஒருபொருட்பன்மொழி. இனி, சேண்உயர் - வானத் தையளாவியுயர்ந்த எனினுமாம்: உம் - இரண்டனுள் தழுவிய எச்சம். (கடு)

[இலக்குமணன் வந்ததைக்கண்டு வாநரங்கள் அஞ்சியோடி அங்கதனுக்குக் கோல்லுதல்]

கசு. கண்டவானரங்காலினைக்கண்டபோன்
மண்டியோடினவாலிமகற்கையா
கொண்டசீற்றத்தினிளேயோன்குறுகினன்
சண்டவேகத்தினுலென்றுசாற்றலும்.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ன்.) கண்ட வானரம் - (இவ்வாறு கோபத்தோடு இலக்குமண்வர அதனைப்) பார்த்த குரங்குகள், காலனை கண்ட போல் - யமனைக் கண்டன போல, (மிக்க அச்சங்கொண்டு), மண்டி ஓடின - மிகுதியாய் ஓடியவையாய், வாலி மகற்கு - வாலியின்குமாரனை அங்கதனைநோக்கி, 'ஐயா - தலைவனே! கொண்ட சீற்றத்து இளேயோன - கோபங்கொண்ட இராமன் தம்பியான இலக்குமணன், சண்டவேகத்தினுல் குறுகினன் - உக்கிரமான வேகத்தோடு வந்துசேர்ந்தான்,' என்று சாற்றலும் - எனறுசொன்னவளவில், (எ - று.)— 'அன்னதோன்றலும் எய்தினன்' என அடுத்த கவியோடு தொடரும்.

கண்ட - பெயர். ஓடினை - முற்றெச்சம். மண்டியோடுதல்-ஒன்றன்மேல் ஒன்றுகொருக்குமுற்று ஓடுதலுமாம். மகற்குஎன்றதில், ஈண்டுஒருபு -

கொடைப்பொருளன பாற்படும். குறுகுதல்-சமீபித்தல். 'கண்டவானரர் காலினைக்கண்டென, மண்டியோடினா', 'வாலிமகறகமர்', 'சண்டவேகத்தினுன்' என்பன பிரதிபேதம். (கசு)

[அங்கதன் வந்து இலக்குமணனது குறிப்பை யுணர்ந்து சுக்கிரீவனிடஞ் செல்லுதல்.]

கஎ. அன்னதோன்றலுமாண்டொழிலான்வர
வின்னதென்றறிவான்மருங்கெய்தினன்
மன்னன்மைந்தன்மனக்கருத்துட்கொளாப்
பொன்னின்வார்கழற்றுதையிற்போயினன்.

(இ - ன்.) அன்ன தோன்றலும் - அந்த அங்கதகுமாரனும், ஆண் தொழிலான் வரவு இன்னது என்று அறிவான் - ஆண்மைக் குணத்திற் கேற்ற செயலே யுடையவனுன இலக்குமணன் வந்த கோக்க மின்னதெனறு அறிதற் பொருட்டு, மருங்கு எய்தினன் - இலக்குமணனருகில் வந்து, மன்னன் மைந்தன மனம் கருத்தி உள் கொளா - தசரதசக்கரவர்த்தியின் குமாரனுன அவலிலக்குமணனுடைய மனத்தின கருத்தை (அவனது முகக குறிப்பைக் கொண்டு) உணர்ந்து, பொன்னின் வார் கழல் தாதை இல் போயினன் - பொன்னினுலாகிய நீண்ட வீரக்கழலே யுடைய தனது சிறிய தந்தையான சுக்கிரீவனது அரண்மனைக்குச் சென்றனன்; (எ - று.)

தோன்றல் - பெருமையிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர்; சிறந்த தோன்றுபவனெனப் பொருள்படுங் காரணகுறி. இதில், அல் - கருத்தாப்பொருள் விகுதியாம். ஆண்தொழில் - பௌருஷச் செயல, போர்-வெற்றி. உட்கொளலுதல் - தனமனத்திறகொள்ளுதல்; "அடித்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம, கடித்தது காட்டும் முகம்" ஆதலால், இலகுமணன் மனகருத்தை அவன முகக்குறிப்பைக்கொண்டு அங்கதன் அறிந்து கொண்டனனெனக. மேல் உள அங்கவியில் "சிந்தையுண்ணெடுஞ் சிற்றந்திருமுகந் தந்தளிப்ப" எனபது காண்க. தாதையில் என்று ஒருசொல்லாக எடுத்து, சிறிய தந்தையினிடத்தில் எனறலுமாம். அங்கதன தனது சிறியதந்தையைத் தந்தையாகவே பாவிப்பது தோனற, 'தாதை' எனறே கூறினர்.

'மருங்கெய்தினான்' என்று பாடமகொண்டு, லக்ஷ்மணனருகில் வந்து நெருஙகாமல் [தூரத்திலிருந்தபடியே] எனறு உரைப்பாரு முளா. 'ஆண்டொழிலான வரவினனது' எனபதை 'ஆண்டொழிலானவாவினனது' எனறு படிப்பர் ஒருசாரா. (கஏ)

[இதுமுதல் ஏழகவிகள் - தூளகம்: அப்பொழுது அங்குச்சுக்கிரீவனிருந்த நிலைமையைக் கூறுகின்றார்.]

கஅ. தளனியற்றியநாயகச்சேயிலுட்
டளமலாததகைபளளியிற்றுழ்குழு
விளமுலேசியசேர்தடிதைவர
வினைதியிற்குவிருநலனிரும்புவான்.

(இ - ன்.) நளன் இயற்றிய நாயகம் கோவிலுள்ள - நளனென்னும் வானர வீரனால் நிருமிக்கப்பட்ட சிறந்த அரண்மனையினுள்ளே,—தளம் மீலர் தகை பள்ளியில் - இதழ்கள் நிறைந்த மலர்களைப் பரப்பியமைக்கப்பட்ட அழகிய படுக்கையிலே,—தாழ் குழல் இள முலைச்சியர் ஏந்து அடி தைவர - தொங்கு கின்ற கூந்தலையும் இளமையான தனங்களையு முடையவர்களாகிய மகளிர் சிறந்த தனதுகால்களைத் தடவிப்பிடிக்க, வினை - உண்டாகின்ற, அயிற்கு தூக்கத்திற்கு, விருந்து - தான் விருந்தினனுதலை, விரும்புவான் - விரும்பவனும்,—(எ - து.)

நளன் - தேவதச்பியான விசுவகர்மாவின் குமாரனுப்ப் பிறந்த வானரன். அவன தனது தந்தையினம்சத்திறகேற்றபடி சிற்பசாஸ்திரத்தேர்ச்சிபுடைய வனாய் அரண்மனை நிருமித்தமை பற்றி, 'நளனிபற்றிய நாயகக்கோயில், என்றார். பினபு கடல் கடக்கத திருவணைகட்டுபவனும் இவனே. நாயகக்கோயில்-தலைமை பெறற இராசகிருகம் 'கோயிலுள்' என்றதனால், அரணமனையினுள்ளே யிருக்கின்ற அந்தபுரத்திலே யெனறதாம. கோயில் உவதளம் என்று எடுத்து, அரண்மனையினகத்து உபரிகையிலெனறு உரைத்தலுமொனறு. புதிதாக அரசாட்சியைப் பெறறு உரிய மகளிர் பலர் தனது அடிகளை வருட இனிது துயிலுக் தூக்கத்தை விருப்பதோடு புதிதாக உட்கொண்டு அனுபவிப்பவ னெனபது, பினனிரண்டடிகளின கருத்து. தைவர: தைவ பகுதி-விருந்து - புதுமை; பண்புபெயர்: ஆகுபெயராய் விருந்தினனமேல் நின றது. மகளிர தனது பாதங்களை மடியில வைத்துக்கொணடு வருட வென னும்பொருளில 'முலைச்சியரேந்தடிதைவர' எனறாருமாம். (கஅ)

கக தெளளிரீயாருதவப்பெருஞ்செல்வமாக
களனிளுலதிகங்களிததானகதிாப்
புள்ளிமாநெடுமபொன்வரைபுக்கதீதா
வெளளிமால்வரையெனனவிளகுவான்.

(இ - ன்.) தெள்ளரீயோர் உதவு - தெளிந்த அறிவுடையவரான இராம லக்குமணரால அளிக்கப்பட்ட, அ பெருஞ் செல்வம் ஆம - அந்தப் பெரிய அரசாட்சிச்செல்வமாகிய, களனிளுல - கனளையுட்கொண்டதனால், அதிகம் களித்தான - மிகுதியாக களிததவனும்,—கதிர புனளி - ஒளிகளின்தொகுதி யையுடையுமா நெடு - மிகப்பெரிய, பொன வரை - பொன்மயமான மலையில், புக்கது புகுந்ததற்குவதான, ஓர் வெள்ளி மால்வரை என்ன - பெரிய தொரு வெள்ளிமலைபோல, விளங்குவான் - விளங்குபவனும்,— (எ - து.)

களித்தல் - மதிமயங்குதல். களிப்பை விளைத்தல்பற்றி, பெருஞ்செல் வத்தை 'கள' என்றார். இங்ஙனம் இச்சகதீரின செய்வதறியாது களித்தற் குக் காரணமான பெருஞ்செல்வத்தான இவன தானுகத் தனது ஆற்றலாற் பெறறதேனறு, இராமலக்குமணர் அளித்த பிச்சையாகப் பெற்றதாமென்னும் உண்மையை, 'தெள்ளியோருதவு' எனறதனால் விளக்கினர். 'செல்வமாக கள்' என்றது, செல்வத்தாலாகுஞ் செருக்கு என்றவாறும்; தாமதமென்ப,

வெண்ணிறமுள்ள கம்பீரமான வடிவத்தையுடைய சுக்கிரீவனுக்கு வெள்ளி மலையையும், பொன்மயமான கட்டிலுக்கு அல்லது அரண்மனைக்குப் பொன் மலையையும் ஒப்பாகக்கொள்க. பெருஞ்செல்வமாவது கள்ளிஞல் அதிகங்களித்தான் - உரல்கம். பொன்வரைபுக்கதோர் வெள்ளிமால்வரை யென்ன வினைக்குவான் - இல்போநஞுவமை. மா கெடு - ஒருபொருட்பன்மொழி. புள்ளி-சிதப்புமாம்.

'தெள்ளியோராதவன் பெருஞ்செல்வமாம்' என்பது பிரதிபேதம் (கக)

உ0 சிந்துவாரந்திருநறைதேக்ககில்
சந்தமாமயிற்சாயலர்தாழ்குழற்
கந்தமாமலர்க்காடுகடாவிய
மந்தமாருதம்வந்துறவைகுவான்.

(இ - ள்.) சிந்துவாரம் - சிந்துவாரமரம், திருநறை - சுகந்தக்கொடி, தேக்கு - தேக்கமரம், அகில் - அகில்மரம், சந்தம் - சந்தனமரம், மா மயில் சாயலர் தாழ் குழல் - சிறந்த மயில்போலுஞ் சாயலையுடையவரான மகளிரது தொங்குகின்ற கூந்தல், கந்தம் மா மலர் காடுகள் - (அககூந்தல்களிற் சூடிய) நறுமணமுள்ள சிறந்த மலர்களின் தொகுதி (என்னும் இவற்றில்), தாவிய - பரிசித்த, மந்த மாருதம் - இளங்காற்று, வந்து உற - வந்து (தன்மேல்) வீச, வைகுவான் - இனிது தங்குபவனும்,—(எ - று.)

சிந்துவாரமுதலியவற்றிற்பரிசித்து வருதலால் நறுமணங் கொண்ட தான இளங்காற்றுத் தனமேல்வீச இனிதுதங்குப வனெனக. விந்துவாரம்-வடசொல்; வெண்ணெய்யென்ப. திருநறை - நல்லமணத்தையுடையதெனப் பொருள்பட்டுச் சுகந்தமென்னுங்கொடியை யுணர்த்துமாறு; அன்மொழித்தொகை. 'சிந்துவாரத்திருநறை' என்ற பாடத்திற்கு, சிந்துவாரத்திரு - சிந்துவாரமரமும், நறை - சுகந்தக்கொடியும் என்க. சீவகசிந்தாமணியில் "நறையுநாணமுகாறுகறும்புகை" என்றவிடத்து 'நறை - நறைக்கொடி' என்றுரைத்தினுங்கினியரும். உத்தமசாதிமகளிர் கூந்தல் இயற்கை நறுமணமுடையதாதல்பற்றி, அதனைத் தனியே கூறினுர். சிந்துவாரம் திருநறை தேக்கு அகில் சந்தம் குழல் மலர்க்காடுகள் - பன்மைவிகுதிபெற்ற அஃறிணையும்மைத்தொகை. காடு கடாவிய என்று பிரித்துப் பொருள்கொண்டு, இச்சொற்றமைத்தலு மொன்று. மலர்க்காடு என்றதை 'தாமரைக்காடு' என்றுற் போலக் கொள்க; இனி சந்தமாமலர் - அழகிய நறுமணமுள்ள சிறந்தமலர் களைச்சூடிய, குழல்காடு - கூந்தற்கற்றை யென்றலு மொன்று. சிந்துவாரமுதற் சந்தனமீருகவுள்ளவை - குறிஞ்சிநிலத்தன. ஈற்றடி - முற்றுமோனை.

'காடுகடாவிடு' என்பது பிரதிபேதம் (உ0)

உக. திந்தியாநின்றசெங்கிடைவாய்ச்சியா
முத்தவாண்முகைமுள்ளெயிறூறுதேன்
பித்துமாலுமபிறவும்பெருக்கலான்
மத்தவாணமென்னமயங்கினுன்.

(இ - ன்.) தித்தியாகின்ற - தித்திக்கின்ற, செம் இடை வாய்ச்சியர் - செம்மைடைபோலச் சிவந்த அதரத்தையுடையவர்களான மகளிரது, முத்தம் வான் நகை முள் எயிறு - முத்துப்போல வெண்ணிறமான ஒள்ளிய புன்சிரிப் பைச்செய்கின்ற கூரிய பற்களினின்று, ஊறு - சுரக்கின்ற, தேன் - தேன் போலினிய இரசம், பித்தும் - பைத்தியத்தையும், மாலும் - மயக்கத்தையும், பிறவும் - மற்றும் காமம் மதம் மறதி சோர்வு அயில் முதலிய தமோகுண காரி யங்களையும், பெருக்கலான் - அதிகப்படுத்துதலால், மத்தவாரணம் என்ன - மதங்கொண்ட யானைபோல, மயங்கினன் - மோகித்தவனும்,—(எ - று.)

அதரபானத்தாலாகிய களிப்பினுலென்பது, முதல் மூன்றடிகளின் தேர்ந்தபொருள். வாய்ச்சியரெயிறூறுதேன் - அதராமிருதம். தித்தியாகின்ற, ஆகின்று - நிகழ்கால இடைநிலை. தித்தியாகின்ற தேன் என இயையும். மகளிரது அதராமிருதத்தை இவன் என்றென்றைக்கும் இனிமைதருவ தெனக்கொண்டு மயங்கினமை தோன்ற, முக்காலத்தினுமொத்தியல் பொரு ளைச் செப்புதற்கு உரிய நிகழ்காலம் கொடுத்து, 'தித்தியாகின்றதேன்' என் றார். இனி, 'தித்தியாகின்ற' என்றதை வாய்க்கு அடைமொழியாக்கினும் இழுக்காது. தித்தித்தல் - இனியதாதல். 'முத்தவாண்முகைமுள்ளெயிறு' என்ற பாடத்திற்கு - முத்தம், ஒளியுள்ள (முல்லை) அரும்பும் போன்ற கூரிய பற்க ளென்க. தேன் - உவமையாகுபெயர்: பொருளின்பக்களுட் பொருளி னுலாகிய களிப்பு இவனைப் பாவசப் படுத்தியதைக் கீழ் ககூ - ஆஞ் செய்யுளிற் கூறி, இன்பத்தாலாகிய களிப்பு அப்பாவசத் தன்மையை அதிகப்படுத்துதலே இங்குக் கூறுகின்ற தாதலால், 'பெருக்கலான்' என் றார்; பெருஞ்செல்வமாங் கள்ளினு லதிகங் களித்ததனு லுண்டான பித்து முதலிய வற்றை வாய்ச்சிய ரெயிறூறுதேன் பெருகச் செய்த தென்க. பிற என்றதில் போகமும் அடங்கும். மத்தவாரணம் - வடமொழித்தொடர். மயங்குதல் - அறிவழிதல்.

'மதமும் பெருக்கலான்' என்பது பிரதிபேதம். (உக)

உஉ. மகுடகுண்டலமேமுதன்மண்டலத்
துகுகெடுஞ்சுடர்க்கற்றையுலாவலாற்
பகலவன்சுடர்பாய்பனிமால்வரை
தகமலர்ந்துபொலிந்துதயங்குவான்.

(இ - ன்.) மகுட குண்டலமே முதல் மண்டலத்து - மகுடமும் குண் டலங்களும் முதலிய சுடர்வட்டங்களினின்று, உகும் - வீசுகின்ற, கெடுஞ் சுடர் கற்றை - மிகுதியான ஒளிகளின் தொகுதி, உலாவலால் - (தனது வெண்ணிறமான உடம்பு முழுவதிலும்) பரவுதலால், பகலவன் சுடர் பாய் மால் பனி வரை தக - சூரியனது கிரணம் பரவப் பெற்ற பெரிய பனி மயமான இமயமலையை யொப்ப, மலர்ந்து பொலிந்து தயங்குவான் - மிக வும் அதிகமாக வீளங்குபவனுமாய், (எ - று.)—'கிடந்தனன்' எனு அடுத்த கவியோடு முடியும்.

உவமையணி. இரத்தினகிதமான கிரீடம் குண்டலம் முதலிய ஆபரணங்களைச் சூரியமண்டலம் சந்திரமண்டலம் போன்ற ஒளிமண்டலங்களாகக் கற்பித்து, 'மகுடகுண்டலமே முதல் மண்டலம்' என்றார். பகலவன் - தனது ஒளியிலால் பகற்பொழுதைச் செய்பவன். பனிவரை - ஹிமகிரி. தகவுடைய ரூசகம். மலர்ந்து பொலிந்து தயங்குவான் - ஒருபொருட் பன் மொழிகள்.

'மகுடகுண்டலமேய் முகமண்டலத்து,' 'மகரகுண்டலமேய் முகமண்டலத்து' என்பன பிரதிபேதம். (உஉ)

[அங்கதன் சுக்கிரீவனை நோக்கிச் சொல்லத்தொடங்குதல்.]

உங. கிடந்தனன்கிடந்தானைக்கிடைத்திரு
தடங்கைகூப்பினன்முன்னரைமுன்னுட்டந்த
மடங்கல்வீரனன்மாற்றம்விளம்புவான்
றொடங்கினனவனைத்துயிலீக்குவான்.

(இ - ள்.) கிடந்தனன் - (சுக்கிரீவன்) படுத்திருந்தான்: கிடந்தானை - (அங்ஙனம்) படுத்திருந்தவனை அவனை, முன் நான் தாரை தந்த மடங்கல் வீரன் - முன்னாளில் தாரைபெற்ற ஆண்சிங்கம் போன்ற வீரனை அங்கதன், கிடைத்து - சமீபித்து, இரு தட கை கூப்பினன் - தனது பெரியகைகளிரண்டையுங் குவித்து அஞ்சலிசெய்தவண்ணமாய், அவனை துயில் நீக்குவான் - அச்சுக்கிரீவனைத் தூக்கத்தினின்று எழுப்புமவனும், நல் மாற்றம் விளம்புவான் தொடங்கினனை - இதமான வார்த்தையைச் சொல்பவனுமான்; (எ று) —அதனை, அடுத்த செய்யுளிற் காண்க.

கிடைத்து - சமீபித்து. தடங்கை - உரிச்சொற்புணர்ச்சி. 'இருதடங்கை கூப்பினன்' என்றதனால், அங்கதனது பித்ருபக்தி விளங்கும். முன்னன் - பூர்வகாலத்தில். மடங்கல் - பிடரிமயிர் மடங்குதலுடைய தெனக் காரணப் பொருள்படும். 'அம்மாற்றம்' என்ற பாடத்திற்கு - அந்தச்செய்தியை [இலக்குமணன்வந்த செய்தியை]யென்று பொருளாம். அவனைத் துயில்நீக்குவான்- அவனைத் துயிலை யொழிப்பான் என இரண்டுசெயப்படுபொருள் வந்தவினை.

(கஅ) கோயிலுள், பள்ளியில், வீரும்புவானும், (கக) களித்தானும்- வீளங்குவானும், (உ0) வைகுவானும், (உக) மயங்கினனும், (உஉ) தயங்குவானுமாய், (உங) (சுக்கிரீவன) கிடந்தனன் என்று குளகச்செய்யுள்முட்டு முடிபு காண்க. இனி, (கஅ) கோயிலுள், (கக) கதிர்ப்புள்ளி.....வீளங்குவானும், (உஉ) தயங்குவானுமாகிய சுக்கிரீவன், (கக) தெள்ளிசையார்..... களிதரானுகி, (கஅ) தாழ்குழல்.....வீரும்புவானும், தளமலர்ததைப் பள்ளியில், (உ0) வைகுவானும், (உக) மயங்கினன் [மயங்கி], (உஉ) டெந்தனன என்று மாற்றி அன்வயித்துப பொருளமைதலும் எற்கும்.'கிடந்தானை' என்றது, தொடர்ச்சிதோன்றக் கூறிய அநுவாதம். (உங)

[அங்கதன் வார்த்தை]

உச. எந்தை கிளவ்விமாமற் கிளைபவன்
சிந்தையுண் ணெடுஞ்சிற்றந் திருமுகந்
தந்தளிப்பத் தடுப்பரும்வேகத்தன்
வந்தனன்னுன்மனக்கருத் தியாதென்றான்.

(இ - ள்.) 'எந்தை - எனது ஐயனே! கேள் - (யான்சொல்வதைச்)கேட்டருள்வாயாக: அ இராமற்கு இளையவன் - அந்த இராமபிரானுக்குத் தம்பியான இலக்குமணன், சிக்கையுள் கெடுஞ் சிற்றம் திருமுகம் தந்து அளிப்பமனத்தினுள்ளே நிகழ்ந்த பெருங்கோபத்தைத் தனது முகம் காட்டியருள, தடுப்பு அரும் வேகத்தன் வந்தனன் - (எவராலும்) தடுக்கவொண்ணாத வேகத்தை யுடையவனாய் இங்கு வந்து சேர்ந்தான்; உன்மனம் கருத்து யாது - (இவ்விஷயத்தில்) உனது திருவுள்ளக்கருத்து யாது?'என்றான் - என்று (சுக்கிரீவனை நோக்கி அங்கதன்) கூறினான்; (எ - று.)

எந்தை - இயல்பாகிய அண்மைவிளி. அகரச் சுட்டு, குரியமூகரிரியிலிருத்தல் னென்பதைக் காட்டும். 'இராமற்கிளையவன்' என்றது, இயல்பிற் சாந்த குணமுடையவ னென்றற்கு. மனத்தில் அடங்கிய கோபத்தைப் பிறர் உணர்ந்து அபராதகாரணஞ் செய்து கொண்டு [மன்னிப்பு வேண்டி] உய்க்கிடுமாறு அச்சினத்தை முகம் முன் நின்று காட்டுதல் பேருபகாரமா மென்பது தோன்ற, 'சிந்தையுள் கெடுஞ் சீற்றம் திருமுகம் தந்தளிப்ப' எனலாயிற்று. தந்து அளிப்ப - காட்டிக்கொடுக்க. திருமுகம் என்றதில், திரு - மேன்மை விளக்கும் அடைமொழி. தடுப்பரும் - தடுத்தற்கு அரிய; அருமையில் ஈற்று ஐகாரம் கெட்டது. வந்தனன்னுன், ன்-விரித்தல் விகாரம். (உச)

[அக்கோல்லைக் சுக்கிரீவன் சிறிதும் உணராமை.]

உரு. இனைய மாற்றமிசைத்தனனென்பதோர்
நினைவிலானெடுஞ்செல்வமெருக்கவு
நுனைகுறுந்துளிநஞ்சுமயக்கவுந்
தனையுணர்ந்திலன்மெல்லணைதங்கினான்.

(இ - ன்.) கெடுஞ் செல்வம் செருக்கவும் - அரசாட்சிப் பெருஞ் செல்வம் வலியப் பரவசப்படுத்தியதனாலும், நறு னுனை துளி நஞ்சு மயக்கவும்-மணமுள்ள கள்ளின் தாரையாகிய விஷம் மயக்கத்தந்ததனாலும், தனை உணர்ந்திலன் - தன்னையறியாதவனாய் [மெய்ம்மறந்தவனாய்],மெல் அணை தங்கினான்-மெத்தென்ற படுக்கையில் தங்கியவனான அச்சுக்கிரீவன், இனைய மாற்றம் இசைத்தனன் என்பது ஓர் நினைவு இலான் - இத்தகவார்த்தையை (அங்கதன்) சொன்னானென்னும் உணர்ச்சி யொன்றில்லாமலே கிடந்தான்; (எ - று.)

மூன்றாமடி - உறவுகம். தன்னை யுண்டவரை அறிவிலாக்குதல் பற்றிகள் 'நஞ்சு' எனப்பட்டது; "எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் களனுண்பவர்" என்றார் திருவள்ளுவனாரும். தனை - தொகுத்தல். (உஅ)

[பின்பு அங்கதன் அனுமனிடஞ் செல்லுதல்.]

உசு. ஆதலோடுமரசினங்கோளரி
யாதுமுன்னின்றியற்றுவதின்மையாற்
கோதில்சிந்தையனுமனைக்கூவுவான்
போதன்மேயினன்போதகமேயனன்.

(இ - ன்.) ஆதலோடும் - இவ்வண்ணம் ஆய்விட்டவுடனே, போதகமே அனைய அரசு இளங் கோள் அரி - யானைக்குட்டி போன்றவனும் இளமையான வலிய ஆண்சிங்கம் போன்றவனுமான இளவரசனுடைய அவ்வங்கதன், முன் நின்று இயற்றுவது யாதும் இன்மையால் - அச்சுக்கிரீவனெதிரில் நின்று தான் செய்யத்தக்கது எதுவு மில்லாததனால், கோது இல் சிந்தை அனுமனை கூவுவான் போதல் மேயினன் - குற்றமில்லாத மனத்தையுடைய அனுமனை அழைத்தற்காக (அவனிடஞ்) செல்லலானன்; (எ - று)

போதல்மேயினன் - செல்லுதலைப்பொருந்தினன்: சென்று எனின்ற படி. பராக்கிரமம், தணிவு, முன்னும்பின்னும் நோக்குதல் என்னும் இவற்றிற்கும், நடை வலிமை காம்பீரியங்களால் யானையும் அங்கதனுக்கு உவமையாம். மத்திமதீபமாக, இளமையை 'அரசு' என்பதனோடுங் கூட்டுக. கூவுவான் - எச்சம். மேயினன் = மேவினன்; ய் - எழுத்துப்பேறு. போதகம் - வடசொல்; இது, பத்தப்பிராயத்து யானைக்கன்றை யுணர்த்தும். சமயோசிதமாகச் செய்ய வேண்டுவதை ஆலோசிக்குந் திறத்தில் அனுமன் சிறந்தலால், அவனிடம் செல்லலாயின னென்க.

'ஆதலாலவ்வரசினங்கோளரி', 'யாதுமுன்னியியற்றுவதின்மையால்' 'யாதுமுன்னன்றியற்றுவதின் றென்ன', 'கூவுவே போதமேயினன்', 'போதக மேயினன்' என்பன பிரதிபேதம். (உக)

இதன்பின்

சென்றுமாருதிதன்னிடஞ்சேர்ந்தவ
னின்றதன்மைகளாவுமுகழ்த்தலும்
வென்றிவீரன்வியப்பெடுமேல்வினை
யொன்றுவானவன்றன்னையுசாவினன்.

என ஒருசெய்யுள் சில எட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது.

[அனுமனை அழைத்துக்கொண்டு அங்கதன் தாரையினிடஞ் செல்லுதல்.]

உஎ. மந்திரத்தனிமாருதிதன்னெடும்
வெந்திறற்படைவீரர்சிராய்வர
வந்தரத்தின்வந்தன்னைதன்கோயிலே
யிந்திரற்குமகன்மகனெய்தினன்.

(இ - ன்.) இந்திரற்கு மகன் மகன் - இந்திரனுடையகுமாரனாகிய வாலியின் மகனாகிய அங்கதன்,—மந்திரம் தனி மாருதிதன்னெடும்-(தக்க) ஆலோசனையைக்கூறிய ஒப்பற்ற வாயுகுமாரனை அறமானுடன், வெம் திறல்

படை வீரர் விராய் வர - உக்கிரமான வலிமையையுடைய சேனை வீரர்கள் திரண்டு தன்னுடன் வர, அந்தரத்தின் வந்து - (சுக்கிரீவனரண்மனையினின்று) வெளியே வந்து, அனுமன்தன் கோயிலை எய்தினன் - தனது தாயான தாரையின் சிறந்த மாளிகையை அடைந்தான்; (எ - று.)

'மக்திரத்தனிமாருதி தன்னொடும் அனுமன்தன் கோயிலை யெய்தினன்' என்ற சொற்போக்கினால், இப்பொழுது இளையபெருமான் கொண்டுள்ள கோபத்தை ஆற்றத்தக்கவள் தாரையே யென்ற அனுமன் ஆலோசனைகூறின னென அறியலாகும். வெந்திறற்படைவீரர்—அநுமான் படைத்தலைவரில் ஒருவனுதலால், அவனது ஆட்சியி லடங்கியவர் இவரென்க. வீராய், விராவு - பகுதி, அந்தரம் - வடசொல் இந்திரற்கு மகன்மகன - இந்திரனது பௌத்திரனெனச் சிறப்பை யுணர்த்தும். அந்தரத்தின் வந்து என்பதற்கு - அன்பதோடு வந்து என்றும், ஆகாயமார்க்கமாகத் தாவிவந்து என்றும், அம் தாத்தின் வந்து எனற பிரித்து அழகிய தசுதியோடு வந்து என்றும் உரைப்பாரு முளர். (உ எ)

[இப்பொழுது என்செய்யலாமென்று அங்கதன் முதலியோர் வினவ, தாரை அவர்களைப் பழித்தல்.]

உ அ. எய்தி மற்செயத்தக்கதென்னென்றலுஞ்
செய்திர்செய்தற்கருநெடுந்தீயன
நொய்தில்லை வைகீக்கவுநோக்குகி
ருய்திர்போலுமுதவிகொன்றீமினே.

இது முதல் ஆறுகவிகள் - குளகம்.

(இ - ள்.) எய்தி - (அநுமான முதலானவர்களுடன் அங்கதன் தாரையை) அடைந்து, (நடந்த செயல்களைச் சொல்லி), மேல் செய தக்கது என எனறலும் - 'இனி (நாம) செய்யத்தக்க செயல் யாது?' என்று (அவளை) வினவியவளவில்,—(அதுகேட்ட அவன் அவவாநர்களை நோகி),—செய்தற்கு அரு - செய்யத்தகாத, நெடுந் தீயன - பெரிய தீச்செயல்களை, நொய்தில் செய்திர - எளிதிற் செய்வீர்கள; அனனவை - அச்செயல்களாலாகுங் கேடுகளை, (நொய்தில) நீக்கவும - எளிதில நீக்கிக்கொள்ளவும், நோக்குதிர் - வழிபாராப்பீர்கள்; உதவி கொனறீர - செய்ந்நன்றி மறந்தவர்களான நீங்கள், உய்திர்போலும - தப்பிவாழ்வீர் போலும்!' எனற - எனறுசொல்லி, (எ-று.)— 'மீட்டும் ஒனறு விளம்புகின்றுன்' என அடுத்த கவியோடு தொடரும்.

நெடுந் தீயன - மிகக்கொடியவை. மதிதிமீபகியாயத்தால், 'நொய்தில்' என்றது முனனும் பின்னும கூட்டப்பட்டது நோக்குதல் - உபாயந்தேடுதல், ஆலோசிததல். "செய்திகொன்றார்க்கு உய்தியில்", "உய்வில்லை செய்த னனறிகொனறமகற்கு" என்பது நீதியாதலால், 'உய்திர்போலும்' என்றான். 'உய்திர்போலும்' எனறது, உய்யமாட்டீரென்றவாறும். இம்மையில் ஒருகால் தப்பிப்பிழைத்தாலும மறுமையில் இப்பாவதனினறு நீகுமவழி யில்லையே யென்பது போதரும். ஆதியிற சுக்கிரீவன் ஆலோசனையின்றி வாலிபக்கல்

வளியில் தவறுசெய்து உடனே அக்குற்றத்தை நீக்கிக்கொள்ள முயன்று அங்ஙனமாகாமற் பெருந்தீங்கிற் குள்ளாகிப் பிறகு நெடுங்காலமும் அத்தீங்கினின்று தப்ப வழிதேடி வக்ரதையும், பிறகு வாலி தானுகவும் அறியாமற் சொல்லவுங்கூசாமற் சுக்கிரீவனோடு போர்க்கு எழுந்து தப்புமாறின்றி இராமபிரானால் மாண்டதையும் மனத்திற்கொண்டு தாரை 'உங்கட்கு இவை இயல்பாயின' என்று வெறுத்து உரைப்பான், இங்ஙனங் கூறினன். இனி, செய்திர் என்பதற்கு - செய்துவிட்டீர்களென்றும், நோக்குதிர் எனபதற்கு - வகைபார்க்கின்றீர்க ளென்றும் பொருள் கொள்ளலுமாம்; அப்பொழுது, செய்குதிர் என்றதில், 'த்' - இறந்தகால விடைநிலை.

'எய்தியென்செயத் தக்கதிங்கென்றலும்,' 'நொய்தினின்னலே நீக்கவு நோக்கலிர்' என்பன பிரதிபேதம். (உஅ)

[இதுமுதல் நான்குகவிகளில் மற்றும் தாரை சொன்னவற்றைக் கூறுகின்றார்.]

உக. மீட்டுமொன்றுவினம்புகின்றுள்படை
கூட்டுமென்றுமைக்கொற்றவன்கூறிய
நாட்டிறம்பிறுங்காட்டிறம்பும்மெனக்
கேட்டிலீரினிக்காண்டிர்கிடைதகிரால்.

(இ - ள்.) மீட்டும் ஒன்று வினம்புகின்றுள் - மற்றும் ஒருவார்த்தை சொல்லுகின்றாள்:—'படை கூட்டும் என்று உமை கொற்றவன் கூறிய நாள் நிறம்பின் - சேனைகளைச் சேர்த்துகொண்டு வருவீர்களென்று உங்களை நோக்கி வெற்றியுள்ளவனுன ஸ்ரீராமன் சொல்லிக்குறிப்பிட்ட தவணை நாள் தவறினால், உம் நாள் நிறம்பும் - உங்கள்வாழ்நாள் தவறிவிடும்,' என - என்று (அடிக்கடி நான்) சொல்லிவரவும், கேட்டிலீர் - அதனை ஏற்றுக்கொண்டு அதற்குத் தக்கபடி நடவாமற் போய்விட்டீர்கள்; இனி காண்டிர - இனி (அதன்பயனை அனுபவத்திற்) பார்ப்பீர்கள்; கிடைத்திர் - (குற்றத்தில்) அகப்பட்டுக் கொண்டீர்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கொற்றவன் - ஜயசாலி. அனைவரையும் வென்ற வாலியையும் அழித்தமைபற்றி, தாரை ஸ்ரீராமனை இப்பெயராற் குறித்தாள். கூட்டும் - 'உம்' ஈற்று ஏவற்பன்மை. உம்நான் நிறம்பும் - நீங்கள் இராமனுற் கொல்லப்படுவீர்க ளென்றபடி. நும் என்றும் பிரிக்கலாம். நிறம்பும் மென - விரித்தல். காண்டிர், ட் - எழுத்துப்பேறு.

இனி, படைகூட்டுங்களென்று 'உங்களைக் கொற்றவன் கூறிய நாளில் (இத்தவணைநான்) தவறினால் உங்கள்வாழ்நாள் தவறும்எனறு அப்பெருமான் தானே சொல்லவும் அதன்படி நடவாதே விட்டீர்களென்று உரைப்பாருமுனர்; அது, கீழ் சு - ஆஞ்செய்யுளுக்கு வேறொருபொருள் கொள்ளுதற்கு ஏற்ற மரபினும், முன் அரசியற்படலத்து சச - ஆஞ் செய்யுளோடு மாறுகொள்ளுதலாற் றவறே. (உக)

கூ0. வாலியாருயிர்காலனும்வாங்கவிற்
கோலிவாலியசெல்வங்கொடுத்தவர்
போலுமாலும்புறத்திருப்பாரிது
சாலுமாலுங்கடன்மையினோர்க்கெலாம்.

(இ - ள்.) வாலி ஆர் உயிர் - வாலியினது அருமையான உயிரை, காலனும் வாங்க - யமனும் கவர்ந்துகொடும்படி, வில் கோலி - (தமது) வில்லை வளைத்து [அம்புதொடுத்து], வாலிய செல்வம் கொடுத்தவர்போலும் - ஒளியுள்ள அரசாட்சிச் செல்வத்தை (உங்கட்கு)க் கொடுத்தருளியவரான இராமபிரானை, உம் புறத்து இருப்பார் - உங்களால் உபேக்ஷிக்கப்படுபவர்? இது - (பேருதவி செய்த பெருமானை) இப்படி உபேக்ஷிப்பது, உங்கள் தன்மையினோர்க்கு எலாம் சாலும் - உங்கட்கு அடுக்கும்! [சிறிதும்அடாது என்றபடி]; (எ-று)— 'ஆல்' இரண்டும் - அசை; உரையசை யெனினும் வாக்கியாலங்காரமுமாம்.

'சாலும்' என்றது, எதிரமறையிலகணையால் சாலாதெனனும் பொருளைத் தந்தது. காருஸ்வரமென்னும் ஓசைவேறுபாட்டினாலும், சாலும் என்பதற்குச் சாலாதென்ற பொருளமைக்கலாம். புறத்து இருத்தல் - புறக்கணிக்கப் பட்டிருத்தல். பேருதவிசெய்தவரும் பேராற்றலுடையவருமானவரை எவ்வளவு மேலாகக்கொண்டு கௌரவிக்கவேண்டும்! அவரிடத்திலும் அபசாரப்படலாமோ? என்றாளாம். இனி, உங்கள தன்மையினோர்க்கெலாம இது சாலும் என்பதற்கு - இவ்வாறு புறக்கணித்த உங்களுக்கெல்லாம் இப்படி இலக்குமணன் கோபித்தலருவது தகுவதே எனறு உரைப்பினுமாம். காலனும்என்ற உம்மை வாலியால் எளிதில்வெல்லப்பட்டவனை இராவணனால் திக்விஜய காலத்தில் வென்று அடக்கப்பட்டவனை யமனுமென அவனது இழிவை விளக்கும் இசைச்சிறப்புக் குறிப்பாம். வாலிய எனற குறிப்புப்பெயரெச்சத்தில், இ - சாரியை. வாலிய செல்வம் எனறது, வாலியினுடையதான செல்வமென்ற பொருளும் தோன்றகினறது. கொடுத்தவர் - உயர்வுப்பன்மை.

உம்புறத்து இருப்பாபோலும் என்பதற்கு-உங்கள் சமயம்பார்த்து உங்கள்கடைவாயிலிற் காத்திருப்பாரேபோலு மென்று உரைத்தலுமாம்.

'போலுமானும்', 'சாலுமாலுங்கள' எனற பாடத்திற்கு—மும், நுங்கள் எனறு பிரிக்க. 'சாலுமாலுந்தகைமையினோர்க்கெலாம்' எனபது பிரதி பேதம். (கூ0)

கூக. தேவிதீங்கவதற்றேவரிற்சிரிய
ஞவிதீங்கினன்போலயர்வானது
பாவியாதுபருகுதிர்போலுதுக்
காவிகாண்டலாக்கண்ணிபர்காதனீர்.

(இ - ள்.) தேவி தீங்க - தன்மனைவியான சீதை பிரிந்திருக்க, (அத்தன் பத்தினால்), அ தேவரின சிரியன - தேவர்களைக் காட்டிலுஞ் சிறப்புடையனை அவ்விராமபிரான், ஆவி தீங்கினன போல் அயர்வான் - உயிர் நீங்கியவன் போல் மூர்ச்சையடைவான்; அது பாவியாது - அதனை (நீங்கள்) மனத்

திற் கொள்ளாமல், நும் காவி நாள் மலர் கண்ணியர் காதல் நீர் - உங்கட்கு உரிய மனைவியரான அன்றலர்ந்த நீலோற்பலமலர்போலுங் கண்களையுடைய வர்களாகிய மகளிரது சோக்கை யினபமாகிய நீரை, பருகுதிர் போலும் - குடித்து மகிழ்கின்றீர்போலும்; (எ - று)

இது சிறிதும்தகாதன்றே என்பதாம். காதல் நீர் - போகரசம். இத னைப் பருகுவதாகப் பொதுப்பட வாகரர்களை நோகிக் கூறினளாயினும், நித்தியப்பிரமசாரியான அநுமான் மாத்திரம் இதற்கு விலக்காம். எவராலும் வெல்ல வொண்ணாத வாலியைக் கொன்ற போராற்றல் பற்றியும், உத்தம விலக்கணங்கள் நிரம்பியிருத்தல் பற்றியும், இராமபிரானே 'தேவரிற்சீரியன்' என்றான். 'காதல்நீர் பருகுதிர்' என்றது, உருவகம். பருகுதிர் - அனுபவிக் கின்றீர என்றபடி. பிராணபதமான பிராட்டி நீங்கவே ஆவிநீங்கினன் போல அயர்வானையினை னென்க.

'சீரியோன்', 'ஆவிநீத்தனனபோல்' எனபன பிரதிபேதம். (கூச)

கூஉ. நிறம்பினீரெய்நிதைத்திருதவியை
நிறமபொலீருங்கடவினை நேர்ந்ததான்
மறஞ்செய்வானுறின்மாளுதிர்மற்றினிப்
புறஞ்செய்தாவதெனைகின்றபோதின்வாய்.

(இ - ன்.) மெய் நிறம்பினீர் - சத்தியந் தவறினீர்கள்; உதவியை நிதைத திர் - செய்த நனறியை மறந்தீர்கள்; உங்கள் தவினை நேர்ந்ததால் - நீங்கள செய்துள்ள பாவம் பயனளிக்கவந்ததனால், நிறம பொலீரா - (இப்படி) குணங் கெட்டவரானீர்கள்; மறம் செய்வான உறின மாளுதிர் - (அந்த மகாவீரரை எதிர்த்துப்) போர்செய்யத் தொடங்கினால் (அவரால்) இறப்பீர்கள்; இனி புறம் செய்தி ஆவது என - இனிமேற செய்யதக்கது யாதுளது? எனகின்ற போதின்வாய் - எனறு (அங்கதன் முதலானவர்களை நோக்கித் தாரை) கண் டித்துப்பேசுகின்ற சமயத்தில், (எ - று.)—'குரகதனம் வாயிலத தாளுறத் திதத தடவரைதந்து அடுக்கின' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும். மற்று - வினைமாற்று.

பொலீர் - பொல்லாதீர். 'ஆல்' என்பதை அசையாக்கி, நிறம்பொலீர உங்கள் தவினை நேர்ந்தது என்றவற்றைத் தனிவாக்கியமக ளாக்குதலுமாம். 'மறம் செய்வானுறின் மாளுதிர்' என்பதற்கு - அப்பெருமான உங்களோடு, போர்செய்யவந்தால் இறந்தொழிவீர்க ளென்றும பொருள் கொள்ளலாம. நிறம்பொலீர் - குணங்கெட்டவர்களே! என விளியுமாம.

'நிறம்பினீநினைதநிருதவியை,' 'நிறம்பொலீரா' எனபன பிரதிபேதம்.

[அப்பொழுது பலதரங்குகள் கிட்கிந்தாபுரியின் வாயிற்கதவைச் சாத்தி உள்ளே தாளிட்டுப் பெருங்கற்களை யடுக்கிவைத்தல்.]

கூஊ. கோளுறுத்தற்கரியகுரக்கின
நீளெழுத்தொடருருவெடுவாயிலைத்
தாளுறுத்திதத தடவரைதருதன
மூளுறுத்தியடுக்கினமாயமபினுல்.

(இ - ன்.) கோள் உறுத்தற்கு அரிய குரங்கு இனம் - தடை செய்தற்கு அரிய [மிக்க வலிமையையுடைய] குரங்குகளின் கூட்டங்கள்,—நீள் எழு தொடரும் நெடு வாயிலை - நீண்ட உழலை மரம் போடுதற்கு உரிய பெரிய நகரத்து வாயிற்கதவை, தாள் உறுத்தி - சார்த்தி உள்ளே தாளிட்டு, மொய்ம் பிஞல் - வலிமையினால், தட வரை தந்தன மூளுறுத்தி அடுக்கின - பெரிய பாறைகளைக்கொணர்ந்து சேர்த்து ஒன்றன்மே லொன்றாக (அக்கதவைச்சார உள்ளே) அடுக்கி வைத்தன; (எ - று.)

இதுசெய்தது, இலக்குமணனைக் கிஷ்கிந்தையினுட் பிரவேசிக்கவொட்டாதபடி செய்யும் நோக்கத்தால், கதவை எளிதில் திறக்க வொண்ணாதபடி தடவரைதந்து மூளுறுத்தியடுக்கின. 'நீளெழுத்தொடரும்' என்ற அடை மொழிகொண்டு, பெரிய உழலைமரத்தைக் குறுக்கே செலுத்தின வென்பது கொள்ளலாம். ஆகவே, வாயிற்கதவைச்சாதித் உள்ளே தாளிடுதல், உழலை பாய்ச்சுதல், பெரும்பாறைகளை அடுக்கிவைத்தல் என மூன்றுவகைப் பாதுகாப்புச்செய்து கொண்டனவாம். கோள் உறுத்தற்கு அரிய-இடையூறுசெய்வித்தற்கரிய; இனி, இதற்கு-பழிகூறுதற்கு அரியவென்றும் உரைக்கலாம். கோள் - பழிமொழி, உறுத்தல் சேர்த்தல். தொடருக்கெடு-விரித்தல். வாயில்-கதவுக்கு ஆகுபெயர். வரை - கல்லுக்கு இலக்கணை. 'மூளுறுத்தி' என்பதில், உறு - அணைவினை, 'கோளுறுத்தற் குரிய' என்ற பாடத்திற்கு - பிறர்க்கு இடையூறு செய்வித்தற்கு உரிய என்று பொருளாம். 'நீளெழுத் தொடரும் நெடுவாயில்' என்பதற்கு-நீண்ட இரும்புதூண்களை நாட்டப்பெற்ற நெடிய வாயிலின் கதவென்பாரு மூளர்; 'தூண்' என்றது, வாயிற்கால்களாம். (சூஉ)

[மற்றும் தூங்குகள் மரங்களையும் பாறைகளையும் எடுத்துக்கொண்டு போர்க்குச் சித்தமாதல்.]

சூசு. சிக்குறக்கடைசேமித்தசெய்கைய
தொக்குறுத்தமரத்தவன்றின
புக்குறுக்கிப்புடைத்துமெனப்புற
மிக்கிறுத்தனவெற்புமிறுத்தன.

(இ - ள்.) கடை சிக்குற சேமித்த செய்கைய - (இவ்வாறு) நகரவாயிலை உறுதியாகப் பத்திரப்படுத்திக்கொண்ட செய்கையை யுடையனவான வானரங்கள்,—புக்கு உறுக்கி புடைத்தும் என - (ஒருகால் இவ்வாயிற் கதவைக் கடந்து இலக்குமணன்உள்ளேவந்தால்) எதிரேசென்று (அவனை) அச்சுறுத்தி அடிப்போம் என்று எண்ணி, தொக்குறுத்த மரத்த - முறித்து எடுத்துக் கொண்ட மரங்களையுடையனவும், வெற்பும் இறுத்தன - பெருங்கற்களையும், பெயர்த்து எடுத்துக்கொண்டனவுமாய், அவன்றின - நெருங்கி [தம்மில்திரண்டு], புறம் மிக்கு இறுத்தன - மதிற்பக்கத்தில் மிகுதியாய்க் கூடிநின்றன.

கடை - நகர்ப்புறவாயில், சேமித்தல் - காவல் செய்துவைத்தல். செய்கைய - பெயர்; எழுவாய். தொக்குறுத்தல் - தொகுத்தல், அளவு படுத்தல்.

நாட்டுதல். உறுக்கிப்புடைத்தல் - உக்கிரமாக அடித்தலுமாம். புடைத்தும் - தன்மைப்பன்மை. புறம் - மறில், பக்கம். இறுத்தல் - சேர்தல், தங்குதல், வெற்பு - பெரும்பாறைக்கு, இலக்கணை. உம் - இறந்ததழுவிய எச்சம். இறுத்தல் - பெயர்த்தல். (கூசு)

[இலச்சுமணன் சினந்து அக்கதவை உதைத்தல்.]

கூடு. காக்கவோ கருத்தென்றுகதத்தினும்
பூக்கமூரற் புரவலர்புங்கவன்
மூக்கணங்குறை தாமரைத்தாளினு
னூக்கினனக்கதவினைநோய்தினின்.

(இ - ள்.) (வாசரங்கள் கரவாயிற்கதவையடைத்தமைகண்டு), புரவலர் புங்கவன் - அரசரிற் சிறந்தவனை இலக்குமணன், காக்கவோ கருதது என்று - '(நம்மிடத்திலிருந்து தங்களைப்) பாதுகாத்துக்கொள்ளவோ (இவர்கள்) கருதியது' என்று எண்ணி, கதத்தினும் மூரல் பூக்க - கோபத்தாற் புன்சிரிப்பு உண்டாக,—தாக்கணங்கு உறை தாமரை தாளினும் - இலக்குமி வசிக்கின்ற செந்தாமரை மலர்போன்ற தனது திருவடியினால், அ கதவினை நோய்தினின் நூக்கினன் - அவ்வாயிற்கதவை அலட்சியமாய்த் தள்ளினன்.

காக்கவோ கருத்து - (உள்ளேவராதபடி தம்மைத்) தடுக்கவோ இவர்கள் இவ்வாறு ஆலோசித்தது என்றலுமாம். புரவலர் புங்கவன் - இராஜரிஷேஷ்டன். புரவலர் - காத்தலில்வல்லவர். புங்கவன - காளைபோன்றவன். வட சொல்; புங்கவம் - ஆண்பசு, ருஷபு; இது, சிறப்பைக்குறிக்கும். தன்னையடுத்த தஞ்சரைக் காக்குந் தன்மையோடு தன்னைஒருமாறுபடுபவர் தம்மைத் தாம் பாதுகாத்துக் கொள்ளமாட்டாதபடி செய்யும் வன்மையும் மிக்கவன் இலக்குமணனென்பது விளங்க, 'காக்கவோ கருதுதெனறு புரவலர் புங்கவன நொய்தினின் நூக்கினன்' என்றார். எல்லாராலும் விரும்பப்படுபவளான இலக்குமியும் தான் விரும்பி வசிக்குமிடமாமெனத் தாமரைமலரின் சிறப்பை யுணர்த்தியவாறும் இளையபெருமாளுடைய திருவடியின் அழகு முதலிய மேன்மைகட்குச் சாதாரணமான தாமரைமலர் ஒப்பாகமாட்டாமையால், திருமகளுறையுந் தெய்வத்தாமரைமலரை யெடுத்து உவமைகூறினர். எம்பெருமானுக்கு எப்பொழுதும் பணிவிடைசெய்தலாகிய கைங்கரியலக்ஷ்மியையுடையவரான இளையபெருமாளுடைய திருவடித்தாமரைகளே யடைந்தவர்கட்கு எல்லாச் செல்வங்களும் கைகூடுதல்பற்றி, 'தாக்கணங்குறை' என்றதைத் தாளுக்கும் அடைமொழியாக்கலாம். அணங்கு - மகளிரிற் சிறந்தவள்; பெண் தெய்வம். தாக்கு அணங்கு - கல்வினையுடையவ ரினைவரிடத்திலும் சென்றுசேரும் திருமகள். 'தாமரைத்தாளினுல் கத வினை நொய்தினின நூக்கினன' என்றதில், தனது திருவடித்தாமரையினும் கடுமையான தீவினையை எளிதில் ஒழித்தானென ஒருபொருள் தொனித்தல் கருதத்தக்கது; (கதம் - உக்கிரம், வினை-கருமம்:) அடுத்த செய்யுளில் வரும் உவமையான நோக்கி இத்தொனிப் பொருளின் பொருத்தம் முணர்க.

கொம்பினின், 'இன்' இரண்டும் - சாரியை. 'கொம்பினில்' என்பது பிரதிபேதம். (கூடு)

[அத்திருவடிபட்டவளவில் அக்கதவு முதலியன பஞ்சாயிப்பறத்தல்.]

கூசு. காவன்மாமதிலுங்கதவுங்கடி
மேவும்வாயிலடுக்கியவெற்பொடுந்
தேவுசேவடிதீண்டலுந்தீண்டரும்
பாவமாமெனப்பற்றழிந்திற்றவால்.

(இ - ள்.) கதவும் - அவ்வாயிற்கதவும், கடி மேவும் வாயிலில் அடுக்கிய வெற்பொடும் - பாதுகாப்பமைந்த வாயிலில் (வாசரங்கள்) அடுக்கிவைத்திருக்கின்ற பெரும்பாறைகளும், காவல் மா மதிலும் - (அவ்வாயிலைச்சார்ந்த) பாதுகாப் பாகவுள்ள பெரியமதிலும்,—தேவு சே அடி தீண்டலும் - தெய்வத்தன்மை யுள்ள சிவந்த (இலக்குமணனுடைய) திருவடி பட்டமாத்திரத்தில், தீண்டு அரும் பாவம் ஆம் என பற்று அழிந்து இற்ற - தொடவும் ஒண்ணாத [மிகக் கொடிய அல்லது மிகவும் இழிவான] தீவினைகள்போலத் தொடர்ச்சியின்றி முழுவதும் அழிந்தொழிந்தன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இளையபெருமாளுடைய திருவடி பட்டமாத்திரத்தில் வாயிற்கதவுமுதலி யன பற்றறத்தொலைந்து போனதற்கு, அப்பெருமானுடைய திருவடியின் சம்பந்தத்தால் அடியார்க்குக் கொடியவினைப்பந்தங்கள் யாவும் உடனே பற் றற ஒழிதலே உவமைகூறினர் உவமையணி. தேவு - இலக்குமணப்பெருமா ளுடைய, சேவடி என்றும் பொருள்கொள்ளலாம்: 'தேவ' என்பதும் தெய் வத்திற்கு ஒருபெயர்: தேவசப்தபலம். 'தீண்டலும்' என்ற உம்மாற்று இறந்த காலவினையெச்சம், பிறபொருளோடு விரைவையுங் காட்டும். அத்திருவடிப் பரிசம் சேர்ந்தமாத்திரத்தில் விளக்கின்முன் இருள்போலவும், காட்டுத்தீ முனைப்பஞ்சுத்துய்போலவும் கொடியகருமங்களின் தொகுதி முழுவதும் தொடர்பற ஒழிதல் விளங்க, 'தீண்டலும்' என்றார். தீண்டு அரும்பாவம் என் பதற்கு-உயிர்களைப்பற்றி நின்ற அழித்தற்கு அரிய பாவங்களெனவும் பதப் பொருளாகலாம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும ஒற்றுமைப்படுதற்கு இடை யீடாய்நிற்கும் மூவகைதீவினைகளை - இளையபெருமாளும் சுக்கிரீவனும் சக் தித்தாருந் தடையாகின்ற கதவுமுதலிய மூன்று பொருள்கட்கும் உவமை கூறிய கய முணாக. பாதம் சிவந்திருத்தல் - உத்தமலிலக்ஷணம்.

காவல் - அரண். கடி - உரிச்சொல். தீண்டலும் தீண்டரும் என்ற விடத்துத் தொடைமுரண் காண்க. 'தீண்டிறற்பாவம்' என்பது பிரதிபேதம். மூன்றுமடி - முற்றுமோனை. (கூக)

[அக்கதவு முதலியன சிதறியமை கண்டு தூங்குகள் அஞ்சுதல்.]

கூஎ. நொய்தினீங்கதவும்முதுவாயிலுஞ்
செய்தகன்மதிலுந்திசையோசீண
ஐயிரண்டினளவடியற்றுக
வெய்தினின்றகுரக்கும்வெருக்கொளா.

(இ - ள்.) மோன் கதவும் - வலிய அர்த்தக்கதவும், முது வாயிலும்-பழமை யான அங்கரவாயிலும், கல் செய்த மதிலும் - கற்களாலமைக்கப்பட்ட மதிலும், நொய்தில் - எளிதில், அடி அற்று - கட்டுக்குலைந்து, திசை - எல் லாத்திக்குகளிலும், ஐயிரண்டு யோசனையின் அளவு - பத்து யோஜனையளவு தூரம்; உக - சிதறவே,—குரங்கும் - (யுத்தசந்நத்தமாய்நின்ற) வானரங்களும், வெரு கொளா - அச்சங்கொண்டு, வெய்தின் நின்ற - தயித்தன; (எ - று.)

'செய்தகல்மதில்' என்றது இரட்டுறமொழிதலால் முன்னமே அக்கரர்க்கு அரணுகக் கல்மயமாய் நிருமிக்கப்பட்டிருந்த மதிலையும், இப்பொழுது பாறை கள் அடுக்கியமைத்த பாதுகாப்பையுங் குறிக்கும். ஆகவே, கீழ்ச்செய்யு ளில் 'வாயிலடுக்கியவெறபொடும்' என்றதற்கு வாயிலோடும் வாயிலிலடுக்கிய கற்குவியலோடும் என்று பொருள் கொள்ளுதலும் அமையுமெனக்காண்க. யோசனை - யோஜநை என்ற வடசொல்லின் விகாரம்; நான்கு குரோசங் கொண்ட தூரம். ஐயிரண்டு-பண்புத்தொகை. அடியற்று - அடியோடழிந்து, மூழுவதும் அழிந்து, வெய்தின்நிற்றல் - கொடிய துன்பமடைதல். குரக்கும் வெருக்கொளா—பிராசம் நோக்கி 'குரங்கு' என்றது வலித்தது. வெரு - வெருவு என்பதன் விகாரம்; முதனிலைத்தொழிற் பெயராய் வெருவுதலை யுணர்த்திற்று. 'வெருக்கொள' என்ற பாடத்திற்கு - அச்சங்கொள்ளுதலா லென்று பொருள்.

'கொடிவாயிலும்', 'வெய்தின்ற,' 'குரங்கும்' என்பன பிரதிபேதம். ()

[குரங்குகள் சீதையோதேடல்.]

கூஅ. பரியமாமதிலும்படர்வாயிலுஞ்
சரியவீழ்ந்ததடித்தின்முடிந்தலை
நெரியநெஞ்சுபிளப்பநெடுந்திசை
யிரியவுற்றனவிற்றிலவின்னுயிர்.

(இ - ன்.) (இவ்வாறு) பரிய மா மதிலும் - பருத்த உயர்ந்த அம்மதி லும், படர் வாயிலும் - பரந்த அங்கரவாயிலும், சரிய வீழ்ந்த - சாய்ந்து வீழுக்கிட்டதாகிய, தடித்தின் - இடியினால், முடி தலை நெரிய - தங்கள்தலை யிடம் நொருங்கவே, (அம்மதிலினகத்தே சாரநின்ற வானரங்கள்), நெஞ்சு பிளப்ப - மனம் பிளவுபட [நெஞ்சம் உறுதியழிந்துகலங்க], நெடுந்திசை இரி யல் உற்றன - திசைதோறும் நெடுந்தூரம் ஓடிச்சென்றனவையாய், இன் உயிர் இற்றில - இனிமையான உயிரழியாதனவாயின [அரிதில் தப்பிப்பிழைத்தன வென்றபடி]; (எ - று.)

பரிய - பருமையையுடைய. "உயர்வகலந் திண்மை யருமை யிவற்றான், றமை வரணென்றாரைக்கு நூல்" என்றபடி எணிகொண்டு ஏறவொண்ணாத உயர்வும் புறத்தோர்க்கு அகழலாகாத அடியகலத்தோடு அகத்தோர்க்கு கின்ற தொழில் செய்யலாந் தலையகலமும் மிக்க மதி லென்பார், 'பரிய மா மதில்' என்றார். இம்மதிலின் திண்மையருமைகள், கீழ், 'செய்தகன்மதில்,

'காவன்மரமதில்' என்றவற்றுற் பெறப்பட்டன. தடித்-வடசொல்; மின்னல்: இக்கு, இடிக்கு இலக்கணை. உயிரழியாதவனேயன்றித் தேகபலமனைத்தும் அழியப்பெற்றனவென்பது தோன்ற, 'உயிரிற்றில' என்றார். 'இன்னுயிர்' என்றது, எத்தப்பிராணிக்கும் உயிரினும் இனியது வேறின்மையின், அவ்வுயிரை விரைந்து தப்பியோடிப் பாதுகாத்துக்கொண்டமை தோன்றும். 'தடித்திலிடித்தலே' என்ற பாடத்திற்கு - தடித்து இல் இடித்தலே எனறு பிரிதது, 'மதிலும் வாயிலும் சரியவீழ்ந்தமையாகிய மின்னலில்லாத இடியினால் மனம் நடுங்கிளக்க வென்று பொருள்கொள்க; இடி முழக்கம் செவிப்புலனுதற்கு முனபு மின்னலின் தோற்றம் கட்புலனுதலால், இடியின தோற்றத்தை முன்னருணர்தற்கு மின்னல் அறிகுறியாகின்றது. அவ்வனம் முனகுறியாகும் மினனல் நிகழாமலே ஒரிடியிடித்தாற்போன்றது, வானரங்கள் எதிர்பாராதிருக்கையில் திடீரென்று மதிலும் வாயிலும் சரிய வீழ்ந்தலைபென்க; இது, இல்பொருளுவமையாம்; ''மின்னுமலிடித்ததென'' எனறார் பிறரும். உள்பொருளாகக்கொள்ளுமிடத்து உற்பாதமாம், (கூ)

[அப்பொழுது அந்நகரத்திலுண்டான ஆரவாரம்.]

கூகூ. பகரவேயுமரிதுபரித்தெழு
புகரில்வானரமஞ்சியபூசலாற்
சிகரமால்வரைசென்றுதிரிந்துழி
மகரவேலையையொத்ததுமாதரோ.

(இ - ள்.) பகரவேயும் அரிது பரித்து - சொல்லுதற்கும் அரியதான கொடிய துன்பத்தை யடைந்து, எழு - இருப்பிடம்விட்டோடிய, புகர் இல் வானரம் - குற்றமற்ற அக்குரங்குகள், அஞ்சிய - அச்சமுற்றுச்செய்த, பூசலால் - பேரொலியினால், மா நகர் - சிறந்த அந்தக்கிஷ்கிநதாபுரியானது, சிகரம் மால் வரை சென்று திரிந்த உழி மகரம் வேலையை ஒத்தது - சிகரங்களையுடைய பெரிய (மத்தாகிய) மந்தரமலைபுகுந்து சுழன்றபொழுது ஆரவாரித்த சுறாமீன்களையுடைய பாற்கடலைப் போன்றது; (எ - று.)

உவமையணி. பகரவேயும்—எ - பிரிநிலை, உம் - இழிவுசிறப்பு. துன்பத்தினமிகுதி தோன்ற, 'பகரவேயுமரிது' என்றார். பகரதற்கு அரிதாதல் பற்றியே, 'அயர்' எனற பெயராற் குறியாது 'பகரவேயும் அரிது' என வேறொருவகையாற் குறிக்கப்பட்டதென்க. அரிது - பெயர். வாயாற் சொல்லவும், அரியதான துன்பத்தை மெய்யால் அனுபவிக்கின்ற இரக்கத்பாடு தோன்ற, 'பகரவேயுமரிதுபரித்தெழு' எனப்பட்டது. 'புகரில்வானரம்' என்றதனால், முன் ஒருகாலததிலும் இவ்வகையான அயரத்தை யடைந்திலவென்றதாம். இனி, புகர்இல் - ஒளியிழந்த வென்றுமாம். பூசல் - பெரிதொலித்தல், ஆரவாரம் 'பரிக்தெழும்' என்ற பாடத்திறகு - சொல்லுதற்கும் அரியதாம்படி இரக்கங்கொண்டுசிதறுகின்ற வென்ற பொருளாம். 'பகரவேயுமரிது' என்றதைப் பூசலுக்கு அடைமொழியாகவே புணரத்தலும் கூடும். (கூ)

[பலதூரங்களும் ஏறிப்போய்விட்டதனால் கிஷ்கிந்தகிரி போலிவிழத்தல்.]

சo. வானரங்கள்வெருவிமலியோரீஇக்
காணெருங்குபடரவக்கார்வரை
மீனெருங்கியவானகமீனெலாம்
போனபின்பொலிவற்றதுபோன்றதே.

(இ - ன்.) வானரங்கள் - பலதூரங்களும், வெருவி - இவ்வாறு அஞ்சி, மலை ஓரீஇ - அகஸ்திய்தமலையை விட்டுநீங்கி, கான் ஒருங்கு படர - (அதன் உள்ள) காடுகளில் ஒருசேரச்சென்று சேர்ந்துவிட்டதனால்,—அ கார் வரை - அத்தப் 'பெரிய மலையானது,—மீன் நெருங்கிய வானகம் - நக்ஷத்திரங்கள் நெருங்கிய ஆகாயம், மீன் எலாம் போன பின பொலிவு அற்றது - அந்நக்ஷத்திரங்களெல்லாம் நீங்கினபின்பு அழகிழந்த தன்மையை, போன்றது - ஒத்தது; (எ - று.)

ஓரீஇ - ஒருவி; சொல்விசையளபெடை. கார்வரை - மேகங்கள் தவழப் பெற்ற மலையுமாம். வான் அகம் - வானத்தின் இடம். 'கானமெங்கும்படர' என்பது பாடபேதம். (சo)

[பிறகு இலக்குமணன் அந்நகரினுட்பிரவேசிக்க, அங்கதன் முதலியோர் தாரையை நோக்கி 'என்செய்வது?' என்றல்.]

சக. அன்னகாலையினண்டகையாழியான்
பொன்னினன்னகர்வீதியிற்புக்கனன்
சொன்னதாரையைச்சுற்றினர்நின்றவ
ரென்னசெய்குவதெய்தினனென்றனர்.

(இ - ன்.) அனன காலையின - அப்பொழுது, ஆண் தகை ஆழியான் - ஆண்மைக்குணத்தையுடையவனான ஸ்ரீராமபிரானுடைய ஆஜ்ஞாசக்கரமே ஒருவடிவெடுத்தாற் போன்றவனுகிய இலக்குமணன், பொன்னின் நல் நகர் வீதியில் புக்கனன் - அழகிய சிறந்த அந்நகரத்து வீதியிற் பிரவேசித்துச் செல்லலானன்; (அதுகண்டு), சொன்ன தாரையை சுற்றினர் நின்றவர் - கண்டித்துப்பேசுகின்ற தாரையைச் சுற்றிலும் நின்றவர்களான அங்கதன் முதலியோர், (மிகவும் அஞ்சி அத்தாரையை நோக்கி), 'எய்தினன - வந்து விட்டானே! என்ன செய்குவது - (நாம்) செய்வதியாது?' என்றனர் - என்று சொன்னார்கள்; (எ - று.)

ஆண்டகை யாழியான்—(கo) "ஆணையினேகுவான்" என்றதிலுடு ஒப்பிடுக. எங்குஞ்சுற்றிச் செல்வதுபற்றி, ஆஞ்ஞையைச் சக்கரமெனல் மரபு. தான் இருந்த விடத்திலே யிருந்து தன்னிலம் முழுவதும் தன்சட்டளையில் நடக்கச்செய்யும் பேராற்றலையுடைய அரசனபோல, சர்வசக்தனான ஸ்ரீராமன் இலக்குமணன் மூலமாகத் தன்கட்டளையை நிறைவேற்றுகின்றனனாதலால், இராமபிரானே 'ஆண்டகை' என்றும், இலக்குமணனே 'அனனஆழியான்' என்றும் கூறுதல் ஏற்கும். பொன்னின் - பொன்மயமான எனினுமாம். 'பொன்னினக்கர்' என்ற பாடத்திற்கு, அக்கர் - அந்த கரமென்க.

'தாரையை' என்றது, 'சுற்றினர்', 'என்றனர்' என்னும் இரண்டோடும் இயையும். பேர்சொல்லுதற்குங்கூடி இன்னுனென எழுவாய் குறியாமல் 'எய்தினன்' என்றவளவே கூறினர்.

'ஆண்டகையாளியும்' என்பது பிரதிபேதம். (சக)

[அப்பொழுது அநுமான் ஓராலோசனை கூறுதல்.]

சஉ. அனையனுள்ளமுமாய்வளையாயலர்
மனையின்வாயில்வழியினைமாற்றினு
னினையும்வீரனதீவினைநீர்நோக்கலன்
வினையமீதென்றனுமன்விளம்பினுன்.

(இ - ள்.) 'ஆய் வளையாய் - ஆராய்ந்தெடுத்தணிந்த வளையல்களை யுடையவளே! அனையன் உள்ளமும் - அந்த இலக்குமணப் பெருமானுடைய மனமோ, அலர் - மலர்போன்றது [மிக்கமென்மையுடையது]; மனையின் வாயில் வழியினை மாற்றினுல் - (பெண் ராக்ஷஸி) நீ சென்று சுக்ரீவனது) அரண் மனையின் வாசல்வழியைத் தடுத்தால், நினையும் வீரன அரசன் நெறி நோக்கலன - (தருமங்களைச்) சிந்திக்கும் இயல்புடைய வீரனை அவ்வில்லக்குமணன் அந்த நீண்டவழியைக் கண்ணெடுத்துப் பார்த்தலுஞ் செய்யான்; வினையம் ஈது - (செய்யத்தக்க) தந்திரம் இது', என - என்று—, அனுமன வினம்பினுன் - அநுமான் (அப்பொழுது தாரையைநோக்கி) கூறினுன்; (எ - று.)

இலக்குமணன் பலபராக்கிரமங்கள் மிக்கவனுயினும் அவன் மனம் மலர் போல மெல்லியது, கடினசித்தமன்று; பெண்பாலாகிய நீ சென்று சுக்ரீவனது அரண்மனையின வாயிலவழியில நின்றுவிட்டால், மகளிரை யெதிர்த்துப் பொருது கொல்லலாகா தெனனும் அறநூற்கொள்கையை யுணர்ந்த அவன் அவவழியைக் கண்ணெடுத்துப்பாராமல் விலகிச்சென்றிடுவன்; இது தக்கதோருபாயமாமெனறு தாரைக்கு அநுமான சமயோசிதமான ஆலோசனை யொன்றைக் கூறின னென்பதாம். உளளமும் என்ற உம்மை - தெரிநிலை. வளைபாய்-வளையாளென்றதன் சுருக்கமிரக்குவளி. 'ஆய்வளையாய்' என்று விளித்தது, முன்னைய நிலைமைபற்றி; மேல் நடை - ஆஞ் செய்யுளைப் பார்க்க. அவாய்நிலையால், 'நினையும்' என்ற வினைக்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஈது - சுட்டுநீண்டது.

சில ஏட்டுப்பிரதிகளில் இச்செய்யுள் "நீரெலாம்" என வரும் அடுத்த செய்யுளின்பின் காணப்படுகின்றது. 'ஆய்வளையாயலாம்' என்று படித்துப் பிரிப்பர் ஒருசாரார். (சஉ)

[அவ்வாறே மகளிர் பலருடன் தாரை சென்றுதல்.]

சங. நீரெலாமயனீங்குமீனார்நியான்
வீரனுள்ளமகிளக்குவலென்றலும்
பேரிருண்றனாய்வரும்பேர்கலாத்
தாரைசென்றனடார்குழலாரொடும்.

(இ - ள்.) (அங்ஙனம்) முதலிய வானரர்களை நோக்கித் தாரை), 'நீர் எலாம் அயல் நீங்குமின் - நீங்களெல்லீரும் அப்பாற் செல்லுங்கள்: யான் நோக்கு - நான் (அவ்விலக்குமணனெதிரிற்) சென்று, வீரன் உள்ளம் விளக்குவல்- வீரனான அவனுடைய மனத்தைத் தெளியச்செய்வேன்', என்றலும்- என்றுசொன்னவளவில், யாவரும் போ நின்றனர் - அவ்வாறா வீரரெல்லாரும் விலகிநின்றார்கள்; (உடனே), தாரை—, போக்கலா - பின்வாங்காமல், தார் குழலாரொடும் - மலராகிய கூந்தலையுடையவர்களான (தோழியராகிய) மகளிர்பலருடனை, சென்றனன் - புறப்பட்டுச் சென்றாள்; (எ - று.)

'எல்லாம்' எனபது மூன்றிடத்திற்கும் பொது: 'வீரன்'என்றது, பெண் பெயர்கொண்டவரையும் எதிர்த்தல்செய்யாதவனென்ற குறிப்பு. அங்ஙனமாகவே, அவனது உள்ளத்தை யான் சென்று தெளிவித்தல் கூடுமென்பான், 'நோக்கு யான் வீரனுள்ளம் விளக்குவல்' என்றாள். 'உள்ளம் விளங்குவல்' என்ற பாடத்திற்கு - மனக்கருதலை யுணர்வேனென்று பொருள்கொள்ள வேண்டும். விளக்குதல் - தெளிவித்தல். 'உள்ளம்வினவுவல்' எனறும் பாடங் காணப்படுகின்றது. மூன்றுமடியில் 'போ, போக்கலா' என மாறுபட்டசொற்கள் வந்தது, தோடைமுரண். 'தாழ்குழல் சொடும்' என்பது பிரதிபேதம் (கூ)

[சுக்கிரீவன்,ண்மனையைக் காணுமளவில் இலக்குமணனைத் தாரை மறித்தல்.]

சச. உரைசெய்வானரவீரருவந்துறை
யரைசர்வீதிகடந்தகன்கோயிலைப்
புரைசையாளியனுண்புகலோடுமவ்
விரைசெய்வார்குழற்றாரைவிலக்கினாள்.

(இ - ள்.) புரைசை யாளி அனுன் - கழுத்தணி கயிற்றையுடைய யானையைப் போன்றவனான இலக்குமணன், உரைசெய் வானரவீரர் உவந்து உறை அரைசர் வீதி கடந்து - பிரசித்தமாகச்சொல்லப்படுகின்ற வானரவீரர்கள் மகிழ்ந்து வசிக்குமிடமான இராசவீதியை நடந்துகழித்து, அகல் கோயிலை புகலோடு - விசாலமான சுக்கிரீவனரண்மனையினுட் பிரவேசிக்குமளவில்,—அ விரை செய் வார் குழல் தாரை - இயற்கை நறுமணத்தைச் செய்கின்ற நீண்டகூந்தலையுடைய அந்தத்தாரையானவள், விலக்கினாள் - (இலக்குமணனை) வழிமறித்தாள்; (எ - று.)

உரைசெய் - கீழ்ச்சொல்லப்பட்ட எனினுமாம். அரைசர், புரைசை - இடைப்போலி. அகல்+கோயில்=அகன்கோயில்; வலிவாச் சிறுபான்மை லகரம் னகரமாத்திரிந்தது. ஏறுபவர்க்குப் பறறுகோடாயிருத்தாபொருட்டு யானையின கழுத்திற் கயிறுகட்டிவைத்தல் இயல்பு. யானை மதங்கொண்டு சிறிஞலும், கழுத்தணிகயிற்றை யுடைமைபற்றி, ஏறியவர் உயிருய்தல் கூடும்; அங்ஙனமே இலக்குமணன், சினத்தாற்சிறிஞலும், தருமத்திற்குக்கட்டுப்படும் இயல்புடையஞதல்பற்றி, இலக்கானவர் உயிருய்வர் என்னுங் கருத்துத் தோனற, 'புரைசையாளியனுன்' என்றார். (சச

[தாரை இலக்குமணனை வழிமறித்த வகை.]

சரு. விலங்குமெல்லியல்வெண்ணகைவெண்மதி
யிலங்குநுண்ணிடையேந்திளமென்முலைக்
குலங்கொடோகைகளிர்குழாத்தினுல்
வலங்கொள்வீதிகெடுவழிமாற்றினுள்.

(இ - ன்.) விலங்கு மெல் இயல் - விலங்குபோன்ற [தன்னைக்கண்ணுறு வாரை அப்பாற்செல்லவொட்டாதபடி கட்டுப்படுத்துகின்ற] மென்மையான தன்மையையும், வெள் மதி வெள் நகை - வெண்மையான சந்திரன்போல வெண்ணிறமாய் விளங்கும் புன்சிரிப்பையும், இலங்கு நுண் இடை - விளங்குகின்ற நுண்ணிய இடையையும், எந்து இள மெல் முலை - உயர்ந்த இளமை மாறாத மென்மையான தனங்களையுமுடைய, குலம் கொள் தோகை மகளிர் - சிறந்த சாதியில்போலுஞ் சாயலுள்ள மாதரது, குழாத்தினுல் - கூட்டத்தைக்கொண்டு, வலம் கொள் வீதி கெடு வழி மாற்றினுள் - மேன்மை கொண்ட பெரிய அவ்வீதிவழியைத் தடுத்தனள், (தாரை); (எ - று.)

விலங்கு - விளங்குகின்ற எனினுமாம். 'வெண்மதி' என்றது, கபடமில்லாத அறிவுஎன்றும் பொருளபடும், தோகை இருமடியாகுபெயர். 'வெண்ணகைவெள்ளை', 'குழாதமெதும்' எனபன பிரதிபேதம். முதலடி - முற்றுமோனை. (சஞ்)

[அதுபற்றிய வர்ணனை.]

சசு. வில்லும் வாளுமணிதாறு மின்னிட
மெல்லரிக்குரன் மேகலை யார்த்தெழப்
பல்வகைப்புரு வக்கொடி பப்பிட
வல்லியாயம்வலத்தினில் வந்தீத.

(இ - ன்.) அணிதாறும் - அணிந்துள்ள ஆபரணங்கள்தோறும், வில்லும் வாளும்—,மின்னிட - விளங்கவும்,—மெல் அரி குரல் - மெல்லிய [சிறிது] பருக்கைக்கற்களையுடையனவான காற்சிலம்புகளின் ஒலியும், மேகலை (குரல்) - மேகலையெனனும் இடையணியின் ஒலியும், ஆர்த்து எழ - (பறையொலியாக) ஆரவாரித்துத்தோன்றவும்,—வல் வகை புருவம் கொடி - பலவகைப்பட்ட புருவங்களாகிய கொடிகள், பப்பிட - கிறைந்திருக்கவும், வல்லி ஆயம் - மகளிர்கூட்டமாகிய சேனை, வலத்தினில் வந்தது - வலிமையோடு வந்து (இலக்குமணனை) வளைந்துகொண்டது; (எ - று.)

மகளிர்குழாம் வந்து இலக்குமணனைச் சூழ்ந்து வழிமறித்தலை, ஒரு சேனை வந்து சூழ்ந்ததாக வருணிக்கலாஞர். வில் வான் எனபன - ஒளிகள்; அவற்றைச் சொல்லியேயாற படைக்கலங்களாகவும் கொண்டு அமைத்தனர் முதலடியில். அன்றியும், ஆபரணங்கள் இடையிட்டுவினங்குதல் வான்பனபளத்தல்போலவும்; அவ்வணிகலங்களினின்று எழுந்த வளைவாகவினங்கும் ஒளி விற்போலவும் இருக்கும். இரண்டாமடியில், மகளிர் புடைபெயரும்போது

அவரது சிலம்பும் மேகலையுமாகிய அணிகள் ஒலிப்பதை, சேனையில் நிகழும் பறைகளிலொலியாகக் குறித்தார்; ''செருக்குரற்சிறுபறைசிலம்புகிண்கிணி, யரிப்பறைமேகலையாகியார்த்தவே'' என்ற சிந்தாமணி நோக்கத்தக்கது. நீண்டிருத்தல்பற்றி, புருவத்தைக் கொடியென்றல் வழக்கு; 'ப்ரூலதா' என்பர் வடநூலாரும். புருவக்கொடி - கொடிபோன்ற புருவம். 'பல்வகைப்புருவக் கொடிபம்பிட' என்றது, சேனைக்குவமப் பலவகைக்கொடிகள் செருங்க வென்றதுமாயிற்று. கொடி - படர்கொடியும், துவசமும் சிலேடையை அங்கமாகக்கொண்டுவந்த உருவகவணி.

'மெல்லரி' என்றது, பண்புத்தொகையன்மொழியாய்ச் சிலம்பைக் குறித்தது. காகாக்ஷிகியாயத்தால், ''மெல்லரிக்குரல்' என்றதிலுள்ள 'குரல்' என்றதையே 'மேகலை' என்பதனோடுங் கூட்டுக. அரி-சிலம்பின் பருக்கைக் கல். இச்சொல்லுக்கு - சிலம்பு பறை யென்ற பொருள்களு முண்டு. மேகலை-எட்டுக்கோவையுள்ளதான மாதரிடையணி. வல்லி - பூங்கொடி; உவமையாகு பெயராய்ப் பெண்ணை யுணர்த்தும்; இங்கு, சாதிப்பெயராய் நின்றது. ஆயம் - மகளிர்கூட்டம்; 'வல்லி' என வந்ததனால், கூட்டமென்ற மாத்திரமாய் நின்றது. இனி, வல்லி - தளைபோலப் பந்தப்படுத்துவதான, ஆயம் - மகளிர்கூட்டம் என்று பொருள்கொள்ளுதலும் அமையும். வலத்தினில் வந்தது [வலம்வந்தது] - சூழ்ந்தது எனினுமாம். 'வல்லியாயம்வலத்தோடும் வந்தே,' 'வல்லியாயமருகினிவந்ததே' என்பன பிரதிபேதம். (சசு)

வேறு.

[இலக்குமணன் கூச்சமடைதல்.]

சஎ. ஆர்க்குநூ புரங்கள் பேரி யல்குலாந் தடந்தே ரொத்த
வேற்கண்வெம் புருவம் போர்வின் மெல்லியர் வளைந்த போது
போர்க்கருஞ் சிற்றம் பேர முகம்பெயர்ந் தொதுங்கிற் றல்லாற்
பார்க்கவு மஞ்சி ஞனப் பணையினு முயர்ந்த தோளான்.

(இ - ள்.) ஆர்க்கும் நூபுரங்கள் - ஆரவாரிக்கின்ற காற்சிலம்புகள், பேரி-(போர்க்குரிய) பேரிகைவாத்தியங்களாகவும், அல்குல்—, ஆம் தட தேர் - (போர்க்குவற்ற) பெரிய தேராகவும், ஒத்த கண் - ஒன்றோடு ஒன்று ஒத்த கண்கள், வேல் - வேற்படைகளாகவும், வெம் புருவம் - (ஆடவர்க்கு ஆசை நோய் மூட்டுதலாற்) கொடியனவான புருவங்கள், போர் வில் - போர்செய்யும் வீற்படைகளாகவும், (அமைய), மெல்லியர் வளைந்த போது - மகளிராகிய சேனை சூழ்ந்தபொழுது, அபணையினும் உயர்ந்ததோளான-பருமையைக் காட்டிலும் மேம்பட்ட தோள்களையுடையவனை அவலிலக்குமணன், போர்க்க அருஞ் சிற்றம் பேர - எவராலும் மாற்றவொண்ணாத தன்கோபம் மாற, முகம் பெயர்ந்து ஒதுங்கிற்று அல்லால் - தன்முகத்தை மாறவைத்துக் கொண்டு திரும்பியதல்லாமல், பார்க்கவும் அஞ்சினன் - (அம்மகளிரைக்) கண்ணெடுத்துப்பார்த்தற்கும் அச்சமுற்றான்; (எ - று.)

இதனால், இலக்குமணனது உத்தமகுணம் விளங்கும். "நிறனறிந்து, எதிலாரிற்கட் குருடனுய்..... ..நிற்பானேல் யாதும், அறங்கூற்வேண்டா அவற்கு" என்றது காண்க. ஒத்த கண் - தம்மில்தாமேயன்றி வேறு உவமை பெறுத கண்ண ளென்றவாறும். வெம்புருவம் - வெப்பத்தைச்செய்யும் புருவம்; வீருப்பத்தையறிவிக்கும் புருவ மென்றுமாம்; "வெம்மை வேண்டல்" என்பது தொல்காப்பியம். முதலிரண்டடி - உறவகம். "செல்லாச்சிலம்பின் வன்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொ, னல்குற்றேரணிந்த கொம்மை முலையெனும்புரவிபூட்டி, கல்லெழில் நெடுகணம்பாப் புருவவில்லுருவக் கோலிச், செல்வப்போர்க் காமன்சேனை செம்மன்மே லெழுந்ததன்றே" என்ற சிந்தாமணி நோக்கத்தக்கது மகளிர்கேர்பட்டமாத்திரத்தில் "முகம் முயற்சியிலுவன்றி இயல்பிலுல் திரும்பியமை தோன்ற, 'முகம்பெயர்த்து' எனத் தன்வினையாற் கூறினர். பருமையென்ற குணத்தின் எல்லை எவ்வளவு உண்டோ அதினும் அதிகமாகப் பருத்துள்ள தோளென்பார், 'பணையினு முயர்ந்த தோள்' என்றார். வரம்புகடந்து பருத்ததோ ளென்னுங் கருத்தை இங்ஙனங் கூறினர். பருமையைச் சிறுமையாக்குந் தோளென்க. போர்க்கரு - தொகுத்தல். உம்மை இரண்டனுள், முன்னது - இழிவுசிறப்பு; பின்னது - உயர்வுசிறப்பு.

'அந்தடக்தோட்சுற்ற, வேற்கண்விற்புருவம்போர்ப்ப மடக்தையர்மிடைந்த போது, போர்க்கருஞ் சேற்றம்போக்கி முகம்பெயர்த்தொதுங்கிற் றல்லால்,' 'பணையினும் பெரியதோளான்' என்பன பிரதிபேதம்.

இதுமுதல் திரு-செய்யுள்கள் - அரசியற்படலத்தின் முதற்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள் (எஎ)

[அவ்வாறன இலக்குமணனை நோக்கித் தாரை பேசத்தொடங்குதல்.]

சஅ. தாமரைவதனஞ்சாய்த்துத்தனுநெடுந்தரையினூன்றி
மாமியர்குழுவின்வந்தானுமெனமைந்தனிற்பப்
பூமியிலணங்கனுர்தம்பொதுவிடைப்புகுந்துபொற்றோட்
டீமனநெடுங்கட்டாரைநடுங்குவாளிணையசொன்னுள்.

(இ - ள்) மைந்தன் - லக்ஷ்மணகுமாரன், தாமரை வதனம் சாய்த்து - தாமரைமலர்போன்ற தனது முகத்தைச் சாயவைத்து [தலைகுனிந்து], தனு நெடுந் தரையின் ஊன்றி - (கையிற்பிடித்த) வில்லைப் பெரிய தரையிலே ஊன்றவைத்து, மாமியர் குழுவின் வந்தான் ஆம் என - மாமிமார்கூட்டத்தினிடையே வந்தவன்போல, நிற்ப - (ஸங்கோசங்கொண்டு) நிற்க,—பொன் தோள் தூ மனம் நெடுங் கண் தாரை - அழகிய தோள்களையும் பரிசுத்தமான மனத்தையும் நீண்டகண்களையு முடைய தாரையானவள், பூமியில் அணங்கு அனுர்தம் பொதுவிடை புகுந்த - நிலவுலகத்தில் விறல்கிய தேவமாது போன்றவர்களான அவ்வானர மகளிரது கூட்டத்தினிடையே ஒதுங்கி, நடுங்குவான் இனைய சொன்னுள் (கூச்சத்தால்) நடுங்குபவளாய் இவ்வார்த்தைகளைச் சொல்லலானுள்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

மாமியர்குழுவின் வந்தான்மைந்தன் என்று எடுத்த - மாமிமார் கூட்டத்தினிடையே வந்தவனை புதுமருமகன் போல வென்ற பதப்பொருள் - கூறலுமாம். பரபுருஷனெதிரில் வந்து நிற்றற்குக் கூசி மாதர்கூட்டத்தினிடையே புகுபவளும், அவனோகோக்கிப் பேசுதற்குச் சங்கோசப்பட்டு உள்ளமும் உடலும் கடுங்குபவளு மாயினன் கற்புநலஞ்சிறந்த தாரையென்க. (சுஅ)

[இலக்குமணனே நோக்கித் தாரை கொன்ன கோற்களோ இதுமுதல் இரண்டுகவிகளிற் கூறுகின்றார்.]

சுசு. ஐந்தமில்காலநோற்றவாற்றலுண்டாயினன்றி
யிந்திரன்முதலினோரெலெய்தலாமியல்பிற்றன்றே
மைந்தநின்பாதங்கொண்டெம்மனைவரப்பெற்றுவாழ்ந்தே
மூய்ந்தனம்நினையுந்தீர்ந்தேமுறு திவேறிதனினுண்டோ.

(இ - ள்.) மைந்த - வீரனே! அந்தம் இல் காலம் நோற்ற ஆற்றல் உண்டு ஆயின் அன்றி - அளவற்ற காலம் தவஞ்செய்த மகிமை உண்டாகாமல்லாமல், இந்திரன் முதலினோரால் எய்தல் ஆம் இயல்பிற்று அன்றே - (உன் வரவு) இந்திரன் முதலானவர்களாலும் பெறத்தக்க தன்மையையுடைய தன்றன்றோ? (அங்ஙனமாக), நின் பாதம் கொண்டு எம் மனை வர பெற்று வாழ்ந்தேம் - உனது திருவடிகளைக்கொண்டு (எங்கள்இருகத்திற்கு நீ) எழுந்தருளப்பெற்று மேம்பட்டோம் (யாம்); (ஆகவே), வினையும் தீர்ந்தேம் உய்ந்தனம் - கருமங்களனைத்தும் ஒழிந்து உயர்கதியடையப் பெற்றோம்; இதனின் உறுதி வேறு உண்டோ - இதைக்காட்டிலும் அடையும் கற்பயன் வேறு உளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

நின்பாதங்கொண்டு வர - நடந்துவர; பரிசுத்திகரமான நினது திருவடிகளின் ஸ்பரிசமாகிய மகிமை எங்கள் இருகத்திற்கு நேரும்படி நீ எழுந்தருளிப் பொன்னடிசாத்த வென்க. இனி, 'அந்தமில்காலம் எம்மனைவர' என்பதற்கு - அளவற்றகாலம் தவஞ்செய்த மகிமையுண்டாலன்றி (நினது திருவடி) இந்திரன் முதலானவர்களாலும் அடையத்தக்க தன்மையை யுடைய தன்றன்றோ? அத்தன்மையதான நின்திருவடியைக் கொண்டு நீ எங்கள் மனைக்கு வர என்று உரை கொள்ளவுமாம். உய்தல் - ஈடேறுதல். உறுதி - பேறு; புருஷார்த்தம். இந்திரன் என்ற வடசொல், பரமைசுவரியமுடையவனென்ற பொருள்படும். 'மைந்த' என்றது, இளையவனே! [இளையபெருமானே] என விளித்தவாறுமாம்.

'உறுதிவேறிதினுங்குண்டோ' என்பது பிரதிபேதம். (சுக)

நிற. வெய்தினீவருதலேக்கிலெறுவுறுஞ்சினவீர
செய்திதானுணர்கிலாதுதிருவுளந்தெரித்தியென்ற
ளையபோழிவேந்தனடியிணைபிரிகலாதா.
யெய்தியதென்னையென்றளிசையினியசொல்லாள்.

(இ - ள்.) வீர - வீரனே! நீ வெய்தின் வருதல் நோக்கி - நீ உக்கிர மாக வருதலைப் பார்த்து, சேனை - வானரசேனை, செய்தி தான் உணர்கிலாது - வருதலின்காரணத்தை (இனனதென்று) அறியாமல், வெருவும் ; அஞ்சும் (அதன் அச்சந்தீர்ந்திடுமாறு), திரு உளம் தெரித்தி - (உனது) திருவுள்ளக் கருத்தைச் சொல்வாய், என்றான் - என்றுசொன்னான்; (மற்றும்), ஐய - ஐயனே! ஆழி வேந்தன் அடி இணை பிரிகலாதாய் நீ - ஆஜ்ஞாசக்காத்தைச் செலுத்தும் அரசனான இராமபிரானது திருவடிகளை எந்நாளும் பிரியாது உடனுறைபவனான நீ, எய்தியது என்னை - (அப்பெருமானைவிட்டுப் பிரிந்து இங்கு) வந்தகாரியம் யாதோ? என்றான் - என்றும் வினவினான்: (யாவ னெனின்,—) இசையினும் இனிய சொல்லாள் - சங்கீதத்தைக் காட்டிலும் இனிமையான சொற்களை யுடையவளாகிய தாரை; (எ - று.)

வெய்தின் - வீரைவாக எனினுமாம். 'வெருவுறுஞ்சேனை' என்ற பாடத் திற்கு, நும்சேனை வெருவும் - உங்கள் சேனை அஞ்சும் என்று பொருளாம்; சுக்கிரீவனுக்கு அதீனமான சைனியத்தை 'நும்சேனை' என்றது, இராமலக்ஷ் மணரருவால் வாலியினிடமிருந்து சுக்கிரீவனுக்குக் கிடைத்தமைபற்றி உப சாரமாகக் கூறியதாம்; அதன்மேற் கோபமுண்டாகா திருக்குமாறு 'அது உங்களுடையதே' என்று உரிமை காட்டினாள். திருவுளம் - மேன்மையான மனம்; அதன் கருத்துக்கு இலக்கணை. தெரிதல் - தெரிவித்தல். ஆழிவேந் தன் = சக்கரவர்த்தி. மிகவும் இனிமையான தனது சொற்களால் இவ்வாறு சொல்லினளென்பார், 'என்ற ளிசையினுமினிய சொல்லாள்' என்றார்.

'வெருவுதும்', 'அடியினைப்பிரிகலாதாய்' என்பன பிரதிபேதம். (60)

[இலக்குமணன் தாரையை நோக்குதலும், அவ்வளவில் அவனுக்குத் தாய்மார்ஞாபகம் வருதலும்.]

நிக. ஆர்கொலோவுரைசெய்தாரென்றருள்வாச்சிற்றமஃகாப்
பார்குலாமுழுவெண்டிங்கள்பகலவந்தபடிவம்போலு
மோர்குலாமுகத்தினளையிறைமுகஞ்செடுத்துதுநோக்கித
தார்குலாமலங்கன்மார்பன்றுயரைநினைந்துதைந்தான்.

(இ - ள்) தார் குலாம் அலங்கல் மார்பன் - மலர்கள் விளங்கப் பெற்ற மாலையைத் தரிக்கும மார்பையுடையவனான இலக்குமணன்,—(அவ்வார்த் தையைக் கேட்டமாத்திரத்தில), அருள் வர - கருணையுண்டாக, சிற்றம அஃகா - கோபங்குறைந்தவனாய், உரைசெய்தார் ஆர் கொலோ என்று - (இத் தன்மையதான வார்த்தையை இவருக்குச்) சொன்னவர் யாரோவென்ற அறி யக் கருதியவனாய், குலாம் வெள் முழு திங்கள் பகல் பா வந்த படிவம் போலும் வா குலாம் முகத்தினளை - விளங்குகின்ற வெண்மையான பூர்ண சந்திரன் பகற்பொழுதிலே பூமியில் வந்த தோற்றம் போன்ற [ஒளி மழுங் கிய] அழகுவிளங்கின முகத்தையுடையவளான தாரையை, முகம் இறை எடுத்து நோக்கி - தன்முகத்தைச் சிறிது நிமிர்த்திப் பார்த்து, (அதனால்), தாயரை நினைந்து நைந்தான் - தன்தாய்மாரான சுமித்திரை முதலியோரை ஞாபகத்திற்கொண்டு வருந்தினான்; (எ - று.)

பேரழகுடையவளாய் விளங்கிப் பேரரசனது உத்தமபத்தினியாய் நெடுங் காலம் வாழ்ந்து பின்பு அக்கணவனையிழந்து கைம்பெண்ணுக்கிக் கண்டவரிரங் கத்தக்க நிலைமையை யடைந்ததுபற்றி, தாரையைப் பார்த்தவுடன் தன் தாய்மார் ஞாபகத்தில் வரப்பெற்றவனுய் வருந்தலாயினன இலக்குமண னெனக். தனனைப்போலவே பிறரையுங் கருதுதல் அருளன்புகளையுடைய அன்றோரியல்பாதல் பற்றி, இலக்குமணன பிறர் குடும்பத்தைப் பார்த்த வுடன தன குடும்பத்தின ஞாபகங் கொள்ளலானுன். இங்கு, 'தாயர்' என் றது - சுமித்திரை, கௌசல்யை எனனும் இருவரையே குறிப்பதெனக் கொள்ளலாம். மேல் நிகழ் ஆஞ் செய்யுளின முதலடியைக் காண்க. சந்திரமண் டலம் அத்தாரத்தைவிட்டுத் தரையில்வந்த தோற்ற மென்றது, இல்போது வமையாம்; இனி, பார்குலாம் - உலகத்தில் விளங்குகின்ற என்றலு மொன்று. 'ஏகுலாமுகத்தினுள' என்றது, முன்பு இருந்த நிலைமையைப் பற்றி, அவவகைச் சிறப்பை இப்பொழுதும் குறிப்பா லுணரலாம்படியுள்ள முகமென்னலாம். 'தார்குலாமறங்கண்மார்பு' எனறது, இயறகைபற்றிய தடை மொழியாம். சுக்கிரீவன் முதலியோர்க்கு அச்சத்தை யுண்டாக்கும்பொருட் டுப் போர்ச்செலவிறகு அறிகுறியாகும் வஞ்சிப்பூமாலையை யணிந்துளளா னெனறுங் கொள்ளலாம். தார - மலர். இனி, 'தாரகுலாம் அலங்கல்மார்பன்' எனறதற்கு, தனனிடத்தே தரிக்கப்படும் மாலை விளங்குதற்குக் காரணமான ஒளிசெய்தலையுடைய மார்பையுடையவ னென்று உரைத்தலுங் கூடும். சீற்றமஃகா கைந்தான் - சினவினை முதல்வினையைக் கொண்ட முடிபு.

'சீறறமஃக', 'படிவம்போன்றும்', 'தார்குலாவலங்கல்' என்பன பிரதி பேதம். (இக)

[இலக்குமணன் கண்ணீர் துளித்தல்.]

நிஉ. மங்கலவணியைநீக்கிமணியணிதுறந்துவாசக
கொங்கலர்கோதைமாற்றிக்குங்குமஞ்சாந்தங்கொட்டாப்
பொங்குவெம்முலைகள்பூகக்கழுதைதோடுமறையப்போர்த்த
நங்கையைக்கண்டவள்ளனயனங்கள்பனிப்பநின்றுன்.

(இ - ள்.) மங்கலம் அணியை நீக்கி - திருமங்கலியத்தை யொழித்து, மணி அணி துறந்து - இரத்தினமயமான மறறையாபரணங்களையும் அணி யாதுவிட்டு, வாசம கொங்கு அலர் கோதை மாறறி - நறுமணமுள்ளதும் தேன பெருகுவதுமான மலாமாலையைச் சூடுதலை யொழித்து, குங்குமம் சாந் தம கொட்டா பொங்கு வெம முலைகள் பூகம் கழுத்தொடு மறைய போர்த்த - குங்குமப்பூவின் குழம்பையும சந்தனகுழம்பையும் பூசுதலில்லாத பருத்த வெய்ய தனங்கள் பாக்குமரம்போனற கழுத்திடன மறையும்படி (மேலாடை யால) னெருகப்போர்த்தினள, நங்கையை - மகளிரிறநிறந்தவளான அத் தாரையை, கண்ட - பாரத்த, வள்ளல் - வரையாதருளுமியல்பினனான இளைய பெருமாள், நயனங்கள் பனிப்ப நின்றுன் - (பரிதாபகரமான அதனோற்றத் தைத கண்டதனுலும் தனதாயரை ஞாபகத்திறகொண்டதனுலும்) தன் கண் தன் நீர்துளிக்கப்பெற்றவனுய் நின்றுன்; (எ - று.)

இளமையான பாக்குமரத்தின கணுக்கள் கழுத்திற்கு ஒரையீலும், செய்ப்பிலும் உவமமாம்; ''ஈஞ்தவிளங்கமுகின மாகதமணிக்கண்ணும்..... தாஞகி..... காஞர்ந்தநிரள்கழுதஅக்கவின சிறைகொண்டிருந்ததே'' என்பது சிந்தாமணி. கங்கை - உததமஸ்நிரீ இவவாறு கண்நீர்மல்குதழ்குக்காரணம், தன் குடும்பத்தையும் பிறாகுடும்பத்தையும் அபேதமாக நினைக்கும் வள்ளன்மை யென்பது விளங்க. இங்கு 'வள்ளல்' எனறார். பூகம், நயகம்-வட சொற்கள். முன்னிரண்டடியிற் குறிததவை. கைமமைக்கோலம், 'மங்கல மரபுநீங்கி' எனபது பிரதிபேதம். (இஉ)

[இலக்குமணன் தான்வந்தகாரியத்தைச் சொல்லத்தொடங்குதல்.]

நிகூ. இனையரானென்னையீன்றவிருவருமென்னவந்த
நினைவினைனயர்ப்புச்செனறகெஞ்சினனெடிதுநின்றான்
வினைவினுட்கெதிரோர்மாற்றமவிளமபவுமவேண்டுமென்றப்
புனைகுழலாட்குவந்தகாரியம்புகலவதானான்.

(இ - ள்.) 'என்னை ஈன்ற இருவரும - எனனைப்பெற்ற தாய்மாரிருவரும், இனையர் - இத்தனமையராகவேயிருப்ப', எனன வந்த நினைவினை - எனறு தன மனத்தில் தோனறிய ஞாபகத்தினால், அயர்ப்பு சென்றதளர்ச்சியிக்க, நெஞ்சினன் - மனத்தையுடையவனாய், கெடிது நின்றான் - நெடும்பொழுது ஒனறுந்தோனறாது நினறவனன அவவிலகுமணன், வினவினுட்கு எதிர் ஒர்மாற்றம் விளமபவும் வேண்டும எனறு - (தனனை)வினவிய வளுக்கு உத்தரமாக ஒருவாாதையைசொல்லாதிருத்தலும தகுதியனறு என்று எணணி, அ புனை குழலாட்கு-அழகிய கூந்தலையுடையவளான அத்தாரையை நோக்கி, வந்த காரியம புகல்வது ஆனன - (தான) வந்தகாரியமினனதென்று சொல்லலானன்; (எ - று.) அதனை, அடுத்த கவியிறாண்க. ஆம் - அசை.

இராமனைப் பெற்ற தாயான கௌசல்லையையும் தனனைப்பெற்ற தாயான சுமித்திரையைப்போலவே பாவிப்பவ னதலால், 'எனனைபின்றவிருவரும்' எனறன. பாதன தாயான கைகேயியை அங்ஙனம்பாவியாது விடுத்து, அவள தனனை நிருதிதமையனறை வலியவனவாசமபுகுதினனென்பதுபற்றி அவள்விஷயமாகத் தனமனதததிறகொண்ட மாறுபாட்டின் தொடர்பினு லெனக. மாதரோடு பேசுதலில் இலக்குமணனுக்கு உளள ஸங்கோசம், மூனறுமடியால் விளங்கும். புனை குழல - அலங்கரிததகூந்தலென இறந்தகாலவினைதொகையுமாம ; எனறது, பண்டைக்கிலையைப்பறறியாம்.

''அயர்வுசெனற', 'வினம்பலும்வேண்டுமென்ன' எனபன பிரதிபேதம்.

[இலக்குமணன் சொல்லுதல்.]

நிச. சேனையும்யானுந்தேடிதமதேவியைததருவேனென்று
மானவற்குரைததமாற்றமறுதனனருக்கன்மைந்த
னூனவனமைதிவில்லியறியெனவருளின்வருதென்
மேனிலையினையான்செய்கையினோந்தவாவிளம்புகென்றான்.

(இ - ள்.) அருக்கன் மைந்தன் - சூரியன்மகனுன சுக்கிரீவன், சேனையும் யானும் தேவியை தேடி தருவென் என்ற மானவற்கு உரைத்த மாற்றம் மறந்தனன் - 'எனதுசேனையும யானுமாக ஜாகரூபிப்பாட்டியை தேடிக் கொணர்ந்து கொடுப்பேன்' என்று மநுகுலத்தில் தோன்றியவனுன ஸ்ரீராம பிரானுக்குச் சொனன வார்த்தையை மறந்துவிட்டான; ஆனவன அமைதி வல்லை அறி என-'அங்ஙனமான அச்சுகரீவனுடைய செயதியை விரைவிற் சென்று நீ அறிந்துவருவாயாக' எனறு (அப்பெருமான என்னைநோக்கிச்) சொல்ல, அருளின வந்தேன - அக்கட்டளையினல் இகருவந்தேன், (யான), மேல் நிலை அனையான செய்கை விளைந்த ஆ வினம்புக - 'மேனமையான அரசாட்சிநிலைமையைப் பெறறுகின்ற அச்சுகரீவனது செயதி நிகழ்ந்த விதத்தைச் சொல்வாயாக', எனறான - என்று (தாரையைநோக்கி இலகுமணன்) கூறினன; (எ - று.)

யானும் சேனையும தருவென - தன்மையொருமையும் படர்க்கையொருமையும விரவிச் சிறப்பினல் தன்மையொருமை வினையைப் பெறறுவந்த முடிபு; மைழவமைதி. அமைதி - நிலைமை. மேல்நிலை - செல்வ அதிகாரகன; மேல் - இனி, அனையானசெய்கை விளைந்தவகையை, நிலை - உனனபடி, வினம்புக எனறும பதப்பொருன கொள்ளலாம். 'விளைந்தவாவிளையும்' எனற பாடததிறகு - இனி நடகுன காரியம அச்சுகரீவனது செய்கை நிகழ்ந்த தற்கு ஏற்றபடி நிகழும் எனற (அச்சமுறுதலுமாறு) கூறினனெனப் பொருளாம். 'விழைந்தவாவிளையும்' எனபது பிரதிபேதம. (இச)

[இதுபுதல் ஐந்துகவிகள் - இலக்குமணனுக்குத் தாரைகூறுஞ் சமாதானம்.]

நூடு. சிறுவாயல்லையசிறியவர்தீமைசெய்தா
லாறுவாய்யேலான்மற்றருளாயர்தானல்லன்
வேறுவேறுலகமெங்குந்தாதைவிடுதலவெலலை
யூறுமாநோக்கித்தாழ்ததானுதவிமாறுதவியுண்டோ.

(இ - ன;) ஐய - ஐயனே! சிறுவாய் அல்லை - கோபிக்கற பாலையல்லை; சிறியவர் தீமை செய்தால் - (அறிவுமுதலியவறறிற்) சிறியவராகள் தீங்குசெயதால், ஆறுவாய் - (அவற்றிறபொர்யவனுன நீ) பொறுதலதத் தணிந்திருக்கக் கடவாய; (அஙஙனமிருப்பதற்கு), நீ அலால் மற்று ஆர் உளர் - நீயல்லாமல் வேறுயார் தருதியுடையவர இருகின்றார? [எவருமில்லையென்றபடி]; (இதன் பிறக): அயர்ந்தான அலலன - (சுகரீவனுன தான சொனன சொலலை) மறந்தவனலலன; உலகம எகுமு வேறு வேறு தாதரை விடுதல (வாநரசேனகளோத நிரட்டுதறகாக) உலகததில எலலாவிடதிலும' தனிதனி தாதரையனுப்பி, அ எல்லை ஊறுமு ஆ நோகி - அவவிடஙகளிலிருந்து அசசேனைகன பலவழியாலும வந்துசோதலை எதிர்பார்த்துக்கொண்டு, தாழ்ததான. தாமதித்திருகின்றான்; (இவைகிடக்க); உதவி மாறு உதவி உண்டோ - (நீங்கள் அவனுகுச்செய்த) உபகாரத்திற்குதகுபடி (அவன உகுட்குச்செய்யும்) பிரதியுபகாரமொனறு இருகின்றதோ? [இல்லையென்றபடி]; (எ - று.)

"செய்யாமற்செய்த உதவி"யும், "காலத்தினஞ்செய்த கன்றி"பு மதலால், அதற்குஈடான கைம்மாறொன்றில்லை யென்றனள். ஐயஸ்வாமி! தலைமைபற்றிய விளி. சிறியவர் நீமைசெய்தால் ஆறவார் சீ அலால் மற்று ஆருளர்—"சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பத கடனே", ஊறுமா என்றதை 'நீரூறுவது' என்றுற்போலக் கோள்க. இனி, உறும் என்பது ஊறும் என நீட்டல்விகாரம் பெற்றதென்று கொள்ளினும் இழுக்காது. மத்திமதீபமாக 'சிறியவர் நிமை செய்தால்' என்பதை 'சிறுவாயல்லே' என்றதனோடுங் கூட்டலாம். அயர்ந்தானல்லன் - கன்றி மறந்தவனல்லன் எனினுமாம். 'உதவுமாறுதலியுண்டோ' என்பது பிரதிபேதம். (இஇ)

நிசு. ஆயிரகோடிதூதரரிக்கணமழைப்பவரீண
போயினர்புகுதுநாளும்புகுந்ததுபுகல்புக்கோர்க்குத்
தாயினுமினியநீரேதணிதிராற்றருமமஃதாற்
றீயனசெய்யாராயின்யாவரேசெறுநராவார்.

(இ - ன்.) ஆயிர கோடி தூதர் - ஆயிரங்கோடி தூதர்கள், அரி கணம் அழைப்ப - குரங்குகளின் கூட்டத்தை அழைத்துவருதற்பொருட்டு, ஆணை போயினர் - சுக்கிரீவன் கட்டளைப்படி (உலகத்தில்எங்கும்) போயிருக்கின்றார்கள்; புகுதும் நாளும் புகுந்தது - (அவ்வானரசமூகங்கள்) இங்குவக்து சேர வேண்டிய நாளும் சமீபித்தது; (அன்றியும்), புகல் புக்கோர்க்கு தாயினும் இனிய நீரே - சரணமடைந்தவர்கட்குப் பெற்றதாயைக்காட்டிலும் இனிமை செய்கின்ற நீங்களே, தணிதிர் - கோபந்தணியக்கடவீர்; அஃது தருமம் - அவ்வாறு பொறுத்தருள்வது தரும மாகும்; தீயன செய்யார் ஆயின் - தீய செயல்களைச் செய்யாமலிருப்பாரானால், செறுநர் ஆவார் யாவரே - தண்டித்தற்கு உரியராகுபவர் எவரோதாம்? (எ - று.)—'ஆல்' இரண்டும் - அசை.

தீயனசெய்து தண்டித்தற்கு உரியராய் நின்றவரது குற்றத்தைப் பொறுத்தருள்வது பெருமையாமெயன்றித் தீயனசெய்யாதாரிடம் அன்பு பாராட்டுவது சிறப்பாகா தென்பது, ஈற்றடியின் தாற்பரியம். கோடி - தூறு லகும். 'ஆயிரகோடி' - மிகப்பல என்றபடி. இத்தொடரில் வருமொழி வட மொழியாதலின், வலிஇயல்பு. அரிக்கணம் - ஹரிகணம்; தற்பவமாய்த் தமிழில் வந்தமையால், தமிழிலக்கணவிதிப்பற்றி வலிமிக்கது. "தாயொக்குமன்பின்" என்றபடி மக்களிடத்து அன்புவைத்தலில் தாய் சிறத்தலால், அவளையெடுத்துக்கூறினர்; "நற்றாயினுமினியான்" என்றார் பிறரும். நீர் தணிதிர் - உயர்வுப்பன்மை யென்றவது, இராமனை உளப்படுத்திய பன்மை யென்றவுமாகொள்க. செறுநர், க்-பெயரிடைநிலை. உங்கள்கட்டளைக்கேற்ப வென்ற பொருளுந் தோன்ற, 'ஆணைபோயினர்' எனப் பொதுப்படக் கூறினள். சரணுக்தரகூடத்தைக் காட்டிலும் மேம்பட்டதொரு தருமமில்லை யாதலால், 'தருமமஃது' எனப்பட்டது. 'தாயினுமல்ல,' 'யாவரோ சிறியராவார்' என்பன பிரதிபேதம். (இக)

(இ). அடைந்தவர்க்கபயநீவிரருளியவளவில்செல்வர்
தொடர்ந்துநும்பணியிற்றீர்ந்தாலதுவுநுங்தொழிலேயன்றே
மடந்தைதன்பொருட்டால்வந்தவாளமர்க்களத்துமாண்டு
கிடந்திலரென்னிற்பின்னுங்கிற்குமோகேண்மையம்மா.

(இ - ள்.) நீவிர் - நீங்கள், அடைந்தவர்க்கு - (உங்களைச்) சரணமடைந்தவர்க்கு, அபயம் அருளிய - அபயப்பிரதானஞ்செய்து கொடுத்த, அளவு இல் செல்வம் - அளவற்ற செல்வம், தொடர்ந்து - கூடியதனால், (அச்சரணம் புக்கவர் களித்து), நும் பணியின் தீர்ந்தால் - உங்கள் கட்டளையினின்றும் விலகினால் அதவும்—நும் தொழிலே அன்றே-உங்கள் செயலாகவே கொள்ளத்தக்கதன்றே? (இதனிற்க): மடந்தைதன்பொருட்டு வந்த - பெண் காரணமாக வேர்கின்ற, வான் அமர் - கொடிய போர் நிகழும், களத்து - யுத்தகளத்தில், மாண்டு கிடந்திலர் என்னின் - (கண்பர்க்காகச் சென்றுபொருது) இறந்துகிடவாராயின், பின்னும் - அதன்பின்பும், கேண்மை நிற்குமோ - (சேர்ந்தவர்க்கும் சேரப்பட்டவர்க்கும்) நிகேகம் நிலைபெறுமோ? [பெருது என்றபடி]; (ஏ - மு.)—ஆல் - அசை, அம்மா - ஈற்றசை.

நீங்கள் 'தயைசெய்து கொடுத்த வரம்பற்ற செல்வம் கிடைத்ததனால் அச்செல்வம் பெற்றவர் களித்து உங்கள் கட்டளையினின்று தவறினால் அதவும் உங்கள் தொழிலாலாகியதாகவே பாவித்துப் பொறுத்தருளத்தக்கதன்றே வென்பது, மூதலிரண்டடிகளின் பொருள்: 'அருளியவளவிற் செல்வம் தொடர்ந்து நும்பணியிற்றீர்ந்தாற் சொல்லினும் பெருமையன்றே' என்ற பாடத்திற்கு - உங்களைச்சரணமடைந்தவர்க்கு நீங்கள் அபயப்பிரதானஞ் செய்தமாத்திரத்தில் செல்வங்கிடைக்கப் பெற்றதனால் அச்சரண்புக்கவர் (மெய்ம்மறந்து) உங்கள்கட்டளையினின்றுதவறினால் சொல்லுமிடத்து (அதவும்) உங்கள்பெருமையேயாகுமன்றே? எனறு பொருளாம். உங்களாற் கிடைத்த செல்வம் மிகக்களித்தமெய்ம்மறகுமபடியான அளவினதனப் பெருமையின்பாற்படு மென்க. வான் அமர் - ஆயுதங்களைக்கொண்டுசெய்யும் போரெனினுமாம். நீங்கள் சுக்கிரீவனுக்கு அரசாட்சிச் செல்வத்தோடு மனைவியை மீட்டுக்கொடுத்த உபகாரத்திற்கு ஈடாக, அவன், இனிச் சீதையை மீட்டற்பொருட்டு அரக்கரோடு கேருங் கொடியபோரில் உங்கள் பக்கத்தே சென்று பொருது வெற்றி பெற்றாலும் அது கூடாதவிடத்து அவ்வெதிரிகளாற் கொல்லப்பட்டு இறந்தபோனாலும், நிகேகதருமத்தை நிறைவேற்றிய தாகுமேயன்றி அங்ஙனஞ் செய்யாவிட்டால் பின்பு உங்கட்கும் அவனுக்கும் நிகேகம் நிற்குமோ வென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. அபயம் அருளுதல் - அஞ்ச வேண்டாவென்று அணிவகூறிப் பாதுகாத்தல்.

'அதவும் வெந்தொழிலேயன்றே', 'பின்னே நிற்குமோ' என்பன பிரதிபேதம். (இஎ)

(இ). செம்மைசேருள்ளத்தீர்கள்செய்ததேபெருதலிதீரா
வெம்மைசேர்பகையுமாற்றியரசுவீற்றிருக்கவிட்டீ
ரும்மையேயிகழ்வரென்னினெளிமையுமொழிவதொன்றே
விம்மையேவறுமையெய்தியிருமையுமிழப்பான்றே.

(இ - ன்.) செம்மை சேர் உள்ளத்தீர்கள்-சேர்மைபொருந்திய மனத்தை யுடையவர்களான நீங்கள், செய்த பேர் உதவி தீரா - (சுக்கிரீவனுக்குச்)செய் கின்ற பெரிய உபகாரம் (என்றென்றைக்கும்) அழியாமலிருக்கும்படி, வெம் மை சேர் பகையும் மாற்றி - உக்கிரத்தன்மை பொருந்திய பகைவனையும் ஒழித்து, அரசு வீற்றிருக்க விட்டீர் - அரசாட்சி பெற்று மிக்க சிறப்புட னிருக்கும்படி செய்து விட்டீர்கள்; (அங்ஙனம் உங்களாற் பேருதவி பெற்ற வர்), உம்மையே இகழ்வர் என்னின் - உங்களையே அலக்ஷ்யஞ்செய்வாரால், எளிமை ஆய் ஒழிவது ஒன்றோ-இழிகுணத்தின்பாற்பட்டுப் பெருமை யொழி வது மாத்திரமோ! இம்மையே வறுமை எய்தி - (அக்கொடுவினைப்பயனால்) இப்பிறப்பிலேயே தரித்திரமடைந்து, இருமையும் இழப்பர் அன்றே-இம்மை மறுமைப்பயன்களிரண்டையும் இழந்துவிடுவான்றோ ? (எ - று.)

இம்மையிற் செல்வத்தோடு புகழும் அழிந்து மறுமையில் நற்கதிபெறுத லின்றி நரகத்தையும் அடைவ ரென்பதாம். 'மிகவும் அதிகமான நல்வினை தீவினைகளால் இப்பிறப்பிலேயே பயன் அனுபவிக்கப்படும்' என்னும் நூற் கொள்கைபற்றி, 'இம்மையே வறுமையெய்தி' எனப்பட்டது. வறுமையா வது - நுகரப்படுவன யாவு மில்லாமை. செம்மை - நல்லசிந்தனை. தீரா - தீராமல் என ஈறுகெட்டஎதிர்மறைவினையெச்சம்; தீராத என ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக் கொண்டு, நீங்கள் செய்யும் பேருதவியால் ஒழித்தற்கு அரிய வெப்பம்பொருந்திய பகைவனையும் ஒழித்து என்று உரைத் தலுமாம். 'தீர' என்ற பாடத்திற்கு - உதவியால் வெம்மைசேர்பகைவனை யும் பற்றறும்படி ஒழித்து என்ற பொருளாம். 'பகை' என்றது, வாலியை; பகை - பகைவனுக்குப் பண்பாகுபெயர்; உம்மை - உயர்வு சிறப்போடு எதி ராதழுவியஎச்சமுமாம். வீறு - வேறெருவர்க்கில்லாத சிறப்பு. உம்மையே-இவ்வாறு பேருதவிசெய்த உங்களையே யென எகாரம் - உயர்வு சிறப்பாம். 'எளிமையாய்ஒழிவதொன்றோ' என்பதற்கு - அவவாறு இகழ்தல் அற்பமா யொழிவதொரு காரியமாமோ வென்றலு மொன்று. இம்மையே யென்ற எகாரம் - தேற்றத்தோடு விரைவையுங் காட்டும். அன்றே - தேற்றம்.

'அரசுவீற்றிருக்கவிட்ட', 'எழுமையுமிழப்பான்றே' என்பன பிரதி பேதம். (இஅ)

நகூ. ஆண்டுபோர்வாலியாற்றன்மாற்றியதம்பொன்றுயின்
வேண்டுமோதுணைவர்நும்பால்வில்லினுமிக்கதுண்டோ
தேண்டுவார்த்தேடுகின்றீர்தேவியையதனைச்செவ்வே
பூண்டுநின்றுய்தற்பாலார்தங்கழல்புகுந்தீரோரும்.

• (இ - ன்.) ஆண்டு - அப்பொழுது, போர் வாலி ஆற்றல் மாற்றியது - போர்செய்தலிற் சிறந்த வாலியின் வலிமையை ஒழித்தது [வாலியைக்கொன் றது], அம்பு ஒன்று - (உங்கள்) பாணமொன்றே, ஆயின் - என்றால், துணை வர் வேண்டுமோ - (பகையழித்தற்காக உங்கட்குச்) சகாயமானவர் வேண்டு மோ? நும்பால் வில்லினும் மிக்கது உண்டோ - உங்களிடமுள்ள வில்லைக்

காட்டிலும் மேலான்தொரு அணையும் உளதோ! (மற்று) சீக்கள்), தேவியை தேண்டுவார் தேடுகின்றீர் - பிராட்டியிருக்குமிடத்தைத் தேடிக்காண்பவரை வேண்டிநிற்கின்றீர்; (இவ்வளவுமாத்திரமே); நும் கழல் புகுந்தோரும் - உங்கள் திருவடியைச் சரணமடைந்துள்ளவரான சுக்கிரீவன் முதலியோரும், அதனை செவ்வே பூண்டு கின்று உய்தல் பாலார் - அப்பணிவிடையைச் செவ்வையாய் ஏற்றுக்கொண்டு செய்து கின்று ஈடேறக் கடமைப்பட்டவராவர்.

ஆண்டு-அவ்வாறு எனினுமாம். ஆண்டுப்போரென வலிமிகாதது, ஒசை நயம்பற்றி. 'ஆண்டபோர்' என்பதும் பாடம். ஆயின் - ஆதலா லென்றது மாம்: வேண்டும்என்ற சொல் - வியங்கோள்வினைமுற்றுய் ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாதலால், அணைவர் என்ற பலர்பாலுக்கு முடிக்குஞ் சொல்லாயிற்று. 'வேண்டுமோ அணைவர்' என்றதனால், நீங்கள் அசகாயசூர ரென்ற வாறும்: "கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவ" என்றான் முன்பு வாலியும். நம்பால், பால் - ஏழனுருபு. தேண்டுவார், ணகரமெய் - விரித்தல் விகாரம்.

'மாற்றியவம்பொன்றல்லால், வேண்டுமோ அணையும்' என்பது பிரதிபேதம். (இக)

[இலக்குமணன் கோபந்தணிந்தமை கண்டு அநுமான் அருகில்வருதல்.]

கூ0. என்றவனுரைத்தமாற்றம்யாவையுமினிதுகேட்டு
கன்றுணர்கேள்வியாளனருள்வரகாணுட்கொண்டா
னின்றனனிற்றலோடுநீத்தனன்முனிவென்றுன்னு
வன்றிணைவயிரத்திண்டோண்மாருதிமருங்கின்வந்தான்.

(இ - ன்.) என்ற அவன் உரைத்த மாற்றம் யாவையும் இனிது கேட்டு - என்ற அத்தாரை சொன்ன வார்த்தைகளே யெல்லாம் நன்றாகக்கேட்டு, கன்று உணர் கேள்வியாளன் - நன்றாகக் கேட்டுணர்ந்த நூற்கேள்விகளே யுடையவனான இலக்குமணன், அருள் வர - கருணைவளர, காண் உள் கொண்டான் நின்றனன் - வெட்கத்தை மனத்திற்கொண்டவனாய் நின்றான்; நிற்றலோடும் - அவ்வாறு நின்றவளவில், முனிவு நீத்தனன் என்று உன்னு - கோபத்தை யொழித்துவிட்டானென்று எண்ணி, வல் அணை வயிரம் திண் தோள் மாருதி - வலியபோர்த்தணையாகவுள்ள உறுதியமைந்தபலங்கொண்ட தோள்களையுடைய அநுமான், மருங்கின் வந்தான் - இலக்குமணனருகில் வந்து சேர்ந்தான்; (எ - று.)

காணமாவது - செய்யத்தகாத செயலைக் குறித்து உள்ளமொடுங்குதல். தகுதியல்லாதவிடத்திற் கோபங்கொண்டன மென்பது தோன்ற, காணத்தையுட்கொண்டன னென்க. காண் - முதனிலைத்தொழிற்பெயர்.

'கன்றுணர் கேள்வியாரென்றருள்வர காணுட் கொண்டான்' என்பது பிரதிபேதம். (கo)

[இலக்குமணன் அனுமனைநோக்கி ஒன்று சொல்லுதல்.]

சுக. வந்தடிவணங்கிநின்றமாருதிவதனநோக்கி
யந்தமில்கேள்விநீயுமபர்த்தணையாகுமன்றே
முந்தினசெய்கையென்றான்முனிவினுமுளைக்குமன்பா
னெந்தைகேட்டருளுகென்னவியம்பினனியம்பவல்லான்.

(இ - ள்) முனிவினும் முளைக்கும் அன்பான் - கோபங்கொண்டசமயத்திலும் தோன்றுகின்ற அன்பையுடையவனான இலக்குமணன்,—வந்து அடிவணங்கி நின்ற மாருதி வதனம் நோக்கி - அருகில் வந்து (தனது) பாதங்களில் நமஸ்கரித்துநின்ற அநுமானுடைய முகத்தைப் பார்த்து,—'தீர்த்தம் இல் கேள்வி நீயும் - அளவில்லாத நூற்கேள்விகளையுடைய நீயும், முந்தின செய்கை அயர்த்தனை அன்றே - முனபுநடந்த செய்தியை மறந்துவிட்டாயன்றே?' என்றான் - எனறுசொன்னான்; (அதுகேட்டு), இயம்ப வல்லான் - பேசுதலில்வல்லவனான அநுமான, எந்தை கேட்டு அருளுக எனனு - 'எமது தலைவனே! (அடியேனசொலவதைக்) கேட்டருள்வாயாக' எனறுசொல்லி, இயமபினன - மற்றும் கூறலானான; (எ - று.)--அதனை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க. ஆகும் - அசை.

அன்றே - தேற்றம். முந்தினசெய்கை - மழைக்காலம் கழிந்தவுடன் சேனையோடு வரவேண்டு மெனபது. எந்தை-அண்மைவிளி. 'ஆகுமனறே', 'இயம்பல்வல்லான' என்பன பிரதிபேதம. (சுக)

சுஉ. சிதைவகல்காதற்றாயைதந்தையைக்குருவைதெய்வப்
பதவியந்தணரையாவைப்பாலரைப்பாவைமாரை
வதைபுரிகுநர்க்குமுண்டாமாற்றலாமாற்றண்மாயா
வுதவிகொன்றார்க்கொன்றேறனுமொழிக்கலாமுபாயமுண்டோ.

(இ - ள்.) சிதைவு அகல் காதல் தாயை - கெடுதலில்லாத அனபையுடைய தாயையும், தந்தையை - தந்தையையும், குருவை குருவையும், தெய்வம் பதவி அந்தணரை - தெய்வதத்னமையையுடைய பிராமணாகளையும், ஆவை - பசுக்களையும், பாலரை - சிசுக்களையும, பாவைமாரை - மகளிரையும், வதை புரிகுநர்க்கும் - கொலைசெய்தவாகளுக்கும், மாறறல் ஆம ஆற்றல் உண்டு ஆம் - (அந்தப்பாவங்களைப) பரிகரிகக்கதக்க உபாய முளதாம; மாயா உதவி கொன்றார்க்கு - அழியாத உபகாரத்தை மறந்தவர்கட்கோ, ஒழிக்கல் ஆம் உபாயம் ஒனறேனும உண்டோ - (அபபாவதனை) ஒழிக்கும் வழி யொனறுமிலும் உளதோ? [இல்லை யெனறபடி] (எ - று.)

மாத்ருஹத்தி, பித்ருஹத்தி, குருஹத்தி, பிரமஹத்தி, பசுஹத்தி, சிசுஹத்தி, ஸ்திரீஹத்தி யெனனுங கொடும்பாதகங்களுக்கெல்லாம அப்பாவம் நீக்கும் பரிகாரமாகிய பிராயச்சித்தம் உண்டு; செயங்ஙனமி மறறதனுக்கோ அது இல்லை யெனபதாம். இதனால், மகாபாதகங்களனைதினும் கொடியது இதுவென செய்ங்ஙனமி கொல்லுதலின் மிக்கதொடுமை கூறப்பட்டது;

"எங்ஙன்றிகொன்றூர்க்கு மூய்வுண்டா மூய்வில்லே, செய்ங்ஙன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளும், "ஆன்முலே, யறுத்த அறனிலோர்க்கும், மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்க்கும், பார்ப்பாரத்தப்பிய கொடுமை யோர்க்கும், 'வழுவாய்மருங்கிற் கழுவாயுமுளவென, நிலம்புடைபெயர்ந்தா யினு மொருவன, செய்திகொன்றூர்க் குய்தியில்லென, அறம்பாடிற்றே" என்ற புறநானூறும் நோக்கத்தக்கன.

தாய் அன்பிற்சிறத்தல்பற்றி, அவட்கு 'சிதைவகல்காதல்' என்ற அடை மொழி கொடுக்கப்பட்டது. இனி, இவ்விசேஷணத்தைத் தந்தைமுதலி யோர்க்கும் கூட்டி யுரைத்தலு மொன்று. தாயை முதலிலவைத்தது, சிறப் புப்பற்றி. தாய் தந்தை ஆசாரியன இவர்களே முறையே நிறுதிய வேத மும். குருவென்ற வடசொல், அஜ்ஞாநமாகிய மனவிருளே யொழிப்பவ னென்று காரணப்பொருள்பெறும்; கு - இருள, ரு - ஒழிபவன். தெய்வப் பதவியந்தணர் - தெய்வம்போலக் கொண்டாடத்தக்க சிறப்பு நிலைமையை யுடையராகிய பிராமணர்; "கரியமாலினுங் கண்ணுதலானினும், உரியதாம மரைமேலுறைவானினும், விரியும்பூதமொரைந்தினும் மெய்யினும், பெரிய ரந்தணர் பேணுதியுளத்தால்" எனறு அயோத்தியாகாண்டத்திற்கூறியதுங் காண்க. அந்தணர்க்கு 'பூதேவர்' என ஒருபெயரிருத்தலும் உணரத்தக்கது. தெய்வப்பதவி - சாபாநுக்கிரகசக்தியுடைமை. பாவைமார் - சித்திரப்பதுமை போலழகியவர். மாயாதவி - பயனழியாத உபகாரம்; மறக்கத்தகாத நனறி.

'சிதைவிலாக்காதல்', 'என்றேனும்', 'எங்கேனும்' எனபன பிரதிபேதம்.

சுஉ. ஐயநும்மோடுமெங்களரிக்குலத்தரசனேடு
மெய்யுறுகேண்மையாகமேலோளவிளைவதாய
செய்கையென்செய்கையன்றோவன்னதுசிதையுமாயி
னுய்வகையெவர்க்குமுண்டோவுணர்வுமாசுண்டதன்றோ.

(இ - ன்.) ஐய - ஸ்வாமி! நும்மோடும் - உங்களுக்கும், எங்கள அரி குல த்தி அரசனேடும - வாநரசமூகங்கட்கு அரசனுகும எங்கள் சுக்கிரீவனுக்கும், (ஒருவரோடொருவர்க்கு), மெய் உறு கேண்மை ஆக - உண்மைபொருந்திய சிநேகமுண்டாகுமபடி, மேலே நாள விளைவது ஆய - முன்னுளிலுண்டான, செயகை - செயல், என் செய்கை அனறோ எனதுசெயலனறோ? அனனது சிதையும் ஆயின - அந்தச்சிநேகதருமம் அழியுமானால், உய்வகை எவர்க்கும் உண்டோ - (அந்ததீவினையினறு) தப்புமவகை (சிநேகித்தவனை சுக் கிரீவனுகசேயனறிச் சிநேகஞ்செய்வித்தவனை எனக்கு முனபட) யாவர்க் கும் உளதோ? [இல்லையென்றபடி]; (அனறியும, அங்ஙனமானால), உணர்வு மாசு உண்டது அனறோ - (எங்கள்) அறிவெல்லாம் குற்றமடைந்ததாகு மன்றோ? (எ - று.)

'உணர்வுமாசுண்டதன்றோ' என்றது, உங்கள்கருணையைப் பெற்ற நாங் கள் அறிவுகெட்டு இழிவடைவோமோ? என்ற குறிப்பு.

'எனக்குமுண்டோ' எனறது பிரதிபேதம். (ஙஉ)

சுச. தேவருந்தவமுஞ்செய்யுநல்லறத்திறமுமற்றும்
யாவருமீரேயென்பதென்வயிற்கிடந்ததெந்தா
யாவதுநிற்கசேருமாணுண்டோவருளுண்டன்றே
மூவகையுலகுங்காக்குமொய்ம்பினீர்முனிவுண்டானால்.

(இ - ன்.) எந்தாய் - எமது தலைவனே! தவமும் - (முற்பிறப்புக்களிலும் இப்பிறப்பிலும் நாங்கள்செய்த்) தவமும், செய்யும் நல் அறம் திறமும்- (மற்றும்நாங்கள்) செய்த நல்ல தருமகாரியங்களின வருக்கமும், தேவரும் - தேவர்களும், மற்றும் யாவரும் - மற்றும் (மேம்பாடுடையாரான) எத்திறத்தாரும், நீரே - (எங்கட்கு) நீங்களே, என்பது - என்கிற கருத்து, எனலியின் கிடந்தது - என்னிடத்திற் பொருந்தியுள்ளது; ஆவது கிறக - அது இருக்கட்டும், மூவகை உலகும் காக்கும மொய்ம்பினீர் முனிவு உண்டு ஆனால் - மூனறு வகைப்பட்ட உலகங்களையும் பாதுகாக்கும் ஆற்றலுடையாரான நீங்கள் (எங்களமேற்) கோபமுடையீராஞல், சேரும் அரண் உண்டோ - (நாங்கள்)சென்று சேர்ந்ததப்பி உய்யும் பாதுகாவலுளதோ? [இல்லையென்ற படி]; அருள அனறே உண்டு - (அதறகும உங்கள்) கருணைதானே கதியாக உளதாவது; (எ - று.)

'செய்யும' எனபதை 'தவமும்' என்றதனோடும், 'மற்றும்' என்பதை 'நல்லறத்திறமும்' எனறதனோடும் கூட்டுக. அனறே - தேறறம். மொய்ம்பின் நீர் எனறு பிரிதது முறைக்கலாம. 'உண்டு' என்ற பொதுவினை, இங்கே செயப்படுபொருள் குன்றுதலாகவும, முன்னிலைப்பனமையாகவும் கொண்டது. ''எங்குப்போயுய்கே னுன்னிணையடியேயலையிலால், எங்கும்போய்க் கானாலை தெறிகடல்வாய்மீண்டேயும், வங்கத்தின்கூம்பேறும் மாப்பறவை போனறேனே'' எனறாற்போல உலகனோடு மாறுபட்டவர்க்கு உலகள் கருணையெனறிக் கதிவேறில்லை யென்றதாம்.

'யாவையும்', 'நிற்கச்சேரும', 'அருளுண்டன்றே,' 'எம்வயின,' 'அருளுண்டன்றேல்,' 'அருளுண்டன்றி', 'அருளுண்டாகி', 'உலகங்காகும,' 'மொய்மபினீர்' என்பன பிரதிபேதம். (நச)

கூடு. மறநகிலன்கவியின்வேந்தன்வயப்படைவருவிப்பாரைத
திறநகிறமேவியன்னர்சேர்வதுபார்த்துத்தாழ்ததா
னறங்தூணறுமக்குத்தான்றன்வாய்மையையழிக்குமாயிற்
பிறநகிலனன்றேயொன்றேநசகமுமபிழைப்பதன்றால்.

(இ - ன்.) கவியின் வேந்தன் - வாகராஜனை சுக்கிரீவன், மறந்திலன் - (உங்களகட்டளையை) மறந்தானில்லை: வய படை வருவிப்பாரை - வலிமையுள்ள வாகரசேனைகளை யழைத்துவரும் தூதர்களை, திறம திறம் எவி - கூறு கூறாக இடந்தோறும் அனுப்பி, அனனர் சேர்வது பார்த்து தாழ்த்தான் - அவ்வாகரர்கள் வந்து சேர்வதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தலினால் தாமதித்தான்; (இதுவேயன்றி), அறம் தூணறுமக்கு தன் வாய்மையை அழித்

கும் ஆயின் - தருமத்திற்குத் துணையாகவுள்ள உங்கள் விஷயத்தில் தன் சத்தியத்தை யிழப்பனுனல், பிறந்திலன் அன்றே - (அச்சுக்கிரீவன் இவ் வுலகத்திற பிறந்தும்) பிறவாதவனேயாவனனறே? ஒனறே - இது மாத் திரமோ? கரும்மும் பிழைப்பது அன்று - (அவனுகு மறுமையில்) கரும்மும் தவருது; (எ - று.)—தான், ஆல் - அசைகள்.

தருமத்தைப்பாதுகாப்பவாகனான உங்களிடத்திற் சுக்கிரீவன் தான் சொன்ன சொல்லைத் தவறுவனுனல் அவன்சனமம் ஸபலமாகாது; அதுவு மன்றி, அவன் தவருமல் கரகமுமடைவன என்பதாம். பிறப்பெடுத்ததன பயன ஆன்றோர்க்குத் துணைசெய்வதெனபது போதரும். 'அறந்துணை..... பிறந்திலனனறே'—''ஆறற, அறஞ்செய்தருளுடையோராகுமின யாகும், பிறந் தம்பிறவாதாரில்'' எனறும் கரலடியாரிலும்.

'அன்னர்செய்கையிற் சிறியனுனல', 'அன்னன்செம்மையிறசிறியனு னன்,' 'சேர்வதுபார்த்தேதாழ்ந்ததான' எனபன பிரதிபேதம். (கஅ)

சுசு. உதவாமலொருவன்செய்தவுதவிக்குக்கைம்மாறுக
மதயானையனையமைந்தமற்றுமுண்டாகவறமீறு
சிதையாதசெருவிலன்னுன்முன்சென்றுசெறுநர்மார்பி
லுதையாசினலுதையுண்டாவியுலையாசினலுலகின்மன்னு.

(இ - ன்.) மதம் யானை அனைய மைந்த - மதங்கொண்ட யானையைப் போனற இளவீரனே!—உதவாமல் ஒருவன செயத உதவிகு கைம்மாறு ஆக-(தான ஒருவனுகு) ஒருதவியுஞ்செய்யாமலிருகையில தனகு அவன செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரமாக, சிதையாத செருவில - கெடுத லிலலாத போரில, அனனனமுன சென்று - அவனுகுமுன (தான துணை யாகச்) சென்று, செருநர் மார்பில - (அவனது) பகைவரது மார்பிலே, உதை யான எல் - உதைத்திடானுயினும்,—உதையுண்டு - (அபபகைவரால் தான) உதைபட்டு, ஆவி உலையான எல-உயிரொழிந்திடானுயினும,— உலகில உல கத்தில மறறும உண்டாக வறறே - வேறு கைம்மாறு உளளதாக வலலதோ? [இல்லை யெனறபடி]; (எ - று.)—மன, ஓ-ஈறறசை.

''செய்யாமற்செய்தவுதவிகுவையகமும,வானகமுமாறறலரிது'' எனற படி ஒருவன செய்யாமறசெய்த உதவிகுகு கைமமாறுசெனறு மலலை யென பது துறகொண்கையாயினும, அவனுகுமுனனே அவனுக்காகத் தானபோர்க் களததுச் சென்று அவன பகைவரை யழித்தாலும, அது முடியாவிடின் அப் பகைவர்கையால் தான உயிராமாயநதாலும ஒருவாறு ஈடாகலாம; இவை யனறி வேறுவனன இருகின்றனது? எனபதாம. போரிறபுணபடுதறகு ஏறற இலலகாதலால, மாறபு கூறப்பட்டது. மதயானையுவமை - சோபததை அட கவேண்டியசமயங்களில் அடகி வெளிப்படுததவேண்டியசமயததில்வெளி ப்படுத்துதல், வலிமை, மேனமையானதோறறம, கடை எனனும் இவற்றி லாகும்.

கைம்மாறுகச் சென்று உதையானேல் உலையானேல் மற்றும் உண்டாக வற்றே என வினைமுடிக்க.

'கைம்மாறின்மை', 'மதவானை', 'மாறுமுண்டாகவற்றே', 'செருவிஞன்முன்சென்றுசென்றுன்னிமார்பத்து', 'உதைப்புண்டாவியுலவாதேனல்' என்பன பிரதிபேதம். (கூசு)

கூஎ. ஈண்டினிகிற்றலென்பதினியதோரியல்பிற்றன்றுல்
வேண்டலரறிவரேனுங்கேண்மைதீர்வினையிற்றுமா
லாண்டகைபாளிமொய்ம்பினையரீளித்தசெல்வங்
காண்டியாலுன்முன்வந்தகவிக்குலக்கோனெடுன்றுன்.

(இ-ள்.) ஆண் தகை ஆளி மொய்ம்பின் ஐய - ஆண்மைக் குணமுடைய [பராக்கிரமத்தையுடைய] சிங்கம்போன்ற வலிமையோடு கூடிய தலைவனே! ஈண்டு இனி கிற்றல் என்பது - (நீ) இவ்விடத்தில் இப்போது கிற்பது, இனியது ஓர் இயல்பிற்று அன்று - கண்மையானதொரு தன்மையையுடையதாகாது; வேண்டலர் அறிவர் எல் - (இச்செய்தியை எமது) பகைவர் அறிவாராயின், நும் கேண்மை தீர் வினையிற்று ஆம் - (அது எங்கட்கு) நுமது சினேகம் நீங்குதற்கு உரிய காரியமாய் முடியும்; நீர் அளித்த செல்வம் - (வாலிவதஞ்செய்து) நீங்கள்கொடுத்த செல்வத்தையும், உன்முன் வந்த கவி குலம் கோனெடு - உனக்கு முன்பிறந்தவனன [தமையன் முறை பாராட்டக்கூடிய] வாநரசாதிக்காசனுகிய சுக்கிரீவனையும், காண்டி - (உள்ளே வந்து) பார்ப்பாயாக, என்றன் - என்று கூறினன், (அநுமான்); (எ - று.) —'ஆல்'மூன்றும் - அசை.

வானரர்கள் வாயிலையடைத்துக் குன்றுகளையடுக்கியது முதலியன, உனது சீற்றத்தைக்கண்டு அஞ்சியதனல் நிகழ்ந்த செய்கைகளே; இவற்றை நீ இவ்வாறருகுதாமல் உம்மோடுமாறுபட்டுச் செய்தனவாகக்கொண்டு கொதுமலன்போல இங்கு நிற்பின், அதுகண்ட நமதுமாற்றூர் உனது சீற்றத்தை மிகுவித்து நம் இருதிறத்தார்க்கு முள்ள கட்பைக் கெடுத்தற்குக் காரணமாகும். ஆதலால், நீ உள்ளேவந்து நீங்களளித்த செல்வத்தினுற் சிறப்புப்பெற்றிருக்கின்ற சுக்கிரீவனைக் கண்டு சீற்றந்தணிவாயாக வென்று இலக்குமணனை அநுமான் வேண்டின னென்க. சுக்கிரீவனைக்காணவந்த இலக்குமணனை உள்ளே அழைத்துச்செல்வதற்குச் சுக்கிரீவனது பிரதானமந்திரியான அநுமான் தகுந்தவனென்க. இனி, இரண்டாமடிக்கு-நீ இவ்வாறுவெளியில்நிற்பதைப் பகைவர் அறிந்தால் சினேகமற்றசெய்கையாகவே தோன்றும் எனப் பொருள் கூறுவாரு முளர். ஆளி - சிங்கம்; 'யாளி' என்றும்எடுக்கலாம். இனி, யாளி - யானையைக்கொல்லவல்லதும் தம்பிக்கையையுடையதுமான சிங்கம்போன்றதொரு மிருகவிசேடமுமாம். இராமபிரான் சுக்கிரீவனைத் தனது முதல்தம்பியாகிய பரதனைப் போலக் கருதியிருக்கின்றனென்பது மேல் "பரதனீயினையனகரற்பாலையோ" என்பதனுற் பெறப்படுதலாலும், 'உன்தம்முனைச்சார்தியென்றன்" என்று வருதலாலும், பரதனைப்போலவே சுக்கிரீவனும் லக்ஷ்மணனுல் தமையன்முறையாகக் கொள்ளத்தக்கவ

னென்பது போதருதலால், 'உன்முன்வந்தக்கவிக்குலக்கோன்' எனப்பட்டது; ஸ்ரீவால்மீகிபகவானும் தாரையானவள் சுக்ரீவனிடத்து வருமாறு இலக்குமணனேநோக்கிக் கூறும் சந்தர்ப்பத்தில் " த்வத்ப்ராதரம் வாநரவம்ஸகாதம்" என்ற அருளியிருத்தல் காண்க. அறிவரேனும் என்றுஎடுத்து, உம்மையை இசைநிறையாகக்கொள்வாரு முளர். 'நீர்' என்றது - இராமபிரானை உளப்படுத்தியது.

'ஆண்டகையருளின்', 'ஆண்டகைவாளிமொய்ம்பின்' என்ற பிரதிபேதம். (கூ)

' ' [அநுமன்வார்த்தையால் இலக்குமணன் சீற்றந்தணிதல்.]

கூஅ மாருதிமாற்றங்கேட்டமலிபுரைவயிரத்தோளான்
நீர்வினைசென்றுநின்றசிற்றத்தான்சிந்தைசெய்தா
னரியனருளிற்றீர்ந்தானல்லன்வந்தடுத்தசெல்வம்
போர்வரிதாகச்செய்தசிறுமையாளனெண்ணும்பெற்றி.

(இ - ள்.) மாருதி மாற்றம் கேட்ட - அநுமான்கூறிய வார்த்தையைக் கேட்ட, மலி புரை வயிரம் தோளான்-மலையையொத்த உறுதியான தோள்களையுடையவனான இலக்குமணன்,—தீர்வினை சென்றுநின்ற சிற்றத்தான் - நீங்குதல் தொழில் பொருந்திய கோபமுடையவனாய் [கோபம் தணிந்தவனாய்], 'வந்த அடுத்த செல்வம் போர்வு அரிது ஆக செய்த சிறுமையான் - (தனக்குக்) கிடைத்த செல்வம் (தன்னைவிட்டு) அப்பாற்பெயாவொட்டாமற் செய்ததனு லுண்டாகிய இழிகுணத்தையுடையவனான சுக்ரீவன், ஆரியன் அருளின் தீர்ந்தான் அல்லன் - இராமபிரானது கட்டளையினின்று (உண்மையாக) நீங்கினவனல்லன்', என்னும் பெற்றி - என்னுந்தன்மையை, சிந்தை செய்தான் - மனத்திற் கருதினான்; (எ - று.)

இச்சுக்ரீவன் சொன்ன தவணைப்படி வாராது உபேக்ஷித்திருந்தது செல்வக்களிப்பினால் தான்செய்யவேண்டியது இன்னதென அறியாமல் மறந்ததனலாகுமேயன்றி இராமபிரானது கட்டளையை மீறவேண்டுமென்னும் எண்ணம் இவனுக்குச் சிறிதுமில்லை யென்று அநுமன்வார்த்தையால் தெளிந்து இலக்குமணன் தான்கொண்டகோபம் முழுதும்ஆறினனென்க. எவ்வளவு பெருஞ்செல்வம் பெற்றிருந்தாலும் தாமரையிலையில் நீர்போலத் தோய்ந்தும் தோயாதிருக்கும் பெரியோர்போலன்றிச் சுக்ரீவன் தனக்குக் கிடைத்த செல்வத்தினுற் போகத்திற் பரவசப்பட்டு மூழ்கினவனுய்த் தான் செய்யவேண்டியசெயல்களைச் செய்யாதிருந்தபற்றி, அவனை, 'செல்வம் போர்வரிதாகச்செய்தசிறுமையான்' என்றார். பின்னிரண்டடிக்கு - இராமபிரானதுகட்டளையினின்று சுக்ரீவன் உண்மையாகவே நீங்கினவனல்லன்; தனக்குக்கிடைத்த செல்வம் பிறிதொன்றிற் செல்லவொட்டாதபடி மனத்தைப்பிணித்த இழிகுணத்தினுல் (ஆரியன் கட்டளையை நீங்கினுன்போலும்) என்றும் உரைகூறலாம். முன்னியவுரையில், சிறுமையான் - பெயர்; இவ்வுரையில், மூன்றும் வேற்றுமைவினி.

'சீர்வினைசென்றறின்ற,' 'தீர்வினைச்சென்றபின்ற', 'தீர்த்தார்எல்லர்', 'பேர்வையாகச்செய்த' என்பன பிரதிபேதம். (சுஅ)

[இலக்குமணன் அநுமானைநோக்கிக் கூறத்தொடங்குதல்.]

சுசு. அனையதகருதிப்பின்னரிக்குலத்தவனைநோக்கி
நினைபொருமாற்றமின்னேநிகழ்த்துவதுளதுநின்பா
லினையனவுரைக்கற்கேற்றவெண்ணுதியிவைசீயென்னு
வினைகழல்வயிரத்திண்டோணன்மன்னிளங்குமரன்சொல்வான்.

(இ - ள்.) அனையது கருதி - (இவ்வாறு) அதனைப்பற்றிச் சிந்தித்து, பின்னர் - பிறகு, வினை கழல் வயிரம் திண் தோள் மன் இளங் குமரன் - (வீரக்கழலை) அணிந்த பாதங்களையும் மிகவும்வலியதோள்களையு முடைய அரசிளங்குமரனை இளயபெருமாள்,—அரி குலத்தவனை நோக்கி - வானர சாதியனை அநுமானைப் பார்த்து, 'இன்னை சினை ஒரு மாற்றம் நிகழ்த்துவது உளது - இப்பொழுதே உன்னிடத்தில் (யான்) ஒருவார்த்தை சொல்ல வேண்டுவதுண்டு; இனையன நின்பால் உரைத்தற்கு ஏற்ற - இவ்வார்த்தைகள் உன்னிடத்திற்சொல்லுதற்குத் தகுதியுடையவை; (ஆதலால்), நீ இவை எண்ணுதி நீ இவ்வார்த்தைகளை ஆலோசிப்பாயாக', என்னை சொல்வான் - என்று கூறத்தொடங்கினனை; (எ - று.)—அவற்றை, அடுத்தஐந்துகவிகளிற் காண்க.

சினை-வேற்றுமைமயக்கம். ஏற்ற 'அன்' சாரியை பெறாத பலவின்பால் முற்று. ஒருமாற்றம் நிகழ்த்துவதுளது, இனையனவுரைத்தற்கேற்ற, இவை - பன்மையொருமைமயக்கம்.

'இனையனபுணர்த்தற்கேற்ற' என்றும் பாடமுண்டு. (சுக)

[இதுமுதல் ஐந்துகவிகள் - இலக்குமணன்வார்த்தை.]

எ0. தேவியைக்குறித்துச்செய்தசீற்றமுமானத்தீபு
மாளியைக்குறித்துநின்றவையனையதனைக்கண்டேன்
கோவியற்றருமநீக்கக்கொடுமையோடுறவுகூடிப்
பாவியர்க்கேற்றசெய்கைகருதுவல்பழியும்பாரேன்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்

(இ - ள்.) தேவியைக் குறித்து செய்த சீற்றமும் - சீதாபிராட்டியை (இராவணன் கவர்ந்துசென்றதைக்) குறித்துக் கொண்ட கோபமும், மானம் தீயும் - மானமாகிய நெருப்பும், ஐயனை ஆவியை குறித்து நின்ற - இராம பிரானை உயிரைப்பற்றி வருத்தினின்றன; அதனை கண்டேன் - அவ்வாறு வருத்துதலைக் கண்கூடாகக்கண்ட நான்,—கோ இயல் தருமம் நீங்க - அரசர்கட்குரிய தருமம் ஒழிய, கொடுமையோடு உறவு கூடி - கொடுந்தன்மையோடு உறவுகொண்டு [மிகவுங்கொடுமையாக], பாவியர்க்கு ஏற்றசெய்கை கருதல் - பாவிகளைத்தண்டித்தற்குரிய செயல்களைச் செய்யநினைப்பேன்; பழியும் பாரேன் - (அதனால் எனக்கு நேரும்) அபகீர்த்தியையுஞ் சிறிதும் லக்ஷ்யஞ்செய்யமாட்டேன்; (எ - று.)

"பொன்னென் வாக்கே புறம்வேரார் காலம்பார்த், தன்வேர்ப்ப ரொன் னியவர்" என்றபடி காலம்பார்த்து ஆறியிருத்தல் அரசர்க்குக் கடமையா யிருக்கவும், இராமபிரானுக்குநேர்ந்த தன்பங்களைக் கண்டு ஆற்றாமல் இலக்கு மணன் 'கோவியல்தருமம்நீங்க - செய்கைகருதவல்' என்றான். மானம் = அபிமானம்: மானத்தைத் தீயாக உருவகப்படுத்தியது, உயிரை எரித்து வருத்துவதனால். பாலியர்க்கேற்றசெய்கை - அஷ்டமிக்கிரகம். பழி - அரச தருமத்தைக் கைக்கொள்ளாமையால் வரும் அபகீர்த்தி.

ஐயனே ஆவியைக் குறித்தனின்ற - இரண்டு செயப்படுபொருள் வந்த செய்வினை: ஐ, வடமொழியில் தீவிகர்மகர்த்தரிப்ரயோக மெனப்படும்; ஐயனது ஆவியென உருபுமயக்கமுமாம். கண்டேன் - பெயர். கோ இயல் தருமம் - ராஜதர்மம்.

'குறித்துச்சென்ற', 'குறித்துச்செற்ற', "அதனைக்கண்டே', 'செய்யக் கருதவல்' என்பன பிரதிபேதம். (எ0)

எக. ஆயினுமென்னையானேயாற்றிநின்றுவியுறீறு
நாயகன்றனையுந்தேற்றநாள்பலகழித்தவன்றேற்
றீயுமிவ்வுலகமூன்றுந்தேவருமீவரொன்றோ
வீயுநல்லறமும்போகவிதியையார்விலக்கற்பாலார்.

(இ - ள்.) ஆயினும் - ஆனாலும், என்னையானே ஆற்றி நின்று - என் கோபத்தை யானாகவே தணித்துக்கொண்டு, ஆவி உற்று - உயிர்தரித்திருந்து, நாயகன்தனையும் தேற்ற - இராமபிரானையும் தேறுதல் செய்வதற்கே, நான் பல கழிந்த - பலநாள்கள் கழிந்திட்டன; அன்று எல் - அல்லாவிட்டால் [எங்களிருவர்க்குங் கோபந்தணியாதிருந்தால்], இ உலகம் மூன்றும் தீயும் - (எங்கள் கோபத்தினால்) இந்த மூன்று உலகங்களும் தீந்துபோம்; தேவரும் வீவர் - தேவர்களும் இறந்தொழிவர்; ஒன்றோ - இதுமாத்திரமோ? நல் அறமும் வீயும் - நிறைந்ததருமங்களும் அழிந்தொழியும்; போகா விதியை விலக்கல் பாலார் யார் - அழியாமல் நிலைத்திருத்தற்குரிய ஊழ்வினையை நீக்குதற்கு உரியவர் எவர்? (எ - று.)

எங்கள் கோபந்தணியாதிருந்தால் உலகமூன்றும் தேவரும் நல்லறமும் அழிந்தேதீரவேண்டியிருக்கும், அவற்றினுடைய நல்வினைப்பயனுலேயே எங் கள்சீற்றம் தணிந்த தென்றவாறு. இலக்குமணன் தமக்குநேர்ந்த அயரை நினைந்து விதியைநொந்து 'போகாவிதியை யார்விலக்கற்பாலார்' எனக் கூறி னனுமாம்.

'ஆவிதைத்து', 'நான்பலகழித்தேனன்றேல்,' 'வீவரன்றே', 'பேராதா ரதலிலக்கற்பாலார்', 'விதியெவர்விலக்கற்பாலார்,' 'விதியதலிலக்கற்பாலார்' என்பன பிரதிபேதம். (எக)

எஉ. உண்ணேக்கண்டுங்கோன்றண்ணியுற்றிடத்ததவும்பெற்றி
யென்னேக்கண்டனன்போற்கண்டிங்காளரிடைநெடிதுவைகித்
தன்னேக்கொண்டிருந்தேதாழ்த்தானன்றெனிற்றனுவொன்றலே
மின்னேக்கண்டனையாடன்னேநாடுதல்விலக்கப்பாற்றோ.

(ஒ - ன்.) உன்னை கண்டு - (இராமபிரான் முதலில்) உன்னைப்பார்த்து, (உன்மூலமாக), உற்ற இடத்து உதவும் பெற்றி - ஆபத்தினேர்ந்த காலத்தில் உதவிசெய்யுந் தன்மையினால், உம் கோன்தன்னை - உங்களரசனை சுக்கிரீவனை, என்னை கண்டனன் போல கண்டு - என்னை நினைத்துக்கொண்டிருப்பதுபோலவே பார்த்து [எனனிடத்திற்போலவே விசேஷமாக அபிமானித்துத் தம்பியாகப் பாவித்துச் சினேகித்து], இ காளிடை நெடிது வைகி - இந்நாள் வரையில் நெடுங்காலங்கழித்து, தன்னை கொண்டிருந்தே தாழ்த்தான் - தன்னுயிரை அரிதில்தாங்கிப் பொறுத்திருந்தான்; அன்று எனின் - அல்லாவிட்டால், தனு ஒன்றுலே - (தனது) வில்லொனறினாலே, மின்னை கண்டு அனையான் தனை நாடுதல் - மின்னலைக்கண்டாற்போன்ற உருவத்தை யுடையவரான சீதையைத் தேடுதல், விலக்கல் பாற்றே - (பிறரால்) தடுக்குந் தன்மையதோ? [எவராலும் தடுக்கமுடியா தெனறபடி]; (எ - று.)

இடருற்றபோது உதவுபவனென்றெண்ணி, என்னிடத்திற்போலவே மிக்க அன்பு வைத்து, உனமூலமாகச் சுக்கிரீவமகாராஜனைச் சினேகஞ் செய்து, உங்கள் மூலமாகக் காரியத்தை முடித்துக்கொள்ளலா மென்றே இராமபிரான இதுவரையிற் பொறுத்திருந்தான்; அவன இவ்வாறு இருந்தது உங்கட்கு ஒருசிறப்பை வீளைக்கவேண்டுமென்ற எண்ணத்தினாலுமேயன்றி, தனக்கு வல்லமையின்மையா லன்று; நினைத்தால், தனது வில்லொன்றினாலே பகைவரைத் தொலைத்துச் சீதையைமீட்க இராமபிரானால் எளிதில்முடியு மென்பதாம். (பெற்றியாற்) கண்டு என்க. உன்கோன தன்னை உற்றிடத்துதவும்பெற்றி யெனனைக்கண்டனன்போற் கண்டு என்பதற்கு - உன்கோன்தன்னை உற்றிடத்துதவும் பெற்றியையுடைய என்னைக் கண்டாற் போலவே கண்டு என்றும் உரைக்கலாம்.

'பெற்றிக், கென்னைக்கண்டனனதோர்ந்து', 'பெறறி, யென்னைக்கண்டன்னதோர்ந்து', 'எத்துணைநெடிதவைகி', 'தன்னைக்கண்டனனே தாழ்ந்தான்' எனபன பாடாந்தரம். (எஉ)

எஉ. ஒன்றுமோவானமன்றியுலகமும்பதினொள்ள
வென்றிமாக்கடலுமேழும்மலையுள்ளவெண்ணவேயாய்
நின்றதோரண்டத்துள்ளேயெனினதெடியதொன்றே
வன்றுரீர்சொன்னமாற்றந்தாழ்வித்தறமமன்றல்.

(இ - ன்.) வானம் ஒன்றுமோ - ஆகாய மொன்றுமாத்திரமோ? அன்றி - அதுவுல்லாமல், பதினொள் உள்ள உலகமும் - பதினொன்காக உள்ளனவாகிய உலகங்களும், வெனறி மா கடல் ஏழும் - வெற்றியையுடைய பெரிய ஏழு கடல்களும், மலை ஏழ் (உம்) - குலபர்வதங்களேழும், உள்ள - இருக்கின்றன; என்னவே ஆய்கின்றது - என்று சொல்லும்படி நிற்பதாகிய, ஓர் அண்டத்துள்ளே - ஒருலகவுருண்டைக்குள்ளே, (எதேனுமோரிடத்தில்), எனின் - (நீதாபிராட்டியிருக்கின்றாள்) என்றால், அது அவ்விடத்தைத் தேடிக்கண்டு மீட்டுக்கொணர்தல், நெடியது ஒன்றே - (இராமபிரானது வில்லுக்குப்)

பெரியதொரு காரியமாகுமோ? (ஆயினும்), அன்று நீர் சொன்ன மாற்றம் தாழ்வித்தல் - அப்போது [முன்னே] நீங்கள்சொன்ன சொல்லே நிறைவேற் ரூஉ தாமதித்தல், தருமம் அன்று - (உங்களுக்குத்) தருமமாகாது; (எ-று.)—ஆல் - ஈற்றசை.

பெரிய இவ்வண்டகோளத்தில் எங்கிருந்தாலும் தன் வில்லொன்றினாலேயே சீதாபிராட்டியை மீட்டல் இராமபிரானுக்கு அரியதொரு தொழிலன்று. ஆயினும், யான் சினந்து இங்கு வந்தது, நீங்கள் சொனனசொற்படி நடவாமல் தருமவிரோதமாகத் தாமதித்ததனாலேயே யென்பதாம். உலகம் பதினான்கு - அதலம் விதலம் ஸுதலம் தாராதலம் ரஸாதலம மகாதலம் பாதாளம் என்னுங் கீழேழுலகங்களும். பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் மஹர்லோகம் ஜநலோகம் தபோலோகம் ஸத்யலோகம் என்னும் மேலேழுலகங்களும். பிரளயகாலதத்தில் உலகத்தைப் பொங்கியழிக்கும் தன்மையுடைய தாதலால், 'வெந்நிமாக்கடல்' எனறார். கடல ஏழு - உவாநீர் கருப்பஞ்சாறு தேன் நெய் தயிர் பால் தன்னீர் இவற்றின்மயமானவை. மலை யேழு - கைலை இமயம் மந்தரம் விந்தம் நிடதம் ஏமகூடம் நீலகிரி எனனும் ஸப்தகுலாசலங்கள்: பிறவாறும் உரைக்கப்படுமே. நெடியதொன்றே? அனறு என விளுவும் விடையுமாக்கித தேறறப்பொருள்பட உரைப்பினுமாம்.

'கடலுமேழுமலையுமேழென்னவேயாய்' என்பது பிரதிபேதம். (எஉ)

எச. தாழ்வித்தீரல்லீர்பண்டைருக்கியவரக்கர்தம்மை
வாழ்வித்தீரிமையோர்கடின்னல்வருவித்தீர்மாபிற்றீராக்
கேள்வித்தியாளர்துன்பங்கிளர்வித்தீர்பாவந்தன்னே
மூள்வித்தீர்முனியாதானேமுனிவித்தீர்முடிதிரென்றான்.

(இ - ள்.) தாழ்வித்தீர் அல்லீர் - நீங்கள் காலதாமதஞ் செய்பவர்கள் மாத்திரமல்லீர்; (அதனால்), பல் நாள் தருக்கிய அரக்கர் தம்மை வாழ்வித்தீர் - பலநாளாகச் செருக்குக்கொண்டிருந்த ராகஷஸர்களை(ப் பினனும்) வாழச்செய்தீர்கள்; இமையோராக்கு இனனல் வருவித்தீர் - தேவர்கட்குத் துனபத்தை வருவிததவரானீர்கள்; மாபில் தீரா கேள்வி தீ ஆளர் துனபம் கினவித்தீர் - வான்முறையினினறு நீஙகாத நூறகேள்விகளையும் ஒமாக்கினி களையுமுடைய முனிவர்கட்குத் துனபத்தை மிகுவித்தீர்கள்; பாவம் தனனை மூள்வித்தீர் - பாவத்தை மேனமேலும் வளரச்செயதீர்கள்; (இவ்வளவே யன்றி), முனியாதானை முனிவித்தீர் - ஒருகாலும கோபியாதவனன [சாந்த மூர்த்தியான] இராமபிரானையுங் கோபிக்கச்செய்தீர்கள்; (இவவாறு செய்ததனால்), முடிதிர் - (நீஙகள்) அழிந்துவிடுவீர்கள், என்றான - என்று (இலக்குமணன்) கூறினன்; (எ - று.)

நீங்கள காலதாமதஞ்செய்வது, அரக்கர்க்குப் பெருவாழ்வையும் தேவர்க்கும் முனிவர்க்கும துனபதையு முணடாக்கி நுமகுப் பாவதை விளைப்பது மனறிச் சாந்தமூர்த்தியான இராமபிரானுக்கும் கோபத்தைத் தோற்றுவித்து நுமகுகேட்டிறகும் காரணமாகு மெனபதாம்.

'முடிதிரென்றான்' என்பது பிரதிபேதம். (எச)

[அநுமான் இலக்குமணனுக்குச் சமாதானங்கூறி அவனைச் சுக்கிரீவனிடம் வருமாறு அழைத்தல்.]

எறு. தோன்றலஃதுரைத்தலோடுமாருதிதொழுதுதொல்லையான்றநூலறிஞர்பாயபொருண்மனத்தடைப்பாயல்லை,
யேன்றதுமுடியேமென்னினிறத்துமித்திறத்துக்கெல்லாஞ்
சான்றினியறனேபோதுன்றம்முனைச்சார்தியென்றான்.

(இ - ள்.) தோன்றல்-சிறந்தோனே! அறவனான இலக்குமணன், அஃது உரைத்தலோடும் - அவ்வார்த்தையைச் சொன்னவுடனே,—மாருதி - வாயுகுமாரனான அநுமான், தொழுது - (அவ்விளையபெருமாளை) வணங்கி, (அவனை நோக்கி), 'தொல்லை ஆன்ற நூல் அறிஞர் - பழமையான சிறந்த நூலறிவையுடையவனே! பாய பொருள் மனத்து அடைப்பாய் அல்லை - நடந்த விஷயங்களை மனத்திற்கொள்ளாதிருப்பாயாக; ஏன்றது முடியேம் என்னின் - (நாங்கள் செய்வதாக) ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செய்யாது விட்டோமாயின், இறுதும் - உயிர்விடக்கடவோம்: இ திறத்தற்கு எல்லாம் இனி சான்று அறனே - இவ்விஷயங்கட்கெலலாம் இனிச் சாட்சியாவது தருமமே; போந்து-உன்னேவுந்தி, உன் தம்முனை சார்தி உனகருத்தமையன் முறையாகிய சுகிரீவனைச் சேவாயாக' எனறான்-என்று கூறினான்; (எ-று.)

இலக்குமணன் சீறறந்தோன்றுமாறு கூறினதனால் அதனைத்தணிக்க விரும்பிய அநுமான் 'சீதையைத்தேடுதல் முதலிய தொழில்களைத் தவறாது செய்துமுடிப்போம்; முடியாவிட்டால் நாகங்கள் இறப்போம; இவ்விஷயத்தில் தருமமே சாட்சி' என்று இலக்குமணனுக்கு நம்புதலுண்டாகுமாறு சபதஞ்செயது கூறினனெனக. போயபொருள் - மாரிக்காலம்நீங்கியவுடனே வருகிறேமென்று கூறிய தவணை தவறிய தொழில். 'இறதது மிதறிறத்துக்கெல்லாஞ்சான்றினியறனே' என்ற சொறபோக்கில, நாகளை அறந்திறம்பிஞமெனறு நீவிர் எங்களைகொல்லவேணடுவதில்லை, அறக்கடவுளே எங்களைகொல்லும் என்ற கருத்துந் தோன்றும். ஆனற=சான்று; மரூஉ.

'சான்றினியானே,' 'சான்றெனவறவோய்', 'சான்றனவறவோய்' என்பன பிரதிபேதம். (எடு)

[இலக்குமணன் அநுமான் வார்த்தைக்கு இசைந்து அவனுடன் சுக்கிரீவனிடஞ் செல்லுதல்.]

எசு. முன்னுரைசொல்லிற்றன்றேமுயன்றதுமுற்றுங்காலே
யின்னுரையிசைத்தசெய்வானியைதனமென்றுகூறி
யன்னதோரமைதியான்றனருள்சிறிதறிவானெக்கிப்
பொன்னின்வார்சிலையினுமாருதியோடும்போனான்.

(இ - ள.) பொன்னின் வார் சிலையினும் - பொற்கட்டுக்களையுடைய நீண்டவில்லையுடையவனான இலக்குமணனும், (அநுமானைநோக்கி), 'முன்னும் - முன்பும், முயன்றது - (யாங்கள்செய்த) முயற்சியும், நீ சொல்லிற்று அன்றே - நீ சொல்லியதன்றே? மூற்றும் காலை-(சீதையைத்தேடுதற்றொழிலி) முடியவேண்டியசமயத்தில், இனனும் - இனிமேலும், நீ இகைத்த செய்வான் இயைந்தனம - நீசொல்லியதையே செய்ய உடன்படுகிறோம்', என்று கூறி - என்றுசொல்லி, அன்னது ஓர் அமைதியான்தன் அருளறிதி அறிவான் நோக்கி - அப்படிப்பட்டதாகிய ஒருதன்மையையுடையவனான சுக்கிரீவனது மனதிலையைச் சிறிது அறியக் கருதி, மாருதியோடும் போனான்- அநுமான்ஓடனே சென்றான்; (எ - று.)

"வன்றிறன்மாருதி வணங்கினனென்கொல், குன்றிவர்தோளினுய்கூறவேண்டுவ, தொன்றுளதெனினீயுணர்ந்துகேளென்ன", "கொடுந்தொழில் வாலியைக் கொன்றகோமகன், கடுஞ்சதிரோன்மகனுக்கு கைவளர், நெடும்படைகூட்டினனன்றிநேடினி, தடும்படைபரக்கர்தமிருக்கையாணையாய்" எனபது முதலாக அநுமான் கூறியபடியே வாலிவதஞ்செய்ததனால், 'முனனுநீசொல்லிற்றன்றேமுயன்றது' எனப்பட்டது சுக்கிரீவன் கார்காலம நீங்கியவுடன் சீதாபிராட்டியைத்தேட முயலாமல் அந்தப்புரத்தில் உறங்கிக்கிடக்கின்றமையால், அவன் 'அன்னதோரமைதியான' எனப்பட்டான்.

'மூற்றுங்காறும்', 'முயறசிதானும்', 'அறியநோக்கி', 'அமையநோக்கி' என்பன பிரதிபேதம். (எசு)

[தாரை மகளிர்கூட்டத்தோடு அந்தப்புரஞ்சேர்தல்.]

எஎ. அயில்விழிக்குமுதஞ்செவ்வாய்ச்சிலைநுதலன்னப்போக்கின்
மயிலியற்கொடித்தேரல்குன்மணிநகைத்திணிவேய்மென்றோட்
குயின்மொழிக்கலசக்கொங்கைமின்னிடைக்குமிழ்மூக்கின்
புயலியற்கூந்தன்மாதர்குழாத்தொடுந்தாரைபோனாள்.

(இ - ன்.) தாரை—,—அயில் விழி - வேலையொத்த கண்களையும், குமுதல் செம் வாய் - செவ்வரம்பல் மலரை யொத்த சிவந்த வாயையும், சிலை நுதல் - வில்போன்ற புருவத்தையும், அன்னம் போக்கின் - அன்னத்தின் நடையையொத்த நடையையும், மயில் இயல்-மயிலையொத்த சாயலையும், கொடி தேர் அல்குல் - துவசத்தையுடைய தேரைப்போன்ற அல்குலையும், மணி நகை - முத்துப்போன்ற பற்களையும், திணி வேய் மெல்தோள் - வலிய மூங்கில்போன்ற மெல்லிய தோள்களையும், குயில் மொழி : குயிலின்குரலையொத்த குரலையும், கலசம் கொங்கை - பொற்கலசத்தையொத்த தனங்களையும், மின் இடை - மின்னல்போனற இடையையும், குமிழ் ஈர் மூக்கின் - குமிழமலரையொத்த மூக்கையும், புயல் இயல் கூந்தல்- காளமேகத்தையொத்த [கரிய] கூந்தலையுமுடைய, மாதர் குழாத்தொடும் - மகளிர்கூட்டத்துடனே, போனாள் - (அந்தப்புரத்திற்குச்) சென்றாள்; (எ - று.)

உவமையணி. நூறல் - புருவத்துக்கு இலக்கணை. நவ்ரத்னங்களுளொன்றாலால், மூத்த 'மணி' எனப்பட்டது. ஏர், இயல் - உவமவுருபுகள். (எஎ)

[அங்கதன் இலக்குமணனேவணங்கி அவனறுமதிப்படி அனன்வாவைச் சுக்கிரீவனிடஞ் சொல்லச்சேல்லுதல்.]

எஅ. வல்லமந்திரியோடுவாலிகாதலனுமைந்த
னல்லியங்கமலமன்னவடிபணிந்தச்சந்தீர்ந்தான்
வில்லியுமவனோக்கிவிரைவினென்வரவுவீர
சொல்லுதிநூறுந்தைக்கென்றனன்றெனக்தொழுதேழுனன்.

(இ - ன்.) வாலி காதலனும் - வாலியின்மகனான அங்கதனும், வல்ல மந்திரியரோடு - (நீதிநூல்களின்) தேர்ந்த மந்திரிமார்களுடனே (வந்து), மைந்தன் அல்லி அம் கமலம் அன்ன அடி பணிந்து - வீரனுடைய இலக்குமணனது அகவிதழ்களையுடைய அழகிய செந்தாமரைமலர் போன்ற திருவடிகளை வணங்கி, அச்சம் தீர்ந்தான் - (இலக்குமணனால் 'என்னநேரிடுமோ?' என்று தான்முன்கொண்ட) பயம் ஒழியப்பெற்றான்; (அப்பொழுது), வில்லியும் - வில்வீரனான இலக்குமணனும், அவனை நோக்கி - அவ்வங்கதனைப்பார்த்து, 'வீர - வீரனே! என் வரவு - எனது வருகையை, நூற்றைக்கு - உனது சிற்றப்பனான சுக்கிரீவனுக்கு, விரைவின் சொல்லுதி - விரைவிற்சென்று சொல்வாய்,' என்றனன் - என்று கூறினான்; (உடனே அங்கதன்), நன்று என - 'நல்லது' என்றுசொல்லி, தொழுது - (அவ்விலக்குமணனை) வணங்கி, போனான்—; (எ - று)

மைந்தன் - வீரம்; அதனையுடையவன் - மைந்தன். நன்று - அங்கீகார வார்த்தை. 'உற்றைக்கு' என்று பிரதிபேதம். (எஅ)

[இலக்குமணன் கோபித்துவந்திருத்தலை அங்கதன் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தல்.]

எக. போனபின்றாதைகோயில்புக்கவன்பொலங்கொள்பாதந்
தானுறப்பற்றிமுற்றுந்தைவந்துதடக்கைவீரன்
மானவற்கிளோயோன்வந்துன்வாயிலின்புறத்தான்சிற்ற
மீனுயர்வேலிலேமேலும்பெரிதுவிளைந்ததென்றான்.

(இ - ன்.) தட கை வீரன் - நீண்டகைகளையுடைய வீரனான அவ்வங்கதன், போன பின் - (இலக்குமணனைவிட்டுச்) சென்றபிறகு, தாதை கோயில் புக்கு - சிற்றப்பனான சுக்கிரீவனது அரண்மனையிற்புகுந்து, அவன் பொலம் கொள் பாதம் தான் உற பற்றி முற்றும் தைவந்து - அச்சுக்கிரீவனது அழகைக்கொண்ட பாதங்களைத் தான் நன்றாக முழுவதும் தடவிப்பிடித்து(த் தியிலெழுப்பி),—'மானவற்கு இளையோன் வந்து உன் வாயிலின் புறத்தான் - இராமபிரானுக்குத்தம்பியாகிய இலக்குமணன் வந்து உனது அரண்மனைவாயில் வெளியில் நிற்கின்றான்; சிற்றம் - (அவன் இப்போது கொண்டுள்ள) கோபம், மீன் உயர் வேலை மேலும் பெரிது - மீன்கள் நிறைந்துள்ள

கடலைக்காட்டிலும் பெரியது; இது விளைந்தது - இது நடந்தசெயலாகும்,' என்றான்—; (எ - று.)

''பொன்னெனைவிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் னகார னகாரஞ், செய்யுண்மருங்கிற் றொடரியலான'' என்பதனால், பொன் னென்பது பொலம்எனத் திரிந்துவந்தது. 'தைவந்த,' 'தடக்கைவீர,' 'வாச லின்' என்றும் பாடம். (எக)

[சுக்கிரீவன் இலக்குமணனது கோபகாரணத்தைக்குறித்து அங்கதனை வினவுதல்.]

அ0. அறிவற்றுமகளிர்வெள்ளமலமருமமலைநோக்கிப்
பிறிவற்றமயக்கத்தான்முந்துற்றதார்பெற்றியோரான்
செறிபொற்றாரலங்கல்வீரசெய்திலங்குற்றநம்மைக்
கறுவுற்றபொருளுக்கென்னேகாரணங்கண்டதென்றான்.

(இ - ள்.) பிறிவு அற்ற மயக்கத்தான் - நீங்குதலில்லாத மயக்கத்தை யுடையவனான சுக்கிரீவன்,—மகளிர் வெள்ளம் அலமரும் அமலை நோக்கி - (தாரை முதலிய) மகளிர்கூட்டம்கலங்குவதனாலுண்டான பேராரவாரத்தைக் கேட்டு, அறிவுஉற்று - (மயக்கங்கெளிந்து) இயற்கையறிவைப்பெற்று, முந்து உற்றது ஓர் பெற்றி ஓரான் - (முன்னே) நடந்த செய்தியொன்றையும் அறி யாதவனாய்,—(அவ்வங்கதனைநோக்கி), 'செறி பொன் தார் அலங்கல் வீர - நெருங்கிய பொன்னரங்களையும் மலர்மாலையையுமணிந்த வீரனே! குற்றம் செய்திலம் - (நாம் இராமலக்ஷ்மணர் திறத்தில்) ஒருபிழையுஞ் செய்திலோம்: (அவ்வாறிருக்க), நம்மை கறு உற்ற பொருளுக்கு காரணம் கண்டது என் னை - (இலக்குமணன்) நம்மீது கோபங்கொண்ட தன்மைக்குக்காரணமாகக் கண்டதுதான் யாதோ?' என்றான் - என்று வினவினான்; (எ-று.)

தாரையுடன் சென்ற வானரமகளிர் கலங்கிச் செய்த பேராரவாரத் தாற் சுக்கிரீவன் மதக்களிப்புத் தவிர்ந்தனனென்க. வெள்ளம் - ஒரு பெருக் தொகை; பெருக்கிரளுக்கு, இலக்கணை. அமலை - பேராரவாரம் முந்துற்ற தோர்பெற்றியை மேலே அங்கதன் கூறுவன்.

'அனைவருமவனைநோக்கிப், பிறிவற்றார்', 'அவனைப்பற்றிப் பிறிவற்ற மயக்கந்தான்', 'பிறிவற்றமயக்கந்தீர்ந்தான்' என்பன பிரதிபேதம். (அ0)

[இதுமுதல் ஆறுகவிகள் - முன்நடந்தவரலாற்றைச் சுக்கிரீவனிடம் அங்கதன் கூறியதைக்கூறும்.]

அக. இயைந்தநாளெந்தைதீசென்றெய்தலிலெல்லவெய்தி
வியந்தனையுகவிகொன்றுய்மெய்யிலையென்னவிங்கி
யுயர்ந்ததுசிற்றமற்றதுற்றதுசெய்யமுற்று
நயந்தெரியனுமன்வேண்டாலினனம்மையின்னும்.

(இ - ள்.) (அப்போது அங்கதன் சுக்கிரீவனைநோக்கி), எந்தை - எனது தந்தையே! இயைந்த நான் - (சேனையுடன் வருவதாக முன்பு) உடன்பட்ட

நாளில், நீ—, சென்று எய்தலே - (இராமபிரானிடம்) போய்ச் சேர்ந்தா யில்லே, செல்வம் எய்தி வியந்தனே - பெருஞ்செல்வத்தையடைந்து செருக் கினாய்; உதவி கொன்றாய் - செய்தகன்றியை மறந்தாய்; மெய் இலே - சிறி தும்உண்மையில்லாதவனுனாய்', என்ன - என்று, சீற்றம் வீங்கி உயர்ந்தது - (இலக்குமணனுக்குக்) கோபம் மிகுதியாகமூண்டது; (அப்பொழுது), நயம் மூற்றும் தெரிஅனுமன் - நீதிசாஸ்திரங்களே முழுதும் உணர்ந்த அநுமான், அது உற்றது செய்ய - அக்கோபத்தைத் தணித்தற்குரிய காரியத்தைச் செய்யும்பொருட்டு, வேண்ட - (சென்று இலக்குமணனைப்) பிரார்த்திக்க, (அதனுல்), நம்மை இன்னும் நல்கினன் - (அவனிலக்குமணன்) நம்மை இன் னும் உயிரோடிருக்குமாறு விட்டான்; (எ-று.)—மற்று - அசை.

அநுமான் இலக்குமணனே வேண்டாவிடின், அப்போதே நாமனைவரும் இலக்குமணனுல் இறந்திருப்போ மென்றபடி. 'கறவுற்ற பொருளுக்கு என்னே காரணம்?' என்று விஞவிய சுக்கிரீவனுக்கு, அங்கதன் இலக்கு மணன் கறவுற்றகாரணத்தைக் கூறியதோடு, கடையிராகக் கோபத்தணிக்க காரணத்தையும் இச்செய்யுளிற் கூறி, இடையில்கிடக்கின்றவற்றை அடித்தகலி முதற் கூறுகின்ருன். தாரையைக்கொண்டு இலக்குமணனை வழிமறிக்கச் செய்ததும் அநுமானே யாதலால், இலக்குமணன் கோபத்தணிந்ததற்குக் காரணம் அவனேயாதலுணர்க: இதுபற்றியே, 'மூற்றும்நயந்தெரியனுமன்' என்றதும். இனி, 'உற்றதுசெய்கைமுற்றும்' என்ற பாடத்திற்கு - மெய்யிலே யென்னவீங்கி உயர்ந்ததாகிய (இலக்குமணனது) சீற்றமானது நயந்தெரி அநுமன் உற்றது செய்கை முற்றும் [தீர்நடந்த வரலாறுமுழுவதையும்] (சொல்லி) வேண்டியதனுல் அற்றது [தீர்கிற்று] என்று உரைக்கலாம்.

'இயைந்தநாளெல்லே', 'உற்றதுசெய்கைதானும்' என்பன பாடபேதம்.

அஉ. வருகின்றவேகமோக்கிவானரவீரர்வானைப்
பொருகின்றநகரவாயிற்பொற்கதவடைத்துக்கார்க்குன்
றருகொன்றுமில்லாவண்ணம்வாங்கினரடுக்கிமற்றுந்
தெரிகின்றசினத்தீப்பொங்கச்செருச்செய்வானமைந்துகின்ருர்.

(இ-ள்.) வானர வீரர்—,—வருகின்ற வேகம் நோக்கி - (இலக்கும ணன்) வரும் வேகத்தைக் கண்டு, வானை பொருகின்ற நகரம் வாயில் பொன் கதவு அடைத்து - வானத்தையளாவுகின்ற கிஷ்கிந்தாகோத்தின் வாயிலி லுள்ள பொற்கதவுகளைச் சார்த்தி, அருகு ஒன்றும் இல்லா வண்ணம் கார் குன்று வாங்கினர் அடுக்கி - சமீபத்தில் ஒருமலையும் மிச்சமாய்கிற்காதபடி பெரியமலைகளையெல்லாம் எடுத்துவந்து (அவ்வாயிலில்) ஒன்றன்மேலொன் ருக அடுக்கி, மற்றும் - மேலும், தெரிகின்றசினம் தீபொங்க - வெளிப்படு கின்ற கோபாக்கினியானது மிக, செரு செய்வான் - (இலக்குமணனேடு) போர்செய்யும்பொருட்டு, அமைந்து கின்ருர்-சித்தமாகின்ருர்கள்; (எ - று.)

வானைப்பொருகின்ற நகரவாயில் - உயர்வுநவிற்சி. கார்க்குன்று - கரிய குன்றுமாம். வாங்கினர் - முற்றெச்சம். 'செருக்கிகின்ருர்' என்றும்பாடம்.

அங. ஆண்டகையதனோக்கிப்பம்மலர்க்கமலத்தாளிற்
மீண்டினன்மீண்டாமுன்னம்தெற்கொடுவடக்குச்செல்வ
நீண்டகன்மதிலுங்கொற்றவாயிலுநிரைத்தகுன்றுங்
கீண்டனதகர்ந்துபின்னப்பொடியொடுங்கெழீஇயவன்றே.

(இ - ள்.) ஆண்தகை - ஆண்மைக்குணமுள்ளவனாகிய இலக்குமணன், அதனை நோக்கி-வானரர்களின் செய்கையைப் பார்த்து, அம் கமலம் மலர் தாளின் மீண்டினன் - அழகிய செந்தாமரைமலர்போன்ற தனது பாதத்தினால் (அடைத்தவாயிற்கதவை) உதைத்தான்; மீண்டா முன்னம்-(அப்பாதம்) படுதற்குமுன்னமே, தெற்கொடு வடக்கு நீண்ட செல்வம் கல் மதிலும் - தெற்குவடக்காக நீண்டுள்ள சிறப்பையுடைய கல்லிஞலமைக்கப்பட்ட மதிலும், கொற்றம் வாயிலும் - வலிய கோபுரவாயிலும், நிரைத்த குன்றும் - (அவ்வாயிலில் வானரவீரர்கள்) ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய மலைகளும், தகர்ந்து கீண்டன - உடைந்துசிதறினவாய், பின்னே - பின்பு, பொடியொடும் கெழீஇய - பொடியாய்விட்டன; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்: அப்பொழுதே யெனினுமாம்.

நீண்டாமுன்னம் தகர்ந்துகீண்டன - மீகையுயர்வுநவிற்சி. மதிலுக்குச் செல்வமாவது - மிக்கஉயரமும், புறத்தோர்க்கு அகழலாகாத அடியகலமும் அகத்தோர்க்கு நின்று தொழில்செய்யலாந் தலையகலமு முடைமை. கெழீஇய - சொல்லிசையளபெடை; இதில், கெழுவு - பகுதி.

'தானால்', 'தெற்கொடுவடக்குத்தெய்வம்', 'தெற்கொடுவடக்குத்தேய', 'கீண்டனகாந்து' என்பன பாடாந்தரம். (அங)

அச. அந்நிலைகண்டதிண்டோளரிக்குலத்தனிகமம்மா
வெந்நிலையுற்றதென்கேன்யாண்டுபுக்கொளித்ததென்கே
னிந்நிலைகண்டவன்னேயேந்திழைபாயத்தோடு
மின்னிலைவேலினானைவழியெதிர்விலக்கிநின்றாள்.

(இ - ள்.) அந்நிலை கண்ட திண் தோள் அரிகுலத்து அனிகம்-அவ்வாறு (இலக்குமணனால்தோற்ற) நிலைமையைப் பார்த்த வலியதோள்களையுடைய வானரசாதிச்சேனை, எந்நிலை உற்றது என்கேன்-எத்தகுநிலைமையை யடைந்ததென்று சொல்வேன்? யாண்டு புக்கு ஒளித்தது என்கேன் - எவ்விடத்திற் போய்ப் பதுங்கியதென்றுதான் சொல்வேன்? இந்நிலை கண்ட அன்னை - (வானரசேனியத்தின்) இந்தநிலைமையைப்பார்த்த (எனது) தாயாகிய தாரை, எந்த இழை ஆயத்தோடு - அணிந்த ஆபரணங்களையுடைய மகளிர்கூட்டத்துடனே, மின் இலை வேலினானை - மின்னல்போன்ற இலைவடிவமாகச்செய்யப்பட்ட வேலாயுதத்தையுடைய இலக்குமணனை, எதிர் வழி விலக்கி நின்றாள் - எதிரேசென்ற வழிமறித்துநின்றாள்; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்; வானரசைனியங்கள் அஞ்சியோடும்படியிருந்த இலக்குமணனது தோற்றத்தை வியந்தவாறு.

இனையபெருமாளது திருவடிபட்டமாத்திரத்தில் வாயிற்கதவுமுதலியன பொடியாய்விட்டதைக் கண்ட வானரங்கள் அஞ்சி அரிதில் உயிர்த்துப்பிக் கலங்கிப் போனதிசை தெரியாமற் சென்றன; அப்போது அவ்விலக்குமணன் அரண்மனையினுட் புகுமாறு வர, மகளிர் கூட்டத்தோடு தாரை நடுத்தன னென்பதாம். மின் நிலை என்றுபிரித்து - மின்னலின் தன்மையையுடைய என்றும் உரைக்கலாம். ஆயுதங்களிற் சிறத்தலால், வேல் கூறப்பட்டது. என்கேன், கரவிடைநிலை - எதிர்காலங்காட்டும்.

'எந்நிலை நின்றதென்கேன் யாண்டுப்புக்கிருந்த தென்கேன்,' 'அந்நிலை கண்டவன்னையாயிழை,' 'மின்னிலைவில்லினானே' என்பன பிரதிபேதம். ()

அரு. மங்கையர்மேனிநோக்கான்மைந்தனுமனத்துவந்து
பொங்கியசிற்றம்பற்றிப்புகல்கிலன்பொருமிநின்ற
னங்கையுமினிதுகூறிநாயகநடந்ததென்னே
வெங்கள்பாலென்னச்சொன்னளண்ணலுமினையசொன்னான்.

(இ - ன்.) மைந்தனும் - வீரனுகிய இலக்குமணனும், மங்கையர் மேனி நோக்கான - (வழிமறிதலின்ற தாரைமுதலிய) மகளிரது மேனியைக் கண்ணெடுத்துப் பாராதவனும், மனத்து வந்து பொங்கிய சிறறம்பற்றி புகல்கிலன் - (தன) மனத்திலே மிகுதியாக உண்டாகிய கோபத்தினுல் ஒன்றுஞ் சொல்லமாட்டாதவனும், பொருமி நின்ற - வருந்திநின்ற; நங்கையும் - மகளிரிற் சிறந்தவளான தாரையும், இனிதுகூறி - (இலக்குமணனதுகோபத் தணியும்படி) இனியவார்த்தையைச் சொலலி, (அவனேநோக்கி), 'நாயக - சிறந்தவனே! எங்கள்பால் நடந்தது என்னே - (நீ இராமபிரானை விட்டுப் பிரிந்து) எங்களிடத்தில் வந்தகாரியம் யாதோ?' எனச் சொன்னள் - எனறு வினவினள்; அண்ணலும் - அவ்விளையபெருமானும், இனைய சொன்னன் - இவ்வாறுசொல்லக் கூறினன்; (எ - று.)

'மங்கையர்மேனிநோக்கான்' என்பதனால், அயல்மாதரைக் கண்ணெடுத்துப்பாராத கோன்மையுடையவன் இலக்குமண னெனபது, பெறப்படும். 'இனைய' எனறது - கீழ்நிசை - ஆங்கவியிற கூறியதைச் சுட்டும். இலக்குமணன பொருமியது - தாரையைக்கண்டவுடனே தனதாயரைப்பறறி நினைவுவந்ததனு லென்க; கீழ் 'தாயரைநினைந்தகைத்தான்,'' ''நங்கையைக் கண்டவள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றனை'' என வந்தமை காண்க.

'மனத்துவந்த,' 'சிற்றம்பற்றிப்புகுந்திலன்,' 'நடந்ததென்னே', 'அண்ணலுமிதயஞ்சொன்னான்' எனறும் பாடம். (அரு)

அசு. அதுபெரிதறிந்தவண்ணியன்னவன்சிற்றமாற்றி
விதிமுறைமறந்தானல்லன்வெஞ்சினச்சேனைவெள்ளங்
கதுமெனக்கொணருதுகலலதாசெலலலீவீ
யெதிர்முறையிருந்தானென்றுளிதுவிக்குப்புகுந்ததென்றான்.

(இ - ன்.) அதுபெரிதறிந்த அனை - (இலக்குமணன்வந்த) அத்தகோபத்தை கண்டுகொண்டறிந்த எனதுதாயாகிய தாரையானவள்,—அனது

வன் சிற்றம் ஆற்றி - அவ்விலக்குமணனது கோபத்தை (இன்சொற்கூறி)த் தணித்து, (இலக்குமணனேநோக்கி) 'வீதி முறை மறந்தான் அல்லன் - (சுக்கிரீவன் இராமபிரானது) கட்டளையினதன்மையை மறந்தவனல்லன்; வெம் சினம் சேணீர் வெள்ளம் - கடுங்கோபத்தையுடைய வானரசேனைகளின் தொகுதியை, கதுமென கொணரும் - விரைவாகக்கொண்டுவருதற்கு உரிய, தூது - தூதுவர்களை, கல் அதர் செல்ல ஏவி - கற்களையுடைய மலைவழியிலே போகும்படி கட்டளையிட்டு அனுப்பி, எதிர்முறை இருந்தான் - (அவ் வானரசைனியத்தின் வருகையை) எதிர்நோக்கியிருந்தான்', என்றுள்—; இது இங்கு புகுந்தது - இதுதான் இப்பொழுது [இங்கே] நடந்த செயலாகும்', என்றன - என்று (சுக்கிரீவனேநோக்கி அங்கதன்) கூறிமுடித்தான்.

கதுமென - விரைவுக்குறிப்பிடைச்சொல் தூது உயர்திணைப்பொருள் தரும் அஃறிணைச்சொல்: சாதியொருமை. தூதர்கள்மூலமாக வானரசேனைகளைத் திரட்டக் காலதாமதமாதற்குக் காரணத்தைக் குறிப்பாகவுணர்த்தினவான், 'கல்லதாசெல்லவேவி' என்றுள்; அதர் - விலங்குசெல்லும் நெருக்கமான வழி. 'வீதிமுறையறிந்தாண்மன்னன்' என்ற பாடத்திற்கு—செய்ய வேண்டிய முறையை யறிந்தவளாகிய தாரையானவள், அனனவண்சீற்றம் ஆற்றி, மன்னன் [சுக்கிரீவமகாராஜன].....எதிர்முறையிருந்தான என்றுள் எனது பொருள்காண்க. 'கொணர்த்தூது' எனபது பிரதிபேதம் (அசு)

[இலக்குமணன்வருகையை முன்னமே தனக்குத்தெரியாத காரணத்தைச் சுக்கிரீவன் வினவுதல்.]

அள. சொற்றலுமருக்கன்றோன்றல்சொல்லுவான்மண்ணின்விண்ணி
னிற்குரியார்கள்யாவரையவரெனைததிதினேர்ந்தால்
விற்குரியாரித்தன்மைவெகுளியின்விரைவினெய்தி
னெற்குரையாதுநீரீதியற்றியதென்கொலென்றான்.

(இ - ள்.) சொற்றலும்-(அவ்வாறு அங்கதன்) சொன்னவுடனே, அருக்கன் தோன்றல் - சூரியகுமாரனை சுக்கிரீவன், சொல்லுவான - (பின்வருமாறு) சொல்பவனானான்:—'அனையவர் சினத்தின் நேர்ந்தால் - அவ்விராமலக்குமணர்கள் கோபங்கொண்டு எதிர்த்துவந்தால், மண்ணின் - இந்நிலவுலகத்திலாவது, விண்ணின - மேலுலகத்திலாவது, நிற்க உரியார்கள் யாவர் - (அவர்கட்குமுன்னே) எதிர்த்துநிற்கத்தக்கவர்கள எவர்? விறகு உரியார் இத்தன்மை வெகுளியின் விரைவின் எய்தின - வில்வீரராகிய அவ்விளையபெருமான் இவ்வாறு கோபத்தோடு விரைந்துவருகையில், எற்கு உரையாது - (அதனை) எனக்குத் தெரிவியாமல், நீர் ஈது இயற்றியது - நீங்கள இவ்வாறு செய்தது, எனகொல் - என்னகாரணம்பற்றியோ?' எனறன - என்று (அங்கதனை) வினவினன்; (எ - று.)

இதனால், எவவுலகத்திலும் ஈடில்லாதவர் இராமலக்குமணரென்பதைக் கருதாது வானரங்கள் வாயிலடைத்து இலகுமணனோடு செருச்செய்ய முயன்றதும், அவ்விலக்குமணன் பெருஞ்சினத்தோடு வந்தபோது தனக்கு

முன்னமே தெரிவியாதிருந்ததும் தவறென்று சுக்கிரீவன் குறிப்பித்தவாறு. 'ஈதியற்றியது' எனபது - கதவடைத்துக் கறகளடுக்கியது முதலியவற்றைக் குறிக்கும். கிற்குரியார் - செயவெனைச்சத்தின் அகாவீறு தொகுத்தல். விற் குரியார் - உயர்வுப்பன்மை. என்கொல்—கொல் அசை.

'செரற்குறியானவெல்லாஞ் சொல்லலு மருக்கன்மைந்தன' என்றும் பாடம். (அஎ)

[அதற்கு அங்கதன் மறுமொழிகூறுதல்.]

அஅ.உணர்த்தினேன்முன்னர்நீயஃதுணர்ந்திலைபுணர்விற்றீர்த்தாய்
புணர்ப்பதொன்றின்மை நோக்கிமாருதிக்குரைப்பான்போனேன்
நிணர்த்திதாகையின்றபொற்றரெழுவலித்தடந்தாளெந்
கணத்திடையவனேயுங்காணுதல்கருமமென்றான். [தாய்

(இ - ள்.) இணர் தொகை ஈன்ற பொன் தா எறழ் வலி தட தோள் எந்தாய் - பூங்கொத்தின்தொகுதியினால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையைத் தரித்த மிக்கவலிமைபொருந்திய பெரிய தோள்களையுடைய எனது தக்தையே! முன்னர் உணர்த்தினேன - (நான் இலக்குமணன்வருகையை உனக்கு) முன்னமே தெரிவித்தேன; நீ—,உணர்வின் தீர்த்தாய் - (அப்போது) மதிமயங்கியிருந்தாய்; (அதனால்), அஃது உணர்ந்திலை - (நான கூறிய) அதனைத் தெரிந்துகொண்டாயில்லை; (பிறகு), புணர்ப்பது ஒன்று இன்மை நோக்கி - (யான) செய்யக்கூடிய வேறொருபாயமில்லாமை கண்டு, மாருதிக்கு உரைப்பான போனேன - (இச்செய்தியை) வாயுகுமாரனான அனுமானுக்குச் சொல்லும்படி சென்றேன; (இப்போது), கணத்திடை - ஒருகொடிப் பொழுதிற்குள்[விரைவிலே], அவனை - அவலிலக்குமணனை, நீயும்—,காணுதல் - சென்றுபார்த்தல், கருமம் - செய்யவேண்டியதொழிலாகும், என்றான் - என்று (சுக்கிரீவனைநோக்கி அங்கதன்) கூறினான; (எ - று.)

எறழ் வலி - ஒருபொருட்பன்மொழி. நீயும், உம்மை - இறந்ததழுவிய எச்சப்பொருளது. (அஅ)

[தான் மதுவினால் மதிமயங்கிக்கிடந்ததைப்பற்றிச் சுக்கிரீவன் கழிவிரக்கங் கொண்டுகூறியதை இதுமுதல் ஒன்பதுகவிகளிற் கூறுகின்றார்.]

அக.உறவுண்டகிளத்தையானுமுரைசெய்வானினுருவர்க்கின்னம்
பெறலுண்டேயவராலீண்டியான்பெற்றபேருதவியுற்ற
திறலுண்டோவென்னினிற்றீர்வானிருந்தபேரிடரையெல்லா
நிறவுண்டுமறந்தேன்காணாணுவனைமைந்தவென்றான்.

(இ - ள்.) உறவு உண்ட கிளத்தையானும் - (இராமபிரானிடம்) கலந்த நட்பைக் கொண்ட மனத்தையுடையவனான சுக்கிரீவனும், உரைசெய்வான - (அங்கதனைநோக்கிச்) சொல்வான; மைந்த - இளவீரனே! அவரால் ஈண்டு யான பெற்ற பேர் உதவி - அவரிராமபிரானால் இப்போது யான் அடைந்துள்ள பேருபகாரம், ஒருவர்க்கு இன்னம் பெறல் உண்டே - மற்

ரொருவரால் இனிப் பெறமுடியுமோ? [முடியாது என்றபடி]; உற்றதனிறல் உண்டோ - (யான்) அடைந்த பெருஞ்செல்வத்துக்கு அழிவேனும் உள்ளதோ? [இல்லையனறே]; என்னின் தீர்வான் இருந்த பேர் இடரை எல்லாம் - என்னுலே நீக்கிக்கொள்ளும்படி கினைத்திருந்த (இராமபிரானது) பெருந்தன்பங்களையெல்லாம், நறவு உண்டு மலர்தேன் - மதுவுண்டதனுல் மறந்துபோனேன்; (ஆதலால்), காண - (இப்போது லக்ஷ்மணனைப்) பார்த்தற்கும், காணுவன் - வெஞ்சினத்தேன்', என்றான் —; (எ - று.)

பிறரெவராலும் பெறுதற்கு அரியதும் அழிவில்லாததுமான பேருதவியை நான் இராமபிரான்மூலமாகப் பெற்றிருந்தும் மதமயக்கத்தாற் செய்ந்நன்றிமறந்து அப்பிரானுக்குச் செய்யவேண்டிய கைம்மாறொன்றுஞ்செய்யாமல் அவனை வருந்தும்படி விட்டிட்டதனுல் இப்போது இலக்குமணனைக்கண்ணுற்காணுதற்கும் வெஞ்சினத்தேனை னென்பதாம். உறவுண்ட சிந்தையான் - மனமொத்த சினேகிதன்; இனி, (அங்ஙனன்வார்த்தை) கன்றாக வுறவுத்திய சிந்தையை யுடையவனுன சுக்கிரீவ னெனினுமாம். 'என்னின் தீர்வான இறந்த பேரிடரையெல்லாம்' என்ற பாடத்திற்கு— என்னுலே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றிருந்த இராமபிரானது மிக்க பெருந்தன்பங்களையெல்லாம் என்று பொருளாம். 'பேரிடா' எனறது, சீதையை நாடிப்பெறுமையால் இராமபிரான் மேன்மேலும் படுகின்ற வருத்தத்தை.

'நம்பவென்றான்' என்பதும் பாடம். (அக)

கூ0. ஏயினவிதுவலான்மற்றேழைமைப்பாலதென்னே
தாயிவண்மனைவியென்னுந்தெளிவின்றேற்றருமென்னுந்
தீவினையைத்திணென்றுமன்றியுந்திருக்குநீங்கா
மாயையின்மயங்குகின்றுமயக்கின்மேன்மயக்கும்வைத்தாம்.

(இ - ள்.) ஏயின இது அலால் - (இப்பொழுது எனக்கு) நேர்ந்த [கட்குடித்து மயங்கியிருந்த] இதுவல்லாமல், மற்று ஏழைமை பாலது - வேறு பேதைமையானதொரு செயல், என்னே - யாது உளது? (இவ்வாறு கட்குடிப்பதனுல்), (இவள்) தாய் இவள் மனைவி என்னும் தெளிவு இன்று எல் - இவள் தாய் இவள் மனைவி என்கிற விவேக மில்லையாகுமென்றுல், தருமம் என் ஆம் - (கட்குடிப்பவனிடத்தில்) மற்றைத்தருமங்களிருக்கும் யாதுபயன் படும்? (இவ்வாறு மதுவுண்டு மயங்குதல்), தீவினை ஐந்தின் ஒன்று ஆம் - பஞ்சமகாபாதகங்களு ளொன்றாகும்; அன்றியும் - அல்லாமலும், திருக்கு நீங்கா மாயையில் மயங்குகின்றும் - வஞ்சனை நீங்காத மாயைக்கு வசப்பட்டு மயங்குகின்றவர்களாகிய நாம், (அந்த மயக்கத்தை யொழிக்க வல்லமையில்லாதிருக்கையில்), மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம் - பெருமயக்கத்திற்குக் காரணமான மதபானத்தில் மோகத்தையும் கொண்டோம்; (எ - று.)

இதனுல், ஒருவாற்றலும் பரிகரிக்கமுடியாத குற்றஞ்செய்தேனென்னச் சுக்கிரீவன கழிவிரக்கங் கொண்டனனென்க. மதபானம் தன்னையுடையோனை விவேகசூனியனுக்கி அவனிடத்திலுள்ள பிறவறங்களையும் கெடுத்து

வீடுமென்பது, இரண்டாமடியின் பொருள். 'இவள்' - மத்திமதீபம். பஞ்ச மஹா பாதகங்களாவன - கொலை, களவு, கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், குருநிந்தை யென்பன; பிறவாறுமுரைப்பர். மாயை - இவ்வுலகத்தில் கூடை பெறுகின்ற எம்பெருமானது ஒருசக்தி: இது உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் ஒன்றை மற்றொன்றாகவுங் காட்டுந் தன்மை யுள்ள தாதலால், 'திருக்குநீங்காமாயை' எனப்பட்டது: இம்மாயைக்கு வசப் பட்டே உயிர்கள் விபரீதஞான முடையனவாய் இவ்வுலகத்தில் மயங்கியுழல் கின்றன வென்க. இம்மாயையை யொழித்தற்கு வலியில்லாமல் மயங்கிக் கிடக்கையில் பின்னும் மயக்கத்தை யுண்டாக்குகின்ற மதபானமும், தோர்ந் ததே என ஈற்றடியால் இரங்கியவாறும். மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம் என்பதற்கு - மாயையிலாகிய மயக்கத்தோடு நிற்கையில் (மதபான) மயக் கத்தையும் கொண்டோமே யென்றுங் கூறலாம்.

'ஏயினகறவலான்', 'ஏழைமைப்பாலதியாதோ', 'தீவினைவேறுமொன்றி தன்றியுந் தெரிக்கலாரோ, மாயையின் மயக்குநின்றார் மயக்கின்மேன் மயக் குவைப்பார்' என்பன பிரதிபேதம். (கூ)

கூக. தெளிந்துதீவினையைத்தீர்ந்தோர்பிறவியிற்றீர்வரென்ன
விளிந்திலாவுணர்விஞரும்வேதமும்விளம்பவேயு
மெளிந்துறைபுழுவைநீக்கிநறவுண்டுநிறைகின்றேறை
யளிந்தகத்தெரியுந்தீயைநெய்யினாலவிக்கின்றாமால்.

(இ - ன்.) 'தெளிந்து தீவினையை தீர்ந்தோர் - (மாயைக்கு வசப்படா மல்) மனந்தெளிந்து தீச்செயல்களை யொழித்தவர், பிறவியின்தீர்வர் - பிற வித்தன்பத்தினின்றும் நீங்கி முத்திபெறுவர்', என்ன - என்ற, விளிந்திலா உணர்விஞரும் - அழியாத அறிவையுடைய தத்துவஞானிகளும், வேத மும்—, விளம்பவேயும் - சொல்லியிருக்கவும், (சிறிதும் உணர்ச்சியின்றி), தெளிந்து உறை புழுவை நீக்கி - தெளிந்துகொண்டு நிறைந்துகிடக்கிற புழுக் களை எடுத்தெறிந்துவிட்டு, நறவு உண்டு - கள்ளைக்குடித்து, நிறைகின்றேறை - களித்துக் கிடக்கின்றேறை (யான்); (இவ்வாறு செய்கின்ற நான்கள்), அகத்து அளிந்த எரியும் தீயை - வீட்டிற் கனிந்த பற்றியெரியும் நெருப்பை, நெய் யினால் அவிக்கின்றாம் - நெய்யைக்கொண்டு அவிக்கத் தொடங்குபவர்போ லாகின்றோம்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

கனிந்த பற்றியெரியும் நெருப்பில் நெய்யைச்சொரிந்தால் அந்நெருப்பு அவியாது மேன்மேல் வளருமாறுபோல, இயற்கையில் மாயைக்குவசப்பட்டுத் தீவினையினூழுழல்கின்றவர் கட்குடித்தலையும் மேற்கொள்வது தீவினைவளர் தற்கே காரணமாய் முடியு மென்பதாம்; ஈற்றடி - காட்சியணி. தீவின் - பாவுச்செயல். மதபானத்தின் இழிவைக் கூறுவான், 'தெளிந்துறைபுழுவை நீக்கிநறவுண்டு' என்றான். கட்குடிப்போரையெல்லாம் உளப்படுத்தி, 'அவிக் கின்றாம்' எனப் பன்மையாற் கூறியது. 'அளிந்தம்' என்ற வடசொல் 'க'ப் ரத்யயம் பெற்று 'அளிந்தகம்' என வந்ததாகக் கொண்டு, அளிந்தகத்து எரி யும் தீயை நெய்யினால் அவிக்கின்றாம். வாசலுக்கு முன்னிடத்தில் (காற்

ரூட்ட முள்ளலிட்டதிற்) பற்றியெரிகின்ற கெருப்பை செய்யைக்கொண்டு அவிக்க முயல்கின்றவரை யொத்தோமென உரைப்பாரு முளர்.

'தெளிந்த தீவினையைச்செற்றூர் பிறவியைத் தீர்வான்றே', 'புழுவை நோக்கி நரவுண்டு நிற்கின்றநாம்' என்பன பாடாந்தரம். (கூக)

கூஉ. தன்னைத்தா னுணர்தற்கருங்கையறுபிறவியென்ப
தென்னத்தான்மறையுமாற்றைத்துறைகளுமிசைத்தவெல்லா
முன்னைத்தான்றன்னையோராமுழுப்பிணியழுக்கின்மேலே
பின்னைத்தான்பெறுவதம்மாநரவுண்டுதிகைக்கும்பித்தே.

(இ - ள்.) 'தான் தன்னை உணர-(ஒருவன்) தன்ஸ்வரூபத்தை உணர்ந்த மாத்திரத்தில், தனை அறு பிறவி என்பது - (அவனது) பெருமைக்கிடமில் லாத ஜந்மமானது, தீரும் - ஒழியும்' என்னத்தான் - என்றே, மறையும் - வேதங்களும், மற்றை துறைகளும் - மற்றைச் சாஸ்திரங்களும் (ஆகிய), எல்லாம் - எல்லாமும், இசைத்த - சொல்லியுள்ளன; முன்னை தான் தன்னை ஓரா முழு பிணி அழுக்கின் மேலே - முதலில் தான் தன் ஸ்வரூபத்தை அறியாததனு லுண்டாகின்ற நிறைந்த வியாதியையுடைய அழுக்குடம்பைப் பெற்றிருத்தலோடு கூட, பின்னை - மேலும், நரவு உண்டு திகைக்கும் பித்து பெறுவது ஒ - கள்ளுண்டு மயங்குகின்ற மயக்கத்தைப் பெறுதலும் முறை மையாகுமோ? (எ - று)—அம்மா - வியப்பிடைச்சொல்; மதுபானத்தின் கொடுமையை நினைந்து கூறியது. தான் - அசை.

பிறவித்துயர் நீங்குதற்கு ஸ்வஸ்வரூபத்தை யுணர்தல் இன்றியமையாத தாயிருக்க, அவ்வறிவின்மையோடு மதுபானமயக்கத்தையும் பெறுவது என்ன விபரீதம்! எனக் கூறியவாறு. தன்னைத்தான் உணர்தலாவது - ஜீவாத்மா வின் தன்மையை உள்ளபடி யுணர்தல். இதனை யுணரவே, மற்றைய பர மாத்மாவின் ஸ்வரூபமும், ஜீவாத்மா பரமாத்மாவை யடையக்கூடிய உபாயத் தின் ஸ்வரூபமும், அடைதலாற் பெறக்கூடிய பலத்தின் ஸ்வரூபமும், ஜீவாத்மா பரமாத்மாவை அடையவொட்டாது தடுகின்ற விரோதியின் ஸ்வ ரூபமும் ஆகிய நான்கும் தாமாகவே உணரப்படும். இவைகளுக்கும், அர்த்த பஞ்சக மெனப்படும்: அர்த்தபஞ்சகஞ்ஜாந முடையவனே பிறவித்துயரமற் றம் ஒழியப்பெறுவா னென்பது, வேதசாஸ்திரங்களின் கருத்தா மென்க. மற்றைத் துறையென்றது - வேதத்திற்கு அங்கமான ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களை. "நோயெலாம்பெய்ததோராக்கை", "அழுக்குடம்பு" என்ப தாதலால் இவ்வுடம்பை 'முழுப்பிணியழுக்கு' என்றும், இவ்வழுக்குடம்போடு கூடிய பிறவி யுண்டாதற்குக் காரணம் ஸ்வஸ்வரூபத்தை யுணராமையே யாதலால் 'முன்னைத் தான் தன்னையோரா' என்று அடைமொழி கொடுத்தும் கூறினர். 'என்பது' - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. நான்காமடியில், 'பின்னை' என வருவதனால், 'முன்னை' என்றார். ஈற்று ஒகாரம் - இரக்கம்.

'தன்னைத்தா னுணர்வருமிற் றகையறும் பிறவிதீரும்,' 'அறையுமற்றை மறைகளுமிசைத்தவெல்லாம்', 'தன்னையோரான்' என்றும் பாடம். (கூஉ)

கூடு. அளித்தவரஞ்சுநெஞ்சினடைத்தவரறிவுமூழ்கிக்
குளித்தவரின்பதுன்பங்குறைத்தவரன்றிவேரி
யொளித்தவருண்டுமீண்டிவ்வுலகெலாமுணரவோடிக்
களித்தவரெய்திநின்றகதியொன்றுகண்டதுண்டோ

(இ - ள்.) அளித்தவர் - (அபயமென்று அடைந்தவரைப்) பாதுகாத்தவரும், அஞ்சும் நெஞ்சின் அடைத்தவர் - பஞ்சேந்திரியங்களையும் மனத்தில் அடக்கியவரும், அறிவு மூழ்கி குளித்தவர் - தத்துவஞானத்தில் ஆழ்ந்திருப்பவரும், இன்பம் துன்பம் குறைத்தவர் - (சுகதுக்கங்களில்) விருப்பு வெறுப்பற்றவரும் [சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதுந் தன்மைகளும்]. அன்றி - (நற்கதியடைவார்களே) அல்லாமல்,—வேரி - மதுவை, ஒளித்தவர் உண்டு - (பிறாறியாமல்) மறைத்தவராய்க் குடித்து, (அதனாலாகிய வெறியினால்), மீண்டு - பின்பு, இ உலகு எலாம் உணர ஓடி களித்தவர் - இவ்வுலகத்தாரெல்லாரும் அறியும்படி (கண்டவிட்த்திலும்) ஓடிக் களிப்புக்கொண்டவர், எய்தி நின்ற - அடைந்துள்ள, கதி ஒன்று - ஒருநற்கதியை, கண்டது உண்டோ - (எவராயினும்) பார்த்தறிந்த துண்டோ? (எ - று.)

அஞ்சிவந்தடைந்தவரை அபயமென்று காத்தலும், பஞ்சேந்திரியங்களை வசப்படுத்துதலும், தத்துவஜ்ஞானம் நிரம்புதலும், சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதுதலும் நற்கதியடைதற்கு ஏற்றவழிகளாமேயன்றி, கட்குடித்தலால் ஒருகாலும் நற்கதியுண்டாகாதென்பது கருத்து. பிறாறியாதபடி மறைத்து மதுவை உண்டாலும் பிறகு உண்டவனது சொற்சோர்வு முதலியவற்றால் உலகத்தவர் பலராலும் அது அறியப்படு மாதலால், கட்குடிப்பவரை 'ஒளித்தவ ருண்டு மீண்டிவ்வுலகெலாமுணரவோடிக் களித்தவர்' என்றார்; ''உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றும், கள்ளொற்றிக் கண்சாய்பவர்'' என்றார் நாயனாரும். 'கதியொன்று கண்டதுண்டோ' என்றதனால், குடியர்க்கு ஒருகாலும் நற்கதி யுண்டாகாதென வற்புறுத்தியவாறும். ஐம்பொறிகளை மனத்தி லடக்குதலாவது - ஐம்பொறிகளைப் புலன்களின்மேற் செல்ல வொட்டாது தடுத்து வைத்தல். 'அஞ்சுநெஞ்சினடைத்தவர்'—ஜிதேந்திரியர்கள்: அஞ்சு - பஞ்சேந்திரியங்கட்குத் தொகைக்குறிப்பு: உம்மை - முற்றும்பொருளது.

'அளித்தவரஞ்சுநெஞ்சினடைந்தவரறிவுமூழ்கிக், குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்த' என்ற பாடத்திற்கு—அளித்தவர் நெஞ்சின் அஞ்சை அடைந்தவர் - தம்மைப்பெற்ற தாய்தந்தையர் மனத்தில் அச்சங்கொள்ளுமாறு பிறந்தவர்களும், அறிவு மூழ்கி குளித்தவர் - நுண்ணறிவுகெட்டு விஷயாந்தாரங்களில் [சிற்றின்பங்களில்] மூழ்கினவரும், இன்பதுன்பம் குடைந்தவர் - சுகதுக்கங்களை ஒருநிகராகப் பாராட்டாமல் அவற்றிலேயே அழுந்துபவரும் [இன்பம்வந்த காலத்தை மகிழ்ந்தும் துன்பம்வந்தகாலத்தை வருந்தியும் நிற்பவரும்], குடைந்த வேரி ஒளித்தவர் உண்டு மீண்டு இ உலகுஎலாம் உணர ஓடிக் களித்தவரும் எய்திநின்ற கதியொன்று கண்டது உண்டோ? என்று

பொருளாம். குடைந்த வேரி - பாலை முதலியவற்றினின்று குடைந்தெடுக்கப்பட்ட மது. (கஉ)

கூச. செற்றதும்பகைஞர்நட்டார்செய்தபேருதவிதானுங்
கற்றதுங்கண்கூடாகக்கண்டதுங்கலைவலாளர்
சொற்றதுமானம்வந்துதொடர்ந்ததும்படர்ந்தஅன்ப
முற்றதுமுணர்வராயினுறுதிவேறினியுண்டோ.

(இ - ன்.) பகைஞர் செற்றதும் - பகைவர் (தமக்குச்) செய்த தீங்கையும், நட்டார் செய்த பேர் உதவிதானும் - (தமக்குச்) சினேகிதர் செய்த பேருபகாரத்தையும், கற்றதும் - (தாம்)கற்றகல்வியையும், கண்கூடுஆக கண்டதும் - (தாம்) பிரதியட்சமாகக் கண்டறிந்ததையும், கலை வலாளர் சொற்றதும்-சாஸ்திரங்களை யுணர்ந்த பெரியோர் கூறியதையும், மானம் வந்து தொடர்ந்ததும் - (தமக்குப்) பெருமை வந்துசேர்ந்த வழியையும், படர்ந்த அன்பம் உற்றதும் - மிக்கஅன்பம் வந்து சேர்ந்ததையும், உணர்வர் ஆயின் - அறிவாராஞல், இதனின் வேறு உறுதி உண்டோ - (அவர்க்கு) இதனைக்காட்டிலும் நன்மை தருவது வேறொன்று உளதோ? [இல்லை]; (எ - று.)

தனது நாட்டாராகிய இராமலக்ஷ்மணர் செய்த பேருதவியை மறவாதிருப்பதே தனக்கு நன்மையெனக் கூறத்தொடங்கிய சுக்கிரீவன், இனம் பற்றி மற்றவற்றையும் உடன்கூறினன்; ஒப்புமைக்கூட்டவணி. பகைஞர் செற்றது முதலியவற்றை மறத்தலால் தீமையும், மறவாது மனத்துக்கொண்டிருத்தலால் நன்மையும் உண்டா மென்க.

'பாவும் வந்து தொடர்ந்ததும்', 'மானம்வந்துதெலைந்ததும்', 'உற்றது மூணராராயினுறுதிவேறினியுண்டோ' என்பன பிரதிபேதம். (கூச)

கூடு. வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமாபில்கொட்புந்
தஞ்சமென்றுரைநீக்குந்தன்மையுங்களிப்புந்தாக்குங்
கஞ்சமெல்லணங்குந்தீருங்கள்ளினுலருந்தினுரை
நஞ்சமுங்கொல்வதல்லாலரவினுநல்காதன்மேற.

(இ - ள்) கள்ளினுல் அருந்தினுரை - மதபானஞ்செய்தவரை,—வஞ்சமும் - வஞ்சனையும், களவும் - திருடுதலும், பொய்யும்—, மயக்கமும் - அறியாமையும், மரபுஇல் கொட்பும் - தொன்று தொட்டுவந்த முறைமைக்கு மாறான கொள்கையும், தஞ்சம் என்றுரை நீக்கும் தன்மையும்-சரணமென்று அடைந்தவரைப் பாதுகாவாது நீக்குகின்ற குணமும், களிப்பும் - செருக்கும், தாக்கும் - (சேர்ந்து) வருத்தும்; கஞ்சம் மெல் அணங்கும் தீரும் - செந்தாமரைமலரில் வசிக்கின்ற மெல்லிய தன்மையுள்ள இலக்குமியும் விட்டு நீங்குவான்; நஞ்சமும் - விஷமும், கொல்வது அல்லால் - (உண்பவரைக்) கொல்லுமே யல்லாமல், நரகினை நல்காது - (அவர்க்கு) நரகத்தைத்தராது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

விஷம் உண்டவரது உடம்பைமாத்திரம் அழிக்கும்; மதுவோ உடம்பை யழித்தலோடு உயிரையும் நீக்கதியிற்சேர்க்குமென, உபமானமாகிய நஞ்சை

வீட உபமேயமாகிய மதவுக்கு வேற்றுமைதோன்றக் கூறியது, வேற்றுமை யணி. மதவுக்கு நஞ்சு உபாதானமாதலை, "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என் பதனாலும் அறிக. கொட்பு - 'கொள்' எனும் பகுதியினடியாப் பிறந்த 'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர். கஞ்ஜம் - நீரில்தோன்றுவது என்ற ஹாமரைக் குக் காரணவிடுகுறி அணங்கு - தெய்வமகள். கலளிஞ லருந்தினர் - சிவற்று மைமையக்கம். அணங்கும், உம்மை - இறந்தது தழுவியது. நஞ்சமும், உம்மை - உயர்வுசிறப்பு; மற்றவை - எண்ணுப்பொருளன.

'மயக்கமும்வரம்பிற்கோட', 'நாகமும் தப்பாதன்றே', 'கல்வினே நல்கா தன்றே' என்பன பாடாந்தரம். (கூடு)

கூசு. கேட்டனனறவாற்கேடுவருமென்னக்கிடைத்தவச்சொற்
காட்டியதனுமனீதிக்கல்வியாற்கடந்ததல்லான்
மீட்டினியுரைப்பதென்னேவிரைவின்வந்தடைந்தவீரன்
மூட்டியவெகுளியானுன்முடிவதற்கையமுண்டோ.

(இ - ள்) நறவால் கேடுவரும் என கேட்டனன் - மதுபானத்தினுற் கெடுதியுண்டாகுமென்று (பெரியோர்சொல்லக்) கேட்டுள்ளேன்; கிடைத்த அ சொல் காட்டியது - (அவவாறு) கேட்கப்பட்ட அச்சொல்லானது பிரதி யட்சமாக(த் தன்தொழிலை)க் காட்டிவிட்டது; மீட்டு இனி உரைப்பது என்னே - திரும்பவும் இனிமேல் (அதைப்பற்றிச்) சொல்வதிற் பயன்என்ன? அனுமன் நீதி கல்வியால் கடந்தது அல்லாமல் - அநுமானது நீதிநூலுணர்ச்சி யினல் (மதுவுண்டுசேர்ந்த ஆபத்தினின்று) தப்பிப்பிழைத்ததே யல்லாமல், விரைவின் வந்து அடைந்த வீரன் மூட்டிய வெகுளியால் - விரைவாகவந்து சேர்ந்த வீரனுடைய இலக்குமணனது மூண்ட கோபத்தினல், நான்—, முடிவ தற்கு - இறந்தொழிவதற்கு, ஐயம் உண்டோ - சந்தேகமுளதோ? (எ - று.)

அநுமான் காலத்திற்கேற்ற தனது நுண்ணுணர்வினல் இலக்குமண னது கோபத்திற்குத் தக்க பரிகாரம் செய்திலனுயின், மதுவுண்டு மயங்கிக் கிடந்த நான் அத்தீச்செயலின்பயனுக அப்பொழுதே அவனது கோபத்தீக்கு இலக்காய் இறந்துபட்டிருப்பே னென்பதாம். மூட்டிய - (என்செயலால்) மூட்டப்பட்ட எனினுமாம். (கூக)

கூஎ. ஐயநானஞ்சினேனிந்நறவினினரியகேடு
கையினலன்றியேயுங்கருதுதல்கருமமன்றல்
வெய்யதாமதுவையின்னும்விரும்பினேனென்னின்வீரன்
செய்யதாமரைகளன்னசேவடிசிதைக்கவென்றான்.

(இ - ன்.) ஐய—! இ நறவினின் அரிய கேடு - இம்மதுபானத்தால் கேரும் பெரியகேட்டிற்கு, நான் அஞ்சினேன் - நான் பயப்பட்டேன; கையி னல், அன்றி கருதுதல் உம் கருமம் அன்று - (அம்மதுவைக்) கையினல் நீண்டுவதல்லாமல் மனத்தினல் நினைத்தலும் கர்காரியமன்று; வெய்யது ஆம் மதுவை - கொடுமையுடையதாகிய இம்மதுவை, இன்னும் விரும்பி

னேன் என்னின் -'(அதனால்கோர்ந்த நீங்கைக் கண்கூடாகக்கண்ட) பின்பும் இச்சித்தேனுனல், வீரன செய்ய தாமரைகள் அன்ன சே அடி - இராமபிரானது செந்தாமரைமலர்களையொத்த சிவந்ததிருவடிகள், சிதைக்க - (என்னை) அழிப்பனவாக, என்ருன - என்று (ஆணையிட்டுக்) கூறினன், (சுக்கிரீவன்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராமபிரானது திருவடிசாட்சியாக மதுவை இனி ஒருகாலும் விரும்பேனென்று சுக்கிரீவன் பிரதிஜ்ஞைசெய்தவாறு. சுக்கிரீவன அங்கதனை 'ஐய' என்றது - அன்புபற்றிய மரபுவழுவமைதி. அன்றியே. ஏ - அசை

'கறவினுனியகேடு', 'நறவினையியகேடு', 'கழறவுங் கருமமன்ருல்', 'காலற்குங் கருமமேயால்', 'வெய்யதாமதனை', 'சிவந்ததனதே' என்பன பிரதிபேதம். (கஎ)

[சுக்கிரீவன் இலக்குமணனை யெதிர்கொள்ளுமாறு அங்கதனையனுப்பி, தான் ஆண்மனை வாயிலைச் சேர்தல்.]

கூஅ. என்றுகொண்டியம்பியண்ணற்கெதிர்கொளற்கியைந்தகடல்லா
நன்றுகொண்டிடன்னுனீயேநணுகெனவவனையேவித
தன்றுணைதேவிமாருந்தமரொடுந்தழுவுதானு
நின்றனனெடியவாயிறகடைத்தலைநிறைந்தசீரான்.

(இ - ள.) நிறைந்த சீரான - மிகுந்த நற்குணங்களை யுடையவனுகிய சுக்கிரீவன்,—என்று கொண்டு இயம்பி-என்று சொல்லி, 'அண்ணற்கு எதிர் கொளறகு இயைந்த எல்லாம் நன்று கொண்டு - இலக்குமணனை எதிர் கொளவதறகு உரிய எல்லாவற்றையும் மிகுதியாக எடுத்துக்கொண்டு, இனனும் நீயே நணுகு - இன்னமும் நீயே நெருங்கிச்செல்வாயாக', என-என்று, அவனை ஏவி - அவ்வகதனைக் கட்டளையிட்டனுப்பி,—தன் துணை தேவிமாரும் தமரொடும் தழுவ - தனது வாழ்க்கைத்துணைவியரான மனைவியரும் சுறறதாரும் தனைச்சூழ்ந்துவர, தானும்—, நெடிய வாயில் கடைத்தலை - பெரிய (அரண்மனையின) தலைவாயிலில், நின்றனன—; (எ - று.)

'எனறுகொண்டு', கொண்டு - அசை. அண்ணலை எதிர்கொள்ளுதற்கு இயன்றவை - குடை சாமரம் முதலியன. 'கடைத்தலை நிறைந்த சீரான்' எனறு எடுத்த - தலைவாயிலில் நிறைந்த புகழையுடையவன எனறுமாம்; ''புறங்கடை நலலிசை'' எனறார் பிறரும்.

'நனறுகொண்டனவிலாத நணுகெனச் சேயையேவி', 'இனறு நீயே', 'தன்றுணைதேவிமார்கடமரொடும்', 'கோயிற்கடைத்தலை நிவந்த சீரான்' என்பன பாடாந்தரம். (கஅ)

[இதுவும், அடுத்தகவியும் - இலக்குமணன் வரும்போதைய கிட்கிந்தா நகரின் நீலமையைக் கூறுவன.]

கூக. உரைத்தசெஞ்சாதிமபூவுஞ்சுண்ணமும்புகையுமூழி
னிரைத்தபொற்குடமூநதீபசாலமுநிகழ்ந்தமுதனுங
குரைதெழுவிதானத்தோடுதோகையுங்கொடியுஞ்சங்கு
மிரைதமிழ்மூசுமுற்றுமியங்கினவீதியெல்லாம்.

(இ - ன்.) (அப்போது), உரைத்த செம் சாந்தும் - அரைத்த, ஈவந்த சந்தனக்குழம்பும், பூவும் - மலர்களும், சுண்ணமும் - வாசனைப்பொடிகளும், புகையும் - (அகில்முதலியவற்றின்) கறும்புகையும், ஊழின் நிரைத்த பொன் குடமும்-விதிப்படிவரிசையாகவைக்கப்பட்டுள்ள பொற்குடங்களும், தீப சாலமும் விளக்குக்களின்கூட்டமும், நிகழ்ந்த முத்தும் - வரிசையாகத்தொங்குகின்ற முத்துச்சரங்களும், குரைத்த ஏழு விதானத்தோடு - அசைந்துவிளங்குகின்ற மேற்கட்டிக்களும், தொங்கலும் - பீலிக்குஞ்சகளும், கொடியும் தவசங்களும், சங்கும் - சங்குகளும இரைத்த உமிழ் முசும-இரைந்து பேரொலியைச் செய்கின்ற முசவாதனியங்களும், முற்றும்-(ஆகிய) இவைகளெல்லாம், வீதி எல்லாம் - (கிட்கிந்தாநகரத்து) வீதிகளிலெல்லாம, இயங்கின - நிறைந்தன; (எ - று.)

இலக்குமணன வருகையையுணர்ந்த கிட்கிந்தாநகராவாசிகள் அவனுக்கு உபசாரமாகச் சந்தனகுழம்புமுதலியவற்றை வீதிகளில் நிறைத்ததனரென்க. சுக்கிரீவமகாராஜனது கட்டளையிலை அங்ஙன நிறைத்தா னெனினுமாம். சுண்ணம் - சூர்ணமென்ற வடசொல்லின சிதைவு. பொறிகுடம் - ஜலபூர்ண ஸ்வர்ணகும்பம். சங்கும் முசும - மங்கலவாத்தியங்கள். குரைத்த - குலைந்த.

'தீபமாலையும்', 'நிகழ்ந்தமுத்தொடு, குரைத்தெழுவிதானத்தோடு' எனவும் பாடம். (கூ)

கoo. தூயதிண்பளிங்கிற்செய்தசுவர்களின்றலத்திற்சுற்றி
ணையகமணியிறமெய்தகனிநெடுந்தூணினுப்பண்
சாயையபுக்குறலாற்கண்டோரையர்வுறக்கைவிலோடு
மாயிரமைந்தர்வக்தாருளரெனப்பொலிந்ததவ்வூர்.

(இ - ன்.) அ ஊர - அந்தக கிஷ்கிந்தாநகரமானது,—தூய திண் பளிங்கின் செய்த சுவர்களின் தலத்தில - சுத்தமான [பிரதிபலிக்குந்தன்மையுள்ள] வலிய ஸ்படிகக்கற்களினூற் செய்யப்பட்ட சுவர்களினிடங்களிலும், சுற்றில நாயகம் மணியின் செய்த நனி நெடுந் தூணின நாப்பண் - சுற்றுப்பக்கங்களிற சிறந்த நவரத்தினங்களினழைதுச்செயத மிகவும் நீண்ட தம்பங்களின நடுவிடங்களிலும், சாயை புக்கு உறலால் - (இலக்குமணனது உடம்பின) நிழல் போய்ப் பொருந்துதலால்,—கை விலோடும் - கையில் தாங்கிய வில்லுடனே, ஆயிரம் மைந்தர வக்தார் உளர் என - ஆயிரம்வீரர்கள் (இப்போது இங்குத்) திரண்டு வந்திருக்கிறார்களென்று, கண்டோர் அயர்வு உற - பார்த்தவாகளெல்லாருஞ சந்தேகிக்கும்படி, பொலிந்தது-விளங்கிறது; (எ - று.)

இலக்குமணன் செல்லுகின்ற இடங்களி லுள்ள பளிங்குச்சுவர்களிலும் இரத்தினத்தூண்களிலும் அவலிலக்குமணனது சாயை ஆயிரக்கணக்காகப் பிரதிபலித்தலால், பலவீரர் திரண்டுவந்தார்களோ வெனறு சந்தேகிக்கும்படி அவ்வூர் விளங்கிற தென்பதாம்.

'சுறறும்,' 'சுற்று,' 'நன்னெடுந்தாணின்,' 'தகைவுறக்கைவில்லோடுமீ,' 'அயர்வுறத் தகைவிலோடும்,' 'தயாவுறக்கைவில்லோடும்' என்றும் பாடம்.

[தன்னிடத்துவந்த அங்கதனைக்கண்ட இலக்குமணன் சுக்கிரீவனைப்பற்றி வினவுதலும், அதற்கு அவன் விடைகூறுதலும்]

கo க. அங்கதன்பெயர்த்தும்வந்தாண்டடியிணைதொழுதானைய
வெங்கிருந்தானுங்கோமானென்றலுமெதிர்கோளெண்ணி
மங்குறேர்ப்கோயில்கொற்றக்கடைத்தலைமருங்குநின்றான்
சிங்கவேறனையவீரசெய்தவச்செல்வனென்றான்.

(இ - ள்.) அங்கதன்—பெயர்த்தும் ஆண்டு வந்து அடி இணை தொழுதான் - மறுபடியும் அங்கு [இலக்குமணனுள்ளவிடத்தில்] வந்து (அவனது) உபயபாதங்களை வணங்கினனை; (அப்பொழுது இலக்குமணன அவனை நோக்கி), 'ஐய—! உம கோமான எகு இருந்தான் - உங்களது அரசனுகிய சுகிரீவன எங்கேயிருக்கினறான?' எனறலும - என்று வினவியவளவில்,—(அங்கதன் இலக்குமணனை நோகி), 'சிங்கம் ஏறு அனைய வீர - ஆண்சிங்கம் போனற மகாவீரனே! செய தவம செல்வன - (முறபிறப்பில) செய்த மிக்க தவதையுடையவனுன சுக்கிரீவன், எதிர்கோள எண்ணி - (உனனை) எதிர் கொள்ள நினைதது, மங்குல் தோய் கோயில் கொற்றம கடைத்தலை மருங்கு நினறான - மேகமண்டலததை யளாவிய அரணமனையின வெற்றியை யுடைய தலைவாயிலில நிறகினறான?' எனறான்—; (எ - று.)

பூர்வஜந்மததில் சுகிரீவன்செய்த தவப்பயனலுதான் உமதுநினைகம் அவனுகு நேர்ந்த தென்பான, அவனை 'செய்தவச்செல்வன்' என்றான். தவச்செல்வம் - தவதினமிகுதி: தவமாகிய செல்வ மெனினுமாம். எதிர் கோள் - முதனிலைதிரிந்ததொழிறபெயர்.

'வந்தாங்கடிதொழுதானையைய,' 'மங்குறேர்மாடக் கோயிற்கடைத் தலே' என்று பாடாந்தரங்கள். (கo க)

[சுக்கிரீவன் இலக்குமணனை எதிர்கொள்ளச் செல்லுதல்.]

கo உ. சுண்ணமுந்தூசும்வீசிச்சூடகத்தொடிக்கைமாதர்
கண்ணகன்கவரிக்கற்றைக்காலுறக்கலைவெண்டிங்கள்
விண்ணுறவளர்ந்ததென்னவெண்குடைவிளங்கவீர
வண்ணவிற்கரத்தான்முன்னர்க்கவிக்குலத்தரசன்வந்தான்.

(இ - ள்.) சூடகம் தொடி கை மாதர் - சூடகத்தையும் தொடியையும் அணிந்த கைகளையுடைய வானமகளிர், சுண்ணமும் தூசும் வீசி - சுகந் தப்பொடிகளையும் வஸதிரங்களையும் வீசிகொண்டு, கண் அகல் கவரி கற்றை கால் உற - இடமகன்ற [பெரிய] சாமரைத தொகுதியைக்கொண்டு காற்றையுண்டாக்கவும், கலை வெள் திங்கள் விண் உற வளர்ந்தது என்ன வெள் குடை விளங்க - பதினாறுகலைகளும்நிரமபிய வெண்மையான பூர்ண சந்திரன் வானத்திறபொருந்தி விளங்குவதுபோல வெண்கொற்றக்குடை

பிரகாசிக்கவும்,—வீரம் வண்ணம் வில் கரத்தான் முன்னர் - பராக்கிரம முடைய அழகிய வில்லேயேந்திய கையையுடையவனுன இலக்குமணனெதி ரில், கவி குலத்த அரசன் - வானரசாதித்தலேவனுன சுக்கிரீவன், வந்தான்— சுண்ணந்தூவுதலும், தூசுவீசுதலும் - மகிழ்ச்சியையும் வெற்றியையும் தெரிவிப்பனவாம். சூடகம், தொடி - கைவளேவிசேடங்கள். கவரி - சமரி என்னும் மானின்பெயர், அதன்வாலின்மயிர்க்கு இலக்கணே. குடைக்குச் சந் திரன் - வடிவும் நிறமும் குளிர்ச்சிதருதலும் பற்றிய உவமை. குடையும், சாமரமும் - ராஜசின்னங்கள். 'வீண்ணுறவலர்ந்த' என்பதும் பாடம். (கoஉ)

[இதுவும் அது.]

கoங. அருக்கியமுதலவாயவருச்சனைக்கமைந்தயாவு
முருக்கிதழ்மகளிரேந்தமுரசினமுகிலினுர்ப்ப
விருக்கினமுனிவரோதவிசைதிசையளப்பயாணர்த்
திருக்கிளர்செல்வமோக்கித்தேவருமருளச்சென்ருன்.

(இ - ன்,) முருக்கு இதழ் மகளிர் - பலாசமலரையொத்த அதரங்களே யுடைய வானரமகளிர், அருக்கியம் முதல ஆய அருச்சனைக்கு அமைந்த யாவும் ஏத்த - அர்க்கியம் முதலாகவுள்ள (இலக்குமணனே) உபசரித்தற்கு உரிய எல்லாப்பொருள்களேயும் உடன்கொண்டுவரவும்.—முரசு இனம் முகிலின் ஆர்ப்ப - பேரிகைவாத்தியங்களின்கூட்டம் மேகம்போல ஒலிக்க வும்,—முனிவர் இருக்கு இனம் ஓத - இருடிகள் வேதபாகியங்களேச் சொல்லிக்கொண்டுவரவும்,—இசை திசை அளப்ப - சங்கீதங்களினுலேதை வல்லரத்திக்குக்களிலும் பரவவும்,—யாணர் திருகிளர் செல்வம் நோக்கி தேவரும் மருள - புதிய சிறப்புமிக்க (தனது) செல்வச் சிறப்பைப் பார்த்துத் தேவர்களும் திகைக்கும்படி, சென்ருன் - (சுக்கிரீவன் இலக்குமணனெதி ரிற்) போனன்; (எ - று.)

அருக்கியம்= அர்க்கியம்: கைகழுவ நீர்தருதல்; இது, ஷோடசோபசா ரங்களில் ஒன்று. மற்றவை தவிசளித்தல், கால்கழுவநீர்தருதல், முக்குடி நீர்தருதல், நீராட்டல், ஆடைசாத்தல், மூப்புரிநூல்தருதல், சந்தனக்குழம்பு பூசுதல், மலர்சூட்டுதல், அக்ஷதைதூவுதல், தூபஞ்சமர்ப்பித்தல், தீபஞ்சமர்ப் பித்தல், கற்பூரமேற்றுதல், அமுதமேக்தல், அடைக்காய்தருதல், மந்திரமல ரானருச்சித்தல் என்பனவாம். முருக்கு - மரத்தின்பெயர் மலருக்கு முத லாகுபெயர். திருக்கு - ருக்: ஸ்வஸ்திவாசகம் முதலியன. (கoங)

[சுக்கிரீவனது தோற்றம்.]

கoச். வெம்முலே மகளிர் வெள்ள மீனென விளங்க விண்ணிற்
சும்மைவான் மதியங் குன்றிற் ருேன்றிய தெனவுக் தோன்றிச்
செம்மலே யெதிர்கோ ளெண்ணித் திருவொடு மலர்ந்த செல்வ
னம்மலே யுதயஞ் செய்த தாதையு மனைய ஞனன்.

(இ - ள்.) செம்மலை எதிர்கோள் எண்ணி - பெருமையிற் சிறந்தவனை இலக்குமணனை எதிர்கொள்ள நினைத்து, திருவொடுமலர்ந்த செல்வன் - மிக்க அழகோடு விளங்குகின்ற ஸ்ரீமானை சுக்கிரீவன்,—வெம்மூலை மகளிர் வெள்ளம் மீன் என விளங்க - விரும்பப்படுந் தன்கீழுடைய வானரமகளிரின் கூட்டம் நட்சத்திரங்கள்போலப் பிரகாசிக்க, (அவர்களினிடையே) குன்றில் தோன்றியது - உதயமலையி லுதித்து விளங்குவதாகிய, விண்ணில் சும்மை வால் மதியம் எனவும் - ஆகாயத்திற் காணப்படுகின்ற கலைகள் நிரம்பிய வெண்மையான சந்திரன்போலவும், தோன்றி - (தான்) காணப்பட்டு,—ஆ மலை உதயம் செய்த தாதை அனையனும் ஆனன் - அந்த உதயகிரியில் உதித்து விளங்குகின்ற தனது தந்தையாகிய சூரியனை ஒத்தவனுமானான்: (எ - று)

மகளிராற் சூழப்பட்டுக் கிட்கிந்தமலையின்மேல் விளங்குகிற சுக்கிரீவனுக்கு - நகூத்திரங்களாற்சூழப்பட்டு உதயகிரியிலுதித்த சந்திரனும், உதயகிரியில்தோன்றிய சூரியனும் உவமையாவரென்க. 'தந்தையே மைந்தனைப் பிறக்கிறான்' என்பதற்கு ஏற்ப, தகப்பனாகிய சூரியனை மகனாகிய சுக்கிரீவனுக்கு உவமை கூறுதல் தகும். சும்மை - கிரணங்களின் தொகுதி. உம்மை இரண்டும் - முறையே எதிராலும் இறந்தது தழுவியன. இனி, இல்பொருளுவமையாகக் கொண்டு குன்றில் தோன்றியது - கிஷ்கிந்தகிரியிலுதித்ததாகிய, மதியம் எனவும், அ மலை உதயஞ்செய்த - அக்கிஷ்கிந்தகிரியிலுதித்த தாதை எனவும் கூறலாம். (கo)

வே று.

[இலக்குமணன் சுக்கிரீவனைக்கண்டவுடன் எழுந்த கோபத்தைத் தணித்துக்கொள்ளுதல்.]

கoரு. தோற்றிய வரிக்குலத் தரசைத் தோன்றலு
மேற்றெதிர் நோக்கின னெழுந்த தவ்வழி
சிற்றமங் கதுதனைத் தெளிந்த சிந்தையா
லாற்றினன் றருமத்தி னமைதி யுன்னுவான்.

(இ - ள்.) தோன்றலும் - சிறந்தவனாகிய இலக்குமணனும், தோற்றிய அரி குலத்தி அரசை - (எதிரிற்) காணப்பட்ட வானரக் கூட்டத்திற்குத் தலைவனான சுக்கிரீவனை, ஏற்று எதிர் நோக்கினன் - வரவேற்று எதிரே பார்த்தான்; அ வழி சிற்றம் எழுந்தது - அப்போது (அவ்விலக்குமணனுக்குக்) கோபம் மூண்டது; தருமத்தின் அமைதி உன்னுவான் - தருமத்தின் நிலைமையைக் கருதுபவனாகிய அவ்விலக்குமணன், அங்கு - அப்போது, அது தனை - அக்கோபத்தை, தெளிந்த சிந்தையால் - தெளிவடைந்திருக்கிற (தன) மனத்தினால், ஆற்றினன் - தணித்துக்கொண்டான்; (எ - று.)

தங்கள் நிறத்திற் குறித்ததவணைப்படிவாராது தவறிய சுக்கிரீவன்எதிர்ப்பட்ட வளவில் இலக்குமணனுக்குக் கோபம்மூண்ட தென்க. 'கோவம் பாவத்திற்கு அஞ்சாது', 'மறத்தல் வெகுளியை யார்மாட்டுந்தீய, பிறத்தலதனான்

வரும்'' என்றபடி கோபம் தருமத்திற்கு விரோதியாதலால், இலக்குமணன் தனதுதெளிந்தமனத்தினுற் கோபத்தை உடனே ஆற்றினன். 'தருமத்தினமைதியெண்ணுவான்'என்றும் பாடம்

இதுமுதல் ஈசு - கவிகள் - கார்காலப்படலத்தின் முதற்கவிபோன்ற கலிவிருத்தங்கள். (கஅஇ)

[அவ்விருவரும் தழுவி, பரிவாரங்களுடன் அரண்மனையினுட்செல்லுதல்.]

கஅசு. எழுவினுமலையினுமெழுந்ததோள்களாற்
றழுவினரிருவருந்தழுவித்தைவலார்
குழுவொடும்வீரர்தங்குழாத்தினோடும்புக்
கொழிவிலாப்பொற்குழாத்துறையுளெய்தினர்.

(இ - ன்.) இருவரும் - (லக்ஷ்மணன் சுக்கிரீவன் என்ற) அவ்விருவரும், எழுவினும் மலையினும் எழுந்த தோள்களால் தழுவினர் - இருப்புத்தூண் மலை என்ற இவற்றைக்காட்டிலும் பருத்தோங்கிய தமதுதோள்களினால் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள்; தழுவி - அங்ஙனந் தழுவிக்கொண்டு, தையலார் குழுவொடும் - வானரமகளிர்கூட்டத்துடனும், வீரர்தம் குழாத்தினோடும் - வானரவீரர் கூட்டத்துடனும், ஒழிவு இலா பொன் குழாத்து உறையுள் புக்கு எய்தினர் - ஒழிவில்லாத பொன்திரளினு லமைக்கப்பட்ட மாளிகையினுட் சென்றுசேர்ந்தார்கள்; (எ - று.)

ஒழிவிலாப்பொற்குழாத்துறையுள் - முழுவதும் பொன்னினாற் சமைந்த மாளிகை. ஒழிவிலா - ஒருவரைவிட்டு ஒருவா பிரியாமல் நெருங்கினவராகி எனினுமாம். (கஅசு)

[இதுவும், அமித்தகவியும் ஒருதொடர்: இலக்குமணனைக் சுக்கிரீவன் சிங்காதனத்து இருக்கச் சொல்ல அவன் உடன்படாமை.]

கஅள. அரியணையமைந்ததுகாட்டியையவீண்
டிருவெனக்கவிக்குலத்தரசனேவலுங
திருமகடலைமகனபுல்லிற்சேரவெற்
குரியதோவிதெனமனத்தினுன்னுவான்.

(இ - ன்.) கவி குலத்து அரசன் - வானரக்கூட்டத்தலைவனான சுக்கிரீவன், அமைந்தது அரி அணை காட்டி - சித்தஞ்செய்யப்பட்டதொரு சிங்காதனத்தை (இலக்குமணனுக்குக்) காண்பித்து, 'ஐய - தலைவனே! ஈண்டு இருந்திதில் வீற்றிருப்பாயாக', என ஏவலும் - என்று வேண்டிக்கொள்ளவும்,— (இலக்குமணன்), 'திருமகன் தலைமகன் புல்லில் சேர - இலக்குமிக்குத்தலைவனாகிய இராமபிரான் புல் தரையிலே தங்கியிருக்க, ஈது எற்கு உரியதோ - இச்சிங்காதனத்து இருத்தல் (அவனதுதமபியாகிய) எனக்குத் தகுதியாகுமோ?' என - என்று, மனத்தின் உன்னுவான் - மனத்திற் சிந்திப்பவனாய்,— (எ - று.)—அடுத்தகவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்

'செல்வத்திற்குரியமகளாகிய இலக்குமிக்குக் கணவனுயிருக்கும் இராம பிரான்தான் ஒன்றுமில்லாதானேப்போலப் புல்லணையிற்கிடக்க சேர்ந்தே!' என்ற இரக்கந்தோன்ற, 'திருமகள்தலைமகன்புல்லிற்சேர' எனக்கருதினன்; இதில் நுண்ணியின்மையணி தொனிக்கும். திருமால் இராமபிரானுகத் திருவதரித்தபோது இலக்குமியே சீதையாகத்திருவவதரித்து அப்பிரானைமணந்தது பற்றி, அவனை 'திருமகள் தலைமகன்' என்றார்.

'திருமகளுயகன்,' 'இஃதென' என்ற பிரதிபேதம். (கo எ)

கo அ கல்லணைமனத்தினையுடைக்கைகேகியா
" லெல்லணைமணிமுடிதுறந்தவெம்பிரான்
புல்லணைவைகயான்பொன்செய்பூத்தொடர்
மெல்லணைவைகலும்வேண்டுமோவென்றான்.

(இ - ள்.) 'கல் அணை மனத்தினை உடை கைகேயியால் - கல்லைப் போன்ற [கடினமான] மனத்தையுடைய கைகேயியின்வரத்தினுல், எல் அணை மணி முடி துறந்த - ஒளிபொருந்திய இரத்தினகிரீடத்தை விட்டு (வனத்தில்) வந்த, எம்பிரான் - எமது தலைவனுகிய ஸ்ரீராமன், புல் அணை வைக - புற்படுக்கையில் தங்கியிருக்க, யான்—, பொன் செய் பூ தொடர் மெல் அணை வைகலும் - பொன்னினுற்செய்யப்பட்டதும் மலர்களாலலங்கரிக்கப் பெற்றதுமான மென்மையாகிய ஆசனத்தில் தங்குதலும், வேண்டுமோ - (எனக்கு) வேண்டுவதொன்றே?' என்றன - எனறுகூறினன், (இலக்குமணன்); (எ - று.)

இராமபிரான் கைகேயியால் முடி துறந்த விவரம், கதைத்தொடர்ச்சியிற் கூறப்பட்டது. 'கல்லணைமனத்தினுலாவிகாக்கின்றனை,' 'முடிதுறந்த வெம்முனே' என்பன பிரதிபேதம். (கo அ)

[அதுகேட்டுச் சுக்கிரீவன் வருந்துதலும், இலக்குமணன் தரையில் இருத்தலும்.]

கo கூ. என்றவனுரைத்தலுமிரவிகாதல
னின்றனன்விம்மினன்மலர்க்கணீருகக்
குன்றெனவுயர்ந்தவக்கோயிற்குட்டிமன்
வன்றலத்திருந்தனன்மனுவின்கோமகன்.

(இ ள்.) எனற அவன் உரைத்தலும் - என்று அவ்விலக்குமணன் கூறியவளவில்,—இரவி காதலன் - சூரியனது குமாரனுகிய சுக்கிரீவன் மலர் கண் நீர் உக விம்மினன் நின்றனன் - தாமரைமலர்போன்ற (தனது) கண்களினின்று நீர்பெருக அதுகொண்டு நின்றான்; (அப்போது), மனுவின் கோமகன் - மநுவெனனும் அரசனுவமிக்கதில் தோன்றிய இராசகுமாரனை இலக்குமணன், குன்று என உயர்ந்த அ கோயில் குட்டிமன் வல் தலத்து இருந்தனன் - மலைபோல வுயர்ந்த அவ்வரண்மனையினது கற்படுத்த இடமாகிய வலியதரையி லிருந்தான்; (எ - று.)

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூசல் தரும்" என்றபடி பிறர்தன்பக்கேட்டவழிக் கண்ணீர்பெருக்குதல் அன்புடையார்செய லென்க. குட்டிமம் - வடசொல்.

'குன்றெனப்பொலிந்தவக்கோயிற் கூடிய', 'குன்றெனப் பொலிந்தவக் கோயினின்றனன், மன்றலந்தாரினான்' என்று பிரதிபேதம். (கஅக)

[அச்சமயத்தில் அனுமந் வருந்துதல்.]

கக0. மைக்கருமுதியருமகளிர்வெள்ளமு
மந்தமிலைக்கினரழுதகண்ணின
ரிந்தியமவித்தவரெனவிருந்தனர்
நொந்தனர்தளர்ந்தனர்துவல்வதோர்கிலர்.

(இ - ன்.) (அப்போது அங்குள்ள வானரக்கூட்டத்தில்), மைக்கரும் - இளையவரும், முதியரும்-வயதுசென்றவர்களும், மகளிர் வெள்ளமும்-பெருக்கினரான மாதர்களும்,—அந்தம் இல் நோக்கினர் - அழகில்லாத [இடுங்கின] பார்வையையுடையவர்களும், அழுத கண்ணினர் - அழுகிற கண்களையுடையவர்களும், நுவல்வது ஓர்கிலர் - (ஒன்றும்) சொல்லத்தெரியாதவர்களுமாகி, நொந்தனர் தளர்ந்தனர் - மனம்வருந்திச்சோர்ந்து, இந்தியம் அவித்தவர் என இருந்தனர் - பஞ்சேந்திரியங்களையும் அடக்கிய முனிவர்போல இருந்தார்கள்; (எ - று.)

இருடிகள் பரமாத்மதியானத்தால் பஞ்சேந்திரியங்களையும் தம்தம்வழியிற்செல்லவொட்டாது அடக்கியிருத்தலை, மிக்கவிசனத்தால் எல்லாவானரர்களும் இந்திரியங்களினதொழிலடங்கிச் செயலற்றிருத்தற்கு உவமைகூறினர். வானரர்க்குத் தன்பம், ராஜகுமாரனாகிய இலக்குமணன் தரையிலிருந்ததைக் கண்டமையாலானது; இராமபிரானுக்கு நேர்ந்துள்ள நிலையை இலக்குமணன்சொல்லக் கேட்டதனாலாயதுமாம். தன்பம் நேர்ந்தபோது கண்பார்வையிடுங்குதல்பற்றித் தன்பத்திற்கு 'இடுக்கண்', 'புன்கண்' என்ற பெயரிருத்தலால், தன்பமடைந்தவ ரென்ற பொருளில் 'அந்தமில்நோக்கினர்'என்றார். இந்தியம் - இந்த்ரியம் என்ற வடசொல்லின திரிபு. 'என்னின்றனர்' என்பதும் பாடம். (கக0)

[சுக்கிரீவன் இலக்குமணனை நீராடியுண்ணுமாறு வேண்ட,
அவன் மறுத்துக்கூறத் தொடங்குதல்.]

கக க. மஞ்சனவிதிமுறைமரபினுடினை
யெஞ்சலிலின்னமுதருந்தின்யாமெலா
முய்ஞ்சனமினியெனவரசுரைத்தலு
மஞ்சனவண்ணனுக்கனுசன்கூறுமால்.

(இ - ன்.) அரசு - சுக்கிரீவமகாராஜன், (இலக்குமணனைநோக்கி), '(நீ), விதி முறை மரபின் மஞ்சனம் ஆடினை - நூல்களிற்சொல்லிய முறைப்படியே நிரமமாக நீராடியவனும், எஞ்சல் இல் இன் அமுது அருந்தின் - குறைதல

லில்லாத இனிய உணவை யுண்டால், யாம் எலாம் இனி உய்ஞ்சனம்-யாங்க ளெல்லாம் இப்போது உஜ்ஜீவித்தவர்களாவோம்', என உரைத்தலும் - என்று சொன்னவுடனே,—அஞ்சனம்வண்ணனுக்கு அனுசன்-மைபோன்ற கருநிற முடையவனான இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குமணன், கூறும் - சொல்வானாயினன்; (எ - று.)—அதனை, அடுத்த நான்குகவிகளிற் காண்க. ஆல் - ஈற்றசை.

'நீ நீராடியுண்டால் யாம் உய்வோம்' என இலக்குமணனுக்குச் சுக்கிரீவன் மூகமன கூறின னென்க. உய்ஞ்சனம் - க்ருதார்த்தர்களாவோம் என்ற படி. உய்ஞ்சனம்=உய்ந்தனம்:போலி: இறந்தகாலத்தாற் கூறியது, தெளிவு பற்றியி காலவழுவமைதி. அமுது - தேவாமிருதம்போன்ற உணவிற்கு உவமையாகுபெயர். மஞ்சனம்=மஜ்ஜநம். வடசொல்:நீராடுதலென்பது, பொருள். அஞ்சனவண்ணனுக்கனுசன்—லக்ஷ்மணனுக்கு 'ராமாநுஜன்' என்று ஒருதிரு நாமம். அநுஜன் - பின்பிறந்தவன்: தம்பி.

'மாபிஞடியே', 'உய்ஞ்சனம்வீனேஅறந்தியாவுண்டியா, லெஞ்சலிலெ மதகத்தியன்றதென்றலும்', 'அஞ்சனவண்ணனுக்கிளவல்சொல்லுவான்' என பன பிரதிபேதம். (ககக)

[இதுமுதல் நான்குகவிகள் - இலக்குமணன்வார்த்தை]

ககஉ. வருத்தமும்பழியுமேவயிறுமீக்கொள
விருதமுமென்றுலெமக்கினிய தியாவுமீதா
ருருத்தியுண்டாயினுமவலந்தான்றழீஇக்
கருத்துவேறுற்றபினமிழ்துங்கைக்குமால்.

(இ - ள்.) வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள இருதமும் என்றால் - துன்பமும் நிந்தையுமே வயிற்றைநிரப்பியிருக்கவும் (காகுகள) உயிரிபிழைத்திருக்கின்றே மென்றால், எமக்கு - எங்களுக்கு, இனியது - இனிமைதாக் கூடியது, யாவது-எதுதான்? ஓர் அருத்தி உண்டு ஆயினும் - ஒப்பறற [மிக்க] பசியுண்டாயிருந்தாலும், அவலம தழீஇ கருதது வேறு உறறபின - துன்ப மடைந்து மனம மாறுபட்டபோது, அமிழ்தம் கைக்கும் - (உண்பது) தேவாமிருதமேயாயினும் கசக்குமன்றே! (எ - று.)—ஆல் - ஈற்றசை. தேற்றமோ மாம. தான - அசை.

உலகத்தில்ஒருவர்க்கு மிக்கபசியிருப்பினும் துன்பத்தினால் மனம்மாறு பட்டபோது தேவாமிருதமும் இனிமையாகத் தோனறாது; அவ்வாறே, உயிரைப் போகக்கூடிய வருத்தத்தையும் பழியையுஞ் சுமந்து காகங்கள் அரிதில் உயிர்பிழைத்திருக்கையில் இவ்வுலகத்தில் எதுவும எமக்கு இனிமையாகத் தோனறாது; ஆதலால், எனக்கு நீ இவ்வேதாகக்கூறும் இனிய உணவும் வேண்டா என்றவாறும். பின்னிரண்டடியிற்கூறிய பொதுப்பொருள் முனனிரண்டடியைச் சமர்த்திக்கிறது - வேற்றுப்பொருள்வைப்பணி; வடநூலார் அர்த்தாந்தாந்யாஸாலங்காரமென்பர். தனபமுற்றூர்க்குப் பசியுண்டானாலும் அமிருதம் கைக்கும்; எங்கட்கோ அப்பசியுண்டாதற்கும் வழியில்லை

யென்பான், 'வருத்தமும் பழியுமே வயிறுமீக்கொள' எனறான்; இங்கு வேற்றுமையணி தொனிக்கும். வருத்தமும் பழியும் - சீதாபிராட்டியை மாற்றானுகிய இராவணன் எடுத்துச்சென்றதனால் சேர்ந்தன. இருத்தும் - தன்மைப் பன்மை; தும் - விகுதி. இனி, 'வருத்தமும் பழியுமே வயிறுமீக் கொள இருத்தும்' என்பதற்கு - வருத்தமும் பழியுமே வயிறைநிரப்பிவிட்ட தனால், (கல்லுணர்வு இல்லாமலும்) உயிரோடிருக்கச்செய்யு மென்று உரைப் பாரு முளர்; இப்பொருளில், இருத்தும் - பிறவினைச்செய்யுமென முறை. அருத்தி - இங்கு, உணவினவேட்கை.

'அருத்துமென்றலெமக்கினியதியாவதோர்' 'இனியதாகுமோ', 'இனி யதாவதோ', 'வேறுற்றபோது' என்பன பாடாந்தரம். (கூஉ)

கசுஉ. மூட்டியபழியெனுமுருங்குதீயவித்
தாட்டினைகங்கைநீரசன்றிறவியைக்
காட்டினையெனினமைக்கடலினமிழ்
தூட்டினையாற்பிறிதியவுமில்லையால்.

(இ - ள்.) அரசன் தேவியை காட்டினை எனின - இராமபிரானது தேவி யாகிய சீதாபிராட்டியை(த்தேடி இன்னவிடத்திலிருக்கினறானென்று) காட் டினையானால்,--எமை - எம்மை, மூட்டிய பழி எனும் முருங்கு தீ அவித்து கங்கை நீர் ஆட்டினை - நிறைந்தபழியாகிய அழிக்கவல்லதெருப்பை அவியச் செய்து கங்காநதியினஜலத்தினால் நீராட்டினவனுவாய்; (அன்றியும்), கட லினை ஆர் அமிழ்து ஊட்டினை - திருப்பாற்கடலிலுண்டாகிய அருமையான தேவாமிருததத்தை உண்பித்தவனுமாவாய்; பிறிது உயவும் இலேம் - (எமக்கு) வேறேதன்பமு மில்லையாய்விடும்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

நீ சீதையைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவாயானால், கங்கையில்நீரா டிய தேவாமிருதத்தைப் புசித்தபோல காகுகன் திருப்தியடைவோ மென்ற படி. கீழ் நீராடியுணவருந்தும்படி வேண்டிய சுக்கிரீவனுக்கு இலக்குமணன் இச்செய்யுளினுற கூறியது ஏற்ற மறுமொழியாத லுணர்க. பற்றியெரி யும்நெருப்பை யவித்தற்கு நீர் இன்றியமையாதவாறுபோல எமது பழியைப் போக்கச் சீதையைத்தேடிக்காட்டுதல் இன்றியமையாதென்பது, முன்னிரண் டடிகளிற் போதரும். ஸ்நாநத்தினுல் உஷ்ணந்தணிதலும், நீரினுல் நெருப்பு அவிதலுமாகிய இயல்புகள இதற்குக் கருத்தக்கன. மூட்டிய பழியெனும் முருங்குதீயவித்த அரசனதேவியைக்காட்டினையெனின எனறு இயைத்துப் பொருளுரைப்பினுமாம்.

"காட்டினையேலெமைக்கடலினனமிழ்து', 'பிறிதுயிருமில்லையால்', 'பிறிதுயிருமுன்னதால்' என்பன பிரதிபேதம். (கஉஉ)

கசச. பச்சிலைகிழங்குகாய்பாமனுங்கிய
மிச்சிலேனுகாவதுவேறுநாமினென்று
நச்சிலேனச்சினேனுயினுயுண்ட
வெச்சிலேயஞ்சிதற்கையமில்லையால்.

(இ - ன்.) பச்சு இலை - பசியதழ்களும் [கோரைகளும்], கிழங்கு - கிழங்குகளும், காய் - காய்களும் (ஆகிய இவைகளில்), பரமன் நுங்கிய மிச்சிலே - சிறந்தவனுகிய இராமபிரான அமுதுசெய்துமிகுந்த சேஷமே, நான் நுகர்வது - நான் உண்பது; (அன்றி), வேறு ஒன்றும் நச்சிலேன் - வேருெருபொருளையும் விரும்பியுட்கொள்ளமாட்டேன்; நச்சினேன் ஆயின் - ஒருகால் விரும்பினேனுனல், அது - (பரமனுண்டமிச்சிலல்லாத) அது, காய் உண்ட எச்சிலே—, இதற்கு ஐயம் இல்லை இதற்குச் சந்தேகமேயில்லை; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நீ இப்போது உண்ணுமாறு எனக்குகொடுப்பது, இராமபிரானுண்ட மிச்சிலின்றுதலால், இதை நான் உண்பது தகுதியல்ல வென்றவாறும். மிச்சில், எச்சில்—மிஞ்சு, எஞ்சு - பகுதிகள்; இல் - பெயர்விகுதி. நச்சிலேன் நச்சினேன் - தொடைமுரண்.

'மிச்சிலேநுகர்வதுவன றிவேறென்று', 'வேறுதான்ஞன்று,' 'நச்சிலேனயலதுநுகரிஞயுண்ட', 'நச்சிலேனையலினிநுகரிஞயுண்ட' 'எச்சிலே நுகர்வதே யையமில்லையால்', 'எச்சிலேபதுவிதறகேதுவில்லையால' என்பன பாடாந்தரம். (கஉசு)

கஉடு. அன்றியுமொன்றுளதையயானினிச்
சென்றனன்கொணர்ந்தடை திருத்தினுலது
நுன்றுணைக்கோமகனுகர்வதாதலா
னின்றிறைதாழ்த்தலுமினிதன்றுமென்றன்.

(இ - ன்.) ஐய - தலைவனே! அன்றியும் - அல்லாமலும், ஒன்று உளது - (நான்சொல்லவேண்டியது) இனனுமொன்று இருக்கின்றது; யான —, இனி சென்றனன அடை கொணர்ந்து திருத்தினுல் - இனிப்போய்க் கோரைமுதலியவற்றைக் கொண்டுவந்து சித்தஞ்செய்துவைத்தால், அது நுன் தோழன கோமகன நுகர்வது - உனது நேசித்தருளிய இராமபிரான் உண்பதாகும்; ஆதலான்-ஆதலால், இன்று இறை தாழ்த்தலும் இனிது அன்றுயும் - இப்பொழுது நான் (இங்கு) ஒருகொடிப்பொழுது தாமதித்தலும் இனியதாகாது, என்றன் - என்று (இலக்குமணன்) கூறினன; (எ - று.)

இராமபிரான் பட்டினியாய்க்கிடத்தலால், யான இங்கே கொடிப்பொழுது தாமதிப்பதும் கன்றன்று என்று குறிப்பித்தவாறு. அடை - கிழங்கு முதலியவற்றிற்கு உபலக்ஷணம். நுன் - திசைச்சொல், கோமகன் - சக்கரவர்த்தித்திருமகன். 'கொணர்ந்திடைதிருத்தினுல்' என்று பிரிபேதம். (கஉடு)

[அதுகேட்டுச் சுக்கிரீவன் வருந்துதல்.]

கஉசு. வானரமிவனதனுமனினைவதன்
மானவர்தலைமகனிடரின்வருகவே
யானதுகுரக்கினத்தெமர்கட்காமெனு
மேனிலையழிந்துயிர்விம்மினனரோ.

(இ - ன்.) (அதுகேட்டு), வானர வேந்தனும் - வானரராஜனான சுக்கிரீவனும், (லக்ஷ்மணனைநோக்கி), 'மானவர் தலைமகன் இடரின் வீக்க - மனுவமிசத்தாருட் சிறந்தவனாகிய இராமபிரான் துன்பத்தில் மூழ்கியிருக்கையில், இனிதின் வைகுதல் ஆனது - (இப்போது எமக்கு உண்டாயிருப்பதான) இன்பமாகக் காலங்கழிப்பதென்பது, குரங்கு இனத்து எமக்கட்கு ஆம் - குரங்குச் சாதியிற்பிறந்த எம்போலியர்க்கே தகும்', எனா - என்றுகூறி, மேல் நிலை அழிந்த உயிர் விம்மினான் - உடம்பு நிலைகுலைந்த உயிர்வருந்தினான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இலக்குமணன் வார்த்தையைக் கேட்டவுடனே சுக்கிரீவன் தற்றுணை உடல்தனாந்து உயிர்வருந்தினனென்க. மானவர்தலைமகன் என்பதற்கு - மனிதர்களுட் சிறந்தவனென்றும் கூறலாம்: மானவர் - (காசியபமுனிவரது பத்தினியாகிய) மநுவின் சந்ததியார். 'மானவடலைமகன்' என்ற பாடத்திற்கு - மான்போனற தோபிராட்டியின் கணவனென்று பொருளாம். 'உயிர்' எனப் பின்னேவருதலால், 'மேல்' என்பது - உடம்பைக் குறித்தது. உயிர்விம்மினான் - உயிர்த்துவிம்மினனென்றுமாம். (கசக)

[வருந்தியசுக்கிரீவன் அநுமானிடத்து ஒன்றுசோல்லுதல்.]

கசள. எழுந்தனன்பொருக்கெனவிரவிகான்முளை
விழுந்தகண்ணீரினன்வெறுத்தவாழ்வினன்
அழிந்தயர்சிந்தையனநுமற்காண்டொன்று
மொழிந்தனன்வரனுழைப்போதன்முன்னுவான்.

(இ - ன்.) இரவி கால்முளை - சூரியகுமாரனாகிய சுக்கிரீவன், பொருக்கென எழுந்தனன் - விரைவாக எழுந்து, விழுந்த கண் நீரினன் - பெருகும் கண்ணீர்ப் பெருக்குடையவனும், வெறுத்த வாழ்வினன் - செல்வவாழ்க்கையை வெறுத்தவனும், அழிந்து அயர் சிந்தையன் - வருந்திச்சோரும் மனமுடையவனுமாகி, வரனுழை போதல் முன்னுவான் - சிறந்தவனாகிய இராமபிரானிடம் செல்ல நினைத்தவனாய், ஆண்டு - அப்பொழுது, அநுமற்கு - அநுமானை நோக்கி, ஒன்ற மொழிந்தனன் - ஒருவார்த்தை கூறினான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

பொருக்கென - விரைவுக் குறிப்பிடைச்சொல். 'வரன்முறை போதல் முன்னுவான்' என்பது பிரதிபேதம். (கசவ)

[வருந்தினேனையைக் கொணருமாறு அநுமானுக்குக் கட்டளையிட்டுச் சுக்கிரீவன் இராமபிரானிடஞ் செல்லுதல்.]

கசஅ. போயினதுதரிற்புகுதுஞ்சேனையை
நீயுடன்கொணருதிநெறிவலோயென
வேயினனுமணியிருத்தியீண்டென
காயகனிருந்துழிக்கடிதிரண்ணுவான்.

(இ - ள்) (சுக்கிரீவன்,) 'நெறி வலோய் - நீதிமார்க்கத்தில் வல்லவனே, போயினீ தூசரின் புகுதும் சேனையை - (கம்பிடத்தினின்று) போயிருக்கிற தூதர்களால் இனிவரும் வானரசேனையை, நீ உடன்சொணருதி - நீ உன்னுடன் அழைத்துக்கொண்டு வருவாய்', என - எனவும்,—'ஈண்டு இருத்தி - (அதுவரையில் நீ) இங்கேயே யிருப்பாய்', என - எனவும், அனுமனை ஏயினன் - அநுமானுக்குக் கட்டளையிட்டவனும், காயகன் இருந்த உழி கடிது கண்ணுவான் - (யாவர்க்கும்) தலைவனுகிய இராமபிரான் இருந்த இடத்திற்கு விரைந்து செல்பவனுனன்; (எ - று.)

இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை (ககஅ)

[இதுமுதல் ஆறுகவிகள் - சுக்கிரீவன் பரிவாரங்களுடனே சென்று இராமபிரானைச் சேர்ந்தமையைக் கூறும்.]

ககக. அங்கதனுடன்செலவரிகண்முன்செல
மங்கையருள்ளமும்வழியும்பின்செலச்
சங்கையிலிலக்குவற்றழுவித்தம்முனிற்
செங்கதிரோன்மகன்கடிதுசென்றனன்.

(இ - ள்.) செங்கதிரோன் மகன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது குமாரனுகிய சுக்கிரீவன்,—சங்கை இல் இலக்குவன் தழுவி - சங்கையில்லாத [தெளிந்த மனமுடைய] இலக்குமணனைத் தழுவிக்கொண்டு,—அங்கதன் உடன் செல - அங்கதகுமாரன் தன்னுடன் வரவும், அரிகள் முன் செல - வானரர்கள் முன்னேபோகவும், மங்கையர் உள்ளம் பின் செலவும் - (தன்னிடத்துக் காதலையுடைய) வானரமகளிரது மனம் பின்தொடர்ந்து வரவும், வழி (பின் செல) உம் - கடந்தவழிகள் பின்னே தங்கிவிடவும், தம்முனில் - தமையனுகிய இராமபிரானிடத்திற்கு, கடிது சென்றனன் - விரைவாகச் செல்பவனுனன்; (எ - று.)

தம்முன் - தமையன்; தன்னுல் [சுக்கிரீவனுல்] தமையன்முறை பாராட்டத் தகுந்தவனென்க. பின்செல - இரட்டிறமொழிதல். பின்செல்லுதலென்பது - பின்தொடர்ந்து செல்லுத லென்னும் பொருளதாதலே "சிந்தையு நிறையு மெய்ந்நலம் பின்செல்" என்றவிடத்திற் காண்க. வழிபின்செல—"சடைச்செங்நெல் பொன்வீளைக்குந் தன்னுடு பின்னு" என்றற்போலக் கொள்க. (ககக)

கஉ0. ஒன்பதினுயிரகோடியூகந்தன்
முன்செலப்பின்செலமருங்குமொய்ப்புற
மன்பெருங்கிளைஞருமருங்குசுற்றுற
பின்பொருபூணினன்செல்லும்வேலையில்.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) ஒன்பதினுயிர கோடி யூகம் - ஒன்பதினுயிர கோடிக்கணக்கான குரங்குச்சேனை, தன் முன் செல பின் செல மருங்கு மொய்ப்புற-

தன முன்புறத்திலும் பின்புறத்திலும் இருபக்கங்களிலும் நெருங்கிவரவும், மன் பெருங் கிளைஞரும் மருங்கு சுற்றுற - மிகச்சிறந்த உறவினர்களாகிய வானரர்களும் பக்கங்களிற் சூழ்ந்துவரவும், மின் பொரு பூணினன் - மின் னல்போன்ற ஒளியை வீசுகின்ற ஆபரணங்களை யணிந்தவனை சுக்கிரீவன், செல்லும் வேலையில் - (அவ்வாறு இராமபிரானைநோக்கிச்) செல்லுஞ்சமயத் தில், (எ - று.)—'கொடிவன மிடைந்தன' என அடுத்தகவியோடு தொடரும்.

'ஞாங்கர் மொய்ப்புற' என்றும் பாடம். (கூ0)

கூஉக. கொடிவனமிடைந்தனமுறுபேரிடி
னிடிவனமிடைந்தனபணிலமேங்கின
தடிவனமிடைந்தனதயங்குபூணொளி
பொடிவனமெழுந்தனவானம்போர்த்ததே.

(இ - ன்.) கொடி வனம் மிடைந்தன - துவசங்களின்தொகுதி நிறைந் தன; முறுபேரிடியின் இடி வனம் மிடைந்தன - முழங்குகின்ற பேரிகை வாத்தியங்களின் ஒலித்தொகுதிகள் நிறைந்தன; பணிலம் ஏங்கின - சங்க வாத்தியங்கள் முழங்கின; தயங்கு பூண் ஒளி தடி வனம் மிடைந்தன - விள ங்குகின்ற ஆபரணங்களின் காந்திகளாகிய மின்னலின்தொகுதிகள் நிறைந் தன; பொடி வனம் எழுந்தன - (பூமியினின்று) புழுதிகள் நெடும்பிளவாய், வானம் போர்த்த - ஆகாயத்தை மறைத்தன; (எ - று.)

இச்செய்புளில், 'வனம்' என்றது - தொகுதியென்னும் பொருளில் வந்தது. தடிவனம் - தடித்வரம்: வடமொழித்தொடர் நிரிந்துவந்தது. வனம், மிடைந்தன என்ற சொற்கள் ஒருபொருளிற் பலமுறைவந்தது - கோற்போ நட்பின்வருநிலையணி. 'பொடிவனமெழுத்தகன்வானம்போர்த்ததே,' 'பொடி யெழுந்தபடிவானம்போர்த்ததே' எனபன பிரதிபேதம். (கூஉக)

கூஉஉ. பொன்னினின்முத்தினிற்புனமென்றூசினின்
மின்னினமணியினிற்பளிங்கின்வெள்ளியிற்
பின்னினவிசும்பினும்பெரியபெட்புறத்
தன்னினசிவிகைவெண்கவிகைசுற்றின.

(இ - ன்.) பொன்னினில் - பொன்னினாலும், முத்தினில் - முத்தக் களினாலும், புனை மெல் தூசினில் - அழகான மெல்லிய வஸ்திரங்களினாலும், மின்னின மணியினில் பிரகாசிக்கின்ற இரத்தினங்களினாலும், பளிங்கின் - ஸ்படிகக்கற்களினாலும், வெள்ளியின் - வெள்ளியினாலும், பின்னின - செய்யப்பட்டனவாகிய, சிவிகை - தண்டிகைகள், தன்னின - நெருங்கிவந் தன; வெள் கவிகை - வெண்கொற்றக்குடைகள், விசும்பினும் பெரிய - ஆகா யத்தினும் மிகப்பெரியனவாய், பெட்பு உற சுற்றின - (கண்டவர்) விரும்பும் படி சூழ்ந்துவந்தன; (எ - று.)

'பொன்னினில்.....பின்னின' என்றதொடர் கவிஞர்க்கும் அடைமெ ழியாகத்தக்கது. குடைகள் இடமகன்ற ஆகாயம் முழுவதையும் மறைத்தலால், 'விசும்பினும்பெரிய' என்றார்.

'தன்னினசிவிகைகொடார்த்தசுற்றவே' என்று பிரதிபேதம். (கூஉஉ)

கஉச. வீரனுக்கிளையவன் விளக்குசேவடி
பாரினிற்சேறலிற்பரிதிமைந்தனுந்
தாரினிற்பொலங்கழறழங்கத்தாரணித்
தேரினிற்சென்றனன்சிவிகைபின்செல.

(இ - ன்.) வீரனுக்கு இளையவன் விளங்கு சே அடி பாரினில் சேறலினால், ஸ்ரீராமபிரானதுதம்பியாகிய இலக்குமணனது விளங்குகின்ற சிவந்த திருவடிகள் தரையில் நடந்துசெல்லுதலினால்,—பரிதி மைந்தனும் - சூரியகுமாரனாகிய சுக்கிரீவனும், தாரினில் பொலம் கழல் தழங்க - கிண்கிணிமாலை போல (க்காலிற்கட்டிய) அழகிய வீரக்கழல்கள் சப்திக்க (த் தான் காலினால்நடந்து), சிவிகை பின் செல - (தான் ஏறிச்செல்லுதற்குரிய) தண்டிகை பின்னால் (வேறாலமையாய்) வர, தாரணி தேரினில் சென்றனன் - பூமிபாகிய தேரின் மேற் சென்றான்; (எ - று.)

இளையபெருமான் பாதம்வருத்தப் பூமியில் நடந்து செல்லுதலால், சுக்கிரீவனும் சிவிகையேறிச்செல்லாமல் தரையிற் கால்நடையாகவே நடந்து சென்றனனென்க. தார் - கிண்கிணிமாலை. தாரணி - தாணீ என்ற வடசொல்லின் விகாரம்; (எல்லாப்பொருள்களையுங்) தரிப்பது எனக் காரணப்பொருள்படும். 'தாரணித்தேர்' என்றது திரிபுரசங்காரகாலத்திற் பூமி தேராக அமைந்ததனை யென்க. சுக்கிரீவன் தானினால் தரையில்நடந்துசென்றாலும் மஹாராஜாவானதுபற்றி, 'தாரணித்தேரினிற்சென்றனன்' எனச் சமத்காரத் தோன்றக் கூறினர். லக்ஷ்மணசுக்கிரீவரிருவரும் ஒருபொற்சிவிகையிலேறிச் சென்றனரென முதனூல் கூறும். 'விரும்புஞ்சேவடி' என்றும்பாடம். ()

கஉச. எய்தினன்மானவனிருந்தமால்வரை
நொய்தினிற்சேணிபின்பொழியநோன்கழ
லையவிற்குமரனுந்தானுமன்கதன்
கைதுறந்தயல்செலக்காதன்முன்செல.

(இ - ன்.) நோன் கழல் ஐய வில் குமரனும் - வலிய வீரக்கழலையும் அழகிய வில்லையுமுடைய இளவீரனான இலக்குமணனும், தானும் - சுக்கிரீவனும்,—சேணி பின்பு ஒழிய - (உடன்வந்த) வானரசேனைகள் பின்னே தங்கவும், அன்கதன் கைதுறந்து அயல் செல - அங்கதகுமாரன் பக்கத்தை விட்டு அப்பால்வரவும், காதல் முன் செல - (இராமபிரானைக்காணவேண்டுமென்ற) ஆசை (தைக்கு) முன்னே செல்லவும், மானவன் இருந்தமால்வரை - இராமபிரான் தங்கியிருந்த பெரிய மலையை, நொய்தினில் எய்தினன் - விரைவாகச் சென்றடைந்தான்; (எ - று.)

பெரியோரிடத்துச் செல்லும்போது ஆடம்பரத்துடன் செல்லுதல் தகுதியன்றாதலால், இராமபிரானிடஞ்செல்லுஞ்சுக்கிரீவன் வானரசேனைகளைவிட்டு அங்கதகுமாரனும் சிறிது அப்பால்வரத் தான் தனியே செல்வா

னுயினனென்க. குமரனும் தானும் எய்தினன் - பலவழுவமைதி. ஐயம் - அறிப்புப்பெயரெச்சம்; ஐ - அழகு. கை-தமிழுபசர்க்கம்; பக்கம் எனினுமாம்.

'கைதொடர்ந்தயல்செல்' என்றும் பாடம். (கஉ-ச்)

[சுக்கிரீவனது ராமபக்தி.]

கஉ ரு. கண்ணிய கணிப்பருஞ்செல்வக்காதல்விட்
டண்ணலேயடிதொழவணையுமன்பினு
ணண்ணியகவிக்குலத்தரசனுடொறும்
புண்ணியற்றொழுகழற்பரதன்போன்றனன்.

(இ - ள்.) கண்ணிய கணிப்பு அருஞ் செல்வம் காதல்விட்டு-(பலராலும்) விரும்பப்பட்ட அளவிடமுடியாத [மிகப்பெரிய] செல்வத்தில் ஆசையை விட்டு, அண்ணலே அடி தொழ அணையும் - இராமபிரானைத் திருவடிதொழுமாறு வந்து சேர்ந்த, அன்பினுல் நண்ணிய - பக்தியோடுகூடிய, கவி குலத்து அரசன் - வானரசாதித்தலைவனுகிய சுக்கிரீவன்,—நான்தொறும் புண்ணியன் கழல் தொழு பரதன் போன்றனன் - தினந்தோறும் தரும ஸ்வரூபியாகிய இராமபிரானைத் திருவடிதொழுகின்ற பரதாழ்வானே யொத்தான்;

இதனுல், சுக்கிரீவன் இராமபிரானிடத்துக் கொண்ட பக்தி பரதனது பக்தியைப்போலு மென்பதாம். பரதாழ்வான், செல்வப்பற்றுச் சிறிதுமின்றி ஸ்ரீராமபிரானது பாதுகைகளைத் தினந்தோறும் வணக்குந் தன்மையுள்ளவனுன்; அவனை, ராஜ்யபோகத்தில் மூழ்கிவிடவாமல் அதனை விட்டு இராமபிரானிடத்துப் பக்திப்பெருங்காதல்கொண்டு அப்பிரானது திருவடிகளேவணங்குவருஞ் சுக்கிரீவனுக்கு உவமைகூறினர். புண்ணியற்றொழுகழற் பரதன் என்பதற்கு - இராமபிரானைத் தொழுபவனுன வீரக்கழலையணிந்த பரதனென்ற உரைப்பாரு முளர். புண்ணியன்—"புண்யாகாமபி புண்யோ ஸௌ" என்றது காண்க. பரதனென்ற பெயர்க்கு - பாரக்களை கிர்வஹிக்க வல்லனென்பது பொருள்; பின்பு இராமபிரான் வனவாசஞ்செல்லவும் தசரதசக்கரவர்த்தி மேலுலகஞ்செல்லவும் காவலனில்லாததாரும் இராச்சிய பாரத்தை இவன் வகிக்கும்படி கேரிடுவதை ஞானக்கண்ணினுலறிந்த வசிஷ்டமாமுனிவர் இவனுக்கு இவ்வாறு முன்னமே பெயரிட்டனர்.

'கண்ணியபெருஞ்செல்வக்காதல் விட்டவல், வண்ணலே', 'நான்தொழும், புண்ணியர் தொழுகழற்பரதன்' என்றும் பாடம். (கஉ-இ)

[சுக்கிரீவன் இராமபிரானை வணங்குதல்.]

கஉ சு. பிறிவருந்தம்பியும்பிரியப்பேருல
கிறுதியிற்றனெனவிருந்தவேந்தலை
யறைபணிந்தானிணைாரம்பார்தொடச்
செறிமலர்ச்சேவடிமுடியிற்சீண்டினன்.

(இ - ள்.) பிறிவு தரும் தம்பியும் பிரிய - பிரிதலில்லாத எப்போதும் உடனுறைகின்ற தம்பியாகிய இலக்குமணனும் பிரிந்துசென்றதனுல், பேர்

உலகு இறுதியில் தான் என இருந்த · பெரிய உலகமெல்லாம் அழியுங் கற்பாந்தகாலத்திற் சேஷித்திருக்கும் (திருமாலாகிய) தன்னைப்போலத் தனிப்பட்டிருந்த, எந்தலை - இராமபிரானை,—(சுக்கிரீவனுனவன்), அறை மணி தாளினோடு ஆரம் பார் தொட · (தனது மார்பிலணிந்த) ஒலிக்கின்ற இரத்தினமாலைகளும் முத்தாஹாரங்களும் பூமியிற்படும்படி, செறி மலர் சேவடி முடியின் தீண்டினான் - நெருங்கிய செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளைத் தனது தலையினாற் பரிசித்தான் [சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்]; (எ · று.)

எப்போதும் பிரியாது உடனுறையுந் தம்பியாகிய இலக்குமணனையும் பிரிந்து தனித்திருக்கும் இராமபிரானுக்கு, யாவுமழியுங் கற்பாந்தகாலத்தில் தான்மாத்திரம் தனித்திருக்குந் திருமாலே உவமைகூறினர்.

'அறைமலர்த்தாளினோடு' என்றும் பாடம். (கூ)

[இதுவும், அடுத்தகவியும் · குளகம், வணங்கியசுக்கிரீவனை இராமபிரான் தழுவி இருக்கச்சொல்லிக் குசலப்ரச்நஞ் செய்தலைக் கூறும்]

கூஎ. தீண்டலுமார்பிடைத்திருவுநோவுற
நீண்டபொற்றடக்கையானெடிதுபுல்லினன
மூண்டெழுவெகுளிதீபொளிப்பமுன்புதீபா
லீண்டியகருணைதன்திருக்கையேயினீய.

(இ · ன்.) தீண்டலும் · (சுக்கிரீவன் தன்னை) வணங்கினவுடனே,—(இராமபிரான்), மார்பிடைதிருவும் நோவு உற · (தனது) திருமார்பில் வித்ய வாஸஞ்செய்கிற திருமகளும் வருந்தும்படி, நீண்ட பொன தட கையான் நெடிது புல்லினன் · (முழக்தாளளவும்) நீண்டுதொங்குகின்ற அழகியபெரிய (தனது) கைகளினால் அழுந்தத் தழுவினவனுய்—மூண்டு எழு வெகுளி போய் ஒளிப்ப · (தவணைதவறினமையாற் சுக்கிரீவனிடமிருந்து) மூண்டெழுந்த கோபமானது ஆறிப்போக, முனபுபோல் ஈண்டிய கருணை தன்னி · முன் போலவே மிக்க அன்புபாராட்டி, இருக்கை ஈயி · (அச்சுக்கிரீவனை) இருக்கும்படி கட்டளையிட்டு (எ · று.)—'அயலினிதிருந்தி' என அடுத்தகவியோடு தொடரும்.

''அகலகில்லேன் னிறையுமென் றலர்மேன்மங்கை யுறைமார்பா'' என்ற படி, திருமாலின் திருவவதாரமூர்த்திகளின் திருமார்பிலும் இலக்குமி விட்டுப் பிரியாது உடனுறைவளென்க. தடக்கையான · பெயரும்மம். 'கையால்' என்றும் பிரிக்கலாம். புல்லினன் - முற்றெச்சம்.

'தீண்டியவன்பினே', 'ஈண்டியகருணையால்' என்று பிரதிபேதம். (கூஎ)

கூஅ. அயலினிதிருத்தினனசுமாணியு
மியல்பினினியைந்தவேயினிதின்வைகுமே
புயல்பொருதடக்கைபோரகுப்புல்லுயிர்
வெயிலிலேவுடையெனவிளம்பினுன்.

(இ - ள்.) (இராமபிரான்.) 'அயல் இனிது இருத்தி - (சுக்கிரீவனே) அருகில் இனிமையாக இருக்கச்செய்து, (அவனேகோக்கி), 'கின் அரசும் ஆணையும் - உனது அரசாட்சியும் ஆஜ்ஞாசக்கரமும், இயல்பினின இயைக் தவே - ஒருவருததமுமில்லாமல் இயற்கையாக அமைக்துள்ளனவோ? இனி கின் வைகுமே இனிமையாக [தடையின்றி] நடக்கின்றனவோ? புயல் பொரு தட கை நீ புரக்கும் பல் உயிர் - மேகம்போன்ற [கைம்மாறு கருதாது கொடுக்குந்தனமையுள்ள] நீண்ட கைகளையுடைய நீ பாதுகாக்கின்ற பல வுயிர்களும், குடை - (உனது) வெண்கொற்றக்குடையினல் [அரசாட்சியி னல்], வெயில் இலவே - தாபமில்லாம லிருக்கின்றனவோ?' என வீடணம்பி னன் என்று வினவினன்; (எ - று.)

முதலிரண்டுவினுக்கள் சுக்கிரீவனது நனமையையும், இறுதிவினு குடி களின நனமையையும் கருதி கிகழ்ந்தவை. அரசாட்சி ராஜ்பரா மென்ப படுதலாலும் அதைச்செய்யும்போது எங்கும் தன்னுணை செல்லவேண்டி யிருத்தலாலும் அவை ஒருசிரமமுன்றித் தடைப்படாது எங்குஞ்செல்லு கின்றனவா வென்பான் 'கின்னரசு மாணையும் இயல்பினி னியைத்தவே யினிதின்வைகுமே' என்றும், அவை எங்குந்தடையின்றிச் செல்லுலும் குடி கட்கு இனிமைதருவது இன்றியமையாத தாதலால், 'நீபுரக்கும பல்லுயிர் வெயிலிலவேகுடை' என்றும வினவினன். வெயில - தாபத்திற்கு, இலக் கணை. அரசாட்சியைக் குடையாகக்கூறுதல், கவிசமயம.

'வெயிலிலதேகுடைய' 'எனவினயினன்' என்ற பாடாந்தரம் (கூஉ அ)

[அதற்குச் சுக்கிரீவன் விடைகூறுதல்]

கூஉ. பொருளுடையவ்வுரை கேட்டபோழ்திவா
னிருளுடைகதிரினுன்புதல்வனுழியி
னிருளுடையுலகினுகிரவியன்னகின்
னருளுடையேற்கவையரியவோவென்றன்.

(இ - ள்.) பொருள் உடை அ உரை கேட்டபோழ்தி - அர்த்தசார முடைய (இராமபிரானது) அந்த வார்த்தையைக் கேட்டபொழுதில்,—வான் உருள் உடை தேரினுன் புதல்வன் - ஆகாயத்திற்செல்லுகின்ற ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரையுடையவனன சூரியனது குமாரனுகிய சுக்கிரீ வன்,—(இராமபிரானேகோக்கி), 'ஊழியின் இருள் உடை உலகினுக்கு இரவி அன்ன கின் அருள் உடையயேற்கு - கற்பாக்தகாலத்திற் சூழ்ந்த கொள்ளு கின்ற இருளையுடைய உலகத்திற்குச் சூரியன்போன்றவனன உனது அரு ளைப் பெற்ற எனக்கு, அவை அரியவோ - அச்செயல் அருமையானவை யோ?' எனறன்—;(எ - று.)

* சுக்கிரீவன் தான மனைவியையிழக்து வாலியினல் அரத்தப்பட்டு ரிசிய மூகமலையிற் செய்தொழிலின்னதெனத தெரியாது திகைத்து கின்றகாலத் தில் தன்னுடனமெல்லாம் ஒருங்கேயொழிய வக்து தோன்றிய இராமபிரானு க்கு, கற்பாக்தகாலத்தில் இருண்மண்டிச் செய்தொழிலறியாது மயங்கிக்கிட

கும்இவ்வுலகத்தயிர்க்கட்கு அவ்விருளோடுக்குமாறுதோன்றுவதொரு குரியனே இல்போநருவமையாகக் கற்பித்தார். ஊழியின் என்றான் என இயைத்து, சொல்லவேண்டிய முறைப்படியே கூறினானென்றுமாம். சுக்கிரீவன் புதிதாக இராச்சியம்பெற்று ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்த ஏர்ந்த சமய மாதலால் இப்போது இராமபிரான சுக்கிரீவனைக் குசலபிரச்னஞ்செய்தது வெற்றரையாகா தென்பார், 'பொருளுடையவவுரை' எனறார். தினகருணையொன்றுதானே எனக்கு எல்லாவற்றையும் இனிது நடத்துகின்ற தென்பான், 'தின அருளுடையேற் கலை யரியவோ' என்றான்.

இவ்வுரைகேட்டுப்போர்த்தணி,' 'அரியவோவெனை' என்றும் பாடம். ()

[இதுமுதல் முன்றுகவிகள் சுக்கிரீவன் தன்பிழையை யேற்துரைத் தலைக் கூறும்.]

கக ०. பின்னரும்விளம்புவான்பெருமையோய்தின
தின்னருளுதவியசெல்வமெய்தினேன்
மன்னவதின்பணிமறுத்தலைகியென்
புன்னிலைக்குரக்கியல்புதுக்கினேனென்றான்.

(இ - ள்) பின்னரும் விளம்புவான் (சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி) மறுபடியும் கூறுவான்:—'பெருமையோய் - பெருமைக்குணமுடையவனே! மன்னவ - அரசனே! தினதது இன் அருள் உதவிய செல்வம் எய்தினேன - உனது இனிய அருளினாற் கிடைத்த செல்வத்தை யடைந்தோன், தின் பணி மறுத்தலைகி - உனது கட்டளையை மீறிநடத்தலை, என் புல் நிலை குரங்கு இயல் புதுக்கினேன் - எனது அற்பமான தன்மையையுடைய குரங்குக்குணத்தைப் புதிதாக வெளிப்படுத்திவிட்டேன்,' என்றான்—; (எ - று.)

உபகாரஞ்செய்தவர்திறத்தில் செய்ந்நன்றியை மறந்து பிழை செய்த தனது இழிகுணத்தைச் சுக்கிரீவன் வெறுத்துக்கூறுகின்றா னென்க. புதுக்கினேன் நீஎன்னைநெருட்புச்செய்தகாலத்து மறைந்திருந்த எனது குரங்குக் குணத்தை இப்போது வெளிப்படுத்திக்காட்டினே னென்றபடி.

'செல்வமெய்தினே' என்றும் பாடம். (கக ०)

கஉக. பெருந்திசையனைத்தையும்பிசைந்துதேடினேன்
றருந்தகையமைந்தும்தன்மைசெய்திலேன்
றீருந்திழைநிறத்தினுற்றெளிந்தசிந்தைதீ
வருந்தினேயிருப்பயான்வாழ்வின்வைகினேன்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ன்.) (பின்னும் இராமபிரானைநோக்கிச் சுக்கிரீவன் கூறுவான்):— பெருந்திசை அனைத்தையும் பிசைந்து தேடினேன் தரும் தகை அமைந்தும்- பெரியதிக்குக்களெல்லாவற்றையும் ஆராய்ந்துதேடிப்பார்த்து (ச் சீதாபிராட்டியைக்)கொணர்ந்துதருந்திறமை (என்னிடம்) அமைந்திருந்தும், அதன்மை செய்திலேன்- அவ்வாறுசெய்யாதவனாய்,—நிருந்த இழை நிறத்தினும்

நீ தெளிந்த சிந்தை வருந்தினை இருப்ப - தொழில் திருந்திய ஆபரணங்களை யணிந்தவளான சீதாபிராட்டி காரணமாக நீ (கலக்கமில்லாமல்) தெளிவடைந்த (உனது) மனத்தில் வருத்தம் கொண்டவனு யிருக்கையிலும், (அதனைச் சிறிதும் கினையாமல்), யான்—, வாழ்வின் வைகினேனை - இன்பவாழ்க்கை யிற் காலங்கழித்தேன்: (எ - று.)

'குரக்கிற்புகுந்தினேன்' என்று இழிச்செய்யுளிற் கூறியதை இச்செய் யுளினால் விவரித்தவாறு கலங்காத இராமபிரானது மனங் கலங்கியிருக்கை யில் அதைத் தெளிவிக்கும் வல்லமை தனக்கு இருந்தும் அதற்கு எற்றபரிகா ரத்தைத்தேடாது போகநுகர்ச்சியில் மீண்டுமொழுகிப்போகியிருந்த தன்பே தைமையைச் சுக்கிரீவன் வெறுத்துக்கூறுகின்றன னென்க. மூன்றாமடி - முற்றுமோனை. தெளிந்தசிந்தை நீ வருந்தினை இருப்ப என்பதற்கு தெளிந்த மனத்தையுடைய நீ வருந்தியிருக்கவும் என்றும் உரைக்கலாம். (கூடு)

கூடீ. இனையனாணுடையியல்புமெண்ணமு
நினைவுமென்றனினிநின்றியான்செயும்
வினையுநல்லாண்மையும்விளம்பவேண்டுமோ
வனைசழல்வரிசிலைவள்ளியோயென்றான்.

(இ - ள்.) வனை சழல் வரி சிலை வள்ளியோய் - கட்டிய வீரக்கழலையும் கட்டமைந்த வில்லையுமுடைய ஈகைக்குணமுள்ள இராமபிரானே! யானு டை - எனதுடைய, இயல்பும் - தன்மையும், எண்ணமும் - மனக்கருத்தும், நினைவும் - (உனது) மனநிலையும், இனையன எனறால் - இத்தன்மையன வாதலால், இனி யான நின்று செயும் - இனிமேல் யான் நிலைத்துச் செய்யப் போகின்ற, வினையும் - தொழிலையும், நல் ஆண்மையும் சிறந்த பராக்கிர மத்தையும், விளம்ப வேண்டுமோ - சொல்லத்தகுமோ? என்றான் - என்று (இராமபிரானைநோக்கிச் சுக்கிரீவன்) கூறினன்: (எ - று.)

நீ மனத்தில் பெருக்கவலைபுடனிருக்கவும் யான் சீதாபிராட்டியைத் தேடித்தரவேண்டிய முயற்சி செய்யாமல் போகநுகர்ச்சியில் இதுவரையில் மனந்தாழ்ந்திருந்ததனால் இனி அத்தொழில் விரைந்து முடிப்பேனென்று எனது செய்கைபராண்மைகளைக் கூறுவதற்கும் எனது நாத் தணிபவில்லை யென்று சுக்கிரீவன் தான் தவறுசெய்ததை நினைந்து காணமுற்றுக் கூறு கின்றன னென்க. 'யானுடை எண்ணமும்' என முன்வந்ததனால், 'நினை வும்' எனபதற்கு - உனது மனநினைவும் என்று பொரு ளுரைக்கப்பட்டது; இனி, எண்ணம் என்பது பலராலும் எண்ணப்படுவதென்ற காரணத்தாற் செயலை குறிக்கு மெனக்கொண்டு என்செய்கையும் என் நினைவு மென்று உரைப்பாரு முளர். 'எண்ணியநினைவும்' என்ற பாடம் எற்கும். தான் முன் னே ஒருதவியையுஞ் செய்யாதிருக்கத் தனது பகையையழித்த மனவியை மீட்டு தரசையும் தளித்ததனால், இராமபிரானைச் சுக்கிரீவன் 'வள்ளியோய்' என விளித்தான். முதலடி - முற்றுமோனை. (கூடீ)

[இராமபிரான் சுக்கிரீவனைநோக்கிக் கூறிய உபசாரவார்த்தை.]

கூகூ. திருவுறைமார்பனுந்தீர்ந்ததேயும்வந்
தொருவருங்காலமுன்னுரிமைபோருரை
தருவினைத்தாசையிற்றாழ்விற்றாகுமோ
பரதனீயினையபகர்பாலியோ.

(இ - ள்) திரு உறை மார்பனும் - இலக்குமி எப்பொழுதுந்தங்குகின்ற திருமாபையுடையவனான ஸ்ரீராமபிரானும்,—ஒருவு அரு காலம் - கழிவதற்கு அரிய [பிரிகீண்டதாகததோனறமியல்புள்ள] கார்காலம், வந்து தீர்ந்ததேயும் - வந்து நீங்கியதாகவும், உன் உரிமை ஓர் உரை - உரிமையாற் பேசுகின்ற உனது வார்த்தையானது, தரு வினைத்தா ஆகையின் - (சீதாபிராட்டியைத் தேடித்) தருகின்ற தொழிலையுடையதாயிருத்தலினால், தாழ்விற்று ஆகுமோ - தாழ்வையுடையதாகுமோ? பரதன் நீ (என்னிடத்திப்) பரதன்போனற அன் புடையவனான நீ, இனையன பகரல் பாலியோ - இத்தன்மையான வார்த் தைகளைச் சொல்லுக்கடவையோ?' (என்று சுக்கிரீவனைநோக்கிக் கூறினான்.)

ஏற்ற வினை வருவித்து முடிக்கப்பட்டது. கார்காலங்கழிந்து நீ தவணை தவறினை யென்றாலும், சீதாபிராட்டியைத்தேடித்தராமையைக்குறித்து இரங் கிக்கூறிய உனது வார்த்தையானது எப்படியாவது பிராட்டியைத் தேடித் தரவேண்டுமென்ற கருத்தை உனக்கு உறுதியாகவிருத்தலைத் தெரிவித்தல் பற்றி, உனக்கு ஒருதாழ்வுமிலலை; ஆதலால், பரதனைப்போலவே என்னிடத் தப்போன்புடையனான நீ உனனைத்தாழ்த்திக்கூறுதல் தகுதியன் றெனச் சுக்கிரீவனைநோக்கி இராமபிரான முகமன்கூறின னென்க. உரிமை - அன்பு. வீரசிகளுக்குக் காலம் நீட்டிதததாகத தோனறு மாதலால், 'ஒருவருங்காலம்' என்றான. பரதன் நீ - இராச்சியத்தைப்பரிக்குந் [தாங்கும்] தன்மையுள்ள நீ என்றுமாம்.

இனி, 'தாழ்வித்தாகுமோ' என்று பாடங்கொண்டு, முன் உரிமையோர் உரை-முன்புள்ளவர்களான (நூல்களில்) உரிமையை [மிக்கபழக்கத்தை] யுடைய பெரியோரது கட்டுரையானது, தரு வினைத்த ஆகையின் - ஒருவர்செயலா னது தன்பயனைத் தவறாதுகொடுக்கிறவழுவினையின வசத்தினையாம் என்ற இருத்தலால், நீதாழ்வித்த ஆகுமோ நீதாழ்வித்ததாகுமோ? எனற பதவுரை கூறுவாரு முளர். எல்லாம் விதியின்படி நடக்குமென்று பெரியோர் கூறுவ தாதலால், எனது தொழில் இன்னும் முற்றுப்பெறாதது விதியின் செயலே; நீ தாமதித்ததாக உன மீது குற்றங்கூறவேண்டிய எதுவில்லை யென இராம பிரான் தேற்றியதாக இவ்வுரைக்குக் கருத்துக் காண்க; ''ஊழிற்பெருவலி யாவுள மறறொன்று, சூழினுந் தான் முந்துறும்'' என்ற திருக்குறள் இக்கே கருத்துத்தக்கது.

'திருவுறைமார்பனுந் தீர்ந்ததோவந்த, தொருவருகால முன்னுரிய போரது, தருவினைத்தாகையுந்தழுவிற்றாகியோ, பரதனீயினைய பகர்தி யோவென்மூன்' என்று பிரதிபேதம். (கூகூ)

RESEARCH INSTITUTE,
24, R. H. ROAD, MADRAS - 4

[இதுவும், அடுத்தகலியும் - ஸ்ரீராமன் 'அநுமான் எங்கே' என்றுவினவ, சுக்கிரீவன் 'சேனையோடு விரைவில் வருவான்' என்றல்.]

கஉச. ஆரியன்பின்னருமமைந்துநன்குணர்
மாருதியெவ்வழிமருவினனெனச்
சூரியன்காண்முளோதோன்றுமாலவ
னீரரும்பரவையினெடிதுசேனையான்.

(இ - ன்.) ஆரியன் - இராமபிரான், பின்னரும் அமைந்து - மறுபடியும் (சிலவார்த்தைகொல்லத்) தொடங்கி, (சுக்கிரீவனைநோக்கி), நன்கு உணர் மாருதி எவ்வழி மருவினனென - '(எல்லாவற்றையும்) நன்றாக அறியவல்ல வாயுகுமாரனை அநுமான எவ்விடத்திலிருக்கிறான்?' என்று வினவ, (அதற்கு), சூரியன் காண்முளோ - சூரியகுமாரனான சுக்கிரீவன், 'அவன் - அந்த அநுமான், நீர் அரும் பரவையின் நெடிது சேனையான் - நீர்நிறைந்த (காணுதற்கு) அரிய கடல்போன்ற பெருஞ்சேனையை யுடையவனாய், தோன்றும் வருவான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இச்செய்யுளிலுள்ள 'சூரியன்காண்முளோ' என்பது, மேல் கஉக ஆங்கவியிலுள்ள 'என்றான்' என்பதைக் கொண்டுமுடியும்; ஆகவே இவ்விரண்டுமூன்று கவிகள் ஒருதொடராம். இராமபிரான் அநுமானைப்பற்றித் தனியே வினவியதனால், அவனிடத்தில் அப்பிரான்வைத்துள்ள பெருங்கருணை தோன்றும்.

'மால்வரை, நேர்வருபரவையினெடிய' என்று பிரதிபேதம். (கஉச)

கஉஎ. கோடியோராயிரங்குறித்ததுதுவ
ரோடினர்நெடும்படைகொணரலுற்றதா
லூடறக்குறித்ததுமின்றுகாளையவ்
வாடலந்தானையோடவனுமெய்துமால்.

(இ - ள்.) கோடி ஓர் ஆயிரம் குறித்த காலவர் - ஓராயிரக்கோடியாகக் கணக்கிடப்பட்ட தூதாகன், நெடும் படை கொணரல் ஓடினர் - பெரிய வானரசேனைகளைத் திரட்டிக்கொணர்தற்கு விரைந்துசென்றார்கள்; (இதுகாறும் வானரசேனைகள் வராததனால் அவைகளைத் திரட்டிக்கொணருமாறு அநுமான் காத்திருக்கிறான்); தாம் குறித்ததும் காலமும் உற்றது - (சேனைகளைத் திரட்டிக்) கொணர்தற்குக் குறித்ததாகிய தவணைகாலமும் வந்துவிட்டது; ஆல் - ஆதலால், இன்று நாளை - இன்றைக்கு அல்லது நாளைக்கு, அ ஆடல் அம் தானையோடு அவனும் எய்தும் - வலிமையுள்ள அந்த அழகிய வானரசேனையோடு அவ்வநுமானும் இங்குவருவான; (எ - று.)—'ஆல்' இரண்டனுள், முன்னது - 'ஆதலால்' என்பதன விகாரமும், பின்னது - ஈற்றசையுமாம்.

*கீழ்ச்செய்யுளின பின்னிரண்டடி - தொகுத்துச்சுட்டல்; இச்செய்யுள்வருத்தலைக்காட்டல்; ஆகவே, கூறியதுகூறலென்னுங்குற்றத்திற்கு இடமில்லையாம். ஆடல்-ஆடலென்பதன் நீட்டல். 'கோடிதூரோராயிரங்குறித்து' 'கோடிறூ, தோடினநெடும்படைகொணரலுற்றவால்' என்று பிரதிபேதம். (கஉஇ)

[எல்லாச்சேனைகளும் வந்தபின்பு செய்யவேண்டியதை ஆலோசிக்கலாமென்று சுக்கிரீவன் கூறுதல்.]

கஉசு. ஒன்பதினுயிரகோடியுற்றது
நின்பெருஞ்சேணையங்கெடியசேனைக்கு
நன்குறுமவதிரோணனைநண்ணிய
பின்செயத்தக்கதுபேசற்பாற்றென்றான்.

(இ - ன்.) ஒன்பதினுயிரகோடி நின் பெருஞ் சேனை உற்றது - (இப்பொழுது என்னுடனே) ஒன்பதினுயிரக்கோடிக்கணக்கான உனது பெரியசேனை வந்திருக்கின்றது; அ நெடிய சேனைக்கும் நன்கு உறும் அவதிநான் நானே - (இனிவரவேண்டிய) அத்தப்பெரியசேனைக்கு ஒருங்கேதிரண்டுவந்துசேர் சிற்கு உரிய தவணைகளும் காலைக்கே; நண்ணிய பின் - (அச்சேனையும்) வந்தபிறகு, செய தக்கது பேசல்பாற்று - செய்யத்தக்கதைப்பற்றிப்பேசுதல் தருதியுடையது, என்றான் - என்று கூறிமுடித்தான், (சுக்கிரீவன்); (எ-று.)

'நண்ணியபின் செயத்தக்கது பேசற்பாற்று' என்று கூறிய சுக்கிரீவனுக்கு, அச்சேனையுடன் அநுமான் வந்தபிறகே செய்யத்தக்கதைப்பற்றிப் பேசவேண்டுமென்று கருத்துப்போலும். தனக்கும் இராமபிரானுக்கு முள்ள ஒற்றுமையத்தால், சுக்கிரீவன் தன்சேனையை'நின்பெருஞ்சேனை' என்றான். 'கெடியசேனை' என்றது - அணைப்படையை.

'நன்பெயரவதிகாள்' என்றும் பாடம். (கஉசு)

[இராமபிரான், சுக்கிரீவனைக் நோன்று எல்லாச்சேனைகளுடனும் வருமாறு அனுப்புதல்.]

கஉள. விரும்பியவிராமனும்வீரனிற்கேதா
ரரும்பொருளாகுமோவமைதிநின்றெனப்
பெரும்பகலிறந்ததுபெயர்திநின்படை
பொருந்துழிவாவெனதிதொழுதுபோயினான்.

(இ - ன்.) விரும்பிய இராமனும் - (சுக்கிரீவனிடத்து) அனபுடைய இராமபிரானும்,—(அவனைநோக்கி), 'வீர வீரனே! நிறகு அது ஓர் அரும் பொருள் ஆகுமோ - (உனக்குச் சேனையைத் திரட்டிக் காரியத்தை முடித்தலாகிய) அச்செயல் அருமையானதொரு காரியமாகுமோ? அமைதி நன்று - (உனது) அடக்கமான குணம் நன்றாயிருக்கின்றதது!' எனறு - எனறு கூறி,—(மீண்டும் அவனைநோக்கி), 'பெரும் பகல் இறந்தது - (இப்பொழுது) பெரிய பகற்பொழுதோ கழிந்துவிட்டது; பெயர்தி - (இனறு) போய், நின படை பொருந்துழி வா - உனது சேனை திரண்டுவந்தபோது (அவற்றுடனே நானே க்கு) வருவாய்', என - என்றுவிடைகொடுக்க, தொழுது - (இராமபிரானை) வணங்கி, போயினான் - (அச்சுக்கிரீவன்) போனான்; (எ - று.)

சுக்கிரீவன் தன்சேனை தங்கியுள்ள பாசறைக்குச் சென்றானென்க. பொர்தி - முற்றெச்சம், 'பொருந்துதியெனவவன்' என்றும் பாடம். (கஉள)

[இராமபிரான் அங்கதனையும் விடை கொடுத்தனுப்புதல்.]

கசுஅ. அங்கதற்கினியனவருளியையபோய்த்
தங்குதியுந்தையோடென்றுதாமரைச்
செங்கணெந்தம்பியுந்தானுஞ்சிந்தையின்
மங்கையுமவ்வழியன்றுவைகினனே.

(இ - ள்) தாமரை செங் கணன் - செந்தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையுடையவனான இராமபிரான், அங்கதற்கு இனியன அருளி - அங்கத குமாரனுக்கு இனியனவான வார்த்தைகளைக் கூறி, 'ஐய---! போய் உன்தை யோடு தங்குதி - (நீ) போய் உனது தந்தையாகிய சுக்கிரீவனுடனே தங்குவாய்,' என்று - என்று விடைகொடுத்து அனுப்பி,— தம்பியும் - தம்பியாகிய இலக்குமணனும், சிந்தையின மங்கையும் - (எப்பொழுதும்) தன் மனத்திற் குடிகொண்டிருக்கிற சீதாபிராட்டியும், தானும் - தானுமாக, அன்று - அவ் விரவில், அ வழி - அவ்விடத்தில், வைகினனே - தங்கியிருந்தான்; (எ - று.)

உன்தை - உன்தந்தை; மரூஉ இராமபிரான இடைவிடாது சீதாபிராட்டியைச் சிந்தித்துக்கொண்டே யிருத்தலால், 'சிந்தையின் மங்கை' என்றார். 'தம்பியும்மங்கையும் தானும் வைகினன'—தலைமைபற்றிய பால்வழுவமைதி; 'வைகினர்' எனறும் பாடமுண்டு. (கசுஅ)

[இலக்குமணன் தான் சுக்கிரீவனிடம் போய்வந்த செய்தியை இராமபிரானுக்குக் கூறுதல்]

கசுக. சேயுயர்கீர்த்தியான்கதிரின்செம்மல்பாற்
போயதுமவ்வயிற்புகுந்தபாவையு
மோய்வுறுதுணர்தலெனவுணர்தினனோ
வாய்மையாவுணர்வுறுவலியமொய்ம்பினேனே.

(இ - ன.) சேய் உயர் கீர்த்தியான் - மிக்க பெருங்கீர்த்தியையுடையனாகிய இராமபிரான, (இளையபெருமாளே நோக்கி) 'கதிரின செம்மல்பால் போயதும்-(நீ)சூரியகுமாரனான சுக்கிரீவனிடத்துச்சென்றதையும், அ வயின் புகுந்த யாவையும்-அவ்விடத்து நடந்த எல்லாச்செய்திகளையும், ஓய்வு உறுதுணர்த்தல் - (ஒன்றும்) விடாமற் சொல்வாயாக', என - என்று கட்டளையிட,—வாய்மை ஆ உணர்வுற வலிய மொய்ம்பினேன் - உண்மையாகவே (எல்லாவற்றையும்) அறிந்தன்மையுள்ள மகாபலசாலியாகிய லக்ஷ்மணன், உணர்த்தினனே - (அவ்வாறே) தெரிவித்தான்; (எ - று.)—அரோ - சற்றசை.

* சேயுயர் - ஒருபொருட்பன்மொழி. கதிர் - ஆயிரக்கிரணக்களையுடைய சூரியனுக்கு, இலக்கணை. 'வாய்மையாலுணர்வுற'என்று பிரதிபேதம். (கசுக)

கிட்கிந்தைப்படலம் முற்றிற்று.

ஒன்பதாவது
தானைகாண் படலம்.

சுக்கிரீவமகாராஜன் தான் ஒருங்கேதிரட்டிய வானரப்படையைக்காட்ட, அதனை இராமலக்ஷ்மணர் கண்ட செய்தியைக் கூறும் பாகம். வானரசேனைத் தலைவர்பலர் தம்தம்சேனையுடன் திரண்டுவருதலும், சுக்கிரீவன் அச்சேனைகளைக் காணுமாறு இராமலக்ஷ்மணரை வேண்டுதலும் அவற்றை இராமபிரான் லக்ஷ்மணனுக்கு காணுதலும், இராமன் சேனைப்பரப்பை வியந்து கூறுதலும், லக்ஷ்மணன் இனி ஆகவேண்டிய காரியத்தைத் தாமதியாது தொடங்கவேண்டுமென்று கூறுதலும் முதலியன இப்படலத்தில் விரித்துக் கூறப்படுகின்றன. 'வானரத்தானை காண்படலம்' என்று பலபிரதிகளின் பாடம்.

[கவிக்கூற்று:—இப்படலத்தைத் துதித்துத் தோற்றுவாய்.]

க. அன்றவ ணிறுத்தனன லரி கீட்டிசைப்
பொன்றிணி நெடுவரை பொலிவு றுதமுன்
வன்றிறற் றூதுவர் கூவ வானரக்
குன்றுறழ் நெடுமபடை யடைந்த கூறுவாம.

(இ - ள்.) அன்று அவன் இறுத்தனன் - அன்றையிரவு முழுவதும் (இராமபிரான்) அவ்விடத்தில் தங்கியிருந்தான்; அலரி கீழ் திசை பொன் திணி நெடு வரை பொலிவுறுத முன - சூரியன கீழ்த்திசையிலுள்ள பொன் திரம்பிய [பொன்மயமான] பெரிய உதயகிரியிலே விளங்கித் தோன்றுத முனனமே [சூரியனுதிப்பதற்குமுனபே], வல் திறல் தூதுவர் கூவ - மிக்க வலிமையையுடைய தூதர்கள் சென்று அழைத்தனல், குன்று உறழ் வானர மெடும் படை அடைந்த (து) - மலையையொத்த வானரசேனை வந்து சேர்ந்தவிதத்தை, கூறுவாம் - (இனி) எடுத்துச்சொல்வோம்; (எ - று.)

'அன்றவணிறுத்தனன்' என்றது கீழ்ப்படலத்தின் தொடர்ச்சியேதானறக் கூறியது. அலரி - பரவுகின்ற கிரணங்களையுடையவனெனச் சூரியனுக்குக் காரணக்குறி. கிழக்கு + திசை = கீட்டிசை; கிழக்கு என்னும் நிலைமொழி, ஈற்றுஉயிர்மெய்யும் ககரவொற்றும் அகரமுங் கெட்டு முதல்நீண்டு, வரு மொழிமுதல்தகாரமும் நிலைமொழியீற்றுழகரமும் டகரமாகத் திரியப்பெற்றது. ழகாரதகாரங்கள் டகரங்களாகத் திரிவதற்கு விதி, "பதினேன்தொடெண்ணிரண்டாய்த் தோன்றுடற் பின்னர்த் தகாரம்வரி னிரண்டுந் தொடர்பா, லான்ற வைந்தாமுடவாம்" என்ற வீரசோழியத்திற் காண்க. ழகாரளகாரப்போலியும் இப்புணர்ச்சிக்கு ஆதாரமாகும். வானரசேனைக்கு மலையுவமை - அளக்கலா காதவளவிலும், எதற்குஞ்சலியாத உறுதியிலும், ஆயுதங்களாலழித்தற்கொண்ணாத வலிமையிலுமாம். அடைந்த - அடைந்தது எனபதன் விகாரம். 'கீழ்த் திசை,' 'வன்றிறற்றூதுவாகொணர' எனறும் பாடம்.

இச்செய்யுள், கிட்கிந்தைப்படலத்தின சற்றுச்செய்யுளாகச் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை; இவ்விடத்து

"அன்றவண்வானரச்சேனையாவையும்
வென்றிகொடாலிவருமெண்கின்வீரருக
குன்றுகளொருவழிகூடினுலென
யனறிலிராமனேவழுதிவந்தவே"

வனறு ஒருசெய்யுள காணப்படுகின்றது. (க)

வேறு.

[சதவலியென்பவன் வானரசேனையோடு வருதல்.]

உ. ஆனை யாயிர மாயிரத் தெழுவலி யமைந்த
வான ராதிப ராயிர ருடன்வர வகுத்த
கூனல் மாக்குரங் கைபிரண் டாயிர கோடித
தானை யோடுமச் சதவலி யென்பவன் சார்ந்தான.

(இ-ள்.) அ சதவலியென்பவன - அந்தச்சதவலியென்னும வாநரவீரன,—ஆயிரம் ஆயிரத்து ஆனை எறுழ்வலி அமைந்த - பதினலகும் யானைகளின மிக்கவலிமையோடு பொருந்திய, வானர அதிப ஆயிரர் - வானரப்படைத் தலைவர் ஆயிரம்பேர், உடன வர தன்னுடன் வர,—வகுத்த கூன நல் மா குரங்கு ஐயிரண்டாயிரகோடி தானையோடும் - அணிவகுக்கப்பட்ட சங்குகள் போல வெணணிறமான அழகிய சிறந்தபதினையிரகோடி வானரசேனை யோடும், சார்ந்தான் - (சுக்கிரீவனிடத்தில்) வந்து சேர்ந்தான்; (எ - று.)

சதவலி ஸதவலி: முகத்தில் நூறுமடிப்புக்களையுடையவனெனக் காரணபபொருள்படும; அகரச்சுட்டு - பிரசித்தியைக்காட்டும். 'ஆனையாயிரகோடியனெறுழ்வலியமைந்த' எனறும் பாடம். கூனல் மாக்குரங்கு என்பதற்கு - உடல்வளைவையுடைய பெரிய குரஙகுகளென்று உரைப்பாரு முளர். கோடி - நூறுலகும்

இது முதல் இப்படலம் முடியுமளவும் ஈகை கவிகள் - காகாலப்படலத்தின் ஈசை - ஆங் கவிபோனற கலிநிலைத்துறைகள். (உ)

[ஸுஷேணன் தன்சேனையோடு வருதல்.]

ஈ. ஊன்றிமேருவையெடுக்குமிடுக்கினுக்குரிய
தோன்றெரிதுண்டுதெளிவுறுவானரச்சேனை
யான்றபத்துநூறுயிரகோடியோடமையத்
தோன்றினன்வந்துசுசேடணனெண்ணுமத்தோன்றல்.

(இ-ள்.) சுசேடணன் எனனும அ தோனறல- ஸுஷேணனென்னுஞ் சிறந்த வானரவீரன்,—மேருவை ஊன்றி எடுக்குறும மிடுக்கினுக்கு உரிய - மேருமலையையும் பெயாதெடுக்கவல்ல வலிமை பொருந்தியதும், தோன

தெரிந்து உண்டு தெளிவுறு-மதிக்கரு ஆராய்ந்து உண்டு (மயக்கமில்லாமல்) தெளிவுபெற்றதுமான, வானர சேனை ஆன்ற பத்து நூறுயிரகோடியோடு · நிறைந்த பத்துலக்ஷங்கோடி வானரசேனையுடனே, அமைய · பொருந்த, வந்து தோன்றினான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

சுசேடணன் - ஸுஷேண னென்னும் வடமொழியின் திரிபு இவன், வாலியின் மனைவியாகிய தாரைக்குத் தந்தையாவன்: இவன், வருணதேவ னது குமாரன். வால்மீகிராமாயணத்திலும் சேனைவந்த விவரத்தைக் கூறு கையில், முதலில் சதவலியென்பவன் வந்ததைக் கூறி, இரண்டாவதாக ஸுஷேணன் வருகையைக் கூறியிருத்தல் காண்க. ஆன்ற எனபதை அகன்ற என்பதன் மரூஉவாகக்கொண்டு, பரவிய என்றும் பொருள் கூறலாம். முதலடி - தொடர்புயர்வுநவிற்சி. (கூ)

[நமையின் தந்தை தன்சேனையோடு வருதல்.]

ச. ஈறில்வேலையையிமைப்புறுமளவினிற்கலக்கிச்
சேறுகாண்குறுங் கிறல்கெழுவானரச் சேனை
யாறெணூயிரகோடியதுடன்வர வழுத
மாறிலாமொழியுருமையைபயந்தவன்வந்தான்.

(இ - ள்.) அமுதம்மாறு இலா மொழி உருமையை பயந்தவன் - தேவா மிருதமும் ஒப்பாகாத [மிக இனிய] சொற்களையுடைய (சுகேசிவனது மனை வியாகிய) ருமையைப் பெற்ற தந்தையான வன,—ஈறு இல் வேலையை-முடிவு காணப்படாத கடலையும், இமைப்புறும் அளவினில் - ஒரிமைப் பொழுதிற் குள, கலக்கி சேறு காண்குறும - கலக்கிச் சேறாக்கவல்ல, திறல்கெழு - வலிமைநிறைந்த, வானர சேனை ஆறு எண்ணூயிரகோடி அதாவது அறுபத்தெண்ணூ யிரகோடி வானரசேனை, உடன் வர-தன்னுடன் வர, வந்தான்—; (எ - று.)

ருமையைப் பெற்ற தந்தை, தாரா னைனப்படுவன்: இவன், தேவகுரு வாகிய பிரஹஸ்பதியின புதல்வன். இமைப்புறுமளவு - கொடிப்பொழுது. உருமை = ருமை. (ச)

[கேஸரி சேனையோடு வருதல்.]

ரு. ஐம்பதாயநூறுயிரகோடியெண்ணமைந்த
மொய்ம்புமால்வரைபுரைநெடுவானரமொய்ப்ப
விம்பர்ஞாலத்தும்வானத்துமெழுதியசீர்த்தி
நம்பனேதந்தகேசரிகடலெனநடந்தான்.

(இ - ள்.) இம்பர் ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி நம்பனே தந்த கேசரி - இந்தப்பூலோகத்திலும் மேலுலகத்திலும் நிலைபெறச்செய்த சீர்த்தியையுடைய சிறந்தவனுகிய அநுமானைப் பெற்ற கேஸரியென்னும் வா நரவீரன்,—ஐம்பது ஆய நூறுயிரகோடி எண் அமைந்த - ஐம்பது லக்ஷங் கோடித்தொகை பொருந்திய, மால் வரை புரை மொய்ம்பு நெடு வானரம் - பெருமலைகளையொத்த தோள்களையுடைய பெரிய வானரசேனை, மொய்ப்ப -

கெருங்கி(த் தன்னுடன்) வர, கடல் என நடந்தான் - சீமுத்திரம்போன்ற சேற்றத்துடன் வந்தான்; (எ - று.)

மொய்ம்பு - வலிமையையுடைய எனக் கொண்டு, மால்வரைபுரைதெடு வானரம் - பெரியமலையையொத்த பேருருவத்தையுடைய வானர மெனினு மாம். மால்வரை - குலபர்வதமுமாம். இம்பர்ஞாலம் - இங்குள்ள நிலவுலகம். அதுமான் தன்செய்கையால் மிகப்பிரசித்திபெற்றவ ஞதலால், அவனே 'இம் பர்ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி நம்பன்' என்றார். சீர்த்தி - மிகு புகழ். நம்பன் - எல்லாரும் விரும்புங்குணமுடையவன்; சிவபெருமானது அமிசமாகப் பிறந்தவ னெனினுமாம்; (நம்பன - சிவன்). தன்சேனையோடு வந்த கேஸரிக்கு, அலையோடுகூடிய சமுத்திரம் உவமையாதற்கு ஏற்கும்.

'மால்வரைதேர்', 'மைந்தனைப்பெற்றகேசரி கடலெனவந்தான்' என்றும் பாடம். (இ)

[சுவாட்சன் சேனையோடு வருதல்.]

சூ. முனியுமாமெனினருக்கனைமுரணறமுருக்குக்
தனிமைதாங்கியவுலகையுஞ்சலம்வரிற்குமைக்கு
மினியமாக்குரங்கிரண்டாயிரகோடி
யனிகமுன்வரவான்பெயர்க்கண்ணன்வந்தடைந்தான்.

(இ - ன்.) (ஒவ்வொன்றுமே) முனியும் ஆம் எனின் - கோபங்கொள்ளு மாயின், அருக்கனை முரண் அற முருக்கும் - சூரியனையும் வலிமைகெடும் படி அழிக்கும்; சலம் வரின் - அகங்காரம் பிறந்தால், தனிமை - தனிமை யாகவே [தனித்தனியாக], தாங்கிய உலகையும் குமைக்கும் - (தங்களைத்) தாங்கிக்கொண்டிருக்கின்ற உலகத்தையும் சுத்தியழிக்கும்; (இப்படிப்பட்ட வைகளான), இனிய மா குரங்கு ஈரிரண்டு ஆயிரகோடி - மனக்களிப்புடைய நாலாயிரகோடிக்கணக்கான சிறந்த வானரங்களையுடைய, அனிகம் - சேனை, முன் வர - தனக்குமுன்னே வர, ஆன் பெயர் கண்ணன் சுவாட்சனென் பவன், வந்து அடைந்தான - வந்து சேர்ந்தான; (எ - று)

சூரியனாதி கோபக்கொள்ளுமாயின் அவனையும தனித்தனியே அழிக்க வல்லவனும், அவனோடு பூமியின்மீது சினங்கொண்டாலும தகையகுத்திக் குமைக்க வல்லனவுமான நாலாயிரகோடி வானரசேனைகளுடனே சுவாட்ச னெனபவன வந்தன னென்க. சுவாகூன் - பசுவின எனபோன்ற கண்களை யுடையவனெனக் காரணப்பொருள்படும; இவன, 'கோலாங்கூலம்' எனப் படும் கொரண்டை முகசுக்குத் தலைவன்: இவனது சேனையாக வந்தன வும் அந்தச் சாதிவானரங்களே ஆனபெயராகண்ணன - சுவாட்சன்; ஆன - கோ: கண் - அகரி: ஆன்பெயராகிய 'கோ' என்னுஞ் சொல்லோடு கூடிய 'அகரி' என்னுங் கண்பெயரை யுடையவ னெனக; 'கண' எனற சொல் ஒருவகைச் ஆகுபெயரால் 'அகரி' எனபதைக் காட்டிநறது: 'கோ,' 'அகரி' என்ற இவ்விருசொல்லும் புணர்ந்து ஸமாஸத்தில் [தொகை நிலையாக வரும்போது] சுவாகூனென்று ஆகும். ஆன்பெயர்க்கண்ணன் என்பதற்கு -

'இடபாட்சன்' எனச் சிலர் பொருள் கூறுவது, முதனூலோடு மாறுபடுதலாற் பொருந்தாது.

'அருக்கனே முடிவுறமுனியும்' 'அருக்கனே மூவேயுமுருக்கும்', 'வலம் வருஞ்சலத்தால்', 'வலம்வருஞ் சலத்த', 'ஈண்டிய வாயிரகோடி' என்பன பிரதிபேதம்.

இச்செய்யுள் சில பிரதிகளில் "மண்கொள்" என்ற தொடக்கத்திச் செய்யுளுக்குப் பின் காணப்படுகின்றது: ஆயினும், இங்குக்கூறிய முறையே முதனூலுக்கு ஏற்கும். (க)

[தூமிரன் சேனையோடு வருதல்]

எ. மண்கொள்வாளொயிற்றேனத்தின் வலியனவாயிரத்
திண்கொண்மால்வரைமயிர்ப்புறத்தனவெனத்திரண்ட
கண்கொளாயிரகோடியினிரட்டியிற்கணித்த
வெண்கினீட்டங்கொண்டெழுவலித்தூமிரனிறுத்தான்.

(இ - ள்.) எறுழ் வலி தூமிரன் - மிக்கவலிமையையுடைய தூமிரனென் பவன்,—மண் கொள் வாள் எயிறு எனத்தின் வலியன - பூமியைக்குத்தி யெடுத்த ஒளிபொருந்திய கோரப்பற்களையுடைய (திருமாலின திருவவதார மான வராகம்போன்ற பலமுடையவையும், வயிரம் திண்கொள் மால் வரை மயிர் புறத்தன என திரண்ட - உறுதியையுடைய வலிமையைக்கொண்ட பெரியமலையும் ஒரு மயிர்காலிலே யடங்கக்கூடியதென்ற சொல்லும்படி மிகப்பெரிய உருவமுடையனவும், கண் கொள் ஆயிரகோடியின் இரட்டியில் கணித்த - மிக்க இடத்தைக்கொண்ட [விசாலமாகப் பரவிய] இரண்டாயிர கோடியாகக் கணக்கிடப்பட்டவையுமாகிய, எண்கின் ஈட்டம் கொண்டு - காடிகளின கூட்டத்தை உடனகொண்டு, இறுதான் - வந்துசேர்ந்தான.

தூமிரன் - ஜாம்பவானுக்கு உடனபிறந்தவனன ஒரு காடித்தலைவன்: இவனுடன் வந்த காடிப்படையில் ஒவ்வொனறுமே திருமாலின வராகவ தாரம்போனற வலிமையையும் ஒருமயிராகாலிற பெருமலையடங்கக்கூடிய பேருருவத்தையு முடையதென்க காடிக்கு மகாவராகத்தை உவமை கூறி யது, வடிவொப்புமை கருதி.இச்செய்யுளினிரண்டாமடி "நிலம்பிளிடைச் சிறுபரல்போற் பெரியமேரு திருக்குளம்பிற் கணகணப்ப" எனற வாய்பாடு பற்றி வந்தது. 'கணகொள' எனபதற்கு - கண்பார்வை செல்லக்கூடிய வளவு தூரம் பரவிய என்றுமாம்.

'மண்கொள்வாளொயிற்றேனம்' என்றதில் அடங்கியகதை:--ஒருகாலத் தில் பூமியைப் பராயாகச்சுருட்டி யெடுதத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாகனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுதோளால் மகாவராகமாகத் திருவவதரித்துக் கொன்ற பூமியைக் கோட்டாற் குத்தி யெடுதத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளின னென்பதாம்.

'வலியனவுயர்ந்த', 'வலியெனவுயர்ந்த' என்றும் பாடம். 'எறிழ்வலியிடும்பன் வந்திறுத்தான்' என்றுள்ள பாடம் முதனூலின் போக்கிற்குச் சிறவாது. (எ)

[பனசன் சேனையோடு வருதல்.]

அ. தனிவருந்தடங்கிரியெனப்பெரியவன்சலத்தா
னினையுநஞ்செனவுருமெனவடுக்குறுநிலையன்
பனசனென்பவன்பன்னிரண்டாயிரகோடிப்
புனிதவெஞ்சினவானரப்படைகொடுபுகுந்தான்.

(இ - ன்.) தனி வரும் தட கிரி என பெரியவன் - தனித்து வருகின்ற பெரியதொரு மலைபோலப் பெருந்தோற்றமுடையவனும், சலத்தால் - கோபத்தினால், நஞ்சு என - விஷம்போலவும், உரும் என - இடிபோலவும், நடுக்குறும் - (கண்டவரை) நடுங்கச்செய்கிற, நினையும் நிலையன் - (யாவரும் அஞ்சி) நினைக்கக்கூடிய தன்மையை யுடையவனுமாகிய, பனசன் என்பவன்—,பன்னிரண்டாயிரகோடி புனித வெஞ்சினம் வானரம் படைகொடி - பன்னிரண்டாயிரகோடிக் கணக்கான பரிசுத்தமாகிய கொடுங் கோபமுடைய வானர சேனையை உடன்கொண்டு, புகுந்தான் வந்துசேர்ந்தான்; (எ-று)

'நினையுநெஞ்சிற வுருமென வுறுக்குறுநிலையன்' என்ற பாடத்திற்கு - (தன்னை) நினைக்கும் மனம் அழியும்படி இடிபோல மருட்டியழிக்கின்ற தன்மையையுடையவனென்று பொருளாம். (அ)

[நீலன் சேனையோடு வருதல்.]

கூ. இடியுமாக்கடன்முழக்கமும்வெருக்கொளவிசைக்கு
முடிவில்பேர்முழக்குடையனவிசையணமுரண
கொடியகூற்றையுமொப்பனபதிற்றைந்துகோடி
நெடியவானரப்படைகொண்டுபுகுந்தனனீலன்.

(இ - ன்.) நீலன—,—இடியும் மா கடல் முழக்கமும் வெரு கொள இசைக்கும் முடிவு இல் பேர் முழக்கு உடையன - இடியோசையும் கடலிலையும் அஞ்சும்படி ஒலிக்கின்ற எல்லையில்லாத பேராரவார முடையனவும், விசையன - விசைபரப்பை யுடையனவும், முரண - வலிமையையுடையனவும், கொடிய கூற்றையும் ஒப்பன - கொடுமையான யமனைப் போன்றனவுமாகிய, பதிற்றைந்துகோடி நெடிய வானரம் படைகொண்டு - ஐம்பதுகோடி பெரிய வானரசேனையை உடன்கொண்டு, புகுந்தனன்—. ()

நீலன் - நீலநிறமுடைமைபற்றி இவனுக்கு இப்பெயர்; இவன்-அக்கினியின் குமாரன்; வானரசேனைகளெல்லாவற்றுக்கும் முதல்தலைவன். பத்து + ஐந்து:'பதிற்றைந்து; பண்புத்தொகை யாதலால், இற்றுச்சாரியை பெற்று, ஐம்பதெனப் பொருள்பட்டது.

'பேருறுக்குடையன', 'போர்முழக் குடையன்', 'பேருலகிறுக்குறும் வீஞ்சையன்முரண', 'கூற்றையுங்கொதிப்பன' என்று பிரதிபேதம். (கூ)

[தரீமுகன் சேனையோடு வருதல்.]

கo. மாகரத்தன வுரத்தன வலியன நிலைய
வேகரத்தவெங் கண்ணுமிழ்வெயிலன மலையி
னூகரத்தினும்பெரியனவாறைந்துகோடி
சாகரத்தெதாடுத்தரீமுகனென்பவன் சார்ந்தான்.

(இ - ள்) தரீமுகன் என்பவன்—,—மா கரத்தன - பருத்த கைகளை யுடையனவும், உரத்தன - வலியமார்பையுடையனவும், வலியன - தேகவலி மையுடையனவும், நிலைய - (செய்தொழிலில்) உறுதியுள்ளனவும், வேகரத்த - உக்கிரமுடையனவும், வெம் கண் உமிழ் வெயிலன - கொடுமையான கண் களிலிருந்து வெளிப்படும் கெருப்புப்பொறியையுடையனவும், மலையினூகரத்தினும் பெரியன - மலையின் வடிவத்தைக்காட்டிலும் பெருவடிவமுடையன வுமான, ஆறு ஐந்து கோடி சாகரத்தொடும் - மூப்பதுகோடி வானரசேனை சமுத்திரத்தோடும், சார்ந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று)

'தரீமுகன்' எனற பெயர் - குகைபோனற முகத்தையுடையவ னென்று பொருள்படும். வேகரம் - கொடுமை, உக்கிரம். வெயில் என்பது - வெம் மையையுடையதென்ற காரணத்தால், இங்கே, தீப்பொறியையுணர்த்திற்று. ஊகரம் - ஊகார மென்ற வடசொல்லின் குறுக்கல். ஸாகரம் - சகரகுமாரர் அறுபதினாயிரவரால் தோண்டப்பட்டதெனக் கடலுக்குக் காரணக்குறி: இவ் கே, அதுபோலப் பரந்த சேனைக்கு உவமையாகுபெயர்; ஓர்பெருந்தொகையு மாம்.

'மலையன—நிலைய', 'வெங்கனலுமிழ்வெயிலன,' 'தரிமுகனென்பவன்', 'சத முகனெனபவன்' எனபன பாடாந்தாங்கள் (கo)

[கஜன் சேனையோடு வருதல்.]

கக. இளைத்துவேறொருமாநிலம்வேண்டுமென்றிரங்க
முளைத்தமுப்பதினாயிர கோடியின்முற்றும்
விளைத்தவெஞ்சினதகரியினம்வெருவுறவிழிக்கு
பளக்கமோடுமக்கயனெனும்பெயரன்வந்தடைந்தான்.

(இ - ள்.) அகயன எனும் பெயரன் - பிரசித்தமான கஜனென்னும் பெயரையுடைய வீரன்,—வேறு ஒரு மாநிலம் வேண்டும் எனறு இளைத்து இரங்க முளைத்த - (தாம் தங்கியிருப்பதறகு இந்நிலவுலகம்போதாமையால்) வேறொரு பெரியபூமி வேண்டுமென்று வருந்தியிரங்கும்படி தோனறியவை யும், மூப்பதினாயிரகோடியின முற்றும் விளைத்த - மூப்பதினாயிரகோடிக் கணக்கினாலே உலகமுழுதும் பரவியனவுமான, வெம் சினதத அரி னம் வெருவுற விழிக்கும் - கடுங்கோபத்தையுடைய சிங்கத்தின் கூட்டமும் அஞ் சும்படி விழித்துப்பார்க்குந் தனமையுள்ள, அளக்கரோடும் - (வானரசேனை) சமுத்திரத்தோடும், வந்து அடைந்தான்—; (எ - று.)

கயன் - கஜனென்ற வடசொல்லின் விகாரம்: யானைபோன்ற வடிவுடை யவ னென்று பொருள்படும் ஒவ்வொன்றும், மிகவும் பருத்திருத்தலால்

இவனது மூப்பதினாயிரஞ்சேனை தங்குவதற்கு இந்நிலவுலகத்தின் இடம் போதாதெனது இங்கவேண்டியதாயிறதெனக. உயர்வுநவிற்சி. அளக்கர் - அளக்க அரு என்ற இரண்டுசொல விகாரப்பட்டு, இவ்வளவென்று அளத்தற் கருமையான தென்ற காரணத்தாற் சமுத்திரத்தை யுணர்த்தும்: சேனைக்கு, உவமையாகுபெயர். மூவேந்த, வீரேந்த - பெயர்கள்.

'இரேந்தவேரெருமேருவும் வேண்டுமோவென்ன', 'வெருவுறவிரிந்த,' 'அளகரோடு கவயனெனும் பெயரன', 'அளக்கரோடு மவ்வரனெனும் பெயரன்' எனபன பாடாந்தரம. (கக)

[ஜாம்பவான் சேனையோடு வருதல்.]

கஉ. ஆயிரத்தறுநூறுகோடியிற்கடையமைந்த
பாயிரப்பெருமபடைகொண்டுபரவையிற்றிரையிற்
ரூயுருத்துடனேவரத்தடந்திருவரையை
யேயுருப்புயச்சாமபனென்பவனுமவந்திறுத்தான்.

(இ - ன) நட நெடுவரையை எய் உரு புயம் சாமபன எனபவனும் - பெரிய நீண்ட மலையை பொத்த உருவதோடு கூடிய தோள்களையுடைய ஜாம்பவானும்,—பாலையின திரையில தாய உருத்து உடனே வர - சமுத்திரத்தினலைகளபோலத தாவிகோபித்துத தனனுடனே தொடர்ந்துவர, ஆயிரத்து அறுநூறுகோடியின - ஆயிரத்தறுநூறுகோடி யெனனுங்கணக்கையுடைய, கடை அமைந்த பாயிரம் பெருமபடை - இடங்களில் நிரம்பிய சிறப்பையுடைய பெரியவானரசேனையை, கொண்டு-உடன்கொண்டு, வந்து இறுத்தான - வந்து தங்கினான்; (எ - று)

பாயிரம் - விருது. தாய - 'தாவு' எனற பகுதியினடியாப்பிறந்த செய்தெனச்சம். சாம்பன=ஜாமபவாந: வடசொல்விகாரம். முன்னொருகால் பிரமன கொட்டாவிவிட்டபோது அவனது வாயினின்று கரடிவடிவமாய்த் தோனறியவன; கரடிகளுக்கு அரசன; இவன், திருமாலின திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உலகமுழுவதும் நிரம்பிய அப்பெருமானைப் பதினெட்டுமுறை பிரதட்சிணஞ்செய்தவனெனக. 'தடவரை நீடுமாயவற்புரை சரபனென்பவனும் வந்திறுத்தான்' எனறு பிரதிபேதம. (கஉ)

[துன்முகன் சேனையோடு வருதல்.]

கஊ. வகுத்ததாமரைமலரயனிசிசரர்வாழ்
ஞருத்திநீயெனப்பொருவருமபெருவலியுடையான்
பகுத்தபத்துநூறுயிரபபத்தியினிரட்டி
தொகுத்தகோடிவெம்படைகொண்டுதுன்முகன்றொடர்ந்தான்.

(இ - ன.) பொருவு அரும பெரு வலி உடையான் - ஒப்பில்லாத மிக்க வலிகையுடையவனகிய, துன்முகன - துனமுகனெனபவன, வகுத்த தாமரை மலர் அயன் - (எல்லாப்பொருள்களையும) படைப்பவனகிய (திருமாலின உந்தித்) தாமரைமலரில் தோனறிய பிரமதேவன, நிசிசரர் வாழ்தான் நீ உருத்தி

என - 'அரக்கர்களது வாழ்நரோ நீ ஒழிப்பாயாக' என்று கட்டளையிட்டதனால்,—பகுத்த பத்து நூறுயிரம் பத்தியின் - அணிவகுக்கப்பட்ட பத்துலட்சம் வரிசைகளையுடைய, தொகுத்த இரட்டிகோடி வெம் படை கொண்டு - நிறைந்த இரண்டு கோடிக்கணக்கான கொடிய வானரசேனையை உடன் கொண்டு, தொடர்ந்தான் - வந்தான்; (எ - று.)

அர்முகன் என்ற பெயர் - பகைவர்க்குப் பயங்கரமான முகத்தையுடையவனென்றும், அழகில்லாத முகத்தையுடையவனென்றும் பொருள் பெறும். பெரிய வலிமையையுடைய அர்முகன இரண்டுகோடி வானர சேனையுடன் வந்தது, பிரமன அரக்கர வாழ்நரோ யழிக்கக் கட்டளையிட்டதனால் வந்தாற்போலு மென்றவாறும். இது, தற்குறிப்பேற்றத்திற்கு உரிய உருபைப் பெறாதவந்த தற்குறிப்பேற்றவணி; வடநூலார், கம்யோத்ப்ரேக்ஷாலங்கார மென்பர். அயன்=அஜன: திருமாலினிடத்தினின்று தோன்றியவனென்ற பொருள்; அ - விஷ்ணு. நிசிசர் என்ற வடசொல் - (பகலினும்) இரவில் வலிகொண்டு திரிபவரென்ற காரணக்குறி. வாழ்+நர்=வாழ்நர்; மஹத். பத்தி=பங்க்தி; வடமொழி. இரட்டி - இரண்டு எனபது மென்றொடர் வன்றொடராய், இகரச்சாரியை பெறாதவந்தது.

'புகுத்ததீயெனப்பொருவரும்'; 'உகுத்ததீவினைபொருவதோர்', 'பதினிலிரட்டி' என்பன பாடபேதம். (கரு)

[துமிந்தன் சேனையோடு வருதல்]

கச. கோடிகோடி நூறுயிரமெண்ணெனக் குவிந்த
நீடுவெஞ்சினத்தரியினமிருபுடைநெருங்க
மூடுமும்பருமிமபரும் பூழியின்மூழ்க்த்
தீதாடிவாந்ததார்க்கிரிபுரைதுமிந்தனுந்தொடர்ந்தான்.

(இ - ன்.) தோடு இவாந்த தார் கிரி புரை துமிந்தனும் - இதழ்கள் நிறைந்த மலரமாலையை யணிந்தவனன மலையையொத்த பெருக்தோற்றமுடைய துமிந்தனென்பவனும்,—கோடி கோடி நூறுயிரம எண் என குவிந்த - பல கோடிலக்ஷக்கணக்காகக் குவிந்த, நீடு வெம் சினத்து அரிஇனம - மிகக் கொடிய கோபத்தையுடைய வானரக்கூட்டம், இரு புடை நெருங்க - (தனது) இருபக்கங்களிலும் நெருங்கவும், மூடும் உம்பரும் இம்பரும் பூழியில் மூழ்க - மேற்கவிந்த ஆகாயமும் இவ்வுலகமும் (அப்போது மேலெழுந்த) புழுதியிலே மறைந்துவிடவும், தொடர்ந்தான்—; (எ - று.)

துமிந்தன் - த்விவிதன் என்பதன் சிதைவு; இவனும் அடுத்தக்வியிற் கூறப்படுகின்ற மைந்தன் எனபவனும் - தேவவைத்தியராகளாய் இரட்டையரான அசுவினிதேவர்களின அமிசத்தாற் பிறந்த வானரர்.

இச்செய்யுளுக்கு முன்னே மேல்வருகின்ற "கையஞ்சாசரம்" (உ0), "கொய்தின்" (உக) எனற தொடக்கத்திச் செய்யுள்கள் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. (சு)

[மைந்தனும் கஜகோமுகனும் சேனையோடு வருதல்.]

கடு. இயைந்தபதது நூறுயிரப்பத்தினுங்கோடி
யுயர்ந்தவெஞ்சினவானரப்படையொடுமொருங்கீண்டு
சயந்தனக்கொருவடிவெனத்திறல்கொடிதழைத்த
மயிந்தன்மற்கசகோமுகன்றன்னெடும்வந்தான்.

(இ - ள்.) சயம தனக்கு ஒரு வடிவு என திறல்கொடி தழைத்த மயிந்தன - வெற்றிக்கு உரிய ஒரு வடிவாகுமென்று சொல்லும்படி [வெற்றியே ஒரு வடிவமெடுத்துக்கொண்டு வந்தாற்போல] பராக்கிரமத்தினாற் சிறப்புப் பெற்ற மைந்தனெனபவன்,—மல் கசகோமுகன் தன்னெடும் - மல்லயுத்தத்திற் சிறந்த கஜகோமுகனென்பவனோடும், இயைந்த பத்து நூறுயிரம் பத்து எனும் கோடி உயர்ந்த வெம் சினம் வானரம் படையொடும் - பொருந்திய நூறு லக்ஷக்கோடிக்கணக்கான மிகக்கொடிய கோபத்தையுடைய வானர சேனையோடும், ஒருங்கே - ஒருசேர, வந்தான—; (எ - று.)

மைந்தனும், கஜகோமுகனும், நூறுலக்ஷங்கோடி சேனையுடனே வந்தார்களென்பதாம் மயிந்தன் = மைந்தன: போலி. நூறுலக்ஷம் = கோடி.

'சயந்தனக்கொரு சார்வெனத்தகுஜியாற்சமைந்த', 'மயிந்தனிப்படைக் கோமகனறனெடும' என்று பிரதிபேதம். (கடு)

[குமுதன் சேனையோடு வருதல்.]

கசு. கறங்குபோல்வனகாற்றினுங்கூற்றினுங்கடிய
பிறங்குதண்டிரைக்கடல்புடைபெயர்ந்தெனப்பெயர்வ
மறங்கொள்வானரமொன்பதுகோடியெண்வகுத்த
நிறங்கொள்வெஞ்சினப்படைகொடுகுமுதனுஞ்சேர்ந்தான்.

(இ - ள்.) குமுதனும்—,—கறங்கு போல்வன - காற்றடிபோற்செல்வனவும், காற்றினும கூற்றினும் கடிய - காற்றைக்காட்டிலும் வேகமுடையனவும் யமனைப்பார்க்கிலும் கொடுமையுடையனவும, பிறங்கு தெள் திரை கடல் புடை பெயர்ந்து என பெயர்வ-விளங்குகின்ற தெளிவான அலைகளையுடைய சமுத்திரம் இடம்விட்டுப் பெயர்ந்தாற்போலப் பெயர்ந்துசெல்வனவும், ஒன்பதுகோடி எண் வகுத்த நிறம் கொள் வெம் சினம் மறம் கொள் வானரம் படை கொடு - ஒன்பதுகோடியென்று கணக்கிடப்பட்ட வலிமை மிக்க கடுங்கோபத்தைக்கொண்ட பராக்கிரமமுடைய வானரசேனையை உடன் கொண்டு, சேர்ந்தான்—; (எ - று.)

கறங்கு - (ஆகாயத்திற்) சுழன்றுசெல்வதெனக் காரணக்குறி. கடிய - இரட்டுறமொழிதல்; காற்றினுங்கடிய கூற்றினுங்கடிய எனத் தனித்தனி இயைத்துப் பொருள் காண்க. (கசு)

[பதுமகன் சேனையோடு வருதல்.]

கஎ. எழிலினழு நாறுயிர்சோடியென்றிசைந்த
பீழிநறுஞ்சினதிர்தோள்கிளர்படைகொண்டுபரவை
பூழிமீபரிஞுழலிலனுலகினிலுயர்ந்த
பூழிவிண்புகப்பதுமுகனென்பவன்புகுந்தான.

(இ - ள்.) ஊழி பரவை பேரிறம் உலவு இலன் - கற்பாந்தகாலத்திற கடல் பொங்கித் தன் கரையைவிட்டுப் பெயர்ந்துவந்தாலும் அழிவில்லாதவனுகிய, பதுமுகன் என்பவன்—,—எழின் எழு நாறுயிரகோடி என்று இசைந்த - நாற்பத்தொன்பதினாயிரகோடிகணகாகப் பொருந்திய, பாழி நல் நெடுந்தோள கிளர் படை கொண்டி - வலிமையையுடைய அழகிய நீண்ட தோள்களோடி விளங்குகிற வானரசேனையை உடனெ கொண்டு,—உலகினில் உயர்ந்த பூழி விண் புக - பூமியினினறு உயரவெழுந்த புழுதி ஆகாயத்திற் செல்லும்படி, புகுந்தான - வந்து சேர்ந்தான; (எ - று.)

எழின எழு - எழினுடனெருகிய எழு எனப்பண்புத்தொகை, எழோடு சேர்ந்த எழு [அதாவது - பதினனகு] என உம்மைத்தொகையாகவுங் கொள்ளலாம. பரவைபூழிபேரினும் உலவிலன பிரளயகாலத்திலுஞ சாவில்லாதவன. 'ஊழிபேரினுமுலவில' என்ற பாடமானபோது, படைக்கு அடைமொழியாம். பதுமுகன - பத்மமுகன் என்ற வடசொலலின திதைவு போலும. இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. (கஎ)

[இடபன் சேனையோடு வருதல்.]

கஅ. எழுமெழுமென்றுரைக்கின்றவுலகங்கடினைவையுந
தாழுங்காலத்துந்தாழ்விலாத்தடவரைக்குலங்கள்
சூழுந்தோற்றத்தவலிகொடோள்ளாயிரகோடிப்
பாழிவெம்புயத்தரியொடுமிடபனும்படர்ந்தான.

(இ - ன்-) இடபனும்—,—எழும எழும என்று உரைக்கின்ற உலகங்கள் எவையும் - பதினுன்கெனறு சொல்லப்பட்ட எல்லாவுலகங்களும், தாழும் காலத்தும் - அழிகின்ற கற்பாந்தகாலத்திலும், தாழ்வு இலா - அழிதலில்லாத, தட வரை குலங்கள் - பெரிய பர்வதங்களின் வருக்கங்கள், சூழும் - சூழ்ந்திருப்பதுபோனற, தோற்றத்த - தோற்றமுடையனவான, வலிகொள் - வலிமையைக்கொண்டுளள, பாழி வெம் புயத்தி - வலிய கொடிய தோள்களோடு கூடிய, தொள்ளாயிரகோடி அரியொடும் - தொனாயிரகோடிக்கணக்கான வானரசேனையோடும், படர்ந்தான - வந்துசேர்ந்தான்; (எ - று.)

உலகங்களெல்லாம் அழியும் பிரளயகாலத்திலும் அழியாது நிற்கும் மலைகளுண்டாயின் அம்மலைகளே அழியாததன்மையுள்ள இவ்வானரசேனைக்கு ஒப்பாகு மென இல்பொருளுவமை கூறினர். 'இரண்டனும் படர்ந்தான்' என்ற பாடத்திற்கு - (வலம்ஹம் - சங்கம், ஸம்ஹாரம் = சங்காரம் எனவருதல்

போல) ரம்ஹன் என்ற வடமொழி இரங்கினனைத் திரிந்துவந்ததாகக் கொள்க. (அ)

[தீர்க்கபாதன், விநதன், சாபன் என்னும் இவர்கள் சேனையோடு வருதல்.]

கஈ. தீர்க்கபாதனும்வினதனுஞ்சாபனுந் திரைக்கு
மாற்கருங்கடற்குயர்ந்தளமைம்முசத்தனிக
மார்க்குமெண்ணருங்கோடிகொண்டண்டமும்புறமும்
போர்க்கும்பூழியின்மறைதரமுறையினிற்புகுந்தார்.

(இ - ள்.) தீர்க்கபாதனும்—, வினதனும்—, சாபனும்—,—திரைக்கும் மால் கருங் கடற்கு உயர்ந்தஅளவு - அலையெறிகிற பெரியகருமையான சமுத்திரத்தைக்காட்டிலும் பெருக்கோற்றத்தை யுடையவனான, ஆர்க்கும் எண் அரும் - எத்திறத்தார்க்கும் எண்ணிக்கணக்கிடமுடியாத, மை முகத்து அனிகம் கோடி கொண்டு - கறுத்தமுகமுள்ள கோடிக்கணக்கான வாணரசைனியத்தை உடன்கொண்டு, அண்டமும் பாரமும் போர்க்கும் பூழியின் மறைதர - உலகவுருண்டையின் உள்ளமும் புறமும் மேலெழுந்து மூடிக்கொள்ளும் புழுதியினால் மறையும்படி, முறையினில் புகுந்தார் - ஒருவர் பின ஒருவராக வந்து சேர்ந்தார்கள்; (எ - று.)

தீர்க்கபாதன் - நீண்டகாலுடையவன். விநதன் - மிகவும் வணக்கமுடையவன். சாபன் - சாபம்போன்ற பராக்கிரமமுள்ளவன்; (சாபம்-எண்காற்புள்) இவன், பர்ஜந்ய தேவதையின் குமாரன்: (பர்ஜந்யதேவதை - மேகத்திற்கு உரியதேவன்) மைம்முகத்தனிகம் - கருங்குரங்குசளின சேனை. 'ஆர்க்குமெண்ணருங்கோடி' என்பதற்கு - ஆரவாரிக்கின்ற எண்ணமுடியாத [பல] கோடிக்கணக்கான எனறும் உரைக்கலாம்.

'ஆம்பனும் வினதனுங்திரங்கொள்', 'மார்க்கருங்கட லென்ன', 'ஆர்க்கருங்கடற்குயர்ந்தன' என்று பிரிக்கிபேதம்.

இச்செய்யுள் மூன்றும், முன்செய்யுளை இங்குமாகச் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. (கஈ)

[அநுமான் சேனையோடு வருதல்.]

உ ஏ கையஞ்சாசரமுடையவக்கடவிளக்கண்டு
மெய்யஞ்சாதவலமாதிரஞ்சிரிதினவிரிந்த
வையஞ்சாயிவரத்திரிதிருவாணரசேனை
யையஞ்சாயிரகோடிகொண்டனுமன்வந்தடைந்தான்.

(இ - ள்.) அம் கை சாசரம் உடைய அக்கடவிளை கண்டும் மெய் அஞ்சாதவன் - அழகிய ஆயிரங்கிரணங்களையுடைய அந்தச் சூரியபகவானைக் கண்டும் உடம்பில் அச்சங்கொள்ளாதவனை, அனுமன் - அநுமான்,—மாதிரம் சிறிது எனவிரிந்த - திக்கினிடம் முழுவதும் சிறிதென்னும்படி பரவியுள்

னவான், வையம் சாய்வர திரிதரு-நிலவுலகம் ஒருபுறமாகச் சாயும்படி சஞ் சரிக்கின்ற, ஐ அஞ்சு ஆயிரகோடி வானர சேனை கொண்டு இருபத்தையா யிரங் கோடித்தணக்கான வானரசேனையை உடன்கொண்டு, வந்து அடைந் தான்—; (எ - று.)—இச்செய்யுள் - தீரிபு எண்ணுஞ் சொல்லணி.

கை=கரம்; கரம் - கிரணம். சூரியன் ஆயிரங்கிரணங்களை யுடையவ னதலால், 'கையஞ் சாசரமுடைய அக்கடவுள்' எனப்பட்டான். சாசரம் - ஸாஹஸ்ர மென்ற வடசொல்லின் திதைவ. அக்கடவுள், அ - உலகறிசுட்டு. அறுமான் பிறந்தவுடனே இளஞ்சூரியனைக் கனிந்தபழமென்று கருதிச் சிறிதும் அஞ்சாது பிடிக்கப்பாய்ந்தவனதலால், அவனை 'அக்கடவுளைக் கண்டு மெய்யஞ்சாதவன்' என்றார். பூமியின் எந்தப்பகுதியில் இவ்வானர சேனை செல்கின்றதோ, அந்தப்பகுதி மிக்கபாரத்தாற் சாய்வதாயிற் றென்க.

'கையஞ்சாயுதமுடையவக்கடவுளை' என்று பிரதிபேதம். (உ0)

[நளன் சேனையோடு வருதல்.]

உக. நொய்திற்கூடியசேனை நூறுயிரகோடி
யெய்தத்தேவருமென்கொலோமுடிவென்பதெண்ண
மையற்சிந்தையாலந்தகன்மறுக்குற்றுமயங்கத்
தெய்வத்தச்சன்மெய்த்திருநெடுங்காதலன்சேர்ந்தான்.

(இ - ள்.) தெய்வத் தச்சன் மெய் திரு நெடுங் காதலன் - தேவசிற்பி யாகிய விசுவகர்மாவினது உண்மையுள்ள அழகு மிக்க குமாரனுகிய நள னென்பவன்,—தேவரும் முடிவு என்கொலோ என்பது எண்ண - தேவர் களும் '(இச்சேனையின்) எல்லை யாதோ?' என்று உணரமுடியாமற் சிந்தித் துக கொண்டிருக்கவும், அந்தகன் மையல் சிந்தையால் மறுக்குற்று மயங்க - யமனும் (இதனைக கண்டதனலாகிய) பிரமைகொண்ட மனத்தினுற் கலக் கங்கொண்டு திகைக்கவும், கொய்தின் கூடிய நூறுயிரகோடி சேனை எய்த - விரைவில் திரண்ட லக்ஷகோடிக்கணக்கான வரநரசேனை (தன்னுடனே) வர, சேர்ந்தான—; (எ - று.)

இனி, இரண்டாமடிக்கு - 'இதன் முடிவு என்னுகுமோ?' என்றதேவர் கள் சிந்திக்க என்ற உரைப்பாரு முளர். அந்தகன் - (பிராணிகட்கு) அந்தத் தைச் செய்பவனை யமனுக்குக் காரணக்குறி. தச்சன் - தகூனு; வடசொல். நளன - தெய்வத்தச்சனை விசுவகர்மாவின் மகனுய் அவனம்சமாகப்பிறந்த ஒரு வானரவீரன்: தன் கையால் எதை நீரிற்போகட்டாலும் அது மிதக்கும் படி வரம்பெற்றவன். 'மறுக்குறமயங்க' என்று பிரதிபேதம். (உக)

[தும்பன் சங்கன் முதலியோர் சேனையோடு வருதல்.]

உஉ. தும்பனுங்குலச்சங்கனுமுதலினர்குரங்கிற்
றம்பெரும்படைத்தலைவர்கடவந்தசேனை
யிப்பரிந்றவர்க்கெண்ணரிதிராகவனுவத்
தம்பெனுந்தகைக்குரியமற்றுரைப்பரிதளவே.

(இ - ள்.) கும்பனும்—, குலம் சங்கனும் - சிறந்த சங்கனென்பவனும், முதலினர் - முதலாயவர்களாகிய, குரங்கின் தம் பெரும் படை தலைவர்கள் - தமது பெரிய வானரசேனைத்தலைவர்கள், தர - (தம்முடன் திரட்டிக் கொண்டு) வர, வந்த—, தானை-வானரசேனையானது,—இம்பர் நின்றவர்க்கு எண் அரிது - இவ்வுலகத்திலுள்ளார்க்குக் கணக்கிடமுடியாதது; இராகவன் ஆவத்து அம்பு எறும் தூணிக்கு உரிய(து) - இராமபிரானது தூணீரத்திலுள்ள அம்புகளினளவாமென்று சொல்லத்தக்க அளவுடையது, (அன்றி), அளவு மற்று உரைப்பு அரிது - அச்சேனையினளவைப்பற்றி வேறுவகையாகக் கூறுதல் அருமையானது; (எ - று.)

இராமபிரானது அக்ஷயதூணீரத்தில் அம்புகள் அளவில்லாது நிறைந்திருப்பதுபோல, கும்பன் சங்கன் முதலியோரது சேனையிலும் வானரங்கள் அளவற்று நிறைந்திருந்தன வென்பதாம். ஆவம் - அம்புப்புட்டில். உரிய= உரியது. 'முதலினர்' என்றதனால், வஜ்ரஜி முதலாஞ்ஞரைக் கொள்க.

'குலச்சாம்பனும் வண்ணியுங்குரங்கின், நம்பெரும்படைத்தலைவர்களாய் வந்ததானை', 'இராகவனைத்தூ', 'அம்பெனுந்தூணிக்குரியர்', 'மாறுரைப் பரிது' என்பன பிரதிபேதம். (உஉ)

[இதுமுதல் மூன்று கவிகள்-வானரசேனைகளின் சிறப்பைத் தெரிவிப்பன.]

உ-ங. தோயினைழிஞையோரேழுநீர்சுவறிவெண்டிகளாஞ்
சாயினண்டமுமேருவுமொருங்குடன்சாயு
மேயின்மண்டலமெள்ளிடைவிடாதின்றியிருங்
காயின்வெங்கனற்கடவுளுமிரவியுங்கரியும்.

(இ - ள்.) (அங்குத்திரண்ட வானரசேனைகள்), தோயின் - அமிழ்ந்து முழுகினால், ஆழி ஏர் ஏழும் - ஏழுமகாசமுத்திரங்களும், நீர் சுவறி வெண் திகள் ஆம் - நீர்வற்றி வெண்புழுதியாய்விடும்; சாயின்-ஒருபுறஞ்சாய்த்தால், அண்டமும் - உலகவுருண்டையும், மேருவும் - மகாமேருகிரியும், ஒருங்கு உடன் சாயும் - ஒருசேர உடனே (அந்தப்பக்கமாகச்) சாய்ந்துவிடும்; எயின்-எழுந்தசைத்தால், மண் தலம் - இத்தப்பூமியின இடமானது, எள் இட இடம் இன்றி இரியும் - ஒரெள் இடுதற்கும் இடமில்லாமற் போம்; காயின் கோபங்கொள்ளுமாயின், வெம் கனல் கடவுளும் - கொடிய அக்கினியும், இரவியும் - சூரியனும், கரியும் - தியும்; (எ - று.)

இச்செய்யுள் - வானரசேனையின் மிகுதியையும், பெருவலிமையையும் பற்றிய தொடர்புபார்வுநவிறீசி: அடுத்த இரண்டு செய்யுள்களும்-இவ்வாறே. இச்செய்யுளில் எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமையால், இது - பொருளிசைமாறு அடிமறிமாற்றுப்பொருள்கோளாம்;மேல் உஙு ஆங் கவியிலும் இது காண்க.

'உடன்சரியும்', 'இன்றிரியும்' என்றும் பாடம். (உங)

உசை. எண்ணிலெண்முகமெழுபதினாயிரர்க்கியலா
வுண்ணினண்டங்களோர்பிடியுண்ணவுமுதவா
கண்ணினோக்குறிற்கண்ணுதலானீயுங்கடக்கு
மண்ணின்மேல்வந்தவானரச்சேனைபின்வரம்பே.

(இ - ள்.) மண்ணின்மேல் வந்த வானர சேனையின் வரம்பு - பூமியின் மீது ஒருங்குதிரண்டுவந்த வானரசேனையின் பேரளவானது, எண்ணின் நான்முகர் எழுபதினாயிரர்க்கு இயலா - எண்ணிக்கணக்கிடத் தொடங்கினால் எழுபதினாயிரம் பிரமர்களுக்கும் முடியாது; உண்ணின் அண்டங்கள் ஓர் பிடி உண்ணவும் உதவா - (இவ்வானரசேனைகள்) உண்ணத் தொடங்கினால் எல்லா அண்டகோளங்களும் தனித்தனி ஒவ்வொருபிடியளவாக உண்ணவும் போதமாட்டா; கண்ணின் நோக்குறின் கண்ணுதலானீயும் கடக்கும் - கண்ணினாற்பார்த்தால் நெருப்புக்கண்ணே நெற்றியிலுடையவனாகிய சிவபெருமானையும் சயிக்கும்; (எ - று.)

இவற்றைப்படைத்த பிரமன்போன்ற எழுபதினாயிரம் பிரமர்கள் ஒருங்கேதிரண்டுவந்தாலும் இச்சேனையை அளவிடமுடியா தென்பது, முதலடியிற்கூறிய பொருள். நெருப்புக்கண்ணே நெற்றியிலுடைய அழித்தற்கடவுளாகிய சிவபிரானையும் தமது கண்பார்வையாற்சயிக்குமென வானரசேனையின் பேராற்றல் மூன்றாமடியில் வெளியாம். 'கண்ணுதலானுக்குக்கடவர்' என்ற பாடத்திற்கு - முக்கண்ணனான சிவபிரானுக்கும் எண்ணிக்கணக்கிடுதற்கு விளங்காமாட்டாது என்று பொருள்.

'வானரசேனையின் வரவே' என்றும் பாடம். (உசை)

உஙி. ஓடிக்குமேல்வடமேருவைவேரொடுமோடிக்கு
மிடிக்குமேனெடுவானகமுகட்டையுமிடிக்கும்
பிடிக்குமேற்பெருங்காற்றையுங்கூற்றையும்பிடிக்குங்
குடிக்குமேற்கடலேழையுங்குடங்கையிற்குடிக்கும்.

(இ - ள்.) (அவ்வானரசேனை),—ஓடிக்கும் எல் வடமேருவை வேரோடும் ஓடிக்கும் - ஓடிக்கவேண்டுமென்று விரும்பினால் வடக்கிலுள்ள மேருபர்வதத்தையும் வேரோடு ஓடித்துவிடும்; இடிக்கும் எல் நெடு வானகம் முகட்டையும் இடிக்கும் இடிக்கவேண்டுமென்று விரும்பினால் பெரிய ஆகாசத்தின் மேல் முகட்டையும் இடித்துவிடும்; பிடிக்கும் எல் பெருங் காற்றையும் கூற்றையும் பிடிக்கும் - (கையினால்) பிடிக்கவேண்டுமென்று விரும்பினால் பெரிய காற்றையும் யமனையும் பிடித்துவிடும்; குடிக்கும் எல் கடல் ஏழையும் குடங்கையின் குடிக்கும் - பருகவேண்டுமென்று விரும்பினால் ஏழுகடல்களையும் உள்ளங்கையால் முகந்து குடித்துவிடும்; (எ - று.)

பிறரெவராலுஞ்செய்யவொண்ணாத பெருங்காரியத்தையும் எளிதிற் செய்துமுடிக்கும் இவ்வானரசேனை யென்றவாறு.

'வரன்படக்குடிக்கும்', 'குடங்கையிற்கொள்ளும்' என்று பிரதிபேதம். (உஙி)

[இவ்வாறு வானரசேனைத்தலைவர் எல்லோரும் சீரூதல்.]

உசு. ஆறபத்தெழுகோடியாம்வானரர்க்கதிபர்
கூறுதிக்கினுக்கப்புறங்குப்புறற்குரியார்
மாறில்கொற்றவனினைத்தனமுடிக்குமும்வலிய
ரூறுமிப்பெருஞ்சேனைகொண்டெளிதின்வந்துற்றார்.

(இ - ள்.) கூறு திக்கினுக்கு அப்புறம் குப்புறற்கு உரியார் - (கான்காகச்) சொல்லப்பட்ட திக்குக்களுக்கு அப்புறத்திலும் குதிக்கத்தக்க வல்லமை யுள்ளவர்களும், மாறு இல் கொற்றவன் நினைத்தன முடிக்குமும் வலியர் - ஒப்பில்லாத தங்களரசனை சுக்கிரீவன் நினைத்த காரியங்களை உடனே செய்துமுடிக்கும் மனவுறுதியுடையவர்களுமாகிய, ஆறபத்து எழுகோடி ஆம் வானராக்கு அதிபர் - அறுபத்தேழு கோடிக்கணக்கான வானரசேனைத் தலைவர்,—ஊறும் இ பெருஞ் சேனை கொண்டு - மேன்மேற் பெருகுகின்ற இத்தப் பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு, எளிதின் வந்து உற்றார் - எளிதில் வந்து சேர்ந்தார்கள்; (எ - று.)

இவ்வாறு அறுபத்தேழுகோடி வானரசேனைத்தலைவர்கள் சுக்கிரீவனது தூதுவர் வந்துசொல்லியவுடனே தம் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தன ரென்க. இரண்டாமடியால் அச்சேனைத்தலைவரது பேராற்றலும், மூன்றாமடியால் அவர்கள் தங்கள் தலைவனிடத்துக் கீழ்ப்படிந்து நடக்குந் தன்மையும் கூறப்பட்டன.

'கோடியர்', 'எளிதினில்வந்துற்றார்' என்ற பாடாந்தரம். (உசு)

[வானரசேநாதிபதிகள் வந்து சுக்கிரீவனை வணங்குதல்.]

உஎ. ஏழுமாகடற்பரப்பினும்பரப்பெனவிசைப்பச்
யாழிமாபரித்தேரவன்காதலனடிகள்
வாழிவாழியென்றுரைத்தலர்தூவினர்வணங்கி.

(இ - ள்.) அ வீரரும் - அந்த வானரசேனைத்தலைவர்களும்,—ஏழு மா கடல் பரப்பினும் பரப்பு என இசைப்ப சூழும் வானரம் படையொடு வந்து - ஏழு சமுத்திரங்களின் விஸ்தாரணத்தைக்காட்டிலும் பரவுதலுடைய தென்ற (கண்டோர்யாவரும்) கூறும்படி சூழ்ந்துள்ள வானரசேனையோடு வந்து, ஆழி மா பரி தேரவன் காதலன் அடிகள் வாழி வாழி என்று உரைத்து - 'ஒற்றைச்சக்கரத்தையும் சிறந்த குதிரைகளையுமுடைய தேரையுடையவனாகிய சூரியனது குமாரனை சுக்கிரீவனுடைய பாதங்கள் நன்றாகவாழ்க' என்று வாழ்த்தி, வணங்கி - சேவித்து, அலர் தூவினர் - மலர்களைத் தூவினார்கள்; (எ - று.)

சூரியனது தேர் - காலத்தின் வடிவமான ஒற்றைச்சக்கரத்தையும், காயத்ரி உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தஸ்

களாகிய ஏழு குதிரைகளையுமுடைய தென்பது நூற்கொள்கை. தமது பொங்கும்பரிவினாலே வானரப்படைத்தலைவர் தங்கள்தலைவனது பாதங்களை வணங்கி மலர்சொரிந்து வாழ்த்தின ரென்க. வாழி வாழி என்ற அடுக்கு - அன்பின்மிகுதிபற்றியது.

'கடற்கிரட்டியென்றி யாவருமிசைக்க,' 'இசைக்கும்,' 'தலைவருந்தி வன்றி', 'தோன்றி', 'ஆழியொன்றுடையிரவிதன்காதலனடியில்' என்ன பிரதிபேதம். (உ எ)

[சுக்கிரீவன் இராமபிரான்டத்துச்சென்று, வந்துள்ள சேனையைக் காணுமாறு வேண்டுதல்.]

உ அ. அனையதாகியசேனைவந்திறுதலும்,மருகனை
றனையனெய்தினிற்றயரதன்புதல்வனைச்சார்ந்தா
னினையமுன்னம்வந்தடைந்ததுநின்பெருஞ்சேனை
வினையின்கூற்றுவகண்டருளீயெனவிளம்பும்.

(இ - ள.) அனையது ஆகிய சேனை வந்து இறுதலும் - அப்படிப்பட்ட தான வானரசேனை வந்து நிறைந்தவளவிலே,—அருக்கன தனைய - சூரிய குமாரனான சுக்கிரீவன்,—தயரதன் புதல்வனை நொய்தினில் சார்ந்தான் - தசரதசக்கரவர்த்தியின குமாரனான இராமபிரானை விரைவாகச் சென்று சேர்ந்து,—வினையின் கூற்றுவ-தீவினைகட்கு யமன்போன்றவனே! நினையும் முனனம் நினைப்பதற்கு முன்னமே [வெகுவிரைவில], நின்பெருஞ் சேனை - நினது பெரியசேனையானது, வந்து அடைந்தது - வந்துசேர்ந்தது; நீ கண்டருள் - நீ (அதனைக்) காண்பாயாக,' என விளம்பும் - எனறுசொல்லலானான்.

தயரதன் = தஸரதன், இது, தஸ ரத எனறு பிரிந்து, பத்துதிகிலும் தடையின்றிச்செல்லுந் தேரையுடையவனெனறு பொருளபடும்; இதனால், எங்குந் தடையின்றிச்செல்லவல்லவ னெனறதாயிற்று: இதன்மை, இந் நிரனேவலியழித்த சம்பராசுரனை வதைத்தபொருட்டு அவன் மாயையினாற் சென்றவிடமெல்லாம் விடாதுதொடர்ந்து சென்றதனால் விளங்கியது. சுக்கிரீவன் தன்னை இராமபிரானுக்கு அடிமையாக நினைத்திருத்தலால், தனது சேனையை 'நின்சேனை' என்றான். வினையின் கூற்றுவன - (தன்னையடைந்தாரது) இருவினைகளைத் தொலைத்து நற்கதிபெறுவிப்பவனென்றபடி. (உ அ)

[இராமபிரான் மகிழ்ந்து சேனையைக்காணுமாறு மலைச்சிகரத்திலேறுதலும், சுக்கிரீவன் அச்சேனையினிடம் மீண்டுசேல்லுதலும்.]

உ கூ. ஐயனும்முவந்தகமெனமுகமலர்ந்தருளித்
தையலாள்வரக்கண்டனனுமெனத்தளிர்ப்பா
னெய்தினனந்தோர்நெடுவரைச்சிகரத்தினிருக்கை
வெய்யவன்மகன்பெயர்த்துமச்சேனையின்மீண்டான்.

(இ - ள்.) ஐயனும் - இராமபிரானும், உவக்து - சம்தோஷித்து, அகம் என முகம் மலர்ந்து அருளி - (தனது) மனமபோலவே முகமும் மலரப் பெற்று [உள்ளும் புறமுங்களித்து], தையலாள் வர கண்டனன் ஆம் என தளிர்ப்பான் - சீதாபிராட்டி வரகண்டவன்போல வாட்டம் நீங்கினவனாய், (வந்தசேனையைக் காணுமபொருட்டு), அங்கு ஓர் நெடி வரை சிகரத்தின் இருக்கை எய்தினன் - அங்கேயுள்ள ஒரு பெரியமலையின து உச்சியினிடத்தை யடைந்தான்; வெய்யவன மகன - சூரியகுமாரரஞ்சிய சுக்கிரீவன், பெயர்த்தும் அ சேனையில் மீண்டான - மறபடியும அந்தச் சேனையினிடத்துத் திரும்பிச்சென்றான்; (எ - று.)

வானரசேனைகள் திரணடுவருதல் சீதையைகாடியறிந்து மீட்பதற்குத் தக்கசாதனமாதலால், வானரசேனைதிரண்டதைக் கேட்டவுடன சீதையை மீட்டலாகிய காரியம் நிச்சயமாய் முடியுமெனற உறுதிபறறி, இராமபிரான் சீதையை நேரிற்கண்டதுபோலவே மகிழலாயின னெனக்க. தளிர்ததல் - சீதையைப் பிரிந்தசோகத்தால் வாட்டமடைந்த உயிர அவவாட்டம் நீங்கித் தழைத்தல். ஐயனும்முவந்து - விரித்தல.

'ஆமென முகமலர்ந்தருளி' என்றும் பாடம். (உக)

[சுக்கிரீவன் சேனையை ஒழுங்காகச் சிறிதுதூரஞ்செல்லக் கட்டளையிட்டு, படைத்தலைவருடன் ராமனிடம் வருதல்]

கூ0. அஞ்சொடை யிரண்டியோசனையகலத்ததாகிச
செஞ்செவே வெவடதிசைசின்றுதென்றிசைசெல்ல
வெஞ்சவில்விடருஞ் சேனையையழகெனவேவி
வெஞ்சினப்படைவீரரையுடன்கொண்டுமீண்டான.

(இ - ள.) (சுக்கிரீவன),--'அஞ்சொடு ஐயிரண்டு யோசனை அகலத்தது ஆகி - பதினைந்துயோசனை அகலமுடையதாய், வடதிசைசின்று தென்திசை செஞ்செவே செல்ல - வடக்குதிக்கிலிருந்து தெற்குதிக்கிறகுச் செவவையாக [நேரே] செல்லும்படி, எழுக - புறப்படுக' என - எனறு, எஞ்சல் இல் பெருஞ் சேனையை எவி - குறைவில்லாத பெரிய வானரசேனைக்குக் கட்டளையிட்டு, வெம் சினம் படை வீரரை உடன கொண்டு - கடுங்கோப முடைய வானரப்படைத்தலைவரை (த் தனனுடன்) அழைத்துக்கொண்டு, மீண்டான் - (இராமபிரானிடம்) திரும்பிவந்தான்; (எ - று.)

இராமபிரானுக்குச் சேனையின தோற்றததை நன்கு தெரிவிததற்குச் சுக்கிரீவன வடகருதிதெறகாகச் சிறிதுதூரம சென்று திரும்பும்படி சேனைக்குக்கட்டளையிட்டன னெனக்க. செஞ்செவே - மிகச்செவவையாக. எழுகென் - தொகுத்தல். யோசனை செல்ல எழுக என்று இயைத்து உரைப்பினுமாம்.

'அகலமதாக' எனனும் பாடம. (கூ0)

[இராமபிரானுக்குச் சுக்கிரீவன் சேனைத்தலைவரைக் காட்டுதலும், சேனைகள் செல்லுதலும்.]

கக. மீண்டிராமனையடைந்திகல்வென்றிவேல்வீர
காண்டிநீயெனவான்முறைதெரிவுறக்காட்டி
யாண்டிருந்தனரந்தமிழ்த்தெரிந்தையன்மீற
மீண்டுசேனைபாலெய்கெனவிடாரகதென்ன.

(இ - ள்.) (சுக்கிரீவன்),—மீண்டு இராமனை அடைந்து - திரும்பவும் இராமபிரானைச்சேர்ந்து, (அவனைநோக்கி), 'இகல் வென்றி வேல் வீர - பராக்கிரமத்தையும் வெற்றியையுமுடைய வேலாயுதத்தையேந்திய வீரனே! நீ காண்டி - நீ காண்பாயாக,' எனல் - என்று, வரல் முறை தெரிவுற காட்டி - (சேனைத்தலைவர்களை) முறைமையாகத் தெரியுமபடி (அவனுக்குக்) காண்பித்து, ஆண்டு இருந்தனர் - அவ்விடத்தில் [ஸ்ரீராமனருகில்] இருந்தான்; (அப்போது), ஈண்டு சேனை - திரண்ட அந்த வானரசேனையானது, எறிபால் கடல் நெறி படர்ந்து எனல - அலையெறிகின்ற பாற்கடலானது வழியிற் சென்றதுபோல, ஆதது உலாவுதல் எழுந்தது - பேராரவாரஞ் செய்து கொண்டு புறப்பட்டது; (எ - று)—ஐ சாரியை. அனறு, எ - ஈற்றசை.

சுக்கிரீவன சேனைத்தலைவர்களுடைய வரலாறுகளை இராமபிரானுக்குச் செவ்வையாக விளங்கச் சொல்லினை னைனபா, 'வரன்முறை தெரிவுறக் காட்டி' எனறார். ஆதது உலாவுதல் - ஒருபொருட்பனமொழி. வானரசேனைக்குப் பாற்கடலுவமை - வெண்ணிறத்திறகும பரப்பிற்கும அணியணியாகச் செல்வதறகும் பேராரவாரஞ்செய்தற்குமெனக. தந்துறிப்பேற்றவணி; இல் பொருளுவமையணி யெனபாரு முளர். 'ஈண்டுசேனைய யெறிகடனெறி படர்ந்தென்ன' என்ற பாடத்திறகு, எறிகடலானது சேனையின வடிவத்தைக்கொண்டு நெறிபடர்ந்தாற்போல எலப் பொருள்காண்க.

'ஆண்டிருந்தனரந்தமிழ்த்துவகையிஞ்சி', 'ஈண்டு சேனையால' என்றும் பாடம். (கக)

[அப்போழது எழுந்ததூளியின் வருணனை.]

கஉ. எட்டுத்திக்கையுமிருநிலப்பரப்பையுமிமைமேயார்
வட்டவிண்ணையுமறிகடலனைத்தையுமறையத்
தொட்டுமேலெழுந்தோங்கியதூளியிற்சூழி
யிட்டுச்செம்மியநிறைகுடமொத்ததிவ்வண்டம்.

(இ - ன்.) எட்டு திக்கையும - எட்டுத்திக்குக்களையும், இரு நிலம் பரப்பையும - பெரியபூமியின் பரந்த இடம்முழுவதையும், இமையோர் வட்டம் விண்ணையும - தேவர்கள் வசிக்கின்ற வட்டவடிவமான மேலுலகத்தையும், மறி கடல் அனைதையும - அலைகள் மடங்கப்பெற்ற ஏழுகடல்களையும், மறைய - மறையும்படி, (சேனைகள்செல்வதனால்), தொட்டு மேல் எழுந்து ஓங்கிய - (பூமி) தொடங்கி மேலெழுந்து பரந்த, தூளியின் - புழுதியினால்,—

இ அண்டம் - இந்த அண்டகோளமானது, பூழி இட்டு செம்மிய நிறைகுடம் ஒத்தது - புழுதியை யிட்டுநிறைத்த பூர்ணகும்பத்தைப்போன்றது; (எ று.)

புழுதியால் நிறைந்த நிறைகுடத்தைத் தூளியால் நிரம்பிய அண்ட கோளத்திற்கு உவமைகூறினார்; தொடர்புயர்வுநவிற்சியை அங்ஙமாகக் கொண்டு வந்த தன்மைத்தற்குறிப்பேற்றஅவயவமணி

'மறைத்த, வொட்டமேலெழுந்தோங்கியதூளியால்', 'அட்டி', 'செம்பியல்' என்பன பிரதிபேதம். (நஉ)

[பெருந்திரளான சேனையின் வருணனை]

நஙு. அத்தி யொப்பெனின்னவையுணர்ந்தவருளரால்
விக்தகர்க்கினியுரைக்கலாமுவமைவேறியாதோ
பத்திரட்டிநன்பகலிரவொருவலர்பார்ப்பா
சேத்திறத்தினுநடுவுகண்டிலர்முடிவெவரோ.

(இ - ள்.) அத்தி ஒப்பு எனின்-(இச்சேனைத்திரளுக்குச்) சமுத்திரங்கள் உவமையாகுமென்போமாஞல், அவ்வவை உணர்ந்தவர் உளர் - அக்கடல் களினளவை (இவ்வளவென்று) கண்டறிந்தவரும் உள்ளார்; (இச்சேனையின் திரளையோ கண்டறிந்தவர் எவருமில்லை); இனி விக்தகர்க்கு உரைக்கல் ஆம் உவமை வேறு யாதோ - இவ்வாறனபிறபு அறிவுடையாரால் (இச் சேனைக்கு) எடுத்துக்கூறத்தகும் உவமை வேறு யாது உளது? [எதுவுமில்லை யெனறபடி]; பத்து இரட்டி நல் பகல் இரவு ஒருவலர் பார்ப்பார் - இருபது நாள் நல்லபகலிலும் இரவிலும் இடைவிடாமற் பார்ப்பவராகிய ராமலக்ஷ்மணர், எ திறத்தினும் - எவ்வகையாலும், நடுவு கண்டிலர் - (இச்சேனையின்) நடுவையுங் காணுதவராயினர்: முடிவு எவரோ - (இதன்) முடிவெல்லையைக் காண்பது எவராவரோ? (எ - று.)—ஆல் - சாற்றசை.

மகா புத்திமான்களான ராமலக்ஷ்மணர்கள் இருபதுநாள் அல்லும்பகலும் இடைவிடாமற்பார்த்தும் இச்சேனையின் நடுவெல்லையைக் காணுதவ ராயினர்; இவ்வாறாக, இனி இதன் முடிவெல்லையைக் காணமுடியுமோ? எனத் தண்டாபூபிதா நியாயமென்னுங் கைமுதிகநியாயந் தோன்றக் கூறி யிருப்பது தொடர்நிலைச்சேய்யுட் பொருட்பேறணி. அத்தி - அப்தி: வட சொல். நீர் தங்குமிடம் விக்தகர்க்கு நான்கருவுரு கருத்தாப்பொருளில்வந்தது.

'அசைந்தவருளரால்', 'அளந்தறிவோனும்', 'விக்தகர்க்கு மீதறைந்திடு மளவுவேறியாதோ,' 'ஒருவலன பார்த்தான்', 'காண்கிலர்', 'கண்டிலன', 'முடிவுவெண்ணே' எனபன பிரதிபேதம். (நஙு)

[இராமபிரான் லக்ஷ்மணனைநோக்கி ஒன்றுகூறத் தொடங்குதல்]

நச. விண்ணிற்றீம்புனலுலகத்தினுவெற்றி
யெண்ணிற்றானலதிதாப்பிலனெனநின்றவிபாமன
கண்ணிற்கிடைதடிற்கல்லியின்குனாத்திற்கருதி
யண்ணற்றம்பிபைபோக்கினனு மைசெய்வதானுன்.

(இ - ள்.) வெற்றி எண்ணில் - சயிக்குந்திறமைபற்றி ஆலோசித்தால், தான் அலது - தானே தனக்கு உவமையாவதன்றி, விண்ணில் - மேலுலகத்திலும், தீம்புனல் உலகத்தில் - இனிய கடல்சூழ்ந்த நிலவுலகத்திலும், நாகரின் - நாகர்கள் வசிக்கின்ற பாதாளலோகத்திலும், ஒப்பு இலன் என - வேறோருபமானப்பொருளைப் பெறாதவனென்று சொல்லும்படி, நின்ற—, இராமன்—,—கண்ணினை - (தன்) கண்களிலும், சிந்தையின் - மனத்திலும், கல்வியின் - நூலறிவிலும், ஞானத்தின் - இயற்கையறிவிலும், கருதி - நன்றாக ஆலோசித்துப்பார்த்து, அண்ணல் தம்பியை நோக்கினன் உரை செய்வது ஆனன் - பெருமையையுடைய இளையபெருமாளைப்பார்த்து (அச்சேனையைப்பற்றிக்) கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

'தீம்' என்ற உரிச்சொல், உலகத்திற்கு அடைமொழி. திருமால் ஸ்ரீராமனாகத்திருவவதரித்தது இவ்வுலகத்திலே யாதலால், இவ்வடைமொழி ஏற்கும். நாகர் என்ற சொல் - தனிப்பாகுபெயராய்ப் பாதாளலோகத்தை யுணர்த்திற்று: நாகராவார் - படமும் வாலு முடையராய் மனிதர்போன்ற உருவமும் தெய்வத்தன்மையு முடைய ஒரு சர்ப்பசாதியார்.

'தென்கடலுலகத்தில்', 'நாகரின்வேறோர்', 'நோக்கிநின்று' என்ற பாடாந்தரம். (நூ)

[இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்; இராமபிரான் வார்த்தை]

நூ. அடல்கொண்டோங்கிய சேனைக்குநாமும்மற்றிவர
ஓடல்கண்டோமினிமுடிவுளகாணுமாறுளதோ
மடல்கொண்டோங்கிவலங்கலாய்மண்ணிடைமாக்கள்
கடல்கண்டோமென்பர்யாவரேமுடிவுறக்கண்டார்.

(இ - ள்.) மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய் - இதழ்கள் நிறைந்து சிறந்த மாலையை யணிந்தவனே! நாமும்—, நம் அறிவால் - நமது புத்தியினால், அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு உடல் கண்டோம் - வலிமையைப் பெற்றுச்சிறந்துள்ள இவ்வானரசேனையின்சரித்தை[நடவிடத்தை]ஒருவாறு பார்த்தோம்; (அல்லாமல்), இனி உளமுடிவு காணும் ஆறு உளதோ - இனி (நம்மால்) இதற்கு உள்ள முடிவெல்லையைக் கண்டறியும் வகைதான் உள்ளதோ? மண்ணிடை - இந்நிலவுலகத்தில், மாக்கள் - மனிதர்கள், கடல் கண்டோம் என்பர் - சமுத்திரத்தைப் பார்த்தோமென்று சொல்வார்கள்; (அல்லாமல்), முடிவு உற கண்டார் யாவரே - அக்கடலின் முடிவெல்லையை நன்றாகக்கண்டறிந்தவர் எவர்தாம்? (எ - று.)

சமுத்திரத்தைக் காண்பவர் அதன் மேல்தோற்றத்தைமாத்திரம் காண்பரேயன்றி அதன்முடிவெல்லையைக் காணமாட்டார்கள்: அதுபோலவே நாமும் இச்சேனைசமுத்திரத்தின் வடிவத்தைமாத்திரம் காண்போமேயன்றி இதன் முடிவெல்லையைக் காணமுடியா தென்பதாம்; தொடர்மொழிதுவமையணி; வடநூலார் ப்ரதிவஸ்தூபமாலங்கார மென்பர். (பொருத்தவமை

பிம்பபிரதிபிம்பபாவந்தோன்றக் கூறப்படாமையால், எடுத்துக்காட்டவேமை யணியாகாது.)

'மடல்கொண்டோங்கிய வலங்கலான்' என்ற பாடம், இராமபிரா னென்று பொருள்பட்டு, மேல் கூ - ஆஞ்செய்யுளில்வரும் 'என்ன' என் பதற்கு எழுவாயாகத் தொடரும். (கூ)

கூசு. ஈசன்மேனியையிரைகதுதிசைகளோடீண்டிவ்
வாகில்சேனையையம்பெரும்பூதத்தையறிவைப்
பேசும்பேர்கிளைச்சமயங்கள்பிணக்குறும்பிணக்கை,
வாசமாலையாவரேமுடிவெண்ணவல்லார்.

(இ - ள்.) வாசம் மாலையாய் - வாசனையுடைய மாலையைத் தரித்தவனே! ஈசன் மேனியை - ஸர்வேசுவரனான எம்பெருமானது திருமேனியையும், ஈர் ஐந்து திசைகளோ - பத்துத்திக்குக்களையும், ஐம்பெரும் பூதத்தை - பஞ்ச மகாபூதங்களையும், அறிவை - (உலகத்திலுள்ளாரது) ஞாண்றிவையும், பேசும் பேர்கிளை - பேசுகின்ற பேர்களையுடைய, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை - மதங்கள் ஒன்றோடொன்று மாறுபடுகின்ற மாறுபாட்டையும், ஈண்டு இ ஆசு இல் சேனை - திரண்டுள்ள குற்றமற்ற இந்த வானரசேனை யையும், யாவரே முடிவு எண்ணவல்லார் - எவர்தாம் முடிவைக் கணக்கிட வல்லவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

உபமேயமாகிய சேனையையும் உபமானமாகிய ஈசன்மேனி முதலியவற் றையும் ஒருங்கே ஒருபொதுத்தன்மையைக் கொண்டு முடியுமாறு கூறியது, ஒப்புமைக் கூட்டவணியின் பாற்படும்; இதனை, வடநூலார் அல்யயோதி தாலங்கார மென்பர். கடவுள் எங்குமுளனாதலால், ஸர்வவியாபியான அவ னது திருமேனியை அளவிட்டு அறியமுடியாது; பத்துத்திசைகளும் எல்லை யில்லாமற் பரவியிருத்தலால், அவற்றை இவ்வளவென்று வரையறுப்பது அசாத்தியம். ஐம்பெரும்பூதங்கள் உலகமுழுவதும் நிரம்பியிருத்தலால், அவற் றிற்கும் ஓரளவில்லை; அறிவு பலரிடத்திலும் புகுதிபுதிதாக ஈட்பமாகக் காணப்படுமாதலின், அதற்கும் ஓரில்லையில்லையாம். ஒருவர் ஒன்று பேசி னால் மற்றொருவர் அதன்மேற்பேச இவ்வாறே மேன்மேல் இடங்கொடுத்துச் செல்லுதலால், பேசும் பேச்சுக்கும் அளவில்லை. 'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின், அன்றென்ப வாறுசமயத்தார்', "மதிலிலிகற்பாற் பிணங்குஞ்சமயம் பலபலவாகி" என்றபடி மதங்கள் மிகப்பலவாயிருத்த லால், சமயங்கள் பிணக்குறும்பிணக்கும் இவ்வளவுதானென்று வரையறை செய்ய முடியாதென்க. (கூ)

கூஎ. இன்னசேனையைமுடிவுறவிருத்திவிரைக்கிப்
பின்னைக்காரியம்புரிதுமேனள்பலபெயரு
முன்னிச்செய்கைமேலொருப்படலுறுவதையுறு தி
யென்னவீரணிக்கைதொழுகிளையவனியம்பும்.

(இ - ன்-) இன்ன சேனையை - இத்தப்பெருஞ்சேனையை, இவண் இருந்து முடிவு உற நோக்கி - இங்கேயிருந்து முழுவதும் நன்றாகப்பார்த்து, பின்னை - அதன்பிறகு, காரியம் புரிதும் எல் - (நமது) காரியத்தைச் செய்வோமானால், நாள் பல பெயரும் - பல நாள்கள் கழிந்துபோம்; உன்னி - (இனிச்செய்யவேண்டியதொழிலை) ஆலோசித்து, செய்கைமேல் ஒருப்படல் உறவதே-செய்யவேண்டிய தொழிலின்மேல் மனமொருமித்தலைப் பொருந்துவதே, உறுதி - நன்மைதருவதாகும், என்ன - எனறு (இராமபிரான்) கூற, இளையவன் - இளையபெருமான், வீரனே கைதொழுது - இராமபிரானைக் கைகூப்பி வணங்கி, இயம்பும் - சொல்லத்தொடங்குவான்; (எ - று)— அதனை அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

மேற் இரண்டு செய்யுள்களே மாத்திரம் இராமபிரான் வார்த்தையாகக் கொண்டு, இச்செய்யுள் முதல் இளையபெருமாளது வார்த்தையாகக் கொள்வாரு முளர். 'பின்னர்க்காரியம் பார்த்தமேல்', 'முன்னைச்செய்கை மேலொருப்படல் முன்னுவது', 'விளம்பும்' என்பன பாடாந்தரங்கள். (கூஎ)

[இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்: லக்ஷ்மணன் வார்த்தை.]

கூஅ. யாவர்தெவ்வுலகத்தினின்னிங்ஙவர்க்கியற்ற
லாவதாகுவதரியதொன்றுளதெனலாமே
தேவர்தேவியைத்தேடுவதன்பதுசிறிதாற்
பாவந்தோற்றதுதருமமேவென்றதிப்படையால்.

(இ - ன்.) தேவ - தேவனே! ஈங்கு இவர்க்கு - இங்குள்ள இவ்வானர வீரர்கட்கு, எ உலகத்தினின் - எந்த உலகத்தில், இயற்றல் யாவது - செய்து முடிக்கவேண்டிய தொழில எதுவோ, ஆகுவது - ஆகவேண்டிய அத்தொழில், ஆவது - எளிதாகச்செய்து முடிவதாகும்; அரியதுஒன்று உளது எனல் ஆமே - (இவர்கு) அருமையானதொரு காரியம் உண்டென்று சொல்லலாமோ? தேவியை தேடுவது எனபது சிறிது - சீதாபிராட்டியை காடியறிதலென்பது (இவர்கள் சாமாதியத்திற்கு) அற்பமானதொரு காரியமாகும்; இ படையால் - இந்தச்சேனையினால், பாவம் தோற்றது - பாவம் தோல்வியடைந்தது; தருமமே வெனறது - தருமமே வெற்றிகொண்டது; (எ - று.)— ஆல் - ஈற்றசை.

எவ்வுலகத்தினில் எக்காரியம் செய்யவேண்டுமானாலும் இவர்க்கு எளிதில் முடியுமெனபது, முன்னிரண்டடியின கருத்து இவ்வாறான பெருஞ்சேனை சமக்குத்தானேபுரியவந்ததனால், நல்லதமுடையாமே சயிக்கப் பாவிகளாகிய அரக்கர் தோற்பது நிச்சயமென்பது, ஈற்றடியால் விளங்கும். இறுதியடி - முறண்தொடை.

'ஆவதெவ வுலகத்தவரானுவரன்றே' என்றும் பாடம். (கூஅ)

கூக. தரங்கநீரெழுந்தாமரைநான்முகன்றந்த
வரங்கொள்பேருலகத்தினின்மற்றெண்ணுயிர்க்
ளுரங்கொண்மால்வரையுயிர்படைதிதெழுந்தனவொக்கு
முரங்கின்மாப்படைக்குறையிடப்படைத்தனன்கொல்லை

(இ - ன்.) தாங்கம் நீர் எழும் தாமரை மான்முகன - அலைகளையுடைய நீரில் முளைக்கு மியல்புள்ள தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன்,—தந்த - (தான்)படைத்த, வரம் கொள் பேர் உலகத்தினில் - மேன்மையைக் கொண்ட இந்தப்பெரிய உலகத்திலேயுள்ள, மற்றை மன் உயிர்கள் - மேலே பெற்ற மற்றைப்பிராணிகளோ,—உயிர் படைத்து எழுந்தன உரம் கொள் மால் வரை ஒக்கும் குரங்கின மா படைக்கு - உயிரைப்பெற்றெழுந்தனவாகிய வலிமைகொண்ட பெருமலைகளைப்போன்ற பெரிய இந்த வானரசேனைக்கு, உறை இட - உறையிட்டுக்கணக்கிடுதற்கு, படைத்தனன் கொல் ஆம்-சிருஷ்டித்தானபோலும்; (எ - று.)

உறையிடுதலாவது - பொருள்களைக் கணக்கிடும்போது ஞாபகத்தின் பொருட்டு ஒவ்வொரு பெருந்தொகைக்கு ஒன்றாக இடுவதோர் இலக்கக் குறிப்பு. மற்றையுயிர்களின் தொகை இச்சேனையிலுள்ள வானரங்களின் தொகைக்கு உறையிடுதற்கென்றே படைக்கப்பட்டனபோலுமென அவ்வானரங்களின் வரம்பின்மையை விளக்கியவாறும்; "இராமன்கை, யம்பினுதவும்படைத்தலேவ ரவரைநோக்கி னிவரக்கர், வம்பின்மூலையா யுறையிட வும்போதார் கணக்குவரம்புண்டோ" என மேல் வருவதுங் காண்க. தற்குறிப்பேற்றவணி. 'தரங்க நீரெழும' என்ற தொடர் - தாமரைக்கு இயற்கையடைமொழி. வானரங்கள் மலைகள் உயிர்பெற்றெழுந்தாற் போலுமென இல் பொருளுவமையாகக் கூறியது - ஒவ்வொரு வானரத்தின் பெருந்தோற்றம் முதலியவற்றைக் கருதியெனக. ஒகரம் - பெயரெச்சம்.

'மன்னுயிரெல்லாம்' என்னும் பாடம். (கூ)

சக. ஈண்டுதாழ்க்கின்றதென்னினியெண்டிசைமருங்குந்
தேண்டுவார்களேவல்லியிற்செலுத்துவதல்லா
னீண்டநூல்வலாயென்றனனிளையவனெடியோன்
பூண்டதேரவன்காதலற்கொருமொழிபுகலும.

(இ - ன்.) நீண்ட நூல் வலாய் - பெரிய நூல்களில் வல்லவனே! எண்திசை மருங்கும் - எட்டுதிக்குகளினிடங்களிலும், தேண்டுவார்களே - (சீதாபிராட்டியைத்) தேடுதற்கு உரியவர்களே, வல்லியின செலுத்துவது அல்லால் - விரைவாகச் செலுத்துவதல்லாமல், இனி ஈண்டு தாழ்க்கின்றது என்-இனிமேலும் இங்கிருந்து தாமதிப்பது எதற்காக? என்றனன் இளையவன் - என்று இளையபெருமாள் கூறினனாக; (உடனே), நெடியோன் - பெருமையையுடையவனாகிய இராமபிரான், பூண்ட தேரவன் காதலற்கு - அலங்கரித்த தேரையுடையவனான சுரியனது புதல்வனாகிய சுக்கிரீவனுக்கு, ஒரு மொழி புகலும் - ஒருவார்த்தை சொல்பவனானான்: (எ - று.).

தேண்டுவார் - விரித்தல்- 'ஒருமொழிபுகல்வான்' என்னும் பாடம். (சஎ)

தாரகாண்படலம் முற்றிற்று.

பத்தாவது

நாடவிட்டபடலம்.

இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவமகாராஜன் வானரப்படைத்தலை வர்களைச் சீதாபிராட்டியைத் தேடும்படி எல்லாத்திசைகளிலும் விடுத்த செய்தியையுணர்த்தும் பாகம். சுக்கிரீவமகாராஜன் இராமபிரானுக்குச் சேனை யின் அளவைத் தெரிவித்து, பிறகில வானரவீரரைத்தேர்ந்தெடுத்து தனித் தனி இரண்டுவெள்ளம் வானரசேனையோடு கானகுதிசைகளிலுஞ் சென்று ஒருமாதகாலத்திற்குட் சீதாபிராட்டியைத்தேடித திருமபிவருமாறு கட்டளை யிட்டு, அறுமான முதலியோரை நோக்கித தென்திசையிறசெனறு தேட வேண்டிய வழிகளை யுணாத்தியமையும், இராமபிரான அறுமானிடத்துச் சீதையின் நல்லிலக்கணங்களையும அவளிடத்து அடையாளமாகச் சொல்லு மாறு முன் நிகழ்ந்த சில வரலாறுகளையும சொல்லிச் சீதாபிராட்டிக்கு நம்புத லுண்டாகுமாறு காட்டுதறகுத தனது கணையாழி கொடுத்தமையும முதலி யன இப்படலத்திற் கூறப்படுகின்றன.

[இராமபிரான் வாநரசேனையினளவைப்பற்றிச் சுக்கிரீவனை வினவுதல்.]

க. வகைய மானமு மாறெதிர்ந் தாற்றுறு
பகையு மின்றிநி னைருப ரநதெழு
தகைவில் சேனைக வுதிச மைநகீதா
தொகையு முண்டுகொ லோவெனச் சொலலினனை.

(இ - ள்.) (இராமபிரான் சுகிரீவனை நோககி), 'வகையும - அணி வகுப்பும், மானமும - தேகாபிமானமும, மாறு எதிர்ந்து ஆறறுற பகை யும - (தமகுள ஒனறறகு ஒனறு) மாறுபாடுகொண்டு எதிர்த்துப்போர செய்யும பகைமையும, இனறி - இலலாமல, நிரைந்து பாந்து எழு - பெருங் கூட்டமாகத நிரண்டெழுந்தனள, தகைவு இல சேனைகு - (பிறரால) தகைதலில்லாத [தகையமுடியாத] இநத வாநரசேனைகு, அவறறி சமைந்தது ஓர் தொகையும - அளவாக ஏற்பட்டதொரு கணக்கும, உணங்கொல்ஒ-ளள தோ?' என சொல்லினன - எனறு வினவினன; (எ - று.)

''பதநிரட்டி நண்பகலிர வொருவலாபார்ப்பா, ரெத்திறத்தினு நடுவுகண் டிலர் முடிவெவனே'' எனறவாறு தானும் இலக்குமணனுமாக இருபதுகாள் இடைவிடாதுகண்டும் அச்சேனையின நடுவரையிலுங்கூடக காணுதலஞ்சின மையால், இராமபிரான் அச்சேனைகட்கெல்லாந்தலைவனுகிய சுக்கிரீவமகா ராஜனே இவவாறு வினவலாயின னெனக. இச்சேனையிலுள்ள ஒவவொரு வாநரமும் தேகாபிமானமினறி இராசகாரியத்தில் தனது உயிரையும்கொடுக் கச் சித்தமான தென்பான் 'மானமுமினறி' எனறும், ஒனறறகொன்று ஒற்று மையுள்ள தென்பான் 'மாறெதிர்ந்தாற்றுறு பகையுமினறி' எனறுங கூறி னன். மானமின்றி - குற்றமில்லாமல் என்றும, உவமையில்லாமல் என்றும்

கூறினமாம். 'மாறெதிர்ந்தாற்றாறு பகையுமின்றி' என்பதற்கு - (தம்மோடு) மாறுபட்டுப் போர்செய்யும் பகைவ ரில்லாமல் என்று பொருள்கூறலாகாது. பின்னே, 'தகைவில்' என வருதலால்.

'நிரந்துபரந்தெழு,' 'அமைதிசமைந்தோர்.' 'அறுதிசமைந்தோர்,' 'அவதிசமைத்தோர்,' 'அலகுசமைந்தோர்' எனபன பாடாந்தரங்கள்.

இதுமுதல் இருபதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீர் ஒன்று மாச்சீரும், மற்றை மூனறும் விளச்சீர்களுமாகிய அளவடி காணகுகொண்ட கலிவிருத்தங்கள். (க)

[இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்: சுக்கிரீவனது மறுமொழி.]

உ. வற்றவெள்ளமெழுபதினிற்றவென்
முற்றலாளரறிவினமைத்தோர்
மாற்றமுண்டதுவல்லதுமற்றுமோர்
தோற்றமென்றிதறகெண்ணுமுன்சொல்லுமோ.

(இ - ள்.) (சுக்கிரீவன் இராமபிரானைநோகக்கி கூறுவான் :—) '(இந்த வாநரசேனையின் தொகுதி), எற்ற வெள்ளம் எழுபதின் இற்ற(து) - பொருந்திய எழுபது வெளளமெனனுக தொகையினால் முடிந்திருக்கின்றது', என்று —, ஆறறலாளா அறிவின அமைதததி ஓர் மாறறம் உண்டு - வல்லமையுள்ளவரது அறிவினால் ஆராய்ந்து சொல்லப்பட்டதாகிய ஒரு வார்த்தை உள்ளது; அது அல்லது - அவ்வாறு சொல்லியதல்லாமல், இதறகு - இச் சேனைக்கு, மற்றும் ஓர் தோற்றம் எனறு எண்ணும் முன சொலலுமோ - வேறும் ஒரு தோனறிய அளவு உளளதென்று சொல்லகூடிய தொகையும் இனிச் சொல்லபபடுமோ? (எ - று.)

இச்சேனையின் தொகுதியைப்பற்றிப் பெரியோர் எழுபது வெள்ள மென்று கூறியதை உடனபட வேண்டுமேயனறி, ஒருவாராலும இவ்வள வென்று கணககிட்டுக கூறுவது எவ்வாறாலும இயலா தெனபதாம். வெள்ளம் - ஓர் பெருந்தொகை; மிகப்பல அகெளஹிணி கொண்டது; (யானை ஒனறும, தேர் ஒனறும, குதிரை மூனறும, காலாள் ஐந்தும கொண்டது - பத்தி யெனப்படும; அப்பத்தி மூன்றுபங்கு கொண்டது - சேனைமுகம்; சேனைமுகம் மூனறு - குல்மம்; குல்மம மூனறு - கணம; கணம் மூனறு வாஹினி; வாஹினி மூனறு - பிரதனை; பிரதனை மூன்று - சமூ; சமூ மூனறு - அனீகினி; அனீகினிபத்து - அகெளஹிணி; அகெளஹிணி எட்டுப்பங்கு கொண்டது - ஏகம; ஏகம் எட்டு - கோடி; கோடி எட்டு - சங்கம்; சங்கம எட்டு - விந்தம்; விந்தம் எட்டு - குமுதம்; குமுதம் எட்டு பதுமம; பதுமம் எட்டு - நாடு; நாடு எட்டு - சமுத்திரம்; அந்தச் சமுத்திரம் எட்டுப்பங்கு கொண்டது - வெள்ளம் எனக் காண்க.)

இற்ற -. இற்றது எனபதன் விகாரம். 'ஆற்றலாளர்' என்றது-மற்றையோ ரறிவிற்கு எட்டாத பெரு விஷயங்களையும் கையிலங்கு நெல்லிக்கனிபோலத் தமது நுண்ணுணர்வினால் உணரவல்ல தவலலிமை யுடையோரை.

'ஏற்றவென்ன மெழுபதென்றேமறை, யாற்றலாள னறிவிலைமந்தரோர்' என்ற பாடத்துக்கு - வாநரத்தின் தொகை எழுபதுவெள்ளமென்று வேத நூலில்வல்ல பிரமன் தனது அறிவினுல் ஆராய்ந்து சொன்னதொரு வார்த்தை யுளது; முன்னுளில் ஏற்பட்ட அக்கணக்கு அல்லாமல் பிறகும் பல வாநரங் கள் பிறந்திருக்கின்ற காரணத்தினுல், இப்போது இங்குள்ள இவ் வாநர சேனையைக் குறித்து அப்போதே இவ்வளவென்று தொகை சொல்லப்பட் டிருக்கமாட்டா தன்றே? என்று பொருள் காண்க. (தோற்றம் - பிறப்பு.)

'எண்ணிமுன்சொல்வரோ,' 'தோற்றமென்னிதற்கென்று முன்சொல் லுமோ' என்பன - பிரதிபேதம். (உ)

கூ. ஆறுபத்தெழுகோடியனீகருக்
கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன்
கூறுசேனைப்பதிகொடுங்கூற்றையு
நீறுசெய்திடுநீலனென்றோதினை.

(இ - ன்.) அனீகருக்கு - இச்சேனையிலுள்ள வாநரர்கட்கு, ஏறு கொற் றம் தலைவர் - சிறந்த வெற்றியையுடைய தலைவர்கள், ஆறுபத்து ஏழு கோடி - அறுபத்தேழு கோடிக்கணக்காவர்; இவர்களுக்கு முன் கூறு சேனை பதி - இவ் வறுபத்தேழுகோடி படைத்தலைவர்கட்கும் முதலாகச் சொல்லப்பட்ட தலை மைச் சேனாபதியானவன், கொடுங கூற்றையும் நீறு செய்திடும் நீலன் - கொடிய யமனையும் சாம்பராக்கவல்ல [மிக்க பராக்கிரமமுடைய] நீலனுவன், என்று ஓதினன் - எனறு கூறினன், (சுக்கிரீவன்); (எ - று.)

எழுபதுவெள்ளம் வாநரவீரர்க்கு அறுபத்தேழுகோடி படைத்தலைவர் உளர்; அப்படைத்தலைவர்கட் கெலலாம் அதிபதி நீலனுவ னென்பதாம் நீலன் - நீலநிறமுடைமைபற்றி, இவனுக்கு இப்பெயர்; இவன் - அக்கினி யின் குமாரன். அனீகர் - சேனையிலுள்ளார்; அநீகம் - சேனைவகுப்பு; வட சொல். கொற்றம் ஏறு தலைவர் எனக் கூட்டியுரைப்பினுமாம். கூற்று - உடல் வேறு உயிர்வேறுக் கூறுபடுத்துங் கடவுள். உம்மை உயர்வுசிறப்பு. கொல்லு தற்றொழிற் கடவுளையுங் கொல்லுங் கிறமுடையவ னென நீலனது சிறப் புக் கூறியவாறு.

விலங்கினத்தைச் சேர்ந்த வாநரங்களே 'அநீகர்' என்று உயர்திணையாக கூறுதல் இலக்கணத்திற்கு ஒக்குமோ? எனின்,—உயர்திணை அஃறிணை என்ற பகுப்பிறகுக் காரணம் முறையே அறிவின் நிறைவும் குறைவும் ஆத லால் அவ்வறிவிற் குறைவின்றி ஐம்பொறியறிவோடு பகுத்தறிவையுங் கொண்டு மனிதர்போலவே தொழில்திற மமைந்த தெய்வக் குரங்குகளை உயர்திணையின்பாற் படுத்தலில் ஒக்குமென்க. இத்தன்மை கழுகுகளாகிய ஸம்பாதி ஜடாயு என்பவர்கட்கும் பொருந்தும். தொல்காப்பியத்து மரபியலில் உரைகாரர் "மாவும் மாக்களு மையறிவினவே" என்ற சூத்திரத்தின்கீழ்க் குரங்கை விலங்கினமென்று பொதுவகையாற் கூறினவர்தாமே "மக்கள்தாமே யாறறிவுயிரே", என்ற அடுத்த சூத்திரத்தின்கீழ் "குரங்குமுதலாகிய விலங்கி

னுள் அறிவுடையன எனப்படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும்' என்றமை காண்க. 'ஓரோவழி அஃறிணைப் பொருள்கள் மொழியாற்பேசுவன உளவாயின், அது தெய்வத்தன்மை முதலிய விசேடத்தானன்றிப் பொருட்டன்மையா னன்மையின் அமைத்துக் கொள்வது' என்ற இலக்கண விளக்கச் சூரூவளியும் இங்குக் காணத்தக்கது. அன்றியும், இவர்கள் வடிவில் மனிதரிற் சிறிது வேறுபாட்டையு டையரா யிருந்தன ரென்பதையும் உணர்க.

'அனீகினிக்கு,' அனீகமொத்து,' 'செய்தது' என்பன பிரதிபேதம். (கூ)

[இராமபிரான் இனிநடக்கவேண்டுமவற்றைப்பற்றி ஆலோசிக்குமாறு சுக்கிரீவனிடங் கூறுதல்]

சு. என்றுரைத்தவெரிகதிர்மைந்தனே
வென்றிவிற்கையிராமன்விருப்பினு
னின்றினிப்பலபேசியென்னுநெறி
சென்றிழைப்பனசிந்தனைசெய்கென்றான்.

(இ - ன்.) என்று உரைத்த - என்று கூறிய, எரி கதிர் மைந்தனே - உஷ்ணகிரணனுன சூரியனது குமாரனுகிய சுக்கிரீவனே, வென்றி வில் கை இராமன்-வெற்றியைத் தரும் வில்லேபேந்திய கையையுடைய இராமபிரான், விருப்பினுல் - அன்போடு (பார்த்து), 'இனி நின்று பல பேசி என்னே - இப்பொழுது (வீணுகக் காலங்கழியுமாறு) நின்றுகொண்டு பல பேசுவதனுற் பயன் யாதோ? நெறி சென்று இழைப்பன சிந்தனை செய்க - முறைமையான வழியிற புகுந்து செய்யவேண்டியவற்றைப்பற்றி ஆலோசிப்பாயாக,' என்றான் - என்று கூறினுன்; (எ - று.)

'நெறிசென்றிழைப்பன சிந்தனைசெய்க' என்றதற்கு - இனி வானரர்கள் பல திசைவழிகளிலுஞ் சென்று சீதாபிராட்டியைத் தேடுவதைக்குறித்து ஆலோசனை செய்வாயாக எனக் கொள்ளினுமாம். எரிகதிர்-வினைதெரகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; சூரியனைக் குறிக்கும். (சு)

இதுமுதல் இருபத்தேட்டுக்கவிகள் - சுக்கிரீவன் வார்த்தை.

[இதுமுதல் ஐந்துகவிகள் சுக்கிரீவன் அநுமானைப்புகழ்ந்து பிராட்டியைத் தேடும்படி அங்கதன்முதலியோருடன் தென்திசைக்கட் செல்லுமாறு கட்டளையிடுதல்.]

எ. அவனுமண்ணலனுமனையநீ
புவனமூன்றுநின்றுதையிற்புக்குழு
றவனவேகத்தையோர்கிலதாழ்த்தனை
கவனமாக்குரங்கின்செயல்காண்டியோ.

இதமுதல் ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ன்.) அவனும் - அத்தச் சுக்கிரீவனும்,—அண்ணல் அனுமனை - பெருமையிற் சிறந்தவனான அநுமானை (நோக்கி), ஐய—! நீ—, புவனம் மூன்றும் - மூவுலகத்திலும், நின் தாதையின் - உனது தந்தையாகிய வாயுவைப் போல, புக்கு உழல் - புகுந்து திரிகின்ற, தவனம் வேகதை - (உனது) மிக்க வேகத்தை, ஓர்கிலை - உணரமாட்டாதவனும், தாழ்த்தனை - வீண்காலம் தாமதித்திருக்கின்றாய்; கவனம் மா குரங்கின் செயல் காண்டியோ - (நீ இவ்வாறு தாமதித்து) விரைவாகச் செல்லுந் தன்மையுள்ள பெரிய மற்றை வானரர்களுடைய செய்கையைக் காண விரும்பியிருக்கின்றாயோ? (எ-று.)—இச்செய்யுளிலுள்ள 'அவனும்' என்பது - பத்தாஞ் செய்யுளிலுள்ள 'பன்னினான்' என்பதைக் கொண்டு முடியும்.

மூவுலகத்திலும் திரியவல்ல வல்லமை பெற்றிருந்தும் நீ இப்போது சீதையை நாடிச் செய்தி தெரிந்துவராமல் வாளாவிருப்பது, மற்றை வானரர்கள் தோபிராட்டியைத் தேடும் விஷயத்தில் யாது செய்கின்றார்க ளென்று காணக் கருதிப்போலு மெனச் சுக்கிரீவன் அநுமானைநோக்கிக் கூறின னென்றவாறும். 'தந்தையைப் போல்வான் தநயன்' என்றபடி தந்தையாகிய வாயுவைப்போலவே அவனது மகனுகிய அநுமானும் மூவுலகத்திலுந் திரியவல்ல வல்லமையுடையவ னென்க. தவனவேகத்தை எனபதற்கு - சூரியன்போனற வேகமுடையாய் என்றும் பொருள்கூறலாம்; அநுமான் சூரியனோடு உடனசென்று கலியாகரணங்களையும் மற்றும் பலகலைகளையும் ஒதினனுதலால், இவ்வாறு கூறுதல் ஏகரும். தவனன - தபனன்: சூரியன்; வடசொல்; தபிப்பவனென்பது அவயவப்பொருள. இப்பொருளில், 'வேகத்தை' என்பது - 'ஐ' விகுதிபெறற முன்னிலை யொருமைக் குறிப்பு முற்று. முன்னையபொருளில், தவன வேகம் - ஒருபொருட் பன்மொழி. அநுமான் மிக்க வரங்களைப் பெற்றது பற்றிச் சதறுச்செருக்குற்று மஹர்ஷிகளுடைய ஆச்ரமங்களிற புகுந்து யாகபாதரங்களை யுடைததில் முதலிய பல தீங்குகளை யிழைத்து வந்தனனல், அம்முனிவாகள் 'இவனுகுத் தன் பலம் தனக்குத் தெரியாமற் போகக்கடவது' எனறு சபித்த வரலாற்றை உட்கொண்டு 'புவன மூனறும் புகுழல் தவன வேகத்தையோர்கிலை தாழ்த்தனை' எனற ணெனனலாம. இனி, ஈற்றடிக்கு - (உனது பலம உனக்குத் தெரியாமையினல்) மூவுலகங்களிலும் புக்குத திரிய வல்ல உனது தொழிலைச் சாதாரணமான ஓர குரங்கினசெயலாகக் கருதினையோ? எனக் கூறினுமாம்.

புவன மூன்று - சுவர்க்க மத்திய பாதாளங்கள். உம்மை - இனைத்தென்றறிபொருளில் வந்த முற்றும்மை. ஓர்கிலை - முற்றெச்சம். காண்டி - முன்னிலை யொருமை யெதிர்காலமுற்று; இ - காலங்காட்டும் விகுதி; ட் - எழுத்துப் பேறு.

'உன்றனை,' 'காட்டியோ' என்பன பிரதிபேதம். (6)

கூ. எகியேக்கிழைதன்னையிருந்தழி
நாகநாடுகநானிலநாடுக
போகபூமிபொருந்திடவல்லகின்
வேகமீண்டுவெளிப்படவேண்டுமால்.

(இ - ன்.) (நீ),—எகி - இங்கிருந்து சென்று, எந்த இழை இருந்த உழி தன்னை - தரித்த ஆபரணங்களை யுடையவனாகிய சீதை இருந்த இடத்தை, நாகம் நாடுக - நாகர்கள் வசிக்கின்ற இடமாகிய பாதாளலோகத்தில் தேடக் கடவாய்; நானிலம் நாடுக - பூமியிலுள் தேடக்கடவாய்; போகபூமி பொருந் திட வல்ல கின் வேகம் - போகபூமியாகிய சுவர்க்கலோகத்திற் சேரவல்ல உனது வேகமும், ஈண்டு வெளிப்பட வேண்டும் - இப்போது வெளியாக வேண்டும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நீ சுவர்க்க மத்திய பாதாளங்களாகிய மூவுலகங்களிலுஞ் சென்று சீதா பிராட்டியாரைத் தேடவேண்டு மென்று சுக்கிரீவன் அநுமானுக்குக் கூறின னென்க. நாகம் - நாகர்கள் வசிக்கின்ற இடம்; நாகராவார் - படமும் வாலு முடையராய், மனிதப்பிறப்பும் தெய்வத்தன்மையு முள்ளவராகிய சர்ப்பசாதி யார். நானிலம் - நான்காகிய நிலங்களை யுடையதெனப் பூமிக்குக் காரணப் பெயர்; நால்வகை நிலங்கள் - முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல் என்பன. (முல்லை - காடும், காடுசார்ந்த இடமும்; குறிஞ்சி - மலையும், மலைசார்ந்த இடமும்; மருதம் - நாடும், நாடுசார்ந்த இடமும்; நெய்தல் - கடலும், கடல் சார்ந்த இடமும்.) மற்றொன்றாகிய பாலை நிலம் பிராணிசஞ்சாரத்திற்கு உரியதனறென்று இங்கே விலக்கப்பட்டது; அது நீரும் கிழலு மில்லாத கொடுநிலம். பாலைக்குத் தனியே நிலமில்லை யென்பதும், நால்வகை நிலங்க ளும் தத்தம் தன்மை கெட்ட விடத்தே பாலையா மென்பதும், சில ஆசிரியர் கொள்கை. போக பூமி - புண்ணியப்பயனை இன்பம் நுகர்தற்கு உரிய இடம்; எனவே, சுவர்க்கலோகமாம். பின் மூன்றடிகட்கு - சுவர்க்கத்தில் தேடுக; பூமியிலும் தேடுக; போக பூமியிலும் சேரவல்ல நினது வேகம் இப் போது வெளிப்படவேண்டு மெனக் கூறி, பாதாளலோகத்தை உபலட்சணத் தாற் கொள்ளலுமாம்; நாகம் - சுவர்க்கலோகம். போகபூமி - பாதாள லோகமுமாம்.

எந்திழை இருந்தழிதன்னை என உருபுமாறுக. இருந்தழி - தொகுத் தல். இரண்டாமடி - முற்றுமோனை.

'எந்திழையேழையிருந்திடம்,' 'இருந்தழீஇ,' 'நாகமாடுகநானிலமா டுக,' 'மாகவானகநாடுகவல்லிகின்,' 'போகபூமி புகுந்திடவல்லகின்' என் பன பாடாந்தரம். (க)

எ. தென்றிசைக்கணிராவணன்சேனை
தென்றிசைக்கின்றதன்னறிவின்னணம்
வன்றிசைக்கினிமாருதியலால்
வென்றிசைக்குரியார்பிறர்வேண்டுமோ.

(இ - ன்.) 'இராவணன் சேண் நகர் - இராவணனது நீண்ட [பெரிய] இலங்காநகரம், தென்திசைக்கண் - தெற்குத்திசையில் (உள்ளது),' என்ற —, என் அறிவு இன்னணம் இசைக்கின்றது - எனது அறிவு இவ்வாறுசொல்லுகின்றது [என்அறிவில் தோன்றுகின்றது]; மாருதி - அநுமானே! இனி - இப்போது, வல் திசைக்கு - வலிய அத்தத்திசையில் (சென்று), வென்று - (அங்கு உள்ள அரக்கரை) ஜயித்து, இசைக்கு - கீர்த்திபெறுதற்கு, உரியார் - உரியவர், நீ அலால் பிறர் வேண்டுமோ - நி யொருவனே யல்லாமல் மற்றெருத்தரும் வேண்டுமோ? (எ - று)

நீயொருவனே அத்தத்தென்திசையிற்சென்று இராவணனது இலங்காபுரியிலுள்ள அரக்கரை வென்று சீதையின் செய்தியை உணர்ந்து வந்து சொல்லிக் கீர்த்திபெறுதற்கு உரியா யென்றவாறும்.

'இன்னணம் - இன்னவண்ணம் என்பதன் மரூஉ. வல்திசை - அங்குள்ள அரக்கரின்வன்மையைத் திசையின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு. திசைக்கு - உருபுமயக்கம். மாருதி - அண்மைவிளி. வேண்டும் - ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாகிய ஒருவகைமுற்று.

'என்றிசைக்கின்றவென்னறிவின்னலம்' என்று பிரதிபேதம். (எ)

அ. வள்ளறிவியையவஞ்சித்துவெளிய
கள்ளவாளரக்கன்செலக்கண்டது
தெள்ளியோயதுதென்றிசையென்பதோ
ருள்ளமும்மெனக்குண்டெனவுண்ணுவாய்.

(இ - ன்.) 'தெள்ளியோய் - தெளிந்த அறிவுடையவனே! வள்ளல் தேவியை வஞ்சித்து வெளிய கள்ளம் வாள் அரக்கன செல கண்டது அது - வரையாது கொடுக்குந்தன்மையுள்ள இராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியை வஞ்சனைசெய்து எடுத்துச்சென்ற கள்ளத்தன்மையையுடைய கொடிய ராக்ஷஸனுகிய இராவணன போகக் கண்டதான அத்தத்திக்கு, தென்திசை - தெற்குத்திக்காகும், என்பது ஓர் உள்ளமும் - என்பதாகிய ஓர் எண்ணமும், எனக்கு உண்டு—, என உணர்வாய் - என்று நீ கருதுவாயாக.

"தென்திசைக்கணிராவணன்சேனை, ரென்றிசைக்கின்ற தென்னறிவின்னணம்" என்று கீழ்க்கூறியதற்கு, இச்செய்யுளிறுதிக் காரணங்காட்டியவாறும். வள்ளல் - வண்மையென்ற பகுதியினடியாப் பிறந்த 'அல்' விகுதிபெற்ற பெயர்; வண்மை - வரையாதுகொடுக்குந்தன்மை' தனக்கு உரித்தாகிய இராச்சியத்தையும் தம்பியாகியபரதனுக்குக் கொடுக்கவேண்டி இளையதாயின் சொற்படியே காட்டிற்குச்சென்றதனுல், இராமபிரானை 'வள்ளல்' என்றன. தேவீ - விளங்குபவன் அல்லது விளக்கத்தைச் செய்பவளென்று அவயவப் பொருள்படும் வடசொல். வாள் அரக்கன் - (சிவபிரானுலளிக்கப்பட்ட சந்திரஹாஸமென்ற) வாளாயுதத்தையுடைய அரக்கனெனினுமாம். உள்ளமுமெனக்கு, மகரவொற்று - விரித்தல்.

'தெள்ளியோயன்று' என்றும் பாடம். (அ)

கூ. தாரைமைந்தனுஞ்சாமபனுந்தாமுதல்
வீரர்யாவருமேமபடுமேனமையாற்
சேர்கநின்னெடுந்திண்டிறற்சேனைகள்
பேர்கவெள்ளமிரண்டொடும்பெற்றியால்.

(இ - ன்) தாரை மைந்தனும் - தாரையின்குமாரனுகிய அங்கதனும், சாம்பனும் - ஜாம்பவானும், முதல் - முதலாகிய, வீரர் யாவரும் - (அவர்களேச் சோந்த) வீராபலரும், மேம்படும மேன்மையால் - மிகபெருமையோடு, (சீதாபிராட்டியைதேடும்பொருட்டு), நின்னெடும் சேர்க - (அணேயாக) உன்னுடன வருக, வெள்ளம் இரண்டொடும் - இரண்டு வெள்ளமென்னுக் தொகையுடனே, திண் திறல் சேனைகள - மிக்க வலிமையுள்ள சேனைகள், பெற்றியால் - பெருமையோடு, போக - (உங்கட்குத் துணேயாகப்) புறப்படட்டும், (எனகூறிவிட்டு), (எ - று.)— தாம் - அசை.

நீ அங்கதன் ஜாம்பவான முதலானேரோடும இரண்டுவெள்ளம் வாநர சேனேயோடும் புறப்பட்டுச் சீதாபிராட்டியைத்தேடுமாறு தென்திசைகருச் செல்லுவெனச் சுகனீவன அநுமானுக்குக் கட்டளேயிட்டன னென்க.

சுக்கிரீவன் கிஷ்கிந்தையில் வாநரராஜனுனபோது, இவன் அங்கு இனவாசனுக்கப்பட்டான. சாம்பன - ஜாம்பவான் என்ற வடமொழியினசிதைவு; இவன முன்பேழுருகால் பிரமன் கொட்டாவி விட்டபோது அவனது வாயினின்று அவனது அமசமாய்க கரடிவடிவமாகத் தோன்றியவன்; கரடிகளுக்கு அரசன; இவன திருமாலின திரிவிகிரமாவதாரகாலத்தில் உலகமுழுதும் கிரம்பிய அப்பெருமானேப் பதினெட்டுமுறை பிரதட்சிணஞ்செய்தனன. திண்திறல் - ஒருபொருட் பன்மொழி.

'சாம்பனு நீலனும்,' 'மேம்படு மேன்மையார்,' 'சேனேயும்' என்றும் பாடம். (கூ)

[தென்திசை தவிர மற்றைமூன்று திசைகளிலும் இடபன்முதலியோரைச் செல்லுமாறு சுக்கிரீவன் ஏவுதல்.]

கo. குடதிசைக்கணிடபன்குபேரன்வாழ்
வடதிசைக்கட்சதவலிவாசவ
னிடதிசைக்கண்வினதன்விறற்றரு
படையொடுற்றுப்படர்கெனப்பன்னினுன்.

(இ - ன்.) 'குடதிசைக்கண் - மேற்குத்திக்கில், இடபன் - ருஷபனும், குபேரன் வாழ் வட திசைக்கண் - (திக்குப்பாலகனுகிய) குபேரன் வாழ்கின்ற வடக்குத்திக்கில், சதவலி - சதவலியும், வாசவன இடம் திசைக்கண் - இந்திரனுக்கு உரிய இடமாகிய கிழக்குத்திக்கில், வினதன் - வினதனும், விறல் தரு படையொடு உற்று படர்க - வலிமைபொருந்திய (இரண்டு வெள்ளம்) சேனேயோடு பொருந்திச்செல்லக்கடவர்,' என பன்னினுன் என்று கூறினுன்; (எ - று.)

இடபன் - ருஷபனென்ற வடசொல்லின் விகாரம்; காளைபோன்றவ னென்பது பொருள். குபேரன் என்ற வடசொல் - குச்சிதமான சரீர முடையவன் எனறு காரணப்பொருள்படும்; இமயமலைத்தடத்துச் சென்று இவன் தவஞ்செய்கையில் அங்கே எழுந்தருளிய சிவபிரானது பக்கத்தி லுள்ள பார்வதியைப் பார்த்ததனற் கண்பசந்தமைபற்றி, இவனுக்கு இப் பெயர் அமைந்தது; இதுபற்றி, ஏகாக்ஷிபிங்கள னென்ற பெயரும் உண்டு. இவன் - விச்ரவசு என்னும் முனிவர்க்கு மூத்தமனைவியாகிய பாதுவாஜ புத்திரியினிடம் பிறந்த குமாரன்; இம்முனிவருக்கு இளையமனைவியாகிய கேகசியினிடம் பிறந்த குமாரன் - இராவணன். பெருந்தவஞ்செய்து பிரம னருள்பெற்ற வடதிசைப்பாலகனும், தனுதிபதியு மானவன் மதலி. முகத்தில் நூறுமடிப்புக்களையுடையவ னெனக் காரணப்பொருளபடும். வாஸவன் - வசுக்களுக்குத் தலைவன்; வஸு - அஷ்டவசுக்களும், செல்வமும். விததன் - மிகவும் வணக்கமுடையவன் என்பது அவயவப்பொருள்.

குடக்கு + திசை = குடதிசை; நிலைமொழியாகிய திசைப்பெயரின் ஈற்று உயிர்மெய்யும் ககரவொற்றுங் கெட்டது; வடதிசை யென்பதும் இவ்வாறே. விறல் - வெறறியுமாம். படர்கென - தொகுத்தல். எதுகைநயம்பற்றி, 'இட திசை' என இயல்பாயிற்று. 'மிடறிசை' என்ற பாடமே மோனைத் தொடைக்கு ஏறறும்; மிடல் - வலிமை.

'குடதிசைக்கட்சுடேணன்', 'படருநெறியெனு' என்று பாடாந்தரம்.

[வாநரர்களை நோக்கிய சுக்கிரீவாஜ்ஞை.]

கக. வெற்றிவானரவெள்ளமிரண்டொடுஞ்
சுற்றியோடிதகுருவியொருமதி
முற்றுமுறுதமுன்முறறுதிரிவ்விடைக்
கொற்றவாகையினீரெனக்கூறினன்.

(இ - ன்.) (சுக்கிரீவன் இடபன்முதலிய வாநரர்களை நோக்கி), 'கொற் றம வாகையினீர் - வெற்றிக்கு உரிய வாகைமாலையை யணிதற்கு உரிய வர்களே! (நீவிர), வெறறி வானரம் வெள்ளம் இரண்டொடும் - ஜயிகளுக் தனமையுள்ள இரண்டுவெள்ளம் வாநரசேனையோடும், சுறறி ஓடி திருவி - (பலவிடங்களிலும) அலைந்து திரிந்து (சீதாபிராட்டியைத) தேடி, ஒரு மதி முற்றுமுறுதமுன் - ஒருமாதம் முடிவதறகுள்ளே, இ இடை முற்றுதிர்-இங்குத் திருமபிவந்து சேருங்கள்,' என கூறினன்—; (எ - று.)

நீங்கள் தனித்தனி இரண்டுவெள்ளம் வாநரசேனையோடு நான் உங் கட்குக் குறித்த திசைகளிற செனறு சீதாபிராட்டியைத்தேடி ஒருமாதகாலத் திறகுள் இங்குவந்து சேரவேண்டு மெனறு சுக்கிரீவன கட்டளையிட்டன னென்க. 'வாகையினீர்' என்பதை முற்றெச்சமாகக்கொண்டு, வெற்றிவய புடையவர்களாய் எனறுங் கூறலாம். மதி - சந்திரன; அமாவாசைக்கு அமாவாசை ஒருமாஸமென்று சந்திரமானரீதியாய்க் கணக்கிடுதல் பற்றி, மதியென்று மாதத்திறகுப் பெயர் வழங்கலாயிற்று; இலக்கணை. வாகை யென்னும் மாதத்தின்பெயர் - அதன்மலராகிய மாலைக்கு ஆகுபெயர்.

இது, வெற்றிக்கு அடையாளமாகத் தரிக்கப்படுவது; போர்க்குச் செல்லும் பொழுது வஞ்சிமாலையையும், போர் செய்யும்பொழுது அம்பைமாலையையும், போரில் வெனறபொழுது வாகைமாலையையும் வீரர்கள் தரிப்பதாகக் கூறுவது, மரபு 'முற்றுரைதமுன முறையுதிர்' எனறது முண்டோடையின் பாற்படும். (கக)

[இதுமுதல் இருபத்தொரு கவிகள் - ஒருதொடர்; சுக்கிரீவன் தென்திசைமிற் செல்லும் வாநரர்களோநோக்கிச் சீதையைத் தேடவேண்டிய இடங்களைக் குறிப்பிந்தல்]

கூ. ஈண்டுதின்றெழுந்தீவாகுநூற்றெழி
மூண்டுசோதிக்கொடு முடிதோன்றலா
னீண்டசேமமிகொலாமெனசேர்தொழ
வேண்டுமவிந்தமலையினேமேவுவீர்.

(இ - ள்) (சுக்கிரீவன தெனதிசையிற செல்லும் வாநரர்களோநோகிக் கூறுவான):—(நீஙகள), ஈண்டு நினறு எழுகற - இஙகிருந்து புறபபட்டு,— எழில் தூண்டு சோதி ஈர் ஐந்து நூறு கொடி முடி தோனறலால் - அழகு மிகுந்த ஒளிவீசுகினற ஆயிரஞகொடிகள் காணப்படுதலால், நீணட சேமி கொல் ஆம் என - பெருவடிவுகொணட திருமாலதானே! எனறு, சேர் தொழ வேண்டும - எதிரசெலறு தொழுதற்கு உரிய, விந்தமலையினை - விந்திய பருவதத்தை, மேவுவீர் - (முதலிறசெனறு) சோவீராக; (எ - று)

ஆயிரங்கொடுமுடிகளை யுடைய விந்தியமலைகளு, ஆயிரம முடிகளை யுடைய திருமாலே உவமை கூறினா. ("தேர்ள்களாயிரதாய்முடிகளாயிரத தாய்," "கணணிமுடிசகிரமாய்யம, * * * திண்டிறலாழியரஙகருக்கே" என்பன இதறகு காணறதக்கன.) சேமி - வடசொல்; சகராயுதம; அதனை யுடையவனுகு ஆகுபெயா; நீணடசேமி எனபதை, அடையடுதத்வாகுபெய ரெனக கொனக; அனமொழித தொகையெனன லாகாதி; "ஐஙதிரதகை மொழிமேற பிறதொக லனமொழி" எனறபடி யாதாயினும ஒருதொலகை யினமேற் பிறதத்தல் அனமொழித தொலகைக்கு இலகண மாதலும, நீண்ட சேமியெனபது பெயரெசசத தொகாநிலைத தொடராதலும காண்க. நீண்ட - (திரிவிக்கிரமாவதார காலததிலும விசுவரூபததிலும் வீராட்ஸவரூபத்திலும்) பெரு வடிவுகொண்ட எனபது பொருள். "நீரிடைக்கணடியி னெடிய சேமி யும்" என்ற விடததும 'சேமி' எனபது - இப்பொருளில் வருதல் காணக. நீண்டசேமி யேனபதறகு - ஆயிரம் அரங்களையுடைய (சுதரிசகமென்னுஞ்) சக்கராயுத மெனபாரு முளா. திருமாலேயேயனறி ஆவனையொத்த பொருள் களைக் கண்டவிடத்தும் கைகூப்பிததொழுதல், வரப்புகடந்த பக்தியின் செயலா மென்க.

விந்தம் - விந்தியம்; இநதப் பாதகண்டத்திலுள்ள குலகிரியேழனுள் ஒன்று; (மற்றவை - கைலை, இமயம், மந்தரம், நிடதம், ஹேமகூடம், நீலகிரி என்பன. சுத்தமாதகமுகூட்டி எட்டெனபாரு முளா.) இது, பாதகண

டத்தின் நடுவே விருக்கின்றது. விந்திய மென்ற வடசொல்லுக்கு -(சூரியன் முதலியோராது சஞ்சாரத்தைத்) தகைவது என்றும், (அகஸ்திய முனிவரால்) அடக்கப்பட்டது எனறுங் காரணப் பொருள் கூறுவர்; விந்தியமலை - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. சோதி=ஜ்யோதிஸ்; வடமொழித் திரிபு.

முதனூலாகிய வான்மீகி ராமாயணத்தில் நான்கு திசையிலுஞ் செல்லும் வானரர்களை நோக்கி முறையே தேடவேண்டிய இடங்களையும் வழிகளையும் சுக்ரீவன் கூறியதாகச் சொல்லியிருக்கவும், கம்பர் தென திசையிற் செல்லும் வானரர்களை மாத்திரம் நோக்கித் தேடவேண்டிய இடங்களையும் வழிகளையும் கூறியதாகச் சொல்லியிருப்பது, "பின்னுளை வேண்டுமி விகற்பங் கூறில்" எனறும வழிநூலிலக்கணவிதி பற்றியென்க; இதுபற்றியே, கூறிய வழிகளிலும் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன.

மதங்காச்சிரமத்தினின்று தென்திசையிற் செல்லும் வானரரை விந்திய மலைக்கு முதலிற்செல்லுமாறு கூறியது எங்ஙனம் பொருந்து மெனின்,—இங்கு 'தென திசை' என்பது - இவர் இருந்த இடத்திற்குத் தென்திசையன்று; பூமிக்கு மத்தி இமய மாதலால், அவ்விமயத்திற்குத் தென்திசை யெனக கொளக; கொள்ளவே, முரணுதல் இனறும் என்பர்.

'ஈண்டுகினறிறந்து' எனறு பிரதிபேதம். (கூ)

கஙு. தேடியவ்வரை தீர்ந்தபின் றேவரு
மாடுகின்றதறுபதமைந திணைப்
பாடுகின்றதுபண் மணியாலிரு
ளோடுகின்றநருமதையுன் னுவீர்.

(இ - ள்.) அ வரை தேடி தீர்ந்த பின - அவ்விந்தியமலையில் (சீதா பிராட்டியைத்) தேடித் தீர்ந்தபிறகு,—தேவரும் ஆடுகின்றது - தேவர்களும் வந்து நீராடப்பெறுகின்றதும், அறுபதம ஐந்தினை பாடுகின்றது - (நீர்ப் பெருக்கினால் அடித்துக்கொண்டு வரப்பெற்ற மலர்களிலுள்ள தேனைப் பருகி அம்மதக்களிப்பால்) வண்டுகள் பஞ்சமமென்னும் ஸ்வரத்தைப் பாடப்பெறுகின்றதுமான, பல் மணியால் இருள ஓடுகின்ற நருமதை - (அங்குள்ள) பல வகை யிரத்தினங்களின் ஒளியால் இருள் இருந்தவிடம் தெரியாது ஓடுதற்குக் காரணமான நருமதையாற்றை, உன்னுவீர் - போய்ச்சேருங்கள்; (எ - று.)

நருமதை என்பது - கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ஓர் யாறு. தேவர்கள் நீராடுதலால் மிக்க தூய்மையும், வண்டுகள இசைபாடுதலாற் சிறப்பும், மணிகளால் இருள ஓடுகின்றதனால் வளனும் அந்நருமதைக்கு உன்னல வென்பது பெறப்படும்.

வந்ரையென்னுங் கணுவின்பெயர் - அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகு பெயரும், பிறகு அம்மூங்கில் வீளையும் மலைக்குத் தானியாகு பெயரு மாதலால், இருமடியாகுபெயராம். அறுபதம் - ஆறுகால்களையுடையது எனவண்டுக்குப் பண்புத்தொகை யன்மொழி; 'ஷட்பதம்' என்ற வடமொழிப் பெயரின் பொருள்கொண்டது, இது. ஐந்தினை=பஞ்சமம்; ஷட்ஜம், ரிஷபம்,

சாந்தாரம், மத்திமமம, பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற ஸப்தஸ்வரங்களுன் இது ஐந்தாவதாதல் காண்க. இது மயிலுக்கு உரிய தொனியாம். 'அறுபத மைந்தினைப் பாடுகின்றது' எனறவிடத்துச் சொல்லயங் கவனிக்கத் தக்கது.

'தேடியம்மலே,' 'தேடியவவழி', 'பன்மணிபாயிருள், காடுகின்ற நருமதை நாடுவீர்' என்று சில பிரதிகள். (கரு)

கச. வாமமேமகலேவானவர்மங்கையர்
காமவூசற்களியிசைக்கள்ளினூற்
றூமமேனியசுணங்குயில்வுறு
மேமகூடமெனுமலேயெய்துவீர்.

(இ - ள்.) (அப்பால்),—வாமம் மேகலே வானவர் மங்கையர் - அழகிய மேகலேயென்னும் அரைநூல் மாலேயையணிந்த தேவமாதர்களுடைய, காமம் ஊசல் களி இசை கள்ளினுல் - விருப்பத்தோடு ஊசலாடுகையில் களிப் பினுற் பாடுகின்ற இசையாகிய மதுவினுல், தூமம் மேனி அசுணம் குயில் வுறும் - புகைபோன்ற உடல்நிறத்தையுடைய அசுணப்பறவைகள் தூங்கு தற்கு இடமான, ஏமகூடம் எனும் மலே - ஹேமகூட மென்னும் பருவதத் தை, எய்துவீர் - போய்ச்சேருங்கள்; (எ - று.)

ஹேமகூடமலேயில் தேவமாதர்கள் வந்து ஊசலாடும்போது களிப்பி னுற் பாடுகின்ற இசைப்பாடலினுல் அசுணப்பறவை தூயிலு மென்க. தூயிலு மாறு மயக்கத்தை யுண்டாக்கியதனுல், இசைப்பாடலேக் கள்ளாக உருவகஞ் செய்தனர். அசுணம் - இசையறி விலங்கு; இது, குறிஞ்நிலப் பறவை; இதனே ஒருவகை மிருகமென்றும், மானில் ஒருவகையென்றுங் கூறுவர். மேகலே - எண்கோவையிடையணி; ''எண்கோவை மேகலே' என்றது காண்க. மங்கையர் - மங்கைப்பருவ முடையவர்; அப்பருவத்திற்கு வய தெல்லே - பனனிரண்டு முதல் பதின்மூன்றளவும். இச்சொல இங்குப் பரு வப்பெய ராகாமல், மகளிரென்ற மாதிரமாய் நின்றது ஹேமகூடம் - பொனமயமான சிகரங்களே யுடையது.

'வானரமங்கையர்' என்ற பாடம்—வான் அரமங்கையர் என்று பிரிந்து, வானத்திலுள்ள தேவமங்கையரென்று பொருள்படும்; அரமங்கையர் - அமர மங்கையர் என்பதன் மரூஉ. 'காமப்பூசல்' என்று பிரதிபேதம். (கச)

கரு. கொய்தினம்மலேநீங்கிநூமரோடும்
பொய்கையின்கரைபின்படப்போதிரா
செய்யபெண்ணீக்கரியபெண்ணீச்சில
வைகுறிடிக்குடிதுவழிகொள்வீர்.

(இ - ள்.) கொய்தின் - விரைவாக, அ மலே நீங்கி - அந்த ஹேமகூட பருவதத்தை விட்டுநீங்கி, நூமரோடும் - உங்களேச்சேர்ந்த வானரர்களுடனே, பொய்கையின் கரை பின்பட போதிர் - (அங்குள்ள) பொய்கையின் கரை

பிற்படும்படி அதைவிட்டு அப்பாற் சென்றவர்களாய்,—கரியபெண்ணை - கரு நிறமான [தெளிவான நீர் நிறைந்த] பெண்ணை நதியினிடங்களில், செய்ய பெண்ணை - (மகளிர்க்கு உரிய) நற்குணங்களையுடைய சீதாபிராட்டியை, சிலவைகல் தேடி - சிலநாள் தேடிப்பாரத்து, கடிது வழிகொளவீர் - (விரைவாக) அப்புறமுள்ள வழியிற் செல்லுங்கள்; (எ - று.)

நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என மகடூஉக்குணம் நான்காம்; அவற்றுள், காணுவது - செய்யத்தகாதவற்றினிடங் உள்ள மொடுங்குதல்; மடம் - எல்லா மறிந்தும் அறியாதுபோ லிருத்தல்; அச்சம் - புதியதைக் கண்டவிடத்து அஞ்சுதல்; பயிர்ப்பு - கணவனல்லாத பிற ஆடவரது ஆடைமுதலியன தம் மேற் பட்டவிடத்து அருவருத்தல். பொய்கை - மானிடராக்காத நீரினிலே; பொய்கையென்றே அதற்குப்பெய ரென்பாரும் உளர். பெண்ணை = வட பெண்ணை; உத்தரபினாகினி. செய்யபெண்ணைக் கரியபெண்ணை - தொடை மூரண்; வைகல் - கழியுந்தன்மையதென நாளுக்குக் காரணப்பெயர். நொய்து, கடிது - விரைவுப்பொருளில் வந்த வினையுரிகள. செய்யபெண்ணை என்ப தற்கு - அழகிய பெண்ணைநதியில் எனறும், கரிய பெண்ணை என்பதற்கு - கருநிறமான பனந்தோப்புக்களில் என்றும் பொருளுரைப்பாரு முளர். கரிய - பெருமைபெற்ற எனினுமாம். ஆல் - ஈற்றசை.

'நீஇ நுகரா வெனும்' என்ற பாடத்திற்கு - அவ்வேமகூடத்தினின்று, நீஇ - நீங்கி, நுகரா எனும் - (பிறர் ஒருவராலும்) அநுபவிக்கபடாததென்று சொல்லப்படுகின்ற, பொய்கையென்று பொருள் காண்க. (சி)

கசு. தாங்குவாரகிறருவளர்சந்தனம்
வீங்குவேலிவிதர்ப்பமுமெல்லென
நீங்கிநாடுகெடியனபிற்படத்
தேங்குவார்புனற்றண்டகஞ்சேர்திரால்

(இ - ள்.) தாங்கு வார் அகில் - (நறுமணத்தைத்) தாங்கிய நீண்ட அகில் மரங்களும், வளர் சந்தனம் தரு-ஓங்கிவளர்ந்துள்ள சந்தனமரங்களும், (ஆகிய இவற்றை), வீங்கு வேலி - பெரிய வேலியாகக்கொண்ட, விதர்ப்பமும் - விதர்ப்ப தேசத்தையும், மெல்லென நீங்கி - மெதுவாகக்கடந்து,—நெடி யன நாடு பின்பட - நீண்டபலநாடுகளும் (கடந்துசென்றதனால்) பினபுறத் தனவாகும்படி, தேங்கு வார் புனல் தண்டகம் சேர்திர் - நிறைந்த மிக்க நீரை புடைய தண்டகாரணியத்தைச் சேருங்கள்; (எ - று)—ஆல் - ஈற்றசை.

விதர்ப்பநாட்டைச்சுற்றி வேலியாக அகில்மரங்களும் சந்தன மரங்களும் நிறைந்திருக்கு மென்க மிக்க இனிமையுடைமையாற் கடந்தற்கருமைபற்றி, 'விதர்ப்பமுமெல்லென நீங்கி' என்றார்.

தண்டகமென்ற பெயர்க்காரணம் :—சூரியகுலத்து மநுசக்கரவர்த்தியி னது குமாரனான இக்ஷ்வாகு மகாராசனுடைய மக்கள் நூற்றுவருட் கடைப் பட்டவனும், மூடனும் மூர்க்கனும் அஷ்டனுமாய்த் தண்டனைக்கு உரியவ னென்ற காரணங்கருதி எதிர்கால வுணர்ச்சியையுடைய தந்தையா

'தண்டனென்று பெயரிடப் பட்டவனும், தண்டகனென்று வழங்கப்படுபவனு மாகிய ஓர் அரசன், விந்தியமலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன் ஆட்சிக்கு உரியதாகக்கொண்டு மதமந்தழென்கிற பட்ட ணத்தை யமைத்து அங்கு அரசாண்டுவருகையில், ஒருகாள், தனது புரோ கிதனை சுக்கிராசாரியனது ஆச்சிரமத்தினுட் சென்று அவன்மகளாகிய அர ஜையென்பவளைக் காதலித்து வலியக்கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த அந்தப்பார்க்கவன் கினந்து, 'எழுநாள்களில் அவன் குடும்பத்தோடும் சேனை முதலிய பரிவாரத்தோடும் அழிந்துபோக, அவனது நாடு மண் மழையால் யாதொருஜீவஜந்துவுமில்லாமற் பாழாகக்கடவது' என்று சபிக்க, அங் ஙனமே அந்நாடும் அவ்வரசனும் எழுநாள் மண்மழையால் அழிந்து போய் விட, அவவிடம் பின்பு காடாகித் தண்டகாரணியமெனப் பெயரெய்த தென்பதாம்; அந்தக்காடு பிறகு பலகாலங்கழித்து கீர்முதலியன கிரம்பி முனி வர்கள் வசித்தற்கு ஏற்ற இடமாயிற்று.

'தாங்குமாதவோ சந்தனஞ்சண்பகம்,' 'தாங்குவாரிற்றருவளர்சந்தனம்,' 'தாங்குமாரகிற்றருவளர்சந்தனம்' என்பன பிரதிபேதம். (கசு)

கஎ. பண்டகத்தியனவைகியதாபதர்
தண்டகத்ததுகாபதர்தம்மையுட்
கண்டகத்துயர்தீர்வதுகாண்டிரான்
முண்டகத்துறையென்றருமொய்ம்பினாழில்.

(இ - ள்) (அப்பால்), முண்டகத்துறை என்ற ஒரு மொய் பொழில் - முண்டகத்துறையென்று கூறப்படுகின்ற (மரங்கள்) அடர்ந்த ஒரு சோலை யாண்டது,—பண்டு அகத்தியனவைகியது ஆதலால் தண்டகத்தது - பழமையா கிய அகஸ்தியமுனிவர் வசிப்பதாகக் கூறப்படுகின்ற தண்டகாரணியத்தி லுள்ளது; தாபதர்தம்மை உள் கண்டு அகம் துயர் தீர்வது - தவஞ் செய்யும் முனிவர்களைத் தன்னிடத்துச்சார்ணப்பெறுவதால் (காண்பவர்கள் தமது) மன தகிலுள்ள துயர் நீங்குதற்குக் காரணமாயிருப்பது ; (அதனை), காண்டிர் - சென்று காணுங்கள்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

அகஸ்தியமுனிவர்வசிக்கின்ற தண்டகாரணியத்தி லுள்ளதும், தரிசித்த மாத்திரத்தில் கண்டவர்களின் மனததுயரை மாற்றும் மகிமை வாய்ந்த முனிவர்கள் நிரம்பியிருக்கப்பெற்றதுமாகிய முண்டகத்துறையைச் சென்று காணுங்க ளெனபதாம். 'பண்டு' என்னும் பழமைகுறிக்கும் இடைச் சொல், அகத்தியற்கு அடைமொழி; இச்சொல்லே 'வைகியது' என்பதனோடு இயைத்துப் பொருள்கூறுவாரு முளர். அகஸ்த்யன் என்ற பெயர் - (விந்திய) மலையை யடக்குபவ னென்று காரணப்பொருள்பெறும்; (அகம் - மலை; சவி யாதது.) ஆகவே, எதிர்கால வரலாற்றை நோக்கி முன்னுணர்வு கொண்ட ஆன்றோரால் இடப்பட்ட பெயர் இது வெனபது போதரும். தாபதர் தம்மை யுட்கண்டகத்துயர்தீர்வது என்பதற்கு - தவஞ்செய்யும் முனிவர் தம்மை [தமது ஆத்மஸ்வரூபத்தை]த் தம்மனத்தினுல் உணர்ந்த மனத்துயர் நீங்கப் பெறுவது எனப் பொருள்கொள்ளினுமாம்; தம்மைக்காணுதல் - ஆத்மஸ

ஷாத்கார மெனப்படும். தாபதர் - தாபஸர்; வடமொழித்தத்திதாந்தநாமம்; 'தவஞ்செய்வ ரென்பது, பொருள். முண்டகத்துறை - தாமரைகிரம்பிய நீர் நிலை; இங்கு அதனையுடைய சோலைக்கு ஆயிற்று. மொய்+பொழில்=மொய்ம்பொழில்; அல்வழியில் யகரத்திற்குப்பின் இனமெலி மிக்கது; "யரழ முன்னர்" என்ற சூத்திரத்தில், 'மேல்' என்ற மிகையாலென்க.

'தண்டகத்தையர்,' 'மொய்பொழில்' என்ற பிரதிபேதம். (கஎ)

கஅ. ஞாலநுங்குறுநல்லறத்தோர்பொருள்
போலநின்றுபொலிவதுபூம்பொழில்
சீலமங்கையர்வாயெனத்தீங்கனி
காலமின்றிக்கனிவதுகாண்டிரால்.

(இ - ள்.) பூ பொழில் - மலர்கள்நிறைந்த (முண்டகத்துறையென்னும்) அச்சோலையானது,—ஞாலம் நுங்குறும் - உலகத்தாரால் அனுபவிக்கப்படுகிற, நல் அறத்தோர் பொருள் போல - சிறந்த தர்மிஷ்டர்களுடைய செல்வம்போல, நின்று பொலிவது - நிலைபெற்று விளங்குவது; சீலம் மங்கையர் வாய் என - நல்லொழுக்கமுடைய இளமகளிரது அதரம்போல, தீம கனி - இனிய பழங்கள், காலம் இன்றி கனிவது - அகாலத்திலும் [எக்காலத்திலும்] பழுத்திருக்கப்பெறுவது; காண்டிர் - (அதனைச் சென்று) காணுங்கள்;

இம்முண்டகத்துறையிலுள்ள மரங்கள்யாவும் பலர்க்கும்பயன்படுவனவென்றும், அவை எக்காலத்திலும் பயன மாறாது நிற்பன வெனவுங் கூறியவாறும். ஞாலம் - அதிலுள்ளார்க்கு இடவாகு பெயர். நல்லறத்தோர் செல்வம் உலகத்தார்க்குப் பயனபடு மெனபதை, "ஊருணிநீர்நிறைந்தற்றே யுலகவாம், பேரறிவாளனதிரு," "பயனமர முள்ளூர்ப் பழுத்தறாறு செலவம், கயனுடையானசட் படின" எனற திருக்குறளாலிளுமும் அறிக. பொருள் எனபதற்கு - கடவுளெனப் பொருள் கூறுவாரு முளர். கனிகளே உபமான மாகவும், மங்கையர்வாயை உபமேயமாகவும் கூறும் இயறகைக்குமாறாக மங்கையர்வாயைக கனிக்கு உவமையாகக்கூறியது - எதிரிலியணியினபாறபடும்; வடதூலார் ப்ரதீபாலங்கார மெனபர். மங்கையர்க்கு உளள 'சீலம்' எனற அடைமொழி, இனமவிலக்கவந்ததனற.

'ஞாலநல்லறத்தோருண்ணுநற்பொருள்,' 'ஞாலகல்லறத்தோர்பொருளுண்ணுமா,' 'ஞாலநல்லறத்தோருண்ணுமுபொருள,' 'ஞாலநுங்குறுநல்லறத தொல்பொருள,' 'பொலிவன,' 'கனிவன' எனறு பிரதிபேதம். (கஅ)

கக. கயனநண்கிமையார்துயிலார்கனி
யயனபில்லைபருக்கனுக்கவ்வுழி
சயனமாதர்கலவித்தலைதரும்
பயனுமின்பமுமீரும்பயக்குமால்.

(இ - ள்.) (அங்குஉள்ளவர்கள்), கயனம் நன்கு இமையா - கண்களே நன்றாக [சிறிதும்] இமைக்கமாட்டார்; கனி துயிலார் - நன்றாகச் [சிறிதும்] தூங்கமாட்டார்; அருக்கனுக்கு - சூரியனுக்கு, அ உழி - அவ்விடத்தில்,

அயனம் இல்லை - நுழைதற்கு உரிய வழிஇல்லை; (அவ்விடம்), சயனம் மாதர் கலவித்தலை தரும் பயனும் - படுகையில மகளிரது சேர்க்கையி லுண்டா கின்ற போகத்தையும், இன்பமும் - இன்பத்தையும், நீரும் ; ஜலத்தையும், பயக்கும் - (எப்பொழுதும்) உண்டாக்கும் ; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கண்ணிமையாமையும், துயிலாமையும், தேவர்களுக்கு இயல்பு. தேவர் கள் வாழுமிடமாயுள்ளது அப்பொழிலென்பது, 'முதலடியின்கருத்து. "இரவி யின்கதிர்கள் நுழைதல்செய்தறியா" என்றபடி சூரியனது கிரணமும் உட் புகாதவாறு மரங்கள் செறிந்துள்ள தென்பார், 'அயனமில்லை யருக்கனுக்கு அவவுழி' எனறார். நீரைபபயததல் - மிக்க நீர்வளப்பததை யடைந்திருத்தல். கலவித்தலைதரும் இன்பததையும் பயனையும் [சிறந்தபழங்களையும்] நீரையும் பயக்கு மெனப் பினனிரண்டடிகட்குப் பொருள் கூறினுமாம். நீர் - நற் குணங்களுமாம்.

'அருக்கனுக்கவவுழி,' 'நயனநன்கிசை நல்லமளித்துயில்' என்று பிரதி பேதம். (ஈக)

உ0. ஆண்டி றந்துபி னைந்தரத் திந்துவைத்
தீண்டு கின்றது செங்கதிர்ச் செல்வனு
மீண்டு றைந்தல தேகல மென்பது
பாண்டு வின்மலை யென்னும்ப ருப்பதம்.

(இ - ள்.) ஆண்டு இறந்து - அவவிடதததைக கடந்து, பின் - அப்பால், அந்தரத்தி இந்துவை தீண்டுகின்றது - ஆகாயததிறசெல்லுகின்ற சந்திர னைத் தொடுகின்றதும், செங்கதிர் செல்வனும் ஈண்டு உறைந்து அலது ஏக லம் எனபது - ஞாயந்திரணங்களோச் செல்வமாகவுடைய சூரியனும் 'இம்மலை யில் தங்கியல்லாமல் அப்பாறசெல்லமாட்டோம்' என்று கினைதததற்கு இட மானதுமாகிய', பாண்டுவின் மலை என்னும் பருப்பதம் - பாண்டுமலையென் னும் பருவதம், (உளது): (அதனைச் சேருங்கள்); (எ - று.)

இந்துவைத் தீண்டுகின்றது, செங்கதிரச் செல்வனும் ஈண்டுறைந்தல தேகலமெனபது எனபன - அம்மலையினுயர்ச்சியை விளக்கவந்த தொடர் புயர்வுநவிற்சியணிகள் ; வடநூலார் ஸம்பந்தாதிசயோக்தியென்பர். பாண்டு மலை மிகவோங்கி மிக இனிமையான இடமாயிருத்தலால், சூரியனும் அக்குத் தங்கி அப்பாற்செல்லுமாறு கருதுகின்றனனென்க. உறைந்தலதேகலம் - இரண்டு எதிர்மறைகள் ஒருடன்பாட்டை யுணர்த்தின. பாண்டுவின்மலை, இன் - சாரியை. பருப்பதம் - பர்வதமென்ற வடசொல்லின சிதைவு.

•'ஏகலனென்பது,' 'ஏகலனென்னரும்,' 'பாண்டுவம்மலை' என்று பிரதி பேதம். (உ0)

வேறு.

உக. முத்தீர்த்துப் பொன்றிரட்டி மணியுருட்டி முதுதீர்த்த
முன்றி லாயர், மததீர்தது மானீர்த்து மலையீர்தது மானீர்த்து வருவ
தியார்க்கும், புததீர்தது்டலையாமற் புலவர்நாடுதவவது புனிதமான,
வததீர்த்த மகன்கோதா விரியென்ப சம்மலையி னருகிற் றம்மா,

(இ - ள்.) முதி நீத்தம் - (தனது இடையறாதுபெருகுகின்ற) பழமையாகிய வெள்ளமானது,—முத்து ஈரத்து - முத்துக்களை யீழுத்துக்கொண்டும், பொன் திரட்டி-பொற்பொடிகளைச் சேரவடுத்துக்கொண்டும், மணி உருட்டி - இரத்தினங்களைத் தள்ளிக்கொண்டும், முன்றில் ஆயர் மத்து ஈரத்து இடையர்களுடைய முற்றங்களிலுள்ள மத்துக்களை யடித்துக்கொண்டும், மரன் ஈர்த்து - மரங்களை யீழுத்துக்கொண்டும், மலை ஈரத்து - கற்பாறைகளைப் புரட்டிக்கொண்டும், மான் ஈர்த்து - மிருகங்களை யீழுத்துக்கொண்டும், வரு, வது - வருகின்ற தன்மையுடையது; யார்க்கும் - (தனனில் மூழ்கியவர்) எவர்க்கும், புத் தீர்த்திட்டு - 'புத்' என்ற நரகத்தை வரவொட்டாமல் நீக்கி, அலையாம்ல் - அலைச்சற்படாதபடி, புலவர் நாடு உதவுவது - தேவலோகத்தைத கொடுக்கவல்லது; புனிதம் ஆன அ தீர்த்தம் - (இவ்வாறு) பரிசுத்தமான அந்தப்புண்ணியதீர்த்தத்தின் பெயரை, அகல கோதாவிரி எனபர் - பரந்தவளகோதாவரிநதியெனறு கூறுவர், (உலகத்தார்); (அர்த்தநதியானது),—அ மலையின அருகிற்று - அந்தப்பாண்டிமலையினருகேயுள்ளது; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்; அந்நதியின அருமைபெருமைகளை நோக்கி வியந்தவாறு.

'ஈர்த்து' எனற சொல் ஒருபொருளிலேயே பலமுறைவநதது - கொம் பொருட்பின்வருநிலையணி. 'புத்' எனபது மகப்பெறாதவர் அடைவதோர் நரகம். கோதாவரிநதியானது தனனில் நீராடியவர்களுக இம்மையிற புத்திர சந்தானமுண்டாகி மறுமையில நரகநிலையையும அழிப்பதாலின, 'யாராகும் புத்தீர்த்திட் டுலையாமற புலவர்நாடு உதவுவது' எனறார். முதிநீ - முகதா என்ற வடமொழியின சிதைவு, (இப்பியினறு) விடுபடுவது எனி அவயவப பொருள். மணி - நவரத்தினஙகளுகும பொதுபபபயர். முனறில் - வீட்டின்முனனிடம்: இல்முன எனபது முனறில எனி மாறியது - இலக்கணப் போலி. ஆயர் - பசுகளையுடையவர்; அனறி, 'ஆ - சாதிபபெயர; அதனை யுடையவர் - ஆயர்' எனக் கூறினுமாம. மத்து - மாநிம எனற வடசொலலின சிதைவு. புலவர் - விசேஷபுதநிலையுடையவர்; (புலம அலலதுபுலமை-தேர்ந்த (அறிவு.) இது, 'விபுதர்' எனனும வடமொழியின பொருள கொண்டது. அகல்+கோதாவிரி=அகனகோதாவிரி; ''குறில்லெறியாலன' எனனுஞ் சூதநிரதது 'பிற' என்ற மிகையால், தனிசகுறிலேச்சாராத லகர லலிவர னகரமாயிறறு. அருகிற்று - 'அருகு' எனற பகுதியடியாப்பிறந்த ஒன றனபாற்குறிப்புமுறறு.

'பொனனீர்த்து மணியீர்த்து,' 'மலரீரதது வருநதியார்க்கும்,' 'புத்தீர்த்துக்கதிகொடுத்துப் புதுதேலலோடுதவுவது,' புதத்தீர்த்தத நிரட்டலையாற் புதுதேலலோடுதவுவது' என்பன பாடாந்தரஙகள்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - பெரும்பாலும் முதல்நான்கு சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை இரண்டும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள்.

(உ0)

உஉ. அவ்வாறுகடந்தப்பாலறதாரேயெனத்தெளிந்தவருளி ஞானும்,வெவ்வாறுமெனக்குளிர்ந்துவெயிலீயங்காவகையிலங்கும் விரி பூஞ்சோலை, யெவ்வாறுமுறைதவறுவன்றியிருளாடமணியிமைப்பதி மைமீயார் வேண்டாத, தெவ்வாறுமுகதிதிருவுன றனிகேடநசுவ ணத்தைச்சோநிர்மாதீர.

(இ - ள்.) அ ஆறு கடந்து - அந்தக்கர்தாவாரி நுலையுத்தாண்டி,—அப் பால் - பிறகு, அரத்து ஊறு என - தருமமாகக்கம்போலவும், தெளிந்த அரு ளின காரும வெம் ஆறு எல உம - தெளிவாகிய அருளினால விளங்குகின்ற (யாவரும்) விரும்புதறகு உரிய [அருளமயமாகிய] மாசுகமாபோலவும், குளிர் ந்து - குளிர்ச்சியையடைந்து, வெயில் ஈயங்காவகைக் துலங்கும - சூரியனது கிரணங்கள் (தன னுல) நுழையாதபடி விளங்குகின்ற, விரிபூஞ்சோலை-மலர்ந்த புஷ்பங்கள் நிரம்பிய சோலைபரன ஆ, எ ஆறும உள அவனறி - எந்தபபகங் களிலும் [தனது இருகரைகளிலும்] மிகுதியாக விருவி, இருள் ஓட மணி இமைப்பது (அச்சோலையில் நிலைதிருந்த) ஓருன ஒருந்தவிடமுமதெரியாத படி ஓடுமாறு இரதத்தினகங்கள் பிரகாசிப்பதறகு இடமாகிய, இமைபோர் வேண்ட தே ஆறுமுகதது ஒருவன தனி கிடந்த சுவணத்தை - தேவாகன் பிராரதிதததலுல் ஆறுமுகங்களையுடைய ஒப்பறற முருகக்கடவுள தனியாக இருந்த சுவணநகியை, சேர்ந்தா - போயச்சேருவன; (எ - று)—மாது ஓ - ரதரசை.

கோபகுணத்தை வெவ்விபதாகவும, சாநதகுணத்தைத்தண்ணியதாகவும் கூறுதல. கவிமரபு. சோலையின் குளிர்ச்சி ஞான தருமமாகக்கத்தையும், தயா மாகக்கத்தையும் உவமைகூறினர். சுவணநகியான, தன னி இருகரைகளி லும சூரியகிரணஙகளும உடபுகாதவாறு மரஙகளட நிறத சோலைகள நிரம்பப் பெற்று அமைரஙகளின அடாதகியாற விசாலித்த ஒருளாதனனிடதது்ளள இரதநிலைகளிலெஞ்சாறற ப்பாகுமெனக குளிர்நது ஒலிகுமம சோலை என இயையும; குளிரநது கிடந்த சுவணநத்தை என்ற இயைபதைப் பொருள கொளளினுமாம. ''வெவமைம லெண்டல்'' எனனும் தொலகாபபியச் சூதத்தால், வெவ்வாறு எனபதறகு - விருமபதக்கக ஆறு எனப பொருள கூறப் பட்டது.

வெம்மையுடையது - வெயில் எனக காரணப்பெயர. 'தேவாறு முகத தொருவன' என்பது, எதுகைநயமநோகி 'தெவ்வாறு முகதொருவன' எனத் திரிந்துவந்தது. தேவனபது - தெயவத்திறகு ஒருபெயர; ஆறுமுகத் தொருவனுகிய மே எனக. இனி, தெவ ஆறுமுகத்தி ஒருவன என்றே எடுத்து - பகைவரையடகுகவல்ல ஆறுமுகங்களையுடைய ஒருவனெனக கூறு வாரு முளர்.

• 'தெவ்வாறு முகத்தொருவன் தனிகிடந்த சுவணம' என்பதிலுள்ள கணதலிலரம் விளங்கவில்லை; இனி, சுவணமெனபதை 'சரவணம்' எனபதன் திதைவாகக்கொண்டு, பெயரொறறுமைபாறறி, 'தெவ்வாறு முகதொருவன தனிக்கிடந்த' என்ற அடைமொழி கொடுத்துக்கூறின ரெனபாருமுளர். சர வணப்பொய்கையில் சுப்பிரமணியக்கடவுள பிறந்தன ரென்பது பிரசித்தம்.

'அறத்தாறேயதுதெரித்தவருளினனும்', 'வகையியங்கும்', 'எனத்து வணரியிருளாறுமணி' என்று பிரதிபேதம். (உஉ)

உங. சுவணத்தைக்கடந்தப்பாற்சூரியகாந்தகமென்னத்தோன்றிமாதர், கவணுமிழ்கல்வெயிலியங்குங்கவலையுஞ் சந்திரகாந்தகமுங்காண்பீ, சுவணவைரீதமேதகியபினகளுடபலகடந்தாலனந்தனென்பா, னுவணபதிக்கோளிதுதுறையுங்கொங்கணமும் குலிந்தமுஞ்சென்றுறு திர்மாதோ.

(இ - ன்.) சுவணத்தை கடந்து - சுவணமென்னும் நதியைத் தாண்டி, அப்பாஅ - பிறகு, சூரியகாந்தகம எனை தோனறி மாதர கவண் உமிழ் கல் வெயில இயகுமு கனம வரையும் - சூரியகாந்தமென்று கூறுமபடி பிரகாசித்தி• பெற்ற அமமலையிலுளள மகளிரா லெறியப்பட்ட கவண்கயிறறிலிருந்து வெளிப்படுங் கற்கள் வெயிலைமக்குகினற பெரியமலையையும, சந்திரகாந்தகமும் - சந்திரகாந்தமலையையும், காண்பீர - தேடிப்பாருங்கள்; அவண் அவை நீத்து ஏகிய பின் - அவவிடததிலுள்ள அம்மலைகளை விட்டு அப்பாற்சென்ற பிறகு, அகல் நாடு பல கடந்தால் - விசாலமாகிய நாடுகள பலவற்றைக் கடந்து சென்றால், அனந்தன எனபான் உவணபதிக்கு ஒளித்து உறையும் கொங்கணமும் - ஆதிசேஷன் பட்சிராசனுகிய சருடனுக்கு அஞ்சி மறைந்துவசிக்கின்ற கொங்கணதேசத்தையும், குலிந்தமும்-குலிநத தேசத்தையும், சென்று உறுதிர் - போய்ச்சேர்வீர்கள; (எ - று.)—மாது ஓ - ஈற்றசை.

ஸூரியகாந்தம் - சூரியனைக்கண்டபோது நெருப்பையுமிழும் கல்; அக்கல்லையமான மலை, சூரியகாந்தக மெனப்படும் சந்தரகாந்தம் - சந்திரனைக் கண்டபோது தண்ணீரைக்கால்வது; அககல்லையமான மலை, சந்திரகாந்தக மெனப்படும, தினை முதலியவற்றின கதிர்களைக்கிளிமுதலிய பறவைகள் உண்டிடாமைப்பொருட்டு வேட்டுவமாதாகள அருகிலமைக்கப்பட்ட பரண்களிற் காவலாக இருந்து அங்குள்ளகறகளை யெடுத்துக கவண்கயிறுகொண்டு வீசிப் பறவைகளை யோட்டுதல இயல்பு; கவண் - கலலெறிகயிறு. மகளிர் சூரியகாந்தக மலையிலுளள கற்களை யெடுத்துக் கவண்கயிறுகொண்டு வீசுதலால், அவை வெயிலை உமிழ்வனவாயின வென்க.

அநந்தன் - பிரளயகாலத்திலும் அழிவில்லாமல் நிற்பவன்; அந்தம் - அழிவு: உவணபதி - உவணஞ்சியபதி யென இருபெயரொட்டு. உவணன் - ஸுபர்ணன்; அழகிய சிறகையுடையவ னென்பது, அவயவப்பொருள். 'சுவணதது,' 'காண்டிர்', 'குலிங்கமும்' எனவும் பாடம். (உங)

உச. அரனதிகனுலகளந்தவரியதிகனென்றுரைக்குமறிவிலோர்க்குப் பரகதிசென்றடைவரியபரிசேபோற்புகலரியபண்பிற்றுமாற், சுரநதி யினையலதுவான்றோய்குடுமிச்சுடர்த்தொகைய தொழுதோர்க்கெல்லாம், வரனதிகருதருதகையவருநதியாநெடுமலையைவணங்கியப் பால.

(இ - ன்.) 'அரன் அதிகன் - சிவபிரானே சிறந்தவன்; உலகு அளந்த அரி அதிகன - உலகங்களை (தனது பாதங்களினால்) அளவிட்ட திருமாலே

சிறந்தவன்,' என்று உரைக்கும் - என்று (இவ்விஷயத்தைப் பகுத்துணர்ந்து) கூறவல்ல, அறிவு - தத்துவஞானம், இலோர்க்கு - இல்லாத மூடர்களுக்கு, பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல் நற்கதியைச்சென்று சேர்வது அருமையான தன்மையுடையதாதல்போல, புகல் அரிய பண்பிற்று ஆம் - பிரவேசித்தற்கு அரிய தனமையுள்ளதாகிய,—சுரநதியின் அயலது - (வானத்தில் செல்லுகின்ற) தேவகங்கையின் அருகிலுள்ளதும், வான் தோய் குடுமி சுடர் தொகைய(து) ஆகாயத்தையளாவிய (தன து) கொற்களிலே (சூரிய சந்திரர்களாகிய) இருசுடரும் சேர்தலே யுடையதும், தொழுதோர்க்கு எல்லாம் அதிகம் வரன்தரும் தகைய(து) - (தன்னே) வணங்கினவர்க்கெல்லாம் சிறந்தவரங்களைக்கொடுக்கும் பெருமையுடையதுமான, அருங்கதி ஆம் மெரு மலையை - அருந்ததியென்னும் பெரியபருவத்தை, வணங்கி-(நீங்கள் சென்று) தொழுது, அப்பால் - பிறகு,—(எ-று)—அடுத்த கவியில் 'அதன்புறஞ்சார வேகிர்' என்பதனோடு முடியும். இரண்டாமடியின் ஈற்றில் ஆல் - ஈற்றசை.

திருமாலே பரம்பொருளாயிருக்கவும் அதனே யுணராமாட்டாது 'சிவபிரான் சிறந்தவனே? அன்றி, திருமால் தான் சிறந்தவனே?' என்று ஒரு வகையாலும் தெளிவுறாமல் கலங்கிக் கூறுகின்ற மூடர்க்கு நற்கதி சேர அரிதாயிருக்கு மதுபோல, இவ்வருந்ததிமலையும் ஒருவர்க்கும் சேர அரிதாயிருக்கு மென்க. திரிவிக்கிரமாவதாரத்தைக் குறிக்கும் 'உலகளந்த' என்ற அடைமொழியைத் திருமாலுக்குச் சேர்த்துக் கூறியதனால், பிரமலோகமூட்பட எல்லாவுலகங்களையும் தனது திருவடிக்குக் கீழ்ப்படுத்திக்கொண்ட செருப்பையும், சிவபிரான் தனது சிரமேற்கொள்ளுமாறு திருவடியினின்று கங்கையைப் பயந்த மேண்மையையும் வெளிப்படுத்துதல் மூலமாக அத்திருமாலே பரதத்துவமென வெளியிட்டனரென்க இவ்வாறு மேண்மையைப்புலப்படுத்தும் அடைமொழியொன்றும் சிவபிரானுக்குக் கொடுத்துக்கூறுதனி, கருதத்தக்கது. 'அரனகிசமுறவளர்ந்த வரியதிக மெண் ணுணராவறிவிலார்க்குப், பரகதிசென்றடைவரிய பரிசேபோல்' என்ற பாடம் இனிது பொருள்படும் இனி, மூதலடிக்கு - திரிமூர்த்திகளிற் சேர்ந்த சிவபிரானேயும் திருமாலேயும் சமமாகக்கருதாமல், 'சிவபிரான் தான் சிறந்தவன், அல்லது திருமால்தான் சிறந்தவன்' என்று பட்சபாதமாகக்கூறுகிற தத்துவ ஞானமில்லாத மூடர்கு என்று பொருள்கூறுவாரு முளர்; 'அரியும் சிவனும் ஒன்று; அன்று என்பவர் வாயில் மண்ணு' என்ற உலகத்திற் சாமானியமாக வழங்குகின்ற பழமொழியின் கருத்துக்கொண்டது. இவலிரண்டாவது பொருள்.

'பண்பிற்று ஆம் மலே, அயலது மலே, சுடர்த்தொகையமலே, கருத்தகைய மலே எனத் தனித்தனி இயையும். அரன்-ஹரன்என்ற வடமொழியின் திரிபு; சங்காரக்கடவுளென்பது பொருள்; அடியவர் துயரை யழிப்பவ ரெனினு மாம். அரி - ஹரி: அடியார்களின் பாவங்களே யழிப்பவன். பரகதி - சிறந்த கதி; மோக்ஷம் ஸுரநதி - தேவர்களின் நதி: கங்கையென்கின்ற புண்ணிய நதியானது, தேவலோகத்தில் மந்தாகினியென்றும், நிலவுலகத்தில் கங்கை யென்றும், பாதாளலோகத்தில் போகவதியென்றும் பெயர்பெறு மென்க.

ஸுரர் - தேவர்; (பாற்கடலினின்று தோன்றிய) ஸுரையை [மதுவைப்] பானஞ்செய்தவர், சுடர் - நவகிரகங்களுமாம்

'பண்பிற்றம்மா', 'வான்றொடுகுடிவிச் சுடர்த்தொகையை', 'சுடாது தொழுதோர்க்கெல்லாம், வரணதிகந்தருந்தகையதருந்ததியாம்,' 'அருந்ததி சேர்நெடுவரையை' என்று பிரதிபேதம். இப்பாடல், சிலபிரதிகளில் இல்லை.

உரை. அஞ்சுவருந்திவெஞ்சுரனும்வெம்பாறுமகன்பெருஞ்சுனையுமகிலோங்கார, மஞ்சிவருநெடுங்கிரியும் வளர்காடும்பிற்படப்போய்வழிமேற்சென்று, னஞ்சுவருவிடற்றரவுக்காயிழ்தூணிகொடுத்தாயைக்கலுழனண் ணுறு மெஞ்சின்மரகதப்பொருப்பையிறைஞ்சிபதன்புறஞ்சார வேகிர்மாதோ.

(இ - ள்) அஞ்சு வரும் வெம் சுரனும் - (எல்லாப்பிராணிகளும்) அஞ்சு தலைப் பொருந்துகின்ற வெப்பமுள்ள பாலைவனமும், ஆறும் - நதிகளும், அகல் பெருஞ் சுனையும் - அகன்ற பெரிய சுனைகளும், அகில் ஒங்கு ஆரம் மஞ்சு இவரும் நெடுங்கிரியும் - அகில்மரங்களும் உயர்ந்துவளர்ந்த சந்தன மரங்களும் மேகங்களும் தம்மீது பொருந்தப்பெற்ற நீண்டமலைகளும், வளம் காடும் - வளப்பமுள்ள தேசங்களும், பின்பட போய் - (உமது) பின்புறத்தனவாம்படி (அவைகளைக்கடந்து)சென்று, வழிமேல் சென்றால் - அப்பாலுள்ள வழியில் கடந்துசென்றால்,—கலுழன் - கருடனைவன், நஞ்சுவரும் விடற அரவுக்கு - விஷம்பொருந்திய வாயையுடைய நாகங்களுக்கு, அமிழ்து நனி கொடுத்து - அமிருதத்தை நன்றாகக்கொடுத்து, ஆயை நண்ணும் - (தனது) தாயாகிய வினதையை (அடிமைத்தொழிலினின்று விடுவித்தற்கு) கிட்டுதற்கு இடமான, எஞ்சு இல் மரகதம் பொருப்பை - குறைவில்லாத மரகதமலையை, இறைஞ்சி - வணங்கி, அதன் புறம் சார எகிர் - அம்மலையின்பக்கத்து வழியாக அப்பாற் செல்லுங்கள்; (எ - று.)—மாது ஓ-சாற்றசை.

பாலைவனத்தின் மிகவெம்மையை விளக்குதற்கு, 'அஞ்சுவரும்வெஞ் சுரனும்' என்றார். மேகமண்டலத்திற்கும் அப்பால் செல்லுமளவு மலையின் சிகரம் என்றற்கு 'மஞ்சிவருநெடுங்கிரி' எனப்பட்டது. பிடறு - தொண்டையின்பெயர், வாய்க்கு இலக்கணை. அகில் - கரியபமுனிவரது மனைவியாகிய கத்துருவென்பவளது வயிற்றிற் பிறந்த நாகங்கள்; பால்பகா அஃறிணைப்பெயர். ஆய் - யாய் எனபதன் மரூஉ. கலுழன் - கருடன் என்ற வடசொல்லின் சிதைவு. கரியபமுனிவரது மனைவியாகிய வினதையினிடம் பிறந்தவன். 'அகிலோங்காரமஞ்சிவருங்கெடுங்கிரி' என்பதற்கு, அகிலையும் ஒங்கிய சந்தனமரங்களையு முடையதும் மேகங்கள்தவழப்பெற்றதுமான கெடுங்கிரி யெனினுமாம்: கருத்து ஒன்றே.

கருடன் அரவுக்கு அமிழ்துகொடுத்த வரலாறு:—கரியபமுனிவரது மனைவியாகிய வினதைக்கும் கத்துருவுக்கும் வானத்திற்சென்ற உச்சைச்சிரவமென்ற தேவலோகத்துக்குதிரையின் வாலினது நிறத்தைப்பற்றி யுண்டான விவாதத்திற் கத்துருவென்பவள் அக்குதிரையின் வாலைச்சுற்றிக்கொண்டு கருநிறமாகத் தோன்றுவிக்குமாறு தனதுபுதல்வராகிய கருநாகங்களை யேவிப் பந்தயத்தை வென்றனளாக, அதனால் அக்கத்துருவுக்கு அடி

மையாய்விட்ட விரதையும் அவளது புதல்வனை கருடனும் கதருவையும் அவளதுபுதல்வரான நாகங்களையும் சுமக்கசெல்லவேண்டியதாக, அதைக்கண்ட கருடன் அவ்வடிமையினின்றுநீக்குமாறு அந்நாகங்களின் மொழிப்படியே அமிருதத்தைக் கொணரும்படி அங்குநின்று தேவலோகத்துக்குச்சென்று தேவர்களுடன் பொருது எல்லாரையும் வென்றபொழுது தேவேந்திரனது வேண்டுகோளினால் அமிருதத்தை மீட்கும் உபாயத்தை அவனுக்குக் கூறி, தான் சர்ப்பங்களையுண்ணுமாறு அத்தேவேந்திரனிடத்தினின்று வரமும் பெறவும், அங்குநின்று அமிருதத்தையெடுத்துவந்து பாதாளலோகத்தை யடைந்து அமிருதத்தைத் தர்ப்பையின்மீது அந்நாகங்களின்முன்னர் வைத் திட்டுத் தமது அடிமைத்தன்மையை நீக்கிக்கொண்டு, அவர்களையெல்லாம் அமிருதத்தை யுண்ணுதற்காக ஸ்நானஞ்செய்துவரும்படி தக்ஷிராகச்சொல்ல, அந்நாகங்கள் முழுகுவதற்குபோயிருக்கையில் கருடனது மொழியின்படியே தேவேந்திரன் அங்குவந்து அமிருதத்தையெடுத்துச் சென்றனனாக, முழுகச்சென்ற நாகங்கள் விரைந்துவந்து பார்த்து அமிருதமில்லாமையைக்கண்டு வருத்தத்தோடு அவைவைக்கப்பட்டிருந்த இடத்தை நக்கியதனால் அத்தருப்பை அவர்களது நாவை யறுத்துவிட, அவர்கள் பிளவுபட்டநாவையுடையராய் கருடனது உபாயத்தை நினைந்து அச்சமும், நா அறுபட்டதனால பெருக் கியரமும் அடைந்தன ரெனபதாம்.

'அஞ்சிவரும்,' 'கொடுத்தறிவுகலுழன்,' 'பொருப்புமிறைஞ்சி யதன் புறஞ்சாரலெய்திமாதோ,' 'எனமாதோ' எனவும் பாடாந்தரம். (உஞ)

உசு. வடசொற்குத்தென்சொற்றும்வரம்பிற்றுய் நான்மறையு மற்றை நூலு, மிடைசொற்றபொருட்டெல்லாமெல்லையதாய் நல்லறத துக்கீறுயதேவு, புடைசுறறுந்தூணியினறிப்புகழ்பெறாதிதமெய்ய போறபூதநின்ற, வடைசுற்றுநதண்சாரலோஙிய வேஙகடதநிற் சென்றடைதிமாதோ.

(இ - ள்) வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்று ஆய் - வடதிசை யில்வழஙகும மொழியாகிய ஸம்ஸகருதத்திறகும் தென்திசையில்வழங்கும் மொழியாகிய தமிழுக்கும எல்லையாகியும், நல்மறையும் மறறை நூலும் இடை சொற்ற பொருட்கு எல்லாம எல்லையது ஆய - நானகுவேதஙகளும் மற்றைச் சாஸ்திரங்களும் தமமிடதநில் கூறியுளள எல்லாப்பொருள்கட்கும் முடிவானபொருளே யுடையதாகியும், நல் அறதநிக்கு ஈறு ஆய் - சிறந்த தருமஙகட்கெல்லாம் வரம்பாகியும, புடை சுறறும் தூணி வேறு இன்றி - பக்கதநிலெடுத்துச் சொல்லத்தகக உபமானப்பொருள் வேறொன்றுமில்லா மல், புகழ்பொதிந்த மெய்யே போல் பூத்தநின்ற - கீர்தநி நிரமபிய சரீரத் தைப்போல் விளங்குகின்ற, அடை சுறறும் தண் சாரல் - தேன்கூடுகளாற சுற்றிலும் நிரம்பப்பெற்ற குளிர்ச்சியான தாழ்வரைகளையுடைய, ஓங்கிய - மிதவும்.உயர்ந்துள்ள, வேங்கடத்தில் - திருவேஙகடமலையில், சென்று அடை திர் - போய்ச்சேருங்கள்; (எ - று.)—மாது ஒ - ஈற்றசை.

ஸம்ஸ்கருதபாரஷையானது ஆதியில் திருவேங்கடமலைக்கு வடபுறத்தி லுள்ள காஞ்சிமுதலிய தேசங்களில் மிகுதியாகவழங்கிவந்த தாதலின், வட

மொழி யெனப்படும். அவ்வாறே திருவேங்கடமலைக்குத் தென்புறத்தில் வழங்கிவந்த தமிழ்ப்பாஷை தென்மொழி யெனப்படும் இவ்விருமொழி களும் மிகுதியாக வழங்கும் நிலங்களுக்கு இடையேநின்று எல்லைகுறிப்பத னால், திருவேங்கடமலையை 'வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்று' என்றார். "வடவேங்கடம் தென்குமரி" என்னுமிடத்தில், இத்திருவேங் கடமலையைத் தமிழுலகத்திற்கு வடவெல்லையாகக் கூறியதுங் காண்க. நான்குவேதங்களிலும் அவவேதங்கட்கு உபப்ரும்ஹணமாகிய இதிகாசம் புராணம் முதலிய மற்றைநூல்களிலும் எடுத்துக்கூறப்படும் பொருள்களா கிய கடவுளர்யாவரிலுஞ் சிறந்த முழுமுதற்கடவுளான திருமாலைத் தன்னிடத் திற்கொண்டுள்ளது இது வென்பது, 'நான்மறையும் மற்றைநூலு மிடை சொற்ற பொருட்கெல்லாம் எல்லையது' என்பதன் கருத்து, நல்லறத்துக்கு ஈறு - எல்லாத்தருமங்கட்கும் கடையெல்லை; இம்மலையிலே தருமங்களெல் லாம் குறைவின்றி நிறைந்திருக்கின்றன வென்க. 'வேறுபுடைசுற்றுக் கிணையின்றி' என்பதற்கு - இதற்குச்சமானமாக உடன்வைத்துச்சொல்லத் தக்க மலை வேறொன்றுமில்லை யென்று கருத்து. புகழ்பொதிந்தமெய் - புக ழுடம்பு; பூதவுடம்பு அழிந்தாலும் கீர்த்தியாதது தான அழியாது என்று உலகத்திலுள்ளார் பலராலும் கொண்டாடப்பட்டு விளங்குதல்போல, திரு வேங்கடமலையும் தான் அழியாதென்று உலகத்திலுள்ளார் பலராலும் துதி செய்யப்பட்டு விளங்குதலால், அம்மலைக்குப் புகழுடம்பை உவமைகூறினர். 'புகழ்பொதிந்தமெய்யேபோல்' என்பதற்கு - புகழ்நிரம்பிய சத்தியம்போல எனக் கூறுவாரும், 'புகழ்பொதிந்தமெய்யேபோற்பூத்துநின்ற' என்பதைச் சாலுக்கு அடைமொழியாக்குவாரும் உளர்.

வேங்கடம் என்பது - திருமாலின் திவ்வியதேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலதும், 'கோயில் திருமலை பெருமான்கோயில்' என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்ற மூன்றுதலங்களுள் இடையதுமாகிய தலம். தன்னையடைந்தவர்களுடைய பாவமனைத்தையும் ஒழிப்பதனால், 'வேங்கடம்' எனப் பெயர்பெற்றது; வடசொல். வேம் - பாவம், கடம் - எரித்தல் எனப் பொருள் காண்க. (இதனை, "அத்திருமலைக்குச் சீரார்வேங்கடாசல மெனும்போ, வைத்தன ரது வேதென்னில் வேமனவழங்கெழுத்தே, கொத்தறபவத்தைக்கூறும் கட வெனக்கூறிரண்டாஞ், சுத்தவக்கரங் கொளுத்தப்படு மெனச் சொல்வர் மேலோர்," "வெங்கொடும்பவங்களெல்லாம் வெந்திடச்செய்வதால் நல், மங்கலம்பொருந்துசீர் வேங்கடமலையான தென்று" எனறும் புராணச் செய்யுள்களாலும் அறிக.) அன்றி, வேம்எனபது - அழிவின்மை, கடம் என்பது - ஐசுவரியம்; அழிவில்லாத ஐசுவரியங்களை (தன்னையடைந்தார் க்கு)த் தருதலால், வேங்கடமெனப்பெயர்கொண்டது எனறு வராகபுராணத் திற் கூறப்பட்டுள்ளது.

மறைவாகிய [அரிய]பொருளையுடைமையாலும், சிலசாதியார்க்கும்பெண் பாலார்க்கும் ஓதவும் கேட்கவும் ஆகாதென்று மறுக்கப்படுவதாலும், வேதத் திற்கு 'மறை' எனறு பெயர். மற்றைநூல் - சிட்சைமுதலிய ஆறுவேதாங்

கங்களும், இராமாயணம் முதலிய இதிகாசங்களும், பிராம்மம் முதலிய பதினெண்புராணங்களும், மநுமுதலிய ஸ்மிருதிகளுமாம். நூல் - பஞ்சைக் கொண்டு நூல் நூற்கப்படுதல்போலச் சொறகளைகொண்டு ஆக்கப்படுதலாலும், நூல் மாம முதலியவற்றின கோணலையறிந்து தீர்ததற்குக் கருவியாதல் போல மனிதர்களது மனதினகோணலையறிந்து போக்குவதறகுக் கருவியாதலாலும்; நூல்என்பது - உவமையாகுபெயராம், இனி பலமணிகளை கோக்கப் படும் நூல்போலப் பல பொருளகளை ஒழுங்காகப் பொருததப்பெறுவது நூல் என்றும், நூல் பொம்மைகளை யாட்டுவிப்பதுபோலப் பொருள்களை நடைபெறச்செய்வது நூலெனறும் இங்ஙனம் ஏறறபடி காரணங்கற்பித்துக் கூறலுமாம். சாரல் - சார்ந்துளள இடதததிறகுத தொழிலாகுபெயர்.

'வடசொற்குந் தெனசொற்கு நான்மறைக்கும் வரம்பாகி மற்றை நூலி, னிடை சொற்றபொருட்கெல்லா மறிவினுகு மீறுய வெறுழ்பொற்குன்றம், 'வரம்பாகுநான்மறையும,' 'நல்லறிவி றுகீறுய்,' 'உடைசுறறும்', 'அடல் சுற்று நெடுஞ்சாரல்,' 'செனறறுகிர்' எனபன - பாடாந்தாங்கள- (உக)

உள. இருவினையுமிடைவிடாவெவ்வினையுமியற்றுதே - யிமையோ ரேத்துந, திருவினையுமிடுபதநதீர்சிறுமையையுமுறையொப்பத் தெளிநதுநோக்கிக, கருவினைய றப்பிறவிக்கென்றுணர்ந்தகதகளை யுங்கடையின்ஞானத், தருவினையின்பெரும்பகைஞாண்டுளரீண்டி ருந்து மடிவணங்கற்பாலார்.

(இ - ள.) இருவினையும் இடைவிடா எ வினையும் இயற்றுதே - (நல் வினை தீவினைகளாகிய) இருவகைவினைகளும் இடைவிடாமற் சம்பந்தப்பட்டுள்ள எந்தககருமஙகளையும செய்யாமல்,—இமையோர் ஏத்தும் திருவினையும் - தேவர்களும் புகழும்படியான பெருஞ்செல்வ வாழ்க்கையையும, இடுபதம் தோ சிறுமையையும் - (பிறர் பிச்சையாக) இடுஞ் சோற்றை எதிர்பார்த்திருக்கின்ற தாழ்வையும் [தரித்திரவாழ்க்கையையும்], முறை ஒப்ப தெளிந்து நோக்கி - ஒனறற்கொனறு சமமுடையதாகத் தெளிந்த அறிவுகொண்டு பார்த்து,—இ பிறவிக்கு கருவினையது எனறு உணர்ந்து - 'இந்தப்பிறப்பு உண்டாவதற்கு மூலகாரணம் இருவினைகளேயாகும்' எனறு அறிந்து, அதகளையும்-அவவினையின தொடர்பை நீக்குதற்குரிய, கடை இல் ஞானத்து - எல்லையில்லாத தத்துவஞானத்தையுடைய, அரு வினையின பெரும் பகைஞர் - (போக்குதற்கு) அரிய இருவினைகட்கும் பெருஞ் சத்துருக்களாகிய பெரியோர், ஆண்டு உளர் அம்மலையிலிருகினறார்கள; (அவர்கள்), சண்டு இருந்தும் அடி வணங்கல் பாலார் - (கோரிச்சென்றன்றி நாம்) இங்கிருந்த வாறேயும் [திக்குநோக்கித்] தண்டஞ்சமர்ப்பிற்றற்கு உரியவராவர்; (எ - று.) —அங்கு - அசை.

பயன்கருதி ஒருவினையுஞ் செய்யாமல் செல்வத்தினிடத்தும் வறுமையினிடத்தும் சமபுத்தியை யுடையவர்களாய், பிறபுகுகுக் காரணமான இருவினைகளையும் ஒழிக்குங் கருத்துக்கொண்டு, தத்துவஞானம் வாய்ந்து, திக்கு நோக்கியும் தண்டஞ்சமர்ப்பித்தற்கு உரியராயுள்ள பெரியோர்கள் அத்திரு

வேங்கடமலையில் வாழ்கின்றன சென்ற மனிதர் எந்தத்தொழில் செய்தாலும் புண்ணியபாவங்கட்குச் சம்பந்தப்பட்டு அது அதற்குரிய வினைப்பயனை யூட்டுமாதலால், 'இருவினையுமிடையிடா வெவ்வினையும்' என்றார்; நீவினை இரும்புஞ்லிலவருபோலவும், நல்வினை பொன்விலங்குபோலவும் கினறு மோட்சத்திற்குச் செல்லவொட்டாமற் பந்தமுறுத்துதலால், இருவினையும் ஞானிகட்கு ஆகாவென்க. இஞ்ஞானிகள் தாம்செய்யும் வினைகளெல்லாம் பகவத் கைங்கரியமாகவன்றி, ஒருபயன்கருதிச் செய்யாராதலால், அவர்கள் எவ வினையும் இயற்றாதவராவர். ''ஸமலோஷ்டகாஞ்சந: [மண்கட்டியினிடத்தும் பொன்னினிடத்தும் சாமியபுத்தியுடையவன்]'' என்றபடி பெருஞ்செல்வத் தையும் பெருவறுமையையும் ஒருநிகராகக் கருதுந்தன்மை யுடையவரென பது 'இடையோரேத்துந் திருவினையும் இடும்பதந்தேர் சிறுமையையும் முறை யொப்பத் தெளிந்தநோக்கி' என்பதனுறைபோதரும், பதம் - சோறு, 'இமை யோரேத்துந் திரு'என்றது - எப்பொழுதும் மிக்க இனபத்திலேயே மூழ்கிக் கிடக்குந் தேவர்களும் அதனிலான இனபத்தைக் கண்டு வியக்கும்படியான செல்வமென்று செல்வத்தின் சிறப்புக கூறியவாறு. முதலடி-முற்றுமோனை.

வினை - மனம் வாக காயம் எனனுந் திரிகரணங்களாலும் உயிர்கள் செய்துகொண்ட புண்ணியபாவங்கள், அந்தகர்மம் - சஞ்சிதம் பிராப்தம் ஆகாமியம் என மூனறு வகைப்படும். அவறறில், சஞ்சிதமாவது - பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளினபயன கள்; பிராரப்தமாவது - அவவினைப்பயனகளுள இறந்த உடமபுகளால் அநுப வித்தன போகப் பிறந்த உடமபால் அநுபவிக்கத தொடஙகியவை; ஆகாமிய மாவது - எடுத்த இப்பிறப்பிற் செயயப்படுவன; இவவினைகள பிறப்புக்குக் காரணமாதல் காண்க. வினை, கர்மம் என்பன - ஒருபொருட் சொறகள. வினை - சாதியொருமை தமது பரப்பிரமஞானத்தால இருவினைதொலலை சன் தம்மை அணுகாது போகஙகிகொள்ள வலலவனெனபது, 'ஞானத்தரு வினையின பெரும்பகைஞர்' என்பதன தேர்ந்த பொருள. 'ஈண்டிருந்து மடி வணங்கற்பாலார்' என அந்தத் ததஜ்ஞானிகளின் மேனமையை விளகினார். 'ஆண்டெளிண்டிருந்தும்' எனனுமிடத்திற பிராகிமென்னுஞ் சொல் லணி காண்க.

'இடைவீடா தெவ்வினையும்,' 'இமையோரெய்தும்,' 'கதங்கோயுங் கடையின் ஞானத்து', 'வணங்கலரவார' எனறும் பாடம. (உஎ)

உஅ. சூதகற்றுந் திருமறையோர்துறையாடுநிறையாறுஞ்சுரு தித்தொன்னூன், மாதவத்தோருறைவிட னுமையுறங்குமணித் தடனும்வானமாதர், கீதமொதகிண்ணரங்களின்னரம்புவருடுதொ றுங்களக்குமோதை, போதகத்தின்மழக்கன்றும்புலிப்பறழுமுறங் கிடனும்பொருகற்றம்மா.

(இ - ள்.) சூத அகற்றும் திரு மறையோர் ஆடு துறை நிறை ஆறும் - வஞ்சனையையொழித்த சிறந்த பிராமணர்கள் இறஙகிமூழ்குகின்ற துறைகள் நிரம்பவுள்ள நதிகளையும், சுருதி தொல் நூல் மா தவத்தோர் உறைவ இட

னும் - வேதங்களையும் பழமையான சாஸ்திரங்களையும் அறிந்த பெருந்தவத் தையுடைய மூனிவர்கள் வசிக்கின்ற ஆச்சிரமங்களையும், மழை உறங்குமணி தடனும் - மேகங்கள் தங்குகின்ற இரத்தினங்களையுடைய தாழ்வரைகளை யும், வானம் மாதா கீதம் ஒத்த கின்னரங்கள் இன் நரம்பு வருடி தொறும் கிளக்கும் ஓதை போதகத்தின் மழ கன்றும் புலி பறழும் உறங்கு திடனும் - தேவதாஸ்திரீகள் இசைப்பாட்டுக்கு இணங்கின கின்னரமெனனும் இசைக கருவிகளினுடைய இனிய நரம்புகளோத தடவுமபொழுதெல்லாம் உண்டா கின்ற ஓலையிலுல் யானைகளின இளங்கன்றுகளும் புலிக்குட்டிகளும் (தம் முனவிரோதமற்றுத்) தூங்குகின்ற இடங்களையும், பொருந்திறது பொருந்தி யுள்ளது, (அத்திருவேங்கடமலை); (எ - று.)—அம்மா - அம்மலையின் சிறப் பைக் கருதிய வியப்பிடைச்சொல்.

அம்மலையில் தேவமாதர்கள் வந்து கின்னரவாத்தியங்களாக கொண்டு வாசிக்கின்ற இன்னிசையைக கேட்டு ஒன்றோடொன்று பகைக்குந் தனமை யுள்ள யானைகளுறுகளும புலிக்குட்டிகளும தம்மூட்பகைமைநீங்கி ஓரிடத த்திலேயே வந்து உறங்குமெனை, பினனிரண்டடிகளால் மலையினது சாகத குணமுண்டாகக் தனமையையும, இசையினிமையையும எடுத்துக்காட் டியவாறு.மறையோர - வேதியர்; துறை - நீரிலிறங்குமிடம். ஆறுகள - அம மலையிலுளள ஆகாசகங்கை, பாபவிநாசம முதலியன. சுருதி - ஸ்ருதி; எழுதாக கிளவியாய்க் குருசிஷ்யக்ரமமாகக் காணபரம்பரையில் கேட்டே தெரிந்துகொள்ளப்படுவது என வேதத்துக்குக காரணகுறி. தவம் - தபஸ: அஃதாவது - மனம் பொறிகளின்வழியாய்ப் புலனகளின மேறபோகாது நிற் றற்பொருட்டு விரதங்களால் உணவுசுருக்குதலும், கோடைக்காலத்திற பஞ் சாக்கினிமத்தியிலும மழைக்காலத்தில மழையிலும பனிக்காலத்தில நீர்நிலை யிலும் பாறியேறறல்முதலும முதலிய அருஞசெயல்களை மேற்கொண்டு அவற றால் தனகுவருந் துன்பங்களைப் பொறுத்தல். கின்னரம - ஓர்வகைக்ரமபுக் கருவி; வீணையெனபாரு மூளர். போதகம - பத்துவருஷத்து யானைக்கனறு; வடசொல். இங்கு, யானையெனறமாத்திரமாய் நின்றது. ''யாளையுங் குதிரை யுங் கழுதையுங் கடமையு, மாஞை டைந்துங் கனறெனற் குரிய'' எனற தொல்காப்பியத்தால் 'போதகத்தினமழக்கனறு' எனறும், ''நாயே பனறி புலி முயல் கான்கும், ஆயுங்காலைக் குருளை யெனப,'' ''நரியு மறறை நாடி னர் கொளினே,'' ''குட்டியும் பறழும் கூற்றவண் வரையார'' என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களால் 'புலிபபறழ்' என்றது கூறினர். மழ - இள மைகுறிக்கும் உரிச்சொல.

"சுருதத்தின் றிருமறையோர,' 'தோதவதத்தித் தூய்மறையோர நிறை யோடுந்துறையோடு,' 'கீதமுறறகினனரகன,' 'கினாகருமோதை' எனபன பாடாந்தரங்கள். (உ அ)

உகூ. கோடுறுமால்வரையதனிக்குறுகுகிரேதுங்கெடியகொடுமைநீங்கி
வீடுறுதிராதலினுன்விலங்குநிபபுறத்துரோமவுதெரண்டை
நாடுறுகிருற்றதனினாடியதற்பின்னியவைநளிரோப்பொன்னிச்
சேடுறுதண்புனற்றெய்வதகிருதியினிருகரையுஞ்சோர்மாதோ

(இ - ன்.) கோடி உறு மால் வரை அதனை குமுகுதிர் எல் - சிகரங்கள் பொருந்திய பெரிய அத்திருவேங்கடமலையை நெருங்கினீர்களாலல், (அத்தலத்தின் மகிமையால்), உம் நெடிய கொடுமை நீங்கி வீடு உறுதிர் - உங்களுடைய மிக்க கொடும்பாவங்களெல்லாம கழிய உடனே மோக்ஷமடைவீர்கள்; ஆதலினன் - ஆதலால், விலங்குதிர் - (அங்குபோய்ச்செல்லாது) விலகினவர்களாய், அப்புறத்து - அப்பாலுள்ள, நீர் மேவு தொண்டை நாடு - நீர்நிறைந்த தொண்டைநாட்டை, உறுதிர் - சேருங்கள்; உற்று - அவ்வாறு சேர்ந்து, அதனை நாடி - அந்நாட்டில் தேடி, அதன் பின்னை - அதற்குப்பிறகு, நளி நீர் பொன்னி சேடு உறு தண் புனல் தெய்வம் திரு நதியின் இரு கரை அமையும் - பெருந்தன்மையையுடைய [கம்பீரமான தோற்றமுள்ள] பொன்னி யென்னும் பெயர்கொண்ட சிறப்புவாய்ந்த குளிர்ந்த நீர்நிறைந்த தெய்வத்தன்மைபெற்ற காவேரிநதியினது இருகரைகளிலும், சோதி - சென்றுசேர்ந்து (சீதாபிராட்டியைத்) தேடுங்கள்; (எ - து) —மாது ஒ - ற்றலை.

திருவேங்கடமலையிற் பிரவேசித்தமாத்திரத்தில் இருவினைத்தொல்லைகளும் ஒழிந்து நீங்கள் முத்தியடைவீர்கள; அவ்வாறு முத்தியையடைந்து விட்டால் இராமகாரியம் நடவாதாதலின அங்குச்செல்லவேண்டா எனச்சுக்கிரீவன் மறுத்தனனென்க. அம்மலை மிக்க தூய்மையுள்ளதாதல்பற்றி அங்கு இராவணன் செனறிருக்கமாட்டா னென்பது திண்ணமாதலால், அங்குப் போய்த் தேடிப்பார்த்ததிற் காலதாமதமேயொழிய வேறுபயனின்று எனஇதனைற் குறிப்பித்தன னெனலாம். வீடு - (இவ்வுலகப்பற்றை) விட்டு அடையும்இடம்; எனவே, மோக்ஷமாம்; முகதி, மோக்ஷம் என்னும் வடமொழிகளும் இப்பொருள்பெற்றனவே.

தொண்டைமான் என்பது அக்குலத்து அரசரில் ஒருவனது பெயராயிருத்தி பிறகு அந்நாட்டரசர்க் கெல்லாம வழங்குகின்ற தென்றும், தொண்டைமானது நாடு தொண்டைநாடு என வழங்கலாயிறதென்றும் கூறுவர். தொண்டைமானென்ற பெயரின காரணம்—தொண்டைநாட்டிராசதானியான காஞ்சீபுரத்திலிருந்த தொண்டைமானிளந்திரையனைக்குறித்துப் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையில் "அந்தீர்த் திரைதருமாபின்...பல்வேல் திரையன்" என்றவிடத்து 'நாகப்பட்டினத்துச்சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் 'யான் பெற்ற புதல்வனை என்செய்வேன்?' என்ற பொழுது, 'தொண்டையை [தொண்டை - ஓர்கொடி] அடையானமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பல்' என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனமே வாவிட, திரைதருதலின் திரையனென்று பெயர்பெற்ற கதை கூறினர்' என்றும், "தொண்டையோர் மருக" என்றவிடத்து 'தொண்டையைச் சூடினோருடைய குடியி லுள்ளவனே' என்றும் நச்சினர்க்கினியருரைத்தவாற்றால் விளங்கும். இனி, பூமியாகிய பெண்ணுக்குத் தொண்டை [கழுத்து] ஸ்தானமாயிருப்பதால் தொண்டை நாடெனறுமை, "தொண்டைவளநாடு சான்றோருடைத்து" என்றபடி தொண்டர்கள் பலர் வசிக்கின்ற

நாடு தொண்டைநாடு என்றும் காரணங் கூறுதலுமுண்டு. "மேற்குப் பவள மலை வேங்கடம் சேர்வடக்காம், ஆர்க்கு முவரி யணிகிழக்குப் பார்க்குளுயர், தெற்குப்பினுகி திகழிருபதின்காதம் நற்றொண்டைநாடெனவே நாட்டு', என்றதனுல், தொண்டைநாட்டின எல்லையை உணர்க.

"மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்" என்றபடி தான் பெருகும்பொழுது பொன்னைக்கொழித்துக்கொண்டு வருதலால், காவேரிநதிக்கு 'பொன்னி' என்று பெயர்; இ - உடைமைப்பொருள்காட்டும் பெண்பால்விகுதி. காவேரிக்குத் தெய்வத்தன்மை - தன்னில் ஒருகால் மூழ்கியவர்க்கும் பிறவிப்பிணி யொழித்து நற்கதியளிக்கும் திறம். "தடவுங் கயவும் நளியும் பெருமை" என்றதனுல், நளியென்பது - பெருமைப்பொருள் தருவதோர் உரிச்சொல் என்க. நீர் - நீர்மையென்ற பண்பினடி. 'நளிர்நீர்' எனற பாடம் - பின்வரும் 'தண்புனல்' என்பதனேடு கூறியதுகூறலுக்கு இடமாம்.

'உக்கெடியகோடுநீங்கி,' 'கெடியகொடுங்கோளுநீங்கி,' 'வீடுறுவீராத லினுலப்புறமுமிப்புறமுமேவித்தொண்டை,' 'வீடுறுதிராதலினுல் வியக்குறுத்திப் புறத்துற நீர்வீடுதிர் விட்டால், நாடுறுதிருற்றதொண்டைநாடுறுதிருற்ற தற்பி னளிநீர்', 'நாடுறுவீருற்றக்காலருறுதிருற்றதற்பினளிநீர்ப்பொன்னி' என்பன பாடாந்தரங்கள். (உக)

கூ0. தூறக்கமுற்றூர்மனமென்னத்துறைகெழுநீர்ச்சோணுடுகடந்தாற் றூல்லே, மறக்கமுற்றூரதனயலே மறைநூறைவரவ்வழிநீர்வல்லே யேகி, யுறக்கமுற்றூரென்னுற்றூரெனுமுணர்வினெடுமொதுங்கிமணி யாலோங்கற், பிறக்கமுற்றமலைநாடுகாடியகன்றமிழ்நாட்டிற்பெயர்திர் மாதோ.

(இ - ன்.) தூறக்கம் உற்றூர் மனம் என்ன துறை கெழு நீர் சோணுடு கடந்தால் - சுவர்க்கத்தையடைந்தவர்களது மனம்போலத் (தெளிவாகத்) துறைகளிலே விளங்குகின்ற நீரையுடைய [காவேரியாற்றைக் கொண்ட] சோழநாட்டைத் தாண்டிச்சென்றூல், அதன அயலே தொல்லை மறக்கம் உற்றூர் மறைந்து உறைவர் - அந்நாட்டின் அருகில் பழவினைத்தொல்லைகன் மறத்தலைப பொருந்தியவா [வினைத்தொல்லைகளற்ற முனிவர்கள்] மறைந்து வசிப்பர்; நீர் - நீங்கள,—அ வழி வல்லை எகி - அந்தமரர்க்கத்தில் விரைவாகச்சென்று, உறகம் உற்றூர் என் உற்றூர் எனும் உணர்வினெடும் ஒதுங்கி - '(சோம்பலினுல்) உறக்கத்தையுடையவர்கள் யாதுபயனடைவர்? [ஒருபயனையும அடையமாட்டார்]' என்ற அறிவோடும் (பரபரப்புடனே மேறபுறமாகச்) சற்றுவிலகிச் சென்று, மணியால் ஓங்கல் பிறக்கம் உற்ற மலைநாடு நாடி - இராதினங்களினெளியால் மலைகள் விளக்கத்தை யடைந்திருக்கின்ற மலைநாட்டில் (சிதாபிராட்டியைத்) தேடி, (பிறகு), அகல் தமிழ் நாட்டில் பெயர்திர் - விசாலமான செந்தமிழ்ப்பாண்டிய நாட்டிற் சென்று சேருங்கள்; (வ - று.)—மாதி ஒ - ஈற்றசை.

சுவர்க்கமடைந்தவர் துயரத்தினுற் கலங்குதலின்றி எப்போதும் இன்பத்தினுல் நிறைந்த மனத்தையுடையவராதல்போல, காவேரியாறும் நீர்நிரம்பிய

றைவுரைப் பெற்றிருக்கு மென்க. வெகுதூரம் தடுத்த இவ்விப்பாற் சோர் வுறுமல் சீதாபிராட்டியைத்தேடும் விஷயத்தில் மிக்கபரபரப்புடனேயிருத்தல் வேண்டு மென்பான், 'உறக்கமுற்றா ரென்னுற்றாரெனு முணர்வினெடு மொதுங்கி' என்றான் உறக்கமுற்றா ரென்னுற்றார்—"முயற்றின்மையின்மை புகுத்திவிடும்" என்பது நினைக்குறள். தென்திசைநோக்கிச் செல்பவர்கள் சோழநாடுகடந்ததும் பாண்டியநாட்டிற் புகுந்துவிடாமல் சோழநாட்டின் மேற்புறத்திலுள்ள மலைநாட்டிலும் தேடவேண்டு மென்று கருத்துடனே ஒதுங்கி மலைநாட்டில் காடிப் பிறகு பாண்டியநாட்டிற் சேருமாறு சுக்கிரீவன் வானரர்களுக்குக் கட்டளையிட்டன னென்க.

அறக்கம் - இவ்வுலகத்தைத் தாங்கி அடையுமிட மெனக் காரணக் குறி : ஸ்வர்க்க மென்ற வடசொல்லின் திரி பென்பாரு முளர். சோணாடு - சோழநாடு என்பதன் மரூஉ. மறக்கம் - 'மற' என்ற மூதனிலையின் தொழிற் பெயர்; கு - சாரியை. ஒங்கல் - ஒங்கி விளங்குவது என மலைக்குக் காரணப் பெயர் மலைநாடு - சேரநாடு ; சேரநாட்டில் மலைகள் மிகுதியாயிருத்தலால், அதற்கு அப்பெயர். தமிழ்நாடு - பாண்டியநாடு; செந்தமிழ்வழங்கும் நாடாத லால், பாண்டியநாட்டுக்குத் தமிழ்நாடென்று பெயர்கூறப்பட்டது. த்ராவிட மென்னும் வடமொழி தமிழெனச் சிதைந்துநின்றது; 'தமி' என்னும் வினைப் பகுதியினடியாப் பிறந்து, வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி குன்றி, ழகரவொற்று எழுத்துப்பேறுபெற்று, தனக்கு இணையில்லாதபாஷையெனப் பொருள் தருவ தென்பாரும், இனிமையென்னும் பொருளுணர்த்தும் தமி ழென்னுஞ்சொல் எல்லாப்பாஷைகளிலும் இனியதாகிய இப்பாஷைக்கு ஆகுபெயராய் வழங்கிற்று என்பாரும், மற்றைப் பல பாஷைகளிலில்லாமல் தன்னிடத்தில் மாத்திரமே தனியாகவுள்ள ழகாரமென்னும் எழுத்தையுடை யது என அன்மொழித்தொகைக் காரணக்குறி யென்பாரு முளர்.

"கடல்கிழக்குத் தெற்குக்கரைபொருவெள்ளாறு; குடதிசையிற் கோட் டைக்கரையாம் - வடதிசையி, லேணுட்டுப்பெண்ணை யிருபத்தைநாற்காதம், சோணாட்டுக்கெல்லையெனச் சொல்," "வடக்குத்திசைபழனிவாண்கீழ் தென் காசி, குடக்குத்திசைகோழிக்கூடாம் - கடற்கரையி, னேரமோ தெற் காகு முள்ளொன்பதின்காதம், சேரநாட்டுக் கெல்லையெனச் செப்பு" 'வெள் ளாறதவடக்கா மேற்குப்பெருவழியா, வெள்ளாற்புனற்கன்னிதெற்காகு முள் ளாரு, வாண்டகடல்கிழக்கா மைம்பத்தறுகாதம், பாண்டிநாட்டெல்லைப்பதி" என்பவற்றால் சோழ சேர பாண்டிய நாடுகளின் எல்லையை அறிக.

'அறக்கணுற்றா ரதனையலைமறந்தாரைவரவவழியேயல்லல்போக, வுறக் கமுற்றா ரின்புற்றா ரென்றிவர்கள் பெறுமுணர்வினெடும்,' உறக்கமுற்றார் கனவுற்றார்,' 'தமிழ்நாடும் பெயர்த்' என்பன பிரதிபேதம். (கூ0)

கக. தென்றமிழ்நாட்டகன் பொதியிற்றிருமுனிவன் றமிழ்ச் சங்கஞ்சேர்கிற்பீர், லென்றுமவனுறைவிடமாமாதலினனம்மலையி னிறைஞ்சியேகிப், பொன்றினிதபுனல்பெருகுபொருகையெனுங் திருநதிபின்பொழியநாகக், கன்றுவளர்தடஞ்சாரன்மகேந்திரமாகெ டுவரையுங்கடலுங்காண்டிர்.

(இ - ன்.) தென் தமிழ் நாடு - தெற்குத்திசையி லிருக்கின்ற தமிழ் நாடாகிய பாண்டிநாட்டிலுள்ள, அகல் பொதியில் - அகன்ற பொதியமலை யிலே மிலைபெற்ற, திரு முனிவன் - சிறந்த அகத்திய முனிவனது, தமிழ் சங்கம் - தமிழ்ச்சங்கத்தை, சேர்கிற்பீர் எல் - சேர்வீர்களாயின்,—(அம்மலை யானது), என்றும் அவன் உறைவு இடம் ஆம் - எப்பொழுதும் அம்முனி வன் வசித்தற்கு உரிய இடமாகும்; ஆதலினுன்—, அ மலையை இறைஞ்சி எதி - அந்தப் பொதியமலையை வணங்கி அப்பாற்சென்று, பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை எனும் திரு நதி பின்பு ஒழிய - அழகு நிரம்பிய நீர்பெருகுகின்ற தாமிரபர்ணியென்னுஞ் சிறந்தநதி பின்னும் கிடக்குமாறு (அதனைவிட்டுப் புறப்பட்டு), நாகம் கன்று வளர் தட சாரல் மகேந்திரம் ஆம் நெடு வரையும் - யானைக்கன்றுகள் வளரப்பெற்ற பெரிய தாழ்வரைகளை யுடைய மகேந்திரமென்னும் பெரியமலையையும், கடலும் - தென்கடலையும், காண்டிர் - காண்பீர்கள்; (எ - று.)

தமிழை வளர்த்த அகத்தியமுனிவனுக்கு இருப்பிடமாதலால், பொதிய மலையைவணங்கிச்செல்லுமாறு சுக்கிரீவன் கட்டளையிட்டனன். பிற்காலத்தில் நிகழ்ந்ததாகிய அகத்தியமுனிவன் பொதியமலையில் வாழ்தலை, கலி பாவஹாபி மானத்தால் மெய்ம்மறந்து முற்காலத்து நிகழ்ந்ததுபோலவே கூறினர்.

சங்கம்=ஸங்கம்: வித்துவான்களின் கூட்டம்; அகத்திய முனிவன் வட திசையினின்றும் தமிழை வளர்க்குமாறு தென்திசை நோக்கி வந்தவளை லால், அம்முனிவனுள்ள இடத்தில் தமிழறிந்த வித்துவான்களின் கூட்டம் இருத்தல் இயல்பேயா மென்க. சேர்கிற்பீரேல் இறைஞ்சி என இயையும். 'அம்மலையை வலத்திட்டேகி' என்ற பாடத்துக்கு - பொதிய மலையிலுள்ள தமிழ்ச் சங்கத்தைச் சேர்வீர்களாயின் அதை வீட்டுவருதற்கு மனம்வரா தாகையால், அங்குச் செல்லாமல் அந்தப் பொதியமலை வலத்திலிருக்கும்படி பிரதட்சிணமாகக் கடந்து செல்லுங்களென்று கூறியதாகக் கருதாம். பொதியமலை - மலயமலை. நாகம் - மலையில் வாழ்வது என யானைக்குக் காரணக் குறி: (நகம் - மலை.) மகேந்திரம் மா கெடிவரை என்றும் பிரியும்.

'பொதியத்திருமுனிவன்,' 'சேருவீரேல்,' 'தெரிகிற்பீரேல்,' 'அம் மலையை யிடத்திட்டேகி,' 'புனலரவப்பொருகை,' 'மயேந்திரமாகெடுவரை' என்று பிரதிபேதம். (கூ)

கூஉ. ஆண்டுகடந் தப்புறத்து மெப்புறத்து மொருதிங்க ளவதி யாகுத், தேண்டியிவண் வந்தடைதிர் விடைகோடிர் கடிதென்னச் செப்பும் வேலி, நீண்டவனு மாருதியை நிறையருளா லுறநோக்கி நீதி வல்லோய், காண்டியெனிற் குறிகேட்டி யெனவேறு கொண் டிருந்து கழறலுற்றான்.

(இ - ன்.) ஆண்டு கடந்து - அவ்விடத்தைத் தாண்டிச்சென்று, அ புறத் தும் எ புறத்தும் - அதற்கு அப்பாலும் எல்லாவிடங்களிலும், ஒரு திங்கள் அவதி ஆக தேண்டி - ஒருமாதகாலம் தவணையாகக்கொண்டு (தோபீராட் டியைத்) தேடி, இவண் வந்து அடைதிர் - இங்குவந்துசேருங்கள்; கடிது

விடை கோடிர் - விரைவாக விடைபெற்றுச் செல்லுங்கள், என்ன செப்பும் வேலை - என்று (சுக்கிரீவன் வாநரர்கட்குக்) கட்டளை யிட்டபோது,—நீண்டவனும், திரிவிக்கிரமாவதாரஞ்செய்த திருமாலின் திருவவதார மூர்த்தியாகிய இராமபிரானும், மாருதியை - வாயுகுமாரனாகிய அநுமனை, கிளை அருளால் உற நோக்கி - பூர்ணகிருபையோடு நன்முகக்கடாட்சித்து, 'நீதி வல்லோய் - நீதிநூல்களில் வல்லவனே! காண்டி எனின் - (சீதாபிராட்டியைக்) காண்பாயாஞல், (இவள்தான் சீதையென்று நிச்சயித்தற்காக), குறி கேட்டி - (அவளுடைய) அடையாளங்களை (யான்சொல்லக்) கேட்பாய்,' என, என்று, வேறு கொண்டு இருந்து - (அவனைத்) தனியே அழைத்துச் சென்று ஓரிடத்திலிருந்து, கழால் உற்றான் - (அவனடையாளங்களைக்) கூறத் தொடங்கினன்; (எ - று.)—அதனை, அடுத்த முப்பத்துநான்கு கவிகளிற் காண்க.

"ஒருமதிமுற்றுருத்தமன் முற்றதிரிவ்விடை" என்று சுக்கிரீவன் தான் சீக்கு கூறியதை "ஒருதிங்களவதியாகத் தேண்டியிவண்வந்தடைதிர் விடை கோடிர்கடி" என்று அநுவதித்து முடித்தனனென்க. சுக்கிரீவன் இவனுலேதான் காரியம் கைகூடுமென்னுங் குறிப்போடு அநுமானையே பிரதானமாகக்கொண்டு இவ்வளவுதூரம் கூறியதனுலும், தனக்கும் சுக்கிரீவனுக்கும் முதலில் தனது வாக்சாதுர்யத்தால் கட்புச்செய்வித்தவன் அநுமானேயாதலாலும், சீதாபிராட்டியை நாடிக்காணுதலாகிய தொழில் இவனுலேயே கிறை வேறுமென்று கருதி, இராமபிரானும் அநுமானே வேறுகொண்டு கூறலாயினன். நிறையருளாலுற நோக்குதல் - பூர்ணகடாக்ஷம் வைத்தல். திங்கள் - மாதத்திற்கு இலக்கணை. தேண்டி - தேடியென்பதன் விரித்தல்.

'விடைகொண்டீர்,' 'செப்புமெல்லை' என்று பிரதிபேதம் (கூஉ)

வேறு.

இதுமுதல் முப்பத்துமூன்று கவிகள் - இராமபிரான் அநுமானிடத்துச் சீதாபிராட்டியின் அவயவங்கள் முதலியவற்றை வருணித்துக் கூறுதல்.

[கால்விரல்கள் பாதங்கள் இவற்றின் வருணனை]

கூகூ. பாற்கடல் பிறந்த செய்ய பவளத்தைப் பஞ்சி யூட்டி
மேற்பட மதியஞ் சூட்டி விளங்குற நிரைத்த மெய்ய
காற்றகை விரல்க ளேய கமலமும் பிறவுங் கண்ட
வேற்பில வென்ப தன்றி யிணையடிக் குவமை யென்னே.

(இ - ள்.) (இராமபிரான் அநுமானை நோக்கி), ஐய - ஐயனே!—கால் தடை விரல்கள் - (சீதையின்) கால்களிலுள்ள அழகிய விரல்கள்,—பால்கடல் பிறந்த செய்ய பவளத்தை - பாற்கடலில் தோன்றிய செங்நிறமான பவழத் துண்டங்களை, பஞ்சி ஊட்டி - செம்பஞ்சுக்குழம்பை யணிவித்து, மேல் பட மதியம் சூட்டி - அவற்றின மேற்புறத்திலே சந்திரர்களை யணிவித்து, வினங் குறநிரைத்த - வினக்கமுண்டாகுமாறு ஒழுங்காக அமைக்கப்பட்ட, மெய்ய -

உருவமுடையன; (இவ்வாறு அழகியவிரல்களைப் பெற்றுள்ளதனால்); கண்ட கமலமும் பிறவும் - (உலகத்திற் பிரசித்தமாகப் பாதங்கட்கு) உவமை கூறப் படும் தாமரைமலரும் மற்றைப்பொருள்களும், எற்பில - (இச்சீதாபிராட்டி யின் பாதங்கட்கு) உவமையாகமாட்டா, என்பது அன்றி - என்று கூறலா மேயல்லாமல், இணை அடிக்கு உவமை என்னே - (அவளது) இரண்டுபாதங் கட்கும் தகுதியான உவமைப்பொருள் யாதோ? [ஒன்றும் அகப்படாதென்ற படி]; (எ - று.)

கங்களோடுகூடி இயற்கைச் செந்நிறமமைந்த சீதாபிராட்டியினது கால்விரல்கட்கு, செம்பஞ்சு ஊட்டிச் சந்திரர்களையணிவித்த பலழத்தீண்டு கள் உவமையாமெனக. தன்மைத்தற்குறிப்பேற்றவணி; இல்போருளுவமை யணி யெனபது, ஒருசாரார் கொள்கை. சீதாபிராட்டியின் திருமேனி பாற் கடல் போன்றிருத்தலால், அத்திருமேனியிலுள்ள கால்விரல்கட்குப் பாற்கட லிற்பிறந்த பவழத்தை உவமை கூறுதல் ஏற்கும். பாதங்கட்குச் செம்பஞ்சுக குழம்பு ஊட்டுதல் - மென்மை யுண்டாதற்கும், நிறமுண்டாதற்கு மென்க. சீதாபிராட்டியின் பாதங்கட்குத் தாமரைமலர முதலியன ஒப்பாகா எனறது - எதிர்நிலையணி; வடமொழியில் ப்ரதீபாலங்கார மெனப்படும்; உபமானத்திக் குக் குறைவு தோனறச் சொல்லுதல், இவவணியின் இலக்கணம். 'பிறவும்' என்றதனால், அனனத்தின்தூவி, அனிச்சமலர், மாந்தளிர் முதலியன கொள்க. தேவர்களைப் பாதாதிகேசபரியந்தமும், மனிதர்களைக் கேசாதிபாத பரியந்தமுமாகக்கூறுதல், மரபு சீதாபிராட்டி திருமகளின திருவவதாரமாத லால், அது தொனிகருமாறு பாதாதிகேசபரியந்தமாக இங்குக் கூறுகினறன ரென்னலாம். நிரைதத என்பதை முற்றுருக்கொண்டு, மெயய - உண்மை யுடையவனே! என்றும், ஐய கமலம எனறு எடுதது - அழகியகமலம் என றும கூறலுமாம். விரல்களையுடைய பாதங்கட்கு இதழ்களையுடைய கமலம் உவமை , மென்மையிலும், செங்நிறத்திலு மென்க.

பஞ்சு எனினும, பஞ்சிஎனினும் ஒக்கும். விரலின் நகங்கள் பத்தாத லால், மதியமும பதது எனக. இணையடி - உபயபாதம். என் - அஃறிணை யிரு பாற்கும் பொதுவாகிய எவனெனனும் வினாவினைக்குறிப்பு முற்றின விகாரம.

'தெய்வப்பவளத்தை,' 'மதியமட்டிவிரற்குறி,' 'விரகுறநிரைத்தசெய்ய,' 'பிறவுமெல்லாம்,' 'உவமையுண்டோ,' 'உவமையில்லை' என்று பாடாந் தரங்கள்.

இதுமுதல் மூப்பத்தாநான்குகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் கான் காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (உக)

[புறவடிகளின் வருணனை.]

*உச. நீமெயாயுணர்நியையநிரைவளைமகளிர்க்கெல்லாம்
வாய்மையாலுவமையாகமதியறிபுலவர்வைத்த
தாமையாமென்றபோதுமல்லசொல்லினுமும்
யாமயாழ்மழலையாடன்புறவடிக்கிழுக்கமன்னே.

(இ - ன்.) ஐய—! கிரை வளை மகளிர்க்கு எல்லாம் - வரிசையாக அணிந்த வளையல்களையுடைய மகளிரது புறவடிகளுக்கெல்லாம், உவமை ஆக - உபமானமாகும்படி, மதி அறி புலவர் வாய்மையால் வைத்தது - தமது புத்தியினால் (எல்லாவற்றையும்) உணரவல்ல வித்துவான்கள் உண்மையாக ஏற்படுத்தியதாகிய, ஆமை - ஆமையானது, யாமம் யாழ் மழலையாள் தன் புறம் அடிக்கு - இராப்பொழுதில் இனிய ஓசையமிக்கிருக்கின்ற வீணைபோன்ற மழலைச்சொற்களையுடையவளாகிய சீதையினது புறவடிகட்கு, ஆம் - உவமையாகும், என்றபோதும் - என்று சொன்னாலும், அல்லன சொல்லினாலும் - வேறு உபமானங்களை எடுத்துச்சொன்னாலும், இழுக்கம் - (அப்புறவடிகட்குக்) குறைவாகும்; நீ மெய் ஆய் உணர்தி - நீ (இதனை) உண்மையென்றே அறிவாயாக; (எ - று.)—மன் ஓ - ஈற்றசைகள்.

சாதாரணமாகிய மகளிர்புறவடிகளுக்கு உவமையாகச் சொல்லப்படுகின்ற ஆமை முதலியவை, தெய்வத்தன்மையுள்ள சீதாபிராட்டியின புறவடிகட்கு ஒப்பாகா என்றவாறு; எதிர்நிலையணி. புறவடிகளு ஆமை வடிவில் ஒப்பென்க. மழலை - கிரம்பாமென்சொல்; ''மெய்பெறுவெழுத்தியர்கு மழலை வாயின்முறுவற், றையலான்'' எனறவிடத்து நச்சினார்க்கினியர் 'மழலை எக்காலத்திக்கும் கூறுப' என்றது, இங்கே அறியத்தகுவது. புறவடி - அடியினது புறம் என முன்பின்னுகதொக்க ஆறும் வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி. புறவடிக்கு ஒப்பாகக்கூடிய பிற பொருள்கள - புதகம் முதலியன.

'நீர்மையாலுணர்தி,' 'புலவர்வைத்த' 'தூய்மையாமென்றபோழ்தி மல்லனசொல்லினாலும், ஆமையோமழலையரடன புறவடிகளொக்குமன்றே' என்று பிரதிபேதம். (கூச)

[கணைக்கால்களின் வருணனை]

கூடு. வினைவரால்லரியகோதைபேதைமென்கணைக்கான்மெய்ய
நினைவரால்லரியவின்னநேர்படபுலவர்போற்றுஞ்
சினைவரால்பகழியாவதெற்சினையென்னுஞ்செபப
மெனைவராற்பகருமீட்டியானுரைதகின்பமென்னே.

(இ - ன்.) மெய்ய - உண்மையுடையோனே!—வினைவரால் அரிய கோதை பேதை மெல் கணைக்கால் - சிதறாமலெழுதுவோரால எழுதுதற்கு அரிய கூந்தலையுடைய பேதைமைக்குணமுள்ளவளான சீதையினது மெல்லிய கணைக்கால்கள், நினைவரால் அரிய இன்ன - ஊகித்து உணர்பவராலும் (உவமையெடுத்துச்சொல்லுதற்கு) அரியனவான இத்தனமையையுடையன; (ஆகையால்),—புலவர் நேர்பட போற்றும-வித்துவான்கள் (கணைக்காலுக்கு) உவமையாகப்பொருந்துமாறு சிறப்பித்துக்கூறுகின்ற, சினை வரால் - கருக்கொண்ட வரால்மீனும், பகழி ஆவம் - அம்பறாத்தூணியும், நெல் சினை - நிரம்பிக்கொண்ட நெற்பயிரும், என்னும - எனகின்ற, செப்பம் - வார்த்தை, எனைவராற் பகரும் - எல்லாராலும் சொல்லப்படும்; (அவற்றையே), மீட்டு யான் உரைத்தி இன்பம் எனை - திரும்பவும் யான் எடுத்துச்சொல்வதனால் இன்பம் யாதோ? (எ - று.)

ஊகித்தறிந்துபார்த்தும் எவராலும் சீதையின் கணேக்காலுக்கு உவமைப் பொருளே யெடுத்துச்சொல்ல இயலாதாதலால், அவவாறுள்ள கணேக்கால்களுக்கு, புலவர்கள் சாதாரணமான மகளிரின் கணேக்காலுக்கு உவமைப் பொருளாக ஏற்படுத்தியுள்ள சினேவரால் முதலியவற்றையே யானும் உவமையென எடுத்துச்சொல்லுதல் சிறிதும் இன்பம்பயவா தென்பதாம்; இதுவும் எதிர்நிலேயணியே.

வினேவர் - சித்திரவேலே செய்பவர். கோதை - மாலேயுமாம். 'அரிய, என்னுங் குறிப்புப்பெயரெச்சம், 'பேதை' என்பதனேடு இயையும். பேதை-பேதைமைக்குணமுடையாளுக்குப் பண்பாகுபெயர். இச்சொல் - இங்குப் பருவப்பெயராகாமல் பெண்ணென்ற மாததிரமாய் நினறது; அப்பருவத்துக்கு வயதெல்லே - ஐந்துமுதல் ஏழளவும். பகழி - அம்பு. ஆவம் - தூணீரம். நெல்லினே - கதிர் வெளியில்வராமல் கருக்கொண்டு தண்டுருண்ட நெற் பயிர். செப்பம் - சொல்லப்படுவது; வாத்தை. பகரும் - செயப்பாட்டு வினேப் பொருளில் வந்த செய்வினே.

'வனேவரால்லியகோதை,' 'மெய்யே,' 'நினேவரால்லிய நனைர்,' 'பகரு மீட்ட' என்றும் பாடம். (கூடு)

[தோடைகளின் வருணனே.]

கூசு. அரம்பையென்றளகமாதர்குறங்கினுக்கமைந்தவொப்பின்
வரம்பையுங்கடந்தபோதுமற்றுரைவகுக்கலாமோ
நரம்பையுமிழ்தகாறுநறவையுநன்னீர்ப்பண்ணேக்
கரும்பையுங்கடந்தசொல்லாள்கவாற்கிதுகருதுகண்டாய்.

(இ - ன்.) அளகம் மாதர் குறங்கினுக்கு - கூந்தலேயுடைய மகளிரது தொடைகளுக்கு, அரம்பை என்று அமைந்த - வாழைகளென்று ஏற்பட்ட, ஒப்பின் வரம்பையும் - உவமையின எல்லேயையும், கடந்த போது - (சீதையின் தொடைகள்) வென்றனவென்று சொல்லும்போது, மற்று உரை வகுக்கல் ஆமோ - (அவற்றிறகு) வேறு உவமைச்சொல்லே எடுத்துச்சொல்லுதல் மூடியுமோ ? [மூடியா தெனறபடி]; நரம்பையும - நரம்புகளேயுடைய வீணேயையும், அமிழ்தம் காறும் நறவையும் - அமிருதம்போல (மிக்க இனிமையுடன்) வினங்குகின்ற தேனேயும், நல் நீர் பண்ணே கரும்பையும் - நல்லநீர் வளமுள்ள கழனிகளில் வினேந்த கரும்பின் சாற்றையும், கடந்த - சயித்த, [அவற்றினும் இனிமையிக்க], சொல்லான்-சொற்களேயுடையவளான சீதையினது, கவாற்கு - தொடைகளின திறத்தில், இது - (யான் கூறிய) இவவாறுன தன்மையை, கருது - நீ ஆலோசிப்பாயாக; (எ - று.)—கண்டாய் முன்னிலேயசை; தேற்றமுமாம்.

இதுவும் - முன்னேய அணியே. உபமேயப்பொருளினும் உபமானப் பொருள் சிறந்திருகக வேண்டுமென்ற அணியிலக்கணநூலார் கொள்கைக்கு இணங்கச் சாதாரணமகளிரின தொடைகளேவிட வாழைகன் அழகுசிறந்திருக்கும்; அவவாழைகளேயும் இத்தொடைகள் வென்றன வென்றதனால், இவற்றிற்கு வேறு உபமானப்பொருன் எடுத்துக்கூற அரியதாயிற் றென்க.

அளகம் - பெண்மயிர்; (ஐம்பால், குழல், கூந்தல்என்பனவும் இப்பொருளனவே.) கரம்பு - அவற்றையுடைய யாழுக்குச் சினையாகுபெயர். அமிழ்தம் நாறும் நறவு -'பாலோடுகலந்த தேன எனினுமாம். நறவை - 'கரு' என்னும் குறியதன்கீழ் ஆகாரம் குறுகி இரண்டனுருபுஏற்றது. பண்ணை - வயல் கரும்பு - அதன் இரசத்திற்கு இலக்கணை.

'அரம்பையென்றற்கு,' 'அமைத்தவொப்பின்.' 'நளிர்நீர்ப்பண்ணை', 'கடிக்தசெல்லாள்' என்று பிரதிபேதம். (கூசு)

[அல்குலின் வருணனை.]

கூஎ.' வார்ாழிக்கலசக்கொங்கைவஞ்சிபோன்மருங்குலாடன்
ரூரார்ழிக்கலைசாரல்குறடங்கடற்குவமைதக்கோய்
பாராழிபிடரிற்றாங்குமபாந்தளும்பனிவென்றீருங்கும்
மோராழித்தேருங்கண்டவுனக்குரானுரைப்பதென்னை.

(இ - ள்.) தக்கோய் - சிறந்தவனே! வார் - கச்சணிந்த, ஆழி கலசம் கொங்கை-சக்கரவாகப்பறவையையும கலசத்தையும் போன்ற தனங்களையும், வஞ்சி போல் மருங்குலாள்தன் - நீாவஞ்சிக்கொடிபோன்ற இடையையு முடையவளான சீதையின தும், தார் ஆழி கலை சார் அல்குல் தட கடற்கு - கிண்கிணிமாலையையணிந்த வட்டவடிவாகிய ஆடையைச்சார்ந்துள்ள அல்குலாகிய பெரியகடலுக்கு, உவமை உபமானமாகிய பொருளை,--- ஆழி பார் பிடரில் தாங்கும் பாந்தளும் பனி வென்று ஓங்கும் ஓர் ஆழி தேரும் கண்ட உனக்கு - சமுதாயத்திலுற் சூழப்பெற்ற உலகத்தைத் தலையில் தாங்குகின்ற ஆதிசேஷனதுபடத்தையும் பனியையடக்கி மேல்தோன்று கின்ற ஒற்றைச்சக்காத்தையுடைய (சூரியனது) தேர்த்தட்டையும் கண் கூடாகக்கண்ட உனக்கு, நான் உரைப்பது என்னை - நான் புதிதாகச்சொல்ல வேண்டுவது யாது உளது? [எதுவுமில்லை என்றபடி]; (எ - று.)

ஆதிசேஷனது படத்தையும், சூரியனதுதேர்த்தட்டையுமே சீதையின் அல்குலுக்கு உவமையாகக் கருதுவா யென்றவாறும். சக்காவாக பட்சியும், கலசமும் - தனங்கட்கு, வடிவுவமை. கலை - மேகலையுமாம் கீழேழுல கங்கட்குங் கீழே அஷ்டதிக்கஜங்களும் அஷ்டமகாநாகங்களும் நாகராஜனை ஆதிசேஷனும் இருந்து உலகங்களைத் தாங்குகின்றன ரென்பது, நூற்கொள்கை. பனிவென்றோங்கும் ஓராழித்தேர் - சூரியனதுபனிவெல் லுந்தன்மையை அவனதுதேரின்மேலேறறிக்கூறிய உபசாரவழகது. சூரிய னது தேர் - ஸம்வத்ஸராஸ்வரூபமான ஒற்றைச்சக்கரத்தையுடையதாகும். 'ஆழி' எனற சொல் நானகும் வெவ்வேறுபொருளில் வந்தது, சோ்ப்பின்வரு நிலையணி.

சகரவாகப்பறவைக்கு 'நேமிப்புள்' என்று ஒருபெய ரிருத்தலால், அதனை 'ஆழி' என்றார். ஆழி - ஆழ்ந்துள்ளது எனக் கடலுக்குக காரணக் குறி; (உலகத்தைப் பிரளயகாலத்தில்) அழிப்பது எனினுமாம். ஆழி - வட்ட வடிவமானது எனச் சக்கரத்தை யுணர்த்திற்று.

'கலைசேர்ல்குல்,' 'பிடரிற்றாங்கும்,' 'உரைப்பதென்னை' என்று பிரதிபேதம். (கூஎ)

[இடையின் வருணனை.]

கூ அ. சட்டகந்தன்னைநோக்கியாரையுஞ்சமைக்கத்தக்கா
ளிட்டிடையிருக்குந்தன்மையியம்பக்கேட்டுணர்கியென்னிற்.
கட்டுரைத்துவமைகாட்டக்கட்பொறிகதுவாகையிற்
றொட்டவெற்குணரலாமற்றுண்டெனுஞ்சொல்லுமில்லை.

(இ - ன்.) சட்டகம்தன்னை நோக்கி - (தனது) வடிவத்தையே பார்த்து, யாரையும் சமைக்க தக்காள் - எவ்வளவு அழகுள்ள மகளிரையும் (பிரமதேவன்) சிருஷ்டிக்கத்தகுந்த பேரழகையுடைய சீதையினது, இட்டு இடை இருக்கும் தன்மை - சிறிய இடையானது இருக்கும் வகையை, இயம்ப கேட்டு உணர்கி என்னின் - (நான் உவமை) எடுத்துரைக்கக்கேட்டு நீ அறிவாயென்றால், '(அது முடியாது; ஏனெனில்);—சட்டுரைத்த உவமை காட்ட கண் பொறி கதுவா - உறுதியாக எடுத்துச்சொல்லி உபமானப்பொருளைக் காட்டுவதற்கு (அந்த இடையைக்) கண்ணுகிய இந்திரியமானது பார்க்கமாட்டாது [அந்த இடை கண்ணுக்குப் புலனாகாது]; கையின் தொட்ட எற்கு உணரலும் - கையினால் பரிசித்துப்பார்த்த என்னால் மாத்திரம் (உண்டென்று) அறியக்கூடும்; மற்ற உண்டு எனும் சொல்லும் இல்லை - வேறு விதமாக உண்டென்ற சொல்லைச் சொல்வதற்கும் வழியில்லை; (எ - று.)

சீதாபிராட்டியின் இடையோ பரிசவுணர்ச்சியின் மூலமாக என்னால் மாத்திரமே உண்டென்று உணரப்பட்டு ஒருவராது கண்ணுக்கும் புலனாகாதவாறு மிகவும் நுண்ணியதா யிருத்தலால் அதற்கு ஏற்ற உவமைப்பொருளை யெடுத்துச் சொல்லுதல் முடியா தென்றவாறும். அறிந்தபொருளைச் சுட்டிக் காட்டி அறியாதபொருளைத் தெரிவித்தலே உபமான பிரமாணத்தின் தன்மையாதலால், அருவப்பொருளாயிருக்கின்ற இடைக்கு அவ்வாறு உரைத்தல் இயலாதாயிற்றென்க. எவ்வளவு அழகுள்ள மாதரைப் படைக்கவேண்டினும் பிரமதேவன் இவளது வடிவத்தையே நோக்கிப் படைக்குமாறு உள்ளான் சீதையைச் சீதாபிராட்டியின் பேரழகுடைமையைத் தெரிவித்தவாறு. சட்டகம்தன்னை நோக்கி யாரையும் சமைக்கத்தக்காள் என்பதற்கு - தன்னை மேல்வரிச்சட்டமாகப் பார்த்துக்கொண்டு (பிரமதேவனால்) எல்லா மகளிரையும் படைத்தற்கு உரியவ ளெனினுமாம்; கருத்து ஒன்றே. இட்டிடை என்பது - சிறிய இடையென்ற பொருளில் வருதலை-"இட்டிடைப்பின்னே சேர்வன்," "இட்டிடைநடுங்க கொந்து" என்ற இடங்களிலுங் காண்க. கதுவா - கதுவாது என்பதன் விகாரம்.

'உணரலாகாவுண்டெனும்' என்றும் பாடம். (கூ அ)

[வயிற்றின் வருணனை.]

கூ கூ. ஆலிலைபடிவந்தீட்டுமையநுண்பலகைநெய்ய
பானிறதட்டம்வட்டக்கண்ணடிபலவுமின்ன
போலுமென்றுரைத்தபோதும்புனைந்துரைபொதுமைபார்க்கி
னேலுமென்றிசைக்கினேலாவிதுவயிற்றியற்கையின்னும்.

(இ - ள்.) பொதுமை பார்க்கின் - பொதுநோக்காகப் பார்த்தால்,—'(உலகத்திலுள்ள மகளிரது வயிறுகள்),—ஆல் இல்லை - ஆலிலையையும், படிவம் நீட்டுவ் ஐய நுண் பலகை - வடிவமெழுதப்பெற்ற அழகிய மெல்லிய சித்திரப் பலகையையும், கொய்ய பால் நிறம் தட்டம் - மென்மையாகிய [தொட்டால் அதங்குவதுபோலத் தோன்றுகிற] பால்போல் வெண்ணிறமான வெள்ளித்தட்டையும், வட்டம் கண்ணாடி - வட்டவடிவான கண்ணாடியையும், இன்ன பலவும் - இவைபோல்வன பலவற்றையும், போலும் - ஒத்திருக்கும்,' என்ற உரைத்த போதும் - என்று எடுத்துக்கூறினாலும், புனைந்துரை-தோத்திரமொழியாகும்; (இச்சீதாபிராட்டியின் வயிற்றுக்கோ), எலும் என்று இசைக்கின் எலா - (மேற்கூறிய ஆலிலைமுதலிய பொருள்கள் உபமானமாகப்) பொருந்துமென்று கூறினால் சிறிதும் பொருந்தாவாம்; இது வயிறு இயற்கை- இது(சீதையினது) வயிற்றின் தன்மையாகும்; இன்னும் -மேலும்,—

இதுவும், அடுத்த செய்யுளும் - ஒருதொடர்; வயிற்றைச்சேர்ந்த உறுப்பினை மேற்செய்யுளில் வருணித்தலால், 'இன்னும்' என்றனர்.

மற்றை மகளிரின் வயிற்றுக்கு ஆலிலைமுதலியவற்றை உவமைகூறினால், புனைந்துரையாகும்; அப்பொருள்களையே இச்சீதையின் வயிற்றிற்கு உவமை கூறினால் அவை உவமையாதற்கே எலா வென்பதாம்; எதிர்நிலையணி. புனைந்துரை - சிறுமையுள்ளதைப் பெருமையுள்ளதாக வருணித்துக்கூறுதல். படிவம் - வடிவம். ஐய - 'ஐ' என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்.

'உரைத்தயாவும்,' 'பார்ப்பினேலுமென்றுரைக்கவேலா' என்ற பிரதிபேதம்.

[உந்தியின் வருணனை.]

சஂ. சிங்கலில்சிறுகூதாளிநங்கியின்நிரட்பூச்சேர்ந்த
பொங்குபொற்றொளையென்ற லும்புல்லியவுவமைத்தாமா
லங்கவளுந்தியாக்குஞ்சுழியெனக்கணித்ததண்டாற்
கங்கையைநோக்கிச்சேறிகடலினுநெடிதுகற்றோய்.

(இ ள்.) கடலினும் நெடிது கற்றோய் - கடலைப்பார்க்கிலும் அதிகமாகக் கற்றறிந்தவனே!—, (சீதையின் உந்திச்சுழிக்கு), சிங்கலில் சிறுகூதாளி - கெடுதலில்லாத சிறுகூதாளிச்செடியும், நங்கியின் - நங்கியாவர்த்தமும் (என்ற இவற்றின்), நிரள் பூ - வட்டவடிவமான மலர்களிலே, சேர்ந்த - பொருந்திய, பொங்கு பொன் தொளை - பெரிய அழகிய துளைகள், (உவமையாம்)', என்றலும் - என்று கூறினாலும், புல்லிய உவமைத்தாம் - (இச்சீதையின் உந்திச்சுழி) அற்பமாகிய உவமையையுடையதாகும்; 'சுழி-(கங்காநதியின்) நீர்ச்சுழியானது, அவள் உந்தி ஒக்கும் - அந்தச்சீதையின் உந்தியையொத்திருக்கும்,' என - என்று, கணித்தது உண்டு - (கங்காநதியைக் கண்ட போதானே) எண்ணியது உண்டு; கங்கையை நோக்கி சேறி - கங்காநதியின் சுழியை மனத்தினாலாராய்ந்துபார்த்து (அச்சீதையின் உந்தியை இன்னபடியுள்ளதென்று) அறிவாய்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - சிற்றசை.

சீதையின் உந்திச்சுழிக்கு - கூதாளிமலரின் உள்தொளையும், நந்தியா வட்டமலரின் உள்தொளையும் சிறிதும் உவமையாகா; நான் கங்கைவழியாக வந்தபோது அக்கங்காநதியின் நீர்ச்சுழிக்குச் சீதையின் உந்திச்சுழியை உவமையாகக் கருதியது உண்டு; நீயும் அந்தக்கங்காநதியின் நீர்ச்சுழியும் சீதையின் உந்திச்சுழியும் ஒக்குமெனக் கருதுவா யென்பதாம்; பிரஸித்தமாக உவமைகூறுகிற நீர்ச்சுழிக்கு, அத்தன்மையை யொழித்து, உபமேயமான சீதையின் உந்திச்சுழியை உவமையாகக்கூறியதும் - எதிர்நிலையணியே. கூதாளி - ஓர்செடி; கூதாளம், கூதளம், காளி, நறுந்தாளி எனவும் படும்; கார்காலத்து மலர்வது. நந்தி - நந்தியாவர்த்த மென்பதன் நரமைகதேயோகாமக்ரஹணம் [ஒருபெயரின் ஒருபகுதியைக்கொண்டு அச்சொல்முழுவதையும் குறித்தல்]; இது, மூதற்குறிப்பின் பாற்படும். தொளையெனினும், தொளையெனினும் ஒக்கும் 'கத்யர்த்தா: புத்யர்த்தா: "செல்லுதலென்ற பொருளையுடையவை அறிதலென்றபொருளையுங் காட்டும்" என்றகொள்கையின்படி, இங்கு 'சேறி' என்பதற்கு - அறிவாய் என்று பொருள் கூறப்பட்டது. அங்கு - அசைநிலை.

'சிறுகட்டாழி,' 'சிறுகட்டாளி,' 'புல்லிது புதுமைத்தாமால்' என்ற பிரதிபேதம். (சஂ0)

[மயிரொழுங்கின் வருணனை.]

சக. மயிரொழுக்கெனவொன்றுண்டால்வல்லிசேர்வயிற்றின்மற்றென்
னுயிரொழுக்குதற்குவேண்டுமுவமைபொன்றுரைக்கவேண்டிற்
செயிரில்சிற்றிடையாயுற்றசிறுகொடிநுடக்கந்தீரக்
குயிலுறுத்தமையவைத்தகொள்கொம்பென்றுணர்ந்தகோடி.

(இ - ள்.) வல்லி சேர் வயிற்றின் - கொடிபோன்ற சீதையைச்சேர்ந்த [சீதையினுடைய] வயிற்றிலே, மயிர் ஒழுக்கு என ஒன்று உண்டு - மயிரொழுங்கென்ற ஒன்று உளது, என் உயிர் ஒழுக்கு - (அது) எனது உயிரொழுக்கேயாகும்; அதற்கு—, வேண்டும் உவமை ஒன்று உரைக்க வேண்டின் - தக்க உவமைப்பொருளொன்றை எடுத்துச்சொல்ல விரும்பினால்,— 'செயிர் இல் சிறு இடை ஆய் உற்ற சிறுகொடி நுடக்கம் தீர - குற்றமற்ற நுண்ணிய இடையென்று பொருந்திய சிறியகொடியானது துவளுதலில்லாததாக(ப் படரும்படி), குயிலுறுத்து அமைய வைத்த - நன்றாகப்பதியும்படி பொருந்தவைத்த, கொள்கொம்பு - கொழுகொம்பாகும்,' என்று—, உணர்ந்தகோடி - அறிந்தகொள்வாய்; (எ - று.)—மற்று - வினைமாற்று. ஆல் - அசை.

சீதையின் வயிற்றிலுள்ளதை உலகத்தார் மயிரொழுங்கென்று சொல்லுகிறார்கள்; அது மயிரொழுங்கு அன்று; எனது உயிரொழுக்காம் என, மயிரொழுக்கினிடத்தில் அத்தன்மையையொழித்து உயிரொழுக்கென மற்றொன்றின் தன்மையை ஏற்றிக்கூறியது - அவநுதியணியாகும்; இதனால், இராமபிரான் அம்மயிரொழுக்கினிடத்தில் மிக்கபோன்பை வைத்திருக்கமை விளங்கும். இடைக்கு மேற்புறத்திலுள்ள வயிற்றின் மயிரொழுங்கை, இடையாகிய கொடி துவளாமற்படர்தற்கு நாட்டிய கொழுகொம்புபோலு மென்றார்; நூல்

குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு - 'இடையாயுற்றகொடி' என்றவிடத்தி லுள்ள அவநுதியணி அங்கமாய்நின்றது. உயிரொழுக்கு - பிராணதாரை.

வல்லி - உவமவாகுபெயர். குயிலுறுத்தல் - நிலைநாட்டுதல். கொள் கொம்பு - கொடிகள் ஏறிப்படர்தற்காக நடுங் கொம்பு.

'சிற்றிடை யென்றுற்ற,' சிற்றிடையா ளுற்ற,' 'குயில்வுறுத்தமைய வைத்த,' 'அமையவேய்ந்த,' 'கொழுகொம்பு' என்று பிரதிபேதம். (சக)

[வயிற்றுமடிப்பின் வருணனை.]

சஉ. அல்லியுன்றிடுமென்றஞ்சியரவிந்தக்குறைந்தாட்கம்பொன்
வல்லிமூன்றுளவாற்கோலவயிற்றின்மற்றவையுமார
வில்லிமூன்றுலகின்வாழுமாதருந்தோற்றமெய்ம்மை
சொல்லியுன்றியவாம்வெற்றிவரையெனத்தோன்றுமன்றே.

(இ - ன்.) அல்லி ஊன்றிடும் என்று அஞ்சி அரவிந்தம் குறைந்தாட்கு - அகவிதழ்கள் உறுத்துமென்று அச்சங்கொண்டு செந்தாமரை மலரை விட்டு வந்த இலக்குமிபோன்றவளாகிய சீதைக்கு, கோலம் வயிற்றில் - அழகிய வயிற்றினிடத்தில், அம் பொன் வல்லி மூன்று உள - அழகிய பொன்னிற மான கொடியின் வடிவமாகிய மடிப்புக்கள் மூன்றுண்டு; அவையும் - அம் மடிப்புக்களும்,—மாரன் வில்லி - மன்மதனுடைய வில்வீரன், மூன்று உலகில் உம் வாழும் மாதர் தோற்ற மெய்ம்மை சொல்லி - மூன்று உலகங்களிலும் வாழ்கின்ற மகளிரெல்லாம் (இந்தச்சீதையின் வடிவழகுக்குத்) தோற்றப் போன உண்மையை எடுத்துச்சொல்லி, ஊன்றிய ஆம் - நிலை நிறுத்தியன வாகிய, வெற்றி வரை என - ஜயத்துக்கு அறிகுறியாகத் தீட்டிய இரேகை போல, தோன்றும் - விளங்கும்; (எ - று.)—மற்று - அசை: ஆல், அன்று, ஏ - ஈற்றசைகள்: தேற்றமுமாம்.

சீதை இலக்குமிபோன்ற வடிவழகுடையவளென்பது, முதலடியின் கருத்து: மதுவுண்டமயக்கினால் நடக்கும் இராமபிரான் சீதையை இலக் குமியென்றே கூறினனெனப் பொருள்கொள்ளுதல், சிறப்பன்று. அரவிந் தம் குறைந்தமைக்குக் காரணமாகாத அல்லியூன்றுதலைக் காரணமாகக் கற் பித்துக்கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி; இதனால், சீதையின் திரு மேனியினது மென்மை தொனிக்கும். அல்லி - அகவிதழ். (புறவிதழ் - புல்லி யெனப்படும்.) சீதையின் வயிற்றிலுள்ள மூன்று மடிப்புக்களே - முவுலகி லுள்ள எல்லாமகளிரையும் வென்றதற்கு அறிகுறியாக மன்மதன் நாட்டி வைத்த மூன்று இரேகையாகக் குறித்தது, தன்மைத்தற்குறிப்பேற்றவணி; உத்தம ஜாதிமகளிர்க்கு வயிற்றில்மூன்று மடிப்புக்க ளுளவாக வருணித்தலே, "படைப்புழி வேதன் கமலமென்மலரைப் பழிக்கு மென்காத்தினு ணடு வைப், பிடித்தலும் விரல்களமுங்கிய வரையோ பெட்புறுமங்கையம்பாவ, மடித்தலஞ் சேர்த்தியேறுதற்கமைத்தபடிகொலோ வவ்வயிறணிந்த, மடிப் புறுவரையினழகினுக் குவமை மற்றுளா மூரைக்குமா றெவனே" என்ற விடத்திலுங் காணலாம்.

மலரம்புகளைக்கொண்டு உலகத்து உயிர்களையெல்லாம் வெல்லுந் திறம் வாய்ந்திருத்தலால், மன்மதன் 'மாரவில்லி' எனப்பட்டான். மாரன் - (பிராணிகட்கு மலரம்புகளால்) மரணவேதனையைச் செய்பவன்; வடசொல்.

'அல்லியூர்ந்திடும்,' 'அறந்தார்க்கு' என்று பிரதிபேதம். (சஉ)

[தனங்களின் வருணனை.]

சங. செப்பென்பென்கலசமெனபென்செவ்விளநீருந்தோவென்
றுப்பிலொன்றுதிரள்சூதென்பென்சொல்லுவென்றும்பிக்கொம்
தப்பின்றிப்பகலின்வந்தசக்கரவாகமென்பெ [பைத்
னெப்பொன்றுமுலகிற்காணின்பலநினைந்துலகினின்னீம்.

(இ - ள்.) (சீதையின்தனங்களுக்கு), செப்பு என்பென் - இரத்தினச் சிமிழென்று உவமைசொல்வேன்; கலசம் எனபென - பொற்கலசமென்று உவமைசொல்வேன; செவ இளநீரும் தோவென் - (தெங்கின்) செவ்வின நீரையும் (உவமையாகக்கூறுதற்கு) ஆராய்வேன்; உப்பு ஒன்று திரள சூது என்பென் - பவழத்தினுற் கடைந்துதொழில்செய்யப்பட்ட திரண்ட சொக்கட்டான்காயென்று உவமைகூறுவேன; கும்பி கொம்பை சொல்லுவென் - யானையின்தந்தங்களை உவமைசொலவேன; தப்பு இன்றி பகலின வந்த சக்கரவாகம் எனபென் - தவறுதலில்லாமல் பகற்காலத்தில் வெளிப்பட்டுவருகிற சக்கரவாகமென்று உவமைகூறுவேன்; ஒப்பு ஒன்றும் உலகில் காணின - (சீதையின் தனங்களுக்கு ஏற்ற) உவமைபொருளொன்றையும் உலகிற காணப்பெறாதவனுய், பல நினைந்து - (செப்புமுதலிய) பலபொருனகளையும் (உவமையாகக்கூறுமாறு முதலில) நினைந்து, (அவையொன்றும்ஏறற உவமைப்பொருளாகாமையால), இனனும உலகினின்னீம் - இன்னமும அலவேன்; (எ - று-)

சீதையின்தனங்கள் ஒப்பற்றபேரழகுடையன வென்றவாறு. செப்பு முதலியன, தனங்களுக்கு வடிவுவமை. செவ்விளநீர என்பது - தெங்கில ஒருவகை. சக்கரவாகம் - பகலில் சூரியனதுமுனனிலையில் ஆணுமபெண்ணுமாகக் கூடிக் களிக்குந் தனமையுள்ள தொரு பறவை.

'பகரினந்த,' 'ஒப்பொனறு முலைக்குகாணேன்,' 'உலகினம்மா' என்றும் பாடம். (சங)

[தோள்களின் வருணனை.]

சச. கரும்புகண்டாலுமாலைக்காம்புகண்டாலுமாலி
யரும்புகண்டாளைசோரவழங்குவேனிவதுண்டோ
சுரும்புகண்டாலுங்கோதைதோணினைந்துவமைசொல்ல
விரும்புகண்டனியநெஞ்சமெனக்கிலையிசைப்பதென்னை.

(இ - ள்.) கரும்பு கண்டாலும்-கரும்பைக் கண்டபோதும், மாலை காம்பு கண்டாலும் - ஒழுங்காயிருக்கின்ற மூங்கிலைக் கண்டபோதும், கண் அரும்பு ஆலி தாரை சோர அழுங்குவேன் - கண்களிலிருந்து உண்டாகின்ற மழைத் துளிபோன்றநீர்ப்பெருக்குத் தாரையாகப்பெருக வருந்துவேன் ; அறிவது

உண்டோ-(இவ்வர்றுவருக்குவதன்றி எற்றஉவமைப்பொருளோ யான்) தேர்ந்தறிதல் உளதோ? [இல்லை]; சுரும்பு கண்டு ஆலும் கோதை தோள் நினைந்து உவமை சொல்ல - வண்டுகள் மொய்த்து ரீங்காரஞ்செய்கின்ற மாலையைத் தரித்த சீதையினது தோள்களை நினைத்து உவமைசொல்வதற்கு, இரும்பு கண்டு அனைய நெஞ்சம் எனக்கு இலை - இரும்புபோன்ற வலியமனம் எனக்கு இல்லையே! இசைப்பது எனலோ - (யான) உவமை சொல்வது எவ்வாறோ? (எ - று.)

சீதையைப்பிரிந்திருக்கின்ற இக்கிலையில் கரும்பையும் இளமூங்கிலையும் காண நேரிடும்போதெல்லாம் சீதையின்தோள்கள் நினைவுக்கு வர, கண்ணீர் தாரையாய்ப்பெருக வருந்துவேன்; மிகவுமமெல்லிய அச்சீதையின தோள் கட்கு கடினமான கரும்பையும் மூங்கிலையும உவமைகூறுந்திறத்தில் இரும்பு போல் வலிய நெஞ்சம் எனகு இல்லையே! எனறவாறு. கரும்பையும் மூங்கிலையும் சீதையினதோள்கட்கு உவமைகூறுதல், ஸாஹஸம் எனறபடி., திரண்டு உருண்டு வளைந்து எழுகினற கரும்பும் இளமூங்கிலும் - இவ்வகை வடிவமும் வழுவழுப்பும் மினுமினுப்பும் பறறி அழகிய மகளிர தோளுக்கு உவமையாம். ஸ்மாரகபதார்த்தங்களாகிய [ஞாபகப்படுத்தும் பொருள்களாகிய] போலிப்பொருள்களெல்லாம் பிரிந்தாருக்கு நலிவுசெய்யு மெனபது, முதலிரண்டடிகளிற கவனிக்கத்தக்கது. 'ஆலை' எனறு பிரிதது, கரும்புககு அடைமொழி யாக்குவாரு முளர். கோதை - கோதையையணிந்தவளுக்கு, ஆகுபெயர். இரும்புகண்டனைய, கண்டு - அசை.

'சோர்வதன்றிவேறு,' 'சோருமதுவனறி,' 'தோளிணைகு' எனறுபிரிதி பேதம். (சு)

[முன்கைகளின் வருணனை.]

சரி. முன்கையேயொப்பதொன்றுமுண்டுமூனறுலகத்துள்ளு
மென்கையேயிழுக்கமன்றேயியம்பினுங்காதலென்றல்
வன்கையாழ்மணிகையென்றன்மற்றொன்றையுணர்த்தலன்றி
நன்கையாடடக்கையாமோநலத்தின்மேனலமுண்டாமோ.

(இ - ள்.) மூன்று உலகத்துள்ளும் - மூவுலகங்களிலும், முனகை ஒப்பது ஒனறும் உண்டு என்கையே - (சீதையின) முனனங்கையைப்போன்றதாகிய ஒருபொருளாவது உண்டுஎனறு சொல்லுதலே, இழுக்கம் அனறே - குறைவல்லவோ! இயமபினும் - (ஒருகால் உவமையெடுத்துச்) சொல்வோமென்றாலும், மணி கை - (அவளது) அழகிய முன்னங்கைகளை,—காந்தள் என்றல - காந்தண்மலரென்று கூறுதல், வன்கை - வலியஒழுக்கமாம் [மிக்க கடுமையாம்]: யாழ் என்றல் - மகரயாழென்றுகூறுதல், மறறுஒனறை உணர்த்தல் - வேறொன்றைத் தெரிவித்ததாம்: அனறி - (இவ்வாறுவது) அல்லாமல், நல்கையாள் நடகை ஆமோ - (காந்தளும் மகரயாழும்) அழகிய கைகளையுடையளான சீதையினது சிறந்த முனனங்கைககு ஒப்பாகுமோ? நலத்தின்மேல் நலம் உண்டாமோ - (பிரசித்தமாக) அழகிய பொருளெனறு ஏற்பட்டதற்குமேலே மிகஅழகிய பொருளும் இருக்குமோ? (எ . று.)

சீதையினது முன்னங்கைகட்கு உவமையாகப்பேசுதற்கு உரியபொருள் மூவுலகங்களுள்ளும் எதேனுமுண்டென்று சொல்வதற்கே இடமில்லை; ஒரு கால் காந்தளமலரை எடுத்துக்கூறினால், அது அக்கைகளினும் 'வனமையுள்ள தாகையால், சொல்லுவராது மனம் கடுமையானதெனறு புலப்படுமே; அன்றி, மகரயாழை எடுத்துக்கூறினால் அது ஒருவகையிலும ஒப்பாகாமையால் சம் பந்தமில்லாத வேறொன்றை யெடுத்துக்கூறியதாகும்: ஆகவே, இவ்விரு பொருளும் சீதையின முன்னங்கைகளுக ஒப்பாகமாட்டா: இவ்வாறு உவமை யாதறிருப்பதறகுக காரணம யாதெனின், காந்தன யாழ் முதலிய உவமைப் பொருளகட்கெல்லாம் தாம் உவமையாகுமாறு முனனங்கைகள் அழகுமிக் கிருதலால் அவற்றினுஞசிறநத வேறொருவமைப்பொருள் இல்லாமையே யென்பதாம. சீதையின கைகள உவமையறறிருகின்றன வென்ற சிறப்புப் பொருளை 'நலத்தினமேல் நலமுண்டாமோ' எனற பொதுப்பொருள சமர்த் தித்துநிற்பது - வேற்றுப்பொருள்வைப்பணியாம்; இது, 'காந்தளும் பாழும் சீதையினமுன்னங்கைகளுக ஒப்பாகமாட்டா' எனற எதிர்நிலையணிகு அங்க மாய்வந்தது. 'வன்கையாழ்' எனறவதறகு - மணிக்கையைக காந்தளெனற லும், வலியகையிற்பிடித்தற்கு உரிய யாழ் எனறலும் மற்றொருனறை யுணர்த் தலாமென வுரைத்தலும் பொருந்தும. காந்தள - குறிஞ்சிநிலக கருப்பொரு ளாகிய ஓரசெடி: 'காந்தள்' எனற செடியினபெயர - இங்கு, அமமலருகு ஆகுபெயர; இது - மகளிரினகைகுக வடிவிலும் நிறத்திலும், மென்மையி லும், அழகிலும உவமம். மகரயாழ் - வடிவுவமாம. 'நன்கையாள்' என்றது - சீதையெனற மாத்திரமாய் நினறது.

'உண்டுகொலுலகதுள்ளும,' 'உண்டிம் மூவுலகத்துள்ளும,' 'மஞ்சை யாண்மணிகையெனறல்,' 'நனகையதடகைம்யாதோ' எனற பிரதிபேதம்.

[கைகளின் வருணனை.]

சசூ. ஏலக்கொண்டூன்றபிண்டியிளந்தளிர்கிடக்கபாணர்க்
கோலாகற்பகத்தின்காமர்குழைபடுங்கமலமென்பூ
நூலொக்குமருங்குலாடனூபுரம்புலம்புங்கோலக
காலுக்குதெதொலியுமென்றுற்கைக்கொப்புவைக்கலாமோ.

(இ - ள்.) ஏல கொண்டு ஊனற பிண்டி இளந்தளிர கிடகக - தகுதியாக வுண்டாகினற அசோகமரத்தின இளகதளிர்கள கிடககட்டும; யாணரகோலம கற்பகத்தின் காமர் குழை - புதுமையான அழகிய கலபகவிருகூத்தின விரும் பக்கூடிய தளிர்களும, கமலம படும மெலபூ - தாமரைக கொடியினிடத்து உண்டாகின்ற மெல்லிய மலர்களும, நூல் ஒககும மருங்குலாள்தன் நூபுரம் புலமபும் கோலம் காலுககு தொலியும எனறல - நூலேபபோல நுண்ணிய இடையை யுடையவளாகிய சீதையினது சிலம்புகள ஒலிகப்பெற்ற அழகிய கால்களுக்குத் தோற்றொழியுமாஞல, கைககு ஒப்பு வைககல் ஆமோ-(அவை களைக்) கைகளுக்கு உவமைகூறுதல் தகுமோ? (எ - று.)

கற்பகததளிரும் தாமரைமலரும் சீதையின தாழ்ந்த உறுப்பாகிய கால் களுக்கே இணையாகாது தோற்றனவெனறல் உயர்ந்த உறுப்பாகிய அவளது

கைகட்கு ஒப்பார்க்காமல் அவைகள் தோற்குமெனச் சொல்லவேண்டுவது எதற்கு? என்ற கருத்துப்படவுரைத்த இதில்,-தொடர்நிலைச்செய்யுட்பொருட் பேறணி தொனிக்கும். இது, வடமொழியில் காவயார்த்தாபத்தி எனப்படும்: தண்டாபூபிகா நியாயம்பட ஒருவிஷயத்தை எடுத்துக்கூறுதல், இவ்வணியினிலக்கணம். [தண்டாபூபிகா நியாயமாவது - எலி - தடியை விழுங்கிற்றென்றால் அதிலுள்ள அபூபத்தை விழுங்கிற் றென்றற்குக் கேட்கவேண்டுமோ? என்ற வாய்பாடுபடக் கூறுதல்.] 'கிடக்க' என்றதனால், 'அசோகந்தளிர உவமையாதற்குச் சிறிதும் ஏலாது' என்ற அலட்சியம் தோன்றும்.

யாணர் - புதுமை; உரிச்சொல். கல்பகமென்ற வடசொல் - வேண்டுவார் வேண்டியவற்றைக் கல்பித்துத்தருவது எனக் காரணப்பொருள்படும். காமர் - காமமரு என்பதன் மரூஉ.. குழை - இளந்தளிர்.

'காலைக் கற்பகத்தின்,' 'காலுக்குந் தொலையுமெனுற் கையொப்பின் வைக்கலாமோ' என்ற பாடாந்தரங்கள். (சசு)

[கைந்நகங்களின் வருணனை.]

சள. வெள்ளிய முறுவல்செவ்வாய்விளங்கிழையிளம்பொற்கொம்பின்
வள்ளுகிர்க்குவமைகம்மான்மயர்வறவுகுக்கலாமோ
வெள்ளுகிர்நீமூக்கையென்றுகொண்டிவறியென்றுங்
கிள்ளைகண்முருக்கின் பூவைக்கிழிக்குமேலுரைக்கலாமோ.

(இ - ள்.) வெள்ளிய முறுவல் - வெண்மையான பற்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும், விளங்கு இழை - பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுமுடைய, இளம் பொன் கொம்பின் - இளமையான அழகிய பூங்கொம்பு போன்ற சீதையினது, வள் உகிர்க்கு - கூர்மையான கைந்நகங்களுக்கு, உவமை-உபமானப்பொருளே, நம்மால்—, மயர்வு அற உகுக்கல் - மயக்கமில்லாமல் [தெளிவாக] எடுத்துக்கூறுதல், ஆமோ - முடியுமோ? [முடியாது]; (ஏனெனில்), நீரே மூக்கை எள்ளுநிர் என்று கொரண்டு - நீங்களே (எனது) மூக்கை(ச் சீதாபிராட்டியின் கைந்நகங்கட்கு ஒப்பாகமாட்டாதெனறு) இகழ்கின்றீர்களென்று நினைத்து, இவறி - (அவற்றின்மேற்) கோபங்கொண்டு, என்றும் - எப்போதும், கிள்ளைகள் - கிளிகள், முருக்கின் பூவை - (மகளிர் வாய்க்கு உவமையாகும்) பலாசமலர்களை(த் தம்மைப்பழிக்கும மகளிர்வாயென்றே மயங்கி), கிழிக்கும் எல் - கிழிக்குமாதலால், உரைகலல் ஆமோ-(அக்கிளிகளின் மூக்கை இச்சீதையின் கைந்நகங்கட்கு உவமையாக) எடுத்துச் சொல்லலாமோ? (எ - று.)

முருக்கமலரை மகளிர்வாய்க்கு உவமையாகக்கூறுதல் மரபு, கிளிகள் முருக்கமலரைத் தமது அலகால் இயற்கையாகக் கோதுதலை, தமது மூக்கைச் சீதையின் கைந்நகங்கட்கு இணையாகாதென்று பழிக்கும் மகளிர்வாயென்று அம்முருக்கமலரை மயங்கி அவற்றினிடத்துச் சீறறங்கொண்டு கோதிக்கிழிப்பதாகக்குறித்தது, மயக்கவணியை அங்கமாகக்கொண்டுவந்த ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இவ்வாறு தமது அலகைச் சீதையின் கைந்நகங்கட்கு ஒப்பாகாதென்று கிள்ளைகளே நினைத்து, தம்மைப்பழிக்கும் மகளிராவாயெனற காரு

ணம்பற்றிப் பலரசமலர்களைக் கோதிக்கிழித்தலால், அக்கிளிகளின் மூக்கு ஒருவாற்றானும் சீதையின்கைக்கங்கட்கு ஒப்பாகாதென்பது தேற்றமாதலால், அதனை ஒப்புக்கூறுதல் தகாதென்பதாம். இது - மூற்கூறிய தற்குறிப்பை அங்கமாகக் கொண்டுவந்த எதிர்நிலையணி. உள்ளபடி யெடுத்துக்கூறின், தோற்றவர்கட்குச் சிற்றம்பிறத்தலாகிய தன்மை, இங்குக் கிள்ளைகளிடத்துக் கருதத்தக்கது.

வெள்ளியமுறுவல் சேவ்வாய் - முரண்தோடை : சிரிக்கும்போது வெளித்தோன்றுகிற பற்களின்வெள்ளொளியையே சிரிப்பின்மே லேற்றிக், கூறியதாகக் கொள்க. மகளிர்க்கு வாய்சிவந்திருத்தல், உத்தமலிலக்கணம். 'விணைப்பகுதி வேண்டியபொருளே வினைக்கும்' என்றதனால், இங்கு, 'இவறுதல் - கோபித்தலென்ற பொருளைத் தந்தது.

'இளம்பொற்காம்பின்,' 'மயலற,' 'வருக்கலாமே,' 'இவரி,' 'பின்னும்,' 'கிழிக்குமஃதழிக்கலாமோ,' 'கிழிக்குமேயுரைக்கலாமோ' என்ற பிரதிபேதம். (சஎ)

[கழந்தின் வருணனை.]

சஅ. அங்கையுமடியுங்கண்டாலரிந்தநினையுமாபோற்
செங்களிகதறிநீலஞ்செருக்கியதெய்வவாட்கண்
மங்கைதன்கழுத்தைநோக்கிவளரிளங்கமுகும்வாரிச்
சங்கமுநினைதியாயினவையென்றுதுணிதக்கோய்.

(இ - ள்.) தக்கோய் - சிறந்தவனே!—அம் கையும் அடியும் கண்டால் அரிந்தம் நினையும் ஆ போல் - (சீதையினது) அழகிய கைகளையும் பாதங்களையும் பார்த்தால் செந்தாமரைமலரை நினைக்கும் விதம்போல,—செங் களிகதறி நீலம் செருக்கிய தெய்வம் வாள் கண் மங்கைதன் கழுத்தை நோக்கி. செவ்வையாகிய மதர்ப்புக்குணம்மிக்குக் குவளைமலரையொத்த செருக்குக் கொண்ட தெய்வத்தன்மையுள்ள வாள்போன்ற கண்களையுடைய சீதையினது கழுத்தைப் பார்த்து, வளர் இளங் கமுகும் - வளருந்தன்மையுள்ள இளமையான பாக்குமரத்தையும், வாரி சங்கமும் - நீரிலுண்டாகுஞ் சங்கத்தையும், நினைதி ஆயின் - நினைவாயாகுல், அவை என்று துணிதி-(அச்சீதையின் கழுத்திற்குப்) பாக்குமரமும் சங்கமுமே உவமைப்பொருளென்று நிச்சயிப்பாய்; (எ - று.)

கழுத்துக்குப் பாக்குமரம் - திரட்சியிலும் வழுவழுப்பிலும் உவமை. குவளைமலர் - நிறத்திலும், வாள் - வடிவத்திலும், ஒளிசெய்வதிலுங் கூர்மையிலும் ஆடவரைவருத்துவதிலும், கண்களுக்கு உவமை. வாரி - நீர்நிலை. அங்கை - அகங்கையுமாம்; அகம்+கை : "அகமுணர்ச் செவிகைவரி னிடையனை கெடும்." ஆ - ஆறு என்பதன் விகாரம். நினைதி ஆயின் நவை என்று பிரித்து, கமுகையும் சங்கையும் சீதையின்கழுத்திற்கு உவமையென்று நினைப்பினும் குற்றமாம் என்று உரைத்தலு மொன்று.

'நினையியம் பொற், செங்களிற்கிதறி,' 'நோக்கின்,' 'நினையலாகிய லதா வென்று' என்று பிரதிபேதம். (சஅ)

[இதுவும் அடுத்தகவியும் - வாயின் வருணனை.]

சகூ. பவளமுங்கிடையுங்கொவ்வைப்பழனும்பைங்குமுதப்போதுங்
தவள்மிலமிலவங்கோபமுநற்கெண்டிக்கோடக்கஞ்சாலத்
தவளமென்றுரைக்கும்வண்ணஞ்சிவந்துதேன்றதும்புமாயிற்
குவளையுண்கண்ணிவண்ணவாயதுகுறியுமஃதே.

(இ - ள்,) குவளை உண் கண்ணி வண்ணம் வாய் அது - கருங்குவளைமல ரையொத்த மையுண்ட கண்களையுடையாளான சீதையினது அழகியவாயா னது, பவளமும் —, கிடையும்-செஞ்சடையும், கொவ்வை பழனும்-கோவைப் பழமும், பைங் குமுதம் போதும் - புதிய செவ்வல்லி மலரும், தவள்வு இல இலவம் - அசைதலில்லாத இலவமரத்தின் மலரும், கோபம் - இந்திர கோபமும், முருக்கு - பலாசமலரும், என்ற இ தொடக்கம் - என்ற இவை தொடக்கமான உவமைப்பொருள்கள், சால தவளம் என்று உரைக்கும் வண்ணம் சிவந்து - (தனக்குமுன்னே) மிகவும் வெண்மையுடையனவா மென்று கூறுமாறு (தான் அவைகளினும் மிக்க) செந்நிறம்பெற்று, தேன் ததும்பும் - தேன்நிரம்பப்பெற்றிருக்கும்; ஆயின் - என்றால், குறியும் - அதற்கு அடையாளமாகக் கூறத்தகுந்த பொருளும், அஃதே - அச்சீதையின் வாயேயாம்; (எ - று.)

சீதையின்வாய் பவளம் முதலியவற்றினும் மிகச்சிவந்து தேன் ததும்புத லால், அப்பவளம் முதலியவை சீதையின்வாய்க்கு உவமையாகமாட்டா; அதற்கு அதுவே உவமையாகுமல்லது வேறு உவமையில்லை யென்றவாறு; எதிர்நிலையணியை அங்கமாகக்கொண்டெழுந்த இயைபின்மையணி: இது, வட மொழியில் அநந்வயாலங்கார மெனப்படும். பைங்குமுதப்போது-அன்றலர்ந்த குவளைமலர். இலவமலர்களின் இதழ்கள் தடித்திருக்குமாதலால், 'தவள் விலவிலவம்' என்றார். கோபம்=இந்த்ரகோபம்: "நாமைகதேஸோகமக்ரஹ ணம்;" இது, மூதற்குறைவிகாரத்தின் இனமாம்: பட்டுப்பூச்சியென்ற பொருள். இந்திரகோபமென்பது - இந்திரனுற்காக்கப்படுவது எனக் காரணப் பொருள்படும்; மழையினால் அது தோன்றிப் பாவுவதாலும், இந்திரன் மேக வாகனனும் மழைக்குத் தலைமைபூணுதலாலும் அங்ஙனம் அதற்குப் பெயரா யிற்றென்க. 'இத்தொடக்கம்' என்றதனால், வீழி, தொண்டை முதலியன கொள்க. இலவம் கோபம் முருக்கு என்றவிடத்து, எண்ணும்மைகள் விகாரத் தால் தொக்கன. தேன் - இனிமைக்கு இலக்கணை.

'குமுதப்பூவும்,' 'முருக்கெனச்சொல்லினுஞ்சால்,' 'குவளையங்கண்ணி வாயதெனவறி குறியுமஃதே', 'குவளையொண் கண்ணி' என்றும் பாடம். ()

சிஎ. சிவந்ததோரமிழ்தமில்லைத்தேனில்லையுளவென்றுலுங்
கவர்ந்தபோதன்றியுள்ள தினைப்பவரார்களிப்புநல்கா
பவர்ந்தவாணுதலினுடன்பவளவாய்க்குவமைபாவித்
துவந்தபோதுவந்தவண்ணமுமைத்தபோதுரைத்ததாமோ.

(இ - ள்.) சிவந்தது ஓர் அமிழ்தம் இல்லை - சிவந்தநிறமுடையதாகிய அமிருதமொன்று இல்லை; (சிவந்தது ஓர்) தேன் இல்லை - (சீதையின் இதழ்

கன்போல அவ்வளவு) செங்நிறமானதொரு தேனும்இல்லை; உள என்றாலும் - (ஒருகால்) உள்ளனவானாலும், (அவை), கவர்ந்த போது அன்றி உள்ளம் நினைப்ப ஓர் களிப்பு நல்கா - எடுத்தஉண்டகாலத்திலல்லாமல் மனத்தினால் நினைத்தமாத்திரத்தில் ஒப்பற்றமகிழ்ச்சியை உண்டாக்கமாட்டா; (ஆதலால்), பவர்ந்த வாள் நுதலினாள்தன் பவளம் வாய்க்கு - செறிந்த ஒளியுள்ள நெற்றியையுடையவளாகிய சீதையினது பவழம்போற்சிவந்த வாய்க்கு, உவமை பாவித்து உவந்தபோது உவந்த வண்ணம் உரைத்தபோது - உவமைப்பொருளாப் பாராட்டித் தமக்கு உவப்புண்டானகாலத்தில் தாம் உவந்தவிதமாக எடுத்துக்கூறினால், உரைத்தது - (சீதாபிராட்டியின் வாய்க்கு ஒப்பாகச்) சொன்ன அப்பொருள், ஆமோ - தகுதியான உவமைப்பொருளாகுமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

அமிருதமோ வெண்ணிறமுடையது: செங்நிறமுடையதன்று; தேன் செங்நிறமுடையதாயினும் சீதையின்வாய்போலச் செங்நிறமுடைய தன்று: மேலும் அவைகள் எடுத்து உண்டால்மாத்திரமே இனிமையைத்தருகின்றன; இச்சீதையின்வாயோ நினைத்தமாத்திரத்தில் இனிமையைத் தருகின்றது: ஆதலால், அவை சீதையின்வாய்க்கு உவமையாகாவாம். வேற்றுமையணியை [வயதிரேகாலங்காரத்தை] அங்கமாகக்கொண்டுவந்த எதிர்நிலையணி; (வேற்றுமையணியாவது, உபமானஉபமேயங்கட்கு வேறுபாடுதோன்றக்கூறுவது.) அமுதம் தேன் என்ற சிறந்தபொருள்களே இவ்வாறாக, கொவ்வைப்பழம் முதலிய பொருள்களைக் கண்டபோது அவை அழகாயிருக்கின்றன வென்ற மாத்திரத்தைக்கொண்டு உவந்து அவற்றைச் சீதையின்வாய்க்கு உவமையாகக் கூறினால்மாத்திரம் அவைகள உவமையாதற்கு ஏற்குமோ? ஏலா வென்பதாம். பவர்தல் - செறிதல். ''வாளொளியாகும்'' என்பது, தொல்காப்பியம்.

'உளதென்றாலும்,' 'ஒத்தவாமோ,' 'ஒத்ததாமோ,' 'உரைக்குமாதோ' என்று பாடாந்தரங்கள். (கூ0)

[பறவைகளின் வருணனை.]

நிக. முல்லையுமுருந்துமுத்துமுவலின்றுரைத்தபோது
சொல்லியுமமிழ்துமபாலுந்தேனுமென்றுரைக்கத்தோன்று
மல்லதொன்றுவதில்லையமிழ்திற்குமுவமையுண்டோ
வல்லியலரிதுதோடிமாறிலாவாறுசான்றீரோய்.

(இ - ள்.) மாறு இலா ஆறு சான்றீரோய்-ஒப்பில்லாதபடி பெருமை பெற்றவனே!—'முறுவல் - (சீதையின்) பற்கள்,—முல்லையும் - முல்லையரும்புகளையும், முருந்தும் - மயிலிறகினடியையும், முத்தும் - முத்துக்களையும், (போல்வனவாம்),' என்று உரைத்தபோது - என்று சொன்ன காலத்தில் [ஈன்றுசொன்னால்], சொல்லையும் - (அவளது)சொற்களைப்பற்றியும், 'அமிழ்தும் தேவாமிருதத்தையும், பாலும் - பாலையும், தேனும் - தேனையும்,(போலும்),' என்று உரைக்க - என்று கூறுமாறு, தோன்றும் - மனதில் எண்ணமுண்டாகும்; அல்லது ஒன்று ஆவது இல்லை - (அவள்பற்களுக்கு) வேறொரு பொருளும் உவமையாவது இல்லை; அமிழ்திற்கும் உவமை உண்டோ-தேவா

மிருதத்திற்கும் உவமையாகக்கூறப்படும் பொருளும் ஏற்படுமோ? வல்லே ஏல் - (நீ) வல்லமையுடையையாயின், அறிந்துகோடி - (அச்சீதையின் பற்கள் இத்தன்மையனவென்று வரையித்து) அறிந்துகொள்வாயாக; (எ - று.)

சீதையின்பற்களுக்கு உவமையாதற்கு ஏலாத முல்லையரும்பு முதலிய வற்றை உவமையாகு மென்றல், அவைபோற, அவள்சொற்களுக்கு உவமையாகாத தேவாமிருதம் முதலிய பொருள்களையும் அச்சொற்களுக்கு உவமை கூறவேண்டிவரும்; உண்மையாகப்பார்த்தால் ஒருபொருளும் உவமையாக மாட்டாது. தேவாமிருதம தான உபமானமாக நிற்பதன்றி உபமேயமாக நின்ற தனக்கு வேறொருவமையைப் பெறுதலாறுபோலச் சீதையின் பற்களும் தாம்உபமானமாய்நிற்பதல்லது தமக்கு வேறொருவமையைப் பெறுவென்பது, முதல் மூன்றடிகளின் பொருள். முறுவல் - புன்சிரிப்புமாம். 'அமிழ்திற்குமுவமையுண்டோ' என்ற உபமானவாக்கியம் 'சீதையின் பற்களுக்கு உவமைப்பொருளில்லை' என்ற உபமேயவாக்கியத்தைத் தெரிவித்தலால், பிறிதுமொழிதலணியாம்; இதனை, வடநூலார் அப்ரஸ்துதப்ரஸம்ஸாலங்கார மென்பர். அமிழ்து முதலியன சொற்களுக்கு உவமையாகாதவாறு போல, முல்லைமுதலியனவும் பற்களுக்கு உவமையாகாவென்பது - முன்னிரண்டடிகளின் கருத்து.

'உரைத்ததொன்றும்,' 'வல்லையால்' என்ற பாடம் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (இக)

[முக்கின் வருணனை.]

இஉ. ஓதியுமெள்ளுந்தொள்ளைக்குமிழுமூக்கொக்குமென்றற்
சோதிசெய்பொன்னுமின்னுமணியும்போற்றுளங்கித்தோன்ற
வேதவுமிலவல்லாரெழுதுவார்க்கெழுதவொண்ணு
நீதியைநோக்கிநீபநினைதியாலெடிதுகாண்பாய்.

(இ - ள்.) நெடிது காண்பாய் - மிகுதியாகக் கற்றுணர்ந்தவனே!—'ஓதியும் - பச்சோந்தியையும், எள்ளும் - எட்பூவையும், தொள்ளை குமிழும் - தொளையுள்ள குமிழமலரையும, மூக்கு - (இச்சீதையின்) மூக்கானது, ஒக்கும் - போலும்.' எனறல்—, (பச்சோந்தி முதலிய அப்பொருள்கள்), சோதி செய் பொனனும் மினனும மணியுமபோல் துளங்கி தோனறு - ஒளிசெய்கின்ற பொன்னேயும் பிரகாசிக்கினற இரத்தினங்களேயும் போல விளங்கிக் காணப்படமாட்டா; ஏதுவும் இல்லை - (அவைபோறஒளிசெய்தற்குரிய) காரணமும் (அப் பச்சோந்தி முதலிய பொருள்களிடத்தில்) இலலை; வல்லார் எழுதுவார்கு எழுத ஒண்ணு(தி) - வல்லமையுடையவரான தெதிரமெழுதுவோர்க்கும (இமமூக்கு) எழுதமுடியாது; நீதியை நோக்கி - இதன்மையை ஆராய்ந்துபார்த்து, நீயே நினைதி - நீ்ய (மூக்கினழகை) உணர்ந்துகொள்வாய்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சீதையின் மூக்கிற்குப் பச்சோந்தி முதலியன உவமையாகமாட்டா; ரனெனில், மூக்கோ பொன்போலவும் இரத்தினம்போலவும் பிரகாசிக்கின்றது; மேலும் சித்திரத்தில்எழுதமுடியாதவாறு பேரொளியிக்கு அழகுவிஞ்சி

யிருக்கின்றது; பச்சோந்திமுதலியனவோ அத்தன்மையனவல்ல வென்ப தாம். வேற்றுமையணியை அங்கமாக்கொண்டுவந்த எதிர்நிலையணி. மின்னும் - மின்னலையும் எனினுமாம். ஒதி - ஒங்கியெனபதன் இடைக்குறை. தொள்ளை - தொளையென்பதன் விரித்தல்

'மூக்கொக்குமேற்ற', 'சோகிசெம்பொன்னும்', 'களங்கித்தீர்ன்று, மேதவுமில்லை', 'நெடிதகண்டாய்' என்று பாடாந்தரங்கள். (இ)

[காதுகளின் வருணனை.]

நிகூ: வள்ளைகததரிகைவாமமயிர்வினைக்கருவியென்னப்
பிள்ளைகளுரைத்தவொப்பைப்பெரியவருரைக்கிற்பித்தாம்
வெள்ளிவெண்டோடுசெய்தவிழுத்தவம்விளைந்ததென்றே
யுள்ளுதியுலகுக்கெல்லாமுவமைக்குமுவமையுண்டோ.

(இ - ள்.) 'வள்ளை - வள்ளைக்கொடியினிலையும், கத்தரிகை - கத்தரிக் கோலும், வாமம் மயிர் வினை கருவி - அழகிய மயிரைத்தொழிலுக்கு உரிய கருவியாகிய கத்தியும், (ஆகிய இவை மகளிர்காதுகளுக்கு ஒப்பாகும்),' என்ன - என்று, பிள்ளைகள் உரைத்த ஒப்பை - அறிவு நிரம்பாதவர்கள் (மகளிர்காதுகளுக்குக) கூறிய உபமானத்தை, பெரியவர் உரைக்கின்-அறிவு நிரம்பிய பெரியோர் (சீதையினகாதுகட்கு உவமையாக) எடுத்துக்கூறினால், பித்தம் ஆம் - (அது) பைத்தியமாய்முடியும் [சிறிதும் தகா தென்றபடி]; வெள்ளி வெண் தோடு செய்த விழு தவம் விளைந்தது எனறே உள்ளுதி - (அச்சீதையின காதுகளிலணியப்பட்ட) வெளளிபோனற மிகவும் வெண்மையாகிய தோடு எனனுங் காதணி முன்புசெய்த சிறந்த தவமே சீதையின் காதுகளாகப்) பலித்ததென்றே எண்ணுவாய்; உலகுக்கு எல்லாம் உவமைக்கும் உவமை உண்டோ - உலகிலுள்ள உவமைப்பொருள்கட்கெல்லாம் வேறோருவமைப் பொருள் கிடைக்குமோ? (எ - று.)

சீதையின் காதுகள் உலகிலுள்ள அழகியமகளிர்காதுகளுக்குத் தாம் உவமையாகுமாறு அழகு மிக்கிருத்தலால், அவற்றிற்கு வேறோருபமானப் பொருள் இல்லை யெனபதாம். 'உவமைக்குவமையுண்டோ' என்ற வாக்கியம் சீதையின் காதுகளுக்கு உவமைப்பொருள் ஒன்றுமில்லையென்று முனனிரண்டடிகளிற் கூறிய விஷயத்தைச் சரதித்து நிற்பது - வேற்றுப் பொருள் வைப்பணி யெனப்படும்; சமாதானக்கவேண்டிய விஷயத்தை(ப் பொதுப்பொருளாலேனும், சிறப்புப்பொருளாலேனும்) சமாதானத்தல், இவவணியின் இலக்கணம். சீதையின் காதுகளே, தோடுகள்செய்த தவப்பயனது வடிவாகக் குறித்தது - தன்மைத்தற்குறிப்பேற்றவணியின பாறபடும். இங்கு, சீதையின் காதுகளுக்கு வள்ளைமுதலியன ஒப்பாகவென்பதை வற்புறுத்தற்பொருட்டு எல்லாமகளிர்காதுகளுக்கும் பொதுவாக வள்ளை முதலியவற்றை உவமை கூறியுள்ள புலவர்களே 'பிள்ளைகள்' என இழித்து உரைத்தனர். பிள்ளைகள் - இளமைத்தன்மையால் அறிவுநிரம்பாதவாகள் என்றவாறு. வாம மயிர் வினைக்கருவியாகிய கத்தரிகை எனக் கூட்டியுரைப்பாரு முளர். இங்கு, பித்து என்றது - அறிவின்மையென்ற பொருளைத் தருமென்னலாம். சிறப்

புப்பொருள்தரும் 'பிழுமம்' என்னும் உரிச்சொல், 'வீழு' எனக் குறைந்து கின்றது. 'வள்ளி' என்னுங் கொடியின்பெயர் - இலக்கு முதலாகுபெயர்.

'உரைக்குமொப்பை,' 'வெள்ளிவெண்டோடு,' 'உலகிலென்னும்' என்றும் பாடம். (இக)

[கண்களின் வருணனை.]

நிச. பெரியவாய்ப்பரவையொவ்வாபிறிதொன்றுநினைந்துபேச
வுரியவாயொருவருள்ளத்தொடுங்குவவல்லவ்வண்மை
தெரியவாயிரக்காலேனுக்கிற்றேறவாக்குந்தேவனெனைக்
கரியவாய்வெளியவாகும்வாட்டடங்கண்களம்மா

(இ - ன்.) தேவர்க்கும் தேவன் என்ன கரிய ஆய் - தேவாதிதேவனுடைய திருமாலேப்போலக் கரியனவாகியும், வெளிய ஆகும - வெண்மைநிறமுடையனவாகியுமுள்ள, வாள் தட கண்கள் வாள்போனற நீண்ட (சீதையின்) கண்கள்,—உண்மை தெரிய ஆயிரம் கால் நோக்கின் - (அவற்றின்) உண்மையான தன்மை தெரியும்படி ஆயிரந்தரமபார்த்தாலும்—பெரிய ஆய்பரவை ஓவவா - மிகவும் விசாலமானவையாய்க கடலேயும் உவமையாகப்பெறுவரம் [கடலினும்பெரியன என்றபடி]; பிறிதொன்று நினைந்து பேச உரிய ஆய் ஒருவர் உள்ளத்து ஒடுங்குவ அல்ல - வேறேருபமானப்பொருளே ஊகித்துச்சொல்லுதற்குத் தகுந்தனவாகி ஒருவருடமனத்திற்குள் அடங்குந்தனமையனவல்ல; (எ - று.)—அம்மா - கண்களின் மிக்கவிசாலத்தைக குறிகரும் வியப்பிடைச்சொல்.

"கடலினும் பெரிய கண்கள்" என்றபடி சீதையின்கண்கள் மிகப்பெரியனவா யிருத்தலால், அவற்றினதன்மையை உள்ளதிஞல் ஊனறியுணர்தற்கு ஒருவராலும் இயலா தென்பதாம். அக்கண்களே முழுதும் பார்த்து முடியவேண்டு மென்றற் பலமுறைநோக்குமாறு அவை மிகப்பரந்திருக்கு மெனபார், 'உண்மைதெரியவாயிரக்காலேனுக்கின' எனரூர்; ஒருமுறைநோக்கினுல் திருப்தி பிறவாதவாறு மிக்கபேரழகுடைமையால் இவ்வாறு கூறினு ரெனினுமாம். கண்களின்கருவிழிகள் திருமால்போலக் கறுத்தும், அக்கருவிழிகளேச்சுற்றிலுமுள்ளபகுதிகள அத்திருமால் பள்ளிகொள்ளும் பாற்கடல் போல வெளுத்தும் இருக்கு மென்க; "அமிழ்தினிணவிளர்த்து உளநஞ்சினிற் கருகி" எனரூர் பிறரும். கரியவாய் வெளியவாகும் - தொடைமுரண்.

'அடங்குவ வல்ல', 'தேவர்க்குந் தெய்வமென்ன,' 'தேவரிற் றெய்வ மென்ன' என்றும்பாடம். (இச)

[புருவங்களின் வருணனை.]

நிரி. கேளொக்கினன்றியொன்றுகிளைத்தினுற்கீழ்மைத்தாமே
கோளொக்குமென்னினல்லாற்குறியொப்பக்கூறிற்றன்றால்
வாளொக்குமவடிக்கணுடன்புருவத்துக்குவமைவைக்கிற்
ரூளொக்கவளைந்துநிறபஷிரண்டில்லையநங்கசாபம்.

(இ - ள்) வாள் ஒக்கும் வடி கணுவ்தன் புருவத்துக்கு உவமை வைக்கின் - வாள்போன்ற கூறிய கண்களேயுடையவளான சீதையினது புருவங்

களுக்கு உவமையெடுத்து உரைத்தால்,—கேள் ஒக்கின் அன்றி ஒன்று கினத்தினுல் கீழ்மைதீது ஆம் - (தமகருள்) ஒன்றைபொன்று ஒத்தாலல்லாமல் வேறொரு பொருளை உவமை கூறினுல் இழிவுவமையாகும்; (மேலும்), கோள் ஒக்கும் எனனின் அல்லால் குறி ஒப்ப கூறிறறு அன்று ? (சதாரண மகளிரது புருவத்திற்கு உவமையாவதாரு பொருளை யெடுத்து இது எனன்) மனப் போக்கிற்குப் பொருந்தி நிற்கின்றதென்று (அதைச் சேதையின புருவங் கட்கு) உபமானமாகச் சொன்னுற் சொல்லலாமே யல்லாமல் உவமை பொருந்தக் கூறியதாகாது; (இனி, மனமதனது வில்லை உவமைகூறலா மெனறால்), தாள ஒக்க வளைந்து நிற்ப இரணடு அங்கச சாபம் இல்லை - இரண்டுருவையும் பொருந்துமாறு வளைந்துநிறபனவாகிய மன்மதனவிற்கள் இரண்டு உலகத்தில் இல்லை; (ஆதலால், அதுவும் உவமை கூறப்படாது); (எ-று.)—எ ஆல் - சற்றசைகள்.

சீதையின புருவங்கள் தம்மில் ஒன்றையொன்று நிகராதலனறி வேறொரு வுவமைப் பொருளைப் பெறமாட்டா; ஒருகால் கூறினுல், அவ்வுவமை, எற்ற உவமையாகாது இழிவுவமையினடாறபடும்; மேலும், எதோ ஒருபமாணப் பொருளை எனமனப்போக்கிற்கு இசைந்திருகினறதென்று கூறினுற கூறலாமே யல்லாமல், அது, அப்புருவங்கட்குப் பொருந்திய உவமையாகாது: இனி, மன்மதனுகு எபபொழுதும் நுனியிரணடிலு வளைந்துளளனவாகிய இரண்டு வில்கள் உளளனவாயின, அவை சீதையின புருவங்கட்கு ஒருபடியொப்பாம்: அவவாறு நுனிவளைந்தனவாகிய இரண்டுவில்கள் மன்மதனுகு இல்லையாகையால், அமமனமதனது வில்லை உவமையெனபதும் இயைவதன்று எனபதாம.

கேள் - இனமானது. இழிவுவமையாவது - உயர்ந்த பொருளோடு இறப்ப இழிந்ததை உவமையாகக்கூறுவது; இவ்விழிவுவமையின தனமையை, "மிகுதலுங குறைதலுங தாழ்தலு மூயாதலும், பரன்மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்ற தண்டியலங்கார சூத்திரதனிலீழ் "வேறுபாடுடைய என்றது - இவை புனபுலவர்புணாக்குகால் விக்கோரால் வெறுக்கப்படுவ தோர் சிறப்பினமை தெரிந்து குற்றமெனறு கூறப்படும," "மன்னவர்க்கு நாய் வனப்புடையா வாள்வயவர்" எனபுழி இறப்ப இழிதது இன்னுநாகப் புணர்க்கப்பட்டது உவமை' எனற உரைவாக்கியங்களால் அறிக. கோள - மனகொள்கை. அநங்கன் - அங்கமில்லாதவன; (க+அங்க=அநங்க) சிவ பிரானது நெற்றிக்கண்ணின நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து ஒழிந்தமைபற்றி, இவனுக்கு இப்பெயர். அநங்கசாபம் - வடசொற்றொடர்.

'குறியொக்க,' 'கூடலாமோ,' 'வளர்ந்துநிற்ப,' 'வளைந்தேநிற்ப' என்று பிரதிபேதம். (நிடி)

[நேற்றியின் வருணனை.]

நிசு. நன்னுதலருளினகாணுதலியடறுதலேகாடிப்
பன்னுதலமபன்னியாற்றுமதியெனுமபண்பதாகி
முன்னுளின்முனைவெண்டிங்கண்முழுநாளுங்குறைவேயாகி
யென்நாளும்வளராதென்னினிறையொக்குமியல்பிற்றுமே.

(இ - ள்.) மூன் னாளில் முளை வெள் திங்கள் - சுக்கிலபட்சத்துப் பிர தமையினன்று முளைக்கின்ற வெண்மையாகிய சந்திரனுன்னது,—நல் நாள் களினம்உம் நாணும் நளி அடி நுதலே நாடி - நல்ல பகற்காலத்து மலர்க் துள்ள தாமன்மலரும் (தான் ஒப்பாகாது) வெட்கமடைதற்குக் காரணமான பெருஷமயுள்ள பாதங்களையுடைய சீதையினது நெற்றியின் அழகை ஆராய்ந்து, பல் நாளும் பன்னி - பலநாளும் (அதையே) சிந்தித்து, ஆன்று - பொருமல், மதி எனும் பண்பது ஆகி - மதியென்று சொல்வதற்கு ஏற்ற குணத்தை யுடையதாய், முழுநாளும் குறைவே ஆகி - (பதினுறுகலைகளும் நிரம்பவேண்டிய) பௌர்ணமியினதிலும் குறைவாகவே இருந்து), எ நாளும் வளராது எனனின - எந்நாளிலும் வளராமலே இருக்குமாஞல், (அப்பொழு தும் அச்சந்திரன), இறை ஒக்கும் இயல்பிற்று ஆம் - (சீதையின் நெற்றிக் குச்) சிறிதே உவமையாகின்ற தன்மையுடையதாகும்; (எ - று.)

சுகில பட்சத்துப் பிரதமையினன்று தோன்றும் பிறைச்சந்திரன் சீதை யின் நெற்றியழகை நினைந்து பொருமை கொண்டு தான அதற்கு ஒப்பாக வேண்டுமென்று எண்ணி, பலநாள் சிந்தித்துப் பதினுறுகலைகளும் நிரம்பிப் பூர்ணமாகவேண்டிய பௌர்ணமியினன்றும் தான் அவ்வாறுகாமல் பிறைச் சந்திரனுகவே யிருக்குமாஞல், அப்பொழுது தான் அச்சந்திரன சீதையின் நெற்றிக்கு ஒருபடியொப்பாகு மெனபதாம். இச்செய்யுள - உய்த்துணர்வணி யின்பாற்படும்; 'இன்னபடியிருப்பின் இன்னதாகூடும்' என்ற வாய்பாடு பொருந்தக் கூறுவது, இவ்வணியின் இலக்கணம்; வடநூலார் ஸாபாவிகாலங் காரமெனபர். ("இனறமையாண் மாலிலா வாணமுகங்கண் டேக்கறலோ, ... ஒளிர்சடையீர் சென்னி, வளராவா றென்னேமதி" என்ற செய்யுளின் கருத்து இங்குக் கருதத்தக்கது.) சந்திரன 'மதிக்குந் [மதிதல் - ஆலோசித் தல்] தனமையுள்ளது - மதி' எனறு பொருளபடக்கூடிய தனது பெயர் நிலைத்து நிற்க வேண்டினுல், சீதையின முகதிற்கு ஒப்பாகுமாறு அவன் எப்போதும் வளராமலேயிருக்கவேண்டுமெனபது, 'மதியெனும்பண்பதாகி... எந்நாளும் வளராதென்னின்' என்பதன கருத்து; 'மதுவை [அமிருத கிரணத்தை] யுடையது மதி' எனறு சந்திரனுகுப் பெயராகினற இச் சொற்கு 'மதிக்குந் தன்மையுள்ளது - மதி' என வேறொரு வகையாற் காரணக கரபித்துகூறியது - பிரிந்திலேவிற்சியணியின் பாற்படும்; வட நூலார் நிருக்கியலங்கார மென்பர்' இறையொக்கு மியல்பிற்றுமே' என்றத னுல், அப்போதும் முற்றுவமையாகா தென்றவாறு. தாமரைமலர் தான் மலர் தற்கு உரிய காலமாகிய பகற்காலத்திலும் சீதையின்பாதங்கட்கு ஒப்பாகா தென்பார் 'நன்னுளுநளினகாணுகளியடி' என்றார். 'முறைகாலுங் குறை வேயாகி யெக்காலும் வளர்ந்ததென்னின்' என்ற பாடத்தைக்கொண்டு, நற் றேகாரத்தை எதிர்மறைப்பொருளதாக்கி, சந்திரன் சீதையின் நெற்றியழ கைக் கண்டு பொருமைகொண்டு பலநாளும் அதையே நினைந்து அவ்வாறு மதித்ததனுல் மதியென்றபெயரைப் பெற்று நாளுக்குநாள் முறைமுறையா கக் குறைந்தபோதிலும் அடுத்த சுக்கிலபட்சத்தில் எக்காலும் வளர்ந்து கொண்டிருப்பதனுல், அது சிறிதும் சீதையின் நெற்றிக்கு உவமையாகா

தென்று பொருள்கொள்ளினுமாம். அடியென்றது - அடிமையையுடையாளுக்குச் சினையாகுபெயர்.

முன்நாள்: முதல்நாள் - சுக்கிலபட்சத்துப் பிரதமை; முழுநாள் - பூரணிமை.

"கண்ணுநளினநாணுமுகத்தினேநுதலேகாடி" என்றபாடங்கொண்டு, முகம் நெற்றி என்ற இவ்விரண்டின் வருணனையாக இச்செய்யுட்குப்பொருள் கூறுதல் - முகத்தின்வருணனைக்காகத் தனியேஒருசெய்யுள் பின்பு வருதலாலும், நன்குபொருந்தாமையாலும், ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. (நிசு)

[முன்நெற்றிமயிரின் வருணனை.]

நிசை. வனபவரில்லையன்றேவனத்துணும்வந்தபின்னை
யனையவெனினுந்தாந்தமழகுக்கோரழிவுண்டாகா
வினைசெயக்குழன்றவல்லவிதிசெயவிளைந்தநீலம்
புனைமணியளகமென்றும்புதுமையாமுவமைபூணை.

(இ - ள்.) நாம் வனத்துள் வந்த பின்னை - நாங்கள் வனத்தில்வந்த பிறகு, வனபவர் இல்லை அன்றே - (சீதையின் முன்நெற்றிமயிர்களே வாரி) அலங்கரிப்பவர் இல்லையன்றோ; தாம் அனையன எனினும்-தாம் அத்தன்மையனவாளுலும் [அவ்வாறுவாரியலங்கரிக்கப்படாவிட்டாலும்], தம் அழகுக்கு ஓர் அழிவு உண்டாகா - தமது அழகுக்கு ஒருகுறைவு உண்டாகாது; வினை செய குழன்ற அல்ல - வாரித்தொழில்செய்வதனுல் சுருிந்தனவல்லவாய், விதி செய விளைந்த - பிரமதேவன்படைத்ததனுல் இயற்கையாகவே சுருிந்தனவான, நீலம் மணி புனை அளகம் - நீலரத்நத்தைப்போன்ற அந்த முன்நெற்றிமயிர்கள், என்றும் புதுமை ஆம் - எப்பொழுதும் புதுமையாகவே தோன்றுகின்றன; உவமை பூணை - ஒருவமைப்பொருளையும் ஏற்றுக்கொள்ளமாட்டா; (எ - று.)

வாரிப்புனைதலாகிய தொழில்செய்யாமலிருக்கையிலும் இயற்கையாகவே குழன்று அழகுமிக்குப் புதுமையாகத் தோன்றுகின்ற சீதையின அளகங்களுக்கு ஏற்றஉவமைப்பொருள் யாதொன்றையும் எடுத்துக்கூற இயலாதென்பதாம். பின்னிரண்டடிகள்—'வனத்தில் நாங்கள்வந்தபிறகு சீதையின் அளகங்கள் வனதற்றொழிலின்றியும் அழகிற்குறைவுபடா' என்ற முன்னிரண்டிகளிற் கூறிய விஷயத்தைச் சமர்த்திக்கு கிற்பது - தோடர் நிலைச்செய்யுட்குறியணி. பேரழகுள்ள பொருள்கள் காணுந்தோறும் விருப்பத்தை விளைத்அப் பின்னுங்காணுமாறு புதியபொருள்போலத் தோன்றுதல் இயல்பாதலால், 'என்றும் புதுமையாம்' என்றார். குழலுதல் - கருமணல் படிந்தாற்போலப் படிப்படியாக அமைதல்.

அவயவத்தின் தொகுதிபற்றி, அளகத்தைப் பன்மையாற் கூறினர். அன்றே - தேற்றம்.

'தந்தமழகுக்கு,' 'தாழ்ந்தவழகுக்கோழகுண்டாகா', 'சீதப், புனை,' 'இன்னும்புதுமையாம்,' 'என்றும் புன்மையாம்' என்றுபிரதிபேதம். 'புனை

மணிப்பவளம்,' 'என்னும்புன்மையாம்' என்ற பாடங்கள் செவ்வனே பொருள் படாவாம். (நிஎ)

[முகத்தின் வருணனை.]

நிஅ. கொண்டலின் குழலியாம்பல்குளிர்கிலவள்ளிகாற்றக்
கெண்டைபொண்டாளமென்றிக்கெண்மையகிடந்தகெண்கண்
மண்டிலம்வதனமென்றுவைத்தனன்மிதிலையீயப்
புண்டரிகத்தையுற்றபொழுதுபொருந்தித்தோய்வாய்.

(இ - ள்.) கொண்டலின் குழலி - காளமேகத்தின் கொழுத்தும், ஆம்பல்-செவ்வல்லிமலரும், குளிர் கிலை - வளர்ந்த வித்தகளும், வள்ளை - வள்ளைகொடியினிலையும், கொறும் கெண்டை - சிறந்த கெண்டைமீன்களும், ஒள் தாரம் — ஒளிபொருந்திய முத்துக்களும், என்ற இ கேண்மைய - எனறு கூறப்பட்ட இத்தனமையனவான பொருள்கள், கிடந்த - அமையப்பெற்ற, திங்கள் மண்டிலம் - சந்திரமண்டலத்தை, விதியே - பிரமதேவனே, வதனம் என்று வைத்தனன் - (சீதையின்) முகமென்று படைத்துவைத்தான்; நீ—, அ புண்டரிகத்தை - (சீதையினது) அந்தத் தாமரைமுகத்தை, உற்ற பொழுது - நெருங்கிக் காணுமபொழுது, அது பொருந்தி தோய்வாய் - (யானகூறிய) அத்தனமையை நனறாகக்கண்டறிவாய்; (எ - று.)

சீதையினமுகமென்றபெயரிட்டு, கொண்டலினகுழலி முதலியவற்றையுடையதொரு சந்திரமண்டலத்தைப பிரமதேவன படைத்தன னெனறு கூறியது - வந்தவொழிப்பணியின்பாற்படும்; வடமொழியில், கைதவா பஞ்சுரென்பர். "கோளிழைத்தாமரையாக கொடியும பவளமும் வில்லும், கோளிழைத்தகண்முகதாக தளிருங குளிர்வானபிறையும் கோளிழையாவுடைய கொழுஞ்சேரிவட்டங்கொல் கண்ணன, கோளிழைவாண முகம்" எனறதூஉ, இங்கு ஒப்புமைநோக்கத்தைக்கு குழலுக்கற்றைக்கு உவமையாகாது, அளகத்திற்கு உவமைபாகலினறி, 'கொண்டலின்குழலி' என்றார். கொண்டற்குழலி - மளகத்திற்குரிய, செவ்வாம்பல்மலர் - வாய்க்கும், வளைந்தவித்தக - புருவங்கட்கும், வள்ளைவிலைக்ள காதுகட்கும், கெண்டைமீனகள் - கணகட்கும், முத்துகளன - பறகளுக்கும உவமையாமென்க. காண்டற்கு இனிமையிற்றும், கிரந்திலும், கணிடாரைமறிவித்தலிலும் முகத்திறருத நாமையால் உவமையாம். 'இதுகேணமைய' எனறதனால், முகத்திறகு உவமைகூறப்படுகினற பசசோதரத் முதலியன தொக்க. கொண்டல - நீரைக் கொள்வது எனக காரணமாகி மகத்துக்குக் காரணகுறி.

'ஒளிரணடுமொன்றிகேண்மையில்,' 'விதியோனீ,' 'மதியோர்நீ,' 'ஒத்த பொழுது,' 'பொருந்தியோராவாய்' எனறு பிரதிபேதம்.

"வனேபவனில்லை" எனற தொடக்கத்தைச் செய்யுளானது முனறும், "கொண்டலினகுழலி" எனற தொடக்கத்தது இச் செய்யுளானது முனறுமாகச் சிலபிரதிகளிற காணப்படுகினறன: அவ்வாறு இருத்தல், அளகத்தையும் முகத்தினறுறப்பாகக கொணடு 'கொண்டலினகுழலி' எனறு கூறியிருகுக கவியினகருத்தோடு மாறுபடும். (நிஅ)

[கூந்தலின் வருணனை.]

கரிய கானினைக் கழித்துக் கட்டிக்கள்ளி வேரோடியுட்டிப்
பேரிருட்பிழம்பு தேய்த்துதெறிவுறீஇப்பிறங்குதற்றைச்
சேர்குழற்றொகுதியென்றுமம்மைசெய்தனைத்தம்மா
சேர்மையைப்பருமைசெய்தநிறைகுலுங்கூந்தனீத்தம்.

(இ - ள்.) சேர்மையை பருமை செய்த நிறை நெஞ்சு கூந்தல் நீத்தம் - நுண்மையைக்கொண்டு பருமையாகச் செய்தநான [மெல்லிய மயிர்களின் தொகுதியாலாகிய] அடர்ந்த நறுமணமுடைய (சேர்தலினை) கூந்தலின் தொகுதியானது.—கானினை - கரியமேகத்தை, கழித்து கட்டி - கெட்டித்துக் கட்டி, கள்ளிவேடு ஆலிவேட்டி தேனையும் அதில் முதலியவற்றின் நறுமணப் புகையையும் ஊட்டி, பேர் இருள் பிழம்பு தேய்த்து - பெரிய இருட்குழம்பு பிலே தோய்த்து, தெறிவு உறீஇ பிறங்கு கற்றை சேர் குழல் தொகுதி என்று - தெறித்தலைப்பொருந்தி விளங்குகின்ற கற்றையாகிய தொகுத்தன்மையுள்ள குழல்தொகுதி யென்று பேர்வைத்து, சும்மை செய்து அனையது சுமையாக வைத்தாற் போன்றது; (எ - று.)

மேகத்தைப் பிடித்துச் சீவிக்கட்டி, அதற்கு நெய்ப்பையும் வாசனையையும் உண்டாக்கி, பின்னும் கருநிறமமையச்செய்து, குழற்கற்றையென்று பேரிட்டுப்பெரும்பாரத்தை வைத்தாற்போன்றது சேதையின் கூந்தல் தொகுதி யென்பதாம்; வஞ்சவொழிப்பணியை அங்கமாக்கொண்டுவந்த தன்மைத் தற்குறிப்பேற்றவுவமையணி. உபமேயத்தினும் உபமானம் சிறந்திருக்க வேண்டு மென்ற அலங்கார நூலார்கொள்கைக்கு மாறாக, உபமானப்பொருளாகிய மேகத்தை பிடித்துச் சீர்திருத்த வேண்டிற்று, உபமேயப்பொருளாகிய கூந்தலின் வைலக்ஷண்ய மெனக சாதாரணமாக மேகத்தினும் மிக்க நெய்ப்பும் செயற்கைமணமும், கருநிறமும் கூந்தலகு உள்ளதனால், உவமைப் பொருளாகிய அம்மேகத்திற்கு முவாறையெல்லாம் கூட்டியுரைக்கவேண்டுவதாயிற்று. பலமெலியமயிர்களு திரண்டிருத்தலும், நெய்ப்பும், இயற்கையுஞ் செயறகையுமகிய நறுமணமும் மிக்க கருநிறமும், நெறிப்பும் - கூந்தலின் குணங்களாதல அறிக 'கூந்தற்பாரம்' எனக் கூறப்படுதலால், 'சும்மைசெய்தனையது' என்றார். மெல்லியமயிர்கள் பல திரண்டு பருமையாக இடன்றுள்ளதனால், கூந்தலகு 'சேர்மையைப் பருமைசெய்த' எனற அடைமொழி கொடுக்கப்பட்டது.

சுமை - சுமையென்பதன் விரித்தல். அம்மா - வியப்பிடைச்சொல். நீத்தம் என்றது மிகுதியென்றமாத்திரமாய் நின்றது.

'கானினைக்கழித்துத்தள்ளி,' 'கள்ளிவேடாலிகாட்டி,' 'கள்ளிவேடாலி கூட்டி" 'தொகுதிச்சூழ்' என்பன - பாடாந்தாக்கள். (இக)

[சீதையின் நல்லிலக்கணவமைதி.]

50. புல்லிதழ்கமலத்தெய்வப்பூவிற்குமுண்டுபொற்பி
னல்லியின்மதிக்குமுண்டாங்களங்கமென்றுரைக்கு
மல்லவுஞ்சிறிதுகுற்றமகன்றிலவன்னமன்ன.
[மேக
லல்லியலரு ஞக்கெல்லாநலனன்றிப்பிறிதுண்டன்றுரை.

(இ - ள்.) செய்வம் கமலம் பூவிற்கும் - தெய்வத்தன்மையுள்ள தாமரை மலர்க்கும், புல் இதழ் உண்டி - பயனற்ற [அதனிலேல் தழுவியுள்ள] புறவிதழாகிய குற்றம் உள்ளது; மொற்பின் எல்லியின் மதிக்கும் - அழகின் வரம்பாகிய [மிகவும் அழகிய] சந்திரனுக்கும், களங்கம் என்று உரைக்கும் ஏதம் உண்டு - களங்கமென்று சொல்லுதற் குற்றம் உள்ளதாகும்; அல்லவும் - இவைகளல்லாமல் மற்றமுள்ள நிகந்தபொருள்களும், நிறைகுற்றம் அன்றில் - நிறைதாவது குற்றமில்லாமல் இருக்குமாட்டா; [ஒவ்வொரு நிகந்த பொருட்கும் நிறைதாவது குற்றமுண்டு], அன்னம் அன்ன நல் இயலாருக்கு - அன்னப்பறவைபோன்ற அழகிய நடையையுடையவளாகிய சீதைக்கு, எல்லாம் நலன் அன்றி பிறிது உண்டு அன்று - முழுவதும் நன்மையேயல்லாமல் வேறொன்றாகிய குற்றம் உளதாகாது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நவமணிகளுக்கும் புறவிதழாகிய குற்றம் இருக்கின்றது; சந்திரனுக்கு களங்கமாகிய குற்றம் இருக்கின்றது; இவ்வாறு, பல நிகந்த குணங்களையுடைய உயர்ந்த பொருள்களிலும் ஏதேனும் நிறைந்தகிருத்தல் உலகியல்பு; இச்சீதைக்கோ முழுவதும் குணமேயன்றிக் குற்றம் நிறைமில்லை யென்பதாம்: வேற்றுமையணியுவமை: இது, செய்யுள் நிரேகரிருடைத்தாலங்கார மெனப்படும். இதனால், உலகத்திற்காணப்படுங் நிகந்த பொருள்களெல்லாவற்றினுஞ் நிகந்தவள் சீதை யென்பது தொனிக்குங். "செல்லுக்குமியுண்டு நீர்க்குமரைபுண்டு, புல்லிதழ்பூவிற்கு முண்டு" என்ற காலடியாரை அடியொற்றியது. இச்செய்யுளின் - முன்னிரண்டடியு மிதற்குமி தன்னிடத்தில் தக்குமாறு நிற்றலால், தாமரைமலரை 'கமலத்தெய்வப்பூ,' என்றார், - "மங்கலமகிழ் வின்றியமையாது, யாவரு மிழ்க்கு மேற்கொள மெல்லிப், பொழுதின் முகமலர்வுடையது பூவே" என்றதனாலும், பூவின்றெய்வையுமியலாம். தனது அதிருதகிரணங்களை அக்கினிமுதலிய தேவர்கட்கு உணவாக அளித்தல், உலகின்கிறையிருளைநீக்குதல் முதலியனசந்திரனது நிகந்தகுணங்களாம்.

இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், 'புல்இதழ்' என்பதற்கு - பண்புத்தொகையாய் இழிவான இதழென்றும், வினைத்தொகையாய்த் தழுவியுள்ள இதழென்றும் ஒருங்கே இரண்டுபொருள் கொள்ளப்பட்டன; முதலிற், புண்மையாகிய இதழென்றும், புல்லின இதழென்றும் விரியும்.

'எல்லுக்குமிக்குமுண்டால்,' 'களங்கமென்றிசைக்குமேனும்,' 'பிறிதண்டமோ' என்ற பாடாந்தரம் (60)

[இதுவும் அது.]

கூகை யேங்கையர்க்கோ நிலைத்தலிலக்கணம்வண்ணவாசப்
பக்கயத்தவட்குமையாரிரம்பலபற்றி நீங்கிற்
செக்கையற்கருங்கட்செல்வாய்த்தெருவுலவங்குழ்தெய்வக்
கெக்கையக்குயிலுக்கொன்றுங்குறையிலதுரியமஃதே.

(இ - ள்.) ஐயா! பற்றி நோக்கின் - நூலாய்ந்தபார்த்தால், ஆங்கையர்க்கு நிலைத்த இலக்கணம் - ஸ்திரீகளுக்கான (ஸாமுத்திரிக சாஸ்திரத்தில்) கூறி

...ள்ள உத்தமலக்ஷணங்கள், வண்ணம், வாசம், பங்கயத்தில்வீற்றும், நிறம்பல... அழகிய வாசனையுள்ள தாமரைமலரில் வசிக்கின்றவனான இலக்குமிக்கும் நிரம்ப அமையவில்லை; செம்மையான கருங் கண் செம்மாய் தேவரும் வணங்கும் தெய்வம் கொங்கை அகுயிலுக்கு - அழகிய கயல்மீன்போன்ற வருமிழி னோக்கெனுண்ட கண்களையும் வெற்றவாயையுமுடைய தேவரும் வணங்கு தற்கு ஏற்ற நெற்புவாய்ந்த தனங்களோடு கூடிய குயில்போன்ற இன்சொற் மொழிப்பேசும் அற்சனைக்கு, ஒன்றும் குறைவு இலை - (உத்தமலிலக்ஷணங் களில்) ஒன்றுவது குறைவுபட்டிலது; குறியும் அஃதே - (நீ அவனை அறி தற்கு) அடையாளமும் அதுவே; (எ - று)

'சேதை இலக்குமியினும் நல்லிலக்ஷணம் நிரம்பியவ ளென்பதாம். 'வணங் கும்' என்ற பெயரெச்சம், 'குயிலுக்கு' என்பதனோடு இயையும். இலக் ஷணம் - லக்ஷண மென்ற வடசொல்லின் றற்பவம். பங்கஜம் என்ற வட சொல் சேற்றினின்றுதோன்றுவது என உறப்புப்பொருள்படும்; (பங்கம் - சேறு, ஜம் - உண்டாவது.) தாமரைக்குக் காணவிடுகுறி. உருவத்திலும் பிறழ்ச்சியிலும் மகளிர்கண்களுக்குக் கயல்மீன் உவமமாம். செவ்வரி பாய்ந் திருத்தலால், கண்களுக்குச் செங்கிறக்கயலே உவமைகூறினரு மாம். செங்கயற் கருங்கட் கேவ்வாய் - தோடைமுரண். ஒன்றுக்குறைவின்றி நல்லிலக்ஷணம் முழுவதும் நிரம்பியிருத்தலால், சேதை, 'தேவரும் வணங்குந் தெய்வக்குயில்' எனப்பட்டான். குயில் - உமையாருபெயர். உம்மைகள் மூன்றனுள், முத லிரண்டும் - உயர்வுநிறப்பும், ஈற்றது - இழிவுநிறப்புமாம்.

'குரைவில' என்றும் பாடம். (கக)

[கோக்களின் வருணனை.]

கூஉ. குழல் படைத்தும் வேய்க்குழலே புண்டாக்கியும், யாழை செய்தும் வீணையைச் சிருஷ்டித்தும், குயிலொடு கிளியும் கூட்டி குயிலையும் கிளியையும் படைத்தும், மழலையும் பிறவும் தந்தும் (காரணவாய்ப் பறவை யின்) எழுத்தினிரம்பாத மழலைச்சொல்லையும் மற்றும் இன்சொற்களுக்கு உறையாகும்பொருள்களையும் இயற்றியும், வடித்த பழமிதிர்ந்த, கை கைகளையுடைய, மலையின் மேலான் தாமரைமலரில் வாழ்கின்ற பிர தேவன், (பிறரு) இழை பொரு முலையினுக்குன் இன்சொற்கு இயைய செய்தான்; ஆபரணங்கள்புனைப்பெற்ற தனங்களையுடைய சேதையினது இன் சொற்கள் நன்றாகப் பொருந்துமாறு அமைத்தான்; பிழை இலது உவமை கூட்டப் பெற்றிலன் - (அச்சொற்களுக்குச்) குற்றமற்ற உவமைப்பொரு ளொன்றையும் எடுத்துக்காட்டுமாறு உண்டாக்கவில்லை, இன்னும் பெறும் தொழில் - இனியேனும் படைப்பனோ? (அறியோம்); (எ - று.)

கூபயிரமன் சிகையின் இவ்வொற்களைப் படைக்கவேண்டி மூலியில் செய்வ குழல் முதலியவற்றைப் படைத்துப் பழகிக் கைதேர்ந்தபிறகே அச்சிலையின் கைகளைப் படைத்தனன்; ஆகவே, அவற்றிற்கு ஏற்ற உலகப்பொருள் இதுவரையிலும் நிச்சயிருக்கவில்லை யென்பதாம். குழல் முதலியவற்றின் ஓசையினும் சிலையின் சொற்கள் இனிமையிக்கன என்றவாறு. மலரின் மேலான் என்ற விசேஷத்திற்கு 'குழல்படைத்து..... பழலையும் பிறவும் அந்தமுடிதலை' என்று அடைமொழி கொடுத்தது - சிலையின் சொற்கள் மிகவும் இனியனவாகுமாறு படைக்கும் ஆற்றலுள்ளவை யென்ற கருத்தைத் தெரிவித்தலால், கருத்துடையடையோழியணியும்; உடநூலார் பரிகாரவில் காரணமென்பர்; அடைமொழி ஓர் கருதுதலை யுட்கொண்டிருப்பது இவ்வணியின் இலக்கணம். பிரமன் படைத்தற்கடவுளாதலால், யாழ்முதலியவற்றையும் படைத்ததாகக் கூறினர். இனி, முதல மூன்றடிகட்கு—வடித்தகைம் மலரின் மேலான [பிரமதேவன்] வேய்க்குழலோசையையும் யாழோலியையும் குயிலினகுரலேயும் கிளியினபேச்சையும் (நாகணவாய்ப் பறவையின்) மழலைச்சொலையும் மதுரமாகிய பிறவற்றையும் தேடி அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்துச் சிலையின வார்த்தையாகப் படைத்திருக்கிறான என்று பொருள் கூறினுமாம்; குழல்முதலியவற்றின் இனிமையுழலும் சிலையின் சொற்களில ஒருங்கேதிரண்டுள்ளன எனறவாறு.

'பிறவும்' என்றதனால்—"நரட்டுங் கதலி நடுக்கரும்பு மாவருகை, காட்டுங் குயில் கினோ கத்தணடு - வேட்டருத்திஞ், சினி சருகசரை செந்தேன முதம பால் குழல் யா, ழான பதினைகு மொழிகசாம," "இயம்புமொழி கினோ யிரங்கிசையாழ் வீணை, வயங்குகருங்குயில வண்பூவை—தயங்கினிய, பாகு கரும் பமுதம பால தேன் மத்பழமென், றாகும" எனறவிடங்களிற் கூறியவற்றில இக்குசகூறியன வொழிந்த மற்றவறறைக் கொளக. குழல், யாழ், குயில, கிளி - அவறறின ஒலிக்கு, முதலாகுபெயராக. பொரு - ஒன றொடொனறு ஒத்த எனினுமாம.

'குழலேசைதனு,' 'மழலையபிறவும்,' 'வடித்தகைம்மலரி ன,' 'வடித்த தைமலரின்,' 'இழைபொருமிடையினன்,' 'பிழையிலனுல வமகாட்ட' என் பன - பாடாந்தரங்கள் (அஉ)

[இதுவும் அது.]

மூஉ. வானின்றவுலகமூன்றும்வரம்பினறிவளர்ந்தமேனி
நானின்றசுவைமறறொன்றேறுவமிழ்த்தனறிகலதிலலை
மீனின்றகண்ணினுடனெனமொழிக்குவமைவேண்டிறை
ஞானஞனறேறுவமிழ்தமொனறேறுவைசெவிக்கின்பஞ்செய்யும்.

(இ - ன்.) வான் நின்ற உலகம் மூன்றும் எல்லை இன்றி வளர்ந்து ஏனும் சுவர்க்கம் மூதலாகப் பொருந்திய மூன்று உலகங்களும் வரம்பில்லாமற் பரவியுள்ளன வென்றாலும், (அவ்வுலகங்களுள்), மீன் நின்ற கண்ணினுடன் நின்றில் மொழிக்கு உவமை வேண்டின் - மீன்போன்ற கண்களோடு பொருந்தியான சிலையினது மெல்லிய சொற்களுக்கு உவமைப்பொருளே யெடுத்துக்

கூறுமிருமபிறல்—தேன் ஒன்றும், அமிழ்தம் ஒன்றும், பால் ஒன்றும், (உள்ளன); (ஆயினும்), அவைசெவிக்கு இன்பம் செய்யும் அவ்விருபொருள்களும் (காலிற்கு இனிமைதருமேயன்றிச்) செவிக்கு இன்புஞ்செய்யாவாம்; மற்றை ஒன்று அமிழ்து ஒ - மற்றெல்லாவற்றிற்கும் தேவாமிருதமும், காணுகின்ற சுவை அனறி கல்லது இல்லை - (முற்கூறியனபோல) நாவிற்கு உரிய சுவையுடையதாகுமே யனறி வேறுகண்ணைபை யுடையதன்று [செவிக்கு இன்பஞ்செய்யாது என்றபடி]; (எ - று.)

ஒவ்வொன்றும் மிகவும் விசாலமான மூவுலகங்களிலும், தேடித்தேடிப் பார்த்து, சீதையின் சொற்களுக்கு ஒருபடியாக உவமைகாட்டுதற்கு உரியன வாய்த் தேன் பால் தேவாமிருதம் என்ற மூன்று சிறந்தபொருள்கள் உள்ளன வென்னலாமென்றல், அவைகளும் காவிற்கு இனிமைதருவதலது செவிக்கு இன்பந்தராமையால், சீதையின சொற்களுக்கு ஒப்பாகமாட்டா என்பதாம்; வேற்றுமையணியை அதகமாகக்கொண்டுவந்த எதிர்நிலையணி. (கூ)

[நடையின் வருணனை.]

சூசை. பூவருமழலையன்னப்புனைமடப்பிடி பென்றின்ன
தேவருமருளுதக்கசெலவினெனினுந்தேறன்
பாவருங்கிழமைதொன்மைப்பருணிதர்செய்தொடுத்தபத்தி
நாவருங்கிளவிச்செவ்விநடைவருநடையணல்லீரோய்.

(இ - ள்.) நல்லோய் - நற்குண முடையோனே! பூவரும மழலை அன்னம் - தாமரைமலரிற பழகுந்தன்மையுள்ள மழலைச்சொறகளையுடைய அன்னப்பறவையும், புனை மடம பிடி - அழகிய இளமையாகிய பெணயரனையும், என்ற இனன - என்ற இவைகள், தேவரும் மருள தக்க செலவின - தேவாகளும் கண்டு மருளும்படியான [சிறந்த] நடையையுடையன, எனினும் - என்றலும், தேறென் - (அவைகளைச் சீதையின் நடைக்கு உவமையென்று கூறல) உறுதிகொள்ளேன்; பாவரும் கிழமை தொன்மை பிருணிதர் - செய்யுள்செய்வதிற் பொருந்திய உரிமையையுடைய [பாண்டித்யமுடைய] பழமையான புலவர்கள், தொடுத்த - இயற்றிய, பத்தி - ஒழுங்காகிய, நா வரும இனவி செவவி நடை - நாக்கிற்கு இனிமையாக வருகின்ற சொற்களையுடைய காவியங்களின் அழகியநடையை, வரும - ஒத்த, நடையள் நடையையுடையவள்; (எ - று.)

உலகத்து மகளிர்நடைக்கு உவமையாகக் கூறப்படுகின்ற அன்னப்பறவை முதலியவற்றின நடையைச் சீதையின நடைக்கு ஒப்பாகுமென்ற சிறிதும் கருதேன; பழைய கல்லிசைப்புலவர்க ளியற்றியுள்ள காப்பியங்களின் நடை தட்டுத்தடக்கலின்றி எவ்வகையாலும் ஒப்பற்ற விளக்குதல்போல இச் சீதையின நடையும் ஒப்பற்று விளங்கு மென்பதாம். 'நடை' என்னுஞ் சொல்லொப்புமைபற்றி, நூலின்நடை சீதையின்நடைக்கு உவமைகூறப்பட்டது. வேறுநூலார் நூலினடையை மெலிவென்பர். "பூவிற்குத் தடமுரையே" "பூவெனப்பிறிது பொறிவாழ்பூவே," "பூவினுக்கருங்கலம் பூவொக்கு நாயகி" முன்பலவடிகளில், பூன்ப்பி - தாமரையைக் குறித்து நின்றது.

இன்ன - இதாரிச்சட்டியரப்பிதந்த பலவின்பாற்பெயர். செவ்வு - தடை. பத்தி - பத்தியெனக் கூறுவாரு முளர். காவருஞ்சினவி - காப்பியுத்திற்கு, அன்மொழித்தொகை. தடைவரு தடை, வரு - உவமவுருபு.

'எனவ்வதேதேன்,' 'பாவருகேண்மைத்தொன்மை' என்றும் பாடம். ()

[நிறத்தின் வருணனை.]

கூறி. எந்நிறமுரைக்கேன்மாவினிளநிறமுதிருமற்றைப்
பொன்னிறங்கருகுமென்றுன்மணிநிறமுவமைபோதா
மின்னிரைகாணியெங்கும்வெளிப்படாவொளிக்கும்வேண்டிற்
றன்னிறத்தானேயொக்குமலர்நிறஞ்சமழ்க்குமன்றே.

(இ - ன்.) (சீதையின் நிறத்திற்கு உவமை கூறவேண்டி மாயின்),—மாவின் இள நிறம் முதிரும் - மாமரத்தின் இளந்தளிரின்நிறம் (என்றும் ஒரு படிப்படியில்லாமல்) முதிர்ந்துபோகும்; பொன் நிறம் கருகும் - பொன்னின் நிறமும் (இந்நிறத்தக்குமுன்னே) கறுத்துத்தோன்றும்; மணி நிறம் உவமை போதா - இரத்தினங்களின் நிறமும் உவமையாதற்கு ஏற்ற ஒளியின்றிக் குறைந்திருக்கும்; மின் நிறம் காணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும் - மின்னலின்நிறமோ (சீதையின் நிறத்தைக் கண்டு) வெட்கி எப்போதுமாக வெளிவராமல் மறைந்துகொள்ளும்; மலர் நிறம் சமழ்க்கும் - தாமரைமலரின் நிறமும் பின்வாங்கிவிடும்; என்றால்—, எ நிறம் உரைக்கேன் - வேறு எந்த நிறத்தை யெடுத்து உவமைகூறவேன்? (யான்) வேண்டின் - (எப்படியாவது) உவமைகூறவேண்டுமென்றால், தன் நிறம் தானே ஒக்கும் - (அந்தச்சீதையின்) நிறம்(வேறுஉவமைபெறாமல்) தனக்குத்தானே ஒப்பாய்நிற்கும்;(எ-று.)

மாத்தளிர், பொன், இரத்தினங்கள், மின்னல், தாமரைமலர் என்பவற்றை மனிர்மேனிநிறத்திற்கு உவமைகூறுதல், மரபு. இவற்றினும் சீதையின மேனிநிறம் அழகில் விஞ்சியிருக்கு மென்பது, கருத்து. எதிர்நிலைநவிலை அங்கமாகக்கொண்டுவந்த இயைபின்மையணி. இயற்கையாக ஒருகொடிப் பொழுதில் தோன்றிமறையுந்தன்மையதான மின்னலை, சீதையின் நிறத்தைக் கண்டு மறைவதாகக் காரணம் கற்பித்துக் கூறியதனால், 'மின்னிரைம் காணியெங்கும் வெளிப்படாவொளிக்கும்' என்பது ஏதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும். கான்செல்லச்செல்ல இளந்தளிர்கள் முதிர்ந்த நிறம் மாறுதல், இயல்பு. மற்றை - அசை; உவமைப்பொருளாகக் கூறியதன் இனத்தைக் காட்டுமென்னுமாம். அன்றே - தேற்றம்.

'பொன்னிறங்கறக்கும்,' 'காணிப்பொங்கி' என்று பாடபேதம். (அ)

[ஆகாயபிதகன் பிராட்டியினிடஞ் சொல்லுமாறு சில அடையாளங்களை அநுமானுக்குக் கூறத்தொடங்குதல்.]

கக. மங்கைய ரகலி யொப்பார் மற்றுளரில்லை சென்னுஞ்
சங்கையி னுள்ளந் தானே சான்றெனக்கொண்டு சான்றோ
யுங்குவணினையை யெல்லா மனத்தினுங் தருகு சார்ந்து
நின்கண்வதன் மூகத்தினுட்குச் செப்பெனப் பின்னுஞ் செய்யும்.

(இ - ள்.) சான்றோய் - சற்குணங்களையுடையவனே! "அவனே ஒப்பார் மற்று மேன்மையர் உளர் இல்லர் என்னும் - அச்சிதையைப்போன்றதிவ்விய வேறமகளிரொருவரு மிலரென்ற நினைச்சிற, சன்ற இல் உள்ளம் தடுமே - சஞ்சலமில்லாத உனதுமனத்தையே, சான்று என கொண்டே - சாட்சியாகக்கொண்டு, அன்று - அச்சிதையிருக்குமிடத்தில், அவள் நிலைமை எல்லாம் அனந்த அறிந்து - அவளது தன்மை முழுவதையும் நன்றாக ஆராய்ந்து அறிந்து, சிதையென்ற தனிவுவந்தபின்பு, அருகு சார்ந்து - அவளது அருகிற் போய், நின்ன வாள் முகத்திலுட்டு செப்பு - பூர்ணசந்திரன்போன்ற ஒளிபொருந்திய முகத்தை யுடையவளான அச்சிதைக்கு (யான்கூறுகிற அடையாளமொழிகளைச் சொல்வாய், என - என்று, பின்னும் செப்பும் - மீண்டும் கூறத்தொடங்கினன், (இராமபிரான்;) (எ-று.)—அவற்றை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க.

நீ தேடிச்செல்லுகையில் எத்தப்பெண் உலமையற்றவளெனத் தோன்றுகின்றனளா அவளையே சிதையென்ற தெளிவாயாக வென்பது, முன்னிரண்டடிகளின் கருத்து. "ஸ்தாம்ஹிஸ்தேஹபதேஷுவஸ்துஷுப்ரமாணம் - அந்தஃகரணப்ரவ்ருத்தய: [பெரியோர்கட்கு ஐயம் திகழ்ச்சியிடத்து மனத்தின் செயலே சான்றாகும்]" என்பவாதலால், 'உன்னாற்றானே சான்றெனக்கொண்டு' என்றுரைக்கலாம். 'சான்றோய்' என்பது - பெரியோனே என்ற பொருளோடு மனச்சாட்சியுடையோனே என்றும் ஒருபொருள் தோன்றுமாறு சமத்காரமாக 'சான்றெனக்கொண்டு சான்றோய்' என்றுகூறிய சொல்லமயம் கருதத்தக்கது. இனி, முன்னிரண்டடிக்கு—இச்சிதைக்கு ஒப்பாவாரான வேறமகளிர் உளரோ இலரோ என்ற தோன்றுஞ் சந்தேகத்தில் உன் மனத்தையே சாட்சியாகக்கொண்டு ஆராய்ந்தறிவாயென்று கட்டளையிட்டதாகக் கூறினுமாம். (கக)

வேறு.

[இதுமுதல் ஆறுகவிகள் - இராமபிரான் வார்த்தை: சிதையினிடஞ் சொல்லுமாறு அநுமானுக்குக் கூறிய அடையாளங்கள்.]

கஎ. முன்னீர்வான் முனியோடும் முதியநீர் மிதிலேவாய்ச்
சென்னிநீண் மாலேபான் வேள்விகா ணிபசெல
வன்னமா டுந்துறைக் கருகுநின் றுலாவக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய்.

(இ - ள்.) முன்னே - முன்னாளில், நான்—முனியோடும் - விசுவாமித்திரமுனிவனோடும், முதிய நீர் மிதிலேவாய் - பழமையான நீர்வளமுள்ள மிதிலாபட்டணத்தில், சென்னி நீள் மாலேபான் வேள்வி காணிய செல - தலையில் நீண்டமாலையணிந்தவனாகிய ஜனகமகாராஜனது யாகத்தைத் தரிசிக்குமாறு சென்றபோது, அன்னம் ஆயி தறைக்கு அருகு - அன்னப்பறவைகள் (தன்கன்பெண்டுகளுடனே) மிகவாயடுகின்ற அழகிய நீர்த்துறைக்கு அருகிலே யுள்ள, அ கன்னிமாடத்திடை - அத்தக்கன்னிகாமாடத்தின் உபரிகையில், நின்றுலாவ நின்றவளாகிய சிதையை, கண்டதும் - பார்த்ததையும், கழறுவாய் - (நீ அயிருஞ்) சொல்லுவாய்; (எ - று.)

விசுவாமித்திரர் மூனிவன் - ராமலக்குவனர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு தனது யாகத்தைத் தடுத்தற்பொருட்டு மிதிலைநகரில் ஜனகமகாராஜன் செய்யும் யாகத்தைத் தரிசிப்பதாக ஒருபகலழைத்து இராமலக்குவர்களுடன் சென்று மிதிலைபிற்புகுந்தபின்பு ஜனகமகாராஜனது அரண்மனையைச் சூழ்ந்திருக்கின்ற அகழியின் அருகேயுள்ள கன்னிமாடத்தின் மேற் சித்தரிபாட்டியிருந்த லீலையிலே தான்கண்டதை இராமபிரான் அடையாளமாக எடுத்துக்கூறுகின்றனனென்க. இவ்விவரத்தை, "வீரியும்வார்புண்மருதஞ்சூழ்மிதிலையர்கோமான், புரியும்வேள்வியுங் காண்கொமென்றுகொண்டுபோனார்," "கன்னிமாடத்தம்பொன்மாடே கழிபேடோ, டனமமாடம்மூன்றுகண்டீங்கப்னின்றார்," "எண்ணாறலத்தினூளிஞாயணின்றழி, கண்டிணைகண்ணினேவ்வியொன்றையொன், றுண்ணவுலிலெனு ணவுமொன்றிட, அண்ணலுநோக்கினனவளுநோக்கினள்" என்பவற்றால் அறிக.

மூனி - மகரிஷிவன். மிதிலா - மிதியென்ற அரசனால் ஏற்படுத்தப்பட்டநகரம். கன்னிமாடம் - கல்யாணமாகாத இராசகன்னிகைகள் வசிக்கும் மிடம்.

'முன்னேயான்,' 'அன்னமாமென்பொழிற்கு,' 'அன்னமாமைதிலுனுக்கு' 'நின்றுடனே' என்று பிரதிபேதம்.

இதமுதம் பதினெண்கவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர்களும் வீளச்சீர்களாகவந்த அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (கஎ)

கஎ. வரைசெய்தாள்வில்லிறுத்தவனமாமுனியோடும்
விரகினனல்லனெல்லிநல்லபானுபிரனுக்
கரைசெயாவேலையிற்பெரியகற்பினடெரிவ
தரைசெய்தாளஃதலாமுனாநீயுரைசெய்வாய்.

(இ - ள்.) கரை செயா வேலையின் பெரிய கற்பினன் - கரைகட்டமுடியாத கடலினும் மிக்கதான பதிவிரதாதருமத்தை யுடையவளாகிய சீதை,— 'வரை செய் வில் தான இறுத்தவன் - மலையையபோனற (வெண்மை) தநுர்த்தண்டத்தை முறித்தவன், அ மா முனியோடும் விரகினன் அல்லன் ஏல் - அந்த விசுவாமித்திரமுனிவனுடனே வந்தவனல்லாவிட்டால், யான உயிர்விடுவல் - யான் (எனது) உயிரை விடுவேன [இரப்பேன்],' எனு - என்று தெரிந்து உரைசெய்தான் - (கற்புடையார் கடமையைத்) தெரிந்துகொண்டு சொன்னாள்; அஃதலாம் - அச்செய்திமுழுவதையும், உனா நீ உரைசெய்வாய் : (அவன்) அறியுமாறு நீ சொல்வாய்; (எ - று.)

இச்செய்யுள் வில்லிறுத்த செய்தியைத் தோழியொருத்தி சொல்லக்கேட்ட சீதை 'விசுவாமித்திரனுடனே வந்தவன் இவ்வில்லிறுத்தவனைக் இல்லாவிடின், நான் உயிரைமாய்த்துக்கொண்டேன்' எனக் கருதியதை பிறகு இராமபிரானிடத்துச் சொல்லியிருக்கக்கூடுமாதலால், அஃது இங்கு அடையாளமாகக் குறிக்கப்பட்டது. இவ்வாறு சீதை கருதியதை, "இல்லையேதுசப் பெண்டிருண்டென்னவும், மெல்லியலுன்மூலைகளும் விம்மிவிம்முவான், சொல்லியகுறியினத்தான்றலேயவ, னல்லதென்ன விறப்பனென்றுதுணிந்தனள்" என்ற

சுவர்த்த [illegible] ணரலாம். ஒர் ஆடவனிடத்து மனஞ்சென்ற பின்பு தேரேறாடகனை மணப்பது சற்பிற்கு இழுக்காதலாலும், விசுவாமித்திரரும்னிவரோடு இராமபிரான் ஜனகமகாராஜனது அரண்மனைவழியாகச் சென்றபோது சீதை கன்னிமாட்டதிலிருந்தவாறே அவ்விராமபிரானிடத்து அன்புகொண்டு நோக்கினாதலாலும், 'வில்லிறத்தவன் முனியொடும் வீர னெனல்லனேல் யான் உயிர்விடுவல்' என்ற உறுதிகொண்டு; ஆகவே, இக் குச் சீதையை 'கரைசெயாவேலையிற் பெரியகாயினள்' என்றது-கருந்துடை யடைகோளியணியின் பரந்படும்; வடநூலார் பரிகராங்குரலங்கார மென் பர்; அடைகொளி [விசேஷ்யம்] ஒரு கருத்தை யுட்கொண்டிருப்பது, இவ் வணியி னிலக்ஷணம்.

செய் - உவமவுருபு. அம்மாமுனி - யென்பது அமாமுனியெனத்தொகுத் தல் விகாரம் பெற்று வந்தது வேலை - வேலா; வடசொல்; கடற்கரையின் பெயராகிய இச்சொல் இலக்கணையாற் கடலையுணர்த்திற்று. அஃதலாம் - ஒருமைப்பன்மைமயக்கம்.

சிவபிரதிகளில் "சூழிமால்யானையின்" என்ற தொடக்கத்தச் செய்யு ளின் பிறகு இச்செய்யுள காணப்படினும் அஃது கதைப்போக்கை முறையே கூறிவரும் இச்சந்தர்ப்பத்திற்கு வலாமை காண்க.

'வீடுவெளருயிரெனு' என்ற பிரதிபேதம். (சுஅ)

சுசு சூழிமால்யானையின்றனை மருப்பினையெனக்
கேழிலாவனமுலைக்கிரிசமர்திடைவீதார்
வாழிவான்மின்னிளக்கொடியின்வந்தாலையன்
ரூழியானரசவைக்கண்டதும்மறைகுவாய்.

(இ - ன்.) சூழி மால் யானையின தனை மருப்பு இனை என - முகபடா மணிந்த மதங்கொண்ட ஆண்யானையினது ஒன்றே டொன்று ஒத்துள்ள இரண்டு தந்தங்களென்ற சொல்லுதற்கு, கேழ் இலா - அவற்றை ஒப்பாகக் கொள்ளாத, வனம் - அழகிய, முலைகிரி - தனக்களாகிய மலைகளை, சமத்தி - தாங்கிக்கொண்டு, இடைவது - (பாரத்தைபொறுக்கமாட்டாது) பினனிடை வதாகிய, ஒர் வான் மின னிளங்கொடியின் - ஒப்பற்ற வானத்திலுள்ள மின்னு லினது இளங்கொடிபோல, வந்தாலை - வந்தவளாகிய அச்சீதையை, அனை - அக்காலத்தில், ஆழியான் அரசு அவை கண்டதும் - ஆழ்ஞாசக்காரமுடையவ ராகிய ஜனகமகாராஜனது சபையில் பார்த்ததையும், அறைகுவாய் - சொல் வாய்; (எ - று.)

ஜனகமகாராஜனது சபையின்கண்ணுள்ள மண்டபத்தில் சீதை ஸர்வ லக்ஷணரஸமேதையாகவும், அப்போது இராமபிரான் தான் அவளைக்கண்டதை அடையாளமாகக் கூறின னென்க; இதனை "பொன்னிலொளிபூவின்வெறி சாந்து பொதி சீத, மின்னினிழலன்னவடன் மேனியொளிமான, வன்னமு மாம்பையருமாமிழ்தகாண, மன்னவையிருந்த மணிமண்டப மடைந்தான்," "அன்னவளையல்லனெனவுமெனவயிர்ப்பான், கன்னியிழித்தத்தை யெதிர் கண்ட கடல்வண்ண, னுன்னுயிர்நிலைப்பதொருதிறியொடெழுந்தான், டின்னமிழ்தெழுந்துளிகொள்சிந்திரையொத்தான்" என்ற பாலகாண்டச்செய்யுள்

வாளாதிக. யாவினின் தத்தங்களும் சீதையின் தனங்கட்கு ஒப்பாகவென்பது, 'யாவினின்னிணமருப்பினையெனச் சேழிலாவனமுலை' என்பதன் பொருள். மூஷ்கிரி-உறவகம்- மூஷ்கிரியைச் சுமக்கும் மின்னினைக்கொடி - தேசிக்கி, இல்போநஞ்வமம். வாழி - அசை. ஆழி - ஆஜ்ஞா சக்கரம்: அதனையுடையவன் - ஆழியான். அவை - ஸபா என்ற கடசொல்லின் விகாரம். கண்டதம்மனைருவாய், மகரமெய் - விரித்தல்.

'வாழியர்,' 'அருளுவாய்' என்பன - பாடாந்தரங்கள். (கக)

எ0. முன்புநானறிகிலாமுளிகெடுங்கானிலே
யென்பினேபோதுவானினேதியோவேழைநீ
யின்பமாயாருயிர்க்கினியையாயினையினித
தன்பமாய்முடிதியோவென்றதுஞ்சொல்லுவாய்.

(இ - ன்,) எழை - மடமைக் குணமுடையவளே! நீ—, முன்பு நான் அறிகிலா முளி கெடும் கானிலே - இதுவரையிலும் யான்சென்றறியாத நீர் அற்போன பெரியகாட்டிலே, என் பினே போதுவான் - என்பின்னே வருவாதற்கு, நினேதியோ - எண்ணுகின்றாயோ? இன்பம் ஆய் - (இதுவரையிலும் நீ எனக்குச் சந்தோஷத்தை விளைப்பவளாயிருந்து, ஓர் உயிர்க்கு இனியை ஆயினை - எனது அருமையான உயிர்க்கும் அநுகூலியாக இருந்தாய்; இனி - இனிமேல், துன்பம் ஆய் முடிதியோ - துன்பஞ்செய்பவளாக ஆகக் கடவையோ? என்றதும் - என்ற (யான் சீதையைநோகிச்) சொன்னதையும், சொல்லுவாய் - (நீ அவளிடஞ்) சொல்வாயாக; (எ - று)

கைகேயியின் விருப்பத்தின்படி இராமபிரான் பதினான்குவருடம் வனவாசஞ்செய்ய உடன்பட்டுச் சீதையினிடம் வந்து 'யான் பதினான்குவருடம் வனவாசஞ்செய்ய மீண்டுவருவேன்; நீ இங்கு வருந்தாது இரு' எனச் சொல்லினளுக, அதுகேட்ட சீதை கணவன் காட்டிற்குச்செல்லினாலென் பதைப்பற்றிச் சிறிதும்வருந்தாது 'நீ இங்கு வருந்தாதிரு' எனக் கூறிய சொல்லுக்கு மிகவருந்தி, உடன்வருவேனென்ற வற்புறுத்தினுள். அதற்கு இராமபிரான் "மூல்லியுங்கடன்முத்தமெறிப்பினும், வெல்லும் வெண்ணகையாய் வீளவுண்ணுவா, யல்லபோத வனைத்தினையாதலி, னெல்லையற்ற வீடர்தருவாயென்றுன்" என்ற கூறியது, இங்குக் கவனிக்கத்தக்கது. இதனையிலும் தான்சென்றறியாத காட்டிலே செல்லுகையில், வீராதிய தம்பியுடனேயன்றிப் பெண்பாலாகிய சீதையை உடனழைத்துச்சென்றால் அவளைக்காப்பாற்றுவதில் தமக்கு மிகவும் வருத்தமுண்டாகுமென்ற கருதி, இராமபிரான் 'இன்பமாயாருயிர்க்கினியையாயினையினித், துன்பமாய் முடிதியோ?' என்றனன். போது - புகுதலென்பதன மரூஉ: 'போது' என்றே ஒருபகுதி யென்பாரு முளர். எழை - அண்மைவிளி.

'போதுவாய்நினேதியோ' என்றும் பாடம். (எ0)

எக. ஆனபோரசிழற்றடவிசேர்வாயுனக்
கொனலாதனவெலாமினியவோவினியெனு
மீனுலாவெடுமலர்க்கண்ணீர்விழவிழுந்
தனிலாவுயிரின்வெந்தபர்வதமுமுளைசெய்வாய்.

(இ - ள்.) 'ஆன பேர் அரச இழந்த அடலி சேல்வீர் - உனக்கு உரிய பெரிய இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குச்செல்பவனே! இனி - இன்மேல், யான் அலாதனவாம் உனக்கு இனியவோ - என்னைத்தவிர மற்றப்பொருள்களெல்லாம் உனக்கு இன்பந்தருவனவோ? [என்னுருத்தியினுன்தான் உனக்குத் துன்பம்போலும்],' எனு - என்று கிஷ்கிரமாக (என்னைநோக்கி), கூறி, (சீதையானவள்), மீன் உலாம் நெடு மலர் கண்கள் நீர் விழ விழுந்த - மீன்கள் போலப்பிறழ்வனவும் பெரியதாமரை மலரைப்போன்றனவுமான கண்களினின்று நீர்பெருகக் கீழேவிழுந்து, ஊன் நிலா உயிரின் - உடம்பில் நிற்க மாட்டாத தத்தளிக்கின்ற உயிர்போல, வெந்த அயர்வதும் - மிகவும் வருந்திச் சோர்ந்ததையும், உரைசெய்வாய் - (நீ அவட்குச்) சொல்வாய்; (எ - று.)

இராமன் வனவாசஞ்செய்யப் புறப்படுகின்ற காலத்தில் சீதையை நோக்கி 'நீ என்னுடன் வருவாயாயின் எனக்குத் துன்பத்திற்குக் காரணமாவாய்' என்ற சொல்ல, அதுகேட்டுச் சீதை மிகவும்வருந்தி "கொற்றவன் னதகூறலுங்கொலிலுஞ், செற்றதன்னருகுலேயசிறவா, ரூற்றுகின்றதுயரமி தொன்றமே, யெற்றறந்தபினின்பங்கொலாமென்றாள்" என்ற கூறியது, இங்கு உணரத்தக்கது இராமபிரான் தசரதசக்கரவர்த்தியினது மூத்தகுமாரனுப்பட்டத்துக்கு உரியவனுதலாலும், தசரதசக்கரவர்த்தி இவரைபட்டாபிஷேகஞ்செய்வதாகத் தணிவுகொண்டிருந்த காலத்துக் கைகேயியின் வரத்தினுல் தவறியதனுலும், 'ஆனபோழிந்த' எனப்பட்டது. (எக)

எஉ. பல்லன்மாகர்துறந்தீதகுநாண்மதிதொடுங்
கல்லின்மாமதின்மணிக்கடைகடந்திடுதன்மு
னெல்லிதீர்வரியவெங்கானம்யாதோவெனச்
சொல்லினுளதெலாமுணராசொல்லுவாய்.

(இ - ள்.) மல்லல் மா நகர் அறந்த ஏரும் நான் - வளத்தையுடைய பெரிய அயோத்தியாநகரத்தை விட்டு (வனத்திற்குச்) சென்றகாலத்தில், — மதி தொடும் கல்லின் மா மதில் மணி கடை கடந்திடுதல் முன் - சந்திரனைத் தீண்டுகின்ற [மிகவும்உயர்ந்த] கற்களிஞலாகிய பெரிய மதிலினது அழகியவாயிலைக் கடப்பதற்குமுன்னமே [கடந்தவுடனே என்றபடி], எல்லை தீர்வு அரிய வெங் கானம் யாதோ என சொல்லினுள் - (என்னைநோக்கிச் சீதை) 'எல்லையில்லாத கொடியகாடு எவ்விடத்தில் உள்ளது?' என்று வினவினுள்; அஃது எலாம் உணர நீ சொல்லுவாய்—; (எ - று.)

"நீண்டமுடிவேந்தனருளேந்திநிதைசெல்வம், பூண்டதணிகீங்கி நெறி போதலுறவெனி, ஞண்டகோரையெறுவாயிலகலமுன், யாண்டையதனி னெனவீசசத்தமிசைப்பாய்" என்ற இச்செய்யுளின் அநுவாதமாகச் சுவர்காண்டத்து உரைத்த, இங்குக் கவனிக்கத்தக்கது. இதனுல், கணவன்றிரு மனையேயன்றி வேருென்றையும்அறியாத பிராட்டியினது தன்மையும், சௌகுமாரியமும், பேதைமையும் வெளியாம். மல்லல் - உரிச்சொல்; "மல்லல் வளனே" என்பது, தொல்காப்பியம். மதிதொடுங்கல்லின்மாமதில் நோடர்புயர்வுகவிந்தீ.

'கடந்திடுதலும்,' 'சொல்லினுளீதெலாம்' என்றும் பாடம். (எஉ)

[இராமபிரான் வினாவழிகொடுத்தனுப்ப, அநுமான் விடைகொண்டு செல்லுதல்.]

எகூ. இனியுபாதுரைசெயாவினி தினேகுதியெனு
மனியுமுழுமணிகண்மோ திரமளித்தறிஞனின
வினையெலாமுடிசெனுவிடைகொடுத்ததவலும்
புனியுமெவார்கழலினைருளொடும்போயினனு.

(இ - ன்.) (இராமபிரான), இனிய ஆறு உரைசெயா - (அநுமானிடம்) இவ்வீதமாக (அடையாளவார்த்தைகளை)ச் சொல்லி, இனிதின் எகுதி எனு - 'சுகமாகச்செல்வாய்' என்று கூறி, மா மணி வினையும் நல் மோதிரம் அளித்த - சிறந்த இரத்தினமிழைத்துச் செய்யப்பட்ட அழகிய மோதிரத்தை (அநுமானிடம்) கொடுத்து, (பினனும் அவனைநோக்கி),— 'அறிஞ - அறிவுடையோனே! நின் வினை எலாம் முடிக எனு விடை கொடுத்த உதவலும் - நீ செல்லுங்காரியம் முழுவதும் (இடையூறில்லாமல் இனிதாக) முடியக்கடவது' என்ற விடைகொடுத்து அனுப்புதலும், (அநுமான்),—புனியும் வார் கழலினை அருளொடும் போயினன் - கட்டப்பட்ட கீண்ட வீரக்கழலையுடையவனான இராமபிரானது கருணையை முனனிட்டுகொண்டு செல்லலானன்.

மிக்கபக்திமரனகன் கடவுளினகருணையை முனனிட்டுக்கொண்டு செய்தொழில் தொடங்குதல் இயல்பாதலின், 'புனியும்வார் கழலினை அருளொடும் போயினன்' என்றார்.

'இனியஆறுரைசெய்வாயினியன்,' 'வினையன் மாமணியின்,' 'அருளினை' எனறு பிரிபேதம். (எகூ)

[சீதையைத்தேடுமாறு அங்கதன் முதலியோரும் தென்திசைநோக்கிப் புறப்படுதல்]

எசு. அங்கதக்குரிசிலோடுசினதிழுவராம
வெங்கதத்தலைவருவிரிகடற்படையொடும
பொனகுவிற்றலைவரைதிதாழுதுமுன்போயினர்
செங்கதிர்ச்செல்வனீப்பணிவுறுஞ்சென்னியார்.

(இ - ன்.) அங்கதன் குரிசிலோடு - அங்கதகுமாரனுடனே, அடினைத்த உழவர் ஆம் வெம் கதம் தலைவரும் - பகைவரைச்சொல்லுகின்ற கோபத்தையுடைய வீரராகிய மிக்க வலிமையுளள (ஜாம்பவான முதலானிய) சேனைப்பிரமுகரும்,—செகதிர் செல்வனை பணிவுறும் சென்னியார் - சூரியனது வியுடைய சூரியனது செல்வக்குமாரனான சுக்கிரீவனை வணங்குகின்ற தலையையுடையவர்களாய், பொங்கு வில் தலைவரை தொழுது - மிகுத்தவில் வீரராகிய இராமலட்சுமணரையும் வணங்கி, விரி கடல் படையொடும் - பரந்த கடல்போன்ற (இரண்டுவெள்ளம் வானர) சேனையுடனே, முன் போயினர் - (தென்திசைநோக்கி) முன்னுச் சென்றனான; (எ - று).

அங்கதன்முதலியோர் சுக்கிரீவனையும இராமலட்சுமணரையும் வணங்கித் தமக்கு நியமித்தருளின தென்திசையை நோக்கிப் புறப்பட்டார்க ளென்பது தாம. உழவர்' எனபது - பகைவரை உடம்பாகிய வயல்களில் தமதுபடைகளாகிய கலப்பைகளைக்கொண்டு உழுது வெற்றியாகியபயனை விளைப்பவர்களால், வீரரைக் குறிக்கும். படையதுக் கடல் உவமை - மிக்கபரப்பினும், அளவினாலுமருதலும், பேராவாரஞ்செய்தலினும், பயங்கரமானதோற்றத்தினு மென்க. குரிசில் - ஆணபாலதிறப்பெயர். செல்வன - செல்வம் போல் அருமையுளளவன். 'பணிவுறுஞ்சென்னியார்' எனறும் பாடம். (எசு)

நாடலிட்டபடலம் முற்றிற்று.

மந்திரப்படலம்

பிலம் புக்கு நீங்கு படலம்

சுக்கிரீவன் கட்டளைப்படி தென்திசைநோக்கிச்சென்ற அங்கதன் முதலிய வீரர்கள் பலவிடங்களிலுஞ் சீதையைத்தேடிக்கொண்டு சென்று, வழியிடையிலுள்ள தொரு பாலைவனத்திற் புக்கு அந்நிலத்தின் வெப்பத்தைத் தாங்கும் வலியிலராய், அங்குக்காணப்பட்டதொரு பிலத்தி லடங்கி அதிருண்செறிந்திருக்கையால் வழிதெரியாது திகைத்து அறுமானது வாலைப் பற்றிக்கொண்டு சென்று அங்கிருந்ததொரு கூகத்திற் புக்கு அங்குவசித்திருந்த ஒருதவப்பெண்ணின உதவியால் யாவரும் அப்பிலத்தினின்றும்நீங்கி வெளிவந்த செய்தியைக் கூறும் பாகம். பிலம் - வடசொல் : நிலத்தின் கீழறை; மலைக்குகைபோல்வது. சிலபிரதிகளில், இப்படலத்திற்கு 'பிலம் புக்குநீங்குபடலம்' என்ற பெயர் கூறப்பட்டிருக்கின்றது.

[சுக்கிரீவன்கட்டளைப்படி மற்றைமூன்றுதிசைகளிலும் வானரவீரர்கள் செல்லுதல்]

க. போயினர்போனபின்புறநெடுந்திசைகளோ
நேயினனிரவிகாதலனுமேயினபொருட்
காயினரவருமங்கண்ணகாலவதியிற்
ரூயினருள்ளினத்தகைநெடுந்தானையார்.

(இ - ன்.) போயினர் - (அங்கதன்முதலிய வீரர்கள் சுக்கிரீவன் கட்டளையின்படி தென்திசையைநோக்கிப்) போனார்கள்; போன பின் - (அவர்கள் அவ்வாறு) சென்றபினபு,—இரவி காதலனும் - சூரியனது குமாரனுமாகிய சுக்கிரீவனும், புறம் நெடுந் திசைகளோறு மெயினன - (தென்திசைக்குப்) புறம்பான பெரிய மற்றைத்திசைகளிலெல்லாம் (விததன்முதலிய வானர வீரர்களைச் சீதையைதேடுமாறு) விடைகொடுத்து அனுப்பினன்; எயின பொருட்கு ஆயினர் அவரும் - (சுக்கிரீவன்) எவின தொழிலாகிய சீதையைத் தேடுவதற்கு இசைந்தவராகிய அவவானரவீரரும், உலகினை தகை நெடுந் தானையார் - உலகமுழுவதையும் (தமதுவலிமையால்) தடுக்கவல்ல பெருஞ்சேனையை யுடையவர்களாய், அன்ன நாள் அவதியில் - (சுக்கிரீவ மகாராஜன் தமக்குக்குறித்த) அந்த ஒருமாதத்தவணைக்குள் (தேடிவருவதாக), காயினர் - காலிச்சென்றார்கள்; (எ - று.)

தென்திசை தவிர மற்றைத்திசைகளில் இன்னாரின்னார் அனுப்பப்பட்டன ரென்பதை, மேற் கூட்டிட்டபடித்துப் பத்தாஞ்செய்யுளில் காண்க. மூன்றாமடி - முந்நுமோனை. 'அன்னாளவதி' என்றது - "ஒருமதி, முற்று ருதமுண் முற்றதிரிவிடை" என்று மேற்கூறியதைச் சுட்டியது. அங்குஅஃச், 'உலகினைத்தகை' என்றதை - தானைக்கேனும், தானையுடையார்க் கேனும் அடைமொழியாக்கொள்ளினும்; உலகம் முழுவதும் எதிர்ப்பினும் நாம் தடுத்துப் போர்செய்ய வல்ல பேராற்றலுள்ளா ரென்பது இதன்பொருள்.

'ஆயினரவர்,' 'உலகினில்' என்ற பிரதிபேதம். (க)

[கவிக்கூற்று: மற்றைத்திசைகளிற் சென்றவர் செய்திகூறுமல் தென்திசையிற் சென்றவர் செய்தி கூறுவேனெனல்.]

உ. குன்றிசைத்தனவெனக்குலவுதோள்வலியினர்
மின்றிசைத்திடுமிடைக்கொடியையாடினர்விராய்
வன்றிசைப்படருமாறெழுபவண்டமிழுடைத்
தென்றிசைச்சென்றுளார்திறனெடுத்துரைசெய்வாம்.

(இ - ன்.) குன்று இசைத்தன என குலவு தோள் வலியினர் - மலைகள் பொருந்த வைக்கப்பட்டன்னவென்ற சொல்லுமாறு விளங்குகின்ற தோள் வலியின் வலிமையையுடைய வானரர்கள், மின் நிசைத்திடும் இடை கொடியை விராய் நாடினர் - மின்னலும் நிகைக்கும்படியான [மின்னலைக்காட்டிலும் நண்ணிதான்] இடையையுடைய பூங்கொடிபோன்ற சீதையைப் பொருந்தித் தேடினவர்களாய், வல் நிசை படரும் - வலிய (நிழக்கு மேற்கு வடக்கு என்ற மூனறு) நிசைகளிலே செல்லுகின்ற, ஆறு - வகை, ஒழிய - (சொல்லப் படாத) தவிர [அதனைக்கூறுதலிட்டு],—வன் தமிழ் உடை தென்நிசை சென்று உனார் நிறன் எடுத்த உரைசெய்வாம் - வளமான தமிழ்ப் பாஷையையுடைய தெற்குத்நிசையிற் சென்றவராகிய வாநராது செய்கையை எடுத்துக் கூறுவோம்; (எ - று.)

மற்றைத்நிசைகளிற் சென்ற வானர்செய்தி கதைப்போக்கிற்கு அவ்வளவாக வேண்டுவதன் முகையால், அதனையொழித்து, இக்கதைக்கு இனறியமையாததான தென்நிசையிற் சென்ற வானர்செய்தியைக் கூறுகின்றான். தோளுக்கு மலையுவமை - சலியாமையிலும், மிக்க பருமையிலும், ஊடறுத்தா வலிமையிலும். நிசைத்திடுத லெனினும், நிகைத்திடுத லெனினும் ஒக்கும். நிறத்த தொண்டர்கள் பலர் கடவுளைத்துதித்தது தமிழிலுலே யாதலாலும், வடமொழியோடு ஒப்புமை தமிழுக்கேயன்றி மற்றைப் பாஷைகளுக்கு இல்லாமையாலும், செவிக்கு இனிய செஞ்சொலுடைமையாலும். 'வண்டமிழ்' எனப்பட்டது. 'உரைசெய்வாம்' - கவிகளுக்கு உரிய இயற்கைத் தனித் தன்மைப்பன்மை. கொடி - ஆகுபெயர்.

'குலவுதோள்', 'மின்நிகைத்திடும்', 'சென்றதோர்நிறன' என்றும் பாடம். (உ)

[வாநார் விந்தியமலை சேர்தல்.]

ஊ. சிந்துராகத்தொடுந்திரண்மணிச்சுடர்செறிந்
தந்திவானத்தினின்றுயிர்தலைரவிபோல்
டிந்தியாறெய்தலானிறைவன்மாமெளலிபோல்
விந்தமாகத்தின்மாடெய்தினர்வெய்தினில்.

(இ - ன்.) சிந்துராகத்தொடும் - சிந்துரமென்னுஞ் செம்பொடியோடும், நிரள் மணி - கடர் நிரண்டுள்ள மாணிக்கங்களினெனி, செறிந்த - நெருங்கி, அந்திவானத்தின் நின்ற அவிர்தலான் - அந்திவானத்தில் தோன்றுகின்ற செவ்வானம்போல் விளக்குதலாலும், அரவிலே இந்த்ரன் ஏய்த்லான் -

பாம்புகளும் சந்திரனும் நதியும் பொருத்தலாலும், இறைவன் மா மெலி போல் - சிவபிரானது பெரிய ஜடாமகுடம்போன்ற, விந்தை காகத்தின் விந்தியபருவதத்தினது, மாடு - சாரலே, வெய்நினல் எய்தினர் - விரைவாகச் சென்றசேர்ந்தார்கள், (வானரர்கள்); (எ - று.)

சிவபிரானுக்கும் விந்தியமலைக்கும் செம்மொழிச்சிலேடையுவமை. (செம்மொழிச்சிலேடையாவது - சொற்கள் வெவ்வேறவகையாகப் பிரிக்கப் படாமல் பலபொருள்படுவது.) சிவபிரான் செந்நிறமாகிய சடைமுடியை புடையையும், தாருவனமுனிவர்களாலேவப்பட்டுத் தன்னைக்கொல்லவந்த காளைமேல் வலியடக்கி ஆபரணமாக அணிந்துகொண்டதும், தக்ஷணமுனிவரது சாபத்தால் கூயமடைபவனுய்க் கலேகுறைந்த வந்த சரணமடைந்த சந்திரனே முடிமீதுகொண்டு வரமளித்தப் பாதுகாத்தமையும், பகீரதனுவேண்டு கோளினும் கங்காநதியை முடிமீது கொண்டதும் காண்க. விந்தியபருவதத்தில் செந்தூரச்செம்பொடியாலும் மாணிக்கங்களினுலும் செந்நிறமமிக்கிருத்தலும், காளைகளும் நீரருவிகளும் இருத்தலும், மிக உயர்ந்த அம்மலையின் மேல் சந்திரன் வருதலும், இயல்பு. இச்செய்யுளை, "பாணி பிறை கொன்றை பணி சூடி மானேந்தி, வேணியரனேப் பொருவும் வேல்கடம்" என்றதனேடு ஒப்பிடுக.

சிந்தூரகம் - விந்தூரகம் என்னும் வடமொழியின் விகாரம்; சிந்தூரச்செம்பொடி. அந்தி - ஸந்த்யா என்ற வடமொழியின் சிதைவு; இது - பகலோடு இரவு கூடுவதாகிய மாலேச்சந்திக்கும், இரவோடு பகல் கூடுவதாகிய காலேச்சந்திக்கும் பொதுப்பெயர்; இவ்விருவேலேகளிலும் செவ்வானமுண்டாதல், இயல்பு. இறைவன் - 'இறைமை' என்னும் பண்பினடியாப்பிறந்த பெயர்; இறைமை - தலேமை; வ - பெயரிடைநிலே; அன்றி, அடியார்கள் மனதில் தங்குபவனெனினுமாம்; (இறுத்தல் - தங்குதல்.) காகம் - சலியாத தெனக் காரணப்பொருள்படும்.

'தாவினேனு, டிந்தவாறேடலா லிறைவனே டொத்திடும்' என்றும் பாடம்.

[இதுமுதல் முன்றுகவிகள் - வாநரர் சீதையை அவிந்தியமலையில் தேடுதலேக் கூறும்.]

5. அக்கெடுங்குன்றமோடவிர்மணிச்சிகரமும்
பொன்னெடுங்கொடுமுடிப்புரைகளும்புடைகளு
நன்னெடுந்தாழ்வரைநாடினர்நவையிலார்
பன்னெடுங்காலமாமென்னவோர்பகலிடை.

(இ - ள்.) நவை இலார் - குற்றமற்ற வாநரவீரர்கள்,— அ கெடுங் குன்ற மோடு - நீண்ட அந்த விந்தியபருவதத்தினிடத்தில்,—அவிர் மணி தொறும் விளங்குன்ற இரத்தினங்களோடையுடைய சிகரங்களோடும், பொன்கெடுங் கொடு முடி புரைகளும் - அழகிய நீண்ட சிகரங்களிலுள்ள குகைகளோடும், புடைகளும் - பக்கங்களோடும், நல் கெடுந் தாழ்வரை - அழகிய நீண்ட அடிவாரங்களோடும், ஓர் பகலிடை - ஒருபகற்பொழுதிற்குள், பல் கெடுங் காலம் ஆம்

என்ன - மிகவும் அரசர்கள் தேடிப்பார்ப்பதுபோல், நாடினார் - (சீதாபிராட்டியைத்) தேடிப்பார்த்தார்கள்; (எ - று.)

வானரர்கள் மிகப்பலராயிருந்தனலும், செய்தொழிலே மிக்க ஊக்கங் கொண்டு வெகுபரபரப்புடன செய்தலாலும், பலகாலம் தேடினால் எவ்வளவு தேடமுடியுமோ, அவ்வளவு ஒரு பகற்பொழுதிலேயே தேடவல்லராயினரென்க; இதனால், ஒருபகற்பொழுதிலேயே அம்மலையில் ஒருகிரி தானமும் விடாமல் வானரர்களால் தேடியாயிற் றென்றவாறு. 'குன்றமோடு' என்றவிடத்து 'ஓடு' உருபு, அதற்கு உரிய உடனிகழ்ச்சிப் பொருளதாகாமல் ஏழாம்வேற்றுமைக்கு உரிய இடப்பொருளில் வந்தது; வேற்றுமைமயக்கம். மணிச்சிகரம் - அழகிய சிகர மெனினுமாம். புரை - ஈளை; இங்கு, குகை யைக் குறித்தது.

'புரைகளும்புக்குற' என்ற பிரபேதம். (சு)

மு. மல்லன்மாஞாலமோர்மறுவுருவகையின்ச்
சில்லிலோதியையிருந்துழைவி_ந்தேடுவார்
புல்லினருலகினைப்பொதுவிலாவகையின்
லெல்லிமாகடல்களேயாகுமாறெய்தினர்.

(இ - ன்.) எல்லை மா கடல்களே ஆகும் ஆறு எய்தினர் - (பூமியைச் சுற்றிலும்) எல்லையாகவுள்ள பெரிய சமுத்திரங்களே (தமக்கு) ஒப்பென்ற சொல்லும்படி சென்றவர்களாகிய வானரர்கள்,—மல்லல் மா ஞாலம் ஓர் மறு உரு வகையின் அ சில் அல் ஓதி - வளப்பம்பொருந்திய பெரிய பூமிதேவியானவள் ஒரு குற்றமுமடையாதவாறு தோன்றியுள்ள பொன்வட்டத் தக்ட்டையணிந்த இருள்போன்ற [கரிய] கூந்தலையுடையவளாகிய அந்தச் சீதை, இருந்த உழைவு இடம் ஐ - இருந்த வாசஸ்தானத்தை, தேடுவார் - தேடுபவர் களாய்,—உலகினை பொது இலா வகையினால் புல்லினூர் - (அவ்விந்தியமலை யின்) பூமியை (வேறொருவர்க்கும்) சம்பந்தமில்லாதபடி [முழுவதும் தாமே யாகச்] சேர்ந்தார்கள்; (எ - று)

வானரர்கள் விந்தியமலையில் ஒரு சிற்றிடமும் விட்டிடாதவாறு தாமே முழுவதும் வியாபித்துச் சீதையைத் தேடினர்க ளென்க. சீதை - ஜனகமகாராஜன் யாகஞ்செய்தற்குச் சாலையமைத்தற் பொருட்டு நிலத்தையுழுத பொழுது, அப்படைச்சாலின் வழியாகப் பூமியினின்று தோன்றியவளாவள்; அதனால், அப்பிராட்டியைப் பூமிதேவியின் மகளாகக் கூறுதல் மரபு. பூமி தேவிக்குப் பெரும்புகழுண்டாகுமாறு நற்குண நற்செய்கைகளோடு கூடியவ ளாதலால், சீதையை 'ஞாலமோர்மறுவுருவகையி னச்சில்லலோதி' என்றார். இனி, முதலிரண்டடிக்கு - வனமுள்ள பெரிய உலகத்தில் தமக்கு ஒரு மறுவு மூண்டாகாதவிதமாக வானரர்கள் அத்தச்சீதையைத் தேடினர்களெனினுமாம். சில்-மாதர்கள் நிலைபெலணியும் பொன்வட்டத்தகட்டணி. சில் அல்ஓதி - தன் மொழித்தொனியைப் பன்மொழித்தொடர். சில்லலோதியையிருந்துழைவிடம் என்றவிடத்து, இரண்டனுருபு பிரித்துக்கூட்டப்பட்டது, உலகுஎன்றது இங்கு, பூமியின்ஒருபகுதியைக் குறித்தது; "மாபாரன் மேய சமதை புகை மும்" என்றவிடத்துப் போல. (சு)

சூ. விண்டுபோ யிழிவர்மே னிபிர்விண் படர்வர்வே ,
ருண்டமா மரனினம் மலையின்வா யுறையுநீர்
மண்டுபா தனினவா ழுயிர்களம் மதியினர்
கண்டிலா தனவயன் கண்டிலா தன்கொலாம்.

(இ - ள்.) அ மதியினர் - நல்லறிவுடையவர்களாகிய அவ்வாகாரர்கள்,— விண்டு - (தனித்தனி) பிரிந்து, போய் இழிவர் - (சிலர்) இறங்கிச் செல்வர்; மேல் நிமிர்வர் - (சிலர்) மேலேறிச்செல்வர்; விண் படர்வர் - (சிலர்) வானத்தில் தாவிச்செல்வர்; வேர் உண்ட மா மரனின் - வேரினால் நீரையுட் கொள்ளுகின்ற மரங்களினிடத்தும், அ மலையின்வாய் - அந்தமலையின் நீரையினிடத்தும், உறையும் நீர் மண்டு பார் அதனின் - மிகுதியாயிருக்கின்ற நீர் நிரம்பப்பெற்ற தலங்களினிடத்தும், வாழ் - வாழ்கின்ற, உயிர்கள் - ஜீவன்கள்களில், கண்டிலாதன - (அவ்வானாரர்களால்) தேடிப் பார்க்கப்படாதவை உண்டானால் அவை, அயன் கண்டிலாதன ஆம் - பிரமதேவனாற் பண்டக்கப் படாதவைகளாகும்; (எ - று)

மாஞ்செறிந்த இடமும் வெற்றிடமும் புனல்நிரம்பிய இடமுமாய் மூன்று பருப்பாயுள்ள அவ்விந்திபமலை முழுவதும் பிரம ரிருஷ்டிக்கு உட்பட்ட எல்லாவுயிர்களையும் வானார்கள் தேடிப்பார்த்தார்க ளென்பதாம். பிரம ரிருஷ்டிக்கு உட்படாத பொருள் ஒன்று மில்லையாதல் போல, இவ்வானாரீரர்களாற் பார்க்கப்படாத பொருளும் ஒன்றுமில்லை யென்பது, சற்றடியின் கருத்து. விண்டு - மலையுமாம். மதியினர் - ஒருவாதத் தவணையையுடையவர் எனினுமாம். போயிழிவர் = இழிந்துபோவர்: விகுதி பிரித்துக்கூட்டல். வேருண்ட மாமரன - 'பாதபம்' என்று பெயர் வழங்குமாறு தமது உணவாகிய நீரை வேரினாலே யுட்கொள்ளும் மரங்கள்; இனி, வேருண்டிய பெரிய மரங்கள் எனினுமாம். நீர்மண்டுபார் - ஏடை, சுண்ணை முதலியன. அயன் = அஜன்; திருமாலினது நாபீகமலத்தினின்று தோன்றியவன்; அ-திருமால். பின்னின்ற 'கண்டிலாதன' என்பதில், காணுதல் - செய்தலென்ற பொருளில் வந்தது; 'திருகுமுக் கண்ணீட படலம்' என்ற விடத்திற் போல. கொல் -

'விண்டுபோயிழிவமேனி பிர்வவிண்படர்வ' என்ற பாடத்திற்கு—விண்டு போய் இழிவ - (நிலத்தை) விள்ளச்செய்து கீழேபோயிறங்குவனவும், மேல் நிமிர்வ விண் படர்வ - மேலோங்கி வளர்ந்து ஆகாயத்தையளாவுவனவுமாய், வேர் உண்ட, மாமரனின் - வேரினால் (தமது உணவை) உட்கொள்ளுகின்ற பெரிய மரங்களையுடைய, அ மலையின்வாய் - அந்த விந்தியமலையினிடத்தில், உறையும் வசிக்கின்ற, நீர் மண்டு பார் அதனின் வாழ் உயிர்கள் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் வாழும் உயிர்களில், அம்மதியினர் கண்டிலாதன அயன் கண்டிலாதனவாம் என்று பொருள் காண்க. விண்டு என்பது, தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுச்சொல் லாதலால், இங்குப் பிறவினையில் வந்தது. மலையின்வாயுறையும் உயிர்கள் என இயையும். 'நீர்மண்டுபார் தனின்வாழ்' என்ற தொடர் - உயிர்கட்கு இயற்கையடைமொழியாய் வந்த

இடைப்பிறவரால்: அம்மலையில் வசிக்கும் பிரம சிருஷ்டியாகிய உயிர்களில் அவர்கள் காணுதன இல்லை யென்றவாறும் விண்டுபோயிழிவ, மேனிமிர்வ, விண்படர்வ, வேருண்ட என்பன - மரத்திற்கு அடைமொழிகள். இனி, விண்டுபோய் இழிவ - (நிலத்தை) வின்னச்செய்து பிழையிறவகும் (பாம்பு முதலிய) ஊர்வனவும், மேல் நிமிர்வ - நிலத்தின்மேலே படப்பனவாகிய (சிங்கம் முதலிய) விலங்குகளும், விண்படர்வ - ஆகாயத்திற் பறப்பனவாகிய (கருடன் முதலிய) பறவைகளுமாய், வேருண்ட மாமரனின அம்மலையின் வாயுறையும்—, உயிர்களில், அம்மதியினர் கண்டிலாதன அபன் கண்டிலாதன வாம் என்று பொருள்கூறலு மொன்று. இப்பொருளில், பிரமசிருஷ்டியாகிய மக்கள் தேவர் நாகர் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன என்ற எழுவகைத் தோற்றங்களில் மூன்றைக் கூறி, மற்றையவற்றை உபலட்சணத்தாற் பெறவைத்தன ரென்க. உயர்ந்தசாதிநாகங்கள் சுயாசத்தால் நிலத்தை வின்னச் செய்து அப்பினப்பிற் போய்த் தங்குமென்ற கொள்கைபற்றி, 'விண்டுபோயிழிவ' என்றார்.

'வேருண்டமாமணியினம்மலையின்வாயுறைவீர்,' 'உறையினின்' என்ற பிரதிபேதம். (சு)

வேறு.

[வானரர் நருமதையாற்றை யடைதல்.]

எ. எனிஞர் யோசனை யேழொ டேழுபார்
சேகரத் தென்றிசை கடிது செல்லின்றார்
மேகமா லிபிலெனும் விரவி மேதிபி
னைதசேர் நருமதை யாறு கண்ணினர்

(இ - ள்.) பார் சேகரம் தென் திசை கடிது செல்லின்றார் - பூமிக்குத் தலையணிபோற் சிறந்து விளங்குகின்ற தென்திசையிலே (தேபிராட்டியைத் தேடுமாறு) விரைந்து செல்கின்ற வானரர்கள்,—எழொடு எழு யோசனை எனிஞர் - பதினைந்து யோசனைதூரஞ் சென்றவர்களாய்—மேதியின நாகு - எருமைகளின் இளங்கன்றுகள், மேகம் மாலிபிலெனும் விரவி சேர் - காமேகங்களின் வரிசைகளோடு ஒன்றுகக்கலந்து பொருந்தியுள்ள, நருமதை யாறு - நருமதையாற்றை, கண்ணினர் - போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று)

நருமதையாறு மிக்க பரப்புள்ளதாதலால் அதனைக் கடவுன்ற மயங்கி நீருண்ணுமாறு மேகங்கள் அங்கு வரலாயின வென்க. கடலிற்படிந்து மேகங்கள் நீர்பருகுமெனக் கூறுதல், கவிசமயம். அங்குள்ள எருமையின இளநாகுகள் நீருண்ட காளமேகங்களோடு வேறுபாடு தோன்றுவாறு நிலவளத்தாற் செழித்து வளர்ந்துள்ளன வென்பது, பின்னிரண்டடிகளிற் போதரும் சிறந்த தமிழ்ப்பாஷை வளர்கின்ற இடமாதல்பற்றி, 'பார்சேகரத்தென்றிசை' என்றார்; இதனால், கவியினது பாஷாபிமானமும், தேசாபிமானமும் தோன்றும்

'எனிஞரோசனை,' 'சேகர,' 'கடிதின்', 'விரவித்தேனிழி' என்ற பிரதிபேதம்.

இதுமுதல் மூப்பத்தொரு கலிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் வினச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (எ)

[இதுவும், அடுத்தகலியும் - வானரர் நருமதையாற்றைச் சார்ந்தலிடத்து நாடுதலைக் கூறும்.]

அ அண்ணமாடிடங்களுமமரார்நாடியர்
துண்ணிபாடிடங்களுந்துறக்கமேயவர்
முன்னிபாடிடங்களுஞ்சுரும்புமூசுதேன்
பண்ணிபாடிடங்களுந்பரந்துசுற்றினர்.

(இ - ள்.) (வானரர்கள்),—அண்ணம் ஆடி இடங்களும் - அன்னப்பறவை சின் விளையாடுகின்ற இடங்களும், அமரர் நாடியர் அன்னி ஆடி இடங்களும் - தேவருலகத்துவாழும் அரம்பையமுதலிய மகளிர் வந்து நீராடுகின்ற இடங்களும், துறக்கம் மேயவர் முன்னி ஆடி இடங்களும் - சுவர்க்கலோகத்திற்பொருந்திய தேவர் வந்து சஞ்சரிக்கின்ற இடங்களும், சுரும்பு மூசு தேன பனனி ஆடி இடங்களும் - சுரும்புகளும் (கல்லமணத்தே) மொய்க்கின்ற தேன்களும் தேங்களைப் பாடிக்கொண்டு திரிகின்ற இடங்களும், பரந்து சுற்றினர் - பரவிச் சுற்றித் தேடினர்கள்; (எ - று.)

கருமதைபாற்றின் பெருஞ் சிறப்பினலும், அதனைச்சார்ந்த இடங்களின் மிக்க இனிமையினலும், அந்தத் தேவமாதாகளும் தேவர்களும் வரலாயின ரென்க. சுரும்பு, தேன எனபன - வண்டின் சாதிபேதம்: சுரும்பு எல்லா மணத்தினுஞ் செல்வது; தேன - நன்மணத்தே செல்வது என வேறுபாடு காண்க; இதனை, 'எங்குமோடியிடறுஞ் சுரும்புகான், வண்டுகாண் மகிழ்தேனினங்காண் மது, வுண்டுதேக்கிடுமொண்மிஞிறீட்டங்கான்" என்ற சிந்தாமணிச் செய்யுளின கச்சினார்கினியருரையா லுணர்க. நாடியர் - பெண் பன்மை. (அ)

கூ. பெறலருந்தெரிவையைநாடுமெம்பெற்றியா
ரற்றனுங்கூந்தலுமளகவண்டுசூழ்
நிறைதருந்தாமரைமுகமுநித்திலம்
முறுவலுமுகாண்பரான்முழுதுங்காண்கிலார்.

(இ - ள்.) பெறல் அருந் தெரிவையை நாடும் பெற்றியார் - பெறுதற்கு அரிய சீதாபிராட்டியைத் தேடுந்தன்மை யுடையவராகிய வானரர்கள்,—அறல் நறும் கூந்தலும் - கருமணலாகிய நறுமணமுள்ள (அவளது) கூந்தலையும், அளகம் வண்டு சூழ் கிறை கறுந் தாமரை முகமும் - அளகம்போன்ற (கருநிறமுள்ள) வண்டுகள் சூழ்ந்து நிறைந்துள்ள வாசனையுடைய தாமரை மலராகிய (அவளது) முகத்தையும், நித்திலம் முறுவலும் - (அந்நகளின் அலைகளினுற் கொழிக்கப்படுகின்ற) முத்துக்களாகிய (அவளது) பற்களையும், காண்பர் - காண்பார்கள்; முழுதும் காண்கிலார் - (சீதாபிராட்டியின்) உருவ முழுவதையும் ஒருசேரக் காணப்பெறுதவராயினர்; (எ - று.) ஆல்—சற்றசை.

சேதாபிராட்டியைத் தேடிச்சென்ற வானரர்கள் கருமதைபாற்பின் கரை களில் அப்பிராட்டியினது உருவ முழுவதையும் பார்க்கப்பெறுமல், அவளது முகத்திற்கும் அம்முகத்திலுள்ள உறுப்புக்கட்கும் போலியான பொருள்களை மாத்திரம ரண்டன ரெனபதாம். நருமதைபாறறின கருமணல் சீதையின் கூந்தலையும், தாமரைமலர்கள் முகத்தையும், அதில் மொபக்கின்ற வண்டுகள் அளகத்தையும, அங்குக் காணப்படுகினற முத்துகைள் பற்களையும் போலு மென்க. அளகவண்டுசூழ்தாமரைமுகம் - உவமையை அங்கமாகக்கொண்ட உருவகம். அறற்கூந்தல, சித்திலமுறுவல் - உருவகம். பெறலருந்தெரிவை - இவ்வளவு அழகுள்ள மாதர் கிடைப்பது அருமை எனறவாறு. காண்பரான் முழுதுங் காண்கிலார் - தொடைமாண்.

'பெறலருந்திருவினை,' 'அளவில்வண்டு,' நிறைறுத்தாமரை,' 'முற்றுங் காண்கிலார்' எனபன - பிரதிபேதம். (கூ)

[வானரர் நருமதையாற்றைக் கடத்தல்.]

கo. செருமதயாக்கையர்திருகஇல்சிக்கதையர்
தருமதயசபிவைதழுவுதருண்மையர்
பொருமதயானையுமபிடியுமபுகுமுழ
னருமதையாமெனறுதியைநீஙகினர்.

(இ - ள்.) செரு மதம் யாக்கையர் - போர்செய்வதில் உற்சாகக்கொண்ட உடம்புடையவர்களும, திருக்கு இல் சிக்கதையர் - மாறுபாடில்லாத மனமுடை யவர்களும், தருமம் தயா இவை தழுவும் தனமைபா - தருமமும் அருளும் பொருந்திய சுபாவமுடையவாகளுமாகிய வானராகள்,—செ ரு மதம யானை யும - போர்செய்கினற மதங்கொண்ட ஆண்யானைகளும, பிடி யும் - பெண் யானைகளும், புக்கு உழல் - புகுந்து விளையாடுகினற, நருமதை எனும் நதியை - நருமதையாறறை, நீஙகினர் - கடந்து அப்பாறசெனறாரன, (எ - று.)

யாக்கை - (ரஸம், ரக்தம், சுக்லம், மூளை, தசை, எலுபபு, தோல் என்ற ஏழுவகைத்தாதுக்களால்) கட்டப்படுவது என உடமபுக்குக் காரணக்குறி. திருக்கில்சிக்கதையர் - (குரங்குத்தன்மையால்) மாறுமல் ஒருபடிப்பட ஒற்றுமை கொண்ட மனமுடையவர். தருமம் - மறுமையின நனமைக்குக் காரணமாக இப்பிறப்பிற் செய்யப்படும் நலவினை. தயை - பிறர்நோவு கண்டவிடத்து ஐயோவெனத் தோனறும் இரக்கம். ஆம் - அசை.

'செருக்கில்சிக்கதையர்,' 'நருமதையாறெனறும' என பிரதிபேதம். (கo)

[வானரர் ஏமகூடமலையை யடைதல்]

கக. தாமகூடததிலைதிதீர்த்தசங்கமு
நாமகூடப்பெருந்திசையைநலகிய
வாமகூடச்சுடர்மணிவயங்குமு
மேமகூடத்திடங்கிரியையெய்தினர்.

(இ - ன்.) தாம கூடம் திரை தீர்த்த சங்கமும் - ஒலியோடுகூடிய சிகரத் களினினறு தோனறுகினற அலைகளையுடைய தீர்த்தங்களின் தொகுதியும்,

வாமம் கூடம் சுடர மணி(உம்) - அழகிய தொகுதியாகிய ஒளியையுடைய இரத்தினங்களும், வயஙகுறும் - (தனனிடத்தில்) விளங்குகினற, நாம்ம் கூடு அ பெருந் திசையை நலகிய - புகழ்பொருந்திய அந்தப் பெரிய திக்கைப் பாதுகாகினற, ஏமகூடம் தட கிரியை - ஹேமகூடமென்னும் பெரியதொரு மலையை, எய்தினார் - (வானரர்கள்) போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.)

பல புண்ணிய தீர்த்தங்களும், மிகசசிறந்த பல இரதினங்களும கிரம்பி யிருககப்பெறறது ஹேமகூடமலை யென்க. 'நல்கிய' என்பது, 'ஏமகூடத் தடங்கிரி' என பதனோடு இயையும். பூமியின்மேல் எவவளவு உயாந்திருக்கின றனவோ அவ்வளவு நிலத்தினகீழ் வேருணறிப் பூமியைத்தாஙகுவனவாகிய அஷ்டகுலபருவதஙகளுள் ஒன்றன பெயரை இம்மலை கொணடிருத்தலால், 'நாமகூடபபெருந்திசையைநலகியஏமகூடத்தடஙகிரி' எனப்பட்டது. எதிலக நயமபறறி, காமங்கூடு எனபது காமகூடு என விகாரப்பட்டது. நாமகூடம என்பதறகு - ஒழுஙகாகிய மலைமுழைஞ்சகளினினறு எனக கூறுவாருமுளர். இனி, 'நலகிய' எனபதை 'ஷாமகூடச்சுடாமணி' எனபதனோடு இயைத்தி, இரத்தினஙகளை சுறறிலுமுள்ள திசைகளில தமகுமிகவொளியைப் பரப்பி அவறறை விளஙகச்செய்யு மெனறு கூறினுமாம. 'மணி' எனறவிடத்து, உம மை-செயயுள்விகாரத்தால் தொககது 'நாமகூடப்பெருந்திசை' எனபதறகு- (மரசசெய்வால) அச்சதறகிடமாய மறைந்துகிடந்த பெரியதிசை யெனினுமாம; இப்பொருளில, நாம - குறிப்புப்பெயரெச்சம; இதில் (அச்சபபொருளதாகிய) 'நாம' எனனும உரிசசொல - பகுதி, அ - விகுதி; கூடம - கூடம: வடசொல, மறைவானது எனறு பொருள. கூடம எனற சொல முதலடியில் சிகரமெனற பொருளிலும, மூனறாமடியில் தொகுதியெனற பொருளிலும் வந்தது. இசசெயயுளில, ஒவ்வோரடியிலும முதலெழுததுமாதிரம வேறு படடிருகக, இரணடு முதலிய சிலவெழுதுகக ளொனறிப் பொருளவேறுபட்டு வநதது - தீரிபு எனனுஞ சொல்லணியின பாறபடும.

'நாமகூடதிறை,' 'நாமகூடதினைதீர்தசங்கமா, நாமகூட,' 'பெரு நதியை,' 'ஷாமகூடசுடா' எனறு பாடாநதரஙகள். (கக)

[இதுமுதல் நான்குகவிகள் - ஏமகூடமலையின் வருணனை]

கஉ. மாடுறுகிரிகளுமானுமறறவுளு
சூடுறுபொனனெனபபொலிந்துதோனறுற
பாடுறுசுடரொளிபரபபுகினறது
வீடுறுமுலகினுமவிளங்குமெய்யது.

(இ - ள) (இந்த ஏமகூடமலையானது),—மாடுறு கிரிகளும் - பக்கதிலுளன மலைகளும, மானுமம - மானகளும, மறறவும - மறறைப்பொருளகளும், சூடு உறு பொன எனபொலிந்து தோனறுற - சுடுதலபொருந்திய [புடம வைத்த] பொன்போல விளஙகிததோனறுமபடி, பாடு உறு சுடா ஒளி பரப்பு கினறது - பெருமைபொருந்திய மிகக காந்தியை வீசுகின்றது; வீடு உறும் உலகினும விளங்கும மெயயது - (இவவுலகதைத) விடுதலபொருந்திய [இவ

வுலகத்தைவிட்டு அடையக்கூடிய] சுவர்க்கலோகத்தைக்காட்டிலும் மிக்கு வீளங்குக் தோற்றத்தையுடையது; (எ - று.)

தன்னிடத்திலன்றிப் பக்கங்களிலுள்ள பொருள்களேயும் தனது ஒளி மிகுதியால் தன்னேப்போலவே பொன்னிறமாகச் செய்யவல்லது, ஏமகூட மலே பென்க; மலேகளும் மாமும் பிறவும் தமதியற்கைநிறம்மாறி அருகி லுள்ள ஏமகூடத்தின நிறத்தை யடைத்தனவாகக் கூறியது - பிறிதினிகுணம் பெறலணியின்பாறபடும்; வடநூலார் தத்குணலங்காரமென்பர். பொன் னுலகமென்று பெயர்கூறப்படுஞ் சுவர்க்கலோகத்திலுள்ள பொருள்கள்யா வும் பொன்மயமாக வினங்குமென்பது, நூற்கொள்கை. ஏமகூடத்திலுள்ள பொருள்கள்யாவும் பொன்மயமாக வினங்குதலால், 'வீறுறமுலகினும்வினங்கு மெய்பது' என்றார். சூடுறபொன் - "சுடச்சுடரும் பொன்," பாடுறு - தன னிடத்திற் பொருந்திய எனினுமாம், சுடர்ஒளி - ஒருபொருட் பனமொழி.

இச்செய்யுளுக்குப்பிறகு சில எட்டுப்பிரதிகளில்

"இக்நெடுங்கிரிகொலோவெனதுகொலோவென
வற்கெடுமேருவோடயிர்க்கலாவது
தொனனெடுநிலமெனுமங்கைசூடிய
பொன்னெடுமுடியெனப்பொலியும்பொற்பது"

என்று ஒருசெய்யுள் காணப்படுன்றது. (கஉ)

கங. பறவையும்பல்வகைவிலங்கும்பாடமைக்
துறைவனகனகநுண்பூழியொட்டலா
னிறைகெடுமேருவைச்சேர்ந்தநீரவாய்ப்
பொறைகெடும்பொன்னெளிமுழுதும்போர்ப்பது.

(இ - ன்.) (அம்மலேயானது),—பாடு அமைந்த உறைவன - தனனிடத் திற் பொருந்தி வாழ்வனவாகிய, பறவையும் - பட்சிகளும், பல் வகை விலங் கும் - பலவகைமிருகங்களும், கனகம் நுண் பூழி ஒட்டலால் - (அம்மலேயிலி ருப்பதுபற்றி அவ்குன்ன) சிறிய பொடிகளின் (தம்மீது) ஒட்டிக்கொன்ற தலினாலே, நிறை கெடு மேருவை சேர்ந்த நீர ஆய் - நிறைந்துவளராகுன்ன பெரிய மேருமலேயைச் சேர்ந்த தன்மையன வென்னுமாறு, பொறை கெடும் பொன் ஒளி முழுதும் போர்ப்பது - பாரமாகிய மிக டொனனிஞெளியை எல்லாப்பொருள்களின் மீதும் போர்க்குந் தன்மையது; (எ - று)

தன்மீதுவாழ்கின்ற பறவைகளும் விலங்குகளும் மேருவைச்சார்ந்த பொருள்கள்போலப் பொற்றூளிபடியப்பெற்று வினங்கும்படி அப்பொருள்க ளெல்லாவற்றையும் பொன்மயமாகச்செய்வது, ஏமகூடமலே யென்றவாறு. மேருமலே தன்னேச்சார்ந்த பொருள்களேயெல்லாம் பொன்மயமாக்கு மென பதை, "இமயப் பொருப்பகஞ்சேர்ந்த பொல்லாக்கருங்காக்கையும் பொன்னிற மாயிருக்கும்" என்பதனாலு மூணர்க. விலங்கு - குறுக்காக வடிவமமையப் பெற்றது என்று அவயவப்பொருள்; 'நிர்யக்' என்ற வடசொல்லும் இப்பொரு ளதே. மேரு - பூமியினடுவி லுள்ளதொரு பொன்மயமானமலே. பொறை - பொறுக்கப்படுவது [சுமக்கப்படுவது] எனப் பாரத்திறருக்காரணக்குறி.

'உறைவது,' 'தாளிபோர்த்தலால்,' 'நீரதாய்', 'மிளிரும் பொற்பது' என்று பிரித்தியேதம். (கரு)

கச. பரவியகனகநுண்பராகம்பாடுற
வெரிசுடர்ச்செம்மணியிட்டத்தோடிழி
யருவியுகதிகளைமலங்குதீயிடை
யுருகுபொன்பாய்வபோன்றொழுகுகின்றது.

(இ - ள்) பரவிய கனகம் நுண் பராகம் பாடு உற - பரவியுள்ள பொன்னினது சிறபொடிகள் தம்மிடத்திற் பொருந்த, எரி சுடர் செம் மணி ஈட்டத்தோடு இழி - விளங்குகின்ற காந்தியையுடைய செவ்த பதுமராகத்தினுக்களின் கூட்டத்தோடு இழிகின்ற, அருவியும் - ஓடைகளும், கதிகளும்—, அலங்கு தீயிடை உருகு பொன் பாய்வ போன்று - எரிகின்ற நெருப்பினிடத்தில் உருகிய பொன் பாய்வதுபோலத் தோன்றுமாறு, ஒழுகுகின்றது - பெருகப்பெறுகின்றது, (அம்மலை); (எ - று.)

பொற்பொடிகள் பொருந்திச் செம்மணியின் நிறமடைந்து பெருகுகின்ற நீர்ப்பெருக்குக்களைக்கு, நெருப்பிலுருக்கி ஓடவிட்டபொன்னை உவமையாகக் குறித்தார்; கற்பனைப்பேற்றவுவமையணி. இனி, பொற்கொடிகள் தம்மிடத்திலே பொருந்தச் செம்மணியின் கூட்டத்தின்மீது விழுந்து பெருகுகின்ற அருவிகளும் கதிகளும் - தீயிடையிலே உருகிய பொன் பாய்வது போன்று ஒழுகப்பெற்றது அம்மலையென்று உரைகூறினுமாம். செம்மணிகளில் பொன்மயமான அருவிகள் பாய்வது, தீயினிடையில் பொன் உருகிப் பெருகுவதுபோலுமென வருணித்தவாறு; இப்பொருளில், ஈட்டத்தோடு - உருபுமயக்கம் மலை ஒழுகுகின்றது என்றதை - இடத்துநிகழ் பொருளின் தொழிலை இடத்தின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு. பாய்வ - பாய்வது என்பதன் தொகுத்தல்

'மருவிய கனகநுண்பராகமாடுற, விரிசுடர்ச்செம்மணி மீட்டத்தாடிவீ, ழருவியகதிரள்களும்,' 'பரவியபராக நுண்கனகம்' என்று பிரித்தியேதம். (கச)

கரு. விஞ்சையர்பாடலும்விசும்பின்வெள்வளைப்
பஞ்சின்மெல்லடியினராடற்பாணியும்
குஞ்சரமுழக்கமுங்குமுறுபேரியின்
மஞ்சினமுரற்றலுமையங்குமாண்பது.

(இ - ள்) விஞ்சையர் பாடலும் - (அந்துவக்தன்ன) வித்தியாதரர்களது பாட்டுக்களினெலியும், விசும்பின் வெள் வளை பஞ்சின் மெல் அடியினர் ஆடல் பாணியும் - தேவலோகத்திலிருந்து வந்தவரான வெள்ளிய வளையல்களைத் தரித்த பஞ்சுபோன்ற மெல்லியபாதங்களையுடையவராகிய தேவமாதரது ஆடலோடுகூடிய தாளங்களினெலியும், குஞ்சர முழக்கமும் - யானைகளின் பிளிறுதலும், குமுறு பேரியின் மஞ்சு இனம் முரற்றலும் - முழங்குகின்ற முரசவாத்தியம்போன்ற (அந்துவக்தனதற்கும்) மேகக்கூட்டங்களின் இடியொலியும், மயங்கும்-ஒன்றுசேர்ந்தன, மாண்பது-பெருமையையுடையது (அம்மலை), (எ - று:)

குஞ்சரமுழக்கம் கூறியது - அந்தள்ள மாறை மிருகபட்சிகளின் முழக்கங்கட்கும் உபலட்சணம். பலவகையொலிகளும் நிரம்பப்பெற்றுள்ள அம்மலையென்க. விஞ்சையர் - பதினெண்தேவகணங்களு ளொருசாதியார்; மாயிகாஞ்சனம் முதலிய மாயவித்தையில் வல்லவர். வித்யை, வித்தை, விச்சை, விஞ்சை எனக் காண்க. பஞ்சின்மெல்லடி - செம்பஞ்சுக்குழம்பூட்டிய மெல்லிய பாதமுமாம். வெவ்வாய் - சங்குவாய்: (கைகை) வாளுக்குள்ளது வாளையெனக் காரணக்குறி. ஆடற்பாணி - அபிநயஞ்செய்கையில் சதிமிதித்தற்குப் பொருத்தமாறு பேரடப்படுந் தாளம். குஞ்சரம் என்றவடசொல் - புதரிற் சஞ்சரிப்ப தென்றும், துதிக்கையையுடைய தென்றுங் காரணப் பொருள்பெறும்.

'அடியவர்பாடற்பாணியும்,' 'மயங்கிமாய்வன,' 'வயங்குமாண்பது' என்ற பிரதிபேதம். (கஎ)

[வாநரர் அம்மலையை இராவணனிருக்குமிட மென்று நினைத்து உவகையுந் தினமும் ஒருங்கே கொள்ளுதல்.]

கசு. அனையதோரகிஞராமிதாமயி
லினபவெலிராவணனிருக்குமிவ்வெற்பெனு
நினைவினருவக்குயர்ந்தோங்குநெஞ்சினர்
சினமிகக்கனற்பொறிசிந்துசெங்கணர்.

(இ - ள்) (வாநரர்),—அனையது நோக்கினர் - அவ்வேம கூடமலையைக் கண்டு, 'ஆம் இது - இங்குப்பொருந்தியுள்ள இம்மலையானது, அயில்வேல் இனைய இராவணன் இருக்கும் வெற்பு ஆம் - கூர்மையான வேலாயுதத்தையுடைய இப்படிப்பட்ட இராவணன் இருக்கின்றமலையாகும்,' எனும்-என்றுகருதின்ற, நினைவினர் - எண்ண முடையவர்களும், உவக்குயர்ந்து ஒங்கு நெஞ்சினர் - (அதுபற்றிச்) சந்தோஷித்து மிகவும் பொங்குகின்ற மனமுடையவர்களும், சினம் மிக கனல் பொறி சிந்து செங் கணர் - கோபம் மிகுதலாற் கனற்பொறியைக் கக்குகின்ற செந்நிறமான கண்களையுடையவர்களு மாவர்கள்; (எ - று)

வாநரர்கள், அம்மலையின் வளத்தைக் கண்டு இராவணனது இருப்பிடமாக இருக்கலா மென்று கருதி, 'மீளவிற் சீதாபிராட்டியைக் காணலாம்' என்பதனால் மனப்பூரிப்பையும், சீதையை அபகரித்த கொடுந்தொழிலையுடையனனை இராவணனது தன்மையை நினைத்ததனால் தோன்றிய பெருஞ் சினத்தையும் ஒருங்கே கொண்டனரென்க; கோபத்தாற்கண்சிவத்தல், இயல்பு.

'அமரார்நுகும்,' 'வினவலனிராவணன்,' 'அமுதினமாமயில்,' 'உவக்குவந்து,' 'சிந்துஞ்செங்கணர்' என்பன பிரதிபேதம். (கஅ)

[வாநரர் சீதையைத்தேடுமாறு அம்மலையின்மீது ஏறுதல்.]

கள. இம்மலைகாணுதுமேமழைமாணையச்
செம்மலைநீக்குகுஞ்சிங்கைத்தீர்தன
விம்மலுற்றுவகையின்விளங்குழுள்ளத்த
ரம்மலையேறினரச்சமீங்கினர்.

(இ - ள்.) 'இ மலே - இச்சமலையிலே, ஏழை மானே - பேதைமைக்குணமுடைய மான்போன்ற சீதையை, காணுதும் - காண்போம்; (அதனால்), அ செம்மலை - அந்த இராமபிரானது சிந்தை நீது - மனத்தினதன்பத்தை, நீக்குதும் - ஒழித்துவிடுவோம்,' என - எனறருகி, (வானரங்கள்),—விம்மல உற்று உவகையின் விளங்கும உள்ளத்தர்-பூரிப்புகொண்டு சந்தோஷத்தினால் விளங்குகின்ற மனத்தையுடையவராகி, அச்சம நீங்கினர் - பயமில்லாதவர்களாய் [சிறிதும் அச்சமில்லாமலே], அமலை எய்தினர் - அம்மலையினமீது ஏறினார்கள; (எ - று.)

அம்மலையை இராவணன் இருப்பிடமெனக் கருதியதனால், வானரர்கள் 'இம்மலை காணுதும் ஏழைமானை' என்றார்க ளெனக. அச்செம்மலைச் சிந்தைதநீது நீக்குதும் - சீதையின செயலிலைபக கண்டறிந்து இராமபிரானிடத்துச்சொல்லி அவனது மனததுபரதத்தை மாறறுவோ மென்றவாறு; செம்மலைச் சிந்தைத்தீதை நீகுவோம் - இரண்டு செயப்படுபொருள் வந்த செய்வினை; இதனை, வடநூலார் த்வீகர்மகமாதரிப்பர்போக மென்பர்: செம்மலினது சிந்தைத்தீதை என வேறறுமை மயக்கமாகக் கூறுதல், தமிழ்நடைக்கு ஏற்கும்.

'இம்மலைக்கணுதுதுமேழைமானை', 'சிந்தைத்தீயன,' 'சிந்தையாமென' என்று பிரதிபேதம். (கஎ)

[வானரர் அங்குச் சீதையைத் தேடிக் காணாமை.]

கஅ. இரிந்தனகரிகளுமயாளியீட்டமும்
விரிந்தநீளரிகளுமவிருவிநீஙினை
திரிந்தனரெபகணுஞ்சிறுவைகாண்கிலர்
பிரிந்தனராயிரிதனபபெய நமபிறறிபார.

(இ - ள்.) (அமலைமீது எபபவானரர்களுக்கண்டு), கரிகளும்- யானைகளும, யாளி ஈட்டமும் - யாளிகளின கூட்டமும், இரிந்தன - (அஞ்சி) விலகியோடின, விரிந்த நீளரிகளும அரிகளும (அமலைமீது) பரவியிருந்த கொல்லுந்தனமையுள்ள சிங்கங்களும, எவரும் சிறுவை - அஞ்சி நிலைகெட்டுச்சென்றன; பெபரும பெபறறியார ஆகையால் செல்லின்ற தனமையையுடைய அவ்வானரர்கள்,—எஙகணும இரிந்தனர் - மலைமுழுவதிலும் தேடிப்பார்த்தவர்களாகி, இருவை காண்கிலர் - சீதாபிராட்டியைக் காணமாட்டாதவர்களாய், (அதனால்), பிரிந்தனர் என-(இராவணனிருக்குமிடம் இதுவன்று) வேறு என்று நினைத்து, பிரிந்தனர் - அவ்விடமைவிட்டு அபபாறசெலலுந் தன்மையுடையவராஞனர்கள்; (எ - று.)

சிங்கம் மூதலிய கொடுவிலங்குகளும் கண்டு அஞ்சுமாறு வானரர்களின் வடிவத்தோற்றம் இருந்த தெனக கரி யானை; கரத்தையுடையது; (கரம் - துதிக்கை) இதறகு - கருநிறமுடையதென்று தமிழ்வகையாற் காரணங்கூறலாகாது; வடசொல்லாதலின. யாளி - யானையைக்கொலலவல்லதும் சிங்கம் போன்றதும் துதிக்கையுடையது மாகிய தொரு மிருகவிசேடம். கோள் - உயிரைக்கொள்ளுதல்; வலியுமாம. எங்கண் - எக்கண் என்பதன மெலித்தல்.

சற்றடி - முற்றுமோனை. பிரிந்தனர் என்பதற்கு - (இதுதான் இராவண னிருக்குமிடமென்று முதலில் தாம் கொண்ட எண்ணத்தை) மாற்றிஞர்க ளெனினுமாம்.

'வெருவிநீங்கிட,' 'பிரிந்தனர்சிந்தனைபிரிக்கின்றுமென,' 'பரிந்தன சிந் தனைபுரிகின்றுமென' என்று பிரதிபேதம். (கஅ)

[வாநரர்கள் அம்மலையை விட்டே இறங்குதல்.]

கக. ஐம்பதிற்றிரட்டிகாவதத்தினுலகன்
உம்பரைத்தொடுவதொத்துயர்வினுங்கிய
செம்பொனற்கிரியையொர்பகலிற்றேடினர் .
கொம்பினைக்கண்டிலர்குப்புற்றேறினர்.

(இ - ன்.) (வானரர்கள்),—ஐம்பதிற்று இரட்டி காவதத்தினுல் அகன்று· நூறுகாததூரம் அகலமுடையதாய், உம்பரை தொடுவதை ஒத்து உயர்வின் ஒங் கிய - மேலுலகத்தைத் தொடுவதுபோல மிகவும் உயர்ந்துள்ள, செம்பொன் னற் கிரியை - செம்பொன்மயமான அழகிய அந்த ஹேமகூடபர்வதத்தில், ஓர் பகலில் தேடினர் - ஒருபகல் முழுவதும் தேடிப்பார்த்தும், கொம்பினை கண்டிலர் - பூங்கொம்புபோன்ற சீதையைக் காணாதவர்களாய் [சீதையைக் காணுமையால்], குப்புற்று ஏறினர் - (அம்மலையினின்று) இறங்கிச் செல்ல லானர்கள்; (எ - று.)

இச்செய்யுள், கீழ்ச்செய்யுளின் பின்னிரண்டடிகளினது அநுவாதம். காவதம் - காதம் என்பதன் விரித்தல். உம்பர் - மேலிடம். குப்புறுதல்- கீழிறங்குதல்.

'பைம்பொனின்கிரியை' என்று பிரதிபேதம். (கக)

[அங்கதன்முதலியோர், சீதையைத்தேடி வருமாறு தமது சேனையைத் தனியே அனுப்புதல்]

உ.o வெள்ளமோரிரண்டெனவிரிந்தசேனைபைத்
தெள்ளுநீருலகெலாந்திரிந்துதேடிநீ
ரெள்ளருமகேந்திரத்தெம்மிற்கூடுமென்
றுள்ளினுருயர்நெடுமோங்கனீங்கினர்.

(இ - ன்.) (அங்கதன் முதலிய சேனாபதிகளாகிய வாநரவீரர்கள்),-வெள் ளம் ஓர் இரண்டு என விரிந்த சேனையை - இரண்டு வெள்ளமென்று சொல்லு மாறு பரவிய தமது வாநரசேனையை (நோக்கி), 'நீர் - நீங்கள், தெள்ளும் நீர் உலகு எலாம் திரிந்து தேடி - தெளிந்த நீர்மைபொந்த (தென்திசையிலுள்ள) பூமியாகம்முழுவதிலும் அலைந்து (சீதையைத்) தேடிப்பார்த்து, (பிறகு), 'எம் அரு மகேந்திரத்து - (தென்டேற்றையிலுள்ள) குற்றமற்ற மகேந்திர பருவ தத்தினிடத்தில், எம்மில் கூடும் - எம்மிடத்தில் வந்து சேருங்கள்,' என்று உள் ளினுர் - என்று நினைத்துக் கட்டளையிட்டவராகி, உயர்நெடும் ஓங்கல் நீங்கி னர் - உயர்ந்து நீண்ட அவ்வேமகூடத்தைப் பிரிந்து சென்றார்கள்; (உ - று.)

பிரிந்துசென்ற தேடினால், குறித்ததவணைக்குள் தமக்கு ஜீயமித்துள்ள திசைமுழுவதையும் கண்குதேடிமுடிக்கலா மென்று கருதி, சேனைகளைத் தனியே பிரிந்துசென்ற தேடிக்கடைசியாக மகேந்திரத்தில் வந்து சேரு மாறு கட்டளையிட்டு, சேனாபதிகளாகிய அங்கதன் முதலியோர் தாம் தனி யே சென்றன ரென்க.

'தெரிந்துதேடி,' 'திரிந்துதேடும்,' 'வரைபோலீங்கினர்' என்ற பிரதி பேதம். (உ0)

[அநுமான் முதலியோர் ஓர்பாலைவனத்தை யடைதல்.]

உக. மாருதிமுதலியவயிரத்தோள்வயப்
போர்கெழுவீரரேகுழுமிப்போகின்றூர்
நீரெனும்பெயருமகலெறியினீங்கலாற்
சூரியன்வெருவுமோர்சுரத்தைநண்ணினர்.

(இ - ன்.) மாருதி முதலிய வயிரம் தோள் வயம் போர் கெழு வீரரே - அநுமான் முதலாகிய உறுதியான தோள்களையுடைய வெற்றியைத்தரும போரில் உற்சாகங்கொண்ட வீராகள்மாத்திரம், குழுமி போகின்றூர் - திரண் டுசெல்கின்றவர்களாய்,—அ நெறியில் - அந்தவழியிலே, நீர எனும் பெய ரும் நீங்கலால் - நீரென்றபெயர்மாத்திரமும் இல்லையாதலினால், சூரியன வெருவும்-உஷ்ணகிரணனை சூரியனுங் கண்டு அஞ்சும்படியான, ஓர்சுரத்தை- ஒருபாலைவனத்தை, கண்ணினர் - சென்றுசேர்ந்தார்கள்; (எ - று.)

பூமியிலுள்ள நீரை வற்றச்செய்து அதறகு வெம்மையையுண்டாக்கும் உஷ்ணகிரணங்களையுடைய சூரியனும் கண்டு அஞ்சவேண்டியிருக்கது பாலை வனத்தின் கொடுமை யென்க. 'நீரெனுமபெயரும்நீங்கலால்' - உலகவழக்கு நவிற்சியணி; இது, வடமொழியில் லோகோக்தி எனப்படும்: நீர சிறிதும அங்கு இல்லை யென்றவாறு. பாலைநிலத்திற்குஉரிய தெய்வமாகி வெப்பத தையே இயற்கையாகவுடைய சூரியனும் அஞ்சுமாறு வெப்பம் நிறைந்துள னது அங்கில மெனபார், 'சூரியனவெருவுமோர்சுரம்' என்றார்; ''சூரியன் தேருமோடாதமாமாகமீ'' என்றதனால் காண்க. பாலை தனியே ஒருநிலமன் றென்றும், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நான்கும் தம்தன்மை திரிந்து பாலையா மென்றும் கூறுவர். வயிரம் - உறுதிகரு, இலக்கணை; வயம் - வெற்றி; 'வய' என்ற எடுத்து - வலிமையென்ற பொருள்கூறினு மாம். வீரரே, ஏகாரம் - பிரிநிலை.

'போர்வலிவீரர்,' 'பெயருமொன்றின்றிநீணெடும்,' 'சுரத்தைத்துன் னினர்' என்ற பாடாந்தரம். (உக)

[பாலைவனத்தின் வருணனை.]

உஉ. புள்ளடைபாவிலங்கரிதுபுல்லொடுங்
கள்ளுடைமானிலகல்லுகநீருகு
முள்ளிடையாவுநுண்பொடியொடோடிய
வெள்ளிடையல்லதொன்றிதவெஞ்சுரம்.

(இ - ன்.) அ வெஞ்சுரம்-அந்தக் கொடிய பாலைவனத்தில்,—புள் அடை யா - பறவைகள் வந்தடைக்கமாட்டா; விலங்கு அரிது - ஒரு மிருகமும் அரு

மையானதாகும் [ஒன்றுங் காணக்கிடைக்கா தென்றபடி]; புல்லெழும் கள் உடை மரன் இல - புற்களும் தேனையுடைய மலர்மரங்களும் அடியோடு இல்லை; கல்லும் தீக்கு உகும் - கற்களும் சாமபலராய்விடும்; உள் இடை யாவும் நுண் பொடியொடு ஓடிய வெள் இடை அல்லது ஒன்று அறிகு - (தனது) உள்ளிடத்தில் (வெளியிடங்களிலிருந்து வருகின்ற) எலலாப்பொருள்களும் சிறுதூளியாக மாறிப பறக்கின்ற வெறறிடமலலது வேறொன்று (அங்குக் காணக்கிடைத்தல்) அரிதாகும்; (எ - று.)

அந்தப்பாலைவனத்தில் பறவைமுதலிய ஜீவஜந்துக்கள் வருவதுமில்லை; மரஞ்செடிகளும் முளைப்பதேயில்லை; கற்களுங் தீந்துபோம்; குறிஞ்சி முதலியவேற்றுநிலங்களிலிருந்து எப்பொருள் வந்தாலும் அவையாவும் பொடியாய்ப் பறக்கின்ற வெப்பம்கிறைந்த வெற்றிடமாகவே யுளளது அப்பாலை வன மெனறு அச்சுரத்தின்கொடுமை கூறியவாறு. கள்ளுடைமரன் - பூக்களுள்ள மலர்களில தேனைக்கொண்டுள்ள மாங்கள் உளளிடையாவும் நுண பொடியொடு ஓடிய வெள்ளிடை - உள்ளிடத்திற்சேர்ந்த யாவும் சிறியபொடியாக தனமையோடு ஒடுதற்குக காரணமான வெறறிடம். கல்லும் - உயர்வு சிறப்பு; அதனது விக்கவுறுதியைக் காட்டும். புள்ளடையா (ஆகாயத்தின் மீதும்) புட்கள அடையமாட்டா எனறுமாம

'வில்கரிய,' 'பூவொடும்', 'கள்ளுடை பாதிலம,' 'களளை...,' 'கலலுக் தீக்தக, டுள்ளிடையவ நுண்பொடியொடொட்டலின,' 'உள்ளிடையாவு நுண்பொடியொடோடிய,' 'நுண்பொடியி ஞெழிடும்,' 'இல்லை வெஞ்சுரம்' எனறு பிரதிபேதம் (உ உ)

[இதுவும், அடுத்தகவியும் - பாலைவனத்தின் கொடுமை ... ஆய்ந்து வாநரர் வருந்தியதைக் கூறும்.]

உக. நன்புலனெகுறவுணர்வுநரமறப
பொனபொலியாக்கைகள்புழுங்கிப்பொய துவார்
தென்புலக்தங்கெரிகடிறகிருகிய
வெண்பில்பல்லுயிரெனவெம்மையெய்தினர்.

(இ - ள.) (அங்குச்சென்ற வாநரவீரர்கள்),—நல புலன் நுகெகுற - (தமது) நலல பஞ்சேந்திரியங்களும் நடுங்கவும், உணர்வு நரம் அற - அறிவு என்னும்பேரும் அடியோடு அழியவும, பொன் பொலி யாக்கைகள் புழுங்கி பொங்குவரா - பொனபோல விளகுகின்ற தமதுசரீரங்கள் வேர்த்துத் தபிப் பவர்களாய்,—தென புலம் திந்த எரி நரகில் இந்திய எனபு இல் பல் உயிர் என - தெறருத்திசையிலிருக்கின்ற எரியுந்தனமையுள்ள நரகத்திற் கீழ்வீழ் ந்து அடிக்கின்ற எலுபில்லாதவு...மபையுடைய புழுமுதலிய பலவகை ஜீவ ராசிகளைப்போல, வெமமை எயதினர் - தாபத்தை யடைந்தார்கள்; (எ - று.)

அங்குச்சென்ற வானரகள் நிலதினவெம்மையைப் பொறுக்கமுடியாமல் புழுத்துடிப்பதுபோலத் துடித்தார்க ளென்பதாம். எனபு இல்லாத உயிர்கள் வெம்மையைதாங்கும் ஆற்றல் இலவாதலின, வானரர்கள வெயிலில் துடிப்பதறகு, எனபில் பல்லுயிரை உவமைகூறினர்: "என்பிலதனை

வெயில்போலத் காயுமே'' என்றார் திருவள்ளுவரும். புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து விஷயங்கள்; இங்கு, இலக்கணையால், அவற்றிற்கு உரிய மெய் வாய் கண் மூக்குச் செவி யென்ற ஐம்பொறிகளைக் காட்டும் உணர்வு நாமம் அறிதல் - அறிவு சிறிதுமின்றிப மரவுசமமாதல். நாமற - நாமமற எனபதன விகாரம்; 'நாமற' என்ற பாடம - அச்சமடைய வென்று பொருள்படும. நரகத்தைத் தன்திசையிலுளளதாகக கூறுதல், மாபு. எரி நரகு - அகஙினியையுடையனவான தப்தகும்பம, கும்பீபாகம் போல்வன; எரினறை நரகம எனினுமாம. நரகு=நரகம.

'உணாவுகாவுற,' 'உணர்வுகருந்தற,' 'புன்புலவாகைகளை,' 'தென்புலத தவனெனி,' 'தெனபுலதது்கிகரி,' 'தெனபுலதது்னி லெரி,' 'என்பிலல்லுயி ரெனனவுணனிரை' என்று பாடாந்தரங்கள. (உக)

• உச. நீடடியநாவினாநிலத தநிறுநீணடுசீதா
பிடடியவிவம்மையபாலுலடுகாவினர
காடடிணுகாய்கதுகநாபகுதிதலாற
சூடடகன் சேலெழுபொரிபிறநுள்ளினர.

(இ - ள) (பிணறும் அவயானாகள), நீட்டிய நாவினா - (நீரிவட் கையால) வெளியில நீட்டிய நாவையுடையவாகளாம,—நிலத்தில் நீண்டு தோறு ஊட்டிய வெமமையபால உலரும் காலினா - நிலத்தில அடிவைக்குந் தோறும சிறிதிருந்து உறைதத வெபபதது்னாலே கொப்புளிதத பாதங்களையுடை யவாகளாம,—காட்டினும காய்ந்து தம் காயம் தினதலால் - அப்பாலேவனத் தைப் பாராகினும மிகுதியாக வெபபமடைந்து தகாளுடைய நீர்வறிட்டத னால், சூட்ட கல்மேல் எழு பொரியின் துள்ளினர - சூடடிகாண்ட கல்லி லிருந்து மேலெழுகினற நெறபொரிபோலத் திடப்பவாகளாம மானுர்கள.

மிக நீரிவட்டையால் காலை வெளியே பீட்டினாலும, பொறுக்கமுடி யாத மிக வெப்பதது்னாலே காலை சேரபபுளிகாதலும - இயல்பு மிகவுஞ்சுகுமார மான மேனியையுடைய ராதலின. இபப்டைபில மிக வெப்பமகொண்ட பாலவனத்தினமீது அவயானரவீரா நடகது செல்லும்போது அவாகளுடைய உடம்பு அகபட்டினால காய்ந்துவிட்டதெனபது, மூனறாமடியின் பொருள. நெருப்பிலலெமமையடைந்த கலலில நெலபொரிந்து மேலெழுவதுபோல, வானரவீரா பாலவனதது்ன மிகவெமமையால துள்ளித்துடிக்கலானுர்க ளெனபது, பின்னிரணடடிகளின கருதது, உவமையணி. சூடு அகல் எனறுபிரித்து - சூட்டையடைந்த சட்டி யெனினுமாம சூட்ட - சூடு என்ற பெயரினடியாப்பிறந்த குறிபபுப் பெயரெச்சம.

• 'தூண்டுதோறு,' 'வெம்மையர்,' 'உலையுங்காலாக,' 'காய்ந்ததங்காயம், 'காய்ந்தவக்காயம்,' 'துள்ளுவார்' எனறு பிரதிபேதம. (உச)

[மிகவும் வருந்திய வாநரர் பிலவழியில் கோதல்]

உரி. ஓதுங்கலாதிழலிணக்காண்கிலாதுயிர்
பிதுங்கலாமுடலினர்முடிவில்பீழையா
பதுங்கடுப்பருகிடபபதைகினறூபல
விதங்களானெடுபிலவழியின்மேவினர.

(இ - ன்) (வானரவீரர்),— ஒதுங்கல் ஆம் நிழலினை காண்கிலாத - (வெயிலுக்கு) ஒதுங்கக்கூடிய நிழலைக் காணப்பெறாமல், உயிர் பிதுங்கல் ஆம் உடலினர் - உயிர்வெளிப்படக்கூடிய [இரக்கும் நிலையிலிருக்கிற] உடம்பை யுடையவர்களும், மூடிவு இல் பீழையார் - எல்லையில்லாத துன்பத்தையடைந்தவர்களும், பதங்கள் தீ பருகிட பதைக்கின்றார் - பாதங்களில் (அக்கினித் தின்) வெப்பம் தாக்குதலால் துடிக்கின்றவர்களுமாய், பல வீதங்களால் - (அவ்வெப்பத்தினின்று தப்புதற்குப்) பலவகையினும் பார்த்துக் கடைசியாக, நெடும் பிலம் வழியில் மேவினர் - பெரிய பிலத்துவாரத்தின வழியை அடைந்தார்கள்; (எ - று.)

"வானரவீரர்கள் அத்தப்பாலைவனத்தில் ஒதுங்கித் தப்புவதற்குச் சிறிதும் நிழலகப்படாமல் உயிர்போகும் நிலையையடைந்து, இறுதியாக, அல்குப்புலப் பட்டதொரு பிலவழியைச் சேர்ந்தன ரென்பதாம். பீழை-பீடா; வடசொல். பலவிதங்களால் பதைக்கின்றார் என்றுகூட்டி, பலவகையாக வருத்தமடை கின்றவர்களாய் எனினுமாம்.

'நிழலினை காண்கிலாத' 'பீடையார்,' 'தீயுருகிட,' 'வீதங்கொளா', 'வாயினமேவினர்' என்ற சிலபிரதிகள். (உஅ)

[வானரவீரர் அப் பிலத்தினுட் செல்லுதல்.]

உசு. மீச்செலவரிதினிவிளியினல்லது
தீச்செலவொழியவுநடுக்குந்திண்பில
வாய்ச்செலணன்றெனமனத்தினெண்ணினர்
போய்ச்சிலவறிதுமென்றதனிற்போயினர்.

(இ - ன்.) 'இனி - இனிமேல், விளியின் அல்லது - இறத்தலல்லாமல், மீ செலவு அரிது - (சீதாபிராட்டியைத்தேடுமொரு பாலைவனத்தின் வழியாக) அப்பாற்செல்லுதல் (சுமக்குக்) கூடாதகாரியமாகும், (ஆகையால்), திண் பிலம் வாய் செலல் - வலிய பிலத்தின் வழியிற் செலலுதல், தீ செலவு ஒழிய வும் நடுக்கும் - வெப்பமான பாலைநிலத்திற் செல்லுதலேயாவது நடுக்கும்; (ஆகவே), என்று - (இங்குச்செல்லுதலே) கல்லது,' என - எனவும், மனத்தின் எண்ணினர் - மனத்தினதகுதியவர்களாய், போய் சில அறிதும் என று - (இப் பிலத்தினுட்)சென்று அங்குள்ளசிலவிடங்களில ஆராயவோமென றுசொல்லி, அதனில் போயினர் - அப்பிலத்தினுள்ளே போனார்கள்; (எ - று.)

இப்பாலைவனத்தில் இனி ஒருகணமேனுஞ் செல்லுதல் உயிரழிவுக்கே காரணமாம்; ஆகவே, இங்குத்தோன்றுகின்ற பிலவழியிற் சென்றால், அது சீதையுள்ள இடமாக இல்லாதிருந்தாலுங்கூட நிலத்தின வெம்மையையே னும் தணிக்கும்; ஆதலின், இப்போது இங்குச்செல்லுதலே நாம் செயற்பா லது; மேலும், இதற்குள்ளிருக்குஞ் சிலவிடங்களிலும் சீதையைத் தேடிப் பார்ப்போமென்று கருதி வானரவீரர் அப்பிலத்தினுட் புகுந்தன ரென்க. மீச்செலவு (அப்பாலைவனத்தின) மீது செல்லுதல் எனினுமாம். ஒழியவும், உம்மை-இழிவுசிறப்பு; ஒழியவெண்ணுஞ் செயவெனெச்சம், தொழிற்பெயர்.

தன்மைப்பட்டுத் தடுத்தற்றொழிற்குச் செயப்படுபொருளாய் நின்றது; ''அறஞ்செயலரிது'' என்னுமிடத்தில் 'செய' எனபதுபோல

'நீச்செலவரியவும்,' 'நீச்செலவொழியவுமடுக்கும்,' பேரய்ச் செலவறிதும்,' 'அதனிற்புக்கனர்' எனறு பாடாந்தரங்கள். (உக)

[வானரவீரர் அங்கு இருள்செறிந்த குகையை யடைதல்.]

உஅ. அக்கணத்தப்பிலத்தகணியெய்தினர்
திக்கினெடுலகுறச்செறிந்ததேதகுதிரு
ளெக்கியகதிரவற்கஞ்சியேமுறப்
புக்கதேதயனியதோர்புரைபுக்கெய்தினர்.

(இ - ன்,) (வானரவீரர்கள்),—அக்கணத்த - அப்பொழுதி, அபிலத்த அகணி எய்தினர் - அந்தப்பிலத்தினது உள்ளிடத்தை யடைந்தவர்களாய்,—திக்கினெடு உலகு உற செறிந்த தேங்கு இருள் - நான்கு திக்குக்களிலும் இவ்வுலகத்திலும் மிகநெருங்கிய பேரிருள், எக்கிய கதிரவற்கு அஞ்சி - (தம்மையுண்பதிற்) பகியுன்னவனன சூரியனிடத்து அச்சங்கொண்டு, எமுற புக்கதே அனையது - (தான்) கேடுதனைத யடையுமாறு புகுந்துன்னது போலத் தோன்றுவதாகிய, ஓர் புரை - ஒரு குகையில், புக்கு எய்தினர் - புகுந்து சென்றார்கள்; (எ - று.)

வானரவீரர் பிலத்தினுட்செல்லுகையில், அதனிடையிலே இருன்செறிந்ததொரு குகைபில் நுழைந்து செலலலாயின ரென்பதாம். அங்கு நிறைந்திருந்த இருளை, உலகமெங்கும் பரவியுன்ன இருள தனக்குப் பகையவனன சூரியனுக்கு அஞ்சி அங்குப் பதுங்கியிருப்பதாகக் குறித்தது--தன்மைத்தும் குறிப்பேற்றவணியின பாற்படும்; ''தூங்கிருள் வெய்யோற்கொதுங்கிப், புக்கிருந்தாலனன பொழில்'' எனற களவெண்பா இந்து ஒப்புநோக்கத்தக்கது அகணி உள்ளிடம்; (இகன் எதிர்மொழி - புறணி; வெளியிடமென்பது அதனபொருள்.) எக்குதல் - பகியுன் வபிறகுழைதல் எழுகிரணக் கிளையுடைய அதவினியினும் பதினறு கிரணக்கிளையுடைய சந்திரனினும், அவர்கட்குக்கொடுத்து வாங்குகினற ஆயிரக்கிரணகிளையுடைய சூரியனது கிறத்தலால், அவனுக்குக கதிரவனென்று ஒருபெயர் புரை - உள்ளறை.

'அதனினெய்தினர்,' 'அக்தமெய்தினர்,' 'உலகினில்,' 'செறிந்த' என்று பாடாந்தரங்கள். (உஎ)

[வானரவீரர் அங்குத் தீகைத்து வருந்துதல்.]

உஅ. எழுகிலர்காலெடுத்தேதகுமெணணிலர்
வழியுளதாமெனுமுணர்வுமாறினர்
நிழுவியசெய்யெனுமிருட்பிழம்பினுண்
முழுகியமெய்யராயுயிர்ப்புமுட்டினர்.

(இ - ன்.) (அவர்கள்),—எழுகிலர் - (அப்பாற்செல்லும்படி) புறப்படாமலும்,—கால் எடுத்து எகும் எண் இலர் - அடிபெடுத்துச் செல்லும் எண்ணமில்லாமலும்—வழி உளது ஆம் எனும் உணர்வு மாறினர் - அப்பாற்செல்லு

தற்குரிய வழி 'உளது' என்னும் அறிவும் இல்லாமலும், இழிந்த நெய் எனும் இருள் பிழம்பினுள் முழுகிய மெய்யர் ஆய - வீழ்தாகவுறைந்த நெய் போன்ற இருளின் தொகுதியில் முழுகிப்போன உடம்பையுடையவர்களாய், (ஒருவர்க்கொருவர் இருப்பிடம் அறிந்து கொள்ளமுடியாமல்), உயிர்ப்பு முட்டினர்{அச்சத்தினாலும் வருத்தத்தினாலும்) பெருமூச்சுவிட்டார்கள்;(எ - று.)

அங்கு இருட்பிழம்பினுள அகப்பட்டுக்கொண்ட வானரவீரர் மேற் செய்தொழிலிற சிறிதும் எண்ணமில்லாது இருட்பிழம்பினுள தங்கள அகப்பட்டுக்கொண்டதனால் ஒருவரையொருவர் முகாண முடியாது திகைத்துப் பெருமூச்சுவிட்டன ரென்பதாம்.

" 'ஏகவெண்ணிலர்,' 'உணர்வுமாற்றினர்,' 'முழுகியதேபெனவுரப்பி,' இழுகியதென்னிதிலிழிந்துவீழ்ந்தழி,' 'இருளினேகத்துண்,' 'ஒழுகிய தென வழுந்திருளினுளனத்தின், முழுகியமெய்யினருரப்பி' என்ற பாடாந்தரங்கள்.

[மற்றவானரவீரர்கள் தம்மைக்காக்குமாறு அநுமானை வேண்டுதல்]

உசு. நின்றனர்செய்வதோர்நிலைமையார்கலர்
பொன்றினராமெனப்பொருமுபுந்தியர்
வன்றிறன்மாருநிலல்லியோவெமை
யின்றிதுகாக்கவென்றிரந்துகூறினர்.

(இ - ள்.) (அநுமானல்லாத மற்றைவானரவீரர்கள்),—செய்வது ஓர் நிலைமை ஓர்கலர் நின்றனர் - தாம்செய்யவேண்டியதொரு காரியத்தையும் உணராமாட்டாதவர்களாய்த் திகைத்து நின்றவர்களும், பொன்றினர் ஆம் என பொருமுபுந்தியர் - இறக்கும் நிலைமை யடைந்தவர்போல வருந்துகின்ற மனத்தையுடையவர்களுமாகி,—(அநுமானைநோக்கி),—'வல் நிறல் மாருதி - மிக்கவலிமையையுடைய அநுமானே! இன்று - இப்போது, எமை இதுகாக்க வல்லியோ - எங்களை இத்துயரத்தினின்றும் நீட்டிக்காப்பதற்கு வலலாயோ?' என்று—, இரந்து கூறினர் - வேண்டிக்கொண்டார்கள், (எ - று.)

புந்தி - 'புத்தி' என்ற வடசொலலின விகாரம். மநம புததி சித்தம் அகங்காரம் என்ற அந்தக்கரணவுறுப்புகளு ளொன்றாகிய புந்தியென்பது - அவயவியாகிய அந்தக்கரணமென்ற பொருளில் நின்றது; அந்தக்கரணம் - உள்ளுறுப்பு, உள்ளம். வன்றிறல் - ஒரு பொருட்பனமொழி மாருதி - அண்மைவிளி

'நிலைமைநோக்கிலர்,' 'நோக்கலர்,' 'பொன்றினம் யாமென,' 'வல்லி நீயெமை' என்ற பாடாந்தரங்கள். (உசு)

[அநுமான் தன்னைப்பின்பற்றிவருமாறு அவர்கட்குக் கட்டளையிட்டுத் தான் கையிறல் தடவிக்கொண்டு முன்னேசெல்லுதல்]

ஈ0. உய்வுறுத்துவென்மனமுலையிருழின்வான்
மெய்யுறப்பற்றுதிரிவிடுகிலீரென
வையனக்கணதகினிலகலுறீணறி
கையினிற்றடவிவெங்கானிடைகினான்.

(இ - ள்.) (அநுமான் மற்றையோரை நோக்கி), 'உய்வு உறுத்துவென் - (உங்களுக்குப்) பிழைப்பை யுண்டாக்குவேன்; மனம் உலையிர் - (நீங்கள்) மனம்வருந்தவேண்டா; ஊழின் வால் மெய் உற பற்றுதிர் - முறையாக [ஒரு வர்பின் ஒருவராக நின்று] எனது வாலை உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்; விடுதிலீர் - (அதனை) விடாதீர்கள்,' என - என்று கட்டளையிட்டு, அக் கணத்தினில் - (அவர்கள் தனது வாலை முறைமையாகப் பிடித்துக்கொண்ட) அப்பொழுதே, ஐயன் - சிறந்தவனுகிய அநுமான், அகலும் நீள் நெறி - தான் செல்லவேண்டிய அந்தக குகையின் வழியில், கையினில் தடவி - கையினல் தடவிக்கொண்டு, வெம் காலின் எதினை - வேகத்தையுடைய காலினல் நடந்து முன்னே சென்றான்; (எ - று.)

பேரிருட்பிழம்பில் திசைதெரியாது திகைத்துத் தம்மைக் காக்குமாறு வேண்டிநிக்கூறிய வானரவீரர்கட்கு அநுமான் அபயமளித்துப் பேருருவங் கொண்டு தனது நீண்டவாலைப் பிடித்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டுக் கையினல் தடவிக்கொண்டு காலினல் முன்னே நடந்துசென்றன னென்க. அநுமான் பேருருவங்கொண்டமை, அடுத்தசெய்யுளில் விளக்கும். பேரிருளிற செல்பவர் எதிரில் ஒன்றுமில்லையாவெண்பதை யுணர்த்தற்பொருட்டுக் கையைத்துழாவிக்கொண்டு செல்லுதல், இயல்பு. காலினேகினன் - காற்றுப்போல விரைந்துசென்று னென்றுமை பொருள்படும்: மெய் என்ற சொல் - உறுதி யென்ற பொருளில் வந்தது.

'மனமுலையலுழிலென், மெய்யுறப்பற்றுமின்,' கணத்தினின்று, 'கையுறத்தடவி' என்று சிலபிரதிகள். (கூ0)

[இதுவும் அநுமான் சென்றமையைக் கூறும்.]

கூக. பனிரண்டியோசனைபடர்ந்தமெய்யினன்
பின்னிரண்டனையகுண்டலங்கள்வில்லிடத்
துனிருடாலந்திடதுரிதகதிகினன்
பொனைடுகிரிகளிபாற்பொலிதகிதாளினன்.

(இ - ள்) நெடும் பொன் கிரிகள் போல் பொலிந்த தோளினன்-நீண்ட பொனமயமான மலைகள் [மேருமலையிரண்டு உண்டானல் அவை] போல விளங்குகின்ற தோள்களையுடையவனை அநுமான், பன்னிரண்டு யோசனை படர்ந்த மெய்யினன் - பன்னிரண்டு யோசனைதூரம் வளர்ந்த சரீரத்தை யுடையவனுய்,—பின இரண்டு அனைய குண்டலங்கள் வில் இட - (தன காதுகளிலணிந்துள்ள) இரண்டுமினனற்கொடிபோன்ற குண்டலம் இரண்டு ஒளியை வீசுவதனல், தன இருள தொலைந்திட - நெருங்கிய இருள் விலகி யொழிய, துரிதத்தி எதினன் - விரைவாகச் சென்றான்; (எ - று.)

அநுமான் பெருவடிவமெடுத்துத் தனது குண்டலங்கள் விட்டுவிட்டுப் பிரகாசிப்பதனல் இடையிடையே இருள் இரிந்தோட அக்குகையினுட்புறத்திற் சென்றன னென்க. அனுமான் சென்றவகையை வேறுவகையாக விவரித்துக்கூறியதனல், இச்செய்யுள் கீழ்க்கவியோடு கூறியது கூறலாகாதென்க. அநுமான் தான் எண்ணியபடியெலலாம் உருவமெடுக்கவல்ல வல்லமை

யுடையா னெண்பதை "பிறியாவறத்தினநுமான் வளர்ச்சி பெருமேருவிற் பெரியனுஞ், சிறிதாயொடுங்குமெனின் மேனியற்பவணுவாணகிற் சிறியனு, மூறுகாரணத்தினலவாமுருக்கொளயர்வீர" என்ற ஒட்டக்கூத்தருத்தர காண்டச்செய்யுளாலும் உணரலாம். அக்குகையினுட்புறத்தில் அரக்கரேனும் கொடுவிலங்குகளேனும் இருப்பின தனது உருவத்தைக் கண்டே அச்சங் கொள்ளவேண்டுமென்று கருதி, அநுமான் பேருருவங்கொண்டன னென்னலாம். "காஞ்சகாத்ரி கமநீய விக்ரஹம் [மேருமலைபோல அழகிய சரீர முடையான்]" என்ற அநுமான்ஜதிக்குப் பொருந்துதலால், 'பொன்னெடுங் கிரியெனப் பொலிந்த மேனியான்' என்ற பாடம் ஏற்கும்.

' 'பரந்தமெய்யினன்,' 'தருவியேகினன்,' 'கிரியென,' 'பொன்னெடுங் கிரிகொ' என்று பாடாந்தரங்கள். (கூக)

[அநுமான் முதலிய வாநாவீரர் அங்கு நகரமொன்றைக் காணுதல்.]

கூஉ. கண்டனர்கடிநகர்கமலத்தொண்கதிர்
மண்டலமறைநதுறைநதண்ணியமாண்பது
விண்டலநாணுறவிளங்குகின்றது
புண்டரிகத்தவள்வதனம்போன்றது.

(இ - ள்.) (வானரவீரர்), கடி நகர் கண்டனர்-(அப்பிலத்தினுட்புறத்தில்) சிறந்த நகரமொன்றைக் கண்டாராகள்; (அது), கமலத்து ஒள் கதிர் மண்டலம் மறைந்து உறைந்து அனைய மாண்பது - தாமரையைமலரசெய்யும் ஒள்ளிய கிரணங்களையுடைய சூரியமண்டலமானது அங்குவந்து மறைந்து வசித்தாற் போன்ற பெருமையையுடையது; விண் தலம நாண உற விளங்குகின்றது - வானத்திலுள்ள சுவர்க்கலோகமும் வெளுக்கும்படி (அதனினுஞ் சிறப்பாகப்) பிரகாசிக்கின்றது; புண்டரிகத்தவள் வதனம போன்றது - செந்தாமரைமலரில் வாழ்பவளான இலக்குமியின் முகத்தை ஒத்தது; (எ - று)

பிலத்தினுள் இருந்த அந்த நகரமானது மிகவொளியுடைமையால் மறைந்துள்ளதொரு சூரியமண்டலத்தைப் போன்றும், செல்வச்சிறப்பினாலும பொன்னிறமான பொருள்களையுடைமையாலும் சுவர்க்கலோகமும் நாணுமாறு பொலிவுபெற்றும், மிக்க அழகுடைமையால் லக்ஷ்மியின் முகத்தை ஒத்தது என்றுமிற் றெனக. சூரியனைக்கண்டமாத்திரத்தில தாமரைமலர்தல இயல்பாதலால், அவனை 'கமலத்தொண்கதிர மண்டலம்' என்றார. கடி - பலபொருள் குறிக்கும் ஓர் உரிச்சொல்.

'கண்டனன,' 'கானதுதொண்கதிர,' 'கருணையொண்கதிர்,' 'புண்டரி கத்தினள்' என்று பிரதிபேதம். (கூஉ)

[இதுமுதல் ஐந்துகவிகள் - அந்நகரின் வருணனை]

கூக. கற்பகக்கானதுகமலக்காடது
பொற்பெருங்கோபுரப்புரிசைபுக்கது
வற்புதமமருமெய்தலாவது
சிற்பியாமயன்மனமவருந்திச்செய்தது.

(இ - ள்.) (அந்நகரம்),—கற்பகம் கானது - கற்பகவிருக்ஷம்போன்ற (பொன்மயமான) மரங்களையுடையது; கமலம் காடது - தாமரைமலர்த்தொகுதியை (யுடைய நீர்நிலையை) யுடையது; பொன பெருங்கோபுரம் புரிசை புக்கது - பொன்னினாலான பெரிய கோபுரங்களையுடைய மதில்களின் பெருந்தப்பெற்றது; அமரரும அற்புதம எய்தல ஆவது - தேவர்களும் (கண்டு) வியப்படையக்கூடியது; சிற்பி ஆம் மயன மனம வருந்தி செய்தது - அசுரசிற்பியாகிய மயனென்பவன தனதுமனத்தினுல் சிரமப்பட்டு நிருமித்தது; (எ-று.)

பொன்மயமான மரங்களையுடைய தென்பதா 'கற்பகக்கானது' என்றும், பொன்னுலகத்தில் வாழ்கின்ற தேவர்களும் கண்டு வியப்படையுமாறு தோற்றஞ் சிறந்திருள்ள தென்பதா 'அற்புதமமாருமெய்தலாவது' என்றும், இந்நகரம் அசுரசிற்பியாகிய மயனுல் நிருமிக்கப்பட்ட தென்பதா 'சிற்பியாமயனமனம் வருந்திச்செய்தது' எனறுங் கூறினார். கான், காடு என்பன - தொகுதியென்னும் பொருளில் வந்தன. புக்கதிவற்புதம் - குற்றியலுகரம் கெடாமல் உடம்படுமெய் பெற்றது.

'புரிசைகிடியது,' 'அற்புததமமரும்,' 'அற்புதவமரரும்,' 'சிறபமுமயன்,' சிறபியாமயனமனன' எனறு பிரதிபேதம். (கூ)

கூச. இருநிலமகளமுமிணையிலாதது
மருநிமணியினிறபொன்னின்மண்ணினி
லமரபதகரிதழுசுடரவையின்றுயினு
முருகுதருபரகிதாளிபநிற்பது.

(இ - ள்.) (நூறாயிரம் அக்கடிநகர),—இந்திரன் நகரமும் இணை இலாதது - பிதேவேந்திரனுடைய நகரமாகிய அமராவதியும (தனகு) ஒப்பாகப் பெறாது; அருநிமணியினிறபொன்னின் மண்ணினில் இனறு ஆயினும் - ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற சூரியசந்திராகளாகிய இருசுடர்களினொளியும் (அந்நகரத்தைத்) தமபால் பிரகாசிக்கின்றனவல்ல வென்றாலும்,—மந்திரம் மணிபினில பிரகாசனன - (அந்நகரத்தில்) மாளிகைகளின் இரத்தினங்களினாலும பொன்னினாலுமான, உந்த அரும இருள நீரம்பி ஒளிர நிறபது - நீங்குதற்கு அரிய வேரிருளானும அடியோடு ஒழிதற்கு பிரகாசிக்கின்றது; (எ-று.)

நூறாயிரத்தின் றுட்புறத்திலுள்ள அந்நகரம், சூரியசந்திரர்களினொளியைப்பெறுதற்கு இடமில்லையாயினும், தன்னிடத்து நிரம்பியுள்ள மாளிகைகளின இரத்தினங்களினொளியும பொன்னினொளியும இருளையொழித்து விளங்குமென்பதாம. சுடரவை, அவை - பகுதிப்பொருள விகுதி. உந்தரும் - வினையெச்சத்தின அகாவீறு தொகுத்தல; உந்து அரும எனறு பிரிதது, உந்து எனபதை - முதனிலைத் தொழிற்பெய ரெனினுமாம்.

'இந்திரநகரினுங்கிலாதன,' 'அநதரத்தவிராசுடா,' 'அந்தரத்திழிசுடர்,' 'ஒளிருங்கின்றது,' 'ஒளிரகினறது' எனறு பிரதிபேதம. (கூ)

கூடு. புனிபுகழ்ச்சென்னிபரமலன்மிரள்புகழ்
கவிகடமினையெனகனகராசியுஞ
சவியுடைதனுசுமென்சாதுமாலையு
மணிரிழைக்குப்பையுமளவிலாதது.

(இ - ன்.) (மற்றும் அக்கடிகர்),—புலி புகழ் சென்னி பேர் அமலன் தோள் புகழ் கவிகன் தம் மனை என - உலகத்தாராற் புகழப்படுகின்ற குலோத்துங்கசோழனுடைய பெருமைபெற்ற குற்றமற்ற அரசனது தோள்வலியைப் புகழ்ந்தபாடிய புலவர்களது வீடுகள்போல, கனக ராசியும் - பொன்குவியலும், சவி உடை தூசும் - ஒளியையுடைய வஸ்திரங்களும், மெல் சாந்தும் - மென்மையான கலவைச்சந்தனமும், மாலையும் - மலர்மாலைகளும், அவிர் இழை குப்பையும் - விளங்குகின்ற ஆபரணங்களின் குவியல்களும், அளவு இலாதது - அளவில்லாமல் நிறையப்பெற்றது, (எ - று.)

கம்பர் தமது செய்ந்நன்றியறிவினால் தம்மையாதரித்த குலோத்துங்க சோழராஜனது பெருமையை, உபமானமுகத்தால் இச்செய்யுளிற் பாராட்டிகூறினரென்க. அவ்வரசன் தன்னை நாடிவந்து புகழ்ந்துபாடுகின்ற கவிஞர்களுக்கு உடனே பொற்குவிர் முதலியவற்றைக் கணக்கில்லாமற்கொடுக்கும் வண்மையுடையா னெனபதை விளக்கினர். சென்னி - தலை; அரசர்களுள தலைமைபெறறவ ஞதலால், சோழராஜனுக்கு இப்பெயர். வடமொழியில எழாம்வேற்றுமை விரியாகிய 'புவி' எனபது - தமிழில் முதல்வேற்றுமையாய நிறகும்; இங்கு, இச்சொல - இடவாகுபெயராய், புவியிலுள்ளாரையுணர்த்தநிற்று. மலம் - குறறம: அது இல்லாதவன - அமலன; வடமொழி. 'ராசி' எனபதை 'ராஜி' எனபதன விகாரமெனக் கொண்டால் வரிசையென்றும, 'ராஸி' எனபதன விகாரமெனக் கொண்டால் குவியலென்றும் பொருளாம.

'சென்னிபேரபயன,' 'சென்னியாதித்தன,' 'சென்னியோனமலன்,' 'சாந்தஞ் சுண்ணமும்,' 'அவிரமணிக் குப்பையும்' எனபன - பாடாந்தரங்கள். (கூடி)

கூசு. பயில்குரற்கிணகிணிபதத்தபாவைய
ரியல்புடைமைநதர்களிபக்கிலாமையாற்
றுயிலவுநோக்கவுந்துணையதன்றியு
முயிரிலாவோவியமென்னவொப்பது.

(இ - ன்.) (மற்றும் அக்கடிகர்),—பயில் குரல் கிண்கிணி பதத்த பாவையர் - ஒலிக்கின்ற ஓசையையுடைய சதங்கையை யணிந்த கால்களோடுகூடிய மகளிரும். இயல்பு உடை மைந்தர்கள் - நல்லொழுக்கமுடைய ஆடவரும் எனற இவர்களது, இயக்கு இலாமையால் - சஞ்சாரமில்லாமையாலே,—துயிலவும் நோக்கவும் துணையது அன்றியும் - நிதானிரைசெய்யவும் காணவும் வல்லமையுடையதாகாமலும், உயிர் இலா - உயிரில்லாமலு மிருக்கின்ற, ஓவியம் என்ன - சித்திரத்தைப் போன்றதென்று சொல்வதற்கு, ஒப்பது - தகுதியாயிருக்கினறது; (எ - று.)

மிகவும் வல்லமை பொருந்தியவனுல் வரையப்பட்ட சித்திரம் மற்றெல்வாற்றானும் குறைவின்றியிருப்பினும் உணர்ச்சிக்குக் காரணமான உயிரில்லாமையாகிய ஒரு குறைவையுடையதாவது போல, பலவகைக் காட்சிகளும் நிரம்பப்பெற்ற இக்நகரம் வேறுவகையாற் குறைபாடொன்றும் இன்றியிருப்

பினும் தன்காட்சிகளைக் கண்டு நுகரும் மகளிரையும் ஆட்வரையும் பெற்றி லாமையாகிய ஒரு குறைவைக் கொண்டுள்ள தென்றவாறு. கிண்கிணி - கிண் கிணென ஒலிப்பதென்று காரணப்பொருள். பாவையர் - சித்திரப்பிரதிமை போன்றவர்.

'பாந்தபாவையர்,' 'பாதப்பாவையர்,' 'பரடற்பாவையர்,' 'மைந்தரொன்றி வரிலாமையால்,' 'மைந்தரென்றியகலிலாமையால்,' 'துயில்வுறு நாட்டமுக் குடிப்பதொன்றிலா' என்பன பிரதிபேதம். (கூசு)

கூஎ. அமிழ்துலை யயினிலைய யடுதத வுண்டியுந
தமிழ்நிகர் நறவமுந தனிததண் டீடறலு
மிமிழ்களிப் பிறக்குமும பிறவு மின்னன
கமழ்வுறத தேதான்றிய கணகதில் கொட்பது.

(இ - ள்.) (மேலும் அக்கடிநகர),—அமிழ்தி உலை அயினியை அடுதத உண்டியும - அமிருததத்தையும் வருத்துகின்ற [தேவாமிருதத்தினும் இனிய] சோறு முதலிய உணவுப்பொருளகளும், தமிழ் நிகர் நறவமும - தமிழ்ப் பாவைனயை யொதத தேனும், தனி தண டீறலும் - ஒப்பறற குளிர்ந்த மது வும், இமிழ் கனி பிறகுமும - இனிய பழங்களின திரளும், இனனன பிற வும் - இவைபோலவன மறறை யுணவுபபொருளகளும, கமழ்வு உற தோன் றிய - நறுமணம் வீசுமாறு நிறைந்துள்ள, கணகு இல் கொட்பது - எல்லை யில்லாத பெருமையுடையது; (எ - று.)

உண்ணுதறகு இனிய பலவகைப்பண்டங்களும் நிறைந்துள்ளது அக்கடி நகரெனக. அயினி-சோறு. கவி தமகருகுள்ள பாஷாபிமானததால் நறவத்துக குத் தமிழை உவமைகூறினர். பிறகுமம - வீங்குவது என மூலகருக் காரணப்பெயர; இங்கு, இச்சொல்-இலக்கணையால, பெருக்திரை யுணர்த்திற்று. 'தோன்றிய' எனனும பெயரெச்சம், 'கொட்பது' என்னுன குறிப்பு முற்றின் முதனிலையாகிய 'கொட்பு' எனறதைக் கொண்டு முடியும்.

'அமிழ்துலைவாயினவடுதத', 'தணிதண்டேறலும,' 'தெளிதண்டேற லும்,' கமழ்வுறுதேனகிய' எனபன பிரதிபேதம். (கூஎ)

வேறு.

[வாநரவீரர்கள் அந்நகரத்தினுட் புகுதல்.]

கூஅ. கன்னிநெடு மாநகர மன்னதெதிர்கண்டா
ரிநநகர மாமிகலி ராவணனு தூரென்
றுன்னியுரை யாடினரு வநதனர்வி யநதார்
பொன்னினெடு வாயிலத னூடினிது புக்கார்.

(இ - ள்.) (அநுமான் முதலிய வானரவீரர்கள),—அன்னது கன்னி நெடி மா நகரம் - அததன்மையதாகிய அழிவில்லாத மிகப்பெரிய பட்ட ணத்தை, எதிர் கண்டார் - நேரிற்கண்டவர்களாய்,—இ நகரம் இகல் இராவண னது ஊர் ஆம் எனறு உன்னி உரை ஆடினர் - 'இந்நகரமானது பகைமை யையுடைய இராவணனது நகரமாகும்' என்று நினைத்து(த் தமக்குள் ஒருவ

ரோடொருவர்) பேசிக்கொண்டு, உவந்தனர் வியந்தார் - மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஒருங்கேகொண்டவர்களாய், பொன்னின் நெடு வரயில் அதனூடு இனிது புக்கார் - பொன்மயமான நீண்ட அந்நகரத்து வாயிலில் சுகமாக நுழைந்தார்கள்; (எ - து.)

அந்நகரத்தை வானரவீரர்கள் கண்டமாத்திரத்தில் இராவணனது இலங்கையென்று நினைத்து உடனே சீதையைக் காணலாமென்ற உவப்போடு உள்ளே புகுந்தன ரென்க. கன்னி - அழிவில்லாமை, உறுதி; இனி, கன்னி நகரம் - சுயம்பிரபையின நகரம் எனினுமாம். வாயில் - இல்வாய் என்பதன் இலக்கணப்போலி.

'இந்நகரமிதுகள்,' 'பொன்னினெடுவாசலதனூடு,' 'நனிபுக்கார்' என்று பிரதிபேதம்.

இது முதல் இப்படலம முடியுமளவும் முப்பத்தேழு கவிகள் - பெரும் பாலும் ஈற்றுச்சீரொனது மாச்சீரும், மற்றை மூன்றும காய்ச்சீர்களு மாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள் (கூ.அ)

[வானரவீரர்கள் அங்குத் தேடுதல்.]

கூ. புக்கநகரத்தினிதுநாடினர்புகுந்தார்
மக்கள்கடைதேவர்தலைவானுலகின்வையத
தொக்கவுறைவோருருவமோவியமலான்மற்
றெக்குறியினுள்ளவுமெதிர்ந்திலர்திரிந்தார்.

(இ - ள்.) (வானரவீராகள்),—புக்க நகரத்து - (தாங்கள) நுழைந்து சென்ற அந்நகரத்தில், இனிது நாடினர் புகுந்தார் - நன்றாகத் தேடத தொடங்கினவர்களாய்,—தேவர் தலை மக்கள கடை வான் உலகின் வையத்து ஒக்க உறைவோர் உருவம - தேவர்கள் முதலாக மனிதர்கள் ஈறாக வானுல கத்திலும் நிலவுலகத்திலும் பொருந்திவாழ்கின்றவர்களின உருவங்கள், ஓவி யம் அலால் - சித்திரரூபமாக அங்கு உள்ளனவல்லாமல், மற்று எ குறியின் உள்ளவும் - வேறே உண்மையான வடிவமுடைய எப்பொருளகளையும், எதிர்ந்திலர் - நேரே காணப்பெறாதவர்களாய், திரிந்தார் - (அந்நகரமுழுதும்) திரிந்தார்கள்; (எ - து.)

தேவர் மனிதர் முதலியோரது உருவங்கள் சித்திரரூபமாகக் காணப் பட்டனவே யல்லாமல் மெய்ம்மையான வடிவதனையுடைய ஒரு பிராணி யாவது அந்நகரத்தில காணப்படவில்லை யென்றவாறு. தேவர்களே முதலாக வும் மனிதர்களைக் கடையாகவும் கூறியதனால், அசுரர் அரக்கர் முதலி யோரை இடைப்பட்டவராகக் கொள்க. மக்கள தேவர் எனற முறைக்கு ஏற்ப, 'வையம்' 'வானுலகு' எனறு நிறுத்தாது மாற்றிநிறுத்தியது, எதிர் நிரனிறை யென்ற பொருள்கோளின்பாற்படும். குறி - குறிக்கப்படுவது; எனவே, பிராணியாம்.

'நனிநாடினர்,' 'இனிது நாடுதல்புரிந்தார்,' 'வானுலகின்வாழ்வார்' என்று பிரதிபேதம். (கூ.கூ)

[அந்நகரத்தின் தன்மை.]

சo. வாவியுளபொய்கையுளவாசமணநாறுங்
காவுமுளகாவிவிழியார்மொழிகளென்னக்
கூவமிளமென்குயில்கள்பூவைகிளிகோலத்
தூவிமடவன்னமுளதோகையர்களில்லே.

(இ - ள்.) (அந்நகரத்தில்),—வாவி உள - தடைவாவிகள் உள்ளன; பொய்கை உள - தடாகங்கள் உள்ளன; வாசம் மணம் நாறும் காவும் உள - திவ்வியபரிமளம்வீசுகின்ற சோலைகளும் உள்ளன; காவி விழியார மொழிகள் என்ன கூவம் - கருங்குவளைமலர்போன்ற கண்களையுடைய மகளிரது இன்சொற்கள்போலக் கூவுகின்ற, இள மெல் குயில்கள் - இளமையான மெல்லிய குயில்களும், பூவை - காகணவாய்ப்பறவைகளும், கிளி - கிளிகளும், கோலம் தூவி மடம் அன்னம் - அழகிய இறகுகளையுடைய இனமையான அன்னப்பறவைகளும், உள - உள்ளன; தோகையர்கள் இல்லே - (இவற்றால் இன்பமடைதற்குரிய) மகளிர் மாத்திரம் (அங்கு) இல்லே. (எ - று.)

மகளிர் புனல்விளையாட்டிற்குரிய வாவியும், பொய்கையும், பூக்கொய்து விளையாடற்கு உரிய பூஞ்சோலைகளும், கொஞ்சிப்பழகியும் மென்னடை பயின்றும் போதுபோக்குதற்கு உரிய குயில் முதலிய பறவைகளும் அங்கு சிறம்பியிருப்பினும் இவர்களைகண்டு மகிழ்தற்கு உரிய மகளிர்மாத்திரம் இல்லே யென்பதாம். கூவம எனனும பெயரெச்சம, குயில்கள் பூவை கிளி என்றவற்றோடு இயையும். வாச மணம் - ஒரு பொருட் பன்மொழி. தோகை. மயிலிறகு; இனையாகுபெயராய், மயிலையுணர்த்தும்; அதுபோனற சாயலையுடைய மகளிர் - தோகையர். 'தூவிமடவனனமுள தோகைசுவடில்லே' என்ற பாடத்திற்கு, அங்கு அன்னம் முதலிய எலலாப் பொருள்களும் உள்ளன; (இலையன்றி), தாம்தேடப்புகுந்த மயில்போன்ற சாயலையுடைய சீதையின் வடிவம் அங்குக் காணப்படவில்லே யெனப் பொருள் காண்க

'வாசமலாநாறும்,' 'காவுமுளவாறுமுளகாவிவிழியாரில்,' 'காவிவிழியார் கண்மொழியெனன,' 'அனனமிலையுளன சுவடில்லே' எனற பாடாந்தரங்கள். (சo)

[இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்: அக்குகைச்துள் வாநதர்கள் தீகைத்ததைக் கூறும்.]

சக. ஆயநகரதினியல்புள் ளுறவறிந்தார்
மாயைகொலெனகநமற்றுநினைவுற்றார்
தீயபிலனுட்பிறவிதானுறவென்றே
தூயதுறக்கமெனநெஞ்சுதுணிவுற்றார்.

(இ - ள்.) (வானரவீரர்கள்),—ஆய நகரத்தின் இயல்பு உன்ன அறிந்தார் - அந்நகரத்தினது தனமையை உட்புறத்தச்சென்று அறிந்தவர்களாய், 'மாயைகொல் என கருதி - மாயைத் தோற்றமோ வென்று முதலில் நினைத்து, (பின்பு), தீய பிலனுள் பிறவி சென்ற (என) - ('நமக்குக்) கொடிய பாதாளத்துட் பிறப்பு வந்தது' என்று, மற்று நினைவு உற்றார் - மற்றொரு

நினைவுடையராய்,' (பின்னர்), 'இது ஒன்றே - இக்வனம் கருதியது ஓர் கருத்தோ? தூயது அறக்கம் - இது பரிசுத்த முடையதாகிய சுவர்க்க லோகமே,' என - என்று, நெஞ்சு அணிவற்றூர் - மனத்தில் நிச்சயித்துக் கொண்டார்கள்; (எ - று.)

மண்ணுலகில் பொன்மயமான தருக்களும் சித்திரரூபங்களும் பல வகைப்பறவைகளும் பொன்னினுலும் இரத்தினங்களினுலும் இயன்ற மாளி கைகளும் கிரம்பியிருக்கவும் ஆடவர் மகளிர மாத்திரம் காணப்படாதிருந்த மையால், அதுகண்ட வானரவீரர்கள் பேரொளி நிறைந்து பொன்மயமான தருக்கள் முதலியவற்றை பெற்றிருக்கின்ற அந்நகரத்திற் புகுந்து கண்ட போது முதலில் மாயையோவெனறு பிரமித்து, பிறகு சிறிதுதேறிப் பூமியி னின்றும் இறங்கிவந்ததுபற்றி இது பாதாளமாயிருக்க வேண்டுமென்று நினைத்து, அப்பால் பொன்மயமான தருக்கள் முதலியவற்றை யுடைமையால், பாதாளமென்ற கருத்தை மறுத்து இது சுவர்க்கமென்றே மனந்துணிந்தன ரென்பதாம். மாயையாவது - உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவும் காட்டுகின்ற விசித்திரசக்தி. 'என' என்னும் வினையெச்சம், 'சென்ற' என்பதனோடு கூட்டப்பட்டது உறு=உற்று. உள்ளூர அறிந்தார் - நன்றாக அறிந்தார் என்றுமாம்

'மற்று நினைகின்றார்,' 'சென்றவிவை யொன்றே,' 'சென்ற விது வொன்றே,' 'சென்றதென நின்றார்,' 'சென்ற வதுவன்றே,' 'தூயன அறக் கம்' என்று பாடமந்தரங்கள். (சக)

சஉ. இறந்திலமிதற்குரியதெண்ணியிலமேது
மறந்திலமியிர்ப்பிறைடமைப்புளமயக்கம
பிறந்தவர்செயற் தூரியசெய்தல்பிழையின்றூற்
றிறந்தெரிவதெனனெனவிசைத்தனர்நிகைத்தார்.

(இ - ள்.) '(இனி நாம் சுவர்க்கத்தையடைந்துவிட்டோ மென்போ மானுல்),—இறந்திலம் - (நாம்) இறக்கவில்லையே; இதற்கு உரியது எண்ணி இலம் - இந்தச்சுவர்க்கலோகத்தை யடைதற்கு உரிய தொழில்வகையை ஆலோசித்துச்செய்யவும் இல்லையே; ஏதும் மறந்திலம்-(முன்நிகழ்ந்த) தை யும் மறந்தோமில்லையே; உயிர்ப்பிறைடு இமைப்பு உள - சந்தேகமும் இமை கொட்டுதலும் (நமக்கு) உள்ளன; இன்று மயக்கம் பிறந்தவர் செயற்கு உரிய செய்தல் பிழை - இப்பொழுது மயக்கமடைந்தவர் செய்தற்கு உரிய தொழி லைச் செய்தலும் (நமக்குப்) பிழையாகும்; (இங்ஙனமாயின்), இறம் தெரிவது என் - (இப்போது நமக்குநேர்ந்துள்ள) தன்மையைப்பற்றி ஆலோசித்துத் தெளிவது எவ்வாறோ?' என - என்று, இசைத்தனர் - (வானரவீரர்கள் ஒருவரோடொருவர்) கூறியவர்களாய், நிகைத்தார் - பிரமித்து நின்றார்கள் (எ - று.)—ஆல் - சற்றசை.

கீழ்ச் சுவர்க்கமடைந்தவர்களாகத் தம்மைத் துணிந்த வானரவீரர்கள்; முன்னைய உடலிறைடு இருத்தலினுலும், தாம் சுவர்க்கத்தைப் பெறுதற்கு உரிய சாதனத்தைச் செய்யாமையாலும், சோபிராட்டியைத்தேடுதல் முத

லிய முன்னிய எண்ணங்கள் தொடர்ச்சியாக உண்டாவதனாலும், தெளிவின்றி யிருத்தலும் கண்ணிமைத்தலும் மதிமயக்கமும் தமக்கு நேர்ந்திருத்தலினாலும், தாம் சுவர்க்கத்தை யடையவில்லையெனத் தெளிந்தன ரென்பது, முன் மூன்றடிகளின் பொருளை. இவ்வாறான தன்மைகள் அறக்கமடைந்தவர்க்குத் தோன்றா வென்க இவ்வாறு அறக்க மடையவில்லையெனத் தெளிந்து தெளிந்து, வானரவீரர்கள் தமது முன்னியமனநிலையில் மாறுட்டம் பிறந்திருத்தலால், 'இராம தெரிவது என' எனபாராயினர். 'அறககம் பிறந்தவர் செயற்குரிய பீடுமிலதெனவே' என்ற பாடத்திற்கு - சுவர்க்கமடைந்தவர்கள் செய்தற்குரிய பெருமையான செயலும் நம்மிடத்தில்லை; இது என னியப்பு! என்று பொருளாம்.

'மறந்திலமனத்தியரம்விட்டிலர்க்குருதம்,' 'அறந்திலமவியர்பிணைடிமைப்பிலதாகம,' 'பிறந்தவர்செயற்குரியசெயதல பிழையெனரூர்,' 'அறக்கம், பிறந்தவர்செயற்குரியசெய்தல் பிழையோனறே' என்று பாடாந்தரங்கள். (சஉ)

[அப்போது ஜாம்பவான் கலங்கிக்கூறுதல்.]

சஎ. சாம்பனவனிஞன்றுரைசெய்வானெழுசலதாற்
காம்பனைய நீளினியையொளிதபடுகள்வ
னைபுகவமைதகதிபொறிநனறுமுடிவின்ரு
ளீலமபலினி மேலெவிதியான்முடியுமென்றான்.

(இ - ள்.) சாம்பன் அவன ஒனறு உரைசெய்வான் - (அப்போது வானர வீரர்களை நோக்கி) ஜாம்பவான ஒனறுகூறுத தொடங்கினன்:—'எழு சலத்தால் காம்பு அனைய நீளினியை ஒளிதத படுகளவன - (தனனிடத்தி இயல் பாகத) தோன்றியுளள வஞ்சனையினால் ஆளமூங்கிலையொதத தோள்களை யுடைய சீதாபிராட்டியைக கவர்ந்துசென்ற மறைதத அவைதத பெருக்கிருடனை இராவணன, நாம புக அமைதத - (அச்சீதையைத தேடிவருகின்ற) நாம அகப்பட்டுத் தவிகுமாறு வரபடுத்தினைதத, பொறி - யந்திரம், நன்று - நன்றாயிருகின்றது! முடிவு இனறு - (இதறகு) ஒரு முடிவுமில்லை; எம்பல் இனி மேலும் வித்தியால முடியும - (இதுவரையிலும் நமக்கு உண்டாயிருந்த) மூலகம் இனிமேலும் முனனேறுவினையால ஒழிந்துவிடும்,' என்றன - என்று வருந்திக்கூறினன; (எ - று.)—ஆல - அறறசை.

'சீதையைக கவர்ந்துசென்ற இராவணன் அச்சீதையைத் தேடுபவர்கள் தன்னிடதது வராதவணணம் இடைவழியிலே யகப்பட்டு வீழ்ந்தொழியும் படி வஞ்சனையாற்செயத படுகுழியாகும இது; நாம் இதிலே அகப்பட்டுக் கொண்டபடியால், இனி இதில் அழிந்தொழிவதே நமது விதி' என்று ஜாம்பவான் மனமகொந்து கூறின னெனக. சலம் - கீலம், வடசொல்; வஞ்சனையென்று பொருள். எழுசலத்தால உரைசெய்வான என்று இயைத்து-(தமது பகைவனாகிய இராவணனே நினைததலினால்) மூண்டெழுகின்ற கோபத்தோடு சொல்லத்தொடங்கினனெனறு பொருள் கூறுவாருமுளர். மகளிர் தோளுக்கு இனமூங்கில் - திரட்சியிலும நீட்சியிலும் செய்ப்பிலும் உவமை

யாம். படுகன்வண்ணம்—'படு' - மிக்க கொடுமையை யுணர்த்துவதோர் தமிழுப சருக்கம்; 'படுபாழ்,' 'படுபாவி' என்னு மிடங்களிலும் இது காண்க. பொறி நன்று - பிறகுறிப்பு 'முடிவின்று' என்பது - இதனிலிருந்து நாம் தப்ப வழியில்லை யென்ற குறிப்பு. மேலெழிதி - முற்பவத்திற்செய்த வினை.

'எழுதவத்தால்,' 'தோளினையெடுத்த,' 'நாம் புகுதவைத்தபிலன்று, என்று சிலபிரதிகள். (சஉ)

[அநுமான் ஜாம்பவானைத் தேற்றுதல்]

சச. இன்றுபிலனீ கிடையினேறரிதெனிற்பார்
இன்றுசகரர்க்கதிகமாகிநணிசேறு
மன்றதெனின்வஞ்சனையரக்கரையடங்கக்
கொன்றெழுதுமஞ்சலெனமாருதிகொகித்தான்.

(இ - ன்.) (அந்த ஜாம்பவானை நோக்கி), மாருதி - அநுமான்,—'இன்று இடையின் பிலன் ஈது என்ற அரிது எனின் - இப்பொழுது இடைவழியி லுள்ள இந்தப் பிலத்தினின்று ஏறி அப்பாற்செல்லுதல் முடியாதென்றால்,—சகரர்க்கு அதிகம் ஆகி பார் இன்று நனி சேறும் - சகரபுத்திரரைப் பார்க்கி லும் மிக்க வல்லமையை யுடையவர்களாகிப் பூமியைத் தோண்டிக்கொண்டு (நாம்) அப்பாற் சுகமாகச் சென்றுவிடுவோம்; அது அன்று எனின் - அவ்வா றில்லையென்றால், வஞ்சனை அரக்கரை அடங்க கொன்று எழுதும் - இவ் வாறு வஞ்சனைசெய்த ராக்ஷஸர்களையெல்லாம் கொன்று மேலெழுந்து செல் வோம்; அஞ்சல் - சிறிதும அஞ்சவேண்டா,' என - என்ற, கொகிததான - கோபங்கொண்டு கூறினனை; (எ - று.)

சகரபுத்திரர்களைப்போலப் பூமியைத்தோண்டியாவது அரக்கர்களை யெல் லாம் அடியோடு அழித்து மேலெழுந்தாவது வெளிச் செல்வோம்: அஞ்ச வேண்டா என அநுமான் மனங்கலங்கிய ஜாம்பவானைத் தேற்றின னென்க மண்ணைதோண்டிப் பாதாளத்திற சென்றவரினும் மேற்சென்றவர் சிறந்த ராதலால், 'பாரின்று சகரர்க்குதிகமாகி' எனப்பட்டது. 'வினைச்சொல் வேண்டியபொருளை விளைக்கும' எனற கொள்கையின்படி, நின்று என்ப தற்கு - தோண்டியெனப் பொருள் கொள்ளப்பட்டது; நின்று - விழுங்கி யென்று பொருள் கூறுவாரு முளர்.

சகரபுத்திரர் பூமியைத் தோண்டிய வரலாறு :—சூரியகுலத்து உதித்த சகரமகாராஜன் தனது அறுபதினாயிரம் புதல்வரது சௌரியத்தைக் கண்டு 'அசுவமேதயாகஞ் செய்துமுடிக்கலாம்' என்று கருத்துக்கொண்டு அவ்வண ணமே தொடங்கி, பூப்பிரதக்ஷிணஞ் செய்துமாறு அவ்வேள்வியில் விடுத்த குதிரையைத் தேவேந்திரன பாதாளலோகத்தில் தவஞ்செய்திருந்த கபில முனிவ ரிருந்தவிடத்தி லொளித்தனனை, குதிரைகெட்டமையைத் தனது பௌத்திரனை அம்சுமானுல் உணர்ந்த சகரமகாராஜன தனது அறுபதி னாயிரங் குமாரரையும் அக்குதிரையைத் தேடிக்கொணறுமாறு ஏவ, அவர்கள் பூமி முழுவதும் தேடியும காணமையால் பூமியைத் தோண்டிக்கொண்டு பாதாளலோகதிற் சென்று கபிலமுனிவ ரிருந்தவிடத்தில் அக்குதிரையைக்

கண்டு அம்முனிவனே அதனை யொளித்தானென்று கொண்டு அம்முனிவனைச் சீறி வைது கெருகியதனால் அவனது கண்ணின் கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பரா யொழிந்தனராக, அச்செய்தியை யுணர்ந்த சகரமகாராஜன் அம்சுமானால் அக்குதிரையைக் கொணரப்பெறாமுத் தான தொடங்கிய யாகத்தை முடித்தன னென்பதாம். பார்கினறு சகரர்க்குதிகமாகி ஙனிசேறும்- "சகரர்கள் வடவையின்மறுகி, நாட்டம் வெங்கனல் பொழிதாகானிலந்தடவித், தோட்டுறுங்கினா புவியிலப்பாதலநதோனற," "நூறுயோசனையகலமுமாழமு நுடங்கக், கூறுசெய்தனரென்பரால்" என்னுர் பாலகாண்டத்தும். (சாகரர்களால் தோண்டப்பட்ட இடமே, பின்பு கங்கை முதலியவற்றின் நீரினால் நிரம்பப்பெற்றுச் சாகரமெனப் பெயாபெறுவதாயிற்று.) (சச)

[வானரவீரர்கள் சுயம்பிரபையைக் காணுதல்.]

சஙி. மற்றவருமற்றதுமனக்கொளவலிததா
ருற்றனர்புரத்திடையவ்வொண்சுடரினுள்ளோர்
கற்றவமனிதமுமுருநண்ணியொளிபெற்ற
கறைவிரிபொறசடை யினளையெதிர்கண்டார்.

(இ - ள.) மற்றவரும் - (அங்கதனமுதலிய) மறறை வானரவீர்களும், அது மனம் கொள - (அநுமான்சொல்லிய) அவ்வார்தகை தமது மனத்திற் பதியவே, வலிதாக - (அவ்வாறேசெய்ய) உறுதிகொண்டவாகளாய், புரத்தி இடை உறறனர - (பாவரும அந்தப்) பட்டணதினிடையே சென்று, அ ஒள சுடரினுள - பிரக ஒளியையுடைய - (அப்பட்டணதின்) நடுவிடத்தில், நல் தவம அனைதமும ஓர உரு நண்ணி ஒளிபெற்ற கற்றை விரி பொன் சடையினளை - நிறைநததவம் முழுவதும் ஒரு பெண்ணுருவத்தைப் பெற்றுற் போன்று ஒளிறைந்த தொகுதியாகவிரிந்த அழகிய ஜடையையுடையவளான சுயம்பிரபையை, எதிர் கணடார் - பிரதியட்சமாகப் பாத்தார்கள்; (எ - று.)

அந்தப் பட்டணதினிடையில் தவமே ஒருருவெடுத்து வந்தாற்போன்ற சுயம்பிரபையை வானரவீரர்கள கணடன ரெனபதாம. பொற்சடையினளை எனபதற்கு - பொனனிறமான ஜடையையுடையவளை யெனினுமாம். சுயம்பிரபையின வரலாறு, மேலே கூறப்படும். மற்று - அசை.

'இற்றது செயறகரிய தென்றுடனெழுந்தா, ருற்றனர் புரத்தினிடையொண்சுடரினுளளோர்' எனறு சில பிரதிகளில் இரணடு மூனறும் அடிகள காணப்படுகின்றன. (சஙி)

[இதுமுதல் நான்குகவிகள்-சுயம்பிரபையின் தன்மையைக் கூறுவன.]

சீசு. மருங்கலசவற்கலிவரிதுவரிவாளம்
பொருங்கலசமொக்குமுலைமாசுபுடைபூசிப்
பெருங்கலிமதித்திருமுகதளபிறழ்செங்கேழ்
கருங்கயல்களிற்பிறழ்கண்மூக்கினுநிகாண.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர.

(இ - ன்.) பெருங்கலி மதி திரு முகததன - பெருமையெற்ற பதினாறு கலைகளும் நிரம்பிய பூரணசந்திரனையொத்த அழகிய முகத்தை யுடையவ

ளாகிய சுயம்பிரபை,—மருங்கு அலச வற்கலை வரிந்து - இடையிலே அலையு மாறு மரவுரியைத்தரித்தும், வரி வாளம் பொரும் கலசம் ஒக்கும் மூலை புடை மாசு பூசி - இரேகைகளையுடைய சக்கரவாகப் பறவையைப் போன்றனவும் பொற்கலசங்களைப் போன்றனவுமாகிய தனங்களின்மேல மாசுபடியப்பெற் றும்,—பிறழ் செங் கேழ் கருங் கயல்களின பிரழ் கண் மூக்கின் நுதி காண - விளங்குகின்ற செந்நிறத்தை யுடையனவும் கருமைபான கயல்மீன்களை போலப் பிறழ்வனவுமான (தனது) கண்களிரண்டும் மூகுகின நுனியைக் கண்டு கொண்டிருக்கவும்,—(எ - று)—இச்செய்யுளிலுள்ள 'வரிந்து,' 'பூசி, 'காண' என்னும் வினையெச்சங்கள இரு - ஆவ கவியிலுள்ள 'இருந்தனள்' என்னும் வினைமுற்றைகொண்டு முடியும்.

சுயம்பிரபையானவள் மரவுரிதரித்து, ஸநாதஞ செய்தலுமின்றித் தவத் திலேயே மனத்தைச் செலுத்தி யிருந்தமையால் தனங்களில் மாசுபடியத், தனது கண்களின பார்வையை மூகுகினநுனியிற் செலுத்தியிருந்தன ளென் பதாம். ஜபஞ்செய்கையில் கண்விழிக்காப் பிறவிடங்களிற செலுத்தாது மூகுகின்நுனியிற் செலுத்த வேண்டுமென்பது, நூற்கொள்கை. அலச - அலைய எனபதன போலி. வற்கலை - வல்கலா என்ற வடசொல்லின் திரிபு; பூர்ஜமென்னும மரத்தினினறு உரிதசெடுக்கப்படும மெலலிய பட்டையாகிய ஆடை; இது, தவவேடததிறகு உரியது. வாளம - சகரவாளமென்னும் வட சொல்லின நாமைகதேசமே நாமகரஹணம. [நாமைகதேசமே நாமகரஹண மாவது - ஒருசொல் தனது ஒருபகுப்பைக கூறியமாதிரததால் அப்பெயர் முழுவதையும் தெரிவிப்பது.] கலை - பெரும்பாலும சந்திரகிரணததையே குறிக்கும்.

'வரிந்தமணிமான,' 'மணிவானம,' 'கயல்களிப்புறவு மூக்கினுநிகண் ணுள்' என்பன பாடாந்தரங்கள. (சுக)

சள. தேதாணியவல்குல்செறிகிணகதலிசெப்பு
மூருவினெடொப்புறவொடுக்கியுறவொல்கு
நேரிடைசலிப்பறதிமுதிதிமிரகொஙகைப்
பாரமுளொடுக்குறவுயிர்ப்பிடைபரிப்ப.

(இ - ள்.) தேர் அனைய அல்குல் - தேர்தட்டையொத்த அல்குலே, செறி திண்கதலி செப்பும் ஊருவினெடு - ஒனறோடொன்ற நெருங்கிய வலிய வாழைமரத்தைப்போனற தொடைகளோடு, ஒப்புறஒடுக்கி - ஒனறுகப் பொருந்துமாறு அடக்கிலைத்தும், உயிர்ப்பு இடை பரிப்ப - சுவாசத்தைப் பன்னஞ்செய்தலினாலே, உற ஒல்கும் நோ இடை சலிப்ப அற நிறுததி - மிகவும் அசைகின்ற நுண்ணிய இடையைச் சிறிதும் அசையாதபடி நிறுததி, திமிர் கொங்கை பாரம் உள் ஒடுக்கு உற - சாயாத தனபாரங்கள உள்ளே யொடுங்கவும்,—(எ - று.)—இச்செய்யுளிலுள்ள 'ஒடுகி,' 'ஒடுக்குற' என்ற எச்சங்களும் - இரு - ஆஞ்செய்யுளிலுள்ள 'இருந்தனள்' என்பதனையே கொண்டு முடியும்.

சுவாசபந்தனம், இடைசலிப்பறநிற்றற்கும் தனங்கள் ஒடுங்குதற்கும் காரணமாம். செப்பும் - உவமவுருபு. ஒடுக்குற - ஒடுங்குதலைப் பொருந்த,

இடைபரித்தல் - உட்புறத்திலேயே தங்குதல்; பந்தனஞ்செய்தல். 'உயிர்ப் பிடை பரிபப' எனறதனால், இப்படம் நயமான ஆசனமும் பிராணயாமம் பிரத்தி யாகாரம் தாரணை தியானம் சமாதி என்ற யோகத்தினுறுப்பு எட்டனுள், "உந்தியொடுபுணர்ந்த வீருவகையானும், தந்தாயக்கதந்தப்பூ வுளிகிலே" என்று கூறப்பட்டுள்ள பிராணயாயத்தையும் கூறினரென அறிக.

'ஊருவினெடுங்குறங்கெனத்' 'தாரமுளொடுகிய' என்று சிலபிர திகள். (சஎ)

சஅ. காமமையமலாக்குழல் வாரிப் பூமருவிப்போறெரி பூவலைவாய்ப் பூமருதத்த காமமுதலுறுபகை காரிபரவாசை காமமறிப்புலனுலலை வவிபிலத.

(இ - ள.) தாமரை மலருக்கு உவமையாகின்ற [illegible] தளிர் கை - தாமரை மலருக்கு உவமையாகின்ற [illegible] தளிர்போனற (தனது மெல்லிய) கைகளை, பூமருவி [illegible] நெரி நுகரும் பொருந்த - அழகு பொருந்திய [illegible] வும்,—காமம் முதல் [illegible] காமமுதலாகப் பொருந்திய உட்பகைகள் [illegible], [illegible] ஆசை யெனும் பெயரே பொழிலவும்,—புல [illegible] ஐவிதபோகங்களும் (தீவழி யிறசெலலாது) [illegible] பொருந்தவும், —(எ - று.)—"இருந்த ணன்" (கூ0) எனக.

சுயம்பிரபைபாலனவன் தானது [illegible] மேலும் இரண்டு தொடைகளின் மேல் வைத்துக்கொண்டு, உபபாதனை [illegible] மனததை யோகதத்திற் செலுதத்தியிருந்த [illegible] காமமுத லுற்ற பகை - காமம் குரோதம் லோபம் மோகம் [illegible] எனனும் அரிஷட்வர்க்கம்; இவை, உடலிலேயிருந்து [illegible] செலலவிடாது தடுத் தலைகொடுக்கின்ற செலுதத்தலால், 'பகை' எனபபடும். (காமமாவது - ஒரு பொருளைப்பெறவேணடுமென [illegible], குரோதமாவது - அது கிடை யாதவிடதது உண்டாகுஞ் சினம், லோபமாவது - அபபொருளைப் பெற்றே தீரவேண்டுமெனனும் மிகவிணவம்; மோகமாவது - அபபொருள் கிடையாத விடததுத் தீராவிணபம் மயக்கம்; மதமாவது - அபபொருளைப் பெற்றவிடத் தபப பிறகுமது மனகருவம். மாசரியமாவது - அதன மறறதிலுங் கண் தோன்றும் மனபரி தாரூயம்.) காமம் முதலுற்ற பகை காமம் வெகுளி மயக் கம் எனனுமரம். 'காமமுதலு [illegible] வாரவாசைநரமமறிய' என்பதனால் "பொய் கொலை களவு காமம் பெருவிணைசை, யிவைவகையைந்து மடகிய நியமம்" எனறுகூறபபட்டுள்ள நியமமு, 'புலனுலலிறிவுபுல்க' எனபதனால் "பொறியுணரா வெலலாம் புலதகின வமரமல், ஒருவழிப் படுப்பது தொலகவிலேப்புநமின" எனறு கூறப்பட்டுள்ள பிரதியாகாரமும் உரைக்கப் பட்டுள்ளவாறு காண்க. 'புலனுலல' எனற இவ்விடததில், கால் - தமிழுபசருக் கம். [உபசருகமாவது - யாதொன்றோ குமுனனினறு அவவினையின் பொ

குலே மாற்றியேனும், அப்பொருளேயே சிறப்பித்தேனும், அப்பொருளேயே தந்தேனும் வரும் ஒருவகையிடைச்சொல்.] முதலடி - எதிர்நிலேயணி.

'காமமழிய,' 'புலனின்லறிவுபுல்ல' என்று சில பிரதிகள். (சஅ)

சசஉ. நெறிந்துநிமிர்கற்றைநிறையோதிகெடுநீலஞ்
செறிந்தசடையுற்றதுதலத்தினெறிசெல்லப்
பறிந்துவினேபற்றறமனப்பெரியபாசம்
பிறிந்துபெயரக்கருணைகண்வழிபிறங்க.

(இ - ள.) நெறிந்து நிமிர் கற்றை நிறை நெடு நீலம் ஒதி - நெறிப்புக் கொண்டு நிமிர்ந்த தொகுதியாக நிறைந்த நீண்ட கருநிறமாகிய (தனது) கூந்தலானது, செறிந்த சடை உற்றது - நெருங்கிய சடையாகப் பொருந்திய தாய், தலத்தின நெறி செலல - பூமியினிடத்திற் புரளவும்,—வினே பறிந்து பற்றறஅற - இருவினேகளும் தன்னைவிட்டு அடியோடு பெயர்ந்தொழியவும், மனம் பெரிய பாசம் பிறிந்து பெயர - தனது மனத்தில் லுண்டாகக்கூடிய பெரியபாசபந்தமானது விலகியொழியவும், கருணே கண் வழி பிறங்க - அருளானது கண்களிலுண்டாகி விளங்கவும்,—(எ - று.)— "இருந்தனள்" (இo) என்க.

ஞானயோகத்தின் முன இருவினேகளும் காட்டுதற்கு முன்னர்ப் பஞ்சுதீய்போல ஒழியு மாதலால், 'வினேபறிந்து பற்றற' எனறார்; "பஞ்சினேயூழித்தீபோற்பலசெனமவிவிதவித்தாஞ், சஞ்சிதமெல்லாஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்குங் கிஞ்சிதாகாமியந்தானகிடாமல்விட்டுப்போகும்" எனறது காண்க. பாசம - சுறறத்தார் முதலியவிடத்துக் கயிறுபோல மனப் பிணிப்பையுண்டாக்கும் பற்று: இது, பாஸமபோலுதலால், பாச மெனப் பட்டது; உவமையாகுபெயர்: பாசம் - கயிறு. பிரிதலெனினும், பிறித லெனினும் ஒக்கும். அருளென்பது, கண்பார்வை சென்றவிடத்து உண டாவ தாதலால், 'கருணைகண்வழிபிறங்க' எனறார்; இதுபற்றியே, தயை கண்ணோட்ட மெனப்படுவது. யோகஞ்செய்வார்களுப் பூததயை இனறி யமையாத குணங்களு ளொனறாத லறிக.

'சோதிகெடுநீலம்,' 'சடையுறறனதவதத்தினெறிசெல்ல,' 'மனப் பெரிய பாவம்,' 'கண்வழிபிறக்க' என்று பாடாந்தாங்கள. (சக)

[வாநாவீரர்கள் அவளேச் சீதைதானே? என்று ஆராயுமாறு அநுமானிடங் கூறுதல்.]

இo. இருந்தனளிருந்தவளேயெய்தினரிறைஞ்சா,
வருந்தகியெனத்தகையசீதையவளாகப்
பரிந்தனர்பதைத்தனர்பணிந்ததகுறிப்பிற்
றெரிந்துணர்திமற்றிவளகொலேவியெனலோடும்.

இதவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ன்.) இருந்தனள் - அவளாறு இருந்தாள்; இருந்தவளே - அங்ஙனம் வீற்றிருந்த சுயம்பிரபையை, (மற்றவானரவீரர்கள), எய்தினர் - கிட்டி, இறைஞ்சா - வணங்கி, அருந்ததி என தகைய சீதை அவள் ஆக பரிந்

தனர் - அருந்ததியென்று சொல்லத்தகுந்த சீதையாகவே நினைத்து (அவளிடத்தி) அன்புகொண்டவர்களாய், பதைத்தனர் - தரிதங்கொண்டு, (அது மானதோக்கி), 'இவள் தேவி கொல் - இவள் சீதாபிராட்டிதானோ? பணித்த குறி பண்பின் தெரிந்து உணர்தி - (இராமபிரான்) கூறியுள்ள அடையாளங்களைக்கொண்டு முறைமையாக ஆராய்ந்து அறிந்து கூறுவாய்,' எனலோடும் - என்று விஞ்சையனுடனே,—(எ - று.) 'மாருதி யுரைத்தான' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

வானரவீரர்கள் அந்தச் சுயம்பிரபையைச் சீதையாகவே கருதி உண்மையறிந்து கூறும்படி அநுமானை விஞ்சையனென்க. தவவேடத்துடன் மிக்க கட்டழகையுமுடையளாயிருந்தமைபற்றி அச்சுயம்பிரபையைச்சீதையென்று கருதியதனால், அவளை வானரவீரர் வணங்கினர். அருந்ததி - அருந்ததி, வடசொல்: இவள் - வசிஷ்டமுனிவரது மனைவி: நட்சத்திரவடிவமாயிருக்கையிலும் கணவனைவிட்டுப்பிரியாது உடனுறைந்து பதிவிரதாதருமம் வீஞ்சியிருத்தலால், கற்புடைமகளிர்க்கு உவமைகூறப்படுவள். சீதையவள், அவன் - பகுதிப்பொருள்விகுதி. இருந்தவளை என்பதை இருந்தஅவளை யென்பதன் விகாரமெனக் கூறுவாரும், இருந்தவளை எனப்பிரித்து - மிக்கதவத்தையுடையவளை யெனக் கூறுவாரு முளர். மற்று - அசை,

'பரிந்தனர்புகழ்ந்தனர்' என்று சில பிரதிகள். (இ௦)

[அநுமானது மறுமொழி.]

இ௧. எக்குறியோடெக்குணமெடுத்தி வணுரைக்கே
னிகுறியுடைக்கொடியிராமனை யினியாளோ
வக்குவடமுதமணியாரமதினோர்நின்
றொக்குமெனிலெனக்குமெனமாருதியுரைத்தான்.

(இ - ள்.) மாருதி - வாயுகுமாரனை அநுமான்,—(அவ்வானரவீரர்களை நோக்கி),—'எ குறியோடு எ குணம் இவண் எடுத்து உரைக்கேன் - (சீதாபிராட்டிக்குரிய அடையாளங்களிலும் குணங்களிலும்) எந்த அடையாளத்தான் எந்தக்குணந்தான இவளிடத்தி லிருப்பதாக எடுத்துச்சொல்வேன்? [சீதாபிராட்டியின குணங்குறிகளில இவளிடத்தில் ஒன்றுமில்லை யென்றபடி]; இ குறி உடை கொடி இராமன மனையாளோ - இத்தன்மையையுடைய கொடிபோன்ற இவள் இராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியாவளோ? [ஆகமாட்டாள்]; அகலு வடமு முத்தம மணி ஆரம் அதின நேர நின்று ஒக்கும் எனின் - எனபுமாலியானது கவரதகிணங்களுளொன்றுகிய முத்தினுலியன்ற ஹாரத்தோடு நேராகநின்று பலவைமபாகப்பொருந்துமாயின், ஒக்கும்- (இவளும் அச்சீதையை) ஒத்திருப்பாள்', என - எனறு, உரைத்தான்—;(எ-று.)

இராமபிரான் தன்னிடத்திற்கூறிய சீதையின் குணங்குறிகளொன்றும் இவளிடத்து இல்லையாதலின, இவள சீதையல்ல ளென அநுமான் நிணைந்து கூறினன் னென்க. எனபுமாலைகுமை முத்துமாலைக்கும எத்தனைவேறுபாடு உளதோ, அத்தனைவேறுபாடு இவட்கும் சீதைக்கு முண்டெனபது, பின்னிரண்டடிகளின் கருத்து. கொடி - உவமையாகுபெயர். அக்குவடம் - சங்கு

மணியிலுலாகிய ஹாரமுமாம். நவமணிகளுளொன்றுதலால், முத்தை 'மணி' என்றார்.

'இக்குணமுடைக்கொடி,' 'குணமணி,' 'முத்தமணியாரவடகோக்கினாய்,' 'ஆரமதிலேர்வந்து' என்பன பாடங்கள். (நிக)

[சுயம்பிரபை வாநரவீரர்களோ யாரென்று வினவுதல்.]

நிஉ. அன்ன பொழுதின்கண் வணங்குமறிவற்றுண்
முன்னை யாச்சேறன்பு மறையன் றிலனுணர்தா
மின்னியல் பொன்னகரிடையினு நிறுவிலளோ
என வியல்வருமபிசாபமென விசைத்தார்.

(இ - ள்.) அன்ன பொழுதின்கண் - அந்தச் சமயத்தில், அ அணங்கும்-தெய்வமகளாகிய அந்தச்சுயம்பிரபையும், அறிவற்றுள் - (யோகநிலைமையினின்றும் நீங்கி இவர்களை) கண்டவளாய்,—முன் அனையர் சேறல் முறை அன்று என முணர்ந்தாள - தனதெண்ணியிலே அவர்கள் வருதல் தகுதியன்றென்று கோபங்கொண்டு,—(தபோநிலைநோக்கி),—'நுன் அரிய பொன் நகரியின் உறைவிர் அல்லீர் - (நீங்கள் ஒருவராலும்) நெருங்கமுடியாத பொன்மயமான இந்த நகரத்தில் வாழ்பவரல்லீர்; வரவு எனை - (நீங்கள் இங்கு) வருவதற்குரிய காரணம் யாது? யாவர் - (நீவிர்)யாவர்? உரைசெய்ம் கூறுங்கள்,' என இசைத்தாள - எனறு விளம்பினாள்; (எ - று.)

தவஞ்செய்யும் பெண்ணுருவிய தனது எதிரில் பல ஆடவர் வந்ததனால், சுயம்பிரபை முனிந்தனளென்க. நுனலம்முதலியபிலங்களன்றி வேறொரு பிராணியும் அந்நகரத்தி லில்லை யாதலின், வானரவீரர்களைநோக்கி 'அணரியபொன்னகரியினுறைவிர்' எனறனள். இனி, இதற்கு - தேவமாதர் வாசஞ்செய்தருளுமான இந்நகரத்தில் தேவருலகினுக்திறஞ்சேராத நீவிர் எவ்வாறு வந்தீரென விசனியதாகவும் பொருளுகொளலாம்.

அவணங்கு - அவ்வணங்கு எனபதன் விகாரத்தால். நகரியினுறைவிர், னகரமெய் விரித்தல் யாவர் முன்னினிலோடு படாகையை வந்த இடவழுவமைதி. செயம - செயபுமெனனும் எவ்வமுறாவினை சாறுபயிர்மெய் சென்றது; "முறதேறல, உயிருமு உயிர்மெய்பு மிசையு முளவே" எனற் பொதுவாகக கூறியதனால் ஆண்மை அமைக்க. 'தபோநிபெரும்நகரியினுறைவிர்' ப்ராஸ மெனனுஞ் செல்லணி காணக.

'முனனையாகளல்லநெறிமுந்திவந்தகளெனனை, விருந்துகாணிவவிடமுமெய்தினர்களல்லீர்,' 'உரைசெய்மென' எனறு சில பிரதிகள். (நிஉ)

[வாநரவீரர்களின் சுத்தரம்]

நிக. மீவதினை பமக்ரிபருருயாரையு நினைவிலாதார்
சீதைபடிபாவிகளனைமுனைதபுவரைசீர்வும்
மேறகமிலாறகு துறைதெயதநிடையிராமன்
அறதருகிறுளி யமனன்று முளனெனகானுளர்.

(இ - ன்.) வேதனை அபகரா - (உலகத்தாரைத்) உபதரவஞ்செய்கின்ற ராக்ஷஸர்கள், ஒரு மாயை விளைவித்தார் - ஒருவஞ்சகத்தொழிலைச் செய்தவர்

களாய், சீதையை ஒளித்தனர் - சீதையைக் கவர்ந்து சென்று மறைத்திட்டார் கள்; எதம் இல் அறம் துறை திறுத்திய இராமன் தூதர் - குற்றமற்ற தரும மார்க்கத்தை நிலைநிறுத்திய இராமபிரானது தூதுவர்களாகிய நாங்கள், மறை த்த புரை தேர்வுற்று உலகில் திரிதும் - (அவ்வரக்கர்கள் சீதையை) ஒளித்து வைத்த மறைவிடங்களைத் தேடத்தொடங்கி உலகில் திரிகின்றோம்; என் னும் - என்கிற, உரை - வார்த்தையை, சொன்னர் - (வானரவீரர்கள் அவள் விஞலிற்கு விடையாகச்) கூறினர்கள்; (எ - று.)

திருமால் சாதுசனத்தைகலியுந் துஷ்டர்களை நிரவித்துச் சிஷ்டர்களைப் பரிபாலித்துத் தர்மசம்ஸ்தாபநஞ்செய்யுமாறு ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்கு இராமபிரானகத் திருவவதரித்தமை, மூனறுமடியிற் குறிக்கப் பட்டது. தூதர் - தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி.

• 'உழைதேர்வுற்று' என்பதும் பாடம். (இங)

[அநுதேட்ட சுயம்பிரபையின் மகிழ்ச்சி.]

இச. என்றலுமிருந்தவளெழுந்தனளிரங்கிக்
குன்றனையதாயதொருபேருவகைகொண்டா
ணன்றுவரவாகநடனம்புரிவலென்னு
நின்றனணைடுங்கணீணீர்கலுழிகொள்ள.

(இ - ன்.) என்றலும் - என்று (வானரவீரர்கள் மறுமொழி) கூறியவுட னே,—இருந்தவள் - வீற்றிருந்தவளாகிய அந்தச்சுயம்பிரபை, எழுந்தனள் - எழுந்துநின்று, இரங்கி - (அவ்விராமதூதரிடத்தில்) அன்புகொண்டு, குன்று அனையது ஆயது ஒரு பேர் உவகை கொண்டாள் - மலையை யொத்ததாகிய ஒரு பெருங்களிப்பை யடைந்தாளாகி,— (வானரவீரர்களை நோக்கி), 'வரவு நன்று ஆக - உங்கள்வரவு நல்லவு ஆகுக, நடனம் புரிவல் - ஆனந்தக்கூத் தாடுவேன்,' என்னு - என்றுசொல்லி, நெடுங் கண் இணை நீர் கலுழிகொள்ள - நீண்ட (தனது) இரண்டு கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் ஆறுகப்பெருக, நின்றனள்—; (எ - று.)

இவ்வானரவீரர்களை இராமதூதரென்று அறிந்தவுடன் சுயம்பிரபை தனது சாபம் நீங்குங்காலம் நெருங்கியதென்ற காரணத்தால் அவர்கள்மீது அன்பு பாராட்டி நல்லவரவுவிசாரித்துக் கண்களில் ஆனந்தவருவி சொரிய மகிழ்ச்சியினால் நடனஞ்செய்யலாயின ளென்க. சுயம்பிரபையின் சாபவர லாறு, மேலே கூறப்படும். இருந்தவள் எழுந்ததற்குக் காரணம், அவ்வானர வீரர்களிடத்து மரியாதைசெய்ய வேண்டியதனாலென்க, உவகை மிகுதியா கத்தோன்றியதென்றற்கு, குன்றை உவமை கூறினார். 'நன்றுவரவாக' என்று விசாரித்தல் - குசலப்ரச்நம் எனப்படும்.

'ஆயவொரு' என்றும் பாடம். (இச)

[சுயம்பிரபை இராமனைப்பற்றி வினவுதலும், அநுமானது விடையும்.]

இரு. எவ்வுழையிருந்தனனிராமனெனையாணர்ச்
செவ்வுழைநெடுங்கணவள்செப்பிடுதலோடு
மவ்வுழைநிகழ்ந்ததனையாதியினெடுத்தம
வெவ்விழையில்சிந்தைநெடுமாருதிவிரித்தான்.

(இ - ன்.) 'இராமன் எ உழை இருந்தனன் - இராமபிரான் எவ்விடத்தி லுள்ளான்?' என - என்று, யாணர் செவ் உழை நெடுங் கண் அவள் - புது மையாகிய அழகிய மான்போன்ற நீண்டகண்களையுடைய அந்தச் சுயம்பிர பை, செப்பிடதலோடும் - (அனுமானைநோக்கி) வினவியவுடனே,—வெம் விழைவு இல் சிந்தை நெடு மாருதி - கொடுமையாகிய ஆசையில்லாத மனத் தையுடைய பெருமைபெற்ற அனுமான், அழை கிழந்ததனை - அவ்வீடத்து [இராமபிரானிடத்து] நடந்துள்ள வரலாற்றை, ஆதியினெடு அந்தம் விரித் தான் - ஆதியோடந்தமாக [முழுவதும்] விவரித்துக்கூறினான்; (எ - று.)

யாணர் - புதுமைகுறிக்கும் உரிச்சொல்: அழகுமாம். மருண்டநோக்க மூண்டமையால், மகளிர்கண்ணுக்கு மான் உவமைகூறப்படும். ஆசையென் பது கல்வழியிற்செல்லவொட்டாது மனத்தைத் தீவழியிற்புகுத்தலால், 'வெவ் விழைவு' எனப்பட்டது. அனுமான் நித்தியபிரமசாரியாகி அதற்கு எற்ற ஒழுக்கமுடையவனுதலால், 'வெவ்விழைவில்சிந்தைநெடுமாருதி' எனப்பட் டான். (கூ)

[சுயம்பிரபை வாநரவீரர்களை உபசரித்தல்.]

நிசு. கேட்டவளுமென்னுடையகேடிறவின்னே
காட்டியதுவீடெனவிரும்பிநனிகானீ
ராட்டியமிழ்தன்னசுவையின்னடிசிலன்போ
டீட்டிமனனுள்குளிரவின்னுரையுரைத்தாள்.

(இ - ன்.) கேட்டு-(அநுமான்கூறிய இராமபிரானது செய்தி முழுவதை யும்) கேட்டு,—அவளும்-அத்தச்சுயம்பிரபையும், என்னுடைய கேடு இல் தவம் இன்னே வீடு காட்டியது-'எனது கெடுதலில்லாத தவம் இப்பொழுது தான் சாபவிமோசனத்தை யுண்டாக்கிற்று,' என - என்றுசொல்லி, விரும்பி- (அவ்வானரவீரரிடத்து) அன்புகொண்டு, (அவர்களை), கான் நீர் நனி ஆட்டி- நறுமணமுள்ள நீரினால் நன்றாகநீராடச்செய்து, அமிழ்து அன்ன சுவை இன் அடிசில் அன்போடு ஊட்டி - தேவாமிருதம்போன்ற ருசியையுடைய இனிய உணவை அன்போடு உண்பித்து, மனன் உள் குளிர - (அவர்களது) மனம் உள்ளூரக் குளிரும்படி, இன் உரை உரைத்தாள் - இன்சொற்களைக் கூறி னாள்; (எ - று.)

வீடு - விடுதல்: முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வீடு - மோக்ஷமுமாம். கானீர் - காட்டாறுமாம். "உண்பொழுது நீராடியுண்டல்" என்ப வாதலால், நீராட்டியமுதூட்டினாள். இனி, கால் நீர் ஆட்டி என்று பிரித்து - கால் கழுவ நீர்கொடுத்து எனப் பொருள் கூறினுமாம்; இது, பாத்ய மெனப்படும்; ஷோடஸோபசாரங்களு ளொன்றாகிய இதனைக் கூறியது, மற்றவற்றிற்கும் உபலட்சணமா மென்க. "ஆதரஸ் ஸ்தமோரஸ: [அன்பு என்பது எழாவது சுவையாகும்]" என்றபடி உணவிற்கு ஒரு சுவையாகுமாறு அன்புசிறத்தலால் 'அடிசில் அன்போடூட்டி' என்றார். அடிசில் - சமைக்கப்பட்டதென உணவு க்குத் தொழிலாகுபெயர்; அடி - பகுதி, இசில் - தொழிற்பெயர் விகுதி, இன் னே - இடைச்சொல்.

'விரும்புநனிகானீர்,' 'விரும்பிநளிர்கானீர்,' 'விரும்பிநனிதூநீர்,' 'குளிரு மின்னுரையுரைக்கும்' என்று பாடாந்தரங்கள். (இசு)

[அதுமான் சுயம்பிரபையின் வரலாற்றை வினவ, சுயம்பிரபை விடைகூறத் தொடங்குதல்.]

நிஎ. மாருதியுமற்றவண்மலர்ச்சரண்வணங்கி
யாரிகருக்கிறைவர்யாதுநினியற்பேர்
பார்புகழ்தவத்தினேபணித்தருளுகென்றன்
சோர்குழலுமற்றவனெடுற்றபடிசொன்னாள்.

(இ - ள்.) மாருதியும் - அநுமானும், அவள் மலர் சரண் வணங்கி - 'அச்சுயம்பிரபையினது தாமரைமலர்போன்ற பாதங்களைத் தொழுது, (அவளை நோக்கி), 'யார் இ நகருக்கு இறைவர் - எவர் இந்நகரத்துக்குத் தலைவர்? நின் இயல் பேர் யாது - உனது இயற்கையான பெயர் யாது? பார் புகழ் தவத்தினை பணித்தருளுக - உலகத்தார் புகழ்தற்குக் காரணமான தவப்பெண்ணுயிய நீ (இவற்றைச்) சொல்வாயாக,' என்றன் - என்று வினவினன்; சோர் குழலும் - (சடைப்பட்டுச்) சோர்ந்த கூந்தலையுடையவளாகிய அந்தச்சுயம் பிரபையும், அவனெடு - அவனுமானேடு, உற்றபடி சொன்னள் - நடந்த படியே சொல்வாளாயினள்; (எ - று.)—அதனை, அடுத்த எட்டுக்கவிகளிற் காண்க. 'மற்று' இரண்டும் - அசைநிலைகள்.

பார்புகழ்தவத்தினை - விளியுமாம். சோர்குழல் - வினைத்தொகையன் மொழி. மற்றவனெடுற்றபடி - ப்ராஸம்.

'யாவதனியற்பேர்,' 'மற்றையவண்' என்று சில பிரதிகள். (நிஎ)

[இதுமுதல் எட்டுக்கவிகள் - ஒருதொடர்; சுயம்பிரபை அநுமானுக்குக் கூறிய விடையைத் தெரிவிக்கும்.]

நிஅ. நான்முகனுனித்தநெறி நூறுவரகொய்தாய்
மேன்முகநிமிர்த்துவெயில்காலொடுவிழுங்கா
மான்முகமுகத்தவன்மயன்செய்ததவத்தா
னின்முகனளித்துளதிமாநகரால்லோய்.

(இ - ள்.) (சுயம்பிரபை அநுமானைநோக்கி),—ஐல்லோய் - நற்குண முடையவனே! மான் முகம் முகத்தவன் மயன் - மானினது முகம்போன்ற முகத்தையுடையவனுகிய மயன, நால்முகம் நுனித்த நெறி நூறு வர - யோகசாஸ்திரத்தில் நுட்பமாகக்கூறியுள்ள வழி பலவும் தன்னிடத்திற் பொருந்தும்படி [யோகசாஸ்திரத்திற்கூறிய முறைமைப்படியே], கொய்த ஆய் - எளிதாக, முகம் மேல் நிமிர்த்து வெயில் காலொடு விழுங்கா - தனது முகத்தை மேலேநிமிர்த்து [அண்ணாந்து வானத்தைநோக்கியபடியே] வெயிலையும் காற்றையும் உணவாகக்கொண்டு, செய்த - கடுமையாகச் செய்த, தவத்தால்-தவத்தின்பயனுக, இ மா நகரம் நான்முகன் அளித்து உனது - இத்தப் பெரியநகரமானது நான்முகங்களையுடைய பிரமதேவனால் (அம்மயனுக்கு) அளிக்கப்பட்டதாகும்; (எ - று.)

இங்கரமான்ஞ மயனதவத்தைக்கண்டு மெச்சிய பிரமதேவனுல் அரு ளோடு அவனுக்குக் கொடுக்கப்பட்டதாகு மென்றவாறு. நான்முகனினித்த நெறிதானுவர - யோகதூலார்க்கூறிய விதிசிறிதும் வழுவாம லென்றபடி. மேன்முகமிர்த்தி - ஊர்த்வமுகமாய் வானத்தைநோக்கி, தவஞ்செய்பவர் படிப்படியாகக் காய்கனிகிழங்குகளையும் சருகுகளையும் நீரையும் வெயில் காற் றுக்களையும் உட்கொள்ளுதல், இயல்பு. மயன - அசுரசிற்பி; இவன் மானி னமுகம்போன்ற முகமுடையவனென்க. நான்முகன் - நான்குதிசைகளை யும் நோக்கிய நான்குமுகங்களை யுடையவன்.

'தூறுமழைநொய்தாய்,' 'மான்முகநலத்தவன்' என்ற பாடாந்தரம்.

ரிகூ. அன்னதிதுதானவனரம்பையருளாங்கோர்
நன்னுதலிணுண்முலேநயந்தனனல்லா
ளென்னுயிரனுளவளையானவணிரப்பப்
பொன்னுலகினின்றியல்பிலத்திடை புணர்த்தேன்.

(இ - ன்.) இதி அன்னதி - இங்ஙகரம் அவ்வாறுகத தோன்றியதாகும்; தானவன - அந்தமயனென்ற அசுரன, அரம்பையருள் ஓர் கல் நுதலினுள் முலே நயந்தனன - அரமபைமுதலிய தேவமாதர்களுள் அழகிய நெற்றியை யுடைய ஒருத்தியினது போகத்தை விருமபினனு; அ நல்லாள் என் உயிர் அனுள் - நல்ல அழகையுடைய அவள் எனது உயிர்போன்ற தோழியாவள்; அவன இரப்ப - அவனசுரன (என்னை) வேண்டிக்கொண்டதனுல், யான்—, அவளை—, பொன்உலகினினறு - பொனமயமான தேவலோகத்திலிருந்து, இயல் பிலத்திடை புணர்த்தேன் - பொருந்திய இந்தருகூபிலத்திற் கொண்டு சேர்த்தேன; (எ - று.)—ஆங்கு - அசை.

தானவன் - கசியபமுனிவரது மனைவியருள் தநுவென்பவளின் சந்ததி யான். அரம்பை - ரம்பா எனற வடசொல்லின விகாரம்; தேவமாதர்களுள் ஒருத்தியின் பெயராக்ய இதி, பொதுவாகத் தேவமாதரைக் குறிக்கு மெனக் கொண்டு, அரம்பையர் - தேவமாத ரெனினுமாம். அல்லாள் - தொகுத்தல். அசுரசிறபியான மயனெனபவன் தனது தவமகிமையாற பிரமதேவனிடத்தி னின்று சுக்ராசாரியரது பொருள்முழுவதையும் வரமாகப்பெற்றுப் பொன் மயமானவனதைநிருமித்தன னெனறும், பினனர் அதி அவனுற் காதலிக் கப்பட்ட ஹேமையெனனும் அப்ஸரஸ்ஸ்த்ரீக்கு உரியதாயிற் றென்றும் முத னூல் கூறுகினறது. ஆகவே, தானவன எனறது - மயனேயும், நன்னுதலி னுள் என்றது - ஹேமையெனபவளேயும் குறிக்கும்.

இக்கவிமுதல் மேல் சுஉ-ஆங் கவிவரையில் அந்தாதித்தொடை காண்க. (அந்தாதிதொடையாவது - முனகின்றசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயி னும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்தவருஞ் செய்யுளின் முதலாக அமையுமபடி பாடுவது.)

"அன்னகினர்தானவரம்பையருளாங்கோர், நன்னுதலிணுண்முலேபுண ர்ந்தனனல்ல, லெனனுயிரனுளவளேயானிவண்விடுப்பப், பொன்னுலகி னினறியல்பிலதநிடைபுணர்த்தான்" என்று சில ஏட்டுப்பிரதிகள், (இக)

ஈ0. புணர்ந்தவனுமன்னவனுமன்றில்விழைபோகத்
துணர்ந்திலர்கெடும்பகலிம்மாகருறைந்தார்
கணங்குழையினுளொடுயர்காதலொருவாதுற்
றிணங்கிவருபாசமுடையேனுடனிருந்தேன்.

(இ - ன்.) அவனும் அன்னவனும் - அத்தேவமாதும் அந்தம்யனும், புணர்ந்து—, அன்றில் விழை போகத்து - அன்றிற்பறவைபோல (ஒருவரை யொருவர் விட்டுப்பிரியாது) விரும்புஞ் சிற்றினபத்தில், உணர்ந்திலர் - (வேறொன்றையும்) அறியாதவராய், கெடும் பகல் இ மா ககா உறைந்தார் - பலகாலம் இத்தப்பெரியகாரத்தில் வசித்தார்கள்; கணம் குழையினுளொடு உயர் காதல் ஒருவாது உற்று இணங்கி வரு பாசம் உடையேன - இரண்ட காதணியையணிந்த அவளோடு சிறந்த அன்பு நீங்காது தெருவகிப்பழகிவரு கின்ற பாசமுடையவனாகிய யான், உடன இருந்தேன் - அவளுடன் இங் கேயே இருந்தேன; (எ - று.)

அவளிருவரும் சிற்றினபத்தில் மூழ்கி இங்குவசிக்கையில், எனது உயிர்த் தோழியாகிய அவளே விட்டுப்பிரிய மனம்வாராது யானும் இங்கேயே அவ ளுட னிருந்தே னெனபதாம. அன்றில்என்பது - ஒருபறவை; அது, எப் பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது கிறகும்; கணப்பொழுது ஒன்றையொன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப்பொருமல் ஒனறை யொன்று இரண்டுமூன்றுதரம் கத்திக்கூவி அதன்பினபும் தன்னணையைக் கூடாவிடின் உடனே இறந்திவிடுந் தனமையது. இதனை, வடநூலார் க்ரௌஞ்ச மென்பர். மன்றிலவிழைபோகத்து என்றுஎடுத்து - (ஒருவரு மில்லாத) வெளியிடத்தில் விரும்பியபோகத்தினுல் எனறு கூறுவாருமுளர். பகல்என்றது - இலக்கணையால், பகலையும் இரவையு முடைய நாள்களைக் குறித்தது. கணம் - கூட்டமுமாம்.

'புணர்ந்தவனுமன்னவனும்,' 'கணங்குழையினோடும்,' 'உயிர்க்காதல்' என்பன பாடாந்தாகுகள். (ஈ0)

ஈக. இருந்துபலநாள்கழியுமெல்லையினின்வல்லோய்
திருந்திழையைநாடிவருதேவரிறைசீறிப்
பெருந்திறலினுனையுயிருண்டுபிழையென்றம்
முருந்துநிகர்மூவனகையாளையுமுனிந்தான்.

(இ - ன்.) வல்லோய் - வல்லமையுடையோனே! இருந்து பல நாள் கழியும் எல்லையினின் - (அவர்கள் அவவாறு இங்கே) கூடியிருந்து பலநாள் கழியும்பொழுதில்,—திருந்து இழையை நாடி வரு தேவர் இறை - வேலைத் திறமமைந்த ஆபரணங்களையணிந்த அந்தத்தேவமாதைத் தேடிவருகின்ற தேவேந்திரனனவன், சீறி - கோபித்து, பெருந் திறலினுனை உயிர் உண்டு - மிக்க வல்லமைபொருந்திய அம்மயனை உயிரொழித்து, அ முருந்து நிகர் மூவல் கையாளையும் பிழை என்று முனிந்தான் - மயிலிறகினடிக்குருத்தை யொத்த பற்களையும் புன்சிரிப்பையுமுடைய அத்தேவமாதையும் (நீசெய்தது) தவறுனதொழிலாகுமென்று சினந்துகூறினன்; (எ - று.)

இவ்வாறு அவ்விருவரும் இங்ஙகரத்தில் இன்பமனுபவித்துப் பலகால் கழிக்கையில், தேவலோகத்தில் அத்தேவமாதைக் காணுமையால் அவளைத் தேடிவந்த இந்திரன் அந்த ஹேமையைக்கவர்ந்தா னென்ற காரணத்தினால் அம்மயண்மீது சீற்றங்கொண்டு அவனைக் கொன்று, அவனுக்கு ஜணங்கிய ஹேமையைக் கோபித்தன னென்பதாம். திருந்திழை - வினைத்தொகையன் மொழி. தலைமைப்பொருளுணர்த்தும் 'இறைமை' என்னும் பண்புப்பெயர் - ஈறுபோய் 'இறை' எனறு ஆய் பண்பாகுபெயரால் தலைமையுடையானை உணர்த்திற்று. உயிருண்டு - ''உண்டற்குரியவல்லாப்பொருளை, யுண்டன போலக்கூறலு மரபே'' எனபது தொல்காப்பியம்.

'உயிர்கொண்டுபிழைத்தனன' என்று சிலவட்டுப்பிரதிகளின் பாடம். இச்செய்யுளின்பின

''மாதவளுயிர்த்தமகவோரிருவர்வாசப்
போதிறைநகறைக்குழலொருத்திபுகழ்மேலோ
யேதமவண்மைந்தர்தவமெய்தியயல்போனர்
சீதளமூலச்சிறுவிதாதையொடுசென்ருள்,''
''மத்தகெடிமாகளிறுமைக்கருகிசவன்ருன்
சித்தமொடியாணமுகணவணங்கியயல்சென்ருன்
விததகனுமையிரவிலோசனனுமென முன
முததநகையாளைநனிநோக்கினணமுனிந்தான்.''

என்று இரண்டுபாடல்கள் சில ஏட்டுப்பிரதிகளிற காணப்படுகின்றன; பயில வழங்கா: இவறறை, வெள்ளிப்பாட்டு என்பர். (கக)

சுஉ. முனிந்தவளையுற்றசெயன்முற்றுமொழிகென்னக்
கனிந்ததுவர்வாயவளுமென்னியிவள்கண்ணுல்
வனைந்துமுடிவுற்றதெனமன்னனுயிதல்லா
நினைந்திவணிருத்திநிகர்காவனினதென்ருன்.

(இ - ள்.) முனிந்து - (தேவேந்திரன் அவவாறு) கோபித்து, அவளை - அத்தேவமாதை, உற்ற செயல் முற்றும் மொழிக என்ன - நடந்தவாலாறு முழுவதையும் கூறுவாயாக' எனறு கட்டளையிட, கனிந்த துவர் வாயவளும் - நனறுகமுற்றிய பவழம்போனற அதாதரதையுடையவளாகிய அவ்வேமையும், எனனை - எனனைப்பற்றி, கண்ணுல் - கண்சாடையினுல், '(இப்பழிப்புத்தொழிலானது), இவள வனைந்து முடிவுற்றது - இந்தவனதுதொழியினுல் தொடுக்கப்பட்டு முடிந்தது,' என - என்றுதெரிவிக்க,—மன்னனும் - தேவேந்திரனும், இது எல்லாம் நினைந்து - இவற்றையெல்லாம் ஆலோசித்து, (என்னைநோகி),—'இவண் இருத்தி - இங்ஙகரத்திலேயே (தனியாக) இருக்கக்கடவாய்; நகர் காவல் நினது - நகரத்தைப்பாதுகாக்குந்தொழில் உன்னுடையதாகும்,' என்ருன் - என்று கூறினன்; (எ - று.)

நடந்தசெயலை எனதுதோழியினு லறிந்த தேவேந்திரன் எல்லாவற்றிற்கும் முதற்காரணம் யானே யெனத் தெளிந்து, என்மீது சினத்தினுல் ஒருவருமில்லாத இந்நகரத்தைப் பாதுகாத்திக்கொண்டு தனியேயிருக்குமாறு

எனக்குக் கட்டளையிட்டன னென்பதாம். தன்தேரழியின்மீது குற்றங்கூற வாயெழாமையால், அத்தேவமாது கண்சாடை காட்டினளென்க. திரிலோகாதி பதி யாதலால், இந்திரன் 'மன்னன்' எனப்பட்டான்; "வேந்தன்மேய தீம்புனலுலகமும்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். மொழிகென்னலியங்கோளின் அகரவீறு தொகுத்தல். இதெல்லாம் - ஒருமைப் பன்மை மயக்கம்:

'உற்றமுறைமுற்றும்,' 'கண்ணுய்,' 'இரிந்தைமுடிவுற்றது,' 'அண்ணலும்' என்பன பாடாந்தரங்கள். (சுஉ)

சுகூ. என்றலும்வணங்கியிருளேகுநெறியெந்நா
ளொன்றுரையெனக்குமுடிவென்றுரைசெயாமுன்
வன்றிறலவானரமிராமனருள்வந்தா
லன்றுமுடிவாகுமிடரென்றவனகன்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று (இந்திரன் எனக்குக்) கட்டளையிட்ட வுடனே,—வணங்கி-(யான் அத்தேவேந்திரனைத்) தொழுது, 'இருள் எகும் நெறி எ நாள் - (எனது) இத்தன்பம் நீங்குதற்குரிய வழி எக்காலத்தில்? எனக்கு முடிவு ஒன்று உரை - எனக்கு முடிவாக ஒன்று கூறுவாய்.' என்று உரை செயாமுன் - என்றுகேட்பதற்கு முன்னமே, [கேட்டவுடனே என்ற படி],—அவன் - அத்தேவேந்திரன், 'வல் திறல வானரம் இராமன் அருள் வந்தால் - மிக்க வலிமையுடைய வானரங்கள் இராமனதுகட்டளையினால் இங்கு வந்தால், அன்று - அக்காலத்தில், இடர் முடிவு ஆகும் - (உனது) துன்பம் ஒழியும் [உனக்கு நற்கதியுண்டாகும்],' என்று-என்றுகூறி, அகன்றான் அப்பாற்சென்றான்; (எ - று.)

தேவேந்திரன் நான்செய்த பிழைக்குத் தண்டனையாக எனக்கு இங்ஙேயிருக்குமாறு கட்டளையிட்டவுடனே, 'எனதுதுயர் நீங்குங்காலம் எப்போது?' என்று நான் அவனை வணங்கி வினவியதற்கு, அவனும் 'இராம தூதராகிய வானரர்கள் இங்குவருகையில் உனதுதுயர் நீங்கும எனச் சாபவிடை கூறிப்போயினனென அறிக. 'இருள்' எனபது - துன்பத்திற்கு இலக்கணை.

'என்றனனிருத்திபிருளாகநெறியென்ன','என்றனன்வணங்கியிருளேகு நெறி,' 'வன்றிறலவ்வானரம்' 'வனறிறலினவானரம்' 'அன்று' 'முடிவாமுனிடர்' என்பன பாடாந்தரஙகள். (சுகூ)

சுசு. உண்ணவுளபூசவுளசூடவுளவொன்றே
வண்ணமணியாடையுளமற்றுமுளபெற்றே
னண்ணலவைவிட்டுமையடைந்திடுதல்வேண்டி
யெண்ணரியபல்பகலி நந்தவமிழைத்தேன்.

(இ - ன்.) அண்ணல்-பெருமையிற் சிறந்த அருமானே!—(எனக்கு இங்கே), உண்ண உள - உண்பதற்குரிய கனி முதலிய பொருள்கள் உள்ளன; பூச உள - பூசுதற்குரிய கலவைச்சந்தனம் முதலிய பொருள்கள் உள்ளன; சூட உள - தலையிற்சூடுதற்குரிய மலர்மாலைகள் உள்ளன; ஒன்றே - இவை மாத்திரமோ? வண்ணம் மணி ஆடை உள - நல்லசிறகையுடைய அழகிய

ஆடைகளும் உள்ளன; மற்றும் உள - (இவைகளன்றி) இன்னும் ஆபரணம் முதலியவைகளும் உள்ளன; பெற்றேன் - (இவைஎல்லாவற்றையும்), யான் அடைந்திருக்கின்றேன்; (அவ்வாறு இருந்தும்), அவை விட்டு - அவற்றை எல்லாம் அனுபவியாமற் பற்றறவிட்டு, உமை அடைந்திடுதல் வேண்டி - (எனது சாபவிமோசனத்திற்காக) உம்மையடையவிரும்பி [உமதுவருகையை எதிர்நோக்கிக்கொண்டு], எண் அரிய பல் பகல் இருந்தவம் இழைத்தேன் - எண்ணுதற்கு அரிய மிகப்பல காலமாகப் பெருந்தவம்புரிந்தேன்; (எ - று.)

எனது இன்பத்திற்கு உரிய பல பொருள்க ளிருந்தும் எனது சாபம் நீங்குமாறு உங்கள்வரவை எதிர்பார்த்துக்கொண்டே பலகாலமாகப் பெருந்தவம் புரிந்துகொண்டிருந்தே னென்பதாம். அண்ணல் - அண்மைவிளி. 'அண்ணலவைமுற்றுமறவிட்டதனைவெல்வான்' என்று ஒல பிரதிகள். (கூச)

கூறு. ஐயிருபதோசனையமைந்தபிலமையா
மெய்யுளதுமேலுலகமேறுநெறிகாணே
னுய்யுநெறியுண்டெனவுரீரெனினுபாயஞ்
செய்யுமவகைசிந்தையினினீரிதிறிதென்றுள்.

(இ - ள்) ஐயா - பெரியோனே! அமைந்த பிலம் ஐ இருபது ஓசனை மெய் உளது - பொருந்திய இந்தப்பிலமானது நூறுயோசனை பரந்தவடிவுள்ளது; மேல் உலகம் ஏறும் நெறி காணேன் - மேலேயுள்ள உலகத்திற்கு ஏறிச் செல்லும் வழியை அறியேன்; உதவுவீர் எனின் - (நீங்கள் எனக்கு) உதவி செய்வீராஞல், உய்யும் நெறி உண்டு - யான் ஈடேறுதற்கு உரிய வழியுளதாகும்; உபாயம் செய்யும் வகை - அதற்குரிய உபாயம்செய்யும்விதத்தை, சிந்தையின் சிறிது நினைத்திர் - உங்கள்மனத்திற் சிறிது கருதுவீர்களாக, என்றுள் - என்று கூறினுள், (சுயம்பிரபை); (எ - று.)

இந்தப்பிலம் நூறுயோசனைபரப்புள்ளதாய் இருள்செறிந்திருந்ததனுல் மேலேறிச்செல்லும்வழி இன்னதென்று தெரியாதபடி தேவேந்திரனது சாபம் எனைனத் தடைப்படுத்துகின்றது; எனது சாபவிமோசனகாலக் குறுகி நீங்கள் இங்கு வந்திருத்தலினுல், இப்போதுநீவிர் அருள்செய்தால் தான் யான் ஈடேறும்வகை யுளதாம்; ஆதலின், அவ்வாருன உபாயத்தைச் செய்யவேண்டுமென்று அனுமான் முதலியோரைச் சுயம்பிரபை வேண்டினளென்க. முதலில் 'ஐயா' என்று அனுமானை விளித்த சுயம்பிரபை, இராமதூதரால் இடர்நீங்குமென்று தேவேந்திரன்கட்டளை யிருத்தலால், 'உதவுவீர், நினைத்திர்' என்று மற்றைவானரரையும் உளப்படுத்திக் கூறின ளென்அறிக.

'ஏறுநெறிகூறு,' 'வேறுநெறிகூறு,' 'உய்யநெறி,' 'உதவினீரெனின்' 'செய்யும்வகையுண்டெனினினைத்திர்' என்பன பாடாந்தரங்கள். (கூடி

[அநுமான் சுயம்பிரபைக்கு மேலுலகநெறியைக் காட்டுவதாக வாக்களித்தல்.]

கூசு. அண்ணலசுயம்பிரபைகூறவநுமானு
மன்னபுலன்வென்றுவருமாதவண்மலர்த்தாள்
சென்னிபின்வணங்கிநனிவானவர்கள்சேரும்
பொன்னுலகமீகுவனினக்கெனல்புகன்றுன்.

(இ-ள்.) சுயம்பிரபை—, அண்ணல் கூற - அவ்வாறு ணவர்த்தையைச் சொல்ல,—அநுமானும்—, மன்னு புலன் வென்று வரு மாது அவன் மலர் தாள் சென்னியின வணங்கி - பொருந்திய ஐம்புலன்களையும் வென்று அடக்கிய பெண்ணகிய சுயம்பிரபையினது தாமரைமலர்போன்ற பாதங்களைக் (தனது) தலையால் வணங்கி,- (அவளை நோக்கி), 'கினைக்கு - உனக்கு, வானவர்கள் நனி சேரும் பொன் உலகம் ஈகுவன்- தேவர்கள் மிகுதியாகக் கூடியுள்ள பொன்மயமான தேவலோகத்தைத் தருவேன் [மேலுலகஞ் செல்லும் வழியைக் காட்டி அங்குச் சேரச்செய்வேன],' எனல் புகன்றனன் - என்பதாகக் கூறினனென்; (எ - று.)

மேலுலகநெறியைக்காட்டுமாறு வேண்டிய சுயம்பிரபைக்கு, அவ்வாறே செய்வதாக அநுமான் வாக்களித்தன னென்க. சுயம்பிரபை - ஸ்வயம்ப்ரபா; வடசொல்; இயற்கையில் மிக்க ஒளியுள்ளவளென்று பொருள்படும்; இவன், மேருஸாவர்ணியின் மகள். இவளது தவவொழுக்கமும், இவன் வானர்களை அருமையாக ஆதரித்துநடத்திய பரோபகார குணமும், பொறுமையும் பாராட்டத்தக்கன புலனை வென்றவருமாது- நிதேந்திரியை, மாதவன் என்று பிரித்து உரைப்பாரு முளர்.

'அன்னனகுறித்தரிவைகூற' என்று பாடாந்தரம். இச்செய்யுள், சில பிரதிகளி லில்லை. (கூசு)

[வெளிக்கேல்லுதற்கரிய தொழிலைக் கெய்யுமாறு
மற்றைவானரர் அநுமானை வேண்டுதல்.]

கூஎ. முழைத்தலையிருட்கடலின்மூழ்கிமுடிவேமைப்
பிழைத்துயிருயிர்க்கவருள்செய்தபெரியோனே
யிழைத்திசையலாபனினையென்றனரிரந்தார்
வழுத்தரியமாருதியுமன்னதுவலிப்பான்.

(இ - ள்.) (மற்றைவானரவீரர் அநுமானைநோக்கி), 'முழைத்தலை - இக்தப் பிலத்துவாரத்தில், இருள் கடலில் மூழ்கி - பேரிருளின்தொகுதியிலே முழுகி, முடிவேமை-இறப்பதற்கிருந்த எங்களை, உயிர் பிழைத்து உயிர்க்க-இறவாமல் தப்பிப்பிழைக்கும்படி, அருள்செய்த - (அதனினின்று நீங்கிக்) கருணையோடு பாதுகாத்த, பெரியோனே - பெருமைக்குணமுடையவனே! செயல் ஆய வினை - இனிச் செய்யத்தகுந்த தொழிலை, இழைத்தி - செய்வாயாக,' என்றனரா இரந்தார் - என்றுகூறி வேண்டினார்கள்; (உடனே), வழுத்தி அரிய மாருதியும் - புகழ்ந்து கூறமுடியாத [மிக்கதற்குணங்களையுடைய] அநுமானும், அன்னது வலிப்பான் - அவ்வாறே செய்வதாக மனத்தில்உறுதி கொண்டான்; (எ - று.)

இத்தப்பிலத்துள் சேதையில்லை யென்று தெற்றென விளங்கியதுபற்றி இனி இங்கிருத்தலால் யாதொருபயனுமில்லை யாதலால், உடனே வெளிச்செல்வத்தற்குரிய தொழிலைத் தேடவேண்டு மென்று அனுமானை மற்றை வானரர் இரந்தனராக, அநுமானும் அதற்கு இசைந்தன னென்பதாம். பிலத்துவாரத்தினுட்புக்குப் பேரிருட்கடலில் தாங்கள் மிகவும் வருந்திய பொ

முதி அநுமானே தங்களைப் பாதுகாத்ததனால், இனி வெளிச்செலுத்திப் பாதுகாக்கும் வல்லமை யுள்ளவனும் அவ்வநுமானே யென்று கருதி அதற்கும் அவனையே வானரர் வேண்டின ரென்க. இத்தன்மைகருதியே, 'முழைத்தலையிருட்கடலில் மூழ்கிமுடிவேமைப், பிழைத்தயிருயிர்க்க வருன்செய்த பெரியோனே' என விளித்தனர்; இங்கு விசேஷ்யம் ஒரு கருத்தையுட் கொண்டிருத்தலால், முன்னிரண்டடி - கருத்துடை யடைகோளியணி யின் பாற்படும். இனி, இச்செய்யுட்கு - எங்களை முழைத்தலையிற் பாதுகாத்தது போலவே இத்தச்சயம்பிரபையையும் இப்பிலத்திலிருந்து நற்கதி யடையு மாறு பாதுகாக்கவேண்டு மென்று வானரவீரர் அநுமானே வேண்டினரென்று கருத்துக்கூறுவாரு முளர். வழுத்து - முதனிலைத்தொழிற்பெயர். வலித்தல் - மனத்தில் உறுதியாகக் கருதுதல்.

'பிழைத்தயிரிருக்க' என்றும் பாடம். (சுஎ)

[அநுமான் அப்பிலத்தைப் பிளக்குமாறு பேருருவங்கொள்ளுதல்.]

சுஅ. நடுங்கண்மி னெனுஞ்சொலிகவின்றுகைகாற
மடங்கலினெழுந்தமழையேறரியவானத்
தொடுங்கலில்பிலத்தலிறந்துலகொடொன்ற
நெடுங்கைகள்பெயர்த்துநெடுவானுறநிமிர்ந்தான்.

(இ - ன்.) (அநுமான் மற்றையோரை நோக்கி), நடுங்கண்மின் எனும் சொலி கவின்று - 'அஞ்சவேண்டா' என்ற சொல்லைக் கூறி, நகை காற - புன்சிரிப்புத் தோன்ற, மடங்கலின் எழுந்த - ஆண்சிங்கம்போலக் கிளம்பி,—மழை ஏறு அரிய வானத்து உலகொடு - மேகங்களும் ஏறிச்செல்லமுடியாத [மிகவும்மேலே மேகமண்டலத்திற்கும் அப்பாலுள்ள] வானுலகத்தோடு, ஒடுங்கல் இல் பிலம் - நெருக்கமில்லாத [மிகவும் விசாலமாகிய] குகையான து, தலைகிறந்த ஒன்ற-தலையிடத்திறந்து ஒன்றாய்விட (ஒரேவெட்டவெளியாக), நெடுங் கைகள் பெயர்த்து - தனது பெரியகைகளை யோங்கிக்கொண்டு, நெடுவான் உற நிமிர்ந்தான் - (தனது பெருவடிவம்) பெரிய ஆகாயம்முழுதும் நீரம்பும்படி மேலோங்கினன்; (எ - று.)

அநுமான் மற்றையோர்க்கு அபயமளித்து அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே ஆண்சிங்கம்போலக்கிளம்பிப் பிலம்முதல் ஆகாயம்வரையில் ஒரே வழியாகத் திறக்குமாறு தனது கைகளைத் தூக்கிக்கொண்டு பெருவடிவமெடுத்து நிமிர்ந்தன னென்க. ''எள்ள லிளமை பேதைமை மடனென்று, உள்ளப் பட்ட நகை நான் கென்ப'' என்று கூறப்பட்டுள்ள நால்வகை நகையினுள், இங்கு அநுமானது நகை எள்ளல்பற்றியது; இதனால், அநுமானது வருத்தமின்றி எளிதில் தொழில்முடிக்குந்திறமை விளங்கும். காறுதல் - தோன்றுதல். 'மறையோர்' என்ற பாடத்திற்கு - வேதங்களில் வல்ல புருஷ சிரேஷ்டனான அநுமான் என்பது, பொருள். மடங்கல் - பிடரிமயிர் மடங்கியுள்ளது என, ஆண்சிங்கத்திற்குக் காரணக்குறி.

'எனச்சொலி,' 'ஒடுங்கலில் பெருந்தவறுயர்ந்தவருவப்ப,' 'நெடுங்கைகள்சுமந்து' என்பன பாடாந்தரங்கள். (சுஅ)

[இதுவும், அடுத்தகவியும் அப்போதைய அநுமானது தோற்றத்தைக் கூறும்.]

சுகூ. எருத்துயர்சுடர்ப்புயமிரண்டுமெயிறன்ன
மருத்துமகனப்படியிடந்தவளர்ந்தான்
கருத்துநிமிர்கண்ணினெதிர்கண்டவர்கலங்க
வருத்தலகெடுத்தகருமாவினையுமொத்தான்.

(இ ள்.) மருத்து மகன் - வாயுகுமாரனுகிய அநுமான், எருத்து உயர் சுடர் புயம் இரண்டும எயிறு என்ன - பிடரியின இருபக்கத்திலும் உயர்ந்த ஒளியையுடைய (தனது) கைகளிரண்டும் இரணடுகோரதந்தம்போலி விளங்க,—நிமிர் கண்ணின் எதிர் கண்டவர் கருத்து கலங்க - சிறந்தவறுப்பாகிய தண்ணினுலே பிரதியட்சமாகக் கண்டவா மனங்கலங்கும்படி, அ படி இடந்து உறவளர்ந்தான - அந்தப் பிலதலினமேல் தலத்தைப் பிளந்துகொண்டு ஒங்கி வளர்ந்தவனுய்,—உருத்து உலகு எடுத்த - கோபங்கொண்டு நிலவுல கதனை (த் தனது கோரதந்தத்தினுறை பாதாளத்தினினறு) எடுத்து வந்த, கரு மாவினையும் - பெரிய வடிவமுடைய மகாவராகத்தையும், ஒத்தான்—.

அநுமான், தனது இருகைகளும் கோரதந்தமபோல் விளங்க, கண்டவர் கலங்குமாறு பூமியினுள்ளிருந்த, பிலதலினினறு நிலத்தைப் பிளந்துகொண்டு வெளிவந்த தோற்றத்தால், தனது கோரதந்தத்தினுல் பாதாளலோகத்தில் அமுந்திகிடந்த பூமியைக் குத்தியெடுத்துக்கொண்டு வெளிவந்த திருமா லின் வராகாவதார வடிவதனைப் போனறன னெனக. எருத்து - பிடர். மூன றுமடியை 'உருத்துலகெடுத்த' எனறதனுலும இயைகவுமாம. 'மா'எனும் விலங்கின பொதுபெயா, இங்குச் சிறப்பாய்ப் பனறியைக் குறித்தது. கரு மை - இங்கு, பெருமையினமேல தெனக; கருநிறமான பனறி யெனறே கொள்ளினுமாம்.

'உலகெடுத்தகருமா' என்பதி லடங்கியுள்ள கதை:—இரணியனது உடன்பிறந்தவனுன இரணியாக்ஷனெனனுங கொடிய அசுராஜன தன் வலி மையாற் பூமியைப் பாயாகச்சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில்மூழ்கிச் சென்றபோது தேவா முனிவா முதலியோரது வேண்டுகோளினுல் திருமால் மகாவராகருபமாகத் திருவவதரித்துக கடலினுட்புகு அவனசுரனை காடிக் கண்டு பொருது கோட்டினுறகுதிக கொனறு பாதாளலோகத்தைச் சார்ந் திருந்த பூமியை அங்குனினறு கோட்டினுற் குதறியெடுதது கொண்டு வந்து பழையபடி விரிததருளின னெனபதாம. இப்பொழுது நடக்கினற சுவேத வராகல்பத்திற்கு மூன்றின பாத்மகல்பதைப்பற்றிய பிரளயத்தினிறுதியில் ஸ்ரீமந்நாராயணன எகார்ணவமான பிரளயஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைத்து ஸ்ரீவராகாவதாரதைச செய்தருளிக் கோட்டினுனி யாற் பூமியை யெடுத்துவந்தன னென்ற வரலாறும் உண்டு:

'எருத்துயர்சுடர்ப்புயம்,' 'இப்படியிடர்ந்து,' 'கருத்தினிமிர்,' 'கருத்து நிமிர்கதிர்கண்டவர்கலங்க,' திருமாலினையும்' என்பன பிரதிபேதம்.

೮೦. மாவடிவுடைக்கமலநான்முகன்வகுக்குந்
தூவடிவுடைச்சுடர்கொள்விண்டலைதாளைக்கு
மூவடிகுறித்துமுறையிரடி முடித்தான்
பூவடிவுடைப்பொருவில்சேவடிபுனைந்தான்.

(இ - ள்.) மா வடிவு உடை கமலம் நால்முக - சிறந்தவடிவையுடைய (திருமாலின் நாபீ கமலத்தில் வாழ்கின்ற நான்கு முகங்களையுடைய பிரம தேவன், வகுக்கும் - படைத்தவளை, தூ வடிவு உடை சுடர் கொள் விண் - பரிசுத்தமான தேற்றமுடைய (சூரியனமுதலிய சுடர்களை) த் தன்னிடத் திற் கொண்ட ஆகாயத்தினை, தலை - மேல்முகட்டை, தாளைக்கும் - தொளைத்தவரூடருவிச்சென்றதாகிய, மூ அடி குறித்து முறை ஈர் அடி முடித் தான் பூ வடிவு உடை பொருவுஇல சே அடி - (வாமனரூபி மகாபலிசக்கர வர்த்தியினிடத்தில்) மூன்றடிமணவேண்டுமென்றுயாசித்துப்பெற்று உடனே முறையாக (வானத்தையும் பூமியையும் தனது) இரண்டடியால் அளந்து கொண்ட (திரிவிக்கிரமாவதாரமெடுத்த) திருமாலினது அழகிய வடிவை யுடைய ஒப்பற்ற சிவந்த திருவடியை, புனைந்தான - ஏத்தினான; (எ - று.)

தொளைக்கும் சேவடி என இயையும். வானத்திலோங்கிய திருமாலின் திருவடி - அவ்வாறு வானத்தையளாவிவளர்ந்த அந்மானது வடிவத்திற்கு ஏற்றஉவமையாதல் காண்க. அந்மானுக்குத திருவடியெனறே ஒருபெய ரிருத்தலால், அப்பெயர்க்கு வேறுவகையாகக் காரணப்பெருளுரைப்பார் போன்று அவவாறுருணித்தன ரெனனலாம்; ஆகவே இவ்வுவமையணி யில் பிரிநிலைநவிற்சியணி தொனிக்கு மெனக. தூவடிவுடைச்சுடர்கொள் விண் நிர்மலமானதும் சூரியசந்திராதிகளான சுடர்கள் சஞ்சரிக்கப்பெற்றது மான ஆகாயம். 'புனைந்தான' எனற பாடத்திறகு—தூவடி.....மூடித்தான் .....சேவடி - விஷ்ணுபத மெனற பேரையுடைய ஆகாயகங்கையை, புனைந்தான - (தான் ஒங்கி வளர்ந்ததனால்) அலங்கரித்தான என்று பொருளாம்.

'மூவடிகுறித்து முறையிரடி முடித்தான்' என்பதில் அடங்கிய கதை:— மகாபலியெனனும் அசுரராசன தனவலலமையால் இந்திரன முதலிய யாவ ரையும் வெனறு மூவுலகங்களையும் தனவசப்படுத்தி அரசாணடு செருக்குக் கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள நீருமாலேச்சரணமடைந்து வேண்ட, அப்பெருமான குளலவடிவான வாமனவதாரங்கொண்டு அந்தப் பலியினிடஞ் சென்று தனகாலடியால மூவடிமண்வேண்டி அதுகொடுத் தற்கு அவன இசைந்தவுடனே திரிவிக்கிரமனுக ஆகாயத்தையளாவி வளர் ந்து, ஓரடியாற பூலோகத்தையும் மற்றோரடியால மேலுலகத்தையும் அள ந்து மூனறுமடிக்காக அவனமுடியிற காலைவைத்து அவனைப் பாதாளத்தி லழுத்தி அடக்கின ெனனபதாம. இவ்வரலாறறால், கொடியவரை யடக்கு தறகு வேண்டிய தந்திரம் வல்லவ னென்றவாறு.

'மூவடிகுறித்த' என்று சில பிரதிகள். (எ೦)

[அநுமான் பிலத்திலிருந்தநகரத்தை மேல்கடலிலேறிந்து ஆவாரித்தல்.]

ஏக. ஏழிருபதோசனையிடநதுபடியின்மேம்
ஊழுறவெழுந்ததனியும்பருமொடுங்கப்
பாழிநெடுவன்பிலனுணின்றுபடர்மேல்பா
லாழியினெறிந்தநுமவ்வோகையனைவார்த்தான்.

(இ - ள்.) அநுமன்—, ஏழ் இருபது ஓசனை இடந்து - நூற்றுநாற்பது யோசனைதூரம் பிளந்துகொண்டு, பாழி நெடு வலி பிலனுள் நின்று படியின் மேல் ஊழ் உற எழுந்து - உள்ளழுந்த மிகுந்த வலிய பிலத்திலிருந்து பூமியின்மேல முறையாக எழுந்து வந்து, (பிறகு), அனனை - அந்தப்பிலநகரத்தை, உம்பரும் ஒடுங்க - (தாணுக்ஷுரர்) தேவர்களும் அஞ்சிநடுங்குமாற, படர் மேல் பால் ஆழியின எறிந்து - பரந்திய மேற்றிசைக்கடலில் விசிபெறிந்து, மேகம் என ஆர்ததான - மேகம்போல ஆரவாரித்தான், (எ - று)

அநுமான் பிலத்தைப் பிளந்து வெளிவந்து, பயனிலலாமற்கிடந்த அப் பிலநகரத்தை மேலேகடலி லெறிந்து கொகுத்தான என்பதாம். ஏழ் இருபது - ஏழோடுகூடிய இருபது எனக கொள்க. இருபதிற்கு ஏழினிறு மாம. ஊழுறவெழுந்து - சிறிதும வருத்தமின்றி மேலெழுந்து எனபபடி. அநுமானது அப்பொழுதைய லீலையைக கண்டு தமகு யாது தீங்குவருமோ வென்று தேவாகளும அஞ்சி நடுங்குவாராயின ரெனக. உமபர் - மேலிடம்; அதிலுள்ளாாக்கு இடவாகுபெயர.

'ஏழிருபதோசனையெயாதி,' 'உம்பருமுவப்ப,' 'படமேல்பால்,' ஆழி யெனவாதான' எனபன பாடாந்தரங்கள். (எக)

[யாவரும் வெளிவந்து நம்தமக்கு உரியவழியில் செல்லத்தொடங்குதல்.]

ஏஉ. இன்னமுளமேலகடலியகல்லிலிதீவா
நினறுநலிபெறுமளதுநீணுதலிபோதெ
குனறுபுரை தோளவரெழுநதிநிறங்கொளவார்
பொன்றிணிவிசுமபினிடைநன்னுதலிபாலுள.

(இ - ள்.) (அநுமானால் வீசியெறியப்பட்ட அநதப்பிலநகரமான து),— மேல் கடல் - மேறறிசைக்கடலில், இபபரு நில பல தீவு ஆ - அழிவிலலாத பிலத்தீவெனபு பெருளளதாக, இனறும உள நினறு - இப்பொழுதும் உள்ளதாயிருந்து, நிலெபறறு உளது - நிலெலபறறிருக்கிறது; நீள நுதலி யோடும் - நீணடநெறறியையுடைய சுபமபிரபையோடும, குனறு புரை தோளவர் - மலைகளேபோனற தீரளகளெனபுடைய வானரவீரர்கள, எழுந்து - அங்கு நின்று வெளிவந்து, நெறி கொணடார் - (தாம்செல்லுதறகு உரிய) வழியை நிதானித்துகொணடாரகள; (அப்பொழுது), நல் நுதலி - அழகியநெறறியையுடைய அந்தச் சுபம்பிரபை, பொன திணி விசும்பினிடை போனன் - பொனமயமாய் நெருங்கின தேவலோகத்திறகுச செல்லத்தொடங்கினள்; (எ - று.)

உள - உளதுஎன்பதன் விகாரம். தீவு=த்வீபம்; வடசொல்: இருபக்கத்திலும் நீரையுடையது எனறு அவயவப்பொருள். நெறிகொள்ளுதல் -

செல்லவேண்டியவழியை மனத்தில் ஆராய்ந்தறிதல். இருள்மண்டிக்கிடந்த பிலத்துவாரத்திற் புகுந்து பிலகரத்திலிருந்தபோது மேற்செல்லவேண்டியதைப்பற்றிய எண்ணமே யறறிருக்குமாதலால், அங்குகின்று வெளிப்பட்ட பின்னர், இனிச்செல்லவேண்டிய நெறியைப்பற்றி வாநரர்க்கு மனத்தினுல் நிதானித்துக்கொள்ள வேண்டியதாயிறறென்க. விசும்பு - ஆகாயத்திலுள்ள தேவலோகத்திற்கு இடவாகுபெயர்.

அநுமான முதலியோர் தென்திசையிற் பலவிடங்களிலும் பிராட்டியைத் தேடிக்கொண்டு செலலுகையிற பசிதாகங்களினுல வருந்தியளைத்துக் களைத்து தண்ணீர்பறறும விருப்பினராய், குகைபிலமெனனும பெரும்பிலத்தினுள் நுழைந்து வெகுசிரமப்பட்டு உள்ளேசெலறு பொனமயமானதொருவனத்தையடைந்து அங்கு இருந்த ஸ்வயமபிரபையெனனும் தவப்பெண்ணைக் கண்டு விஞ்சி, அந்தவனம மயனெனனும அசுரசிறபியினுல் நிருமிக்கப்பட்டதெனறும அவளுற காதலிக்கப்பட்ட ஹேமையெனனும் அப்ஸரஸ்திரீகளு உரியதாயிறறெனறும உணர்ந்தபின்பு, தங்களை அப்பிலத்திற்குவெளியே கொண்டுவிடுமபடி அந்தச சுயமபிரபையையே பிரார்த்திக்க, அவள் இவர்களைக கண்களை மூடிக்கொள்ளச்செலலித் தனது தவமகிமையால் வெளியேகொண்டுவந்து சோததிட்டனளென்று முதனூலிற கூறியுள்ளது. (எஉ)

[சுயம்பிரபை அநுமானைப்புகழ்ந்து சுவர்க்கஞ்சேர்தல்.]

எக. மேருவரைமாமுலையணமெனசொலினள்விஞ்சு
மாருதியினைப்பலவுவகதுமகிழ்வுற்ற
யேருறுசுயமபிரபைமீயமைநெறியெய்தத்
தாருவளர்பொறறலனிடைக்கடிதுசார்ந்தாள்.

(இள்.) மேரு வரை மா முலையள - மகாமேருமலைபோன்ற பெரிய தனங்களையுடையவளாகிய, வாயது சுயமபிரபை - அழகுமிக்க சுயம்பிரபையானவள், மெல சொலினள - இனிய சொறகளையுடையவளாய், விஞ்சு மாருதியினை பல உவகது மகிழ்வுறறு-(யாவரினும) மேம்பட்ட அநுமானைப் பறறிப பலவாறுக முகமனகூறிமகிழ்ந்து, எமை கேறி எய்த - (தனதுதோழியாகிய) எமையெனபவள வாழ்கின்ற இடததை யடையுமாறு, தாரு வளர் பொன தலனிடை கடிது சாரநதாள - கறபகத்தருக்கள வளரப்பெற்ற பொன்மயமான தேவலோகததுல விரைநது சென்றுசேரநதாள; (எ - று.)

மேலுலகஞ்செல்லவிரும்பிய சுயமபிரபை, தனக்குச் சாபவிமோசனம் பிறக்குமாறுசெய்து பலவழியைததிறந்து வழிகாட்டிய மகோபகாரத்தினை அநுமானைப்பற்றி உளளமுவந்து பலவாறுபுகழந்து விடைபெற்று, தனது தோழியாகிய ஹேமையுளள சுவர்க்கலோகத்தைச சேர்ந்தனளென்பதாம். எமை - ஹேமா : பொனனிறமானவள் என்று பொருள்படும். தாரு - தரு வெனபதன நீட்டல்; எதுகைநயம்பறறியது.

இச் செய்யுள்சிலபிரதிகளில் இல்லை. (எக)

[வாநார் போய்கைக்கரையைச் சேர்தலும், சூரியன் அஸ்தமித்தலும்]

எச. மாருதிவ லித்தகைமை பேசிமற வோரும்
பாரிடைந டக்குபக லெல்லிபட ரப்போய்
நீருடைய பொய்கையினி னீள்கரைய டைந்தார்
தேருடைநெ டுந்தகையு மேலிமலி சென்றான்.

(இ - ன்.) மறவோரும் - பராக்கிரமசாலிகளான வானராகளும், மாருதி வலி தகைமை பேசி - அநுமானது பலத்தினதன்மையைப் புகழ்ந்து பேசிக் கொண்டு, பகல் எல்லி படர பாரிடை நடந்து போய் - ஒன்றைப்பகல் முழுவதும் பூமியில் நடந்துசென்று, நீர் உடைய பொய்கையினில் நீளீ கரை அடைந்தார் - நீர்நிறைந்த பொய்கையினது நீண்டகரையைச் சேர்ந்திருந்தார்கள்; (அப்பொழுது), தேர் உடை நெடுந் தகையும் - (வானத்திற்செல்லுக்) தேரையுடைய பெருமைக்குணமுடையவனுகிய சூரியனும், மேலிமலி சென்றான் - மேற்குத்திசையிலுள்ள அஸ்தகிரியைச் சேர்ந்தான்; [அஸ்தமித்தான் என்றபடி]; (எ - று.)

பிலத்திற் பேரிருட்பிழம்பிலகப்பட்டுத் திகைத்தபோது தங்களுக்குவழி காட்டிக் காத்தனலும், பிறகு பிலத்தையிடித்துச் சுயம்பிரபைக்கும் தங்களுக்கும் வெளிச்செல்லும் வழியைக் காட்டியதனலும, வானரவீரர், அநுமானது வலிமையைப் புகழ்ந்தன ரென்க. மறவோரும், உம்மை-கதைப்பொருளைத்தழுவிவந்த இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. மறவோர் - மறத்தையுடையவர்; மறம் - வீரம். பகலெல்லிபடர - பகற்பொழுதின முடிவெல்லைவரையிலும் பாவு; ஆகவே, பகற்பொழுது முழுதும் என்றபடி. வானத்திற்செல்லவல்லதாய் ஸம்வத்ஸரருபமான ஒற்றைச்சக்கரம் பூண்ட தேரையுடைமையால், சூரியனை 'தேருடைநெடுந்தகை' எனறு சிறப்பித்துக் கூறினர். நெடுந்தகை - பண்புத்தொகையன்மொழி, மேலை, ஐ - சாரியை.

'கழியப்போய்,' 'பொய்கையெனுநேரியிடைநின்றார்,' 'பொய்கையெனும் பூமியிடைநின்றார்' என்று பாடாந்தரங்கள். (எச)

பிலநீங்குபடலம் முற்றிற்று.

பன்னிரண்டாவது

ஆறுசெல்படலம்.

அஃதாவது - வாநரவீரர்கள் பிலத்தினின்று நீங்கியபின்பு சுக்கிரீவ மாகாராஜன்குறித்த வழியே சென்றதைக் கூறும் பாகம். இப்படலத்தில், அங்கதப்பெருமான் பொய்கைக்கரையிலிவாழுந் தும்பிரனென்ற அசுரனைக் கொன்றனனது பிறகு வாநரவீரர் யாவரும் அங்குநின்று பலவிடங்களிலும் பிராட்டியைநாடி மகேந்திரமலையைச்சார்ந்த செய்தி கூறப்படுகின்றது. 'ஆம்றுப்படலம்' எனவு சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

வேறு.

[வாநரர் பொய்கையையடைந்து நீர்முதலியன உண்டு உறங்குகையில், ஓரசுரன் வருதல்]

க. கண்டார் பொய்கைக் கண்ணக னண்ணீர் கையார
வுண்டார் தேனு மொண்கனி காயு மொருசூழற்
கொண்டா ரன்றே விண்றுயில் கொண்ட குறியுன்னித்
தண்டா வென்றித் தானவன் வந்தான் றகவில்லான்.

(இ - ள்.) கண்டார் - (அவ்வாறு பொய்கையைக்) கண்டவர்களாகிய வாநரவீரர்கள்,—பொய்கைகளண் அகல் நல் நீர் கை ஆர உண்டார் - அப் பொய்கையிலுள்ள பரவிய நல்லநீரை (த்தமது) கைகளிறைய எடுத்துப் பருகினர்கள்; தேனும் ஒள் கனி காயும் (உண்டார்) - (அதன்கரையிலுள்ள) தேனையும் நல்ல கனிகளையும் காய்களையும் தின்றார்கள்; ஒரு சூழல் - அங்குஓரிடத்தில், இன் துயில் கொண்டார் - இனிதுறங்குதலைகொண்டார்கள்; கொண்டகுறி உணனி - (அவ்வாறு வாநரர்கள் வந்து) படுத்து உறங்குகின்ற செய்தியை யினைத்து, தண்டா வென்றி - நீங்காத வெற்றியையுடைய, தகவு இல்லான் - நற்குணமில்லாதவனாகிய, தானவன - அசுரனெருவன், வந்தான் - (அவ்விடங்களுக்குங்கின்ற இடத்தைநோக்கி) வாலானன்; (எ - று.)—அன்றே - தேற்றம்; ஈற்றசையுமாம்.

வாநரவீரர்கள் தாங்கள் வந்துசேர்ந்த பொய்கையின்கரையிலே காய் கனி முதலியவற்றை யுண்டு நீர்பருகி அயர்ந்து நித்திரைசெய்தனராக, அப் போது ஒருஅசுரன் அதனையறிந்து அங்குவாலாயின னென்க. அவன் பெயர் தும்பிரனென்பது, மேலே 60-ஆங்கவியில் விளங்கும். உண்ணுதல் தினனுதல் பருகுதல் நக்குதல் என்ற உணவுத்தொழில்வகை நான்கற்கும் பொதுவாகவும், உண்ணுதற்றொழிலொன்றற்குமே சிறப்பாகவும் நிற்றற்குரிய உண்ணுதல். இங்குப் பொதுப்பொருளோத் தந்தது.

'கரைகாமுற்று,' 'இன்றுயில்குன்றிற்குறியெய்தி,' 'தண்டார்வென்றி,' 'தகைவில்லான்' என்பன - பாடாந்தரங்கள்.

இதுவும், அடுத்தகவியும் - மூன்றஞ்சீர் விளச்சீரும், ஈற்றுச்சீர் காய்ச்சீரும், மற்றைமூன்றும் மாச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (க)

[இதுழதல் முன்றுகவிகள் - அவ்வகூனது வருணனை.]

உ. மலையே போல்வான் மால்கட லொப்பான் மறமுற்றக்
கொலையே யொப்பான் கூற்றைநி கர்ப்பான் கொடுமைக்கோர்
நிலையே போல்வா னீர்மையி லாதா னிமிர்திங்கட்
கலையே போலுங் காலவெ யிற்றான் கனல்கண்ணன்.

(இ-ள்.) (அவவகூரன்),-மலையேபோல்வான்-(பெருந்தோற்றமுடை மையால்) மலையை யொத்தவன்; மால் கடல் ஒப்பான்-(தேகத்தின்பரப் பாலும் கருநிறத்தாலும்) பெரிய கரிய சமுத்திரத்தை யொப்பவன்; மறம்முற்ற கொலையே ஒப்பான் கூற்றை நிகர்ப்பான் - கொடுமைமிகுத லால் கொலைத்தொழிலை யுடன்படுபவனுகிய யமனை யொத்திருப்பவன்; கொடுமைக்கு ஓர் நிலையே போல்வான் - க்ரௌர்யகுணத்திற்கு ஓர் இருப்பிடத்தை யொத்திருப்பவன்; நீர்மை இலாதான் - நற்குணஞ் சிறிதுமில்லாதவன்; நிமிர் திங்கள் கலையே போலும் காலம் எயிற்றான்-வானத்தில்தோன்றுகின்ற சந்திரனது பிறையைப்போன்றனவும் விஷம் போற் கொடியனவுமான பற்களையுடையவன்; கனல் கண்ணன்-கோபாக்னிசொரியுங கண்களையுடையவன்

'போல்வான்' முதலியவற்றைப் பெயராகக்கொண்டு, 'போல்பவனும் ....கண்களையுடையவனு மாகிய தானவன் வந்தான்' எனக் கீழ்க்கவியோடு இயைப்பினு மாம். இவ்வாறே மேற்கவியிலுங் காண்க.

மால் - இரட்டுறமொழிதலாய், கருமை பெருமைகளை யுணர்த்திற் றென்னலாம். மறம்-பாவமுமாம் 'கொலையேயொப்பான்' எனத் தனியாக எடுத்து-கொலைத்தொழிலையே போன்றவ னெனினுமாம். கொடுமைக்கு ஓர் நிலையே போல்வான் - கொடுந்தன்மைகட்கெல்லாம் பிறப்பிடமானவ னென்றபடி. கலை - சந்திரனது பாகம். காலம் - கருநிற முள்ள விஷம், இங்கு, கொடுமைக்கு இலக்கணை காலன் எயிற்றான் என்றுபிரித்து - யமனதுகோரப்பற்கள்போன்ற கோரப்பற்களை யுடையவ னெனினுமாம்.

'மறமுற்றி', 'கொலையேசெய்வான்,' 'கொலையேபோல்வான்,' 'நிறைநிலைகள்' என்பன பாடாந்தரங்கள்.

வேறு.

ரு. கருவி மாமழை கைக டாவிமீ
தருவ மேனிசென் றுலவி யொற்றலாற்
பொருவின் மாரிமே லொழுகு பொற்பினு
லருவி பாய்தருங் குன்ற மேயனன்.

(இ - ள்.) (அவவகூரன்);—கருவி மா மழை - (உலகம்முடத்தற்கு) முதற்காரணமாகிய பெரிய மேகங்கள், கைகள்மீது தாவி-(தனது) தோள்களின்மேல் தாவியும், உருவம் மேனி சென்று உலவி - பெருந் தோற்றத்தையுடைய (தனது) உடலின்மேற் சென்று உலாவியும், ஒற்றலால்-படிதலினலும்,—பொருவு இல் மாரி மேல் ஒழுகு பொற்பினல் - ஒப்பில்லாத மழைநீர் தன்மேற் பெருகுகின்ற அழகிய தோற்றத்தினு

லும்,—அருவி பாய்தரும் குன்றமே அனை - (மேகங்கள் தன்மீது தவழப்பெற்று) நீரருவிபாய்கின்ற மலையை யொத்தவன்; (எ - று.)

அவவசுரனது தோள்களின்மீதும் உடம்பின்மீதும் மேகங்கள் தவழ்ந்து பெருகுமாறு மழைநீரைப்பொழிதலால், மேகங்கள் தன்மீது சஞ்சரிக்கப்பெற்று நீரருவிபாயும்மலை அவனுக்கு ஏற்றஉவமையாம். "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" என்றபடி உலகம் இடையறாது நடத்தற்குக்காரணமாய்நிற்றலால், 'கருவிமாமழை' எனப்பட்டது; உருவ-ஊருவும்படி, மேனி சென்று உலவியொற்றலால் எனவும்உரைக்கலாம்.

'உருவிமீதுசென்றுலவியொற்றலின்,' 'பொருவில்வாரி,' 'அருவி ஆதரிக்கும்' என்பன பாடாந்தரங்கள்.

இதுமுதல் இருபத்துமூன்று கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் மாசசீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் விளச்சீர்களுமாகிய அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (க)

சு. வானவர்க்குமாற்றவர்வலிக்குநேர்
தானவர்க்குமேயரியதன்மையா
னனவக்கலனவனெடாடவே
றேனவர்க்குமொன்றெண்ணவொண்ணுமோ.

(இ - ள்.) வானவர்க்கும்-தேவர்கட்கும், அவர் வலிக்கு நேர் தானவர்க்குமே - அத்தேவர்களது வலிமையைப் போன்ற வலிமையையுடைய அசுரர்கட்குமே, அரிய - வெல்லுதற்குக்கூடாத, தன்மையான ஆன - வலிமைத தன்மையுடையவனுகிய, அகலன் அவனெடு - துஷ்டனுகிய அவவசுரனேடு, ஆட - போர்செய்வதற்கு, வேறு எனவர்க்கும் - மற்றும் எத்தன்மையுடையவர்க்கும், ஒன்று எண்ண ஒண்ணுமோ - சிறிதேனும் நினைக்க முடியுமோ? (எ - று.)—மற்று - அசை.

அவவசுரனேடு போர்செய்தல் தேவர்கட்கும் அசுரர்கட்குமே முடியாதென்றால், மற்றையெவரால்தான் முடியும்? ஒருவராலும் இவனேடு போர்செய்துவெல்லுதலை நினைத்தலும் முடியாதென்பதாம். இச்செய்யுளில் தண்டாபூபிகாநியாயத் தொனிக்குமாறு கூறியது-தொடர்நிலைச்செய்யுட் பொருட்போராயின் பாற்படும். மற்றவர்வலிக்குநேர்தானவர் - அத்தேவர்களின் வலிமைக்கு மாறுநிற்கின்ற அசுரர் எனினுமாம். கலன் - துஷ்டன்; வடசொல். 'புட்கலனவனெடு' என்ற பாடம்-புஷ்டியுள்ளவனுகிய அவவசுரனேடு என்றும், 'புட்கலன்மகனெடு' என்றும், 'புட்கலன்மகனெடு' என்ற பாடம்-புஷ்கலனென்பவனதுமகனுகிய அத்தத்துமிரனேடு என்றும் பொருள்படும். அவவசுரனுக்கேபுஷ்கலனென்றும் துமிரனென்றும் இருபெயருண்டு எனக் கூறுவாருமுளர்.

'ஆடவே' யேனையர்க்கும்' என்று சிலபிரதிகள். (சு)

[அவ்வசுரன் உறங்குகின்ற வானரவீரரை யடைதல்.]

டு. பிறங்குபங்கியான்பெயரும்பெட்பினிற்
கறங்குபோன்றுளான்பியையுங்கையினு
னறங்கொள்சிந்தையார்நெறிசெலாய்வினு
லுறங்குவாரைவந்தொல்லையெய்தினன்.

(இ - ள்.) பிறங்கு பங்கியான் - விளங்குகின்ற. செம்பட்டமயிரையுடையவனும், பெயரும் பெட்பினில் கறங்கு போன்று உளான்செல்லுகின்ற தன்மையினுற் காற்றுடியை யொத்துள்ளவனும், பியையும் கையினன் - பிசைகின்ற கைகளையுடையவனு மாகிய அவ்வசுரன்,—அறம் கொள் சிந்தையார் நெறி செல் ஆய்வினல் உறங்குவாரை-தரும சிந்தையுள்ளவர்களும் வழிநடந்த இளைப்பினல் நித்திரைசெய்கின்றவர் களு மாகிய அவ்வானரரை, ஒலலை வந்து எய்தினன் - விரைவாக வந் தடைந்தான்; (எ - று.)

இராமகாரியத்திற் கருத்தாய்ச செல்லுதலால், வானரரை 'அறங் கொள் சிந்தையார்' என உயர்த்திக்கூறினர். பியை=பிசை: போலி. கைபிசைதல் - கொடுமைகருதி. ஆய்வு - வருத்தம்.

'பெயரும்வேகத்தால்,' 'பிசையுங்கையினன்,' 'நெறிசெலோய்வினல்' என்றும் பாடம். (கு)

[அவ்வசுரன் அங்கதனை மார்பிலறைதல்.]

கூ. பொய்கையென்னதென்றுணர்ந்தும்புல்லியோ
ரெய்தினர்கள்யாரிதுவெனுவெனு
வையனங்கதனலங்கன்மார்பினிற்
கையின்மோதினனன்காலனேயனன்.

(இ - ள்.) காலனே அனன் - யமனேயொத்தவனுகிய துமிரனென்ற அந்த அசுரன்,—'பொய்கை என்னது என்று உணர்ந்தும - இந்தத்தடாகம் எனனுடையதென்று அறிந்திருந்தும், எய்தினர்கள் - இங்குவந்து சேர்ந்தவாகளாகிய, புல்லியோர் - அற்பபுத்தியுள்ளவர்கள், யார்-எவர்? ஆ இது என்'ஆ இது என்னவியப்பு!'எனு-என்று சொல்லிக்கொண்டே, ஐயன் அங்கதன் அலங்கல் மாபினில் - சிறந்தவனுகிய அங்கதனது மலர்மாலையை யனிந்த மாபிலே, கையின் மோதினன் - கையினல் அறைந்தான்; (எ - று.)

'இப்பொய்கை எனதென்று பிரசித்தமாயிருக்கவும், இங்கு வந்து சேர்ந்தவர்கள் அறிவில்லாதவர்களே; இப்படியும் அறிவில்லாதவர்கள் இருக்கின்றாகளே!' என்று மிகக செருக்கினுற் கூறிக்கொண்டே, அயர்ந்து உறங்குகின்ற அங்கதனது மார்பில் ஓரறையறைந்தனன் துமிரனென்பதாம். தனது பெருமையை யாவரு முணர்வ தென்ற செருக்கினல், 'பொய்கை யென்ன தென்றுணர்ந்தும்' எனக் கூறினன். ஆ-வியப்பிடைசசொல். இனி, இது என்ஆ(று) என்று எடுத்து - இவர்கள் இங்கு வந்ததற்குக் காரணம் யாது? என்று உரைத்தலு மொன்று.

'உணர்ந்து,' இதுவெனுவெனு' என்று சிலபிரதிகள். (க)

[அங்கதனுல் அவ்வசுரன் இறத்தல்.]

எ. மற்றிமைந்தனுமுறக்கமாறினு
னிற்றிவன்கொலாமிலங்கைவேந்தனு
வெற்றினுனேநெறெற்றினனவன்
முற்றினுனிகற்காதிமூர்த்தியான்.

(இ - ள்.) மற்று-பிறகு, இ மைந்தனும்-வீரனுகிய இவ்வங்கதனும், உறக்கம் மாறினன்-நித்திரைதெளிந்தவனும்,இன்று இவன் இலங்கை வேந்து-கொல் ஆம்.'இப்பொழுதுவந்துள்ள இவனே இலங்கைக்கு அரசனுகிய இராவணன்போலும்,' எனு-என்றுகருதி, எற்றினனே - தன்னை யறைந்தவனுகிய அவ்வசுரனே, நேர் எற்றினன்-தானும் அதற்குமாருக அறைந்தான்;(அவ்வாறுஅறையவே),-இகற்கு ஆதி மூர்த்தியான்அவன்-போர்த்திறத்தில் முற்பட்டுநிற்கும் தோற்றமுடையவனை அவ்வசுரன், முற்றினன்-இறந்தான்; (எ - று.)

துமிரனென்ற அவ்வசுரனு லறையப்பட்ட அங்கதன்,துயிலுணர்ந் தெழுந்து அவனை இராவணனென்றே கருதி, அவனது மாபி லறைதலும்,அவ்வசுரன் கீழ்விழுந்து இறக்கலாயின னென்க.இதற்குஆதிமூர்த்தியான் என்பதற்கு - பராகிரமத்திற்குரிய ஒருகடவுள் போனறவனெனினுமாம்.இற்று இவன் என்பதற்கு-இத்தன்மையையுடைய இவனென்று கூறுவாருமுளர்; இற்றுஎன்பது அஃறிணையொன்றன் பாற்பெயரும்,இவன் என்பது உயர்திணையாண் பாற்பெயரு மாதலால், திணைவழுவாம். முற்றுதல்-ஆயுள் முடிந்து இறத்தல்.

'ஆதிமூர்த்திபோல்' என்றும் பாடம். (எ)

[அவ்வசுரன் இறந்து கீழ்விழுந்தவிசையினுல் வானரா
துயிலுணர்ந்து திரளுதல்.]

அ. இடியுண்டாங்கணேரோங்கலிற்றதொத்
தடியுண்டான்தளர்ந்தலறிவ்ழ்தலுந்
தொடியின்றோள்விசைத்தெழுந்துசுற்றினர்
பிடியுண்டாரெனதுதுயிலும்பெற்றியார்.

(இ - ள்.) ஆங்கண்-அப்பொழுது [அல்லது அவ்விடத்தில்], இடியுண்டு ஓர் ஓங்கல் இற்றது ஒத்த-இடிவிழுந்ததனுல் ஒருமலை வேர்பறிந்து விழுந்ததுபோல, அடியுண்டான் தளர்ந்து அலறி வீழ்தலும்-(அங்கதனுல்) அறையப்பட்டவனுகிய அவ்வசுரன் தளர்சியடைந்து அலறிக கொண்டே இறந்து கீழ்விழுந்தவுடனே,—பிடியுண்டார் என துயிலும் பெற்றியார்-(பேயினுற்)பிடிக்கப்பட்டவர்போல மெய்ம்மறந்து ஓங்குந் தன்மையுள்ள வானரர்கள், தொடியின் தோள் விசைத்து எழுந்து சுற்றினர்-தொடியென்னும் ஒருவகை வளையை யணிந்த தோள்களை விரைவாகத தட்டிக்கொண்டு எழுந்து (கீழே விழுந்துள்ள அவ்வசுரனைச)சூழ்ந்துகொண்டார்கள்; (எ - று.)

இடிவிழப்பெற்ற மலை சரிந்துஅழிதல்போல, அங்கதனுலறையுண்ட அசுரன் தரையிற்சாய்ந்து உயிரொடுங்க, வானரர்கள்யாவரும் அப்பொழுது தோன்றிய ஆரவாரத்தினுல் நித்திரைதெளிந்துஎழுந்து கீழ்விழுந்த அவனைச சூழ்ந்துகொண்டன ரென்பதாம். தோள்களைத்தட்டுதல்-வீரக்குறி. வழிநடந்த இளைப்பினுல் மெய்ம்மறந்து ஓங்குதல்பற்றி, வானரர்களை 'பிடியுண்டாரெனத் துயிலும் பெற்றியார்' என்றார்.

'ஒடியுண்டாஙகணேரோங்கல் வீழ்வதொத்து','தொடியின்றோள் விசைதெழுதி' என்பன பாடாந்தரங்கள். (அ)

[அநுமான் இறந்த அசுரனைப்பற்றி அங்கதனை வினவ, அதற்கு அவன் விடை கூறுதல்.]

கூ. யார்கொலாமிவனிழைத்ததென்னெனத்
தாரைசேயினைத்தனிவினவினன்
மாருதேயன்மற்றவனுமவாய்மைசா
லாரியாதெரிந்தறிகிலேனென்றான்.

(இ-ள்.)மாருதேயன்-வாயுவின்மகனை அநுமான், தாரை சேயினை-தாரையின்மகனை அங்கதனைநோக்கி,'இவன் யாரெகொல்-(இறந்து கீழ்விழுந்துகிடக்கும்)இவன் யாவனோ? இழைத்தது என்-(இவன்)செய்த்தது யாது?'எனை-என்று,தனி வினவினன்-தனியாக கேட்டான்,மற்றுபின்பு,அவனும் - அவ்வங்கதனும், (அநுமானைநோக்கி) 'வாய்மையால ஆரியா-சத்தியந்தவறுத பெரியோனே!தெரிந்து அறிகிலேன - (யான இவனைப்பற்றி)ஒன்றும் அறியேன்,'எனறான்-என்றுவிடைகூறினன்.

இவன்-மத்திமதீபம். மாருதேயன்-தத்திதாந்தநாமம். சால்-மிகுதி குறிக்கும் உரிசசொல்.

'யாரெகொலாமிவண்,' 'நிகழ்ந்ததென்' என்பன பாடாந்தரங்கள்.

[அவ்வசுரனதுவரலாற்றை ஜாம்பவான் எடுத்துரைத்தல்.]

க0. யானிவன்றனைத்தெரியவெண்ணினேன்
றூநிவந்தவேற்றுமிரனென்னும்பே
ரானிவவாழ்புனற்பொய்கையாளுமோ
தானவன்னெனச்சாம்பன்சாற்றினன்.

(இ-ள்.) (அதுகேட்டு),சாம்பன்-ஜாம்பவான்,(அநுமானைநோக்கி) யான் இவன்தனை தெரிய எண்ணினேனை-யான்அசுரனைப்பற்றி இனனெனன்று தெரியுமாறு நன்றுகஆலோசித்துப்பாத்தேன, (இவன்) தூநிவந்த வேல்துமிரன் என்னும் பேரான்-(பகைவரதுஉடலின்) மாசு சம்நிறைந்துள்ள வேலாயுததைத் தாங்கிய துமிரனென்னும் பெயரையுடையான்;இ ஆழ்புனல் பொய்கை ஆளும ஓர் தானவன்-ஆழ்நீர்நிலையையுடைய இத்தப் பொய்கையை ஆசாள்கின்ற ஓரசுரனவன்,' என சாற்றினன்-என்று சொனனன்; (எ - று.)

திருமால் திரிவிகிரமாவதாரஞ்செயத காலத்தில் அவன்திருவடி உலகத்திற் பரவியதைக் காணுமாறு ஜாம்பவான பலமுறை பூமியை வலம்வந்தவனுதலால உலகத்திலுள்ள பலவிஷயங்களையும தெரிந்தவனுதல் பற்றி, அவன் இவசுரனை இன்னனென்று வினவியறிந்திருந்தன னென்க. தூ-மாமிசம்.

'பேர், போனவன்', 'இவன்புனல்,' 'துமிரனென்னும்பேரான்' என்றும் பாடம். (க0)

[வாநரர் துயில்தெளிந்து சீதையைத் தேடத் தொடங்குதல்.]

கக. வேறுமெய்துவாருளர்கொலாமெனத்
தேறியின்றுயிற்செலவுதீர்ந்துளார்
வீறுசெஞ்சுடாக்கடவுள்வேலைவாய்
நாறநாண்மலர்ப்பெண்ணைநாடுவார்.

(இ - ள்.) செலவு தீர்ந்துளார்-மேற்செல்லுதலைத் தவிர்ந்து அங்கு இளைப்பாறிய வானரவீராகள்,—வேறும் எய்துவார் உளர் கொல் ஆம் எனு-இன்னும் இங்கு வேறுகவும் (இவனைப்போன்ற அசுரர் போர்க்கு) வருபவர் இருக்கிறார்களோ? என்று எண்ணி, இன் துயில் தேறி-(தமது) இனியதூககந்தெளிந்து,(அங்ஙனம் வருபவராளைச சிறிதுநேரம் எதிர் நோககியிருந்து பிறகு),வீறு செஞ் சுடா கடவுள் வேலைவாய் நாற-பெருமை பொருந்திய சிவந்த கிரணங்களையுடைய சூரியபகவான் கீழ்த்திசைக்கடலில் விளங்க [சூரியோதயமாக],நாள் மலர் பெண்ணைநாடுவார்-அன்றலர்ந்தது போன்றுள்ள[வாடாத]தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியின் அவதாரமான சீதாபிராட்டியைத் தேடுவாராஞர்கள்.

வானரவ்ரர் 'இன்னும் இவன்போன்ற அசுரர் வேறுயாரேனும் போர்க்கு வருதல்கூடும்'என்று தூங்காமல் விழித்துக்கொண்டு எதிர் பார்த்திருந்து சூரியனுதயமாகுந்தருணத்தில் சீதையைத் தேடுமாறு அங்குநின்று வெளிச செல்லலாஞர்க ளென்பதாம. வேறும் எய்துவார் உளாகொல்ஆம்-இத்துயிரனைததவிர வேறு இங்கு யார்தான் இருப்பார்? [இப்பொய்கை இவனுடைய தாகவேயிருகும்] என்று உரைப்பாரு முளர். பதினறுகிரணங்களையுடைய சந்திரனுக்கும், எழுகிரணங்களையுடைய அக்கினிக்கும்கொடுதலுவாங்கும் ஆயிரங்கிரணங்களையுடையவனுதலால், சூரியபகவானை 'வீறுசெஞ்சுடாக் கடவுள்'என்றார்.நாறுதல்-தோன்றுதல்.நாற நாடுவார் என இயையும். 'நாறு நாள்' என்ற பாடத்திற்கு-சூரியன் கடலில்தோன்றுகின்ற பகல் தொடங்கியதும், மலர்ப் பெண்ணை நாடுவா எனப் பொருள்காண்க.

'உளர்கொன்மேலென,' 'இன்றுயில்செய்தல்', 'பெண்ணைநண்ணினர்' என்று சிலபிரதிகள். (கக)

[வாநரவீரர் பெண்ணைநதியைச் சார்தல்.]

கஉ. புண்ணைவெம்முலைபுளினமேய்தடத்
துண்ணைவாம்பலினமுதமூறுவாய்
வண்ணவொண்ணகைத்தரளவாண்முகப்
பெண்ணைநண்ணினர்பெண்ணைநாடுவார்.

(இ - ள்.) பெண்ணை நாடுவார்-சீதாபிராட்டியைத் தேடுபவர்களாகிய வானரவீரர்கள்,—புளினம்-மணற்குன்றுகளாகிய, புள் நை வெம் முலை-சக்கரவாகப்பறவைகள் (ஒப்பாகாமையால்) வருந்துதற்குக் காரணமான விருப்பத்தையுண்டாக்குந் தனங்களையும், தடத்து எய் ஆம்பலின் - நீர் நிலையிற் பொருந்திய செவ்வாம்பல்மலராகிய, உண்ண அமுதம் ஊறு வாய்-அதரபானஞ்செய்யுந்தோறும் அமுதம்போன்ற இனிய

ரசம் சுரக்கின்ற வாயையும், தரளம்-முத்துக்களாகிய, வண்ணம் ஒள் நகை-அழகிய ஒளிபொருந்திய பற்களையும்,வாள் முகம்-(தாமரைமலரா கிய) ஒளிபொருந்திய முகத்தையுமுடைய, பெண்ணே-பெண்ணேநதியா கிய பெண்ணே, நண்ணினர்-சென்று சேர்ந்தார்கள்; (எ - று.) •

'பெண்ணே' என்பதி லுள்ள சிலேடைநயம்பற்றி,பெண்ணேநதியை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தினர்; இச்சொல் - நதியைக்குறிக்கும் போது இரண்டாம்வேற்றுமைத்தொகையும், மற்றொருபொருளில் இர ண்டாம் வேற்றுமை விரியுமாம். பெண்ணேநதியாகிய பெண்ணுக்கு— மணற்குன்றுகளைத் தன பாரங்களாகவும்,செவ்வாம்பல்மலரை வாயாக வும், முத்துக்களைப் பற்களாகவும்.தாமரைமலரை முகமாகவும் கொண் டன ரென்க:சிலேடையணியை அங்கமாகக்கொண்டுவந்த இயைபுரூ கவணி. பெண்ணேநண்ணினர் பெண்ணேநாடுவார் என்றஇடத்தில்,கார ணத்திற்கேற்ற காரியந் தோன்றியதாகக் கூறப்படுகின்ற தற்குறிப்பே ற்றவணி யுண்மை காண்க. ''அலம்புமாமணியாய்த் தோடகிலாளைபுனின, நலம் பெய்பூண்முலைநாகிளவஞ் சியாமருங்குற், புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற்கூந்தற், சிலம்புசூழுங்காற்சோணமாந் தெரிவையைசசேர்ந் தார்'' என்றவிடத்தும் நதியைப் பெண்ணாக உருவகஞ் செய்திருத்தல் காண்க: - 'புள்ளைநமுலை'என்றவிடத்தில், உவமையாதற்கு உரிய சக்கர வாகப்பறவையை உபமேயமாகிய தனங்களினும் தாழ்த்திக் கூறியது, எதிர்நிலையணியின் பாற்படும். 'வாள்முகம்'எனக் கூறியதனால்,'தாமரை யாகிய' என வருவித்து உரைக்கப்பட்டது. புளிநமென்பது-மணற்குன் றெனப் பொருள்படும் வடசொல். உயர்ச்சியில், தனங்களுக்குப் புளிநம் உவமையாம். பெண்ணே - வடபெண்ணே.

'உண்ணவுண்ண வின்னமிழ்த மூறுவாய்,' 'வண்ண வெண்ணகை,' 'பெண்ணேநாடுவார் பெண்ணேநண்ணினர்' என்பன பாடாந்தரங்கள்

[பெண்ணேநதியைச்சார்ந்தவிடங்களில்வாநரவீரர்கீதையைத்தேடுதல்.]

கஙூ. துறையுந்தோகைநின்றுடுசூழலுங்
துறையுஞ்சோலையுங்குளிர்ந்தசாரனீர்ச்
சிறையுந்தெள்ளுபூந்தடமுந்தெண்பளிக்
கறையுந்தேடினரறிவின்கோடியார்.

(இ - ள்.) அறிவின் கோடியார்-அறிவின்எல்லையை யடைந்தவரா கிய[பேரறிவினராகிய]வானரவீரர்,—துறையும்-(அந்நதியின்) இறங்கு துறைகளிலும், தோகை நின்று ஆடுசூழலும்-மயில்கள் நின்று கூத்தாடு கின்ற இடங்களிலும் குறையும் - யாற்றிடைக்குறையாகிய தீவுகளிலும், சோலையும்-பூஞ்சோலைகளிலும், குளிர்ந்த சாரல் நீர் சிறையும்-குளிர்சசி யான பக்கங்களி லமைந்த நீர்நிலைகளிலும், தெள்ளு பூ தடமும்-தெளி வான மலர்கள் நிறைந்த தடாகங்களிலும், தெள் பளிங்கு அறையும்- (அங்குள்ள) நிர்மலமான பளிக்குப்பாறைகளிலும், தேடினர் - (சீதை யைத்) தேடினார்கள்; (எ - று.)

நீர்ச்சிறை - கரைகட்டித்தடுத்த நீர்நிலை. அறை - பாறை.

'அறிவின்கோன்மியார்' என்று சிலபிரதிகள். (கஙூ)

[வான்வார் பெண்ணேநதியின் தென்கரைசேர்தல்.]

கச. அணிகொழித்துவந்தெவருமாடினர்
பிணிகொழித்தவெம்பிறவிவேரின்வன்
றுணிகொழித்தருஞ்சுழிகடோறுநன்
மணிகொழிப்பதன்றுறையின்வைகினர்.

(இ-ள்.)அணி கொழித்து வந்து-அழகாக அலைவீசிக்கொண்டுவந்தும், ஆடினர் எவரும்-(தன்னில்) மூழ்கினவர்எவராயினும், பிணி கொழித்த வெம்பிறவி வேரின் வல் துணி கொழித்து-நோய்கள்நிறைந்த கொடுமையான(அவரது)பிறப்புக்களினதுவேர்களின்வலியதுண்டுகளை யடித்துக்கொண்டும்,அருஞ் சுழிகள் தோறும் நல்மணி கொழிப்பதன்-[அகப்பட்டவர் தப்புதற்கு) அருமையான (தன்னிலுள்ள) நீர்ச்சுழிகளிலெல்லாம் சிறந்த இரத்தினங்களை வாரிக்கொண்டும்வருகின்ற பெண்ணேநதியினது,கரையின்-தென் கரையிலே, வைகினர்-(வானரவீரர்) வந்துதங்கினர்கள்; (எ - று.)

தன்னில்மூழ்கியவர் எத்துணைப்பாதகராயினும் அவரது பிறவிக்குக் காரணமான பாவங்களையெல்லாம் போக்கி அவர்க்கு முத்தியளிக்கவல்ல மகிமையுள்ளதும், நீர்சுழிகளில் இரத்தினங்களைக் கொழித்துவரும் வளமுள்ளதுமான பெண்ணேநதியின் அக்கரையாகிய தென்கரையை யடைந்து வானரவீரர்கள் தங்கின ரென்பதாம். பிணிகொழித்த வெம்பிறவி - "நோயெலாம்பெய்தபோராக்கை." 'ஆடினர்எவரும் பிறவிவேரின்வன்றுணிகொழித்து'என்றது-தன்னில்மூழ்கியவரது பிறப்புக்குக் காரணமான பாவங்களை யெல்லாம் அடியோடொழிததலாலென்க. பிறவிவேர்-பிறப்புக்குக்காரணமான வினைகள். 'கொழித்தல்' என்னும் வினைசசொல் வெவவேறு பொருளில் பலமுறை வந்தது-சொற்பின்வருநிலையணியின் பாற்படும்.

'எவருமாடினர்,'--'எவருமாடுவார், பிணிகொழித்தகிற்பிளவொடாரவன், மணிகொழித்ததென்கரையின்,' 'மணிகொழித்திடுந்துறையின்' என்பன பாடாந்தரங்கள். (கச)

[வாநரர் தசநவநாடு அடைதல்.]

கரு. ஆடுபெண்ணேநீராறுமேறினர்
காடுநண்ணினர்மலைகடந்துளார்
வீடுநண்ணினரென்னவீசுநீர்
நாடுநண்ணினர்நாடுநண்ணினர்.

(இ - ள்.) நாடு நண்ணினர் - (சீதையைத்) தேடுதற்பொழிலேமேற்கொண்டவராகிய வானரவீரர்கள்,—நீர் ஆடு பெண்ணே ஆறும் ஏறினர்-நீராடுதற்குஉரிய பெண்ணேநதியைக் கடந்தவர்களாய் [கடந்த பிறகு],-காடு நண்ணினர்-பலகாடுகளிற் சென்றவர்களாயும், மலை கடந்துளார்-பலமலைகளைத் தாண்டியவர்களாயும், வீடு நண்ணினர் என்ன-முத்திபுலகத்தையடைந்தவர்கள்போல, வீசு நீர் நாடு நண்ணினர் - அவுயெறிகின்ற நீரையுடைய தசநவநாட்டை யடைந்தார்கள்; (எ - று.)

வானரர்கள் பலகாடுகளிலும்மலைகளிலும் அலைந்துதிரிந்து இறுதியில் நீர்வளமுள்ள தசநவநாட்டை யடைந்ததற்கு, பலபிறவிகளில் அலைந்து

திரித்தவன் இறுதியில் முக்தியுலகத்தை யடைவதை உவமைகூறினர். இதனால், அந்நாடு பலவளங்களும் நிரம்பி மிகவும் இனியதாயிருக்கு மென்பது பெறப்படும். முதலடி-கேழ்க்கவியின் அநுவாதம். 'நாடு' என் னுஞ் சொல் இரண்டனுள், பிந்தியது-முதனிலைத்தொழிற்பெயர்.

'நாடனண்ணினர்,' 'நவையினண்ணலார்' என்பதும் பாடம்.(கஇ)

[வாநரவீரர் விதர்ப்பநாட்டை யடைதல்.]

கசு. தசநவப்பெயரச்சரளசண்பகத்
தசநவப்புலத்தகணிநாடொரீஇ
யுசநவப்பெயர்க்கவியுதித்தபே
ரிசைவிதர்ப்பநாடெளிதினெய்தினர்.

(இ - ள்.) தசநவம் பெயர்-தசார்ணமென்னும் பெயரையுடைய,சர ளம் சண்பகத்து-தொகுதியான செண்பகமரங்களையுடையதும், அசநம் அ புலத்து அகணி-உணவையுண்டாக்குகின்ற அழகிய விளைநிலங்களைக் கொண்ட மருதநிலங்களை யுடையதுமாகிய,நாடு-நாட்டை,ஒரீஇ-விட்டு நீங்கி,—உசநவன் பெயர் கவி உதித்த-உஶநஸ்என்னும் பெயரையுடைய சுக்கிரன் பிறந்த, பேர் இசை விதர்ப்பம் நாடு - மிக்கபுகழையுடைய விதர்ப்பதேசத்தை, எளிதின் எய்தினர் - எளிதாகச சென்று சேர்ந் தார்கள், (வாநரவீரர்கள்.) (எ-று.)

தசநவம்-தஶார்ணம் என்றவடசொல்லின் திரிபு: ("தஶார்ணே தேஶ:" என்று கௌமுதீயென்னும் வடநூலிற் கூறப்பட்டிருக்கின் றது;)அந்தநாடு சண்பகமரத்தொகுதிகளையும் நல்லவிளையுளைக்கொண் டபுலங்களையுமுடையதென்க.சரளம்-அழகுமாம். உசநவப்பெயர்க்கவி- "உஶநா பார்க்கவ: கவி:" என்பது வடமொழிநிகண்டு. நவக்கிரக பூஜையில் சுக்கிரனை "விதர்ப்பதேசயன்" எனக் கூறுதல்பற்றி, 'உச நவப்பெயர்க்கவியுதித்த பேரிசைவிதர்ப்பநாடு' என்றார்.

'தசநவப்பெயர்த்தாலசண்பகத், தசநவப்பிரத்தகனஞடொரீஇ' என்ற பாடத்திற்கு - தசநவப்பெயர்(த்து) - தசநவமென்னும்பெயரை யுடைய முல்லையையும்,தாலம் சண்பகத்து-தேன்பொருந்திய சண்பகத் தையும், அசனம்-வேங்கையையும், அப்பிரத்து-மாமரங்களையுமுடைய, அகல் நல் நாடு-அகன்ற நல்லநாட்டை,ஒரீஇ-நீங்கி என்று பொருளாம்; இப்பொருளில், தசநவம்என்பது-திசைசசொல் என்பர்.'தசநவப்பெயர் த்துத்தால' என்பது,'தசநவப்பெயர்த்தால'என விகாரப்பட்டது. 'அச நவப்பிரத்தகனஞடி' என்பதற்கு—அசநம்-வேங்கைமரங்களிலே, அப் பிரத்து-மேகங்கள் படிதலையுடைய, அகல்-பரந்த, நல்நாடு என்றும் பொருள்கொள்ளலாம். வப்பிரம் என்று பிரித்து - தாழ்வரையென்று கூறுதற்கும் இடமுண்டு. 'அசனவப்பிறத்தகனஞடி' என்ற பாடம்— அசனம்-உணவுக்குக்காரணமான, அப்பு-நீர்ப்பெருக்கானது, இறத்து-வரம்புகடந்துபெருகி, அகல்-செல்லப்பெற்ற, நல்நாடு என்று பொருள் படும். 'தசநவப்பெயர்த்தளவச்செண்பகத்து,' 'சாலசெண்பகத்து,' 'அசனாடொரீஇ' என்ற பாடங்களும் காணப்படுகின்றன. (கசு)

[விதர்ப்பநாட்டில் வாநரவீரர் சீதையைத் தேடுதல்.]

கஎ. வைதருப்பமண்டலனில்வந்துபுக்
கெய்தருப்பமத்தனையுமெய்தினர்
பெய்தருப்பைநூல்பிறழுமேனியார்
செய்தவத்துளார்வடிவிற்றேடினர்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்),—வைதருப்பம் மண்தலனில் வந்து புக்கு-விதர்ப்பதேசத்தைச்சேர்ந்ததானபூமியினிடத்தில்வந்துசேர்ந்து எய்து அருப்பம் அத்தனையும் எய்தினர் - (அந்தநாட்டிற்) பொருந்தியுள்ள ஊர்களெல்லாவற்றையும் அடைந்தவர்களாகி—பெய் தருப்பை நூல் பிறழும் மேனியார் செய் தவத்துளார் வடிவின் - (கையிற்) பூண்டுள்ள தருப்பைகளினாலும் (மார்பிலணிந்துள்ள) பூணூலினாலும் விளங்குகின்ற உடம்பை யுடையவர்களாகிய தவஞ்செய்யும் முனிவரது வடிவைக்கொண்டு, தேடினர்-(சீதையைத்)தேடினர்கள்; (எ-று.)

விதர்ப்பநாட்டையடைந்த வாநரவீரர்கள் முனிவர்வடிவுகொண்டு அங்கு உள்ள ஒருஊரையும் விடாது புகுந்துசென்று சீதையைத் தேடினர்க ளென்பதாம். மனிதர்கள் வாழ்கின்ற ஊர்களிற் சென்று வாநர வடிவுடன் தேடுதல் இயலா தாதலால்,வேண்டுமுருவங்கொள்ளும் வல்லமையுடைய அவ்வாநரவீரர் விதர்ப்பநாட்டைசேர்ந்த ஊர்களிற் சென்று நாடுகையில் மிக்கசெல்வத்திற்கு இடமாய்ச சந்தேகத்திற்குச சிறிதும் இடமில்லாத முனிவரதுவடிவைக் கொண்டன ரென்க.'பெய்' என்பதை, நூலுக்கும கூட்டுக. வைதர்ப்பம் விதர்ப்பசம்பந்தமானது, வடமொழித்தத்திதாந்தநாமம். அருப்பம்-ஊர். செய்தவம்-செய்கின்ற தவம்; செம்மையான தவம் எனினுமாம். 'மெய்தருப்பைநூல் பிறழு மேனியார், செய்தவத்துளாள் வடிவு தேடினர்' என்ற பாடத்திற்கு-உண்மையான தருப்பைபோலவும் நூல்போலவும் விளங்குகின்ற [பேரலசசலினால் மிகவும் இளைத்துத்தோன்றுகின்ற] சரீரமுடைய வாநரர்கள் இராமனைப்பற்றியதியானத்தையே கொண்டிருப்பவளான சீதையினது வடிவத்தை [சீதையை]த் தேடினர்கள் என்று பொருளாம்.

'நாடதனில்வந்துபுக்கு' என்று சிலபிரதிகள். (கஎ)

[வாநரவீரர் தண்டகாரணியத்தை அடைதல்.]

கஅ. அன்னதன்மையாலறிஞர்நாடியச்
செந்நெல்வேலிசூழ்திருநன்னெடோரீஇத்
தன்னீனெண்ணுமத்,தகைபுகுந்துளார்
தண்ணுதண்டகங்கடிதுதுன்னினர்.

(இ - ள்.) அறிஞர் - அறிவுடையவர்களான வாநரவீரர்கள்,—அன்னதன்மையால் நாடி-அவ்வாறுகத்தேடிக்கொண்டு, அ செந்நெல் வேலி சூழ்திரு நல் நாடு ஒரீஇ-செந்நெற்பயிர்கள்விளையும் வயல்கள் சூழ்ந்த சிறந்த அழகிய அந்தவிதர்ப்பநாட்டை விட்டு,—தன்னை எண்ணும் அ தகை புகுந்துளார் தண்ணு தண்டகம்-ஆத்மஸ்வரூபத்தைத் தியானிக்கின்ற அத்தன்மை பொருந்தியவரான முனிவர் மிகுதியாக வசிக்கின்ற தண்டகாரணியத்தை, கடிது துன்னினர் விரைவாகச் சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

RESEARCH INSTITUTE,
84, R. H. ROAD, MADRAS - 4

தன்னேயெண்ணும்அத்தகை புருந்துளார் - ஜீவாதீமஸ்வரூபத்தை உள்ளபடியுணர்ந்து ஸாக்ஷாத்கரிக்கவல்ல யோகியர் என்றபடி. வேலி-வயல். நல்நாடு - வளமுள்ள நாடு.

'அன்னதன்மையாரறிஞர்,' 'சிந்துநாடொரீஇ,' 'தன்மூமெண்ணும்,' 'தன்னேயெண்ணுமங்கவர்,' 'அத்தகைபுருந்துளார்' என்பன பாடாந்தரங்கள். (கஅ)

[வாநரர் முண்டகத்துறையை யடைதல்.]

கக. உண்டகத்துளாருறையுமைம்பொறிக்
கண்டகர்க்கருங்காலனுயினர்
தண்டகத்தையுந்தடவியேகினர்
முண்டகத்துறைகடிதுமுற்றினர்.

(இ-ள்). உண்டு அகத்துள் ஆர் உறையும்-(தமக்குரிய புலன்களே) அநுபவித்துக்கொண்டு உடம்பினுட்பொருந்திவசிக்கின்ற, ஐம் பொறி கண்டகர்க்கு-பஞ்சேந்திரியங்களாகிய துஷ்டர்களுக்கு, அருங் காலன் ஆயினர்-கொடுமையான யமன்போன்றவர்களாகிய முனிவர்கள் வசிக்கின்ற, தண்டகதையும்-அந்தத் தண்டகாரணியத்தையும், தடவி ஏகினர் - தேடிச சென்றவர்களாய்,—(வாநரவீரர்கள்), முண்டகத்துறை கடிது முற்றினர் - முண்டகத்துறையென்னுமிடத்தை விரைவாகச் சேர்ந்தார்கள்; (எ-று.)

கண்டகம்-முள்; அதுபோலத தீங்குசெய்பவர்-கண்டகர். பஞ்சேந்திரியங்கள் ஆத்மாவை நற்கதியிற்சேரவொட்டாது உபத்திரவித்தலால், அவற்றை 'கண்டகர்' என்று உருவகஞ்செய்தனர். ஐம்பொறிக் கண்டகர்க்கு அருங்காலனுயினர்-ஜிதேந்திரிய ரென்றபடி. மனத்தை நல்வழியிற்செல்லவொட்டாது தடுத்து ஐம்புலன்களிற் செல்லுமாறு இழுக்கின்ற இந்திரியங்களே அங்ஙனஞ்செய்யவொட்டாது தடுத்துத் தம்வசமாக்கி மனத்தை ஜீவாத்மபரமாத்மதியானங்களிற் செலுத்தும் வல்லமையுடையவர் ஜிதேந்திரிய ரெனப்படுவர்.

'உண்டகத்துளாயுழலுமைம்பொறிக், கண்டகர்த்தெறுகாதலார் கடாம்' என்று சிலபிரதிகள். (கக)

[இதுமுதல் முன்றுகவிகள் - முண்டகத்துறையின் வருணனை.]

உ0. அள்ளனீரெலாமமர்மாதரார்
கொள்ளைமாமுலைக்கலவைகோதையிற்
கள்ளுநாறலிற்கமலவேலிவாழ்
புள்ளுமீனுணபுலவுதீர்தலால்.

(இ - ன்.) (அந்தமுண்டகத்துறையில்),—அள்ளல் நீர் எலாம்-குழைசேற்றோடு கூடிய நீர்முழுவதிலும்,—அமரர் மாதரார் - (அங்கு வந்திறங்கி ஸ்நானஞ்செய்யும்) தேவமாதர்களது, மா முலை கொள்ளை கலவைகோதையின்-பெரியதனங்களிலணிந்த மிகுதியான கலவைச் சாந்தினாலும் மலர்மாலைகளினாலும், கள்ளு நாறலின்-நறுமணம் வீசுதலினால், புலவு தீர்தலால்-புலால்காற்றம் நீங்குதல்பற்றி, கமலம் வேலி

வாழ் புள்ளும் மீன் உண்-அம்முண்டகத்துறையில் வசிக்கின்ற பறவைகளும் (அங்குள்ள) மீன்களைப் புசிப்பதில்லை; (எ -ற்று.)

அம்முண்டகத்துறையில் வந்து நீராடுகின்ற தேவமாதர்களது தனங்களில் அணிந்திருந்த கலவைச்சந்தனங்களும் மலர்மாலைகளும் படிதல்பற்றி அங்குள்ள மீன்களும் அக்கலவைகோதைகளின் நறுமணத்தை யடைந்து தமதுபுலால்நாற்றம் நீங்கப்பெறுதலினால், அங்குள்ள நாரைமுதலிய நீர்ப்பறவைகள் அம்மீன்களை உண்ணமாட்டா வென்பதாம். இதனால், அம்முண்டகத்துறை திரள்திரளாகத் தேவமாதர்பலர் வந்துபடியப்பெற்ற சிறப்புவாய்ந்த தென்பது போதரும். புலால்நாற்றத்தையே விரும்பி மசசங்களைப்புசிக்கும் பறவைகட்கு அப்புலால்நாற்றம் நீங்கவே, அம்மசசங்களிடத்து விருப்பமொழிந்த தென்க. இங்கு, மீன்கள் தமக்குரிய புலால்நாற்றம்நீங்கி, கலவை கோதைகளின் நறுமணத்தைப் பெற்றதாகக் கூறியது - பிறிதின்குணம் பேறலணியின்பாற்படும். ("புதுப்புனல்குடையுமாதர் பூவொடுநாவி பூத்த, கதுப்புறுவெறியேநாறுங கருங்கடற்றரங்கம்," குரும்பைமென் முலையாராடக் கூந்தலினறவந்தோய்ந்த, விரும்புனலாறுபாயவெறி இரைசுருட்டுந்தெண்ணீர்க், கருங்கடற்புலவுநீங்கி நறுமணங்கமழும்" என்பன இங்கு ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கன.) அள்ளல்-குழைசேறு. கலவை-பலவகை வாசனைப்பண்டங்கள் கலக்கப்பெற்றது. கமலவேலி =முண்டகத்துறை.

'அள்ளுநீரெலாம்,' 'கொள்ளுமாமுலை,' 'துள்ளுமாமுலை,' 'கலவை தோய்கையின்' என்பன பாடாந்தரங்கள். (உ0)

உக. குஞ்சரங்குடைந்தொழுகுகொட்பதால்
விஞ்சைமன்னர்பால்விரகமங்கைமார்
நஞ்சுவ்ணையினடத்துபாடலா
னஞ்சுவார்கணீருருவியாறரோ.

(இ-ள்.) விஞ்சை மன்னர்பால்-காமநூலில்வல்ல ஆடவர்களிடத்தில், விரகம்-பிரிவினால் வேதனைப்படுகின்ற, மங்கைமார்-மகளிர்—, வீணையின் நடத்தும்-(பிரிதலில்லாத மகளிர் களிப்புக்கொண்டு) யாழினால் வாசிக்கின்ற, பாடலான்-இசைப்பாட்டினால் [இசைப்பாட்டைக் கேட்டு அதனால்), நஞ்சு-மனங்கசிந்து, அஞ்சுவார்-நடுங்குவார்கள்; கண் நீர் அருவி ஆறு:(அங்ஙனம்அஞ்சுதலால் அவர்கள்சொரிகின்ற) கண்ணீர்ப்பெருக்கானது,—குஞ்சரம் குடைந்து ஒழுகு கொட்பது - யானைகள் அமிழ்ந்துமுழுகுகின்ற தன்மையுடையதாகும்; (எ-று.)—ஆல், அசோ-ஈற்றசைகள்.

தம்தம் கணவரைப் பிரிந்தவராய் அருகுஉள்ள மகளிர், தம்மைப் போலப் பிரிவின்றியிருப்பவர்கள் மனமகிழ்ச்சியோடு வீணைகளை கொண்டு பாடும் பாடலைக் கேட்டு, காமோத்தீபகமான அவ்விசையொலியால் வருந்தி விரகவேதனையுற்று மனநடுங்கிக் கண்ணீரையுகுப்பர்; அக்கண்ணீர்ப்பெருக்கு யானைகளும் அமிழ்ந்துமுழுகும்படியான நீர்ப் பெருக்காகு மென்பதாம். இங்ஙனம் பொருளின் பம்பயக்குமாறு வருணித்துக்கூறுதலை 'கேளடநேறி' என்பர் தண்டியாசிரியர். இதனை நோடீபுயர்வுநவிற்சியணியின் பாற்படும். விஞ்சை மன்னர்-காம

நூல்களைக்கற்றுத் துறைபோய ஆடவர்; வித்தியாதீர் அரசரெனப் பொருள்கூறுவாரு முளர்.வீணைப்பாடல் காமோத்தீபகமாய்ப் பிரிக் தோரைவருத்துதலின், 'வீணையின்நடத்துபாடலால் நஞ்சுஅஞ்சு வார்' என்றார்; இக்கருத்துப்பற்றியன்றே,ஆசிரியர் பின்னரும்"ஆளந்த பாடல்வெவவரவு தஞ்செவிபுக வலமரலுறுகின்றார்" என்றும், "நாம யாழ்த் தேளினுற்றிகைப் பெய்துகின்றார்சிலர்" என்றும் கூறியதென உணர்க. விரஹம்-வடசொல். நஞ்சு=நைந்து: முழுப்போலி. இனி, நஞ்சு என்பதனே 'நசசு' என்பதன் மெலித்தல்விகாரமெனக் கொண்டு-பலரும்கேட்டுவிரும்பத்தக்க எனினுமாம். கணீர்-தொகுததல்.

'குஞ்சரங்களித்தோங்குகொல்லேவாய், விஞ்சைமன்னர்பால்விற்கு மங்கைமார், நஞ்சுவீணையினடத்துபாடலா, லஞ்சுவார்கணீரருவியா ரொடே'என்ற பாடத்துக்கு—குஞ்சரம் களித்து ஓங்கு கொல்லேவாய்-யானைகள் களித்துவளரும்கொல்லிலங்களில், பால் விற்கும் மங்கை மார்-பால்விற்கும் மகளிர், வீணையின் நடத்து பாடலால் - வீணையிசை போலப் பாடல்பாடுதலினால், விஞ்சைமன்னா-(இசைப்பாடலில்வல்ல) வித்தியாதரவரசர், நஞ்சு-(நமதுபாடல் இந்தமகளிரதுகுரலின் இன் னேைசைக்குமுன்னே எத்தன்மையதாகும்' என்று) வருந்தி, கண்நீர் அருவியாரொடே அஞ்சுவார் - கண்ணீர்ப்பெருக்கைசொரிதலோடு அஞ்சுவார்கள் என்று பொருள் காண்க. 'நஞ்சவீணையினவின்றுபாட லால்,' 'நறவுபாடலால்' எனவும் பாடம். (உக)

உஉ. கமுகவார்நெடுங்கனகவூசலிற்
குமுதவாயினர்குயிலேயேசுவா
சமுகவாளியுந்தனுவும்வாண்முகத்
தமுதபாடலார்மருவியாடுவார்.

(இ - ள்.) குமுதம் வாயினர்-செவ்வரம்பல்மலர்போன்ற வாயை யுடையவர்களும், குயிலே ஏசுவார்-(தமதுகுரலாற்) குயிலேயும் பழிப்பவ ரும், சமுகம் வாளியும் தனுவும் வாள் முகத்து அமுதம் பாடலார்-கூட் டமான மன்மதபாணங்களேப்போன்ற கண்பார்வைகளேயும் (மன்மத னது) வில்லேப்போன்ற புருவங்களேயும்(தமது) ஒளிபொருந்திய முகத் திலேயுடைய அமுதம்போன்ற இசைப்பாடலேப் பாடுகின்றவருமாகிய மகளிர்,—கமுகம் வார் நெடிய கனகம் ஊசலில்-பாக்குமரங்களிற் கட் டப்பட்டுள்ள மிகவும்நீளமான பொன்மயமாகிய ஊசலில், மருவி ஆடு வார்-இருந்து ஆடுவார்கள்; (எ - று.)

அங்குப் பாக்குமரங்களிற்கட்டப்பட்டுள்ள பொன்னூசல்களில் மகளிர் மனமகிழ்ந்து ஆடுவாரென அவவிடத்தின் அமைதியை வரு ணித்தவாறு. குயிலேயேசுவார் என்றது - குயிலினும் இனியகுரலேயுடை யவ ரென்றபடி. தாமரை, அசோகு, தேமா, முல்லே,கருங்குவளே என்ற ஐந்துமலர்கள்-மன்மதனது பஞ்சபாணங்களாம். "நினேக்குமரவிந்தம் நீள்பசலேமாம்பூ, வனேத்துணவுநீக்குமசோகு - வனத்திலுறு, முல்லே யிடைகாட்டி மாதே முழுநீலங, கொல்லு மதனம்பின்குணம்" எனக் கூறப்பட்டுள்ள மன்மதனதுபாணங்களின்செயலே இம்மகளிரதுகண் பார்வைகள் தமக்குஇலக்காகிற ஆடவர்க்கு விளேத்தலால்,அப்பார்வை களே 'சமுகவாளி' என்றார். மன்மதனது தனு - மகளிரதுபுருவத்துக்கு,

வடிவும் தொழிலும் பற்றிய உவமையாம். சமுகவாளி, தனு என்று உபமேயத்தை உபமானப்பொருளாகவே கூறியது - உருவகவுயர்வுநவிற்சியணியின் பாற்படும். இவை-உவமவாகுபெயர்களாம்.

'கமுகமாநெடும்,' 'வாழ்முகத்து', 'அமுதபாடலாலழகினுவார்,' 'அருவியாடுவார்' என்று பிரதிபேதம். (உஉ)

[வாநரவீரர் அங்குச் சீதையைக்காணுமல் அப்பாற்செல்லுதல்.]

உங. இனையவாயவொண்டுறையையெய்தினர்
நினையும்வேலைவாய்நெடிதுதேடுவார்
வினையவார்குழற்றிருவைமேவலார்
புனையுநோயினர்கடிதுபோயினர்.

(இ - ள்.) இனைய ஆய ஒள் துறையை எய்தினர்-இப்படிப்பட்டதாகிய அழகிய முண்டகத்துறையை யடைந்தவர்களாகிய வாநரவீரர்கள்,-நினையும வேலைவாய் நெடிது தேடுவார்-மனததினுல் நினைக்கும்பொழுதிற்குள்ளே வெகுதூரமாக[மனோவேகமாக]த்தேடுபவர்களாய், வினையவார் குழல் திருவை மேவலார்-(ஐவகையாகத)தொழில்செய்தற்குரிய நீண்ட கூந்தலையுடைய திருமகளின் திருவவதாரமாகிய சீதாபிராட்டியைக்காணப்பெருமல், புனையும்நோயினர்-மிகவருத்தமடைந்தவராய், கடிது போயினர்-விரைவாக அப்பாற்செல்லலானர்கள்; (எ - று.)

முண்டகத்துறைமுழுவதிலும் சீதாபிராட்டியைத்தேடி அங்குக் காணப்பெருமையால், வாநரவீரர்கள் அப்பாற்செல்லலாயின ரென்க. இனைய-இனையதுஎன்பதன் தொகுத்தல். 'வினையவார்குழல்' என்றது-மயிரைஉசியில் முடித்தலாகிய முடியும்;சுருட்டிமுடித்தலாகியகுழலும் முடிந்துவிடுதலாகிய தொங்கலும், பின்னிவிடுதலாகிய பனிசையும், பின்னேசெருகலாகிய சுருளும என்ற ஐவகையான தொழிற்கு உரிய கூந்தல் என்க: இதுபற்றியே,மகளிர்கூந்தலுக்கு'ஐம்பால்' என்றுபெயர் வழங்கும். இத்தொடர்க்கு வேறுவகையாகப்பொருள்கூறுவதுபொருந்துமாயிற்கொள்க. புனையு நோயினர்கடிதுபோயினர் - பிராசம்.

'வண்டுறையை,' 'நெடிதுநேடுவார்' என்று சிலபிரதிகள். (உங)

[வாநரவீரர் பாண்டிமலையை யடைதல்.]

உச. நீண்டமேனியானெடியதாளினின்
றீண்டுகங்கைவந்திழிவதென்னலாய்ப்
பாண்டுவம்மலைபடர்விசும்பினைத்
தீண்டுகின்றதண்சிகரமெய்தினர்.

(இ-ள்.)நீண்ட மேனியான்-திரிவிக்கிரமனுய் நீண்டதிருமேனியையுடையதிருமாலினது, நெடியதாளினின்று - பெரியதிருவடியினின்று, ஈண்டுகங்கை வந்து இழிவது என்னல் ஆய்-இவ்விடத்தில்தான் கங்காநதியானது இழிகின்றதோ வென்று சொல்லும்படி, பாண்டு அம் மலை-அழகியபாண்டு மலையினது,படர் விசும்பினை தீண்டுகின்ற-பரவிய ஆகாசத்தை யளாவுகின்ற, தண் சிகரம்-குளிர்ந்த சிகரத்தை, எய்தினர்-(வாநரவீரர்) சென்று சேர்ந்தார்கள்; (எ - று)

தனதுஉச்சி வானத்திற்படியுமாறு ஓங்கியுள்ள வெண்ணிறமாகிய பாண்டிமலையைப் பார்ப்பவர்கட்கு, திருமாலின் திருவடியில் தோன்றிய வெண்ணிறமான நீரையுடைய கங்கையாறு வானத்தினின்று இங்குத் தான் இறங்குகின்றதோவென்று நினைக்குமாறு தோன்றுகின்ற. தன் மைத்தற்குறிப்பேற்றவணி. திருமால் உலகமளந்தகாலத்து மேலேசத் தியலோகத்திற்சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தனிகைக் கமண்டலநீர்த்தத்தினுற் கழுவிவிளக்க, அந்தஸ்ரீபாததீர்த்தமே கங்கை யாகப் பெருகிற் றென்பது, இங்கு அறியத்தக்கது. வெண்ணிறமுடை மையால், இம்மலைக்கு 'பாண்டிமலை' என்று பெயர். 'பாண்டிவம்மலை' என்றவிடத்து, அம்-சாரியையுமாம். எதுகைநயம்பற்றி, 'ஈண்டுகங்கை' எனவலிமிகாமல் இயல்பாயிற்று; நெருங்கியகங்கை யென்று வினைத் தொகையாகப் பொருள்கூறுவாரு முளர்.

'நீண்டநேமியா னெடிதுதாளின்வந், தீண்டுகங்கைதானிழிவ தென்னலாம், பாண்டுகம்மலை,' 'தீண்டுகின்றதன்' என்றுசிலபிரதிகள்.

[பாண்டிமலையின் வருணனை.]

உடு. இருளு றுத்துமீ தெழுந்த தெண்ணிலா
மருளு றுத்துவண் சுடர்வ ழங்கலா
லருளு றுத்திலா வடல ரக்கன்மே
லுருளு றுத்ததிண் கயிலை யொத்ததால்.

(இ-ள்.) இருள் உறுத்து - (உலகத்திலுள்ள) இருள்முழுவதையும் தாக்கியொழித்து, மீது எழுந்த-வானத்தில்தோன்றிய, தெள் நிலா-தெளிவான நிலவையுடைய சந்திரனுக்கும், மருள் உறுத்தது-மருட்கியுண் டாக்கி, வள் சுடர் வழங்கலால்-(தான்)வளமான ஒளியை வீசுதலினால், —(அந்தப் பாண்டிமலையானது),—அருள் உறுத்திலா அடல்அரக்கன் மேல்-(மனத்திற் சிறிதும்) அருளைக்கொண்டிராத வலிமையையுடைய அரக்கனுகிய இராவணன்மீது, உருள் உறுத்த - (அவனைக் கீழே வீழ்ந்து, உருளுமாறு அழுத்திய, திண் கயிலை-வலிய கைலாசபருவதத் தை, ஒத்ததது—; (எ-று.)—ஆல்-ஈற்றசை.

தனதுவெண்ணிலவினால் உலகத்தஇருளை யொழிக்குஞ் சந்திர னுக்கும் மருட்கையுண்டாக்குவது எனப் பாண்டிமலையின் வெண்ணிற வொளியைச சிறப்பித்துக் கூறியவாறு. இவ்வாறு வெள்ளொளிமிக் கிருத்தலால், பாண்டிமலைக்குக கைலாசபருவதத்தை உவமைகூறிஞ ரென்க. இனி, இசசெய்யுட்கு-இருட்டை யொழிதது வெண்ணிறவொ ளியை வீசுதலினுலே கருநிறமுள்ள ராக்ஷஸனை யடக்கிய வெள்ளிமய மான கைலாசமலையைப் போலும் பாண்டிமலை யென்ற கருத்துப்படப் பொருள் கூறினுமாம்.

'அரக்கன்மே லுருளுறுத்த திண்கயிலை' என்பதில் அடங்கிய கதை:— இராவணன் அளகாபுரிக்குசசென்று குபேரனென்று அவனது புஷ் பக விமானத்தைப் பறித்து அதன்மேலேறிக்கொண்டு கைலாசமலைக்கு மேலாக ஆகாயமார்க்கத்திலே விரைந்து போய்வருகையில் அம்மலை யின்மகிமையால் விமானம் தடைப்பட்டுநிற்க, அதற்குக்காரணம் இன்ன

தென்று அறியாது திகைக்கும்போது, நந்திகேசுவரர் எதிரில்வந்து 'சிவபிரா 'னெழுந்தருளியிருக்குமிடமான திருக்கைலாயத்தின் பெருமை இது' என்று சொல்லவும், கேளாமல், அந்தத்தசமுகன் செருக்கினாற் கோபித்து 'எனதுபிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடு பறித்து எடுத்து அப்பா லெறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேன்' என்று கூறி, விமானத்தினின்று இரங்கித் தனது இருபதுகைகளையும் அம்மலையின் கீழ்க்கொடுத்து அதனைப் பெயர்த்து அசைத்து எடுத்துத் தனது பத்துத் தலைகளின் மேலும் தூக்கி அப்பா லெறிந்துவிட்டுச் செல்வதாக முயல, அப்பொழுது பார்வதீதேவி அஞ்சிப் பரமசிவனைத் தழுவிக்கொள்ளவே, இராவணன் செய்லே யுணர்ந்த உருத்திரமூர்த்தி சினந்து தன்திருவடிப்பெருவிரலினியினூற் சிறிது அழுத்த, அரக்கன் மலையின்கீழகப்பட்டுத் தலைகள் நசுங்கி மிக வருந்தின னென்பதாம்.

'இருளுறுத்த,' 'இருளறுத்து,' 'மீதெழுந்து,' 'மருளறுத்து,' 'வான் சுடர்,' 'உருளுறுத்து' என்பன பாடாந்தரங்கள். (உகி)

வேறு.

[வானரவீரர் அங்குச் சீதையைத்தேடிக்காணுமல் வருந்துதல்.]

உசு. விண்ணுற நிவந்த சோதி வெள்ளிய குன்ற மேவிக்
கண்ணுற நோக்க லுற்றார் களியுறக் கனிந்த காமர்ப்
பண்ணுறு கிளவிச் செவ்வாய் படையுறு நோக்கி னாளை
யெண்ணுறு திறத்துங் காணு ரிடருறுமனத்த ரெய்த்தார்.

(இ-ள்.) (வானரவீரர்),—விண் உற நிவந்த சோதி வெள்ளிய குன்றம் மேலி-ஆகாயத்தையளாவுமாறு உயர்ந்த ஒளியையுடைய வெண்மையான அப்பாண்டிமலையிற் பொருந்தி, கண்ணுற நோக்கல் உற்றார்-(சீதாபிராட்டியைக்) காணவேண்டுமென்று அவாவோடு தேடிப்பார்க்கத்தொடங்கியவர்களாய்,—களி உற கனிந்த காமர் பண் உறு கிளவி செம் வாய் படை உறு நோக்கினாள்-(கேட்பவர்) மகிழுமாறு இனிமை கொண்ட அழகிய இராகம்போன்ற இன்சொற்களைப்பேசுஞ் சிவந்த வாயையும் வாட்படைபோன்ற கண்களையுமுடையவளான சீதையை, எண் உறு திறத்தும் காணார்-'(இங்குச்சீதைஇருக்கக்கூடும்' என்று தாங்கள்) எண்ணுகின்ற இடங்களிலெல்லாம் காணப்பெறாமல், இடர் உறு மனத்தர்-வருத்தங்கொண்ட மனமுடையவராய், எய்த்தார்-சோர்வடைந்தார்கள்; (எ-று,)

காமர்-காமம்மரு என்பதன் மரூஉ. 'படை' என்ற பொதுப்பெயர்-இங்குச் சிறப்புப்பொருளது, உறு-உவமவுருபு.

'வெள்ளியங்குன்றம்,' 'குன்றையெய்தி,' 'கனியுறக்கனிந்தகாமம்,' 'எண்ணுறுத்திறத்தும்' என்று பாடாந்தரம்.

இதுமுதல் ஒன்பதுகவிகள்-கீழ் நாடவிட்ட படலத்தின் முப்பத்து மூன்றுங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (உக)

[வானரவீரர் கோதாவரிநதியைக் தருதற்கு.]

உஎ. ஊதைபோல்விசையின்வெங்கணுழுவைபோல்வயவரோங்க
லாதியையகன்றுசெல்வாரரக்கனல்வஞ்சிப்புண்ட
சீதைபோகின்றுள்கூந்தல்வழீஇவந்துபுவனஞ்சேர்ந்த
கோதைபோற்கிடந்தகோதாவிரியினைக்குறுகிச்சென்றார்.

(இ-ள்.) ஊதை போல் விசையின்-காற்றைப்போன்ற வேகத்தைக் கொண்ட, வெங் கண் உழுவை போல் வயவர்-(கோபத்தினுற்) கொடுமையான பார்வையுடைய புலிபோன்ற வலிமையுள்ள வானரவீரர்,—ஓங்கல் ஆதியை அகன்று செல்வார்-அப்பாண்மலையினடிவாரத்தை விட்டு அப்பாற்செல்பவர்களாய்,—அரக்கனுல் வஞ்சிப்புண்ட சீதை போகின்றுள்-ராக்ஷஸனுகிய இராவணனுற் கவரப்பட்ட சீதையாகிய போகின்றவளது [இராவணனுற் கவர்ந்து செல்லப்பட்ட சீதையினது], கூந்தல்-கூந்தலிலிருந்து, வழீஇ வந்து-நழுவிவந்து, புவனம் சேர்ந்த-பூமியையடைந்த, கோதைபோல்-மலர்மாலைபோல, கிடந்த-இருக்கின்ற, கோதாவிரியினை-கோதாவரிநதியை, குறுகி சென்றார்-நெருங்கிச்சேர்ந்தார்கள்; (எ-று.)

உயர்ந்தஇடத்திலேறித் தூரத்திலிருந்து காண்பவர்க்கு ஆறுகள் வெள்ளிமலர்மாலைபோலத் தோன்று மாதலால், கோதாவரிநதியை, இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்து செல்லுகையில் அவளது கூந்தலிலிருந்து நழுவிக்கீழ்விழுந்த மலர்மாலை போலுமென வருணித்தனர். முதலடி-வானரர்களது வேகத்தையும் வலிமையையும் விளக்கும். ஆதியை என்பதற்கு-மலைகளுட் சிறந்ததான பாண்டிமலையை யென்பாரு முளர். வழீஇ-வழுவி: சொல்லிசையளபெடை. 'ஓங்கலாதினை' என்றும் பாடம். (உஎ)

[இதுவுர், அடுத்தகவியும் - கோதாவரிநதியின் வருணனை.]

உஅ. எழுகின்றநிரையிற்றுகியிழிகின்றமணிநீர்யாறு
தொழுகின்றசனகன்வேள்விதொடங்கியசுருதிச்சொல்லா
லுழுகின்றபொழுதினின்றவொருமகட்கிரங்கிஞால
மழுகின்றகலுழிமாரியாமெனப்பொலிந்ததன்றே.

(இ-ள்.) எழுகின்ற நிரையிற்று ஆகி-மேலெழுந்து வீசியெறிகின்ற அலைகளையுடையதாய், இழிகின்ற-பெருகிவருகின்ற, மணி நீர் யாறு-முத்துப்போலத்தெளிவான நீரையுடைய கோதாவரிநதியானது,—தொழுகின்றசனகன்-(யாவராலும்) வணங்கப்படுகின்ற [பெருமை பெற்ற] ஜநகமகாராஜன், வேள்விதொடங்கிய-யாகத்தைத் தொடங்கிச் செய்யும்பொருட்டு, சுருதிசொல்லால் உழுகின்ற பொழுதின்-வேதமந்திரங்களையுச்சரித்து (க் கலப்பைகொண்டு) உழுகின்ற காலத்தில், ஈன்ற-(தான் உழுபடைச்சாலினின்று) பெற்ற, ஒரு மகட்கு-ஒப்பற்ற சீதைக்காக [சீதை இலங்கையிற்சிறைப்பட்டிருப்பதற்காக] இரங்கி-மனம்வருந்தி, ஞாலம்-(அசஞ்சீதையின்தாயாகிய) பூமிதேவியான வள், அழிகின்ற-அழுவதனுலுண்டான, கலுழி மாரி-கலங்கலான கண்ணீர்ப்பெருக்கை, ஆம்-போலும், என-என்று சொல்லுமாறு, பொலிந்தது-விளங்கிற்று; (எ-று.)—அன்றே-ஈற்றசை;

நிறைந்துபெருகுகின்ற கோதாவரிநதியை, பூமிதேவியானவள் தான்பெற்ற மகளான சீதைக்கு நேர்ந்த வருத்தத்திற்காக இரங்கிப் பெருக்குகு கண்ணீர்வெள்ளம்போலு மென வருணித்தார்; சீதாப் பிராட்டியைத் தேடுகிற வாநரவீரர்க்கு இவ்வாறுதோன்றுதல் இயல் பாதலால், இங்ஙனம் வருணிக்கப்பட்டது; தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. ஜனகமகாராஜன் ஜ்ஞாநயோகத்திற்சிறந்து யாவராலும் வணங் குதற்குஏற்ற பெருமையுள்ள ராஜரிஷியாதலின், அவனை 'தொழுகின்ற சனகன்' என்றார். யாகஞ்செய்யத் தொடங்குபவர் முதலில் வேதமந் திரங்களை உசசரித்துக்கொண்டு கலப்பையினு லுழுது அங்கு யாக சாலையை அமைத்தல், முறை.

'மணி' என்ற பொதுப்பெயர்-இங்கு, சிறப்பாய் நவமணிகளு ளொன்றுகிய முத்தைக் குறித்தது. தொழுகின்ற-தொழப்படுகின்ற, செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. தொடங்கிய-'செய் யிய' என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; அதன்முன் வலி இயல்பாயிற்று.

'எழுகின்றகிரியிற்றுகி,' 'பொழுதின்வந்த,' 'ஆறேபோலுமன்பி னுல்' என்பன பாடாந்தரம். (உ அ)

உகூ. **ஆசில்பேருலகிற்காண்போரளவைநூலெனலுமாகிக்**
காசொடுகனகந்தூவிக்கலினுறக்கிடந்தகான்யா
றேசில்போரரக்கன்மார்பினிடைபறித்தெருவவேந்தன்
வீசியவடகமீக்கோளீதெனவிளங்கிற்றன்றே.

(இ-ள்.) காசொடு கனகம் தூவி-இரத்தினங்களையும் பொன்னை யும் (அலைகளினுற் கொழித்துக்கொண்டு, கலின் உற கிடந்த-அழகாக ஓடுகின்றதும், கான் யாறு-பலகாடுகளின் வழியாக வருகின்றதுமான கோதாவரிநதியானது,—ஆசு இல் பேர் உலகில்-குற்றமற்ற பெரிய இந்த நிலவுலகத்தில், காண்போர்-பார்ப்பவர்கட்கு, அளவைதூல் என லும் ஆகி-அளக்கின்றதூலென்று சொல்லுதற்கும் ஏற்றதாய்,—எருவை வேந்தன்-கழுகுகட்கு அரசனுகிய சடாயு, ஏசு இல் போர் அரக்கன் மார்பினிடை-(வீரத்தன்மையிற்) குற்றமற்ற போர்செய்யும் இராவண னதுமார்பிலிருந்து, பறித்துவீசிய-பிடுங்கி அப்பால்வீசியெறிந்த, மீக் கோள் வடகம் ஈது-மேலே அணியப்பெற்ற இரத்தினவாரந்தானே இது, என-என்று சொல்லும்படியும், விளங்கிற்று—; (எ-று.)—அன்றே-ஈற்றசை.

கோதாவரிநதியானது-பூமியையளக்கின்ற அளவுதூல் போல வும், கழுகரசனுன ஜடாயு சீதையைக்கவர்ந்துசென்ற இராவணனுடு போர்,செய்கையில் அவன்மார்பினின்று கழற்றியெறிந்த ஹாரம்போல வும் விளங்கிற்று என்பதாம். அளவைதூல் என்பதற்கு-இரத்தினசாஸ் திரமெனப் பொருள்கூறி, அந்தச்சாஸ்திரத்திற் பலவகையிரத்தினங் களின்தன்மையை உணருமாறு கூறப்பட்டிருப்பதுபோல, இந்தியாவின தி இரத்தினங்களைத் தன்னிடத்திற்கொண்டு காண்பவர்கட்குப் பலவகை யிரத்தினங்களின் தன்மையை விளக்குமெனக் கருத்துக் கொள்வாரு

முளர். வடகம்-வடம் என்பதன் விரித்தல். இனி, 'மீக்கோள்வடக மென்பதற்கு-மேலேதரித்துள்ள உத்தரீய மென்பாரு முளர்.

'காணி', 'லேசுபோராரக்கன்' என்று சிலபிரதிகள். (உக)

[வாநரவீரர் சுவணநதியிற் சேர்தல்.]

நூ0. அந்நதிமுழுதுநரடியர்ய்வளைமயிலியாண்டுஞ்
சந்நிதியுற்றிலாதார்நெடிதுபின்றவிரச்சென்று
ரின்னதீதிலாததீதென்றியாவையுமெண்ணுங்கோளார்
சொன்னதீவினைகடீர்க்குஞ்சுவணகத்துறையிற்புக்கார்.

(இ-ள்.) இன்ன (து) தீது இலாத(து) (இன்னது) தீது என்று யாவையும் எண்ணும் கோளார் - இன்னது நல்லது இன்னது கெட்டது என்று எல்லாவற்றையும் ஆராய்ந்தறிகிற தன்மையையுடைய வாநர வீரர்,—அ நதிமுழுதும் நாடி-அந்தக்கோதாவரி நதிமுழுவதுந் தேடிப் பார்த்து, ஆய் வளைமயிலை யாண்டும் சந்நிதி உற்றிலாதார்-சிறந்த வளையலையணிந்த மயில்போன்ற சீதையை எங்குங்காணப்பெறாமல்,-நெடிது பின் தவிர சென்றார் - வெகுதூரம் பின்னுற்கழியும்படி முன்நடந்து சென்றவர்களாய் [கோதாவரிநதிக்கு அப்பால் வெகுதூரங்கடந்து சென்று],சொன்ன தீவினைகள் தீர்க்கும் சுவணகம் துறையில் புக்கார்-(தன்னில்மூழ்கியவர்க்கு நூல்களிற்) கூறப்பட்டுள்ள தீவினைகளெயெல் லாம் ஒழிக்கின்ற சுவணகநதியினிடத்திற் சென்று சேர்ந்தார்கள்.

மூன்றுவதுஅடி-வாநரவீரர்களின் பகுத்தறிவை; விளக்கும். ஆய் வளைமயில் - அடையடுத்த உவமையாகுபெயர். சந்நிதி-ஸந்நிதி: வட சொல்: ஸாந்நித்யம்: பிரதியட்சம் எனறு பொருள்.

'நேடிப்பின்றவிர,' 'இன்நதியாவதீதென்று,' 'உணருங்கோளார்' என்று சிலபிரதிகள். (நூ0)

[வானரவீரர் துலிந்நதேசத்தைக் கடத்தல்.]

நூக. சுரும்பொடுதேனும்வண்டுமன்னமுநதுவன்றிப்புள்ளுஞ்
சுரும்பொடுசெந்நெற்காடுங்கமலவாவிகளுமல்கிப்
பெரும்புனன்மருதஞ்சூழ்ந்தவிடக்கைபின்விடக்கச்சென்றார்
குரும்பைநீரமுதச்சோலைக்குலிந்தமும்புறத்துக்கொண்டார்.

(இ - ள்.) சுரும்பொடு-பொன்வண்டுகளும், தேனும்-தேன்வண்டு களும், வண்டும்-கருவண்டுகளும், அன்னமும் - அன்னப்பறவைகளுமம, புள்ளும்-காகை முதலிய மற்றைப்பறவைகளும், துவன்றி-நெருங்கி.— சுரும்பொடு-சுரும்புகளும், செந்நெல் காடும் - செந்நெற்பயிர்த்தொகுதி யும், கமலம் வாவிகளும்-தாமரைத்தடாகங்களும், மல்கி - நிறைந்து,— பெரும்புனல் மருதம் சூழ்ந்த-மிக்கநீர்வளப்பமுள்ள மருதநிலத்தாற் சூழப்பெற்ற, விடக்கை-இடங்கள், பின்விடக்க - பின்னுற்கிடக்கும்படி, (அவற்றைத்தாண்டி), சென்றார் - அப்பாற்சென்றவர்களாய்;—(வாநர வீரர்கள்).—அமுதம் நீர் குரும்பை சோலை குலிந்தமும் புறத்து கொண்

டார்-அமிருதம் போன்ற (இனிய)சோையுடைய இளந்தேங்காய்கள் நிரம்பிய சோலைகளையுடைய குவிந்ததேசத்தையும் தமதுபின்புறத்ததாகும்படி (அதனையும்) தாண்டிச சென்றார்கள்; (எ - று.)

சுரும்பு,தேன்,வண்டு என்பன-தும்பியின் சாதிபேதங்கள். சுரும்பு-எல்லாமணத்திலுஞ் செல்வது. தேன், வண்டு என்பன - நன்மணத்தே செல்வன. புள்என்றது-நாரைமுதலிய மற்றை மருதநிலப்பறவைகளையுணர்த்தும்.செந்நெல்-மிக்கநீர்வளத்திலேவிளையும்நெற்பயிரின் ஓர் சிறந்தசாதி. மருதநிலம்-அன்னம்முதலிய பறவைகளையும், செந்நெல்முதலிய உணவுகளையும், தாமரைமலர்களையும், பொய்கைகளையு முடைய தென்க.மருதம்-நாடும்,நாடுசார்ந்தஇடமும்.மருதநிலமாகியமுதற்பொருளும்,பறவை உண பூ நீர் என்ற அந்நிலத்தின் கருப்பொருள்களும் இச் செய்யுளிற் கூறப்பட்டமை காண்க.

'துவன்றுபுள்ளும்,''மருதஞ்சூழ்ந்தவிடத்தைப் பின்கிடத்திப்போனர்,' ''குரும்பைநீர்முரஞ்சுஞ்சோலை,' 'குலிங்கமும்' என்பன பாடாந்தரங்கள். (கூக)

[வாநரவீரர் அருந்ததிமலையைச் சேர்தல்.]

கூஉ. கொங்கணமேழுநீங்கிக்குடகடற்றரளக்குப்பைச்
சங்கணிபானனெய்தறண்புனறவிரவேகித்
திங்களின்கொழுந்துசுற்றுஞ்சிமயநீள்கோட்டுத்தேவ
ரங்கைகள்கூப்பநின்றவருந்ததிக்கருகரானர்.

(இ - ள்.) (வாநரவீரர்),—கொங்கணம் ஏழும் நீங்கி-ஏழுவகைக் கொங்கணதேசங்களையுந் தாண்டி,—குட கடல்-மேல்கடற்கரையைச் சார்ந்தனவாகிய,தரளம் குப்பை சங்கு அணி பானல் நெய்தல்-முத்துக் குவியல்களையுண்டாக்குகின்ற சங்குகளையும் அழகிய கருங்குவளைமலர்களையு முடைய நெய்தல் நிலத்திலுள்ள, தண் புனல் - குளிர்ந்த நீரையுடைய நிலங்கள், தவிர-பின்னருகும்படி, எகி-(அவற்றைவிட்டு) அப்பாற் சென்று,—திங்களின் கொழுந்து சுற்றும் நீள் கோடு - பிறைசசந்திரன் சுற்றிசசெல்லும்படியான நீண்ட சிகரங்களையுடையதும், தேவர் அம்கைகள் கூப்ப நின்ற-தேவர்கள் தமது அழகிய கைகளைக்கூப்பி வணங்கும்படி நிற்பதுமாகிய, அருந்ததி சிமயத்துக்கு-அருந்ததிமலைக்கு,அருகர் ஆனர்-நெருங்கினவர்களானார்கள்; (எ - று.)

வாநரவீரர்கள் ஏழுவகைப்பட்ட கொங்கணதேசங்களையும், மேல் பாலுள்ள நெய்தல் நிலங்களையுந் தாண்டி மிகவுமுயர்ந்ததாகிய அருந்ததிமலையைச் சேர்ந்தனரென்க. திங்களின்கொழுந்து சுற்றும் நீள்கோட்டு அருந்ததிச்சிமயம்-மலையினுயர்ச்சியை விளக்கும் உயர்வுநவிற்சி. சிமயம்-மலை. சிமயம் அருந்ததிகு=அருந்ததிச்சிமயத்துக்கு; உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. திங்களின்கொழுந்தைக் கூறியது - பூர்ண சந்திரனுக்கும் உபலட்சணம்.

'குரைகடற்றரளக்குப்பை', 'சங்கு', 'வாசநெய்தல்', 'சிர்மைநீள் கோட்டு' என்பன பாடாந்தரங்கள். (கூஉ)

[அங்குச் சீதையைக்காணாது வாநரவீரர் மாகதமலையைக்கடந்து திருவேங்கடமலை சார்தல்]

நூநூ. அருந்ததிக்கருகுசென்முண்டழகினுக்கழகுசெய்தா
ளிருந்ததிக்குணர்ந்திலாதாரேகினரிடையர்மாதர்
பெருந்ததிக்கருந்தேன்மாறுமரகதப்பெருங்குன்றெய்தி
யிருந்ததிற்றீர்ந்துசென்றார்வேங்கடத்திறுத்தவெல்லை.

(இ-ள்) (வாநரவீரர்), அருந்ததிக்கு அருகு சென்று-அருந்ததிமலையின் சமீபத்திற் சேர்ந்து, ஆண்டு-அவ்விடத்தில், அழகினுக்கு அழகு செய்தாள் இருந்த திக்கு உணர்ந்திலாதார்-அழகுக்கும் அழகை யுண்டாக்குபவளாகிய [மிகவுங்கட்டழகியாகிய] சீதை யிருக்குமிடத்தை யறியாதவர்களாய், எகினர் - (அப்பாற்)சென்று,—இடையர் மாதர் பெருந் ததிக்கு அருந்தேன்மாறும் மரகதம் பெருங் குன்று எய்தி இருந்து-இடைப்பெண்கள் தங்களது சிறப்புப்பொருந்திய தயிருக்கு (அம்மலையினிடத்திலுள்ள வேட்டுவச்சிகளிடத்தில்) அருமையான தேனை மாறுதற்கு இடமான பெரிய மரகத மலையை யடைந்திருந்து, (அங்கும் சீதையைக் காணுமையால்), அதின் தீர்ந்து-அதனினின்று நீங்கி, இறுத்த எல்லை-(தமிழ்நாட்டினது) வரையறுக்கப்பட்டுள்ள வடவெல்லையாகிய, வேங்கடத்து-திருவேங்கட மலையினிடத்து, சென்றார்-சென்று சேர்ந்தார்கள்; (எ-று.)

அழகினுக்கு அழகுசெய்தாள்-இயற்கையில் நற்குணங்கள்மிக்கு நல்லிலக்கணமொன்றிலுங் குறைவில்லாத தன்னை அழகு அடைந்திருத்தலால்தான் அதற்கு மிக்கசிறப்பை யுண்டாகினவள் என்றபடி. த்ம்மிடத்துமிகுதியாகவுள்ள பண்டத்தை விலையாகக்கொடுத்து அதற்கு ஈடாகத் தமக்குவேண்டிய அருமையான பொருளை வாங்கிக் கொள்ளுகிற பண்டமாற்றுமுறைப்படி, மாகதமலைக்கு அருகே முல்லை நிலத்திலுள்ள இடைப்பெண்கள் மாகதமலைமீதுள்ள குறிஞ்சிநிலத்து மகளிரிடம் தயிரைக்கொடுத்து அதற்குஈடாகத்தேன்பெற்றுக் கொள்கின்றன ரென்ற இதில், குறிஞ்சிநிலத்தோடு முல்லைநிலத்திற்குக் கலப்புக் கூறியவாறு காண்க; இதனால், நிலங்களின் அண்மைவிளங்கும்: இவ்வாறு நிலங்கட்குக் கலப்புக்கூறுவது-தினைமயக்கம் எனப்படும். மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்திற்கும், காடும் காடு சார்ந்த இடமுமாகிய மருதநிலத்திற்கும் இடையிலுள்ள காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்தில் வாழபவ ராதல்பற்றி, இடைய ரென்பது-காரணப்பெயர். தயிர்-முல்லைநிலக் கருப்பொருள்; தேன்-குறிஞ்சிநிலக்கருப்பொருள். திருவேங்கடமலை "வடவேங்கடந் தென்குமரி" என்று தமிழ்நாட்டுக்கு வடவெல்லையாகக் குறிக்கப்படுதலால், 'இறுத்தவெல்லை வேங்கடத்து' என்றார். இனி, வேங்கடத்து இறுத்த வெல்லை என்பதற்கு-திருவேங்கடமலையிற் சென்று சேர்ந்தபொழுது என்று குளகமாகப் பொருள் கூறுவாரு மூளர்; அது அடுத்த செய்யுள்களோடு இனிதாக அன்வயப்படாதென்க.

'அருந்ததிக் கருகுசென்றார்,' 'விருந்ததிற்றீர்ந்து,' 'வேங்கடத் திறுத்தகாலை' என்று பாடாந்தரங்கள். (நூநூ)

[இதுமுதல் மூன்றுகவிகள் - திருவேங்கடமலையின் வருணனை.]

ரூச. முனிவரு மறைவ லோரு மூன்றைநாட் சிந்தை மூண்ட
வினைவரு நெறியை மாற்று மெய்யுணர் வோரும் விண்ணோ
ரெனைவரு மமரர் மாதர் யாவருஞ் சித்த ரென்போ
ரனைவரு மருவி நன்னீர் நாளும்வந் தாடு கின்றூர்.

(இ-ள்.) முனிவரும்-ருஷிகளும், மறை வலோரும்-வேதமறிந்த அந்தணர்களும், மூன்றை நாள் சிந்தை மூண்ட வினை வரும் நெறியை மாற்றும் மெய் உணர்வோரும்-முற்பிறப்பிலே மனப்பூர்வமாகச்செய்த தீவினைகளினலுண்டாகின்ற நரகநெறியை யொழிக்கவல்ல தத்துவ ஞானிகளும், விண்ணோர் எனைவரும்-தேவர்களெல்லோரும், அமரர் மாதர் யாவரும்-தெய்வமகளிரெல்லோரும், சித்தர் என்போர் அனைவரும்-எல்லாச சித்தர்களும், அருவி நல் நீர்-(அத்திருவேங்கடமலையிலுள்ள) அருவிபெருகுகின்ற புண்ய தீர்த்தங்களில், நாளும்-எப்போதும், வந்து ஆடுகின்றூர்-வந்து நீராடுகின்றூர்கள்; (எ-று.)

முனிவர் முதலிய இவ்வுலகத்தாரும், தேவகணங்களாகிய மேலுலகத்தாரும் வந்து நீராடுதற்கு உரிய பெருமைவாய்ந்த நீருருவிகளினலாகிய பலபுண்ணியதீர்த்தங்களைக் கொண்டுள்ளது, திருவேங்கடமலையென்க அங்கு உள்ள புண்ணியதீர்த்தங்கள்-(கோனேரி, ஆகாசகங்கை, பாபவிநாசம், பாண்டவதீர்த்தம், குமாரதாரை, தும்புருதீர்த்தம், ஆழ்வார்தீர்த்தம் முதலியன. முனிவர்-மகருஷிகள்: [மகரம்-தியானித்தல்.] காட்டுத்தீமூன்னர்ப் பஞ்சுத்துய்போல ஞானயோகத்தின் முன்னாத் தீவினைகள் நீங்கு மென நூல்கள் கூறுதலால், அவ்வாறு ஞானயோக முதிர்சசி யுடையவரை, 'மூன்றைநாட்சிந்தை மூண்டவினை வரு நெறியை மாற்றும் மெய்யுணாவோர்' என்றூர். வித்தர்-தேவ சாதியாரில் ஒருவகையர்.

'முனைவரும்முறைவலோரும்,' 'மெய்யுணர்ந்தோரும்,' 'எதிக ளெண்போர்' என்பன பாடாந்தரங்கள். (ரூச)

வே று.

ரூடு. பெய்த வைம்பொறி யும்பெருங் காமமும்
வைத வெஞ்சொலு மங்கையர் வாட்கணி
னெய்த வஞ்சக வாளியும் வென்றுநற்
செய்த வம்பல செய்குநர் தேவரால்.

(இ-ள்.) (அத்திருவேங்கடமலையின்மீது),—தேவர்-தேவர்கள்,—செய்த ஐம் பொறியும் (தமதுடம்பிற்) பொருந்திய பஞ்சேந்திரியங்களையும், பெருங் காமமும்-பெரிய காமத்தையும், வைத வெம் சொலும்-(பிறர்தம்மைத்)திட்டிய கொடியசொற்களையும், மங்கையர் வாள் கணின் எய்த வஞ்சகம் வாளியும்-இளமகளிர் (தமது) வாள்போன்ற கண்களினலுண்டு செலுத்திய வஞ்சகத்தன்மையுள்ள பார்வையாகிற அம்புகளையும், வென்று-(அலட்சியமாகச) சயித்து, செய் நல் தவம் பல-செய்த(ற்குரிய நல்லதவங்கள் பலவற்றை, செய்குநர்-செய்கின்றூர்கள்; எ - று.)—ஆல்-ஈற்றசை.

தேவர்கள் அத்திருவேங்கடமலைமீதுவந்து, ஐம்பொறிகளையுமடக்கி காமவேதனையில்லாமல், பிறர்தம்மைத்திட்டினாலும் அதனையும் பொறுத்து, மகளிரை மனத்தினாலுங்கருதாது, பலதவங்களைச செய்கின்றார்க ளென்பதாம். பெருங்காமம்-"நீருட்புகிப்பினுங் காமஞ்சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்" என்பது, நாலடியார். "தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே, நாவினுற்சுட்டவடு", "வைதவைவின் மரா மரமேழ்தொளையெய்த," "சொல்லொக்குங்கடியவேகம்" என்றவாறு வசைச்சொற்கள் கேட்பவரது மனத்தை மிகவும்வருத்து மாதலால், 'வைதவெஞ்சொலும் வென்று' என்றார். மேல்நோக்கில், இனியதுபோலத்தோன்றுகின்ற மகளிரதுகண்பார்வை பிறரு ஆடவரது மனத்தை ஊடுருவிப்பாய்ந்து வருத்துமாதலால், அதனை 'வஞ்சகவாளி' என்றார். தேவர்-பூமிதேவராகிய அந்தணர் எனினுமாம்.

'எய்தவெஞ்சொலின்', 'மடவகையர்வாட்கணுல்', 'ஐம்பெருவாளியி னெண்ணற' என்பன பாடாந்தரங்கள்.

இதுமுதல் இப்படலம் முடியுமளவும் இருபத்தொரு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாசசீராயும், மற்றைமூன்றும் விளச்சீர் களாயும் வந்த அளவடிநானகுகொண்ட கலிவிருத்தங்கள். (நூடு)

நூசு. வலங்கொணேமிமழைதிறவானவ
னலங்குகாளிணைதாங்கியவம்மலை
விலங்கும்வ்டுகின்றனமெய்ந்நெறிப்
புலன்கொள்வார்கட்கனேயதுபொய்க்குமோ.

(இ - ள்.)வலம் கொள் நேமி-வெற்றியைக்கொண்ட சக்காயுதத் தைத் தரித்த, மழை நிறம்-வானவன்-கார்மேகம்போன்ற கருநிறதத்தை யுடைய கடவுளாகிய ஸ்ரீநிவாசனது, அலங்கு தாள் இணை-விளங்குகின்ற இரண்டு திருவடிகளை, தாங்கிய-எந்தப்பெற்ற, அ மலை - அத்திருவேங் கடமலையில் வாழ்கின்ற, விலங்கும்-திர்யக்குக்களும், வீடு உறுகின்றன-மோட்சத்தையடைகின்றன; (என்றால்), மெய்நெறி புலன் கொள்வார் கட்கு-உண்மையான மார்க்கத்தில் நடக்கின்ற தத்துவஞான முடைய வர்களுக்கு, அனேயது-அந்தமோட்சமானது, பொய்க்குமோ -கிடைக் காமல் தவறுமோ? [தவறுமற் கிடைக்கும் என்றபடி]; (எ - று.)

ஸ்ரீநிவாஸன் தன்னிடத்தி லெழுந்தருளி யிருக்கும் பெருஞ்சிறப்பு வாய்ந்த அத்திருவேங்கடமலையில் வாழ்கின்ற திர்யக்குக்களும் வீட்டு லகத்தையடைவ் மென்றால், சன்மார்க்கத்தில் நடக்கின்ற தத்துவஞான முடையோர்கட்கு அவவீட்டுலகம் கிடைப்பது தவறுமோ. என்பதாம். இதில், தண்டாபூபிகாநியாய மென்னுங கைமுதிகநியாபம்படக் கூறி யிருப்பது - தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். வலம்கொள் நேமி-வலத்திருக்கையிலேந்திய சக்கரத்தை யுடைய எனினுமாம். சக கரத்தைக் கூறியது-சங்கத்துக்கும் உபலட்சணம். ஸ்ரீநிவாஸன் 'மலை குனியநின்றபெருமாள்' என்று திருநாமம் அடையுமாறு தன தாளிணை களை அம்மலையிற் பதியவைத்துள்ளதனால், 'மழைநிறவானவனலங்குதா

லிணைதாங்கியவீம்மலை'என்றார். திருமாலினதுபஞ்சாயுதங்களுள், சக்கரம்-சுதர்சனமென்று பெயர்பெறும். விலங்கு-குறுக்காக உடம்புஅமையப்பெற்றது, எனவே, இச்சொல்-மிருகங்களையே யன்றி அத்தன்மையான உடம்பையுடைய பறவை ஊர்வன நீர்வாழ்வன என்றவற்றையும் குறிக்கும்: 'திர்யக்'என்ற வடமொழியும் இப்பொருளதே.உம்மை-இழிவுசிறப்பு. புலன் - தேர்ந்த அறிவு: தத்துவஞானம். புலன்கொள்வார் கட்கு அனையது பொய்க்குமோ என்பதற்கு - அம்மலை தத்துவஞானி கட்கு (மோட்சத்தையளிப்பதில்) தவறுமோ எனக் கூறுவாரு முளர்.

'வீடுறுகிற்பன' என்று பிரதிபேதம். (ஈசு)

[வீரராகவர் அங்குள்ள பதிதர்களின் பாதங்களை முடிமேற்கொள்ளல்.]

ஈஎ. ஆயகுன்றினையெய்தியருந்தவ
மேயசெல்வரைமேவினர்மெய்ந்நெறி
நாயகன்றனைநாளும்வணங்கிய
தூயநற்றவர்பாதங்கள்சூடினர்.

(இ - ள்) (வாகராவீரர்),—ஆய குன்றினை எய்தி-அவ்வாறுகிய திருவேங்கடமலையையடைந்து, அருந் தவம் மேய செல்வரை மேவினர்-செய்தற்கரிய தவத்தைப் பொருந்திய பாக்கியவான்களைக் கிட்டியவர்களாய்,—மெய் நெறி நாயகன்தனை நாளும் வணங்கிய தூய நல்தவர் பாதங்கள் சூடினர்-என்றும் அழியாததான வீட்டுலகத்தின்நெறியையளிக்கும் தலைவனுகிய திருவேங்கடமுடையானைஎப்போதும்வணங்கப் பெற்ற பரிசுத்தமான சிறந்த தவத்தையுடைய அவர்களது பாதங்களைத் தமதுதலைமேற்கொண்டு வணங்கினர்கள்; (எ - று.)

திருவேங்கடமுடையானைச சேவிக்கின்ற பெரும்பாக்கியத்தைப் பெற்றுள்ளவராதலால், அவர்களை, 'அருந்தவமேயசெல்வர்' என்றும், 'தூயநல்தவர்' என்றும் கூறினர். 'அருந்தவம்மயசெல்வரை' என்று பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்குச் சிறவாது.

தீழ் நாடவிட்டபடலத்தில் 'கோடுறுமால்வரையதனைக்குறுகுதிரே லுந் நெடியகொடுமைநீங்கி, வீடுறுதிராதலினுன் விலங்குதிர்' என்று சுக்கிரீவன்கூறியது-அம்மலையின் மகிமையை விளக்கும் அதிசயோக்தியென்றும், இங்குச் சுக்கிரீவன்கட்டளையை மீறித் திருவேங்கடமலையிற் சென்று அங்குள்ள பெரியோரை வானரர்கள் தரிசித்தது - இப்புண்ணியத்தின் பயனுலேனும் ஒருகால் சீதாபிராட்டியைக் காணமுடியுமோ வென்ற எண்ணத்தினுற்செய்த தென்றுங் கொள்ளலாம்.

'தூயர்நன்மலர்ப்பாதங்கள்' என்று பிரதிபேதம். (ஈஎ)

[வாநராவீரர் அத்தலைவடிவங்கொண்டு தொண்டைநாட்டை யடைதல்.]

ஈஉ. சூடியாண்டச்சுரிகுழற்றோகையைத்
தேடிவார்புனற்றெண்டிரைத்தொண்டைநன்
னாடுநண்ணுகின்றார்மறைநாவலர்
வேடமேயினர்வேண்டுருமேவுவார்,

(இ-ள்.) வேண்டு உரு மேவுவார்-(தாம்) விரும்பிய வடிவங்களைக் கொள்ளவல்லவர்களாகிய வானவர்கள்,—சூடி-முற்கூறியவாறு நற்றவர் பாதங்களைச்) சூடியபின்பு,—ஆண்டு-அத்திரு வேங்கடமலையில், அ சுரி குழல்தோகையை தேடி-நுனிசுருண்ட கூந்தலையுடையவளும் மயில் போன்ற சாயலையுடையவளுமான அந்தச்சீதையைத் தேடி, (அங்குக் காணுமையால்), மறை நாவலர் வேடம் மேயினர்-வேதங்களில் வல்ல வரான அந்தணரது வேஷத்தைத் தரித்தவர்களாய், தெள் திரை வார் புனல் தொண்டை நல்நாடு நண்ணுகின்றார்-தெளிவான அலைகளையுடைய மிக்கநீர்நிறைந்த சிறந்த தொண்டைநாட்டைச சேர்பவராஞர்கள்; (எ - று.)

'சூடி' என்றது-கீழ்செய்யுளின் அநுவாதம். சுரிகுழல்தோகை-அடையடுத்த இருமடியாகுபெயர். "தெண்ணீர்வயல்தொண்டைநன்ஞடு சான்றோருடைத்து" என்றவாறு நீர்வளம்மிக்குச் சான்றோரை மிகுதியாகவுடைய நாடாதலால், 'வார்புனற்றெண்டிரைத் தொண்டை நன்ஞடு' என்றார். வேண்டுருமேவுவார்-காமரூபிகள். 'வேண்டுருமேவுவார்' என்ற அடைகொளி, 'மறைநாவலர்வேடமேயினர்' என்றதைச சாதிக்குமாறு கூறப்பட்ட தாதலால், கருத்துடையடை கோளியணியாம்.

இனி, 'தண்டகநாடு' என்ற பாடத்திற்கும்-தொண்டைநாடென்றேபொருள்கொள்ளலாம்; முன்னொருகாலத்தில் தொண்டைநாட்டைத் தண்டகனென்னும் அரசன் ஆண்டதுபற்றி, அந்நாட்டிற்கு 'தண்டகநாடு' என்று பெயர்வந்த தென்பர். (தண்டகனென்ற அரசன் பார்க்கவமுனிவரது மகளைக் காதலித்ததனால் தான் அவியாகவும், தன்னுடையமந்திரி வேடனுகவும், தனது நாடாகிய தொண்டைநாடு காடாகவும் மாறுமாறு அம்முனிவரிடம் சாபமேற்று, அம்முனிவரையே வேண்டிக் கரிகாற்சோழன் அங்கு வருகையிற் சாபவிமோசனமுண்டாகும்படி அநுக்கிரகமும் பெற்ரு னென்பது வரலாறு.) "தண்டகநாட்டிறைதாபதர்,""தன்னடிபடுத்துமேலைத்தண்டகநாடுமுற்றும்," "தரைவிளங்கிய தண்டகநாட்டினில்" என்று காஞ்சிப்புராணத்தில் தொண்டைநாட்டின்பெயர் கூறப்படும் இடங்கள் பலவற்றில் 'தண்டகநாடு' என்றே கூறியிருப்பது காண்க. அன்றி, இப்பாடத்திற்குத் தண்டகாரணியமென்றே கொள்வோமெனின், "தண்டகத்தையும் தடவியேகினர்" என்று கீழ்க்கூறியிருத்தலாலும், தொண்டைநாடு கூறப்படாமல் விடுபடுதலாலும், ஏற்றதன்று. எமக்குக் கிடைத்துள்ள ஏட்டுப் பிரதிகளில், 'தொண்டைநன்ஞடு' என இவ்வாறே பாடங் காணப்படுகின்றது. (சு-அ)

• [இதுமுதல் எட்டுக்கவிகள் - தொண்டைநாட்டின் வருணனை.]

சூகூ. குன்றுசூழ்ந்தகடத்தொடுங்கோவலர்
முன்றில்சூழ்ந்தபடப்பையுமொய்புனல்
சென்றுசூழ்ந்தகிடக்கையுந்தெண்டிரை
மன்றுசூழ்ந்தபரப்புமருங்கெலாம்.

(இ-ள்.) மருங்கு எலாம் - (அத்தொண்டைநாட்டின்)இடம்முழுவதும்,—குன்று சூழ்ந்த கடத்தொடும் - மலைகள்சூழ்ந்த சாரல்களும்

[குறிஞ்சிநிலமும்], கோவலர் முன்றில் சூழ்ந்த படப்பையும்-இடையர்களது வீட்டுமுன்னிடங்களைச் சூழ்ந்துள்ள கொல்லைகளும் [முல்லை நிலமும்], மொய் புனல் சென்று சூழ்ந்த கிடக்கையும்-மிக்கநீர்வந்து நிறைந்துள்ள இடங்களும்[மருதநிலமும்], தென் திரை மன்ற சூழ்ந்த பரப்பும்-தெளிவான அலைகளைக் கொண்ட கடலையுடைய வெளியான இடங்களாற்சூழப்பெற்ற பரவியநிலங்களும் [நெய்தல் நிலமும்], (உள்ளன); (எ-று.)

ஏற்ற வினை, வருவித்து முடிக்கப்பட்டது. இதனால், அத்தொண்டைநாட்டில் நால்வகைநிலங்களும் இருத்தலைக் கூறினர். இவ்வாறு நால்வகை நிலங்களுமுடைமைபற்றியே, பூமிக்கு 'நானிலம்' என்று ஒரு பெயர் வழங்கும். கோவலர்—கோ வலர் எனப்பிரிந்து, பசுக்களைக் காத்தலில் வல்லவர் எனக்காரணக்குறி: இதனை, 'கோபாலர்' என்னும் வடமொழியின் திரிபு எனவுங்கொள்ளலாம். படப்பை-வரகு முதலியன வினைதற்குஉரியகொல்லை. மன்று-வெளியான இடம்.

'குன்றுசூழ்ந்ததடத்தொடும்,' 'சென்றுசூழ்ந்தவிடங்களும்,' 'திங்களூர், மன்று' என்று சிலபிரதிகள். (கூகு)

சஅ. சூலடிப்பலவின்சுளை தூங்குதேன்
கோலடிப்பவெரீஇக்குலமள்ளர்ச்
சாலடித்தருஞ்சாலியின்வெண்முளை
தோலடிக்கிளை யன்னந் துவைப்பன.

(இ-ள்.) குலம் மள்ளர்-கூட்டமான உழவர்கள், எர் கோல் அடிப்ப-ஏர் உழும்போது உழவுமாடுகளைக் கோலினு லடிக்கையில், தோல் அடிகளை அன்னம்-தோலடிகளையுடைய கூட்டமான அன்னப்பறவைகள், வெரீஇ-பயந்து, சூல் அடி பலவின் சுளை தூங்கு தேன் சால் அடி தரும்-கருவை அடியிலேயுடைய பலாமரத்தினது [வேர்ப்பலாமரத்தில் தோன்றிய பழங்களது] சுளையினின்று பெருகுகின்ற தேன் பாய்ந்து உழுவுசாலினிடங்களிலே யுண்டாக்கிய, சாலியின் வெள்முளை-செந்நெற்பயிரின் வெண்மையானமுளைகளை, துவைப்பன-கால்களால் மிதித்துத்துவைப்பனவாம்; (எ-று.)

உழவர்கள் உழுகையில் உழவுமாடுகளையடித்துத்திரத்த, அருகிலிருந்த அன்னப்பறவைகள் அதனலஞ்சிச் சரீபத்திற் பலாச்சுளைகளின்தேன்பாய்தலினால் முளைத்துள்ள வயல்களின்மீது, ஓடவே, அவற்றிலுள்ள முளைகள் சிதையு மென்பதாம். இதனால், நீர்வளநில வளங்கள் பெறப்படுதல் காண்க. இனி, இசசெய்யுளுக்கு-கூட்டமாகிய உழவர் கருவுடைய பலாமரத்தினது பழுத்த பழத்தில் மொய்த்த வண்டுகளை ஏரோட்டுகின்ற கோலால் ஓச்ச, அம்மரத்தினின்றுகளிலிருந்த அன்னங்கள் அஞ்சி எர்சசாலடியில் முளைத்த செல்வினது வெள்ளியமுளைகளைத் தோலுடையஅடிகளால் துவைப்பனவென்று பொருள்கூறுவாரு முளர். சூல்-கருப்பம்; இங்கே, பழத்தையுணர்த்தும். பள்ளர்-இங்கு, மருதநிலமாக்கள். கோல்-தாற்றுக்கோல். தோலடி-நீர்வாழ்பறவைகட்கு நீரில் நீந்துதற்குக் கருவியாக விரல்களினிடையே பரவிய தோல்களையுடைய பாதம்.

'குழுமள்ளர்,' 'அன்னந்துகைக்குமே' என்று பிரதிபேதம். (சஅ)

சக. செருகுறுங்கணிற்றேங்குவளைக்குல
மருகுறங்கும்வயண்மருங்காய்ச்சிய
ரிருகுறங்குபிறங்கியவாழையிற்
குருகுறங்குங்குயி லுந்துயி லுமால்.

(இ - ள்.) செருகு உறும் கணின்-கூந்தல்வரையில் நீண்டுபொருந்திய (மகளிரது) கண்போன்ற, தேன் குவளை குலம் - தேனையுடைய நீலோற்பலமலரின் கூட்டம், அருகு உறங்கும் - பக்கங்களில் தங்கப் பெற்ற, வயல்மருங்கு-கழனிகளி னிடங்களிலே,ஆய்ச்சியர் இரு குறங்கு பிறங்கியவாழையில்-இடைப்பெண்களது இரட்டையாகவுள்ளதொடைகள்போல விளங்கிய வாழைமரங்களிலே, குருகு உறங்கும் - நாரைகள் தங்கும்;குயிலும் துயிலும்-குயில்களும் தங்கும்;(எ-று.)-ஆல்-ஈற்றசை.

மகளிர்கண்ணுக்கும் தொடைக்கும் முறையே உவமையாகக்கூறப்படுகின்ற குவளைமலர்களையும் வாழைகளையும் உபமேயமாக்கிக்கூறியது-எதிரிநிலையணி; இவ்வணியினால், குவளைமலர் வாழை என்ற இவற்றைவிட மகளிரது கண்ணும் தொடையும் மிக்கசிறப்பினவென்பது பெறப்படும். தொடைக்கு வாழை-திரண்டு உருண்டு நீண்டு நெய்த்த வடிவில் உவமம். செருகுறுங்கண்-கூந்தல்வரையில் நீண்ட கண்:முடித்தல செருகப்படுதலால், கூந்தல் 'செருகு' எனப்பட்டது; செருகுஎனினும், சுருள்எனினும் ஒக்கும் முதனிலைத்தொழிலாகுபெயர்; செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயருமாம். இனி, செருகுறும்-(அக்கத்திலுற்) செருகுதல் பொருந்திய எனினும் அமையும். ஆய்ச்சியர்-முல்லைநிலத்து மகளிர். குறங்குபிறங்கிய, குயிலுந்துயிலும்-பிராசம்.

'செருகுறுங்களித்தேங்குவளைக்குலம்,''வயலயலாய்ச்சியர்,' 'குறங்கிற்பிறங்கிய' எனவும் பாடங்கள் காணப்படுகின்றன. (சக)

சஉ. தெருவினர்ப்புறும்பல்லியந்தேர்மயில்
கருவிமாமழையென்றுகளிப்புறு
பொருநர்தண்ணுமைக்கன்னமும்போகல
முருவினர்க்குமயக்கமுண்டாங்கொலோ.

(இ-ள்.) தெருவின் ஆர்ப்புறும் பல் இயம்-தெருக்களிலே ஆரவாரிக்கின்ற பலவகைவாத்தியங்களினொலியை, தேர்-கேட்டறிந்த,மயில்-மயில்கள், (அம்முழக்கத்தை), கருவி மா மழை என்று-(உலகம் நடத்தற்குத்) தூண்டுகாரணமான சிறந்த மேகத்தினிடியென்று மயங்கி, களிப்பு உறு-மகிழ்ச்சியை யடையமாட்டா; அன்னமும்-அன்னப்பறவைகளும்,பொருநர் தண்ணுமைக்கு-கூத்தரது மத்தளவோசைக்கு(அதனை மேகத்தின்இடியென்று மயங்கி), போகல-(அஞ்சி) விலகிசெல்லமாட்டா; மருவினர்க்கு மயக்கம் உண்டாம் கொல் ஓ - எப்பொழுதும் நெருங்கிப்பழகுபவர்க்கு மயக்கமுண்டாகுமோ? (எ - று.)

மேகத்தினிடியோசையைக் கேட்டுக் களித்தல் மயில்கட்கும், அஞ்சுதல் அன்னப்பறவைகட்கும் இயல்பு. வாத்தியங்களினோசை-மேகத்தினிடியையும், முழவினொலி-மேகத்தின் குமுறுதலையும் ஒக்கும். தொண்

டைநாட்டில் வாத்தியங்களினொலியைப் பலகால்கேட்டுப் பழகியிருத்தலால், அவ்வாறுதோன்றும் ஒலியை இது மேகத்தினொலியன்றென்று உண்மையறிதலால், மயில்கள் களிப்படையாவாயின; அவ்வாறே,தண்ணுமையொலியை அடிக்கடி கேட்டுப் பழகியிருத்தலால், முழவொலியைக் கேட்கும்போதெல்லாம் இது மேகத்தின் குமுறுதலன்றென்று உண்மையுணர்தல்பற்றி, அன்னப்பறவைகள் அஞ்சி விலகாவாயின; இவ்வாறு பறவைகட்கும் பகுத்தறிவுண்டானதற்குக் காரணம் மிக்க பயிற்சியே யென்பதாம். முதல் மூன்றடிகளிற் கூறியசிறப்புப் பொருள்களே ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருள் சாதித்து நிற்பது - வேற்றுப் பொருள்வைப்பணியின் பாற்படும்: இதனை வடநூலார் அர்த்தாந்தரந்யாஸாலங்கார மென்பர் பல் இயம்-தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி எனப் பலவகைப்படும் வாத்தியங்கள். பொருநர்தண்ணுமைக்கு-போர்வீரரது பேரிகையின் முழக்கத்திற்கு, அஞ்சி எனினுமாம். மயில் அன்னம் என்ற பால்பகாவஃறிணைப்பெயர்கள். களிப்புரு போகல என்ற பலவின்பால்முற்றுக்களைக் கொண்டுமுடிந்தன. 'கொல்' என்ற இடைசசொல் வினைப்பொருளைத்தருதலால், ஓகாரம்-அசைநிலை; (எ-று.)

'செருவினுள்த்தெழு', 'அப்புறம்போகில' என்று சிலபிரதிகள். ()

சாரு. தேரைவான்றலைத்தெங்கிளம்பாளையை
நாரையென்றிளங்கெண்டைநடுங்குவ
தாரைவன்றலைத்தண்ணிளவாம்பழ்சே
சேரையென்றுபுலம்புவதேரையே.

(இ - ள்.) தேரை வான் தலை தெங்கு இளம பாளையை-அலங்கரிக்கப்பட்ட தேர்போன்ற பெரிய [விரிந்த] தலையையுடைய தென்னைமரத்தின் இளமையான [விரியாத] பாளையை(க கண்டு),இளங கெண்டை-இளமையான கெண்டைமீன்கள், நாரை என்று நடுங்குவ-(தங்களைக் குதிக்கொல்லும்) நாரையென்னும்பறவையென்று நினைத்து அஞ்சுவன; தார்ரை வல் தலைதண் இள ஆம்பலை-கூர்மையான வலிய நுனியையுடைய குளிர்ந்தஆம்பலரும்புகளை(க் கண்டு),தேரை-தவளைகள்,சேரை என்று புலம்புவ-(தங்களைவிழுங்குஞ்)சாரைப்பாம்பென்றுநினைத்துவாய் விட்டுக்கதறுவன; (எ - று.)

விரியாத தென்னம்பாளைகள் நாரைப்பறவைகளையும், செவ்வல்லியரும்புகள் சாரைப்பாம்புகளின் தலையையும் வடிவத்தினால் ஒக்குமென்க. தென்னம்பாளையை இளங்கெண்டைகள் நாரையாகவும், ஆம்பலரும்புகளைத் தேரைகள் சாரைப்பாம்பின் தலைகளாகவும் எண்ணி அஞ்சிப் புலம்பியதாகக் கூறியது, மயக்கவணியின்பாற்படும். தென்னமரத்தின் விரிந்த தலைதேரின் தலைபோல உருவத்தினால் தோன்றுதல் இயற்கையாதலால், 'தேரைவான்றலைத்தெங்கு' என்றார்; உவமையணி. தேரை, ஐ-சாரியை. தேர் ஐ வான் தலை என்றுபிரித்து, முதிர்ந்த, அழகிய பெரிய தலைகளையுடையதெங்கு என்று உரைப்பாரு முளர். தாரை-கூர்நுனி. இச்செய்யுளின் பின்னிரண்டடியை "செங்கழுநீர்மொட்டை யரவின் பசுந்தலையென்றஞ்சி-இரவெல்லாம், பின்னைக்குருகிரங்கப்பே

தைப்புள் தாலாட்டும், வள்ளைக்குருநாடு'' என்பதனோடு ஒப்பிடுக. செவ்வல்லியரும்புகள் பசிய புறவிதழ்களால்மூடப்பட்டு வலிமைபெற்றிருக்கு மாதலால், அதற்கு, வன்றலை' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

'தேரைவென்றுயர்,' 'தேரைவன்றலை,' 'சேரைவன்றலை,' 'சிரைவன்றலை,' 'தெங்கின்வண்பாளையை,' 'ஆரைவன்றலையாம்பலருப்பினை' என்பன பாடாந்தரங்கள். (சாடு)

சுசு. நள்ளிவாங்குகடையிளநவ்வியர்
வெள்ளிவால்வளைசிதியவெண்மணி
புள்ளிநாரைசினைபொரியாதவெண்
முள்ளியாமைமுதுகினுடைப்பரால்.

(இ - ள்.) நள்ளி வாங்கு கடை இள நவ்வியர்-நண்டுகளைப்பிடிக்கின்ற இளமையான மான்போன்ற கடைசிச சாதி மகளிர் —வெள்ளிவால் வளைசிய வெள் மணி-மிகவும் வெண்ணிறமான சங்குகள் என்ற வெண்மையான முத்துக்களை, புள்ளி நாரை பொரியாத சினை என்று உள்ளி-புள்ளிகளையுடைய நாரைகளது பொரிக்கப்படாத முட்டைகளாகுமென்று நினைத்து, ஆமை முதுகின் உடைப்பா-(அவற்றை உண்பதற்காக] ஆமைகளின் முதுகில் உடைப்பார்கள், (எ-று.)—ஆல்-ஈற்றசை.

கடைசியர் வயல்களில் நண்டுபிடிக்கையில் அங்குக்கிடக்குஞ் சங்குகளீன்ற முத்துக்களை நாரைப் பறவைகளின் முட்டைகளென்று நினைத்து, அம்முத்துக்களை ஆமைகளின் முதுகில உடைப்ப ரென்பதாம்; மயக்கவணி. கடையிள நவ்வியா - உழத்தியா. கடையிள நவ்வியர் நள்ளி வாங்கு வெண்மணி என்றுஎடுத்து-உழத்தியா விருமபிகையிலெடுத்த வெண்மையான முத்துக்களை யெனறு உரைப்பாருமுளர். ஆமையின்முதுகு கற்பாறைபோல வலிதாயிருத்தலால, கடைசியர் அங்கு முத்துக்களை யுடைப்பாராயினர். நவ்வி-மான. வெள்ளி, வால்-ஒருபொருட் பன்மொழி.

'சினைபொரியாமை,' 'சினைபொரியாவு,' 'பொலிசினையாகும்' எனறு பாடாந்தரங்கள். (சுச)

சுரு. சேட்டிளங்கடுவன்சிறுபுன்கையிற்
கோட்டதேம்பலவின்கனிக்கூனசுளை
தோட்டமைந்தபொதும்பரிற்றாங்குதே
னீட்டமென்னசசென்றியினமொய்ப்பன.

(இ-ள்.) சேடு இளகு கடுவன்-மிகவும் இளமையான ஆண்குரகுகினது, சிறு புல் கையில்-மிகவுஞ் சிறிய கையிலையுள்ள, கோட்ட தேன் பலவின் கனி கூன் சுளை-இனிதாகிய உணடான இனிய பலாப்பழத்தினது வளைவான சுளையில்,—தோடு அமைந்த பொதும்பரில் தூங்குதேன் ஈட்டம் என்ன-இதழ்களையுடைய மலர்கள் நிறைந்த சோலை கரிலே மொய்க்கின்ற வண்டுகளின்கூட்டம்போல,—ஈ இனம் சென்று மொய்ப்பன ஈக்களின்கூட்டம் போய மொய்த்துக்கொள்வனவாம்; (எ-று.)

ஆண்குரங்குகளின்கையிலேயுள்ள பலாசசுளையில் ஈக்கள்மொய்த்தற்கு - சோலைகளிலுள்ளமலர்களில வண்டுகள்மொய்த்தலை உவமை

கூறினர். 'ஈட்டீ மங்கதிற்றேய்த்தினிதுண்ணுமால்' என்ற பாடத்திற்கு-சிறிய ஆண்குரங்குகள் தமதுகையிலுள்ள பலாசுளைகளைச் சோலையிற்பெருகுந் தேன்பெருக்கில் தோய்த்து இனிதாக உண்ணுமென்று பொருளாம். சேட்டிளம், சிறுபுன்-ஒருபொருட்பன்மொழிகள். பொதும்பர்-மரச்செறிவு; சோலைக்கு, இலக்கணை.

'மென்சிறையீயின மீட்டுமால்' என்று சிலபிரதிகள். (சஞ)

சசு. செல்வரென்றும்வடகலேதென்றமிழ்ச்
சொல்வரம்பினரென்றுஞ்சுமடரைக்
கொல்வரென்றுங்கொடுப்பனரென்றுமவ்
வில்வரம்பினர்க்கீதேனுமீட்டதே.

(இ-ள்.) செல்வர் என்றும் - செல்வமுள்ளவரென்றும், வடகலே தென்தமிழ்சொல் வரம்பினர்என்றும்-ஸம்ஸ்கிருதம் தமிழ் என்கின்ற பாஷைக்கு எல்லையாகவுள்ளவ ரென்றும், சுமடரை கொல்வர் என்றும்-துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்பவ ரென்றும், கொடுப்பனர் என்றும்-(வறியவர்க்கு வரையாதுபொருள்) கொடுப்பவரென்றும், (பேர்பெற்றுள்ள), அ இல்வரம்பினர்க்கு-அந்தத்தொண்டைநாட்டிலே இல்லற வாழ்க்கை தவறுமலொழுகுஞ் சான்றோர்கட்கு, ஈ தேனும்-(வேண்டுவார்க்கு வேண்டியபொருளை வரையாது) ஈயுந்தன்மையுள்ள காமதேனுவேனும், ஈட்டதே-ஒப்பாகுமோ? [ஒப்பாகாதென்றபடி]; (எ-று)

தொண்டைநாட்டில் செல்வராயும் ஸம்ஸ்கிருத திராவிட பாஷைகளிற் பாரங்கதராயும் துஷ்டநிக்கிரகஞ் செய்பவராய் முள்ள இல்வாழ்வாராகிய சான்றோர்க்கு கொடுக்குந்தன்மையிற் காமதேனுவும் ஒப்பாகாதென்பதாம். ஸம்ஸக்ருதம் ஆதியில் வடக்கே இமயமலைப் பிராந்தத்தில் காசிமுதலிய இடங்களில் மிக்குவழங்கியதனால், அதற்கு, 'வடமொழி' என்றும், அப்பாஷை நூல்கள் 'வடகலே' என்றும் பெயர் பெறும். சுமடர்-நீக்குணமுடையோர். தேனும்-தேனுவும் என்பதன் தொகுத்தல்; உம்மை-உயர்வுசிறப்பு.

இனி, 'இல்வரம்பினிறைவனேயேத்துவார்' என்ற பாடத்துக்கு-இல்வாழ்க்கையி லிருந்துகொண்டே எல்லாம்வல்ல முழுமுதற்கட வுளைப் புகழ்ந்து தியானிப்பார்க ளென்று பொருளாம்.' 'கொடுப்பன ரென்றும்பே, ரில்வரம்பவர்க்கேயருமீட்டவால்' என்ற பாடத்துக்கு-கொடுப்பவரென்றும் பிரசித்தியையுடைய இல்வாழ்க்கையிலுள்ள இத்தொண்டைநாட்டுச் சான்றோர்க்கு எவ்வகையிலும் உவமைப் பொருள்கள் கிடைக்கமாட்டா வென்க; இப்பொருளில் எய் அரும் ஈட்ட-ஈடுவையரிய: விகுதிபிரித்துக்கூட்டல்.

'சுளிபட,' 'சுளிஞரை' என்றும் பாடாந்தரங்கள். (சசு)

[இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்: வாநரவீரர் தொண்டை நாட்டைக்கடந்து சோழநாட்டிற் செல்லுதல்.]

சஎ. அன்னதொண்டைநன்னாடுகடந்தகன்
பொன்னிநாடுபொருவிலரெய்தினர்
செந்நெலுங்கரும்புங்கமுகுஞ்செறிந்
தின்னல்செய்யுநெறியரிதேகுவார்.

(இ-ள்.) பொருவு இலர்-ஒப்பில்லாதவராகிய வாரவீரர்,—அன்ன தொண்டை நல் நாடு கடந்து-(கீழ்க்கூறிய) அத்தன்மையான வளங் களையுடைய சிறந்த தொண்டைநாட்டைத்தாண்டி, - அலைபொன்னி நாடு எய்தினர்-அகன்ற காவேரிநதிபாயுஞ் சோழநாட்டைச் சேர்ந்தவர் களாய்,—(அந்நாட்டில்), செந்நெலும் கரும்பும் கமுகும் செறிந்து இன் னல் செய்யும் நெறி-செந்நெற்பயிர்களும் கரும்புகளும் பாக்குமரங்க ளும் (போவதற்குக் கூடாதபடி) எங்கும் நெருங்கித்துன்பஞ் செய்கின்ற வழிகளில், அரிது ஏகுவார்-அருமையாகச செல்வாராயினர்; (எ-று.)

காவேரிநதிபாயப்பெற்ற வளத்தாற் சோழநாடுமுழுதும் செந்நெற் பயிரும் கரும்புப்பயிரும் பாக்குமரங்களும் எங்கும்நெருங்கிச செல்வார் க்குப் போகும்வழியும் கிடைக்கஅரிதாகு மென்க.

'அன்னதண்டகநாடு' என்றும் பாடம்; முன்னமே இதற்குக்கார ணங் கூறப்பட்டது. (சஎ)

சஅ. கொடிறுதாங்கியவாய்க்குழுநாரைவாழ்
தடறுதாங்கியகூனிளந்தாழையின்
மிடறுதாங்கும்விருப்புடைத்தீங்கனி
யிடறுவார்நறுந்தேனினிழுக்குவார்.

(இ - ள்.) (வாரவீரர்),—கொடிறு தாங்கிய வாய் குழுநாரை வாழ் தடறு-கதுப்புப்பொருந்திய வாயையுடைய கூட்டமானநாரைகள் வசிக் கின்ற நீர்க்கரைகளிலே, தாங்கிய-மூளைத்துவளர்ந்துள்ள, கூன் இளந் தாழையின்-வளைவையுடைய இளமையான தென்னைமரத்தினது, மிடறு-கழுத்துப்பக்கம், தாங்கும்-சுமந்துகொண்டிருக்கின்ற, விருப்பு உடை தீங் கனி-விருப்பத்தையுண்டாக்குகின்ற இனிய பழுத்துக்கீழ் விழுந்த காய்களினுல்,இடறுவார்-தடுக்கி விழுபவர்களும்,நறுந்தேனின் இழுக்குவார்-அங்குப்பாய்கின்ற தேன்பெருக்கினுல் வழுக்கிவிழுவாரு மாயினர்; (எ - று.)

வாரவீரர் சோழநாட்டிற் செல்லுகையில் இடைவழியிலே முற் றிக் கீழ்விழுந்துள்ள தெங்கம்பழங்களிற் காலிடறியும், தேன்பெருக் கில் வழுக்கியும் வருந்திசசெல்லலாயின ரென்பதாம். இசசெய்யுள்- தென்னைமரமிருதியையும், தேன்மிருதியையும் விளக்கிய வீறுகோ ளணியாம். 'இன்னல்செய்யு நெறியரிதேகுவார்' என்ற கீழ்க்கவியிற் கூறியதை, இங்கு வேறுவகையாக விளக்கினர். தடறு-மட்டையென்று கூறுவாருமுளர். (சஅ)

[இதுமுதல் ழன்றுகவிகள் - சோழநாட்டின் வருணனை.]

சஆ. குழுவுமீன்வளர்குட்டமெனக்கொளா
வெழுவுபாடலிமிழ்கருப்பேந்திரத்
தொழுகுசாறகன்கூனியினுழ்முறை
முழுகிநீர்க்கருங்காக்கைமுளைக்குமே.

(இ - ள்.) கரு நீர் காக்கை-கருநிறமுள்ள நீர்க்காக்கைகள்,—குழு வும் மீன் வளர் குட்டம் என கொளா-கூட்டமாகத்திரளுந் தன்மை

யுள்ள-மீன்கள் வளர்தற்கு இடமான குளமென்று நினைத்து,—எழுவு பாடல்இமிழ் கரும்பு எந்திரத்து ஒழுகு சாறு அகல் கூனையின்-(சுருதி கூட்டுதற்கு) எழுப்புகின்ற பாடல்போல (ஆலையாடும்போது) ஒலிக் கின்ற கரும்பாலையினின்று பெருகுகிற இரசம்நிறைந்த வாயகன்ற கூனிலே, ஊழ் முறை முழுகி-வரிசை வரிசையாக முழுகி, முளைக்கும்-வெளிக்கிளம்பும்; (எ - று-)

ஆலையாடிக் கருப்பஞ்சாறுநிரம்பின கூன்களை நீர்க்காக்கைகள் மீன்கள் நிரம்பிய குளங்களென்று மயங்கி அவற்றில் தமது உனவாகிய மீன்களைக் குத்தித்தின்பதற்காக மூழ்கிமூழ்கி இரையைப்பெறாது வெளிக்கிளம்பு மென்றவாறு; **மயக்கவுணி**. ஆலையாடுகையில் உண்டா கின்ற ஓசை சுருதிகூட்டுதலை யொக்கு மென்க, எந்திரம்-யந்திரம் என் பதன் மரூஉ. கூனை-கருப்பஞ்சாறு காய்ச்சுதற்குரிய வாயகன்ற தொரு கலம்.

'உழுதசாறு' என்று சிலபிரதிகள். (சுசு)

. ரூ. பூநெருங்கியபுள்ளுறுசோலைக
தேனெருங்குசொரிதலிற்றேர்வில
மீனெருங்குறும்வெள்ளம்வெரீஇப்பல
வானரங்கண்மரங்களின்வைகுமால்.

(இ - ள்) பூ நெருங்கிய புள் உறு சோலைகள் தேன் ஒருங்கு சொரி தலின்-மலர்களில் நிறைந்து மொய்க்கின்ற வண்டுகள் மிகுதியாகப் பொருந்திய சோலைகள் தேனை அதிகமாகச் சொரிதலினால்;(அத்தேன் பெருக்கைக்கண்டு),—பல வானரங்கள்-(அசோகசோலையில் வாழ்கின்ற) பல குரங்குகள், தேர்வு இல-(உண்மையை) ஆராயாதனவாய்,—மீன் நெருங்குறும் வெள்ளம் வெரீஇ - மீன்கள்நிறைந்துள்ள நீர்வெள்ள மென்று அஞ்சி,மரங்களின் வைகும்-மரங்களின்மீதேறி அங்குத்தானே வசிக்கும்; (எ - று.)—ஆல்-ஏற்றசை

சோலைகளிலுள்ளமலர்கள் தேனை மிகுதியாகச்சொரிதலினால் அத் தேன்பெருக்கை நீர்வெள்ளமென்று மாறுகக்கருதி அஞ்சி அங்குள்ள வானரங்களெல்லாம் நிலத்திலிறங்காமல் மரங்களின்மேலே இருக்கு மென்பதாம்:இதுவும்-**மயக்கவுணி**யே. இதனால் தேன்மிகுதி பெறப்படு தலால், **வீறுதோணி** தொனிக்குமென்க. நீர்வெள்ளத்தைக்கண்டு அஞ்சுதல்,வானரங்களின் இயல்பு. பூநெருங்கிய'என்பதைச சோலைக்கு அடைமொழியாக்கி, 'புள்' என்பதற்குப் பறவைகளெனக் கொள்ளினு மாம். 'பூநெருங்கிய' என்ற அடைமொழி-சோலைகள் தேனை மிகுதியா கச்சொரிதற்கு ஏற்றன என்ற கருத்தை விளக்குதலால்' **கருத்துடை யடை மொழியணி**.

'பூநெருங்குவ,' 'தேனெருங்குதருதலிற்றேர்ந்து சாய்,' 'மீனெருங் குவ' என்று சிலபிரதிகள். (ரூ0)

ரூக. தாறுநாறுவதாழைகடாழையின்
சோறுநாறுவதூங்குறுமாங்கனி
நாறுநாறுவநாறுவளர்க்குறுஞ்
சேறுநாறுவசெங்கழுநீரரோ.

(இ-ள்.) தாழைகள்-தாழைமரங்கள், தாறு நாறுவீ-பூவின் குலைகள் தோன்றப்பெறுவன; ஞங்குறு மாங்கனி - (தாழையினருகிலுள்ள மாம ரங்களிற் பழுத்துத்) தொங்குகின்ற மாம்பழங்கள், தாழையின் சோறு நாறுவ தாழைமலர்களின் சுண்ணங்கள் படியப்பெற்று அந்தமணத் தையே வீசுவன; நாறு நாறுவ-(வயல்களில்)நாற்றுக்கள்விளங்குவன; நாறு வளர்க்குறும் சேறு-அந்நாற்றை வளரச்செய்கின்ற குழைசேறு கள், செங்கழுநீர் நாறுவ-(தம்மிடத்துமுளைத்து மலர்ந்துள்ள செங்க ழுநீர் மலரின்தொடர்பால் அச) செங்கழுநீர்மலரின் நறுமணத்தையே வீசுவன;(எ - று.)—அரோ-ஈற்றசை.

தாழைமரமும் மாமரமும் ஒன்றற்குஒன்று அருகிலிருத்தலினால், தாழைமலரின் சுண்ணங்கள் படியப்பெற்று மாம்பழங்கள் அம்மணத் தைவீசும்படியும், நாற்றுக்கள்நன்குவளரப்பெற்ற குழைசேறுகள் தமது அருகில் செங்கழுநீரும் உடன்முளைத்திருத்தலால் அச்செங்கழுநீர்மல ரின் மணத்தைப் பெறும்படியும் பெருமைவாய்ந்தது சோழநாடென்க; இங்கு, மாம்பழங்களும் சேறும்-முறையே, தாழைமலர்சுண்ணத்தின் நறுமணத்தையும், செங்கழுநீர்மலரின் நறுமணத்தையும் பெற்றனவா கக் கூறியது-பிறிதினெதிர்ணம்பெறலணியின் பாற்படும். 'தாறுநாறுவதா ழைகள்' என்பதற்கு-தென்னைமரங்கள் குலைகளினால் விளங்குவன என்று கூறுவாரு முளர்.

'தூம்பிழிமாங்கனி', 'தேம்பிழிமாங்கனி' என்பன - பாடாந்தரம். இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை. (இக)

[வாநவீரர் சோழசேரநாடுகளைக் கடந்துபாண்டியநாட்டையடைதல்.]

உஉ. அனையபொன்னியகன்புனலுடொரீஇ
மனையின்மாட்சிகுலாமலைமண்டலம்
விளையினீங்கியபண்பினர்மேயினர்
ரினியதென்றமிழ்நாடுசென்றெய்தினர்.

(இ - ள்.) விளையின் நீங்கிய பண்பினர் - நிலவிளையினின்று நீங்கிய நற்குணமுடையவர்களான வாநரர்கள்,-அனைய பொன்னி அகல் புனல் நாடு ஒரீஇ-அத்தன்மைத்தான காவேரிநதி பாயப்பெற்ற விசாலமாகிய நீர்வளமுள்ள சோழநாட்டைத் தாண்டி, மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம் மேயினர்-இல்லறத்தின் சிறப்புவிளங்குகின்ற மலைநாடாகிய சேரநாட்டைச் சேர்ந்தவர்களாய், (அங்குச் சீதையைக் காணப்பெறா மல்), இனிய தமிழ் தென் நாடு சென்று எய்தினர்-இனிமையான தமிழ் வழங்கப்பெற்ற தென்னாடாகிய பாண்டியநாட்டைச் சென்று சேர்ந் தார்கள்; (எ - று.)

காவேரிநதிபாயப்பெற்றுச செழுமை வாய்ந்துள்ளதனால், சோழ நாட்டிற்கு 'புனலூடு' என்று ஒருபெயர். சேரநாட்டிலுள்ளவர் இல்லற வொழுக்கத்தில் தவறாது நடத்தலால்,அதற்கு'மனையின்மாட்சி குலாம்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. மலைமண்டலம் - மலைநாடு, சேரநாடு,

'மேவினர், நினையதென்றமிழ்நாடு' என்று சிலபிரதிகள். (இஉ)

[பாண்டியநாட்டின் சிறப்பு.]

டுங. அத்திருத்தகுநாட்டினையண்டர்கா
டொத்திருக்குமென்றுலுரையொக்குமோ
வெத்திறத்தினுமேழுலகுப்புகழ்
முத்துமுத்தமிழுந்தந்துமுற்றலால்.

(இ - ள்.) எ திறத்தினும்-எல்லாவகையாலும், எழ்உலகும் புகழ்-எழுலகத்தாராலும் புகழப்படுகின்ற, முத்தும் - முத்துக்களையும்; முத்தமிழும்-(இயல் இசை நாடகம் என்ற)மூவகைத்தமிழையும்,தந்து-(தன்னிடத்திலுண்டாக்கிக்) கொடுத்து, முற்றலால் - பெருமைபெறுதலினால்,—அ திருதகு நாட்டினை-செல்வவளம்விளங்குகின்ற அந்தப்பாண்டியநாட்டை, 'அண்டர் நாடு-தேவலோகமானது, ஒத்திருக்கும்—', என்ருல்-என்றுகூறினால், உரை ஒக்குமோ - அசசொல் ஏற்புடையதாகுமோ? [ஏற்புடையதாகாது.] (எ - று.)

அந்தப்பாண்டியநாடானது முத்துக்களையும் முத்தமிழாகிய மூவகையமிருதங்களையும் தருகின்றதனால், ஒருவகையமிருதத்தைமாத்திரமே கொடுக்கின்ற தேவலோகத்தை 'புலவர்நாடு' என்ற பெயரொற்றுமையால் [புலவர்-தேவர்களும், வித்துவான்களும்,]அந்தப் பாண்டியநாட்டிற்கு ஒப்பாகுமென்று சொல்லுதல் சிறிதுந்தகா தென்றவாறு; ஏதுவணி. உரையொக்குமோ - ''சொல்லொக்கும் பொருளொவவாவால்.'' ''பூழியர்கோன்தென்னுடு முத்துடைத்து'' என்றபடி பாண்டியநாடு முத்துக்குளிக்குங் கடற்றுறையை யுடைமையாலும், தமிழ்சசங்கங்களைப் பெற்றிருத்தலினாலும், 'முத்து முத்தமிழுந் தந்துமுற்றலால்' என்ருர்.

'எதிறதினுமெவ்வுலகத்தினும்,' 'எழுலகம்புகழ்,' 'தந்துமுற்றுமோ,' 'தந்துமுற்றுமே' என்பன பாடாந்தரங்கள். (டுங)

[அந்நாட்டிற் சீதையைக்காணுமல் வாநரவீரர் வருந்துதல்.]

டுச. என்றதென்றமிழ்நாட்டினையெங்கணுஞ்

பொன்றுவாரிற்பொருந்தினர்போயினர்
துன்றலோதியைக்கண்டிலர்துன்பினர்.

(இ - ள்.) திருந்தினர்-சேர்மையான மனமுடைய வாநரவீரர்கள்,-என்ற-என்றுசிறப்பித்துக்கூறப்பட்ட, தென் தமிழ் நாட்டினை - பாண்டியநாட்டை, எங்கணும் திரிந்து சென்று நாடி - எல்லாவிடங்களிலும் அலைந்து சென்றுதேடிப்பார்த்தது,—துன்று அல் ஒதியை கண்டிலர்-நெருங்கிய இருள்போன்ற கூந்தலையுடைய சீதாபிராட்டியைக் காணுதவர்களாய், துன்பினர்-மிக்கவருத்தமுகொண்டு, பொன்றுவாரின் பொருந்தினர் போயினர் - இறப்பவர்போலச் சோர்வுபொருந்தியவராய்ச செல்லலானார்கள்; (எ-று.)

பாண்டியநாட்டிற்கு அப்பால் தேடிப்பார்ப்பதற்குத் தேசமொன்றுமில்லாமல் கடலே யிருத்தலால், சீதையைத்தேடும் ஊக்கங்குறைந்து வாநரவீரர் உயிரற்றவர்போலச் செயலற்றவராய்ச் செல்லலானார்களென்பதாம். (டுச)

[வாநரவீரர் மகேந்திரபருவதத்தைச் சேர்தல்.]

ருரு. வன்றி சைக்களி றன்ன மகேந்திரக்
குன்றி சைத்தது வல்லியிற் கூடினர்
தென்றி சைக்கடற் சீகர மாருத
நின்றி சைக்குநெ டுநெறி நீங்கினர்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்), தென் திசை கடல் சீகரம மாருதம நின்று இசைக்கும் நெடு நெறி நீங்கினர்-தெற்குத்திக்கிலுள்ள சமுத்திரத்தினது நீர்த்திவலைகளோடு கூடிய தென்றற்காற்று இடைவிடாது வீசப்பெற்ற (பாண்டியநாட்டின்) பெருவழியைக் கடந்தவர்களாய்,—இசைத்தது வல்திசை களிறு அன்ன மகேந்திரம் குன்று-(பலரானும்) சிறப்பித்துக்கூறப்படுவதாகிய வலிய திக்கஜம்போன்ற மகேந்திரமலையில், வல்லியில் கூடினர்-விரைவிற் சென்றுசேர்ந்தார்கள்; (எ - று.)

பாண்டியநாட்டிற்சென்ற வானரவீரர் தென்கடற்கரையிலுள்ள மகேந்திரபருவதத்தைச சேர்ந்தார்க ளென்பதாம்.தெற்கிலுள்ள மகேந்திரபருவதம் அஷ்டதிக்கஜங்களுள் தென்திசைக்களிறாகிய வாமனம் என்றதைப்போலுமென உத்ப்ரேக்ஷித்தார். இதனை-எதிர்நிலையணியெனக் கூறுவாருமுளர். இசைத்ததாகிய குன்றுஎன்க. திஸா, மஹேந்த்ரம், ஸீகரம், மாருதம்-வடசொற்கள். (ருரு)

ஆறுசெல்படலம் முற்றிற்று.

பதின்மூன்றாவது

சம்பாதிப்படலம்.

சம்பாதியினது செய்தியை யுணர்த்தும் பாக மென்பது பொருள். ஸம்பாதி-(இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்துசென்றபோது அவனோடு எதிர்த்துப்போர்செய்த) ஜடாயுவின் தமையன்; அருணனது குமாரன். இச்சொல் - நன்றாகப்பறப்பவனென்று அவயவப்பொருள் படும். வாநரவீரர் சீதாபிராட்டியைத் தேடிக் காணுமையாலும் சுக்ரீவனிட்டதவணைநாள் கடந்துவிட்டபடியாலும் மகேந்திரமலையிற்சென்றபின் மிகவும் வருந்திப் பலபடியாகப்பேசிக்கொண்டிருத்தலும், அப்போது அவர்களதுவாக்கில்வந்த ஜடாயுவின்மரணத்தைக் கேட்டுச் சம்பாதி அவர்களெதிரில்வந்து அதன்காரணத்தை விசாரித்தலும், அத்தச்சம்பாதி தமதுமூன்னையவரலாற்றை வாநரர்க்குக்கூறுதலும், வாநரவீரர் தமதுவரலாற்றைச் சம்பாதிக்குக் கூறுதலும். பின்பு சம்பாதி தான் முன்புஇழந்த சிறகை ராமநாமோச்சாரணத்தாற்பெற்று வாநரவீரர்க்குச் சீதையிருக்குமிடத்தைத் தெரிவித்துவிட்டு அப்பாற் செல்லுதலும் முதலியன இப்படலத்திற் கூறப்படுகின்றன.

வேறு.

[வாநரவீரர் தென்கடலைக் காணுதல்.]

க. "மழைத்தவிண் ணகமென முழங்கி வாலுற
விழைத்தவெண் டிரைக்கர மெடுத்தி லங்கையா
ளுழைத்தடங் கண்ணியென் றுரைத்திட் டேழின்வந்
தழைபபதே கடுகுமவ் வாழி நோக்கினர்.

(இ - ள்) மழைத்த விண் அகம் என முழங்கி-நீருண்டமேகத்தை யுடைய ஆகாயதினிடம்போலச சத்தித்து,வான் உற இழைத்தவெள் திரை கரம் எடுத்து - வானதைப்பொருந்துமாறு வீசியெறிகின்ற வெண்மையான அலைகளாகிய கைகளை மேலெடுத்து, 'உழை தட கண்ணி-மான்போன்ற விசாலமான கண்களையுடைய சீதை, இலங்கை யாள்-இலங்காபுரியிலிருகிறாள்,' என்றுரைத்திட்டு-என்றுசொல்லி, ஏழின்வந்து அழைப்பதே கடிக்கும் - முறைமையாக எதிரேவந்து (வானரர்களாகிய தம்மை) அழைப்பதையே யொதிருக்கின்ற, அ ஆழி-அந்தத்தென்கடலை, நோக்கினர்-(வாநரவீரர்கள்)கண்டார்கள்.

கடல் ஆரவாரிப்பது-சீதாபிராட்டி இலங்கையி லிருக்கின்ற ளென்று உரத்துக்கூறுவதுபோலவும், கடல் அலைகளைவீசிகொண்டு கரையிற்செல்வது-வாநராகளே இங்கேவாருங்களென்று எதிர்கொண்டு கைகளைத்தூகி யழைப்பதுபோலவும் இருந்த தென்பதாம்; தன்மைத் தற்குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு 'வெண்டிரைகைகரம்' என்ற உருவக வணி அங்கமாய் நின்றது. 'முழங்கி' என்பது 'உரைத்திட்டு' என்பதை யும், 'திரைக்கரமெடுத்து' என்பது 'அழைப்பது' என்பதையும் முறை யேசென்று இயைதலால், முறைநிரனிறைப்பொருள் கோளாம்.

மழைத்தவிண்ணகமென முழங்கி - இடத்துநிகழ்பொருளின் தொழிலை இடத்தின்மே லேற்றிக்கூறிய உபசாரவழக்கு. இலங்கை யாள்-இலங்கையென்ற முதனிலையின் பெண்பாற்குறிப்புமுற்று. உழைக் கண்ணி-உவமைத்தொகை. கடிக்கும்-தற்குறிப்பேற்றவுருபு.

'வார்கட, ழைத்தவெண்டிரைக் கரமெடுத்திலங்கையா,ளுழைத் தடங்கண்ணியென்னுழை யென்றோடிவந்து' என்றபாடத்துக்கு - கட லில்தோன்றுகின்ற அலைகளாகிய கைகளை உயரவெடுத்து, மான்போ லும் மருண்ட பாவனையுடைய சீதாபிராட்டி என்னிடத்திலிருக் கின்றனளென்று உரத்துச சொல்லி இலங்கையென்னும்பெண் ஓடி வந்து அழைப்பதை யொத்திருத்தற்குக காரணமான ஆழியை நோக் கினரென்று பொருளாம். 'மாலாழி நோக்கினர்'என்பதும் பாடம்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள்-பெரும்பாலும் மூன்றுஞ்சீரொ ன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (க)

[முன்பு ஏமகூடத்திற் பிரிந்த இரண்டுவெள்ளமீ வர்நாசேனை அங்கு வந்துகூடுதல்.]

உ. விரிந்துநீரெண்டிசைமேவிநாடினீர்
பொருந்துதிர்மகேந்திரத்தென்றுபோக்கிய
வருந்துணைக்கவிகளாமல்குசேனையும்
பெருந்திரைக்கடலெனபபெயர்த்துங்கூடிற்றே.

(இ - ள்.) 'நீர்-நீங்கள், விரிந்து-பரவி, எண் திசை மேவி-எட்டுத் திக்குக்களிலுஞ் சென்று, நாடினீர்-(சீதாபிராட்டியைத்) தேடியவர் களாய், மகேந்திரத்து பொருந்துதிர்-மகேந்திரமலையில் வந்துகூடுங் கள்,' என்று-என்று சொல்லி, போக்கிய-(அங்கதன் முதலிய வாநர வீரர்) அனுப்பின, துணை வரும் மல்கு கவிகள் ஆம் சேனையும்-(தமக் குத்) துணையாகவந்த நிறைந்த [இரண்டுவெள்ளகணகானை] வாநர சேனையும், பெருந் திரைகடல் என-பெரிய அலைகளையுடைய மற்றொரு சமுத்திரம்போல, பெயர்த்தும் கூடிற்று-மறுபடியும் (அங்கதன்முதலிய அவவாநரவீரரோடு) வந்துசேர்ந்தது, (எ - று.)

"தெள்ளுநீருலகெலாந் திரிந்துதேடினீர், வெள்ளருமகேந்திரத் தெம்மிற்கூடும்" என்று முன்னம ஏற்படுத்திய சங்கேதப்படி, பிரிந்து சென்ற வாநரசேனை இப்பொழுது மகேநதிரமலையில் வநதுகூடிற் றென்பதாம்.

'மேவிமேன்மையால்', 'மயேந்திரத்து,' 'அருந்துணைக் கவிகளா மளவில்சேனை,' 'பெரிதுகூடிற்றே' என்பன பாடபேதம். (உ)

[வாநரர்யாவரும் சீதாபிராட்டியைக் காணுமையால் வருந்திக்கூறத் தொடங்குதல்.]

ஊ. யாவருமவ்வயினெளிதினெயதினுர்
பூவருபுரிகுழற்பொருவில்கற்புடைத்
தேவியைகாண்கிலார்செய்வதோாகிலார்
நாவுறக்குழறிடநவில்கின்றாரரோ.

(இ - ள்.) யாவரும்-வாநரர் எல்லோரும்,—அ வயின் எளிதின் ஏய்தினுர்-அவ்விடத்து வருத்தமில்லாமல் வநதுசேர்நது, பூ வரு புரி குழல் பொருவு இல் கற்பு உடை தேவியை காண்கிலார்-தாமரைமல ரில் தோன்றிய [இலகுமியின் அவதாரமாகிய] நுனிசுருண்ட கூந் தலையும் ஒப்பில்லாத பதிவிரதாதருமத்தையுமுடைய சீதாபிராட்டியைக் காணுமல்,—செய்வது ஓர்கிலார - இனிசசெய்யவேண்டியது (இன்ன தென்று) அறியாதவர்களாய், நா உற குழறிட-நாகுழ மிகவுங்குளற, நவில்கின்றார்-பேசலானுர்கள்; (எ-று.)—அதனை, அடுத்த இரண்டு கவி களிற் காண்க. அரோ-ஈற்றசை.

பூவரு என்பது-மலரையணிந்த என்றும், பூமியினின்று தோன்றிய [பூ - பூமி] என்றும் பொருள்படும்.

'பூவருபொலங்குழல்,' 'நாவியல் குழறிட' என்பன - பாடாந்தரங் கள். 'தேவியைக்காண்கிலா செய்வதோர்கிலா' எனக் காண்கின்ற பாடம் இலக்கணமுடிபிற்கு மாறுபடும். (ஊ)

[இதுவும், அறிந்தகவியும் - வாநரவீரர் வருந்திக்கூறிய வார்த்தை.]

சு. அற்றதுநாள்வரையவதியாட்சியு
முற்றிலமிராகவனுயிரும்பொன்றுமாற்
கொற்றவனுணையுங்குறித்துநின்றன
மிற்றதுநஞ்செயலினியென்றெண்ணினர்.

(இ - ள்.) 'வரை நாள் அவதி அற்றது-(சுக்கிரீவமகாராஜன் நமக்குக்) குறித்திட்ட ஒருமாதத்தவணையும் கழிந்துவிட்டது; ஆட்சியும் உற்றிலம் - (சீதையைக் கண்டுபிடித்தலாகிய நமது) காரியத்தையும் முடித்தோமில்லை; (இதனையறிந்தால்), இராகவன் உயிரும் பொன்றும்-இராகவபிரானது) உயிரும் ஒழியும்; கொற்றவன் ஆணையும் குறித்து நின்றனம் - சுக்கிரீவமகாராஜனது கட்டளையையும் மனத்திற்கொண்டு நின்றோம் [அவன்கட்டளைப்படியே முழுதுந்தேடினோம்]; இனி நம் செயல் இற்றது-இனிமேல் நாம்செய்வதற்கு உரிய தொழில் ஒன்றுமில்லை,' என்று - என்றுசொல்லி, எண்ணினர்-மனத்திற் பலவாறுகக்கவலைகொண்டார்கள், (வானரர்கள்) (எ-று)—ஆல்-ஈற்றசை.

இனி இற்றது - தெளிவினால் வந்த காலவழுவமைதி. 'அற்றது சொன்னகாலவதி,' 'காட்சியும்,' 'ஆட்சியுமுற்றிலம்,' 'உயிருமொன்றுநம்' என்பன பாடாந்தரங்கள். (சு)

ரு. அருந்தவம்புரிதுமோவன்னதன்றெனின்
மருந்தருநெடுங்கடுவுண்டுபாய்துமோ
திருந்தியதியாததுசெய்துதீர்துமென்
றிருந்தனர்தம்முயிர்க்கிறுதியெண்ணுவார்.

(இ-ள்.) '(கிட்கிந்தைக்குமீண்டுசெல்லாமல் இங்கிருந்தவாறே), 'அருந்தவம் புரிதுமோ-(செய்வதற்கு) அருமையான தவத்தைச செய்வோமோ? அன்னது அனறுஎனின் - அவ்வாறுசெய்யாவிட்டால், மருந்து அரு நெடுங்கடு உண்டுமாய்துமோ-மாற்றுமருந்தில்லாத கொடியவிஷத்தைப் புசித்து இறப்போமோ? திருந்தியது யாது அது செய்து தீர்தும் - (இவ்விரண்டில்) தகுதியானது எதுவோ அதைச செய்தேவிடுவோம்,' என்று-என்று சொல்லி, இருந்தனர் - (அம்மகேந்திரமலையில்) ஆலோசித்துகொண்டிருந்தார்கள்: (யாவரெனில்),—தம உயிர்க்கு இறுதி எண்ணுவார்-தமது உயிர்க்கு முடிவு நேருமாயின் (அதனைச் சிறப்பாக) மதிக்கின்ற வாநரர்கள்; (எ-று.)

தவணைநாள்கழிந்தபிறகும் சீதையைக்கண்டுபிடித்தலாகிய காரியத்தைநிறைவேற்றாது கடுந்தண்டனையுடைய சுக்கிரீவமகாராஜனது எதிரிற் செல்வதற்குப் பின்வாங்கியவர்களாய், வாநரர், இவ்வாறு எண்ணிக்கூறினரென்க. மருந்தருநெடுங்கடு - பரிகாரமில்லாத விஷம்; இங்கு, அருமை-இன்மைப்பொருளது: "தீண்டாவிடுதலரிது" என்னுமிடத்திற் போல. 'தம்முயிர்க்கிறுதியெண்ணுவார்' என்பதற்கு-தமது மரணத்தைச சிந்திப்பவர்களாகிய வாநரர் எனப் பொருள்கூறின், 'அருந்தவம்புரிதுமோ' என்றதனோடு மாறுபடும்.

'திருந்தியதொருவிதஞ்செய்து' என்று பிரதிபேதம். (ரு)

[அப்போது அங்கததுமான் வாநரர்க்கு ஒன்று கூறத்தொடங்குதல்.]

சு. கரைபொருகடலயற்கனகமால்வரை
நிரைதுவன்றியவெனநெடிதிருந்தவர்க்
குரைசெயும்பொருளுளதெனவுணர்த்தினு
னரசிளங்கோளரியயருஞ்சிந்தையான்.

(இ-ள்.) அரச இளங் கோள் அரி-வலிமையையுடைய ஆண்சிங்கம் போன்ற இளவரசனுகிய அங்கதன்,—கரை பொரு கடல் அயல்-(அலைகள்) கரையையோதுகின்ற கடலுக்கு அருகி லுள்ள மகேந்திரமலையில், கனகம் மால் வரை நிரை துவன்றிய என-பெரியமேருமலைகள் வரிசையாக வளைந்தனபோல, நெடிது இருந்தவர்க்கு-பிருதியாகீ ரம் பியிருந்த வாநரர்களை நோக்கி,—அயரும் சிந்தையான் - வருந்துகின்ற மனமுடையவனுய்,—உரைசெயும் பொருள் உளது என உணர்த்தினுன்-கூறுதற்குரிய செய்தியொன்று உண்டு' என்றுகூறலானுன்; (எ-று.)—அதனை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க

ஒவ்வொருவாநரனும் மேருமலைபோன்றிருத்தலால், 'கனகமால் வரை நிரைதுவன்றியவென' என இல்பொருளுவமையாகக் கூறினர். அரசிளங்கோளரி=கோளரிஇளவரசு: கோள்அரி-வலிமையையுடைய குரங்குகட்கு, இளவரசுஎனக கூறுவாரு முளர். அங்கதன் இளவரசனுதலால், அயருஞ்சிந்தையுடன் கூறலாயின னென்க.

'திரைபொருகனைகடல்', 'நிரையவன்றுற்றென' என்று பாடாந்தரம். (சு)

[இதுமுதல் ழன்றுகவிகள் - ஒருதொடர் : அங்கதன்வார்த்தை.]

எ. நாடிநாங்கொணருதுளினத்தாளைவான்
மூடியவுலகினைமுற்றுமுட்டியென்
முடவர்திலகனுக்கன்பினுரெனப்
பாடவம்விளம்பினம்பழியின்மூழ்குவான்.

(இ - ன்.) (அங்கதகுமாரன் வாநரர்களைநோக்கி),—'நாம்—,—வான்முடிய உலகினை முற்றும் முட்டி-வானத்தினுற்கவியப்பட்ட நிலவுலக முழுவதும் சென்று; நாடி-தேடி(க் கண்டு), துளினத்தாளை கொணருதும்-தாமரைமலரிற் பிறந்த இலக்குமியின் அம்சமான சீதாபிராட்டியினிடத்தினின்று செய்தி கொண்டுவருவோம்,' என்று—, ஆடவர் திலகனுக்கு அன்பினர் என-புருஷோத்தமனுகிய இராமபிரானிடத்தில் அன்புடையவர்போல, பழியில் மூழ்குவான்-(பிறகு சொன்ன படிசெய்யாமல்) பழியில் மூழ்கும்பொருட்டு, பாடவம் விளம்பினம்-வீண்வாய்ப்பெருமை கூறினேம்; (எ-று)

சீதாபிராட்டியைத்தேடுமாறு நம்மை அனுப்பியகாலத்தில், இராமபிரானிடத்துப் பக்தியுடையவர்போல நடித்துக் காரியததை முடித்தே தீர்வோமென்று நமதுவாக்கினுல் டம்பமாகக்கூறியது நமதுபழிப்பிற்கே காரணமாமென்பதாம். "சொல்லாமலேபெரியோர்... ..செய்வர்" என்றவாறு முன்புசொல்லாமலே ஒருகாரியத்தைச் செய்துமுடித்தல் பெரியோர்களது தன்மையாயிருக்க, அவ்வாறுசெய்யாமல் "சொல்லியுஞ்செய்யார் கயவர்" என்றபடி கீழோரின்தன்மை நமக்கு

சேர்ந்துவிட்டதென்னத் தம்மைப்பழித்தவாறு. நளினத்தாளைக் கொண்ருதும் என்பதற்கு-சீதாபிராட்டியைக் கொண்டு வருவோ மெனக் கூறுதல், பொருத்தமன்று. வான்மூடியவுலகு - "வான்கவிந்தவையகம்," திலகம்-நெற்றிப்பொட்டு: ஆடவர்திலகன்-திலகம் நெற்றிக்கு விளக்கத்தைச் செய்வதுபோல ஆடவர்கட்கு விளக்கஞ் செய்பவன் என்ற படி. பாடவம் - படவினிடத்திலுள்ள தன்மை; (படம்-சமர்த்தன்:) வட மொழித்தத்திதாந்தநாமம். பாடு அவம் எனப் பிரித்து, நலிந்து பொருள்கூறுவாரு முளர்.

'முற்றுமோடி,' 'பழியின்மூழ்குவாம்' என்றும் பாடம். (எ)

• "ஆ. செய்துமென்றமைந்ததுசெய்துதீர்ந்திலை
நொய்துசென்றுற்றதுநுவலகிற்றில
மெய்தும்வந்தென்பதோரிறையுங்கண்டிலை
முய்தமென்றுலிதோருரிமைத்தாகுமோ.

(இ-ள்.) செய்தும் என்று அமைந்தது செய்த தீர்ந்திலம்-(நாங்கள்) 'செய்வோம்' என்று எற்றுக்கொண்ட செயலெச செய்துமுடித்திலோம்; நொய்து சென்று உற்றது நுவலகிற்றிலம் - (தவணைக்காலத்திற்குள்) விரைவாகத்திரும்பிப்போய் சேர்ந்தவரலாற்றை[சீதையைக்காண முடியவில்லையென்பதை]சசொல்லித் தெரிவிக்கவும் வலியற்றவராஞேம்; வந்து எய்தும் என்பது ஓர் இறையும் கண்டிலம்-(தவணைகடந்தாலும்) காரியம்கைகூடுமென்பதற்கு ஒருசிறிதும் (வழி) அறிந்தோமில்லை; (இப்படியிருப்பதஞல்), உய்தும் என்ருல்-(இறவாது) உயிர்வைத்திருப்போமென்போமாஞல், இது—, ஓர் உரிமைத்து ஆகுமோ-தகுதியான தொரு செயலாகுமோ? [தகுதியற்றசெயலேயாமென்றபடி]; (எ-று.)

நாம்எண்ணிவந்தகாரியம் முடிவதற்கு எவ்வகையிலும் சிறிதும் வழியில்லை; தவணைக்குள் மீண்டுசென்று சேர்தலும் முடியாது: ஆகையால், உயிர்மாய்வதே உறுதியென்று அங்கதன் அறுதியிட்டனனென்க. (அ)

கூ. எந்தையுமுனியுமெம்மிறையிராமனுஞ்
சிந்தனைவருந்துமச்செய்கைகாண்குறே
னுந்துவெனுயிரினை நுணங்குகேள்வியீர்
புந்தியின்னதுபுகல்வீராமென்றான்.

(இ-ள்.) (காரியத்தைமுடியாமலே தவணைகடந்தபிறகு மீண்டு சென்றேனஞல்),—எந்தையும் முனியும்-எனது தந்தையாகிய சுக்கிரீவ மகாராஜனும் கோபிப்பான்; எம் இறை இராமனும் சிந்தனை வருந்தும்-நமக்கெல்லாந்தலைவனுகிய இராமபிரானும் மனம்வருந்துவான்; அச்செய்கை காண்குறேன் - அச்செயல்களைக் (கண்ணுற்) காணுந்திறமிலேன்: (ஆதலால்), உயிரினை நுந்துவென்-(எனது) உயிரை மாய்த்துக்கொள்வேன்; நுணங்கு கேள்வியீர்-நுட்பமான நூற்கேள்விகளையுடையவர்களே! அன்னது-அச்செயலைக்குறித்து, புந்தியின் புகல்வீர்-உமது அறிவினல் ஆராய்ந்து கூறுவீர், என்ருன்-என்று கூறினனன்; (எ-று.)—ஆம்-அசை.

சுக்கிரீவனது கடுந்தண்டனைக்கும் இராமபிரானது பெருவருத்தத்திற்கும் அஞ்சி, அங்குச்செல்லாமல் இங்குத்தானே யான் உயிர்துறத்தல் நலமென்று எண்ணுகின்றேன்; இவ்விஷயத்தில் உங்களதுகருத்தை ஆலோசித்துச்சொல்லுங்களென்று அங்கதன் மற்றையோரிடமினவின னென்க. நுந்துதல் வெளிச்செலுத்துதல். கேள்வி - கேட்கவேண்டிய நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல். 'அன்னதுகல்வி' என்பதற்கு-(நீங்கள் இங்கிருந்து மீண்டுபோய்ச் சுக்கிரீவமகாராஜனிடத்தும் இராமபிரானிடத்தும்) எனது மரணத்தைச சொல்லுங்களெனு மாம்.

(கூ)

[இதுவும், அடுத்ததுவியும் - ஜாம்பவானது மறுமொழி.]

கo. விழுமியதுரைத்தனவிசயம்பற்றிருந்
தெழுவெரிடுமலையொடுமிகலுந்தோளினு
யழுதுமோவிருந்துநம்பன்புபாழ்படத்
தொழுதுமோசென்றெனச்சாம்பன்சொல்லினன்.

(இ - ள்.) விசயம் வீற்றிருந்து எழுவெரிடும் மலையொடும் இகலும் தோளினுய்-பராக்கிரமம்மிக்கு இருப்புத்தூண்களோடும் மலைகளோடும் ஒப்பாகின்ற தோள்களையுடைய அங்கதகுமாரனே!--விழுமியது உரைத்தனை-சிறப்புடையதாக ஒருவார்த்தை சொன்னுய்;(நீ இறந்துபட்டால்), இருந்து அழுதுமோ-(யாங்கள்) இங்கிருந்தவாறே புலம்புவோமோ? (அல்லது), நம் அன்பு பாழ்பட சென்று தொழுதுமோ - எமது அன்பு அடியோடு ஒழியுமாறு மீண்டு சென்று (சுக்கிரீவ மகாராஜனிடத்திலும் இராமபிரானிடத்திலும் உனதுசெய்தியைத) தொழுதுசொல்வோமோ? என-என்றுகூறி, சாம்பன் ஜாம்பவான், சொல்லினன்-(மீண்டும்) சொல்வானுயினன்; (எ-று.)

'விழுமிய துரைத்தனை' என்றது-எமக்கெல்லாம் இளவரசனுகியநீ இறப்பேனென்பது சிறிதுந்தகா தென்றவாறு; பிறருறிப்பு: எதிர்மறையிலக்கணை. 'விழுமியது' என்பது-விழுமம் என்னும் உரிசசொல்லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். நீ இறந்தபிறகு நாங்களும் உடனிறவாமற் சென்று செய்திகூறுவதென்பது, எங்களது அன்பில்லாமையைக் காட்டுமென்பான், 'அன்புபாழ்படத் தொழுதுமோ' என்ருன். ஓகாரங்கள்-விகற்பத்தோடு எதிர்மறைப்பொருளன; நீ இறந்தபிறகு நாங்கள் அழுதுகொண்டிருத்தலும், இங்கிருந்து சென்று தொழுது செய்திகூறுதலும் தகுதியன்று என்றவாறு. (கo)

கக. மீண்டினியொன்றுநாம்விளம்பமிக்கதென்
மாண்டுறுவதுநலமென வலித்தன
மாண்டகையரசிளங்குமரவன்னது
வேண்டலினின்னுயிர்க்குறுதிவேண்டுமால்.

(இ - ள்.) ஆண்தகை அரசு இளங்குமர-ஆண்மைக் குணமுடைய இளவரசனை அங்கதகுமாரனே! மீண்டு இனி ஒன்று நாம் விளம்பமிக்கது என்-(யாங்கள்) திரும்பிச்சென்று சொல்வதற்குத் தான் என்ன செய்தி உண்டு? [ஒன்றுமில்லையன்றே!] (ஆதலின், மாண்டு உறுவது

நலம் என வலித்தனம்-(யாங்கள்) இறந்தொழிவதே நலமென்று உறுதி கொண்டோம்; அன்னது வேண்டலின்-அவ்வாறு (நாங்கள்) விரும்பின படியால், நின் உயிர்க்கு உறுதி வேண்டும்-உனது உயிர்க்கு அழிவின்மை அவசியமாகும்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

சீதையைத் தேடிக்காணமுடியாமையால் நாங்கள் மீண்டுபோய்ச் சொல்லுதற்கும் ஒன்றுமில்லை; ஆகையால், நாங்கள் இறந்தொழிவதே உசிதமென்று தோன்றுகின்றது; ராஜகுமாரனையும் இளவரசனையுமிருத்தலால், நீ உயிருடன் வாழ்வது இன்றியமையாத தாகுமென்று ஜாம்பவான் கூறினனென்க.

'அன்னது வேண்டினன்' என்றும் பாடம். இச்செய்யுளையடித்து, பதினேழாங்கவியாகிய "நீயுநின்றுதையும்" என்ற தொடக்கத்துச்செய்யுள் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (கக)

[இதுமுதல் நான்குகவிகள் - அங்கதன் வார்த்தை.]

கஉ. என்றவனுரைத்தலுமிருந்தவாலிசேய்
குன்றுறழ்ந்தெனவளர்குவவுத்தோளினீர்
பொன்றினீர்மடியயான்போவனேலது
நன்றதோவுலகமுநயக்கற்பாலதோ.

இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ-ள்.) என்று அவன் உரைத்தலும்-இவ்வாறு ஜாம்பவான் கூறியவுடனே, இருந்த-அதனைக்கேட்டிருந்த, வாலி சேய் - வாலியின்குமாரனை அங்கதன்,—(மற்றையோரை நோக்கி), குன்று உறழ்ந்து என வளர் குவவுதோளினீர்-மலைகள் ஒப்பென்ற சொல்லும்படி வளர்ந்த திரண்டதோள்களையுடையவர்களே! நீர் பொன்றி மடிய-நீங்கள்யாவரும் இங்கே இறந்தொழிய, யான் போவன் எல்-யான்மாத்திரம் (உயிருடன்) மீண்டுசெல்வேனாயின், அது—, நன்றதோ-நன்றாயிருக்குமோ? உலகமும் நயக்கல் பாலதோ-(எனது அசசெய்கை) உலகத்தாரால் விரும்பத்தக்கதாகுமோ? (எ-று.)—இசசெய்யுளிலுள்ள 'வாலிசேய்' என்ற எழுவாய், 'என மறித்துங் கூறுவான்' என்ற அடுத்த செய்யுளில் முடியும்.

"உலகமென்ப துயர்ந்தோர்மாட்டே" என்பவாதலால், இங்கு, 'உலகம்' என்பது-உயர்ந்தோரையுணர்த்து மென்னலாம். நன்றது, அது-பகுதிப்பொருள் விகுதி.

'உலகுளோர் நகைக்க நாணுமால்' என்று சிலபிரதிகள். (கஉ)

கங. சான்றவர் பழியுரைக் கஞ்சித் தன்னுயிர்
போன்றவர் மடிதரப் போந்துளானென்
வான்றபே ருலகுளோ ராறைதன் முன்னம்யான்
வான்றொடர் குவெனென மறித்துங் கூறுவான்.

(இ-ள்.) 'சான்றவர் பழி உரைக்கு அஞ்சி தன் உயிர் போன்றவீர் மடிதர-பெரியோர்கூறும் பழிமொழிகட்குப்பயந்து (உடன்வந்த) தனது உயிரோடொத்த நண்பர்கள் யாவரும் உயிர்மாயவும்; போந்துளான்-(இவன்மாத்திரம் இறவாமல் உயிருடன்) வந்துசேர்ந்தான்,' என-என்று,

ஆன்றபேர் உலகு உளோர் அறைதல்முன்னம் விசாலீமான பெரிய உல கத்திலுள்ளோர் (பழித்துக்) கூறுவதற்குமுன்னமே [பழித்துக்கூறு தற்கு இடமில்லாமலே], யான் வான் தொடாகுவென்-நான் (இறந்து) மேலுலகஞ்செல்வேன்', என-என்றுசொல்லி, மறித்தும் கூறுவான் - மீண்டுஞ்சொல்வானுயினும்; (எ-று.)—அதனை, அடுத்த இரண்டுகவி களிற் காண்க.

மீண்டுசென்றால், 'வாயினல் டம்பமாகக்கூறி ஏற்றுக்கொண்ட காரியத்தை முடியாமல் வாளா மீண்டனரே'' என்று பெரியோர்கள் பழிக்கும் பழிப்பிற்குப் பயந்து, உயிர்போன்ற நண்பர்யாவரும் உயிர் விடவும், இலண்மாத்திரம் அவவாறு அசசஞ்சிறிதுமின்றி மீண்டனன் என்ற உலகத்தாரது பழிசசொலலுககுச சிறிதும் இடமில்லாமல் மூந் தறை உயிர்மாய்வே னென்று அங்கதன் கூறின னென்க.

'போனறவர்பொன்றயான்,''அறைதன்முன்னமே'எனவுமபாடம்.

வே று.

கஉ. எல்லோநம் மிறுதி யாய்க்கு மெருதைக்கும யாவ ரேனுஞ்
சொல்லவுங் கூடுங் கேட்டாற் றுஞ்சவு மடுக்குங் கண்ட
வில்லியு மிளைய கோவும் வ்வது திண்ண மச்சொன்
மல்லனீ ரயோத்தி புக்கால் வாழுவரோ பரதன் மற்றோர.

இதுவும், அடுத்த கலியும்-ஒருதொடர்.

(இ-ள்) (சென்று செய்தி சொல்வதற்கும் ஒருவருமின்றி ஒருங்கே நாம் எல்லோரும் இங்கே இறந்தொழிந்தால்),—நம் இறுதி எல்லை- நமது இறத்தலாகிய ஆயுளின்முடிவைநாம் மாண்டுபோகுஞ்செய் தியை], யாய்க்கும்-எனது தாயாகிய தாரைக்கும், எந்தைக்கும் - எனது தந்தையாகிய சுக்கிரீவமகாராஜனுக்கும, யாவர் ஏனும சொல்லவும் கூடும்-வேறுயாராவது சொல்லவுங்கூடும; கேட்டால்-(அதனைக) கேட் டறிந்தால், துஞ்சவும அடுக்கும்-(அதனல் அவர்கள்)மாண்டுபோகவுங கூடும்; கண்ட-(நமது மரணத்தினுல் சுகரீவனும் தாரையும் இறந்த அசசெய்தையைக்) காணின்ற, வில்லியும் - வில்லவ்ரனன இராமபிரா னும், இளைய கோவும்-இளைய பெருமாளான இலக்குமணனும், வீவது- (தாங்களும்) இறப்பது, திண்ணம-நிச்சயம்; அ சொல் மல்லல் நீர் அயோத்தி புக்கால்-(ராமலக்ஷ்மணர்இறந்த)அசசெய்தி வளப்பமுடைய நீர்நிறைந்த அயோத்தியாபுரியிற் சோந்தால், பரதன் மற்றோர வாழ் வரோ-பரதனும் மற்றையோரும் வாழ்வார்களோ? [உடனே உயிர் மாய்வ ரென்றபடி]; (எ - று.)

• தம்மால் சுக்கிரீவனுக்கும் தாரைக்கும், அதனல் ராமலக்ஷ்மணர்க் கும், அதனல் பரதன்முதலியோர்களுக்கும் மரணசங்கையைக் கூறியது- காணமாலேயணியின்பாற்படும். சாதலே 'துஞ்சுதல்' எனறது, மங்கல வ்ழக்கு. துஞ்சுதல்-தூங்குதல்: மீளவும் எழுந்திராத பெருந்தூக்கம்.

• 'சொல்லவுங்கூடுமென்றே துஞ்சவுந்தோன்றுந்தன்மை', 'வ்வியவு மடுக்குமிக்க,' 'அயோத்திவாழுமாகளும் வாழ்வதன்றால்' என்பன பாடாந்தரங்கள்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஆறுசெல்படலத்தின் உரு-ஆங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (கச)

கடு. பரதனும்பின்னுளோனும்பயந்தெடுத்தவருமூருஞ்
சரதமேமுடிவாகெட்டேன்சனகியென்றுலகஞ்சாற்றும்
விரதமாதவத்தின்மிக்கவிளக்கினுலகத்தியார்க்குங்
கரைதெரிவிலாததுஞ் பம்மிக்கலுழ்ந்தவாவெனக்கலுழ்ந்தான்.

(இ-ள்.) பரதனும்—, பின் உளோனும்-அவனது பின்பிறந்தவனுகிய சத்துருக்கனனும், பயந்து எடுத்தவரும்-(இராமன்முதலிய நால்வரையும்)பெற்றெடுத்த தாய்மாரான(கௌஸல்யை சுமித்திரை கைகேயி என்ற) மூவரும், ஊரும்-அயோத்திமாநகரத்துச்சனங்களும், முடிவர்-(ஒருங்கே) இறப்பார்கள்; சரதமே-இது சத்தியமே! கெட்டேன் - ஆ! கெடுவேன்!! சனகி என்று உலகம் சாற்றும் விரதம் மா தவத்தின்மிக்க விளக்கினுல் - ஜாநகியென்று உலகத்தாராற்சொல்லப்பட்ட விரதத், தோடுகூடிய பெருந்தவத்தினுற் சிறந்துள்ள விளக்குப்போன்றவளான ஒருமகளினுல், உலகத்து யார்க்கும் கரைதெரிவு இலாத துன்பம் விளைந்த ஆ உலகத்திலே எல்லார்க்கும் கரைகாணமுடியாத பெருந்துன்பம் வந்துநேர்ந்தது என்னவியப்பு! என கலுழ்ந்தான்-என்றுவருந்திக் கூறினன், (அங்கதன்); (எ - று.)

பரதன் என்றது கீழ்சசெய்யுளின் அநுவாதம். 'பின்னுளோனும் பயந்தெடுத்தவரும் ஊரும்' என்றது-கீழ்க்கவியில் 'மற்றோர்' என்று தொகுத்துச சுட்டியதன் வகுத்துகாட்டல். ஊர் - ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர். சீதை பிறந்தகுலத்திற்கும் புகுந்தகுலத்திற்கும் விளக்கஞ்செய்பவளாதலால், அவளை'விளக்கு'என்றார். இசசெய்யுளில் தோன்றும் அவலசுவை [கருணரஸம்], பாராட்டத்தக்கது. (கடி)

[அதுகேட்டு, ஜாம்பவான் கூறத்தொடங்குதல்.]

கசு. பொருப்புறழ் வயிரத் திண்டோட் பொருசினத்தாளிபோல்
றரிப்பிலா துரைத்த மாற்றந் தடுப்பருந்தகைத்தாய[வான்
நெருப்பையே விளைத்த போல நெஞ்சமு மறுகக் கேட்டு
விருப்பினு லவனே நோக்கி விளம்பின னெண்கின் வேந்தன்.

(இ - ள்.) பொருப்பு உறழ் வயிரம் திண் தோள் பொரு சினத்து ஆளிபோல்வான் - மலையையொத்த உறுதியான வலிய தோள்களையுடைய போர் செய்தற்குரிய கோபத்தைக்கொண்ட சிங்கம்போன்ற வனுகிய அங்கதன், தரிப்பு இலாது-மனம்பொருமல், உரைத்த-சொல்லிய, மாற்றம்-வார்த்தையானது, தடுப்பு அருந் தகைத்தது ஆய நெருப்பையே விளைத்த போல நெஞ்சமும் மறுக-தடுக்கமுடியாததன்மையையுடையதாகிய பெருநெருப்பை மூட்டியதுபோல மனத்தைகலங்கச செய்ய, கேட்டு (அதனைக்) கேட்டு,—எண்கின் வேந்தன் - கரடிகட்கு அரசனுகிய ஜாம்பவான்,—விருப்பினுல் அவனை நோக்கி விளம்பினன்-மிக்க அன்போடு அவனுடைய குமாரனைப்பார்த்துக்கூறலானன்;(எ-று.)

—அதனை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

மறுக-பிறவினைப்பொருளில்வந்த தன்வினை. நெஞ்சமும், உம்மை-இசைநிறை.

'நெருப்பையுமுமிழ்வ,''விருப்பினுல்வாலிசேய்க்கு' என்றுபிரதிபேதம்.

வேறு

[இதுவும், அடித்தகவியும்-ஜாம்பவான் அங்கதனை இறக்கக்கூடாமைக் குக் காரணங்காட்டித் தடுத்தல்.]

கஎ. நீயுகின் ருதையு நீங்க நின்குலத்
தாயம்வந் தவர்க்கொரு தரய ரில்லையா
லாயது கருதின மன்ன தன்றெனி
னுயக ரிறுதியு நவிலற பாலதோ.

இதுவும், அடித்த கவியும்-ஒருதொடர்.

(இ-ள்.) நீயும் நின் தாதையும் நீங்க-நீயும் உனது தகப்பனுகிய சுக்கிரீவனும் தவர, நின் குலம் தாயம் வந்தவர்க்கு - உனது குலத்தில் உரிமையுடையவராய்ப் பிறந்தவர்க்கு [இராஜவமிசத்தார்க்கு], ஒரு தரயர் இல்லை-வேறே ஒரு புதல்வரில்லை, ஆயது கருதினம்-அத்தன் மையை ஆலோசித்தே (நீ இறக்கக்கூடாதென்று) கூறினேம்; அன் னது அன்று எனின் - அப்படியல்லாவிட்டாலும், நாயகர் இறுதியும் நவிலல்பாலதோ-தலைவரது மரணம் வாயினுற் கூறுதற்கேனும் தக் கதோ? [தகாது என்றபடி]; (எ-று.)—ஆல்-ஈற்றசை.

உங்களது ராஜவம்சத்தில் இப்போது வேறுபுதல்வ ரில்லாமை யாலும், எங்களைப்போன்ற சாமானியரது மரணமன்றி உங்களைப் போன்ற ராஜகுமாரரது மரணத்தைப்பற்றி வாயினுற்சொல்லுதலும் கூடாதாதலாலும், நீ உயிர்மாய்வேனென்றல் சிறிதுந்தகாது; ஆகை யால், யாங்களெல்லாரும் உயிரொழிய, நீ சுக்கிரீவனைச்சென்று சேரவா யென்றவாரும். தாயம்-சொத்திலுள்ள உரிமை; பாத்தியதை.

'தாயம் வந்தவரொரும்,' 'நாயகரிறுதியு நவிறற்பாலதே' என் பன-பாடாந்தரம்.

இதுமுதற் பதினேழு கவிகள்-இப்படலத்தின் முதற்கவிபோன்ற கலிவிருத்தங்கள். (கஎ)

கஅ. ஏகுநீயவ்வழியெய்தியிவ்வழித்
தோகையைக்கண்டிலாவகையுஞ்சொல்லியெஞ்
சாகையுமுணர்த்துதி,விர்திசோகம்போர்
வாகையாயென்றனன்வரம்பிலாற்றலான்.

(இ-ள்.) போர் வாகையாய் - போரில்வெற்றிபெறுதற்குரிய வனே!—எகும் நீ உயிருடன் போதற்குரியவனுன நீ, அ வழி எய்தி- (இராமபிரானும் சுக்கிரீவ மகாராஜனும் இருக்கின்ற) அந்த இடத தைச் சேர்ந்து, இ வழி தோகையை கண்டிலா வகையும் சொல்லி- இங்கே மயில்போன்ற சாயலையுடைய சீதாபிராட்டியைக் காணமுடி யாத திறத்தையுந் தெரிவித்து, எம் சாகையும் உணர்த்துதி-எங்களது மரணத்தையும் அறிவிப்பாய்; சோகம் தவிர்தி - (இப்போது நீ கொண் டுள்ள) மனக்கவலையை மாற்றுவாயாக, என்றனன்-என்று கூறினன், (யாவனெனின்),—வரம்பு இல் ஆற்றலான்-அளவில்லாத பராக்கிரம சாலியான ஜாம்பவான்; (எ-று.)

கீழ் கச, 'கடி-ஆஞ் செய்யுள்களிற்கூறியவாறு அங்கதகுமாரன் கொண்ட மனக்கவலையை ஜாம்பவான் தணிக்கவிரும்பி 'சோகம் நீ தவிர்க' என்றனன். நீ எகு-நீ (இங்குநின்று கிஷ்கிந்தகிரிக்குச்) செல்வாய் எந்நுமாம். (கஅ)

[இதுமுதல் முன்றுகவிகள் - அநுமான்வார்த்தை: இறவாமல் இன்னும் சீதையைத் தேடுதலே தக்கதென்றல்.]

கக. அவனவையுரைத்தபினனுமன்சொல்லுவான்
புவனமூன்றினுமொருபுடையிற்புக்கிலங்
கவனமாண்டவரெனக்கருத்திலாரெனத்
தவசவேகத்தினீர்சலித்திரோவென்றான்.

(இ-ள்.) அவன் அவை உரைத்தபின்-அந்தசசாம்பவான் அவ்வார்த்தைகளைக கூறியபிறகு,—அனுமன் சொல்லுவான் - அநுமான் கூறுவான்: —'தவனன வேகத்தினீர்-சூரியன்போன்ற வேகத்தை யுடைய வர்களே! புவனம் மூன்றினும் ஒரு புடையில் புகுகிலம்-(நாம் சீதையைத் தேடுதற்காக) மூன்றுலகங்களுள்ளும் ஒருபக்கத்திலாவது முழுவதும போய்ப்பார்த்தோமில்லை; (இப்படியிருக்கவும் இவளவிலேயே), கவனம்மாண்டவா என-ஓடிசசெல்லுதறகுரிய வல்லமை குறைந்தவாபோலவும், கருத்து இலார் என (செய்யுந்தொழிலைப்பற்றி) ஆலோசிகருதிற மில்லாதவாபோலவும், சலிததிரோ-சலிப்படையக் கடவீரோ? எனறான்—; (எ-று.)

தேடவேணடியஇடம் இனனும்மிக அதிகமாயிருக்கவும், சிறிது தேடினவிடதது சதாபிராட்டி கிடையாமையைகொண்டே முழுதுந்திரிந்து அலைந்து சலிப்படைந்தவாபோல நீங்கள் கிஞ்சித்தும் ஆலோசனையின்றி வெறுப்படைந்து உயிரிவிடதுணிவது சிறிதுக் கருதியன் றெனறவாறும்.

'அவனுரைசெயதபின்,''தவனமாண்டவரெனத் தருக்கிலாரெனக, கவனவேகத்து நீர் கழிதிரோ' என்று பிரதிபேதம. (கக)

உ0. பின்னருங்கூறுவான்பிலத்தில்வானத்திற்
பொன்வரைக்குடுமியிற்புறத்துளண்டத்தி
னன்னுதற்றேவியைக்காண்டுமாமெனிற்
சொன்னநாளவதியையிறைவன்சொல்லுமோ.

(இ-ள்.) பின்னரும் கூறுவான்-(அநுமான்) மேலும் கூறுவானாயினன்:—பிலத்தில் - பாதாளலோகத்திலும, வானத்தில் - மேலுலகத்திலும், பொன் வரை குடுமியில்-பொன்மயமான மகாமேருவினது உச்சியிலும், புறத்து உள அண்டத்தில்-மற்றமுண்டான அண்டங்களிலும், நல் முதல தேவியை நாம் காண்டும் எனின-அழகிய நெற்றியையுடைய சீதாபிராட்டியை (இனி) நாம் தேடிக்காண்போமானால், இறைவன்-நமது அரசனுகிய சுக்கிரீவன், சொன்ன நாள் அவதியை-(தான் முதலிற்) கூறியுள்ளதவணைநாளெல்லை கடந்து விட்டதைப்பற்றி, சொல்லுமோ - (குற்றமாக எடுத்துக்) கூறுவானோ? (எ-று.)

சீதையைத்தேடிக்காணுதல் இன்றியமையாத் தொழிலாதலால், தவணைநாள் கடந்தமைக்குச சிறிதுங்கலங்காது மேற்கொண்டசெய

லில் ஊக்கங்கொள்ளுதலே தக்கது; அவ்வாறு செய்தொழிலே நாம் இனிது முடிப்பின்; கடுந்தண்டனையுடைய சுக்கிரீவனும் நமது செயலுக்கு வியப்பதன்றி, ஒரு கடுஞ் சொல்லையுஞ் சொல்லா னென்பதாம். 'புறத்துளவண்டத்தில்'என்பது-புறத்துளண்டத்தில்எனத்தொக்கது.()

உக. 'நாடுதலேநலமின் னுநாடியத்
தோடலர்குழலிதன் துயரிற்சென்றமர்
வீடியசடாயுவைப்போலவீடுதல்
பாடவமல்லதுபழியிற்றுமென்றான்.

(இ-ள்.) நாடுதலே நலம்-(இனிமேலும் சீதாபிராட்டியைத்) தேடிப் பார்த்தலே தகுதியாம்; இன்னும் நாடி-பின்னுந் தேடியும், (சீதா பிராட்டி அகப்படாவிட்டால்),—அ தோடு அலர் குழலிதன் துயரின் சென்று அமர்வீடிய சடாயுவை போல வீடுதல்-இதழ்களையுடைய மலர் கள் அலரப்பெற்ற கூந்தலே யுடையவளான அந்தசீதைக்கு நேர்ந்த துன்பத்திற்காக (இராவணனே எதிர்த்துப்போய்) யுத்தத்தில் உயிர் மாய்ந்த சடாயுவைப்போல (நாமும்) உயிர்விடுதல், பாடவம்-பெருமை யாம்; அல்லது-அவ்வாறுசெய்யாது இப்போதே உயிரைவிடுவது, பழி யிற்று ஆம்-பழிப்பையுடையதாகும், என்றான்-என்றுகூறி முடித்தனன், (அநுமான்); (எ-று.)

நம்மால்ஆனவரையில் எல்லாவிடங்களிலுஞ் சீதாபிராட்டியைத் தேடிப்பார்த்தும் அவள் அகப்படாவிட்டால், அப்போது உயிர்விடுதல் சிறந்ததாகுமேயன்றி, இப்போதே உயிரைவிடுவோமென்றல் சிறப்பன்று என்பதாம். சீதாபிராட்டியை மீட்பதற்காகத தன்னாலானவரையிலும் பொருது பிறகு தனது உயிரைவிட்ட சடாயு-சீதாபிராட்டியைத் தம் மாலானவரையில் தேடி அகப்படாவிட்டால் பிறகு தமது உயிரை விடத்துணிந்த வானரர்க்கு ஏற்ற உவமையாவன். ஜடாயுவென்னும் வடசொல்லுக்கு - பலமயிர்கள்சேர்ந்துதிரித்த ஜடைபோலப் பல வாய்மிக்குத்திரண்ட ஆயுளையுடையவ னென்றும், இறகில் உயிரை யுடையவனென்றும் பொருள்கூறுவர். சூரியசாரதியான அருணனது புத்திரனும் சம்பாதியினது தம்பியுமாகிய இவன், தசரதசக்கரவர்த்திக் குப் பல உதவிகள் செய்து உயிர்த்தோழனுமிருந்தனன் இவன், தசரத குமாரர்களான ராமலக்ஷ்மணர்களைத் தனதுபுதல்வர்போலவேபாவித்து அன்புபாராட்ட, அவர்களும் தசரதசக்கரவர்த்தியினும் வயதுமுதிர்ந்த இவனைத்தமது பெரிய தந்தையாகப் பாவித்துவந்தார்க ளாதலால், வைஷ்ணவசம்பிரதாயத்தில் 'பெரியவுடையார்' என்று ஒருதிருநாமம். இவனுக்கு வழங்கும் அல்லது-ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும் பெயர்.

• 'துயரிற்றுமென்றமர்' என்று சிலபிரதிகள். (உக)

[ஜடாயு இறந்ததைக் கேட்ட சம்பாதி வானரிருந்தவிடத்தில் வருதல்.]

உஉ. என்றலுங்கேட்டனனெருவைவேந்தன்றன்
பின்றுணேயாகியபிழைப்பில்வாய்மையான்
பொன்றினனென்றசொல்புலம்புநெஞ்சினன்
குன்றெனநடந்தவர்க்குறுகன்மேயினன்.

(இ-ள்.) என்றலும்-என்று (அநுமான்) கூறியவுடனே,—எருவை வேந்தன் - கழுகுகட்கு அரசனுகிய சம்பாதியானவன்,—தன் பின் தோணி ஆகிய பிழைப்பு இல் வாய்மையான் பொன்றினன் என்றசொல்-தனதுபின்பிறந்த தம்பியும் தவறுதலில்லாத சத்தியத்தையுடையவனு மாகிய சடாயு இறந்தானென்ற சொல்லை, கேட்டனன்-கேட்டு, புலம்பு நெஞ்சினன்-வருந்துகின்ற மனமுடையவனுய், குன்று எனும் நடந்து-மலேபோல நடந்துசென்று, அவர் குறுகல் மேயினன்-அவ்வானரர்களேக் கிட்டலானன்; (எ-று.)

சடாயு இறந்தசெய்தியைக் கேட்ட சம்பாதி மிகவும்வருந்தி, அதனுண்மையை விசாரித்து அறிய விரும்பி அச்சொல்லேக்கூறிய அநுமானுள்ள இடமாகிய வானரர்களிருந்தவிடத்தைச சேரலானு னென்க. இறகுகள்தீந்துபோய்ப் பறக்கமுடியாதநிலேயி லிருப்பவ னுதலின், சம்பாதி பறந்துசெல்லாமல் நடந்துவரலாயின னென்க. அவர்க்குறுகல் - "இயல்பின் விகாரம்." சம்பாதியின் பெருவடிவுக்கு மலே உவமையாம். (உஉ)

[இதுமுதல் நான்குகவிகள் - சம்பாதியின் வருணனை.]

உசு. முறையுடையெரிபியார்முடிந்தவாறெனப்
பறையிடுநெஞ்சினன்பதைக்குமேனிய
னிறையுடைக்குலிசவேலெறிதலான்முனஞ்
சிறையறுமலேயெனச்செல்லுஞ்செய்கையான்.

இதுமுதல் ஐந்துகவிகள்-ஒரு தொடர்.

(இ-ள்.) முறை உடை எம்பியார் முடிந்த ஆ-நீதிநெறியையுடைய எனதுதம்பி இறந்தவாறு என்னே, எனு-என்று, பறையிடு நெஞ்சினன்-பறையடிப்பதுபோலப் படபடக்கின்ற நெஞ்சையுடையவனும்,—பதைக் கும் மேனியன் - துடிக்கின்ற உடம்பையுடையவனும்,—இறை உடை குலிசம்வேல் எறிதலால் முனம் சிறை அறும் மலே என செல்லும் செய்கையான்-தேவேந்திரன் தான்கொண்டுள்ள வசிராயுதத்தை வீசி யெறிந்ததனுல் முற்காலத்திற் சிறகுகளறுபட்டுப்போன மலேபோலச் செல்லுந் தொழிலேயுடையவனும்,—(எ-று.)

முன்னுளில் மலேகள் இறகுள்ளனவாயிருந்து பறந்து ஜனங்களின் மேல்விழுந்து அழித்துக்கொண்டிருந்ததனுல், இந்திரன் அவற்றின் சிறகை யரிந்தானென்பது, புராணகதை சிறகுகளறுபட்ட மலே-சிறகு கள்தீயப்பெற்ற சம்பாதிக்கு எற்ற உவமையாம். எம்பியார் - உவப்பி னுல், ஆண்பால் பலர்பாலாகச்சொல்லப்பட்ட பால்வழுவமைதி. 'வேல்' என்றது, இங்கு ஆயுதமென்றமாத்திரமாய் நின்றது.

'முடிந்தவாறென,' 'எறிதலானெனும்,' 'எறிகலாதமுன், சிறை யுடைமலேயென' என்று பாடாந்தரங்கள். (உசு)

உச. மிடலுடையெம்பியைவிட்டும்வெஞ்சினப்
படையுளராயினர்பாரில்யாரெனு
வுடலினேவழிந்துபோயுவரிரீருக்
கடலினேப்புரையுமருவிக்கண்ணினன்.

(இ-ள்.) 'மிடல் உடை எம்பியை-வலிமையையுடைய எனது தம்பியை,வீட்டும்-அழிக்கவல்ல, வெம் சினம் படை உளர் ஆயினர்-கடுங் கோபமுடையஆயுதங்களைக் கொண்டவர், பாரில் யார்-இப்பூவுலகத்தில் யாவருளர்? [ஒருவரு மில்லையே!],' எனு-என்று சொல்லி வருந்தி, உடலினை-விழுந்து போய் உவரி நீர் உக கடலினை புரையுறும் அருவி கண்ணினன்-உடம்பிலிருந்து வழிந்துபோய்க் கடலினைச் சேருமாறு சமுத்திரத்தைப்போன்ற நீர்ப்பெருக்குக்களைப்பொருந்திய கண்களையுடையவனும்,—(எ-று.)

முன்னிரண்டடிகள் - ஜடாயுவினது பிறரால்வெல்லுதற்கு அரிய பராக்கிரமத்தை விளக்கும். தனதுஅன்புள்ளதம்பியின் மரணத்தை நினைந்து சம்பாதி கடல்போலக் கண்ணீரைப் பெருக்கினனென்க. நீர் நிரம்பிய பெருங்கண்களுக்கு-அவ்வாறுள்ள கடல் உவமையாம். உடலினை-உருபுமயக்கம்.

'வெஞ்சமம்,' வெஞ்சரம்,' 'படையுளர்யா ரெனப்பகர்வதாயினும்,' 'படருளராயினர்போலும்பாரினில்,' 'பாரெனு,' 'உவரிநீத்துராய்,' 'உவரிநீருராய்' என்பன பாடாந்தரங்கள். (உசு)

உடு. உழுங்கதிர்மணியணியுமிழுமின்னினனன்
மழுங்கியநெடுங்கணின்வழங்குமாரியான்
புழுங்குவானழுங்கினன்புடவிமீதினின்
முழங்கிவந்திழிவதோர்முகிலும்போல்கின்றான்.

(இ - ள்.) உழும் கதிர் மணி அணி உமிழும் மின்னினனன்-சாணை பிடித்த ஒளிபொருந்திய இரத்தினங்களை யிழைத்துசெய்த ஆபரணங்கள் வெளிவீசுகிற மின்னலை யுடையவனும், மழுங்கிய நெடுங் கணின் வழங்கு மாரியான் - ஒளிகுறைந்த (தனது) நீண்டகண்களிலிருந்து துளிக்கின்ற நீர்த்துளிகளையுடையவனும், புழுங்குவான் அழுங்கினனன்-மனம் வருந்துபவனும் வாய்விட்டுக்கதறுபவனும்,—(ஆனதனால்), புடவிமீதினில் முழங்கிவந்து இழிவது ஓர் முகிலும் போல்கின்றான்-பூமியின்மேல் குமுறிக்கொண்டே வந்துஇழிவதாகிய ஒருமேகத்தை யொத்தவனும்,—(எ-று.)

மின்னி யிடித்து நீர்சொரிகின்ற மேகம்-இரத்தினபரணங்களினால் ஒளிவீசிக்கொண்டும், வாயினால்கதறிக்கொண்டும், கண்ணீரைசொரிந்துகொண்டு மிருக்கின்ற சம்பாதிக்கு உவமையாம். இவன் மிகப்பெரிய வடிவத்துடன் பூமியின்மேல் நடந்துவருதலால், புடவிமீதினிலிழியும் மேகத்தை இல்பொருளுவமையாக்குறித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. மிகவும் வயதுசென்றமையால், சம்பாதிக்குக கண் மழுங்குவதாயிற்று.

(மூன்றாமடி) 'அழுங்குரன் மிருந்தெழுந்தாற்றினனவன்,' 'புவனி மீதினில்' என்பன பாடாந்தரங்கள். (உஙி)

உசு. வள்ளியபுமரங்களுமலையுமண்ணுறத்
தெள்ளுதுண்பொடிபடக்கடிதுசெல்கின்றான்
றள்ளுவன்கால்பொரத்தரணியிற்றவழ்
வெள்ளியம்பெருமலைபொருவுமேனியான்.

(இ - ன்.) ‘வள்ளியும் கொடிகளும், மரங்களும்—, மலையும்-மலைகளும், மண் உற தெள்ளு நுண் பொடி பட-(மண்ணெடி) மண்ணகும் படி தெள்ளிய சிறுபொடியாகுமாறு, கடிது செல்கின்ற-வீரைவாகச் செல்பவனும்,—தள்ளு வல் கால் பொர தரணியில் தவழ் வெள்ளி அம் பெரு மலை பொருவும் மேனியான்-(எல்லாவற்றையுந்) தள்ளவல்ல வலிய காற்றுமோதுதலாற் பூமியில் தவழ்ந்துவருகின்ற அழகிய பெரிய வெள்ளிமயமான கைலாசபருவதத்தையொத்த உருவமுடையவனும் (ஆகி),—(எ-று.)

இவன் நடந்துசெல்லுகையில் வழியிலுள்ள கொடிகளும் மரங்களும் மலைகளும் பொடியாயின வென, இவனது மிக்கவலிமையை வெளியிட்டவாறு. முன்னொருகாலத்தில் வாயுவுக்கும் ஆதிசேஷனுக்கும் விவாதம்நேர்ந்தபோது வாயுபகவான் தனது மிக்கவலிமையால், ஆதிசேஷனுற் பாதுகாக்கப்பட்ட மேருமலைச்சிகரங்கள் ஆயிரங்களுள் மூன்றை முறித்து அடித்துவந்ததை வனத்திற்கொண்டு, கவி, வெண்மைநிறத்துடனே வேகமாக நடந்துவருகின்ற சம்பாதிக்கு, கால் பொரத்தரணியிற்றவழ்வெள்ளியம்பெருமலையை உவமையாகக் குறித்தன ரென்னலாம். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. வள்ளி = வல்லி: முதலடி-முற்றுமோனை.

‘தரணியிற்றவி,’ ‘தரணிதத்தவவ்,’ ‘தரணிதங்குறும்,’ ‘வெள்ளியம் பெருங்கிரிபோலும்’ என்று பாடாந்தரங்கள். (உசு)

[சம்பாதியை அநுமனென்று கருதி மற்றவானரவீரர் அஞ்சியோட அநுமான் எதிர்நிற்றல்.]

உஎ. எய்தினனிருந்தவரிரியல்போயினு
ரையனம்மாருதியழலுங்கண்ணினுண்
கைதவநிசிசரக்கள்ளவேடத்தை
யுய்திகொலினியெனவுருத்துமுன்னின்று

(இ - ன்.) எய்தினன்-(இவ்வாறு சம்பாதி வாகரருள்ளவிடத்தில்) வந்துசேர்ந்தான்; (அவனைக்கண்டு), இருந்தவர் இரியல் போயினர் - அங்கிருந்தவானரர் அஞ்சி நிலைகெட்டுச்சென்றார்கள்; ஐயன் அமாருதி-அறிவிற்சிறந்தவனுகிய அந்தஅநுமான்மாத்திரம், அழலும் கண்ணினன்-நெருப்புப்பொறிபறக்கின்ற கண்களையுடையவனும், (அந்தச்சம் பாதியைநோக்கி), ‘கைதவ-வஞ்சனையுடையவனே! (நீ) கள்ளம்நிசிசரன் வேடத்தை-திருட்டுக்குணமுள்ள ராக்ஷஸரூபத்தையுடையாய்; இனி உய்தி கொல்-என்னெதிரில் அகப்பட்டபிறகு தப்பிப்பிழைப்பாயோ?’ என-என்று, உருத்து - கோபித்துச்சொல், முன் நின்றான் - அவனெதிரில்-நின்றான்; (எ - று.)

சம்பாதியின்பெருந்தோற்றத்தைக் கண்டு மற்றைவானரர் அஞ்சியோட, அவனை இராவணனென்றே கருதி அநுமான் சினந்து சிலகூறி அவனையெதிர்த்துநின்றன ரென்க. ‘கைதவ’ என்று விளித்ததனால், இவனை இராவணனென்று அநுமான் கருதியமை பெறப்படும். கைதவம்-வஞ்சகம்; வடசொல்: அதனையுடையவன் கைதவன். நிசிசரன் என்ற வடசொல் - இரவில் வலிமைகொண்டு [illegible]

பொருள்படும். வேடத்தை-வேஷமே என்ற வடசொல்லின் திரிபாகிய வேடம்என்ற முதனிலையினடியாப்பிறந்த முன்னிலையொருமைக்குறிப்பு முற்று. ஐயன் நம் மாருதி என்று பிரித்தற்கும் இடமுண்டு. 'கைதவ நிசாசரள்ளவேடங்கொண்டு' என்ற பாடம்-வஞ்சனையையுடைய அரக்கனே! (இவ்வாறு) திருட்டுத்தனமாகப்பட்சிரூபங்கொண்டு தப்பிப் பிழைக்கப் பார்க்கின்றாயோ? என்று பொருள்பட்டுச்சிறக்கும்.

'ஐயன்மாருதியவன்' எனவும் பாடம். (உஎ)

[அநுமான்,முகக்குறிப்பினால்சம்பாதியைக் குற்றமற்றவனெனஉணர்தல்.]

உஅ. வெங்கதம்விசியமனத்தன்விம்மலன்
பொங்கியசோரிநீர்பொழியுங்கண்ணினன்
சங்கையிற்சழக்கிலனென்னுந்தன்மையை
யிங்கிதவகையினாலெய்தநோக்கினன்.

(இ-ள்.) (அப்போது அநுமான்),—'வெம் கதம் வீசிய மனத்தன்-கொடியபாவத்தை நீக்கிய மனத்தையுடையவனும், விம்மலன் - மன வருத்தமுடையவனும், பொங்கிய சோரி நீர் பொழியும் கண்ணினன்-மிக்கமழைபோல நீரைசசொரிகின்ற கண்களையுடையவனுமா யிருக்கிறான்; (ஆதலால், இவன்), சங்கையில் சழக்கு இலன் - மனத்திலே சிறிதுங்குற்றமில்லாதவன், என்னும் தன்மையை-என்பதை, இங்கிதம் வகையினால் எய்த நோக்கினன்-முகத்தின்குறிப்புவகைகளால் நன்றாக அறிந்தான்; (எ - று.)

அநுமானவன், முகக்குறிப்பினால் உண்மையையுணர்பவனதலால், கோபமில்லாமலும் வியசனத்தைக்கொண்டும் கண்ணீரைப் பெருக்கியும் வருகின்ற சம்பாதியைக் கண்டு குற்றமற்றவனெனத் தெளிந்தனனென்க. இனி, இச்செய்யுளுக்கு-(சம்பாதியை இராவணனென்று கருதியதனால்) கடுங்கோபத்தை வெளிக்காட்டுகின்ற மனமுடையவனும், (சீதையைவஞ்சித்துக் கவர்ந்துசென்றனனே யென்று அவன்மீது) கொதிப்புக் கொண்டவனும், கடுங்கோபத்தினால் இரத்தத்தைக்கக்குகின்ற கண்களையுடையவனுமாகிய அநுமான் இங்கித வகையினால்(சம்பாதியைக்) குற்றமற்றவனென உணர்ந்தானென்று பொருள்கூறினும் பொருந்தும். 'சங்கையில்சழக்கிலன்' என்றபாடம், அளவில்லாதகுற்றத்தைச் செய்யாதவனென்று பொருள்படும். இங்கிதம்-குறிப்பால்நிகழும் உறுப்பின் தொழில்.

'பொங்கியசோகத்தன் பொழிகண்ணீரினன்' எனவும் பாடம். ()

[சம்பாதி 'சடாயுவைக் கொன்றவர் யார்?' என வினவுதல்.]

உக. நோக்கினன்றனனுணங்குகேள்வியான்
வாக்கினாலொருமொழிவழங்கலாதமுன்
ருக்கருஞ்சடாயுவைத்தருக்கினாலியிர்
நீக்கினரியாரதுநிரப்புவீரென்றான்.

(இ-ள்.) நோக்கினன்நின்றனன்-(அவ்வாறு சம்பாதியின் வருகையை) நோக்கிக்கொண்டு எதிர்நின்றவனும், நுணங்கு கேள்வியான்-நுட்பமான நூற்கேள்விகளையுடையவனுமாகிய அநுமான், வாக்கினால்

ஒருமொழிவழங்கீலாத முன்-(தன்) வாயினுல் ஒருசொற் கூறுவதற்கு முன்னமே,—(சம்பாதி), 'தாக்க அரும் சடாயுவை தருக்கினுல் உயிர் நீக்கினர் யார் - (எவராலும்) எதிர்த்துப் போர்செய்யமுடியாத [மிக்க வலிமையையுடைய] ஜடாயுவைச் சூரத்தன்மையினுற் கொன்றவர் யாவர்? அது நிரப்புவீர்-அதனை விவரமாகக் கூறுவீராக,' என்ருன்-என்ற வினவினுன்; (எ - று.)

'நிரப்புவீர்' என்ற பன்மை - அநுமானைக் கௌரவித்தற்காகக் கூறியதென்ருவது, மற்றை வாநரரையும் உளப்படுத்திய தென்ருவது கொள்ளத்தக்கது.

' 'தருக்கியாருயிர்' எனவும் பாடம். (உசு)

[அநுமான் 'உன்னைத் தெரிவித்த பின்னரே உன்வினவிற்கு விடையளிப்பேன்' என்றல்.]

சுஅ. உன்னைநீயுள்ளவாறுரைப்பினுற்றதைப்
பின்னையானிரப்புதல்பிழைப்பின்ருகுமா
லென்னமாருதியெதிரெருவைவேந்தனுந்
தன்னையாந்தன்மையைச்சாற்றன்மேயினுன்.

(இ - ள்.) 'உன்னை நீ உள்ள ஆறு உரைப்பின் - உன்னைப்பற்றி நீ உள்ளபடியே (உண்மையாகக்) கூறினுல், உற்றதை பின்னையான் நிரப்பு தல்பிழைப்பு இன்று ஆகும்-நடந்த வரலாற்றைப் பிறகு நான் விவரித் தல் தவறுதலில்லாததாகும்,' என்ன - என்று (அநுமான் சம்பாதியை நோக்கிக்) கூற,—மாருதி எதிர்-அந்த அநுமானிடத்தில், எருவை வேந் தனும்-கழுகரசனுகிய சம்பாதியும், தன்னை ஆம் தன்மையை சாற்றல் மேயினுன்-தன்னைப்பற்றியுண்டாகிய வரலாற்றை [தான் இன்னுனென் பதை]ச் சொல்லத்தொடங்கினுன்; (எ-று.)—அதனை, அடுத்தகவியிற் காண்க. ஆல்-ஈற்றசை. முதலடி-முற்றுமோனை.

'உற்றது,' 'பிழைப்பின்ருதலால்,' 'தன்மையைத்தெரித்தன்மேயி னுன்' என்பன பாடாந்தரம். (சுo)

[சம்பாதி தன்னை இன்னுனென்று அநுமானிடத்துத் தெரிவித்தல்.]

சுக. மின்பிறந்தாலெனவிளங்கெயிற்றினு
யென்பிறந்தார்க்கிடையெய்தலாதவென்
பின்பிறந்தான்றுணைபிரிந்தபேதையேன்
முன்பிறந்தேனெனமுடியக்கூறினுன்.

(இ - ள்.) (சம்பாதி அநுமானைநோக்கி), மின் பிறந்தால் என்ன விளங்குகெயிற்றினுய் - மின்னல்தோன்றினுற்போல் விளங்குகின்ற பற் களையுடையவனே!—என்பு இறந்தார்க்கு இடை எய்தலாத என் பின் பிறந்தான் துணைபிரிந்த பேதையேன்-உடம்புஒழிந்தவர்க்குட் சேராத எனக்குப்பின் பிறந்தவனுகிய துணையைப் பிரிந்த ஏழைமையுடைய நான், முன்பிறந்தேன்-(நீ இறந்தவனுகக்கூறுகின்ற அந்த ஜடாயுவுக்கு) அண்ணனுகப் பிறந்தேன்,' என-என்று, முடிய கூறினுன்-(தான் இன் னுனென்பதை) விளங்கக்கூறினுன்; (எ-று)

ஜடாயு வென்பவன் எனது தம்பி: நான் அவனுக்கு முன்பிறந்தவன் என்றவாறு. பிறர்க்கு உதவிசெய்வதனிமித்தம் தனதுயிரையுங் கொடுத்தவனுதலால், ஜடாயு இறந்தானுயினும் இறவாதவனே யென்பான், 'என்பிறந்தார்க்கிடையெய்தலாதவென்பின்பிறந்தானீ' வென்றான்; ஜடாயுவின்தூலவுடம்பு அழியினும் புகழுடம்பு அழியாது நிலைநிற்றலால், இவ்வாறு கூறியது. ''பைந்தாரெங்களிராமன்பத்தினி, செந்தாள்வஞ்சிதிறத்திறந்தவன், மைந்தாவெம்பிவரம்பில்சீர்த்தியோ, டுய்ந்தானல்ல துலந்ததுண்மையோ'' என மேலேகூறுதலும்காண்க.என்புடம்பிற்கு, ஆகுபெயர். இதனை ''என்புமுரியர் பிறர்க்கு'' என்றவிடத்துப் பரிமேலழகர்கூறிய உரையிலுங் காண்க. இலேயான் இறக்கூடிய தோலுகிய யான் உயிரோடிருக்கின்றேனே யென்ற இரக்கந்தோன்றுமாறு, 'என்பின்பிறந்தான்றனைபிரிந்தபேதையேன் முன்பிறந்தேன்' என்றான்.

இனி, இசசெய்யுளுக்குப் பலவாறு பொருள்கூறுவரேனும்,பொருந்துமாயிற் கொள்க. (கூக)

[அநுமான் ஜடாயு இறந்த காரணத்தைச் சம்பாதிக்குக் கூறல்.]

கூஉ. கூறியவாசகங்கேட்டுக்கோதிலா
னூறியதன்பத்தினுவரியுட்புகா
வேறினனுணர்த்தினனிகலிராவணன்
வீறியவாளிடைவிலேந்தனென்றான்.

(இ - ள்.) கூறிய வாசகம் கேட்டு-(சம்பாதி) சொன்ன வார்த்தையைக்கேட்டு,—கோது இலான்-குற்றமற்றவனுகிய அநுமான்,-ஊறியதன்பத்தின் உவரியுள்·புகா ஏறினன்-மிகுகதுன்பமாகிய கடலினுள் மூழ்கி ஒருவாறு தெளிந்தவனுய், இகல் இராவணன் வீறிய வாளிடை விலேந்தனது ஆம் என்றான் உணர்த்தினன்-பகைமைக்குணமுள்ள இராவணன் வீசிய வாளாயுதத்தால் (உனது தம்பியின்மரணம்) நேர்ந்ததாகும்' என்று கூறித் தெரிவித்தான், (எ-று.)

சம்பாதியின்சொல் மனத்தைக் கரைவித்ததனுல், அதைக்கேட்ட அநுமான் துயர்க்கடலுள் மூழ்கி அரிதில் தேறலாயின னென்க.தன் பத்தினுவரி-சோகஸாகரம். வீறிய-பெருமைபெற்ற எனினுமாம்.வாள்-சிவபெருமான் ஈந்தது; சந்திரஹாஸமென்னும் பெயர்பெற்றது.

'கேட்டகோதிலான்,' 'வாளினுல்வீழவித்தானென்றான்' என்று பிரதிபேதம். (கூஉ)

[சம்பாதியின் வருத்தம்.]

கூகூ. அவ்வுரை கேட்டலு மசனி யேற்றினுற்
றவ்விய கிரியெனத் தரையின் வீழ்ந்தனன்
வெவ்வுயி ராவுயிர் பதைப்ப விம்மிஞ
னிவ்வுரை யிவ்வுரை யெடுத்தி யம்பினான்.

(இ-ள்.) அ உரை கேட்டலும் - (அநுமான்கூறிய) அவ்வார்த்தையைக் கேட்டவுடனே,—(சம்பாதியானவன்),—அசனி ஏற்றினுல் தவ்

விய கிரி என தலையின் வீழ்ந்தனன்-பேரிடியினால் நிலைகெட்டழிந்த மலைபோலத் தரையில்வீழ்ந்தவனும், வெவ் உயிரா-வெப்பமாகப் பெரு மூச்செறிந்து,உயிர்பதைப்ப வீம்மினன்-உயிர்துடிக்க வருந்தி,இ உரை இ உரை எடுத்து இயம்பினன்-இந்தஇந்த வார்த்தைகளை யெடுத்தெடுத்துக்கூறிப் புலம்பினன்; (எ-று.)—இவற்றை,அடுத்த நான்குகவிகளிற் காண்க.

சிறந்ததையும், பெரியதையும் 'எறு' என்றல், மரபு. கீழ்விழுதலும், வெப்பமாகப் பெருமூச்செறிதலும், உயிர்பதைத்தலும், விம்முதலும்-சோகத்தின் மெய்ப்பாடுகள். இவ்வுரை இவ்வுரை என்ற அடுக்கு-சோகத்தினைப் பலகூறுதலைக் குறிக்கும். (கூ)

வேறு.

[இதுமுதல் நான்குகவிகள்-ஜடாயுவைப்பற்றிய சம்பாதியின்புலம்பல்.]

கூச. இளையா நீஎன்சிற கின்றி வெந்துகத்
தளையா னேனுயிர் போத தக்கதால்
வளையா நேமியன் வன்மை சால்வலிக்
கிளையா னேயிது வென்ன மாயமோ.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இளையா-எனதுதம்பியே! நீள் சிறகு இன்றி வெந்து உக தளை ஆனேன் உயிர் போதல் தக்கது-(சூரியகிரணங்கள் எரித்ததனால்) நீண்ட சிறகுகள் இல்லாதவாறு [அடியோடு] வெந்தொழிய (விரும்பிய படி பறந்து செல்லமுடியாமல்) தளையிடப்பட்டவன்போ லிருக்கின்ற எனது உயிர் ஒழிதலே தகுதி; வளையா நேமியன் வன்மை சால் வலிக்கு இளையானே-அழியாத ஒற்றைச்சக்கரங்கொண்ட தேரையுடைய சூரிய னது மிகவும் உக்கிரமான வலிமைக்குப் பின்வாங்காதவனே! இது - (நீ எனக்கு முன்னேஇறந்த) இச்செய்கை, என்ன மாயமோ-என்னவியப் போ!)(எ - று)—ஆல்-ஈற்றசை.

பறவைகட்கு இன்றியமையாத உறுப்பான சிறகுகள் ஒழிந்தபிற கும் ஒருபயனுமில்லாமல் யான் உயிருடன் வீணாக வீழ்ந்துகிடக்கின் றேன்; சூரியனது வலிமைக்கும் பின்னிடையாத மிக்கவலிமையுடைய நீ, மூத்தவனுகிய எனக்கு முன்னே இறந்தது என்ன விபரீதம்! என்று சம்பாதி புலம்பினனென்க.சூரியன்வலிமையாற் சம்பாதியின் இறகுகள் தீய ஜடாயு இறகுடனிருந்த வரலாறு, மேலே கூறப்படும். பூமிமுழு தும் ஒருபகலிற் செல்லவல்ல ஒற்றைச்சக்கர முடையவனுதலால், சூரி யன் 'வளையாநேமியன்' எனப்பட்டான். 'நின்சிறகின்றி வெந்துகத் தளையானே னுயிர்' என்ற பாடத்திற்கு-(சூரியகிரணத்தினால்) உனது சிறகுகள் இல்லாதபடி தீந்துபோவதாயிருக்கையில் (அதற்குத்) தளை யாய்நின்ற (மூத்தோனுகிய) எனது உயிர் போதல் தக்கது என்று பொருளாம். ஓகாரம் - இரக்கமுணர்த்தும்.

'தக்கதே', 'தக்கதோ' என்பன பாடாந்தரம்.

இதுமுதற் பத்தொன்பது கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் மாச்சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (நச)

நடு. மலரோனின்றுளன்மண்ணும்விண்ணுமுண்
டுலையாநீடமின்னுமுண்டாரோ
நிலையார்கற்பமுநின்றதின்றுநீ
யிலையாலயிதுவென்னதன்மையோ.

(இ - ள்.) மலரோன் நின்றுளன் - (திருமாலின்நாபி) கமலத்தில் தோன்றியவனான பிரமதேவன் (அழியாமல்)நிலைத்திருக்கின்றான்; மண்ணும் விண்ணும் உண்டு-நிலவுலகமும் வானுலகமும் நிலைத்திருக்கின்றன; உலையா நீடு அறம் இன்னும் உண்டு - அழியாமல் வளர்கின்ற தருமமும் இன்னும் இருக்கின்றது; நிலை ஆர் கற்பமும் நின்றது-நிலைத்திருக்கின்ற கற்பகவிருக்ஷமும் அழியாமல் நிற்கின்றது; (இவையெல்லாம் அழியாதிருக்க), இன்று நீ இலை ஆலய்-இப்போது நீமாத்திரம் உயிரொழிந்தாய்; இது என்ன தன்மையோ-இது என்ன முறைமையேயோ! (எ - று)—அரோ-ஈற்றசை.

நீதேழிகாலம் நிலைத்துநிற்றற்குரிய நீஇறந்தாயே யென இரங்கியவாறு.

நகூ. உடனேயண்டமிரண்டுமுந்துயிர்த்
திடநாள்வந்திருவேமுமெய்தியான்
விடநீயோர்தனிச்சென்றவீரமுங்
கடனேவெங்கலுழற்குமேன்மையோய்.

(இ - ள்) வெம் கலுழற்கும் மேன்மையோய் - வேகத்தையுடைய கருடனைப்பார்க்கிலுஞ் சிறந்தவனே!—முந்து நாள்-முன்னாளில், அண்டம் இரண்டும் உயிர்த்திட - இரண்டு முட்டைகளுண்டாக, உடனே வந்து-உடன்பிறப்பாக வந்து, இருவேமும் எய்தி - நாமிருவரும் (இத்தனைநாள்) வாழ்ந்திருந்து,—(பிறகு), யான் விட-நான் (உன்னை) விட்டுப்பிரிந்து (இங்கே) கிடக்குமாறு, நீ ஓர் தனி சென்ற வீரமும்-நீ தன்னந்தனியனாய் இறந்தி சென்ற வீரசெயலும், கடனே-முறையோ!

சூரியசாரதியான அருணனுக்கு அரம்பையென்னுந் தேவமாதின் வயிற்றில் தோன்றியவர் சம்பாதி ஜடாயுக்கள் என அறிக. ஜராயுஜம் அண்டஜம் ஸ்வேதஜம் உத்பிஜ்ஜம் என்ற நால்வகைப்பிறப்புகளுள் கழுகுகள் அண்டஜமாதலால், 'அண்டமுந் துயிர்த்திடநாள்வந்து' எனப்பட்டது. (ஜராயுஜம் - கருப்பையிலிருந்து பிறப்பன; மனிதரும் விலங்குகளும். அண்டஜம் - முட்டையிலிருந்துபிறப்பன; பறவைகள் முதலாயின. ஸ்வேதஜம்-வேர்வையிலிருந்து பிறப்பன; புழு முதலானவை. உத்பிஜ்ஜம்-விதையிலிருந்து தோன்றுவன; மரம் செடி முதலியன.) ஓர் தனி-ஒருபொருட் பன்மொழி. கலுழன்=கருடன். நீ வீரத்திலுல் இறந்தது சிறந்ததாயினும் என்னைவிட்டுசென்றது தகுதியன்றென்பான் 'யான்விட' என்றும், இராவணனுடன் பொருது ஜடாயு வீழ்ப்புண்பட்டு இறந்தனனாதலால் 'தனிச்சென்றவீரம்' என்றுங் கூறினன்.

'இருவோமுளோமெனை','கருளற்குமேன்மையாய்' என்றுபிரதிபேதம்.

ரூ.எ. ஒன்றுமூன்றுலகத்துளோரையும்
வென்றுனென்னினும்வீரநிற்குநேர்
நின்றுனேயவ்வரக்கனின்னையுங்
கொன்றுனேயிஃதென்னகொள்கையோ.

(இ - ள்.) வீர-வீரனே!—(இராவணனைவன்), ஒன்றுமூன்று உலகத்து உளோரையும் வென்றுன் என்னினும்-(தனக்கு) இணங்கிவராத மூவுலகங்களிலுள்ளவர்களையும் வென்றுனென்றாலும், நிற்கு நேர் நின்றுனே-(போரில்) உனக்கு எதிராகவும் நின்றுனு! அ அரக்கன் நின்னையும் கொன்றுனே-ராக்ஷஸனுகிய அந்த இராவணன் உன்னையும் கொன்றுனு! இஃது என்ன கொள்கையோ-இது என்ன கோட்பாடோ?

மூவுலகத்தையும் வென்ற அந்த இராவணனைவிட நீ மிக்க பலசாலியாதலால், அவன் உன்னை யெதிர்த்தானென்பதும், கொன்றுனென்பதும் நம்பத்தக்கதாயில்லை யென்றவாறும்.

'கொன்றுனேயிது,' 'கொள்கையோவென்றுன்' என்றும் பாடம்.

[அநுமான் சம்பாதியைத் தேற்றுதல்.]

ரூ.அ. என்றென்றேங்கியிரங்கியின்னலாற்
பொன்றுந்தன்மைபுரிந்தபோதுவற்
கொன்றுஞ்சொற்கொடுணர்ச்சிநல்கினுன்
வன்றிண்டோள்வரையன்னமாருதி.

(இ -ள்.) (சம்பாதியானவன்), என்றுஎன்று ஏங்கி இரங்கி-என்று பலவிதமாகக்கூறி மிகவும் மனந்தளர்ந்துவருந்தி, இன்னலால்-துன்பத்தினுல், பொன்றும் தன்மை புரிந்த போது-இறக்கும் நிலையை யடைந்தபோது,—அவற்கு-அந்தச்சம்பாதிக்கு, வல் திண் வரைஅன்ன தோள் மாருதி-மிகவும்வலிய மலைபோன்ற தோள்களையுடைய அநுமான், ஒன்றும் சொல்கொடு உணர்ச்சி நல்கினுன்-சமயத்திற்கு ஏற்ற சொற்களைக் கொண்டு தேறுதல் கூறினுன்; (எ - று.)

'பொன்றுந்தன்மை புகுந்தபோது,' 'மலையன்ன' என்பனவும் பாடம்.

[சம்பாதியின் வினவும், அநுமான் விடைகூறத் தொடங்குதலும்.]

ரூ.கூ. தேற்றத்தேறியிருந்தசெங்கணுன்
கூற்றெறப்பான்கொலைவாளரக்கனே
டேற்றுப்போர்செய்ததென்னிமித்தனக்
காற்றின்சேயிதுகட்டுரைக்குமால்.

(இ - ள்.) தேற்ற தேறி இருந்த செங் கணுன்-(அநுமான்) தேறுதல் கூறியதனுல் மனந்தெளிந்திருந்தவனை சிவந்தகண்களையுடையசம்பாதியானவன்,—(அநுமானைநோக்கி), 'கூற்று ஒப்பான்-யமன் போன்றவனை [மிக்கவலிமையுடைய] ஐடாயு, கொலைவாள் அரக்கனேடு - கொல்லுதல் தொழிலையுடைய வாளையுடைத்தையேந்திய ராக்ஷஸனுகிய இராவணனேடு, எற்று போர் செய்தது - எதிர்த்துயுத்தஞ்செய்ததற்கு, என் நிமித்தம் - காரணம் யாது?' என - என்றுவினவ, காற்றின் சேய் - வாயுகுமாரனை அநுமான்,

இது கட்டுரைக்கும்-இவ்வரலாற்றைக் கூறலானுன்; (கூ-று.)—அதனை, அடித்த மூன்றுசெய்யுள்களிற் காண்க. ஆல் - ஈற்றசை.

சம்பாதி அநுமான்வார்த்தையால் மனந்தெளிந்து ஜடாயு இராவணனோடு போர்செய்த காரணத்தை வினவ, அநுமான் கூறலாயினனென்பதாம். நிமித்து=நிமித்தம்; வடசொல்.

'தேற்றச்சிந்தைதெளிந்து செவவியான், கூற்றைப்போற்கொலை வாளரக்கனே, டேற்றுப்போர்செய்ததென் செய்தற்கெனக், காற்றின் சேயிவைகட்டுரைக்கின்றுன்', 'கட்டுரைக்குவான்' என்றுபிரதிபேதம்.

[இதுமுதல் ழன்றுகவிகள் - ஒருதொடர்; அநுமான் ஜடாயுவின்செய்தி கூறுதல்.]

கூ0. எங்கோமானவ்விராமனில்லுளாள்
செங்கோலான்மகள்சீதைசெவ்வியாள்
வெங்கோல்வஞ்சன்விளைத்தமாயையாற்
றங்கோனைப்பிரிவுற்றதன்மையாள்.

(இ - ள்.) எம் கோமான் அ இராமன் இல் உளாள்-எமது தலைவனை அந்த இராமபிரானது மனைவியும், செங்கோலான் மகள்-நீதிநெறிதவறுத அரசாட்சியையுடையவனுன ஜகமகாராஜனது குமாரியும், செவ்வியாள்-நல்லிலக்கணமமைந்தவளுமான, சீதை—,—வெம் கோல் வஞ்சன் விளைத்த மாயையால் - கொடுங்கோலையுடைய வஞ்சகனுகிய இராவணன் செய்த சூதினுல், தம் கோனை பிரிவுஉற்ற தன்மையாள்-தனது நாயகனைப் பிரிந்த தன்மையளாயினுள்; (எ - று.)

வெங்கோல்வஞ்சன் விளைத்த மாயையாவது - மாயமானினது வியாஜமாக ராமலக்ஷ்மணர்கள் சீதாபிராட்டியைப் பிரியுமாறு செய்தமை. இல்லுளாள்-வீட்டிலிருந்து கணவனுக்கு வேண்டியதொழிலைச் செய்பவள்; மனைவி, அ-உலகறிசுட்டு. (கூ0)

கூக. கொண்டேகுங்கொலைவாளரக்கனைக்
கண்டானும்பியறங்கடக்கிலான்
வண்டார்கோதையைவைத்துநீங்கெனச்
சிண்டேரானெதிர்சிந்தைசீறினுன்.

(இ-ள்.)அறம் கடக்கிலான் உம்பி-தருமநெறிதவறுதவனும் உனது தம்பியுமாகிய ஜடாயுவானவன்,—கொண்டு எகும் கொலை வாள் அரக்கனை கண்டான்-(சீதாபிராட்டியைக்) கவர்ந்துகொண்டு செல்கின்ற கொலைசெய்யும் வாளாயுதத்தையேந்திய இராவணனைக் கண்டு,—வண்டு ஆர் கோதையைவைத்து நீகு எனு - 'வண்டுகள்மொய்க்கப் பெற்ற கூந்தலையுடைய பிராட்டியை விட்டிட்டு அப்பாற்செல்' என்று சொல்லி, சிண் தேரான் எதிர் சிந்தை சீறினுன்-வலியதேரையுடைய அவ்விராவணனெதிரிலேமனங்கொதித்துப் போர்புரியலானுன்;(எ-று.)

வண்டார் கோதை-அடையடுத்த வாகுபெயர். 'அறங்கடக்கிலான்' என்ற அடைமொழி-பிறர்மனைவியைக் கவர்வதைக் கண்டு மனங்கொதித்தற்கு ஏற்றவ னென்ற கருத்தைப் புலப்படுத்தும்;கருத்துடையடைமொழியுமாம். (சக)

சுஉ. சீறித்தீயவனேறுதேரையுங்
கீறித்தோள்களிழித்தழித்தபின்
றேறித்தேவர்கடேவன்றெய்வவாள்
வ்றப்பொன்றினன்மெய்ம்மையோனென்ரான்.

(இ-ள்.) மெய்மையோன்-சத்தியமுள்ள அந்த ஜடாயு, சீறி - அவ்வாறுகோபித்து, தீயவன் ஏறு தேரையும் கீறி - கொடியவனுகிய அவ்விராவணன் ஏறியிருந்த தேரையும் அழித்து, தோள்கள் இழித்து-(அவனது) தோள்களையும் பிளவுபடுத்தி, அழித்த பின்-(இங்ஙனம் பலபடியாக அவனதுவீரத்தைக்) குறைத்தபின்பு,—(இராவணன்), தேறி-(தான் ஜடாயுவைவெல்லும் நெறியை) நிச்சயித்து, தேவர்கள் தேவன் தெய்வம் வாள் வீற-மகாதேவனுன சிவபிரான் தனக்கு அளித்த தெய்வத்தன்மையுள்ள வாளை வீசியெறிய, பொன்றினன் - (ஜடாயு) உயிர் மாய்ந்தான், என்ரான்-என்று கூறி முடித்தனன், (அநுமான்); (எ-று.)

ஜடாயு இராவணனைத் தனது மூக்கினுலும் நகங்களினுலும் சிறகுகளினுலும் பலபடி ஹிம்ஸித்து, இறுதியில் அவ்விராவணனது தெய்வவாளால் உயிர்மாய்ந்தன னென்பதாம். மும்மூர்த்திகளுளொருவனுதலால், சிவபெருமான் 'தேவர்கள்தேவன்' எனப்பட்டான்: முதலடி - முற்றுமோனை.

'தேறித்தாழ்சடையீசன்றெய்வவாள்,''தேவர்கடேவன்வாளினுல்' என்று பாடாந்தரங்கள். (சஉ)

[இதுமுதல் முன்றுகவிகள் - ஜடாயுவின்மரணத்தைத்தழுவித்துச் சம்பாதியைத் தேற்றி ஆங்குதல்.]

சுரு. விளித்தானன்னதுகேட்டுமெய்ம்மையோய்
தெளித்தாடத்தகுதீர்த்தன்மாட்டுயி
ரளித்தானேபதுநன்றுநன்றெனுக்
களித்தான்வாரிகலுழ்ந்தகண்ணினுன்.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) விளித்தான்-(அவ்வாறு அநுமான்) கூறிமுடித்தான்; அன்னது கேட்டு-உச்சொல்லைக் கேட்டு, வாரி கலுழ்ந்த 'கண்ணினுன் - நீரைச்சொரிகின்ற கண்களையுடையவனுகிய அந்தச் சம்பாதி,—(அநுமானைநோக்கி),—'மெய்ம்மையோய்-சத்தியமுடையவனே! தெளித்து ஆட தகு தீர்த்தன்மாட்டு உயிர் அளித்தானே-மனந்தெளிந்து அனுபவித்தற்குரிய பரிசுத்த மூர்த்தியாகிய இராமபிரான் திறத்தில் (எனது தம்பியாகிய ஜடாயு)உயிரையுங் கொடுத்தானன்றே! அது நன்றுநன்று-அச்செயல் மிகவும் நன்றுயிருந்தது,' எனுக்களித்தான்-என்று மனஞ்சந்தோஷித்தவனுய்,—(எ-று.)

'வினைப்பகுதிகள் பலபொருளையும் தரும்' என்றி கொள்கைபற்றி, விளித்தான் என்பதற்கு-சொன்னன் எனப் பொருள் கொள்ளப்பட்டது. 'விளித்தான்' என்பது-கீழ்க்கவியில் 'என்றான்' என்றதன் அநுவாதம். தெளித்தாடத்தருதீர்த்தன் - முழுமுதற்கடவுளெனினும் உறுதி கொண்டு 'சரணமடைதற்கு ஏற்ற புண்ணியமூர்த்தி; இத்தொடர்-தெளிவடைந்து பலரும்வந்து நீராடத்தருந்த கங்கையென்னும் புண்ணிய நதியை உண்டாக்கினவனென்ற பொருளையுந் தரும். வாரி-ஆநந்தபாஷ்பமுமாம். சீதாபிராட்டியை மீட்டற்குச சென்று ஜடாயு இறந்திருக்கவும், 'தீர்த்தன்மாட்டியிரளித்தான்' என்றது, சீதையை மீட்டலும் இராமகாரிய மாதலா லென்க; "இராமன்பத்தினி செந்தாள் வஞ்சிதிறத்திறந்தவன்" எனமேற்கூறுதலுங காண்க. தெளித்து=தெளிந்து: எதுகை நோக்கிய வலித்தல். ஏகாரமும், அசைக்கும்-உவகைப்பொருளன. 'வெளித்தானன்னதுசொல்ல,' 'வாரிகரந்தகண்ணினன்' என்றும்பாடம்.

சஅ. பைந்தாரெங்களிராமன்பத்தினி
செந்தாள்வஞ்சிதிறத்திறந்தவன்
மைந்தாவெம்பிவரம்பில்சீர்த்தியோ
டுய்ந்தானல்லதுலகத்துண்மையோ.

(இ-ள்) மைந்தா-வீரமுடையவனே! பைந் தார் எங்கள் இராமன் பத்தினி செந் தாள் வஞ்சி திறத்து இறந்தவன்-புதியதாகிய மலர்மாலையையணிந்தவனுன எங்கள் இராமபிரானது தேவியும் சிவந்தபாதங்களையுடைய வஞ்சிக்கொடிபோன்றவளு மான சீதாபிராட்டியின் விஷயத்தில் உயிரொழிந்தவனுகிய, எம்பி-எனது தம்பியான ஜடாயு, வரம்பு இல் சீர்த்தியோடு உய்ந்தான் அல்லது - அளவில்லாத பெருஞகீர்த்தியுடன் பிழைத்திருக்கின்றனேயல்லாமல், உலந்தது உண்மையோ-உயிரொழிந்தானென்று கூறுவது உண்மையாகுமோ? [ஆகாதென்றபடி].

சீதாபிராட்டியை மீட்பதற்காகத் தன்னுயிரைக் கொடுத்தவனுதலால், அவனது பூதவுடம்பு அழிந்தும் புகழுடம்பு அழியாது நிலைநிற்கின்றது; ஆகலால், அவன் இறந்தும் இறவாதவனேயாவ னென்பதாம். 'பைந்தார்' என்றவிடத்து, பசுமை-புதுமைமேலது. பத்தினி - பதிக்கு [கணவனுக்கு] அக்கினிகாரியத்தில் உதவும் மனைவி. செந்தாள்வஞ்சி-அன்மொழித்தொகைப் பன்மொழித்தொடர்; அடையுபித்த உவமவாகுபெயருமாம்; ஒல்கியொசியுந்தன்மையில் மாதர்க்கு வஞ்சிக்கொடி உவமை. "சீர்த்தி மிகுபுகழ்" என்பது, தொல்காப்பியம். (சஅ)

சடு. அறமன்னனுடனெம்பியன்பிலை
டுறவுன்னுவுயிரொன்றவோவினன்
பெறவொண்ணுதலொர்பெற்றிபெற்றவற்
கிறவென்னுமினின்பமியாவதோ.

(இ - ள்.) அறம்அன்னனுடன் - தருமம்போன்றவனுகிய இராமபிரானுடனே, எம்பி-எனது தம்பியான ஜடாயு, அன்பிலை டுறவு

உன்னு-அன்போடு உறவுகொண்டாடி, உயிர் ஒன்ற ஓவினன் - (அவன் நிறத்தில்) தனது உயிரையும் மனப்பூவமாக விட்டான்; பெற ஒண்ணுதது ஓர் பெற்றிபெற்றவற்கு-(எவராலும்) பெறமுடியாததாகிய ஒப்பற்ற பேற்றை யடைந்தவனுன அந்த ஜடாயுவுக்கு, இறவு என் ஆம்-மரணமென்பதுதான் என்ன கஷ்டத்தைத்தரும்? இதின் இன்பம் யாவதோ-இப்பேற்றைக்காட்டிலுஞ் சிறந்த இன்பந்தருவதுதான் வேறுயாதோ? [ஒன்றுமில்லை]; (எ - று.)

இராமபிரான்நிறத்தில் உயிரைக்கொடுக்க நேர்ந்த இந்தப்பாக்கியத்துக்குமுன், மரணமென்பது சிறிதும் கஷ்டத்தைத் தரவல்ல தன்றென்பதாம். ஜடாயுவின் மரணத்தில் இராமபிரான்நிறத்து உதவுதலாகிய நன்மையைக்கண்டு அதனைவிரும்பியது - வேண்டலணியின் பாற்பாடும்: இது, வடமொழியில் அநுஜ்ஞாலங்கார மெனப்படும்: குற்றமுள்ள ஒன்றில் விளைகின்ற நன்மையைக் கருதி அதனை வேண்டுதல், இவ்வணியின் இலக்கணம். தருமமே ஒருவடிவெடுத்தாற்போன் றிருத்தலால், இராமனை 'அறமன்னன்' என்றுன். ஜடாயு தசரதசக்கரவர்த்திக்குப் பல உதவிகள் செய்து அவனது உயிர்த்தோழனுகி அவனினும் வயது முதிர்ந்தவனுகிய தான், அசசக்கரவர்த்திக்குத் தமையன்முறையிலிருந்து அவனது புதல்வராகிய ராமலக்ஷ்மணர் காட்டில்வந்தபோது அவர்களிடத்திற் புத்ரவாதஸல்யமகொண்டிருந்தன னென்பதுபற்றி 'அன்போடுறவுன்ன' என்றார்.

'எம்பியன்பினுல்,' 'உறமன்னுருயிர்,' 'உறவெண்ணுவுயிர்,' 'பெற வெண்ணுதது,' 'பேறுபெற்றவற்கு,' 'இறவென்னேவதினின்பம்யாவதோ' என்று பாடபேதங்கள். (சஞ)

[சம்பாதி ஜடாயுவுக்காக நீர்க்கடன்கழித்தபின்பு, வாநரரிடத்து ஒன்றுகூறத் தொடங்துதல்.]

சசு. என்றென்றேங்கியிரங்கியின்புனல்
சென்றங்காடுதல்செய்துதீர்ந்தபின்
வன்றிண்டோள்வலிமாறிலாதவன்
றுன்றுந்தாரவர்க்கின்னசொல்லினன்.

(இ - ள்.)என்று என்று ஏங்கி இரங்கி-என்று பலவகையாக ஏக்கங் கொண்டு புலம்பி, இன் புனல் சென்று அங்கு ஆடுதல் செய்து தீர்ந்தபின்-இனியநீருள்ள இடத்திற்குச் சென்று அதில்நீராடுதல் முதலியன செய்து முடித்தபிறகு,—வல் திண் தோள் வலி மாறு இலாதவன்-மிக்க வலியபுஜபலத்தில் ஒப்பில்லாதவனுகிய சம்பாதி, துன்றும் தாரவர்க்கு இன்ன சொல்லினன் - நெருங்கிய மாலையைத் தரித்த வானரர்களை நோக்கி இவ்வார்த்தைகளைக கூறலானன்; (எ-று.)—அவற்றை,அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

சம்பாதி ஒப்பற்ற வலிமையுடையா னென்றற்கு, 'தோள்வலிமாறிலாதவன்' என்றார்: தோள்-சிறகுகளுக்கு இலக்கணையுமாம். நீராடுதலைக்கூறியது-இறந்தோர்க்குச்செய்யுங் கிரியைகட்கெல்லாம் உபலட்சணம். தாரவர்-இரண்டுவெள்ளம் சேனையையுடைய வானரத்தலைவ ரெனினுமாம். தார்-மாலையும், சேனையும்.

'ஆடுதல்செய்துதீர்ந்தன' என்றும் பாடம். (சசு)

[சம்பாதி வாநரர்களைக் கொண்டாடுதல்.]

சுஎ. வாழ்வித்தீரெனைமைநதர்வந்துநீ
ராழ்வித்தீரலிர்துன்பவாழிவாய்
கேள்வித்தீவினைகீறினீரிருள்
போழ்வித்தீருரைபொய்யினீங்கினீர்.

இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்.

(இ-ள்.) கேள்வி தீ வினை கீறினீர்-(பெரியோர்களிடத்துக்) கேட்டறிந்ததனாற் பாவசெயலை யொழித்தவர்களும், பொய் உரையின் நீங்கினீர் - பொய்பேசுதலினின்று நீங்கினவர்களு மாகிய, மைந்தர்-வீரர்களே! நீர்-, வந்து-இங்குவந்து, எனை வாழ்வித்தீர்-என்னை நல்வாழ்வுடையச்செய்தீர்கள், துன்பம் ஆழிவாய் ஆழவித்தீர அலிர்-(தம்பியின் மரண சமாசாரத்தைச்சொல்லி அதனால் என்னைத்) துயர்க்கடலுள் மூழ்குவித்தீரல்லீர்: இருள்போழ்வித்தீர்-(எனது) துன்பத்தைப் போக்கினீர்.

நல்லறிவுடையவர்களும் பொய்யில்லாதவர்களுமாய் இங்குவந்த நீங்கள் இராமகாரியத்தின்பொருட்டு எனது தம்பி உயிர்துறந்தனனென்று தெரிவித்ததனால், நீங்கள் தம்பியின் மரணத்தைக் கூறநேர்ந்ததைக்குறித்துக் கவலவேண்டா; அவன் இவ்வாறு பேறுபெற்றதை நினைந்து எனக்குச சந்தோஷமேயாயிற் றென்றன னென்க. சூரியகிரணங்களின் வெப்பம் தாக்குதலால் தனதுசிறகுகள் கரிந்தொழியவே, சம்பாதி, மகேந்திரமலையில் விழுந்து அங்குவசித்திருந்த ஒருமுனிவரைச சரணமடைய, அவர் தமது தவமகிமையால் எதிர்காலவரலாற்றை யுணர்ந்து பின்பு 'இராமதூதர்களாக இங்குவரும் வானரர்கள் இராமநாமோசசாரணஞ் செய்தால் உனக்கு முன்போலச சிறகுகள்முளைத்திடும்' என்று தனக்குவரமளித்திருந்ததைநினைத்து, இறகுமுளைக்குங் காலம் தனக்குக்குறுகியதுபற்றி, 'எனைவாழ்வித்தீர்' என்றும, 'இருள் போழ்வித்தீர்' என்றும் மகிழ்ந்துகூறின னென்க. மைந்தர் - அண்மைவிளி; ஆதலின், இயல்பு. இருள்-துன்பத்திற்கு, இலக்கணை. 'இருள் போழ்வித்தீர்' என்றது-தெளிவுபற்றிய காலவழுவமைதி. (சுஎ)

[சம்பாதி தனக்குச் சிறதுழைத்தற்காக ராமநாமோச்சாரணஞ் செய்யுமாறு வாநரர்களை வேண்டுதல்.]

சுஅ. எல்லீரும்மவ்விராமநாமமே
சொல்லீர்சொல்லவெனக்கொர்சோர்விலா
நல்லீரப்பயனண்ணுநல்லசொல்
வல்லீர்வாய்மைவளர்க்குமாண்பினீர்.

(இ-ள்.) நல்ல சொல் வல்லீர் - இன்சொற்கூறுகின்றவரும், வாய்மை வளர்க்கும் மாண்பினீர்-சத்தியத்தைவளரச்செய்யும் பெருமை பெற்றவருமாகிய வாநரவீரர்களே!—எல்லீரும்-நீங்களெல்லோரும், அ இராமநாமமே சொல்லீர்-அந்த 'ராம' என்னுந் திருநாமத்தையே வாய்விட்டுச் சொல்லுங்கள்; சொல்ல-அவ்வாறு (என்னருகிற்) சொல்வதனால், எனக்கு—, ஓர்சோர்வு இலா நல் ஈரம் பயன் நண்ணும்-சிறிதும்

தாழ்வில்லாத சிறந்த ஒப்பற்ற (அப்பிரானது) கருணையின் பயனைது கைகூடும் [சிறகு முன்போலவே தழைக்கும்]; (எ-று.)—'என்ருன்' என்று அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

'சொல்லீரென்சிறைதோன்றும்,' 'பயனண்ண' எனவும் பாடம்.

[வாநரர் ராமநாமோச்சாரணஞ்செய்ய, சம்பாதிக்குச் சிறதுழைத்துத் தழைத்தல்.]

சசு. என்ருனன்னதுகாண்டும்யாமெனு
நின்ருர்நின்றுழிநீலமேனியா
னன்ருநாமநவின்றுநல்கினர்
வன்றோளான்சிறைவானந்தாயவே.

(இ - ள்.) என்ருன்-என்று (சம்பாதி) கூறினன்; (அதுகேட்ட வாநரர்கள்), யாம் அன்னது காண்டும் எனு-'நாம் அதனை ஆராய்ந்து பாப்போம்' என்று, நின்ருர் நின்ற உழி-நின்றவர் நின்றபடியே, நீலம் மேனியான் நன்று ஆம் நாமம் நவின்று நல்கினர் - நீலநிறமான அவ விராமபிரானது நன்மையைத் தரத்தக்கதாகிய திருநாமத்தைச் சொல் லியதவினர்கள்; (அதனல்), வல் தோளான் சிறை வானம் தாயவே-வலியதோள்களையுடைய சம்பாதியினது சிறகுகள் (மூளைத்து) ஆகாய மளாவி வளர்ந்தன; (எ-று.)

பகவந்நாமத்தை உச்சரித்தற்கு அங்கமொன்றும் வேண்டா வென் பதைக் குறிப்பித்தற்கு, 'நின்ருர்நின்றுழி' என்ருர்.

'என்ருனங்கது,' 'வானந்தாயவே' என்று பிரதிபேதம். (சசு)

[சம்பாதியின் அப்பொழுதைய தோற்றம்.]

ரூ0. சிறைபெற்ருன்றிகழ்கின்றமேனியான்
முறைபெற்ருமுலகெங்குமூடினு
னிறைபெற்ருவிநெருப்புயிர்க்கும்வா
ளுறைபெற்ருலெனலாமுறுப்பினுன்.

(இ-ள்.) திகழகின்ற மேனியான்-விளங்குகின்ற உடம்பையுடைய வனுகிய சமபாதி,—முறைபெற்று ஆம் உலகு எங்கும் மூடினுன் நிறை பெற்று-வரிசையாகப் பொருந்திய உலகங்களெல்லாவற்றிலும் வியா பித்து நிற்பவனுன திருமாலின் திருவவதாரமாகிய இராமபிரானது நிரம்பிய அருளைப்பெற்றதனல், சிறை பெற்ருன்-(தனது கரிந்துபோன) சிறகுகள் (முன்போல) மூளைக்கப்பெற்று, ஆவி நெருப்பு உயிர்க்கும் வாள் உறை பெற்ருல் எனல் ஆம் உறுப்பினுன் - புகையோகூடிய நெருப்பைக் கக்குகின்ற [மிகவும் உக்கிரமான] வாளாயுதம் உறையைப் பெற்ருற்போலுமென்று சொல்லத்தக்க உடம்பை யுடையவனுனன்.

அவனது விளங்குகின்ற உடம்பு - வாளாயுதத்திற்கும், அவ்வுடம் பைச் சுற்றிலும் நன்ருகமூளைத்த இறகு-அவவாளைச்சூழும் உறைக்கும் உவமையாம். இராமநாமோச்சாரணத்தாற் கரிந்துபோனசிறகுகள் மூளைத்தனவாதலின், 'உலகெங்குமூடினுன்,நிறைபெற்றுச் சிறைபெற் ருன்' எனப்பட்டது. உறுப்பு-உடம்புக்கு, இலக்கணை. இனி, திகழ்

கின்றமேனியானுகிய சம்பாதி சிறைபெற்றவனுய், ஆவிசிறைபெற்று-தனதுஆத்மா [மனம்] திருத்தியடையப்பெற்று, முறைபெற்றுஆம்-ஒரு மரியாதையில் நிற்கின்ற, உலகெங்கும்-இவ்வுலகமுழுவதிலும், (மூலத்த அச்சிறகால்) மூடினுன் என்றும் உரைக்கலாம்.

'சுடர்கின்றமேனியான்,' 'முறைபெற்ருன்,' 'சிறைபொற்ருரை நெருப்புயிர்க்கும்' 'உறைபெற்ருமெனலாம்' என்பன பாடாந்தரங்கள்.

[அதுகண்டு வாநரர் யாவரும் வியந்து இராமபிரானே வாழ்த்துதல்.]

ருக. தெருண்டான்மெய்ப்பெயர்செப்பலோடும்வந்
தருண்டானுற்றபயத்தையுன்னினுர்
மருண்டார்வானவர்கோனே வாழ்த்தினுர்
வெருண்டார்சிந்தைவியந்துவிம்முவார்.

(இ-ள்.) (அதுகண்ட வாநரர்கள்),—தெருண்டான் மெய் பெயர் செப்பலோடும் - (அறிஞராற் பரம்பொருளென்று) தெளியப்பட்டவனுகிய இராமபிரானது உண்மைத்திருநாமத்தை(த்தாம்)உச்சரித்தமாத்திரத்தில், உருண்டுவந்தான் உற்ற பயத்தை - (முன்புஇறகில்லாமையால்) உருண்டுவந்தவனுகிய சம்பாதியடைந்த நன்மையை, உன்னினுர்-(மனத்திற்)கருதி,மருண்டார்-திகைப்புக்கொண்டவரும், வெருண்டார்-அச்சமடைந்தவரும், வியந்து சிந்தை விம்முவார்-ஆசசரியமடைந்து மனம்பூரிப்பவர்களுமாகி,—வானவர்கோனே வாழ்த்தினுர் - தேவர்கட்கெல்லாந் தலைவனுன திருமாலின் திருவவதாரமூர்த்தியாகிய அவ்விராமபிரானே வாழ்த்தித் துதித்தார்கள்; (எ - று)

சம்பாதி இறகில்லாமல் உருண்டுவந்ததையும் இராமநாமோசசாரணத்தினுற் சிறகுகள் மூளைதுதத்தழைத்ததையும் கண்கூடாகக்கண்ட வாநரர்கள், அச்சமும் வியப்பும் மருட்சியும் ஒருங்குகேகொண்டவர்களாய், தனதுநாமோசசாரணமாத்திரத்தினுற் பெரும்பயனை விளைக்கும் மகிமைவாய்ந்த இராமபிரானே வாழ்த்தின ரென்பதாம் மெய்ப்பெயர்-தன்னையுச்சரித்தார்க்குப் பயன்விளைத்தலில் தவருத திருநாமம்; தாரகமந்திரம். தனது திருநாமததால் வேண்டிய பயனை விளைத்தது கொண்டு 'இராமபிரான் மானுடனல்லன்; தேவாதிதேவனுன முழுமுதற்கடவுளே' என்ற தத்துவஞானத்தைப்பெற்ற வாநரர்கள், அத்தேவாதிதேவனுடைய முற்றுணர்வு, வரம்பிலாற்றல் யாவரையும் பாதுகாக்குந்திறம், அழியாவியல்புமுதலிய குணங்களைக் கருதி அவற்றில் ஈடுபட்டு ஆழ்ந்து பக்திபரவசராகி, அதனுல் தம்நிலையையும் எம்பெருமான் நிலையையும் மறந்து, 'காலாதீதமான வைகுண்டத்திலே யிருக்கிற இந்த அரும்பொருள் காலம்நடையாடப்பெற்ற இவ்வுலகத்திலே கண்ணுக்கு இலக்காகுதலால், திருவஷ்டிதேவஷங்காரணமாக 'இதற்குஎன்ன நீங்குவருமோ!' என்று தமக்கு உள்ள ஆதராதிசயத்தால் அநாவசியமாக அதிக பயசங்கைகொண்டு 'இத்திருமேனிக்கு எவ்வாற்ருலும் ஒருகுறையும் வராதிருக்கவேணும்' என்று பொங்கும்பரிவினுல் வாழ்த்துவரராயினரென்க. வந்துஉருண்டான் - உருண்டுவந்தா னென்று விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது.

'உற்றபயத்தை' என்று பிரதிபேதம். (ருக)

[வாநரர் சம்பாதியின்முன்னேயவாலாற்றை விளைவு, அவன் கூறத்தொடங்குதல்.]

(உ). அன்ன வனக்கடி தஞ்ச லித்துமீ
முன்ன ளந்ற்றது மூற்று மோதெனச்
சொன்னர் சொற்றது சிந்தை தோய்வுறத்
தன்ன லுற்றது தான்வி ளம்புவான்.

(இ-ள்.) (வாநரவீரர்கள்),—அன்னவனே கடிது அஞ்சலித்து-அந்தச் சம்பாதியை விரைவாகக்கைகூப்பிவணங்கி, 'நீ—முன் நாள் உற்றது மூற்றும் ஒது-முன்காலத்து நடந்த வரலாறு முழுவதையும் கூறுவாய்,' எனச் சொன்னர் - என்றுவினவினர்கள்: சொற்றது சிந்தைதோய்வுற-(அவர்கள்) சொன்னசொல் தன்மனத்திற்படிந்ததனால்,—தான்-அந்தச் சம்பாதி, தன்னால் உற்றது விளம்புவான்-தன்னால் (தனக்கு) நேர்ந்ததை [இறகுதிந்ததன்காரணத்தை]க் கூறுவானாயினன்; (எ - று.)—அதனை, அடுத்த எட்டுக்கவிகளிற் காண்க.

சம்பாதியை வாநரர்கள் அஞ்சலித்தது-அவன் இராமநாமத்தின் மகிமையைத் தமக்குத் தெரிவித்தவனுதலாலும், இராமபிரானது திருவருளைப் பெற்றவனுதலாலும், மிகவும் வயதுமுதிர்ந்தவனுதலாலுமென்க. 'சொற்றது சிந்தைதோய்வுற' என்பதற்கு - தான்சொன்னது கேட்பவர் மனத்தில் நன்றாய்ப்பதியும்படி கூறலானெனினும் உரைக்கலாம். நீ உற்றது என இயைப்பினுமாம். (உ)

வேறு.

[இதுமுதல் எட்டுக்கவிகள் - ஒருதொடர். சம்பாதி வாநரர்களை நோக்கித்தமது முன்னேயவாலாறு கூறுதல்.]

(ரு). தாயெனத் தகைய நண்பீர் சம்பாதி சடாயு வென்பேஞ்
சேயொளிச் சிறைய வேகக் கழுகினுக் கரசு செய்வேம்
பாய்திரைப் பரவை ஞாலம் படரிரு ளகற்றும் பண்பி
னுய்கதிர்க் கடவுட் டேரூ ரருணனுக் கமைந்த மைந்தர்.

(இ-ள்.) (சம்பாதி வாநரர்களைநோக்கிக் கூறுவான்);—தாய் எனத்தகையநண்பீர்-(அன்பினால்) தாயென்று சொல்லத்தக்க நண்பர்களே! பாய் திரைபரவை ஞாலம் படர் இருள் அகற்றும் பண்பின் ஆய் கதிர் கடவுள் தேர் ஊர் அருணனுக்கு அமைந்த மைந்தர் - வீசுகின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தில் நிறைந்துள்ள இருட்டையொழிக்கும் தன்மையையுடைய சிறந்த கிரணங்களோடுகூடிய சூரியபகவானது தேரை நடத்துகின்ற சாரதியான அருணனுக்குப் பிறந்த புத்திரர்களாகிய, சம்பாதி சடாயு என்பேம்-சம்பாதி ஜடாயு என்ற நாங்களிருவரும், சேய் ஒளிசிறைய வேகம் கழுகினுக்கு அரசு செய்வேம்-அழகிய நிறைத்தைக்கொண்ட சிறகுகளையுடைய வேகமாகப் பறக்கின்ற கழுகுகட்கு அரசராவோம்; (எ-று.)

சூரியசாரதியாகியஅருணனுக்குப்புதல்வராய்பிறந்தசம்பாதிஜடாயு வென்ற நாங்கள் வானத்தில் உயர்ந்து பறக்கும்தன்மையுள்ள கழுகு

கட்கு எல்லாம் அரசராயிருந்தோ மென்றவாறு. சூரியசாந்தியாகிய அருண னென்பவன் - காசியபமுனிவரது மனைவியாகிய விநதையின் வயிற்றிற் பிறந்தவன்; கருடனுக்குத்தமையன்; இடைக்குக்கீழ் உறுப்பில்லாதவன். "தாயொக்கும் அன்பின்" என்றபடி தாய் அன்பிற்பிறத்தலால், 'தாயெனத் தகைய கண்ணீர்' எனப்பட்டது.

'தாயெனத் தழுவு கண்ணீர்,' 'சேயொளிச்சேண்சேணெக்கின்' என்று பிரதிபேதம்.

இதுமுதல் இப்படலம் முடியுமளவும் பதினொன்குகவிகள் - இப்படலத் தின் பதினொன்காங் கவிபோன்ற அறுசீராசிரிய விருத்தங்கள். (நிரு)

நிரு. ஆயுயரும்பர்நாடுகாண்டுமென்றறிவுதள்ளி
மீயுயர்விசும்பினூடுமேக்குறச்செல்லுமவேலை
காய்கதிர்க்கடவுட்டேரைக்கண்ணுற்றுங்கண்ணுறாமுன்
றீயையுந்தீக்குந்தெய்வச்செங்கதிர்ச்செல்வன்சீறி.

(இ-ன்) (நாங்களிருவரும்), அ உயர் உம்பர் நாடு காண்டும் என்று அறிவு தள்ளி - அந்த வானத்திலுள்ள தேவலோகத்தைக் காணவேண்டு மென்ற அறிவைச் செலுத்தி, மீ உயர் விசும்பினூடு மேக்கு உற செல்லும் வேலை - மிகவும்மேலே ஆகாயத்திலே பறந்து செல்லும்போது, காய் கதிர் கடவுன் தேரை கண்ணுற்றும் கண்ணுறு முன் - உஷ்ணகிரணனான சூரிய பகவானது தேரைக்கண்டதும் காணுதலுமாயிருக்கும்போது,—தீயையும் தீக் கும் தெய்வம் செங்கதிர் செல்வன - நெருப்பையும தவிக்கச்செய்கின்ற தெய் வத்தன்மையுள்ள சிவந்த கிரணங்களையே செல்வமாகக்கொண்ட சூரியன், சீறி - கோபித்தலால்,—(எ-று)—'அழலுமுடுக்குமேலை' என அடுத்த கவி யோடு தொடரும்.

நாங்களிருவரும் மிகவும் உயரப்பறக்கும வல்லமை பெற்றிருந்தமையால் முன்னொருகாலத்தில் தேவலோகத்தைக் காணவேண்டுமென்று ஒரெண் ணந்தோன்றி வானத்திற்பறந்து சூரியமண்டலத்தைக் குறுகிச் சூரிய பக வானைக் காணும் நிலைமையி லிருக்கையில, மனுஷ்யலோகத்தவராகிய நாங்கள் அங்கு வந்ததனால் அக்கடவுள் எங்களைச் சினந்தனனென்பதாம். அ+உயர்= ஆயுயர்: "தூக்கிற் சுட்டீளின யகாமுந் தோன்றுதல் நெறி." உம்பர் - மேலி டம். மீயுயர்-ஒருபொருட்பன்மொழி. தீயையும் தீக்கும் தெய்வச் செங்கதிர்ச் செல்வன் - வெம்மையின் மிகுதியைவிளக்கும் உயர்வுநவிற்சி. ஈற்றடி-முற்றுமோனை. கண்ணுற்றும் என்பதைத் தண்மைப்பன்மை முற்றாகக் கொண்டு, பார்த்தோமெனவும் பொருள்கொள்ளலாம்.

'கண்ணுற்றுங்கண்ணுறுமுன,' தீயையுந்தீக்குஞ் செல்லற்செங்கதிர்ச் செல்வன்' என்று பாடாந்தரங்கள்.

நிரு. முக்கியவெம்பிமேனிமுருங்கழன்முடிகும்வேலை
யெந்தைதீகாத்தியென்றன்யானிருஞ்சிறையுமேன்கி
வந்தனென்மறைத்தலோடுமற்றவன்மறையப்போனன்
வெந்துமெய்யிறகுதீர்ந்துவிழுந்தனென்விளிகிலாதேன்.

(இ - ள்.) மூர்ந்திய எம்பிமேனி முருங்கு அழல் முகேும்வேலை - (என் னிஞும்) உயரமாகப்பறந்துசென்ற எனது தம்பியாகிய ஜடாயுவின் உடம்பை எரிக்குந்தன்மையுள்ள சூரியகிரணக்கினியானது உக்கிரமாகத் தபிக்குங் காலத்தில், (அந்தஜடாயு என்னேநோக்கி), எந்தை நீ காத்தி என்ருன் - 'எந் தையே! (என்னை) நீ காப்பாற்றுவாய்' என்று வேண்டினுன்; (அவ்வாறு வேண்டவே அவனுக்கு மேலே சென்று), யான்—, இருஞ்சிறையும் வந்தி வந்தனென் மறைத்தலோடும் - எனதுபெரிய (இரண்டு) இறகுகளையும் பரப் பிக்கொண்டு வந்து (அவன்மேல் வெயில் தாக்காதபடி) மறைக்கவே, அவன் மறைய போனன் - அந்த ஜடாயு (எனது சிறகின் நிழலில்) மறைவாக வந் தான்; வினிகிலாதேன் - நான் (அப்போதே) இறக்கமாட்டாதவனும் மெய் வெந்து இறகு தீந்து விழுந்தனென் - உடம்புவெந்துபோய் இறகுகள் கருகித் தரையில் விழுந்தேன்; (எ - று.)

என்னிலும் உயரமாகப் பறந்துசென்ற ஜடாயுவானவன் சூரியபகவான் கோபித்துச் செலுத்திய உஷ்ணத்தைத் தாங்கமாட்டாமல்தன்னைக் காப்பாற்று மாறு என்னை வேண்டிக்கொள்ள, அதனல் அவன் என் சிறகின் நிழலில் வருமாறு அவனுக்கு மேலே யான்பறந்து செல்ல, அவனும் அவ்வாறே வந்து தப்பினன்; யான் அந்தச் சூரியனது வெப்பத்தைப் பொறுக்க மாட்டாமல் இறகு தீந்து கீழேவிழுந்தேனென்பதாம். 'வினிகிலாதேன' என்றது - தனது தம்பியாகிய ஜடாயு இறந்தனனே என்ற துயரத்தினுற் கூறிய வார்த்தை யெனினுமாம்: 'தமையன் தந்தையோடொப்பான்' என்றபடி ஜடாயுவுக்குச் சம்பாதி தந்தைபோலப் பாராட்டத்தக்கவனுதலால், 'எந்தை' என விளிக் கப்பட்டான்.

'முருங்கழன் முருக்கும்வேலை,' 'என்னிருஞ்சிறையு மேந்தி,' 'வந்த னென் மறைத்தலோடும்,' 'வினிந்திலாதேன்' எனறும் பிரதிபேதம். (இடு)

நிகூ. மண்ணிடைவிழுந்தவென்னேவானிடைவயங்குவள்ளல்
கண்ணிடைநோக்கியுற்றகருணேயன்சனகன்காதற
பெண்ணிடையீட்டின்வந்தவானரிராமன்பேரை
யெண்ணிடையுற்றகாலத்திறகுபெற்றெழுதியென்ருன்.

(இ - ள்.) மண்ணிடை விழுந்த என்னை - அவ்வாறு தரையில் விழுந்த என்னை, வானிடை வயங்கு வள்ளல் - வானத்தில் விளங்குகின்ற சூரிய பக வான், கண்ணிடை நோக்கி - கண்ணினுற் பார்த்து, உற்ற கருணேயன் - மிக்க அருளேயுடையவனும்,—சனகன் காதல பெண் இடையீட்டின் வந்த வான ரர் இராமன் பேரை எண்ணிடை உற்றகாலத்து இறகு பெற்று எழுதி - ஜனகமகாராஜனது அன்பிற்குரிய புதல்வியாகிய சீதை (இராமபிரானே விட்டுப்) பிரிதலினல் (அவளேத் தேடிய பொருட்டு) இங்கே வரப்போகின்ற வானரர்கள் (உன்னேக்கண்டு இராமபிரான் திருநாமத்தை மனத்தினுற் கருதி உச்சரிக்குங் காலத்தில் முன்போலவே சிறகுகள முளேக்கப்பெற்றுப் பறந்து செல்வாய்,' என்ருன் - என்று அருக்கிரகஞ் செய்தான்; (எ - று.)

தனது உஷ்ண கிரணத்தால் இறகுகளிழந்து கீழே விழுந்திட்ட என் னேக்கண்டு, சூரியபகவான், இரக்கங்கொண்டு, இனி ஒருகாலத்தில் இராம

பிரானது மனைவியாகிய சீதாபிராட்டியைத் தேடுதற்காக ராமதூதர்களாகிய வாநரர்கள் இங்குவந்து உனது வேண்டுகோளின்படியே ராமராமோச்சார ணஞ்செய்ய, இப்போது இழந்த சிறகுகள் மீண்டுந் தளிர்க்கப்பெற் றெழுவா யென்ற அநுக்கிரகஞ்செய்தன னெனபதாம். தன்னிடத்து அருளைச் செலுத்தியதனால், சூரியபகவானைச் சம்பாதி 'வள்ளல்' எனப்புகழ்ந்தான்.

'வானிடைவழங்கும் வள்ளல்,' 'இறகு பெற்றெழுக' எனறும்பாடம்.

இ. தாழ்ந்ததமாதவத்துலோகசாரங்களனுறையுஞ்சாரல்
வீழ்ந்தனென்சிறைகடையவெவ்வுயிர்த்துளமுமெய்யும்
போழ்ந்தனதுண்பமூன்றவுயிர்ப்பொறைபோற்றகில்லா
தாழ்ந்தனெனுழ்ந்தவென்னைய நுநதவனெ திர்ந்துதேற்றி.

(இ - ள்.) (நான்)—சிறைகள் தீய-எனது இறகுகள் தீந்துவிட்டதனால், வெவ உயிர்த்து - வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுகொண்டு, தாழ்ந்த மா தவத்து உலோகசாரங்கள உறையும சாரல் வீழ்ந்தனென - மிக்க பெருக் தவத்தையுடைய லோகஸாரகனென்னும் முனிவன வசிக்கின்ற மலைச்சார லிலே வந்து விழுந்தேன்; உளமும மெயும் போழ்ந்தன - (விழுந்த அதிர்ச்சி யால் எனது) மனமும் உடம்பும் கலங்கிப் பிளவுபட்டன; துனபம் ஊன்ற உயிர்பொறை போறறகில்லாது - துன்பம் மிக்கதனால் உயிராகிய பாரத்தை யும் பொறுக்கமுடியாமல் [உயிரோடிருக்க மனமிலலாமல்], ஆழ்ந்தனென் - (உயிரைவிடவேணடுமெனற கருத்தை) உறுதியாகக கொணடேன; ஆழ்ந்த என்னை அவவாறு (பிராணதியாகஞ்செய்யத்) தணிவுகொண்டிருந்த என்னை, அருந்தவன - (பிறர்களுச்செய்தற்கு) அரியதவதையுடையவனகிய அந்த லோகஸாரகமுனிவன, எதிர்ந்து - எதிரிலே வந்து, தேறறி - சமாதானஞ் சொல்லி,—(எ - று.)—மேல் நிகை - ஆங்கவியிலுள்ள 'அளிததனன' எனற வினைமுற்றோடு தொடரும்.

நான் முற்கூறியவாறு கீழ்விழுகையில, லோகசாரங்கமுனிவனுடைய ஆச்சிரமத்தினருகே விழுந்து, அவவதிரச்சியினலுண்டான துன்பமிகுதியி னல் சூரியபகவான் அனுக்கிரகித்திருக்கவும உயிர்விடதணிநதேதனால, அக காலததில் அந்த முனிவன எதிரவந்து எனகுத தேறுதல கூறினனெனப தாம். லோகசாரமுனிவன வந்துதேறறி அநுக்கிரகஞ் செய்ததாக முதலால் கூறும். தாழ்ந்ததவம் - கருததானறிச் செயத தவம. உயிரப்பொறை - உயி ரைப் பொறப்பது; உடலெனபாரு முளர்.

இதுமுதல் மூன்று கவிகள் - சில பிரதிகளில் இல்லை. (இஎ)

ஈ. கற்றிலர்போலவுள்ளக்களிப்பினுலமர்காப்பூ
டுற்றிடக்கருதிமீப்போயாதபததனதுமேனி
முறறமுன்முருங்கமண்ணீமுயகுகினியினெனின்னுண்
மற்றுநின்னுயிரையோமபாதிகழ்வதுமாலெதனறுல.

(இ - ள்.) கற்றிலர்போல - படிததறியாத மூடர்போல, உன்னம் களிப்பி னல் - மனத்தில் தோன்றிய உற்சாகத்தினுல், அமரர் காப்பூடு உற்றிட கருதி - தேவர்களது பாதிகாப்புள்ள விடத்திற் [தேவலோகத்திற] போய்ச்

சேரநினைத்து, மீ போய் - மேலே பறந்து சென்று, உனதுமேனி ஆதபத்தி முற்று அழல் மூருங்க - உனது உடம்பு சூரிய கிரணத்தினது கிரம்பிய வெப் பத்தால் அழிய, மண்ணே முயங்கினை - நீ (மீண்டு) பூமியில் வந்து விழுந்தாய்; இனி - இவ்வாறுநடந்தபிறகு, மற்றும் சில் நாள் நின் உயிரை ஒம்பாது இகழ்வது என - இனனுஞ்சிலகாலம் [ராமதூதர் இங்கு வருகிறவ்ரையிலும்] உனது உயிரைக் காப்பாறறமாட்டாமல வெறுப்புடனே விட்டிடதுணிவது எனனகாரணம்? மாலேத்து அன்று - (அவ்வாறு உயிரைவிடுவது) நல்லொழுக் கமுமாகாது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நீ இறகை இழந்து பெருந்துன்பமடைந்ததற்குக் காரணம் உனது பினழயேயா யிருகக, சூரியபகவான அநுக்கிரகித்ததனால் உனக்கு நற்காலம் வருவது நிச்சயமென்று தெரிந்திருந்தும் அந்நாள் வரையிலும் உயிரை வைத் திராமல் நீ தறகொலை செய்துகொள்ளதுணிவது பேதைமையாகுமேயன்றி, நல்லொழுக்கமாகாதென லோகஸாரங்கமுனிவன எனக்கு நல்லறிவு கூறின னென்பதாம். தற்கொலை செய்பவர்கட்கு அந்ததாமிஸ்ரம் என்ற நரகம் விளையுமென்று தாமசாஸ்திரங்கள் கூறி யிருத்தலால், அதனை 'மாலேத்தன்று' என்று மறுத்தனன். காப்பு - காவலியுடைய இடதிற்கு, ஆகுபெயர். ஆத பம் - நன்ருகத்தபிப்பது என வெயிலுகருக் காரணக்குறி. (இஅ)

நிகூ. களித்தவர்கெடுதறிண்ணஞ்சனகியைக்கபடன்வெளவி
யொளித்தவாய்துருவியுறறவானரிராமநாமம்
விளித்திடச்சிறைவநதோங்குமவெவ்வுயிர்த்தயாலென்றன்
றளித்தனனதனுலாவியாற்றினேனுறறன்மொய்ம்பீர்.

(இ - ள்.) ஆற்றல் மொய்ம்பீர் - மிகக வலிமையையுடைய வாநரர்களே! 'களித்தவர் கெடுதல் திண்ணம் - செருகருக் கொண்டவர் அழிவது நிச்சயம்: (நீ வானுலகத்திற்செல்லுமாறு களிப்புக்கொண்டு மேலே பறந்து சென்றத னால் இங்கிலையையடைந்தாய்); கபடன - வஞ்சனைக்குணமுடைய இராவ ணன், சனகியை வெளவி ஒளித்த - சீதாபிராட்டியைக கவர்ந்து மறைத்து வைத்த, வாய் - இடததை, துருவி - தேடிகொணடு, உற்ற-வரப்பேர்கின்ற, வாநரர்—, இராமன நாமம விளித்திட - இராமநாமததைச் சொன்னமாத்திரத் தில், சிறைவந்து ஓங்கும் - (சூரியபகவான நுககிரகித்ததபடியே) உனது இறகு கள் மூளைதது வளரும; வெவ உயிரத்து அயரல் - வெப்பமாகப் பெருமூச்சு விட்டு வருத்தாதே,' எனறு—, அன்ற-(நான் உயிர்விடத்துணிந்த) அக்காலத் தில், அளித்தனன-(அம்முனிவன) கருணைகொண்டு கூறினன; அதனால்—, ஆவி ஆற்றினேன - (இதுவரையில்) உயிரை வைத்திருகதேன. (எ-று).

அம்முனிவன எனனைத் தேற்றியதனால், உங்கள் வருகையை எதிர் நோக்கி இதுவரையில் நான உயிரைவத்திருந்தேனென்பதாம். (இக)

அன்றியுமலருளைவருமயனேநிர்முனிவன்வாய்மை
நனறிகொளீசற்காண்பானுகலும்வினையுற்ற
தொன்றெழிவுறுமற்கேட்டதியோகத்தினுணர்ச்சிபேணிப்
பொன்றுதலொழிமின்யானேபுகல்வதுகேண்மினென்ருன்.

தசரதராமன்றேவர்தவத்தினுற்றுய்சொற்றுங்கிக்
கசரததுரகமின்றிக்கானிடையிறுத்தகாலை
வசைதருமிலங்கைவேந்தன்வெளவிய திருவைநாடித்
திசைதிரிகவிகளுற்றுற்சிறகுபெற்றெழுகியென்ன.

இவரிரண்டு செய்யுள்களும் சில அச்சுப்பிரதிகளிலும், எமக்குக்கிடைத்த பல ஏட்டுப் பிரதிகளிலும் காணப்படவில்லை; இவை இச்சந்தர்ப்பத்திற்கும் ஆவசியகமானவை யல்ல; நன்கு பொருந்தாதனவாயும் இருக்கின்றன; இவற்றை வெள்ளிப்பாட்டென்பர்.

(இவற்றின் கருத்து:—மேலும் பிரமதேவனைப்போன்ற முனிவரிலொருவன் சத்யஸங்கல்பத்வம் முதலிய நற்குணங்களோடுகூடிய கடவுளை ஸாக்ஷாத்கரிக்கும்பொருட்டுத் தவஞ்செயபுமாறி இருக்குங்காலத்தில், தீவினையுடைய நான் அடைந்ததை முழுவதையும் என்னைக்கேட்டுத் தெரிந்துகொண்டு தனது ஞானதிருஷ்டியால் இனி வரப்போவதையறிந்து, அம்முனிவன் 'யான் சொல்வதைக்கேள்; நீ இறக்கவேண்டா; வனவாசஞ்செய்யும் இராமபிரானது மனைவியை இராவணன கவர்ந்துசெல்ல, அவளைத் தேடுமபொருட்டுப் பல திசைகளிலுஞ் செல்கின்ற வானரர்கள் இங்கு வருமபோது தீர்த்த இறகுகளைப் பெற்றெழுவாய்' எனறான எனபதாம).

சுஎ. எம்பியுமிடரின்வீழ்வானேயதுமமுக்கவஞ்சி
யம்பரததியங்குமியாணர்க்கழுகினுக்கரசனானை
னம்பிமீரீதெந்தன்மைநீரிவணடைந்தவாறை
யுமபருமுவக்கதக்கீருணாததுமினுனரவெனறான்.

(இ - ள்.) உம்பரும உவக்க தக்கீர் - தேவர்களும வியக்கத்தகு தொழிலையுடையவர்களாகிய, நம்பிமீர - சிறந்த வானரவீரர்களே! (எனக்கு நேர்ந்த வருத்தத்தை நோகி) இடரின் வீழ்வான - அனபத்தில் மூழ்கியவனுகிய, எம்பியும் - எனது தம்பியான ஜடாயுவும், எய்துமறுக்க அஞ்சி - (யான) எவியதைத தடுக்கப் பினவாங்கியவனாய் [எனது கட்டளைக்கு இசைந்து], அம்பரத்தி இயங்கும் யாணர் கழுகினுகு அரசன் ஆனை - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற வலிய கழுகுகளுக்கு அரசனுமானை; சுதி எம தன்மை - இதி தான் எமது வரலாறு; நீர் இவண் அடைந்த ஆறறை உளர உணர்த்துமின் - நீங்கள் இங்குவந்த வரலாற்றை (யான்) உணருமபடிசொல்வீராக, என்றான் - என்று கூறி முடித்தான். (சம்பாதி); (எ - று.)

• யாணர் - அழகுமாம். 'இடரின் வீழ்ந்தான்,' 'ஆணைக்கழுகினுக்கு,' 'நதென்றன்மை,' 'நடந்த வார்த்தை' என்று பிரதிபேதம். (சுஎ)

• [வானரர் சீதையைத் தேடிவந்த வரலாற்றைக்கூற சம்பாதி அவ்விஷ
• யத்தில் தனக்குத் தெரிந்ததைக் கூறத்தொடங்குதல்.]

சுஅ. என்றலுமிராமன்றண்ணீரியத்தினிறைஞ்சியெந்தாய்
புன்றொழிலரக்கன்மற்றைத்தேவியைக்கொண்டுபோந்தான்

றென்றிசையென்னவுன்னித்தேடிகாம்வந்துமென்றூர்
நன்றுநீர்வருந்தல்வேண்டாநானிதுநவில்வனென்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று (சம்பாதி) விஞ்ஞையவுடனே,—(வானரர்), இராமன்தன்னை எத்தினர் இறைஞ்சி - இராமபிரானைத் தரித்து(த் திக்கு நோக்கி) வணங்கி,—(சம்பாதியைநோக்கி), 'எம் தாய் - எமது தாய்போன்ற வனே! புல்தொழில் அரக்கன் - இழிதொழிலையுடைய ராக்ஷஸனுடைய இராவணன், தெனதிசை - தென்திசைவழியாக, தேவியைகொண்டு போந்தான் - (இராமபிரானது) மனைவியாகிய சீதாபிராட்டியைக் கொண்டு போனான், என்னை உன்னி-என்று நினைத்து, நாம் தேடிவந்தும் - யாங்கள் (அப்பிராட்டியைத்) தேடிக்கொண்டு (இங்கு) வந்துசேர்ந்தோம்', என்றூர் - என்று கூறினார்கள்; (அது கேட்ட சம்பாதி), 'நன்று - நல்லது: நீர் வருத்தல் வேண்டா- நீங்கள் வருந்தாதீர்கள்; நான இது நவில்வன - நான் இவ்விஷயத்தைப்பற்றிச் சிறிதுசொல்லுவேன்', எனறான - என்று (அவவாலாற்றைக்) கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

பிறர்மனைவியரைக்கவரும் தீக்குணமுடையவ னதலின், இராவணனை 'புன்தொழிலரக்கன்' என்றார். எதாய் - அண்மைவிளி; 'எந்தை' என்பதன் ஈறுதிரிந்தவிளியெனகொண்டு, எனது தந்தைபோல்பவனே எனினுமாம். மறை - அசை. வருமை - தனமைப்பண்மை யிறந்தகாலவினைமுற்று; 'தும்' விகுதி - இறந்தகாலங காட்டிற்று. (கக)

[இராவணன் சீதையைச் சிறையில் வைத்துள்ளதைச் சம்பாதி தெரிவித்தல்.]

கூஉ. பாகொன்றுகுதலையாளைப்பாதகவரக்கன்பற்றிப்
போகின்றபொழுதுகண்டேன்புக்கனனிலங்கைபுக்கு
வேகின்றவுளத்தாளைவெஞ்சிறையகத்துவைத்தா
னீங்குமின்காண்டிராங்கேயிருந்தனளிறையினும்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) பாகு ஒன்று குதலையாளை - சர்க்கரைப் பாகுபோன்ற [மிக இனிய] மழலைச்சொற்களை யுடையவளாகிய சீதையை, பாதகன் அரக்கன் பற்றி போகின்ற பொழுது - பாவியாகிய இராவண கவர்ந்து செல்கின்ற பொழுதில், கண்டேன - பார்த்தேன்; இலங்கைபுக்கனன்-(அவ்விராவணன்) இலங்கையிற் சேர்ந்தான்; புக்கு - அவ்வாறு சேர்ந்து, வேகின்ற உள்ளத்தாளை வெம் சிறைஅகத்து வைத்தான - தவிக்கின்ற மனமுடையவளாகிய அச்சீதையைக் கொடிய சிறைக்காவலில் வைத்திட்டான்; இறைவி இன்னும் ஆங்கே இருந்தனள் - சீதாபிராட்டி இப்போதும் அங்கேயே இருக்கிறாள்; ஈங்குமின காண்டிர - (நீங்கள்) அங்குச் சென்று காணுங்கள்; (எ - று.)

'ஏகொன்றிற் காண்டிராங்கிலிருக்குள்' என்ற பாடத்துக்கு - நீங்கள் 'இங்கிருந்து சென்றால் அருகுகாணலாம் என்று பொருளாம்.

'போகின்றபொழுதுங் கண்டேன்' என்று சிலபிரதிகள். (கஉ)

[இலங்காபுரியின் கிட்டுதற்கருமையைச் சம்பாதிவாநரர்க்குத் தெரிவித்தல்]

கூஉ. ஓசனையொருநூறுண்டாலெனிகடலிலங்கையவ்வூர்
பாசவெங்கரத்துக்கூற்றங்கட்புலன்பரப்பவஞ்சு
நீசனவ்வரக்கன்சிற்றகெருப்புக்குநெருப்புநீங்கா
ளேசறுங்குணத்தீர்சேறலிப்பரிசியைவதென்றான்.

(இ - ன்) ஒலி கடல் இலங்கை - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட அவ் விலங்கா புரியானது, ஓசனை ஒரு நூறு உண்டு - (இங்கிருந்து) நூறுயோசனை தூரத்தி லுள்ளது; அ ஊர் - அவ்விலங்காபுரியினிடத்து, வெம் பாசம் கரத்து கூற்றம்-கொடிய பாசாயுதத்தைக் கையிற்கொண்டுள்ள யமனும், கண் புலன் பரப்ப அஞ்சும் - தனது கண்பார்வையைச் செலுத்த அஞ்சுவான்; நீசன் அ அரக்கன் சிற்றம் - இழிகுணமுடையவனை அவமிராவணனது கோபமோ, நெருப்புக்கும் நெருப்பு - அக்கினியையும் அடக்கவல்ல ஓர் அக்கினிபோன்ற தாகும்; ஏசு அறும் குணத்தீர்-குற்றமற்ற நற்குணமுடையவர்களே! நீங்கள்—, சேறல் - அங்குச் செல்லுதல், எ பரிசு இயைவது - எவ்வாறு கூடும்? [அங்குச் செல்லுதல் உங்கட்கு ஒருவாற்றாலும் முடியாது], என்றான் - என்று (சம்பாதி) கூறினான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராவணனிடத்திலுள்ள அச்சத்தால் யமனும் அவ்விலங்கையைக் கண் ணெடுத்துப் பார்ப்பதற்கும் அஞ்சுவானென்பது, இரண்டாமடியின் பொருள். மூன்றாமடி, இராவணனது மிக்க கோபத்தின் கொடுமையை விளக்கும். பாசம் - கயிற்றாலடிவான ஆயுதம்; இது, யமனுக்கு உரியது.

'யோசனை யெழுநூறுண்டால்,' 'இலையவதென்ஞ' என்றும்பாடம். ( )

[சம்பாதி கடலின் கடந்தற்கு அருமையைத் தெரிவித்தல்.]

கூச. நான்முகத்தொருவன்மற்றைநாரியோர்பாகனிற்க
பான்முகப்பரவைப்பள்ளிப்பாம்பணைப்பரனென்றாலுங்
காலனுக்கேயுஞ்சேறலரிதிதுகடலின்றன்மை
மேலுமக்குறுவதெண்ணிச்செல்லுமின்விளிவிலீர்.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) நால்முகத்து ஒருவன் - (நான்குதிசைகளையும் நோக்கிய) நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், மற்றை நாரி ஓர் பாகன்-மற்றொரு மூர்த்தியாகிய பார்வதியை இடப்பக்கத்திற்கொண்ட சிவபிரானும், கிற்க - கிடக்கட்டும்: பால் முகம் பரவை பள்ளி பாமபு அணை பரன் என்றாலும் - பாலைத் தன்னிடத்திலேயுடைய சமுத்திரத்தில் [திருப்பாற்கடலில்] பாம்பணையிற் பள்ளிகொண்டுள்ள பிறந்த திருமாலேயானாலும், காலனுக்கு ஏயும் - யமனுக்கேன்றாலும், சேறல் அரிது-உட்புகுந்து செல்லுதலென்பது கூடாத தாகும்; இது கடலின்தன்மை - இது (இலங்கையடைவழியிலுள்ள) கடலின் தன்மை யாகும்; விளிவு இல் காளீர் - அழிதலில்லாத [நீண்ட] ஆயுட்காலத்தை யுடையவர்களே! மேல் உமக்கு உறுவது எண்ணி செல்லுமின் - இனி மேல் உங்கட்கு நேரக்கூடியவற்றை முன்னமே ஆலோசித்துச் செல்லுங் கள்; (எ - று.)

இடையிலுள்ள் கட்டலோ திரிமூர்த்திகளாலும் யமனாலும் கடந்து செல்ல வேண்டுமென்ற நினைத்தாலும் முடியாததாம்; இவலிடையத்தில் முன்னமே ஆலோசித்து உசிதப்படி செய்யுக்க வென்பதாம். 'காலினுக்கேயும்' என்ற பாடத்துக்கு வாயுபகவானுக்கே யென்றாலும் என்று பொருள்.

'நாரியோர்பாகன்' என்பதி லடங்கிய கதை:—முன்னொரு 'காலத்திற் கைலாசகிரியிலே சிவபிரானும் உமாதேவியும் ஏகாசனத்தில் நெருக்கமாக வீற்றிருந்தபொழுது, பிருங்கியென்னும் மகாமுனி பரமசிவனையாத்திரம் பிரதட்சிணஞ்செய்ய விரும்பி, ஒரு வண்டு வடிவமெடுத்து அவ்வாசனத்தை இடையிலேஊடுத்துக்கொண்டு அதன்வழியாய் நுழைந்துசென்று, அம்பிகையைவிட்டுச் சிவபிரானைமாத்திரம் பிரதட்சிணஞ்செய்ய, அதுகண்ட பார்வதி தேவி தன்பதியை நோக்கி 'முனிவன் என்னைப் பிரதட்சிணம் செய்யாமைக்குஏது என்ன?' என்று வினவ, உருத்திரமூர்த்தி 'இம்மை மறுமைகளில் இவ்விடஞ்சித்திபெற விரும்புபவர் உன்னையும் முத்திபெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்; இது நூற்றணிபு' என்று சொல்ல, அதுகேட்ட தேவி 'இறைவன் வடிவத்தைப் பிரிந்து தனியே யிருந்ததனாலன்றோ எனக்கு இவ்விழிவு நேர்ந்தது' என்று இரங்கி, தான் சிவபிரானை விட்டுப் பிரியாதிருக்குமாறு கருதி, புண்ணிய க்ஷேத்திரமான கேதாரத்திற் சென்று தவம்புரிந்து வரம்பெற்ற அப்பிரானது வடிவத்திலே இடப்பக்கத்தைத் தனக்கு இடமாக வைடங்கி அவ்வடிவிலேயே தான் ஒற்றுமைப்பட்டு நின்றனளென்பதாம். இங்ஙனம் வலப்பக்கம் சிவரூபமும் இடப்பக்கம் பார்வதி ரூபமுமாகுமாறு தனது வடிவத்தில் ஒருபங்கை அம்பிகைக்குக் கொடுத்துத் தான் ஒருபங்காயுள்ள சிவபிரான் அர்த்தநாரீசுவர மூர்த்தியாவன்.

'நாரியோர்பாகத்தண்ணல்', 'பளளிப்பரம்பரன்பணி யென்றாலும்', 'சேறலரிதது காவற்றன்மை,' 'மேலுமக்கேயுந்தன்மைவிளம்புதிர்' என்ற பாடாந்தரங்கள். (சுச)

[இனிச் செய்யவேண்டுவதைப்பற்றிச் சம்பாதி ஆலோசனை கூறுதல்.]

சூரி. எல்லீருஞ்சேறலென்பதெளிதன்றவ்விலங்கைமூதூர்
வல்லீரேலொருவரேகமறைந்தவணைழுகிவாய்மை
சொல்லீரோதாயசரைநீக்கித்தோகையைதெருட்டிமீடி
யல்லீரேலென்சொற்றேறியுணர்த்துமினழகற்கம்மா.

(இ - ன்.) அ இலங்கை முது ஊர் - பழமையாகிய அந்த இலங்காபுரிக்கு, எல்லீரும் சேறல் என்பது - நீங்களெல்லீரும் (ஒருங்கே) போதலென்பது, எளிது அன்று - கூடாதகாரியமாகும்; வல்லீர் எல் - வல்லமையுள்ளவராயின், ஒருவர் - (உங்கட்குள்) ஒருவர் மாத்திரம் [வல்லமை சாலீயான ஒருவர் மாத்திரம்], ஏகி - சென்று, அவண் மறைந்த ஒழுகி - (அங்குள்ளவர்களாற் காணமுடியாதபடி) அங்கே மறைந்து வசித்து, வாய்மைசொல்லீர் - (இராமபிரான கூறியருளிய) உண்மையான வார்த்தையைச் சொல்லியவர்களாய், தோகையை தாயரை நீக்கி தெருட்டி - சீதையினது துன்பத்தை நீக்கி அவளைத்தெளியச்செய்து, மீடிர் - திரும்புங்கள்; அல்லீர் எல் - அல்லாவிட்

டால், என் சொல் தேறி - எனதுவார்த்தையை நம்பி, தீழகற்கு - (கட்டழகு டையவனை) இராமபிரானிடத்தில், உணர்த்துமின் - (சீதை இலங்கையில் சிறையிலிருக்கிறாளென்பதைத்) தெரியியுங்கள்; (எ - று.)

அம்மா - 'அம்ம' என்பதன் நீட்டல்; (யான்சொல்வதைத்) கேளுங்கள் என்று பொருள்படும்; "அம்ம கேட்பிக்கும்."

'சேறலென்றற்கெளிதன்று,' 'சொல்லீரேயாகநீத்தோகையைத் தெருட்டிமீள, வல்லீரேல்,' 'மதிணர்க்கம்மா' என்று பிரதிபேதம். (சுடு)

[சம்பாதி வாநரரிடம் விடைகேட்டுக்கொண்டு செல்லுதல்.]

சுசு. காக்குநர் இன்மை யாலக் கழுகின முழுதுங் கன்றிச்
சேக்கையிட் டிரியல் போகித் திரிதரு மதனைத் தீர்ப்பான்
போக்கெனக் கடுத்த நண்பீர் நல்லது புரிமி னென்னு [ன்.
மேக்குற விசையிற் சென்றான் சிறையினில் விசும்பு போர்ப்பா

(இ - ன்.) காக்குநர் இன்மையால் - பாதுகாப்பவரில்லாமையால், அ கழுகு இனம் முழுதும் - அந்தக்கழுகின் கூட்டங்கள் முழுவதும், கன்றி - வருத்தி, சேக்கை விட்டு இரியல் போகி திரிதரும் - தமது இருப்பிடத்தை விட்டு நிலைகெட்டுத் தடுமாறிப்போம்; அதனை தீர்ப்பான் - அத்தடுமாற்றத்தை நீக்கிப் பாதுகாக்கும்பொருட்டு, போக்கு எனக்கு அடுத்த (அ) - போதற்கு உரிய காரணம் எனக்கு சேர்ந்துவிட்டது; நண்பீர் - நண்பர்களே! நல்லது புரியின் - (ஆலோசித்து யான் கூறிய இரண்டுவகையுள்) நன்மைதரக் கூடியதைச் செய்யுங்கள், என்னு - என்று சொல்லிவிட்டு,—சிறையினில் விசும்பு போர்ப்பான் - (தனது) ஒருசிறையில் வானத்தைமறைப்பவனாகிய சம்பாதி, மேக்கு உற விசையின சென்றான் - ஆகாசத்தில் வேகமாய்ப் பறந்து போனான்; (எ - று.)

'இவ்வரையில் ஜடாயுவின் ஆளனைக்கு உட்பட்டிருந்தகழுகுகள் அந்த ஜடாயு இறந்தபின்பற்றிப் பாதுகாப்பவரில்லாமல் எளியவற்றை வலியவை வருத்தி நிலைகெட்டு வருந்தி யதனால், அவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு யான் விரைந்துசெல்லவேண்டி யிருக்கிறது. ஆகையால், செல்லுகின்றேன்; நீங்கள் யான் சொல்லியவற்றுள் ஏற்றதைச் செய்யுங்கள்' எனக்கூறி, சம்பாதி ஆகாயமார்க்கமாகப் பறந்துசென்றன னென்பதாம். அக்கழுகினம் - முன்பு ஜடாயுவினுற் பாதுகாக்கப்பட்ட கழுகுகள் என்றபடி; அகரம் - தெஞ் சறிசுட்டு. சேக்கை - பறவைகளின்கூடு.

'காக்குநரில்லையால்', 'அதனைத்தீர்க்க', 'போக்கெனக்கடுத்ததையா' என்று பிரதிபேதம். (சுக)

சம்பாதிப்படலம் முற்றிற்று.

பதினன்காவது

மகேந்திரப்படலம்.

மகேந்திர மலையைச் சார்ந்த வானரவீரர் அங்குச் செய்த செய்தியை யுணர்த்தும் பாகம். சம்பாதியின் சொல்லால் சீதையிருக்குமிடத்தை நன்கு உணர்ந்த வாநரா தாம்செய்யவேண்டுவதைப்பற்றி ஆலோசித்தலும், சமுத் திரத்தைக் கடக்கு செல்வதில் தம்தமக்குள்ள திறமையைக்குறித்துச் சிலர் கூறுதலும், ஜாம்பவான் புகழப் பிறகு தனது பேராற்றலை யுணர்ந்த அநு மான் தான் கடல் கடப்பதாக உடன்படுதலும் முதலியன இப்படலத்திற் கூறப்படுகின்றன.

வேறு.

[இதுவும், அடுத்த கவியும் - வானரர் செய்யவேண்டுவதைப்பற்றித் தமக்குட் கொல்லிக்கோள்ளுதல்.]

க. பொய்யுரை செய்யான் புள்ளர சென்றே புகலுற்றார்
கையுறை கெல்லித் தண்மையி னெல்லாங் கரைகண்டா
முய்யுரை பெற்ற நல்லவை யெல்லா முறவெண்ணிச்
செய்யுமி னென்று செய்வகை நொய்திற் செயவல்லீர்.

உ. சூரியன் வெற்றிக் காதல னெடுஞ் சுடர்விற்கை
யாரிய னீச்சென் றேதொழு தற்ற தறைகிற்பிற்
சீர்நிலை முற்றுந் தேருதல் கொற்றச் செபலம்மா
வாரிக டப்பார் யாவ ரெனத்தம் வலிசொல்வார்.

இரண்டுகவிகள்-ஒருதொடர்; ஆதலால், ஒருங்கே உரைக்கப்படுகின்றன.

(இ - ள்.) (க) புள் அரசு பொய் உரைசெய்யான் என்றே புகல் உற் றார் - 'கழுகுகட்கு அரசனாகிய சம்பாதி பொய்சொல்லமாட்டான்' என்ற உறுதியாக நினைத்துச் சொல்லத்தொடங்கிய சிலவானரர்கள்,—(மற்றை வாந ரரை நோக்கி), 'செய் வகை நொய்தின் செய வல்லீர் - செய்தற்கு உரிய தொழில்களை விரைவிற் செய்துமுடிக்க வல்லவர்களே! (சம்பாதிகூறியவற் றால்), கை உறை கெல்லி தண்மையின் எல்லாம் கரைகண்டாம் - கையிற் கொண்ட நெல்லிக்காயின் தன்மைபோல (ச் சீதாபிராட்டியின் செய்தி) முழுவதையும் நன்றாக அறிந்தோம்; (ஆகவே), உய் உரை பெற்றும்-பிழைத் துப்போதற்கு உரிய வார்த்தையைப் பெற்றவராயேனும்; (இனி), நல்லவை எல்லாம் உற எண்ணி ஒன்று செய்யுமின் - செய்தற்கு உரிய தொழில்கள் முழுவதையும் நன்றாக ஆலோசித்து (ச் சம்பாதிகூறிய இரண்டில் ஏதேனும்) ஒன்றைச் செய்யுங்கள்; (உ) சூரியன் வெற்றி காதலனெடும் - சூரியனது வெற்றிபெற்ற [சிறந்த] குமாரனாகிய சுக்கிரீவனையும், சுடர் வில் கை ஆரி யனை - ஒளிபொருந்திய வில்லைக் கையிற்கொண்டவனாகிய சிறந்த இராம பிரானையும், சென்று தொழுது - போய் வணங்கி, உற்றது அறைகிற்பின் - நிகழ்ந்ததைக் கூறினால், சீர் நிலை முற்றும் - சிறந்த (நமது) கடமை ஒரு வாறு முடிவுபெறும்; (ஆயினும்), தேருதல்-(நாமே கடல்கடந்து சீதாபிராட்டி

யுள்ள விடத்தைக்) கண்டு தெளிதல், கொற்றம் செயல் - வீரச்செயலாகும்; (இவ்வாறு செய்யத்துணிந்தால் கடலேக்கடக்கவேண்டுமே); வாரி கடப்பார் யாவர் - கடலேக்கடகினை வல்லமையுளளவர் (நம்முள்) எவர்?' என - என்று சொல்லி, தம் வலி சொல்வார் - தமதம்வலிமையை எடுத்துக் கூறலானார்கள்; (எ - று.)— அதனை, அடுத்த நாலகு கவிகளிற் காண்க.

'சம்பாதி கூறியதெல்லாம் உண்மையேயா மாதலின், அவனது சொல்லின்படி எதேனுமொன்றைச் செய்தலே நலமாகும்; நாம் சென்றுதேடாமலே சம்பாதிவார்த்தையை நம்பி மீண்டு இராமசுக்கிரீவரையடைந்து சீதை இலங்கையிலிருத்தல் முதலியவற்றை எடுத்துக கூறினுலும் நமது கடமை முடிவுபெறும்; அன்றி, நாம் கடல்கடந்து சென்று இலங்கையிறபுக்குச் சீதா பிராட்டியைக் கண்கூடாகக்கண்டு வந்து செய்தி தெரிவிகலா மென்றால், அது முற்கூறிய அதனிலுஞ் சிறந்ததே; ஆனல், அவ்வாறு செய்தற்குக் கடலேக் கடக்கவேண்டுமே! அங்ஙனம் கடலேகடந்து சென்று மீளும் வல்லமை யுள்ளவர் யாவர்?' என்று வானரவீரர் ஆலோசித்துத் தமதம்வலிமையை எடுத்துக் கூறலானார்க ளெனபதாம.

க. 'பெரய்யுரைசெய்யான' எனறது - சம்பாதி உண்மையையே கூறுவானென்று நமக்குத் தெளிவாக விளக்குதலின, நாம் நேரிறசென்று சீதா பிராட்டியைக் காணுவிடினும மீண்டு சுகரீவனிடதது மும இராமபிரானிடத்தும் இச்செய்தியை நமபிக கூறலாமென்ற கருத்தை விளகுகும. கையுறை நேலலிக்கனி - மேலுள்ள சீதாறறதைக்கொணடு உள்ளவாறுமுழுவதையும தெளிவாக அறிதலில உபமமாம. கையுறைநெல்லி - 'கரதலாமலகம' எனப் படும். 'சீதாபிராட்டியைப்பறறிய செய்தியானதும தமகருதியிதரியாமையாலும், தவணைகடந்தமையாலும, இனி மீணடுசென்று மகாராஜாது கோபதறகு இலக்காவதிலும் உயிரைவிடுதலே நனறு' எனறு தாம் இறப்பதற்குத் துணிந்திருலேயில எதிரவந்து சம்பாதி தனது உண்மைமொழிகொண்டு தேறச் செய்ததனல், 'உயயுரை பெற்றும' எனறார. 'செயவகை நொய்திற் செயவல்லீர' எனறது - இனிக காலம போகாமல எதேனுமொன்றை நிர்ணயித்து விரைவிற செய்பவேண்டுமெனற குறிபபு. 'புள' எனற பொதுப் பெயர், சிறப்பாய்க் கழுகுகளே யுணர்த்திற்று.

உ. அம்மா-வியப்பிடைச்சொல்; சீதையை நேரிற்கண்டு மீண்டு செய்தி தெரிவித்தலே சிறந்ததென்பதைக் குறிப்பிக்கும. வாரி - நீர; கடலுக்கு, இலக்கணை.

(க) 'புள்ளரசின்னே புகலுற்றான்,' 'கரைகண்டான்,' 'மெய்யுரை பெற்றே நல்லவையெல்லாமிகவெண்ணி,' (உ) 'அறைகிற்பீர்,' 'சீரிகின்முற்றும்,' 'சீருதனமுற்றும' என்பன பாடாந்தரங்கள். சிலபிரதிகளில் இரண்டு மூன்றும் செய்யுள்கள் முன்பினகை மாறிக்காணப்படுகின்றன.

இப்படலத்தின் முதலிருபதுகவிகள்-முதற்சீரும் மூன்றுஞ்சீரும் விளச்சீர்களும், இரண்டுகான்காஞ்சீர்கள் மாச்சீர்களும், ஐந்தாஞ்சீர் காய்ச்சீருமாக வந்த நெடிலடிகானகுகொண்ட கலிநிலைத்துறைகள். (க, உ)

[இதுவும், அடுத்த கவியும் - வாநரவீரரிற் பலர் கடல்கடந்துமீளுதல் தம்மாலாகா தென்றல்.]

க. மாளவலித்தேமென்றுமிம்மாளாவசையோடு
மீளவுமுற்றோமன்னவைதீரும்வெளிபெற்றேங்
காளநிறத்தோடொப்பவர்மாயக்கடலுவுற்
றாளுகலைதீராளுமிவ்னம்மாருயிரம்மா.

(இ - ள்.) 'மாள வலித்தேம் - (தலைகடக்குவிட்டதனால் முதலில்) இறத்தற்குத் துணிவுகொண்டிருந்தோம்; என்றும் மாளா இ வசையோடு மீளவும் உற்றேம் - எப்போதும் அழியாத இந்தப்பெரும்பழியுடனே மீண்டு செல்லவும் துணிந்தோம்; (பிறகு), அன்னவை தீரும் வெளி பெற்றேம்-(சாதலும் மீண்டுசெல்லுதலுமாகிய) அவ்விரண்டும் நீங்குமபடியான ஒருநல்லவழியை(ச் சம்பாதியினவார்த்தையால) அடைந்தோம்: காள நிறத்தோடு ஒப்பவர் மாய - கருநிறத்தைப்பொருந்தியவராகிய அரக்கர்கள் அழியும்படி, கடல் தாவுற்று - சமுத்திரத்தைக் கடந்து, ஆளும் - வீரங்காட்டவல்ல, நலத்தீர் - சிறப்புடையவர்களே! எம் ஆர் உயிர் ஆளுவினை - (அவ்வாறுசெய்து) எமது அருமையான உயிரைப் பாதுகாவுங்கள்,' (என்று சிலவானரர் கூறினர்கள்.)

இச்செய்யுளில் ஏற்ற வினைமுதலும்,பயனிலையும், வருவிதது உரைக்கப்பட்டன. ''மாண்டுறுவதுநலமெனவலித்தனம'' என்று முதலில்தமதுயிரை விடுமாறு வானரர் கருதியதனால 'மாளவலித்தேம்' என்றும், அங்ஙனந் தான் இறக்க மறைபையோ திரும்பிச்செல்ல வேண்டுமெனவும, தாம் இறக்க இவ்வசனஞ்சிய அங்ஙனன் மீண்டுசெலலுதலே தருதியெனவும் இவ்வாறு வானரர்கட்குள் வார்த்தை நிகழ்ந்ததனால் 'என்றும் இம்மாளாவசையோடு மீளவுமுற்றேம்'என்றும, அப்போது சமபாதி தோன்றிச் சீதையிருக்குமிடத்தைத் தெரிவிததுச் செய்யவேண்டியவனவற்றைத் தெளிவிததாலதனால 'அனனவைதீரும் வெளி பெறறேம' என்றும கூறினர். கடல் கடந்து சென்று பிராட்டியைககண்டு மீளாவிடின, கடுந்தண்டனையுடைய சுக்கிரீவமகாராஜனது கோபதீயினினறு தப்புத லரிதா மாதலால், இவ்வரியகாரியத்தைச் செயதுமுடிதது எமதுயிரைத் தப்புவிக்க வேணடுமெனறு சில வானரவீரர் வேண்டின ரெனபது, கருதது; இதனால், தமகருக் கடல்கடந்துமீளுந்திறமில்லை யென்று அவரகள வெளியிட்டவாறும். அரக்கா கருநிறமுடையவராதலின், அவர்களை 'காளநிறத்தோடொப்பவர்' எனறார். கடலைக்கடந்து செல்லுந் திறமை எற்படின பிறகு அரகர்மாய்தல் திண்ணமென்பார், 'காளநிறததோடொப்பவர்மாயக்கடலுவுறறு' எனறார். ஒப்பவர் - பொருந்தியவர். காளம் - விஷமுமாம. எமமாருயிரம்மா - ப்ராணம்.

'அனனெனினமாளாவசையோடும்,' 'மீளவுமுற்றும்,' 'வினெவுற்றேம்,' 'காளநிறததோடொப்பனவிற்கடலுவுறறு' எனறு பிரதிபேதம். (க)

ச. நீலன்முதற்பேபோர்கெழுகொற்றநெடுவீரர்
சாலவுரைததார்வாரிகடக்குந்தகவின்மை
வேலைகடப்பன்மீளமிடுகினெனவிட்டான்
வாலியளிக்கும்வீரவயப்போர்வசையில்லான்.

(இ - ன்.) போர் கெழு கொற்றம் நீலன் முதல் பேர் கெடு வீரர் - போரில் மிக்க வெற்றியடைதற்கு உரிய நீலன்முதலாகிய சிறந்த வானர வீரர்கள்,—வாரி கடக்கும் தகவு இன்மை-கடலைத் தாண்டிச் செல்லும் வல்லமை (தங்கட்கு) இல்லாமையை, சால உரைத்தார் - வெளிப்படையாகக் கூறிவிட்டார்கள்; வாலி அளிக்கும் வீரம் வயம் போர் வசை இல்லான் - வாலியினும் பெறப்பட்டவனும் வீரத்தையும் வெற்றியையும் காட்டவல்ல போரிற்பழிப் பில்லாதவனுமாகிய அங்கதன், 'வேலை கடப்பன் - சமுத்திரத்தைக் கடந்து (அக்கரையிலுள்ள இலங்கை) செலவேண் (யான); மீள மிடுக்கு இன்று - (அங்கிருந்து) மீண்டுவரும் வல்லமை (எனக்கு) இல்லை,' என விட்டான் - என்று கூறிவிட்டான; (எ - று.)

கீழ்க்கடலில் சாதாரணமான வானரர்கள் தமக்குக் கடல்கடக்கும் வல்லமை யில்லையென்றதை வெளியிட்ட கவியானவர், சிறந்தவானரர்களை தம்மா லாகாதென்று கூறியதை இச்செய்யுளால் வெளியிடுகின்றனரென்க. நீலன் முதலியோர் 'எமக்குக கடல்கடந்துசெல்லுதல் அடியோடுமுடியாது' என்று சொல்ல, அங்கதன் 'கடல்கடந்துசென்று சீதையின செய்தியையுணரவல்ல வல்லமை எனகு இருந்தும், சென்ற மாத்திரலுண்டான இளைப்பினால் வலிமைகுன்றி மீண்டுவரும் வல்லமை யில்லாமையால் யான சென்றும் பய னில்லை' என்று கூறினனென்பதாம.

'நீலன முதலபோகிய' என்றும் பாடம. (சு)

[இதுவும், அடுத்த கவியும் - ஒரு தொடர்; ஜாம்பவான் தன்னாலும் கடல் கடத்தலாகா தென்றல்.]

(இ. வேதமணைத்துந்தோதாதமிவட்டாவிவாருமெய்யன
பூதலமுற்றுமோராடியைவைத்துப்பொலிபோழ்ந்திபான்
மாதிரமெட்டுஞ்சூழ்பறைவைதுதேவரோடுமோ
மோதவினோதர்த்தாளாலிவுறுதிறன்விடன்மொய்ம்பிர்.

கூ. ஆதலினிப்போராகலிகுப்புற்றகழிஞ்சி
மீதுகடத்திற்தியவருட்குமவினோயாடுஞ்
சீதைதணைதேதாவரமுறுஞ்நிறனின்மிறன்
றேறுதியுறுதானலுமுகதானுதவுற்றான்.

இவ்விரண்டு கவிக்கும் ஒருங்கே பொருள் உரைக்கப்படும்.

(இ - ன்.) (சு) நாலுமுகத்தான் உதவுற்றான் - நான்குமுகங்களையுடைய பிரமதேவனும் பெறப்பட்டவனுமிய ஜாம்பவான், - (மற்றையோரை நோக்கி), (இ) 'விறல் மொய்ம்பீர் - தோள்வலிமையுடையவர்களே! வேதம் அனைத் தும் தேர்ந்த எட்டா ஒரு மெய்யன பூதலம் முழுதும் ஓர் அடிவைத்து பொலி போழ்ந்த - வேதங்களெல்லாம் தேடிப்பார்க்கவும் அகப்படாத ஒப்பற்ற சொரூ பத்தையுடையவனுமிய திருமால (திரிவிக்கிரமாவதாரஞ்செய்து) பூமி முழு வதையும் தனது (இரண்டு திருவடிகளுள்) ஓரடியின்வைப்பினால் அளந்த வினமினை காலத்தில், யான்—, மாதிரம எட்டும் சூழ் பறை வைத்தேவர - எட்டுத் திக்குக்களிலும் பிரதட்சிணமாக வந்து பறையடித்து (அப்பகவானது வெற்றியைத் தெரிவித்துக்கொண்டு) வருகையில், மேரு மோத - மேருமலை

யானது தாக்கியதனால், இளைத்து - வலிமைகுன்றி, தாள் உலைவு உற்றேன் - கால்வருந்தினேன்; (சு) ஆதலின் - ஆதலினால், இ பேர் ஆர்கலி குப்புற்று - இந்தப் பெரிய கடலினமீது எழும்பித்தாவி, அகழ் இஞ்சிமீது கடத்தி-அகழியைச்சார்ந்த (இலங்காபுரியின்) மதிளின்மீது குதித்து (உட்சென்று), தீயவர் உட்கும் வினையோடும் - கொடியவர்களாகிய அந்தகாரத்திலுள்ள, அரக்கர்கள் அஞ்சித்தக்க செயலுடனே, சீதைதனை தோ - சீதாபிராட்டியைத் தேடிக் கண்டு, வர - (மீண்டு இங்கு) வருதற்கு, முற்றும் திறன் இன்று - முழுவலிமை (எனக்கு) இல்லை,' என்று—, ஒதி இறத்தான - சொல்லிமுடித்தான்.

'திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உலகமுழுதும் நிரம்பிய திருமாலின் திருவடிஸ்பத் தரிசிதனுக்கொண்டே பலமுறை பூமியைப் பிரதக்ஷிணஞ்செய்து வருகையில் மேருமலை எனதுகாலிற்பட்டுக் கால் சிறிது ஊனமானதால், இப்போது கடல்சுடக்கும் வலிமை யில்லாதவனுயினே னென்று ஜாம்பவான் கூறினனென்க வீறல் - வலிமை, மொய்ம்பு - தோள்.

சு. வேதங்களெல்லாவற்றாலும் இன்னபடிதான் உள்ளதென்று ஆராய முடியாமல் நிற்கும் பரம்பொருளாவன் திருமாலென்பது, 'வேதமனைத்துக் தோற்றவெட்டா வொருமெய்யன' என்பதன பொருள். வேதம் - (விதிவிலக்குக்களால் நன்மை தீமைகளை) அறிவிப்பது; வடசொல். எட்டுமாதிரங்களாவன - கிழக்கு முதலிய பெருந்திசைகள நானகும், தென்கிழக்கு முதலிய கோணதிசைகள நானகுமாம்.

'ஈரடிவைத்து,' 'பொலிபோழ்கின்' என்று பிரதிபேதம்.

சு. ஆர்கலி - நிறைந்த ஓசையையுடையது எனக் கடலுக்குக் காரணப் பெயர்; வினைத்தொகையனமொழி. குப்புறுதல் - குதித்தல். அகழப்பட்டது - அகழ்; பெயர்.

'ஆதலினிப்போதாழ் கடல் குப்புற்று,' 'ஆதலினிப்போதாருலகுப்புற்ற கவஞ்சி' எனறபாடங்கள காணபபடுகின்றன. (இ, சு)

[இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்; ஜாம்பவான் அநுமானே கடலைக் கடத்தற்கு உரியவனென்று அங்கதனிடந் தெரிவித்தல்.]

எ. யாமினியிபபோதாரிடர்துய்த்திங்கினியாரைப்
பீபரமெனவைப்போமென்பதுபுன்மைப்புகழன்றே
கோமுதலவர்கீகருகியகொற்றக்குமாரநங்
நாமநிறுத்திப் பீபரிசைதைக்குரவையில்லோன்.

அ. ஆரியன்முன்னர்ப்போதுறவுற்றவதனுலுங்
காரியமெண்ணிச்சோர்வறமுற்றுங்கடனுலு
மாருதியோபபார்வேறிலையென்னுவயன்மைந்தன்
சீரியமறிரூளாண்மைதெரிப்பானிவைசெப்பும்.

இரண்டு கவிகட்கும் ஒருங்கே பொருளுரைக்கப்படும்.

(இ - ள்.) (அ) அயன் மைந்தன் - பிரமதேவனது புதல்வனுகிய ஜாம்பவான், (எ) (அங்கதனை நோக்கி),—'கோ முதல்வர்க்கு எற ஆகிய கொற்றம் குமார - வானராராஜ வமிசத்தில் மேன்மையடைந்தவர்கட்குள் சிங்கம்போற்

சிறந்தவனுகிய வெற்றிபெற்ற அங்கதகுமாரனே! யாம் இனி இப்போது ஆர் இடர் அய்த்து இங்கு இனியாரை போம் என வைப்போம் - நாம் இப்போது பெருந்தன்பத்தை யனுபவித்துக்கொண்டு இனிமேல் இங்கு வேறு யாரைத் தான் கடல்கடந்து செல்வோன்று வேண்டிக்கொள்வோம்? ஒன்பது - இவ்வாறு நினைப்பதும், புன்மைப் புகழ் அன்றே - (நமது) புகழுக்கு இழிவாகு மல்லவோ? (அ) ஆரியன் முன்னர் போதற உற்ற அதனனும் - (முதலில்) இராமபிரானது எதிரிற்சென்று (இராமபிரானுக்கும் சுக்கிரீவமகாராஜனுக் கும்) கட்புச்செய்வித்த அத்தன்மையாலும், காரியம் எண்ணி சோர்வு அற முற்றும் கடனனும் - செய்தொழிலை ஆராய்ந்து சிறிதும் சோம்பலின்றி முடிக்குங் கடப்பாடுடைமையாலும், (எ) நம் நாமம் கிறந்திப் பேர் இசைவு தக் கும் கலை இல்லோன் - நமது பெயரை யிலகிறந்திப் பெரும்புகழை (நமக்கு) உண்டாக்கவல்ல குற்றமற்றவன், (அ) மாருதி - அநுமானேயாவன்; ஒப்பார் - அவனை ஒப்பவர், வேறு இலை - வேறை ஒருவருமில்லை,' என்று - என்று சொல்லி, சீரியன் மல் தோள் ஆண்மை தெரிப்பான் - சிறந்தவனுகிய அந்த அநுமானது மற்போர்க்கு உரிய தோள்களின் வீரத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, இவை செப்பும் - இவ்வாறான துதிமொழிகளை (அநுமானை நோக் கிக்) கூறலானன்; (எ - று)— அவற்றை, அடுத்த பத்துக்கவிகளிற்காண்க.

பெருங்கூட்டமாகத் திரண்டுள்ள நமக்குள் கடல்கடக்கும் வல்லமை யுள்ளா ரொருவருமிலராக, வேறுயாரை நாமக் கடல்கடக்குமாறு வேண்டிக் கொள்வது? மேலும், ஒருவரைத் தேடி அரிதிற்பெறற்றே மென்றலும், அது நமக்குப் பெரும் பழியாகுமல்லவோ? முதலில் இராமசுக்கிரீவர்கட்கு நட்புச் செய்வித்த இவ்வநுமான் எடுத்த காரியத்தைச் சோர்வின்றி முடிக்குங் கிற முடையவனுதலின், அவனை கடல்கடந்து மீளவு நமக்குப் புகழை யீலைநாட்டு தற்கு உரியனென்றுகூறி, ருஷிசாபத்தால் தன்வலிமை தனதருத் தெரியாது சேர்ந்துள்ள அநுமானுக்கு உற்சாகமுண்டாகுமாறு அவன் வல்லமையைத் தெரிவிக்கலாயினன் ஜாம்பவா னென்பதாம்.

(எ) 'இனியாரை' என்பதை ஒரு சொல்லாகவே கொண்டு, முன்னிரண் டடிகட்கு - நரம் பெருங்கயரத்துடன் இங்கிருந்தபடியே தக்கவரைக் கடல் கடக்க வேண்டிக்கொள்வோ மெனபது நமது பெருமைக்கு இழுக்காகுமல் லவோ? எனறுங் கூறலாம். அன்று ஏ என்ற இரண்டு எதிர்மறைகள் சேர்ந்து தேற்றப்பொருளைத் தந்தன.

எ. 'ஆருஞர்த்தது', 'பேரிடாதுய்த்திக்கில்யாரை', 'கன்,ணுமகற் றிப்பேரிசைவித்கு வையில்லோன', (அ) 'காரியமென்ன', 'தோளாண்மை யுரைப்பான்' என்பன பிரதிபேதம். (எ,அ)

[இதுழதல் பத்துக்கவிகள் - ஜாம்பவான் அநுமானைப் புகழ்தல்.]

மேலைவிரிஞ்சன்வியிலுமவியாமிகைநாளீர்
நூலைகயந்துறுணிதுணர்ந்தீர்நுவறக்கீர்
காலனுமஞ்சுங்காய்சினமொய்ம்பீர்கடனின்றீ
ராலறுகர்ந்தாளுமெனவெம்போரடர்கிற்பீர்.

இதுமுதல் பதினெரு கவிகள் - ஒரு தொடர்.

(இ - ன்.) (ஜம்பவான் அநுமனை நோக்கிக் கூறுவான்):—(நீர்),—மேலே விரிஞ்சன் வீயினும் வீயா மிகை காளீர் - (யாவரினுஞ்) சிறந்தவனை பிரமன் இறந்தாலும் இறவாத நீண்ட ஆயுள்காளையுடையீர்; நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தீர் - சகல சாஸ்திரங்களையும் விரும்பி நுட்பமாக அறிந்திருக்கிறீர்; நுவல் தக்கீர் - (அதனால் விஷயங்களை) எடுத்துக் கூறத்தக்க சொல்வன்மையுடையீர்: காலனும் அஞ்சும் காய் சினம் மொய்ம்பீர் - யமனும் அஞ்சத்தக்க கடுங்கோபமும் தேகபலமுமுடையீர்; கடன் நின்றீர் - (செய்தற்கு உரிய) கடமைகளில் உறுதியாய்நிற்பீர்; ஆலம் நுகர்ந்தான் ஆம் என வெம் போர் அடர்கிற்பீர்-விஷத்தையுட்கொண்ட சிவபிரான்போலக்கொடும் போர் செய்யும் திறமுடையீர்; (எ - று.)

முனிவர் சாபத்தால் தனது வல்லமையை யுணராது கிடங்கினிற்கின்ற அநுமானை ஜாம்பவான் கடல்கடக்குமாறு கூறுதற்பொருட்டுத் துதிக்கின்ற ஞானத்தின் இருவருஞ் சொற்றொடர்கள் யாவும் அதற்கு உபகாரப்படுமாறு கருத்துக்கொள்ளத் தக்கனவாம். முதலடி - அநுமானது சிரஞ்சீவித்தன்மையையும், இரண்டாமடி - அவன் பெருங்கல்வியாற் சொல்வன்மை பெற்றிருத்தலையும், பின்னிரண்டடி - தான் மேற்கொண்ட செயலைப் பின்வாங்காது நின்று கடுங்கோபத்தோடு பெரும்போர் செய்தாவது முடிக்குமாற்ற லுடைமையையும் விளக்கும்; இதனால் எவ்வகையாலுஞ் சாவின்றி அரக்கருர்க்குச் சென்று இராவணனைக் கண்டு சமயோசிதமாகப்பேசி இடையூறுசெய்யும் அரக்கர்களை அழித்துச் சீதாபிராட்டியைக்கண்டு மீளுதலாகியதொழிலை முடித்தற்கு உரியாய்நீ என்று குறிப்பித்தவாறு: இவ்வாறே அடுத்தசெய்யுள்களிலும்நுண்ணிதாகக் கருத்துக்காண்க. 'பிதாமஹன்' என்று பெயர் பெறுமாறு முற்பட்டுத்தோன்றி நிற்பவனாதலால், பிரமனை 'மேலைவிரிஞ்சன்' என்றருளுமாம். விரிஞ்சன் - (அன்னப்) பறவையாற் சுமக்கப்படுபவ னென்றும், பஞ்சபூதங்களைப் படைப்பவனென்றும் அவயவப்பொருள்படும்: வடசொல். முதலடி - முற்றுமோனை.

'நூலையந்தே,' 'நூலையனந்தம்,' 'நுண்ணிதுணர்ந்தே.' 'மொய்ம்பின் கடைநின்றீர்,' 'மொய்ம்பின் கடனின்றீர,' 'ஆலநுகர்ந்தானன்னவயப்போர்' என்ற பாடாந்தரங்கள். (க)

கo. வெப்புறு செந்தீநீர்வளியாலும்விளியாதீர்
செப்புறுதெய்வப்பல்படையாலுஞ்சிதையாதீ
ரொப்புறிஞைப்பார்நும்மல தில்லீரொருகாலே
குப்புறிணண்டத்தப்புறமேயுங்குதிகொள்வீர்.

(இ - ன்.) வெப்புறு செம் தீ நீர் வளியாலும் விளியாதீர் - வெப்பும் பொருந்திய செந்நிறமான அக்கினியினாலும் நீரினாலும் காற்றினாலும் இறவாது நிற்பீர்; செப்பு உறு தெய்வம் பல் படையாலும் சிதையாதீர் - (சிறப்பாகக்) கூறப்படுகிற தெய்வத்தன்மையுள்ள பலவகைப்படைக்கலங்களாலும் அழியாதிருப்பீர்; ஒப்பு உறின் நும் அலது ஒப்பார் இல்லீர் - உவமையேடுத்துக்கூறினால் உம்மையேயல்லாமல் உவமையாவார் வேறொருவரையும் பெறுமலிருப்பீர் [உமக்கு நீரே சமானமாயிருப்பீர்]; ஒருகாலே குப்புறின் அண்

டத்தி அப்புறமேயும் குதிகொள்வீர் - ஒருதாங்குதிக்கும்போதே இந்த அண்டத்துக்கு அப்புறத்திலும் குதிக்கும் திறமுடையீர்; (எ - று.)

முதலடியில் பஞ்சபூதங்களில் இடைமூன்றைக்கூறியது - மற்றையிரண்டுக்கும் உபலட்சணம். தீரீர்வளி - உம்மைத்தொகை, அஃறிணையாதலின் பன்மைவிகுதிபெறாது வந்தது. அநுமான் பிறந்தவுடனே சூரியனைக்கனிந்த பழமென்றுகருதித் தாவியபோது தேவேந்திரனது வச்சிராயுதத்தினால் அடிபட்டுக் கவன்முறித்து மூர்ச்சித்ததனைக் கோபங்கொண்ட வாயுதேவன் உலகத்தில் வாயுசஞ்சாரமின்றி ஒடுக்கினபோது, பிரமன் இவன் முதலிய தேவர்களெல்லோரும் தோன்றி அவ்வாயுதேவனை மகிழ்வித்தற்காகத் தம்தமது படைக்கலங்களால் அநுமான் அழிவடையாதிருக்குமாறு வரமளித்துள்ளாராதலின், 'செப்புறுதெய்வப்பல்படையாலுஞ்சிதையாதீர்' என்றார். தெய்வப்பல்படை என்றது - பிரமாஸ்திரம், சிவபிரானதுமுத்தலைச்சூலம், இந்திரனதுவச்சிராயுதம், யமனதுகாலவேல், வருணனதுபாசாயுதம் முதலியன. எகாரங்களும், உம்மைகளும் - உயர்வுசிறப்புப்பொருளன. (கo)

கக. நல்லவுமொன்றேதீயவுநாடிநவைதீரச்
சொல்லவும்வல்லீர்காரியமீரதுணிகிற்பீர்
வெல்லவும்வல்லீர்மீளவும்வல்லீர்மிடலுண்டேடற்
கொல்லவும்வல்லீர்தோள்வலியென்றுங்குறையாதீர்.

(இ - ன்.) நல்லவும் ஒன்றே - நல்லவைமாத்திரமோ? தீயவும் - தீயவைகளையும், நாடி - ஆராய்ந்து, நவை தீர சொல்லவும் - குற்றமில்லாமல் எடுத்துக்கூறுதற்கும், வல்லீர் - திறமுடையீர்; ஈரே காரியம் துணிகிற்பீர் - (பிறருதவியின்றிச்) சுயமாகவே செய்யத்தக்க தொழிலை ஆராய்ந்து முடிக்கின்ற வல்லமையுடையீர்; வெல்லவும் வல்லீர் - (பகைவராகளை) ஜயிக்கவும் வல்லமையுடையீர்; மீளவும் வல்லீர் - (கடல்கடந்து இலங்கைசேர்ந்து இவ்குத்) திரும்பிவரவும் வல்லமையுடையீர்; மிடல உண்டு எல் கொல்லவும் வல்லீர் - (பகைவர்கள்) வலிமையுடையவராய் எதிர்த்தால (அவராளைக்) கொல்லவும் திறமையுடையீர்; தோள் வலி என்றும் குறையாதீர் - புஜபலத்தில் எந்நாளும் குறையாததன்மையுடையீர்; (எ - று)

மிடல் - வலிமை; அதனையுடையார்க்கு, இலக்கணை.

'துணிவுற்றீர்,' 'தோள்வலியாதும்,' 'தோள்வலியொன்றும்' என்று பிரதிபேதம். (கக)

கஉ. மேருகிரிக்குமீதுறநிற்கும்பெருமெய்யீர்
மாரிதுளிக்குதாரையிடுக்கும்வரவல்லீர்
பாரைபெடுக்குதோண்மைவலத்தீர்பழியற்றீர்
சூரியனைச்சென்றுண்கையகத்துந்தொடவல்லீர்.

(இ - ன்.) மேரு கிரிக்கும் மீது உறநிற்கும பெரு மெய்யீர்-மேருமலைக்கும் மேற்பட்டுவளர்க்கூடிய பேருடம்பையுடையீர்; மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வர வல்லீர் - மேகங்கள் சொரிகின்ற நீர்த்துளிகளின்கடிவிலும் (திருவடிவங்கொண்டு) நுழைந்துசெல்லுதற்கு வல்லமையுடையீர்; பாரை

எடுக்கும் தோன்மை வலத்தீர் - பூமியையும் பேர்த்தெடுக்கவல்ல மிக்கவலி மையுடையீர்; பழி அற்றீர் - (பெருவரங்களால் இவ்வாறான தன்மைபெற்றும் சிறிதும் பழிப்பில்லாதசெயலையுடையீர்; சென்று ஒன்கை அகத்தும் சூரியனை தொட வல்லீர் - அருகிற்சென்று அழகியகைகளினாலும் சூரியனைத் தொடு தற்குரிய திறமையுடையீர். (எ - று.)

அறுமான் தனது உடம்பு வளரவேண்டுமென்ற இனைப்பனுயின் மகா மேருமலையைக்காட்டிலும் பெரியவனுவன்; அவ்வுடம்பைச் சிறிதாக ஒடுக்க வேண்டுவனுயின் மிகச்சிறிதாகிய அணுவைக்காட்டிலும் சிறியவனுவ னென் பது, மூன்னிரண்டடிகளிற் கூறிய விஷயம்; இவ்விருதன்மையும் - அணிமா மஹிமா கரிமா லகிமா ப்ராப்தி ப்ராகாம்யம் ஈசத்வம் வசித்வம் என்ற எட்டு வகை யோகசித்திகளுள் முறையே மஹிமா அணிமா என்னுஞ் சித்திகளாம்; மிகவும் பெரிதாதல், மஹிமா; மிகவுஞ்சிறியதாதல், அணிமா: இத்தன்மை களை அறுமான் உடையவனுயிருக்கதை, இராமாயணத்திற் பலவிடங்களிலும் காணலாம். "பிறியாவரத்தினறுமான்வளர்ச்சி பெருமேருவிற் பெரியனுஞ், சிறிதாயொடுக்குமெனின்மேனியற்பவணுவானதிற்சிறியனும்" என்னூர் ஒட் டக்கூத்தரும். தோன்மை வலம் - ஒருபொருட்பன்மொழி.

'பரையெடுக்குந்தோன்மை,' 'சூரியனைச் சென்றாணடைகற்றுந்தொட வல்லீர்' என்றும் பாடம். (கூ)

கஙு. அறிந்துதிறத்தாறெண்ணியறத்தாறழிபாமை
மறிந்துளப்போர்வாலியைவெல்லுமதிவல்லீர்
பொறிந்திமையாக்கோன்வச்சிரபாணம்புகமூழ்க
வெறிந்துழிபிற்றேர்புன்மயிரோணுமிழவாதீர்.

(இ - ள்.) திறத்து ஆறு எண்ணி அறிந்து - உரிய வழிகளை ஆராய்ந் தறிந்து, அறத்து ஆறு அழியாமை - (அரசர்க்கு உரிய) தருமமார்க்கந் தவரு மல், போர்வாலியை மறிந்து உருள வெல்லும்-போர்த்திறமுடைய வாலியை மாண்டுருளும்படி வெல்லுதற்குச் செய்த, மதி வல்லீர் - அறிவின்வல்லமை யையுடையீர், பொறிந்த இமையார்கோன் வச்சிரபாணம் புக மூழ்க எறிந்த உழி - பெயர்பெற்ற தேவர்கட்குத் தலைவனுன இந்திரன் வச்சிராயுதத்தை உடம்பில் தாக்குமாறு எறிந்தபோது, ஓர் புல் மயிர்எனும் இற்று இழவாதீர் - ஒருசிறுமயிர்தானும் அறுபட்டு இழவாமலிருக்கீர்; (எ - று.)

அறுமான் இராமபிரானுடன் சுக்கிரீவனை கட்புச்செய்வித்தவுடனே, முதலில் வாலிவதை செய்து பிறகு சீதாபிராட்டியைத் தேடினுல்தான் தொழில் இனிதுமுடியு மென்று கூறின ஞதலால், அவனை 'வாலியைவெல் லும் மதிவல்லீர்' என்றான்; "கொடுந்தொழில் வாலியைக் கொன்ற கோம கன், கடுங்கதிரோன் மகனுக்கிக் கைவளர், கெடும்படை கூட்டினுலன்றி கேடரி, தடும்படையரக்கர்தமிருக்கை யாழியாய்" என்றதை, இங்கே காணத் தக்கது. பொறிந்த=பொறித்த: இனி, பொறித்து என்றே, எடுத்து, இமை யவர்கோன், பொறிந்த - (கோபத்தினுற் கண்களில்) தீப்பொறியைக் கக் கிக்கொண்டு, வச்சிரபாணத்தை எறிந்தழி என்றும் உரைக்கலாம். இமையாத்

கோன் என்பதற்கு - கண்ணிமைத்தலில்லாத (தேவர்களின்) தலைவன் என்றும் உரைக்கலாம். முன்னேயபொருளில், 'இமையார்கோன்' என்பது - "சிலவிகாரமா முயர்தினே" எனபதனால் இவ்வாறுயிற் றென வேண்டும். வச்சிரபாணம்=வஜ்ராயுதம்.

'அறத்தாறழியாமல்,' 'இமையக்கோன்,' 'மற்றோர்புண்மயிர்தானும்' என்று பிரதிபேதம். (கஉ)

கச. போர்முனை திர்ந்தான்மூவுலகேனும்பொருளாகா
வோர்வில்வலங்கொண்டொல்கலில்வீரத்துயர்தோளீர்
பாருலகெங்கும்பேரிருள்சீக்கும்பகலோன்முன்
றோர்முனடாந்தியாரிய நூலுந்தெரிவுற்றீர்.

(இ - ன்.) போர்முன் எதிர்ந்தால் - போர்க்களத்தில் எதிரிட்டுவந்தால், மூவுலகு எனும் - மூன்றுலோகத்திலுள்ள பொருளாகளையும், பொருள ஆகா-ஒருபொருளாகக் கருதாமல் (மிகவும் அலட்சியமாக நினைத்து), ஓர்வு இல வலம் கொண்டு - (பிறரால் இவ்வளவென்று) ஆராய்ந்தறியமுடியாத மிக்க பலத்தைப் பொருந்தி, ஒல்கல் இல் வீரத்து உயர் - குறைவில்லாத மிக்க பராக்கிரமத்தோடு உயர்ந்துவினங்குகின்ற, தோளீர் - தோள்களையுடையீர்; பார் உலகு எங்கும் பேர் இருள் சீக்கும் பகலோன்முன - நிலவுலகமுழுவதிலும் நிறைந்துள்ள மிக்க இருளை யொழிக்கின்ற சூரியனிடத்தில், தோமுன் நடந்து - (எப்பொழுதுஞ் செல்லுந் தன்மையுள்ள அவனது) தேர்க்கு முன்னே (அவனேப்பார்த்த வண்ணமாக) நடந்துகொண்டே, ஆரிய நூலும் தெரிவுற்றீர் - வடமொழி நூல்களையெல்லாம் கற்றறிந்துகொண்டீர்; (எ-று.)

அறுமான் சூரியபகவனிடத்து வடமொழிநூல்களைத் கறறுணர்ந்ததை, 'வேதமொருநாலுடன விளங்கியசடங்குமும விரிந்தகலையு, மோத நிலவீதி யிசையேழு பரிபூணருணனுரவிரைதோ, மீதுசெலும வெங்கதிரவன்றனெ டயிர்திரவியாகரணமு, மோதியொருநாளினிலுணர்ந்தன னிமாருதி யுயர்ந்தபுகழோய்" என்ற உத்தரகாண்டச் செய்யுளினாலும், "இவன் அருக்கன மாட்டுச்சென்று எல்லாவியாகரணங்களையும் அவற்றின விருத்தி பாடியம் முதலாய உரைகளையும் ஒதியதுமனறி, மற்றுமுள பலகலைகளையும் ஒதி யுணர்ந்து புவிக்கு ஒரு பிரகஸபதியென்னலாயினன" என்ற உத்தராமாயணவசனத்தினாலும் அறிக.

'ஏழுலகேனும் பொருளாகா,' 'பேருலகெங்கும் பேரிருள் சீக்குங்கதிரோன்முன்,' 'தெளிவுற்றீர்' என்றும் பாடம். (கச)

கடி. நீதியினின்றீர்வாய்மையமைந்தீர்நினைவாலு
மாதர்நலம்பேணுதுவளர்ந்தீர்மறையெல்லா
மோதியுணர்ந்தீரூழிகடாருலகீனு
மாதியயன்றானேயெனயாருமறைகின்றீர்.

(இ - ன்.) நீதியில் நின்றீர் - நீதிநெறியில் நிற்கின்றீர்; வாய்மை அமைந்தீர் - மெய்ம்மைபொருந்தினீர்; மாதர் நலம் நினைவாலும் பேணுது வளர்ந்தீர் - மனைவிரின்பத்தை மனத்தினாலும் எண்ணுது வளர்ந்தனீர்; மறை எல்

லாம் ஒதி உணர்ந்தீர் - வேதங்களெயெல்லாம் ஓதி அவற்றின்பொருளையறிக் கள்ளீர்; ஊழி கடந்தீர் - பிரமனுயுளினும் மேற்பட்ட ஆயுளையுடையீர்; உலகு ஈனும் ஆதி அயன் தானே என யாரும் அறைகின்றீர் - உலகங்களைப் படைக்கின்ற முதற்கடவுளரில் ஒருவனுன பிரமனேயாக எல்லாராலும் சொல்லப்படுகின்றீர்; (எ - று.)

அநுமான் நித்தியபிரமசாரி யாதலால் 'நினைவானும் மாதர்நலம்பேணுது வளர்ந்தீர்' என்றும், சிரஞ்சீவியாதலால் 'ஊழிகடந்தீர்' என்றும், அடுத்த பிரமபட்டத்தைப் பெறுபவ னுதலால் 'ஆதியயன்றனேயென யாருமறை கின்றீர்' என்றும் கூறப்பட்டான். ''தாதாவுரைக்கு மென்பிரமதண்டாற் றனிஞ்சாவினறி, மேதாவியுமாயொருநாளும் வீளியாதாளுமுறுக,'' ''மன்ன னிராமன் மனமுவப்ப வயவாளராக்கா குலமறுத்துப், பின்னேயவன்தன்போரு ளாற் பிரமபதமும் பெறுகென்றான்'' என்பன இங்குக் காணத்தக்கன.

'வாய்மையையந்தீர்,' 'ஆதியயன்றனுமெனயாருமறைகிறபீர்,' 'ஆதியயன் றனேயெனயாதும்' என்பன பாடாந்தரங்கள். (கரி)

கசு. அண்ணலமைந்தற்கண்புகிறந்தீரதனுனே
கண்ணியுணர்ந்தீர்கருமமுமக்கேகடனென்னத்
திண்ணிதமைந்தீர்செய்துமுடிப்பீர்சிதைவின்றுற்
புண்ணியமொன்றேநிலைக்கும்பொருள்கொண்டீர்.

(இ - ள்) அண்ணல் அமைந்தற்கு அனுபு நிறைந்தீர் பெருமையிற்சிறந்த அந்த இராமபிரானிடத்திற் பேரன்புடையீர்; அதனுனே - அக்காரணத்தி னுல், கருமம் கண்ணி உணர்ந்தீர் - செய்தொழிலே ஆராய்ந்து அறிந்திருக் கின்றீர்; நுமகேக கடன என்ன திண்ணிது அமைந்தீர் - (சீதாபிராட் டியை நாடிச் செய்தியுணர்த்துவருவது) உமக்கே செய்துமுடித்தற்கு உரிய தொழுலாகு மென்று கொண்டு (இராமசுக்கிரீவர்கட்டளையிட அதனை) உறுதி யாக ஏறறுக்கொண்டீர்: சிதைவு இன்று செய்து முடிப்பீர் - (அக்காரியம் சிறிதும்) இடையூறு அடையாமல் செய்துமுடித்தற்கேற்ற திறமுடையீர்; புண்ணியம் ஒனறே என்றும் நிலைக்கும் பொருள் கொண்டீர் - புண்ணிய மொன்றையே எப்பொழுதும் அழியாமல் நிலைதிருக்கும் பொருளென்று மனத்தில் உறுதியாகக் கருதியிருக்கின்றீர்; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

அண்ணலமைந்தற்கனபுகிறந்தீர் - ராமபக்தித்லேயெடுத்தவ ரென்றபடி, வானரர்யாவரும் இறப்பதாக இருக்த நிலையில், அதனைத்தடுத்து அநுமான் பின்னுர்தேடுமாறு ஆலோசனைகூறுகையிற் சம்பாதியினுற் சீதையுள்ளவிடம் தெரிந்தன ராதலின், 'கண்ணியுணர்ந்தீர் கருமம்' எனரு னென்னலாம். சிதைவினறிச்செய்து முடிப்பீர் என்றது - நீரே இலங்கையிற்சென்று பிராட் டியாரின செய்தியை யுணர்ந்து வருந் தொழிலைச் செய்து முடிக்கவேணு மென்ற குறிப்பு. புண்ணியமொன்றே நிலைக்கும்பொருளென்று கொண்டீர் என ஈற்றடியை மாற்றிப் பொருள்கொள்ளினுமாம். அமைந்தற்கு = அம் மைந்தரகு எனபதன் தொகுத்தல். இன்றி என்னும் வினையெச்சம், செய்யு ளாதலின் 'இன்று' எனத நிரிந்துவந்தது; முற்றெச்சமாகக் கொள்வது எளிய வழி.

'அன்புசிறந்தீரவனுனே,' 'காரியஞிற்கோகடனென்ன,' 'சிதையாதீர்,' புண்ணியரொன்றேவென்று நினைக்கும்புகழ் கொண்டீர்,' 'புண்ணியர்ன்றே வென்று நினைக்கும் புகழ்கொண்டீர்' என்பனவும் பாடம். (கக)

கஎ. அடங்கவும்வல்லீர்காலமதன்றேலமர்வந்தான்
மடங்கன்முறிந்தாலன்னவலத்தீர்மதிநாடித்
தொடங்கியதொன்றேமுற்றுமுடிக்குந்தொழிலல்லா
லிடங்கெடவெவ்வாயூறுகிடைத்தாலிடையாதீர்.

(இ - ள்.) காலம் அது அன்று எல் அடங்கவும் வல்லீர் - காலமல்லாத காலத்தில் [அடங்கியிருக்கவேண்டிய சமயத்தில்] அடங்கியிருக்கும் வல்லமையுடையீர்; அமர் வந்தால் மடங்கல் முனிந்தால் அன்னவலத்தீர் - போர் நேர்ந்தால் [கிளர்ச்சிகொள்ளவேண்டிய காலத்தில்] ஆண்சிங்கம் கோபித்தாற் போன்ற வலிமையுடையீர்; மதி நாடி - அறிவினால் ஆராய்ந்துபார்த்து, தொடங்கியது. ஒன்றே - செய்யத்தொடங்கிய ஒரு காரியம் மாத்திரமோ. முற்றும் - எல்லாவற்றையும், முடிக்கும் - செய்துமுடிக்கின்ற, தொழில் அல்லால் - தொழில்தர முடையவரேயல்லாமல், இடம் கெட வெவ் வாய் ஊறு கிடைத்தால் - பெருமையழியும்படி கொடுந்தனமையுள்ள இடையூறு சேர்ந்தாலும், இடை. யாதீர் - (அஞ்சிப்) பின் வாங்காது நிற்பீர்; (எ - று)

"ஊக்கமுடையா னெடுக்கம் பொருதகர், தாக்கர்க்குப் பேருந்தகைத்து," "கொக்கொக்கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்தவிடத்து," "அடுக்கிவரினுமழிவிலானுற்ற, விடுக்கணிடுக்கட்படும்' என்பன இங்கு நோக்கத்தக்கன. மடங்கல் நரசிங்கமூர்த்தியெனச் கொள்வாருமுளர். தொடங்கியதொன்றே, ஓகாரம் - இழிவு சிறப்போடு எதிர்மறைப்பொருளது.

'செய்துமுடிக்குந் தொழில்வல்லீர்,' 'இடங்கெடவந்தா லிறுகிடைத்தா லிடையாதீர்' என்பன பாடாந்தரங்கள். (கஎ)

கஅ. ஈண்டியகொற்றத்திந்திரனென்பான்முதல்யாரும்
பூண்டுநடக்குநன்னெறியானும்பொறையானும்
பாண்டிதர்நீரேபார்த்தினிதுய்க்கும்படிவல்லீர்
வேண்டியபோதேவேண்டுவவெய்தும்வினைவல்லீர்.

(இ - ள்.) ஈண்டிய கொற்றத்த இந்திரன் என்பான் முதல் யாரும் பூண்டு நடக்கும் நல்நெறியானும் - நெருங்கிய வெற்றியையுடைய தேவேந்திரன் முதலிய யாவரும் (இவரது ஒழுக்கமே சிறந்ததென்று) மேற்கொண்டு நடக்கத்தக்க நல்லொழுக்கமுடைமையாலும், பொறையாலும் - பொறுமைக் குணமுடைமையாலும், பாண்டிதர் நீரே - பண்டிதராகிய நீரே, பார்த்து இனிது நுகர்ச்சும்படி வல்லீர் - (எதையும்) ஆலோசித்து இனிமையாக நடத்தும்படியான வல்லமையுடையீர்; வேண்டியபோதே வேண்டுவ எய்தும் வினை வல்லீர் - விரும்பியபோதே விரும்பியவற்றை யெல்லாம் பெறவல்ல தொழில் வன்மையுடையீர்; (எ - று.)

உமது ஒழுக்கம் பெயர்பெற்ற இந்திரன் முதலியோர்க்கும் வழிகாட்டி நடாயுள்ளதனென்பது, முதலிரண்டடியின் பொருள். வீரம் முதலியகுணங்கள்

கிரம்பியிருப்பினும், அநுமான் அவற்றைச் சிறிதும் பாராட்டாமல் சாதாரண வானரன்போல இருத்தலால், அக்குணத்தை 'பொறையாலும்' என்று ஜாம்பவான் பாராட்டிக்கூறினன். பின்னிரண்டடிகள், கடல்கடக்க சீதாபிராட்டியைக் கண்டுவரவேணுமென்ற கினைத்தால் உடனே செய்துமுடிக்கும் வல்லமை அநுமானுக்கு உண்டென்று குறிப்பிக்கும். பாண்டிதர் - பண்டிதர் என்பதின் நீட்டல்.

'நன்னெறி சாரப்பொறையானும்,' 'பாண்டியனீரே யஃதினியுய்க்கும்,' பாண்டியனீரே யஃதினியுய்க்கும்,' 'வேண்டியதய்க்கும்' என்று பிரதிபேதம். (கஅ)

[ஜாம்பவான் அநுமானை நோக்கி 'நீரே இக்கடலைக்கடந்து சீதாபிராட்டியைக் கண்டு வாவேண்டும்' என்றல்.]

கக. எகுமினைகியெம்முயிர்நல்கியிசைகொள்ளீ
ரோகைகொணர்ந்தும்மன்னையுமின்னற்குறையில்லாச்
சாகரமுற்றுந்தாவிடுகீரிக்கடருவும்
வேகமமைந்தீரென்றுவிரிஞ்சன்மகன்விட்டான்.

(இ - ன்.) 'நீர் - நீர்தான், இ கடல் தாவும் வேகம் அமைந்தீர் - இத்தச் சமுத்திரத்தைக் கடந்துசென்று (செய்திதெரிந்து) மீளுதற்கு உரியவலிமை பொருந்தியுள்ளீர்; (ஆதலால்), எகுமின - (இங்கிருந்து) விரைந்து செல்லுக; எஇ - அவ்வாறு சென்று, எம் உயிர் நல்கி இசைகொள்ளீர் - எங்களுக்கெல்லாம் உயிரைக் கொடுத்துப் பெரும்புகழைப்பெறுக; (நீர் இவ்வாறுசெய்தால்) உம் அன்னையும் - உமதுதாய்போன்ற சீதாபிராட்டியும், ஓகைகொணர்ந்து - (தான்) மிக்க சந்தோஷமடைந்து, இன்னல் குறை இல்லா சாகரம் முற்றும் தாவிடும் - துன்பமாகிற குறைதலில்லாத [மிகப்பெரிய] கடல் முழுவதையும் கடந்து கரையேறுவாள்', என்று—,விரிஞ்சன் மகன் - பிரமகுமாரனை ஜாம்பவான், விட்டான் - கூறிமுடித்தான்; (எ - று.)

நீர் கடல்கடந்து சென்றால் சீதாபிராட்டிதானும் துன்பக்கடலைக்கடப்பாளென்று சமத்காரமாகக்கூறியிருத்தல் காண்க. சீதைக்குத் துன்பக்கடல் - இராமபிரானைப்பிரிந்து அரக்கரூரிற் சிறைப்பட்டுப் பலதிக்கள் கழிந்தும் இராமபிரான் தானுள்ளவிடத்தை நாடிவந்து தன்னைச் சிறைமீட்பதற்கு ஏற்ற உபாயமொன்றுஞ் செய்யாமையினாலாகிய து. 'எம்முயிர்நல்கி இசை கொள்ளீர்' என்றது - நீர்கடல்கடந்து மீண்டுவந்தால் நாங்களும் இப்போது கினைத்தவாறு இறவாமற் பிழைப்போம்; இங்ஙனம் பலரது உயிரைக் காப்பாற்றினதனாற் பெரும்புகழும் உமக்குக் கிடைக்குமென்றபடி. அநுமானே சீதையை முதலிற் சேவிக்கும் பாக்கியமுடையவனாதலின், ஜாம்பவான் அவனை நோக்கி 'உம்மன்னை' என்றான்; இனி உற்சாகமூட்டுவதற்காக, இவ்வாறு கூறினனுமாம். ஓகை - உவகையென்பதன் மரூஉ.

'எகுமினீரே', 'எம்மன்னையும்,' 'குறைவில்லா' 'வேகமும் வல்லீர்' என்று பிரதிபேதம். (கக)

[அநுமான் தான் உடன்பட்டுக் கூறத்தொடங்குதல்.]

உ0. சாம்பனிபம்பத்தாழ்வதனத்தாமரைநாப்ப
ணீர்ப்பல்விரிந்தாலன்னசிரிப்பானறிவாளன்
கூம்பலொடுஞ்சேர்கைக்கமலத்தன்குலமெல்லாம்
மேம்பல்வரத்தன்சிக்கைதெரிப்பானிவைசொன்னான்.

(இ - ன்.) சாம்பன் இயம்ப - ஜாம்பவான் இவ்வாறு கூறிமுடிக்க,—அறிவாளன் - பேரறிவுடையவனாகிய அநுமான்,—தாழ்வதனம் தாமரை நாப்பண் ஆம்பல் விரிந்தால் அன்ன சிரிப்பான் - இறங்கியமுகமாகிய தாமரைமலரின் நடுவில் செவ்வாம்பல் மலர்ந்தாற்போன்ற சிரிப்பையுடையவனாகியும், கூம்பலொடும் சேர் கை கமலத்தன் - குவிதலோடுகூடிய தாமரைமலர்போன்ற கைகளையுடையவனாகியும் [கைகூப்பியவனாகியும்],—குலம் எல்லாம் எம்பல் வர (அங்குள்ள வானரக்கூட்டங்கள் யாவும் சுற்றோவதமடைய, தன் சிக்தை தெரிப்பான் - தனது உள்ளக்கருத்தைத் தெரிவிக்கும்பொருட்டு, இவை சொன்னான் - இவ்வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று.)—அவற்றை அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

பிறர் தம்மைத்துதித்துப் புகழும்போது தலை கவிழ்தல் பெரியோரியல் பாதலால், ஜாம்பவான் தன்னைப் புகழும்போது அநுமான் தாழ்வதனத்தனாயின னென்க. அநுமான் சிரிக்கும்போது முகத்தினிடையிற் செங்நிறமான வாய் விரிதற்கு, தாமரைமலர்நடுவில் ஆம்பல் விரிதலை உவமையாகக் குறித்தார். கைக்கமலத்தன் - கமலக்கையன்.

'கூம்பலமைத்த' எனவும் பாடம். (உ0)

வேறு.

[இதுமுதல் நான்குகவிகள் - அநுமான் அடக்கத்தோடே ஜாம்பவான் சொல்லை அங்கீகரித்துக்கூறுவன.]

உக. நீயிரேநினைவின்முன்னேநெடுந்திரைப்பரவையேழுந்
தாயுலகினைத்தும்வென்றுதையலைத்தருதற்கொத்தீர்
போயிதுபுரிதியென்றுபுலமைதீர்புன்மைகாண்டற்
கேயினிரென்னிரென்னிற்பிறந்தவர்யாவரின்னும்.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ன்.) நீயிரே - நீங்கள், நினைவின் முன்னே - நினைப்பதற்கு முன்னமே [மிகவிரைவில்], நெடுந்திரை பரவை எழும் தாய் - பெரிய அலைகளையுடைய ஏழுசமுத்திரங்களையுந் தாண்டி, உலகு அனைத்தும்வென்று -எல்லா உலகங்களையுஞ் சயித்து, தையலை தருதற்கு ஒத்தீர் - சீதாபிராட்டியை மீட்டுக்கொணர்தற்கு வல்லமையுடையீர்; (அவ்வாறு வல்லமைபெற்றிருத்தும் என்னை ஒரு பொருட்டாக எண்ணி), போய் இது புரிதி என்று -(நீ)சென்று இதனைச்செய்வாய்' என்று, புலமை தீர் புன்மை காண்டற்கு எயினிர் - அறிவில்லாத எனது இழிகுணத்தைக் காண்பதற்காகவே (எனக்குக்) கட்டளையிட்டீர்; என்னின் - என்றால், என்னின் பிறந்தவர் இன்னும் யாவர் - என்னைப் போலப் (பாக்கியசாலியாகப்) பிறந்தவர் வேறு யாவருளர்? (எ - று).

அநுமான் அலையடக்கமாகக் கூறியது, இது. பெரியோர்கள் நிறைந்த இடத்தில் ஒருவன் தன்னைத்தான் தாழ்த்திக்கூறுவது, அலையடக்க மெனப் படும். இந்தச் சிறியதாகிய ஒரு கடலேயன்றி ஏழுகடலேயுங்கடக்கவேண்டு மென்றாலும் " இலங்கையையேயன்றி ஏழுலோகங்களையும் வெல்லவேண்டு மென்றாலும் அவ்வாறேசெய்து சீதையைமீட்கும் வல்லமையுடையவர் நீங்க ளென்று, தனியும் மற்றைவானரரது வலிமைமிகுதியை முதல் மூன்றடிக ளால் தெரிவித்தனன் அநுமனென்க. எயினிரென்னின் என்னிற்பிறந்த வர் யாவரின்னும் - வெகு பராக்கிரமசாலிகளாய்க் கடல்கடந்து மீண்டுவரும் வல்லமையுள்ளார் பலரிருக்கவும்என்னை ஏவினது எனது பாக்கியமேயென்று கொண்டாடியவாறு. நீயிர் - மற்றைவானரரையும் உளப்படுத்திய முன்னிலைப் பன்மை; ஜாம்பவனொருவனையே உயர்த்திக்கூறிய பன்மைக்ளைவியெனக் கொள்ளினுமாம.

இச்செய்யுள், சில பிரதிகளில் இருபத்துமூன்றுவதாகக் காணப்படு கின்றது.

'நீவிரேகினையின் முன்னம்,' 'என்றன் புலமைநீர் புன்மைகண்டும்' என்று பிரதிபேதம்.

இதுமுதல் இப்படலம் முடியுமளவும் ஒன்பதுகவிகள் - மேற்சம்பாதிப் படலத்தின் ஐம்பத்தாறுமுதல் ஐம்பத்துமூன்றுகவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (உ)

உஉ. இலங்கையையிடந்துவேரோடிவ்வயிற்றருகென்றாலும்
விளங்கினர்தம்மையெல்லாம்வேரொடும்விளிய நூறிப்
பொலங்குழைமயிலைக்கொண்டுபோதெனப்புகன்றிட்டா
கலங்கலீருரைத்தமாற்றமுடிக்குவல்கடிதுகாண்டிர். [லும்

(இ - ன்.) இலங்கையை வேரோடு இடந்து இவ்வயினருக எனறாலும் - இலங்கா பட்டணத்தை வேரோடு பெயர்த்தெடுத்து இவ்விடத்திற் கொண்டுவரவேண்டும்' என்று (நீங்கள்) கூறினாலும், விலங்கினர்தம்மை எல்லாம் வேரொடும் விளிய நூறி பொலம் குழை மயிலை கொண்டுபோது எனபுகன்றிட்டாலும் - 'இடையூறுசெய்யும் அரக்கர்களையெல்லாம் அடியோடு அழியுமாறு நீருக்கிப் பொன்னாலாகிய குழையென்னுங் காதணியையணிந்த மயில்போற்சாயலையுடைய சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டுவா' என்று சொன்னாலும், உரைத்தமாற்றம் முடிக்குவல் - (நீங்கள்) சொன்ன சொற் படியே செய்துமுடிப்பேன்; கடிது காண்மோ - (அதனை) விரைவிற் கண்கூடாகக் காண்பீர்கள்; கலங்கலீர் - கலங்கவேண்டா; (எ - று)

'கலங்கலீர்' எனறது - கடலைக்கடந்து சீதையைக்கண்டுவருதல் எவ்வாறு கூடுமென்ற சிந்தை நுமக்குச் சிறிதும்வேண்டா என்றவாறும். (உஉ)

உங. ஒசனையொன்றுநூறுமுள்ளடியுள்ளதாக
வீசன்மண்ணளந்ததெய்ப்பவிருங்கடலினிதுதாவி
வாசவன்முதலோர்வந்துமலியுமிலங்கைவாழு
நீசரையெல்லாநூறிநினைத்ததுமுடிப்பல்நின்னும்.

(இ-ன்) ஈசன் மண் அளந்ததெய்ப்ப - திருமால் உலகமளந்தது போல, ஒசனை ஒன்று நூறும் உள் அடி உள்ளது ஆக - (இங்கிருந்து இலங்

கை வரையிலுள்ள) ஒருநூறுயோசனைதூரமும் ஓரடிவைப்புக்குள் அடங்கும் படி, இருங் கடல் இனிது தாவி - பெரியகடலை எளிதாகத்தாண்டி,—வாச வன் முதலோர் வந்து மலையினும் - இந்திரன்முதலான தேவர்கள் (அரக் கர்க்கு உதவியாக) வந்து (என்னோடு) எதிர்த்துப் போர்செய்தாலும், இலங்கை வாழும் நீசரை எல்லாம் நூறி - அந்த இலங்கையில் வாழ்கின்ற இழிதொழிலை யுடைய அரக்கர்களை யெல்லாம் அடியோடு அழித்து, நினைத்தது முடிப்பல் - நினைத்த காரியத்தை முடித்துவிடுவேன்; பின்னும் - மேலும்: (எ - று)

ஒரு தாண்டிலேயே நூறுயோசனை தூரமுள்ள கடலைக் கடந்து இலங் கையிற் செல்லும் அநுமானுக்கு - உலகம் முழுவதையும் ஓர்அடிவீப்பினால் அளந்த திரிவிக்கிரமன் உவமையாவன்; வடிவும் தொழிலும்பற்றிய உவமம். வாசவன் - கியமிப்பவனென்று பொருள்படும் வடசொல். மலையினும் என்றது வாசவன் முதலோர் வந்து மலையா ரென்ற பொருளை வற்புறுத்தும்.

'யோசனையேழு நூறும்,' 'ஈசன்மண்கடந்ததென்ன,' 'நீசரையெல்லாங் கொன்றுமுடிப்பது நினைப்பன்' என்றும் பாடம். (உங)

உச. முற்றுநீருலகமுற்றும்விழுங்குவான்முழங்கிமுன்னீ
ருற்றதேயெனினுமண்டமுடைந்துபோயுயர்ந்ததேனு
மிற்றைநம்மருளுமெங்கோனெலுமிரண்டுபாலுங்
கற்றைவார்சிறைகளாகக்கலுழனிற்கடப்பல்காண்டிர்.

(இ - ன்.) நீர் முற்றும் உலகம் முற்றும் விழுங்குவான் - கடலினுற்சூழப் பெற்ற உலகமுழுவதையும் முழுத்தியிழுக்கும் பொருட்டு, முன்னீர் - கடலா னது, முழங்கி உற்றதே எனினும் - சத்தித்துக்கொண்டு பொங்கிவந்தா லும்,—அண்டம் உடைந்துபோய் உயர்ந்தது எனும் - இவ்வுலகவுருண்டையே உடைந்துபோய் உயர்ந்து வானத்திற்சென்றாலும்,—(சிறிதுங் கலங்காமல்), இற்றை நம் அருளும் எம் கோன் எவலும் இரண்டு பாலும் கற்றை வார் சிறைகள் ஆக - இப்பொழுது நீங்கள் எனமீது ஏவத்திருக்கின்ற அநுக்கிர கமும் எமது தலைவனுடைய இராமபிரானது கட்டளையுமே இரண்டு பக்கத்திலும் தொகுதியான நீண்ட சிறகுகளாக அமைய, கலுழனின் - கருடன்போல, கடப்பல் - (இச்சமுத்திரத்தைக்) கடந்துவிடுவேன்; காண்டிர் - (நீங்கள் இத னைக்) காண்பீர்கள்; (எ - று.)

கடலானது இவ்வுலகத்தை யழிக்கும்படி பொங்கி வந்தாலும், இவ்வண் டமே உடைந்து ஆகாயத்திற்சென்றாலும், யான் சிறிதும் பின்வாங்காமல் உங்களுடைய அநுக்கிரகத்தினால் ஸ்ரீராமபிரானது கட்டளைப்படியே கடல் கடந்துசென்று சீதாபிராட்டியைக் கண்டு செய்தியுணர்ந்து மீண்டு வருவே னென்றபடி. கருடனுக்கு இருசிறகுகள் பறந்துசெல்வதற்கு இன்றியமை யாத உறுப்பாதல்போல, நான் கடல்கடப்பதற்கும் உமது அருளும் இராமபிரா னது எவலுமே இன்றியமையாதனவாயிருந்து, மேற்கொண்டசெயலை முற்று வித்து மென்பது, பின்னிரண்டடியின் கருத்து; உருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. முற்றுநீர் - உலகத்திற்கு, இயற்கை யடை மொழி. முன்னீர் - படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்று தன்மையை யுடையதெனக் கடலுக்குப் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழி

தொகை; ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீராகிய மூன்றுநீரை யுடையதென காரணப்பொருள் கூறலாகாது.

'முழங்குவானம்,' 'அண்டமீதுயர்ந்ததேனும்,' 'எங்கோனீராகவனை ஞங் கொண்ட' என்றும் பாடம். (உ

[அநுமான் வாநரரிடத்து விடைகோண்டு, மகேந்திரமலையி னுச்சியிற் செல்லுதல்.]

உரி. ஈண்டினிதுறைமின்யானேயெறிகடலிலங்கையெய்தி
மீண்டிவண்வருதல்காறும்விடைதம்மின்விரைவினென்னு
வாண்டவருவக்குவாழ்த்தவலர்மழையமரர்தூவச்
சேண்டொடர்சிமயதெய்வமகேந்திரத்தும்பர்சென்றான்.

(இ - ன்.) யான்—, எறி கடல் இலங்கை எய்தி - அலைவீசுகின்ற கடலி னிடையேயுள்ள இலங்காபுரியைச் சேர்ந்து, மீண்டு இவண் வருதல் காறும் - திரும்பி இங்குவருகிறவரையிலும், ஈண்டு இனிது உறைமின் - (நீங்கள்) இவ் விடத்தில் தானே சுகமாக இருங்கள்; விரைவின் விடை தம்மின் - (எனக்கு) விரைவில் விடைகொடுங்கள், என்னு - என்றுசொல்லி,—(அநுமான்),— ஆண்டு அவர் உவக்க வாழ்த்த - அப்பொழுது அவ்வானரர்கள் மகிழ்ந்து வாழ்த்துகையும்,—அமரர் அலர் மழை தூவ - தேவர்கள் பூமாரிபொழியவும், சேண் தொடர் சிமயம் தெய்வம் மகேந்திரத - உம்பர் சென்றான் - வானத்தையளாவிய உச்சியையுடைய தெய்வத்தன்மையுள்ள மகேந்திரமலை யினது மேலிடத்தை யடைந்தான்; (எ - று.) (உ

அலர்மழை - புஷ்பவர்ஷம்.

[அநுமான் பேருருவங்கொள்ளுதல்.]

உசு. பொருவருவேலைதாவும்புக்கியான்புவனந்தாய
பெருவடிவுயர்ந்தமாயோன்மேக்குறபெயர்ந்ததாள்போ
லுருவறிவடிவினுமபோங்கினுவமையாலுந்
திருவடியெனுநுதன்மையாவர்க்குந்தெரியநின்றான்.

(இ - ன்.) பொருவு அரு வேலை தாவும் புக்கியான் - ஒப்பற்ற கடலைக் கடக்கவேண்டுமென்ற எண்ணமுள்ள அநுமான்,—புவனம்தாய பெரு வடிவு உயர்ந்த மாயோன மேக்கு உற பெயர்ந்த தாள்போல் - மூவுலகங்களையும் தாவியளந்த பெருவடிவங்கொண்டு உயர்ந்த [திரிவிக்கிரமாவதாரஞ்செய்த] ஆச்சரியமான குணஞ்செயல்களை யுடையவனுகிய திருமாலினது மேலிடத் திற் பொருந்துமாறு உயரவெடுத்ததிருவடிபோல உருவ அறிவடிவின் - (தனது) ரூபத்தை (யாவரும்) அறிதற்குரிய பெருவடிவதோடு, உம்பர் ஒக்கினன் - வானத்தையளாவ வளர்ந்தான்; (அதனால்), உவமையாலும் திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான - உபமானத்தினாலும் திருவடியென் கின்ற தனது (திருநாமத்தின) தன்மை யாவர்க்கும் விளங்கும்படி நின்றான். .

ஆகாயத்தையளத்தற்காக உயரவெடுத்த திரிவிக்கிரமனது திருவடி போல, அநுமான வானத்தை யளாவுமாறு பெருவடிவங்கொண்டனனென்பதாம். இராமாவதாரத்திலே திருமாலுக்கு வாகனமாயிருந்து உதவியதுபற்றிவந்த அநுமானது திருவடியென்ற பெயர்க்கு. இவருது திரிவிக்கிரமனது திருவடிபோல வளர்ந்ததனால் அப்பெயருண்டாயிறனென்ற கருத்துப் படக் கூறியது - பிரிநிலைநவிற்சியணியின்பாற்படும் உவமையாலும், உம்மை வாகனமாதல்பற்றியன்றி யென்ற பொருளைத் தெரிவித்தலால், இறந்தது

'புவனத்தாவப், பெருவடிவமைத்தமாயோன்,' 'பெயர்த்தான்போல்,' 'உருவறிவடிவன்' என்பன பாடாந்தாங்கள். (உக)

[அநுமான் கடல்கடக்கச் சித்தமாய் நிற்றல்.]

உள. பார்நிழல்பரப்பும்பொற்றேர்வெயிற்கதிர்ப்பரிதிவைகுந்தன்
போர்நிழல்பரப்புமேலோர்புகழெனவுலகம்புக்குத்
தார்நிழல்பரப்புதோளான்றடங்கடாருவாமுன்ன
நீர்நிழலுவரிகாவியிலவகைமேற்செல்லநின்றான்.

(இ - ன்.) தார் நிழல் பரப்பும் தோளான்-மாலே ஒளிவீசப்பெற்றதேரான் களே புடையுலகுனை அநுமான் —நிழல் பார் பரப்பும் பொன தேர் வெயில் கதிர் பரிதி வைத்தன் - (தனது) ஒளியை உலகமுழுதும் பரப்புகின்ற அழகிய தேரையும் உஷ்ணகிரணங்களையுமுடைய தெய்வருரியன்,—போர்நிழல்பரப் பும் மேலோர் புகழ் என - யுத்தத்தில் (தமது) பராக்கிரமத்தை வெளிக்காட்டு கின்ற மகாவீரரது புகழ் (உலகமுழுவதும் பரவுதல்) போல, உலகம் புக்கு - உலகமுழுதும் சஞ்சரித்து [ஒளிசெய்து], தட கடல் தாவாமுன்னம்-பெரிய மேல் சமுத்திரத்திற் சென்று சேர்வதற்குமுன்னே [அஸ்தமிப்பதற்குமுன் னே], நீர் நிழல் உவரி தாவி இலங்கைமேல் செல்ல - நீரையமான அழகிய இக் கடலைக்கடந்து இலங்கையிற்செல்லுமாறு, நின்றான் - சித்தமாக இருந்தான்.

அநுமான் சூரியாஸ்த மனத்திற்குள் இலங்கையிற்சென்று சேரவேண்டு மென்ற கருத்தோடு மகேந்திரமலையி னுச்சியிலேறிப் பேருருவங்கொண்டு சித்தமாக நின்ற னென்பதாம். சூரியன தனது கிரணங்களினால் உலகமுழு தும் ஒளிசெய்தற்கு பெருவீரர்புகழ் உலகமுழுவதும் பரவதலே உவமை கூறி னர். புக்குத்தாவாமுன்னம் செல்ல என இயையும. பரிதிமைத்தன என்ப தற்கு - ஊர்கோளையுடைய பெருமையையும் வலிமையையும் கொண்டவ னை சூரியன் எனினுமாம்; பரிதி-ஊர்கோளை யுணர்த்தும் வடமொழி. (உக)

[மகேந்திரமலைமீது பேருருவங்கொண்டு நின்ற அநுமானது வருணனை.]

உஅ. பகுவாயமடங்கல்வைகும்படர்வரைமுழுதுமூழ்க
வகுவாயவிடங்கொணர்கதிதாதகவால்சுற்றியூழி
னெகுவாயகெரிகாடிருளிவனிதரியநின்றான
மகவானமைமுதுகிற்றிருண்டமந்தரமெனவுமானான்.

(இ - ன்.) பகு வாய மடங்கல் வைகும் படர் வரை முழுதும் மூழ்க - பிறந்த வாயையுடைய ஆண்சிங்கங்கள் வசிக்கும்படியான பெரிய மகேந்திர மலைமுழுவதும் (தன்மீதறிப் பெருவடிவங்கொண்ட அநுமானது பாரத்தி னால்) பிழையமுந்தவும், ஊழின கெகு வாய கொடி கெரிவன தெரிய - வரிசையாகத் தோன்றுகின்ற பிளைகின்ற இடங்களையுடைய (தனது) கொங் ஙளின் தொகுதிகள் நொருங்கியனவாய் வினங்கவும், விடம உகு வாய கொள் ளாத்தி ஒத்த கால் சுறறி - விஷத்தைக் கக்குகின்ற வாயையுடைய (வலிமை) கொண்ட பாம்பைப்போன்ற வாலினால் (தனது உடம்பைச்) சுற் றிக்கொண்டு, நின்றான் - (பேருருவத்துடன்) நின்றவனுடைய அநுமான்,—மக ருமை முதுகில் தோன்றும் மகரம் எனலும் ஆனன் - மகாகூர்மத்தினது முதுகின்மேல் வினங்கிதோன்றிய மந்தரபருவதமென்று கூறுமாறும் யிருந்தான்; (எ - று.)

அநுமான் உடற்பொறையால் தளையிலமுந்துகின்ற மகேந்திரமலை - யாகூர்மத்தையும், மகேந்திரமலையின்மேல் நின்ற அநுமான் - [illegible]

நினால் தாங்கப்பெற்ற மந்தரமலைக்கும், அறுமானது உடம்பைச் சுற்றிய வாசுகியெனும் மகாநாகத்தை வால் - மந்தரமலையைச் சுற்றிய வாசுகிக்கும் ஒப்பாகுமென்க. தேவர்கள் தாம் இழந்த பொருள்களையும் அமிருதத்தையும் பெறும்பொருட்டுத் திருமாலின் கட்டளைப்படி அசுரர்களைத் துணைக்கொண்டு திருப்பாற்கடலில் கடைகையில், வாசுகியெனும் மகாநாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிக் கடையப்பட்ட மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவமெடுத்து அம்மலையின் கீழேசென்று, தனது முதுகின்மீது கொண்டு தாங்கி, அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைவதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனனென்பது, பிரசித்தம். மஹா என்பது மஹ எனத் திரிந்து வந்தது. 'கோடி' என்பது, பலவென்னும் மாத்திரமாய் நின்றது.

'நாகத்தொற்றைவரல்சுற்ற,' 'மகுவாமைமுதுகில்' என்று சிலபிரதிகள்.

[இதுவும் அது.]

உகூ. மின்னெடுங் கொண்ட முளின் வீக்கிய கழலி னூர்ப்பத்
தன்னெடுந் தோற்றம் வானோர் கட்புலத் தெல்லை தாவ
வன்னெடுஞ் சிகர கோடி மகேந்திர மண்டந் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத சிலையெனப் பொலிந்து நின்றனை.

(இ - ள்.) மின் நெடுங் கொண்டல் - மின்னலையுடைய பெரியமேகங்கள், தாளின் வீசிய கழலின் ஆர்ப்ப - (தனது) காலிற்கட்டப்பட்ட வீரக் கழல்போலச் சத்திக்கவும், தன் நெடுந்தோற்றம் வானோர் கண் புலத்து எல்லை தாவ - தனதுபெருவடிவானது தேவர்களின் கண்களாகிய இந்திரியங்களினிடத்திற் புலப்படவும்,—வல் நெடுஞ் சிகரம் கோடி மகேந்திர - வலிய பெரிய சிகரங்களின் தொகுதியையுடைய மகேந்திரமலையானது, அண்டம் தாங்கும் பொன் நெடுந் தூணின் பாதம் சிலை என - உலகவருண்டையைத் தாங்குகின்ற பொன்மயமாகிய நீண்ட தம்பத்தினடியிலிட்ட கல்லைப்போல விளங்கவும்,—பொலிந்து நின்றனை - (தான் அம்மகேந்திரமலையின் மேல் பேருருவத்துடன்) விளங்கித்தோன்றினன், (அறுமான்); (எ - று.)

மகேந்திரமலையின்மீதுஏறி அண்டத்தின்மேல் முகடுவரையிலும்வளர்ந்த பேருருவங்கொண்ட அறுமான் - அண்டத்தைத்தாங்கும் பெருந்தூணையும், அவ்வறுமானது பெருவடிவத்தைத் தாங்கி அவ்வடிவுக்குமுன் நிறத்தைத் தோணறுகின்ற மகேந்திரமலை - தூணினடிக்கீழ் வைக்குங் கல்லையும் நிகர்ப்பு ரென்க. அறுமான பேருருவங் கொண்டபோது, மேகமண்டலம் அவனது முழந்தாளினிடத்தி இருந்த தென்பார், 'மின்னெடுங்கொண்டல் தாளின் வீசியகழலினூர்ப்ப' எனறார். மேலுலகத்தில் அறுமானவடிவம் வளர்ந்து சென்றதனால், அங்குள்ள தேவர்களும் இவனது வடிவத்தைக் காணலாயினரென்பது, இரண்டாமடியிற் கூறிய விஷயம். அறுமானது தோற்றரத்தின் "காஞ்சகாத்ரி கமநீயவிக்ரஹம் [பொன்மலைபோல் அழகிய திருமேனியுடையவன்]" என்பவாதலால், அவனுக்குப் பொன்னெடுந்தூண் உவமையாம் தந்தறிப்பேற்றவணி.

'மின்னெடுமேகந்தாளின்வீக்கிய கழலொடார்ப்ப,' என்றும் பாடம். (உகூ)

மகேந்திரப்படலம் முற்றிற்று.

கிஷ்கிந்தாகாண்டம் முற்றுப்பேற்றது.